ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



விஷ்ணுசித்தவிஜயம்

(முதல்பாகம்)

இயற்றியவர்கள் :

கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ உ.வே.K. ஸ்ரீநிவாஸய்யங்கார்
ஸ்ரீ உ.வே.S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்
(ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம் ஆசிரியர்கள்)

பதிப்பித்தவர்கள் :

1. ஸ்ரீ.ரா.ஸ்ரீ. கி.ஸ்ரீநிவாஸ அய்யங்கார் குடும்ப தர்மசொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்பெற்றது.

டிரஸ்டிகள் :
S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A.B.L.,அட்வகேட்
S. ராம அய்யங்கார், B.Sc., B.L., அட்வகேட்

2. ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ :
214, கீழ உத்தர வீதி (விக்ரமசோழன் திருவீதி)
திருவரங்கம், திருச்சி - 620 006.

விலை ரூபாய் 04.2001 தபாற் செலவு தனி

விஷ்ணுசித்தவிஜயம்

வேதவேதாந்த நிர்ணயம் என்னும் முதலத்தியாயத்தில் முதலிரண்டு பாதங்கள் கொண்ட முதல்பாகத்தின் விஷயஸூசிகை

முதலத்தியாயம்—வேதவேதாந்தநிர்ணயம்
விஷ்ணுசித்தவிஜயம்—பீடிகை 1-9

முதலத்தியாயம்—முதல்பாதம்

நாராயணனே பரப்ரஹ்மம் 10-16

முதலத்தியாயம்—இரண்டாமபாதம்

நாராயணனே ஸர்வகாரண புருஷன் 17-472

1. பீடிகை 17-20
2. நாராயணோபனிஷத்தின் நிர்ணயம் 21-24
3. மஹோபனிஷத்தின் முடிவு 25-26
4. ஸுபாலோபனிஷத்தின் ஸுநிச்சிதார்த்தம் 26-51
5. புருஷஸூக்தத்தில் பரமபுருஷநிர்ணயம் 51-114

அவதாரிகை 51-53

பூர்வாநுவாகம்-மந்திரம்-1			(ஸஹஸ்ரசீர்ஷா)	53-57
,,	,,	-2	(புருஷ ஏவேதம்)	57-60
,,	,,	-3	(ஏதாவாநஸ்ய)	60-62
,,	,,	-4	(த்ரிபாதூர்த்வ)	62-64
,,	,,	-5	(தஸ்மாத்விராா)	64-66
,,	,,	-6	(யத்புருஷேண)	66-69
,,	,,	-7	(ஸப்தாஸ்யாஸந்)	69
,,	,,	-8	(தம்யஜ்ஞம்)	69-70
,,	,,	-9	(தஸ்மாத்யஜ்ஞாத்)	70-71
,,	,,	-10	(தஸ்மாத்யஜ்ஞாத்)	71-72
,,	,,	-11	(தஸ்மாதஶ்வா)	72
,,	,,	-12	(யத்புருஷம்)	72

http://acharya.org

பூர்வாநுவாகம்-மந்திரம்		-13	(ப்₃ராஹ்மணேப்₄ய)	73-78
,,	,,	-14	(சந்த்₃ரமா மநஸோ)	78-80
,,	,,	-15	(நாப்₄யா ஆஸீத்)	80-81
,,	,,	-16	(வேதா₃ஹமேதம்)	81-87
,,	,,	-17	(தா₄தா புரஸ்தாத்)	87-90
,,	,,	-18	(யஜ்ஞேந யஜ்ஞம்)	90-91
உத்தராநுவாகம்	,,	-1	(அத்₃ப்₄யஸ்ஸம்)	91-92
,,	,,	-2	(வேதா₃ஹமேதம்)	93
,,	,,	-3	(ப்ரஜாபதிஸ்சரதி)	93-98
,,	,,	-4	(யோதே₃வேப்₄ய:)	98-100
,,	,,	-5	(ருசம் ப்₃ராஹ்மம்)	100-101
,,	,,	-6	(ஹ்ரீஸ்சதே)	101-109
	முடிவுரை			109-114

6. நாராயணஸூக்த நிர்ணயம் 115-166

அவதாரிகை	115-117
ஸஹஸ்ரசீர்ஷம்	117
விச்வம் நாராயணம்	117
விச்வத: பரமம்	124
விச்வமேவேதம்	124
பதிம் விச்வஸ்யா	124
நாராயணம் மஹா	124
நாராயண பரம்ப்₃ரஹ்ம	136
நாராயணபரோ ஜ்யோதி:	136
யச்சகிஞ்சித்	136
அந்தர்ப₃ஹிஸ்ச	136
அநந்தமவ்யயம்	142
பத்₃மகோச	147
அதோ₄நிஷ்ட்யா	,,
ஹ்ருத₃யம் தத்₃விஜா	,,
ஸந்ததம் ஸிராபி₄ஸ்து	,,
தஸ்யாந்தே	,,

http://acharya.org

தஸ்யமத்4யே 147

ஸோக்3ரபு4க் ,,

ஸந்தாபயதி ,,

தஸ்யமத்4யே 152

நீலதோயத3மத்4யஸ்தா2 ,,

நீவாரஶூகவத் ,,

தஸ்யாஃஶிகா2யா 155

ஸப்3ரஹ்மா 155

ருதம் ஸத்யம் 161

ஊர்த்4வரேதம் 164

7. விதிசிவாதிகளின் பிறப்பு 167-185

பிரமனும் ஓர் பிறப்பே 166-170

சிவனும் ஓர் ஜீவனே 170-185

8. ந்ருஸிம்ஹதாபிந்யுபநிஷத்தின் நிர்த்தாரணம் 185-205

9. மஹாநாராயணோபநிஷத்விசாரம் 205-209

10. கோபாலதாபிந்யுபநிஷத்விசாரம் 209-214

11. தசோபநிஷத்விசாரம் 214-393

ஈசாவாஸ்ய உபநிஷத்தின் ஈச்வரநிர்ணயம் 214

கேநோபநிஷத்தின் கொள்கை 214-216

கடோபநிஷத்தின் கண்டோக்தி 216-218

ப்ரச்நோபநிஷத்தின் ப்ரஹ்மோபதேசம் 218-229

முண்டகோபநிஷத்தின் முடிவு 229-251

மாண்டூக்யோபனிஷத்தின் மறைபொருள் 251-256

தைத்திரீயோபனிஷத்தின் தேவதாநிர்ணயம் 256-324

ஐதரேயோபனிஷத்தின் ப்ரஹ்மநிர்த்தாரணம் 324-326

சாந்தோ3க்3யோபநிஷத்தில் ஸர்வோத்க்ருஷ்ட நிர்ணயம் 326-368

ப்ருஹதா3ரண்யகோபனிஷத்தில் ப்3ரஹ்ம நிர்ணயம் 368-393

12. பைங்கிரஹஸ்யச்ருதியில் ப்3ரஹ்மநிர்ணயம் 393-395

13. மந்த்ரிகோபனிஷத்தின் முடிவு 395-398

http://acharya.org

14.	பூர்வோக்தஸங்க்ரஹம்	398-399
15.	சிவகாரணத்வசங்காநிராஸம்	399-467
	அவதாரிகை	399-401
	ச்வேதாச்வதர உபநிஷத்விசாரம்	401-425
	அதர்வசிரோவிசாரம்	425-444
	அதர்வசிகாவிசாரம்	444-467
16.	ப்ரஹ்மஜ்ஞாநிஜிஜ்ஞாஸு ஸம்வாதம்	467-472

ஸ்ரீவிஷ்ணுசித்தவிஜயத்தில்
வேதவேதாந்தநிர்ணயம் என்னும் முதலத்தியாயத்தில்
'நாராயணனே பரப்ரஹ்மம்' 'நாராயணனே ஸர்வகாரண புருஷன்'
என்னும் முதலிரண்டு பாகங்களின் விஷயஸூசிகை முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சிறந்த ஸ்ரீவைஷ்ணவ மாதப்பத்திரிகை

ஆசிரியர்:

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

வருடச்சந்தா ரூ. 4—00.

சோபகிருது மார்கழியிலிருந்து பதினேழாவது வருடம்
நடைபெறுகிறது.

வேதம், ஸ்மிருதிகள், இதிஹாஸபுராணங்கள் முதலியவற்றிலிருந்து ஸ்ரீமந்நாராயணனின் பெருமையைவிளக்கும் கட்டுரைகளும், தமிழில் கீதாவ்யாக்யானமும், திவ்ய ப்ரபந்தங்களுக்கு எளிய விவரணங்களோடுகூடிய பூர்வாசார்ய வ்யாக்யானங்களும், கம்பராமாயண விளக்கங்களும், பெரியாழ்வார் ப்ரபாவமும், விசிஷ்டாத்வைத ப்ரகரணக்ரந்தமான விவரண ஸஹித சாரீரககாரிகாவளியும், விசிஷ்டாத்வைதவிஜயமும் மற்றும் பல விஷயங்களும் வெளிவருகின்றன.

http://acharya.org

ஸ்ரீ உ. வே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி

(ஸ்ரீவைகுண்டவாஸி)

இந்நூலின் ஆசிரியர்.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

★ ஸ்ரீ விஷ்ணுசித்த விஜயம் ★

பீடிகை.

"சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ."

கலியின் கோலாஹலத்தினால் ஸர்வஸமய ஸமரஸக்கொள்கைகள் தலைவிரித்துத் தாண்டவ நர்த்தனம் புரிகின்றன. பாமரஜனங்கள் பீதகவாடைப்பிரானார் பெருமையைப் பகுத்துணரவில்லை. மஹான்களும் மயங்கி, நாராயண பரத்வத்தை நினைக்கவும் நடுங்கி, சொல்லவும் தயங்கி, பிரஸங்கிக்கவும் பயப்படுகிறார்கள். வேதாந்தமும் 'அதிவாதீ$_3$ ப$_4$வ' என்று எல்லா மனுஷ்யர்களையும் நாராயண பரத்வ ஸ்தாபனம் செய்து அவனுடைய உகப்பைப் பெறும்படி விதித்தது. அப்படியிருந்தும் இக்காலத்தில், பல வைஷ்ணவப் பத்திரிகைகளில் இவ்விஷயம் ஆராய்ச்சி செய்யப்படுவது கிடையாது. எம்பெருமானுடைய முகோல்லாஸம் முக்யமா? மனுஷ்யர்களிடம் முகதாக்ஷிண்யமோ, பயமோ பெரிதா? எவர் எவ்விதம் பேசிலென்? ஏசிலென்? முன்னோர்கள் இதற்காக ஸர்வ பரித்யாகமும் செய்திருக்கிறார்கள்.

வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு வாஸுதேவனே என்று நாடு, நகரமும் நன்கறியச் செய்வது உயிரினும் உயர்ந்ததாக நம்மனோர்கட்கு உணர்த்துவதற்கன்றோ பெரியநம்பிகள் படாதபாடுபட்டு, திருக்கண்களையும் கொடுத்து ஆசாரியன் திருவடியடைந்தார். கிருமிகண்டசோழனுடைய ஸபையில், காபாலிகர்களின் கூட்டங்கள் நடுவே, ஊரும், உலகும் உணரும்படி, ஓங்கி உலகளந்த உத்தமனே பராத்பரன் என்று நிலைநிறுத்தி நம் தர்சனத்திற்காகத் தம் தர்சனத்தைத் தந்த பெருமை நம் கூரத்தாழ்வானுக்கன்றோ. மேலும், அரசாங்கத்தின் அக்ரம ஆக்ரமிப்பில் அரங்கனிருந்த

http://acharya.org

போது அவனுடைய ஸேவை அநாவச்யம் என்று பனிரண்டாண்டுகள் பிரிந்து, விலகியிருந்து, இக்காலத்தில் நாம் அநுஷ்டிக்க வேண்டிய வழியைக் கூரேசனே காட்டினார்.

இவ்விதம் பரதத்வநிர்ணயம் செய்தவர்கள் பல்லாயிரவர்கள் உளர். அவர்களில் வேதபுருஷனே முதலாவான். பண்டை நான்மறைகளிலும் பரப்ரம்மமாகவும், பரமாத்மாவாகவும் உத்கோஷிக்கப்பட்டவன் ஸ்ரீமந்நாராயணனே. எவர்கள் எவ்வித அனர்த்தங்கள் செய்தபோதிலும் ச்ருதி சதசிரஸ்ஸித்தமான வஸ்து ஸ்ரீதரன் என்பதை அசைக்கமுடியாது. பிரமனே பன்முறை பரந்தாமனுடைய பரத்வத்தைப் பரக்கப் பேசியிருக்கின்றனன். விஷ்ணுவின் பரத்வத்திற்கு விரோதியாகப் பேசப்பட்ட சிவபிரானும் எண்ணிறந்த இடங்களில் கேசவனே தனக்குக் காரண வஸ்து என்றும், தெய்வமென்றும் நிலைநிறுத்தி ஸந்தேகங்களைத் தெளிவித்திருக்கிறார். இதனாலன்றோ அவர் 'ப்3ரஹ்மா சம்பு4 குபே3ர' என்று பாகவத கோஷ்டியில் சேர்க்கப்பட்டு புகழ்பெற்றிருக்கிறார். வேதத்திலும் புகழ்பெற்ற ஸ்வாயம்புவமனு தமது ஸ்மிருதி ஆரம்பத்தில் நாராயணனே பரமாத்மா என்றும், பிரம்மா முதல் பிபீலிகை (எறும்பு) பர்யந்தம் ஜீவாத்மாக்கள் என்றும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். மஹா பாகவதோத்தமனாகிய பிரஹ்லாதனே அஷ்ட மஹா நாகங்களினால் கடிக்கப்பட்டும், அஷ்ட திக்கஜங்களினால் குத்தப்பட்டும், மலையிலிருந்து மண்ணிற்கு உருட்டிவிடப்பட்டும், குன்றனைய கற்களுடன் பிணைத்துக் கட்டப்பட்டு ஸமுத்ரத்தில் போடப்பட்டும், வடவாமுகாக்னிபோல் எரிகின்ற தீக்குழியில் தள்ளப்பட்டும், நஞ்சு உண்பிக்கப்பட்டும், தாக்ஷிண்யமின்றி, அஞ்சாநெஞ்சினனாய் பெற்ற தகப்பன் பகையாவதையும் பாராட்டாமல் நாராயண பரத்வத்தை நிர்ணயம் செய்தான். அவனுக்கு கர்ப்பத்தில் உபதேசம் செய்த நாரதமஹர்ஷியைக் காட்டிலும் பரம பாகவதனென்று புகழ்பெற்று 'ப்ரஹ்லாத நாரத' என்று வைஷ்ணவ கோஷ்டியில் தலைமைபெற்று பகவான் நரஸிம்மாவதாரம் செய்வதற்குக் காரணமானான். கீதாசார்யன்,

"நைநம் சி2ந்த3ந்தி ஶஸ்த்ராணி நைநம் த3ஹதி பாவக:
ந சைநம் க்லேத3யந்த்யாப: ந ஶோஷயதி மாருத:"

"அச்சே2த்3யோயம் அதா3ஹ்யோயம்
அக்லேத்3யோ அசோஷ்ய ஏவச"

என்று ஆத்மா விஷயத்தில் சொன்னது பிரஹ்லாதனுடைய சரித்திரத்திற்கும் பொருத்தமாயிற்று.

http://acharya.org

ஆதிகாவ்யமாகிற ஸ்ரீமத்ராமாயணத்தில் வால்மீகிமஹர்ஷி, காண்டந்தோறும், நாராயண பரத்வத்தை நிலைநாட்டினார். புராண ரத்னமாகிய விஷ்ணுபுராணத்தில் பராசரமஹர்ஷி பல பாகங்களில் பரமாத்மா பத்மநாபனே என்று நிர்ணயம் செய்திருக்கிறார். "ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" என்று வேதத்திலும் பிரஸித்தி பெற்ற வேதவியாஸமஹர்ஷியும் ஸ்ரீபாகவதம், மஹாபாரதம், ஹரிவம்சம் முதலிய கிரந்தங்களில் பல இடங்களில் பரவாஸுதேவனே பரனென்று பிரஸித்தப்படுத்தியதுமன்றியில் கைதூக்கிக்கொண்டு கங்கைக்கரையில் கேசவனைக்காட்டிலும் மேலான தெய்வம் கிடையாது என்று மூன்றுதரம் சத்தியம் செய்திருக்கிறார். தீர்க்க ஸத்ர யாகம் செய்யும் காலத்தில் ஸப்த ரிஷிகளின் சொற்படி பிரம்ம புத்ரராகிய ப்ருகுமஹர்ஷியும், சிவனைச் சோதித்து, பிரமனைப் பரீக்ஷித்து, பரந்தாமனைப் பாதகமலங்களினால் புடைத்து, நாராயணனே பரனென்று துணிபுணர்த்தினார். தேவாதிதேவனும் தசாவதாரம் எடுத்து அதிமானுஷ காரியங்களைச் செய்துகாட்டித் தம்முடைய பரத்வத்தைத் தாமே நிலைநாட்டினார். அப்படியிருந்தும் பாரஸந்தானின் பரத்வத்தை, உலகத்தோர் உணராமல், எதிரம்புகோத்து, பாப ஸ்ருஷ்டியில் ஸர்வ சக்தித்வத்தை வகித்தார்கள். ஸ்ரிய:பதியின் சாஸனங்களாகிற சாஸ்த்ரங்களை மந்தமதிகள் மதிக்கவில்லை. தர்க்கவாதிகள் தப்பர்த்தம்செய்து தள்ளினார்கள்.

"அவஜாநந்தி மாம் மூடா: மாநுஷீம் தநும் ஆச்ரிதம்"

என்று வெறுப்புற்ற விஷ்ணுவானவர் ஸ்ரீவிஷ்ணுசித்த விப்ரநாராயண பக்திஸார பராங்குச பரகாலாதிகளை அவதரிப்பித்தருளி அவர்கள் பிரபந்தங்களில் பல இடங்களிலும் பரத்வத்தைப் பிரகாசப்படுத்தினார். அவரால் நியமிக்கப்பட்டு கூடல்மாநகரில் பாண்டிய ராஜ ஸபையில் ப்ருஹஸ்பதி முதலிய பரஸமய மதயானைகள் மண்ணில் மண்டியிட, சீரிய சிங்கம் அறிவுற்று, மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்படுமாப்போலே நம் பட்டர்பிரான், குருமுகமாக அத்யயனம் செய்த நாலுவேதங்களையும் "அநந்தா வை வேதா:" என்று குருமுகமாக அத்யயனம் பண்ணாத எல்லா வேதங்களையும் ஒன்றும் விடாமல் "ப்ராஹ வேதாந் அசேஷாந்" என்கிறபடி வேண்டிய வேதங்கள் ஓதி விஷ்ணுபரத்வநிர்ணயம் செய்ய, தானாகத் தாழ்ந்த பொற்கிழியை விரைவாக அறுத்தருளினார். மேலும் யானைமேல் விஷ்ணுசித்தன் நகர வலம் வரும்பொழுது பராத்பரனாகிய பகவான், ஸ்ரீ பூமி ஸமேதனாய், கருடாரூடனாய், பஞ்சாயுதங்களை அணிந்துகொண்டு, விதிசிவாதி

http://acharya.org

ஸகல தேவதைகள் புடைசூழ, வஸிஷ்ட சண்டாளாதி விபாகமற, எல்லோருடைய ஊனக்கண்ணுக்கும் ப்ரத்யக்ஷமாக ஸேவை ஸாதித்தனன். காலாதீதமான வஸ்து கலி ஸாம்ராஜ்யம் செய்யும் காலத்திலே கண்ணுக்கு இலக்காவதே! என்று விஷ்ணுசித்தர் பொங்கும் பரிவாலே மங்களாசாஸனம் செய்து பெரியாழ்வார் என்ற பட்டப் பெயரும் பெற்றார்.

'கூரேச விஜயமும்' நாராயண பரத்வநிர்ணயம் செய்ததில் விஜயமே. அதிலும் தொகை நின்ற ஐயம் துடைத்ததில் ஐயமேயில்லை. ஆனால் சோழ அரசனோ விஷ்ணுத்வேஷி; சாஸ்த்ரங்களுக்குச் செவி கொடாத சீலமில்லாச் சிறியன்; காபாலிகர்களின் கூற்றுக்குக் கொற்றவனாகிய கொடுங்கோலன்; வாதத்தில் தோற்றும் விடாக் கொண்டனாய், கூட்டத் திமிரினாலும், மதத்தினாலும், கட்டாயத்தினாலும், கையெழுத்துக் கேட்ட கசடன்; கண்ணைப் பறிக்கச்செய்த புழுக் கழுத்தினன்; பஞ்சமா பாதகன். சபையினரோ மனிதப்பலி கொடுத்து ரத்தத்தை உறிஞ்சுகிற கொடும்பாவிகள்; பரிவதற்கு ஒரு பூண்டு கூடக்கிடையாது. கைப்பிடியாகக் கொண்டுவந்த காவலர்கள் சூழ கூரத்தாழ்வானும், பெரிய நம்பிகளும் இருந்த இருப்பு சிறைக்கூடம் போலே. வாதத்தில் வெற்றியடைந்திருந்தபோதிலும் ஜயித்தவர்கள் தேகத் துன்பம் அடைந்தார்கள். பகவத் பக்தர்களோ சோக சமுத்ரத்தில் ஆழ்ந்து கண்ணீர் விட்டுக் கதறினார்கள். துஷ்ட நிக்ரஹமும் ஸாது பரித்ராணமும் செய்ய வேண்டியவனும் பிரத்யக்ஷமாக வரவுமில்லை; நிரஸிக்கவும் இல்லை. பனிரண்டாண்டுகள் பொறுத்திருந்தான்.

விஷ்ணுசித்தரோ எம்பெருமான் நியமனத்தின் பேரில் அடியார்கள் குழாங்கள் முன்னும் பின்னும் கூடிவர பரதத்வ நிர்ணயம் செய்யப்போனார். பாண்டிய நாட்டுப் பார்த்திபனோ மத்யஸ்தன்; ஆசாரியர் செல்வநம்பிகள் ஆக்ஞைப்படி வில்லிபுத்தூர் வேதக்கோனை ஸகலமரியாதைகளுடன் எதிர்கொண்டழைத்துத் தகுந்த ஆஸனத்தில் அமர்த்தினான். தீர்ப்பும் அரசனுடையதல்ல; அதிமானுஷ காரியத்தினால் பொற்கிழி தானாகத் தாழ்ந்து தீர்ப்பளித்தது. அரசனும், அவையினரும், எதிர்க்கட்சியினரும் விஷ்ணுசித்தருடைய விஜயத்தை ஏற்றுக்கொண்டனர். பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ஈண்டிய சங்கம் எடுத்தூத, புத்தூர்க்கோனை ஆனைமேலேற்றிப் பவனி வரும்படிச்செய்து, சிறப்பாக மஹோத்ஸவம் நடத்தினார்கள். ஆதிப்பிரானும் அதில் கலந்துகொள்ள

http://acharya.org

ஆசைப்பட்டு, ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினல் நிரூபிப்பதற்காக எல்லோருக்கும் ஸேவை ஸாதித்தனன். கூடியிருந்த தொண்டர் குழாங்களும் "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்" என்று "ஆடியாடி அகங்கரைந்து இசை பாடிப்பாடி" ஆனந்தக்கண்ணீர் மல்கிப் பரமானந்தக்கடலில் ஆழ்ந்தனர். பரதத்வ நிர்ணய மஹோத்ஸவம், கூடலழகர் கருடாரூடாராய் ஸேவை ஸாதிக்க, கஜாரூடராய் பெரியாழ்வார் பவனிவர, கூடல்மாநகரில் சிறப்பாக நடந்தது. கிரந்தங்களிலும், பிரபந்தங்களிலும் பரதத்வ நிர்ணயம் பலர் செய்திருந்தபோதிலும், வாதத்தில் வென்று, வைஷ்ணவக்கொடி ஏற்றுவித்து, நிர்ணயம் செய்யப்பட்ட நாராயணனை நாடு நகரமும் நன்கறிய நேரில் காட்டின விஜயம் வில்லிபுத்தூர் விஷ்ணுசித்தருக்கே இருப்பதினல் இந்தகிரந்தத்திற்கு "விஷ்ணுசித்த விஜயம்" என்று மகுடம் சூட்டப்பட்டிருப்பது நியாயமும் பொருத்தமும் ஆகும். விஷ்ணுவே பரப்ரம்மமென்று அறிந்து அவனிடம் தங்களுடைய புத்தியில் ஆதரம் பெருகினவர்கள் எல்லோரும் விஷ்ணுசித்தர்களே. மறந்தும் புறந்தொழா மாந்தர்கள் மனத்தே மறைந்துறைகின்ற மாதவனுடைய விஜயமே "விஷ்ணுசித்த விஜயம்" எனப்படும்.

பேரருளாளர் எம்பெருமானுருக்கு அருளிச்செய்த ஆறு வார்த்தைகளில் "அஹமேவ பரம் தத்வம்" என்பதே முதலானதும், முக்கியமானதும் ஆகும். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை, ஆஸேது ஹிமாசல பர்யந்தமாக உள்ள நம் பரதகண்டத்தில், ஸ்ரீ ராமானுஜன் பரவச்செய்த காலத்தில் பரதத்வ நிர்ணயம் செய்து ஒப்பற்ற பிரபாவம் அடைந்திருக்கிருர். தர்க்கச் சமணர்களிடம் வாதம் செய்து வென்று யாதவகிரியில் விஷ்ணு ஜயஸ்தம்பம் நாட்டினுர். தாழ்சடையோன் சொற்கற்ற சைவரிடம் ராமானுஜனும் வாதப்ரதிவாதங்கள் செய்து திருமலை அப்பனுக்குச் சங்காழி அளித்து, கருடக்கொடி நாட்டின விவரம் அனந்தாழ்வான் ஸாதித்தருளின "வேங்கடாசல இதிஹாஸமாலா" என்னும் கிரந்தத்தில் காணலாம். ஈச்வரத்வித்வம் கிடையாது. பரமாத்மா ஒப்பாரு மிக்காருமற்ற ஒண்டொடியாள் கேள்வன் ஒருவனே. புருஷஸூக்தத்திலும் "ஹ்ரீ: ச தே லக்ஷ்மீ: ச பத்ந்யௌ" என்று அவனுடைய அஸாதாரண லக்ஷணம் கீர்த்திக்கப்பெற்றிருக்கிறது. சிவனும் ஓர் ஜீவனே; பிரமனும் ஓர் படைப்பே. ஸித்தாந்த ப்ரவசன காலங்களில் ஒவ்வொரு ஆசாரியர்களும் இவைகளை ஸ்தாபித்துக் கண்டன மண்டனங்கள்

செய்திருக்கிறார்கள். எங்களாழ்வாரும் விஷ்ணுபுராண வியாக்யானத்திலும், இதர கிரந்தங்களிலும் விஷ்ணுவே வேதக்கோன் என்று விளங்க வைத்திருக்கிறார். அவருடைய சிஷ்யராகிய நடாதூர் அம்மாளும் "தத்வஸாரத்தில்" பரம் தத்வம் அவனே என்று தெளிவித்திருக்கின்றார். ஸுதர்சன பட்டரும் 'ச்ருத ப்ரகாசிகை'யில் ஸஹஸ்ர சாகோபனிஷத்துகளிலும் ச்ரிய: பதியே வேதப்பொருள் என்று விசேஷமாக விளக்கியிருக்கின்றார். ஆளவந்தாரும் "மகா புருஷ நிர்ணயத்திலும்" "ஸ்தோத்ரரத்னத்திலும்" கண்ணனல்லால் தெய்வமில்லை என்று காட்டியருளினார். ஸ்தோத்ர ரத்ன வியாக்யானத்திலும் இதர ஸகல கிரந்தங்களிலும், ஸ்ரீமத் பெரியவாச்சான் பிள்ளை 'நாட்டில் பிறந்தவர் நாரணற்காளன்றியாவரே' என்று உணர்த்தி 'உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் எம்பெருமான்' என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார். ஸ்ரீவேதாந்த தேசிகரும், ஸ்தோத்ர ரத்ன பாஷ்யத்திலும், ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் விசேஷமாகப் பரதத்வ நிர்ணயம் பண்ணியிருக்கிறார். வீரராகவர் செய்த பாகவத வியாக்யானத்திலும், வேதாந்த கௌஸ்துபத்திலும் விஷ்ணுவே பரப்ரம்மமென்று விளக்கியிருக்கிறார்கள். திருவரங்கத்தமுதனார் திருப்பேராகிய ஸ்ரீ பிள்ளைப்பெருமாளையங்கார் பரப்ரம்ம விவேகத்திலும், அஷ்ட ப்ரபந்தங்களிலும், கம்பநாட்டாழ்வார் செய்தருளின ஸ்ரீராமாயணத்திலும், வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதத்திலும், மதுரகவி வாதராஜய்யங்கார் பாகவதப் பாட்டுகளிலும், அநந்தபாரதிகள் பாகவத தசம ஸ்கந்த கீர்த்தனைகளிலும், ஹரிதாஸர் 'இருசமய விளக்கத்திலும்' பரவாஸுதேவனுடைய பரத்வத்தைப் பரக்கப் பேசியிருக்கிறார்கள்.

மாத்வாசாரியரும் விஷ்ணு பரத்வத்தைப் பல இடங்களில் பிரகடனப்படுத்தி இருக்கிறார். அத்வைத ஸித்தாந்த ஸ்தாபகராகிய சங்கராசாரியரும் தம்முடைய வேதாந்த பாஷ்யத்திலும், கீதாபாஷ்யத்திலும், இதர கிரந்தங்களிலும் நாராயணன் பரமாத்மா என்பதை ஹ்ருதய பூர்வமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அவருடைய சிஷ்யராகிய ஸ்ரீதரரும் விஷ்ணுபுராண, பாகவத வியாக்யானங்களில் விஷ்ணுபரத்வத்தை ஸ்தாபித்து, சிவன் முதலிய இதர தேவதைகளுக்கும் அவனே அந்தர்யாமி என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஸ்ரீதேசிகரும் தமது 'தாத்பர்ய சந்த்ரிகையில்' சரமச்லோக வியாக்யானத்தில் பிசாசரந்தி தேவகுப்த சங்கர யாதவப்ரகாச பாஸ்கர நாராயணார்ய யஜ்ஞஸ்வாமி ப்ரப்ருதிகளான நூற்றுக்கணக்கான

http://acharya.org

பாஷ்யகாரர்கள் தமது கிரந்தங்களில் பகவான் ஒருவனே பரம்தத்வம் என்றும் அநன்யசரணர்களாய், அவன் ஒருவனையே ஆச்ரயிப்பதே பரமதர்மம் என்றும் ஸாரார்த்தமாகச் சொல்லியிருப்பதாகக் கண்டிருக்கிறார். ராமஸுப்ரம்மண்யசாஸ்திரிகள் என்பவரும் தமது 'விஷ்ணு தத்வ ரஹஸ்யம்' முதலான கிரந்தங்களில் விஷ்ணு பரத்வத்தை நன்றாக ஸ்தாபித்திருக்கிறார். முன்னோர் மொழிந்த முறைப்படியே நாமும் இங்கே விஷ்ணுபரத்வநிர்ணயம் செய்கிறோம்.

'நாட்டினான் தெய்வமெங்கும்'' என்றார் பள்ளி உணர்த்தும் பிரான்.

''வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதி விகற்பால்
பிணங்கும் சமயம் பலபலவாக்கி அவை அவைதோறு
அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்''

என்றார் குருகூர்ச்சடகோபனும். புருஷர்கள் ராஜஸ தாமஸ குணமுடையவர்கள். அவர்கள் புத்தியும், ருசியும் அதற்கனுகுணமாக இருக்கும். அவர்களுக்குத் தகுந்தபடி மதஸ்தாபகர்களையும், சாஸ்த்ரங்களையும், 'யோ யோ யாம் யாம் தநும் பக்த்யா' என்கிறபடி தன்னுடையசரீர அவயவஸ்தானங்களான தெய்வங்களையும் பகவான் உண்டாக்கி வைத்திருக்கிறார். 'அவரவர் விதிவழி அடைய நின்றனரே' என்றே நாமும் நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

''ஆகாசாத் பதிதம் தோயம் யத2ா க3ச்ச2தி ஸாக3ரம்
ஸர்வதே3வ நமஸ்கார: கேசவம் ப்ரதி க3ச்ச2தி''

என்னுமாப்போல் நம் ஆழ்வாரும்,

''நும் இன்கவிகொண்டு நும் நும் இட்டா தெய்வம் ஏத்தினல்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே''

என்று பாடியிருக்கிறார். மற்ற தெய்வங்களை ஆடிப் பாடிப் பணிந்து பல மதங்களில் உழன்று திரிந்து, பிறகு பகவானை அடைந்துதான் பரமபதப் படிக்கட்டுகளில் (ஸோபானங்களில்) ஏறலாம்.

திருமழிசை ஆழ்வாரும்,

''சாக்கியம் கற்றோம் சமண் கற்றோம் சங்கரனார்
ஆக்கிய ஆகம நூலாராய்ந்தோம்—பாக்கியத்தால்
செங்கட்கரியானைச் சேர்ந்து யாம் தீதிலோம்
எங்கட்கரியதொன் றில்''

என்று தாம் பல மதங்களிலும் புகுந்து ஆராய்ந்து உணர்ந்து பார்த்த காலத்தில் ஒன்றிலும் ஒரு பலமில்லாததால் அவைகளைக் கைவிட்டு,

"நான்முகனை நாராயணன் படைத்தான்—நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்"

என்று ஸந்தேகமின்றி அறிவித்தார். தொண்டரடிப்பொடிகளும்

"காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்குய்யும் வண்ணம்"

என்று உபதேசித்தார்.

இப்படி நிர்ணயம் செய்வதனால் மதச்சண்டை ஏற்படாதா என்று பலர் நினைக்கலாம். அவரவர் தம்தம் மதத்தை அனுஷ்டிப்பதில் நமக்கு யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. தங்கள் தங்கள் தெய்வங்களே உயர்ந்தவை என்று சொல்லிக்கொள்வதிலும் நமக்கு எதிர்வாதமே கிடையாது. பல ஜன்மங்கள் அந்தந்த மதங்களில் இருந்து தம் தெய்வங்களைச் சரியாக உபாஸித்து புத்தி பரிபக்வமடைந்து காலக்ரமேண கேசவன் தமர்களாக ஆகவேண்டுமே ஒழிய ஒரே அடியாக மற்ற மதஸ்தர்கள் மாறக்கூடியவர்களல்ல. வைஷ்ணவ மதத்தில் பிறந்து வைஷ்ணவன் என்று பெயர் பூண்டு தங்கள் ஸித்தாந்தத்தின் கொள்கைகளை அறியாமல் தியங்கித் திரிபவர்களைத் திருத்திப் பணிகொள்வதே இதன் நோக்கமாகும்.

சுமார் நானூறு வருஷங்களுக்குள் இருந்த ஸ்ரீகண்டர், அப்பய்ய தீக்ஷிதர் இவர்கள் காலம் முதலாகவே ஸம்ஸ்கிருத வித்வான்களில் நாராயண பரத்வத்திற்கு எதிர்வாதங்கள் ஏற்பட்டன. அதற்குமுன் பிரஸித்தமான எதிர்வாதமே கிடையாது. ஸ்ரீகண்ட பாஷ்யத்திற்கு அப்பய்ய தீக்ஷிதர் வியாக்யானமாகச்செய்த சிவார்க்கமணி தீபிகையிலும், சிவதத்வ விவேகத்திலும் ச்ருதிகளுக்கு அபார்த்தம் செய்து சிவபரத்வம் ஸ்தாபிக்கப்பார்த்து, முடியாமல் துரீய வாதத்தையும் தோன்றவைத்துத் திண்டாடி, ஸமத்வத்தையும் ஸமர்த்தனம் செய்யமுடியாமல் ஐக்யமென்று வாதாடி வழக்கிழந்து, வரதராஜன் விஷயமாக ஸ்தோத்ரமும், ராமானுஜ ஸித்தாந்த ரீதியாக 'நயமயூகமாலிகா' என்ற ஸூத்ர பாஷ்யமும் செய்திருக்கிறார். அவர் விதைத்து உண்டாக்கின சைவ வைஷ்ணவ ஸமரஸச் செடியானது இப்போது ஸர்வ ஸமய ஸமரஸமாகிற பெரிய விஷவிருக்ஷமாகி விஷக்கனிகளைக் கக்குகின்றது. வேதமார்க்

http://acharya.org

கங்களாகிற வைதிக மதங்களுக்கு விரோதிகளும், வேத பாஹ்யங்களுமான, பரதேசங்களிலிருந்து இங்கு வந்த கிறிஸ்து, இஸ்லாம் முதலிய மதங்களும், நவீன காலங்களில் தோன்றிய இதர மதங்களும், மற்ற எம்மதங்களும் சம்மதம் என்று ஸர்வ ஸமய ஸமரஸ வாதிகள் ஸ்தாபிக்கிறார்கள். இப்படிப்பட்ட கொள்கைகளினால் பல ஹீனம் அடைந்து 'ஹிந்து மதம்' என்கிற போலிப் பெயரைப் பெற்ற ஹிந்து மதத்தில் இருப்பவர்கள், தங்கள் மதமே சரி என்கிற உறுதி இழந்து மகமதியர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் மாறுகிறார்கள். அப்படி மாறுபவர்களை 'ஸமரஸவாதிகள்' தடுக்கவோ கண்டிக்கவோ காரணமில்லாமல் பரிதவிக்கிறார்கள். கிறிஸ்து, இஸ்லாம் மதத்தினர்கள் தங்கள் தங்கள் மதமே சரியென்றும் மற்ற மதத்தினர்கள் அஜ்ஞானிகள் என்றும் அவர்களுக்கு சாச்வதமாக நல்ல கதி கிடையாதென்றும் சொல்லிக்கொண்டு மற்ற மதத்தினர்களை நயத்தினாலோ, பயத்தினாலோ, காசினாலோ, கன்னிகைகளாலோ தங்கள் மதத்திற்குச் சேர்ப்பது சிறந்த பணியென்றும் கருதி அதற்காக ஸமாஜங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். ஸர்வ ஸமய ஸமரஸ வாதிகள் தங்கள் பிரார்த்தனைக் கூட்டங்களில் குரானையும், பைபிளையும், கீதையையும் சேர்த்து வாசித்துக்கொண்டும், தாங்கள் ஹிந்துக்கள் என்றும், எம்மதமும் சம்மதமென்பதே ஹிந்துமதமென்றும் சொல்லிக்கொண்டும், அனுஷ்டித்துக்கொண்டும் வருவதால் இதர மதங்களுக்கு ஏராளமான மத மாறுதல்கள் ஏற்படுகின்றன. மோஹன்தாஸராகிய காந்தியின் கொள்கையும் ஸர்வ ஸமய ஸமரஸவாதமே. ஆதாரமாகக் காட்டும் கீதையில் 'யஜந்தி அவிதி பூர்வகம்' என்று புறந்தொழுகை கண்டிக்கப்பட்டிருப்பதைக் காணக் கண்ணுடையவர்களாக இருக்கிறார்கள். இப்படித் தங்களுக்குத் தோன்றின தெய்வங்களை உண்டாக்கிக் கையெடுத்துக் கும்பிடுவது அவர்களுடைய புல்லறிவைப் பொருந்தக் காட்டுகிறது என்று திருவாசிரியத்தில் நம்மாழ்வார் நன்கு உபதேசித்திருக்கின்றார். பரமபதநாதனின் பரத்வத்தைப் பேசிப்பேசிப் பொழுதுபோக்கினால் கனல்பொறிபட்ட பஞ்சுப்பொதிபோல் பகலிரவு செய்யும் பாவக்காடு பற்றி எறிந்து பஸ்மமாகும். இதுவே அவனுகந்த கைங்கர்யம்.

விஷ்ணுசித்த விஜயத்தில் பீடிகை முற்றிற்று.

http://acharya.org

அத்தியாயம் – 1.

வேத வேதாந்த நிர்ணயம்.

முதல்பாதம் – நாராயணனே பரப்ரம்மம்.

◈◈◈◈◈◈◈◈◈◈◈

"நாராயணபரம் ப்3ரஹ்ம த்த்வம் நாராயண: பர:
நாராயணபரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:
யச்ச கிஞ்சித் ஜக3த்யஸ்மிந் த்3ருச்யதே ச்ரூயதேபி வா
அந்தர்ப3ஹி: ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி2த:"

[தைத்திரீய உபநிஷத்]

[பரம் ப்ரஹ்மம் நாராயணனே. உயர்ந்த உண்மையான வஸ்து நாராயணனே; உயர்ந்த ஆத்மாவும் நாராயணனே. இந்த உலகத்தில் காண்பனவும், கேட்பனவுமான எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் நுழைந்து நிறைந்திருப்பவன் நாராயணனே.]

ப்ரஹ்மம் என்றால் என்ன? 'பரப்ரஹ்மம் என்றால் என்ன? தத்வம், பரம் தத்வம் என்றால் என்ன? ஜ்யோதி, பரம்ஜ்யோதி என்றால் என்ன? ஆத்மா, பரமாத்மா என்றால் என்ன? ஜகத் என்றால் என்ன? நாராயணனுடைய மற்ற நாமங்கள் யாவை?

"ப்3ருஹத்வாத்ப்3ரும்ஹணத்வாத் ச தத்ப்3ரஹ்மேத்யபி4தீ4யதே"

ப்ரஹ்மம் என்றால் பெரிதாயிருக்கும் வஸ்து; தன்னை அடைந்தவர்களைத் தன்னைப்போல் பெரிதாக்கும் வஸ்து. இவ்வுலகில், குலத்தினாலோ, வித்யையினாலோ, தனத்தினாலோ, அதிகாரப்பதவிகளாலோ, ஆசார அனுஷ்டானங்களினாலோ பெரியவர்களை அண்டி மனுஷ்யர்கள் அந்தந்தப் பெருமைகளை அடைகிறார்கள். பரலோகங்களிலும் இம்மாதிரியே ஆநந்தம், அதிகாரம், சக்தி முதலியவைகளில் ஏற்றத் தாழ்வுகளுடன் பல பதவிகள் இருக்கின்றன. இந்திரன், சந்திரன், குபேரன் முதலிய தேவதைகளைத் தொழுது அவர்களிடமிருந்து, வரம்பெற்று இஹலோகத்திலும், அவரவர் அதிகாரத்துக்குட்பட்ட பரலோகங்களிலும் பதவிகளைப் பெறுகிறார்கள். ஆயுளிலும், அதிகாரத்திலும், ஆநந்தத்திலும், சக்தியிலும் சிறந்தவராகிய சிவனை உபாஸித்து அவருடைய லோகத்தை அடைந்து அவருக்கு ஸமானமான குணம், வீர்யம், சக்தி, ஆநந்தம் முதலியவைகளை அடைந்து அவருடைய சேர்க்கையை அடைகிறார்

http://acharya.org

கள். அவரை ஈன்றவராகிய பிரமனை உபாஸித்து, வரம்பெற்று அவருடைய ஸத்யலோகத்தை அடைந்து பசி, தாஹம் முதலிய ஆறு விகாரங்களும் (ஊர்மிகளும்) இல்லாமல், ராஜஸகுணமடைந்து, படைக்கும் தொழிலில் பிரமனுக்கு உதவிபுரிந்துகொண்டும், வேத வேதாந்தங்களை விமர்சனம் செய்துகொண்டும் பொழுதுபோக்கு கிறார்கள். ஆனால் விதிசிவாதிகளுக்கும் அவர்களுடைய ஆயுள் வீர்யம், சக்தி, ஆநந்தம் முதலியவைகளுக்கும், அவர்களுடைய உல கங்களுக்கும் காலம் முதலிய எல்லாவகைகளிலும் அளவு ஏற்பட் டிருக்கின்றது. வேதக்கோனாகிய விஷ்ணுவிற்கோ, அவருடைய உல கத்திற்கோ, அங்கிருப்பவர்களுக்கோ ஆயுளிலோ, ஆநந்தத்திலோ, சக்தியிலோ அளவு கிடையாது: அவருடைய லோகத்தை அடைந்து, ஸமீபத்தையும் சேர்க்கையையும் அடைந்து அவரைப்போல் ரூபத்தை யும் ஆயுதங்களையும் தரித்துகொண்டு அவரைச் சூழ்ந்திருந்தேத்தி அச்யுதனடியார்கள் ப்ரம்மாநந்தத்தை அடைகிறார்கள்.

ஸ்ரீராமானுஜரால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீபாஷ்யத்தில் பிரம்ம சப்தம் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது.

"ப்₃ரஹ்மசப்₃தேந ச ஸ்வப₄ாவதோ நிரஸ்தநிகி₂லதே₃ாஷ:
அநவதி₄காதிசயாஸங்க்₂யேயகல்யாணகு₃ணக₃ண:
புருஷோத்தம: அபி₄தீ₄யதே"

இயற்கையாகவே கெட்ட குணங்கள் இல்லாதவனும், அளவிட முடியாத, உயர்ந்த, எண்ணிறந்த மநோஹரமான மங்கள குணக் கூட்டங்களை உடையவனும் ஆகிய புருஷோத்தமனே ப்ரஹ்மம் எனப்படுகிறார். புருஷ ஸூக்தத்தில் சொல்லப்படுகிறவனே ப்ரஹ் மம். அவன் ஒருவனே புருஷன். மற்றவர்கள் ஸ்திரீப்ராயர்களே. ஜீவாத்மாக்களெல்லாம் அவனுடைய தேவிகளே. இதனாலேயே மற்ற தெய்வங்களைத் தொழுபவர்கள் ஜாரஸ்திரீக்கு ஸமானமாகக் கருதப்படுகிறார்கள்.

ஆனால், சிலர் சுகப்பிரம்மம் என்று ஒரு மஹர்ஷியையும், சிவப் பிரம்மம் என்று ஒரு தேவதையையும் குறிப்பிடுகிறார்கள். சாஸ்த்ரங் களிலும் பிரம்ம சப்தம் ஜீவாத்மாவைக் குறிப்பதாகக் காணப்படு கிறது. ஏன் என்று ஆராய்வோம். எவரிடத்திலும், பெரியதாயிருக் கும் தன்மை, குறையவோ, கூடவோ, அல்பமோ, அதிகமோ இருப் பதினாலேயே பிரம்மம் என்கிற சப்தம் அவர்களைக் குறித்துச் சொல்லப்படுகிறது.

http://acharya.org

"ப்₃ருஹத்வம் ச ஸ்வரூபேண கு₃ணை: சயத்ர அநவதி₄காதிசயம்
ஸ: அஸ்ய முக்₂ய: அர்த்த₂: ஸச ஸர்வேச்வர ஏவ
அதோ ப்₃ரஹ்மசப்₃த₃: தத்ரைவ முக்₂யவ்ருத்த:
தஸ்மாத் அந்யத்ர தத்₃கு₃ணலேசயோகா₃த் ஔபசாரிக:......
ப₄க₃வச்ச₂ப்₃த₃வத்"

ஸ்வரூபத்திலும், குணத்திலும் எல்லையற்ற மேன்மையுடைய பெரிய தன்மை எவரிடம் இருக்கிறதோ அவரே ப்ரஹ்ம சப்தத்திற்கு முக்கியமான உரிமையுடையவர். அவர் ஸர்வேச்வரனே. ஆகையால் அவரையே ப்ரம்மசப்தம் முக்கியமாகக் கூறுகின்றது. பகவச்சப்தம் போல் ப்ரம்மசப்தமும், மற்றவர்களிடத்தில் பெரிதாயிருக்கும் தன்மை லவலேசம் இருப்பதால், உபசாரமாக உரைக்கப்படுகிறது. வாஸ்தவமாக அவர்கள் பகவானும் அல்ல; ப்ரம்மமும் அல்ல. அப்படிச்சொல்லும் இடங்களில் மரியாதைக்காகவே சொல்லப்பட்டிருப்பதாகக் கொள்ளவேணும். இம்மாதிரி ஸந்தேஹம் ஏற்படாமல் இருப்பதற்காகவே நாராயணனைப் பரப்ரஹ்மமென்று வேதங்கள் விளம்பின.

"ப்₃ருஹதி ப்₃ரும்ஹயதி தஸ்மாத் உச்யதே பரம் ப்₃ரஹ்ம"

பெரிதாயிருப்பதாலும், பெரிதாகப் பண்ணுவதாலும் பரம்ப்ரஹ்மம் என்கிற பெயர் படிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி சிவனைப்பற்றி பரப்ரம்மம் என்றாவது, பரம்தத்வம் என்றாவது, பரமாத்மா என்றாவது, பரம்ஜ்யோதி என்றாவது ச்ருதி எங்குமே கூறவில்லை. ஒரு தடவைக்கு ஒன்பதுதடவை நாராயணன் பரனென்று சொல்லியும் உலகம் உணரவில்லையே! இப்படிச் சொல்லியிருப்பதை ஸஹிக்காத அப்பையதீக்ஷிதர் 'நாராயணாத் பரம்ப்ரஹ்ம' (நாராயணனைக்காட்டிலும் பரப்ரம்ஹம் மேலானது) என்று தப்பர்த்தம் செய்தார். இதே ச்ருதியானது மஹோபனிஷத்தில் "நாராயண: பரம்ப்ரஹ்ம:" என்று படிக்கப்பட்டிருக்கிறபடியால் ஸர்வவேதாந்த ப்ரத்யபிஜ்ஞாயப்படி அம்மாதிரி அர்த்தம்செய்வது கூடாது. மேலும் இந்த ச்ருதிக்குப் பிறகு உள்ளும் புறமும் நிறைந்திருப்பவன் நாராயணனே என்று நன்கு நவிலப்பட்டிருக்கிறபடியால் அம்மாதிரி அர்த்தம் செய்வது முற்றிலும் பொருந்தாது என்று புலப்படும். பேசநின்ற சிவனும் மற்றெவரும் வேதத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ப்ரஹ்மமும் அல்ல; பரப்ரஹ்மமுமல்ல. பாசுபதாதி மதங்கள் வேதவிருத்தங்கள் என்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்

http://acharya.org

கும், பரவாஸுதேவனே பராத்பரன் என்பதற்கும் இந்த உபநிஷத் முக்கியமான ஆதாரம்.

தத்வம் என்ருல் உண்மையான வஸ்து. அவைகளில் உயர்ந்தது பரம்தத்வம். இதிலிருந்து உண்மையான வஸ்துக்கள் அநேகம் இருக்கின்றன என்றும் அவைகளில் உயர்வற உயர்ந்தவன் நாராயணன் என்றும் ஐயந்திரிபறத் தெரிகிறது. தத்வம் ஒன்றே என்கிற ஸித்தாந்தங்கள் இதனுல் பிடரியைப் பிடித்துப் படுகுழியில் தள்ளப்பட்டன. தத்வங்களில் உயர்வு தாழ்வுகளும் உண்டு என்பதும் உணர்த்தப்படுகிறது. ஜீவாத்ம பரமாத்ம பேதமும் இதில் பகரப்பட்டிருக்கிறது. தத்வங்கள் மூன்று. அதில் அறிவற்றவை அசேதன வஸ்துக்கள். அறிவுடையவன் ஆத்மா. அயர்விலா, அளவிலா, அறிவுடையவன் அரும் பெரும் தெய்வமாகிய அச்சுதனே. ஞான சக்தி முதலியவைகளில், சேதநனுக்கும் பரமசேதநனுக்கும் உயர்வு தாழ்வு இருப்பது நியாயமே. இதனுல் அத்வைதம், அபேதவாதம், மாயாவாதம், மித்யாவாதம் முதலிய மாயமயக்குகளெல்லாம் அடியோடு அழிக்கப்பட்டன. ஆகவே இந்த ச்ருதி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கும் அசைக்கமுடியாத அஸ்திவாரம் ஆகிறது.

ஜ்யோதி என்ருல் ஒளி. நக்ஷத்திரங்கள், சந்த்ரன், ஸூர்யன், அக்னி ஆகிய இவைகளே இவ்வுலகத்திலுள்ள ஒளிகள். ஸூர்யன் பகலிலும், மற்றவை இரவிலும் இருளைப்போக்கி நமது ஊனக்கண்ணுல் பார்ப்பதற்குப் பிரகாசத்தைத் தருகிறது. அவைகளினுல் ஞானக்கண்ணுக்கு உபகாரம் கிடையாது. புறவிருளைப் போக்குமேயன்றி அவை மனவிருளை மாற்ற சக்தியற்றவை. மேலே சொன்ன ஒளிகளுக்கு ஒளியைக் கொடுப்பதினுலும், அஜ்ஞானத்தை அடியோடு அழிப்பதினுலும் பரம்ஜ்யோதி என்று சொல்லப்படுபவன் பரமபுருஷனே. அவனே நாராயணன் என்று இந்த உபநிஷத்தில் உணர்த்தப்படுகிறது. ஜ்யோதி என்பது ஞானத்தையும் குறிக்கும். ஞானஸ்வரூபனுகவும் ஞானகுணனுகவும் (ஞானத்தை குணமாக உடையவன்) வேதப்பிரானை இந்த வாக்யம் வெளியிடுகிறது. விஷ்ணுவே ஸ்வயம்பிரகாசமான சோதி. 'வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு' என்பது ஆழ்வார்களின் அருளிச்செயல். மற்ற சோதிகளை பல காரணங்களால் மறைக்கவும் அழிக்கவும் முடியும். ஆதியஞ்சோதியாகிய அருமறை பயந்தவனை, அடலாழியானை, மறைக்கவோ, அழிக்கவோ முடியாது. அதனுலும் அவன் பரம்ஜ்யோதி எனப்படுகிருன்.

ஆத்மா என்பவன் தேஹத்தினுள்ளிருந்து தேஹத்தை நியமிப்பவன். சில இடங்களில் ஆத்மசப்தம் ஜீவாத்மாவையும், மற்றும் சில இடங்களில் ஈச்வரனையும் குறிக்கிறது. அப்படி ஸந்தேஹம் உண்டாகாமலிருப்பதற்காக பரமாத்மசப்தம் இங்கு பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆத்மசப்தம் ஜீவாத்மாவையும், பரமாத்மசப்தம் பகவானையும் முக்யார்த்தமாகக் குறிப்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதன்றோ. தேஹத்தைக்காட்டிலும் ஸூக்ஷ்மமானவன் ஆத்மா. அவனை விட ஸூக்ஷ்மமானவன் பரமாத்மா. ஜீவாத்மா ஒரு தேஹத்தில் இருப்பவன். பரமாத்மா சேதநாசேதநங்கள் எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்டு இருப்பவனாதலால் உயர்ந்த ஆத்மா எனப்படுகிறான். ஸாதாரணமாக, ஜீவன் ஒரு தேஹத்தையே நியமிப்பவன. சில விஷயங்களையே செய்ய சக்தியுள்ளவன். எண்ணிறந்த சரீரங்களை நியமிப்பதினாலும் ஸர்வ சக்தி உடையவனாக இருப்பதனாலும் பரந்தாமன் பரமாத்மா எனப்படுகிறான். ஜீவனோ அணு. பரமனோ விபு: எங்கும் பரந்துளன். அவ்வகையிலும் அவன் மேலான ஆத்மா. ஆத்மா என்பவன் ஞானத்தையுடையவன். ஞான ஸங்கோச விகாஸங்களுக்கு (குறைதல், விரிதலுக்கு) இலக்கானவன். ஸர்வஜ்ஞனாகையாலும் ஞானத்தில் குறைவு இல்லாதவனானதாலும் ஸர்வேச்வரன் பரமாத்மா எனப்படுகிறான். ஜீவாத்மாக்களுக்கு தேஹம் கர்மத்தினால்ஏற்படுகிறது. அதுவோ மண்ணோராக்கை. பரனோ "அஜாயமானோ பஹுதா விஜாயதே" என்று வேதங்கள் அறைந்தபடி கர்மமடியாகப் பிறப்பற்றவன்; தன் ஸங்கல்பமடியாக விசேஷமான அவதார ஜன்மங்களை எடுக்கிறான். அவனுடைய தேஹமும் அப்ராக்ருதமானது. இதிலிருந்து ஆத்மாக்கள் பல உண்டென்றும் அவைகளில் உயர்வு தாழ்வு உண்டென்றும் ஏற்படுகிறதால் ஏகாத்மவாதம் எறியப்பட்டது.

வேதங்களில் பல இடங்களில், பல வித்யைகளில், பரப்ரம்மம், பரம்தத்வம், பரஞ்ஜ்யோதி, பரமாத்மா முதலிய ஸாமான்ய சப்தங்கள் உபாஸிக்கத் தகுந்தவனைக் குறித்து உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சப்தங்களினால் யார் குறிக்கப்படுகின்றார் என்பது சொல்ல முடியாது. சப்தங்களோ பொதுப்படையானவை; எவரையும் குறிக்கலாம். ஸாமான்ய சப்தங்கள் விசேஷ சப்தத்திலேயே பர்யவஸாநம் (முடிவு) அடையவேண்டும் என்பது மீமாம்ஸா நியாயம். மேற்குறித்த ஸாமாந்ய சப்தங்கள் விசேஷ சப்தமாகிற நாராயண சப்தத்தினால் குறிக்கப்பட்ட பரம்பொருளிடமே போய்ச்சேருகின்றன. இதற்காகவே நாராயண சப்தம் ஒவ்வொரு ஸாமான்ய சப்தத்

http://acharya.org

நூடனும் (பொதுப் பெயருடனும்) கூடப் பலதடவை படிக்கப்பட்டிருக்கிறது. அந்த நாராயணன் யார்? அவனுடைய மற்ற நாம தேயங்கள் யாவை? என்பதே நாம் நிர்ணயிக்கவேண்டும். யௌகிகமாக (பதச்சேர்க்கையினால்) நாராயண பதத்தை நாரங்களாகிற ஜீவாத்மாக்களுக்கு (அயநம்) சேருமிடம் என்றும், இவன் ஜீவர்களுக்குள் உறைகிறான் என்றும் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி இங்கு யௌகிகமாக மட்டும் பொருள் கொள்ளக் கூடாது. இந்த நாராயண சப்தம் ரூடி சப்தமாகும். ஒரு குறிப்பிட்ட புருஷனையே காட்டும். யௌகிகமாக அர்த்தம் செய்தால் அது ஸாமான்ய சப்தமே ஆகும். எந்த தெய்வத்தை வேண்டுமானாலும் குறிக்கலாம். அப்படியே அப்பைய தீக்ஷிதர் அர்த்தம் செய்து சிவனே நாராயணனென்று ஸமர்த்தனம் செய்யப்பார்த்தார். அது கீழ்க்கண்ட காரணங்களால் முடியவில்லை. யௌகிகமாகப் பொருள் கொண்டால் ''நாராயந:'' என்றே இருக்கவேண்டும். ஆனால் இங்கு ''நாராயண:'' என்றே காணப்படுவதினால் இது ரூடிசப்தமே*. ண காரம் யௌகிகமாக அர்த்தம் செய்வதையும் இதர தெய்வங்களுக்கு அந்தப் பெயரைப் பொருத்தப் பார்த்ததையும் பாதித்தது. அப்பைய தீக்ஷிதரின் அக்ரமவாதம் அதனால் அடியோடு அழிக்கப்பட்டது. 'ணத்வசந்த்ரிகை' முதலிய கிரந்தங்களில் இவ்விஷயத்தைப்பற்றி விரிவாகக் காணலாம். காசக்ருத்ஸ்நர் செய்த தெய்வ மீமாம்ஸையிலும் கடைசி இரண்டு ஸூத்ரங்களில் விஷ்ணுவே ப்ரம்மமென்று விளக்கப்பட்டிருக்கிறது.

''ஸ விஷ்ணு: ஆஹ ஹி''

''தம் ப்ரஹ்மேத்யாசக்ஷதே தம் ப்ரஹ்மேத்யாசக்ஷதே''

[அவர் விஷ்ணுவென்று சொல்லப்படுகிறார் அல்லவா; அவரே ப்ரம்மம் என்றும் சொல்லப்படுகிறார்; அவரே ப்ரம்மம் என்றும் சொல்லப்படுகிறார்.] விஷ்ணுகாயத்ரியிலும்,

''நாராயணாய வித்₃மஹே. வாஸுதே₃வாய தீ₄மஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோத₃யாத்''

என்று விஷ்ணுவென்றும் வாஸுதேவனென்றும் நாராயணனுடைய இதர நாமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஜகத் என்பது

* ''பூர்வபதா₃த் ஸம்ஜ்ஞாயாமக:'' என்ற பாணினி ஸூத்ரம் காண்க.

''ஸ்வரூபத: தர்மதோவா அந்யதாத்வம் கச்சத் போக்ய
போக்த்ரு ரூபம் வஸ்துஜாதம்''

[ஸ்வரூபத்தினாலும், குணத்தினாலும் விகாரத்தை அடையும்படியான, அனுபவிக்கப்படுகிற வஸ்துக்களும், அனுபவிக்கிற வஸ்துக்களுமே ஜகத் எனப்படும்.] சேதநாசேதநங்கள் இரண்டும் நாராயணனுக்கு தேஹம். நம்முடைய தேஹம் அசித் வஸ்து; அந்த சரீரத்தில் இருந்து அதை நடத்தி வைப்பவன் சித்வஸ்து. அந்த ஜீவாத்மாவினுள் பரமாத்மா அந்த:ப்ரவேசம் செய்து அந்தர்யாமியாயிருந்து கொண்டு அதை நியமிக்கிறான். அதனாலேயே அவனுக்கு அந்தராத்மா என்றும், சரீரீ என்றும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் ஜீவாத்மா அணுவாயிற்றே; 'அச்சேத்யோயம்' என்று கீதாசாரியனால் சொல்லப்பட்டிருக்கிறதே; ஆகையினால் ஜீவனுக்குள் அந்தர்வியாப்தி கிடையாது என்று ஆக்ஷேபணை செய்கிறார்கள். அகாரவாச்யன் அகடிதகடனா ஸாமார்த்யமுடையவன். வேதமும் 'அணோரணீயாந்' என்று ஓதியிருக்கிறது. மேலும், 'ய ஆத்மநி திஷ்டந்' என்று சொல்லியதோடு திருப்தியடையாத வேதபுருஷன் 'ஆத்மந: அந்தர:' என்றும் சொல்லி விளங்கவைத்தான். இவ்விடத்திற்கு அர்த்தம் செய்த சுருதப்பிரகாசிகாசாரியர் ''வேத்யாம் அக்நி: திஷ்டதி'' (யாகமேடையில் அக்நி இருக்கிறது) என்பதுபோல் ஆத்மாவின் வெளிப்புறத்தில் அச்யுதன் இருப்பதைக் காட்டியிருக்கிறது என்றும், ''திலே தைலம் திஷ்டதி'' (எள்ளுக்குள் எண்ணெய் இருக்கிறது) என்பதுபோல் ஆத்மாவினுள்ளும் அந்தராத்மா இருக்கிறான் என்று காட்டியிருக்கிறது என்றும் விளங்கவைத்திருக்கிறார். 'தொட்ட தொட்ட இடந்தோறும் தோன்றுவன்' என்றும் 'அணுவினைச்சதகூறிட்ட கோணிலும் உளன்' என்றும் பிரஹ்லாதன் இரணியனுக்கு உறுதி கூறியதாகக் கம்பநாட்டாழ்வார் பாடியிருக்கிறார். எங்கும் பரந்துளன் எம்பெருமான். 'அஸ்மிந் ஜகதி'' என்றும் 'த்ருச்யதே ச்ரூயதேபிவா' என்றும் பலபடியாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் ஜகத் முழுதும் உண்மையே என்று ஏற்படுகிறது. ஜகத் மித்யை (பொய்) என்கிற வாதம் பொய் நின்ற ஞானமே. காண்பனவும், கேட்பனவும் தோற்றமே ஒழிய வாஸ்தவமல்ல என்று சொல்லுகிற அத்வைதிகள் வாதத்திற்கு இந்த உபநிஷத்தில் லவலேசமேனும் இடம் உண்டோ? ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்திற்கும் விசிஷ்டாத்வைத வேதாந்தத்திற்கும் உதவின உபநிஷத் இதுவே ஆகும்.

**விஷ்ணுசித்தவிஜயத்தில் வேதவேதாந்தநிர்ணயம் என்னும்
முதலத்தியாயத்தில் 'நாராயணனே பரப்ரம்மம்' என்னும்
முதல்பாதம் முற்றிற்று.**

http://acharya.org

முதலத்தியாயம் – இரண்டாம்பாதம்.

நாராயணனே ஸர்வ காரண புருஷன்.

"யதோ வா இமாநி பூ₄தாநி ஜாயந்தே
யேந ஜாதாநி ஜீவந்தி
யத் ப்ரயந்த்யபி₄ஸம்விசந்தி
தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்₃ரஹ்மேதி." [தைத்திரீயம்]

[எவனிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாயினவோ, எவனால் இவை உயிருடன் இருக்கின்றனவோ, எவனிடத்தில் ப்ரளயகாலத்தில் சேருகின்றனவோ, மோக்ஷத்தில் எவனை அடைகின்றனவோ, அவனை அறிவாயாக; அவனே ப்ரம்ஹம்.] இது வருணன், தன் குமாரராகிய ப்ருகுவுக்குச் செய்த உபதேசம்.

இமாநி என்பதினால் இவ்வுலகிலுள்ள வஸ்துக்கள் சுட்டிக்காட்டப் படுகின்றன. இவைகள் ப்ரத்யக்ஷப்ரமாணத்தினால் நிரூபிக்கப்படு கின்றன. பூதாநி என்பது இருக்கும்படியான வஸ்துக்களைக் குறிக்கும். மண் (ப்ருதிவி), நீர் (அப்பு), எரி (அக்நி; தேயு), கால் (வாயு), வெளி (ஆகாசம்) ஆகிய பஞ்சபூதங்களையும் குறிக்கும்; ஸகல சேதநா சேதநங்களையும் குறிக்கும். யத:-எவனிடமிருந்து. வை என்னும் சப்தம் அவனுடைய பிரஸித்தியைக் காட்டுகிறது. ஜாயந்தே-உண்டா யின்றனவோ. ஜீவர்களுக்குப் பிறப்பு என்பது தேஹத்துடன் சேர்க்கையே. 'உத்பத்யஸம்பவாத்' என்ற அதிகரணத்திலும் ஜீவாத்மாவுக்கு உத்பத்தி கிடையாது என்பது சொல்லப்பட்டிருக் கிறது. ஜீவந்தி–வாழ்கின்றனவோ, ப்ரயந்தி–ஊழிகாலத்தில் லயத்தை அடைந்து எவனைச் சேருகின்றனவோ. அபி₄ஸம்விசந்தி–மோக்ஷத் தில் எவனிடம்போய்ச் சேருகின்றனவோ, தத் விஜிஜ்ஞாஸஸ்வ— அவனை நன்கு அறிவாயாக; தத் ப்₃ரஹ்ம — அவனே ப்ரஹ்மம் இந்த ச்ருதி ஜந்மாத்யதிகரணத்திற்கு விஷயவாக்யமாகும். இதி லிருந்து உண்மையானவைகள் மூன்று என்று தெரிகிறது. 1. உண்டாக்கப்பட்ட வஸ்துக்கள் (கார்யம்) 2. உண்டாக்குகிறவன் (கர்த்தா) 3. ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களாகிற முத்தொழில்கள். அவை கள் ஒன்றும் பொய் அல்ல. ஒன்று உருவெளித்தோற்றமானாலும், மற்றவையும் தன்னடையே தோற்றமாகும். வேதவாக்யமும் பொய்

http://acharya.org

யாதும். ஆகையினும் இந்த ச்ருதி மித்யா (பொய்) வாதத்தை மிரயை யாக்கிவிட்டது. முந்நெறியிலும் நடத்துபவனே முதல்வனாவான். காரியத்தைக்கொண்டும், காரணத்தை அறியலாம். ஆனால் சாஸ்த்ரத்தைக்கொண்டு அறிவதுதான் நியாயமும் சரியானதும் ஆகும்.

மஹோபநிஷத்தில்

"ஸர்வதா3 ஸர்வக்ருத் ஸர்வ: பரமாத்மேத்யுதா3ஹ்ருத:"

[எப்பொழுதும் எல்லாவற்றையும் செய்பவனும், எல்லாமாயிருப்பவனுமே பரமாத்மா என்று சொல்லப்படுகிறான்] என்று சொல்லப் பட்டிருக்கிறது.

"அத3ாகோ வேத3 யத ஆப3பூ4வ, இயம் விஸ்ருஷ்டிர் யத ஆப3பூ4வ,
யதி3வா த3தே4 யதி3 வா ந, யோ அஸ்யாத்4யக்ஷ: பரமே வ்யோமந்,
ஸோ அங்க3 வேத3 யதி3 வா நவேத3. கிம் ஸ்வித் வநம்க உ ஸவ்ருக்ஷ ஆஸீத்,
யதோ த்3யாவா ப்ருதி2வீ நிஷ்டதக்ஷு:,மநீஷிணோ மநஸா ப்ருச்ச2தேது3 தத்,
யத3த்4யதிஷ்ட2த் பு4வநாநி தா4ரயந்,ப்3ரஹ்மவநம் ப்ரஹ்ம ஸவ்ருக்ஷ ஆஸீத்.
...................................ப்3ரஹ்மாத்4யதிஷ்ட2த் பு4வநாநி தா4ரயந்"

எங்கிருந்து நாமரூபங்கள ஏற்பட்டன? எங்கிருந்து இந்த ஸ்ருஷ்டி ஏற்பட்டது? இதை எவனாவது போஷிக்கிறானா? அல்லவா? எவன் இந்தப் பிரபஞ்சத்திற்கு அதிபதியாகி உத்க்ருஷ்டமான ஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கிறான்? அவன் எல்லாம் அறிந்தவனா? அல்லவா? எவன் வநமாகவும், வ்ருக்ஷமாகவும் ஆகிறான்? எவனிடத்தில் ஆகாச பூமிகளை யோகிகள் பார்க்கிறார்கள்? எவன் உலகங்களை தரித்துக்கொண்டு நியமிக்கிறான்? இவைகளை எவன் உண்மையாக அறிவான்? ப்ரஹ்மவித்துக்களே! இதை மனஸ்ஸினால் ஆராய்வீர்களாக. ப்ரஹ்மமே வநமாகவும், ப்ரஹ்மமே விருக்ஷமாகவும் இருககிறது. ப்ரஹ்மமே உலகங்களை தரித்துக்கொண்டும், நியமித்துக்கொண்டும் இருக்கிறது. இப்படி வேதம் பல கேள்விகளைக்கேட்டது. அதன் ஸாரமாவது; இந்த உலகத்திற்கு உபாதான காரணம் யார்? நிமித்த காரணம் யார்? இவ்வுலகை ரக்ஷிக்கும் உத்தமன் யார்? பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன் யார்? என்பவைகள். இக்கேள்விகளுக்கு வேதத்தில் சொல்லப்படும் பதில்; நிமித்த உபாதான காரணமாயிருப்பவன் ப்ரம்மமே; உலகத்தை ரக்ஷித்து தரிப்பவனும் ப்ரம்மமே என்பது. எல்லா விதத்திலும் பெரிதாயிருப்பவனும், தன்னை அடைந்தவர்களைத் தன்னைப்போல் பெரிதாக ஆக்குபவனும் ப்ரஹ்மம் எனப்படுகிறான்.

http://acharya.org

ஆகையினால் ரக்ஷிப்பதும், போஷிப்பதுமாகிற பெரிய தொழில்களைச் செய்பவன் ப்ரஹ்மமே. இந்தப் பிரபஞ்சத்திற்கு அதிபதியும் அவனே. எல்லா விதத்திலும் பெரியவனானதால் ஞானத்திலும் பெரியவன் அவனே. அவனுக்குத் தெரியாத விஷயமே கிடையாது. அவன் ஸர்வஜ்ஞன். அவனுடைய குணங்களையும், சக்தியையும், ஞானத்தையும் அளவிட்டு அறிவதென்பது ஒருவராலும் முடியாது. "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்பதிலிருந்து வேதத்தினாலும் இவைகளை முழுவதும் அளவிட்டு அறிய முடியவில்லை என்பது தெரிகிறது.

"யஸ்யாமதம் தஸ்ய மதம், மதம் யஸ்ய ந வேத$_3$ ஸ:
அவிஜ்ஞாதம் விஜாநதாம், விஜ்ஞாதம் அவிஜாநதாம்"

[எவன் பரமாத்மாவை அளவிட்டு அறியமுடியாது என்று அறிகிறானோ அவனே பரமாத்மாவை அறிந்தவன்; எவன் ப்ரம்மத்தை அறிந்துவிட்டதாக நினைக்கிறானோ அவன் அறியாதவனே. பரம்பொருள், தன்னை அறிந்துவிட்டதாக நினைக்கிறவர்களுக்கு அறியப்படாததாகவும், அறியமுடியாது என்று நினைக்கிறவர்களுக்கு அறியப்பட்டதாகவும் ஆகிறது.]

இந்த உலகத்திற்கு அதிபதியாகி பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவனும் பிரம்மமே. இப்படி ப்ரஹ்மத்திற்குப் பலவித அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. கேவல காரணத்வம் மட்டும் இருந்தால் ப்ரம்மமாவதற்கு வேண்டிய குணங்கள் பூர்த்தியாகாது. உண்டாக்கப்பட்ட வஸ்து அடுத்த நிமிஷமே அழிவதாயிருந்தால் உண்டாக்கி என்ன பிரயோஜனம்? உண்டாக்கின வஸ்துவைக் காப்பாற்றுவதே பிரம்மத்திற்கு அஸாதாரண லக்ஷணம். அதனாலேயே ப்ரஹ்மம் உலகத்தை தரித்துக்கொண்டும் நியமித்துக் கொண்டும் இருப்பதாக இங்கு சொல்லப்படுகிறது. ஸர்வரக்ஷகன் ஸ்ரீமந்நாராயணனே என்பதை எவரும் ஆக்ஷேபிக்கமுடியாது.

"விச்வம் நாராயணம் தே$_3$வம் அக்ஷரம் பரமம் ப்ரபு$_4$ம்
விச்வத: பரமம் நித்யம் விச்வம் நாராயணம் ஹரிம்
விச்மேவத$_3$ம் புருஷஸ் தத்$_3$விச்வம் உபஜீவதி"

என்று சொல்லுகிறபடி இந்த உலகத்தை தரிப்பவனும், நியமிப்பவனும், போஷிப்பவனும் நாராயணனே. பல இடங்களிலும் வேதங்கள் "தத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$ம், ஸதா$_3$பச்யந்திஸூரய:" என்றும்

http://acharya.org

''விஷ்ணோர் யத் பரமம் பதம்'' என்றும் உத்கோஷிக்கிறபடியால் பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன் விஷ்ணுவே. அவனே ப்ரஹ்மம் என்பது ஸ்பஷ்டமாகிறது.

உலகிலுள்ள ஒவ்வொரு உயிருள்ள வஸ்துவும் சரீரத்தையும், அதை நியமிக்கும் ஒரு ஜீவாத்மாவையும் அதை நியமிக்கும் அந்தராத்மாவாகிற ப்ரஹ்மத்தையும் உடைத்தாயிருப்பதால் அது ப்ரஹ்மவிருக்ஷம் எனப்படுகிறது. விருக்ஷங்களின் கூட்டமே வனம் எனப்படுகிறது. இப்படிப்பட்ட விருக்ஷங்களின் ஸமூஹமாகவும் ப்ரஹ்மம் இருக்கிறது. இதையே ''ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்'' என்கிறோம்.

இந்த ச்ருதியில் ''பஹுஸ்யாம் ப்ரஜாயேய'' [நான் பலவாக ஆகக்கடவேன்] என்று பரமாத்மா தானே பலவாக ஆன ஸ்ருஷ்டி க்ரமம் சொல்லப்பட்டது. அறிந்தவனு: அல்லவா? என்பதிலிருந்து அவன் ஞானம்மட்டும் அல்ல; ஜ்ஞாதாவே என்று ஏற்படுகிறது. உலகம் ஒன்று உண்டென்றும் அதற்கு அதிபதி ஒருவன் உண்டென்றும், அவனுக்கு இருப்பிடமான மேலான ஒரு ஸ்தானம் (வைகுண்டம்) உண்டென்றும் சொல்லப்படுகிறது. ஆகையினால் ஏகதத்வவாதத்திற்கு இங்கு இடமில்லை.

மண்குடத்துக்கு மண்ணும், ஆபரணத்திற்குத் தங்கமும் உபாதான காரணம் என்று சொல்லப்படுகின்றன. அம்மாதிரியே பரமாத்மா இந்த ஜகத்திற்கு உபாதான காரணம் ஆகிறான். எப்படியெனில்: ப்ரளயகாலத்தில் ஸூக்ஷ்மரூபமான, நாமரூபமற்ற சேதநாசேதநங்களை சரீரமாகக்கொண்டிருக்கிறான் பரமாத்மா. ஸ்ருஷ்டிக்குப் பிறகு ஸ்தூலமான, நாமரூபங்களை உடைய சிதசித்துக்களை சரீரமாக உடையவனாகி ஆகிறான். ஆகையால் இவ்வுலகத்திற்கு இவனே உபாதான காரணமாக ஆகிறான். மண் குடத்தைச் செய்யும் குயவன் அதற்கு நிமித்த காரணம் எனப்படுகிறான். இங்கு, பரமாத்மாவினுடைய ஸங்கல்பத்தினாலேயே இவை உண்டாகிறபடியால் அவனே இவற்றிற்கு நிமித்த காரணமாகவும் ஆகிறான். இந்த ச்ருதியானது நாரஸிம்மபுராணத்திலும்

''ஆஜீவ்யஸ் ஸர்வ பூ₄தாநாம் ப்₃ரஹ்மவ்ருக்ஷஸ் ஸநாதந:
ஏதத் ப்₃ரஹ்மவநம் சைவ ப்ரஹ்மவ்ருக்ஷஸ்ய தஸ்ய தத்''

என்று விவரிக்கப்பட்டிருக்கிறது.

http://acharya.org

நாராயணோபநிஷத்தின் நிர்ணயம்

இப்படி வர்ணிக்கப்பட்டிருக்கும் ஆதிகாரண வஸ்து யார்? அவனுக்கு என்ன பெயர்? அவன் எவர்களை ஸ்ருஷ்டித்தான்? இந்தக் கேள்விகளுக்கு நாராயண உபநிஷத் ஐயந்திரிபற பதிலளிக்கிறது.

"அத$_2$ புருஷோ ஹ வை நாராயணோ அகாமயத ப்ரஜாஸ் ஸ்ருஜேயேதி, நாராயணாத் ப்ராணோ ஜாயதே மனஸ் ஸர்வேந்த்$_3$ரியாணிச-க$_2$ம் வாயுர் ஜ்யோதிராப: ப்ருதி$_2$வீ விச்வஸ்ய த$_4$ாரிணீ-நாராயணாத் ப்$_3$ரஹ்மா ஜாயதே-நாராயணாத்$_3$ருத்$_3$ரோ ஜாயதே. நாராயணாத் இந்த்$_3$ரோ ஜாயதே, நாராயணாத் ப்ரஜாபதி: ப்ரஜாயதே. நாராயணாத் த்$_3$வாத$_3$சாதி$_3$த்யா ருத்$_3$ரா வஸவஸ் ஸர்வாணி ச$_2$ந்த$_3$ாம்ஸி-நாராயணாதே$_3$வ ஸமுத்பத்$_3$யந்தே, நாராயணாத் ப்ரவர்த்தந்தே-நாராயணே ப்ரலீயந்தே-

ஏதத்$_3$ ருக்$_3$வேத$_3$சிரோதீ$_4$தே,

..............................ஸர்வபூ$_4$தஸ்த$_2$மேகம் வை நாராயணம், காரணபுருஷம் அகாரணம் பரம் ப்$_3$ரஹ்மோம்-ஏதத் அத$_2$ர்வசிரோதீ$_4$தே"

[புருஷனென்று பிரஸித்திபெற்ற நாராயணன் "ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கக்கடவேன்" என்று ஸங்கல்பித்தார். நாராயணனிடமிருந்து பிராணனும், மனஸ்ஸும் எல்லா இந்திரியங்களும், ஆகாசமும், வாயுவும், அக்நியும், ஜலமும், எல்லாவற்றையும் தரிக்கும் பூமியும் உண்டாயின. நாராயணனிடத்திலிருந்து பிரம்மா உண்டானார். நாராயணனிடத்திலிருந்து சிவன் உண்டானார். நாராயணனிடத்திலிருந்து இந்திரன் உண்டானான். நாராயணனிடத்திலிருந்து பிரஜாபதி உண்டானார். நாராயணனிடத்திலிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், ருத்ரர்களும், வஸுக்களும், எல்லா வேதங்களும் உண்டாயின. நாராயணனிடத்திலிருந்தே உண்டானார்கள்; நாராயணனாலேயே காப்பாற்றப்படுகிறார்கள். நாராயணனிடமே லயத்தை அடைகிறார்கள். இது ருக்வேத சிரஸ்ஸில் படிக்கப்பட்டிருக்கிறது. எல்லா பூதங்களிலும் இருப்பதாகப் பிரஸித்திபெற்ற நாராயணனே காரண புருஷன்; அவனுக்கு ஒரு காரணம் கிடையாது; அவனே பரப்ரம்மம்; ஓங்காரத்தினால் சொல்லப்படுபவன் அவனே. இப்படி அதர்வண சிரஸ்ஸில் படிக்கப்பட்டிருக்கிறது.]

மேலே சொன்ன வேதவாக்யங்களில் பிரம்மம் என்ற ஸாமாந்ய சப்தமே காரணவஸ்துவைக் குறித்துப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரண வஸ்துவாகிற பிரம்மம் யார் என்பதை இந்த நாராயண உபநிஷத் நிர்ணயிக்கிறது. இதில் உலக ஸ்ருஷ்டியும், நாராயண பரத்வத்துக்கு எதிராகப் பேசநின்ற சிவன், பிரமன்

http://acharya.org

இவர்களின் உத்பத்தியும் உரைக்கப்படுகிறது. இவர்களை நாராயணன் ஸ்ருஷ்டிப்பதும் ஸங்கல்பமாத்ரத்தாலேயே. ப்ரஜா ஸ்ருஷ்டியை நாராயணன் ஸங்கல்பித்தார். பிரஜைகளை ஸ்ருஷ்டிப்பதற்கு முன்பு அவர்கள் உயிருடன் இருப்பதற்கு அவச்யமான ப்ராணனை ஸ்ருஷ்டித்தார். வாழ்வதற்கு அவசியமான மனஸ் முதலிய எல்லா இந்திரியங்களையும் ஸ்ருஷ்டித்தார். ப்ரஜைகள் ஸஞ்சரிப்பதற்கு அவச்யமான ஆகாசத்தையும், மூச்சுவிட அவச்யமான வாயுவையும், பார்ப்பதற்கும், பக்வம் செய்வதற்கும் அவச்யமான ஜ்யோதிஸ்ஸையும், ஜீவிப்பதற்கு அவச்யமான ஜலத்தையும் நம்மைத் தாங்குவதற்கு அவச்யமான தரணி (பூமி)யையும் ஸ்ருஷ்டித்தார்.

பிறகு ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தார். அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் யார்? உலகத்துக்கெல்லாம் பிதாமஹன் என்றும், படைக்குங் கடவுள் என்றும் பிரஸித்தி பெற்றவரான பிரமனை, நாராயணன் முதலில் ஸ்ருஷ்டித்தார். இதிலிருந்து பிரமனும் ஓர் படைப்பே என்பது ஸித்தமாகிறது. இங்கு சொல்லப்படும் ஸ்ருஷ்டி ஜீவாத்மஸ்ருஷ்டியல்ல; ஜீவாத்மா நித்யன்; அவனுக்கு உத்பத்தியே கிடையாது. 'உத்பத்யஸம்பவாத்' என்னும் அதிகரணமும் இதையே சொல்லுகிறது. இதிலிருந்து, படைக்கும் கடவுளைப் படைத்தபடியால், படைக்கும் தொழிலும் நாராயணனைச் சேர்ந்ததே என்று ஏற்படுகிறது. பிரமன், அவருடைய நியமனத்தினால், அவருக்குப் பிரதிநிதியாகவே ஸ்ருஷ்டிக்கிறார்.

நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டானார். இந்த ருத்ரனே சிவன் என்று பெயர் பெற்றவர். அப்பையதீக்ஷிதர் ருத்ரன் வேறென்றும், சிவன் வேறென்றும், சொல்லி உத்பத்தி வாக்யங்களை, சிவபரத்வத்திற்கு பாதகமில்லாமல் செய்யப் பார்த்தார். ஆனால் இதே உபநிஷத்தில் யஜுர்வேத சிரஸ்ஸில் 'ப்ரஹ்மா நாராயண: சிவச்ச நாராயண:' என்று சிவசப்தமும் பிரயோகிக்கப்பட்டிருக்கிறபடியால் இம்மாதிரி பேதம் செய்வதற்கு இங்கு இடமே கிடையாது. நாராயணனிடத்திலிருந்து உண்டானவரே சிவன் என்று இதிலிருந்து ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

'விரூபாக்ஷாய ப்₃ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்ட₂ாய ச்ரேஷ்ட₂ாய'

[முக்கண்ணனும், ப்ரம்மாவின் முதல் புத்ரனும் ச்ரேஷ்டனுமான சிவனுக்கு] என்று சாந்தோக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. திருமழிசை ஆழ்வாரும்,

http://acharya.org

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்"

என்று சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க நாராயணனிடத்திலிருந்து சிவன் பிறந்தார் என்பது பொருந்துமா? என்ற கேள்வி ஏற்படுகிறது. அடுத்த வாக்யத்தில் நாராயணனிடத்தில் இந்த்ரன் உண்டானதாகச் சொல்லியிருக்கிறது. இந்த்ரனோ காச்யபப் ப்ரஜாபதியின் புத்ரன். ஆகையால், காச்யபர் மூலமாக இந்த்ரனை நாராயணன் உண்டாக்கினார் என்றே கொள்ளவேண்டும். இங்கு சிவன் விஷயத்திலும் நாராயணன் பிரம்மா மூலமாக அவரைப் படைத்தாரென்று கொள்ளலாம். ஒரு கல்பத்தில் பிரம்மா மூலமாகப் படைத்தாரென்றும், மற்றொரு கல்பத்தில் நேராகப் படைத்தாரென்றும் பொருள் கொள்வது பொருந்தும். 'நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே' என்றும், 'நாராயணாத் ஸர்வாணி சந்தாம்ஸி' என்றும் இங்கு சொல்லப்பட்டிருப்பதிலிருந்து

"யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்,
யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை"

[எவர் பிரமனை முதலில் படைத்தாரோ அவனுக்கு எவர் வேதங்களை உபதேசித்தாரோ] என்று ச்வேதாச்வதரத்தில் சொல்லப்பட்டவர் நாராயணனே என்பது ஸர்வ வேதாந்த ப்ரத்யய ந்யாயப்படி ஸித்திக்கிறது. 'நாராயணாதேவ ஸமுத்பத்யந்தே' என்பதிலிருந்து காரண வஸ்து அவன் ஒருவனே என்பது நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கப்படுகிறது.

'அவனாலேயே வாழ்கின்றன; அவனிடமே லயிக்கின்றன' என்று சொல்லப்பட்டதினால் 'யதோவா இமானி பூதானி' என்கிற வாக்யத்தில் சொல்லப்படும் புருஷன் நாராயணனே என்று நிச்சயிக்கப்படுகிறது. இந்த ச்ருதியில் ஸர்வகாரண வஸ்துவுக்கே ஸர்வ ரக்ஷகத்வம் சொல்லப்படுகிறது. இவ்விரண்டுமுள்ள வஸ்துவிடமே எல்லாம் லயமடைகின்றன என்று காட்டப்படுகின்றது. இதனால் ஸ்ருஷ்டிக்கு ஒரு தேவதையென்றும், ரக்ஷணத்திற்கு வேறு ஒரு தேவதை என்றும், ஸம்ஹாரத்திற்கு மூன்றாவது ஒரு தேவதை என்றும் சொல்லப்படும் பக்ஷம் தள்ளுண்டது. பிரஸித்தமாக ஸ்ருஷ்டிகர்த்தாவாகச் சொல்லப்படும் பிரமனும் நாராயணனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டான் என்றும், ஸம்ஹார தேவதையாகிய சிவனும் நாராயணனிடத்திலேயே லயமடைவதாகவும் இதிலிருந்து அறிகிறோம். இப்படி

http://acharya.org

ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு ஜ்ஞான சக்த்யாதிகள் அவசியமாக வேண்டியவை. இதிலிருந்து பரமபுருஷன் ஸமஸ்த கல்யாண குணங்களையும் உடையவன் என்று ஏற்படுகிறது. இதிலிருந்து குணங்களில்லை என்கிற பக்ஷமும் புறக்கணிக்கப்பட்டது. "காரணந்து த்யேய:" என்று ச்ருதி சொல்லியிருக்கிறபடியால் இந்தக் காரண வஸ்துவையே உபாஸிக்கவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்......முமுக்ஷுர் வை சரணமஹம் ப்ரபத்யே" என்று உபநிஷத் உபதேசித்திருக்கிறபடியால் மோக்ஷத்தை விரும்புகிறவன் பிரமனையும் படைத்தவனாகிய இந்த நாராயணனையே சரணமாக அடையவேண்டும் என்றும் சொல்லப்பட்டதாகிறது.

பிறப்பிறப்பாகிற பெருஞ் சுழல்களில் சுழன்று பரிதவிப்பவன் கொந்தளிக்கும் அக்கடலிலிருந்து கரையேற, காக்கும் கடவுளாகிய கண்ணன் கழலிணையையே கடைப்பிடிக்கவேண்டும்; காப்பாற்றக் கையாலாகாத கண்டகண்ட கற்பனைக் கடவுள்களைக் கைதொழுது கரையேற விரும்பினால் அத்தெய்வங்கள் தங்களால் ஆகாதென்று கைவிரித்துத் தாங்களும் கரையேறவில்லை என்று கண்ணீர்விட்டு, இருவரும் கட்டியழவேண்டி நேரிடும். காளகண்டனும், கண்டாகர்ணனிடம் மோக்ஷங்கொடுக்கக் கையாலாகாது என்று கைவிரித்த போதிலும், அவனுக்குக் கண்ணனைக் கைகாட்டி, உய்வதோர் உபாயத்தை உபதேசித்தார். மார்க்கண்டேயனுக்கும், மோக்ஷமடைய மார்க்கமுரைத்து, நக்கபிரான் அன்று உய்யக்கொண்டது நாராயணன் அருளாலேயே. நாராயணனே ஸர்வரக்ஷகன். விதிசிவாதிகள் எல்லாரையும் காப்பாற்றுபவன் கேசவனே. பிறவி என்னும் பேராபத்தை உள்ளிட்ட எல்லாக் கஷ்டங்களிலிருந்தும் கரையேற்றுபவன் கண்ணனே. ஆகையால் காக்கும் கடவுளின் கழல்களை நாம் உபாஸித்து, சரணமடைய வேண்டுமென்பது ஸித்திக்கிறது.

எல்லா பூதங்களிலும் அந்தராத்மாவாக இருப்பவனும், காரண புருஷனும், பரப்ரம்மமும் ஓங்கார சப்தவாச்யனும் நாராயணன் என்று அதர்வண சிரஸ்ஸிலும் சொல்லியிருப்பதாக இந்த உபநிஷத் கோஷிக்கிறது. இந்த உபநிஷத்தைப் பாராயணம் செய்பவனுக்கு நாராயண ஸாயுஜ்யம் கிடைக்கும் என்று பலன் படிக்கப்பட்டிருக்கிறது.

http://acharya.org

மஹோபநிஷத்தின் முடிவு.

''அத2 புநரேவ நாராயணஸ் ஸோந்யத்காமோ மநஸா த்4யாயத-தஸ்ய த்4யாநாந்தஸ்த2ஸ்ய லலாடாத் ஸ்வேதோ3பதத்—தா இமா: ப்ரததா ஆப:-தத்தேஜோ ஹிரண்யமண்ட3ம்-தத்ர ப்3ரஹ்மா சதுர்முகோ2ஜாயத''

[அந்த நாராயணன் மறுபடியும் மனஸ்ஸினுல் ஸங்கல்பித்தார். அவர் ஸங்கல்பம் பண்ணி முடிந்தவுடன் நெற்றியிலிருந்து வேர்வை விழுந்தது. அதுவே இங்கு எங்குமுள்ள ஜலமாக ஆயிற்று. அந்த நாராயணனிடமிருந்து ஒளிமயமானதும், பொன்மயமானதுமான அண்டம் உண்டாயிற்று. அதில் நான்முகனுகிய பிரமன் பிறந்தான்.]

''புநரேவ நாராயணஸ் ஸோந்யத்காமோ மநஸாத்4யாயத-தஸ்ய த்4யாநாந்தஸ்த2ஸ்ய லலாடாத் த்ர்யக்ஷச் சூலபாணி: புருஷோ ஜாயதே''

[மறுபடியும் நாராயணன் ஸங்கல்பித்தார். ஸங்கல்பித்ததும் நெற்றியிலிருந்து மூன்று கண்ணை உடையவனும், சூலத்தைக் கையில் தரித்தவனுமாகிய ஒரு புருஷன் உண்டானுன்.]

இந்த வாக்யங்கள் மஹோபநிஷத்தில் இருக்கின்றன. இவ்வுபநிஷத் ஸாம வேதத்திலுள்ளது. தைத்திரீயத்தில் இந்த மஹோபநிஷத் புகழப்பட்டிருக்கிறது. அளவில் ப்ருஹதாரண்யகத்திற்கும் சாந்தோக்யத்திற்கும் அடுத்தபடியாக விஸ்தாரமாக விளங்குகிறது. இவ்வுபநிஷத் பெயருக்கேற்றபடி எல்லா வகைகளிலும் பெரிய உபநிஷத் ஆகும். மனுவும், தம்முடைய ஸம்ருதி ஆரம்பத்தில் இந்த உபநிஷத்தை உபப்ரும்ஹணம் செய்திருக்கிருர். இதில் விதிசிவாதிகளின் (பிரமன் சிவன் முதலியவர்களின்) ஸ்ருஷ்டி நாராயணனுடைய ஸங்கல்பத்திலுலேயே என்று உத்கோஷிக்கப் பட்டிருக்கிறது. 'இச்சா2மாத்ரம் ப்ரபோ4ாஸ் ஸ்ருஷ்டி:' என்கிற நியாயப்படி நாராயணன் நினைத்தமாத்ரத்தில் நான்முகனும் சூலபாணியாகிய முக்கண்ணனும் தோன்றினுர்கள்.

உலகமுண்ட பெருவாயன் தன் வயிற்றிற்குள் அடங்கி இருந்த வேதமோதிய முதல் வேதியனுகிய பிரமனையும், முக்கண் மூர்த்தியையும் வெளிநாடு காண உண்டாக்கினுர். இவர்களுடைய ஸ்ருஷ்டி உலகிலுள்ளதுபோல் ஸ்திரீபுருஷ ஸம்ஸர்க்கத்தால் அல்ல; ஸங்கல்பத்தாலேயே. இந்த உபநிஷத்தின் ஆரம்பத்தில்

http://acharya.org

''ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்
நப்₃ரஹ்மா நேசாநோ-நாபோ-நாக்₃நீஷோமௌ
நேமே த்₃யாவா ப்ருதி₂வீ-நநக்ஷத்ராணி-நஸூர்யோ
நசந்த்₃ரமா-ஸ ஏகாகீ நரமேத''

[ஸ்ருஷ்டிக்கு முன் நாராயணன் ஒருவரே இருந்தார். பிரமனும் இல்லை; ஈசானனும் இல்லை. ஜலமும் இல்லை; அக்நீஷோமங்கள் இல்லை; மண்ணுலகும் இல்லை; விண்ணுலகும் இல்லை; நக்ஷத்ரங்களும் இல்லை; ஸூர்யனுமில்லை; சந்த்ரனுமில்லை. ஒருவராயிருந்து அவர் ஆநந்தத்தை அடையவில்லை.] என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து பிரளய காலத்தில் பிரம்மாவும், சங்கரனும் இல்லை என்று ஏற்படுகிறது. மற்றவைகளும் அப்போது ஒன்றுமில்லை. நாராயணன் ஒருவனே தனியாக இருந்தார். தனிமையில் ஸந்தோஷமடையாமல் தன்னுடைய லீலைக்காக இவர்களை ஸ்ருஷ்டி செய்தார், இதையே ஸூத்ரகாரரும் ''லோகவத்து லீலா கைவல்யம்'' என்று சொல்லியிருக்கிறார். இவ்வுபநிஷத்திலேயே

''ஸர்வதா₃ ஸர்வக்ருத் ஸர்வ: பரமாத்மேத்யுதா₃ஹ்ருத:''

[எப்பொழுதும் எல்லாவற்றையும்செய்பவரும் எல்லாம் ஆனவருமே பரமாத்மா என்று சொல்லப்படுகிறார்.] என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரமன், சிவன் முதல் ஸகல சேதநாசேதநங்களையும் நாராயணனே ஸ்ருஷ்டிப்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடியால் அவரே பரமாத்மா என்பது ஆக்ஷேபிக்க முடியாதது. உண்டாக்கப்பட்டவர்களாகிய பிரமனும், சிவனும் அப்பதத்திற்கு அநர்ஹர்கள். அந்த உபநிஷத்திலேயே

''சிவ ஏவ ஸ்வயம் ஸாக்ஷாத் அயம் ப்ரஹ்மவித்₃துத்தம:''

என்று சொல்லப்பட்டிருப்பதிலிருந்து ப்ரஹ்மமாகிய நாராயணனை அறிந்தவரில் சிவன் சிறந்தவரே. ப்ரஹ்மஜ்ஞாநியே ஒழிய அவர் பிரஹ்மமல்ல என்று இங்கு பகரப்பட்டிருக்கிறது.

ஸுபாலோபநிஷத்தின் ஸுநிச்சிதார்த்தம்.

''நைவேஹ கிஞ்சந அக்₃ர ஆஸீத்,
அமூலம் அநாதா₄ரா இமா: ப்ரஜா: ப்ரஜாயந்தே,
தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:'' [ஸு உ: 6-வது கண்டம்]

http://acharya.org

[முதலில் இங்கு ஒன்றும் இல்லை. பரமபதத்திலிருக்கும் நாராயணன் ஒருவனிடமிருந்தே இவை உண்டாகின்றன. அவனைத்தவிர இவைகளுக்கு வேறு காரணமும் கிடையாது; ஆதாரமும் கிடையாது.]

இந்த உபநிஷத்திற்கு 'ஸுபாலோபநிஷத்' என்று ஏன் பெயரிடப்பட்டது என்று ஆராய்வோம். இதில் பதினேழுவது கண்டத்தில் 'ஸுபால பீஜப்ரஹ்மோபநிஷத்'என்று இந்த உபநிஷத்தின் பெயர் படிக்கப்பட்டிருக்கிறது. பிரஸித்தமாக 'ஸுபாலோபநிஷத்' என்றே சொல்லப்படுகிறது. இதில் பதின்மூன்றுவது கண்டத்தில்

''ப$_3$ால்யே ஸ திஷ்ட$_2$ாஸேத், ப$_3$ாலஸ்ய ப$_4$ாவ: அஸங்க$_3$:,
நிரவத்$_3$யோ மௌநேந பாண்டி$_3$த்யேந நிரதி$_4$காரதயா
உபலப்$_4$யதே''

[பாலனைப்போல், அவன் (ஜ்ஞாநி) இருக்கக்கடவன். பாலனுடைய தன்மை ஸங்கமில்லாமலிருப்பதே. ஆகையினால் ஞானி குற்றமற்றவனாகவும், மௌநியாகவும், பண்டிதனாகவும், பிறரை அதிகாரம் செய்யாதவனாகவும் காணப்படுகிறான்.] என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவனே ஸுபாலன் (நல்ல பாலன்) என்று சொல்லப்படுகிறான். அவர்களுக்கு பரப்ரம்மத்தைப்பற்றி உபதேசிக்கிறபடியாலும் அவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை உபதேசிக்கிறபடியாலும் 'ஸுபாலோபநிஷத்' எனப்படுகிறது என்று பொருள்கொள்ளலாம். 'ஆலினிலைமேல் ஒரு பாலகனையே' ஸுபாலன் என்றும் சொல்லலாம். அவனைப்பற்றிய உபநிஷத் ஆகையாலும் 'ஸுபாலோபநிஷத்' என்பது பொருந்தும். பீஜ ப்ரஹ்மம் என்று படிக்கப்பட்டிருப்பதினால் ஸகல சேதநாசேதநங்களுக்கும் பிரம்மமே பீஜம் (விதை) என்று ஏற்படுகிறது. ''கண்ணும் காண்பனவும், காதும் கேட்பனவும், மூக்கும் முகர்வனவும், நாக்கும் ரஸிப்பனவும் முதலிய எல்லாம் நாராயணனே'' என்று இவ்வுபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் 'ஸர்வம் நாராயண மயம் ஜகத்' என்று ஏற்படுகிறது. 'மயம்' என்பது உப்பு மயம் என்பதுபோல் ப்ராசுர்யத்தைக் (அதிகமாயிருப்பதை) காட்டுகிறது. மற்றவைகள் இல்லை என்பது ஏற்படாது. ப்ரஹ்மமாகிய நாராயணனே உலகிலுள்ள எல்லாவற்றிற்கும் பீஜ ஸ்தானத்தில் இருக்கிறான் என்று ஏற்படுகிறபடியால் 'ஸுபால பீஜப்ரஹ்மோபநிஷத்' என்பது நன்கு பொருந்தும்.

http://acharya.org

இது சுக்ல யஜுர் வேதத்தில் இருக்கிறது. இதுவரையில் சொல்லப்பட்ட உபநிஷத்துக்களைப்போல் இதுவும் எல்லா மதாசாரியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பிரஸித்தமான உபநிஷத். பூர்வாசாரியர்கள் இதிலிருந்து அனேக வாக்யங்களை மேற்கோள்களாக எடுத்திருக்கிறார்கள். ச்ருதப்ரகாசிகாசாரியர் இந்த உபநிஷத்துக்குப் பூர்ணமாக பாஷ்யம் செய்திருந்தபோதிலும் 5 கண்டங்களுக்கு மட்டுமே பாஷ்யம் இப்போது இருக்கிறது. பாக்கி பதினொரு கண்டங்களுக்கும் பாஷ்யம் எக்காரணத்தினாலோ மறைந்துவிட்டது. இங்கு எடுக்கப்பட்டிருக்கும் வாக்யங்களும் முன் எடுக்கப்பட்டிருக்கும் வாக்யங்களைப்போல் தத்வத்தை நிர்ணயிப்பதற்காக அவதரித்திருக்கும் பிரஸித்தமான வாக்யங்கள். ப்ரசம்ஸாபரமான வாக்யங்கள் அல்ல.

இந்த உபநிஷத்தில் ஸ்ருஷ்டி க்ரமமும் சொல்லப்படுகின்றது. (அக்ரே) முன்னால்; எதற்கு முன்னால்? ஸ்ருஷ்டிக்கு முன்னால். (நைவ கிஞ்சந ஆஸீத்) இவைகள் ஒன்றும் இல்லை. எவைகள் ஒன்றும் இல்லை? (இஹ) இங்கு காண்பனவும், கேட்பனவுமாகிய ஒன்றும் இல்லை. (இமா: ப்ரஜா: ப்ரஜாயந்தே) இந்த ப்ரஜைகள் உண்டானார்கள். எப்படி உண்டானார்கள்? தானாகவே உண்டானார்களா? யாராவது உண்டாக்கினார்களா? இவைகளுக்கு ஆதி மூலகாரணம் யார்? இவைகளுக்கு ஆதாரமாக தரிப்பவன் யார்? காரணம் ஒருவனா? பலரா? அவன் பெயர் என்ன? என்கிற கேள்விகள் எழுகின்றன. இவைகளுக்கு ஸ்பஷ்டமாக இந்த உபநிஷத் பதிலளிக்கிறது. (திவ்யோ தேவ:) இவர்கள் தானாக உண்டாகவில்லை. இவர்களைப் படைத்தவன் திவ்யனான தேவன். அவனே இவர்களுக்குக் காரணமாகவும் தரிப்பவனாகவும் ஆகிறான். அவனைத்தவிர வேறு காரணமும் ஆதாரமும் கிடையாது என்பதை (அமூலம் அநாதாரா:) என்று சொல்லிக்காட்டுகிறது. அப்படிப்பட்டவன் ஒருவனே; பலரல்ல என்பதை (ஏக:) என்பது காட்டுகிறது. ஸ்ருஷ்டிக்கு ஒரு தேவதை என்றும் ஸ்திதிக்கு வேறொரு தேவதை என்றும் ஸம்ஹாரத்திற்கு மூன்றாவது ஒரு தேவதை என்றும் சொல்லுகிற வாதத்திற்கு இங்கு இடமே கிடையாது. எல்லாவற்றையும் ஸம்ஹரித்து நின்ற ஒருவனே ஸ்ருஷ்டி செய்து தரித்து ரக்ஷிக்கிறான் என்பது ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. அந்த தேவன் வேதங்களில் நூற்றுக்கணக்கான இடங்களில் உத்கோஷிக்கப்பட்டிருக்கும் நாராயணனே என்று (நாராயண:) என்னும் பதம் காட்டுகிறது. இதிலிருந்து,

http://acharya.org

"ஸதே$_3$வ ஸோம்ய இத$_3$ம் அக்$_3$ர ஆஸீத் ஏகமேவாத்$_3$விதீயம்"

[ஸ்ருஷ்டிக்குமுன் இது ஸத்தாகவே இருந்தது; ஒன்ருகவும் இரண்டற்றதாகவும் இருந்தது.] என்ற ஸத்வித்யையில் 'ஸத்' என்னும் பதத்தினுல் சொல்லப்பட்டிருக்கும் புருஷன் நாராயணனே என்பது நிச்சயமாக நிர்ணயிக்கப்பட்டதாகிறது.

"தத$_3$ாஹு: கிம்த$_3$தாஸீத், தஸ்மை ஸஹோவாச
ந ஸந்நாஸந்ந ஸத$_3$ஸதி$_3$தி, தஸ்மாத் தமஸ் ஸஞ்ஜாயதே,
தமஸோ பூ$_4$தாதி$_3$: பூ$_4$தாதே$_3$ராகாசம், ஆகாசாத்$_3$ வாயு:
வாயோரக்$_3$நி:, அக்$_3$நேராப: அத்$_3$ப்$_4$ய: ப்ருதி$_2$வீ,
தத$_3$ண்டம் ஸமப$_4$வத், தத் ஸம்வத்ஸரமாத்ரமுஷித்வா த்$_3$விதா$_4$ அகரோத்
அத$_4$ஸ்தாத் பூ$_4$மிம் உபரிஷ்டாத் ஆகாசம், மத்$_4$யே புருஷோ தி$_3$வ்ய:
ஸஹஸ்ரசீர்ஷா புருஷஸ் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத் ஸஹஸ்ரா
ப$_3$ாஹுரிதி,
ஸோக்$_3$ரே பூ$_4$தாநாம் ம்ருத்யும் அஸ்ருஜத்
த்ர்யக்ஷ(ர)ம் த்ரிசிரஸ்கம் த்ரிபாத$_3$ம் க$_2$ண்ட$_3$பரசும்,
தஸ்ய ப்ரஹ்மாபி$_3$பி$_4$தே (அபி$_4$வத$_3$தி).
...............லலாடாத் க்ரோத$_4$ஜோ ருத்$_3$ரோ ஜாயதே"

[ஸு-உ: 1-வது கண்டம்]

[சிலர் பிரளய காலத்தில் என்ன இருந்ததென்று கேட்டார்கள். அதற்கு அவர் சொன்னர்; ஸத்தும் இல்லை; அஸத்தும் இல்லை; ஸதஸத்தும் இல்லை. அதிலிருந்து தமஸ் உண்டாயிற்று. தமஸ்ஸிலிருந்து பூதாதி (அகங்காரம்) உண்டாயிற்று. பூதாதியிலிருந்து ஆகாசமும், ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்நியும் அக்நியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பிருதிவியும் உண்டாயின. பிறகு அண்டம் உண்டாயிற்று. ஒரு வருஷகாலம் கழித்து அதை கீழே பூமியாகவும், மேலே ஆகாசமாகவும் இரண்டாக ஆக்கினர். அதன் நடுவில் திவ்ய புருஷனை (பிரமனை) உண்டாக்கினர். அப்படி உண்டாக்கினவன் ஆயிரம் தலைகளையும், ஆயிரம் கண்களையும், ஆயிரம் கால்களையும், ஆயிரம் கைகளையும் உடைய புருஷோத்தமனே. அவன் முதலில் பூதங்களின் ம்ருத்யுவை உண்டாக்கினன். அந்த ம்ருத்யு மூன்று கண்களையும், (மூன்று அக்ஷரங்களையும்) மூன்று தலைகளையும், மூன்று கால்களையும், ஒடிந்த மழுவையும் உடையவன். அவனைக்கண்டு பிரஹ்மா பயப்பட்டார் (சொன்னர்) ......கோபத்தினுல் நெற்றியிலிருந்து ருத்ரன் உண்டானர்.]

http://acharya.org

ஸத்தாகிற சேதனனையும் அஸத் சப்தத்தினால் சொல்லப்படும் அசேதனத்தையும் இவை சேர்ந்த ஜகத்தையும் காட்டிலும் விலக்ஷணமாகிய பரமபதத்திலிருக்கும் பரப்ரம்மத்திடமிருந்து தமஸ்(மஹான்), பூதாதி, ஆகாசம், வாயு, அக்நி, ஜலம், பூமி இவைகளடங்கிய அண்டமுட்டை (அண்டகோளம்) உண்டாயிற்று. அண்டோத்பத்தி அகாரவாச்யனான நாராயணனால் செய்யப்பட்டது. ப்ரஹ்மாவினாலும் மற்றெவராலும் அல்ல, தேவ வருஷம் ஒன்றுக்குப் பிறகு அது இரண்டாக ஆயிற்று. கீழே பூமியும் மேலே ஆகாசமும் உண்டாக்கப்பட்டன. அதாவது: கீழ் ஏழு லோகங்களும் மேல் ஏழு லோகங்களும் ஆக பதினான்கு லோகங்களும் அடங்கிய ப்ரம்மாண்டம் உண்டாக்கப்பட்டது. 'மத்யே புருஷோ திவ்ய:' என்பதினால் மனிதனைக் காட்டிலும் வேறான திவ்ய புருஷனாகிய பிரமனின் ஸ்ருஷ்டி சொல்லப்பட்டது. ஒவ்வொரு அண்டத்தினுள்ளும் ஒரு ப்ரஹ்மா இருப்பதால் ப்ரம்மாண்டம் என்று சொல்லப்படுகிறது. அநேக கோடி ப்ரம்மாண்டங்களிருப்பதாக நாம் புண்ய காலங்களில் சொல்லும் ஸங்கல்பத்திலிருந்தும் தெரிகிறது. விராட் புருஷனுடைய தேஹத்தில் ஒவ்வொரு மயிர்க்கால்களிலும் ஒவ்வொரு அண்டங்கள் தொங்குவதாகப் படிக்கப்பட்டிருக்கிறது. பரதத்வ நிர்ணயம் செய்த பெரியாழ்வாரும் திருப்பல்லாண்டில் 'அண்டக் குலத்துக் கதிபதியாகி' என்று அருளிச்செய்து பல அண்டங்கள் உண்டென்றும் அதற்கு அதிபதி அச்யுதனே என்றும் காட்டி இருக்கிறார்.

அந்த திவ்ய புருஷனாகிற ப்ரம்மாவுக்கு அந்தர்யாமியாயிருப்பவன் புருஷஸூக்தத்தில் 'ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ' என்று சொல்லப்பட்ட லக்ஷ்மீநாதனே. அந்தப் புருஷஸூக்த வாக்யங்கள் இங்கும் படிக்கப்பட்டிருக்கின்றன. அவன் முடிகளாயிரம், கண்களாயிரம், கால்களாயிரம், கைகளாயிரம் உடையவனாக இங்கும் கீர்த்திக்கப்பெற்றிருக்கிறானன்றோ. இதையே ஆழ்வார் ''தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்! துணைமலர்க் கண்களாயிரத்தாய்! தாள்களாயிரத்தாய்!'' என்றும், அர்ஜுனன் ''ஸஹஸ்ரபாதூருபாஹ்வக்ஷிசிரோருபஹுஹவே'' என்றும் உரைத்தனர். ஆயிரம் என்பதை எண்ணமுடியாத பலகோடி நூறாயிரம் என்றே கொள்ளவேண்டும். ப்ரஹ்மாவையே ஸஹஸ்ர சீர்ஷாதி சப்தங்கள் காட்டுகின்றனவென்றால் இரண்டு தடவைகள் புருஷசப்தம் படிக்கப்பட்டிருப்பது புநருக்தி (கூறியது கூறல்) தோஷத்திற்கு இலக்காகும். ப்ரம்மா அந்தர்யாமியும் அல்ல; ஸர்வ வ்யாபகனும் அல்ல. எங்கும்

http://acharya.org

நாக்கு, கண், கால், கை முதலியவைகள் செய்யும் காரியங்களைச்செய்ய ஸமர்த்தனானதினால் புருஷோத்தமன் இப்படிச் சொல்லப்படுகிறான். பிரமனுக்கும் ஆயிரம் தலைகளுடைய அமலனுக்கும் ஸ்வரூபைக்யம் கிடையாது. ஏனெனில்: பரமபுருஷன் மூன்று கண்களையும், மூன்று தலைகளையும், மூன்று கால்களையும் ஒடிந்த மழுவையுமுடைய ம்ருத்யுவை ஸ்ருஷ்டித்ததாகவும் அவனைக்கண்டு பிரம்மா பயந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பரமபுருஷனாகிற புண்டரீகாக்ஷனே 'ம்ருத்யுர் தூவதி பஞ்சம:' என்கிறபடி ம்ருத்யுவுக்கும் பயகாரணமாகிறான். 'ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்' என்று பிரளய காலத்தில் விஷ்ணுவுக்கு ம்ருத்யு ஊறுகாய் ஸ்தானத்தில் ஆகிறான் எனச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் விஷ்ணுவைக்கண்டு ம்ருத்யு பயப்படுவது நியாயமே. ம்ருத்யுவுக்கும் ம்ருத்யுவான மதுஸூதனனுக்கும் ம்ருத்யுவைக் கண்டு பயப்படும் பிரமனுக்கும் ஸ்வரூபைக்யம் எப்படி இருக்கமுடியும்?

அந்த ம்ருத்யுவைக்கண்டு பிரம்மா ஏன் பயப்பட்டார்? ஆயுஷ்காலமாகிற மரத்தை நாள்களாகிற ரம்பங்களால் அறுப்பவன் ம்ருத்யு எனப்படுகிறான். பிரமனுக்கும் அவருடைய வருஷத்தால் ஆயுள் நூறே. அவர் தனக்கும் ஆயுள் முடிவுண்டு என்று அறிந்து அவனைக்கண்டு பயப்பட்டார் என்று சொல்லலாம். மேலும், படைக்கச்சொன்ன பரமன் அப்படிப் படைக்கப்படும் பிரஜைகளை அழிக்க ம்ருத்யுவையும் ஸ்ருஷ்டி பண்ணிவிட்டாரே! என்று பயப்பட்டதாகவும் கொள்ளலாம். தன் பிரஜைகளுக்கு அழிவு வருவதாயிருந்தால் பெற்றதகப்பன் பயப்படுவது ஸஹஜந்தானே. ஒடிந்த மழு என்னும் பதம் நாராயணனுடைய பக்தர்களுக்கு அது ஒடிந்த மழுவே; அந்த மழு அவர்களை ஒன்றும் செய்யமுடியாது என்பதைக் காட்டுகிறது. 'என் தமர் நமன் தமரால் ஆராயப்படார்காண்' என்றும்,

"திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்க ளென்றான் நமனும் தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு"

என்றும் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ. யமனுடைய பாசம் அஜாமிளன் பேரில் போடப்பட்டபோது விஷ்ணு பாரிஷதர்களால் அறுக்கப்பட்டதாகச் சொல்லும் வ்ருத்தாந்தமும் இதையே காட்டுகிறது.

http://acharya.org

பிரமன் கோபத்துடன் இருக்கும்போது அவருடைய நெற்றியிலிருந்து ருத்ரன் உண்டானார். கோப காலத்தில் பிறந்தபடியால் கோபமூர்த்தியாக விளங்குகிறார். ருத்ரன் என்னும் பெயரும் அவருடைய க்ரோத குணத்தைக் காட்டுகிறது. 'க்ரோதஜ:' என்பது சிவன் பிறக்கும்போதே க்ரோதத்துடன் பிறந்தார் என்றும் பொருள்படும். 'ஜாயதே' என்பதினால் அவருடைய பிறப்பு பிரஸித்தப்படுத்தப்பட்டது.

"தா₄தா விதா₄தா கர்த்தா விகர்த்தா தி₃வ்யோ
தே₃வ ஏக ஏவ நாராயண: ....
உத்₃ப₄வஸ் ஸம்ப₄வோ தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:,
மாதா பிதா ப்₄ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் க₃திர்
நாராயண:"

[கர்ப்பமாக தரிப்பவனும், ஸ்ருஷ்டியை விதிப்பவனும், உண்டாக்குகிறவனும், மாறுதலடையச் செய்பவனும் வைகுண்டத்திலிருக்கும் நாராயணன் ஒருவனே............ஸம்ஸார நிவர்த்தகனும், பல அவதாரங்களைச் செய்பவனும் திவ்ய லோகத்திலிருக்கும் தேவனான நாராயணனே. தாயும், தந்தையும், தன்னுடன் பிறந்தோனும், தங்குமிடமும், மோக்ஷோபாயமும், மித்திரனும், மோக்ஷத்தில் அடையப்படுபவனும் நாராயணனே.]

(தாதா) தரிப்பவன்: "மமயோநிர் மஹத்₃ப்₃ரஹ்ம, தஸ்மிந் க₃ர்ப்ப₄ம் த₃தா₄ம்யஹம்" [ஜகத்துக்குக் காரணமாயிருக்கும் அசேதன ப்ரக்ருதியில் சேதன ஸமூஹமாகிற கர்ப்பத்தை நானே சேர்க்கிறேன்] என்று கீதாசார்யனும் அருளிச்செய்திருக்கிறார். லய காலத்தில் உலகமுண்ட பெருவாயன் என்று ஆழ்வாரால் கீர்த்திக்கப் பட்டிருக்கிறான் கேசவன். திருமங்கையாழ்வாரும்,

"நெற்றிமேல் கண்ணானும் நிறைமொழிவாய் நான்முகனும் நீண்டநால்வாய்
ஒற்றைக்கை வெண்பகட்டில் ஒருவனையும் உள்ளிட்ட அமரரோடும்
வெற்றிபோர்க்கடலரையன் விழுங்காமல் தான்விழுங்கி உய்யக்கொண்ட
கொற்றப்போராழியான் குணம்பரவாச் சிறுதொண்டர் கொடியவாறே."

என்று அருளிச்செய்திருக்கிறார். அதன்படி ஈச்வராபிமானிகளாகிய நெற்றிக்கண்ணான், நான்முகன், இந்திரன் முதலிய மற்ற தேவதைகளையும் பிரளயஜலத்தில் அமிழ்ந்துபோகாமல் தன் குக்ஷியில்

http://acharya.org

வைத்து ரக்ஷித்தனனன்றோ எம்பெருமான்! அவர்களை "எம்பெருமான் உண்டுமிழ்ந்த எச்சில் தேவர்" என்றும் அநுஸந்திக்கிறார்.

(விதாதா) விதிப்பவன்; இப்படித் தன் கர்ப்பத்திலுள்ளவர்களுக்கு அவரவர் கர்மாநுஸாரமாக ஸ்ருஷ்டியை விதிப்பவன்.

"ஸூர்யாசந்த்₃ரமஸௌ தா₄தா யதா₂பூர்வம் அகல்பயத்"

[ஸூர்ய சந்திரர்களை பகவான் முன்போலவே ஸ்ருஷ்டி செய்தார்] என்று சொல்லப்பட்டிருக்கிறதன்றோ. (கர்த்தா) செய்பவன்: உலகத்தை இம்மாதிரி படைத்தவன். "விசித்ரா தே₃ஹஸம்பத்தி:" என்கிறபடி தேவ மனுஷ்ய திர்யக் ஸ்தாவர சரீரங்களையும் அவைகளின் உட்பிரிவுகளையும் படைத்தவன். அவர்கள் வசிக்கத்தகுந்த உலகங்களையும் படைத்தவன். அவைகள் பதினான்கு எனக் கீர்த்தி பெற்றிருக்கின்றன. "கர்த்தா காரயிதா சைவ ப்ரேரகச்சாநுமோ-த₃க:"[செய்பவன்; செய்விப்பவன்; தூண்டுபவன்; ஆமோதிப்பவன்] என்னும் நான்கு காரியங்களையும் நடத்துபவன் நாராயணனே. கர்மாநுகுணமாகவன்றோ ஸ்ருஷ்டி; அப்படியிருக்க எல்லாம் அவனிட்ட வழக்கு என்று எப்படிச் சொல்லலாம்? என்னும் கேள்வி ஏற்படுகிறது. ஜீவன் ஒரு காரியம் செய்வதற்குக் காரணம் அதிலுள்ள ருசியே. ருசிக்குக் காரணம் மனஸ்ஸே. அந்த மனஸ் மாதவனிட்ட வழக்கே என்பது சாஸ்த்ரஸித்தம். "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி₃ ஸந்நிவிஷ்ட:" [எல்லோருடைய இருதயத்திலும் நான் இருக்கிறேன்] என்று கீதையிலும் "அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம்" [உள் நுழைந்து ஜனங்களை நியமிப்பவன்] என்று வேதத்திலும் கோஷிக்கப்பட்டிருக்கிறது. "தீ மனம் கெடுத்தாய்" "மருவித் தொழும் மனமே தந்தாய்" என்றார் மாறனும். கர்மம் க்ரியாரூபமானதினால் செய்தவுடன் நசித்துவிடும். அதனால் அவன் திருவுள்ளத்தில் நிக்ரஹாநுக்ரஹங்கள் ஏற்பட்டு அவைகளின் பலனை அநுபவிக்க வேண்டி நேரிடுகிறது. அவன் நினைக்கிலோ கொடிய வினைபோம். அவனை ஏனென்று கேட்பார் ஆருமில்லை. அதனாலேயே "என் தமர் நமன் தமரால் ஆராயப்படார்காண்" என்றனன். சரீரமாய், பரதந்த்ரனான ஜீவனுக்கு ஸ்வதந்த்ரகர்த்ருத்வம் கிடையாது. ஆகையால் பரமாத்மாவே ஸ்வதந்த்ரகர்த்தா.

(விகர்த்தா) விகாரமடையச் செய்பவன்; கர்மாநுகுணமாக வஸ்துக்களை மாறுதலடையச் செய்பவன். விகாரமடைபவன் என்

http://acharya.org

னும் பொருள் கொள்ளலாம். "அவிகாராய" என்று புகழ்பெற்றவன் விகாரமடைவது எவ்வாறு பொருந்தும்? ஆச்ரிதர் துக்கத்தைக் கண்டு துக்கிப்பவனன்றோ எம்பெருமான். கஜேந்த்ராழ்வான் கூப்பிட்ட போது அரைகுலையத் தலைகுலைய ஆயுதமில்லாமல் பரிகரமில்லாமல் வாயுவேக மனோவேகங்களையும் மீறி மடுவிலே குதித்து கஜேந்திரனைக் காப்பாற்றின விருத்தாந்தம் எல்லோரும் அறிந்ததே. துரோபதை கூப்பிட்டவன்று ஆபத்தை நிவர்த்திக்கப் புடவையை வளரும்படிச் செய்தார். 'நேரில் வர முடியவில்லையே' என்று வருந்தி "ருணம் ப்ரவ்ருத்3த4மிவ மே" என்று கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்குகிறேன் என்று சொன்னதும் எல்லோரும் அறிந்ததே. மேற்கண்ட விகாரம் 'பரது4:க்க2 து3:க்கித்வம்' என்று மாதவனின் மஹா குணங்களில் ஒன்றாக நம் ஆசார்யர்களால் பேசப்பட்டிருக்கிறது. ராமாயணத்தில் 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம்ப்4ருசம்ப4வதி து3:கி2த:' [பிறர் துக்கமடையும்போது அவர்களினும் அதிகமாக துக்கமடைகிறான்] என்று காகுத்தனுடைய குணம் கீர்த்திக்கப்பட்டிருக்கிறது. 'விகர்த்தா' என்னும் திருநாமம் கோபரூபமான விகாரத்தை உடையவன் என்றும்பொருள்படும். "காலாக்3நி ஸத்3ருச:க்ரோதே4" என்றும் "கோபம் ஆஹாரயத் தீவ்ரம்" என்றும் கூறப்பட்டிருக்கிறதல்லவா? எம்பெருமான் அவதாரம் செய்து பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையே. "கோபஸ்ய வசம் ஏயிவாந்" என்கிறபடி சத்ருநிரஸனம் பண்ணியும் கோபம் தணியாத, பிராட்டியும் கண்டு பயப்படும்படியான, உக்ர நரஸிம்ஹாவதாரம் செய்ததும் இங்கு நினைக்கத்தக்கது. பெற்ற தகப்பன் பகையாக பிரஹ்லாதாழ்வான் பகவானுக்காகப் படாதனப்பட்ட விவரம் முன்னமே விவரித்திருக்கிறோம். அவனுக்குத் தீங்கு செய்யச் செய்ய அச்யுதனுடைய கோபம் நெய்யிட்ட தீயைப்போல் வளர்ந்தது. இதனால் கர்மானுகுணமாக வந்த சோகமோ, கோபமோ தோஷமே ஒழிய ஸங்கல்பமடியாக உண்டாகும் இவைகளினால் தோஷம் ஏற்படாது என்று அறிகிறோம்.

(மாதா பிதா) இந்த ஜன்மத்தில் இச்சரீரத்தைப் பத்துமாதம் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்து வளர்த்துப் போஷித்தவள் தாயெனத்தகுந்தவள். இந்த சரீரம் உண்டாவதற்கு முக்யகாரணமானவன் தகப்பனாவான். வேதமும் "மாத்ருதே3வோ ப4வ," "பித்ருதே3வோ ப4வ" என்று தாய்தந்தையரை தெய்வத்திற்கு ஸமானமாகப் புகழ்ந்திருக்கிறது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பர் தமிழர். இவ்வுலகில் கண்கண்ட தெய்வம் அவர்களே.

http://acharya.org

"ய: புத்ர: பிதரம் த்$_3$வேஷ்டி தம் வித்$_3$யாத் அந்யரேதஸம்
யஸ்து நாராயணம் த்$_3$வேஷ்டி தம் வித்$_3$யாத் அந்த்யரேதஸம்"

[பிதாவை த்வேஷிக்கும் புத்ரனை அன்யனுடைய ரேதஸ்ஸுக்குப் பிறந்தவனாக அறியலாம். நாராயணனை த்வேஷிப்பவனை சண்டாளனுக்குப் பிறந்தவனாக அறியலாம்.] என்பதிலிருந்து பித்ரு த்வேஷமும் நாராயண த்வேஷமும் கூடாதென்று ஏற்படுகிறது. தாய் மக்களுக்கு அவர்கள் இஷ்டப்பட்டதை நல்லதா கெட்டதா என்பதை கவனிக்காமல் கொடுப்பவள். பிதாவோ நல்லதாயிருந்தால்தான் கொடுப்பான். ஸந்யாஸிகளும் மாத்ரு கர்மம் செய்யவேண்டுமெனக் கேள்விப்படுகிறபடியால் மாதாவின் மகிமை நன்கு விளங்குகிறது. ப்ரஜை உண்டாவதற்கு அளவில்லா நோன்பு நோற்பவள் தாய். அரசமர ப்ரதக்ஷிணம் செய்தல்; பாம்புப் புற்றுக்குப் பால் தெளித்தல்; திருவோணப் பட்டினி (ச்ரவண விரதம்) இருப்பது; யாத்திரை செய்து பல தீர்த்தங்கள் ஆடுதல்; கோவில்களை ப்ரதக்ஷிணம்செய்வது முதலியவைகள் கருத்தரிப்பதற்காகத் தாய் செய்யும் நோன்புகள். கர்ப்பம் தரித்தபின் போஜனாதிகளைச் சுருக்கியும், அனுகூலமாகப் படுப்பது முதலிய நியமங்களை அனுஷ்டித்தும் குழந்தையைத் தன் வயிற்றினுள் ரக்ஷிக்கிறாள். 'ப்ரஸவ வேதனையோ நரக வேதனையோ' என்று சொல்லப்படும் வேதனையை அனுபவிக்கிறாள். பிறந்தபின் ப்ரஜையினுடைய மலஜலாதிகளைத் தொட்டு, ஸஹித்திருக்கிறாள் அன்னை. அதனுடைய ஆரோக்கியத்தையே கவனித்து உண்ணாது உறங்காது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்க்கிறாள். வயதுவந்தபின் பெற்ற பிள்ளை பரமதுஷ்டனாயினும், கைசலிக்கத் தாயை அடிக்கும் தடியனாகிலும், பசித்தபோது சோறு போடத் தயாராயிருப்பவள் தாய். 'அவளிட்ட அன்னத்தை உண்ண மாட்டேன்' என்று த்வேஷிக்கும் தனயனுக்கும் மறைந்துநின்று இராமடம் ஊட்டுவாள் மாதா.

தந்தை பிறப்பித்தவன். அதுவே அவனுடைய ப்ரதான காரியம். இக்காலத்திலும் பிதாவில்லாமல் புத்ரோத்பத்தி பண்ணச் சிலர் முயற்சித்தது பயனற்றுப் போயிற்றல்லவா? ஹிதத்தைச் செய்யும் அவனுடைய ஏற்றத்தைச் சொல்லும்போது தரிக்கிற தாயின் காரியம் ஒரு பாத்திரத்தில் போட்டுப் பாதுகாப்பதற்கு ஸமானமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மாத்ரு வாக்ய பித்ரு வாக்ய பரிபாலனத்திற்காக ராமபிரான், புவனியெல்லாம் பதராக நினைத்துப் புன்சிரிப்புடன் தொலையாத

http://acharya.org

பெருங்கானம் புகுந்தனனன்றோ? பரசுராமனும் பித்ருவாக்ய பரிபாலனத்திற்காக மாதாவையும் கொல்லவில்லையா? ''ஜீவதோர் வாக்யகரணாத்'' என்று உயிருடனிருக்கும் மாதா பிதாக்களின் விருப்பங்களைப் பூர்த்திசெய்வதே மக்களின் கடமையாகும். பூரு தன் யௌவனத்தைத் தன் தகப்பன் யயாதிக்குக் கொடுத்து அவனுடைய கிழத்தனத்தைத் தான் ஏற்றுக்கொண்டான். சந்தனுமஹாராஜன் பரிமளகந்தியைத் திருமணம் புரிவதற்காக, காங்கேயன் பிரம்மசர்ய விரதத்தை ஏற்றுக்கொண்டு ''பீஷ்மாச்சாரியார்'' என்ற பட்டம் பெற்றான்.

இப்படி, லோகத்திலும், சாஸ்த்ரங்களிலும் மேலாகப் பேசப்படும் மாதா பிதாக்களிலும் மேலானவன் மாதவன் என்று இங்கு சொல்லப்படுகிறது. முன் 'கர்த்தா விகர்த்தா' என்று சொல்லப்பட்ட பரமாத்மாவின் லக்ஷணங்கள் அறிவதற்குக் கடினமானவை என்று லோகத்தில் எல்லோரும் அறிந்த மாதா, பிதா முதலானவர்களை நாராயணனுக்கு த்ருஷ்டாந்தமாகக் காட்டுகிறது வேதம். உலகிலுள்ள மாதா பிதாக்களைக் காட்டிலும் மேலானவன் முகுந்தன். தாய் தந்தையரால் ஏற்பட்ட சரீரம் 'இன்று சாதல் நின்று சாதல் அன்றி' நீண்டநாள் நிலைத்து நிற்பதில்லை. மேலும் இவர்கள் நிலையற்றவர்கள். எண்ணிறந்த பிறப்புக்களில் தாயரெத்தனையோ! தந்தையரெத்தனையோ! சுநச்சேபனின் தாய் தந்தையர்கள் அவனை பலியிடக்கொடுத்தது ராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அன்று காத்தவனும் வேதத்தில் மாதா பிதாவாக கோஷிக்கப்பட்ட நாராயணனே. மக்களை விலைக்கு விற்கும் மாதா பிதாக்கள் இக்காலத்திலும் உண்டு. இந்திரனுடைய குமாரனாகிய ஜயந்தன் என்னும் காகாஸுரனை, அவனுடைய அஸஹ்யாபசாரத்தைக் கண்டு வெறுத்தும், ரக்ஷிக்கமுடியாது என்கிற நிச்சயத்தாலும், மறைக்க முற்பட்டால் தங்களுக்கு ஆபத்து வருமென்று அஞ்சியும் அவனுடைய பெற்றோர் கைவிட்டுவிட்டார்கள். பிரஹ்லாதாழ்வானுக்குப் பெற்ற தகப்பன் பகையானது ஸுப்ரஸித்தம். காமபரவசர்களாய் குழந்தைகளை உற்பத்தி செய்தபின்பு அக்குழந்தைகளை போக விரோதி என்று விட்டுப்போவார்களும் உண்டன்றோ. வள்ளுவர், சகுந்தலை, திருமழிசையாழ்வார் முதலியோரின் தாய் தந்தையர்கள் இந்த கோஷ்டியில் சேர்ந்தவர்களே. பொருளுள்ளவரை போற்றுவார்கள். இல்லையேல் தூற்றுவார்கள். 'இல்லானை ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்'' என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது.

http://acharya.org

ஆகையால் நமக்கு உண்மையான மாதாவும் பிதாவும் மாதவனே. மாதா பிதாக்களின் உறவு தேஹத்தினாலும் குணத்தினாலும் வந்த பந்தம்; இவனுடைய உறவு ஆத்மாவினால் வந்த ஸம்பந்தம். அவர்களுறவு கால்விலங்கு; இவனுறவு பந்தவிமோசகம். அவர்களுடைய உறவு அளவுள்ளது; இவனுறவு அளவற்றது. அவர்களுடைய உறவு அநித்யமானது. அச்யுதனுடைய உறவு அநாதியாயும் நித்யமாயுமிருப்பது. நமக்கும் நம்மையுடையவன் நாராயணனுக்கும் உள்ள உறவு இங்கும் அங்கும், இப்போதும் எப்போதும் ஒழிக்க ஒழியாதது. அந்த ஸம்பந்தம் நவவிதம் என்று நன்கு உரைக்கப்பட்டிருக்கிறது.

மாதாவைப்போல் மாதவன் எல்லா ஜீவராசிகளையும் குக்ஷியில் வைத்து ரக்ஷிக்கிறான். சிறகொடிந்த பக்ஷிகள்போல் அசித்ஸமமாய் போக மோக்ஷங்களுக்கு யோக்யதையில்லாமல் கிடக்கும்போது அவர்களுடைய துர்த்தசையைக் கண்டு "ஐயோ" என்று இரங்கி கரண களேபரங்களை (இந்திரியங்களையும் தேஹத்தையும்) தந்து தாயைப் போல் வெளிநாடுகாண விடுபவன் வாஸுதேவன். மாதாபிதாக்கள் துஷ்டர்களான பிள்ளைகளுக்கு மறைந்துநின்று இராமடம் ஊட்டுவதுபோல் ஒவ்வொருவர் மனத்திலும் மன்னியுறைகின்ற மாதவன் மறைந்துநின்று அவர்களுக்கு நன்மை செய்கிறான். இக்காரணங்களால் நாராயணனே நிருபாதிகமான 'மாதா பிதா' எனப்படுகிறான். இதையே "பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ மற்றையாராவாரும் நீ" என்றும், "தாய் தந்தை யெவ்வுயிர்க்கும்தான்" என்றும் பராங்குசனும் பாடினார்.

"பித்ருமாத்ரு ஸுத ப்4ராத்ரு தா3ர மித்ராத3யோபி வா।
ஏகைக ப2லலாப4ாய ஸர்வலாப4ாய கேசவ:॥"

[தந்தை, தாய், தனயன், ஸஹோதரன், மனைவி, நண்பன் முதலானோர் ஒவ்வொரு பிரயோஜனத்தை அடைவதற்காக (ஏற்பட்டிருக்கிறார்கள்). கேசவனே எல்லா லாபத்தையும் அடைவதற்காக ஆகிறான்.] என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றதைக் கைவிட்டு மாற்பால் மனஞ்சுழிக்கவேண்டும். அவனை அடைவதற்கு அவர்கள் தடங்கலே. அந்த மாதா பிதாக்களுக்குத் தன்னலம் என்னும் தோஷமும், பக்ஷபாதம் என்னும் பைத்தியமும் உண்டு. இருடீகேசனுக்கு இவை யிரண்டுமில்லை. தாயினுமன்பன் நாராயணன். நாட்டிற்பிறந்து மனிசர்க்காகப் படாதனபட்ட பரமன். "தே3வாநாம் தா3நவாநாம் ச ஸாமாந்யம் அதி4தை3வதம்" என்று தேவர்களுக்கும்

அஸுரர்களுக்கும் ஸமானமான தெய்வமானவன். உள்ளபோது உடனிருந்து உண்டுடுத்தி ஆபத்துக்காலத்தில் அகலுபவர்கள் அவர்கள். முன்பு மறைந்து மனத்தே கோயில்கொண்டு மற்றவர் கைவிட்ட ஆபத்துக்காலத்தில் முன்வந்தும் முகங்காட்டியுமுபகரிப்பவன் முகுந்தன். "தாயே தந்தை யென்றும் தாரமே கிளை மக்களென்றும் நோயே பட்டொழிந்தேன்" என்றார் பரகாலனும். வாஸ்தவத்தில் அவர்கள் தாயுமல்ல; தந்தையுமல்ல. ஆத்மோஜ்ஜீவனத்துக்குத் தடங்கலான பெருநோய்களே அவர்கள். அவர்கள் இவன் சரீர பரிக்ரஹம் பண்ண நோன்பு நோற்பார்கள். சரீரத்தைப் பூண் கட்டி ஆத்மாவை விலங்கு பூட்டிச் சிறையிலிடுவார்கள். இவ்விடர்களை நீக்குமவன் நாராயணனே. ஆகையால் அவர்களை விட்டு இவனையே பற்றவேண்டும். இதையே,

"பிதரம் மாதரம் தா3ரான் புத்ரான் ப3ந்தூ4ந் ஸகீ2ந் கு3ரூந் ।
ரத்நாநி த4நதா4ந்யாநி க்ஷேத்ராணி ச க்3ருஹாணி ச ॥
ஸர்வத4ர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந் ।
லோக விக்ராந்தசரணௌ ஶரணம் தேவ்ரஜம் விபோ4 ॥"

[எம்பெருமானே! பிதா, மாதா, மனைவி, மக்கள், பந்துக்கள், மித்ரர்கள், பெரியோர்கள், ரத்னங்கள், தனதான்யங்கள், வயல்கள், வீடுகள், எல்லாவிதமான ஸாதனங்கள், ப்ரயோஜனங்கள் இவற்றை விட்டுத் திருவுலகளந்தருளின உன் திருவடிகளையே கதியாகப் பற்றுகிறேன்.] என்றும்,

"த்வமேவ மாதா ச பிதா த்வமேவ த்வமேவ ப3ந்து4ச்ச கு3ருஸ்த்வமேவ ।
த்வமேவ வித்3யா த்3ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தே3வதே3வ ॥"

[தேவதேவனே! நீயே எனக்குத் தாய், தந்தை, பந்து, குரு, வித்யை, பணம் முதலிய எல்லாம்.] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வேதம் நாராயணனை மாதா என்பது பொருந்துமா? நித்யானபாயினியான ஸ்ரீதேவியல்லவோ மாந்தர்களுக்கு மாதா. "த்வம் மாதா ஸர்வலோகாநாம் தே3வதே3வோ ஹரி: பிதா" என்று விஷ்ணு புராணமும் விளம்பியிருக்கிறதே. அப்படியிருக்க இங்கு நாராயணனை மாதா என்பது எவ்வாறு பொருந்தும்? என்கிற ஸந்தேஹம் எழுகிறது. 'ஜக3த்3வ்யாபாரவர்ஜம்' என்னும் ஸூத்ரப்படி உலகை உண்டாக்கல், ரக்ஷித்தல், ப4க்ஷித்தலாகிய முத்தொழில்களும் முதல்வனாகிய நாராயணனுடையதே http://acharya.org தாயான திருவுக்கும் திருவாகிய

செல்வன் தாமோதரனே. தன்னுடைய தேவிக்குத் தன் இச்சையினால் தன்னுடைய மாத்ருத்வத்தைக் கொடுத்து தனக்குப் பிரதிநிதியாக ஸ்ரீதேவியை உலகுக்குத் தாயாக நியமித்திருக்கிறான். ஆகையாலேயே பிராட்டி 'ஈச்வரீம் ஸர்வபூ₄தாநாம்' என்றும், 'அஸ்யேசாநா' என்றும் ஸர்வலோக மாதா என்றும் சொல்லப்படுகிறாள். பெரியாழ்வாரும் புருஷோத்தமனுடைய தாயன்பை

''தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்
என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார் என்பர்போலும்''

என்று பாடியிருக்கிறார். கம்பநாட்டாழ்வாரும் விராதன் ஸ்தோத்ரத்தில்,

''தாய்தன்னை அறியாத கன்றில்லை தன் கன்றை
ஆயும் அறியும் உலகின் தாயாகினைய!
நீயறிதி எப்பொருளும் அவை உன்னை நிலையறியா
மாயை இது என்கொலோ? வாராதே வரவல்லாய்''

என்று நாராயணன் நமக்குத் தாயாயிருக்கும் தன்மையைத் தெளிவாகக் காட்டியிருக்கிறார். விதிசிவாதிகள் முதலான சேதனர்களையும் அசேதன வர்க்கத்தையும் படைத்தவன் நாராயணன் ஒருவனேயாதலால் வேதம் அவனையே மாதாவாகச் சொல்லியிருக்கிறது. ஈச்வரத்வித்வம் கிடையாது. ஸ்ரீ பூமி நீளாதேவிகள் அவனுடைய பரமாத்மாவாயிருக்கும் தன்மைக்கு எதிர்த்தட்டானவர்களல்ல.

(ப்ராதா) தனிமையைத் தீர்ப்பவன் தன்னுடன் பிறந்தவன். பக்கபலமானவன் பிராதா. இச்சொல் தமையனுக்கும் தம்பிக்கும் பொதுப் பெயராக இருந்தபோதிலும் இங்கு தமையன் என்பதே பொருந்தும். பரந்தாமன் பிறப்பிலி. அவனை ஸஹோதரன் என்பது பொருந்துமோ? என்றால்: பிராதாவுக்கு மேற்பட்ட அன்பையுடையவன் என்பதே இங்கு பொருள். சக்ரவர்த்தித்திருமகனும்

''தே₃ஸே₂ தே₃ஸே₂ களத்ராணி தே₃ஸே₂ தே₃ஸே₂ ச பா₃ந்த₄வா:
தம் து தே₃ஸ₂ம் ந பஸ்₂யாமி யத்ர ப்₄ராதா ஸஹோத₃ர:''

[மனைவிகளும், பந்துக்களும் எந்த தேசத்திலும் கிடைப்பார்கள். உடன் பிறந்த ஸஹோதரன் கிடைக்கும் தேசத்தைக் கண்டிலேன்] என்றுபிராதாவின்பெருமையைப்பிரகடனப்படுத்தினர். ''ஜ்யேஷ்ட₂ ப்₄ராதா பிதுஸ் ஸம:'' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

http://acharya.org

ஆனல் உலகத்தில் ஸஹோதரர்கள் தாயாதிகளாகச் சொல்லப் படுகிருர்கள். 'ஜ்ஞாதிநோ விப்4யதே ப4யம்' எனப்படுகிறது. ஸுந்தோபஸுந்தர்கள் போன்ற ஸஹோதரர்களை எங்கும் காண் கிருேம். ஆகையால் உண்மையான ப்ராதா பரந்தாமனே என இங்கு பகரப்படுகிறது. லக்ஷ்மீஸம்பந்நனை லக்ஷ்மணனும்

''அஹம் தாவந் மஹாராஜே பித்ருத்வம் நோபலக்ஷயே
ப்4ராதா ப4ர்த்தாச ப3ந்து4ச்ச பிதாச மம ராக4வ:''

[நான் தசரத சக்ரவர்த்தியிடம் தந்தையின் தன்மையைக் காண வில்லை. ராகவனே எனக்கு பிராதாவும், எஜமானனும், பந்துவும், தகப் பனுமாவான்] என்று ஸுமந்திரன் மூலமாக தசரதருக்குச் சொல்லி யனுப்பினர். இதற்கு வியாக்யானம் செய்த கோவிந்தராஜரும்,

''ஏதேந பரமைகாந்திபி4: ப்ராக்ருத பித்ராத3ய: பரித்யாஜ்யா:.
ப4க3வாநேவ நிருபாதி4க பிதா ப4ர்த்தா ப3ந்து4ஶ்சேத்யுக்தம்''

[இதனுல் மற்ற தெய்வங்களைத் தொழாமல் மாதவனையே தொழும் மாண்புடைய மாந்தர்களால் தேஹஸம்பந்தமுள்ள பிதா முதலானவர்கள் விடத்தகுந்தவர்கள். பகவான் ஒருவனே நிருபாதிக மான தகப்பன், ஸ்வாமி, பந்து என்று சொல்லப்பட்டது] என்று சொல்லியிருக்கிருர்.

(நிவாஸ:) எல்லா பூதங்களிலும் இவன் வசிக்கிறுன்; அவைகள் இவனிடம் தங்குகின்றன.

''ஸர்வத்ராஸௌ ஸமஸ்தம்ச வஸத்யத்ரேதி வை யத:
ததஸ் ஸ வாஸுதே3வேதி வித்3வத்3பி4: பரிபட்2யதே''

[இவன் (பகவான்) எங்கும் வசிக்கிறுன். எல்லாம் இவனிடம் வசிக்கின்றன. ஆகையால் அவன் 'வாஸுதேவன்' என்று வித்வான் களால் சொல்லப்படுகிறுன்] என்று விஷ்ணு புராணத்திலும்,

''வாஸநாத் வாஸுதே3வஸ்ய வாஸிதம் தே ஜக3த்த்ரயம்
ஸர்வபூ4த நிவாஸோஸி வாஸுதே3வ நமோஸ்துதே''

என்று பாரதத்திலும் விவரிக்கப்பட்ட அர்த்தம் இங்கு சொல்லப் படுகிறது. 'உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்ருர் ஆழ்வாரும். அந்தர்யாமி பகவான் ஒவ்வொரு ஜீவனிடமும்

http://acharya.org

சேர்ந்து வசிக்கிறான். அவனிடம் நாம் பேசும் வழக்கம் பண்ணிக்கொண்டோமாகில் அவன் நமக்கு உற்ற உறவினனாகவும், நேசிக்கும் நண்பனாகவும் இருந்துகொண்டும் புத்திமதி சொல்லிக்கொண்டும் வரப்போகிற விஷயங்களைத் தெரிவித்துக்கொண்டுமிருப்பான்.

''த்$_3$வா ஸுபர்ணா ஸயுஜா ஸகா$_2$யா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது$_3$ அத்தி அநச்நங் அந்யோ அபி$_4$சாகசீதி''

[நண்பர்களான இருபக்ஷிகள் (ஜீவனும் பரனும்) ஒரே மரத்தில் (தேஹத்தில்) இருக்கின்றனர். அவர்களில் ஒருவன் மரத்தின் இனியகனியை (விஷயங்களை) சாப்பிடுகிறான். மற்றொருவன் அதை உண்ணாமல் பிரகாசிக்கிறான்] என்ற ச்ருதி வாக்யம் இங்கு நினைக்கத்தக்கது.

(சரணம்) நமக்கு மோக்ஷத்திற்கு உபாயமாகவும் இருப்பவன். சரணமடையத் தகுந்தவன் நாராயணன் ஒருவனே. எல்லா பூதங்களுக்கும் அபயம் கொடுப்பதையே விரதமாக உடைய ஸ்ரீமானன்றோ அவன். அவனிடம் விரோதித்துக்கொண்டவர்களுக்கு வேறு புகலிடம் கிடையாது. 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்கிறபடி தர்ப்பையில் பிரம்மாஸ்திரத்தை அபிமந்திரித்து காகுத்தன் காகாஸுரன் பேரில் விட, அவன் திறந்து கிடந்த வாசல்கள்தோறும் புகுந்து கண்டவர்களிடம் எல்லாம் கதறி, பதினாலு லோகத்திலும் காப்பாற்றுபவர்களைக் காணாமல் ''த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் க$_3$த:'' [மூன்று லோகங்களையும் சுற்றி அவனையே சரணமடைந்தான்] என்று ராகவன் திருவடிகளிலேயே விழுந்தனனன்றோ. ஸர்வ சக்தியுடையவனே சரண்யனாவான். யயாதி தன்னுடன் அர்த்தா$_4$ஸனத்திலிருந்ததைப் பொறுக்காத இந்திரன் ''கர்ம பூமியில் புண்ணியம் செய்தவர் ஆர்'' என்று அவனைக் கேட்க பொய்சொல்ல பயந்து ''என் காலத்தில் என்னைச் சொல்லுவார்கள்'' என்றான் யயாதி. இம்மாதிரி உண்மையைச் சொன்னதையே குற்றமாகக்கொண்டு, ''தற்புகழ்ச்சி செய்தாய்; கீழே விழக்கடவாய்.'' என்று சபித்து பூமியில் விழும்படிப் பண்ணினானன்றோ இந்திரன். அச்யுதனைத்தவிர மற்றெவரும் அடைக்கலம் புகத் தகுந்தவர்களல்ல என்பதைத் தெளிவுறுத்துவதற்காகவே இந்த உபாக்யானத்தை வேதவியாஸர் பாரதத்தில் எழுதினார். ''அஹம்ஸ்மராமி மத்$_3$ப$_4$க்தம் நயாமிபரமாம் க$_3$திம்'' [நான் என் பக்தனை (அவன் சாகுங்காலத்தில்) நினைத்திருந்து அவனைப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லுகிறேன்] என்று வராக

http://acharya.org

சரமச்லோகத்தில் உபதேசித்த உத்தமனே உலகத்தார் உய்வதற்கு உபாயமானவன். சாருங்காலத்தில் கல்லையும் கட்டையையும்போல் இந்த சரீரம் ஆய்விடும்போது நாம் அவனை நினைக்கமுடியாது. அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்த அடியவர்களை அந்திம காலத்தில் நினைத்தருளி அவர்களை அர்ச்சிராதிகதிவழியாக அழைத்துச் செல்லுகிறான் அச்யுதன். "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்றன்றோ ஆழ்வார் அருளியிருக்கிறார்.

(சரணம்...நாராயண:) நாராயண நாமமே நமக்கு நலமந்தமில்லதோர் நாட்டை அடைவதற்கு உபாயமாகும். உத்தரக்ரியைகளில், இறந்தவர்களுக்குப் பாதே$_2$யம்(கட்டுச்சோறு) கட்டிக்கொடுக்கிறார்கள். கேசவன் தமர்களுக்குப் பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தனாம்ருதமே. அக்கரை (பற்று) என்னும் அனர்த்தக் கடலுள் அழுந்துபவர்களைக் கரைசேர்விக்க விஷ்ணு போதமே (விஷ்ணுவாகிற ஓடமே) சிறந்தது. "தமஸ: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பத$_3$ம்" எனப்படும் வைகுண்டத்தை அடைய நாராயண நாம பாராயணமே மேலான வழியாகும். மார்வமென்பதோர் கோயிலமைத்து அதில் மாதவனென்பதோர் தெய்வத்தை நாட்டி, அவன் நாமத்தை மனனம் செய்வதே மற்ற பற்றை அறுப்பதற்கு மார்க்கமாகும். இதுவே,

"நமோ நாராயணாயேதி மந்த்ரஸ் ஸர்வார்த்த$_2$ ஸாத$_4$க:"

['நமோ 'நாராயணாய' என்னும் மந்த்ரம் எல்லாப் பொருள்களையும் ஸாதிக்கும்.] என்றும்,

"நாராயணேதி மந்த்ரோஸ்தி வாக$_3$ஸ்தி வசவர்த்திநீ।
ததா$_2$பி நரகே கோ$_4$ரே பதந்தீதி கிமத்$_3$பு$_4$தம்॥"

['நாராயண' என்னும் மந்த்ரமிருக்கிறது. வாக்கு வசத்திலிருக்கிறது. அப்படியும் கோரமான நரகத்தில் விழுகிறார்களென்பது எவ்வளவு ஆச்சர்யகரமானது!] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆழ்வாரும்,

"நாவாயிலுண்டே நமோ நாரணாவென்று
ஓவாதுரைக்கும் உரையுண்டே—மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்" என்று அருளினானன்றோ.

http://acharya.org

(ஸுஹ்ருத்) நண்பன்; நல்ல மனமுடையவன். 'பந்து' என்னுமல் ஸுஹ்ருத் என்பானேன்? உள்ளபொழுது அவனை அண்டி உண்டு உடுத்துச் சுற்றியிருப்பதனால் சுற்றமெனப் பெயர் பெற்றவர்கள், அவனுக்கு உதவவேண்டிய காலத்தில் அகலுவார்கள்; எதிராளிகளுடனும் சேர்ந்து அபகாரம் செய்வார்கள். அவர்களுடைய உறவு தொந்தரவே. இதனாலேயே வேதம் 'ஸுஹ்ருத்' என்றது. பந்துக்களைவிட ஸுஹ்ருத் ச்ரேஷ்டமானவன் என்பதினாலேயே பகவான் போதாயனர் ஸகாவுக்குப் பிறகு ஜ்ஞாதிகளுக்குத் தர்ப்பணம் செய்யும்படி விதித்தார். உலகிலுள்ள நண்பர்களைவிட 'மம ப்ராணா ஹி பாண்டவா:' என்ற மாதவனே மேலான மித்திரனாவான். மஹாபாரதத்தில் ஆரண்யபர்வத்தில்

''யஸ்ய மந்த்ரீச கோப்தாச ஸுஹ்ருத் சைவ ஜநார்தந:''
என்று சொல்லப்பட்டிருப்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

(கதி:) அர்ச்சிராதிகதியினால் அடையப்படுபவன். 'செல்கதி' என்றும் 'வருநல் தொல்கதி' என்றும் சொல்லப்பட்டிருப்பவன் நாராயணன். 'நல்கதி':— ஆத்மாநுபவமான கைவல்யம் நல்கதியல்ல. போகமனுபவிக்கும் இந்திராதி லோகங்களும் நல்கதியல்ல. குணாஷ்டகாவிர்பாவத்தையும், சேஷத்வத்திற்கு அனுரூபமான கைங்கர்ய ப்ராப்தியையும் அடைந்து பரமபதம் செல்வதே நல்கதியாகும். ''கதிமிச்சேத் ஜநார்தநாத்' என்று பிரம்மாண்ட புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. 'செல்வம் விரும்புமவன் ஒருவனைப் பற்றுவான்; புத்ரகாமன் ஒருவனைப் பற்றுவான்' என்று ஒன்றுக்கு ஒருவராய், பலராயிருப்பார்கள். எல்லாவற்றிற்கும் ஏற்பட்டவன் எம்பிரானே. தன்னுடைய அருள் செய்பவன் தாமோதரனே. (நாராயண:) நாமங்களுள் எல்லா விதமான ஏற்றத்தையும் பூர்த்தியையுமுடையது நாராயண நாமமே. ஆழ்வார்கள் கோஷ்டியில் நாராயண நாமத்தைத் தவிர வேறொரு திருநாமத்தை நினைப்பதில்லை. வேதம் வேறு திருநாமத்தைச் சொல்லியிருந்தாலல்லவோ இவர்கள் வேறு திருநாமங்களை யாதரிப்பது. எங்கேயாவது மற்ற திருநாமங்களைச் சொல்லும்போது ''பேராயிரம் கொண்டதோர் பீடுடையன்'' என்ற கணக்கிலேயே சேரும்.

மற்ற தெய்வங்கள் வேதப்ரஸித்தமானவர்களல்ல. ரஜோகுணமும் தமோகுணமும் நிறைந்தவர்கள், அஸுரர்களுக்கு உண்மையான உயர்வு கிடையாது. பெரிட்டைத் தலையனைக் கூந்தலழகன் என்னுமாப்போலே அவர்களைக் குறித்துப் பொன் மொழிகள் புனைவதும் (கட்டு

http://acharya.org

வதும்) இல்லாத ஈச்வரத்வத்தை ஸம்பாதித்துக் கொடுப்பதும் ஆச்ர யிப்பவர்களுக்கே பாரமாகிறது. அவர்களும் இவனைப்போல் ஸம் ஸாரிகளாகையாலே அவர்களிடம் இவன் பெறுவதொரு நன்மையு மில்லை. "ஆயுளோ விதியின் வசம். அமரத்வமோ அச்யுதனுலாக வேண்டியது" என்பார்கள். ஜடையைக் காட்டி "நானுமுன்னைப் போல் ஒருவனைப்பற்றியிருக்கும் ஸாதகன்" என்பார்கள். மாயப் பிறவியை மாற்றுவதற்குப் பெருமாமாயனையன்றி மற்றவராால் முடியுமோ? நாராயணனே நமக்கு ஸர்வவித பந்து என்பது பரம ரஹஸ்யம். இது ஒருவருக்குச் சொல்லக்கூடியதல்ல. இதை வேதம் வெளிப்படுத்திற்று.

இங்கு சொல்லப்படுகிறது புருஷோத்தமனுகிற நாராயணனு? அல்லது அவன் திருநாமமா? என்கிற கேள்வி ஏற்படுகிறது. இங்கு வ்யக்தியும் நாமமும் இரண்டும் விவக்ஷிதம் என்று கொள்வதே மிகவும் பொருந்தும். இந்நாமம் திருமந்த்ரத்தையும் குறிக்கிறது. ஓங் காரமாகிற ப்ரணவத்துடன் பிணைக்கவில்லையே? நமஸ்ஸுடன் கூட்டவில்லையே? 'ஆய' என்னும் சதுர்த்தியுடன் சேர்க்கவில்லையே? இம்மாதிரி தலைக்குறைத்தல் இடைக்குறைத்தல் கடைக்குறைத்தலாக விளம்புவானேன்? ஆழ்வார்கள் இம்மாதிரி அருளிச்செய்திருப்பது ஸர்வாதிகாரமாக்குவதற்காக என்று சிலர் சொல்லுகிறுர்கள். வேதாந்தமும் இப்படிவெளியிடுவதற்குக் காரணத்தைஆராய்வோம்.

இந்த நாமம் இருந்தபடியே உத்தேச்யம். இச்சை பிறந்த பொழுதே இதைச் சொல்லுவதற்குக் காலம். சொல்லுவோமென்று நினைத்துச் சொல்லுபவனே அதிகாரி. பலம் பெறுவதற்கு அங்கத் துடன் சொல்லவேண்டுமென்கிற அவசியமில்லை. இடறினவன் 'அம்மே' என்னும்போது ஒரு சடங்கு வேண்டாவிறே. இவ்விஷயத் தில் ஒரு ஐதிஹ்யம் அனுஸந்திக்கப்பட்டிருக்கிறது:— நஞ்சீயர், "அப்ரயதனுய்க்கொண்டு திருநாமம் சொல்லலாமோ?" என்று பட்டரைக் கேட்க, "கங்காஸ்நாநம் பண்ணப்போமவனுக்கு உவர்க் குழியிலே தோய்ந்து போகவேணுமோ? மேலுண்டான நன்மை களைப் பண்ணிக் கொடுக்கவற்றுனது கீழுள்ள அசுத்தியைப் போக்க மாட்டாதோ?" என்று அருளிச்செய்தார். கங்கைக்கு மேலாம் பதார்த்தமான ஹரிநாமஸங்கீர்த்தனமாகிற தீர்த்தமாடுவதற்கு தேஹசுத்தி வேண்டியதில்லை. கால நியமமும் கிடையாது. பெற்ற தாய்தந்தையரிடம் போகவோ பெயரைச் சொல்லவோ அதிகாரம் வேண்டுமோ? ஸர்வலோகத்துக்கும் மாதாபிதாவாகிய மாதவனை

http://acharya.org

அடைவதற்கோ பெயரைப் பேசுவதற்கோ அதிகாரம் வேண்டாம். ஒருகால் சொன்னேமென்று கைவாங்காமல் ஓயாமல் ஒழியாமல் வாயாலே சொல்லலாம்.

''துஞ்சும்போதழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணாவென்னும் நாமம்''

என்றார் திருமங்கையாழ்வார். ஆத்மாவுக்கு ஆகாத விஷயங்களைச் செய்வதற்கு நாள், நக்ஷத்திரம், திதி, தியாஜ்யம், லக்னம், யோகம் முதலியவைகளைப் பார்த்துச் செய்யவேண்டும். அவைகளுக்கும்,

''ததே₃வ லக்₃னம் ஸுதி₃நம் ததே₃வ தாராப₃லம் சந்த்₃ரப₃லம் ததே₃வ
வித்₃யாப₃லம் தை₃வப₃லம் ததே₃வ லக்ஷ்மீபதேரங்க்₄ரியுக₃ம் ஸ்மராமி॥'',

என்று லக்ஷ்மீநாதனுடைய திருவடிகளை நினைப்பதே போதுமான தென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மாவுக்கு உண்ணும் சோறும், பருகும்நீரும், தின்னும் வெற்றிலையுமான நாராயண நாம பாராயணத்திற்கு இச்சையுண்டான ஸமயமே காலம். யமகண்ட ராகு காலங்களும், திதி வார நக்ஷத்திரங்களும் இதற்குப் பார்க்கவேண்டியதில்லை. இவ்விஷயத்திற்குத் தியாஜ்யகாலம் த்யாஜ்யமாகிப் பூஜ்யமாகிறது. ஸ்வரூபத்திற்கு விரோதமான விஷயங்களைச் செய்வதற்கு அதிகாரிநியமம் வேண்டும். இதைச் சொல்ல எல்லாரும் தகுந்தவர்கள். இருக்கிறவனும் அதிகாரி; போகிறவனும் அதிகாரி. பிராம்மணனும் அதிகாரி; புலையனும் அதிகாரி. ஸம்ஸாரியும் அதிகாரி; ஸந்யாஸியும் அதிகாரி. அப்பொழுதும் (தேஹமுடிவு காலத்திலும்) இப்பொழுதும் எப்பொழுதும் எவரும் இதைச் சொல்லலாம்; கேட்கலாம்; கர்ணமந்திரமாகவும் கர்ணாம்ருதமாகவும் இருப்பது இந்நாமமே.

ச்ருதிசதசிரஸ்ஸித்தமானதும், அநந்யபரமானதுமான இந் நாராயண நாமமே பகவந்நாமங்களுள் பிரஸித்திபெற்றது. இந்த நாமத்தின் சப்தத்தை மட்டும் சொல்லுவதும் ஸ்வரூபம்; அர்த்தத்தை அநுஸந்திப்பதும் ஸ்வரூபம். உச்சி விடு விடாதே (ஸ்வரத்துடன்) சொல்லவேண்டுமென்கிற நியமம் கிடையாது. எப்படிச் சொன்னாலும் இன்பம் பயப்பது இத்திருநாமம். அஷ்டாக்ஷரமாகவும் சொல்லலாம்; குறைத்தும் சொல்லலாம்; ஆழ்வார்களைப்போல் நாரணா! என்றும் சொல்லலாம். மனத்திற்கு ரம்யமானதும் நாவிற்கு அலங்காரமானதும் நாராயண நாமமே. முக்தர்கள் ''ஹா வுஹா வுஹாவு'' என்று ஸாமகானம் பண்ணுமாப்போலே முமுக்ஷுக்கள்

http://acharya.org

நாராயண நாம பாராயணம் நித்யாநுஸந்தானமாகச் செய்ய வேண்டுமென்று இவ்வுபநிஷத் உணர்த்தியிருக்கிறது.

பாற்கடலைக் கடைந்து கிடைத்தது தேவாம்ருதம். அதுவோ தேஹாம்ருதம். தேஹத்தினால் சாப்பிடப்பட்டு தேஹத்தைப் பூண் கட்டிச் சிரகாலம் ஜீவிக்கச்செய்வது அது. இது ஆத்மாம்ருதம். ஆத்மாவுக்கு என்றும் தேனும் பாலும் அமுதுமாவது இது. ஆத்மாவினால் அருந்தப்பட்டு அதை உஜ்ஜீவிக்கச் செய்கிறது. அது ஸமுத்ரத்தைக் கடைந்ததனால் கிடைத்த உப்பஞ்சாறு. இது நாலு வேதங்களாகிற ஸமுத்ரங்களைக் கடைந்து உண்டானது. அவ்வமிருதத்தை அஸுரர்க்குக் கொடுக்காமல் தேவர்களுக்கே கொடுத்தான். இந்த நாராயண நாமாம்ருதத்தை நல்லார்க்கும், பொல்லார்க்கும், எல்லார்க்கும் நல்கினான். அந்த அம்ருதத்தை அருந்தினவர்களுக்கு அழிவுண்டு. இதை அறிந்தவர்களுக்கு "அம்ருதத்வம் அச்நுதே" (சாகாமலிருக்கும் தன்மையை அடைகிறான்) "ந ச புநராவர்த்ததே" (மோக்ஷமடைந்தவன் திரும்பி ஸம்ஸாரத்திற்கு வருவதில்லை) என்கிறபடி அழிவு இல்லை. அது பெயரால் மட்டும் அம்ருதம். உண்மையிலல்ல. இதுவே உண்மையான அம்ருதம். ச்ரவண ஸமயத்திலும், மனனம் பண்ணும்பொழுதும், அநுஸந்தான வேளையிலும் ஆநந்தாவஹமாயிருக்கும் ஆராவமுது இதுவேயாகும்.

பகவானின் வாத்ஸல்யத்திற்கு வாசகமாயிருப்பது இத்திருநாமம் என்பதை "மாதா-நாராயண:" என்பதினால் காட்டிற்று. காரணத்வத்திற்கும் வாசகமானது என்பதை "பிதா-நாராயண:" என்பதினால் காட்டிற்று. புருஷோத்தமனுடைய ஸௌசீல்யத்திற்கும், ஸௌலப்யத்திற்கும் வாசகமானது என்பதை "ப்ராதா...ஸுஹ்ருத்...நாராயண:" என்பதால் காட்டிற்று. பகவானுடைய உபாயத்வத்தையும், ப்ராப்யத்வத்தையும் இதில் அநுஸந்திக்கவேண்டும் என்பதை "சரணம்...கதிர் நாராயண:" என்று வேதம் உணர்த்திற்று. வ்யாபகத்வத்தையும் தாரகத்வத்தையும் 'நிவாஸ:-நாராயண:' என்பதில் அநுஸந்திக்கவேண்டும்.

இம்மந்த்ரம் சொல்லுவது ச்ரமமன்றே. அயுதாக்ஷரியன்றே. ஸஹஸ்ராக்ஷரீமாலாமந்த்ரமன்றே. அஷ்டாக்ஷரிதானே. இப்பெயரைப் பாடுவதே பரமாநந்தமாயிற்றே. பகவானைப் பெறுவதற்கு ப்ரதிபந்தகங்களான பாபங்கள் இப்பெயரைப் படித்ததும் பறந்தோடிப்போமே. கரும்புதின்னக் கூலியுமிருக்க, இக்கலிகாலத்தில்

http://acharya.org

கால்பிடிக்கவும் வேண்டியிருக்கிறதே! ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் பற்றக்கூடியவை நாராயணன் திருவடிகளே; சொல்லக்கூடியது அவன் திருநாமமே. நம்மாழ்வாரும், "திரு நாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்மினோ" என்று அருளியிருக்கிறார்.

"யத்₃ ப்ரஹ்ம கல்பநியுதாநுப₄வேப்யநாச்யம்
தத் கில்பி₃ஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே₄"

[ஜீவன், பல்லாயிரம் ப்ரஹ்மகல்பங்கள் அனுபவித்தும் நசிக்காத பாபத்தை, அரைக்ஷண நேரத்தில் செய்கிறான்] என்று சொல்லப்பட்ட பாபக்கூட்டங்களைப் போக்கடிப்பதற்குப் பத்மநாபனின் பாதங்களைப் பற்றுவதையும், அவன் திருநாமஸங்கீர்த்தனம் செய்வதையும் தவிர வேறு வழியில்லை. நாமஸங்கீர்த்தனம் செய்யாத க்ருதக்₄நர்கள் பூமி பாரங்களே. பல்லாயிரம்கோடி மனுஷ்யதிர்யக்குகளையும் பர்வதங்களையும் தாங்கும் தரணிக்கு நாம் எப்படி பாரம் என்ற ஸந்தேஹம் ஏற்படுகிறது.

"ந கிஞ்சித் பர்வதா ப₄ாரம், ந ப₄ாரம் ஸப்தஸாக₃ரம்।
ஸ்வாமித்₃ரோஹமித₃ம் ப₄ாரம் ப₄ாரம் விச்வாஸக₄ாதகம்॥"

[(பூமிக்கு) பர்வதங்கள் பாரமல்ல; ஏழுஸமுத்ரங்களும் பாரமல்ல; ஸ்வாமித்ரோகமே பாரம்; விச்வாஸகாதகமே பாரம்] என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது.

"தாந் ம்ருதாநபி க்ரவ்யாத₃ா: க்ருதக்₄நாந் நோபபு₄ஞ்ஜதே"

[செய்நன்றி மறந்தவர்கள் இறந்தபோதும், அவர்களைக் கழுகுகள் உண்பதில்லை] என்று புராணங்கள் பேசியிருக்கின்றன. தொண்டரடிப்பொடியாழ்வாரும் இதையே, "புள்கவ்வக் கிடக்கின்றீரே" என்று அருளிச்செய்தார். 'கவ்வ்' என்ற இடத்திற்கு வியாக்யானம் செய்த பெரியவாச்சான்பிள்ளை "மாம்ஸபக்ஷணம் பண்ணித்திரியக்கடவ பக்ஷிகளும், முந்துறக்கவ்வி, பின்னை 'க்ருதக்₄ந மாம்ஸம்' என்று பொகட்டுப்போம்" என்று அருளிச்செய்திருக்கிறார். "மிண்டர் பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமின் நீரே" என்றும் தொண்டரடிப்பொடிகள் அருளியிருக்கிறார். நாராயணன் நமக்குச் செய்த நன்மைகளை நினைக்காவிடில், நம்மை க்ருதக்னரென்று சொல்வதில் தடையென்ன?

http://acharya.org

"நந்த₃ந்த்யுதி₃த ஆதி₃த்யே நந்த₃ந்த்யஸ்தமிதே ரவௌ।
ஆத்மநோ நாவபுத்₃த்₄யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம்"
[ராமாயணம்]

என்கிறபடி ஸூர்யன் அஸ்தமித்து இருள்வந்து பூமியைச் சூழ்ந்த வுடன், மனமும் இருளடைந்து, அந்நியர் காணாமல் அபிமதவிஷயங் களை அநுபவிக்கும் காலம் வந்ததென்று ஸந்தோஷப்படுகிறார்கள். பொழுது விடிந்ததும் போகத்திற்கு அவசியமான திரவியங்களை ஸம்பாதிப்பதில் உகக்கிறார்கள். சாலிலெடுத்த நீர் குறைவதுபோல் நாள் செல்லச்செல்ல ஆயுள் அழிகிறதை எவராவது அறிகிறார்களா? ஆயுளாகிற மரத்தை நாள்களாகிற ரம்பம் அறுப்பதைக்கண்டு பயந்து, வைகுண்டத்தில் வாழ்வதற்கு வழிதேடுகிறார்களா? விஷ்ணுதர்மத்தில்,

"மேருமந்த₃ரமாத்ரோபி ராசி: பாபஸ்ய கர்மண:
கேசவம் வைத்₃யமாஸாத்₃ய து₃ர்வ்யாதி₄ரிவ நச்யதி"

[மேரு, மந்தரமலைகளளவு பாபஸமூஹமும் கேசவனை அடைந்தால், வைத்யனைக்கண்ட துர்வ்யாதிபோல், நசிக்கிறது.] என்று சொல் லப்பட்டிருக்கிறது. நேசமிலாதவர்களுக்கும் நினையாதவர்க்கும் அரி யான் நாராயணன். நேசமுள்ளவர்க்கும் நினைத்தவர்க்கும் எளி யான். 'நண்ணுவாரும் உண்டோ' என்று நசையுற்றிருக்கும் நாரா யணனுக்கு ஆகாதவரில்லை. தாயையடிக்கும் தனயனையும் பெற்ற தாயால் விடப்போமோ? மாத்ருகாதகனுக்கும் கைகடுத்த காலத்தில் "அம்மே" என்னப்ராப்தியுண்டல்லவா? வெறுப்புள்ளவர்களுக்கு வெறுப்பு நீங்கினால் "அப்பனே! அடலாழியானே!" என்றழைக்க ப்ராப்தியுண்டு. அவனோடுறவு எவர்க்கும் இங்கும் அங்கும் எங்கும் ஒழிக்க ஒழியாதது.

காரணவாக்யங்களிலும், அந்தர்யாமிப்ராம்மணத்திலும், நாரா யணமந்த்ரம் நமக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது. "தே₃வோ நாம ஸஹஸ்ரவாந்' எனப்படுமவனுடைய மற்ற நாமங்களையெல்லாம் ஒரு தட்டிலும் இதை மற்றொரு தட்டிலும் வைத்தால் இதை வைத்த தட்டு கனத்துத் தாழும். இது ஜ்ஞாநம், ஆனந்தம், அமலத்வம் முதலிய குணங்களைப்போல் ஸ்வரூபத்தை நிரூபித்துத் தரும் நாமம். இந்த நாமத்தை மறந்தவர் இறந்தவரே. இதை மறவாதார் பிற வாதாரே. ஆகையினால் மூலத்தின் முதற்பெயரை மொழிவது முறையே. இந்த நாமத்தின் பெருமையை திருமங்கையாழ்வார்

http://acharya.org

''குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயினவெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினுமாயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும்
நாமம்''

என்று அருளிச்செய்திருக்கிறார்.

எம்பெருமானுக்கேற்பட்ட ஆத்மாவை வேறு தேவதைகளுக்கு அடிமையாக்குவது புரோடாசத்தை நாய்க்கிடுவதை ஒக்கும். பிரமனோ கண்காட்டி. சிவனோ கைகாட்டி. விதியோ வேதபாரகன். புராரியோ புறமடக்கி (தபஸ்வி). ககாரவாச்யனோ குசவன். சிவனோ ஸம்ஹாரகன். இவர்களும் ஜீவர்களே. பகவானைக்குறித்துத் தவம்செய்து அந்தந்த அதிகார பதவிகளை அடைந்தவர்கள். இவர்கள் முறையே ராஜஸ தாமஸ குணமுடையவர்கள். பிரமனுக்கு ஆயுள் மிகுதியினாலேற்படும் செருக்குண்டு. பதினாலு புவனங்களுக்கும் பதி என்னும் பெருமையுண்டு. ஸ்ருஷ்டிகர்த்தா என்னும் கர்வமுண்டு. வேதபாராயணத்தாலும், ஆசாரானுஷ்டானங்களாலும் ஏற்றமுடைய ரோமச பகவான் ''ப்ரஹ்மாக்களென்று நீர்க்குமிழிபோல் தோன்றுவதும் மறைவதுமாய் எத்தனைபேர் இருந்திருக்கிறார்கள்'' என்று சொல்லி பிரமனைப் பங்கப்படுத்தினார். இதைத் திருமங்கையாழ்வார்,

''நான்முகன் நாள்மிகத்தருக்கை இருக்குவாய்மை நலமிகுசீர்
உரோமசனால் நவிற்று நக்கன்
ஊன்முகமார் தலையோட்டூண் ஒழித்த எந்தை''

என்று அனுஸந்திக்கிறார். சிவன் செருக்கித்திரிவதைப் பொறுக்காத பிரமன் ''என் தலையை அறு'' என்று அனுமதிபண்ணி, பின்பு தலையைக் கிள்ளினவுடன், கோபிக்கைக்கு யோக்யதையில்லாதிருந்தும், ''தகப்பன் தலையைத் திருகினான்'' என்று பழியிட்டு, ''கபாலீ த்வம் பவிஷ்யஸி'' [நீ கபாலியாக ஆகக்கடவாய்] என்று சாபமிட்டான். பெற்ற தகப்பன் பகையாகிப் புராரியும் பிரமகபாலத்தினால் பிணிப்புண்டான். தலையையிழந்த தாதாவுக்குத் தன் தலையை ஸ்ருஷ்டித்துக்கொள்ள சக்தியில்லை. தன்னைத் தான் ஸ்ருஷ்டிக்கவில்லையே. நாராயணனன்றோ அவனை ஸ்ருஷ்டிசெய்தவன். ஆகையினால் கர்த்தா என்னும் கர்வம் பங்கமடைந்தது. கபாலத்தினால் கட்டுண்ட ஸம்ஹார கர்த்தாவுக்கு அக்கபாலத்தை ஸம்ஹாரம் செய்ய சக்தியில்லை. கூறுசெய்த நாட்டிலே குறும்புசெய்து கை விலங்குடன் காணப்படு

வி—7

http://acharya.org

பவர்போலே கபாலத்தினால் கட்டுண்டு பதினான்கு புவனங்களிலும் பிக்ஷாடனம் செய்தும் கபாலம் நிறையாமல் கண்ணீர்விட்டுக் கதறி, வரையாது கொடுக்கும் வள்ளலாகிய வாஸுதேவனிடம் வணங்கி இரந்து, அக்ஷயமான பிக்ஷையைப் பெற்றதினால், கபாலமாகிற கையிலிருந்து கழன்று விழுந்தது. ஸம்ஹாரகர்த்தாவுக்கு மண்டையோட்டை முறிக்கமுடியவில்லையே. விருகாஸுரனுக்கு (பஸ்மாஸுரனுக்கு) வரம் கொடுத்து பஸ்மமாய் விடுவோமோ என்று பயந்து பறந்தோடிப் பரந்தாமன் பாதகமலங்களைப் பற்றிப் பிழைத்தனானன்றோ. ஆகையால் ருத்ரனும் ரக்ஷகனல்ல. தனயனாகிய திரிபுராரியால் தலையறுப்புண்டபடியால் தன்னை ரக்ஷித்துக்கொள்ள முடியாமல் பரிதவித்த பிரமனும் ரக்ஷகனல்ல. மதுகைடபர்கள் கையிலகப்பட்டுப் பண்டைநான் மறைகளையும் பறிகொடுத்து 'தனமிழந்தேன்; கண்ணிழந்தேன்' என்று கதறி மதுஸூதனனிடம் முறையிட்டு மறைகளை மீட்டுக்கொண்ட பிரமனும் பாதுகாப்பவனல்லன். 'தலையிலணிந்த பூ வாடாமல் காக்கிறேன்' என்று சபதம் செய்து சண்டையிலடிபட்டுப் புறமுதுகிட்டு, நெற்றிக்கண்ணைப் புதைத்துக்கொண்டு நழுவி, வாணனை வெறுங்கை வீணனாக்கி, ஆயிரம் தோளும் அறுபடுவதைக்கண்டு அலறி,

''க்ருஷ்ண க்ருஷ்ண ஜகந்நாத, ஜானே த்வாம் புருஷோத்தமம்''

என்று ஸ்தோத்ரம் செய்து, தலையறுபடுவதைத் தவிர்த்தனனன்றோ? ரக்ஷணத்திற்கு இட்டுப் பிறவாதவனன்றோ ரிஷபவாஹனன். ஸகலப்ராணிகளையும் ஸம்ஹரிக்கும் தொழிலையுடையவன் சங்கரன். பூச்சாண்டிபோல் நெருப்பு நிறவண்ணனாய், கனல்கக்கும் கண்ணனாய், தவிக்கிறவர்கள் தலையில் தணலைக் கொட்டுமாப்போலே ஆச்ரிதர்களை 'அருமை மகனை அறுத்துத் தா'' என்று கொடுந்தொழில்களைச் செய்யும்படி பரீக்ஷிக்கிறவன். திருமழிசையாழ்வாரும்,

"காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்
பேணிலும் வரம்தர மிடுக்கிலாத தேவர்"

என்று அருளிச்செய்திருக்கிறார். ஆகையால் சிவனும் ஸம்ரக்ஷகனல்லன். விதிசிவாதிகள் ஹிரண்யராவணாதிகளுக்குக் கொடுத்த வரங்களையெல்லாம் விளைக்கினவர் விஷ்ணுவே. தங்களுக்கு வரும் ஆபத்துக்களை அழிக்கமுடியாதவர்களும், பிறரைப் பேராபத்துக்களிலிருந்து பாதுகாக்கமுடியாதவர்களும் எப்படி ஸர்வரக்ஷகர்களாக முடியும்? சரணமடைபவர்கள் எப்படி சரண்யராக முடியும்?

http://acharya.org

''ந ஹி பாலந ஸாமர்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம்''

[ஸர்வேச்வரனை ஹரியைத் தவிர வேறொருவரிடமும் ரக்ஷண ஸாமர்த்யம் கிடையாது.] என்கிறபடி நம்மைக் காப்பாற்றுவது நாராயணனுடைய நிலைநின்ற தர்மம் என்பதை எவரும் ஆக்ஷேபிக்கமுடியாது. வேறு தெய்வங்களைப்பற்றி ''கர்த்தா, விகர்த்தா, தாதா, விதாதா'' என்றுவது, ''மாதா, பிதா, ப்ராதா, ஸுஹ்ருத்'' என்றுவது, ''நிவாஸ:, சரணம், கதி:'' என்றுவது, மூலமுடிக்குகளிலாவது பொய்யாமொழிகளான பண்டை வேதங்கள் பேசியிருக்கின்றனவா? பத்மநாபனின் பரத்வத்திற்கு எதிராகப் பேசப்படும் பிரமனும் ஓர் பிறவியே; சிவனும் ஓர் ஜீவனே என்று தெளிவாகத் தெரிவித்தும் நரணியிலுள்ளோர் தொகை நின்ற ஐயம் தெளியவில்லையே! என்னே காலத்தின் கூற்று! கலியின் கோலாஹலம்!! உலகம் பொய் என்பது வேதாந்தமாயிருந்தால் நாராயணனை ''கர்த்தா, விகர்த்தா'', ''தாதா, விதாதா'', ''உத்பவஸ் ஸம்பவ:'' என்பது எப்படிப் பொருந்தும்? தத்வம் ஒன்றாயிருந்தால் கர்த்தா, கார்யம் என்பதெல்லாம் பிள்ளைப் பேச்சாகாதா? தந்தை தாயினும் அன்பனை அச்யுதனை ''மாதா பிதா'' என்று வேதம் வெளிப்படுத்தியிருக்க, நாராயணனுக்கு குணமில்லை என்பது நிமிஷநேரமும் நிற்குமோ? அடைவதற்கு வழியும் (சரணம்), அடையப்படுபவனும் (கதி:) அநந்தனே என்று உபநிஷத் உத்கோஷித்திருக்க, ''ஜீவாத்மாக்கள் உண்மையாகக் கிடையாது; ப்ரஹ்மமே பிரமித்து ஜீவனாகத் தோன்றுகிறது'' என்பது கனப்பொழுதும் நிற்கமுடியாத வீண் வாதமே. ஒருகால் சொன்னாற்போல் பதினொன்பது காலம் நாராயணனே பரனென்றும், ஸர்வவித பந்துவென்றும், ஸர்வாந்தர்யாமியென்றும் ஸுபாலச்ருதியில் ஸுப்ரஸித்தப் படுத்தியிருக்க, மாயை, பிரமம், பொய் என்று பேசவழக்குண்டோ? நாராயண பரத்வத்தையும், விசிஷ்டாத்வைத வேதாந்தத்தையும் நன்றாக நிர்ணயித்திருக்கிறபடியால் ''ஸுபாலோபநிஷத்தின் ஸுநிச்சிதார்த்தம்'' என்பது பொருத்தமேயாகும்.

புருஷஸூக்தத்தில் பரமபுருஷ நிர்ணயம்.

புருஷஸூக்தம் ஸுப்ரஸித்தமானது. வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை எல்லாருக்கும் நன்கு விளங்கவைப்பது இதுவே. இதன் வைபவம் வாசாமகோசரம். இது புருஷோத்தமனாகிற நாராயணனையே வர்ணிக்கிறது என்று ஸகல ஸ்ம்ருதிஇதிஹாஸ புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

http://acharya.org

''யோ நூசாநத்₃விஜம் க₃த்வா ஹதவாந் அர்த்த₂லோபபு₄த:।
ஸ படே₂த் பௌருஷம் ஸூக்தம் ஜலஸ்த₂: சிந்தயந் ஹரிம்॥''
[எவனொருவன் ஸாங்கமாக வேதாத்யயனம் செய்த ப்ராஹ்மணனை அடைந்து, பணப்பேயாட்பட்டு அவனைக் கொன்றானோ, அவன் ஜலத்தில் நின்றுகொண்டு ஹரியை நினைத்துக்கொண்டு புருஷ ஸூக்தத்தைப் படிக்கக்கடவன்.] என்றும்,

''ஜப்த்வாத₂ பௌருஷம் ஸூக்தம் முச்யதே கு₃ருதல்பக₃:''
[குரு பத்நியுடன் சேர்ந்தவன் புருஷஸூக்தத்தை ஜபித்து, அந்த மஹா பாபத்தினின்றும் விடுபடுகிறான்.] என்றும்,

''ப்₃ரஹ்மயஜ்ஞே த்₃விஜ: ஸூக்தம் பௌருஷம் சிந்தயந் ஹரிம்।
ஸ ஸர்வாந் ஜபதே வேதா₃ந் ஸாங்கோ₃பாங்கா₃ந் த்₃விஜோத்தம:॥''
[தினந்தோறும் செய்யவேண்டிய பஞ்சமஹாயஜ்ஞத்தில் ஒன்றான ப்ரஹ்மயஜ்ஞத்தில் ஹரியை நினைத்துக்கொண்டு புருஷஸூக்தத்தைப் படிக்கும் பிராம்மணன் ஸாங்கோபாங்கமான எல்லா வேதங்களையும் ஜபித்தவனாகிறான்.] என்றும் பெரியோர்கள் இதன் பெருமையைப் பேசியிருக்கிறார்கள். சௌநக பகவானும் புருஷ ஸூக்தத்தின் ருக்குகளினால் ஸ்ரீமந் நாராயணனை ஆராதனம் பண்ண வேண்டுமென்று உபதேசித்து, ''அர்ச்சிதம் ஸ்யாத் ஜக₃த்₃ இதம்'' என்று அதனால் ஸகலலோகங்களையும் ஆராதனம் செய்யப்பட்டதாகிறது என்றும் வெளியிட்டிருக்கிறார். மேலும், ''புருஷ ஸூக்தத்தின் ருக்குகளைக்கொண்டு நெய்யினால் அக்னியில் ஹோமம் செய்பவன் ஸம்ஸாரத்துக்குக் காரணமான பாபங்களை விட்டு மோக்ஷத்தை அடைவான்'' என்றும், ஜகத்காரணனாய், திவ்யமங்களவிக்ரஹத்தை உடையவனாய், ஸகல கல்யாணகுண பூர்ணனாய், தேவாதி தேவனாயிருக்கிற ஸ்ரீமந்நாராயணனை, புருஷஸூக்தத்தினால் தியானம் செய்பவன் மோக்ஷத்தையடைந்து, ''ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்₃ரஹ்மணா விபச்சிதா'' [முக்தியடைந்தவன், ஸர்வஜ்ஞனான பரமாத்மாவுடன் கூட அவனுடைய ஸகல கல்யாணகுணங்களையும் அனுபவிக்கிறான்] என்றபடி ப்ரம்மாநந்தத்தை அடைகிறான் என்றும் இதன் மஹிமை விஸ்தாரமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இன்னும் அநேக ருஷிகள் இதன் பெருமையைப் பரக்கப் பேசியிருக்கிறார்கள். விரிவிற்கஞ்சி விடுத்தோம்.

புருஷஸூக்தத்தின் அர்த்தம் முத்₃க₃லோபனிஷத்திலும், அதில் எடுக்கப்பட்டிருக்கும் புருஷஸம்ஹிதையிலும் நன்கு வெளியிடப்பட்

http://acharya.org

டிருக்கிறது. இந்த உபனிஷத் ருக்வேதத்திலிருப்பதாக ஸ்மார்த்தர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. இது நம் பூர்வாசாரியர்களால் மேற்கோளாக எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும், ஹரிதாஸரால் வெளியிடப்பட்ட "இருசமய விளக்கம்" என்னும் கிரந்தத்தில் எடுக்கப்பட்டிருப்பதால் அதைப் புருஷஸூக்தத்தின் அர்த்தநிர்ணயத்திற்காக ஆங்காங்கு எடுத்துக்காட்டுவோம். இந்தப் புருஷஸூக்தம் பரமாத்மாவாகிற வாஸுதேவனால் இந்திரனுக்கு உபதேசிக்கப்பட்டதாக முத்கலோபனிஷத்தின் இரண்டாவதுகண்டத்தில் காணப்படுகிறது. புருஷஸூக்தத்திற்கு வித்யாரண்யரும் மாத்வரும் பாஷ்யம் செய்திருக்கின்றனர்.

விஷ்ணுபுராணத்தில், துருவன் பரந்தாமனை ஸ்தோத்திரம் செய்யும்ப்ரகரணத்தில், புருஷஸூக்த மந்த்ரங்களை அனுஸரித்து ஸ்தோத்ரம் செய்வதாகக் காணப்படுகிறது. அவ்விடத்தில் ஸகல சாஸ்த்ர பாரங்கதரும், "**எங்களாழ்வான்**" என்று கீர்த்திபெற்றவருமான **ஸ்ரீவிஷ்ணுசித்தாசாரியர்** விசேஷமாக வியாக்யானம் செய்திருக்கிறார். அதை அனுஸரித்து நாம் இங்கு வியாக்யானம் செய்கிறோம்.

1. ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்
ஸ பூ₄மிம் விச்வதோ வ்ருத்வா அத்யதிஷ்ட₂த் த₃சாங்கு₃லம்

[புருஷனென்று சொல்லப்படும் நாராயணன் அநந்தமான தலைகளையும், எண்ணமுடியாத கண்களையும், அநேகம் கால்களையும் உடையவர். அவர் பூமியை நான்கு புறத்திலும் வியாபித்து அநந்தயோஜனப்ரமாணமான ப்ரம்ஹாண்டத்தை ஆக்ரமித்தார்.]

"ஸஹஸ்ரசீர்ஷா இத்யத்ர ஸஹஸ்ரோநந்தவாசக:
அநந்தயோஜநம் ப்ராஹ த₃சாங்கு₃லவசஸ் தத₂ா
தஸ்ய ப்ரதமயா விஷ்ணோர் தே₃சதோ வ்யாப்திருச்யதே"

["ஸஹஸ்ரசீர்ஷா" என்னுமிடத்தில் ஸஹஸ்ர சப்தம் அநந்தம் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது. தசாங்குல பதம் அநந்த யோஜனையைச் சொல்லுகிறது. புருஷஸூக்தத்தின் முதல் மந்திரத்தினால் விஷ்ணுவினுடைய ஸர்வதேசவ்யாப்தி சொல்லப்படுகிறது] என்று புருஷ ஸம்ஹிதையில் இந்த முதல் மந்திரத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது.

(ஸஹஸ்ரசீர்ஷா) கணக்கற்ற தலைகளை உடையவன். இங்கு தலை என்பது எல்லா அங்கங்களையும் காட்டுகிறது. மெய், வாய், கண்,

http://acharya.org

மூக்கு, செவி என்னும் ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்தையும் உடைத்தா யிருப்பதால் தலை முதலில் எடுக்கப்படுகிறது. இங்கு சீர்ஷசப்தம் ஜ்ஞானேந்த்ரியங்களால் உண்டாகும் ஜ்ஞானத்தைக் குறிக்கிறது. ப்ராம்ஹணத்தில் "போத்₄ந மநந ச்ரவண ஸ்பர்சந த₃ர்சந ரஸந க்₄ராண ஜ்ஞாநாநி ச்ருதாநி ப₄வந்தீத்யத: சிர:" [அறிதல், நினைத் தல், கேட்பது, ஸ்பர்சம், பார்ப்பது, ருசிப்பது, முகர்வது என்னும் ஞானங்கள் இதனால் அறியப்படுவதால் இது சிரஸ் என்று சொல்லப் படுகிறது] என்று 'சிரஸ்' என்னும் சப்தத்தின் பொருள் சொல்லப் பட்டிருக்கிறதன்றோ. இதனால் அபரிமிதமான அறிவையுடையவன் அநந்தன் என்று அறிவிக்கப்பட்டதாயிற்று. இதையே (ஸஹஸ்ராக்ஷ:) என்று விவரித்திருக்கிறது வேதம். "ஸர்வேந்த்₃ரியாணாம் நயநம் ப்ரதா₄நம்" என்பதினால் கண் எடுக்கப்பட்டது. இவ்விடத் தில் 'கண்' என்னும் பதம் ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்களையும்காட்டி புருஷோத்தமன் அநந்தமான ஜ்ஞானத்தையுடையவன் என்று விளக்குகிறது. (ஸஹஸ்ரபாத்) அளவற்ற திருவடிகளை உடையவன். இங்கு 'பாத்' என்னும் சப்தம் ஐந்து கர்மேந்த்ரியங்களையும் காட்டு வதன்மூலம் அளவற்ற சக்தியையுடையவன் அச்யுதன் என்று அறி விக்கிறது. இவ்விரண்டு பதங்களாலும் அளவற்ற ஞானசக்திகளை யுடையவன் பகவான் என்று உரைக்கப்பட்டது.

"பராஸ்ய சக்திர் விவிதை₄வ ச்ரூயதே
ஸ்வாபா₄விகீ ஜ்ஞாநப₃லக்ரியாச"

[ஸர்வேச்வரனுடைய சக்தியும், ஜ்ஞானமும், பலமும், செய்கைகளும், ஸ்வாபாவிகமானதாகவும், பலபடிப்பட்டதாகவும், மேலானதாகவும் சொல்லப்படுகிறது.] என்றல்லவோ உபனிஷத் உத்கோஷித்தது.

(ஸஹஸ்ரசீர்ஷா...) இதற்கு வேறு வகையாகவும் பொருள் கொள்ளலாம். ஸகலப்ராணிகளடங்கிய ப்ரம்மாண்டம் நாராயண னுக்கு சரீரமானதினால் இதற்குள்ளடங்கிய பிராணிகளுடைய தலை, கண், கால் முதலியவை இவனுடையவையே என்னத் தட்டில்லை. இவ்விடத்தில் வித்யாரண்ய பாஷ்யத்திலும் ஸர்வ ப்ராணிகளும் இவருடைய சரீரத்தில் அடங்கினபடியால் அந்த அவயவங்களெல் லாம் இவருடைய அவயவங்களாகும் என்று காணப்படுகிறது. ஸகல ப்ராணிகளுடைய அவயவங்களையும் தனக்கு சேஷமாக உடையவன் பகவான் எனப்படுகிறது. அதனாலேயே அவன் ஹ்ருஷீகேசன் (இந்த்ரியங்களை நியமிப்பவன்) எனப்படுகிறான். தலையால் வணங் கப்படவேண்டியவன் அவனே. வாயினால் பேசத்தக்கவனும்

http://acharya.org

அவனே. புத்தியினால் அறியப்படவேண்டியவன் ஹரியே. கண்களால் பார்க்கத்தக்கவனும் அவனே. செவிகளால் கேட்கவேண்டியது அவனுடைய கீர்த்திகளையே. (ஸஹஸ்ரபாத்) என்று நம்முடைய கர்மேந்த்ரியங்களும் அவனுடைய கைங்கர்யம் செய்ய ஏற்பட்டவைகள் என்று உணர்த்தப்படுகிறது. இவ்விடத்தில்,

''வாய் அவனையல்லது வாழ்த்தாது கை உலகம்
தாயவனையல்லது தாம் தொழா---பேய்முலைநஞ்சு
ஊணாக உண்டான் உருவோடு பேரல்லால்
காணா கண் கேளா செவி.

என்ற பாசுரம் அநுஸந்திக்கத்தக்கது. (ஸஹஸ்ரசீர்ஷா) முதலிய பதங்கள் அர்ஜுனனுக்கு விச்வரூபதர்சனத்தின்போது காட்டப்பட்டதுபோன்ற அஸாதாரணமான விக்ரஹத்தை வர்ணிக்கின்றன என்றும் கொள்ளலாம். ஆழ்வாரும் இதையே,

''தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்!
துணைமலர்க் கண்களாயிரத்தாய்! தாள்களாயிரத்தாய்!''
என்று வர்ணித்தாரன்றோ.

(புருஷ:) இதில் சொல்லப்படும் புருஷன் யார்? இது எந்த தெய்வத்தையும் குறிக்கலாமே. புருஷ: என்பது ஸாமாந்யசப்தமல்லவா? என்று சிலர் கேட்கிறார்கள்.

''ப$_4$க$_3$வாநிதி சப்தோ$_3$யம் ததா$_2$ புருஷ இத்யபி।
நிருபாதீ$_4$ ச வர்த்தேதே வாஸுதே$_3$வே ஸநாதநே ॥
ஸ ஏவ வாஸுதே$_3$வோஸௌ ஸாக்ஷாத் புருஷ உச்யதே।
ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம் ஜக$_3$த் ப்$_3$ரஹ்மபுரஸ்ஸரம் ॥''

[பகவான், புருஷன் என்னும் இந்த இரு சப்தங்களும் இயற்கையாகவே ஸநாதனனான வாஸுதேவனைக் குறிக்கின்றன. அந்த வாஸுதேவனே ஸாக்ஷாத் புருஷனாகச் சொல்லப்படுகிறான். பிரமனை முன்னிட்ட மற்ற ஸகல ப்ராணிகளும் ஸ்த்ரீப்ராயர்களே.] என்று பாத்ம புராணத்தில் பேசப்பட்டிருக்கிறது. பகவான், புருஷன் என்னும் இவ்விரு பதங்களும் முக்யமாக நாராயணனையே குறிக்கும். அவன் ஒருவனே புருஷன். மற்றவர்கள் ஸ்த்ரீப்ராயர்களே. ஸ்த்ரீ புருஷனை விட்டால் ஜாரஸ்த்ரீயாவதுபோல் இதர தெய்வங்களைத் தொழும் ஜீவனும் அப்படியே கருதப்படுகிறான். புருஷன் என்றால் ஸகல சேதநாசேதநங்களிலும் வியாபித்து

நிறைந்து நிற்பவன் என்று பொருள். இது நாராயணனுக்கே அஸாதாரணமான குணம். ஸுபாலோபநிஷத்தில் ''ஸஹஸ்ர சீர்ஷா...'' என்னும் மந்த்ரத்தைப் பரமபுருஷனைக் குறித்து ப்ர யோகம் செய்து அவனே ஸர்வபூதாந்தராத்மாவான நாராயணன் என்று நிர்ணயம் செய்திருப்பதால் இந்தப் புருஷ சப்தம் நாரா யணனையே குறிக்கிறது என்பது ஸர்வவேதாந்தப்ரத்யய ந்யாயப்படி ஸித்திக்கிறது. கீதாசார்யனும்,

''யஸ்மாத் க்ஷரமதீதோஹம் அக்ஷராதபி சோத்தம:।
தஸ்மாத் வேதே₃ ச லோகே ச ப்ரதி₂த: புருஷோத்தம:॥''

[ஜ்ஞானத்தில் ஏற்றத்தாழ்வுகளுள்ள ஸம்ஸாரி புருஷனை அதிக்ர மித்தவனாகவும், ஜ்ஞானத்தில் ஸங்கோசவிகாஸமற்றவனை முக் தனைக்காட்டிலும் மேலானவனாகவும் நான் இருப்பதால் லோகத் திலும், வேதத்திலும் புருஷோத்தமன் என்று பிரஸித்தி பெற்றிருக் கிறேன்] என்று கீதையில் அருளிச்செய்திருக்கிறார்.

(ஸ:) இப்படி வேதத்தில் ப்ரஸித்திபெற்றவரான அந்த நாரா யணன். (பூமிம்) 'பூ₄மிர் பூ₄ம்நா' என்று பூஸூக்தத்தில் சொல்லிய படி பரப்பை உடைத்தாயிருப்பதால் பூமி எனப்படுகிறது. இங்கு பூமி என்பதினால் பதினாலு புவனங்களும் சொல்லப்படுகின்றன. (விச்வதோ வ்ருத்வா...) இப்படிப்பட்ட கீழேழு மேலேழு லோகங் களையும் நான்குபுறமும் வியாபித்து, அவருடைய அங்குலத்தில் பத்து அங்குலம் ப்ரமாணமுள்ள ப்ரஹ்மாண்டத்தை ஆக்ரமித்தார். இந்த ப்ரஹ்மாண்டம் அவருடைய ஸ்வரூபத்தில் ஒரு மூலையில் அடங்கி விட்டது என்று பொருள். (தசாங்குலம்) என்பதற்கு விஷ்ணுசித்தா சாரியர் 'த₃சகு₃ணம்' என்று பொருள்கூறி மஹாப்ரமாணமான இந்த அண்டம் என்று விளக்கியிருக்கிறார். புருஷஸம்ஹிதையிலும் இந்த அர்த்தமே ஆதரிக்கப்பட்டது. மாத்வர் பிரஹ்மா முதலிய ஜீவர் களுடைய பத்தங்குலம் அளவுடைய ஹ்ருதயகமலத்தில் அந்தர் யாமியாயிருக்கிறார் என்று அர்த்தம் செய்தார். நாபிக்கு மேல் பத்தங் குலத்திற்கு மேற்பட்டிருக்கிற ஹ்ருதயத்தில் வஸிக்கிறார் என்றார் மஹீதரர். வித்யாரண்யர் பத்து என்பதற்கு அநேகம் என்று பொருள்கொண்டு அண்டத்திற்கு வெளியிலும் வியாபித்திருந்தார் என்று சொல்லியிருக்கிறார்.

''யோயமுக்த: ஸ புருஷ: நாமரூபஜ்ஞாநகோசரம் ஸம்ஸாரிணாம் அதிது₃ர்ஜ்ஞேயம் விஷயம் விஹாய க்லேசாதி₃பி₄: ஸங்க்லிஷ்ட-

http://acharya.org

தேவாதிஸஞ்ஜிஹீர்ஷயா ஸஹஸ்ரகலாவயவகல்யாணம் த்ருஷ்ட-மாத்ரேண மோக்ஷதம் வேஷம் ஆதத்தே. தேந வேஷேண பூம்யாதி லோகம் வ்யாப்ய அநந்தயோஜநம் அத்யதிஷ்டத்." [இங்கு சொல்லப்பட்ட புருஷன் நாமரூபங்களை அறியும் அறிவிற்கு எட்டாததும், ஸம்ஸாரிகளுக்கு மிகவும் அறியமுடியாததுமான பகவத்ஸ்வரூபத்தை விட்டு க்லேசம் முதலியவைகளால் வருந்தும் தேவமநுஷ்யாதிகளைக் காப்பாற்றுவதற்காக ஸஹஸ்ரகலைகளுள்ள அவயவங்களால் அழகாயிருப்பதும், பார்த்தவுடன் மோக்ஷத்தைத்தருவதுமான வேஷத்தை எடுத்துக்கொண்டார். அந்த வேஷத்துடன் பூம்யாதிலோகங்களை வியாபித்து அநந்தயோஜனமுள்ள அண்டத்தை ஆக்ரமித்தார்.] என்று இந்த முதல் ருக்கின் அர்த்தம் முத்கலோபனிஷத்தில் அழகாக வெளியிடப்பட்டிருக்கிறது.

இதனால் பரமபுருஷனுக்கு தேசபரிச்சேதம் (தேசத்தினால் அளவுபட்டிருத்தல்) இல்லை என்று சொல்லப்பட்டது. அங்கும் இங்கும் எங்கும் பரந்துளான் புருஷோத்தமன். இங்கு ஸர்வவ்யாபகத்வத்தைக்கொண்டு இவன் விஷ்ணுவே என்று காட்டப்பட்டது. "விசதீதி விஷ்ணு:" என்று எங்கும் நுழைந்திருப்பதால் விஷ்ணு எனப்படுகிறானன்றோ. இவ்விடத்தில் பகவான் ஜ்ஞானம், சக்தி முதலிய கல்யாணகுணங்களை உடையவனென்றும், ஸகலலோகங்களையும் வியாபித்து அவைகளை சரீரமாகக்கொண்டிருக்கிறான் என்றும், அஸாதாரணமான அப்ராக்ருதசரீரத்தை உடையவனென்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், "பூமி பொய்" என்றும், "குணமில்லை ரூபமில்லை" என்றும் சொல்லும் அத்வைதவாதங்கள் அடியோடு அகற்றப்பட்டன.

2. புருஷ ஏவேதம் ஸர்வம், யத் பூதம் யச்ச பவ்யம்
உதாம்ருதத்வஸ்யேசாந:, யதந்நேநாதிரோஹதி.

[எந்த ஜகத்தானது முன் கல்பத்திலிருந்ததோ, எந்த ஜகத்தானது பின்வரும் கல்பத்தில் உண்டாகப்போகிறதோ, எது இந்தக் கல்பத்திலிருக்கிறதோ, எந்த ஜகத்தானது அந்நத்தினால் மறையாமலிருக்கிறதோ இந்த ஸமஸ்தமான ஜகத்தும் புருஷனாகிற நாராயணனே. மேலும், மோக்ஷத்துக்கு ப்ரபுவும் ஸ்ரீமந் நாராயணனே.]

"த்விதீயயா சாஸ்ய விஷ்ணோ: காலதோ வ்யாப்திருச்யதே"

http://acharya.org

[இரண்டாவது மந்த்ரத்தினுல் இந்த விஷ்ணுவுக்கு ஸர்வகாலத்திலும் வ்யாப்தி சொல்லப்பட்டது.] என்று இந்த ருக்கின் அர்த்தம் புருஷஸம்ஹிதையில் ஸங்க்ரஹிக்கப்பட்டது.

(புருஷ......) 'போகின்றகாலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள்' எனப்படும் மூன்று காலங்களிலும் இருக்கும் வஸ்துக்களெல்லாம் புருஷனே என்று சொல்லப்படுகிறது. 'முன் மந்த்ரத்தில் பரமபுருஷன் எங்கும் வியாபித்திருக்கிறுன் என்று சொல்லப்பட்டது. ஆகாசம்போல் வியாபித்திருப்பதுமட்டுமல்ல; எல்லாவற்றையும் சரீரமாகவும் கொண்டிருக்கிறுன் பரமாத்மா என்பதை இது காட்டுகிறது.' என்று விஷ்ணுசித்தர் வியாக்யானம் செய்தார். 'இதம் ஸர்வம்' என்றதினுல் புருஷோத்தமனுக்கு வஸ்துபரிச்சேதம் (வஸ்துவினுல் அளவுபட்டிருத்தல்) இல்லை என்று காட்டப்பட்டது. அவனில்லாத வஸ்துவே இல்லையன்றே. "யத்பூதம்...பவ்யம்" என்பதினுல் காலபரிச்சேதமில்லாதவன கேசவன் என்றுகாட்டப்பட்டது. ஆதிமத்யாந்தரஹிதனன்றே அநந்தன். 'முன் காலத்திலிருந்தான்; இப்பொழுதில்லை.' முதலிய குறைகள் அவனைப்பற்றிச் சொல்ல முடியாது. 'எல்லாம் அவன்' என்பதினுல் 'ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்று தெரிவிக்கப்படுகிறது. அதனுல் மற்றவைகளில்லை என்று ஏற்படாது. மற்றவைகள் அவனுக்கு சரீரமென்றும், அவைகளுக்கு அவன் அந்தர்யாமி என்றுமே ஏற்படும். சரீரத்திற்குப் பெயரான கிருஷ்ணன், ஸ்ரீநிவாஸன் முதலியவைகள் ஆத்மாவையும் குறிக்கின்றன. அம்மாதிரியே இவ்வுலகத்தையெல்லாம் சரீரமாகக் கொண்ட புருஷனை 'எல்லாம் அவனே' என்று சொல்வது பொருந்தும். 'இந்தக் குடம் கருப்பு' என்று சொன்னுல் 'குடம்' என்று சொல்லப்படும் வஸ்துவும் 'கருப்பு' என்று சொல்லப்படும் வஸ்துவும் ஒன்ருகிவிடுமோ? கருப்பு நிறமானது பிரிக்கமுடியாதபடி குடத்தில் ஒன்றி நிற்கிறது என்றே ஏற்படும். அம்மாதிரியே 'புருஷனே இவ்வுலகம்' என்று சொன்னுல் இவ்வுலகமானது பரமாத்மாவை விட்டுப் பிரிக்கமுடியாதபடி அவனுடன் ஒடுங்கி நிற்கிறது என்றே பொருள்படும். இவ்விஷயத்தை "அந்யச்ச ராஜந் ஸ பர: ததாந்ய: பஞ்சவிம்சக: தத்ஸ்தத்வாதநுபச்யந்தி ஹ்யேக ஏவேதி ஸாதவ:" [ராஜனே! பரமாத்மா வேருனவன். இருபத்தைந்தாவது தத்வமான ஜீவன் வேருனவன். அவனுக்குள் அந்தர்யாமியாக இருப்பதால், ஸாதுக்கள் ஒருவனென்றே நினைக்கிருர்கள்.] என்று வ்யாஸரால் மோக்ஷதர்மத்தில் சொல்லப்பட்டது. கீதையில் அர்ஜுனனும் "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" [நீ எல்லாவற்றினுள்ளும்

http://acharya.org

நிறைந்திருப்பதால் எல்லாமாக இருக்கிருய்-] என்று கண்ணனைத் துதித்தான். இங்கும் புருஷோத்தமன் எங்கும் வியாபித்திருக்கிருன் என்று சொன்னபின்பல்லவோ 'புருஷனே எல்லாம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆழ்வாரும் "அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே" என்றும், "வருங்காலம் நிகழ்காலம் கழிகாலமாய் உலகை ஒருங்காக அளிப்பாய்" என்றும் பாடியிருக்கிருர். (யத் அந்நேந அதிரோஹதி) 'எந்த உலகமானது அந்நத்திஞல் நசிக்காமலிருக்கிறதோ' என்று அர்த்தம். உலகத்திற்கு ஆஹாரத்தை அளித்து அவைகளை அழியாமல் 'காக்கும் இயல்வினன் கண்ணபெருமான்'. இங்கு 'அந்நம்' என்பது இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் விஷயங்களைக் குறிக்கும். தர்மார்த்த காமங்களாகிற இஹலோகபுருஷார்த்தங்களைக் கொடுப்பவன் பகவான் என்று சொல்லப்படுகிறது. (உதாம்ருதத்வஸ்ய ஈசாந:) மோக்ஷபுருஷார்த்தத்தையும் கொடுப்பவன் பகவானே என்று சொல்லப்படுகிறது. இது பகவானுடைய அஸாதாரணமான லக்ஷணம். இதரபுருஷார்த்தங்களைக் கொடுப்பதற்குப் பலதேவதைகளை நாட்டிவைத்திருக்கிருன் நாராயணன். ஆனுல் மோக்ஷத்தையும் கொடுப்பவன் முகுந்தனே. 'அம்ருதத்வம் அச்நுதே' என்று வேதங்களில் கோஷிக்கப்பட்ட மோக்ஷத்திற்கு ப்ரபு நாராயணனே. வித்யாரண்யர் "முக்காலங்களிலும் உள்ள ஜகத் எல்லாம் விராட்புருஷனே. எல்லாக்காலங்களிலுமுள்ள ஸகலப்ராணிகளுடைய தேஹங்களும் விராட்புருஷனுடைய அவயவங்களே. ப்ரஹ்மா, இந்திரன் முதலியவர்களும் அவரை ஆச்ரயித்தே தங்களுடைய ஸ்தானங்களையடைகிருர்கள்" என்று அர்த்தம் செய்தார். மேலும், "தங்கக்கட்டி, குண்டலம் முதலிய ஆபரணமாக ஆனுலும், அந்தக் குண்டலம் முதலியவை உண்டாவதற்கு முன்னும் அழிந்ததற்குப்பின்னும் காணப்படாமையால் வாஸ்தவமாகாது. தங்கம் எப்போதும் காணப்படுவதால் உண்மையானதாகக் கொள்கிருேம். அதுபோல் இந்த உலகமும் முன் இல்லாமலிருந்து இப்போது தோன்றி சில நாளைக்குப்பின் அழிந்து போகிறபடியால் உண்மையல்ல. விராட்புருஷனுடைய ஸ்வரூபம் எப்போதுமிருப்பதால் உண்மையானது. அவரே ஜீவாத்மாக்களுடைய புண்யபாபங்களுக்குத் தகுந்தபடி அவர்களுக்குப் பலன் கொடுப்பதற்காகத் தன்னுடைய நிஜஸ்வரூபத்தை விட்டு இந்த ஜகத்ரூபமாய் ஆகியிருக்கிருர்." என்றும் சொல்லியிருக்கிருர். இது சரியன்று. உண்டாவதற்கு முன்னும் அழிந்ததற்குப் பின்னும் காணப்படாததால் உலகம் மாறுபாட்டையுடையது என்றும்,

http://acharya.org

அநித்யமானது (நிலையற்றது) என்றும் ஏற்படுமே யொழியப் பொய்யானது என்று ஏற்படாது. இந்த ருக்கில் 'இதம்' என்று சேதநாசேதனங்களடங்கிய ஜகத்தைக்காட்டுகிறது. புருஷனென்று பரமாத்மா சொல்லப்படுகிருன். ஜகத் பொய்யான வஸ்துவானல் பொய்யான வஸ்துவைப் புருஷன் என்று சொல்லுவது அர்த்தமற்ற பேச்சு. 'இதம்' என்றும், 'புருஷ:' என்றும் தனித்தனியாக எடுக்கப் பட்ட இரண்டும் ஸத்யமானது என்றே ஏற்படும். 'யத் பூதம்......' என்று மூன்று காலங்களும் குறிக்கப்படுவதால் காலம் என்னும் தத்வமும் உண்மையானது என்று உணர்த்தப்படுகிறது. அம்ரு தத்வமென்றும் அதற்கு ஈசானனென்றும் இரண்டு சொல்லப்படு கின்றன. அம்ருதத்வம் (மோக்ஷம்) என்று ஒன்றிருந்தால் அதை அடைகிற வஸ்துவும் இருந்தேயாகவேண்டும். ஜகத் பொய்யானல் 'அது அந்நத்திஞல் நாசமடையாமலிருக்கிறது' என்பது அஸம்பா விதம். ஆகையால் இங்கு அத்வைதவாதத்திற்கு அணுவளவும் அவகாசமில்லை. இத்துடன் அத்வைதமஹாரண்யமான வித்யா ரண்யருடைய வாதங்களின் கண்டனங்களை இங்கு நிறுத்திக் கொள்ளுகிறோம், இந்த மந்த்ரத்தின் அர்த்தம்

''புருஷோ நாராயண: பூ₄தம் ப₄வ்யம் ப₄விஷ்யச்ச ஆஸீத்
ஸ ஏஷ ஸர்வேஷாம் மோக்ஷத₃ச்ச ஆஸீத்''

[புருஷனுகிற நாராயணன் சென்றவைகளும், வருமவைகளும், இருப்பவைகளுமாக ஆனுர். அவர் எல்லோருக்கும் மோக்ஷத்தைக் கொடுப்பவராகவும் ஆனுர்.] என்று முத்₃க₃லோபனிஷத்தில் சொல்லப்பட்டது.

3. ஏதாவாந் அஸ்ய மஹிமா, அதோ ஜ்யாயாம்ச்ச பூருஷ:
பாதோ₃ஸ்ய விச்வா பூ₄தாநி, த்ரிபாத₃ஸ்யாம்ருதம் தி₃வி.

[இந்தப் புருஷனுடைய பெருமை இப்பேர்ப்பட்டது. ஆகையால் புருஷோத்தமன் மேலானவன். எல்லா பூதங்களும் இவனுடைய ஒருபாகம். போக்யமாயிருப்பதான மூன்றுபாகம் இவனுடைய பரம பதத்திலிருக்கிறது.]

''ஏதாவாநிதி மந்த்ரேண வைப₄வம் கதி₂தம் ஹரே:''

['ஏதாவாந்........' என்னும் மந்த்ரத்தினல் ஹரியினுடைய பெருமை பேசப்பட்டது] என்று புருஷஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

http://acharya.org

(ஏதாவாந்......) இந்தப் புருஷோத்தமன் தேசத்திலும், காலத்திலும், வஸ்துவிலும் அளவிடமுடியாதவன். போக மோக்ஷங்களைத் தருபவன் முகுந்தன். இப்படிப்பட்டது அவனுடைய மஹிமை. ஆகையால் அவனே மேலானவன். (ஏதாவாந் அஸ்ய மஹிமா?...) என்று வைத்துக்கொண்டு "இவ்வளவுதானோ அவன் மஹிமை? இதைக்காட்டிலும் மேலானவனன்றோ புருஷன்" என்றும் பொருள்கொள்ளலாம். "ஸோ அங்க$_3$ வேத$_3$ யதி$_3$வா ந வேத$_3$" [(தன் பெருமையை, அவனே அறிவனோ? அறியானோ?] என்றது வேதம். "தனக்கும் தன் தன்மை அறிவரியானை" என்றார் நம்மாழ்வார். "யஸ்யாமதம் தஸ்ய மதம்" [எவன் பரமாத்மாவை அளவிட்டு அறியமுடியாதவனென்று நினைக்கிறானோ அவனே அறிந்தவனா கிறான்.] என்று மறைகள் முறையிட்டன. ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும், 'ஸஹஸ்ரசீர்ஷா' வான எம்பெருமானாலும் அப் பெருமையைப் பேசமுடியாது. எவ்வளவு வர்ணித்தாலும் அதற்கும் மேலானவனாகவே இருப்பான் அநந்தன்.

(பாதோஸ்ய......)இவ்வுலகிலிருப்பவைகளெல்லாம் இவனுடைய ஏகதேசத்தில் அடங்கிவிடுகின்றன.

"யஸ்யாயுதாயுதாம்சாம்சே விச்வசக்திரியம் ஸ்தி$_2$தா"

[எந்தப் பரமாத்மாவினுடைய பல்லாயிரத்தில் ஒரு பாகத்தில் இந்த லீலாவிபூதியானது அடங்கிவிடுகிறதோ........] என்று பராசரர் விஷ்ணுபுராணத்தில் விளக்கினார். (த்ரிபாத்) அளவற்றதான இந்த லீலாவிபூதியைக்காட்டிலும் பன் மடங்கு அளவற்றது நித்யவிபூதி. இங்கு 'மூன்று' என்பது 'அநந்தம்' என்பதைக் குறிக்கும். இதனாலேயே பரமபதத்தை 'த்ரிபாத்விபூதி' என்கிறோம். (அம்ருதம்) அழியாதது. "நச புநராவர்த்ததே" [மோக்ஷமடைந்தவன் மறுபடி திரும்பிவருவதில்லை.]என்று வேதம் கோஷித்தது. 'புனைக் கொடுக் கிலும் போகவொட்டான்' என்றார் ஆழ்வார். ஏறவிட்டு ஏணி வாங்குபவனன்றோ எம்பெருமான். இந்தப் பரமபதத்திற்கும் அதி லுள்ளார்க்கும் அழிவு கிடையாது. 'இனிமையானது'என்றும்பொருள் கொள்ளலாம். "கனியைக் கரும்பினின் சாற்றைக் கட்டியைத் தேனை அமுதை" எனப்படும் ஆராவமுதாகிய அச்யுதனை அனுப விக்கும் ப்ரதேசமாகையால் "அம்ருதம்" எனப்படுகிறது. "ஸோச் நுதே ஸர்வாந் காமாந்" என்கிறபடி பகவத்குணங்களை அனுபவித்து ப்ரஹ்மானந்தமடையும் இடமன்றோ அது. (திவி) ப்ரகாசிக்கும்படி யான பரமபதத்தில் இருக்கிறது.

http://acharya.org

"அத்யர்காநலதீ₃ப்தம் தத் ஸ்தா₂நம் விஷ்ணோர் மஹாத்மந:"

[மஹாத்மாவான விஷ்ணுவினுடைய ஸ்தாநமானது ஸூர்யன், அக்னி முதலியவர்களின் ஒளியை அதிக்ரமித்த தேஜஸ்ஸை உடையது.] என்றல்லவோ பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வித்யாரண்யர் இதற்கு பாஷ்யம் செய்யும்போது மஹிமை என்றால் ஸாமர்த்யம் என்றும் ஆகையால் இது வாஸ்தவமன்று என்றும் சொல்லியிருக்கிறார். அப்படியென்றால் இது இந்த்ரஜாலமென்றே ஏற்படும். இது ஸாஹஸமேயொழிய வேறல்ல. 'மஹிமை' என்பது பெருமையைக் காட்டுகிறது. "ந தத்ஸமச்ச அப்₄யதி₄கச்ச த்₃ருச்யதே" என்கிறபடி ஒப்பாரும் மிக்காருமற்றவன் மாதவன் என்றே பொருள்படும். அவனைவிடத் தாழ்ந்த வஸ்துக்களில்லாவிடில் பெருமையே ஏற்படாது. பெருமையென்று சொன்னாலும் கேலிக்கூத்தாகும். பெருமையும் சிறுமையும் ஒன்றையொன்று அபேக்ஷித்திருக்கும் வார்த்தைகளன்றோ. மேலும், பகவான் உபயவிபூதி நாயகன் என்று சொல்லப்பட்டபடியால் அத்வைத வாதத்திற்குச் சிறிதும் இங்கு இடமில்லை.

"ஸச ஸர்வஸ்மாந்மஹிம்நோ ஜ்யாயாந்.
தஸ்மாந்ந கோபி ஜ்யாயாந்"

[அவன் எல்லா மஹிமைகளைக்காட்டிலும் உயர்ந்தவன். அவனைக் காட்டிலும் உயர்ந்தவனில்லை.] என்று முத்கலோபனிஷத்தில் இந்த மந்திரத்தின் பொருள் உரைக்கப்பட்டது.

4. த்ரிபாதூ₃ர்த்₄வ உதை₃த் புருஷ: பாதோ₃ஸ்யேஹாப₄வாத்புந:
தததோ விஷ்வங் வ்யக்ராமத் ஸாசநாநசநே அபி₄.

[பரமபதத்திலிருக்கும் பரமபுருஷன் மூன்று அவதாரத்தை உடையவனாகி ஸங்கல்பித்தார் இவருடைய ஒரு அவதாரமான (அநிருத்தன்) இவ்வுலகத்தில் அவதரித்தார். அதற்குப்பின் எல்லாப்பக்கத்திலும் ஜீவன் ஜடம் இவர்களைக் குறித்து (அவதாரம் செய்வதன் மூலம்) வியாபித்தார்.]

"த்ரிபாதி₃த்₃யநயா ப்ரோக்தம் அநிருத்₃த₄ஸ்ய வைப₄வம்"

['த்ரிபாத்...' என்னும் மந்த்ரத்தில் அநிருத்த நாராயணனுடைய வைபவம் விளக்கப்படுகிறது.] என்று புருஷஸம்ஹிதை சொல்லிற்று.

http://acharya.org

(த்ரிபாத்......) பரமபதத்திலிருக்கும் பரவாஸுதேவன் ஸங்கர்ஷணன், அநிருத்தன், ப்ரத்யும்நன் என்னும் மூன்று வ்யூஹங்களை உடையவராயிருக்கிறார். இந்த வ்யூஹங்களைப்பற்றிப் பாஞ்சராத்ரத்தில் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் விசேஷமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (உதைத்) 'இவ்வுலகையெல்லாம் ரக்ஷிக்கக்கடவேன்' என்று ஸங்கல்பித்தார். (அஸ்ய பாத:) இவருடைய ஒரு அவதாரமான அநிருத்தன். (இஹ அபவாத்புந:) மறுபடியும் இங்கு விஷ்ணுவாகத் திருப்பாற்கடலில் அவதரித்தார். (ததோ...வ்யக்ராமத்) அதன் பிறகு அயோத்தி த்வாரகை முதலிய திவ்யநகரங்களில் ராமக்ருஷ்ணாதிகளாக அவதரித்தார். அவைகளுக்கும் பிற்பாடரானவர்களை உய்விப்பதற்காகத் திருவரங்கம், திருப்பதி முதலிய திவ்யதேசங்களிலும், கிராமங்கள்தோறும், பக்தர்களுடைய க்ருஹங்கள்தோறும் அர்ச்சாமூர்த்தியாக அவதரித்தார். 'விஷ்வக்' என்றதால் எண்ணிறந்த இடங்களில் அவதாரம் செய்திருப்பது தோற்றுகிறது. ஸ்வரூபவ்யாப்தி முதல் மந்த்ரத்திலேயே சொல்லப்பட்டதால் இங்கு 'வ்யக்ராமத்' என்பதற்கு அவதாரம்செய்து வியாபித்தார் என்றே பொருள்கொள்ளவேண்டும். இவர் எதற்காக இப்படி அவதாரம் செய்யவேண்டும் எனில்: (ஸாசநாநசநே அபி) உணவருந்துபவர்களான தேவர், மனுஷ்யர் முதலியவர்களையும், உணவருந்தாமல் பாறை முதலியவையாய்க்கிடக்கும் சேதனர்களையும் உய்விப்பதற்கே இப்படிப் படாதனபடுகிறான் பரமபுருஷன் என்று சொல்லப்படுகிறது. ''உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்! இமையோர் தலைவா!'' என்றார் ஆழ்வார். ''அஜாயமாநோ பஹுதா விஜாயதே'' [பிறப்பிலியான பகவான் பலதடவை பிறக்கிறான்] என்றது வேதம். 'புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே' நல்லகதிக்கு அழைத்துச் செல்லவன்றே அவதாரம் செய்கிறான் அச்யுதன். சேதநாசேதநங்களெல்லாம் அவனுடைய உடைமைகளாயிற்றே. உடைமையைப்பற்றிய கவலை உடையவனுக்கல்லவோ உண்டு. விபவாவதாரங்களைப்பற்றி ராமாயணம், பாரதம், பாகவதம் முதலியவைகளில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அர்ச்சாவதாரமாஹாத்ம்யங்கள் பாஞ்சராத்ரவைகானஸ ஸம்ஹிதைகளிலும், வாராஹம், ப்ரஹ்மாண்டம் முதலிய புராணங்களிலும் கீர்த்திக்கப்பட்டிருக்கின்றன. ஆழ்வார்கள் அருளிச்செயல்களிலும் அனுபவிக்கிறோம்.

இப்படி அவதாரம் செய்தது ஸ்ரீமந் நாராயணனே. வேறு தெய்வங்களல்ல. ''பரித்ராணாய ஸாதூநாம்'' என்கிறபடி லோக

http://acharya.org

ஸம்ரக்ஷணத்திற்காகப் பல பிறப்புகளெடுத்திருக்கிறன் பரந்தாமன். உலகத்தைக் காப்பதற்காக மற்ற தெய்வங்கள் அவதாரம் செய்த தில்லை. அவர்கள் அவதாரம் செய்ததாகச் சொல்லுவதும் அல்ப காரியங்களுக்கே. தாயில்லாப்பெண் ப்ரஸவவேதனைப்படும்போது தாயும் ஆகி 'தாயுமானவர்' என்று பெயர் பெற்றதாகச் சொல்லு கிறார்கள். இப்படிச் சில விருத்தாந்தங்கள் சொல்லப்படுகின்றன. அவதாரங்கள் செய்து மஹத்தான கீர்த்தியடைந்தவன் மாதவனே. வியூஹங்கள் தேவர்களுக்குக் கூப்பீடு கேட்குமிடங்கள். நம்மால் அணுகமுடியாதவை. விபவாவதாரங்களோ அக்காலத்திலிருந்த பாக்யவான்களுக்கே. ''புல்லாய்ச் சிலையாய்க் கிடந்திலமே கழல் தீண்டுகைக்கே'' என்றே நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. அவைகளைப்பற்றி இதிஹாஸ புராணங்களில் கேட்டே ஆநந்த மடைகிறோம். அவை ஒருகாலத்திலோடும் பெருக்காறு போன்றவை. அவற்றில் தேங்கின மடுப்போலே சொல்லப்பட்ட அர்ச்சாவதாரமும் வற்றிவிட்டதோ என்று தோன்றுகிறது. அவைகட்கு யாதொரு தீங் கும் ஏற்படாதென்று மனோரதித்திருந்தோம். அவைகளும் ஸமாப்தி யடைந்தனவோ என்றேங்கும்படி இருக்கிறது இப்போதிருக்கும் நிலைமை. கூரத்தாழ்வானையும் பட்டரையும்போல், கல்கிஅவதாரத்தை இப்போதே எடுத்துச் சீர்திருத்தும்படி ப்ரார்த்திப்பதைத்தவிர வேறு வழியில்லை.

5. தஸ்மாத்₃ விராட₃ஜாயத விராஜோ அதி₄பூருஷ:
ஸ ஜாதோ அத்யரிச்யத பச்சாத் பூ₄மிமதோ₂ புர:

[அந்த விஷ்ணுவிடமிருந்து ப்ரஹ்மாண்டம் உண்டாயிற்று. ப்ரஹ் மாண்டத்தில் பிரமன் உண்டானன். அந்த நான்முகன் பூமியைப் பக்கங்களிலும், கீழும், மேலும் ஆக்ரமித்தனன்.]

''தஸ்மாத்₃ விராடி₃த்யநயா பாத₃நாராயணாத் ஹரே:
ப்ரக்ருதே: புருஷஸ்யாபி ஸமுத்பத்தி: ப்ரத₃ர்சிதா''

[('தஸ்மாத் விராட்...' என்னும் மந்த்ரத்தினால் நாராயணனுடைய ஓர் அவதாரமான ஹரியினிடமிருந்து ப்ரக்ருதியினுடையவும், பிரம னுடையவும் உத்பத்தியானது காட்டப்பட்டது.] என்று புருஷஸம் ஹிதையில் இதன் பொருள் உரைக்கப்பட்டது. (தஸ்மாத்...) இப் படிப் பலவிதமான அவதாரங்களைச் செய்த மஹாவிஷ்ணுவிட மிருந்து முட்டை வடிவமான ஒரு அண்டம் உண்டாயிற்று.

"அயம் லோகஸ்து வை ஸம்ராட் அந்தரிக்ஷம் விராட் ஸ்ம்ருதம்" [இந்த லோகம் ஸம்ராட் என்றும், அந்தரிக்ஷம் விராட் என்றும் சொல்லப்படும்.] என்று வாயுபுராணத்தில் 'விராட்' என்பது அந்தரிக்ஷத்தை மட்டும் குறிப்பதாகச் சொல்லப்பட்டாலும் இங்கு எல்லா லோகங்களுமடங்கிய ப்ரஹ்மாண்டத்தையே குறிப்பதாகக் கொள்ளலாம். (விராஜோ...) அந்த அண்டத்தை ஆச்ரயித்து பிரமன் உண்டானன். அண்டத்திற்கு அதிகாரிபுருஷனுகிற பிரமன் உண்டானன் என்றும் பொருள்கொள்ளலாம். ஸுபாலோபனிஷத்தில் 'அண்டம் ஸமபவத்' [அண்டம் உண்டாயிற்று.] என்றும், 'மத்₄யே புருஷ:' [மத்தியில் பிரமனுகிற புருஷன் உண்டானன்.] என்றும் இவ் விஷயமே சொல்லப்பட்டபடியால் இப்படி ஸ்ருஷ்டித்தவன் நாராயணனே என்று அறிகிறோம். இதிலிருந்து அண்டஸ்ருஷ்டி, அநாதி புருஷனும், அகாரவாச்யனுமான அநந்தனுடையதே என்று அறிவிக்கப்படுகிறது. இப்படி உண்டாக்கப்படும் அண்டங்கள் ஒன்றிரண்டல்ல. ப்ரஹ்மாக்களும் அப்படியே. இதையே பெரியாழ்வாரும் 'அண்டக்குலத்துக்கதிபதியாகி' என்றார். பிரமன் தன்னைத்தான் ஸ்ருஷ்டிக்கவுமில்லை. தான் இருக்குமிடத்தை ஸ்ருஷ்டிக்கவுமில்லை. அண்டஸ்ருஷ்டி அவனுடைய சக்திக்கு மீறினது. ப்ரஜாஸ்ருஷ்டியே அவன் வல்லமைக்குட்பட்டது. அதுவும் அச்யுதனுடைய அருளினுலும், நியமனத்தினுலும் ஏற்படுவது. அப்படி ப்ரஜாஸ்ருஷ்டி பண்ணின காலத்தில் ப்ரஜைகள் 'இட்டகால் இட்டகைகளாய்' செயலற்று இருந்தன. பிறகு பிரமன் மாதவனிடம் முறையிட்டதாகவும், அவன் ஸர்வேந்த்ரியங்களிலும் வியாபித்து அவைகளுக்குக் கார்யம் செய்ய சக்தி கொடுத்ததாகவும் அறிகிறோம். முற்கூறிய பல உபனிஷத்துக்களிலும் சொல்லப்பட்ட நாராயணனே இப்படி ஸர்வவிதத்திலும் ஸ்ருஷ்டி செய்கிறுன் என்று ஏற்படுகிறது. (ஸ ஜாதோ...) அந்தப் பிரமன் பூமியை, நான்கு பக்கங்களிலும், கீழும், மேலும் வியாபித்ததாகச் சொல்லப்படுகிறது. 'பச்சாத்' என்றதனுல் எல்லா த்வீபங்களிலும், 'அத₄:' என்பதால் பாதாளத்திலும், 'புர:' என்பதினுல் ஸ்வர்க்கம் முதலியவைகளிலும் வியாபித்தான் என்று ஏற்படுகிறது. பிரமனுடைய ஸ்வரூபம் அணுவானபடியால் ஸ்வரூபத்தினுல் இவைகளை வியாபிக்க முடியாது. ஆகையால் ஞானம், சக்தி முதலிய குணங்களால் வியாபித்ததாகவே கொள்ள வேண்டும். தன்னுடைய ஞானத்தினுல் பதினுலு உலகங்களிலும் நடக்கவேண்டியவைகளை அறிந்து, சக்தியினுல் ஸ்ருஷ்டிசெய்வதால்

http://acharya.org

இவ்வண்டத்திலுள்ள எல்லா உலகங்களிலும் ஞானத்திலுைம், சக்தியினுலும் வியாபித்தான் என்றே கொள்ளவேண்டும். ஸ்ரீவிஷ்ணுசித்தர் 'தன்னுடைய பிரஜைகள் மூலமாக வியாபித்தான்' என்றும் பொருள்கொண்டார். பெரிய சரீரத்தினுல் வியாபித்த தாகவும் சொல்லலாம்.

"ஸ ச பாத₃நாராயண: ஜக₃த் ஸ்ரஷ்டும் ப்ரக்ருதிம் அஜநயத்"

[நாராயணனின் அவதாரமாகிய அந்த விஷ்ணு உலகை ஸ்ருஷ்டிப் பதற்காகப் பிரமனே ஸ்ருஷ்டித்தார்.] என்று இந்த மந்திரத்தின் பொருள் முத்கலோபனிஷத்தில் உரைக்கப்பட்டது. இங்கு 'ப்ரக்ருதி' சப்தம் ப்ரஜைகளுக்குக் காரணபூதனுன பிரமனைக் குறிக்கிறது.

6. யத்புருஷேண ஹவிஷா, தே₃வா யஜ்ஞமதந்வத
வஸந்தோஸ்யாஸீதா₃ஜ்யம், க்₃ரீஷ்ம இத்₄மச்₂ரத்₃த₄வி:

[தேவர்கள் (நித்யஸூரிகள்) சதுர்முகனுகிற ஹவிஸ்ஸினுல் ஸ்ருஷ்டியைக்குறித்துச் செய்த (தியானரூபமான) யாகத்திற்கு வஸந்தருது நெய்யாகவும், க்ரீஷ்மருது ஸமித்தாகவும், சரத்ருது புரோடாசமென்னும் ஹவிஸ்ஸாகவும் ஆயிற்று.]

"யத் புருஷேணேத்யநயா ஸ்ருஷ்டியஜ்ஞஸ் ஸமீரித."

['யத் புருஷேண' என்னும் மந்த்ரத்தினுல் ஸ்ருஷ்டிக்காகச் செய்யப்பட்ட யஜ்ஞம் சொல்லப்பட்டது.] என்று புருஷஸம் ஹிதை சொல்கிறது.

இந்த மந்த்ரத்திலிருந்து ஸ்ருஷ்டியைக் குறித்து யஜ்ஞம் செய்யப் பட்ட விஷயம் விவரிக்கப்படுகிறது. பிரமனுக்குப் பிறந்தபோதே ஸ்ருஷ்டிசக்தியில்லை என்பது இதிலிருந்து ஏற்படுகிறது. நான் முகனுக்குப் படைக்கும் சக்தி உண்டாவதற்காக எம்பெருமானைக் குறித்து யஜ்ஞம் செய்தார்கள் என்றும் ஏற்படுகிறது. (யத் புரு ஷேண...) இந்தப் பிரமனுகிற புருஷனை அந்த யஜ்ஞத்தில் ஹோமம் செய்யப்படும் பசுவாகக் (ஹவிஸ்ஸாக்) கல்பித்தனர் என்று ஏற்படு கிறது. யார் கல்பித்தார்கள்? (தேவா:) தேவர்கள். யார் அந்த தேவதைகள்? என்னும் விசாரணை உண்டாகிறது. இந்த்ராதிதேவர் களோவென்னில் ஸ்ருஷ்டிசக்தியை அடைந்த பின்பு பிரமனுல் படைக் கப்பட்ட கச்யபப்ரஜாபதிக்கு அதிதியிடம் பிறந்த புத்திரர்கள். ஆகை யால் இங்கு சொல்லப்பட்ட தேவர்கள் அவர்களாக இருக்கமுடியாது. ஆகையால் பிரகாசிக்கும்படியானதும் பரமாகாசமென்று புகழ் பெற்

றதுமான ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும் நித்யஸூரிகளே இங்கு சொல்லப்படும் தேவர்கள் என்று கொள்ளவேண்டும். (யத் யஜ்ஞம் அதந்வத அஸ்ய) பிரமனைப் பசுவாகக்கொண்டு எந்த தியானரூபமான யஜ்ஞத்தைச் செய்தார்களோ அந்த யஜ்ஞத்திற்கு. (வஸந்த: ஆஜ்யம் ஆஸீத்...) வஸந்தருதுவானது நெய்யாகவும், க்ரீஷ்மருது ஸமித்தாகவும், சரத்ருது புரோடாசம் எனப்படும் ஹவிஸ்ஸாகவும் ஆயிற்று. இந்த யஜ்ஞம் பரமபுருஷனைக் குறித்து ஸ்ருஷ்டிக்காகச் செய்யப்பட்ட தியானரூபமான யஜ்ஞமாகும். ஸ்ருஷ்டிக்குக் காலம் அவசியமாக வேண்டியபடியால் அது இம்மாதிரி உபகரணங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'புருஷேண ஹவிஷா' என்கிற இடத்தில் பிரமன் யாகபசுவாகிற ஹவிஸ் ஆகிறான் என்று சொல்லப்பட்டது. 'சரத் ஹவி:' என்ற இடத்தில் சரத்கால்ம் புரோடாசம் எனப்படும் ஹவிஸ் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. அரிசியின் மாவினால் செய்யப்பட்டு ஹோமம் பண்ணப்படுகிற அடை புரோடாசம் எனப்படும். நித்யஸூரிகள் பிரஹ்மாவை ஸ்ருஷ்டிக்கு முக்யமான உபகரணமாகவும் காலத்தை ஸஹகாரியாகவும்கொண்டு ப்ரஜாஸ்ருஷ்டிக்காக பகவானை தியானித்தார்கள் என்று இதன் பொருள். அப்படி அவர்கள் செய்ததற்குக் காரணம் பகவந்நியமனமே என்று நாம் ஊஹிக்க வேண்டியிருக்கிறது.

இங்கு சொல்லப்பட்டிருக்கிற ஸ்ருஷ்டி 'ப₃ஹுஸ்யாம் ப்ரஜாயேய' [நான பல்வாக ஆகக்கடவேன்.] என்ற ஸங்கல்பத்துடன் நிமித்தோபாதானகாரணமான நாராயணனால் செய்யப்படும் ஸமஷ்டி ஸ்ருஷ்டியல்ல. இது வ்யஷ்டி ஸ்ருஷ்டி எனப்படும் ப்ரஜாஸ்ருஷ்டியே. இம் இம்மாதிரியான சக்தி நித்யர்களுக்கு உண்டென்பதற்குப் பல ஆதாரங்களிருக்கின்றன. விஷ்வக்ஸேனருடைய மந்த்ரத்தில் ''விச்வஸ்ருஜே'' [உலகத்தை ஸ்ருஷ்டிப்பவருக்கு] என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாரதீயமென்று ப்ரஸித்தமான ஹரிபக்திஸுதோதயத்தில் ஐந்தாவது அத்யாயத்தில் ''தே ஹி குர்யுர் யதீ₃ச்சா₂ந்தி ஜக₃த்ஸர்க₃லயௌ ஸ்வயம்'' [நித்யஸூரிகள் விரும்பினார்களாகில் ஜகத்ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைத் தாமே செய்வார்கள்.] என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆளவந்தார் ''த்வயா நிஸ்ருஷ்டாத்மப₄ரேண'' [உன்னால் வைக்கப்பட்ட உபயவிபூதி நிர்வாஹபாரத்தையுடைய (விஷ்வக்ஸேனரால்)] என்று பகவானை ஸ்தோத்ரம் செய்திருக்கிறார். ஸ்ரீராமாநுஜர்,

''ஸ்வஸங்கல்பமாத்ராவக்லுப்த ஜகஜ்ஜந்மஸ்தி₂தித்₄வம்ஸாதி₃கே ஸ்ரீமதி விஷ்வக்ஸேனே ந்யஸ்தஸமஸ்தாத்மைச்வர்யம்''

http://acharya.org

[தன்னுடைய ஸங்கல்பத்தால் கொடுக்கப்பட்ட ஜகத்ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களையுடைய ஸ்ரீவிஷ்வக்ஸேனரிடம் வைக்கப்பட்ட தன்னுடைய எல்லா ஐச்வர்யங்களையும் உடையவனை] என்று ஸ்ரீவைகுண்டகத்யத்தில் அருளிச்செய்திருக்கிறார். பிரமனாகிற ஜீவனுக்கு இச்சக்தியிருக்கும்போது அவரைக்காட்டிலும் பல்லாயிரம் மடங்கு பெரியவர்களான நித்யர்களுக்கு இச்சக்தியிருப்பது அதிசயமல்ல. இந்த யாகத்தினால் பிரமனுக்கு ஸ்ருஷ்டிசெய்யும் சக்தி கிடைக்கிறதென்றும், அந்தப்பிரமனை நிமித்தமாத்ரமாகக்கொண்டு அவர் மூலமாக நித்யஸூரிகள் ஸ்ருஷ்டி செய்விக்கிறார்களென்றும் ஏற்படுகிறது. முத்கலோபனிஷத்தில் இதன் பொருள் வேறு வகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஸ ஸம்ருத்3த4காயஸ் ஸந் ஸ்ருஷ்டிகர்ம ந ஜஜ்ஞிவாந், ஸ: அநிருத்3த4 நாராயண: தஸ்மை ஸ்ருஷ்டிம் உபாதி3சத்:–'ப்3ராஹ்மந் தவ இந்த்3ரியாணி யாஜகாநி த்4யாத்வா கோசபூ4தம் த்3ருட4க்3ரந்தி2ம் கலேவரம் ஹவிர் த்4யாத்வாமாம் ஹவிர்பு4ஜம் த்4யாத்வா வஸந்தகாலம் ஆஜ்யம் த்4யாத்வா க்3ரீஷ்மம்இத்4மம் த்4யாத்வா சரத்3ருதும் ரஸம் த்4யாத்வா ஏவம் அக்3நௌ ஹுத்வா அங்க3ஸ்பர்சாத் கலேவர: வஜ்ரம் ஹீஷ்யதே. தத: ஸ்வகார்யாந் ஸர்வ ப்ராணிஜீவாந் ஸ்ருஷ்ட்வா பச்வாத்3யா: ப்ராதுர்3ப4விஷ்யந்தி, தத: ஸ்தா2வரஜங்க3மாத்மகம் ஜக3த் ப4விஷ்யதி"

[பெரிய தேகத்தை உடையவரான அப்பிரமன் ஸ்ருஷ்டியை அறியவில்லை. அந்த அநிருத்த நாராயணன் அவருக்கு ஸ்ருஷ்டியை உபதேசித்தார்:— 'பிரமனே! உன்னுடைய இந்திரியங்களை யாகம் செய்பவர்களாகவும், சரீரத்தை ஹவிஸ்ஸாகவும், என்னை அந்த ஹவிஸ்ஸை உண்பவனாகவும், வஸந்தகாலத்தை நெய்யாகவும், க்ரீஷ்மருதுவை ஸமித்தாகவும், சரத்ருதுவை (ஹோமம் செய்யப்படும்) ஷட்ரஸமாகவும் தியானித்து, இம்மாதிரியாக அக்னியில் ஹோமம் செய்து, அதன் ஸ்பர்சத்தினால் (உன்னுடைய) சரீரம் வஜ்ரம்போல் (ஸ்ருஷ்டி செய்ய ஸமர்த்தமானதாக) ஆகிவிடும். பிறகு தங்களிடமிருந்து உண்டாகும் ஸர்வப்ராணிகளையும் உண்டாக்கிக்கொண்டு பசு முதலியவை உண்டாகப்போகின்றன. அதன் பிறகு ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத் உண்டாகும்''] இதிலிருந்து பிரமன் ஸ்ருஷ்டி செய்ய ஞானமும், சக்தியுமில்லாமல் திகைத்ததாகவும் பகவான் ஸ்ருஷ்டி செய்ய வழியை உபதேசித்ததாகவும் அறிகிறோம். ''மஹாதே3வஸ் ஸர்வமேதே4 மஹாத்மா ஹுத்வாத்மாநம் தே3வதே3வோ

http://acharya.org

ப3பூ4வ'' [மஹாத்மாவான மஹாதேவர் (சிவன்) ஸர்வமேதயாகத்தில்

தன்னை ஹோமம் செய்து தேவர்களுக்கெல்லாம் தேவரானார்.] என்பது போல் பிரமனும் பகவானைக்குறித்து ஆத்மஸமர்ப்பணமாகிற யாகத்தைச் செய்து ஸ்ருஷ்டி சக்தியை அடைந்தார் என்று ஏற்படுகிறது.

7. ஸப்தாஸ்யாஸந் பரித₄ய:, த்ரிஸ்ஸப்தஸமித₄: க்ருதா:
தே₃வா யத்₃யஜ்ஞம் தந்வாநா: அப₃த்₄நந் புருஷம் பசும்.

[இந்த யஜ்ஞத்துக்கு ஏழு வஸ்துக்கள் பரிதிகளாக ஆயின. இருபத்தொரு வஸ்துக்கள் ஸமித்துக்களாகச் செய்யப்பட்டன. யஜ்ஞத்தைச் செய்யும் தேவர்கள் நான்முகனாகிற புருஷனை (ஹோமம் செய்யப்படும்) பசுவாகக் கட்டினார்கள்.] (ஸப்தா...பரிதய:) யாகம் செய்யும் போது அக்னிக்குத் தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகளிலும், உத்தர வேதிக்குத் தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகளிலும் ஆறுதண்டங்கள் (பலாசம் முதலிய மரங்களின் கொம்புகள்) வைக்கப்படுகின்றன. கிழக்கு திக்கில் ஸூர்யனைச் சேர்த்து ஏழு பரிதிகளாகக் கணக்கிடப்படுகின்றன. இந்த ஸ்ருஷ்டி யஜ்ஞத்திலும் ஏழு பரிதிகள் ஏற்பட்டன என்று சொல்லப்படுகிறது. அவையாவன:-ப்ருதிவீ, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம் எனப்படும் ஐந்து பூதங்களும், அஹங்காரமும் மஹானும். (த்ரிஸ்...க்ருதா:) இங்கு இருபத்தொரு ஸமித்துக்கள் அக்னியில் ஹோமம் செய்வதற்காகக் கல்பிக்கப்பட்டன. அவையாவன:-ப்ருதிவீ முதலிய ஐந்துபூதங்கள்; இவைகளுக்கு முறையே காரணமான கந்ததன்மாத்ரை, ரஸதன்மாத்ரை, ரூபதன்மாத்ரை, ஸ்பர்சதன்மாத்ரை, சப்ததன்மாத்ரை எனப்படும் ஐந்து தன்மாத்ரைகள்; கண், காது, நாக்கு, மூக்கு, தோல் எனப்படும் ஐந்து ஞானேந்திரியங்கள், வாய், கால், கை, ஆண் பெண் குறிகள், ஆஸனவாய் எனப்படும் ஐந்து கர்மேந்திரியங்கள்; மனஸ். ஆக இந்த இருபத்தொரு தத்வங்களும் ஸமித்துக்களாகக் கல்பிக்கப்பட்டன. ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப்பதற்கு இவைகள் உபகரணங்களாகையால் ஸ்ருஷ்டி யஜ்ஞத்திற்கு ஸாமக்ரிகளாகச் சொல்லப்படுகின்றன. (தேவா... பசும்) இப்படி யஜ்ஞம் செய்பவர்களான நித்யஸூரிகள் யஜ்ஞத்தில் ஹோமம் செய்யப்படும் பசுவான பிரமனை ப்ரக்ருதியாகிய யூபஸ்தம்பத்தில் கட்டினார்கள். அடுத்த மந்த்ரத்தில் 'ப₃ர்ஹிஷி யஜ்ஞம் ப்ரௌக்ஷந்' [மூலப்ரக்ருதியிலுள்ள பிரமனை ப்ரோக்ஷித்தார்கள்] என்று வருவதால் இங்கு மூலப்ரக்ருதியாகிய யூபஸ்தம்பத்தில் கட்டினார்கள் என்றே கொள்ளவேண்டும்.

8. தம் யஜ்ஞம் ப₃ர்ஹிஷி ப்ரௌக்ஷந், புருஷம் ஜாதம் அக்₃ரத:
தேந தே₃வா அயஜந்த, ஸாத்₄யா ருஷயச்ச யே.

[முதலில் உண்டானவனும் யஜ்ஞத்தில் ஹோமம் செய்யப்படுபவனும், மூலப்ரக்ருதியில் கட்டப்பட்டவனுமான பிரமனாகிற புருஷனை ப்ரோக்ஷித்தார்கள். ஸாத்யர்களென்று சொல்லப்படும் நித்யஸூரிகளும், ரிஷிகளும் (முக்தர்களும்) அப்பசுவைக்கொண்டு யஜ்ஞம் செய்தனர்.] (தம் யஜ்ஞம்) யஜ்ஞத்தில் ஹோமம் செய்யப்படுபவனான அப்பிரமனை. (பர்ஹிஷி) 'பர்ஹி:' என்னும் பெயரையுடைய மூலப்ரக்ருதியில் முன்சொன்னபடி கட்டி. (ப்ரௌக்ஷந்) ப்ரோக்ஷணம் என்னும் ஸம்ஸ்காரத்தைச் செய்தார்கள். (புருஷம் ஜாதம் அக்ரத:) முன்னால் பிறந்தவனான அந்தப் பிரமனாகிற புருஷனை ப்ரோக்ஷித்தார்கள். ''ப்₃ரஹ்மா தே₃வாநாம் ப்ரத₂மஸ் ஸம்ப₃பூ₄வ'' [பிரமன் தேவர்களுள் முதலில் உண்டானான்] என்று முண்டகோபநிஷத்தில் சொல்லியிருக்கிறபடியால் இங்கு சொல்லப்படும் 'புருஷன்' பிரமனே என்று நிச்சயிக்கப்படுகிறது. (தேந அயஜந்த) அப்பிரமனைப் பசுவாகக்கொண்டு யாகம் செய்தார்கள். ஒரு த்ரவ்யத்தை ஒரு தேவதையை உத்தேசித்துக் கொடுப்பது யாகமெனப்படுகிறது. இங்கு நான்முகனாகிய ஹவிஸ்ஸை அநிருத்த நாராயணனாகிய அக்நியில் ஹோமம்செய்வதாகிய யஜ்ஞத்தைச் செய்தார்கள் என்று தாத்பர்யம். எவர் இம்மாதிரி யாகம் செய்தார்களெனில்: (ஸாத்யா தேவா:) ஸாத்யர்களென்று ப்ரஸித்தரான நித்யஸூரிகளே இப்படி யாகம் செய்தவர் என்று சொல்லப்படுகிறது. இப்புருஷஸூக்தத்தின் பூர்வாநுவாகத்தில் கடைசி மந்திரத்தில் ''யத்ர பூர்வே ஸாத்₄யாஸ் ஸந்தி தே₃வா:'' [எந்தப் பரமபதத்தில் பழமையானவர்களும் ஸாத்யர்கள் என்று சொல்லப்படுபவர்களுமான தேவர்கள் இருக்கிறார்களோ...] என்று சொல்லப்பட்டதால் இங்கு சொல்லப்படும் தேவர்கள் பிறப்பற்றவர்களான நித்யஸூரிகளே என்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கப்படுகிறது. (ருஷயச்சயே) முக்தர்களும் இந்த யஜ்ஞத்தில் கலந்துகொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. பிரமனுக்கு ஸ்ருஷ்டிசக்தி கிடைத்தபின்பு ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்களான அத்ரி, பிருகு, வஸிஷ்டர் முதலிய ரிஷிகள் இங்கு சொல்லப்படும் ரிஷிகளாக ஆகமுடியாது. ஆகையால் முக்தர்களே இங்கு சொல்லப்படுபவர்கள். புருஷோத்தமனை த்யானம் பண்ணுவதையே தங்களுக்கு உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையுமாகக் கொண்டிருக்கும் முக்தர்களை ரிஷிகள் என்று சொல்லத்தட்டில்லை.

9. தஸ்மாத்₃ யஜ்ஞாத் ஸர்வஹுத: ஸம்ப்₄ருதம் ப்ருஷதா₃ஜ்யம்
பஸூம்ஸ்தாம்ஸ்சக்ரே வாயவ்யாந், ஆரண்யாந்க்₃ராம்யாச்சயே

http://acharya.org

[எல்லாவற்றையும் ஹோமம் செய்யப்பட்ட அப்பிரமனிடமிருந்து, தயிருடன் கூடிய நெய் (ஜகத்காரணபூதமான வீர்யம்) உண்டா யிற்று. அந்த நான்முகன் வாயுமார்க்கத்தில் ஸஞ்சரிக்கும் பக்ஷி களையும், காட்டில் ஸஞ்சரிக்கும் ம்ருகங்களையும், கிராமத்திலிருக்கிற மிருகங்களையும் படைத்தனன்.]

"தஸ்மாதிதி ச மந்த்ரேண ஜகத்ஸ்ருஷ்டிஸ் ஸமீரிதா"

['தஸ்மாத்...' என்னும் மந்த்ரத்தினால் ஜகத்ஸ்ருஷ்டியானது சொல் லப்பட்டது.] என்று புருஷஸம்ஹிதையில் சொல்லப்பட்டது. 'ச'காரத்தினால் இதுமுதல் ஏழு மந்த்ரங்களில் ஜகத்ஸ்ருஷ்டி சொல் லப்படுகிறதென்று அறியப்படுகிறது. (ஸர்வஹுத: தஸ்மாத்யஜ் ஞாத்) தன்னையுள்ளிட்ட எல்லாவற்றையும் ஹோமம் செய்விக்கப் பட்ட அப்பிரமனிடமிருந்து, நித்யஸூரிகளால் பகவானிடம் ஆத்ம ஸமர்ப்பணம் செய்விக்கப்பட்ட அந்த நான்முகனிடமிருந்து. (ப்ருஷதாஜ்யம் ஸம்ப்ருதம்) தயிருடன் கூடிய நெய் உண்டாயிற்று. இங்கு 'ப்ருஷதாஜ்யம்' என்று ஜகத் ஸ்ருஷ்டிக்குக் காரணமான வீர்யம் சொல்லப்படுகிறது. (பசூம்ஸ்தாந்...) வாயு ஸஞ்சரிக்கும் படியான ஆகாசத்தில் பறக்கும் பக்ஷிகளையும், காட்டில் ஸஞ்சரிக்கும் புலி, கரடி முதலிய ப்ராணிகளையும், கிராமங்களில் திரியும் பூனை முதலிய ப்ராணிகளையும் அந்த நான்முகன் ஸ்ருஷ்டித்தார்.

10. தஸ்மாத் யஜ்ஞாத் ஸர்வஹுத: ருசஸ் ஸாமானி ஜஜ்ஞிரே
ச²ந்தா³ம்ஸி ஜஜ்ஞிரே தஸ்மாத், யஜுஸ் தஸ்மாத³ஜாயத.

[எல்லாவற்றையும் ஹோமம் செய்யப்பட்ட அப்பிரமனிடமிருந்து ருக்வேதங்களும், ஸாமவேதங்களும் உண்டாயின. அந்த நான்முக னிடமிருந்து சந்தஸ்ஸுக்கள் உண்டாயின; யஜுர்வேதமும் அவனிடமிருந்து உண்டாயிற்று.]

பிரமனுடமிருந்து ருக்யஜுஸ்ஸாமவேதங்களும், காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுக்களும் உண்டாயினவென்றுசொல்லப்படுகிறது.

"யோ ப்³ரஹ்மாணம் வித³தா⁴தி பூர்வம்
யோ வை வேதா³ம்ச்ச ப்³ரஹிணோதி தஸ்மை"

[எந்தப் பரமாத்மாவானவர் ஸ்ருஷ்டிகாலத்தில் பிரமனைப் படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ...] என்று சொல்லப் பட்டிருக்கிறபடியால் பரமபுருஷனிடமிருந்து உபதேசம்பெற்று

வேதங்களை வேதன் (பிரமன்) வெளிப்படுத்தினர் என்றே கொள்ள வேண்டும். "தஸ்ய ஹ வா ஏதஸ்ய மஹதோ பூ₄தஸ்ய நிச்வஸிதம் ஏதத்₃ ருக்₃வேதோ₃ யஜுர்வேத₃ஸ் ஸாமவேதோ₃...." [ருக் யஜுஸ் ஸாமம் முதலிய வேதங்களெல்லாம் பரமாத்மாவினுடைய மூச்சுக்காற்றுகள்.] என்று மஹாபுருஷனுடைய மூச்சுக்காற்றாகச் சொல்லப்பட்ட அபௌருஷேயமான வேதங்களைப் பிரமன் பிரகாசப்படுத்தினன் என்று ஏற்படுகிறது.

11. தஸ்மாத₃ச்வா அஜாயந்த ஏகேசோப₄யாத₃த:
கா₃வோ ஹ ஜஜ்ஞிரே தஸ்மாத் தஸ்மாத ஜாதா அஜா வய:

[அந்த நான்முகனிடமிருந்து குதிரைகளும், ஒரு பக்கத்தில் பற்களை யுடைய எருமை முதலிய ப்ராணிகளும், இரண்டுபக்கத்தில் பற்களை யுடைய கழுதை முதலியவைகளும் உண்டாயின. அவரிடமிருந்து பசுக்களும் உண்டாயின.]

(காவோ ஹ...) ஒருபக்கத்தில் பற்களையுடைய ம்ருகங்களில் பசுக்களும் அடங்கினபோதிலும் அவைகளின் மேன்மையை முன்னிட்டு அவை தனியாகச் சொல்லப்படுகின்றன என்று விஷ்ணு சித்தாசார்யர் வியாக்யானம் செய்தார். புருஷோத்தமனுடைய ஆராதனமாகிய யஜ்ஞத்திற்கு உபயோகப்படும் பால், தயிர், நெய் முதலியவை பசுக்களிடமிருந்தல்லவோ கிடைக்கிறது.

12. யத் புருஷம் வ்யத₃து₄: கதிதா₄ வ்யகல்பயந்
முக₂ம் கிமஸ்ய கௌ ப₃ாஹூ, காவூரு பாதா₃வுச்யேதே.

[பிரமனுகிய புருஷனைப் (பசுவாகச்) செய்தபோது, எவ்வளவு விதமாகக் கல்பித்தார்கள்? இந்த ப்ரஹ்மாவினுடைய முகம் எதுவாக ஆயிற்று? கைகள் எவர்களாக ஆயின? துடைகளும் திருவடிகளும் எவர்களாகச் சொல்லப்படுகின்றன?]

யஜ்ஞத்தைச் செய்பவர்களான ப்ராஹ்மணர் முதலியவர்களின் ஸ்ருஷ்டியை இம்மந்த்ரமும் அடுத்த மந்த்ரமும் சொல்லுகின்றன. இந்த ருக் கேள்வியாகவும் அடுத்த ருக் பதிலாகவும் இருக்கின்றன. நித்யஸூரிகள் பிரமனைப் பசுவாகக் கல்பித்தபோது அவருடைய அவயவங்கள் எத்தனைவிதமாகக் கல்பிக்கப்பட்டனவென்றும் எந்தெந்த அவயவங்களினின்றும் எந்தெந்தப் பதார்த்தங்கள் படைக்கப்பட்டன வென்றும் கேட்கப்படுகிறது. விசேஷமாக முகம், கைகள், துடைகள், பாதங்கள் இவைகளிலிருந்து எவர் உண்டானர்கள் என்றும் கேட்கப்படுகிறது.

http://acharya.org

13. ப்$_3$ராஹ்மணோஸ்ய முக$_4$மாஸீத் பா$_3$ஹூ ராஜந்ய: க்ருத:
ஊரு தத$_3$ஸ்ய யத்$_3$வைச்ய: பத்$_3$ப்$_4$யாம் சூத்$_3$ரோ அஜாயத.

[ப்ராஹ்மணன் இவருடைய முகமானான். கைகள் க்ஷத்ரியனாகச் செய்யப்பட்டன. அப்பொழுது துடைகள் வைச்யனாக ஆயின. திருவடிகளிலிருந்து சூத்ரன் உண்டானான்.]

(ப்ராஹ்மணோஸ்ய...) முகம் ப்ராஹ்மணனாக ஆயிற்று என்று சொல்லப்படுகிறது. 'பாதங்களிலிருந்து சூத்ரன் உண்டானான்' என்று கடைசியில் சொல்லப்படுகிறபடியால் இங்கும் முகத்திலிருந்து ப்ராஹ்மணன் உண்டானான் என்றே தாத்பர்யம். ப்ராஹ்மணன் அதிகமான ஞானத்தை உடையவனாதலால் ஞானேந்த்ரியங்களெல்லாவற்றையும் உடையதான முகத்தினின்றும் அவனைப் படைத்தார். (பாஹூ...க்ருத:) கைகளிலிருந்து க்ஷத்ரியன் உண்டானான். யுத்தம் செய்வதைத் தொழிலாக உடைய க்ஷத்ரியனுக்குத் தோள் வலிமையும் கைவன்மையும் அவச்யமாதலால் ப்ரஹ்மதேவன் அவனைத் தன் கைகளிலிருந்து ஸ்ருஷ்டித்தார். (ஊரு...வைச்ய:) உழுதலையும் வியாபாரத்தையும் தொழிலாகவுடைய வைச்யனுக்குத் துடைபலம் முக்யமாதலால் நான்முகன் அவனைத் தன் துடைகளிலிருந்து படைத்தார். (பத்ப்யாம்...) பாதங்களினின்றும் நான்காவது வர்ணத்தைச் சேர்ந்த சூத்ரன் உண்டானான். முதல் மூன்று வர்ணத்தவர்களுடைய ஏவல்களைச் செய்வதே ஸ்வதர்மமாகவுடைய சூத்ரனுக்குக் கால்வன்மை அவச்யமாதலால் பிரமன் தன் கால்களிலிருந்து அவனைப் படைத்தார்.

இதிஹாஸ புராணங்களில் பலவிடங்களில் நாராயணனுடைய முகம், கைகள், துடை, திருவடி முதலியவைகளிலிருந்து நான்கு வர்ணத்தவர்களும் உண்டானதாகச் சொல்லப்பட்டிருக்க இங்கு நான்முகனின் அவயவங்களிலிருந்து அவர்கள் உண்டானதாகச் சொல்லுவது எப்படிப் பொருந்தும்? என்ற ஸந்தேஹம் ஏற்படுகிறது. பிரமனை சரீரமாகக்கொண்ட புருஷோத்தமனே இப்படிப் படைப்பதாலும், நான்முகனுடைய அவயவங்கள் நாராயணனுடைய அவயவங்களேயாகையாலும் இதில் ஒரு விரோதமுமில்லை.

இந்தப் புருஷஸூக்தம் முழுவதும் தைத்திரீய ஆரண்யகத்தில் மூன்றாவது ப்ரச்நத்தில் படிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நான்கு ஜாதிகளும் ஸ்ருஷ்டிகாலத்திலேயே தனித்தனியாகப் படைக்கப்பட்டனவென்று வேதத்திலிருந்தே அறிகிறோம். நவீனகாலத்தில் சிலர்

http://acharya.org

வேதங்களில் ஜாதி சொல்லப்படவில்லையென்றும், புராணங்களிலேயே ஜாதிப்பிரிவினை சொல்லப்பட்டிருக்கிறதென்றும் கட்டுரைகள் எழுதுவது இதனால் நிராகரிக்கப்பட்டது. கீதையிலும் பகவான்,

"சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகச:"

[குணம், தொழில் முதலியவைகளில் பேதங்களுடன் கூடிய நான்கு வர்ணங்களும் என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டன.] என்று அருளிச் செய்திருக்கிறார்.

ஜனஸமூஹத்தினுடைய முகஸ்தானமாயிருக்கும் ப்ராஹ்மண ஜாதி பிரமனுடைய முகத்தினின்றும் உண்டாயிற்று. முகத்தில் ஞானேந்த்ரியங்களான கண், மூக்கு, நாக்கு, செவி, மெய் (தோல்) என்னும் ஐந்தும் இருக்கின்றன. "ஸர்வேந்த்ரியாணாம் நயநம் ப்ரதாநம்" என்று எல்லா இந்த்ரியங்களிலும் முக்கியமானதாகச் சொல்லப்படும் கண்ணினாலேயே படைக்கப்பட்ட எல்லாப் பொருள்களையும் பார்க்கிறோம். கண்ணால் பார்க்கப்பட்டதே ப்ரத்யக்ஷப்ரமாணமாகிறது. படைக்கப்பட்ட பொருள்களைப் பார்ப்பதிலிருந்து அவைகளை நியமிக்கும் ஜீவனையும், படைப்பவனான ஈச்வரனையும் அறிகிறோம். அம்மாதிரியே ப்ராஹ்மணர்களும் தீர்க்கதர்சிகளாகவும், ஜீவாத்ம பரமாத்மதத்வஜ்ஞானிகளாகவும் உலகத்திற்குக் கண் போன்றும் விளங்குகிறார்கள். கண்ணிற்கு அடுத்தபடியான மேன்மைவாய்ந்தது காது. சப்தராசியான வேதமும் கர்ணபரம்பரையாகவே வந்தது. "ச்ரோதவ்யோ மந்தவ்ய:" என்கிறபடி பலரிடம் கேட்டுப் பரமாத்மஜ்ஞானத்தை அடைவதற்கு ஸாதனமாயிருப்பது இது. ரஸனேந்திரியம் ருசிப்பதாகிற ஞானத்தை அறிகிறது. ஞானத்திற்கு ஆதாரமான தேஹத்தைப் போஷிப்பதற்கும் ரஸனேந்திரியம் அவசியம். "ஸ்வதேஹம் ஆத்யம் கலு தர்மஸாதநம்" [தன்னுடைய தேஹமல்லவோ தர்மத்திற்கு முதன்மையான ஸாதனம்.] என்று சொல்லப்பட்டிருக்கிறது. அச்யுதனுக்கு அளிக்கப்பட்ட ப்ரஸாதங்களை ருசிப்பதற்கே ஏற்பட்டது நாக்கு. க்ராணேந்திரியம் (மூக்கு) புருஷோத்தமனுக்கு ஸமர்ப்பிக்கப்பட்ட புஷ்பம், சந்தனம் முதலியவைகளை முகர்வதற்கு ஸாதனமானது. ச்வாஸம் விடுவதற்கும் மூக்கு உபயோகமாயிருக்கிறது. தொடுவதினால் ஏற்படும் உணர்ச்சியை அறிவிப்பது த்வக் (தோல்) என்னும் இந்த்ரியம்.

"உடுத்துக்களைந்த நின் பீதகவாடை உடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்"

http://acharya.org

என்பதுபோல் தம்முடைய ஞானேந்த்ரியங்களையெல்லாம் புருஷோத்தமன் விஷயத்தில் ஈடுபடுத்துபவர்களாகையால் ப்ராஹ்மணர்கள் முகத்தினின்றும் உண்டானார்கள். கர்மேந்த்ரியங்களில் ப்ரதானமான வாயும் முகத்திலிருக்கிறது. இது ப்ராம்ஹணர்களின் வாக்குவன்மையையும் சாபானுக்ரஹஸாமர்த்யத்தையும் காட்டுகிறது. வாயினால் "கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ" என்றும், "ஸர்வேஜநா: ஸுகிநோ பவந்து" என்றும் அச்யுதனால் படைக்கப்பட்ட அவனியிலுள்ளோர் எல்லோரும் ஸுகமாயிருக்கவேண்டுமென்று வாழ்த்துவது ப்ராஹ்மணனுடைய தொழில் என்று உணர்த்தப்படுகிறது. வேதாத்யயனத்திற்கும், வேதத்தை ஓதுவிப்பதற்கும் யஜ்ஞம் முதலியவைகளைப் பண்ணிவைப்பதற்கும், வாய் உபயோகப்படுவதாகையால் இவைகள் அவனுடைய தொழில்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றன. முகம் புத்தி (மூளை)யையும் தேஜஸ்ஸையும் உடையதாதலால் ப்ராஹ்மணன் புத்திமானாகவும், ப்ரஹ்மதேஜஸ்ஸை உடையவனாகவும் இருப்பான் என்று தெரிவிக்கப்படுகிறது. ப்ரஹ்மஜ்ஞானியாகையால் ப்ராஹ்மணன் எனப்படுகிறான். ராஜாக்களுக்கு மந்த்ரியாகவும் ஆசார்யனாகவும் இருந்து புத்திமதியும் உபதேசமும் செய்பவன் ப்ராஹ்மணன். இவ்வளவு கார்யங்களையும் செய்வதற்கேற்பட்ட ப்ராஹ்மணன் பிரமனின் முகத்திலிருந்து உண்டானான். ப்ராஹ்மணர்களுடைய தேஹகுடும்பஸம்ரக்ஷணங்கள் ராஜாக்களால் நன்கு கவனிக்கப்பட்டு வந்ததால் முன்காலத்தில் அவர்கள் தங்கள் தொழிலை சரியாகச்செய்துவந்தார்கள். ஆசார்யர்கள் காலத்தில், ராஜாங்கம் பரதேசிகள் கையில் அகப்பட்டபோதிலும், ப்ராஹ்மணர்கள் உஞ்சவ்ருத்தி செய்தாவது தங்கள் தொழிலைச் செய்துவந்தார்கள். கலியின் கோலாஹலத்தினாலும், பலவித அஸௌகர்யங்களாலும், இப்போது ப்ராஹ்மணர்கள் தங்கள் தொழிலைவிட்டுப் பல தொழில்களிலும் புகும்படி நேரிட்டிருக்கிறது. சில பாக்யவான்கள் இக்காலத்திலும் வைதிகமார்க்கத்திலிருந்து கொண்டு பணப்பேயாட்படாமல் முறைதவறால் இருந்துகொண்டு வருகிறார்கள்.

கர்மேந்த்ரியங்களுள் வலிமை வாய்ந்ததான கையிலிருந்து தோளாண்மையுடைய க்ஷத்ரியன் பிறந்தான். தேஹம் கையினுடைய பலத்தினாலேயே ரக்ஷிக்கப்படுவதுபோல் ஜனஸமூஹமும் க்ஷத்ரியனுடைய தோள்வலியினால் ரக்ஷிக்கப்படுகிறது. ராஜாக்களில்லாவிடில் உலகம் அராஜகமாகி அழிந்துவிடும். அதனாலேயே அரசனுக்குத் திருமாலின் அம்சம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

http://acharya.org

எல்லாரும் உண்டு ஜீவிப்பதற்கு அவச்யமான உணவுப் பொருள்களை உண்டாக்குவதையும் பலருக்கு விநியோகிப்பதையும் தொழிலாகவுடைய வைச்யன் துடையிலிருந்து உண்டாக்கப்பட்டான். வைச்யனுடைய தாளாண்மையினாலேயே வேளாண்மை நடக்கிறதன்றோ. எல்லாருடைய தேஹத்தையும் போஷிப்பது வைச்யனுடைய தொழில்.

இம்மூவர்ணத்தார்க்கும் வேண்டிய உபகரணங்களை ஸம்பாதித்துக் கொடுப்பதற்காக ஆடி ஓடித் திரிந்து நடந்து கார்யம் செய்பவனாகையால் சூத்ரன் காலிலிருந்து படைக்கப்பட்டான். கால்கள் சரீரத்தைத் தாங்குவதுபோல் அவன் இம்மூவர்ணத்தாரையும் தாங்குகிறான். காலிலிருந்து உண்டானதால் ஒருவிதமான தாழ்வும் கிடையாது. எம்பெருமானுடைய திருவடிகளே எல்லோருக்கும் வணங்கும் துறையாகும். மற்ற வர்ணத்தார்க்குள்ள நியமநிஷ்டைகள், ஆசாரவ்யவஹாரங்கள் முதலிய கஷ்டங்கள் இவர்களுக்குக் கிடையாது. சொன்னதைச் செய்வதில் பாபமும் கிடையாது; பொறுப்பும் கிடையாது. அவர்களுக்கு நற்கதியடைவது மிகவும் ஸுலபமாகும். பிறப்பினாலேயே அவர்களுக்கு நைச்யமும், அஹங்கார மமகாரமில்லாமையும் ஏற்பட்டிருக்கின்றன. ஆசார்யர்களும் உயர்ந்த வர்ணத்தார்க்குப் பிறப்பினாலேற்படும் அஹங்கார மமகாரங்கள் அழியவேண்டுமென்று உபதேசித்திருக்கிறார்கள். "தொழுமினீர் கொடுமின் கொள்மின்" என்று அவர்களிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்வதிலும், அவர்களுக்கு ஞானத்தைக் கொடுப்பதிலும் தடையில்லை என்று தொண்டரடிப்பொடியாழ்வாரும் அருளியிருக்கிறார். போதனம், ரக்ஷணம், போஷணம், ஸேவகம் என்பவை முறையே நான்கு வர்ணத்தாருக்கும் தொழிலாகும். ஒவ்வொருவரும் மற்ற வர்ணத்தார்க்காக உழைக்கிறார்கள். நால்வரும் பகவானுடைய அவயவங்களே. அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு கிடையாது. அவர்கள் ஒருவர்க்கொருவர் சண்டையிடுவது சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று சண்டையிடுவதையொக்கும். வயிறுடன் மற்ற அவயவங்கள் சண்டையிட்ட கதை எல்லோரும் அறிந்தது.

நமது ஸநாதன வைதிக தர்மமாகிற மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் ஐந்து. நடுத்தூண் ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள் முதலியவையும் அவைகளில் சொல்லப்பட்டிருக்கும் தெய்வங்களின் கோவில்களுமேயாகும். ஜாதி, ஸ்த்ரீகள், சொத்து, சுதந்திரம் ஆகிய நான்கும் மற்ற தூண்களாகும். இவைகளைக் காப்பாற்றுவதே

http://acharya.org

அரசர்களின் கடமையென்று பாரதத்தில் ராஜதர்மத்தில் பரக்கப் பேசப்பட்டிருக்கிறது. ச்ருதிஸ்ம்ருதிகளில் இவைகளைப்பற்றி ஏற்பட்டிருக்கும் சட்டதிட்டங்களை மாற்ற அரசனுக்காவது, அவனுடைய மந்த்ரிகளுக்காவது, ஜனப்ரதிநிதி ஸபைக்காவது அதிகாரம் கிடையாதென்பது ஸர்வஸித்தமாக ஏற்பட்டிருந்தது. இதை மாற்ற ப்ரயத்னம்செய்த வேனமஹாராஜன் அடைந்த கதியை ஹரிவம்சம் முதலியவைகளில் நன்கு காணலாம். இக்காலத்தில் அந்த நியமத்திற்கு 'ஏட்டிக்குப் போட்டியாக' மாற்றமுடியாதது ஒன்றும் கிடையாது என்ற கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். முன்பு நியமிக்கப்பட்டதெல்லாம் பிசகென்றுகொண்டு அவைகளுக்கு நேர் மாறாக ஆக்கவேண்டுமென்று சட்டம் செய்கிறார்கள். கோயில்களேற்பட்ட தத்வத்திற்கு விரோதமாகச் சட்டங்களேற்படுத்தி தெய்வ ஸாந்நித்யத்தைச் சிதைத்தது தேசமெங்குமறிந்ததே. பிறப்பையும் புத்தியிருப்பதையுமே குற்றமாகக்கொண்டு உத்யோகங்களுக்கு உள்ளே விடாமலும், பாடசாலைகளில் படிக்கவிடாமலும் ப்ராஹ்மணர்களை த்வேஷிப்பது எல்லோரும் அறிந்ததே. ப்ராஹ்மணர்கள் க்ருஷ்ணனையே கதியாகக் கொண்டவர்கள். க்ருஷ்ணனும் ப்ராஹ்மணோ மம தேவதா'' [ப்ராஹ்மணன் என்னுடைய தேவதை] என்று அருளிச்செய்தார். ஆகையால் ப்ராஹ்மண த்வேஷமானது தெய்வத்வேஷத்திலேயே முடியுமென்று எல்லோரும் பயந்துகொண்டிருந்தோம். அம்மாதிரியே ப்ராஹ்மணத்வேஷத்தில் ஆரம்பித்த ஒரு சாரார் தெய்வத்வேஷத்திற்குக் கொடிகட்டிக்கொண்டு கதறுகிறார்கள். ஜாதியென்பது அவரவர் கர்மானுகுணமாக பகவந்நியமனப்படி ஏற்பட்டது. சொத்து அவரவர் பண்ணிய புண்ய பாபத்தின் பலனேயாகும். "மேலைத்தவத்தளவேயாகுமாம் தான்பெற்ற செல்வம் குலத்தளவே யாகும் குணம்" என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலேயர்களும் பணத்தினாலும் அந்தஸ்தினாலும் பேதம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஸமதர்மக்கொள்கை பேசும் ருஷ்யா தேசத்திலும் அதிகாரப்பதவியினால் வித்தியாசங்களிருக்கின்றன. அம்மாதிரியான வித்தியாசங்கள் இங்கு கிடையா. பேதமென்பது இயற்கையின் சட்டமாகும். அதை ஒழிப்பதென்பது மனிதனால் முடியாத முயற்சியே. ஒருவிதமாக ஒழிக்கப்பார்த்தால் மற்றொரு விதமாக முளைக்கும். பழைய பேதத்திற்குப் பழகியிருக்கிறோம். 'அபேதம்' என்பதினாலேற்படும் புது பேதங்கள் படுவிஷத்தைக் கக்குமேயொழிய வேறொரு குணமும் காணக்கிடைக்காது. ஸ்த்ரீகள் மனுஷ்யவர்க்கத்திற்கே தாயாயிருக்கும் தனிப்பெருமையுடையவர்

http://acharya.org

கள்; அவர்கள் அதற்காகவே பிறப்பிக்கப்பட்டவர்கள். அதற்கனு குணமாகவே அவர்களுடைய கல்வியோ, ஆசாரமோ, செயலோ இருக்கவேண்டும். அவைகளை அழிக்க முயன்றால் மானிட ஸமூஹமே முறைகெட்டு நிலைகலங்கி அழிந்துவிடும். குடும்பமென்பது இடுக்கையாய்விடும். க்ருஹமென்பது குட்டிச்சுவராய்விடும், கற்பு நிலையென்பது அழிந்து, கல்யாணமென்பது ஒழிந்து உயிர்வாழ்வதற்கோர் நோக்கமுமில்லாமல் உலகம் சுடுகாடாய்விடும். ஆண் வர்க்கமும் மாறிப் பெண்மலையாளமாகிவிடும். சொத்து விஷயத்தைப்பற்றிச் சில உண்மைகள் உரைக்கவேண்டியிருக்கிறது. உழைப்பின் கூலியில் செலவழிந்ததுபோக மிகுந்ததைச் சேர்த்து வைத்ததே சொத்தாகும். அதை அழிக்க முயற்சித்தார்களாகில் உழைப்பதற்குத் தூண்டுகோலே இல்லாமல் போய்விடும். எல்லோரும் சோம்பேறிகளாகத் திரிவார்கள். சொத்தை அபஹரிக்கச் சட்டம் செய்வது பகல்கொள்ளைக்கு ஸமானமாகும். ஏழைகளுக்கு என்ன கதி? என்று நினைக்கலாம். அவர்களுக்கு உழைக்க வேலையும், உண்ண உணவும், உடுக்க ஆடையும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டியது முற்காலத்திலும் ராஜதர்மமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. செய்வதற்கு வழிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. சொத்து என்னும் தத்வமழிந்தால், கணவன், மனைவி என்னும் ஸம்பந்தமும், தாய், தகப்பன், பிள்ளை, பெண் என்னும் ஸம்பந்தமும் அழிந்துவிடும். குடும்பமென்பது உடும்பு பிடித்தவன் கைபோலாகிவிடும். இவைகளெல்லாம் போனால் சுதந்திரமும் பெரும்பாலும் தானாகவே போய்விடும். பேச்சு சுதந்திரம், கார்ய சுதந்திரம், முன்னோர் மொழிந்த முறைப்படி வாழும் சுதந்திரம், மத சுதந்திரம் முதலியவைகளை இழப்போமாகில் நாம் நடைபிணமாகவே கருதப்படுவோம். உயிர் வாழ்வதற்கு ஓர் நோக்கமும பலனும் இல்லாமல் போய்விடும். ஆகையினால் சீர்திருத்தக்காரர்கள் முன் இருப்பதை மாற்றுவதற்கு முன் பின் வரும் கெடுதல்களைப்பற்றி தீர்க்காலோசனை செய்ய வேண்டும். இதைப்பற்றிப் பரக்கப்பேசில் பாரதமாம். விரிவிற்கஞ்சி இத்துடன் விடுத்தோம்.

14. சந்த்$_3$ரமா மநஸோ ஜாத:, சக்ஷோஸ் ஸூர்யோ அஜாயத
முகா$_2$தி$_3$ந்த்$_3$ரச் சாக்$_3$நிச்ச, ப்ராணாத்$_3$ வாயுரஜாயத.

[மனத்தில் நின்றும் சந்திரன் உண்டானான். கண்ணிலிருந்து ஸூர்யன் உண்டானான். முகத்திலிருந்து இந்த்ரனும், அக்னியும் ஜனித்தார்கள். ப்ராணனிலிருந்து வாயு உண்டானான்.]

http://acharya.org

இந்த மந்த்ரத்தில் ஸர்வலோகோபகாரகமான ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறது. (சந்த்ரமா...ஜாத:) சந்திரன் மனத்திலிருந்து உண்டானன். ஏன் மனஸ்ஸிலிருந்து சந்திரன் உண்டாகவேணும்? மற்ற அங்கங்களிலிருந்து ஏன் உண்டாகக்கூடாது? பிரமனை சரீரமாகக் கொண்ட பகவானுடைய மனஸ்ஸிற்கும், சந்திரனுக்கும் எவ்வித மான ஒற்றுமை இருக்கிறது? உலகிலிருப்பவர்களுடைய மனஸ்ஸிற்கு ஸந்தோஷத்தைத் தருபவனுதலால் சந்திரன் மனஸ்ஸிலிருந்து படைக்கப்பட்டான். அவன் உலகத்திலுள்ள உயிர்களுக்கும், பயிர்களுக்கும் குளிர்ச்சியையும் ஸந்தோஷத்தையும் உண்டாக்குபவன். அவனுடைய கிரணங்களே பயிர்களுக்கு உயிர்கொடுப்பவை. சந்திரனில்லாவிடில் உலகம் காய்ந்து தீய்ந்துவிடும். கேசவனும் குளிர்ந்த சுபமான மனத்தையுடையவன். அப்படிப்பட்ட மனத்தினல் எல்லோரும் வாழ்வதற்கு ஸங்கல்பித்து, அந்வேஷத்தை உண்டாக்கி, ஆபிமுக்யத்தை வளர்த்து ஞானப்பயிரை விருத்திசெய்கிறுன். மேலும் சந்திரன் மனத்திற்கு அதிதேவதையாகவும் இருக்கிறுன்; இக்காரணங்களால் சந்திரன் புருஷோத்தமனுடைய மனத்திலிருந்து உண்டானன். (சக்ஷோ:ஸூர்யோ...) உலகத்திற்குக் கண்ணயிருப்பவனும், வெளியிருளை விரட்டுபவனுமான ஸூர்யன் அஜ்ஞானமாகிய இருளைப்போக்குகிற, மண்ணுக்கும் விண்ணுக்கும் கண்ணுகிய கண்ணனுடைய கண்ணிலிருந்து உண்டானன். உலகத்தைப் பார்க்கும்படி செய்வது கண். ஸூர்யனும் பார்ப்பதற்கு ஸாதனமாயிருக்கிறுன். ஸூர்யன் கண்ணுக்கு அதிதேவதை. கண்ணின் ரோகங்கள் ஸூர்யநமஸ்காரம் செய்வதினுல் போக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஸூர்யநமஸ்காரம் வேதத்திலும் உரைக்கப்படுகிறது. ஸூர்ய நமஸ்காரத்திலும் ''த்⁴யேயஸ்ஸதா³ ஸவித்ரு மண்ட³ல மத்⁴ய வர்த்தீ நாராயண:'' என்று சொல்லப்பட்ட, தாமரைக்கண்ணனுன நாராயணனே நமஸ்கரிக்கப்படுபவன். ஸூர்யன் தன் கிரணங்களால் பாஹ்யாந்தகாரத்தைப் போக்கடித்து, ப்ராணிகளுக்கு உஷ்ணத்தைக்கொடுத்து ஜீவிக்கும்படி செய்கிறுன். கேசவனுடைய கண்ணிலிருந்து உண்டாகும் கடாக்ஷத்தினுல், ஜீவர்கள் அஜ்ஞானம் நசிக்கப்பெற்று ஞானமடைந்து மோக்ஷம் பெறுகிறுர்கள். ஆதித்யன் தேஜோமயமானவன். அச்யுதனும் தேஜோமயமான தாமரை போன்ற கண்ணையுடையவன். "தஸ்ய யதா² கப்யாஸம் புண்ட³ரீகமேவ மக்ஷிணீ" [அந்தப் பரமபுருஷனுக்கு ஸூர்யனுல் மலரும் தாமரை போன்ற இரு கண்களிருக்கின்றன.] என்றல்லவோ பரப்ரஹ்ம லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் பரந்தாம

http://acharya.org

னுடைய கண்களிலிருந்து பாஸ்கரன் உண்டானான். (முகாத்...) முகம் ஆதிபத்யத்தையும் தேஜஸ்ஸையும் காட்டுகிறது. ஆகையால் தேவர்களுக்கு அதிபதியானவனும், தேஜோவானுமாயிருக்கும் இந்திரன் முகத்திலிருந்து உண்டானான். தேஜோமயமான அக்னியும் முகத்திலிருந்து உண்டானான். "அக்₃நிமுகா₂ வை தே₃வதா:" [தேவதைகள் அக்னியை முகமாக உடையவர்கள்.] என்கிறபடி தேவர்களுக்கு முகமாயிருக்கும் அக்னி முகத்திலிருந்து உண்டாவது நியாயமே. (ப்ராணாத் வாயுரஜாயத) ப்ராணனிலிருந்து வாயு உண்டானான். ப்ராணன் ஒரு வாயுவிசேஷமே. அதிலிருந்து வாயு உண்டாயிற்று. எல்லோருக்கும் ப்ராணனுயிருக்கும் வாயு ப்ராணனிலிருந்து உண்டாவது பொருத்தமுடையது. வாயுவில்லாவிடில் ஜீவிக்கமுடியாது. அனுமான் வஜ்ராயுதத்தினால் அடிபட்டபோது வாயு ஸ்தம்பித்ததும் உலகமெல்லாம் திண்டாடினது எல்லோரும் அறிந்ததே. இம்மாதிரியாக உலகத்திற்கு உபகாரகமான வஸ்துக்கள் உண்டாக்கப்பட்டன.

15. நாப்₄யா ஆஸீ த₃ந்தரிக்ஷம், சீர்ஷ்ணோ த்₃யௌஸ் ஸமவர்த்தத
பத்₃ப்₄யாம் பூ₄மிர் தி₃சச் ச்ரோத்ராத், தத₂ா லோகாங் அகல்பயங்

[நாபியிலிருந்து அந்தரிக்ஷம் உண்டாயிற்று. தலையிலிருந்து ஸ்வர்க்கம் உண்டாயிற்று. பாதங்களினின்றும் பூமி உண்டாயிற்று. திக்குகள் காதிலிருந்து உண்டாயின. அப்படியே லோகங்களையெல்லாம் பிரமன் படைத்தான்.]

இதில் உலகங்களுடைய ஸ்ருஷ்டி சொல்லப்படுகிறது. (நாப்யா...) தேஹத்தின் நடுவிலிருக்கும் நாபியிலிருந்து பூமிக்கும் மேலுலகங்களுக்கும் நடுவிலிருக்கும் அந்தரிக்ஷம் உண்டாயிற்று. (சீர்ஷ்ணோ...) மேலேயிருக்கும் தலையிலிருந்து மேலேழுலோகங்களும் உண்டாயின. இங்கு 'த்₃யௌ:' என்னும்பதம் மேலேழு உலகங்களையும் உணர்த்துகிறது. (பத்ப்யாம் பூமி:) பாதங்களிலிருந்து பூமி உண்டாயிற்று. திருவடிகளிலிருந்து பிறந்ததாலன்றோ 'பொருவில் சீர்ப்பூமி' என்று ஆழ்வாரும் புகழ்ந்திருக்கிறார். தேஹத்தைத் தாங்குவது திருவடி. எல்லோரையும் தாங்குவதால் தரணியென்று பெயர்பெற்றது பூமி. கேசவநம்பியைக் கால்பிடிக்கும் பேற்றுக்குப்பிறந்தவள் பூமிதேவி.

"கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்ப்புக்கு
இடந்திடும் தன்னுள் கரக்கும் உமிழும்

http://acharya.org

தடம் பெரும் தோளாரத்தழுவும் பாரென்னும்
மடந்தையை மால் செய்கின்ற மால் ஆர் காண்பாரே''

[கேழல்-வராஹம். இடந்திடும்-குத்தி எடுக்கும். தன்னுள் கரக்கும்-தன் வயிற்றினுள் மறைத்து வைக்கும். பார்-பூமி. மால்-1. திருமால், 2. அன்பு.] என்று நம்மாழ்வாரும்,

''அரவாகிச் சுமத்தியால் அயிலெயிற்றின் ஏந்துதியால்
ஒரு வாயின் விழுங்குதியால் ஓரடியால் ஒளித்தியால்
திருவான நிலமகளை''

என்று கம்பநாட்டாழ்வாரும் அருளிச்செய்தபடி பகவானுடைய ஸர்வாவயவங்களாலும், விசேஷமாகத் திருவடியினாலும் தீண்டப்பெற்றவளன்றோ தரணி. இக்காரணங்களாலும், மண்ணுலகில் மாந்தர்கள் உய்வதற்கு உபாயம் நாராயணனுடைய திருவடிகளே என்று காட்டுவதற்கும் பூமி திருவடிகளிலிருந்து படைக்கப்பட்டது. இங்கு பூமி கீழிருக்கும் ஏழுலோகங்களையும் காட்டும். கீழேழுலோகங்களும் திருவடிகளிலிருந்து படைக்கப்பட்டன என்று கொள்ளவேண்டும். (திசச் ச்ரோத்ராத்) காதுகளினின்றும் திக்குகள் படைக்கப்பட்டன. சப்தத்திற்கு ஆதாரமான திக்குகள் சப்தத்தைக் கேட்கும் இந்த்ரியமான காதிலிருந்து படைக்கப்பட்டன. (ததா...) அப்படியே இவ்வண்டத்திலுள்ள மற்ற உலகங்களையும் பரந்தாமனை அந்தர்யாமியாகக்கொண்ட பிரமன் படைத்தான். 'அகல்பயந்' என்று பன்மையாகச் சொல்லியிருப்பது சாந்தஸம் என்று கொள்ளவேண்டும்; அல்லது பிரமனை உபகரணமாகக்கொண்ட நித்யஸூரிகள் படைத்தனர் என்றும் கொள்ளலாம்.

16. வேதா₃ஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதி₃த்யவர்ணம் தமஸஸ்து பாரே
ஸர்வாணி ரூபாணி விசித்ய தீ₄ர:
நாமாநி க்ருத்வாபி₄வத₃ந் யதா₃ஸ்தே.

[எல்லா சரீரங்களையும் உண்டுபண்ணி, பெயர்களைக் கொடுத்து அவைகளை உச்சரித்துக் கொண்டிருப்பவரும், விகாரமற்றவரும், ஸூர்யன்போன்றவர்ணத்தையுடையவரும், ப்ரக்ருதிமண்டலத்திற்கு அப்பாலிருப்பவரும் (எல்லாவிதத்திலும்) பெரியவருமான இந்தப் புருஷனை, (வேதபுருஷனாகிய) நான் அறிகிறேன்.

''வேதா₃ஹமிதி மந்த்ராப்₄யாம் வைப₄வம் கதி₂தம் ஹரே:''.

['வேதாஹம்...' என்னும் இரண்டு மந்த்ரங்களாலும் ஹரியினுடைய வைபவம் வெளியிடப்பட்டது.] என்று புருஷஸம்ஹிதையில் இந்த மந்த்ரமும், அடுத்த ருக்கும், ஹரியின் வைபவத்தைச் சொல்லுகின்றனவென்று உரைக்கப்பட்டது. வேதபுருஷன் மஹாபுருஷனின் மஹிமையை மகிழ்ந்துரைக்கும் பாசுரங்களிவை. இந்த மந்திரத்தின் முதலடி ஸ்ரீராமாயணத்தில் ''அஹம்வேத்₃மி மஹாத்மானம் ராமம் ஸத்ய பராக்ரமம்'' [நான் உண்மையான பராக்ரமத்தையுடையவனும், மஹாத்மாவுமான ராமனை அறிவேன்.] என்ற விச்வாமித்ரவாக்யத்தினால் உபப்ரும்ஹணம் செய்யப்பட்டது என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்திருக்கிறார். பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்யானத்தை அனுசரித்து நாம் இங்கு விவரிக்கிறோம். ராமாயணத்தில் உபப்ரும்ஹணம் செய்யப்பட்டதால் இந்த ச்ருதி ராமனாய் அவதாரம்செய்த நாராயணனையே குறிக்கிறது என்பது தெளிவாகிறது. இந்த மந்த்ரத்தின் முற்பாதி ச்வேதாச்வதரத்திலும் சிறிது வித்தியாசத்துடன் படிக்கப்படுகிறது. இதிலிருந்து ஸர்வ வேதாந்தப்ரத்யய ந்யாயப்படி, ச்வேதாச்வதரத்தில் சொல்லப்படுபவனும், இங்கு சொல்லப்படுபவனும் ஸ்ரீமந்நாராயணனே என்று ஸித்திக்கிறது. அங்கு வியாக்யானம் செய்த ரங்கராமாநுஜமுனியும்,

> ''ப்ரக்ருதே: பரஸ்தாத் ஜ்யோதி: மஹாபுருஷம் தமேவ நாராயணம்
> விதி₃த்வா ம்ருத்யுசப்₃தி₃தம் ஸம்ஸாரம் அதிக்ராமதி''

[ப்ரக்ருதிக்கு மேற்பட்டவனும், ஜ்யோதிர்மயமானவனும், மஹா புருஷனுமான நாராயணனையே அறிந்து 'ம்ருத்யு' என்று சொல்லப்படும் ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறான்.] என்று பொருளுரைத்திருக்கிறார்.

(அஹம் வேத) நான் அறிகிறேன். இங்கு 'நான்' என்று சொல்லுபவன் வேதபுருஷன். பரமாத்மாவை அறிவதினாலும், பிறரை அறியச்செய்வதினாலும் வேதமென்றே பெயரும் புகழும் பெற்ற நான் அறிகிறேன். நித்யனான நான் அறிகிறேன். அபௌருஷேயனான நான் அறிகிறேன். ப்ரமம் (தவறாக நினைத்தல்), விப்ரலம்பம் (வஞ்சனை) முதலிய குறைகளில்லாத நான் அறிகிறேன். 'வேத₃நம்' 'உபாஸநம்' என்னும் சப்தங்களால் சொல்லப்படுவதும், தைலதாரையைப் போல் இடைவிடாததும் பார்ப்பதற்கு ஸமானமானதுமான பக்தி ரூபமான ஞானமே இங்கு 'வேத₃' என்று சொல்லப்படுகிறது. வாக்யத்தினால் ஏற்படும் அர்தஜ்ஞானம் மட்டுமல்ல. (வேத) அறிகிறேன். ''ந சக்ஷுஷா க்ருஹ்யதே'' [பரமாத்மா கண்ணால் காணப்படாதவன்.] என்றும், ''மநஸா து விசுத்₃தே₄ந'' [சுத்தமான மனத்தி

http://acharya.org

னாலேயே (அறியத்தக்கவன்)] என்றும், "என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண்ணால் காணும் உணர்ந்து" என்றும் சொல்லுகிறபடி வேதபுருஷன் தன்னுடைய ஞானக்கண்ணால் கண்டு சொல்லுகிறான். "நேதி நேதி" [பரமாத்மா இப்படிப் பட்டவன் அல்லன்; இப்படிப்பட்டவன் ஒருவனுமில்லை.] என்றும், "க இத்தா$_2$ வேத$_3$ யத்ர ஸ:" [பரமாத்மா இப்படிப்பட்டவன் என்று யார் அறிவார்?] என்றும் ப்ரமாணபூதமான வேதத்திலும் பரம புருஷன் அறியமுடியாதவன் என்று கீர்த்திக்கப்பட்டிருக்கிறது.

"ப்$_3$ரஹ்மருத்$_3$ரேந்த்$_3$ரபூ$_4$தாநாம் மநஸாமப்யகோ$_3$சரம்"

[ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன், என்னும் இவர்களுடைய மனத்திற்கும் எட்டாதவன்] என்றும், "நான்முகன் செஞ்சடையான் என்றிவர்கள் எம்பெருமான் தன்மையை யாரறிகிற்பார்?" என்றும் ப்ரமாதாக்களான (அறிவுடையவர்களான) ப்ரஹ்மருத்ராதிகளாலும் அச்யுதனை அறிய முடியாதென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. "ஸோ அங்க$_3$ வேத$_3$ யதி$_3$ வா ந வேத$_3$" [(தன் பெருமையை) அவனே அறிவனோ? அறியானோ?] என்றும், "தனக்கும் தன் தன்மை அறிவரியானை" என்றும் புருஷோத்தமன் தானும் தன் பெருமையை அறியமாட்டான் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அளவுபட்ட ஞானத்தையுடைய ப்ரஹ்மருத்ராதிகள் அறியாதது நியாயமே. "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" "ஸ்வாபா$_4$விகீ ஜ்ஞாந ப$_3$லக்ரியா ச" என்னும் ப்ரமாணங்களை நம்பி ஸார்வஜ்ஞ்யம் கொண்டாடி ஒரு ஆசாரியன்பக்கல் அடிபணிந்து அறியாமையால் அவனும் அறியான். வேதம் அறிந்தபடி எப்படி என்னில்: (மஹாந்தம்) அளவிடமுடியாதவனென்றே அறிந்தது. "அறிந்தன வேதவரும் பொருள் நூல்கள் அறிந்தன கொள்க அரும்பொருளாதல்" என்றும், "யஸ்யாமதம் தஸ்ய மதம்" [எவனுக்கு பரமபுருஷனை (அளவிட்டு) அறியமுடியவில்லையோ அவனே அறிந்தவனாகிறான்.] என்றும் சொல்லியபடி அளவிடமுடியாதவன் என்று அறிகையே உள்ளபடி அறிவது. "வேதாஹம்" என்பதை ராமாயணத்தில் "அஹம் வேத்மி" என்பது விவரிக்கிறது. இங்கு 'வேத' என்பது அங்கு 'வேத்மி' என்றும், இங்கு 'அஹம்' என்பது அங்கு 'அஹம்' என்றும் சொல்லப்படுகிறது.

(ஏதம் வேத$_3$) இப்படி ப்ரஸித்தமானவனை அறிகிறேன். ஸர்வ காரணபுருஷனாயிருந்தும், மனிசர்க்காகப் படாதனபட்டு என்நின்ற யோனியுமாய்ப் பிறந்த இவனை அறிகிறேன். அவதார ஸௌலப் யத்தைக் காட்டுவது இந்த ஏதச்சப்தம். இங்கு 'ஏதம்' என்பதை அங்கு 'ராமம்' என்று அவதாரநிர்தேசம் செய்கிறது. (புருஷம்)

http://acharya.org

அவன் ஒருவனே புருஷன் எனத்தகுந்தவன். மற்றவர்கள் ஸ்த்ரீ ப்ராயர்களே. ஸகல கல்யாணகுணங்களாலும் பூர்ணமானவன் புருஷன். இங்கு சொல்லப்படும் சௌர்யவீர்யாதிகுணங்கள் ராமாயணத்தில் 'ஸத்யபராக்ரமம்' என்று பேசப்படுகின்றன. 'புரி சேதே' என்ற வ்யுத்பத்தியின்படி வைகுண்டத்தில் ஆதிசேஷன்மேல் பள்ளி கொண்ட புருஷன் என்றும் பொருள்கொள்ளலாம். (ஏகம் புருஷம்) 'அங்குஷ்ட்டமாத்ர: புருஷோந்தராத்மா ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:'' [கட்டைவிரல் பரிமாணமுள்ளவனும், அந்தர்யாமியுமான புருஷன் ஜனங்களுடைய ஹ்ருதயத்தில் எப்பொழுதும் இருக்கிறான்.] என்று சொல்லுகிறபடி எல்லா ஜனங்களுடைய ஹ்ருதயபுரத்திலும் வசிப்பவன் புருஷன் என்றும் பொருள்கொள்ளலாம். தேசாந்தரத்தில் எட்டியிராமல் அருகில் அந்தர்யாமியாயிருப்பதால் 'இந்தப் புருஷன்' என்று சொல்லப்படுகிறான். அவன் பரவஸ்துவாயிற்றே யென்று நாம் பயப்படவேண்டியதில்லை. அருவருக்கும்படியான தோஷங்களுக்கு இவர்கள் ஒரு கொள்கலமாயிற்றே என்று அவன் அகல நிற்கமாட்டான். அவனிடம் நாம் முறையிடும்போது முன்வருவதற்காக அருகிலேயே அமர்ந்திருப்பவன். (மஹாந்தம்) இதை அனுஸரித்து ஸ்ரீராமாயணத்தில் 'மஹாத்மானம்' எனப்படுகிறது. மிகவும் பெரியவனென்று அறிவேன். ''ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:'' [அந்தப் புருஷோத்தமன் பிறந்தபின்பே பெரியவனாகிறான்.] என்று தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காகப் பல அவதாரங்கள் செய்தபின்பு அவனைப் பெரியவனென்று அறிகிறேன். எல்லா விதத்திலும் பெரியவன் பரமபுருஷன். (மஹாந்தம்) ஸ்வரூபத்தில் பெரியவன் இவன் ஒருவனே. எங்கும் பரந்துளன். (மஹாந்தம்) குணங்களில் பெரியவன். கணக்கற்ற கல்யாணகுணங்களையுடையவன். ஒவ்வொரு குணமும் அளவிடமுடியாதது. ஆனந்தகுணம் ஒன்றைமட்டும் அளவிடப்பார்த்த வேதம் ''யதோ வாசோ நிவர்த்தந்தே'' என்று கைவிட்டுத் திரும்பி வந்ததல்லவோ? 'எல்லையில் ஞானத்தன்' என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி அளவற்ற ஞானத்தையுடையவன்; பலத்தில் பெரியவன்; ஐச்வர்யத்தில் பெரியவன்; வீர்யத்தில் விஞ்சியவன்; சக்தியில் சிறந்தவன்; தேஜஸ்ஸில் மிக்கவன்; பிறருடைய துக்கத்தைக்கண்டு ஐயோவென்று இரங்கும் தயையையுடையவன். அடியார்களின் தோஷத்தை அறியாதவன். தன்னடியார்களின் தோஷங்களை குணங்களாகக் கொள்ளும்படியான வாத்ஸல்யத்தையுடையவன். ''செய்தாரேல் நன்றுசெய்தார்'' என்றல்லவோ அவன் வார்த்தை. ''அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம'' [(என்னை சரணமடைந்தவனுக்கு) எல்லா பூதங்க

http://acharya.org

ளிடமிருந்தும் அபயமளிக்கிறேன். இதுவே என்னுடைய விரதம்.] என்று சொல்லி ஆபத்தில் அகப்பட்டவர்களை அஞ்சலென்று அளிக்கும் அரிய பெரிய ஸ்வபாவத்தையுடையவன். பெரிய விரோதிகளையும் புழுப்பூச்சிகளை நசுக்குவதுபோல் நசுக்கவல்ல பராக்ரமத்தையுடையவன். 'ஜயிப்பரோ? தோற்பரோ?' என்னும் ஸந்தேஹம் இவருடைய பராக்ரமவிஷயத்தில் கிடையாது. "நாவிஜித்ய நிவர்த்ததே" என்றும் "சென்று கொன்று வென்றிகொண்ட" என்றும் சொல்லுகிறபடி புறப்பட்டால் ப்ரபல விரோதிகளையும் பராஜயப்படுத்தித் தலையறுத்தல்லது மீளார். (மஹாந்தம்) பெருமையுள்ள சரீரத்தையுடையவன். "மாசூணுச் சுடருடம்பாய்" என்றும், "ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி: மாம்ஸமேதோஸ்திஸம்பவா" அந்த மஹாபுருஷனுக்கு மாம்ஸங்களாலும், கொழுப்பினாலும், எலும்புகளாலுமான ப்ராக்ருதசரீரம் கிடையாது.] என்றும், "நித்யம் நித்யாக்ருதிதரம்" [நித்யமானவனும், நித்யமான திவ்யமங்களவிக்ரஹத்தையுடையவனும்] என்றும் சொல்லப்பட்ட நித்ய நிரவத்ய நிரதிசய ஔஜ்வல்யமுடைய (என்றும் குற்றமற்றதும் ஒப்பற்ற ஒளியையுடையதுமான) சரீரத்தையுடையவன். எல்லா அண்டங்களிலுமுள்ள ஸகல சேதநாசேதனங்களையும் சரீரமாக உடையவனாதலால் பெரிய சரீரத்தையுடையவன் என்றும் பொருள்கொள்ளலாம். (மஹாந்தம்) பரமாத்மாவாயிருப்பவன். "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்" [எவனைக்காட்டிலும் பெரியவஸ்து வேறொன்றும் கிடையாதோ.] என்றும், "ந தத்ஸமச்ச அப்யதிகச்ச த்ருச்யதே" [அவனுக்கு ஸமானமானவனும், மேலானவனும் காணப்படவில்லை.] என்றும், "தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம், தம் தேவதாநாம் பரமம் ச தைவதம்" [ஈச்வரர்களுக்கும் மேலான ஈச்வரனும், தேவதைகளுக்கும் மேலான தேவதையுமான அவனை] என்றும், "ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா!" என்றும் சொல்லுகிறபடி தேவாதிதேவனாய், ஆதிமூலமாய், அந்தர்யாமியாயிருப்பவன்.

(ஆதித்யவர்ணம்) ஸூர்யனைப்போன்ற ஒளியையுடையவன். கோடிஸூர்யப்ரகாசத்தையுடைய பரஞ்சோதிக்கு அல்பப்ரகாசத்தையுடைய ஆதித்யனை உபமானமாகச் சொல்லலாமோ? எனில்: நாம் கண்ணால் காணும் ஜ்யோதிஸ்ஸுகளுக்குள் ஸூர்யனே மிகுந்த ஒளியுடையவனாகக் காணப்படுவதால் அவனே உபமானமாகச் சொல்லப்பட்டான். "ய ஏஷ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:" [ஸூர்யனுக்கு நடுவில் ஸுவர்ணம் போன்ற ஒளியையுடைய புருஷன்] என்று பரமபுருஷன் வர்ணிக்கப்பட்டானன்றோ. இந்த மஹாபுருஷனையே "ஸவிதுர் வரேண்யம்" என்று காயத்ரியில் அனு

http://acharya.org

சந்திக்கிறோம். ''மலர்கதிரின் சுடருடம்பாய்'' என்று ஆழ்வாரும் அருளினர். வேதங்களும், வைதிகபுருஷர்களும் இவனைப்பேசப் புக்கால் ஸூர்யனுக்கு ஒப்பான ஒளியையுடையவன் என்றே பாசுர மிடுகிறார்கள். (தமஸஸ்து பாரே) தமஸுக்கு அக்கரையிலிருப்பவன். ''தமஸ: பரமோ தாதா சங்கசக்ரகதாதர:'' என்று மண்டோதரியால் சொல்லப்பட்ட சக்ரபாணியே இவன். 'தம:' என்பது மூலப்ரக்ருதி யைக் குறிக்கிறது. ப்ரக்ருதி மண்டலத்திற்கு அப்பாலிருப்பவன் என்று பொருள். 'தம:' என்பது அஜ்ஞானத்தையும் ஸம்ஸாரத் தையும் குறிக்கும். ''ஸோத்வந: பாரமாப்னோதி தத் விஷ்ணோ: பரமம் பதம்'' [அவன் ஸம்ஸாரத்திற்கு அக்கரையை அடைகிறான். அதுவே விஷ்ணுவினுடைய பரமபதம்] என்று கடோபனிஷத்தில் சொல்லப் பட்டிருப்பதிலிருந்து இங்கு சொல்லப்பட்டதும் விஷ்ணுவினுடைய பரமபதமே என்று நிஸ்ஸந்தேஹமாக நிச்சயிக்கப்படுகிறது. (ஸர்வாணி...) சேதனர்கள் ''லூநபக்ஷ இவாண்டஜ:'' என்று சிற கொடிந்த பக்ஷிபோல் அசித்ஸமராய், கரணகளேபரமற்று போக மோக்ஷசூந்யராய் இருக்கும்படியான எளிவரவைக்கண்டு தயை யுடைய மனஸ்ஸையுடையவனாய் அவர்கள் தன்னை அடைவதற்காக சரீரங்களைக் கொடுத்து நாமரூபங்களை ஏற்படுத்தினான். (ஸர்வாணி ரூபாணி விசித்ய) தேவர், மனுஷ்யர், திர்யக் (ஊர்வன) ஸ்தாவரம் எனப்படும் நான்குவிதமான சரீரங்களையும் ஏற்படுத்தி. (நாமாநி க்ருத்வா...) அவர்களுக்கு நாமங்களைக்கொடுத்து அவற்றை உச்சரித்துக்கொண்டு எந்தப்பரமாத்மா இருக்கிறாரோ அவரை அறிவேன். ''அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி'' [இவற்றை வியாபித்து நாமரூபங்களைக் கொடுக்கக்கடவேன்] என்று பரம புருஷன் ஸங்கல்பிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ. (தீர:) இம்மாதிரியாக இவற்றை வியாபித்து இவற்றுக்கு நாமரூபங்களைக் கொடுத்தபோதிலும் அவற்றின் விகாரங்கள் தன்மேல் படாதபடி யிருப்பதால் புருஷோத்தமன் 'தீர:' என்று சொல்லப்படுகிறான். புத்தியை ரமிக்கச்செய்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். 'யத்' என்கிறவிடத்தில் நபும்ஸகலிங்கம் சாந்தஸம்.

இதிலிருந்து உண்மையான தத்வமான வேதம் ஒன்றிருக்கிற தென்று அறிகிறோம். 'புருஷம்' என்பதிலிருந்து பரமாத்மாவுக்கு குணங்களிருக்கின்றனவென்று ஏற்படுகிறது. 'மஹாந்தம்' என்பதி லிருந்து அவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள் உளர் என்று உணர்த்தப் படுகிறது. 'ஆதித்யவர்ணம்' என்பதிலிருந்து அஸாதாரணமான திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவன் என்றும் தெரிவிக்கப்படு

கிறது. ''தமஸஸ்து பாரே'' என்று அப்ராக்ருதமான திவ்யதேசத்தில் திகழ்கின்றான் தாமோதரன் என்றும் ஏற்படுகிறது. அநேக சேதனர்கள் உண்மையாக இருக்கின்றனரென்றும் அவர்களுக்கு நாமரூபங்களைக் கொடுத்தான் என்பதும் அறியப்படுகிறது. இவைகளை ஒப்புக்கொண்டால் அத்வைதம் அழிந்துவிடும் என்னும் பயத்தினால் வேதம் வாஸ்தவமல்லவென்றும், புருஷோத்தமனுக்கு ரூபமில்லை, குணமில்லை, ஸ்தானமில்லை என்றும் சேதநாசேதநங்கள் உண்மையல்லவென்றும், மாயையினால் ஏற்படும் தோற்றமே யென்றும் சொல்லும் மாயாவாதிகளின் மதம் முழுவதும் இங்கு மறுக்கப்பட்டது.

17. தா₄தா புரஸ்தாத்₃ யமுதா₃ஜஹார
சக்ர: ப்ரவித்₃வாந் ப்ரதி₃சச்சதஸ்ர:
தமேவம் வித்₃வாந் அம்ருத இஹ ப₄வதி
நாந்ய: பந்தா₂: அயநாய வித்₃யதே.

[எவரை முன் பிரமதேவர் தியானித்தாரோ, பரமாத்ம ஜ்ஞானியான இந்திரன் எவரை உபாஸித்தானோ, எட்டு திக்பாலகர்களும் (ருஷிகளும்) எவரை தியானம் செய்தனரோ அந்தப்பரமபுருஷனை இம்மாதிரியாக அறிபவன் இந்த ஜன்மத்திலேயே முக்தியடைகிறான். மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை.]

வேதபுருஷன் தன்னைத்தவிர மற்றும் சிலரும் இந்த மஹா புருஷனை அறிந்துள்ளார்களென்று வெளியிட்டு அவனை இம்மாதிரி அறிவதே மோக்ஷோபாயம் என்று நிர்ணயிக்கிறான். (தா₄தா...) முதலில் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரமன் மஹாபுருஷனை தியானித்தார் என்று சொல்லப்படுகிறது. ஸ்ருஷ்டிக்குமுன் ஸ்ருஷ்டிசெய்ய வழி தெரியாத நான்முகன் பகவானை நோக்கி தியானம் செய்தாரென்று இதிலிருந்து ஏற்படுகிறது.

''யுக₃கோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்₄ய பத்₃மபூ₄:
புநஸ் த்ரைலோக்யதா₄த்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரும:''

[பிரமன் ஆயிரங்கோடியுகங்கள் விஷ்ணுவை ஆராதித்து, அடுத்த கல்பத்திலும் ப்ரஹ்மபட்டத்தை அடைந்தான் என்று கேள்விப்படுகிறோம்.] என்று சொல்லப்பட்டபடி தன் பதவிக்காகச் சென்ற கல்பத்தில் பிரமன் புருஷோத்தமனைத் தியானித்தார் என்றும் பொருள்கொள்ளலாம். (சக்ர:...) நூறு அச்வமேதயாகங்கள் செய்து

http://acharya.org

பகவானை ஆராதித்து இந்திரப்பதவியை அடைந்தான் இந்திரன். அடுத்த மன்வந்தரத்தில் இந்திரப்பதவியை அடையப்போகும் மஹாபலியும் அம்மாதிரியே பகவானை உபாஸித்திருக்கிறார். (ப்ர திச:...) 'சதஸ்ர:' என்று கிழக்கு முதலிய நான்கு திக்குகளும் 'ப்ரதிச:' என்று தென்கிழக்கு முதலிய விதிக்குகளும் சொல்லப்படுகின்றன. இந்த எட்டுத் திக்குகளுக்கும் பாலகர்களும், இந்த திக்குகளிலுள்ள ரிஷிகளும் இப்பதங்களால் உணர்த்தப்படுகின்றனர். அவர்களும் புருஷோத்தமனை உபாஸிக்கிறார்களென்று ஏற்படுகிறது. ஈசான்ய திக்கிற்கு அதிபதியும் அங்கு வாஸம் செய்பவருமான சிவனும் இந்தப் பரமபுருஷனையே உபாஸனை செய்கிறார் என்றும் ஏற்படுகிறது.

நம்மாழ்வாரும் இதையே,

> "கள்வா! எம்மையும் ஏழுலகும் நின்
> உள்ளே தோற்றிய இறைவ!' என்று
> வெள்ளேறன் நான்முகன் இந்திரன் வானவர்
> புள்ளூர்திகழல் பணிந்து ஏத்துவரே"

[வெள்ளேறன்—வெளுத்த காளையை வாஹனமாகவுடைய சிவன். புள்ளூர்தி—கருடவாஹனன்.] என்று அருளிச்செய்தார். அத்ரி, ப்ருகு, காச்யபர், கர்தமர், தக்ஷர், வஸிஷ்டர், நாரதர், வால்மீகி, பராசரர், வியாஸர், சுகர், சௌநகர், யாஜ்ஞவல்க்யர் முதலிய ரிஷிகளும் இந்த இருடீகேசனையே ஏத்துகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. (தம்) இப்படிப்பட்ட ப்ரஸித்தமான பரமாத்மாவான நாராயணனை. (ஏவம் வித்வாந்) இம்மாதிரியாக அறிபவன். ஸர்வகாரண பூத னென்றும், ஸர்வரக்ஷகனென்றும், ஸமஸ்தகல்யாணகுணாத்மக னென்றும், ஸ்ரீவைகுண்டவாஸனென்றும், அஸாதாரணமான திவ்ய மங்களவிக்ரஹமுடையவனென்றும், சேதனர்களுக்கு நாமரூபங் களையும், கரணகளேபரங்களையும் கொடுப்பவனென்றும், பிரமன், ருத்ரன், இந்திரன், முதலியவர்களால் பூஜிக்கப்படுபவனென்றும் அறிபவன். இங்கு 'அறிவு' என்பது த்யானரூபமான அறிவையே காட்டுகிறது. (அம்ருத...) * இந்த ஜன்மத்திலேயே பிறப்பிறப்பாகிற

---

* ப்ராரப்தகர்மம் எந்த ஜன்மத்தில் முடிகிறதோ, அந்த ஜன்மத்திலேயே மோக்ஷம் என்பது சாஸ்திரார்த்தமாயிருக்க, 'இந்த ஜன்மத்திலேயே' என்றது எப்படியெனில்: 'ஏதம் புருஷம்' என்று அவதாரத்தைக்காட்டுகையால், அவதார ரஹஸ்யஜ்ஞாநத்தோடு கூடிய பக்தியாலே இந்த ஜன்மத்திலேயே மோக்ஷமடைகிறான் என்பது "புநர்ஜந்ம நைதி" [கீதை] முதலான ப்ரமாணங்களில் உணர்த்தப்பட்டதாகையாலே விரோதமில்லை.

http://acharya.org

ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டுகிறான். இந்த உலகத்திலேயே முக்தனுக்கு ஸமானமாக ஆகிறான் என்றும் பொருள்கொள்ளலாம். நம்மாழ்வாரும், "பிடித்தேன் பிறவி கெடுத்தேன் பிணி சாரேன்" என்று பரந்தாமனின் பாதங்களைப் பிடித்தவுடன் பிறப்பு இறப்பு முதலிய ஸகல துக்கங்களும் நீங்குகின்றன என்றல்லவோ அருளினார். நாராயணனை அடிபணிந்து, பல்லாண்டுபாடி, ஆனந்தஸாகரத்தில் அமிழ்ந்து "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று சொல்லுபவர்களை முக்தர்கள் என்று சொல்லத் தட்டில்லை. அவர்கள் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்தவர்களே. (நாந்ய:...) மோக்ஷமடைவதற்கு வேறொரு மார்க்கமும் கிடையாது. 'அயநாய' என்றவிடத்தில் 'பரமபதமடைவதற்கு' என்று ச்வேதாச்வதரோபநிஷத்பாஷ்யத்தில் சங்கரர் வ்யாக்யானம் செய்தார். இவ்விடத்தில்,

"நாயமாத்மா ப்ரவசநேந லப்$_4$ய: ந மேத$_4$யா ந ப$_3$ஹுநா ச்ருதேந
யமேவைஷ வ்ருணுதே தேந லப்$_4$ய: தஸ்யைஷ ஆத்மா
விவ்ருணுதே தநூம் ஸ்வாம்"

[இந்தப் பரமாத்மா (பக்தியில்லா) ச்ரவண மனன தியானங்களால் அடையத்தக்கவனல்லன்; எவனை இப்பரமபுருஷன் வரிக்கிறானோ அவனுக்கே தன் ஸ்வரூபத்தைக் காட்டுகிறான்.]

"ந கர்மணா ந ப்ரஜயா த$_4$நேந த்யாகே$_3$ந ஏகே அம்ருதத்வமாநசு:"

[கர்மத்தினாலும், ப்ரஜையினாலும், தனத்தினாலும், மோக்ஷமடைய முடியாது. ந்யாஸவித்யை (சரணாகதி) யினாலேயே (பலர்) மோக்ஷமடைந்தனர்.] என்னும் ச்ருதிவாக்யங்கள் அனுஸந்திக்கத்தக்கன. கீதாசார்யனும்,

"நாஹம் வேதை$_3$ர் ந தபஸா ந தா$_3$நேந ந சேஜ்யயா
சக்ய ஏவம்விதோ$_4$ த்$_3$ரஷ்டும் த்$_3$ருஷ்டவாநஸி மாம் யதா$_2$
ப$_4$க்த்யா த்வநந்யயா சக்ய: அஹமேவம் விதோ$_4$ர்ஜுந"

[அர்ஜுனா! (என்னிடத்தில் பக்தியற்ற) வேதாத்யயனத்தாலும், தபஸ்ஸுகளாலும், தானத்தினாலும், யாகத்தினாலும், நீ என்னைக் கண்டதுபோல், நான் (எவராலும்) காணத்தக்கவனல்லன். அனன்ய ப்ரயோஜனமான பக்தியினாலேயே காணத்தக்கவன்.] என்று அருளிச்செய்தாரன்றோ.

http://acharya.org

இந்த மந்த்ரத்தில், பிரமன், இந்திரன் முதலிய பலர் பரமாத்மாவை உபாஸிப்பதாகச் சொல்லப்படுவதிலிருந்து ஜீவாத்மாக்கள் பலருண்டென்பது ஸித்திக்கிறது. 'தம் ஏவம் வித்3வாந்' என்பதிலிருந்து அறியப்படுபவன், அறிவு, அறிகிறவன் என்னும் மூன்றும் உண்டென்று உணர்த்தப்படுகிறது. 'ஏவம்' என்பதிலிருந்து மேலே சொன்னபடி ஸமஸ்தகல்யாணகுணஸம்பன்னனென்றும், விக்ரஹ விபூதி விசிஷ்டனென்றும் அறியவேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. 'விக்ரஹமில்லை; விபூதியில்லை; குணமில்லை' என்பவருடைய பிடரியைப் பிடித்துப் புறக்கணிக்கிறது இவ்வாக்கியம். 'ஏவம் வித்3வாந்' என்பதை கீதாசார்யன் 'ஏவம்விதோ4 த்3ரஷ்டும்' [இம்மாதிரி காண்பதற்கு] என்றும், 'ப4க்த்யா' என்றும் விவரித்தபடியால் இங்கு சொல்லப்படும் அறிவு காண்பதற்கு ஸமானமான பக்தியே என்று ஏற்படுகிறது. ஆகையால் வாக்யார்த்தஜ்ஞானத்தினுல் மோக்ஷமடையமுடியாதென்றும் ஸித்திக்கிறது. 'அம்ருதோ ப4வதி' என்பதிலிருந்து ஸம்ஸாரி, முக்தன் என்னும் பேதமுண்டென்றும் தெரிவிக்கப்படுகிறது.

18. யஜ்ஞேந யஜ்ஞமயஜந்த தே3வா:
தாநி த4ர்மாணி ப்ரத2மாந்யாஸந்
தே ஹ நாகம் மஹிமாநஸ் ஸசந்தே
யத்ர பூர்வே ஸாத்4யாஸ் ஸந்தி தே3வா:.

[நித்யஸூரிகள் பிரமனை உபகரணமாகக்கொண்டு ஸ்ருஷ்டிரூபமான யஜ்ஞத்தைச் செய்தார்கள். அந்த யஜ்ஞம் முதலிய தர்மங்கள் முக்யங்களாக ஆயின. இவ்விதமாக அறிபவர்கள் மஹிமையுடையவர்களாய் பழைமையானவர்களான நித்யஸூரிகள் வாஸம் செய்யும் பரமபதத்தை அடைகிறார்கள்.]

இந்த மந்த்ரத்தின் பூர்வார்த்தத்தில் இந்த அனுவாகத்தில் சொல்லப்பட்ட ஸ்ருஷ்டிப்ரகாரமும் பின் பாதியில் 'வேதா3ஹம்' என்னும் இரண்டு மந்த்ரங்களினுல் சொல்லப்பட்ட பகவதுபாஸனமும் அதின் பலமும் சொல்லப்படுகின்றனவென்று வித்யாரண்யர். 'நாராயணம்' என்று ப்ரஸித்தமான புருஷஸூக்தத்தின் பூர்வானுவாகம் இந்த ருக்குடன் முடிவடைகிறது. (யஜ்ஞேந...) யஜ்ஞத்திற்கு முக்ய ஸாதனமான பிரமனைக்கொண்டு நித்யஸூரிகள் ஸ்ருஷ்டிரூபமான யஜ்ஞத்தைச் செய்தனர். (தாநி...) அதுமுதல் அந்த யஜ்ஞம் தானம் முதலிய தர்மங்கள் முக்யமானவையாக

http://acharya.org

ஆயின. தர்மார்த்த காமமோக்ஷம் எனப்படும் நான்கு புருஷார்த் தங்களுக்கும் ஸாதனமாயிருக்கின்றன. **கீதையில்,**

"ஸஹ யஜ்ஞை: ப்ரஜாஸ் ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி:
அநேந ப்ரஸவிஷ்யத்$_4$வம் ஏஷ வோஸ்த்விஷ்டகாமது$_4$க்"

[யஜ்ஞங்களுடன் கூட, ப்ரஜைகளை முன் ஸ்ருஷ்டித்து, பகவான் பின்வருமாறு சொன்னார்:—இந்த யஜ்ஞத்தைக்கொண்டு வ்ருத்தி யடையுங்கள். இது நீங்கள் விரும்பியதையெல்லாம் கொடுக்கக் கடவது.] என்று சொல்லப்பட்டது இங்கு அநுஸந்திக்கத்தக்கது. (தேஹ...) இந்த ஸ்ருஷ்டிரூபமான யஜ்ஞத்தை அறிந்து அர்த்தத் துடன் அநுஸந்திப்பவர்கள், ஸநாதனிகரான ஸாத்யர்களென்னும் பெயரையுடைய நித்யஸூரிகள் வாழும் வைகுண்டத்தை மஹிமை யுடையவர்களாய் அடைகிறார்கள். (நாகம்) 'நாகஸ்ய ப்ருஷ்டே' என்று நாராயணவல்லியில் சொல்லப்பட்ட வைகுண்டமே இங்கு சொல்லப்படுகிறது. (மஹிமான:...) ஜ்ஞானஸங்கோசமில்லாதவர் களாக அனந்தகருடவிஷ்வக்ஸேநாதிகளிருக்கும் பரமபதத்தை அடைகிறார்கள்.

"ஒளிக்கொண்ட சோதியமாய் உடன் கூடுவதென்றுகொலோ..?
அளிக்கின்ற மாயப்பிரான் அடியார்கள் குழாங்களையே"

என்று ஆழ்வாரால் பிரார்த்திக்கப்பட்ட பலத்தைப் பெறுவார்கள். இதிலிருந்து ஸாத்யதேவர்களென்று சிலர் இருக்கிறார்களென்றும் அவர்கள இருக்குமிடத்தையடைவதே மோக்ஷமென்றும் ஏற்படு கிறது. ஸாத்யர்-ப்ராப்யர்.

உத்தரானுவாகம்.

1. அத்$_3$ப்$_4$யஸ் ஸம்பூ$_4$த: ப்ருதி$_2$வ்யை ரஸாச்ச
விச்வகர்மணஸ் ஸமவர்த்ததாதி$_4$
தஸ்ய த்வஷ்டா வித$_3$த$_4$த்$_3$ ரூபமேதி
தத்புருஷஸ்ய விச்வமாஜாநமக்$_3$ரே.

[உலகம் ஜலத்தினின்றும் உண்டாயிற்று. பூமியிலுள்ள அன்ன ரஸத்தினுல் விருத்தியடைந்தது. பரமபுருஷனிடத்திலிருந்து உண் டாயிற்று. புருஷோத்தமன் அதை தரித்துக்கொண்டு வியாபிக்கிறான். ஆகையால் இவ்வுலகமெல்லாம் மஹாபுருஷனுக்கு சேஷமாயிருப்பது என்று முன்னமே அறிந்தேன்.]

http://acharya.org

(அத்ப்யஸ் ஸம்பூத:) உலகம் நீரிலிருந்து உண்டாயிற்று என்று சொல்லப்படுகிறது. மஹோபனிஷத்தில்,

''அத₂ புநரேவ நாராயணஸ் ஸோ'ந்யம் காமம் மநஸா த்₄யாயீத
தஸ்ய த்₄யாநாந்தஸ்த₂ஸ்ய லலாடாத் ஸ்வேதோ₃பதத் தா இமா
ஆப: தத் ஹிரண்மயமண்ட₃மப₄வத்''

[பிறகு, நாராயணன் மற்றொரு ஸங்கல்பத்தை மனத்தினால் செய்தார்: ஸங்கல்பம் செய்தவுடன் அவருடைய நெற்றியிலிருந்து வேர்வை விழுந்தது. அதுவே இங்கு காணப்படும் தண்ணீர். அதில் ஹிரண்மயமான அண்டம் உண்டாயிற்று.] என்று சொல்லப்பட்டது இங்கு உணர்ந்தப்படுகிறது. இதுவே 'அப ஏவ ஸஸர்ஜாதௌ...தத₃ண்ட₃மப₄வத் ஹைமம்' [நாராயணன் தண்ணீரை முதலில் படைத்தான். அதில் பொன்மயமான அண்டமுண்டாயிற்று.] என்று மனுஸ்ம்ருதியிலும் உரைக்கப்பட்டது. ஆழ்வாரும் ''தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி'' என்று அருளிச்செய்தார். (ப்ருதிவ்யை ரஸாச்ச ஸம்பூத:) பூமியிலிருந்து உண்டான அன்னரஸங்களினால் வ்ருத்தியடைந்தது. (விச்வகர்மண:...) பரமாத்மாவினிடமிருந்து இவை உண்டாயின. ஜலத்திலிருந்தும் பூமியிலிருந்தும் தானாகவே உண்டாகவில்லை என்று உணர்த்துவதற்காக உலகத்தை உண்டாக்கிய உத்தமனால் கர்மானுகுணமாக உயர்வுதாழ்வுகளுடன் உண்டாக்கப்பட்டனவென்று உரைக்கப்படுகிறது. மஹோபனிஷத்தை அனுஸரித்து, இங்கு சொல்லப்படும் 'விச்வகர்மா' முதலிய சப்தங்கள் நாராயணனையே குறிக்கின்றனவென்று அறிகிறோம். (தஸ்ய...) ஸர்வேச்வரன் அந்த உலகத்தை தரித்துக்கொண்டு வியாபிக்கிறான். தா₄தா-நாராயண:' என்றல்லவோ ஸுபாலோபனிஷத்தில் இம்மஹாபுருஷன் கீர்த்திக்கப்பட்டான். (தத்புருஷஸ்ய விச்வம்) ஆகையினால் இவ்வுலகம் புருஷனுடையதே. உலகம் உடமை. உடையவன் புருஷோத்தமன். 'க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூ₄தமித₃ம் விச்வம் சராசரம்' [சராசரமான ஜீவராசிகளெல்லாம் க்ருஷ்ணனுடையதன்றோ?] என்னும் ஸ்ம்ருதிவசனம் இந்த ச்ருதியை விவரிக்கிறது. (ஆஜாநம் அக்ரே) 'பகவானுக்கு சேஷபூதமானது இவ்வுலகம் என்பதை நான் முன்னமே அறிந்தேன்' என்று வேதபுருஷன் வெளியிடுகிறான். பகவான் உலகத்தை உண்டாக்கி, தரித்து, வியாபிப்பதாகச் சொல்லுகிறபடியாலும் உலகத்தை உடையவன் என்று உரைக்கிறபடியாலும் விசிஷ்டாத்வைதவேதாந்தமே வேதத்தின் உட்பொருள் என்பது நன்கு விளங்குகிறது.

http://acharya.org

2. வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம், ஆதி3த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்
தமேவம் வித்3வாந் அம்ருத இஹ ப4வதி, நாந்ய: பந்தா2 வித்3யதேயநாய

'அண்டக்குலத்துக்கதிபதியாகி, அண்டத்திற்கு அப்புறத்தி லுள்ள சுத்தஸத்வமயமான ஸ்ரீவைகுண்டத்தில் கோடிஸூர்ய ப்ரகாசத்துடன் எழுந்தருளியிருக்கும் இந்த மஹாபுருஷனை நான் அறிகிறேன்; அவனே உபாயமும், உபேயமும் என்று அறிபவன் இந்த ஜன்மத்திலேயே மோக்ஷமடைகிறான். மோக்ஷத்திற்கு வேறு மார்க்கமில்லை' என்னும் இந்த ரஹஸ்யார்த்தத்தை வேதம் ஆதராதிசயத்தினால் மறுபடியும் உத்கோஷிக்கிறது. இதன் பொருள் பூர்வானுவாகத்தில் விசேஷமாக விவரிக்கப்பட்டது. பூர்வானுவாகத்தில் 16-வது மந்த்ரத்தின் முற்பாதியும், 17-வது மந்த்ரத்தின் பிற்பாதியும் காண்க.

3. ப்ரஜாபதிச் சரதி க3ர்ப்பே4 அந்த:, அஜாயமாநோ ப3ஹுதா4 விஜாயதே
தஸ்ய தீ4ரா: பரிஜாநந்தி யோநிம், மரீசீநாம் பத3மிச்ச2ந்தி வேத4ஸ:

[பரமபுருஷன் ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாய் ஸஞ்சரிக்கிறான். உத்பத்தியில்லாத புருஷோத்தமன் பலபடியாகப் பிறக்கிறான். அவனுடைய அவதாரங்களை தீரர்களே அறிகிறார்கள். (அவர்கள்) பரம புருஷன் வாழும் நித்யஸூரிகளின் நாட்டை விரும்புகிறார்கள்.]

"ததோ விஷ்வங் வ்யக்ராமத் ஸாசநாநசநே அபி4" என்று பூர்வானுவாகத்தில் சொல்லப்பட்ட அவதாரவைபவம் இங்கு அனுபவிக்கப்படுகிறது.

"விஷயஸ்பாதிபூ4மித்வாத் ஜ்ஞாநதௌ3ஷ்கர்யசங்கிநாம்
அவதாரேண ஸௌலப்4யம் த்ரிஷ்டுபே4ாக்தம் த்ருதீயயா"

[பகவத்ஸ்வரூபமானது அறிவிற்கெட்டாதபடியால், அவனை அறிய முடியாது என்று ஸந்தேஹிப்பவர்களுக்கு, மூன்றாவது மந்திரத்தில் அவதார ஸௌலப்யம் சொல்லப்பட்டது.] என்று மணவாளமாமுனிகளின் ப்ரமாணத்திரட்டில் எடுக்கப்பட்டிருக்கும் 'நாராயண முனி' என்பவரின் வியாக்யானத்தில் இந்த மந்த்ரார்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. முந்தின மந்த்ரத்தில் ப்ரஹ்மத்தை அறிவதினாலேயே மோக்ஷம் என்று சொல்லப்பட்டது. இங்கு அவதாரங்கள் பல செய்திருக்கும் அச்யுதனை அறிவது எளிது என்று காட்டப்படுகிறது. (ப்ரஜாபதி:...அந்த:) ப்ரஜைகளைக் காப்பாற்றுபவனான ஸர்வேச்வரன் ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாக ஸஞ்சரிக்கிறான். இந்த வாக்யம் நாராயணவல்லியிலும் காணப்படுகிறது. அதனால் நாராயணனே

http://acharya.org

இங்கு ப்ரஜாபதி சப்தத்திலை சொல்லப்படுகிறுன் என்று நிர்ண யிக்கிறேம். மேலும், ஸர்வஜீவர்களையும் காப்பது விஷ்ணுவுக்கே அஸாதாரணமானது. 'பதிம் விச்வஸ்ய' என்று சொல்லப்பட்ட அவனே உலகிற்கெல்லாம் ஸ்வாமியாவான். ஆத்மாவிற்கு நிலை நின்ற புருஷார்த்தமாகிற மோக்ஷத்தை மற்றவர்களால் கொடுக்க இயலாது. நசிக்கக்கூடிய சிற்றின்பப் பலன்களாகிய, அர்த்தகாமங் களையும், பகவானிடமிருந்து வரம்பெற்றே கொடுக்கிறுர்கள். மஹாபாரதத்தில்,

"ராஜாதி,ராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்ரஹ்மமயோ மஹாந்
ஈச்வரம் தம் விஜாநீம: ஸ பிதா ஸ ப்ரஜாபதி:"

[எல்லா அரசர்களுக்கும் மேலான அரசராயிருப்பவரும், பெரிய வரும், ப்ரஹ்மஸ்வரூபியுமானவர் விஷ்ணு. அவரை ஈச்வரரென்று அறிகிறேம். அவரே (எல்லோருக்கும்) தந்தை, அவரே ப்ரஜாபதி.] என்று சொல்லப்பட்டபடியால் ப்ரஜாபதிசப்தத்திலை குறிக்கப் படுபவன் கேசவனே. "அஸத்(இல்லாதவை)திலிருந்து வேறுபட்ட எல்லா வஸ்துக்களுக்கும் ஸ்வாமியாகவும், ரக்ஷகராகவும் இருப்பவர் ப்ரஜாபதி" என்று நாராயணயதி வியாக்யானம் செய்தார். (கர்ப்பே அந்த: சரதி) ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாயிருக்கிறுன். இப்படி அந்தர்யாமியாயிருப்பதற்குக் காரணமென்ன? ப்ரயோஜனமென்ன? துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனங்கள் காரணமல்ல. இவனுக்குத் தன்னிடம் அத்வேஷத்தை உண்டாக்கி, ஆபிமுக்யத்தை வளர்ப்ப தற்காக அந்தர்யாமியாயிருக்கிறுன் அநந்தன். யோகஸாக்ஷாத் காரம் கைவந்தவர்களுக்கு ஹ்ருதயகமலத்தில் ஸேவை ஸாதிக்கிறுன். தினந்தோறும் உறங்கும்போது ஜீவர்களை ஆலிங்கனம்செய்து கொண்டு ஸகலச்ரமங்களையும் போக்குகிறுன். ஜன்மம் கழியும்போது மரணவஸ்தையின் ச்ரமத்தைக் குறைக்கிறுன். மோக்ஷமடைபவர் களான ஜீவாத்மாக்களுக்கு ஸுஷும்நு நாடியைத் தெரியும்படி செய்து அதன்வழியே ப்ரஹ்மரந்த்ரத்தைபேதித்துக்கொண்டு போக அநுக்ரஹம் செய்கிறுன்.

அந்தர்யாமியை அறிவது மிகவும் கடினம். பூகத (பூமிக்குள் இருக்கும்) ஜலத்திற்கு ஸமானமானது அந்தர்யாமிபவஸ்தை என்று ஆசாரியர்கள் அருளியிருக்கிறுர்கள். மண்ணைத் தோண்டியெடுத்து அவசியமானல் பாறையையும் உடைத்து பூமியிலிருக்கும் ஜலத்தைத் தேடிக் கண்டுபிடிக்குமாப்போலே மாம்ஸசரீரமாகிற மண்ணிலை மறைக்கப்பட்டதும், நெஞ்சாகிற பாறையிலை மூடப்பட்டதுமான

http://acharya.org

அந்தர்யாமியை அறியமுடியாதென்றே பூகதஜலத்தை உவமையிட்டார்கள். அம்மாதிரியான அருமையில்லாமல், எல்லாருடைய ஊனக்கண்ணுக்கும் இலக்காகும்படியான அவதாரங்களை அடுத்தபடியாக அறிவிக்கிறது. அப்படி அவதாரம் செய்வதற்குக் கர்மம் காரணமன்று. அனுக்ரஹமே காரணம். கிணற்றில் விழுந்த குழந்தையை எடுப்பதற்குத் தாயும் கூடக்குதிக்குமாப்போல் ஸம்ஸாரஸாகரத்தில் அமிழ்ந்து அவஸ்தைப்படும் சேதனர்களை அக்கடலினின்றும் கரையேற்றுவதற்காக நாட்டில் பிறந்து மனிசர்க்காகப் படாதனபடுகிறான் நாராயணன். துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனம் செய்வதற்காகப் பிறக்கிறான் பரவாஸுதேவன். இந்திரியங்களுக்கு எட்டாத தன்னை ஸம்ஸாரிகள் கண்ணுக்குத் தோன்றும்படி செய்கிறான். வேண்டினவற்றையெல்லாம் தன்னடியார்களுக்குத் தருகிறான். குளிரக்கடாக்ஷிப்பது, பேசுவது, கேட்பது, சிரிப்பது, ஆலிங்கனம்செய்வது, இப்படிப் பலவிதமாக அவர்களை ஆட்கொள்ளுகிறான். "ஹஸிதம் பாஷிதம் சைவ" [சிரிப்பதையும், பேசுவதையும்] என்றார் வால்மீகி. ராமனுடைய ஆலிங்கனத்தை நினைத்து அனுமானும் "பாவோ நாந்யத்ர கச்சதி" [என் நினைவு வேறெங்கும் செல்லாது.] என்றார். "ஸம்ஸ்ப்ருச்யாக்ருஷ்ய ச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே" [க்ருஷ்ணன் அக்ரூரனைத்தொட்டு, இழுத்து, ப்ரீதியுடன் நன்கு தழுவிக்கொண்டார்.] என்றதும் இங்கு நினைக்கத்தக்கது.

விபவாவதாரகாலங்களில்லாமல் இழந்தவர்க்கும் அவ்விழவு தீருவதற்காக எடுக்கப்படும் அர்ச்சாவதாரமும் இங்கு சொல்லப்படுவதாகக் கொள்ளலாம். ஒரு காலத்திலோடும் காட்டாறு போன்றது விபவாவதாரம். அதில் தேங்கின மடுப்போன்றது அர்ச்சாவதாரம். பாஞ்சராத்ர வைகானஸ ஆகமங்களில் சொன்னபடி ஸுதை, சிலை முதலியவைகளால் செய்யப்பட்ட ரூபங்களில் ஆவாஹனம் செய்யப்பட்டு சாஸ்த்ரவச்யனாயும் அர்ச்சகபராதீனனாயும் இருக்கிறான் இருடீகேசன். எல்லா ஜனங்களுடைய ஊனக்கண்ணுக்கும் தன்னை விஷயமாக்கிக்கொண்டு ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுக்கிறான்.

(அஜாயமானோ பஹுதா விஜாயதே) 'பிறப்பில்லாதவனாயிருந்தும் பலவிதமாகப் பிறக்கிறான்' என்கிறது வேதம். "அஜோபி ஸந்-ஸம்பவாமி" [பிறப்பற்றவனாயிருந்தும் பிறக்கிறேன்.] என்று க்ருஷ்ணபகவான் கீதையில் அருளினான். "பிறப்பில் பல்பிறவிப் பெருமான்" என்றார் வேதம் தமிழ் செய்த மாறன். (அஜாயமாநः

http://acharya.org

"ஜநிஜராதி$_2$ ஸகலது$_3$ரித தூ$_2$ர:" [பாபபலமான ஜன்மம், கிழத்தனம் முதலியவைகளற்றவன்.] என்று வியாக்யானம் செய்தார் நாராயண யதி. இங்கு 'பிறப்பு' என்பது, கிழத்தனம், இறப்பு முதலிய ஆறு விகாரங்களையும் காட்டுகிறது. (பஹுதா விஜாயதே) எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தான். "ப$_3$ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" [எனக்குப் பல பிறப்புகள் கடந்துவிட்டன.] என்று தன் ஜன்மத்தைத் தானே சொன்ன அவனும் நெஞ்சு உளுக்கியிறே இருப்பது. ஆழ்வாரும் 'சன்மம் பலபல செய்து' என்றார். (பஹுதா) தேவர், திர்யக், மனுஷ்யர், ஸ்தாவரம் என்று சொல்லப்படும் எல்லா யோனிகளிலும் பிறந்தான். வ்யூஹம், விபவம், அர்ச்சை எனப்படும் எல்லா அவஸ்தைகளிலும் ஆவிர்ப்பவித்தான் என்றும் பொருள் கொள்ளலாம். பிறக்கைக்கு ஹேதுவான கர்மம் இல்லாமலிருந்தும் கர்மவச்யரும் பிறவாத ஜன்மங்களிலும் பிறந்தான். கர்மவச்யன் பிறவிக்கு எல்லை காண்கிறோம். அகர்மவச்யன் (கர்மத்திற்கு வசப்படாதவன்) பிறவிக்கு எல்லை காணவில்லை. கர்மத்திற்கு எல்லையுண்டு. அனுக்ரஹத்துக்கு எல்லையில்லை. (விஜாயதே) 'பலவிதமாகப் பிறக்கிறான்' என்றும், 'விசேஷமாகப் பிறக்கிறான், என்றும் பொருள் கொள்ளலாம். 'தேவர் முதலிய ஒவ்வொரு ஜாதியிலும் பலவிதமாகப் பிறக்கிறான்' என்று நாராயணமுனி. (விசேஷேண ஜாயதே) விசேஷமாகப் பிறக்கிறான். அப்ராக்ருத சரீரத்தை இதர ஸஜாதீயமாக்கிப் பிறக்கிறான். 'சங்கொடுசக்கரம் வில் ஒண்மையுடைய உலக்கை ஒள்வாள் தண்டு கொண்டு' பிறக்கிறான். தன் ஐச்வர்யசக்திகளில் ஒன்றும் குறையாமல் பிறக்கிறான். அவதார ரஹஸ்யத்தை அறிந்து அனுஸந்தித்தவர்கள் ஜன்மம் அறும்படி பிறக்கிறான். பிறந்தபின்பே மேன்மையடைகிறான். வேதத்திலும் "யுவா ஸுவாஸா: பரிவீத ஆகா$_3$த் ஸ உ ச்ரேயாந் ப$_4$வதி ஜாயமாந: தம் தீ$_4$ராஸ: கவய உந்நயந்தி" [யௌவனத்தையுடையவனாகவும், அழகிய பீதாம்பரத்தை தரித்தவனாகவும், நித்யஸூரிகளால் சூழப்பட்டவனாகவும் புருஷோத்தமன் பிறக்கிறான். அவன் பிறந்தபின்பே மேன்மையுடையவனாகிறான். அவனை தீரர்களான கவிகள் தியானிக்கிறார்கள்.] என்றல்லவோ சொல்லப்பட்டது. (விஜாயதே) கர்மவச்யர்களைப்போன்ற சரீரத்துடன் பிறக்கிறான். அவர்கள் பத்து மாதம் வயிற்றிலிருந்து பிறந்தால் இவன் பன்னிரண்டு மாதம் கர்ப்பவாஸம் செய்து பிறக்கிறான். "ததச்ச த்$_3$வாத$_3$சே மாஸே" [பன்னிரண்டாவது மாதத்தில்] என்றும், "பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்ட" என்றுமல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு

http://acharya.org

ஆபத்தேற்படும் காலத்தையே தனக்குப் பிறக்கைக்குக் காலமாகக் கொண்டு பிறக்கிறான். அவர்களுடைய ஸம்ரக்ஷணத்தையே ப்ரயோஜனமாகக்கொண்டு பிறக்கிறான். ஆவிர்பூதம் மஹாத்மனா" [மஹாத்மாவான நாராயணன் ஆவிர்பவித்தான்.] என்ற வால்மீகி மஹரிஷி அவதரித்ததினால் தோஷமில்லை என்பதைக் காட்டுவதற்காக 'ஆவிர்ப்பவித்தான்' என்று உரைத்தார். ஆச்ரிதர்க்காகக் கர்ப்பவாஸம் பண்ணின மஹாகுணத்தை இழக்கலாகாது என்று வேதம் 'பிறந்தான்' என்கிறது. ஆழ்வாரும் 'தோன்றினவாறும்' என்று சொல்லாதே 'பிறந்தவாறும்' என்றல்லவோ பாடினார். ஸம்ஸாரிகளுக்குப் பிறக்கப் பிறக்க ஞானம் மழுங்கும். ரத்னத்தைத் தேய்க்கத் தேய்க்க ஒளி அதிகமாமாப்போலே அவதாரம் செய்யச் செய்ய இவனுடைய மஹாகுணங்கள் பிரகாசிக்கும். ராமாவதாரத்தைக் காட்டிலும் க்ருஷ்ணாவதாரத்தில், பாண்டவதூதனாயும், பார்த்தஸாரதியாயுமிருந்து தன் பெருங்குணங்களை வெளியிட்டானன்றோ? தானே சொல்லும்போதும் "ஜந்ம கர்ம ச மே திவ்யம்" [என்னுடைய ஜன்மங்களும், சேஷ்டிதங்களும் அப்ராக்ருதமானவை] என்று மதிப்புடனன்றோ சொன்னான்.

(தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்) அவனுடைய அவதார ரஹஸ்யத்தை தீரர்களே அறிகிறார்கள். (தீரா:) புத்திமான்கள். 'தீரர்களான கவிகள்' என்று மற்றொரு ச்ருதியில் சொல்லப்பட்டவர்கள். பராங்குச பட்டநாத பரகாலாதிகளே இவன் பிறப்பின் பெருமையை அறிவார்கள். (தீரா:) கலங்காதவர்கள் என்றும் பொருள்கொள்ளலாம். ச்ருதிகளை அறியாதவர்கள் புருஷோத்தமனுடைய அவதாரமஹிமையை அறியாமல், 'பரப்ரஹ்மத்திற்கு ஜன்மமுண்டோ' என்று ஸந்தேஹப்பட்டுக்கொண்டு 'இவன் மனுஷ்யனோ?' என்று கலங்குவார்கள். அம்மாதிரியான கலக்கமில்லாதவர்கள். "பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ நாவேதவிந்மநுதே தம் ப்ருஹந்தம்" [ஒவ்வொரு அவதாரத்திலும் ஸர்வலோகபிதாவான நாராயணன் தன்னால் உண்டாக்கப்பட்ட ஒருவனைத் தனக்குத் தகப்பனாகக்கொண்டு பிறக்கிறான். வேதத்தை அறியாதவன் அவனே பரமாத்மாவென்று அறியமாட்டான்.] என்றல்லவோ மறைகள் முறையிட்டன. (தஸ்ய யோநிம் பரிஜாநந்தி) அவனுடைய அவதாரத்தை நன்கு அறிகிறார்கள். (பரிஜாநந்தி) திரும்பத்திரும்ப அறிகிறார்கள். ஸகல சேஷ்டிதங்களையும் அறிகிறார்கள். அதைவிட்டுப் பரத்வத்தினும் மனம் செலுத்தமாட்டார்கள். "புாவோ ஜாங்யத்ர கூச்சதி"

http://acharya.org

என்பார்கள். "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றிருப்பார்கள். நம்மாழ்வார், ஸர்வேச்வரன் யசோதையால் உரலில் கட்டுண்டு ஏங்கிய எளிவை அநுஸந்தித்தவுடன் "எத்திறம்!" என்று ஆறு மாதம் மோஹித்துக் கிடந்தாரன்றோ. மறுபடியும் "பிறந்தவாறும்" என்று பரமபுருஷனுடைய பிறப்பை அநுஸந்தித்து ஆறுமாதம் மோஹித்துக் கிடந்தார் என்று நம் ஆசார்யர்கள் அருளிச்செய்வர்கள். அவனுடைய பிறப்பின் பெருமையை அறிந்தவர்களை 'தீரர்கள்' என்றது வேதம்; அறியாதவர்களை "மூடர்கள்" என்ருன் கண்ணன். 'யோநிம்' என்றது ச்ருதி; 'மாநுஷீம் தநும் ஆச்ரிதம்' என்ருன் மாதவன். அறிந்தவர்களை 'பரிஜாநந்தி' என்றது மறை; அறியாதவர்களை 'அவஜாநந்தி' என்ருன் அச்யுதன்.

எதற்காக இந்த அவதார ரஹஸ்யத்தை அறிகிருர்கள்? எனில்: (மரீசீநாம் பதமிச்சந்தி வேதஸ:) சோதிமயமான நித்யஸூரிகளுடைய பரமபதத்தை அடைவதற்காக என்று சொல்லப்படுகிறது. (மரீசீநாம்பதம்...வேதஸ:)' நித்யஸூரிகளின் நாடு' என்று சொன்னபின் அப்ரதாநமாக பரமபுருஷனுடைய தேசம் என்றும் சொல்லப்படுகிறது. நம்மாழ்வாரும் "வானவர் நாடு" என்றல்லவோ அருளிச்செய்தார். அவர்களிட்ட வழக்காயிருப்பதால் அவர்களுடைய பரமபதம் என்றுஉரைக்கப்படுகிறது. ' வானவர் நாட்டையும்" என்னுமிடத்தில் வியாக்யானத்தில் நம் ஆசார்யர்கள் "குடியிருப்பாரோபாதியாயிற்று பரமபதத்தில் ஸ்ரீவைகுண்டநாதனுக்கு (இருப்பு). ப்ராப்திதேசம் நித்யஸூரிகள் இட்டவழக்காயிருக்கும்." என்று அருளிச்செய்தது இங்கு அநுஸந்திக்கத்தக்கது. அவதார ரஹஸ்யத்தை அறிவதால் மோக்ஷமடைவார்களென்பது.

"ஜந்ம கர்ம ச மே தி₃வ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:
த்யக்த்வா தே₃ஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந!"

[அர்ஜுநா! என்னுடைய அப்ராக்ருதமான ஜன்மத்தையும் சேஷ்டிதங்களையும் இம்மாதிரியாக எவன் உண்மையாக அறிகிருனே அவன் தேஹத்தை விட்டு மறு ஜன்மத்தையடைவதில்லை. என்னையே அடைகிருன்.] என்று கீதாசார்யனுல் சொல்லப்பட்டது. இம்மாதிரியான அவதார வைபவம் மற்ற தேவதைகளுக்குக் கிடையாது.

4. யோ தே₃வேப்₄ய ஆதபதி, யோ தே₃வாநாம் புரோ ஹித:
பூர்வோ யோ தே₃வேப்₄யோ ஜாத:, நமோ ருசாய ப்₃ராஹ்மயே.

http://acharya.org

[எந்தப்பரமபுருஷன் நித்யஸூரிகளுக்காகப் பிரகாசிக்கிறரோ, எவர் நித்யஸூரிகளுக்கு அநாதிகாலமாக ஹிதத்தைக் கொடுப்பவரோ, எவர் நித்யஸூரிகளுக்கும் முதல் வராயிருக்கிறரோ, பிரகாசிப்பவரும், பரப்ரம்ஹஸ்வரூபியுமான அவருக்கு நமஸ்காரம்.]

இந்த மந்திரத்தில் புருஷோத்தமன் நித்யஸூரிநிர்வாஹகன் என்னும் விஷயம் சொல்லப்படுகிறது. இதையே வேதம் தமிழ் செய்த மாறனும்,

''வானவராதியென்கோ? வானவர் தெய்வமென்கோ?
வானவர் போகமென்கோ? வானவர் முற்றுமென்கோ?'' என்று திருவாய்மொழியில் திருவாய்மலர்ந்தருளினர்.

(யோ தேவேப்ய ஆதபதி) 'எந்தப் பரமபுருஷன் நித்யஸூரிகளுக்காக ஆதியஞ்சோதியுருவுடனும், ஸமஸ்தகல்யாணகுணங்களுடனும் பிரகாசிக்கிறரோ' என்று சொல்லப்படுகிறது. ஜிதந்தே ஸ்தோத்ரத்திலும், ''பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே'' [பக்தர்களுக்காகவே நீ பிரகாசிக்கிறய்] என்றல்லவோ சொல்லப்பட்டது. நம்மாழ்வார் இதை 'வானவர் தெய்வமென்கோ?' என்ருர். (யோ தேவாநாம் புரோஹித:) எந்தப் பரமாத்மா நித்யஸூரிகளுக்காக அநாதிகாலமாக ஹிதத்தைக் கொடுக்கிறரோ. அவர்களுக்கு உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமான பகவத்கைங்கர்யத்தைக் கொடுக்கிறர் என்று தாத்பர்யம். ''தத்ர விப்ராஸோ விபந்யவோ'' என்று சொல்லுகிறபடி பகவானைச் சூழ்ந்திருந்தேத்துவதாகிற ப்ரஹ்மானந்தத்தை அவர்கள் அநாதிகாலமாக அநுபவிக்கிறர்கள். கைங்கர்யமே உண்மையான ஹிதம்; இவ்வுலகிலுள்ள ஐச்வர்யங்களும் ஹிதமல்ல. கைவல்யநிஷ்டர்களுடைய ஆத்மாநுபவமும் உண்மையான ஹிதமல்ல. ப்ரகாரத்தளவில் நிற்கும் ஆத்மானுபவமாத்ரத்திலன்றிக்கே ப்ரகாரியளவும் செல்லும் பரமபுருஷார்த்தலக்ஷண மோக்ஷமே ஹிதமெனத்தகுந்தது. சடகோபன் இதை 'வானவர் போகமென்கோ? வானவர் முற்றுமென்கோ?' என்று அருளினர். (பூர்வோ...ஜாத:) எவர் நித்யஸூரிகளுக்கு முதல்வராயிருக்கின்றரோ. 'வானவராதியென்கோ?' என்ருர் நம்மாழ்வார். நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகன். அவர்களுடைய ஸத்தைக்கு (இருப்புக்கு) காரணமாயிருப்பவன். அவர்கள் நித்யராயிருக்கும்போது அவர்களுக்கு ஸத்தாஹேதுவென்று எப்படிச் சொல்லமுடியும்? அவர்களுடைய நித்யத்வம் அவனுடைய நித்யேச்சையாலே இருக்கிற

http://acharya.org

படியால் அவர்களுக்கு ஸத்தாஹேதுவென்று சொல்லலாம். இந்த இச்சை அழிந்தால் நித்யத்வமும் மாளவேண்டிவருமன்றோ? (ருசாய) திவ்யமங்களவிக்ரஹத்துடன் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்படியான பரமபுருஷனுக்கு. 'ஒளிமணிவண்ணன்' என்று சொல்லப்பட்ட அவனுடைய சோதிவடிவு இங்கு உணர்த்தப்படுகிறது. (ப்ராஹ்மயே நம:) பரப்ரஹ்மமாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனுக்கு நமஸ்காரம். 'நாராயணாய நம:' என்று த்வயத்தில் சொல்லப்பட்டது, இங்கு உணர்த்தப்படுகிறது. 'ப்ராஹ்மயே' என்னுமிடத்தில் நான்காம் வேற்றுமையால் கைங்கர்யம் பிரார்த்திக்கப்படுகிறதென்றும், 'நம:' என்று 'அந்தக் கைங்கர்யத்தினால் வரும் ஆனந்தமும் என்னுடையதல்ல; பகவானுடையதே' என்று சொல்லப்படுகிறதென்றும் கொள்ள வேண்டும். இந்த மந்திரத்திலுள்ள தேவசப்தங்களை ப்ரஹ்மாதி தேவபரமாகவும் ஆசாரியர்கள் பொருள் கொண்டுள்ளனர்.

5. ருசம் ப்₃ராஹ்மம் ஜநயந்த: தே₃வா அக்₃ரே தத₃ப்₃ருவந்
யஸ்த்வைவம் ப்₃ராஹ்மணோ வித்₃யாத் தஸ்ய தே₃வா அஸந் வசே.

[பரப்ரஹ்மத்தினுடைய ப்ரீதியை உண்டுபண்ணும் நித்யஸூரிகள் புருஷோத்தமனுக்கெதிரில் 'நம:' என்னும் அச்சொல்லை உரைத்தனர். ப்ரஹ்மஜ்ஞானியான ஒருவன் உம்மை இப்படி அறிந்தானாகில், அவனுக்கு ப்ரஹ்மாதி தேவர்கள் வசத்திலிருப்பார்கள்.]

(ருசம் ப்ராஹ்மம் ஜநயந்த: தேவா...) புருஷோத்தமனுடைய ப்ரீதியை உண்டுபண்ணும் தேவர்களான நித்யஸூரிகள், அவனுக்கு எதிரில் 'நம:' என்னும் சொல்லைக் கூறுகின்றனர். இதிலிருந்து பகவானுடைய முகோல்லாஸத்திற்காகக் கைங்கர்யம் செய்யப்படுகிறதேயொழிய, நம்முடைய ஆனந்தத்திற்காகவல்ல என்று உணர்த்தப்படுகிறது. அவனுகக்கிறானென்பதற்காக நாமுகந்து செய்யவேண்டுமேயொழிய நம் உகப்புக்காகக் கைங்கர்யம் செய்யலாகாது. 'நம:' என்னும் பதம் "அஹமபி நமம பக₃வத ஏவாஹமஸ்மி" [நானும் எனக்குரியேனல்லேன். பகவானுக்கே நான் உரியவன்.] என்னும் பொருளையுடையதன்றோ. "நம இத்யேவ வாதி₃ந:" ['நம:' என்றே சொல்லுபவர்கள் நித்யஸூரிகள்.] என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. "ஹூயிஷ்ட₂ாம் தே நம உக்திம்" என்கிறபடி 'நம:' என்னும் சொல்லை மிகப்பெரிதாகவன்றோ நினைத்து உகக்கிறான் மாதவன். (யஸ்த்வைவம்...) எவன் இம்மாதிரி பகவத்கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்றிருக்கிறானோ அவனுக்கு ப்ரஹ்மாதி தேவர்கள் வசத்திலிருக்கிறார்கள். விஷ்ணுபுராணத்தில்,

http://acharya.org

"ஸ்வபுருஷமபி₄வீக்ஷ்ய பாசஹஸ்தம் வத₃தி யம: கில தஸ்ய கர்ணமூலே
பரிஹர மது₄ஸூத₃நப்ரபந்நாந் ப்ரபு₄ரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்".

[யமன் பாசத்தைக் கையில்கொண்ட தன் தூதனைப்பார்த்து, அவன் காதினுள் பின்வருமாறு சொல்லுகிறான்:- "மதுஸூதனனை சரணமடைந்தவர்களை அணுகாதே. நான் மற்றவர்களுக்கே பிரபு: வைஷ்ணவர்களுக்கல்ல.] என்றல்லவோ யமன் கூறியதாகச் சொல்லப்பட்டது.

திருமழிசையாழ்வாரும்,

"திறம் பேண்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனும் தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு.

என்று இதையே அருளிச்செய்தார். தொண்டரடிப்பொடியாழ்வார் "நாவலிட்டுழி தருகின்றோம் நமன் தமர் தலைகள் மீதே" என்று அருளிச் செய்தார். திருமங்கையாழ்வாரும் "வள்ளலே! உன் தமர்க் கென்றும் நமன் தமர் கள்ளர்போல்" என்று அருளினார். "என் தமர் நமன் தமரால் ஆராயப்படார்காண்" என்றும், "நமன் தமர் என் தமரை வினவப் பெறுவாரலர்" என்றும் அபயமளித்தான் அச்யுதன். பகவானைப் பற்றினவுடன் எத்தேவர் வாலாட்டும் ஒழியும். "பிஞ்ஞகன் தன்னோடும் எதிர்வன் அவன் எனக்கு நேரான்" [பிஞ்ஞகன்-சிவன்] என்றல்லவோ திருமழிசைப்பிரான் அருளிச்செய்தார்.

6. ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ, அஹோராத்ரே பார்ச்வே
நக்ஷத்ராணி ரூபம் அச்விநௌ வ்யாத்தம்
இஷ்டம் மநிஷாண அமும் மநிஷாண ஸர்வம் மநிஷாண.

[உனக்கு பூமிதேவியும், ஸ்ரீதேவியும் பத்நிகள். பகலுமிரவும் பக்கத்திலிருக்கிறார்கள். உன் உருவம் நக்ஷத்திரங்கள்போல் (ஒளியுள்ளதாய்) இருக்கிறது. அச்விநீதேவர்கள்போல் (உம்முடைய திருமுகம்) அழகாயிருக்கிறது. இஷ்டத்தைக்கொடும். இந்தக் கைங்கர்யத்தைக் கொடும். எல்லாவற்றையும் கொடும்.]

முன் இரண்டு மந்த்ரங்களிலும் சொல்லப்பட்ட கைங்கர்யம் எம்பெருமானும் பிராட்டியுமான சேர்த்தியிலேயே செய்யப்பட வேண்டும் என்று கோஷிக்கிறது இந்த ருக். இதுவரையில், விக்ர

http://acharya.org

ஹத்தாலும், குணங்களாலும், பரிகரங்களாலும் பரமபுருஷன் நிர்ணயிக்கப்பட்டான். புருஷஸூக்தத்தின் கடைசி மந்த்ரமான இதில் அவனுக்கே அஸாதாரணமான பிராட்டிகளைக்கொண்டு நிச்சயிக்கப் படுகிறான். பட்டரும்,

"வேதா₃ந்தா: தத்வசிந்தாம் முரபி₄து₃ரஸி யத்பாத₃சிந்ஹைஸ்தரந்தி"

[வேதாந்தங்கள், முராரியின் மார்பில் எந்தப் பிராட்டியின் திருவடியடையாளத்தைக்கொண்டே, பரதத்வவிசாரத்தை நடிக்கின்றனவோ] என்று இவ்விஷயத்தை அழகாக அருளிச் செய்தார். மேலும்,

"ஈஷ்டே கச்சித் ஜக₃த இதி ய: பௌருஷே ஸூக்த உக்த:
தம் ச த்வத்கம் பதிமதி₄ஜகௌ₃வுத்தரச்சாநுவாக:"

[புருஷஸூக்தத்தில் உலகத்திற்கெல்லாம் நாயகனாகச் சொல்லப் பட்டவனை, உன்னுடைய (லக்ஷ்மியினுடைய) பதியென்று உத்தரானுவாகம் உத்கோஷித்தது.] என்றும் அருளிச்செய்தார். திருவின் நாயகன், நிலமகள் நண்பன், ஆயர்மடமகள் அன்பன், அச்யுதனே இங்கு அறிவிக்கப்படுகிறான், நமக்கு உபாயோபேயங்கள் ச்ரிய:பதியே ஒழிய ப்ரஹ்மசாரி நாராயணனல்ல என்னும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் இங்கு வெளியிடப்படுகிறது.

(தே) உமக்கு. 1. தலைகளாயிரம், கண்களாயிரம், தாள்களாயிரமுடைய உமக்கு. 2. ஸகலசராசரங்களையும் வியாபித்திருக்கும் உமக்கு. 3. "ஸர்வம் விஷ்ணுமயம் ஜக₃த்" எனப்படும் உமக்கு. 4. தேசகாலவஸ்து பரிச்சேதமில்லாத உமக்கு. 5. மோக்ஷத்திற்கு ப்ரபுவான உமக்கு. 6. ஸ்ரீவைகுண்டவாஸியான உமக்கு. 7. அண்டத்தை உண்டாக்கின உமக்கு. 8. நான்முகனைப் படைத்த நாராயணனான உமக்கு. 9. ப்ரக்ருதிமண்டலத்திற்கப்பால் சோதியுருவாயிருக்கும் உமக்கு. 10. நாமரூபங்களைக் கொடுத்தருளிய உமக்கு. 11. ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களால் தியானிக்கப்படும் உமக்கு. 12. 'உம்மை உபாஸிப்பதைத்தவிர வேறு மோக்ஷோபாயமில்லை' என்னும் கீர்த்திபெற்ற உமக்கு. 13. பாற்கடலில் பள்ளிகொண்ட பரமனாய் அந்தர்யாமியாயிருக்குமுமக்கு. 14. பிறப்பில் பல்பிறவிப் பெருமானாயிருக்குமுமக்கு. 15. அவதார ரஹஸ்யத்தை அறிந்தவர்களால் அடையப்படும் உமக்கு. 16. நித்யஸூரிகளுக்கு நாதனாயும், அவர்களால் வணங்கப்படுபவனாயுமிருக்கும் உமக்கு. இங்கு

http://acharya.org

சொன்ன ஏற்றங்களுக்கெல்லாம் மேலான ஏற்றத்தை அடுத்தபடியாகச் சொல்லுகிறது. (ஹ்ரீச்ச லக்ஷ்மீச்ச பத்ந்யௌ) பூதேவியும், ஸ்ரீதேவியும் உமக்குப் பத்னிகள். இரண்டாவது 'சகார'த்தினால் நீளாதேவியும் உணர்த்தப்படுகிறாள். ஆழ்வாரும் "குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும்" என்று அருளினார். "ஆச்ரிதர் குற்றத்தைப் பொறுப்பிக்கும் பிராட்டி; 'குற்றம் காண்பானேன்? பொறுப்பானேன்?' என்றிருக்கும் ஸ்ரீபூமிப்பிராட்டி; நப்பின்னைப் பிராட்டி க்ஷமைதான் ஒரு வடிவாயிருக்கும். பெரியபிராட்டியார் இவனுக்கு ஸம்பத்தாயிருக்கும்; அது விளையும் தரை (பூமி); அதனை அனுபவிக்கும் போக்தாவாயிருக்கும் நப்பின்னை;" என்ற பெரிய வாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தி இங்கு அனுஸந்திக்கத்தக்கது. "ந கச்சித் நாபராத்யதி" [குற்றம் செய்யாதவர்கள் ஒருவருமில்லையே.] என்பாள் ஸ்ரீதேவி. 'குற்றமே இல்லையே' என்று காணுக்கண்ணிட்டிருப்பாள் பூமிதேவி. "க்ஷமயா ப்ருதிவீஸம:" [(ஸ்ரீராமன்) பொறுமையில் பூமிக்கு ஸமானமானவன்.] என்றல்லவோ சொல்லப்பட்டது. பூமிப்பிராட்டிக்கு நாம் செய்யும் குற்றங்களுக்கோர் கணக்கில்லை. அவள் நமக்குச் செய்யும் நன்மைகளுக்கோ எல்லையில்லை. நாம் உண்டாவதற்கு உதவுகிறாள். நாம் நடக்கும்போதும், கிடக்கும் போதும் நம்மைத் தாங்குகிறாள். நாம் உயிருடனிருப்பதற்கு வேண்டியவைகளைக் கொடுத்துக் காப்பாற்றுகிறாள். நாம் அதற்குப் பதில் அவளை வெட்டுகிறோம்; கூரிய ஆயுதங்களினால் குத்திக் கீறிக் கிழிக்கிறோம்; மலஜலாதிகளை விட்டு அசுத்தம் செய்கிறோம். பூமியின் புத்ரர்களான நாம் ஒருவர்க்கொருவர் த்வேஷிப்பதன் மூலமும், தூஷிப்பதன் மூலமும் முக்கரணங்களாலும் முடிவில்லாத துன்பங்கள் செய்வதன் மூலமும் நம் தாயாகிய பூமியைத் துன்புறுத்துகிறோம். பொறுமையாகிய பாலை நமக்கு ஊட்டின தாயின் வழி நாம் நடக்க வேண்டாமா? பொறையின் மக்கள் குறை கூறலாமோ? பொறுமையில் மிக்கவளாகையாலும், பூமியில் பிறந்து வளர்ந்த நமக்கு இஹபர புருஷார்த்தங்களை அடையச் செய்பவள் இவளேயாகையாலும் முதலில் 'ஹ்ரீ:' என்று பூமிதேவி சொல்லப்பட்டாள். தேசபக்தியென்பது தாயிடம் அன்பே. ஆனால் அந்த மாதவியோ மாதவனுடையவள். அவளிடம் பக்தியென்று பெயர்பூண்டு அவனியாள் நாதனின் ஆஜ்ஞைகளை மீறுகிறார்கள் சிலர். பூமிதேவி அவர்களைப் பொறுக்காமல் பாரமாகவே கருதுவாள். புருஷோத்தமனிடமிருந்து பூமியைப் பிரிப்பவர்கள் தகப்பனை விட்டுத்தாயைப் பிரிப்பவர்களாகக் கருதப்படுவார்கள். 'பிராட்டியை பகவானை விட்டுப் பிரித்த ராவணன்

http://acharya.org

தலையறுப்புண்டான்; பிரிக்கப்பார்த்த சூர்ப்பணகை மூக்கறுப்புண்டாள்' என்று நம் ஆசார்யர்கள் அருளிச்செய்திருப்பது இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

(லக்ஷ்மீ:) திவ்யலக்ஷணங்கள் பொருந்தியவளாதலால் 'லக்ஷ்மி' என்று கீர்த்திபெற்றிருக்கிருர் பெரியபிராட்டியார். தேவர், மனுஷ்யர் முதலிய எல்லாராலும் பிரார்த்திக்கப்படுபவளாதலால் 'லக்ஷ்மி' என்றுரைக்கப்படுவதாகவும் கொள்ளலாம். பகவானுக்கு ஜ்ஞாநானந்தாதி குணங்களைப்போல் ஸ்வரூபநிருபகபூதையாயிருப்பவள். மற்ற எல்லா மஹிஷிகளுக்கும் தலைவியாயிருப்பவள். ஜீவர்களுககெல்லாம் புருஷகாரமாயிருப்பவள். உலகிலுள்ள ஐச்வர்யங்களையெல்லாம் கொடுப்பவள் **ஸ்ரீதேவி**. ஐச்வர்யங்கள் எட்டு வகைப்படும்:- 1. தங்கம், வெள்ளி முதலியவைகள் (தனலக்ஷ்மி). 2. தான்யங்கள் (தான்ய லக்ஷ்மி). 3. புத்ரபௌத்ராதிகள் (ஸந்தான லக்ஷ்மி). 4. ரதகஜதுரகபதாதிகளையுடைய ராஜ்யலக்ஷ்மி. 5. வீர்ய (பராக்ரம) லக்ஷ்மி. 6. விஜயலக்ஷ்மி. 7. துஷ்டி, புஷ்டி முதலியவற்றைத்தரும் ஸௌபாக்ய லக்ஷ்மி. 8. மோக்ஷலக்ஷ்மி. இவற்றையெல்லாம் கொடுப்பவள் **ஸ்ரீதேவி**.

(ஹ்ரீச்ச லக்ஷ்மீச்ச) ஸம்பத்தாயிருப்பவள் ஸ்ரீதேவி; ஸர்வஸம்பத்துகளுக்கும் விளைநிலமாயிருப்பவள் நிலமகள். பெருமையுடையவள் பூமகள்; பொறுமையுடையவள் பூ₁தேவி. குணமுடையவள் ஸ்ரீதேவி; மணமுடையவள் மண் மடந்தை. கோஷிப்பிப்பவள் ஸ்ரீதேவி; போஷிப்பவள் பூமிதேவி. அழகுடையாள் இலக்குமி; புகழுடையாள் பூ தேவி. ஆதரமுடையவள் அலர்மேல்மங்கை. ஆதாரமானவள் அவனியாள்.

(பத்ந்யௌ) இப்படிப்பட்ட கீர்த்தியையுடைய இவர்கள் பரமபுருஷனுக்குப் பத்னிகள் என்று உரைக்கப்படுகிறது. ''பதிம் நயதி'' என்னும் வ்யுத்பத்தியின்படி ஸர்வேச்வரனைக் கண்காட்டிய இடத்தில் காரியம் செய்யச்செய்பவள் என்று பொருள்கொள்ளலாம். ''யஸ்யாவீக்ஷ்ய முக₂ம் தத₃ங்கி₃த பராதீ₄னோ வித₄த்தேகி₂லம்'' [எந்தப் பிராட்டியின் முகத்தைப் பார்த்து அவளுடைய முகபாவத்திற்கு வசப்பட்டு ஸர்வேச்வரன் எல்லாவற்றையும் செய்கிறானோ...] என்றல்லவோ **ஆழ்வான்** அருளினர். 'ப்ரஜைகளை பகவானிடத்தில் அழைத்துச் செல்லுபவள்' என்றும் பொருள்கொள்ளலாம். இதனால் இவ்விருவரும் புருஷகாரமாயிருக்கிறார்களென்று அறிவிக்கப்படுகிறது.

http://acharya.org

கிறது. "லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி:" [லக்ஷ்மி புருஷகாரம் (சிபார்சு) செய்பவள் என்று பரமரிஷிகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறாள்.] என்ற பாஞ்சராத்ரவசனம் இங்கு அனுஸந்திக்கத்தக்கது. பூதேவியும் புருஷகாரத்வத்தை உடையவளென்பது 'விஷ்ணுக்ராந்தே வஸுந்தரா...தயா ஹதேந பாபேந கச்சாமி பரமாம் கதிம்" [விஷ்ணுவினால் (த்ரிவிக்ரமாவதாரத்தில்) அளக்கப்பட்ட பூமியே...அவளால் பாபம் நீங்கினவனாகி பரமபதத்தை அடைகிறேன்.] என்று வேதத்தில் சொல்லப்பட்டது. "பத்யுர் நோ யஜ்ஞஸம்யோகே" எனகிற பாணினிஸூத்ரத்தின்படி ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதாகிற யஜ்ஞத்தில் ஸஹதர்மசாரிணியாயிருப்பவள் என்றும் பத்னீசப்தத்திற்குப் பொருள் கொள்ளலாம். '"ஹ்ரீ:' என்று லஜ்ஜைக்கு அபிமானி தேவதை: 'லக்ஷ்மீ:' என்று ஐச்வர்யத்துக்கு அபிமானி தேவதை" என்றார் வித்யாரண்யர்.

எவ்வுலகத்திலிருப்பவரும், எம்மதத்திலிருப்பவரும் விரும்பும் இஹபுருஷார்த்தங்கள் தனம், தான்யம், ஸௌக்யம் என்பவையேயாம். இவைகளைக் கொடுப்பவர்கள் ஸ்ரீபூமி நீளாதேவிகளே. இவர்கள் மூவருக்கே 'ஸ்ரீஸூக்தம்' 'பூஸூக்தம்' 'நீளாஸூக்தம்' என்று மூன்று ஸூக்தங்கள் வேதத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் நாராயண ஸூக்தத்திற்குப் பின் விவரிக்கப்படும். ஸ்ரீஸூக்தம் லக்ஷ்மியைச் சொல்லுவதென்பதை சைவர்களுட்பட எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஸ்ரீதேவியினால் கொடுக்கப்படும் ஐச்வர்யங்களும், பூமியில் விளையும் நவதான்யங்களும், காய் கனிகளும், அதிலிருக்கும் மண், நீர், அக்னி, வாயு, ஆகாசம் எனும் பஞ்சபூதங்களுமில்லாமல் மனிதர்களோ மற்ற பிராணிகளோ உயிருடனிருக்கமுடியுமோ? இஹலோகஸுகஸாதனங்களான நெய், பால், தயிர், உண்ணும் சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலை முதலிய பதார்த்தங்களை விரும்பாதார் யாவரே இவ்வுலகிலுள்ளார்? இந்த ஸ்ரீஸூக்த, பூஸூக்த, நீளாஸூக்தங்களைப் படிப்பதனால் இஹலோக புருஷார்த்தங்களெல்லாவற்றையும் அடையலாம். இவற்றைத் தருவதுடன் நில்லாமல் பரமபுருஷார்த்தமாகிய பகவத் கைங்கர்யத்தையும் பரந்தாமனுடைய பத்னிகள் கொடுக்கிறார்கள். புருஷோத்தமன் தன் பத்னிகள் மூலமாக இவற்றைத் தருகிறான்.

(அஹோராத்ரே பார்ச்வே) பகலுமிரவும் பரந்தாமன் பக்கத்தில் இப்பத்னிகளிருக்கிறார்கள். அகலகில்லேன் இறையும் என்றிருக்

http://acharya.org

கிறார்கள். நம்மாழ்வாரும், "உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர் மடமகள் என்றிவர் மூவர்" என்றும், "நிழல் போல்வனர்" என்றும் அருளிச்செய்தார். எதற்காக இப்படி இருக்கிறார்களென்றால்: "சஞ்சலம் ஹி மந:" [மனது சஞ்சலமானது.] என்றும், "நின்றவா நில்லா நெஞ்சு" என்றும் சொல்லுகிறபடியே சேதனர்கள் மிகவும் நிலையற்ற நெஞ்சையுடையவர்களாதலால், அவர்களுக்கு பகவத் விஷயத்தில் ருசி ஏற்பட்டவுடன் அவர்களை பகவானிடம் சேர்த்து விடவேண்டும் என்றே அச்யுதனின் அருகிலிருக்கிறார்கள். மேலும், இருவருமான சேர்த்தியே உத்தேச்யம். "தேவிமாராவர் திருமகள் பூமி ஏவ மற்றமரர் ஆட்செய்வார்" என்று நித்யஸூரிகளும் இவர்களுடைய சேர்த்தியில் ஏவினதை எடுத்துக் கைநீட்டுபவர்களென்று சொல்லப் பட்டிருக்கிறது. அவர்கள் ஏவலைக்கேட்பதே பரமானந்தமாகும். சேஷனான இளையபெருமாள் "க்ரியதாமிதி மாம் வத$_3$" [செய்யப்படட்டும் என்று என்னை ஆஜ்ஞாபிப்பாயாக.] என்று இதையே விரும்பினார். "ரமமாணா வநே த்ரய:" [மூவரும் வனத்தில் ரமித்தார்கள்.] என்று சொல்லப்பட்டபடி ஜீவன், எம்பெருமான், பிராட்டி என்னும் மூவர்களுடைய சேர்த்தியே பரஸ்பரம் ஆனந்தத்தைத் தருவதாகும். ஸீதா ராமர்களுக்குப் பரஸ்பர ஸம்ச்லேஷத்தினாலேற்படும் ஸந்தோஷம், இளையபெருமாளுக்கு (லக்ஷ்மணனுக்கு) இருவருமான சேர்த்தியை ஸேவிப்பதனால் ஏற்பட்டதன்றோ. இங்கு பிராட்டிகளும் பகவானும் வெவ்வேறு தத்வங்கள் என்பதும் காட்டப்படுகிறது.

"ராமஸ்ய த$_3$க்ஷிணே பார்ச்வே பத்$_3$மா ஸ்ரீஸ்ஸமவஸ்த்தி$_2$தா
ஸவ்யே து ஹ்ரீர் விசாலாக்ஷீ"

[ராமனுடைய வலது புறத்தில் தாமரையாளாகிற ஸ்ரீதேவி இருந்தாள்; இடது புறத்தில் விசாலமான கண்களையுடைய பூதேவி இருந்தாள்.] என்னும் ஸ்ரீராமாயண வசனத்தாலும் "த$_4$ரணீதே$_3$வீ த$_3$க்ஷிணேதரகா$_3$ ததா$_2$" [பூமிதேவி இடது புறத்திலிருப்பவள்.] என்னும் பாத்மபுராண வசனத்தினாலும் இந்த மந்திரம் விவரிக்கப்பட்டது. இத்தால் "திருவில்லாத் தேவரைத் தேறேன்மின்தேவு" என்று திருமழிசையாழ்வாரால் சொல்லப்பட்டபடி, மற்ற தெய்வங்களிற் காட்டிலும், மாதவனின் மேன்மை உரைக்கப்பட்டது. மற்றிருந்தீர் கட்கறியலாகா மாதவனென்பதோர் அன்பனாகிய அச்யுதனுக்கு "தே$_3$வ்யா காருண்யரூபயா" என்று ப்ரஸித்தமடைந்த வேரி(வாஸனை) மாறாத பூமேலிருப்பவளான ஸ்ரீதேவியும், மாதவியாகிய பூதேவியும் பத்னிகளாயிருந்துகொண்டு சேதனர்களை ஸ்ருஷ்டிக்கும்படியும்,

http://acharya.org

மோக்ஷத்தை அடையும்படியும் செய்கிறார்கள். இம்மூவரும் சேர்ந்து கொண்டு ஒருவர்க்கொருவர் சேதனரிடம் அன்புகாட்டுவதில் போட்டி போடுகிறார்கள்.

''தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்பர்போலும்''
என்று அருளிச்செய்தார் பெரியாழ்வாரும்.

இம்மாதிரியாக பகவானுக்கே ஸ்ரீ, பூமி, நீளா என்று மூன்று பத்னிகள் பரத்வாவஸ்தையிலும் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவர் புத்ரனான பிரமனுக்கும் ஸரஸ்வதி, காயத்ரி, ஸாவித்ரி என்று மூன்று பத்னிகளிருப்பதாக அறிகிறோம். அவருடைய பெயரனாகிய ஸுப்ரஹ்மண்யனுக்கும் வள்ளி, தேவஸேனா என்று இரு பத்னிகளிருப்பதாகப் புராணங்களில் பேசப்பட்டிருக்கிறது. புருஷோத்தமனுடைய விபவாவதாரங்களிலும் க்ருஷ்ணாவதாரத்தில் அஷ்டமஹிஷிகளுடனிருந்தது எல்லோரும் அறிந்ததே. யாஜ்ஞவல்க்யர் இரண்டுபத்னிகளையுடையவரென்பது வேதப்ரஸித்தம். வைஷ்ணவ ஆசார்யச்ரேஷ்டர்களான பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை என்னும் இம்மூவரும் இரண்டு பதனிகளை உடையவர்களென்று படித்திருக்கிறோம். இப்படி புண்ய பூமியாகிய பாரததேசத்தில் நாம் வணங்கும் தெய்வமும், ரிஷிகளும், ஆசார்யர்களும் அனேக பத்னிகளை உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். ஸ்ம்ருதிகளிலும் பலதாரங்களை மணம் செய்துகொள்ளப் புருஷர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. பலகோடிக் கணக்கான வருஷங்களாக இருந்துவரும் இவ்வழக்கத்தை கிறிஸ்தவ மதக் கொள்கையைக் காரணமாகக்கொண்ட ஐரோப்பியரின் அனுஷ்டானத்தைக்கொண்டு மாற்ற சட்டம் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். அப்படிச் செய்வது நமது நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் அதில் வழங்கிவரும் மதங்களுக்கும் பெருத்த தீங்காகும்.

(நக்ஷத்ராணி ரூபம்) உம்முடைய திருவுருவம் நக்ஷத்ரங்கள் போல் அழகாயிருக்கிறது. ஆதித்யனைப்போன்ற ஒளியையுடையவன் என்று முன் சொன்னதில் த்ருப்தியில்லாமல் கணக்கற்ற நக்ஷத்ரங்களைப்போல் அழகியதாயிருக்கிறது உன் சோதியுருவம் என்று சொல்லப்படுகிறது. சங்கசக்ரங்கள், திவ்யாபரணங்கள், ஹிரண்யவர்ணையான பிராட்டி பீதாம்பரம் முதலியவைகளுடன் கூடிய திவ்யமங்கள விக்ரஹம் நக்ஷத்ரங்களுடன் கூடிய நீலமேகம்போல் விளங்குகிறதன்றோ.

http://acharya.org

"தாராரூபாணி த்₃ருச்யந்தே யாங்யேதாநி நப₄ஸ்ஸ்த₂லே
மம ரூபாணி தாந்யேவ"

[ஆகாயத்தில் காணப்படும் நக்ஷத்ரரூபங்களெல்லாம் என்னுடைய உருவங்களே.] என்று மஹாபாரதத்தில், ஆரண்யபர்வத்தில் பகவான் மார்க்கண்டேயரைக் குறித்துச் சொன்ன வசனத்தை அனுஸரித்து நக்ஷத்ரங்கள் பகவானுடைய சரீரங்களே என்றும் பொருள் கொள்ளலாம். (அச்விநௌ வ்யாத்தம்) அழகில் மிக்க உம்முடைய திருமுகமண்டலம் அச்விநீ தேவர்கள்போல் விளங்குகிறது. "அழகனே! காப்பிடவாராய்" என்றார் பெரியாழ்வார். கண்டவர் தம் மனம் வழங்கும் அழகுடையவனன்றோ இவன். அச்விநீதேவர்களைக்காட்டிலும் அழகிய உருவமுடையவர் லீலாவிபூதியில் இல்லாமையால் இவர்கள் உபமானமாகச் சொல்லப்பட்டனர். இவர்களும் பகவானுடைய திருமுகமண்டலத்திற்கு ஒப்பாகார்கள். பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்

"விஹரதுமயி ரங்கி₃ணச்சூலிகாப்₃ரமரகதிலகோர்த்₄வபுண்ட்₃ரோஜ்ஜ்வலம்
முக₂மம்ருததடாகசந்த்₃ராம்பு₃ஜஸ்மர ஹரசுசி முக்₃த₄மந்த₃ஸ்மிதம்"

[திருமுடி, திருநெற்றியில் அலையும் திருக்குழல், திலகம், திருமண்காப்பு, இவற்றால் பிரகாசிப்பதும், அம்ருததடாகம், சந்திரன், தாமரைப்பூ, இவற்றின் கர்வத்தைப் போக்கடிப்பதும், வெண்மையான, அழகிய புன்முறுவலை உடையதுமான ஸ்ரீரங்கநாதனுடைய முகம் என்னிடம் விஹாரம் செய்யக்கடவது.] என்று பகவானுடைய திருமுகத்தை ஒப்பற்றதாகவன்றோ பேசினார்.

இதற்குமேல் வேதபுருஷன், இப்புருஷஸூக்தத்தை அனுஸந்தித்தவர்களுக்கு இஹலோக புருஷார்த்தங்களையும், பகவத்கைங்கர்யத்தையும் கொடுக்கும்படி புருஷோத்தமனைப் பிரார்த்திக்கிறான். இங்கு கைங்கர்யப்ரார்த்தனை செய்யப்படுகிறதென்பது கருணைக்கடலான பெரியவாச்சான்பிள்ளையால் பரந்தரஹஸ்யத்தில் அருளிச்செய்யப்பட்டது. (இஷ்டம் மநிஷாண) இவர்கள் விரும்பின எல்லாப் புருஷார்த்தங்களையும் கொடும். இதனால் ப்ரயோஜநாந்தரபரராக மாட்டார்களோ என்ற ஸந்தேஹம் எழுகிறது. புருஷோத்தமனிடம் மற்ற பலன்களை நமக்காக விரும்பினால் ப்ரயோஜநாந்தரபரராவோம். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இவ்வுலகிலுள்ள எல்லா ஸம்ருத்திகளும் உண்டாகவேண்டும் என்று பிரார்த்திப்பது தோஷமன்று. ஆழ்வார்களும் "நன்மக்களைப் பெற்று மகிழ்வரே" என்றும், "நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே" என்றும்,

http://acharya.org

"விடுமால் வினை வேண்டிடில் மேலுலகும் எளிதாயிடும் அன்றி
இலங்கொலிசேர்
கொடுமாகடல் வையகம் ஆண்டு மதிக்குடை மன்னவராய் அடி கூடுவரே"
என்றும் அருளிச்செய்தனரன்றோ.

(அமும் மநிஷாண) முன் மந்திரங்களில் சொல்லப்பட்ட கைங்கர்யம் 'அமும்' என்று காட்டப்படுகிறது. நித்யஸூரிகள் செய்யும் கைங்கர்யத்தையும் கொடும்; பரமபுருஷார்த்தமாகிற பகவதநுபவத்தைக் கொடுப்பீராக. பிராட்டியும் நீருமாயிருக்கிற சேர்த்தியில் அடிமையை அருளுவீராக. (ஸர்வம் மநிஷாண) எல்லாவற்றையும் கொடும். வேண்டிற்றெல்லாம் தருபவனன்றோ தாமோதரன்.

"சாய்கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டையும்
நீ கண்டுகொள்ளென்று வீடும் தரும் நின்று நின்றே"
என்றார் நம்மாழ்வார்.

இந்த ருக்கில் அச்யுதனுடைய அன்பெனும் அவியாவிளக்கை ஸ்ரீபூமிகள் தூண்டுகிறார்களென்றும், புருஷோத்தமன் அன்புமயமானவனென்றும், சோதிவடிவானவனென்றும், அழகமர்சூழொளியனென்றும் சொல்லப்பட்டது.

"ஸர்வம் ஜகந்மம பூவேதிதி ஸஞ்சிந்தயந் முநி:
த்யாயேத் புருஷஸூக்தேந ப்ரதிபாத்ய ஜநார்த்தநம்
விஷ்ணு: புருஷஸூக்தார்த்த இதீயம் வைதிகீ ச்ருதி:
புருஷஸ்ய ஹரேஸ் ஸூக்தம் ஸர்வபாபப்ரணாசநம்"

['இவ்வுலகெல்லாம் எனக்காகட்டும்' என்று நினைத்துக்கொண்டு, முனியானவன், புருஷஸூக்தத்தினால் ஜநார்த்தனனைச் சொல்லி, தியானிக்கக்கடவன். விஷ்ணுவே புருஷஸூக்தத்தினால் சொல்லப்படுபவனென்று வேதத்தில் உரைக்கப்பட்டது. ஹரியாகிற புருஷனுடைய ஸூக்தம் எல்லாப் பாபங்களையும் போக்கடிப்பது.] என்று கார்க்கசௌநகமஹரிஷிகளால் புருஷஸூக்தம் நாராயணனைச் சொல்லுவதென்று உரைக்கப்பட்டது. போதாயனரும்,

"அதைநம் ருக்யஜுஸ்ஸாமபிஸ் ஸ்துவந்தி த்ருவஸூக்தம் ஜபித்வா
புருஷஸூக்தம் ச அப்ஸாம்ச்ச வைஷ்ணவாந் மந்த்ராந்"

[இந்த நாராயணனை, த்ருவஸூக்தத்தையும், புருஷஸூக்தத்தையும் மற்ற வைஷ்ணவ மந்திரங்களையும் ஜபித்து, ருக்யஜுஸ்ஸாமவேதங்

http://acharya.org

களால் ஸ்தோத்ரம் செய்கிறார்கள்.] என்று விஷ்ணுவினுடைய ஆராதனத்தில் புருஷஸூக்தஜபம் செய்ய விதித்திருக்கிறார்.

"ஏஷா வைஷ்ணவீ நாமஸம்ஹிதா, ஏதாம் ப்ரயுஞ்ஜந் விஷ்ணும் ப்ரீணாதி"

[இது விஷ்ணுவினுடைய நாமஸம்ஹிதை; இதை ப்ரயோகிப்பவன் விஷ்ணுவை ப்ரீதியடையச் செய்கிறான்.] என்று ஸாமவிதிப்ராஹ்மணத்தில் சொல்லப்பட்டது. ஆதர்வணத்திலும், கோபதப்ராஹ்மணத்தில், "வைஷ்ணவ்யா புருஷஸூக்தம்" என்று உரைக்கப்பட்டது.

"புருஷஸ்ய ஹரேஸ்ஸூக்தம் ஸ்வர்க்₃யம் த₄ந்யம் யசஸ்கரம்...
ச்ருதிஷு ப்ரப₃லா மந்த்ராஸ் தேஷ்வப்யத்₄யாத்ம வாதி₃ந:
தத்ராபி பௌருஷம் ஸூக்தம் ந தஸ்மாத்₃ வித்₃யதே பரம்"

[புருஷனாகிய ஹரியின் ஸூக்தம் ஸ்வர்க்கத்தைத் தருவது; மேலானது; கீர்த்தியைக் கொடுப்பது. வேதங்களில் மந்த்ரங்கள் மேலானவை; அவைகளிலும் பரமாத்மாவைச் சொல்லுபவை சிறந்தவை. அவற்றிலும் புருஷஸூக்தம் பெருமைவாய்ந்தது. அதைக் காட்டிலும் மேலானதில்லை.] என்று சௌநக ஸ்ம்ருதியில் புருஷ ஸூக்தத்தின் பெருமை பேசப்பட்டது. வியாஸ ஸ்ம்ருதியிலும்,

"ந விஷ்ண்வாராத₄நாத் புண்யம் வித்₃யதே கர்ம வைதி₃கம்
தஸ்மாத₃நாதி₃ மத்₄யாந்தம் நித்யமாராத₄யேத் ஹரிம்
தத்₃ விஷ்ணோரிதி மந்த்ரேண ஸூக்தேந பௌருஷேண ச
நைதஸ்ய ஸத்₃ருசோ மந்த்ர: வேதே₃ஷூக்தச் சதுர்ஷ்வபி"

[விஷ்ணுவை ஆராதிப்பதைக்காட்டிலும் புண்யமான வைதிககர்மம் கிடையாது. ஆகையால் "தத்₃ விஷ்ணோ: பரமம் பத₃ம்" என்னும் மந்திரத்தாலும், புருஷஸூக்தத்தாலும், ஆதிமத்யாந்தமில்லாத ஹரியை தினந்தோறும் ஆராதிக்கக்கடவன். இதற்கு ஸமானமான மந்திரம் நான்கு வேதங்களிலும் சொல்லப்படவில்லை.] என்று உத்கோஷிக்கப்பட்டது. விஷ்ணு ஸ்ம்ருதியிலும் "வாஸுதே₃வம் ஸமர்ச்சயேத்" [வாஸுதேவனை அர்ச்சனை செய்யவேண்டியது.] என்று ஆரம்பித்து "ஏவமப்₄யர்ச்ய து ஜபேத் ஸூக்தம் வை பௌருஷம் தத:" [இம்மாதிரி ஆராதித்து புருஷஸூக்தத்தை ஜபிக்கவேண்டியது.] என்று சொல்லப்பட்டது. வாதூல ஸூத்ரத்தில், "யத்ர யத்ர கர்மப்ரேஷோ ஜாயதே தத்ர தத்ர புருஷம் த்₄யாயந் புருஷஸூக்தம் ஜபேத₃ர்ச்சயேத் பூர்ணத்வாத் புருஷ:" [கர்மப்ரம்சம் உண்டாகும்போது, புருஷனை தியானித்து,

http://acharya.org

புருஷஸூக்தத்தை ஜபித்து ஆராதிக்கவேண்டியது; பூர்ணனாகையால் புருஷனெனப்படுகிறான்.] என்று புருஷஸூக்தத்தின் சிறப்பு சொல்லப்பட்டது. இம்மாதிரியாகப் பல்லாயிரக்கணக்கான இடங்களில் புருஷஸூக்தத்தில் ப்ரதிபாதிக்கப்படுமவன் நாராயணனே என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிஹாஸபுராணங்களிலும் பலபலவிடங்களில் இது பகவத்பரமென்று பேசப்பட்டிருக்கிறது. ஸாரமான சிலவற்றை எடுத்துக் காட்டுவோம். மஹாபாரதத்தில், மோக்ஷதர்மத்தில்,

"ப3ஹவ: புருஷா ராஜந் உதாஹோ ஏக ஏவது।
கோஹ்யத்ர புருஷ: ச்ரேஷ்ட2: கோ வா யோநிரிஹோச்யதே॥"

[ப்ராஹ்மணரே! புருஷர்கள் பலரா? அல்லது ஒருவனா? (பலரானால்) இவர்களுள் எந்தப் புருஷன் மேலானவன்? எவன் மற்றவர்களுக்கு காரணமாயிருப்பவன்?] என்று ஜனமேஜயர் வைசம்பாயனரை வினவினார். வைசம்பாயனரும் தாம் சொல்லப்போகும் விஷயம் அதிரஹஸ்யமானதாகையால் தன் குருவான வியாஸரை நமஸ்கரித்து,

"ப3ஹவ: புருஷா ராஜந் ஸாங்க்2யயோக3விசாரிணாம்।
நைததி3ச்ச2ந்தி புருஷம் ஏகம் குருகுலோத்3வஹ॥
ப3ஹூநாம் புருஷாணாஞ்ச யதை2கோ யோநிருச்யதே।
ததா2 தம் புருஷவ்யாக்4ரம் வ்யாக்2யாஸ்யாமி கு3ணாதி4கம்॥
இத3ம் புருஷஸூக்தம் ஹி ஸர்வவேதே3ஷு பார்தி2வ।
ருதம் ஸத்யம் ச விக்2யாதம் ருஷிஸிம்ஹேந சிந்திதம்॥"

[குருகுலச்ரேஷ்டனான அரசனே! ஞானிகளும் யோகிகளும் புருஷர்கள் பலரென்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஒருபுருஷன் என்பதை அவர்கள் அங்கீகரிக்கமாட்டார்கள். பல புருஷர்களுக்கும் காரணமானவனும், குணங்களில் சிறந்தவனுமான புருஷச்ரேஷ்டனைச் சொல்லுகிறேன். ரிஷிச்ரேஷ்டரால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட இந்தப் புருஷஸூக்தம் எல்லா வேதங்களிலும் உண்மையை உணர்த்துவது என்று கீர்த்திபெற்றிருக்கிறது.] என்று அத்வைதநிரஸனம் செய்து புருஷஸூக்தமே காரண புருஷனைக் கூறுகிறது என்று உரைத்து, புருஷோத்தமன் யாரென்பதை நிர்ணயம் செய்ய ப்ரஹ்மாவுக்கும் ருத்ரனுக்கும் நடந்ததான பின்வரும் ஸம்பாஷணையைச் சொன்னார்:-

முன் ஒரு காலத்தில், பாற்கடலின் நடுவிலுள்ள வைஜயந்தமென்னும் பர்வதத்தில் பிரமன் தவம் செய்துகொண்டிருக்கும்

http://acharya.org

போது, சிவபிரான், தன் தகப்பனான பிரமனை அடிபணிந்து பல புருஷர்களை ஸ்ருஷ்டிசெய்யும் நீர் எந்தப்புருஷனை தியானிக்கிறீர்? என்று கேட்டார். அதற்கு பிரமன்

"ச்ருணு புத்ர யதா2 ஹ்யேஷ புருஷ: சாச்வதோவ்யய:...
ந ஸ ஶக்யஸ் த்வயா த்3ரஷ்டும் மயாந்யைர்வாபி ஸத்தம...
மமாந்தராத்மா தவ ச யேசாந்யே தே3ஹிஸம்ஜ்ஞிதா:...
விச்வமூர்த்த4ா விச்வபு4ஜ: விச்வபாத3ாக்ஷிநாஸிக:...
மஹாபுருஷசப்3த3ம் ஸ பி3ப4ர்த்யேகஸ் ஸநாதந:...
ஸஹி நாராயணோ ஜ்ஞேய: ஸர்வாத்மா புருஷோ ஹி ஸ:"

[குழந்தாய்! நித்யனானவனும், அழிவற்றவனுமான புருஷனைப்பற்றிக் கேட்பாயாக. அவனை உன்னாலும், என்னாலும், எவராலும் காண முடியாது. அவன் உனக்கும் எனக்கும், எல்லோருக்கும் அந்தர்யாமி. அவன் முடிகளாயிரம், அடிகளாயிரம், கைகளாயிரம், கண்களாயிரமுடையவன். பழமையான அவனே மஹாபுருஷசப்தத்தை வஹிக்கிறான். அவனை நாராயணனென்று அறிவாயாக; ஸர்வாந்தர்யாமியான அவனன்றோ புருஷன்.] என்று புருஷஸூக்தத்தால் சொல்லப்படுபவன் பரமாத்மாவான நாராயணனே என்று தெளிவாகத் தெரிவித்தார். விஷ்ணுபுராணத்தில் துருவன் இவ்விஷயத்தை விளக்கினான். மேலும், ஹரிவம்சத்தில் கைலாஸயாத்திரையின்போது ருத்ரன், உமையுடன் கூடியிருந்து கைகூப்பி, பகவானைக்குறித்து,

"ஸஹஸ்ரசீர்ஷா புருஷஸ் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்
ஸஹஸ்ரோத3ரபா3ஹுச்ச ஸஹஸ்ராத்மா தி3வஸ்பதி:...."

முதலிய ச்லோகங்களால் ஸ்தோத்ரம் செய்ததாலும் புருஷஸூக்தம் பேசநின்ற சிவனுக்கு நாயகனான நாராயணனையே சொல்லுகிறதென்று ஸித்திக்கிறது. மோக்ஷதர்மத்தில் முப்பத்துமூன்றாவது அத்யாயத்தில் பீஷ்மரை யுதிஷ்டிரன்

"நாராயணம் ஹ்ருஷீகேசம் கோ3விந்த3மபராஜிதம்
தத்வேந ப4ரதச்ரேஷ்ட2 ச்ரோதுமிச்சா2மி கேசவம்"

[பரதகுலத்தில் பிறந்தவருள் சிறந்தவரே! ஜயிக்கப்படாதவனும், கோவிந்தன், ஹ்ருஷீகேசன், கேசவன் என்னும் பெயர்களையுடையவனுமான நாராயணனை உண்மையாக அறியவிரும்புகிறேன்.] என்று கேட்க,

http://acharya.org

"கேசவோ ப₄ரதச்ரேஷ்ட₂ ப₄க₃வாநீச்வர: ப்ரபு₄:
புருஷஸ்ஸர்வமித்யேவ ச்ரூயதே ப₃ஹுதா₄ விபு₄:
ப்₃ராஹ்மணாநாம் சதம் ஜ்யேஷ்ட₂ம் முக₂ாத₃ஸ்யாஸ்ருஜத்ப்ரபு₄:"

[பாரதச்ரேஷ்டனே! ப்ரபுவும், பகவானுமான கேசவனே ஸர்வேச்வரன். ஸர்வவ்யாபியான அந்தப் புருஷனே எல்லாமென்று பல விதமாகச் சொல்லப்படுகிறான். ப்ரபுவான இவனே முகத்திலிருந்து உயர்ந்தவர்களான நூறு ப்ராஹ்மணர்களை ஸ்ருஷ்டித்தான்.] முதலிய ச்லோகங்களாலும் இவ்விஷயம் நன்கு விளக்கப்பட்டது. ராமாயணத்திலும், பாகவதத்திலும், கீதையிலும், மற்ற புராணங்களிலும் புருஷஸூக்தம் நாராயணனையே பரமாத்மாவென்று உத்கோஷிக்கிறதென்பது சொல்லப்பட்டது. இதைப் பன்னியுரைக்குங்கால் பாரதமாம். ஆதலால் இத்துடன் நிறுத்திக்கொள்கிறோம்.

கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில்,

"யம் பூ₄தப₄வ்யப₄வதீ₃சமநீசமாஹு: அந்தஸ்ஸமுத்₃ரநிலயம் யமநந்தரூபம்
யஸ்ய த்ரிலோகஜநநீ மஹிஷீ ச லக்ஷ்மீ: ஸாக்ஷாத் ஸ ஏவ புருஷோஸி
ஸஹஸ்ர மூர்த்தா₄
ஸர்வச்ருதிஷ்வநுக₃தம் ஸ்தி₂ரமப்ரகம்ப்யம் நாராயணாஹ்வயத₄ரம்
த்வமிவாநவத்₃யம்
ஸூக்தம் து பௌருஷமசேஷஜக₃த்பவித்ரம் த்வாமுத்தமம் புருஷமீச
முத₃ாஜஹார"

[முக்காலங்களிலுள்ளவற்றிற்கு ஈசனென்றும், தனக்கொரு ஈசனில்லாதவனென்றும், பாற்கடலில் பள்ளிகொண்டவனென்றும், அபரிமிதமான அவதாரரூபங்களையுடையவனென்றும், மூவுலகிற்கும் தாயாகிய லக்ஷ்மியைப் பத்னியாகவுடையவனென்றும் சொல்லப்பட்ட நீயே ஆயிரம் தலையையுடைய புருஷனாகிறாய். உன்னைப் போல், எல்லா ச்ருதிகளிலும் உத்கோஷிக்கப்பட்டதும், நிலையானதும், அசைக்கமுடியாததும், 'நாராயணம்' என்ற பெயரையுடையதும், குற்றமற்றதும், உலகையெல்லாம் புனிதமடையச்செய்வதுமான புருஷஸூக்தம், உன்னையே மேலான புருஷனாகவும், ஈச்வரனாகவும் சொல்லிற்று.] என்று புருஷஸூக்தத்தின் பெருமையையும், பொருளையும் ஸங்க்ரஹித்தார். பெரியவாச்சான்பிள்ளையும் திருவாய்மொழி வியாக்யானத்தின் கடைசியில் "ஸ்ரீமானான நாராயணனே ப்ராப்யமும் ப்ராபகமும் என்று இவர்க்குப் பக்ஷமென்னுமிடம் தோற்றிற்று. இவ்வர்த்தம் உபநிஷத் ப்ரஸித்தமும்; அநந்யபர

http://acharya.org

மான நாராயணாநுவாகத்திலே, நாராயணசப்தத்தாலே ஸர்வாதிகளைச்சொல்லி, "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்று உத்தர நாராயணத்தே சொல்லிற்று" என்று அருளிச்செய்தார்.

இந்தப் புருஷஸூக்தத்தில், ஸ்ரீபூமிநாதனான நாராயணனே பராத்பரனென்றும், அவனே நான்முகனைப் படைத்தானென்றும், அவனே ஸர்வகாரண பூதனென்றும், ஸர்வாந்தர்யாமியென்றும், லோகஸம்ரக்ஷணார்த்தம் பல அவதாரங்களைச் செய்தானென்றும், நித்யவிபூதிநாயகனென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. புருஷஸூக்தம் என்னும் பெயரிலிருந்தே ஸ்தோதாவாகிய ஜீவாத்மா உண்டென்றும், ஸ்தவப்ரியனாகிய மஹாபுருஷன் உண்டென்றும், ஸ்தோத்ரமும் உண்மையென்றும் உணர்த்தப்படுகிறது. ஜ்ஞாதா, ஜ்ஞேயம், ஜ்ஞானம் என்னும் மூன்று இல்லை என்று சொல்லும் அத்வைதவாதம் இங்கு ஒப்புக்கொள்ளப்படவில்லை. உலகம் பொய்யென்கிற ப்ரமவாதத்திற்கு, இங்கு விவரமாகச் சொல்லப்பட்ட ஸ்ருஷ்டி க்ரமத்தில் இடமுண்டோ? பரமபுருஷனுக்கு ஆயிரம் கண்கள், ஆயிரம் தலைகள் என்றும், ஆதித்யவர்ணமானவனென்றும், நக்ஷத்ரங்கள்போல் உருவமுடையவனென்றும், அச்விநீதேவர்கள் போல் அழகானவனென்றும் சொல்லப்பட்டதால் ரூபமில்லை என்னும் வாதம் வீண்வாதமென்று விளங்குகிறது. சேதனர்கள், நித்யர், முக்தர், பத்தர் என்று மூன்றுவிதமானவர்களென்றும், மோக்ஷத்தைக் கொடுப்பவன் முகுந்தவனே என்றும் காட்டப்படுகிறது. காலமும் வருங்காலம், நிகழ்காலம், கழிகாலம் என்னும் மூன்று பேதத்தை உடையதென்று தெரிகிறது. புருஷோத்தமனுடைய மஹிமை வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாததென்று அறிவிக்கப்படுகிறது. புருஷோத்தமன் ஸமஸ்தகல்யாணகுணங்கள் நிறைந்தவனென்றும், ஹேய குணம் சிறிதும் இல்லாதவனென்றும், ஸுலபமாக ஆராதிக்கத் தக்கவனென்றும் உத்கோஷிக்கப்பட்டதிலிருந்து குணமில்லை என்னும் கட்சிக்குக் கொஞ்சமும் இடமில்லை. ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டதும், "விஷ்ணோர் யத் பரமம் பதம்" என்று சொல்லப்பட்டதுமான ஸ்தானவிசேஷம் இருக்கிறதென்றும், அதை அடைவதே மோக்ஷமென்றும் விரித்துரைக்கப்பட்டிருக்கிறது. பகவத் கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்றும் அதுவும் இருவருமான சேர்த்தியில் செய்யப்படவேண்டும் என்றும் சொல்லும் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. விசிஷ்டாத்வைதமே வேதாந்தத்தின் விழுப்பொருள் என்னும் ஸித்தாந்தம் ஸ்தாபிக்கப்பட்டது.

http://acharya.org

நாராயணஸூக்த நிர்ணயம்.

இது யஜுர்வேதத்தில், தைத்திரீய உபநிஷத்தில் படிக்கப்பட்டிருக்கிறது. தைத்திரீய நாராயணவல்லியில் இது ஒரு அநுவாகமாகும். இந்த நாராயணவல்லியில் "அத்$_3$ப்$_4$யஸ் ஸம்பூ$_4$தோ ஹிரண்ய கர்ப்ப$_4$ இத்யஷ்டௌ" என்று 'அத்$_3$ப்$_4$யஸ் ஸம்பூ$_4$த:' என்று ஆரம்பிக்கும் புருஷஸூக்தத்தின் உத்தராநுவாகம் படிக்கப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறபடியால், அங்கு சொல்லப்பட்ட ஸ்ரீபூமிநாதனை புருஷன் நாராயணனே என்று இங்கு நிர்ணயிக்கப்படுகிறது. புருஷஸூக்தத்தில் புருஷனென்று சொல்லியிருந்தபோதிலும், ஸ்ரீபூமிநாதனென்று உத்கோஷித்திருந்தபோதிலும், அவனுடைய அஸாதாரணமான பெயராகிய நாராயண நாமத்தைச் சொல்லாத குறையுண்டு. அக்குறை இங்கு தவிர்க்கப்படுகிறது. இதற்கு முந்தின அநுவாகத்தில் தஹரவித்யை சொல்லப்பட்டது. அதன் முடிவில்,

"யத்$_3$வேத$_3$ாதெ$_3$ள:ஸ்வர: ப்ரோக்த: வேத$_3$ாந்தே ச ப்ரதிஷ்ட்டி$_2$த:
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பரஸ் ஸ மஹேச்வர:"

[வேதத்தின் ஆதியில் எந்த ஸ்வரமானது சொல்லப்பட்டதோ, வேதத்தின் அந்தத்திலும் எது நிலைநிற்கிறதோ, தன் காரணமாகிய அகாரத்தில் ஒடுங்கின அந்த ஓங்காரத்திற்கு அர்த்தமாயிருப்பவனே ஸர்வேச்வரன்.] என்று அகாரவாச்யனை அச்யுதனே ஸர்வேச்வரன் என்று சொல்லப்பட்டது. இத்துடன் த்ருப்தியடையாமல் பரப்ரஹ்மத்தினுடைய ஒப்புயர்வற்ற பெயரைச்சொல்லி நிர்ணயிக்கிறது இங்கு. மேலும், வேதத்திலே பல வித்யைகளில் பரவஸ்துவைக் குறித்து சிவனென்றும், சம்பு என்றும், ஹிரண்ய கர்ப்பனென்றும், பரப்ரஹ்மமென்றும், பரமாத்மாவென்றும், பரஞ்ஜ்யோதியென்றும், பரதத்வமென்றும் சொல்லப்பட்ட சப்தங்கள் நாராயணனையே குறிக்கின்றன என்று இங்கு கோஷிக்கப்படுகிறது. இதையே "வேதை$_3$ச்ச ஸர்வை: அஹமேவ வேத்$_3$ய:" [எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுபவன்] என்று கீதாசார்யன் அருளினான்.

"ஓதுவார் ஓத்தெல்லாம் எவ்வுலகத்தெவ்வெவையும்
சாதுவாய் நின்புகழின் தகையல்லால் பிறிதில்லை"

என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தார். மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடர் மாதவனேயாவான். நாஸ்திகராயும், துஷ்ப்ரக்ருதிகளாயும், பாஹ்யர்களாயும், குத்ருஷ்டிகளாயும் இருப்பவர்களுக்குத் தன் பொருளை மறைக்கிறபடியால் மறை என்று சொல்லப்படுகிறது

http://acharya.org

வேதம். அவ்வேதம், ஸத், ப்ரஹ்மம், ஆத்மா, இந்த்ரன், சம்பு, சிவன், ருத்ரன், ப்ரஜாபதி முதலிய ஸாமான்ய சப்தங்களைவிட்டுப் பரமபுருஷனைச் சில இடங்களில் சொல்லுவதன்மூலம் முற்கூறிய வர்களை மயக்குகிறது. அதனால் சிலர் ப்ரக்ருதிதான் ஜகத்காரண மென்று மயங்குகிறார்கள்; மற்றும் சிலர் ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகள் தான் பரவஸ்துவோ என்று கலங்குகிறார்கள். அந்த அசேதனப்ரக் ருதியும், ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளும் நாராயணனிடத்திலிருந்தே உண்டாயினரென்று வேதத்தில் உத்கோஷிக்கப்பட்டிருப்பதை, பகவானுடைய மாயையினால் மயக்கப்பட்டு, அவர்கள் அறிவதில்லை.

"போற்றி மற்றோர் தெய்வம் பேணப் புறத்திட்டும்மை இன்னே
தேற்றி வைத்தது எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லையென்றே"

என்று நம்மாழ்வார் அருளிச்செய்தார். புருஷோத்தமனையே சரண மாகப் பற்றின மஹான்களுக்கு உண்மைப் பொருளை உணர்த்து வதன்மூலம் வேதமென்னும் கீர்த்தியைப் பெற்றது மறை.

"தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே"

[ஸத்வரஜஸ்தமோகுணமுடையதும், என்னைச் சேர்ந்ததுமான மாயை (ப்ரக்ருதி) தாண்டமுடியாதது; என்னையே சரணமடைந்த வர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்.] என்றார் கிருஷ்ண பகவான். மஹான்கள் முற்கூறிய ஸாமான்ய சப்தங்கள் விசேஷ சப்தமாகிய நாராயணசப்தத்திலேயே முடிவடையுமென்பதை அறி வார்கள். அந்த ப்ரஹ்மா, இந்த்ரன், சிவன் முதலிய சப்தங்களும் புருஷோத்தமனுடைய பெயர்களோ. அவன் தன்னுடைய பெயர்க ளாகிய அவற்றைத் தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட சிலருக்கு அளித்தத னால் அவர்களைச் சொல்லுகிறதோ என்ற ஸந்தேஹம் சிலருக்கு ஏற்படலாம். அந்த ஸந்தேஹத்தை நீக்குவதற்காக, இங்கு எட்டு தடவை நாராயண நாமத்தைத் திரும்பத்திரும்பப் படித்ததோடன்றி யில், அவனுகந்த மற்ற பெயர்களாகிய ஹரி, அச்யுதன், அனந்தன் என்னும் பெயர்களும் படிக்கப்பட்டிருக்கின்றன.

"ந து நாராயணாதீநாம் நாம்நாமந்யத்ர ஸம்பவ:
அந்யநாம்நாம் கதிர் விஷ்ணு: ஏக ஏவ ப்ரகீர்த்தித:
ருதே நாராயணாதீநி நாமாநி புருஷோத்தம:
ப்ராதாதந்யத்ர பகவாந்............"

http://acharya.org

[நாராயணன் முதலிய பெயர்கள் மற்ற தெய்வங்களைக் குறிக்க மாட்டா. மற்ற தெய்வங்களின் பெயர்களுக்கும், விஷ்ணு ஒருவனே சேருமிடமாகக் கீர்த்தி பெற்றிருக்கிறான். நாராயணன் முதலிய பெயர்களைத்தவிர மற்ற பெயர்களைப் புருஷோத்தமன் பிறருக்குத் தந்தருளினான்.] என்ற வாமனபுராணவசனம் இங்கு அநுஸந்திக்கத் தக்கது. இம்மாதிரியாக நாராயணனே பரமாத்மா என்று நிர்ணயித்து அவன் பெருமையைப் பேசுகிறபடியால் இது 'நாராயண ஸூக்தம்' என்று கீர்த்திபெற்றிருக்கிறது. புருஷஸூக்தத்தில் ஸ்ருஷ்டிக்ரமம் சொல்லப்பட்டது. நாராயணஸூக்தத்தில் ரக்ஷண க்ரமமும், உபாஸனக்ரமமும், அவனுடைய மேன்மையும், அவன் ஸர்வாந்தர்யாமியாயிருக்கும் தன்மையும் சொல்லப்படுகின்றன. லிங்கபூயஸ்த்வாதிகரணத்தில், வியாஸரும், ஸர்வபரவித்யைகளிலும் உபாஸிக்கப்படுபவன் நாராயணனே என்று இங்கு நிர்ணயிக்கப் படுவதாக ஸித்தாந்தம் செய்திருக்கிறார்.

ஸஹஸ்ரசீர்ஷம் தே₃வம் விச்வாக்ஷம் விச்வசம்பு₄வம்
விச்வம் நாராயணம் தே₃வமக்ஷரம் பரமம் ப்ரபு₄ம்.

[ஆயிரம் தலைகளையுடையவனும், ப்ரகாசிக்கின்றவனும், எங்கும் கண்களை உடையவனும், உலகத்திற்கெல்லாம் நன்மையைச் செய்பவனும், உலகமாயிருப்பவனும், (அப்படியிருந்தும்) தோஷங்களற்றவனும், அழிவற்றவனும், மேலானவனும், ஸ்வாமியாயிருப்பவனும் நாராயணனே.]

இங்கு ஸஹஸ்ரசீர்ஷம் முதலிய சப்தங்களில் முதல்வேற்றுமையின் பொருளில் இரண்டாவது வேற்றுமை ப்ரயோகிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளவேண்டும். இங்கேயே "விச்வமேவேதம் புருஷ:" என்றும், "நாராயண: பர:" என்றும் பலவிடங்களில் முதல்வேற்றுமையிலேயே படிக்கப்பட்டிருக்கிறதன்றோ. இவ்விஷயத்தைப்பற்றி லிங்கபூயஸ்த்வாதிகரண ஸ்ரீபாஷ்யத்திலும், ச்ருதப்ரகாசிகையிலும் விரிவாகக் காணலாம். (ஸஹஸ்ரசீர்ஷம்) ஆயிரம் தலைகளையுடையவன். இங்கு தலையென்பது கால், கை முதலிய மற்றவைகளுக்கும் உபலக்ஷணம். இதனால் அனந்தமான ஜ்ஞானசக்திகளையுடையவனென்று சொல்லப்படுகிறது. கீதையில் விச்வரூபதர்சனத்தில் காட்டப்பட்டதுபோன்ற திவ்யமங்களவிக்ரஹத்தையுடையவன் என்றும் பொருள்கொள்ளலாம். இத்தால் புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்டவனே இங்கு நாராயணனென்று நிர்ணயிக்கப்படுகிறானென்று விளங்குகிறது. (தேவம்) பிரகாசிப்பவன்.

http://acharya.org

"முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய் நின் பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே! கட்டுரையே"

[படிச்சோதியாடை — இயற்கையான ஒளியையுடைய ஆடை. பல் கலன் — பல ஆபரணங்கள். கடிச்சோதி — திருவரையின் ஒளி.] என்று நம்மாழ்வாரால் வர்ணிக்கப்பட்ட ஒளிமயமான உருவத்தை உடையவன். (தேவம்) உலகத்தை உண்டாக்கி, ரக்ஷித்து, ஸம்ஹரிப்பதை விளையாட்டாக உடையவன் என்றும் பொருள் கொள்ளலாம். (விச்வாக்ஷம்) 'ஸஹஸ்ராக்ஷ:' என்று புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்டதை நினைக்கிறது. எல்லாவற்றையும் அறிபவன் என்று தாதபர்யம்.

"உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிதி யென்றே
வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே"
என்றார் தொண்டரடிப்பொடியாழ்வார்,

"விச்வதச் சக்ஷுருத விச்வதோமுகோ
விச்வதோ ஹஸ்த உத விச்வதஸ்பாத்"

[எங்கும், கண்களையும், முகங்களையும், கைகளையும், கால்களையும் உடையவன்.] என்று நாராயணவல்லியில் முதலனுவாகத்தில் படிக்கப்பட்டது இங்கு அனுஸந்திக்கத்தக்கது. எங்கும், கண், முகம், கை, கால் முதலியவை செய்யும் காரியங்களைச் செய்ய சக்தியுள்ளவன் என்பது இதன் ஸாரார்த்தம். (விச்வாக்ஷம்) உலகிற்கெல்லாம் கண் முதலிய ஸகலேந்த்ரியங்களாகவுமிருப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். "சக்ஷுர் தேவாநாமுத மர்த்யாநாம்" [தேவர்களுக்கும் (நித்யஸூரிகளுக்கும்) மனுஷ்யர்களுக்கும் கண்ணாயிருப்பவன்.] என்று வேதம் உத்கோஷித்தது. "கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" என்றார் வேதம் தமிழ் செய்த மாறன். கண்ணில்லாவிடில் எப்படிக் காரியம் செய்வதரிதோ, அப்படியே, நித்யஸூரிகளோடு நித்யஸம்ஸாரிகளோடு வாசியற, இவனில்லாவிடில் ஒன்றும் செய்யமுடியாது. நம் கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே.

(விச்வசம்புவம்) உலகத்திற்கு எல்லாவிதமான நன்மையையும் கொடுப்பவன். இத்தால் 'சம்பு' என்று அதர்வசிகையில் சொல்லப்

http://acharya.org

பட்டவனும் இவனே என்று காட்டப்படுகிறது. 'விச்வ சம்புவம்' என்றதினால் 'சம்பு' என்று உலகில் ப்ரஸித்தமான சிவன் இவ்வுலகில் சிலர்க்கு சில நன்மைகளைத் தருபவன்; இவனோ எல்லா உலகினர்க்கும் எல்லாவிதமான நன்மையையும் தருபவன் என்று உணர்த்தப்படுகிறது. பரமபுருஷார்த்தமாகிய மோக்ஷத்தை இவனையன்றி வேறு எவரால் கொடுக்கமுடியும்? "மம மாயா துரத்யயா" [என் மாயை தாண்டமுடியாதது.] என்று அவனால் சொல்லப்பட்ட மாயையை அவனையன்றி வேறு யாரால் தாண்டுவிக்கமுடியும்? ஒரு குருவி பிணைத்தபிணையலை நம்மால் அவிழ்க்க முடியவில்லை; ஸர்வ சக்தி பிணைத்த பிணையலை நம்மால் அவிழ்க்கப்போமோ? அவனையே உபாயமாக அடைந்தால்தான் பிறவியென்னும் பெருங்கடலைத் தாண்டி அக்கரையேறலாம். "அத2 ஸோப4யங்க3தோ ப4வதி" [பின் இவன் பயம் நீங்கினவனாக ஆகிறான்.] என்றது வேதம். "அப4யம் ஸர்வபூ4தேப்4யோ த3தா3ம்யேதத்3 வ்ரதம் மம" [எல்லா பூதங்களிடமிருந்தும் அபயமளிக்கிறேன்; இதுவே என்னுடைய வ்ரதம்.] என்றான் சக்ரவர்த்தித்திருமகன். உடையவனன்றோ உடைமையை விடமாட்டாத பற்றுடையவனாயிருப்பான். பெற்றமனம் பித்தன்றோ? "நம் அரங்கனாய பித்தனைப் பெற்றும் அந்தோ! பிறவியுள் பிணங்குமாறே!" என்றார் தொண்டரடிப்பொடிகள். அந்த வாத்ஸல்யத்தினாலே நமக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து, சாஸ்த்ரத்தை அருளி, பல அவதாரங்களைச்செய்து, நம்மைத் திருத்திப் பணிகொள்ளப் படாதபாடுபடுகிறான். ஆனால் நாம் 'பிள்ளைமனம் கல்லு' என்பதுபோல் இரும்புபோல் வலியநெஞ்சம் படைத்து, மனமாகிற கதவை அவன் நம்மை அணுகாதபடி அடைத்துவைத்து, பன்மாமாயப்பிறவியில் கிடந்து உழல்கின்றோம். அப்பொழுதும் நமக்குத் தகுந்த தண்டனைகளை அளிப்பதன்மூலம் நமக்கு நன்மையையே செய்கிறான் ஸ்ரீதரன். இவ்விஷயத்தை நம்மாழ்வார்

"ஏ பாவம் பரமே! ஏழுலகும்
ஈ பாவம் செய்து அருளால் அளிப்பாரார்?
மாபாவம் விட அரற்குப் பிச்சைபெய்
கோபாலக் கோளரி ஏறன்றியே"

[ஈபாவம் செய்து—பாபத்தைப் போக்கடித்து, அளிப்பார்—ரக்ஷிப்பவர். அரற்கு—சிவனுக்கு. கோபால...ஏறு—கோபாலர்களுடைய மேலான ஸிம்ஹம்.] என்று அருளிச்செய்தார். இப்படி நமக்காக அவன் படாதபாடுபடுவதற்குக் காரணத்தை அடுத்தபடியாகச் சொல்லுகிறது:

http://acharya.org

(விச்வம்) இவ்வுலகையெல்லாம் சரீரமாக உடைத்தாயிருப்பதால் 'உலகம்' என்றே சொல்லப்படுபவன். தன் சரீரத்தை நோக்காத சரீரியும் உண்டோ? "விச்வம் த்வய்யபி₄மந்யஸே ஜக₃தி₃ஷே தேநாத்₃விதீயஸ் தத:" [உலகையெல்லாம் நீ தானாகவே அபிமானிக்கிறாய்; அதனால் உலகத்தைக்காட்டிலும் வேறுபடாதவனாகச் சொல்லப்படுகிறாய்.] என்றார் வேதாந்தாசார்யரான பட்டரும். ஸஹஸ்ரநாமத்திலும் முதல் திருநாமம் விச்வம் என்பதே. அங்கு 'விச்வம் விஷ்ணு:" என்று சொல்லப்பட்டது. இங்கு 'விச்வம் நாராயணம்' என்கிறது. சரீரத்தைச் சொன்னபின்பல்லவோ சரீரியைச் சொல்லவேண்டும். (நாராயணம் தேவம்) 'ஸஹஸ்ரசீர்ஷம் தே₃வம்' என்று சொல்லப்பட்டவன் யாரென்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயித்துத் தருகிறது. (நாராயணம்) நரஸமூஹங்களுக்கு இருப்பிடமாயிருப்பவன் என்றும் நரஸமூஹங்களை இருப்பிடமாக உடையவனென்றும் பொருள் கொள்ளவேண்டும். இத்தால் எல்லாவற்றையும் தரிப்பவனென்றும் எல்லாவற்றையும் வியாபிப்பவனென்றும் ஏற்படுகிறது. 'அயந சப்தம்' ப்ராப்யத்தையும், உபாயத்தையும் குறிக்குமாதலால், சேதன வர்க்கத்திற்கு, மோக்ஷத்தில் அடையப்படுபவனாகவும், மோக்ஷோபாயமாகவுமிருப்பவன் என்றும் பொருள்படும். 'சரணம் க₃தி: நாராயண:'என்றல்லவோ வேதம் விளம்பிற்று.

"நாரசப்₃தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே பு₃தை₄:
க₃திராலம்பநம்₃ம் தஸ்ய தேந நாராயணஸ் ஸ்ம்ருத:"

['நாரசப்தத்'திலை் ஜீவர்களின் ஸமூஹம், பெரியோர்களால் சொல்லப்படுகிறது. அதற்கு உபாயமாகவும், உபேயமாகவுமிருப்பதினல் நாராயணனென்று சொல்லப்படுகிறான்.] என்ற ப்ரமாணம் இங்கு அனுஸந்திக்கத்தக்கது.

"ஆபோ நாரா இதி ப்ரோக்தா: ஆபோ வை நரஸூநவ:
தா யத₃ஸ்யாயநம் பூர்வம் தேந நாராயணஸ் ஸ்ம்ருத:"

[ஜலம் நாரமென்று சொல்லப்படுகிறது. ஜலம் நரனாகிற பரமாத்மாவினிடமிருந்து உண்டானதன்றோ? அந்த ஜலம் ப்ரளயகாலத்தில் இவனுக்கு இருப்பிடமாயிருந்ததால் நாராயணனென்று சொல்லப்படுகிறான்.] என்று மனுஸ்ம்ருதியில் சொல்லியபடியும் பொருள் கொள்ளலாம்.

"நராஜ்ஜாதாநி தத்வாநி நாராணீதி ததோ விது₃:
தாந்யேவ சாயநம் தஸ்ய தேந நாராயணஸ் ஸ்ம்ருத:"

http://acharya.org

[நாரனுகிற ஸர்வேச்வரனிடமிருந்து உண்டானவை எல்லாப் பொருள்களும்; ஆகையால் அவற்றை நாரங்களென்று சொல்லுகிறார்கள். அவற்றையே தனக்கிருப்பிடமாக உடையவனுதலால் நாராயணனென்று ஸர்வேச்வரன் சொல்லப்பட்டான்.] என்கிற வசனத்தின்படியும் பொருள் கொள்ளலாம். இவையெல்லாம் அபாரகருணுஸாகரரான பெரியவாச்சான்பிள்ளையால் பரந்தரஹஸ்யத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்ருல் நாராயணன் எல்லாவற்றையும் தரிப்பவனென்றும், ஸர்வவ்யாபியென்றும், ஸர்வகாரணனென்றும், ஸகலசேதனர்க்கும் உபாயோபேயமாயிருப்பவனென்றும் ஏற்படுகிறது. (தேவம்) இவ்வுலகையெல்லாம் தன் சரீரமாகக்கொண்டு வியாபித்திருந்தபோதிலும், இவற்றின் மலங்கள் தன்மேல் படாததோடன்றியில் இவற்றை நியமிப்பதாலுண்டாகும் புகரை உடைத்தாயிருப்பவன். முதலில் 'தேவம்' என்பதினுல் அவன் அழகன் என்று உரைக்கப்பட்டது. இங்கு அவன் அமலனென்று சொல்லப்படுகிறது. 'விச்வசம்புவம்' என்றதினுல் அன்பன் என்று உணர்த்தப்படுகிறது. 'அழகன்' என்ருர் பெரியாழ்வார்; 'அமலன்' என்ருர் திருப்பாணுழ்வார்; 'நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பன்' என்ருர் நம்மாழ்வார். அழகனுயும், அன்பனுயும், அமலனுயுமிருப்பவன் அச்யுதன் என்று அருமறை அறிவிக்கிறது. அப்படியிருந்தபோதிலும் விதிசிவாதிகளைப்போல் அழிவுள்ளவனுயிருப்பானே என்னும் ஸந்தேஹத்தை நிவர்த்திசெய்கிறது அடுத்த பதம். (அக்ஷரம்) அழிவற்றவன். தன்னுடைய ஸ்வரூபத்திற்கோ, குணங்களுக்கோ அழிவுண்டோ என்று ஸந்தேஹிப்பதற்கும் இடமில்லாதவன். ஆனுல் நித்யஸூரிகளைப்போல், அழிவில்லாதவனுயிருந்தும் தனக்கும் மேலான ஒரு ஈச்வரனை உடையவனுயிருப்பானே எனில்: (பரமம்) தனக்கு மேலானவரில்லாதவன். 'மிகுநரை இலனே' என்ருர் ஆழ்வார்.

''தமீச்வராணும் பரமம் மஹேச்வரம்
தம் தே₃வதாநாம் பரமம் ச தை₃வதம்''

[ஈச்வரர்களுக்கும் மேலான ஈச்வரனைவனும், தேவதைகளுக்கும் மேலான தேவதையாயிருப்பவனுமான அவனை.] என்று ச்வேதாச்வதரத்தில் சொல்லப்பட்டவன் இவனே என்று உணர்த்துகிறது வேதம். அப்படியிருந்தும் காமம் முதலியவற்றிற்குப் பரதந்த்ரனுயிருப்பானே எனில்: (ப்ரபும்) ஈச்வரனுயிருப்பவன். எல்லோரையும்

http://acharya.org

நியமிப்பவன். கர்மத்தினால் பிறரைக் கட்டுப்படுத்துபவன். தான் கர்மபந்தத்தினால் பிணைக்கப்படாதவன்.

(பரமம் ப்ரபும் நாராயணம்) மேலான ப்ரபுவாயிருப்பவன் நாராயணனே. இத்தால் உலகமெல்லாம் நாராயணனுக்கு சேஷமென்றும், அவன் சேஷியென்றும் உணர்த்தப்படுகிறது. இதையே ஆழ்வார் ''மால் தனில் மிக்கதோர் தேவும் உளதே'' என்று அருளிச்செய்தார். (பரமம்) ஸர்வைச்வர்யஸம்பன்னனான லக்ஷ்மீநாதனுக்கு ஒரு விஷயத்தில் தாரித்ர்யமுண்டு. ஸமாதி₄கத₃ரித்₃ரன் இவன். இதை வேதங்கள் ''ந தத்ஸமச்ச அப்₄யதி₄கச்ச த்₃ருச்யதே'' [அவனுக்கு ஸமானமானவரும் மேலானவரும் காணப்படவில்லை.] என்று கோஷித்தன. ''ஒத்தார்மிக்காரை இலையாய மாமாயா!'' என்றார் ஆழ்வார். 'பரமம் ப்ரபும்' என்றதினால் இவனுக்கே நாம் தாஸர்களென்றும் இவனையே பூஜிக்கவேண்டுமென்றும், மறந்தும் புறந்தொழக்கூடாது என்றும் உணர்த்தப்படுகிறது. நம்மாழ்வாரும்,

> ''தேவும் எப்பொருளும் படைக்கப் பூவில் நான்முகனைப் படைத்த
> தேவன் எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே?''

என்று அருளிச்செய்தார். 'சிக்குத்தலையனுக்குப் பூத்தகாது. பிச்சையுண்ணிக்குப் பூசனை தகாது.' ச்மசானவாஸிக்குப் பூத்தகாது. நிர்வாணிக்குப் பூசனையும் தகாது. கிரீடதாரிக்குப் பூத்தரும்; வரையாது கொடுக்கும் வள்ளலுக்குப் பூசனையும் தகும். ஸ்ரீவைகுண்டவாஸிக்குப் பூத்தரும். பீதாம்பரதாரிக்குப் பூசனையும் தகும். 'பூத் தருவது ஸுகுமாரனுக்கு; பூஜை தருவது ப்ரபுவுக்கு'.

மஹாபாரதத்தில் ராஜஸூயயாகத்தில் அக்ரபூஜைக்கு அர்ஹதையுள்ளவர் யாரென்று கேள்வி பிறந்தபோது பீஷ்மர்

> ''ஸ ஏஷ ப்ருது₂தீ₃ர்க₄ாக்ஷஸ் ஸம்ப₃ந்தீ₄ தே ஜநார்த்த₃ந:''

என்று 'ச்ருதியிலே ''தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகம் ஏவமக்ஷிணீ'' என்று சொல்லப்பட்டவனன்றோ உங்களுக்கு உறவினனாய்ப் பிறந்திருக்கிறான்' என்று சொல்லி க்ருஷ்ணனுடைய பரத்வத்தை ஸாதித்தார். புறந்தொழா வைராக்யநிஷ்டனான ஸஹதேவன்

> ''தமிமம் ஸர்வஸம்பந்நம் ஆசார்யம் பிதரம் கு₃ரும்
> அர்ச்யமர்ச்சிதும் இச்சா₂ம: ஸர்வே ஸம்மந்துமர்ஹத₂''

[எல்லாம் நிறைந்தவனும், ஆசாரியனும், தந்தையும், பெரியோனும், பூஜிக்கத்தகுந்தவனுமான இந்த க்ருஷ்ணனை அர்ச்சிக்கவிரும்பு

http://acharya.org

டுரேரும். எல்லாரும் ஸம்மதிப்பீர்களாக.] என்று கிருஷ்ணனுடைய மேன்மையைக் கூறி,

''யோ வா ந ஸஹதே ராஜ்ஞாம் கச்சித் ஸபூ₃லவாஹந:....
தஸ்ய மூர்த்₄நி ஸமாவிந்யஸ்தம் ராஜ்ஞ: ஸவ்யம் பத₃ம் மயா''

[ராஜாக்களுக்குள் எவனொருவன் இதை ஸஹிக்கவில்லையோ, அந்த அரசனுடைய தலையில் என்னுடைய இடதுகால் வைக்கப்படும்.] என்று தன் காலைக்காட்டினான்.

''மாநிநாம் ப₃லிநாம் ராஜ்ஞாம் மத்₄யே ஸந்த₃ர்ஶிதே பதே₃
ததோபூ₄வத் புஷ்பவ்ருஷ்டி: ஸஹதே₃வஸ்ய மூர்த்த₄நி''

[அபிமானத்தையுடையவர்களான அரசர்களின் நடுவில் பாதம் காட்டப்பட்டவுடன் ஸஹதேவனின் தலையில் பூமாரி பொழிந்தது.] என்கிறபடியே மற்றவர்களுக்குப் பரத்வமில்லையென்றும் அதை ஸஹிக்காதவர்கள் தலையில் என் இடதுகாலை வைக்கிறேன் என்றும் சொன்னவுடன் அவன் தலையில் புஷ்பமாரி பெய்தார்கள். ஞானியாகிற பீஷ்மர் தலையில் பூமழை பொழியவில்லை. இதர தேவதா விஷயமான பற்றறுக்கையாகிய பரமவைராக்யத்தையுடைய பரமைகாந்தியான ஸஹதேவன் தலையிலேயே மலர்மாரி பொழிந்தது.

மேலான ப்ரபு யாரென்று இங்கு பல அடையாளங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.'ஸஹஸ்ரசீர்ஷம் தேவம்' என்றதிருவ் முடிச்சோதி, முகச்சோதி முதலியவைகளையுடையவனே முதல்வனெனப்பட்டது. 'விச்வாக்ஷம்' என்று அவன் ஸர்வஜ்ஞனென்று சொல்லப்பட்டது. ஸ்ரீமந் நாராயணனே ஜகத்₃த்₃ருஷ்டி யென்று உரைக்கப்பட்டது. மற்றவர்கள் 'மாலைக்கண்', 'பீலிக்கண்' எனத் தகுந்தவர்களே. 'விசவசம்புவம்' என்று ஸர்வரக்ஷகத்வம் சொல்லப்பட்டது. ஆபத்திற்காப்பவனும், பாபத்தைப்போக்குபவனும் இவனே என்று உணர்த்தப்பட்டது.

'ந ஹி பாலநஸாமர்த்₂யம் ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம்'

[ரக்ஷிக்கும் திறமை ஸர்வேச்வரனாகிய ஹரியைத்தவிர வேறு எவரிடமும் இல்லையன்றோ.] என்றல்லலோ சொல்லப்பட்டது. 'விச்வம்' என்று ஸர்வசரீரியாயிருக்கும் தன்மை சொல்லப்பட்டது. 'தேவம்' என்று அமலத்வம் உரைக்கப்பட்டது. 'அக்ஷரம்' என்று அழிவற்ற தன்மை அறிவிக்கப்பட்டது. இந்த குணங்களையுடைய

http://acharya.org

வனை நாராயணனே மேலான ப்ரபு என்று விதிக்கப்படுகிறது. இதுவே ஸ்ரீராமாயணத்தில்

''அதி₄கம் மேநிரே விஷ்ணும் தே₃வாஸ் ஸர்ஷிக₃ணாஸ் ததா₂''

[ரிஷிகணங்களுடன் கூடிய தேவர்கள் விஷ்ணுவை ஸர்வாதிகனாக நிர்ணயித்தார்கள்.] என்று கோஷிக்கப்பட்டது.

விச்வத: பரமம் நித்யம் விச்வம் நாராயணம் ஹரிம்
விச்வமேவேத₃ம் புருஷஸ் தத்₃ விச்வமுபஜீவதி
பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் சாச்வதம் சிவமச்யுதம்
நாராயணம் மஹாஜ்ஞேயம் விச்வாத்மாநம் பராயணம்.

[எல்லாவற்றைக்காட்டிலும் மேலானவனும், நித்யமானவனும், எல்லாமாயிருப்பவனும் நாராயணனாகிற ஹரியே. இவ்வுலகெல்லாம் புருஷனே. ஆகையினாலேயே இந்த ப்ரபஞ்சம் ஜீவிக்கிறது. உலகிற்கு நாயகனும், ஆத்மாக்களுக்கு ஸ்வாமியும், ஜனனமரணமற்றவனும், மங்களகரமானவனும், தன்னை அடைந்தவர்களை நழுவவிடாதவனும், முக்கியமாக அறியத்தக்கவனும், உலகிற்கெல்லாம் ஆத்மாவும், மேலான உபாயமும் நாராயணனே.]

(விச்வத: பரமம்) சேதனாசேதனங்களடங்கிய உலகத்தைக்காட்டிலும் மேலானவன். ''அந்யதே₃வ தத்₃ விதி₃தாத் அதோ₂ அவிதி₃தாத் அதி₄''[அந்தப் பரவஸ்து நம்மால் அறியப்பட்ட தான அசேதனத்தைக் காட்டிலும் வேறானது; நம்மால் அறியப்படாத ஆத்மாவைக்காட்டிலும் மேலானது.] என்றது வேதம். ''பே₄த₃வ்யபதே₃சாச்சாந்ய:'' [ஜீவனுக்கும் பரனுக்கும் பேதம் சொல்லப்பட்டதால் பரமாத்மா வேறானவன்,] என்று வியாஸர் ப்ரஹ்மஸூத்ரத்தில் நிர்ணயித்தார். ''இல்லதும் உள்ளதும் அல்லது அவனுரு'' என்று மாறக்கூடிய அசேதனத்தையும், மாறாத ஜீவனையும்விட விலக்ஷணமானது பகவத்ஸ்வரூபம் என்று ஆழ்வார் அருளிச்செய்தார்.

''அந்யச்ச ராஜந் ஸ பர: ததா₂ந்ய: பஞ்சவிம்சக:''

[அரசனே! பரமாத்மா வேறானவன்; இருபத்தைந்தாவது தத்வமான ஜீவன் வேறானவன்.] என்று மஹாபாரதம் முறையிட்டது. இத்தால் பரமபுருஷனுக்கும் மற்றவைகளுக்கும் ஸ்வரூபைக்யம் சொல்லும் பக்ஷங்கள் தள்ளுண்டன. ஸர்வரக்ஷகனை இவனுக்கும், இவனால் காப்பாற்றப்படும் மற்றவைகளுக்கும் எப்படி ஐக்யம் சொல்ல

http://acharya.org

முடியும்? காரணபூதனை இவனும் இவனால் படைக்கப்படும் மற்றவையும் ஒன்றாகமுடியுமோ? உலகுயிர் தேவும் மற்றும் படைத்த எம்பரமமூர்த்தியன்றோ இவன்.

இவன் இவ்வுலகைக்காட்டிலும் மேலானவன் என்பதை எப்படி அறிவது எனில்: (நித்யம்) நித்யமாயிருப்பவன். இவ்வுலகிலுள்ள அசேதனங்கள் ஸ்வரூபத்திலும் குணங்களிலும் மாறுபடுபவை. சேதனர்கள் ஸ்வரூபத்தில் மாறுபாடில்லாதவர்களாயிருந்தாலும், கர்மம் காரணமாக, ஜ்ஞானாதிகுணங்களில் ஏற்றத்தாழ்வை உடையவர்கள். இவை இரண்டுமற்றவன் இவன்.

(விச்வத: பரமம்...விச்வம்)எல்லாவற்றைக்காட்டிலும் அத்யந்த விலக்ஷணனாயிருந்தபோதிலும் எல்லாமாயிருப்பவன். "மூவராகிய மூர்த்தியை முதல் மூவர்க்கும் முதல்வன் தன்னை" என்றார் ஆழ்வார். இது எப்படி முடியும் என்றால்: (நாராயணம்) இவன் எல்லாவற்றையும் வியாபித்துக்கொண்டும், தரித்துக்கொண்டுமிருப்பவனன்றோ. ஆகையால் இவனை எல்லாமென்று சொல்லலாம் என்று உணர்த்துகிறது வேதம். "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" [நீ எல்லாவற்றையும் வியாபித்திருக்கிறாய்; ஆகையால் எல்லாமாகிறாய்.] என்றான் அர்ஜுனன். "அவஸ்தி2தேரிதி காசக்ருத்ஸ்ந:" [பரமாத்மா ஜீவனிடத்தில் வியாபித்திருக்கிறபடியால் இருவரும் ஒன்று எனச்சொல்லப்படுகிறார்களென்று காசக்ருத்ஸ்னர் சொன்னார்.] என்று வியாஸர் ப்ரஹ்மஸூத்ரத்தில் ஸித்தாந்தம் செய்தார். "தத்ஸ்த2த்வாத3நுபச்யந்தி ஹ்யேக ஏவேதி ஸாத4வ:" [பரமாத்மா ஜீவனிடமிருக்கிறபடியால் ஒருவனென்றே ஸாதுக்கள் பார்க்கிறார்கள்.] என்றது மஹாபாரதம். (நாராயணம்) உலகினர் ஸந்தேஹம் நீங்குவதற்காக இப்படி அடிக்கடி நாராயணசப்தப்ரயோகம் பண்ணுகிறது. "ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம்" என்று வியாஸரும் கேசவனே பரவஸ்துவென்று மூன்று தடவை ஸத்யம் செய்தாரன்றோ.

"கிம் தத்ர ப3ஹுபி4ர் மந்த்ரை: கிம் தத்ர ப3ஹுபி4ர் வ்ரதை:
நமோ நாராயணாயேதி மந்த்ரஸ் ஸர்வார்த்த2ஸாத4க:"

[பல மந்திரங்களாலும், விரதங்களாலும் என்ன ப்ரயோஜனம்? 'நமோ நாராயணாய' என்னும் மந்திரமே எல்லா அர்த்தங்களையும் தருவது.] என்று புகழப்பட்ட நாராயண நாமபாராயணத்தின் மஹிமையை உணர்த்துவதற்காகச் சொல்லுகிறதென்றும் கொள்ளலாம்.

http://acharya.org

(ஹரிம்) 'நாராயணம்' என்று ஸர்வகாரணனும், ஸர்வரக்ஷக னும் இவனே என்று நிர்ணயிக்கப்பட்டது. இங்கு ஸர்வஸம்ஹாரக னும் இவனே என்று கோஷிக்கப்படுகிறது.

"ப்₃ரஹ்மாணம் இந்த்₃ரம் ருத்₃ரம் ச யமம் வருணமேவ ச
நிக்₃ருஹ்ய ஹரதே யஸ்மாத் தஸ்மாத் ஹரிரிஹோச்யதே"

[பிரமனையும், இந்திரனையும், ருத்ரனையும், யமனையும், வருணனையும் ஸம்ஹரிப்பதினால் 'ஹரி' என்று சொல்லப்படுகிறான்.] என்றல்லவோ உரைக்கப்பட்டிருக்கிறது. "ஹரிர் ஹரதி பாபானி ஜந்மாந்தரக்ருதானி ச" என்கிறபடியே ஸகல பாபங்களையும் போக்கடிப்பவனென்றும் பொருள் கொள்ளலாம். "குமரனார் தாதை துன்பம் துடைத்த கோவிந்தனாரே" என்றார் ஆழ்வார். ருத்ரன், தன் தந்தையாகிய பிரமனின் தலையைக் கிள்ளினதினால் வந்த பெரும் பாபத்தைத் தவிர்த்தவன் இவனன்றோ. (ஹரிம்) இது பகவான் உகந்தருளிய பெயர்களில் ஒன்று. வேதப்ரதிபாத்யன் இவனே என்று காட்டுவதற்காக, வேதத்தின் ஆதியிலும், அந்தத்திலும் 'ஹரி: ஓம்' என்று படிக்கப் படும் பெயர் இதுவேயாகும். "விச்வரூபம் ஹரிணம்" என்று ப்ரச்னோபனிஷத்தில் படிக்கப்பட்டவன் இவனே என்று உணர்த்துகிறது வேதம்.

இவன் ஸர்வவ்யாபியாயிருப்பதனாலேயே 'எல்லாம் இவன்' என்று சொல்லப்படுகிறான் என்பதை நன்கு மனத்தில் பதியவைப்பதற்காக மறுபடியும் சொல்லுகிறது; (விச்வமேவேதம் புருஷ:) இவ்வுலகெல்லாம் பரமபுருஷனே. "பூர்ணத்வாத் புருஷ:" என்கிறபடியே எங்கும் நிறைந்திருக்கிறவனாகையாலே புருஷனென்று சொல்லப்படுகிறான். அதனாலேயே எல்லாம் இவன் எனப்படுகிறான். ஆழ்வாரும்,

"தானேயாகி நிறைந்தெல்லா உலகும் உயிரும் தானேயாய்
தானே யானென்பானாகி"

என்று திருவாய்மலர்ந்தருளினார். 'தான்' என்னும் சொல்லுக்குள் எல்லா உலகங்களும் அடங்கும்படியாயிருப்பவன். வேதம் "ஸர்வம் கல்₂விதம்₃ ப்₃ரஹ்ம தஜ்ஜலாந்" [ப்ரஹ்மத்தினிடமிருந்தே உண்டாவதாலும், அதனாலேயே ரக்ஷிக்கப்படுவதாலும், அதனிடமே லயிப்பதாலும் இவையெல்லாம் ப்ரஹ்மமே.] என்று சொல்லிற்று. (இதம் விச்வம் புருஷ ஏவ) இவ்வுலகெல்லாம் புருஷனே. காரணாவஸ்தையிலும், கார்யாவஸ்தையிலும் ப்ரஹ்மம் சிதசித்விசிஷ்டமாக இருந்த

http://acharya.org

போதிலும், விசேஷ்யமான ப்ரஹ்மமே ப்ரதானமாகையாலே, ப்ரஹ்மமே உபாதானகாரணம் என்றும் விகாராதிகள் விசேஷண கூதங்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஸ்வாபாவிகமான சரீரசரீரி ஸம்பந்தத்தாலே வஸ்து ஒன்றே என்னத்தகுந்ததாயிருக்கிறது. ஜீவன் அநாதிகாலமாக அசித்தில் வியாபித்து அத்தோடே முகம் பழகிப்போந்தவன். சேதனமுகமாக அசேதனத்திலும், குந்தி அடியிட்டு நிற்கிறான் நாராயணன். பகவானுக்கு சரீரம் ஆத்மவஸ்து. அவனுக்கு சரீரமாகையாலே அசேதனமும் நாராயணனுக்கு சரீரமாகிறது. "அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிச்ய" [என்னை அந்தர்யாமியாகக்கொண்ட ஜீவனைக்கொண்டு வியாபித்து.] என்றல்லவோ சொல்லப்பட்டது. இப்படி எங்கும் வியாபிக்கையாலே இவனை 'விச்வம்' என்னத் தட்டில்லை. (தத் விச்வமுபஜீவதி) இவன் அந்தராத்மாவாயிருப்பதாலேயே உலகெல்லாம் இவனையடைந்து ஜீவிக்கிறது. இதிலிருந்தும் விச்வத்திற்கும், வாஸுதேவனுக்கும் ஸ்வரூபைக்யமில்லையென்று ஸித்திக்கிறது. (தத்...) "தேந விநா த்ருணமபி ந சலதி" "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்றல்லவோ சொல்லப்படுகிறது. இதில் அவனுடைய ரக்ஷகத்வம் காட்டப்படுகிறது. "நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே! நீ என்னையன்றியிலை" என்றார் திருமழிசை ஆழ்வார்.

"தானே உலகெல்லாம், தானே படைத்திடந்து
தானே உண்டுமிழ்ந்து. தானேயாள்வானே'

என்றார் நம்மாழ்வார். இவ்வுலகைப் படைத்தும், ப்ரளயஜலத்திலிருந்து எடுத்தும், ப்ரளயாபத்திலே உண்டும், பிறகு உமிழ்ந்தும், இப்படி ஸர்வவிதமான ரக்ஷணங்களையும் செய்பவன் இவனேயென்று இங்கு காட்டப்படுகிறது. அடுத்தபடியாக இப்படி ஸர்வவிதரக்ஷணங்களையும் செய்யும் இவனுடையதே இவ்வுலகெல்லாம் என்று உத்தோஷிக்கிறது உபனிஷத்: (பதிம் விச்வஸ்ய) எல்லாவுலகிற்கும் ஸ்வாமியாயிருப்பவன். இத்தால், சேஷசேஷிஸம்பந்தம் சொல்லப்படுகிறது.

"உண்டும் உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும் கிடந்தும் நின்றும்
கொண்டகோலத்தொடு வீற்றிருந்தும் மணம் கூடியும்
கண்டவாற்றால் தனதே உலகென நின்றான்"

என்று ஆழ்வார் இவ்வர்த்தத்தை அநுஸந்தித்தார். "ஒருவன் ஒரு க்ஷேத்ரத்தை (வயலை) திருத்துவது, எருவிடுவது, க்ருஷிபண்ணுவ

http://acharya.org

தாக நின்றால் இது இவனது என்று அறியலாமிறே" என்று நம் ஆசார்யர்கள் அருளிச்செய்தனர். (ஆத்மேச்வரம்) இவர்களுக்கு ஸ்வாமியாயிருப்பதோடன்றியில், இவர்களை நியமிப்பவன். இங்கு ஆத்மசப்தம் அசேதனத்துக்கும் உபலக்ஷணம். (ஆத்மேச்வரம்) தனக்குத்தானே ஈச்வரனாயிருப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். இவர்களுக்குத்தான் ஈச்வரனாயிருப்பதுபோல், தனக்கு ஒரு ஈச்வரனில்லாதவன். (சாச்வதம்) ஆதியும் அந்தமுமில்லாமலிருப்பவன். இத்தால் அறிவுள்ளவர்களான பிரமன், ருத்ரன் முதலியவர்களைக்காட்டிலும் இவனுடைய ஏற்றம் சொல்லப்படுகிறது. (சிவம்) மங்களகரமாயிருப்பவன். இத்தால், அதர்வசிகையிலும், ச்வேதாச்வதரத்திலும் சிவசப்தத்தினால் சொல்லப்பட்டவன் இவனே என்று உணர்த்தப்படுகிறது. (சாச்வதம் சிவம்) எப்பொழுதும் பரிசுத்தமாயிருப்பவன். இத்தால் சிற்சில காலத்தில்மட்டும் பரிசுத்தனாயிருக்கும் சிவனல்ல இவன் என்று உணர்த்தப்படுகிறது. அந்த சிவன் பிறக்கும்போதே "அபஹதபாப்மா வாஹம்" [நான் பாபம் நீங்காதவனாக இருக்கிறேன்.] என்று தன் தந்தையாகிய பிரமனிடம் கூறினான். பகவானுடைய பெயர்களாகிய சிவன் முதலிய நாமங்களைப் பெற்றபின்பே பரிசுத்தனானான் என்று கோஷிக்கிறது. பிறகு தன் தந்தையாகிய பிரமனின் தலையைக்கிள்ளி அபரிசுத்தனானான். வேதமோதிய முதல்வேதியனின் தலையைக் கிள்ளினதினால் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை அடைந்து, கபாலத்தால் பீடிக்கப்பட்டுப் பரிதவித்தான். அப்பொழுதும் அவனைப் பரிசுத்தப்படுத்தியவன் அச்யுதனேயன்றோ?

'யச்செ$_3$ளச நிஸ்ஸ்ருதஸரித்ப்ரவரோத$_3$கேந
தீர்த்தே$_2$ந மூர்த்$_4$நி வித்$_4$ருதேந ஶிவஶ்ஶிவோபூ$_4$த்"

[எவனுடைய திருவடிகளை விளக்கின கங்காஜலத்தைத் தலையில் தரித்ததினால் சிவன் பரிசுத்தனாக ஆயினனே.] என்று பாகவதத்தில் பேசப்பட்டது. சுடுகாட்டுச் சாம்பலைப் பூசிக்கொண்டு, கபாலமாலையை தரித்துக்கொண்டு, ச்மசானவாஸியாய்த் திரிபவனைப் பரிசுத்தமானவனென்று எப்படிச் சொல்லமுடியும்? ருத்ரன் பெயரைச் சொன்னவுடன் இன்றும் ஜலத்தைத் தொட்டுப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளுகிறோம். யஜ்ஞம் செய்பவனுக்கு ருத்ரனுடைய அம்சம் உண்டு. ஆகையால் பிரமனுடைய தலையைக் கிள்ளின பவித்ரவிரல் அசுத்தமாகிறது. அந்த அசுத்தத்தைப் போக்கவே நாம் இன்றும் பவித்ரம் தரிக்கிறோம். சிவசப்தம் விஷ்ணுஸஹஸ்ர

http://acharya.org

நாமத்தில் படிக்கப்பட்டிருப்பதால் அது விஷ்ணுவைக் குறிக்குமென்று தெரிகிறது. ஸ்ரீராமாயணத்திலும் "பாவநஸ் ஸர்வலோகாநாம் த்வமேவ ரகு$_4$நந்த$_3$ந" [ராகவா! நீயே எல்லா உலகையும் பரிசுத்தப்படுத்துபவன்] என்று கோஷிக்கப்பட்டதன்றோ. (அச்யுதம்) தன்னை அடைந்தவர்களை நழுவவிடாதவன். ஆபத்துக்காலத்தில் அகலுபவன் அச்யுதனாவானோ? சிவசப்தம், உலகில் ப்ரஸித்தமான சிவனைக் குறிக்கவில்லை என்று விளக்குவதற்காக முன்னும் பின்னும் அச்சிவனுக்குச் சிறிதும் பொருந்தாத பெயர்களைப் படிக்கிறது பண்டை மறை. தன்னை அடைந்த வாணனை ஆபத்துக்காலத்தில் கைவிட்டு அகன்றவனன்றோ ருத்ரன்.

"மோடியோடி லச்சையாய சாபமெய்தி முக்கணன்
கூடுசேனை மக்களோடு கொண்டு மண்டி வெஞ்சமத்து
ஓட வாணனாயிரம் கரம் கழித்த ஆதிமால்" என்று

திருமழிசைப்பிரான் அருளிச்செய்தது இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

(நாராயணம் மஹாஜ்ஞேயம்) அறியத்தக்கவர்களுள் பெரியவன் நாராயணனே. தன்னை அடைந்தவர்களை நழுவவிடாதவன் இவனேயாதலால் இவனே அறியத்தக்கவன் என்று உணர்த்தப்படுகிறது. இவனிடம் பக்தியில்லாதவர்கள்,

"விஷ்ணுப$_4$க்திபரோ தே$_3$வ: விபரீதஸ் ததா$_2$ஸுர:"

[விஷ்ணுபக்தியுடையவனே தேவன்; அதில்லாதவன் அஸுரன்] என்றும்,

"ய: புத்ர: பிதரம் த்$_3$வேஷ்டி தம் வித்$_3$யாத் அந்யரேதஸம்
யஸ்து நாராயணம் த்$_3$வேஷ்டி தம் வித்$_3$யாத் அந்த்யரேதஸம்"

[பிதாவை த்வேஷிக்கும் புத்திரனை மற்றொருவனுக்குப் பிறந்தவனாக அறியலாம். நாராயணனை த்வேஷிப்பவனை சண்டாளனுக்குப்பிறந்தவனாக அறியலாம்.] என்றும் நிந்திக்கப்பட்டிருக்கிறார்களல்லவோ?

(மஹாஜ்ஞேயம்) அதர்வசிகையில் 'காரணம் து த்$_4$யேய:' என்று சொல்லப்பட்டவன் இவனே என்று காட்டப்படுகிறது. சேதநாசேதனங்களைக்காட்டிலும் முக்கியமாக அறியத்தக்கவன். ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம் முதலிய எல்லாவற்றிலும் பெரியோனாக அறியத்தக்கவன். ஸகலவைதிகக்ரியைகளிலும் அறியத்தக்கவன்.

http://acharya.org

''தா₃நயஜ்ஞ விவாஹேஷு ஸமாஜேஷு மஹத்ஸு ச
ந த்₃ரக்ஷ்யாம புநர் ஜாது தா₃ர்மிகம் ராமமந்தரா"

[தானங்களிலும், யஜ்ஞங்களிலும், விவாஹங்களிலும், பெரிய கூட்டங்களிலும் தார்மிகனை ராமனைத்தவிர வேறு ஒன்றையும் நாங்கள் பார்ப்பதில்லை.] என்றல்லவோ சொல்லப்பட்டது. (மஹாஜ்ஞேயம்) இவனை அறிந்தால் எல்லாம் அறிந்ததாக ஆகிறதன்றோ. சாந்தோக்ய உபனிஷத்தில் ச்வேதகேதுவைப்பார்த்து அவனுடைய பிதா,

''யதா₂ ஸோம்ய ஏகேந ம்ருத்பிண்டே₃ந ஸர்வம் ம்ருண்மயம்
விஜ்ஞாதம் ஸ்யாத்...ஏவம் ஸோம்ய ஸ ஆதே₃சோ ப₄வதி''

[குழந்தாய்! மண் உருண்டையை அறிந்தால் எப்படி மண்ணாலானவையெல்லாம் அறியப்பட்டதாகுமோ, அப்படியே அந்த ஸர்வேச்வரனும் ஆகிறான்.] என்று சொல்லிய வாக்யம் இங்கு அனுஸந்திக்கத்தக்கது. ஸகலசேதநாசேதன விசிஷ்டனான புருஷோத்தமனை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமன்றோ. அதனாலேயே இங்கு 'மஹாஜ்ஞேயம்' என்று சொல்லப்படுகிறான். 'அறியமுடியாதவன்' என்று வேதங்களில் சொல்லியிருக்க இங்கு எப்படி அறியத்தக்கவனென்று சொல்லலாம்? எனில்: அளவுபடுத்தி அறியமுடியாதவன் என்று அறிந்தால் இவனை அறிந்ததாகும். ''மேலை வானவரும் அறியார்'' என்றும், ''ப்₃ரஹ்மாபி ந வேத₃ நாராயணம் ப்ரபு₄ம்'' என்றும் சொல்லப்பட்டதல்லவா?

இதிலிருந்து 'ஜ்ஞாதா', 'ஜ்ஞாநம்', 'ஜ்ஞேயம்' என்று மூன்றுவகையான உண்மையான வஸ்துக்களிருக்கின்றன என்று தெளிவாகிறது. 'மஹாஜ்ஞேயம்' என்பதிலிருந்து ஒவ்வொரு வகையிலும் பல வஸ்துக்களிருக்கின்றனவென்று ஏற்படுகிறது. ஜ்ஞாநமாத்ரம் என்று சொல்லுமிடங்களை ''தத்₃கு₃ணஸாரத்வாத் து தத்₃வ்யபதே₃ச:'' [ஜ்ஞானகுணம் முக்யமாக இருப்பதால் ஜ்ஞானமென்றே ஆத்மா சொல்லப்படுகிறது.] என்ற ஸூத்ரத்தில் சொன்ன வழியில் பொருள் கொள்ளவேண்டும். ''யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்'' என்று இவனை ஜ்ஞாதாவாகவும் சொல்லிற்றன்றோ? ஆகையால் இவன எல்லாவற்றையும் அறிவதால் ஜ்ஞாதாவாகவும், ஜ்ஞானஸ்வரூபனாயிருப்பதால் ஜ்ஞானமென்றும், ஞானிகளால் அறியப்படுவதால் 'ஜ்ஞேயம்' என்றும் சொல்லப்படுகிறான்.

(விச்வாத்மாநம்) 'இவ்வுலகெல்லாம் புருஷனே' என்று முன் சொல்லப்பட்டதின் காரணத்தை இங்கு தெளிவாக்குகிறது. உலகிற்

http://acharya.org

செல்லாம் ஆத்மாவாயிருப்பவனுகையால், 'உலகம்' என்றே சொல்லப்படுகிறவன். "ஓருயிரேயோ! உலகங்கட்கெல்லாம்" என்றார் ஆழ்வார். "பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம்" என்றும், "விச்வத: பரமம்" என்றும் சொல்லி பேதச்ருதிகளையெல்லாம் காட்டுகிறது வேதம். "விச்வம்" என்றும், "விச்வமேவேத$_3$ம் புருஷ:" என்றும் அபேதச்ருதிகளை உணர்த்துகிறது. "விச்வாத்மாநம்" என்று இவ்விரண்டு விதமான ச்ருதிகளையும் ஸமரஸப்படுத்தும் கடகச்ருதிகளைக் குறிக்கிறது. வேதவாக்கியங்களை மூன்று வகையாகப்பிரிக்கலாம் "நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநாம்" [நித்யரான அநேக ஜீவர்களுள் ஒருவனை நித்யமாயிருக்கும் பரமாத்மா] என்றும், "ப்ருத$_2$கா$_3$த்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா" [ஜீவனையும் ஈச்வரனையும் வேறாக அறிந்து...] என்றும், "த்$_3$வா ஸுபர்ணா ஸயுஜா..." என்றும் பல்லாயிரக்கணக்கான வேதவாக்கியங்கள், பரமாத்மாவும், சேதநாசேதனங்களும் மிகவும் வேறுபட்டவை என்று முறையிடுகின்றன. இவைகளை பேதச்ருதிகள் என்கிறோம். "தத் த்வமஸி" [நீ அதுவாகிறாய்.] "ஸர்வம் க$_2$ல்வித$_3$ம் ப்$_3$ரஹ்ம" [இவையெல்லாம் ப்ரஹ்மமல்லவோ.] முதலிய சில வேதவாக்யங்கள் பரமாத்மாவும் மற்றவைகளும் ஒன்று என்று கூறுகின்றன. இவைகள் அபேதச்ருதிகள் எனப்படுகின்றன. "ய: ப்ருதி$_2$வீமந்தரே ஸஞ்சாந் யஸ்ய ப்ருதி$_2$வீ சரீரம் யம் ப்ருதி$_2$வீ ந வேத$_3$" [எவன் ப்ருதிவியினுள் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறானே, எவனுக்கு ப்ருதிவி சரீரமோ, எவனை ப்ருதிவி அறியவில்லையோ...] "ய ஆத்மநி திஷ்ட$_2$ந் ஆத்மநோ அந்தர: யமாத்மா ந வேத$_3$ யஸ்யாத்மா சரீரம்" [எவன் ஆத்மாவில் நிற்கிறானே, ஆத்மாவினுள் இருக்கிறானே, எவனை ஆத்மா அறியவில்லையோ, எவனுக்கு ஆத்மா சரீரமோ...] "ஏஷ ஸர்வபூ$_4$தாந்தராத்மா அபஹதபாப்மா தி$_3$வ்யோ தே$_3$வ ஏகோ நாராயண:" [இவனே ஸர்வபூதங்களுக்கும் அந்தர்யாமியாயிருப்பவனும், தோஷமற்றவனும், வைகுண்டத்தில் ப்ரகாசிப்பவனுமான நாராயணன்.] முதலிய ச்ருதிகள் நாராயணன் ஸர்வவ்யாபியாயிருப்பதாலேயே ஸர்வசப்தவாச்யனாகிறான் என்று காட்டுவதன்மூலம் பேதச்ருதிகளுக்கும், அபேதச்ருதிகளுக்கும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது ஏற்படும் விரோதத்தைப் போக்கடிக்கின்றன. இவைகளையே க$_4$டகச்ருதிகள் என்கிறோம். இம்மூன்றுவிதமான ச்ருதிகளையும் இங்கு படித்ததின்மூலம் விசிஷ்டாத்வைதமே வேதாந்தத்தின் உட்பொருள் என்று உணர்த்துகிறது வேதம். அத்வைதிகள் அபேதச்ருதிகளை மட்டும் எடுத்துக்கொண்டு மற்ற ச்ருதிகளை துர்ப்பலமானவை என்று தள்ளிவிடுகிறார்கள். சிலர் பேதச்ருதிகளை மட்டும் முக்கியமாகக்

http://acharya.org

கொள்ளுகிறார்கள். எல்லா வேதவாக்யங்களுக்கும் பொருந்தும்படியான அர்த்தத்தைச் சொல்லும் விசிஷ்டாத்வைதமே வேதத்திற்கு உகந்தது என்பதை நிஷ்பக்ஷபாதிகள் நன்கு காணலாம்.

(பராயணம்) மேலான உபாயமாகவும், மேலான ப்ராப்யமாகவும் இருப்பவன். நாராயணசப்தத்தின் அர்த்தத்தை விவரிக்கிறது வேதம். யுதிஷ்டிரன் பீஷ்மரை "கிம் வாப்யேகம் பராயணம்" என்று கேட்டபோது அவர் "பரமம் ய: பராயணம்" என்று ஜகன்னாதனை கிருஷ்ணனைக் காட்டினார். (பராயணம்) மேலான உபாயமாயிருப்பவன். இவ்வுலகிலுள்ளவர்கள் மோக்ஷமடைவதற்காகப் பல பல வழிகளைக் காட்டியிருக்கிறான் வாஸுதேவன். அவைகளே மோக்ஷோபாயங்களெனப்படுகின்றன.

"கர்மணைவ ஹி ஸம்ஸித்₃தி₄மாஸ்த்தி₂தா ஜநகாத₃ய:"
[கர்மத்தினாலேயே ஜனகர் முதலியவர்கள் ஸித்தியடைந்தனர்.] என்று சொல்லப்பட்ட கர்மயோகமும்,

"ஜ்ஞாநாக்₃நிஸ் ஸர்வகர்மாணி ப₄ஸ்மஸாத் குருதே தத₂ா"
[ஜ்ஞானமாகிற அக்னியும் அப்படியே எல்லாக் கர்மங்களையும் சாம்பலாக்குகிறது.] எனப்பட்ட ஜ்ஞானயோகமும், "ப₄க்த்யா த்வநந்யயா சக்ய:" என்று கீர்த்திக்கப்பட்ட பக்தியோகமும், அவதார ரஹஸ்ய ஜ்ஞானமும், புருஷோத்தமவித்யையும், புண்யக்ஷேத்ரவாஸமும், திருநாமஸங்கீர்த்தனம் முதலியவையும் மோக்ஷோபாயமாக சாஸ்த்ரங்களில் படிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாவற்றைக் காட்டிலும் இவன் மேலான உபாயம் என்று இங்கு உத்கோஷிக்கப்படுகிறது. அந்த உபாயங்களைக்காட்டிலும் இவனுக்குப் பலவித ஏற்றங்கள் உண்டு. அவைகள் ச்ரமஸாத்யமானவை; இவன் ஸித்தமாயிருப்பவன். அவைகள் உடனே நசிப்பவையாகையாலும் அசேதனமாகையாலும் பலம் கொடுக்க இயலாதவை; இவன் நித்யனாகவும், பரமசேதனனாகவும், பலப்ரதனாயும், இருப்பவன். கர்மஜ்ஞானாதிகளைப் பற்றுவதற்கு சிலருக்கே அதிகாரமுண்டு; இவனைப் பற்றுவதற்கு எல்லோருக்கும் அதிகாரமுண்டு. அவைகள் பலவிதமான அங்கங்களை அபேக்ஷிப்பவை. இவன் ஸஹாயாந்தர நிரபேக்ஷன். கர்மஜ்ஞானாதிகள் அந்திமஸ்ம்ருதியை அபேக்ஷிப்பவை. இவனைப் பற்றினவர்களுக்கு அந்திமஸ்ம்ருதி அவச்யமில்லை. அவைகள் இந்த ஜன்மத்திலேயே மோக்ஷம் கொடுக்கும் என்னும் நிச்சயமில்லை. இவனைப்பற்றினவர்கள் இப்பிறவியிலேயே முக்தி

http://acharya.org

யடைவார்கள். ஸ்வயத்னத்தால் ஸாதிக்கப்படும் அவை அத்யந்த பரதந்த்ரனை இவனுடைய ஸ்வரூபத்துக்கு விருத்தமானவை. இவனைப்பற்றுவது ஸ்வரூபானுரூபமானது. இதனாலேயே கடோபனிஷத்தில்.

புருஷாந் ந பரம் கிஞ்சித் ஸா காஷ்ட்டா₂ ஸா பரா க₃தி:''

[புருஷனைக்காட்டிலும் மேலானதில்லை. அவனே மேலான உபாயமும், உபேயமுமாவான்.] என்று உத்கோஷிக்கப்பட்டது. இங்கு நாராயணவல்லியிலும்.

''ந கர்மணா ந ப்ரஜயா த₄நேந த்யாகே₃ந ஏகேந அம்ருதத்வமாநஶு:''

[கர்மத்தினாலும், ப்ரஜையினாலும், தனத்தினாலும் அவனை அடைய முடியாது; ஆத்மாவை அவனிடம் ஸமர்ப்பிப்பதினாலேயே மோக்ஷத்தை அடைந்தார்கள்.] என்று சொல்லப்படுகிறது. ''ஸர்வ லோகசரண்யாய ராக₄வாய மஹாத்மநே'' என்று ராமாயணத்திலும் உரைக்கப்பட்டது.

அவனைத்தவிர மற்றவைகள் 'உபாயம்' என்று சொல்லுவதற்கும் அர்ஹதையற்றவைகள். இவைகள் பலத்தைக் கொடுப்பதற்கு அவனையே எதிர்பார்த்திருக்கின்றன. ஸர்வேச்வரனை இவன் வேறொன்றையும் எதிர்பாராததோடன்றியில் நாம் விரும்பினதற்குமேல் ஒன்று பத்து நூறாயிரமாகப் பலன்களைத் தருகிறான். அவ்வளவும் கொடுத்தும் 'ஒன்றும் செய்யப் பெற்றிலோமே' என்று ஏங்குகிறான்.

''கோ₃விந்தே₃தி யத₃ாக்ரந்த₃த் க்ருஷ்ணா மாம் தூ₃ரவாஸிநம்
ருணம் ப்ரவ்ருத்₃த₄மிவ மே ஹ்ருத₃யாந் நாபஸர்ப்பதி''

[கோவிந்தா! என்று, வெகுதூரத்திலிருந்த என்னை த்ரௌபதி கூப்பிட்ட கூக்குரல், வ்ருத்தியடைந்த கடன்போலே, என்னுடைய ஹ்ருதயத்தினின்றும் நீங்கவில்லை.] என்று கலங்கினவனன்றோ அவன். ''ரக்ஷகராக ப்ரஸித்தரான பர்த்தாக்கள் ஐவரிருக்க, நம்மையே ரக்ஷகனாக நினைத்துக்கூப்பிட்டும் நான் அருகிலிருக்கப் பெற்றிலேனே' என்று நொந்துகொண்டான். ''அவள் தனக்கு அடுக்கும்படி செய்தாள்; நான் அவதரித்தும் அவதாரப்ரயோஜனமொன்றும் பெற்றிலேன்'' என்று வருந்தினான். தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து, இவளுடைய மயிர்முடியையும் முடிப்பித்து, விரோதிவர்க்கங்களை அழித்துப் பரமபதம் செல்லும்போதும்

http://acharya.org

''நாதிஸ்வஸ்த்தமநா யயௌ'' என்று மனஸ்ஸமாதானமில்லாமலே சென்றதாகவன்றோ சொல்லப்பட்டிருக்கிறது.

உபாயாந்தரங்கள் வெகுகாலம் கழித்துப் பலத்தைக் கொடுப்பவை. இவன் அடியார்களின் ஆர்த்தநாதம் செவிப்பட்டவுடன் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து ஆபத்தைத் தவிர்ப்பவன்.

''பரமாபதமாபந்ந: மநஸாசிந்தயத் ஹரிம்
ஸ து நாகவரச் ஸ்ரீமாந் நாராயண பராயண:''

[பரமாபத்தை அடைந்தவனும், ஸ்ரீவைஷ்ணவத்வமாகிற லக்ஷ்மியை உடையவனும், நாராயணனையே மேலான உபாயமாகப் பற்றினவனுமான அந்த கஜேந்த்ராழ்வான் மனத்திலே ஹரியை நினைத்தான்.] என்கிறபடியே ஸ்ரீகஜேந்த்ராழ்வான் ஸ்வயத்னத்தைக் கைவிட்டு ''ஆதிமூலமே'' என்று அலறினவுடன், திருவடி நிலைகளை (பாதுகைகளை) அணிந்துகொள்ளாமல், வெறுந்தரையிலே பத்தெட்டடியிட்டு, பின்னர் வாஹனபரிஷ்காரமில்லாமல் பெரிய திருவடியின்மேல் ஏறிக்கொண்டு வாயுவேகமனோவேகங்களுடன் தோன்றினவனன்றோ?

''மழுங்காத வைந்நுதிய சக்கரநல்வலத்தையாய்
தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே''

[களிறு—யானை; புள்—கருடன்.] என்று ஆழ்வாரும்

''அதந்த்ரித சமூபதி ப்ரஹிதஹஸ்தம் அஸ்வீக்ருத
ப்ரணீதமணி பாதுகம் கிமிதி சாகுலாந்த:புரம்
அவாஹநபரிஷ்க்ரியம் பதகராஜம் ஆரோஹத:
கரிப்ரவர ப்ரும்ஹிதே பகவதஸ்த்வராயை நம:''

[கஜேந்த்ரனின் கூக்குரல் செவிப்பட்டவுடன், சேனைமுதலியார் கொடுத்த கைலாக்கை மதியாமலும், கொண்டுவரப்பட்ட மணி பாதுகையை அணியாமலும், 'இதுக்குக் காரணமென்?' என்று திவ்யமஹிஷிகள் திகைக்கவும், வாஹனபரிஷ்காரமொன்றும் செய்யாமல் கருடன்மீதேறின பகவானுடைய வேகத்திற்கு நமஸ்காரம்.] என்று பட்டரும் இதில் ஈடுபட்டனர்.

பகவானே மோக்ஷோபாயமாகில் அவன் என்றும் ஸித்தனாக இருப்பதால் எல்லோருக்கும் உடனே மோக்ஷம் உண்டாக

http://acharya.org

வேண்டுமே? அவன் சிலருக்கே மோக்ஷம் கொடுத்தானாகில் பக்ஷ பாதமுள்ளவன், தயையற்றவன் என்னும் தோஷங்கள் வருமே? என்னும் ஸந்தேஹம் சிலருக்கு ஏற்படலாம். "ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" [ரக்ஷிக்கப்படுபவர்களின் அபேக்ஷையை எதிர் பார்க்கிறான்.] என்கிறபடியே அவனிடம் அத்வேஷமும், ஆபிமுக்யமும் உள்ளவர்களும், அவனையே உபாயமாகப் பற்றினவர்களுமான சேதனர்களையே அவன் ரக்ஷிக்கிறானாகையால் முற்கூறிய தோஷங்கள் ஏற்படா. அப்படியாகில் அந்த அத்வேஷம், ஆபிமுக்யம் முதலியவைகளையும் உபாயமாகக் கொள்ளவேண்டாமோ எனில்: அவைகள் உபாயமாகமாட்டா. பகவான் நம்மை ஸ்ருஷ்டிப்பது, கரணகளேபரங்களைக் கொடுப்பது, நம்மைத் திருத்துவதற்காகப் பல அவதாரங்களை எடுப்பது முதலிய காரியங்களைச் செய்ததினாலேயே நமக்கு அந்த அத்வேஷம் முதலியவை உண்டாகின்றன. ஆகையால் நாம் அவைகளை உபாயமாகக் கருதலாகாது. அதிகாரி விசேஷணமாகவே எண்ணவேண்டும். "க்ஷுத்து (பசி) அன்னத்துக்கு ஸாதனமாமன்றிறே இந்த ஸ்வீகாரத்துக்கு ஸாதனத்வமுண்டாவது." என்று பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை பரந்த ரஹஸ்யத்தில் அருளிச்செய்தார். பசியுள்ளவர்களுக்கு ஒரு ப்ரபு அன்னமிட்டுவந்தால் பசிதான் அன்னத்திற்கு ஸாதனமென்று சொல்லமுடியுமோ? அன்னமிடுபவன் ப்ரபுவன்றோ? அம்மாதிரியே சரணமடைந்தவனுக்கு மோக்ஷம் தருவேன் என்று பகவான் ஸங்கல்பித்திருப்பதைக்கொண்டு சரணாகதியை உபாயமென்று சொல்லமுடியாது.

> "வனத்திடரை ஏரியாம்வண்ணம் இயற்றுமிதுவல்லால்
> மாரியார் பெய்கிற்பார் மற்று"

என்றார் பூதத்தாழ்வார். நாம் ஏரி வெட்டினதைக்கொண்டே மழை பெய்துவிடாது. ஆகவே மழைக்கு ஏரி வெட்டுதல் உபாயமாக மாட்டாது. ஆயினும் மழைபெய்யும்போது அதைத் தேக்கிவைக்க ஏரிவெட்டுகிறோம். அம்மாதிரியே பகவத்ப்ராப்திக்கு ஸாதனமாகா விடினும், பகவான் நம்மை விஷயீகரிக்கும்போது அவனுடைய க்ருபைக்குப் பாத்திரமாவதற்காக நாம் நம்மைஅத்வேஷாதிகளாலே சீர்திருத்தி வைத்துக்கொள்ளுகிறோம்.

(பராயணம்) கர்மாதிகளைப்போல் அசேதனமாயில்லாமல், சேதனர்களாயிருந்தபோதிலும், அசக்தர்களாகையாலே பிரமன்,

http://acharya.org

சிவன் முதலியவர்களும் உபாயமல்லர். சிவன் மார்க்கண்டேயனை உய்யக்கொண்டதும் நாராயணனருளாலேயன்றோ. நம்மாழ்வாரும்,

"புக்கடிமையினால் தன்னைக்கண்ட மார்க்கண்டேயனவனை
நக்கபிரானும் அன்றுய்யக்கொண்டது நாராயணனருளே"

என்று அருளிச்செய்தார்.

(பராயணம்) ப்ராப்யங்களில் (அடையத்தகுந்த வஸ்துக்களில்) மேலானவனாயிருப்பவன். ஐச்வர்யம் அல்பமாயும், நிலையற்றதாயு மிருக்கையால் ஹேயமானது. ஆத்மலாபம், பகவத்ப்ராப்தியைவிட அல்பமாயும் நிலையானதாயுமிருக்கையால் கீழானது. இவ்விஷயத்தை ஆழ்வார்,

"குறுகா நீளா இறுதி கூடா எனையூழி
சிறுகா பெருகா அளவில் இன்பம் சேர்ந்தாலும்
மறுகாலின்றி மாயோன்! உனக்கே ஆளாகும்
சிறு காலத்தை உறுமோ? அந்தோ! தெரியிலே"

[குறுகா நீளா—ஸ்வரூபத்தில் ஸங்கோசவிகாஸமின்றியே. இறுதி கூடா—முடிவுமின்றியே. அளவிலின்பம்—கைவல்ய மோக்ஷம். மறுகாலின்றி—மறுபடியில்லாமல். தெரியில்—நிரூபித்துப்பார்த்தால்.] என்று அருளிச்செய்தார். ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாயும், ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுப்பவனாயும், ஆதிமத்யாந்த ரஹிதனாயுமிருக்கும் இவனையடைவதே மேலானதாகும். இதை 'ஒரு நாயகமாய்' என்னும் திருவாய்மொழியில் ஆழ்வார் விரிவாக உபதேசித்தருளினார்.

நாராயணபரம் ப்₃ரஹ்ம தத்த்வம் நாராயண: பர:
நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:
யச்ச கிஞ்சித் ஜக₃த்யஸ்மிந் த்₃ருச்யதே ச்ருயதேபி வா
அந்தர்ப₃ஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தி₂த:

[நாராயணனே பரப்ரஹ்மம்: நாராயணனே பரதத்வம்; நாராயணனே பரஞ்சோதி; நாராயணனே பரமாத்மா. இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவுமாகிற எல்லாவற்றையும் உள்ளும் புறமும் நாராயணன் வியாபித்து நிற்கிறான்.]

இந்த ச்ருதியின் பொருளை கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில்,

http://acharya.org

''ஜ்யோதி: பரம் பரமதத்வமதோ² பராத்மா
ப்³ரஹ்மேதி ச ச்ருதிஷு யத் பரவஸ்த்வதீ⁴தம்
நாராயணஸ் ததி³தி தத்³ விசிநஷ்டி காசித்''

[வேதங்களில், பரஞ்சோதியென்றும், பரதத்வமென்றும், பரமாத்மா வென்றும், ப்ரஹ்மமென்றும் படிக்கப்பட்ட பரவஸ்து நாராயணனே என்று ஒரு வேதவாக்யம் விளக்குகிறது.] என்று அருளிச்செய்தார்.

பாஞ்சராத்ரத்தில் புருஷோத்தமனான புராரியும் க்ருஷ்ணனைக் குறித்து ஸ்தோத்ரம் செய்கையில்,

'க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபா³ஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம்
பரேசம் பரமாத்மாநம் அநாதி³நித⁴நம் பரம்''

[நீண்ட கைகளையுடைய க்ருஷ்ணா! உன்னைப் புருஷோத்தமனாக அறிகிறேன். மேலானவர்களுக்கும் ஈசனாகவும், ஆதியந்தமற்றவனாகவும், மேலானவனாகவும், பரமாத்மாவாகவும் அறிகிறேன்.] என்றும்,

''த்வம் ஹி ப்³ராஹ்ம பரம் ஜ்யோதி: கூ³டு⁴ம் ப்³ரஹ்மணி வாங்மயே'' [நீயே வாங்மயமான வேதத்தில் பொதிந்துள்ள பரப்ரஹ்மமும், பரஞ்சோதியுமாகிறாய்.] என்றும் கூறி இதை விளக்கினர். அநந்த பாரதிகளால் இயற்றப்பட்ட பின்வரும் கீர்த்தனை இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

பல்லவி

பரஞ்சோதி நீரே பரப்பிரம்மம்
பரஞ்சோதி நீரே.

அநுபல்லவி

பரஞ்சோதி நீரெனவே
இரைஞ்சோதிக் கூவும் வேதம் — பரஞ்

சரணம்

சோதிகளையெல்லாம் தானே
சோதிபெறச் செய்துவைக்கும் — பரஞ்

(நாராயணபரம்ப்ரஹ்ம) ''ப்³ராஹ்ம வா இத³மக்³ர ஆஸீத்'' [இது முதலில் ப்ரஹ்மமாகவே இருந்தது.] என்று சொல்லப்பட்டவன் இவனே என்று காட்டுகிறது. ''த்வம் ப்³ராஹ்ம ஹி ப்³ருஹதி ப்³ரும்ஹண:

http://acharya.org

தீதி தஸ்மாத்" என்கிறபடியே பெரிதானதாலும், ஆச்ரிதர்களைப் பெரிதாகச் செய்வதாலும், நாராயணனே பரப்ரஹ்மமாகிறான். அளவற்ற ஸ்வரூபரூபகுணவிபூதிகளையுடைய இவனே பரப்ரஹ்ம மென்ற சொல்லுக்குரியவன். மேலும் தன்னையடைந்தவர்களைத் தனக்கு ஸமானமாகச் செய்கிறானன்றோ ஸ்ரிய:பதி. "பரமம் ஸாம்ய-முபைதி" [மேலான ஸாம்யத்தை அடைகிறான்.] என்றது வேதம். "மம ஸாதர்ம்யமாகதா:" [எனக்கு ஸமானமான குணங்களையுடைய வர்கள்.] என்றான் வாஸுதேவன். "தன்னைகவே கொண்டு" என்றார் நம்மாழ்வார். "தம்மையே ஒக்க அருள்செய்வர்" என்றார் திருமங்கை மன்னன். ஸ்வரூபவிபுத்வம், ஜகத்வ்யாபாரம், லக்ஷ்மீபதித்வம் முத லியவைகளைத்தவிர மற்ற அம்சங்களில் அவனைப்போலாகிறார்கள் முக்தர்கள். ஸ்வரூபகுணங்களில் சிறிது மேன்மையுடைய ஜீவர் களும், மூலப்ரக்ருதியும், நித்யவிபூதியும், நித்யமுக்தர்களும் சில விடங்களில் ப்ரஹ்மசப்தத்தால் சொல்லப்படுகின்றனர். அவர்களைக் காட்டிலும் மேலானவனாகையால் பரப்ரஹ்மமென்று சொல்லப்படுவ தாகவும் கொள்ளலாம்.

(தத்த்வம் நாராயண: பர:) நாராயணனே பரதத்வம்; வேதம் பரதத்வநிர்ணயம் பண்ணுகிறபடி காண்மின். மேலான உண்மையா யிருப்பவன் நாராயணனே. இதிலிருந்து உண்மையான வஸ்துக் கள் அநேகமென்றும் அவற்றுள் மேலானவனாயிருப்பவனிவனென் றும் சொல்லப்படுகிறது. அசேதனம் மாறுபடக்கூடியதாகையாலும் உயிரற்றதாகையாலும் மேலான உண்மையன்று. சேதனர்கள் ஜ்ஞான சக்திகளில் ஏற்றத்தாழ்வையுடையவர்களாகையால் மேலான உண்மையல்லர். நித்யமுக்தர்களும் அவனுக்குப் பர தந்த்ரர்களாகையாலே பரதத்வமல்லர்.

(நாராயணபரோ ஜ்யோதி:) நாராயணனே மேலான ஜ்யோதி. "ஏஷ ஸம்ப்ரஸாத: அஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம் பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே" [இந்த ஜீவன் இந்த சரீரத்தில் நின்றும் கிளம்பிப் பரஞ்சோதியை அடைந்து ஸ்வஸ்வரூபப்ராப்தி யடைகிறான்.] என்ற வேதவாக்யத்தில் சொல்லப்பட்ட பரஞ்சோதி இவனே என்று காட்டப்படுகிறது. 'ஸ்ரீகௌஸ்துபம்போலே நமக்குப் பரமபோக்யமான ஆத்மவஸ்துவை அடையப்பெற்றோமே' என்னும் ஆனந்தத்தினால் பரமபுருஷனுடைய திருமேனியில் உண்டான புகரை 'பரம் ஜ்யோதிருபஸம்பத்ய' என்ற வாக்யம் வெளி யிடுவதாக நம் ஆசாரியர்கள் அருளியுள்ளார்கள். ஆழ்வாரும்

http://acharya.org

''என்கண்ர் பாசாங்வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே'' என்றார். 'பரம் ஜ்யோதி:' என்று பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹத்தின் ஒளி காட்டப்படுகிறது.

''ந தத்ர ஸூர்யோ பா₄தி ந சந்த்₃ரதாரகம்
நேமா வித்₃யுதோ பா₄ந்தி குதோயமக்₃நி:
தமேவ பா₄ந்தமநுபா₄தி ஸர்வம்
தஸ்ய பா₄ஸா ஸர்வமித₃ம் விபா₄தி''

[அப்பரமபுருஷனிடத்தில் ஸூர்யனும், சந்திரனும், நக்ஷத்ரங்களும் பிரகாசிக்கமாட்டா. அக்னியைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அவனை அநுஸரித்தே எல்லாம் பிரகாசிக்கின்றன. அவனுடைய ஒளியினலேயே இவையெல்லாம் பிரகாசிக்கின்றன.] என்றல்லவோ சொல்லப்பட்டது. ''ருக்மாப₄ம்'' [தங்கம்போன்ற ஒளியையுடையவன்.] என்றும் ''ஆதித்யவர்ணம்'' என்றும் புருஷோத்தமனை வர்ணிப்பதெல்லாம் இவனுடைய ஒளியில் ஸவ்லேசத்தை அவைகள் உடைத்தாயிருப்பதாலேயே.

''பரஞ்சோதி நீ பரமாய் நின்னிகழ்ந்து பின் மற்றோர்
பரஞ்சோதி இன்மையின் படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்த எம்
பரஞ்சோதி கோவிந்தா! பண்புரைக்க மாட்டேனே.'

[நின்னிகழ்ந்து உன்னைத்தவிர. படி ஒவி நிகழ்கின்ற-உபமானமில்லாதபடியிருக்கிற.] என்று வேதம் தமிழ்செய்த சடகோபன் 'பரம ஜ்யோதி:' சப்தார்த்தத்தை விளக்கினர். ஸ்வாபாவிகமாகவே ஜ்யோதிஸ்ஸ்வரூபனுயிருக்கும் நாராயணன் பிராட்டியுடன் சேர்த்தியால் பரஞ்சோதியாகிறான். திருவாழியாழ்வானுடன் சேர்க்கையால் பரஞ்சோதியாகிறான். உலகங்களைப் படைத்துப் பரஞ்சோதியாகிறான். அவதாரங்களெடுத்துப் பரஞ்சோதியாகிறான்.

(நாராயண பரம் ஜ்யோதி:) நாராயணனைக்காட்டிலும் மேலான சோதி கிடையாது. ''மிகுஞ்சோதி மேலறிவார் யவரே?'' என்றார் ஆழ்வார். ''ஸ்வாபா₄விகாநவதி₄காதிசயேசித்ருத்வம் நாராயண! த்வயி ந ம்ருஷ்யதி வைதி₃க: க:'' [நாராயணனே! இயற்கையானதும், எல்லையற்ற மேன்மையையுடையதுமான உன் ஐச்வர்யத்தை வைதிகனுயிருக்கும் எவன் ஸஹிக்கமாட்டான்?] என்று ஆளவந்தார் அருளினர். ''அநந்யபரமான நாராயணனுவாகாதிகளிலே ப்ரதிபாதிக்கப்பட்ட

http://acharya.org

வைபவத்தையுடைய உன் பக்கலிலே பொருமை கொண்டாடியிருப்பான் ஒரு வைதிகனுண்டோ? உண்டாகில் அவன் அவைதிகனை மித்தனோ" என்று நம்பின்னை அருளிச்செய்தார்.

"விஷ்ணுப4க்தி விஹீநோ யஸ் ஸர்வசாஸ்த்ரார்த்த2 வேத்3யபி
ப்3ராஹ்மண்யம் தஸ்ய ந ப4வேத் தஸ்யோத்பத்திர் நிரூப்யதாம்"

[ஸகலசாஸ்த்ரங்களறிந்தவனாகிலும் விஷ்ணுபக்தி இல்லாதவன் பிராம்மணனாகமாட்டான். அவனுடைய உத்பத்தியை நிரூபிக்கலாம்.] என்றும்,

"யஸ்து நாராயணம் த்3வேஷ்டி தம் வித்3யாதந்த்யரேதஸம்"

[எவன் நாராயணனை த்வேஷிக்கிறானோ அவனைச் சண்டாளனுக்குப் பிறந்தவனாக அறியலாம்.] என்றுமல்லவோ சொல்லப்பட்டது.

(ஆத்மா நாராயண: பர:) "ஆத்மைவேத3மக்3ர ஆஸீத் புருஷவித4:" [இவ்வுலகம் முதலில் புருஷாகாரனான ஆத்மாவாகவே இருந்தது.] என்ற ப்ருஹதாரண்யக வாக்யத்தில் சொல்லப்பட்ட ஆத்மா இவனே என்று காட்டுகிறது. ஆத்மாவினுள்ளும் வியாபித்திருக்கும் அந்தராத்மாவாதலால் 'பரமாத்மா' என்று சொல்லப்படுகிறான். பத்தர், முக்தர், நித்யர் என்னும் மூன்றுவகையான ஆத்மாக்களைக் காட்டிலும் மேலானவன்.

"பரமாத்மா ச ஸர்வேஷாம் ஆதா4ர: பரமேச்வர:
விஷ்ணுநாமா ஸ வேதே3ஷு வேதா3ந்தேஷு ச கீ3யதே"

[பரமாத்மாவாயும், எல்லாருக்கும் ஆதாரமாயும், பரமேச்வரனாயும், விஷ்ணுவென்னும் பெயரையுடையவனாயுமிருக்கும் அவன், எல்லா வேதங்களிலும், வேதாந்தங்களிலும் கீர்த்திக்கப்படுகிறான்.] என்று இது விவரிக்கப்பட்டது.

இந்த நாராயணஸூக்தார்த்தத்தைப் பராசரமஹரிஷி,

"அவிகாராய சுத்3த4ாய நித்யாய பரமாத்மநே"

[விகாரமற்றவனும், சுத்தனும், நித்யனும், பரமாத்மாவுமான (விஷ்ணுவுக்கு)] என்று உபக்ரமஹணம் செய்தார். 'அவிகாராய' என்று 'அக்ஷரம்' என்றதை விளக்கினர். இத்தால் அசேதனத்தைக் காட்டிலும் வித்தியாசம் சொல்லப்பட்டது. 'தேவம்' என்பதை

http://acharya.org

'சுத்தாய' என்று விவரித்தார். இதனால் விகாரமற்றவர்களாயிருந்தும் அசுத்தர்களான ஸம்ஸாரிகளைக்காட்டிலும் வ்யாவ்ருத்தி (வித்தியாசம்) சொல்லப்பட்டது. 'நித்யம்' என்பதை 'நித்யாய' என்று உரைத்தார். இதனால் நித்யசுத்தர்களல்லாத முக்தர்களைக்காட்டிலும் மேலானவனென்று சொல்லப்பட்டது. 'பர: ஆத்மா' என்னும் பதத்தை 'பரமாத்மநே' என்று அனுஸந்தித்தார். இத்தால் நித்ய சுத்தர்களான நித்யஸூரிகளிலும் மேலானவன் பரமபுருஷன் என்றுரைக்கப்பட்டது. 'அவிகாராய...' என்னும் விஷ்ணுபுராண ச்லோகத்திற்கு எங்களாழ்வான் அருளிச்செய்த வியாக்யான ஸ்ரீஸூக்திகள் இவ்விடத்தில் அனுஸந்திக்கத்தக்கன.

(யச்ச...நாராயணஸ் ஸ்தித:) இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவுமான எல்லா உலகையும் நாராயணன் உள்ளும் புறமும் வியாபித்து நிற்கிறான். "ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் அல்ல புறத்தினுள்ளும் நீக்கமின்றி எங்கும் நின்றாய்!" என்றும், "முற்றக் கரந்தொளித்தாய்!" என்றும் இவ்வர்த்தத்தை ஆழ்வார் அருளிச் செய்தார். 'விச்வாத்மாநம்' என்று முன் சொன்னது இங்கு விவரிக்கப்படுகிறது.

(நாராயண:) வேதம் நாராயண நாம பாராயணம் செய்வதைப் பாரீர். அஷ்டாக்ஷரத்தில் ப்ரதானமான நாராயண சப்தத்தை வேதம் அஷ்டாவ்ருத்தி (எட்டுத்தடவை) ஓதுகிறது. ஒப்புயர்வற்றதும் அநந்யபரமுமான (வேறு எவரையும் குறிக்காத) திருநாமமன்றோ இது.

'பரம்ப்ரஹ்ம' என்றதினால் புருஷோத்தமனின் பெருமையைக் காட்டுகிறது. 'பரம் தத்வம்' என்றதினால் தத்வத்ரயங்களில் மேலானவன் அவனே என்று உணர்த்துகிறது. 'பரம் ஜ்யோதி:' என்பதினால் ஒப்புயர்வற்ற அழகையுடையதும் ஒளிமயமானதுமான திவ்ய மங்கள விக்ரஹத்தை உடையவனென்று உரைக்கிறது. 'பரமாத்மா' என்று ஸகல சேதனர்களைக்காட்டிலும் உயர்ந்தவனென்று உணர்த்துகிறது. இப்படிப்பட்ட நாராயணன் உலகையெல்லாம் உள்ளும் புறமும் வியாபித்திருக்கிறான் என்று உத்கோஷிக்கிறது. விஷ்ணுசித்தவிஜயத்தின் ஆரம்பத்தில் இந்த மந்திரத்திற்கு விவரணமாக வெளியிடப்பட்ட சில அர்த்த விசேஷங்களும் இங்கு அனுஸந்திக்கத்தக்கவை.

http://acharya.org

அநந்தமவ்யயம் கவிம் ஸமுத்$_{4}$ரேந்தம் விச்வசம்பு$_{4}$வம்

[எண்ணை முடியாத அவதார ரூபங்களை உடையவனும், (அப்படி அவதாரம் செய்தும்) குறைவற்றவனும், அழகாகப் பேசுபவனும், பாற்கடல் நடுவில் பள்ளிகொண்டவனும், உலகிற்கெல்லாம் நன்மையைச் செய்பவனும் நாராயணனே]

முன் மந்திரத்தில் 'பரப்ரம்ஹம்' 'பரம் தத்வம்' முதலிய சப்தங்களால் பரத்வானுபவம் செய்தது வேதம். இங்கு அர்ச்சாவதார பர்யந்தமான அவதாரங்களை அனுபவிக்கிறது. ஸ்ரீவைகுண்ட நாதன் பரமபதத்திலே பகல்விளக்குப்போலே பிரகாசிக்கிறான். அஜ்ஞானம் நிறைந்த இவ்வுலகில் அவதாரம் செய்து இருட்டிலேற்றின விளக்குப்போலே விளங்குகிறான். தொண்டரடிப்பொடியாழ்வாரும் "அமரரேறே!" என்று பரத்வத்தை அனுஸந்தித்து "ஆயர்தம் கொழுந்தே!" என்று அதைக்காட்டிலும் மேலான ஸௌலப்யத்தை அருளிச்செய்தாரன்றோ?

"கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்குத்
தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே"

என்கிறபடியே நித்யஸூரிகளும், ஸர்வாஸ்மாத்பரன் தன்னைத் தாழவிட்டு நிற்கும் இந்த நிலையைக் காண்பதற்காக இங்கு வருவதாகவன்றோ சொல்லப்பட்டிருக்கிறது. நம் ஆழ்வார்களும், ஆசார்யர்களும் அர்ச்சாவதார எம்பெருமானைப் பரமபதநாதனின் விபூதியாக நினைத்திருக்கமாட்டார்கள். ஸ்ரீவைகுண்ட நாதனையே அர்ச்சாமூர்த்தியின் விபூதியாக அருளிச்செய்திருக்கிறார்கள்.

"ஸ்ரீமத்$_{3}$வ்யோமநஸீம வாங்மநஸயோஸ் ஸர்வேऽவதாரா: க்வசித்
காலே விச்வஜநீநமேதத$_{3}$தி$_{1}$: ஸ்ரீரங்கதா$_{4}$மந்யத$_{3}$
ஆர்த்தஸ்வாக$_{3}$திகை: க்ருபாகலுஷிதைராலோகிதைரார்த்$_{3}$ரயந்
விச்வத்ராணவிமர்சநஸ்க$_{2}$லிதயா நித்$_{3}$ராஸி ஜாக$_{3}$ர்யயா"

['பரமபதம் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதது; விபவாவதாரங்கள் ஏதோ ஒரு ஸமயத்திலே நடந்து முடிந்தவை. அர்ச்சாவதாரமே ஸர்வஜநஹிதமானது' என்று திருவுள்ளங்கொண்டு திருவரங்கத்தில், வருந்தினவர்களுக்கு நல்வரவு கூறுபவையும், தயையினால் கலங்கிக் கிடப்பவையுமான கடாக்ஷங்களால் ஸம்ஸாரிகளைக் குளிரச் செய்து நிற்கும் தேவரீர் ஜகத்ரக்ஷணசிந்தையுடன்கூடி விழித்துக் கொண்டே கண்வளர்ந்தருளுகிறீர்.] என்ற பட்டரின் ஸ்ரீஸூக்தி இங்கு அனுஸந்திக்கத்தக்கது.

http://acharya.org

(அநந்தம்) கணக்கற்ற அவதாரரூபங்களையுடையவன். 'அநந்த ரூபம்' என்று முதல் அனுவாகத்தில் சொன்னதை உணர்த்துகிறது. ''அந்தஸ்ஸமுத்3ரநிலயம் யமநந்தரூபம்'' [பாற்கடலில் பள்ளிகொண்டவனும், அளவற்ற ரூபங்களையுடையவனுமான எவனை.] என்று கூரத்தாழ்வான் இந்த மந்த்ரார்த்தத்தை ஸங்க்ரஹித்தார். ''அஜாயமானோ ப3ஹுதா4 விஜாயதே'' [பிறப்பற்றவனாயிருந்தும் பலபடியாகப் பிறக்கிறான்.] என்றது வேதம். ''பிறப்பில் பல் பிறவிப் பெருமான்'' என்றும், ''சன்மம் பலபல செய்து'' என்றும் ஆழ்வார் அருளிச் செய்தார். ''ப3ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி'' [எனக்குப் பல ஜன்மங்கள் கடந்தன.] என்று ஸர்வேச்வரனும் உரைத்தான். இவனுடைய அவதாரங்கள் கணக்கற்றவையன்றோ. மிக்கபல் மாயங்களால் விகிருதம் செய்து வேண்டும் உருவு கொண்டவனன்றோ இவன். உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்த பெருமானன்றோ இவன். ராமக்ருஷ்ணாதி ரூபத்துடன் அவதரித்துச் சேதனர்களை உய்விக்கிறான். அக்காலத்திலும் இறந்தவர்களை அர்ச்சாவதாரமாயிருந்து ஆட்கொள்ளுகிறான். ''ஹ்ருத3ா மநீஷா மநஸாபி4க்லுப்த:'' [நிச்சஞ்சலமாயும், பக்தியுடன் கூடியுமிருக்கும் மனத்தினால் கல்பிக்கப் பட்டவன்.] என்று இந்த நாராயணவல்லியின் முதலனுவாகத்தில் சொல்லப்பட்ட அர்ச்சாவதாரமும் இங்கு 'அநந்தம்' என்பதினால் உணர்த்தப்படுகிறது. அங்கு வியாக்யானம் செய்த நாராயணயதியும், ''யத் ஸ்வரூபோ யத்3ரூபோ யத்3கு3ணோ யத்3விபூ4திகோ யத்ப்ரமாணகோ யத்3த்3ரவ்யோயம் ஸர்வேச்வர: கல்ப்யதே, ஸ தத3ா ப4வேதி3தி ப4ாவ:'' [எப்படிப்பட்ட ஸ்வரூபத்தையுடையவனாகவும், எந்த ரூபத்தையுடையவனாகவும், எக்குணங்களையுடையவனாகவும், எந்த ஐச்வர்யத்தையுடையவனாகவும், எந்த அளவையுடையவனாகவும், எந்த த்ரவ்யத்தையுடையவனாகவும், ஸர்வேச்வரன் கல்பிக்கப்படுகிறானோ அவன் அப்படியே ஆகிறான்.] என்று அர்ச்சாவதாரபரமாக விவரித்தாரன்றோ. இவ்வர்த்தத்தை கீதாசார்யன்

''யே யத3ா மாம் ப்ரபத்3யந்தே தாம்ஸ்ததை2வ ப4ஜாம்யஹம்''

[எவர்கள் எப்படியாகவேணுமென்று என்னை பஜிக்கிறார்களோ, அவர்களைக் குறித்து அப்படியே அடைவதற்குத் தகுந்தபடி நான் என்னை ஆக்கி வைக்கிறேன்.] என்று அருளிச்செய்தார். ஆழ்வார்களும் ''தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம் தானே'' என்றும், ''நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல்வண்ணனே'' என்றும் அருளிச்செய்தனர். இப்படிக் கிராமங்கள்தோறும், கிருஹங்

http://acharya.org

கள்தோறும் அர்ச்சாவதாரமெடுத்து எழுந்தருளியிருக்கிறான் என்பதை 'அநந்தம்' என்னும் பதம் காட்டுகிறது.

"ஆஸ்தாம் தே கு3ணராஶிவத்3 கு3ணபரீவாஹாத்மனாம் ஜன்மனாம்
ஸங்க்2யா. பௌ4மநிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு ரங்கே3ச்வர
அர்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபராதீ4நாகி2லாத்ம ஸ்தி2தி:
ப்ரீணீஷே ஹ்ருத3யாலுபி4ஸ் தவ ததச்ஶீலாஜ்ஜடீ3பூ4யதே"

[ஸ்ரீரங்கநாதரே! உம்முடைய குணஸமூஹங்களுக்குப்போல் அக்குணங்களுக்குப் போக்குவீடான அவதாரங்களுடைய எண்ணிக்கை கிடக்கட்டும். உலகிலுள்ள ஆலயங்களிலும், கிருஹங்களிலும், ஆச்ரமங்களிலும் ஆராதிக்கத் தகுந்தவராகவும், எதையும் ஸஹிப்பவராகவும், அர்ச்சகர்களுக்கு எல்லா நிலைகளிலும் பரதந்த்ரராகவும் இருந்துகொண்டு உகக்கிறீர். அப்படிப்பட்ட சீலகுணத்தால் ஈர நெஞ்சினர்கள் (ஆழ்வார்கள்) மோஹிக்கிறார்கள்.] என்று பட்டரருளிச்செய்தது இங்கு அனுஸந்திக்கத்தக்கது.

'அநந்தம்' முதலிய பதங்கள் பரத்வத்தையே குறிப்பதாகவும் பொருள் கொள்ளலாம். (அநந்தம்) தேசத்தினாலும்: காலத்தினாலும், வஸ்துவினாலும் அளவுபடாதவன். 'நித்யம்' என்று காலபரிச்சேதமில்லாமை அனுஸந்திக்கப்பட்டது. 'விச்வம்' என்று வஸ்து பரிச்சேதமில்லாமை உரைக்கப்பட்டது. "யச்ச கிஞ்சித்...ஸ்தித:" என்று தேசத்தினால் அளவுபட்டிருத்தலில்லையென்று காட்டப்பட்டது. இம்மூன்றுவிதமான அளவுமில்லாதவனென்று அவைகளை இங்கு ஒருங்கே அனுஸந்திக்கிறது.

(அநந்தம்) "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்3ரஹ்ம" என்ற வேதவாக்கியத்தில் சொல்லப்பட்டவன் நாராயணனே என்று நிர்ணயித்துத் தருகிறது. (அநந்தம்) பகவான் உகந்தருளிய திருநாமங்களில் இதுவுமொன்று. ஸத்யஜ்ஞாநாதிகளைப்போல் ஸ்வரூபநிரூபகமான திருநாமமன்றோ இது.

(அவ்யயம்) குறையற்றவன். இப்படிப் பலபிறப்புக்கள் எடுத்தும் சிறிதும் குறைவில்லாதவன். மற்றவர்களுக்குப் பிறக்கப்பிறக்க ஞானம் மழுங்கும். இவன் பிறக்கப்பிறக்கப் பெருமை பெறுகிறான். "விஜாயதே" [விசேஷமாகப் பிறக்கிறான்.] என்றும், "ஸ உ ச்ரேயாந் ப4வதி ஜாயமாந:" [அவன் பிறந்தபின்பே மேலானவனாகிறான்.] என்றும் மறைகள் முறையிட்டன. "நிலை வரம்பில பல பிறப்பாய் ஒளி

http://acharya.org

வருமுழுநலம்'' என்று ஆழ்வார் அருளிச்செய்தார். ''ஜந்ம கர்ம ச மே திவ்யம்'' [என்னுடைய அவதாரங்களும், சேஷ்டிதங்களும் அப்ராக்ருதமானவை.] என்று அவனும் மதிப்புடனன்றோ பேசினான்.

(கவிம்) நன்றாகப் பேசுபவன். அவதாரம் எடுத்தபின் செய்யும் காரியத்தைச் சொல்லுகிறது. இங்கு பேச்சைச் சொன்னது சிரிப்பது, குளிர நோக்குவது, அணைப்பது முதலியவைகளுக்கும் உபலக்ஷணம். ''ஹஸிதம் ப$_4$ாஷிதம் சைவ'' [சிரிப்பதும், பேசுவதும்.] என்று வால்மீகிமுனிவரும் இவைகளில் ஈடுபட்டாரன்றோ. ''நின் செங்கனிவாயின் நல்வப்பணிமொழி நினைதொறும் ஆவி வேமால்'' என்று புருஷோத்தமனுடைய பேச்சிலே ஆழ்வாரும் ஆழங்காற்பட்டார். ''அநவதி$_4$கத$_3$யாஸெள ஹார்த்த$_3$ாநுராக$_3$க$_1$ர்ப்ப$_4$ாவலோக நாலாபாம்ருதை: விச்வமாப்யாயயந்'' [எல்லையற்ற தயையையும், நல்லெண்ணத்தையும், பிரீதியையும் உடையவையும், அம்ருதம்போன்றவையுமான பார்வையினாலும், பேச்சினாலும் உலகையெல்லாம் உஜ்ஜீவிக்கச்செய்துகொண்டு.] என்று ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தார்.'' ஆசயா யதி$_3$வா ராம: புநச் சப்$_3$த$_3$ாபயேதி$_3$தி'' என்கிறபடியே 'மறுபடியும் ஸ்ரீராமபிரானுடைய இனிய குரலைக் கேட்கப்பெறுவேனோ' என்று ஸுமந்திரன் ஆசைப்பட்ட பேச்சன்றோ இவனுடையது.

(கவிம்) 'அபி$_4$வத$_3$ந் யத$_3$ாஸ்தே' என்று புருஷஸூக்தத்தில் சொல்லியபடி எல்லா சப்தங்களையும் உச்சரிப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

> ''யோ ப்$_3$ரஹ்மாணம் வித$_3$த$_4$ாதி பூர்வம்
> யோ வை வேத$_3$ாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை''

[எந்தப் புருஷோத்தமன் பிரமனை முதலில் படைத்தானோ, எவன் அவனுக்கு வேதத்தை உபதேசித்தானோ.] என்கிறபடியே வேதத்தை முதலில் உச்சரித்தவன் என்றும் கொள்ளலாம். ''பண்ணார்பாடல் இன்கவிகள் யானாய்த் தன்னைத்தான்பாடி'' என்கிறபடியே, சிஷிகள், ஆழ்வார்கள் முதலியவர்களை நிமித்தமாத்ரமாகக்கொண்டு தன்னைத்தானே கீர்த்தித்துக்கொண்டவன் என்றும் பொருள்கொள்ளலாம். கவிக்கு விஷயமாயிருப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். எவரைப்பற்றிக் கவி பாடினாலும் அது வஸ்துஸ்வபாவத்தாலே இவனையே சொல்லுமன்றோ. ஸர்வசப்தவாச்யன் இவனேயன்றோ. இதையே ஆழ்வாரும்,

http://acharya.org

"நும் இன்கவிகொண்டு நும்நும் இட்டாதெய்வமேத்தினல்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே"

என்று அருளிச்செய்தார்.

அடுத்தபடியாக முற்கூறிய அவதாரங்களுக்கு மூலமாயிருக்கும் அவதாரமான க்ஷீராப்திநாதனைச் சொல்லுகிறது: (ஸமுத்ரே ந்தம்) திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளுபவன். 'அந்த:' என்னும் சப்தம் ஸ்தானத்தைக் குறிக்கும்.

"ஏஷ நாராயணம் ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:
நாக$_3$பர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாக$_3$தோ மது$_4$ராம் புரீம்"

[திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளும் ஸ்ரீமந்நாராயணனே ஆதிசேஷனுகிய படுக்கையை விட்டு மதுரைக்கு ஸ்ரீகிருஷ்ணனுக வந்திருக்கிறுன்,] என்றல்லவோ சொல்லப்பட்டது. இந்த நாராயண வல்லியில் ஆரம்பத்திலும் "அம்ப$_4$ஸ்யபாரே" என்று க்ஷீராப்திநாதனைப்பற்றிப் பேசப்பட்டது. நடுவில் "யமந்தஸ் ஸமுத்$_3$ரே கவயோ-வயந்தி" [எந்தப் பரமபுருஷனைத் திருப்பாற்கடலிலுள்ளவனுகக் கவிகள் அறிகிறுர்களோ.] என்று இதையே உரைத்தது. இங்கும் "ஸமுத்$_3$ரேந்தம்" என்று வேதம் உத்கோஷிக்கிறது. ஸர்வேச்வரனு யிருப்பவன், தன்னை அடைந்தவர்களை ரக்ஷிப்பதற்கும், ஆச்ரித விரோதிகளை அழிப்பதற்கும், தன்னல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரமனுக்கும், சிவனுக்கும் நடுவில் ஸாமாந்யர்கள் அவர்களோடொருவனுக நினைக்கும்படி அவதரித்திருக்கும் நீர்மையை அனுஸந்தித்து வாய்வெருவுகிறது வேதம். ஆழ்வார்களும் இந்த நீர்மையை நினைத்தல்லவோ க்ஷீராப்திநாதனிடம் ஈடுபட்டார்கள். "நாகமேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே!" என்றுர் நம்மாழ்வார். "பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்" என்று ஆண்டாள் அருளிச்செய்தாள். "பையரவினணைப் பாற்கடலுள் பள்ளிகொள்கின்ற பரமமூர்த்தி!" என்றுர் பெரியாழ்வார்.

(ஸமுத்ரே ந்தம்) "குறைவில் தடங்கடல்" என்று ஆழ்வாராலே புகழப்பட்ட ஸமுத்ரத்தினுள் இருப்பவன். யசோதைப் பிராட்டி க்ருஷ்ணனைத் தன் மடியில் வைத்து ஸந்தோஷித்ததைப்போல, ஸர்வேச்வரனைத் தன்னுள்ளே இட்டுக்கொண்டு அத்தாலே உகந்து குறைவற்றிருக்கும் கடல். பிராட்டியின் பிறப்பிடமாகையாலே எம்பெருமானுக்கு ச்வச்ருக்ருஹமன்றே இது. "ச்வச்ருக்$_3$ருஹோ

http://acharya.org

ஸ்வர்க்க$_4$துல்யோ ஈராணும்'' என்கிறபடியே எம்பெருமான் உகந் தருளிய தேரம்.

(ஸமுத்ரேந்தம் விச்வசம்புவம்) திருப்பாற்கடலிலிருந்து கொண்டு உலகத்திற்கு நன்மையைச் செய்பவன். ''சாபமுள்ளன நிக்குவானைத் தடங்கடல் கிடந்தான் தன்னை'' என்ருர் ஆழ்வார். இவற்றுக்கு ஆபத்து வருங்காலத்தில் நம்மைத் தேடித்திரிய வொண்ணுது என்று இக்கடலிலே படுத்துக்கிடப்பவன். கூப்பீடு கேட்குமிடமன்ருே இது. (ஸமுத்ரேந்தம் விச்வசம்புவம்)' குறைவில் தடங்கடல் கோளரவேறித்தன் கோலச் செந்தாமரைக்கண் உறை பவன்போலே ஓர் யோகுபுணர்ந்த ஒளிமணிவண்ணன்'' என்ருர் ஆழ்வார். ''எல்லா ஜந்துக்களும் நம்மை அடைந்து உய்யும்வழி ஏதோ'' என்று சிந்தைசெய்துகொண்டே படுத்திருப்பவன். உறங்கு வது என்று போய் ஜகத்ரக்ஷண சிந்தை செய்பவன். ரக்ஷணோபாய சிந்தையினல் நாக்கு உலரும்போது ''ஆத்மாநம் வாஸுதே$_3$வாக்$_1$யம் சிந்தயந்'' என்கிறபடியே தன்னைத்தானே தியானிப்பன். (விச்வ சம்புவம் அநந்தம்) இப்படி தியானித்தவுடன் அவதாரம் செய்வதே இதற்கு வழியென்று தோன்றும். உடனே பல அவதாரங்களை எடுப்பவன். இங்கு சொல்லப்பட்ட அவதாரங்கள் இதிஹாஸ புராணங்களில் விரிவாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அர்ச்சாவ தாரத்தைப்பற்றி பாஞ்சராத்ரம், வைகானஸம் முதலிய ஆகமங்கள் பரக்கப்பேசுகின்றன. சங்கரும் பஞ்சமவேதமான பாஞ்சராத்ர ஆக மத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கிருர். அதில் ஜீவோத் பத்தி சொல்லப்பட்டிருப்பதாக ப்ரமித்து, அதைமட்டும் ஒப்புக் கொள்ளவில்லை என்றும் மற்ற விஷயங்கள் ப்ரமாணமானவை யென்றும் சொல்லியிருக்கிருர். இம்மாதிரியாகப் பண்டைமறை பகவானுடைய அவதார வைபவத்தை இங்கு அனுபவித்தது.

பத்$_3$மகோசப்ரதீகாஶம் ஹ்ருத$_3$யம் சாப்யதே$_4$ாமுக$_2$ம்
அதே$_4$ாநிஷ்ட்யா விதஸ்த்யாம் து நாப்$_4$யாமுபரி திஷ்ட$_2$தி
ஹ்ருத$_3$யம் தத்$_3$ விஜாநீயாத்$_3$ விச்வஸ்யாயதநம் மஹத்
ஸந்ததம் ஶிராபி$_4$ஸ்து லம்ப$_3$த்யாகோஶ ஸந்நிப$_4$ம்
தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம் தஸ்மிந் ஸர்வம் ப்ரதிஷ்டி$_2$தம்
தஸ்ய மத்$_4$யே மஹாநக்$_3$நிர் விச்வார்ச்சிர் விச்வதோமுக$_2$:
ஸோக்$_3$ரபு$_4$க்$_3$ விப$_4$ஜந் திஷ்ட$_2$ந் ஆஹாரமஜர: கவி:
ஸந்தாபயதி ஸ்வம் தே$_3$ஹமாபாத$_3$தலமஸ்தகம்.

http://acharya.org

[கழுத்தின் மூலத்திற்குக் கீழேயும், தொப்புளுக்கு மேலேயும், கட்டை விரலளவில், தாமரை மொக்கைப்போல், தலைகீழாக இருதயம் இருக்கிறது. அந்த ஹ்ருதயத்தை உலகத்திற்கு ஆத்மாவாயிருக்கும் நாராயணனுக்குப் பெரிய கோயிலாக அறியவேண்டும். கொஞ்சம் மலர்ந்த தாமரை மொக்கை ஒக்கும் அந்த இருதயம் எப்பொழுதும் நரம்புகளுடன் தொங்குகிறது. அந்த இருதயத்தின் நடுவில் நுட்பமான துவாரமானது இருக்கிறது. அந்த துவாரத்தில் ஸர்வாத்மாவான நாராயணன் இருக்கிறான். அதன் நடுவில், எல்லாவிடங்களிலும் பரவிய ஜ்வாலையுடனும், எல்லாவிடத்திலும் பரவியிருக்கும் பெரிய ஜாடராக்நி இருக்கிறது. அந்த அக்னியானது, அழியாததாகவும், ஒலித்துக்கொண்டும், சாப்பிட்டதைப் பிரித்துக்கொண்டும், சாப்பிட்டதை முதலில் சாப்பிட்டுக்கொண்டும் இருந்துகொண்டு தன்னுடைய தேஹத்தை உள்ளங்கால் முதல் தலைவரையில் சூடுபடுத்துகிறது.]

அவதாரவைபவத்தை அனுஸந்தித்தபின் அந்தர்யாம்யவஸ்தையை அனுபவிக்கிறது அருமறை. முதலில் பரத்வம் அனுபவிக்கப்பட்டது. அது இவ்வுலகிலுள்ளவர்களால் கிட்டமுடியாதது. அதனால் அடுத்தபடியாக வ்யூஹவிபவார்ச்சாவதாரங்கள் விவரிக்கப்பட்டன. வ்யூஹமோ ஸனகஸனந்தனாதிகள்போன்ற மஹாத்மாக்களுக்கே கிட்டக்கூடியது. விபவாவதாரங்களோ அக்காலத்திலிருந்த அர்ஜுனவிபீஷணாதிகளைப் போன்ற அத்ருஷ்டசாலிகளாலேயே அடையப்பட்டது. அர்ச்சாவதாரமும், ஸௌலப்யத்திற்கு எல்லை நிலமாயிருந்தபோதிலும், ஊனக்கண்ணுக்கு இலக்காயிருந்தபோதிலும், இருவகையான ஆபத்துக்களுக்கு இலக்காகக்கூடியது. கிருமிகண்டன், தில்லை கோவிந்தராஜரின் மூலவிக்ரஹத்தைத் துகள் துகளாக இடித்துக் கடலில் கொட்டினானல்லவா? மிலேச்சர்களும் அம்மாதிரி செய்திருக்கிறார்கள். இது அர்ச்சைகளின் உடலுக்கு வந்த ஆபத்து. சாஸ்த்ரவிருத்தமாகக் காரியங்களைச்செய்து ஸாந்நித்யத்தைப் போக்கடித்தது உயிருக்கு வந்த ஆபத்து. அந்தர்யாம்யவஸ்தையில் மேலேகண்ட ஆபத்துக்களுக்கு இடமில்லை. தீட்டு என்னும் தோஷமே தோன்றாது. அதனால் அது கடைசியில் விரிவாக அனுபவிக்கப்படுகிறது. ஆழ்வார் 'கிளரொளியிளமை' என்னும் திருவாய்மொழியில் பகவானுடைய திருக்கோயிலான மாலிருஞ்சோலையை மனமகிழ்ந்து அனுபவித்ததைப்போல், அச்யுதன் அமர்ந்துறையுமிடமான இருதயத்தை விரிவாகப் பேசுகிறது வேதம். மறைமுடிதேடிக்காணா மாதவன் மனத்தே மன்னி

http://acharya.org

புறைகின்றனென்று உத்கோஷிக்கிறது உபனிஷத். இதற்கு முன் எல்லாப்பரவித்யைகளிலும் உபாஸிக்கப்படுபவன் நாராயணனே என்று நிர்ணயித்தது. இங்கு முன் அநுவாகத்தில் சொல்லப்பட்ட தஹரவித்யையிலும் உபாஸிக்கப்படுபவன் அவனே என்று நிர்ணயிக்கிறது. "ஹ்ருதி₃ திஷ்ட₂தி யோகி₃நாம்" [யோகிகளின் இருதயத்தில் நிற்கிறான்.] என்றல்லவோ சொல்லப்பட்டது.

(பத்₃மகோசப்ரதீகாசம் ஹ்ருதயம்) தாமரை மொக்கைப் போலிருக்கும் ஹ்ருதயம். இதுவே பெரியாழ்வாரால் 'போதில் கமல வன்னெஞ்சம்' என்று அநுஸந்திக்கப்பட்டது. (அதோமுகம்) தலை கீழாயிருக்கும் ஹ்ருதயம். (அதோ நிஷ்ட்யா...திஷ்ட₂தி) கழுத்தின் மூலத்திற்குக் கீழும் நாபிக்கு மேலும் கட்டைவிரலளவுள்ள இந்த ஹ்ருதயமிருக்கிறது. "அங்குஷ்ட₂மாத்ர: புருஷ:" [கட்டைவிரல் பரிமாணமுள்ள புருஷன்.] என்று பல வேதவாக்யங்களில் பேசப்பட்டதை நினைக்கிறது. (ஹ்ருதயம் தத் விஜாநீயாத் விச்வஸ்யாயதநம் மஹத்) அந்த ஹ்ருதயத்தை உலகிற்கெல்லாம் ஓருயிரான நாராயணனுடைய பெரிய கோயிலாக அறியவேண்டும்.

(ஆயதநம் மஹத்) ஸர்வவ்யாபியான பகவானுக்குக் கட்டைவிரல் அளவுள்ள இந்த இருதயத்தைப் பெரிய கோயிலாகச் சொல்லியிருப்பது பொருந்துமோ என்ற ஸந்தேஹம் ஏற்படுகிறது. புருஷோத்தமன் வைகுண்டத்தையும், திவ்யதேசங்களையும்விடத் தன்னை அடைந்தவர்களின் நெஞ்சையே மிகவும் உகக்கிறானாகையால் இங்கு அது பெரியகோயில் எனப்படுகிறது. நம்மாழ்வாரும் "நெஞ்சமே நீள்நகராக இருந்த" என்றார். பெரியாழ்வாரும்.

"வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும்
இடவகைகள் இகழ்ந்திட்டுஎன்பால் இடவகைகொண்டனையே"

என்று அருளிச்செய்தார். (ஆயதனம் மஹத்) ஸ்ரீவைகுண்டத்தையும், வ்யூஹவிபவார்ச்சாவதார ஸ்தலங்களையும்விட பகவான் மிகவும் உகந்தருளிய இடம்.

"கல்லும் கனைகடலும் வைகுந்தவானாடும்
புல்லென்றொழிந்தனகொல்? ஏ பாவம்!—வெல்ல
நெடியான் நிறம் கரியான் உள் புகுந்து நீங்கான்
அடியேனது உள்ளத்தகம்" என்றார் நம்மாழ்வார். [கல்-திருமலை]

http://acharya.org

"நிற்பதும் ஓர் வெற்பகத்து இருப்பும் விண்கிடப்பதும்
நற்பெருந்திரைக்கடலுள் நானிலாத முன்னெலாம்
அற்புதன் அனந்தசயனன் ஆதிபூதன் மாதவன்
நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே"

என்றார் திருமழிசைப்பிரான். கம்பநாட்டாழ்வாரும், "சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை" என்று அருளிச்செய்தாரன்றோ. (ஆயதநம் மஹத்) 'இச்சேதனனைத் திருத்தலாகுமோ?' என்னும் ஆசையால் ஸர்வ தோஷங்களுக்கும் இருப்பிடமான இதையே பரமபோக்ய வாஸ ஸ்தானமாகக்கொண்டு இருக்கிறானுகையால் வாத்ஸல்யகுணம் பிரகாசிக்கும் இடம். "அநச்நந் அந்யோ அபி4சாகசீதி" [பரமாத்மா கர்மபலன்களை புஜிக்காமல் பிரகாசிக்கிறான்.] என்றல்லவோ வேதம் விளம்பிற்று.

(ஆயதநம் மஹத்) உபாஸகர்கள் புருஷோத்தமனைப் பலஸ்தானங்களிலிருப்பவனாக உபாஸிக்கிறார்கள். அந்த ஸ்தானங்களில் மேலானது ஹ்ருதயம் என்றும் பொருள்கொள்ளலாம்.

"உத3ரமுபாஸதே ய ருஷிவர்த்மஸு கூர்ப்பத்3ருச:
பரிஸரபத்3த4திம் ஹ்ருத3யமாருணயோ த3ஹரம்
தத உத3க3ாத3நந்த தவ த4ாம ஶிர: பரமம்
புநரிஹ யத் ஸமேத்ய ந பதந்தி க்ருதாந்தமுகே2"

[அநந்தனே! உபாஸனமார்க்கங்களில் ஸூக்ஷ்மத்ருஷ்டிகளான அருணவம்சத்தில் பிறந்த சிலர் ஹ்ருதயாகாசத்திலிருக்கும் உன்னை உபாஸிக்கிறார்கள். சிலர் வயிற்றிலுள்ள உன்னை உபாஸிக்கின்றனர். சிலர் சுற்றிலும் வியாபித்திருப்பதும், உன்னை உபாஸிக்குமிடமாகிய தலைவரையில் நீண்டிருப்பதுமான ஸுஷும்னநாடியில் உபாஸிக்கிறார்கள். இந்த உபாஸகர்களெல்லாம் இந்த ஸுஷும்னநாடியை அடைந்து மறுபடியும் ஸம்ஸாரத்தை அடைவதில்லை.] என்று ஸ்ரீபாகவதத்தில் ச்ருதிகீதையில் சொல்லிய பல உபாஸனஸ்தானங்களில் மேலானது இந்த ஹ்ருதயாகாசம் என்று தாத்பர்யம். இந்த ஹ்ருதயத்திலன்றோ பகவான் தன்னுடைய அஸாதாரணமான திவ்ய மங்கள விக்ரஹத்துடன் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிறான்.

(ஆயதநம் மஹத்) ஸர்வவ்யாபியான ஸர்வேச்வரனுக்கு உலகெல்லாம இருப்பிடமேயாயினும் இங்கு திவ்யமங்களவிக்ரஹத்துடன் திகழ்வதால் இது விசேஷமான இருப்பிடமாகச் சொல்லப்

http://acharya.org

படுகிறது. இங்கு எழுந்தருளியிருக்கும் நாராயணன் யோகஸாக்ஷாத்காரம் கைவந்தவர்களுக்கு ஸேவை ஸாதிக்கிறான். ஸகல ப்ராணிகளும் நித்திரை செய்யும்போது அவர்களை அணைத்திருந்து அவர்கள் பகலில் பட்ட சிரமங்களையெல்லாம் தீர்க்கிறான். தன்னை அடைந்தவர்களுக்கு, நெஞ்சினுள் இருந்துகொண்டே, ஸந்மார்க்கத்தை உணர்த்துகிறான். இறக்கும் காலத்தில் மரணாவஸ்தையைக் குறைக்கிறான். மோக்ஷமடைபவர்களுக்கு ஸுஷும்நாநாடியை அறிவித்து அதன் வழியாக வைகுண்டம் செல்ல அனுக்ரஹிக்கிறான். இப்படி அவன் செய்யும் பல உபகாரங்களையும் நினைத்து அவனுடைய இருப்பிடமான இந்த ஹ்ருதயகமலத்தை 'பெரியகோயில்' என்று பழமறை புகழ்கிறது.

(ஸந்ததம்...ஸந்நிபம்) சிறிதலர்ந்த தாமரையை ஒக்கும் அந்த ஹ்ருதயம் எப்பொழுதும் நரம்புகளோடு தொங்குகிறது. நரம்புகளால் நன்றாகச் சூழப்பட்டதாய்த் தொங்குகிறது என்றும் பொருள் கொள்ளலாம். (ஆகோசஸந்நிபம்) சிறிதலர்ந்த தாமரைபோன்றது. கமலாஸனி கேள்வனுடையாலே இருதயகமலத்தை விரும்பினன்போலும்.

(தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம்) அந்த இருதயத்தின் நடுவில் நுட்பமான ஒரு துவாரமிருக்கிறது. (தஸ்மிந் ஸர்வம் ப்ரதிஷ்ட்டிதம்) அதில் ஸர்வாத்மாவான நாராயணன் நிலைநிற்கிறான். ஸர்வேச்வரன் ஸகல தோஷங்களுக்கும் இருப்பிடமான இவ்விடத்தில் உகந்து எழுந்தருளியிருக்கிற இந்த மஹாகுணத்தைக்கண்டு வாய் வெருவுகிறது வேதம். (ஸர்வம்) "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" [எல்லாவற்றையும் வியாபித்திருப்பதால் எல்லாமாகிறாய்.] என்று அர்ஜுனன் கீதையில் சொல்லியபடியே ஸர்வாந்தர்யாமியாகையால் 'ஸர்வம்' என்று சொல்லப்படுகிறான். அடுத்தபடியாக, புருஷோத்தமன் ஹ்ருதயத்திலிருந்துகொண்டு செய்யும் மற்றொரு உபகாரத்தைப் பேசுகிறது உபனிஷத்.

"அஹம் வைச்வாநரோ பூ₄த்வா ப்ராணிநாம் தே₃ஹமாச்ரித:
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம்"

[நான் ஜாடராக்னியின் அந்தராத்மாவாயிருந்துகொண்டு, ப்ராணிகளின் தேஹத்தை ஆச்ரயித்தவனாய், ப்ராணாபானங்களுடன் கூடினவனாய், நான்குவிதமான அன்னத்தையும் பக்வம் செய்கிறேன்.] என்றல்லவோ கீதாசார்யனால் கீர்த்திக்கப்பட்டது.

http://acharya.org

(தஸ்ய மத்யே...விச்வதோமுக:) அந்த ஹ்ருதயத்தின் நடுவில் எங்கும் பரவியிருப்பதும், எங்கும் ஜ்வாலையுள்ளதுமான பெரிய அக்னி (ஜாடராக்நி) இருக்கிறது. (ஸோக்ரபுக் விபஜந்...) அது ஆஹாரத்தை மூன்றுவிதமாகப் பிரித்துக்கொண்டு அதை முதலில் சாப்பிடுகிறது. தான் அதை ஜீர்ணம் செய்தபிறகு தேஹத்திற்குத் தருகிறது என்று தாத்பர்யம். (அஜர:) எப்பொழுதும் இந்த அக்னி விழித்திருக்கிறது. (கவி:) எப்பொழுதும் சப்தமிட்டுக்கொண்டிருக்கும் இந்த அக்னி. (ஸந்தாபயதி ஸ்வம் தேஹம் ஆபாததலமஸ்தகம்) உள்ளங்கால்முதல் தலைவரையில், தேஹத்தை இதுவே சூடுபடுத்துகிறது. ஆழ்வார்கள் திருமலையில் அருவிகளையும், மரம், செடி, கொடிகளையும் அனுபவிப்பதைப்போல், அருமறையும், ஆதராதிசயத்தாலே அச்யுதனுடைய இருப்பிடமாகிய இருதயத்திலிருக்கும் இந்த அக்னியையும் விரிவாக அனுபவிக்கிறது.

தஸ்ய மத்$_4$யே வஹ்நிசிக$_2$ா அணீயோர்த்$_4$வா வ்யவஸ்தி$_2$த:
நீலதோயத$_3$மத்$_4$யஸ்த$_2$ா வித்$_3$யுல்லேகே$_2$வ ப$_4$ாஸ்வரா
நீவாரசூகவத் தந்வீ பீதாப$_4$ா ஸ்யாத் தநூபமா.

[அந்த ஹ்ருதயத்தின் நடுவில் மெல்லியதாயும், மேல்நோக்கினதாயுமிருக்கும் வஹ்நிசிகை இருக்கிறது. அது நீலமேகத்தை நடுவில் கொண்ட மின்னல்கொடிபோல் ஒளியுடனும், நெல் நுனி போல் மெல்லியதாகவும், மஞ்சள் நிறமானதாகவும், ஒப்பற்றதாகவும் இருக்கிறது.]

இம்மந்திரத்திற்கு ஸ்ரீநாராயணயதியின் வியாக்யானம் ஈட்டின் பிரமாணத்திரட்டில் எடுக்கப்பட்டுள்ளது. இந்த மந்திரத்தில் உபாஸிக்கப்படுபவனான நாராயணனின் திவ்யமங்களவிக்ரஹத்தை வர்ணிக்கிறது வேதம். திவ்யமங்களவிக்ரஹமே தியானிக்கத்தகுந்த சுபாச்ரயமாகும். பகவானுடைய ஸ்வரூபம் சுபமாயிருந்தபோதிலும் இந்திரியங்களுக்கு எட்டாதாகையால் ஆச்ரயமாகாது. ப்ரஹ்மாதிகளின் சரீரங்கள் இந்திரியங்களுக்கு எட்டக்கூடியதாயினும், அசுபங்களாகையால் சுபாச்ரயமல்ல. ஆகவே, பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹமே உபாஸகர்களால் தியானிக்கத்தக்க சுபாச்ரயம் என்று ஸ்ரீபாஷ்யாதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது இங்கு வர்ணிக்கப்படுகிறது. வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீபாஷ்யகாரரும் இந்த மந்த்ரார்த்தத்தை ஸங்க்ரஹமாக அருளியிருக்கிறார்.

(தஸ்ய மத்யே) "த$_3$ஹரபுண்ட$_3$ரீகமத்$_4$யஸ்த$_2$ாகாசவர்த்திநீ" [ஹ்ருதயகமலத்தின் நடுவிலுள்ள ஆகாசத்திலிருப்பது.] என்று ஸ்ரீபாஷ்ய

http://acharya.org

காரர் அருளிச்செய்தார். (தஸ்ய...வ்யவஸ்தித:) ஹ்ருதயாகாசத்தின் நடுவில் மெல்லியதாயும், மேல்நோக்கினதாயுமிருக்கும் வந்ஹிசிகை இருக்கிறது. (வந்ஹிசிகா) "உக்தம் தத்த்வஜாதம் ஆத்மதயா ஸ்தித்வா வஹதி தாரயதீதி வந்ஹி:-பரமாத்மா; தஸ்ய சிகா வந்ஹி சிகா" [முன் சொல்லப்பட்ட தத்வஸமூஹத்தை ஆத்மாவாக நின்று வஹிக்கிறவனுகையால் வந்ஹியென்று பரமாத்மா சொல்லப்படுகிறான். அவனுடைய சிகை வந்ஹிசிகை.] என்று நாராயணயதி வியாக்கியானம் செய்தார். முன் சொல்லப்பட்ட ஹ்ருதயத்தையும், ஜாடராக்னி முதலியவைகளையும் அந்தர்யாமியாய் நின்று தரிக்கிறவனுகையால் வந்ஹியென்று பரமபுருஷன் சொல்லப்படுகிறான். அவனுக்கு சிகையைப்போலிருப்பதால் திவ்யமங்களவிக்ரஹம் வந்ஹிசிகை யென்று சொல்லப்படுகிறது. அக்னி சிகையானது மிகவும் பிரகாசமுள்ளதாயிருக்கும். அம்மாதிரியே புருஷோத்தமனுடைய விக்ரஹமும் ஒப்பற்ற பிரகாசத்தை உடைத்தாயிருக்கும். அக்னிசிகை அதை விட்டுப்பிரியாமல், அது செல்லுமிடமெல்லாம்செல்லும். அம்மாதிரியே பகவானின் சரீரமும் பகவானைவிட்டுப் பிரியாமல் அவனுக்கு வசப்பட்டு நிற்கும். ஆகையாலேயே அது சிகையெனப்படுகிறது. 'வ்யவஸ்தித:' என்பதில் புல்லிங்கம் சாந்தஸம். (நீலதோயதமத்யஸ்த்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா) அந்த திவ்யமங்களவிக்ரஹம் நீலமேகத்தை நடுவில்கொண்ட மின்னல்கொடிபோன்ற ஒளியுடன் இருக்கிறது. "ஸ்வாந்தர்நிஹிதநீலதோயதரூபபரமாத்மஸ்வரூபா ஸ்வாந்தர்நிஹித நீலதோயதா வித்யுதிவ ஆபாதீத்யர்த்த:" [தன்னுட்கொண்ட நீலமேகம்போன்ற பரமாத்மாவின் ரூபத்தையுடையதாய், நீலமேகத்தையுட்கொண்ட மின்னல்போல் பிரகாசிக்கிறது என்று பொருள்.] என்று எம்பெருமானர் அருளிச்செய்தார். இங்குஸ்வரூபசப்தம் ரூபத்தைக் குறிக்கிறதென்று ச்ருதப்ரகாசிகாசாரியர் அருளினர். நீலமேகம்போன்ற பகவானுடைய திருவுருவை எப்படி மின்னல்போன்றதாகச் சொல்லலாம் எனில்: பிராட்டியுடனும், சங்கசக்ராதி திவ்யாயுதங்களுடனும், பீதாம்பரம் முதலிய ஆபரணங்களுடனும் கூடியிருக்கும் திருமேனியின் ஒளி திருமேனியின் நிறத்தைக்காட்டிலும் விஞ்சியிருக்கிறதாகையால் அதை 'நீலமேகத்தை உட்கொண்ட மின்னல் போன்ற ஒளியுள்ளது' என்று சொல்லத்தட்டில்லை. திருமேனியானது வெண்மையும், கறுப்பும் கலந்து மயில் கழுத்துப்போல் பிரகாசிக்கிறதென்று தாத்பர்யம் 'நீலதோயதமத்யஸ்த்தா' என்னும் பதம் இங்கு பஹுவ்ரீஹிஸமாஸமாகக் கொள்ளப்பட்டது.

http://acharya.org

'மத்யஸ்த்த, நீலதோயதா' என்றில்லாமலிருப்பது சாந்தஸம். இதைத் தத்புருஷஸமாஸமாகக்கொண்டு மற்றொருவிதமாகவும் பொருள் கொள்ளலாம். (நீலதோயதமத்யஸ்த்தா...பாஸ்வரா) நீலமேகத்தின் நடுவிலிருக்கும் மின்னல்கொடிபோன்ற ஒளியையுடையது பகவத் விக்ரஹம் என்று பொருள். இப்பொழுது திருமேனியின் ச்யாமள வர்ணம் திருமேனியின் ஒளியைக்காட்டிலும் விஞ்சியிருக்கிறதென்று தாத்பர்யம். இவ்விரண்டு அர்த்தங்களையும் காட்டும்படியாக "நீலமுண்ட மின்னன்ன மேனிப்பெருமான்" [நீலம்—நீலமேகம். மின்னன்ன—மின்னல்போன்ற.] என்று வேதம் தமிழ்செய்த மாறன் வெளியிட்டிருக்கும் அழகை என்னென்று சொல்வது! "நீலமுண்ட மின்னன்னமேனி" என்னும் தொடர் 'நீலமேகத்தை விழுங்கின மின்னல்போன்ற திருமேனி' என்றும் 'நீலமேகம் விழுங்கின மின்னல்போன்ற திருமேனி' என்றும் பொருள்படுவதைக் காண்மின். முதலர்த்தத்தில் பகவானுடைய திருமேனியில் வெளுப்பு விஞ்சியிருக்குமென்றும், இரண்டாமர்த்தத்தில் கறுப்பு அதிகமாயிருக்குமென்றும் ஏற்படுகிறது. இப்படி இரண்டுவிதமாக எப்படி இருக்கக்கூடும் என்று ஸந்தேஹம் ஏற்படலாம். இதற்கு ஸமாதானத்தை "பிரிந்தபோது 'மின்னிலங்கு திருவுரு' என்னும்படியாய், கலந்தபோது 'கருமுகிலொப்பர்' என்னும்படியாயிறே இருப்பது" என்று பரமரஸிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்திருக்கிறார். சேதனலாபமும் அலாபமுமன்றோ ஈச்வரனுக்குப் பேறாகவும் இழவாகவும் இருக்கிறது. இச்சேதனனைப் பெறாதபோது புருஷோத்தமன் உடம்பு வெளுக்கிறான் என்பதை முதல் அர்த்தம் காட்டுகிறது. சேதனனைப் பெற்றபோது ஏற்படும் இயற்கையான நீலமேகச்யாமளவர்ணத்தை இரண்டாவது அர்த்தம் காட்டுகிறது.

(நீவாரசூகவத் தந்வீ) நெல்நுனிபோல் சிறிதாயிருக்கிறது இந்த திவ்யமங்கள விக்ரஹம். (பீதாபா) மஞ்சள் நிறமான ஒளியுடன் கூடியது. உருக்கின தங்கம்போல் ப்ரகாசிப்பது. வடிவின் நிறத்தைக் காட்டிலும் ஒளியே அதிகமாயிருக்குமென்று தாத்பர்யம். "தேஜஸாம் ராசிம்" என்றல்லவோ சொல்லப்பட்டான். "ஹிரண்ய வர்ணாம்" [தங்கம்போன்ற வர்ணத்தையுடையவள்.] என்று ஸ்ரீஸூக்தத்தில் சொல்லப்பட்ட பிராட்டியுடன் சேர்த்தியால், மஞ்சள் நிறமாக திவ்யமங்கள விக்ரஹம் விளங்குகிறது என்றும் பொருள்கொள்ளலாம். "'பீதாபா' என்றது ஸ்வதேஜஸ்ஸை விக்ரஹந்தான் பானம்பண்ணிக் கொண்டிருக்குமென்றபடி" என்றும்

http://acharya.org

நம்பிள்ளை அருளிச்செய்தார். 'பீதாப$_4$ா' என்பதற்கு 'ஸ்வயம்ப்ரகாச மானது' என்று ரங்கராமாநுஜமுனி வியாக்யானம் செய்தார்.

(தநூபமா ஸ்யாத்) 'இம்மாதிரியான சிகை அந்த விக்ரஹத் திற்கு உபமானமாகலாம்' என்று நாராயணயதி வியாக்யானம் செய்தார். 'ஸ்யாத்' (ஆகலாம்) என்றதால் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத ப்ரகாசத்தையுடைய அந்த திவ்யமங்கள விக்ரஹத்திற்கு இதுவும் சரியான உபமானமாகாது என்னும் அருசியைக் காட்டுகிறது.

"தி$_3$வி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப$_4$வேத்$_3$யுக$_3$பது$_3$த்தி$_2$தா
யதி$_3$ பா$_4$ஸ் ஸத்$_3$ருஸீ ஸா ஸ்யாத் பா$_4$ஸஸ் தஸ்ய மஹாத்மந:"

[ஆயிரம் ஸூர்யர்களின் ஒளி ஒரே ஸமயத்தில் ஆகாயத்தில் தோன்றிற்றாகில், அது அந்த மஹாத்மாவினுடைய ஒளிக்கு ஸமானமாக ஆகலாம்.] என்றல்லவோ சொல்லப்பட்டது.

(தநூபமா) உபமானமற்றது என்றும் பொருள்கொள்ளலாம். அப்பொழுது 'ஸ்யாத்' என்பதை இருக்கிறது என்று பொருள் கொள்ளவேண்டும். இவ்வர்த்தத்தை ஆழ்வார்

"கட்டுரைக்கில் தாமரை நின் கண் பாதம் கையொவ்வா
சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனியொளி ஒவ்வாது"

என்று அருளிச்செய்தார்.

தஸ்யாச் சிகா$_2$யா மத்$_4$யே பரமாத்மா வ்யவஸ்தி$_2$த:
ஸ ப்$_3$ரஹ்மா ஸ சிவஸ் ஸேந்த்$_3$ரஸ் ஸோக்ஷர: பரமஸ்ஸ்வராட்.

[அந்த சிகையின் (திவ்யமங்கள விக்ரஹத்தின்) நடுவில் பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான். அவன் பிரமனுக்கும் அந்தர்யாமி; அவன் சிவனுக்கும் அந்தர்யாமி; அவன் இந்திரனுக்கும் அந்தர்யாமி; அவன் கர்மத்திற்கு வசப்படாதவனும், மேலானவனுமான முக்தாத்மாவிற்கும் அந்தர்யாமி.]

(தஸ்யாச் சிகாயா...) அந்த திவ்யமங்கள விக்ரஹத்தின் நடுவில் பரமாத்மா எழுந்தருளியிருக்கிறார். (பரமாத்மா) "ஆத்மா நாராயண:பர:" என்று சொல்லப்பட்ட நாராயணன். (வ்யவஸ்தித: - விசேஷேண அவஸ்தித:) விசேஷமாக எழுந்தருளியிருக்கிறான். வாத்ஸல்யம் முதலிய குணங்களை வெளிப்படுத்திக்கொண்டு எழுந்

http://acharya.org

தருளியிருக்கிறான். கர்மபலன்களினால் கட்டுப்படாதவனாக எழுந்தருளியிருக்கிறான்.

"த்₃வா ஸு₂பர்ணா ஸயுஜா ஸகா₂யா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்₃வத்தி அநச்நந் அந்யோ அபி₄சாகசீதி"

[அழகிய இறக்கையை (ஞானத்தை) உடையவையும், ஒரே குணத்தையுடையவையும், நண்பர்களுமான இரு பக்ஷிகள் (ஜீவனும், பரமாத்மாவும்) ஒரே மரத்தில் (தேஹத்தில்) சேர்ந்திருக்கின்றனர். அவைகளில் ஒன்று (ஜீவன்) பழுத்தகனியை (கர்மபலனை) புஜிக்கிறது. மற்றொன்று (பரமாத்மா) அப்பழத்தைப் புசியாமல் பிரகாசிக்கிறது.] என்றல்லவோ வேதம் உரைத்தது. (வ்யவஸ்தித:)

"ஈச்வரஸ் ஸர்வபூ₄தாநாம் ஹ்ருத்₃தே₃சே₂ர்ஜுந திஷ்ட₂தி
ப்₄ராமயந் ஸர்வபூ₄தாநி யந்த்ராரூடா₄நி மாயயா"

[அர்ஜுனா! ஸர்வேச்வரன் எல்லா ஜீவராசிகளின் இருதய ப்ரதேசத்திலும் இருந்துகொண்டு, பிரகிருதியாகிய யந்திரத்திலிருக்கும் அவைகளை, ஸத்வரஜஸ்தமோகுணங்களாகிய மாயையினால் ஆட்டிவைத்துக்கொண்டிருக்கிறான்.] என்று கீதையில் சொல்லியபடியே சேதனர்களை நியமிப்பதால் உண்டான புகழுடன் எழுந்தருளியிருக்கிறான் என்றும் பொருள்கொள்ளலாம். (வ்யவஸ்தித:) உபாஸன ப்ரகரணமாகையாலே சேதன லாபத்தாலே புகழ்பெற்று எழுந்தருளியிருக்கிறான் என்றும் பொருள்கொள்ளலாம்.

அடுத்தபடியாக உலகில் ஜ்ஞானசக்திகளை அதிகமாக உடையவர்களான ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களும், முக்தாத்மாவும் இந்தப் பரமாத்மாவினுடைய விபூதிகளே என்று உரைக்கப்படுகிறது. (ஸ ப்ரஹ்மா...) அந்தப் பரமபுருஷனே பிரமனுக்கும் அந்தர்யாமி; அவன் சிவனுக்கும் அந்தர்யாமி; அவன் இவர்களைக்காட்டிலும் மேலானவனும், அகர்மவச்யனுமான முக்தாத்மாவுக்கும் அந்தர்யாமி. இவ்வர்த்தத்தை,

"அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே"

என்று ஆழ்வார் அருளிச்செய்தார். இங்கு 'ஸ:' 'ஸ:' என்று படித்ததை ஆழ்வாரும் 'அவன்' 'அவன்' என்று உணர்த்துவதைக் காண்மின். ஆளவந்தார் இவ்வாக்யத்தை,

http://acharya.org

''ப்₃ரஹ்மா ஶிவஸ் ஶதமக₂: பரமஸ் ஸ்வராடி₃த்—
யேதே5பி யஸ்ய மஹிமார்ணவ விப்ருஷஸ் தே''

[பிரமன், சிவன், இந்திரன், முக்தாத்மா எனப்படுபவர்களும் உன்னுடைய ஐச்வர்யக்கடலில் ஒரு துளியாகிறுர்கள்.] என்று விவரித்தார். இங்கு எல்லாராலும் ஜீவர்களாக ஒப்புக்கொள்ளப்பட்ட இந்திரனுடனும், முக்தாத்மாவுடனும், பிரமனையும், சிவனையும் கூடப்படித்ததிலிருந்து அவர்களும் ஜீவர்களேயென்று உணர்த்தப்படுகிறதென்று பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை ஸ்தோத்ரவ்யாக்யானத்தில் அருளிச்செய்தார்.

(ஸ ப்ரஹ்மா) ஜகத்ஸ்ருஷ்டி செய்பவனுகப் பிரஸித்தனுன பிரமனும் அவனே; அதாவது: அவன் அந்தர்யாமியாயிருப்பதால் தன் ஸத்தையைப் (இருப்பைப்) பெற்றவன் பிரமன் என்று தாத்பர்யம். ஸர்வேச்வரன் பிரமனுக்கு அந்தர்யாமியாயிருந்துகொண்டு ஜகத்ஸ்ருஷ்டி செய்கிறுன், இருந்துபடைக்கும் ஆஸனம் போன்றவனே பிரமன். மஹான், அஹங்காரம், பஞ்சபூதங்கள் முதலிய அசேதனங்களை சரீரமாகக்கொண்டு ஸ்ருஷ்டிசெய்ததைப்போல் பிரமனையும் சரீரமாகக்கொண்டு ஸ்ருஷ்டிசெய்கிறுன். சரீரத்தைச் சொல்லும் பதங்கள் ஆத்மாவையும் சொல்லுகின்றனவென்பதை நாம் வேதத்திலும், லோகத்திலும் காண்கிறோம். அந்த நியாயத்தாலே இங்கு 'ப்ரஹ்மா' என்னும் பதம் பிரமனைச் சரீரமாகக்கொண்ட நாராயணனைக் காட்டுகிறது. 'ஸ ப்₃ரஹ்மா' என்பது இந்த இருதய கமலத்தில் வசிப்பவனே பிரமனை சரீரமாகக்கொண்டவன் என்று பொருள்படுகிறது. (ஸ சிவ:) சிவனும் அவனே. ஸம்ஹாரம் செய்பவனுகிய சிவனுக்கும் அவனே அந்தர்யாமி. 'சிவமச்யுதம்' என்றவிடத்தில் சிவசப்தம் மங்களமானவன் என்னுமர்த்தத்தைக் குறிப்பதாகையால் அச்யுதனையே குறிக்கும் என்று சொல்லப்பட்டது. இங்கு சிவனுக்கு அந்தர்யாமியான நாராயணனைக் குறிக்கிறது. ''விஷ்ணுராத்மா ப₄க₃வத: சிவஸ்ய'' [சிவப்பிரானுக்கு ஆத்மா விஷ்ணு.] என்றல்லவோ பாரதத்தில் சொல்லப்பட்டது.

(ஸ ப்ரஹ்மா ஸ சிவ:) ''சிவனுய் அயனுமுய்'' என்றுர் ஆழ்வார். (ஸேந்த்ர:) தேவர்களுக்குப் பதியான இந்திரனுக்கும் அவனே அந்தர்யாமி. (ஸோக்ஷர:...) இவர்களைக்காட்டிலும் மேலான முக்தாத்மாவுக்கும் அவனே அந்தர்யாமி. (பரம:) ப்ரஹ்மருத்ராதிகளைக்காட்டிலும் மேலானவன் முக்தாத்மா. இதற்குக் காரணத்தை

http://acharya.org

'ஸ்வராட்' என்று விவரிக்கிறது. (ஸ்வராட்) கர்மத்திற்கு வசப்படாதவன். பிரமன், சிவன் முதலியவர்கள் கர்மத்தால் கட்டுப்பட்டவர்கள். இவன் அப்படிப்பட்டவனல்லன். (ஸ்வராட்) 'ஸ ஸ்வராட் ப₄வதி' [அவன் ஸ்வதந்திரனாகிறான்.] என்று வேதத்தில் ஓதப்பட்ட முக்தாத்மாவை நினைக்கிறது. இங்கு ஸ்வராட் என்னும் பதத்திற்கு 'கர்மத்திற்கு வசப்படாதவன்' என்றே பொருள்கொள்ளவேண்டும். ஈச்வரபாரதந்த்ரியம் ஆத்மஸ்வரூபத்திற்கு ஸ்வரூபப்ரயுக்தமானமையால் அது இங்கு நிஷேதிக்கப்படுவதாகக் கொள்ளக்கூடாது. (அக்ஷர:) ஜ்ஞானத்தில் ஸங்கோசமில்லாதவன் முக்தாத்மா. ஆக இத்தால் பிரமன், சிவன், இந்திரன் என்று ப்ரஸித்திபெற்றவர்களும், அவர்களிலும் உயர்ந்த முக்தனும் பகவானுடைய விபூதிகளே என்று சொல்லப்பட்டது. பகவத்கீதையில் பகவானுடைய விபூதியை (ஐச்வர்யத்தை) வர்ணிக்கும் அத்தியாயத்தில் 'ருத்₃ராணாம் சங்கரச்சாஸ்மி'' [ருத்ரர்களுள் சங்கரனாயிருக்கிறேன்.] 'தே₃வானாமஸ்மி வாஸவ:' [தேவர்களுக்குள் இந்திரனாயிருக்கிறேன்.] முதலிய ச்லோகங்களால் கண்ணபிரான் இந்த மந்திரத்தை விவரித்தார்.

இங்கு பிரமன், சிவன் முதலியவர்களுக்கும் நாராயணனுக்கும் ஸ்வரூபைக்யம் சொல்லுவதாக சிலர் பிரமிப்பார்கள். அம்மாதிரி பொருள்கொள்வது எல்லா வேதங்களுக்கும், இதிஹாஸபுராணங்களுக்கும் மிகவும் விருத்தமானது. 'விச்வத: பரமம்' 'பரமம் ப்ரபு₄ம்' 'பரமாத்மா' முதலிய இங்கு படிக்கப்பட்ட சப்தங்களுக்கும் விருத்தமானது. ''நாராயணாத்₃ ப்₃ரஹ்மா ஜாயதே, நாராயணாத்₃ ருத்₃ரோ ஜாயதே, நாராயணாத் இந்த்₃ரோ ஜாயதே'' [நாராயணனிடத்திலிருந்து பிரமன் உண்டாகிறான். நாராயணனிடத்திலிருந்து ருத்ரன் உண்டாகிறான். நாராயணனிடத்திலிருந்து இந்திரன் உண்டாகிறான்.] முதலிய வேதவாக்கியங்களிலிருந்து ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகள் நாராயணனால் படைக்கப்பட்டவர்களென்று தெளிவாக விளங்குகிறது. அப்படியிருக்க அவர்களுக்கு எப்படி ஸ்வரூபைக்யம் சொல்ல முடியும்? மேலும், ''ஏகோ ஹ வை நாராயண ஆஸீத், ந ப்₃ரஹ்மா நேசாந:'' [(ப்ரளயகாலத்தில்) நாராயணன் ஒருவனே இருந்தான். பிரமனுமில்லை; சிவனுமில்லை.] என்னும் உபநிஷத்வாக்யமும் விரோதிக்கும். சேதனர், அசேதனம், ஈச்வரன் என்னும் இம்மூவருக்கும் பரஸ்பரபேதத்தைச் சொல்லும் பல்லாயிரக்கணக்கான வேதவாக்யங்கள் பொய்யாகும். சேதனாசேதனங்களுக்கு அச்யுதனே அந்தர்யாமியென்று சொல்லும் ஆயிரக்கணக்கான ப்ரமாணங்கள் அர்த்தமற்றவையாய்விடும்.

http://acharya.org

பிரமனே பண்டை வேதங்களை இழந்து, 'கண்ணிழந்தேன், தனமிழந்தேன்' என்று கேசவனிடம் கண்ணீர்விட்டுக் கதறி, அவனைக்கொண்டு அருமறைகளை மீட்டுக்கொண்டவன். புராரியும் புஸ்மாஸுரனிடமிருந்து பயந்தோடி, பரந்தாமனின் பாதங்களில் விழுந்து அப்பேராபத்திலிருந்து பிழைத்தான். இராவணன், மஹாபலி, நரகாஸுரன் முதலியவர்களால் துன்புற்ற இந்திரனும் இருடீகேசனை சரணமடைந்தே ஆபத்துக்கள் அகலப்பெற்றான். இம்மாதிரியாக ரக்ஷகனாகப் பிரஸித்திபெற்ற பரமபுருஷனுக்கும் அவனால் ரக்ஷிக்கப்படும் பிரமன், ருத்ரன், இந்திரன் முதலியவர்களுக்கும் ஐக்யம் சொல்லமுடியுமா?

கர்மத்திற்கு வசப்பட்டவர்களான ப்ரம்ஹருத்ராதிகளும் அகர்மவச்யனான கேசவனும் ஒன்று என்று உரைக்க வழியுண்டோ? "மஹாதேவஸ் ஸர்வமேதே மஹாத்மா ஹுத்வாத்மாநம் தேவதேவோ பபூவ" [மஹாத்மாவான மஹாதேவர் ஸர்வமேதயாகத்தில் தன்னையும் ஹோமம் செய்து தேவதேவரானார்.] என்று பாரதத்தில் சொல்லப்பட்டது. பிறக்கும்போதே சிவன் "அநபஹதபாப்மா வாஹம்" [நான் பாபம் நீங்காதவனாயிருக்கிறேன்.] என்று பிரமனிடம் முறையிட்டதாக வேதம் விளம்பிற்று. ஸ்ரீராமாயணத்தில் பிரமன் சிவனை தேவர்களுக்குத் தலைவனாக நியமித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்வரூபைக்ய பக்ஷத்தில் இவைகள் சிறிதும் பொருந்தா.

ருத்ரன் விஷ்ணுவுடன் எதிரம்புகோத்து, புருஷோத்தமனுடைய ஹுங்காரத்தினால் மூர்ச்சையடைந்த விருத்தாந்தம் ராமாயணத்தில் விரிவாக உரைக்கப்பட்டிருக்கிறது. பாணாஸுர யுத்தத்தில் பரந்தாமனால் புடைக்கப்பட்டுப் புறமுதுகிட்டோடி, நெற்றிக்கண்ணைப் புதைத்துக்கொண்டு நழுவி, வாணனை வெறுங்கையனாக்கின கதை விஷ்ணுபுராணத்திலும், பாகவதத்திலும் விரிவாகக்காணலாம். இந்திரனும் கோவர்த்தனதாரியான கோபாலனால் கர்வபங்கமடைந்த கதை கீர்த்திபெற்றது. நரகாஸுரனை வதைத்த உபகாரத்தையும் நினையாமல், ஒரு பூச்செடியைத் (பாரிஜாத வ்ருக்ஷத்தை) தர இசையாமல், கிருஷ்ணனுடன் சண்டையிட்டுத் தோற்றோடினவனன்றோ தேவேந்திரன். ஜயிக்கப்பட்டவர்களுக்கும் ஜயித்தவனுக்கும் ஐக்யம் சொல்லுவது எப்படிப்பொருந்தும்?

புருஷோத்தமன் திரிவிக்ரமாவதாரமெடுத்து உலகையெல்லாம் ஈரடியால் அளந்தபோது பிரமன் அப்பெருமானுடைய பாதகமலத்

http://acharya.org

னைத் தன் கமண்டலு ஜலத்தால் கழுவினான். அந்த கங்கா ஜலத்தைத் தன்னுடைய பாபங்கள் அகலுவதற்காகத் தன் தலையில் தரித்தான் திரிபுராரி. திருவடி விளக்கப்பெற்றவனும், திருவடி விளக்கினவனும், திருவடி விளக்கின தீர்த்தத்தைத் தலையிலே தரித்தவனும் ஒருவனே என்று விவேகிகள் சொல்லுவார்களா? ''யஸ்ய ப்ரஸாதா3த்3அஹமச்யுதஸ்ய பூ4த: ப்ரஜாஸ்ருஷ்டிகரோந்தகாரீ க்ரோதா4ச்ச ருத்3ர:'' [எந்த விஷ்ணுவினுடைய ப்ரஸாதத்தினால் நான் ப்ரஜாஸ்ருஷ்டி செய்கிறேனோ, எவருடைய க்ரோதாம்சத்தினால் ருத்ரன் ஸம்ஹரிக்கிறாரோ...] என்று பிரமனால் சொல்லப்பட்டது. பாணாஸுர யுத்தமுடிவில் 'ஈச்வரோஹம்' என்னும் ருத்ரனும் ''வயம் ச ஸர்வே ப4வதானுபா4விதா விபா4வயாமோ பு4வனானி ஸப்த'' [நாங்களெல்லாரும் உன்னால் ரக்ஷிக்கப்பட்டவர்களாகக்கொண்டு ஏழுலகங்களையும் காப்பாற்றுகிறோம்.] என்றும், ''அஹம் ப்3ரஹ்மா ச விபு3தா4 முநயச் சாமலாசயா:, ஸர்வாத்மனா ப்ரபந்நாஸ்த்வாம்'' [நானும், பிரமனும், தேவர்களும், ஸாத்விகர்களான முனிவர்களும் உன்னை எல்லா விதத்திலும் சரணமடைந்தோம்.] என்றும் வாஸுதேவனை ஸ்தோத்ரம் செய்தார். ஸ்தோத்ரம் செய்யப்படுபவனும் ஸ்தோத்ரம் செய்பவர்களும் ஒருவரே என்று எப்படிச் சொல்லமுடியும்? சரணமடைபவர்களுக்கும் சரண்யனுக்கும் ஐக்யம் ஸித்திக்குமோ? இதைப் பன்னியுரைக்குங்கால் பாரதமாம். மேலும், 'விச்வத: பரம்' என்றவிடத்திலும் 'விச்வம்' என்றவிடத்திலும் 'விச்வமேவேத3ம் புருஷ:' என்றவிடத்திலும் வியாக்யானம் செய்கையில் இம்மாதிரி ஒரே வேற்றுமையில் ஸர்வேச்வரனையும் மற்றவர்களையும் சொல்லுவதற்குக் காரணம் சரீராத்மபாவமே என்று பல ப்ரமாணங்களைக்காட்டி நிரூபித்திருக்கிறோம். அவைகளும் இங்கு அனுஸந்திக்கத்தக்கவை.

இந்த நாராயணஸூக்தம் முழுவதையும் கடாக்ஷித்து, கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்திலே ஒரு ச்லோகமிட்டருளியிருக்கிறார். அதன் அழகை என்னென்று உரைப்போம்? காண்மின்:

''ஆத்மேச்வரோ஽ஸி ந பரோ஽ஸ்தி தவேச்வரோ஽ந்ய:
விச்வஸ்ய சாதி4பதிரஸ்ய பராயணம் ச
நாராயணாச்யுத! பரஸ்த்வமிஹைக ஏவ
ப்3ரஹ்மாத3யோ஽பி ப4வதீ3க்ஷணலப்3த4ஸத்தா:''

[நாராயணா! அச்யுதா! நீ ஆத்மேச்வரனாயிருக்கிறாய். உனக்கும் மேலான வேறொரு ஈச்வரன் கிடையாது. உலகிற்கெல்லாம் அதிபதி

http://acharya.org

பாயிருக்கிறாய். இருந்து மேலான உபாயமாகவும் (ப்ராப்யமாகவும்) இருக்கிறாய். இங்கு நீ ஒருவனே மேலானவன். பிரமன் முதலியவர்களும் உன்னுடைய கடாக்ஷத்தாலே ஸத்தையைப் பெற்றவர்கள்.] என்பதே அப்பாசுரம். இந்த ஸூக்தத்தில் அடிக்கடி வரும் நாராயண சப்தத்தை 'நாராயண!' என்று அநுஸந்தித்தார் ஆழ்வான். 'அச்யுதம்' என்றதை உட்கொண்டு 'அச்யுத!' என்று ஆதரத்துடன் அழைத்தார். 'ஆத்மேச்வரம்' என்றதின் அர்த்தத்தை 'ஆத்மேச்வரோஸி ந பரோஸ்தி தவேச்வரோந்ய:' [ஆத்மேச்வரனுயிருக்கிறாய். உனக்கும் மேலான ஈச்வரன் வேறொருவனில்லை.] என்று விளக்கினார். 'பதிம் விச்வஸ்ய' என்னும் தொடரை 'விச்வஸ்ய ச அதிபதி:' என்று விவரித்தார். 'பராயணம்' என்னும் பதத்தை 'அஸ்ய பராயணம் ச' என்று அநுபவித்தார். 'பரம் ப்ரஹ்ம' 'பரதத்வம்' 'பரம் ஜ்யோதி:' 'பரமாத்மா' 'விச்வத: பரமம்' 'பரமம் ப்ரபும்' என்னும் பதங்களையெல்லாம் நோக்கி 'பர: த்வம் இஹ ஏக ஏவ' [இங்கு நீ ஒருவனே பரவஸ்து.] என்று அருளிச்செய்தார். 'ஸ ப்₃ரஹ்மா ஸசிவ: ஸேந்த்₃ர: ஸோக்ஷர: பரமஸ் ஸ்வராட்' என்னும் வாக்யத்தைக் கடாக்ஷித்து 'ப்₃ரஹ்மாத₃யோபி பு₄வதீ₃க்ஷணலப்₃த₄ஸத்தா:' [பிரமன் முதலியவர்களும் உன்னுடைய கடாக்ஷத்தாலே தங்கள் ஸத்தையை (இருப்பை) பெற்றவர்கள்.] என்று அருளிச்செய்தார். ச்ருத்யர்த்தங்களை அழகிய ச்லோகங்களாகவே அருளிச்செய்வதில் கூரத்தாழ்வானுக்கு நிகர் எவருமில்லை. இதனுலன்றே அவர்

"யதூ₃க்தயஸ் த்ரயீகண்டே₂ யாந்தி மங்க₃ளஸூத்ரதாம்"

[கூரத்தாழ்வானுடைய ஸ்ரீஸூக்திகள் வேதத்தின் கழுத்தில் மங்கள ஸூத்ரமாயிருக்கும் தன்மையை அடைகின்றன.] என்று அவருடைய திருக்குமாரரால் புகழப்பட்டார்.

ருதம் ஸத்யம் பரம் ப்₃ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்க₃ளம்
ஊர்த்₄வரேதம் விரூபாக்ஷம் விச்வரூபாய வை நம:

[ஸர்வவ்யாபியாயும், விகாரமற்றவனுகவும், பரப்ரஹ்மமாகவும், புருஷனென்ற பெயரையுடையவனுகவும், கறுப்பும், மஞ்சளும் கலந்த வர்ணத்தையுடையவனுகவும், உயர்ந்த வீரியத்தையுடையவனுகவும், மாறுபட்ட குணங்களையுடைய கண்களையுடையவனுகவும் உலகையெல்லாம் உருவமாகக்கொண்டுமிருக்கும் பரமாத்மாவின் பொருட்டு நமஸ்காரம்.]

http://acharya.org

இது நாராயணவல்லியின் பனிரண்டாவது அநுவாகமந்த்ரமாகும். இத்துடன் 'நாராயணஸூக்தம்' முடிவடைகிறது. முன் அநுவாகத்தில் பரமாத்மா நாராயணனே என்று நிர்ணயித்து அவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகள் விவரிக்கப்பட்டன. இங்கு பரமபுருஷார்த்தமான கைங்கர்யம் ப்ரார்த்திக்கப்படுகிறது. புருஷஸூக்தத்திலும் உத்தராநுவாகத்தின் இறுதியில் கைங்கர்யம் ப்ரார்த்திக்கப்பட்டதன்றே.

(ருதம்) 'ரு-கதௌ' என்கிற தாதுவிலே ஸர்வகதன் என்று பொருள்படும். 'விச்வாத்மாநம்' என்றும், 'அந்தர்...நாராயணஸ் ஸ்தித:' என்றும் சொல்லப்பட்ட ஸர்வவ்யாபித்வத்தை ஆதராதிசயத்தால் மறுபடியும் அநுஸந்திக்கிறது. 'ததோ விஷ்வங் வ்யக்ராமத்' என்று புருஷஸூக்தத்தில் சொல்லியபடியே அவதாரங்களெடுத்து எங்கும் வியாபித்து நிற்பவனென்றும் பொருள்கொள்ளலாம். இவனுக்குக் கைங்கர்யம் செய்ய நாம் வெகுதூரம் போகவேண்டுவதில்லை; இவன் ஸர்வவ்யாபியாகையாலே நாமிருந்த விடத்திலேயே இவனுக்குக் கைங்கர்யம் செய்யலாம் என்று உணர்த்துகிறது வேதம். (ஸத்யம்) 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்ற வேதவாக்யத்தை நினைக்கிறது. (ஸத்யம்) 'அக்ஷரம்' என்றவிடத்தில் சொல்லியபடியே ஸ்வரூபத்திலும், ஸ்வபாவத்திலும் விகாரமில்லாமல் ஏகரூபனாய் (ஒருபடிப்பட்டவனாய்) இருப்பவன். உண்மைகளெல்லாவற்றிலும் உயர்ந்த உண்மையாயிருப்பவன். (ஸத்யம்) ஆச்ரிதரக்ஷணமாகிற தர்மத்தில் ஏகரூபனாயிருப்பவன் என்றும் பொருள்கொள்ளலாம். 'அவ்யவஸ்திதசித்தாநாம் ப்ரஸாதோऽபி பயங்கர:' [சஞ்சலபுத்தியுடையவர்களுடைய ப்ரீதியும் பயங்கரமானது.] என்று சொல்லப்பட்டபடியே மற்ற தேவதைகள் சஞ்சலமான மனத்தையுடையவர்களாகையால் அவர்களை ஆச்ரயிப்பதும் அனர்த்தத்தைத் தரும். இவன் அம்மாதிரியில்லாமல் ஆச்ரிதரக்ஷண தர்மத்தில் ஏகரூபனாயிருப்பவனாகையால் இவன் விஷயத்தில் செய்யும் கைங்கர்யம் பழுதடையாது என்று உணர்த்துகிறது.

(பரம் ப்ரஹ்ம) ஸ்வரூபரூபகுண விபூதிகளில் மிகவும் பெரியவனாகையாலும், தன்னை அடைந்தவர்களைத் தன்னைப்போல் பெரிதாகச் செய்பவனாகையாலும் இவனுக்குக் கைங்கர்யம் செய்வதே தகும் என்று உணர்த்துகிறது. (புருஷம்) 'புருஷன்' என்ற பெயரை உடையவன். 'ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம்' என்கிறபடியே நாமெல்லோரும் இவனுக்குப் பத்னிபோன்றவர்களாகையாலும், இவன் நமக்குப்

http://acharya.org

புருஷனுடையயாலும் இவனுக்குக் கைங்கர்யம் செய்வதே ஸ்வரூபத் துக்கு அனுரூபமானது என்று உரைக்கிறது. (க்ருஷ்ணபிங்களம்) கறுப்பும், மஞ்சளும் கலந்த திருமேனியையுடையவன். கைங்கர்யத் துக்கு விஷயமாயிருக்கும் திருமேனியைச் சொல்லுகிறது. காளமேகம் போன்ற பகவானின் திருமேனியைச் சக்கரத்தாழ்வான் தன்னுடைய தேஜஸ்ஸாலே வியாபித்து நிற்பதால் 'க்ருஷ்ணபிங்களம்' என்று சொல்லப்பட்டதாகப் பெரியவாச்சான்பிள்ளை திருப்பல்லாண்டு வியாக் யானத்தில் அருளிச்செய்தார். முந்தின அனுவாகத்திலும், 'நீல தோயத$_3$மத்$_4$யஸ்தா வித்$_4$யுல்லேகே$_2$வ' என்றும், 'பீதாப$_4$ா' என்றும் சொல்லப்பட்டது இங்கு நினைக்கத்தக்கது.

> "அதஸீபுஷ்ப ஸங்காஶ: பீதவாஸா ஜநார்த்த$_3$ந:
> வ்யப$_4$ராஜத ஸப$_4$ாமத்$_4$யே ஹேமநீவோபஹிதோ மணி:"

[காயாம்பூவைப்போன்ற வர்ணத்தையுடையவனும், பீதாம்பரத்தை தரித்தவனுமான ஜனார்த்தனன் தங்கத்தில் பதிக்கப்பட்ட மணி போல் ஸபை நடுவில் விளங்கினான்.] என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டபடி பீதாம்பரத்தின் சேர்த்தியால் மஞ்சளும், கறுப் பும் கலந்த வர்ணத்தையுடையவனாகிறான் என்றும் பொருள்கொள்ள லாம். ராமாயணத்திலும், ஸ்ரீராமனைப்பற்றி "மேக$_4$ச்யாமம்" என்றும், "ஹேமஸமானவர்ணம்" [தங்கம்போன்ற வர்ணத்தையுடையவன்.] என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறதன்றோ. பகவானுடைய நிறம் மயில்கழுத்துப்போல் மஞ்சளும், கறுப்பும் கலந்தது என்று சொல்லப் பட்டிருக்கிறது. "க்ருஷ்ணபிங்க$_3$ளம் நாராயணம்" என்று யோகார்ண வத்திலும், "புருஷம் க்ருஷ்ணபிங்க$_3$ளம்" என்று யோகயாஜ்ஞவல்க்யத் திலும் புருஷோத்தமனைப்பற்றிச் சொல்லியிருக்கிறபடியால் இது நாராயணனுடைய திருவுருவமே என்று நிச்சயிக்கப்படுகிறது.

> "த்$_3$ருதகநகஜகி$_3$ரி பரிமிளது$_3$த$_3$தி$_1$ ப்ரசலிதலஹரிவத$_4$ஹமஹமிகயா
> ஸ்நபயதி ஜநமிமமபஹரதி தம: ப$_4$ணிசய மரதகமணி கிரணக$_3$ண:"

[அரவணைமேல் பள்ளிகொண்ட பெரியபெருமாளாகிய மரதகமணி யின் சோதி வெள்ளம், உருகின பொன்மலையோடுகூடிய ஸமுத் திரத்தினின்றும் பரவின அலைகள்போல், முற்கோலி வந்து, அடி யேனை ஸ்நாநம் செய்விக்கிறது அகவிருளை அகற்றுகிறது.] என்று பட்டரும் இந்த வர்ணச்சேர்த்தியை அனுபவித்தார். 'ஹிரண்யவர் ணாம்' [தங்கம்போன்ற வர்ணத்தையுடையவள்.] என்று சொல்லப் பட்ட பிராட்டியுடன் சேர்த்தியால் 'க்ருஷ்ணபிங்களம்' என்று சொல்லப்

http://acharya.org

படுவதாகவும் கொள்ளலாம். இத்தால் பகவானும் பிராட்டியுமான சேர்த்தியிலேயே கைங்கர்யம் செய்யவேண்டும் என்று உணர்த்தப்படுகிறது. புருஷஸூக்தத்திலும் 'ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ'' என்று இந்தச் சேர்த்தியிலேயே கைங்கர்யப்ரார்த்தனை செய்யப்பட்டதன்றோ. பகவானும், பிராட்டியுமாயிருக்கும் இச்சேர்த்தி ப்ராக்ருதமானதல்ல என்று அடுத்தபடியாக விளக்குகிறது.

(ஊர்த்வரேதம்) ப்ராக்ருதமான ஸ்த்ரீஸங்காதிகள் அற்றவன் என்று தாத்பர்யம்.

''குர்வந்த்யாம் து ததஸ் தஸ்யாம் மண்ட₃லம் தத் ப்ரத₃க்ஷிணம்
ப்₃ரஹ்மா விஷ்ணுச்ச ப₄க₃வாந் த்ருணீக்ருத்யாவதிஷ்ட₂தாம்
இந்த்₃ரஸ் ஸ்த₂ாணுச்ச ப₄க₃வாந் தை₄ர்யம் த்யக்த்வா வ்ய-
வஸ்தி₂தௌ''

[அந்தத் திலோத்தமை மண்டலத்தைப் பிரதக்ஷிணம் செய்யும்போது, பிரமனும், பகவான் விஷ்ணுவும், அவளை த்ருணமாக நினைத்து நின்றனர். இந்திரனும், பகவான் சங்கரனும் மனோவிகாரமடைந்து நின்றனர்.] என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டது இங்கு அனுஸந்திக்கத்தக்கது. தாருகவனத்து ருஷிபத்னிகளைக் கண்டு மோஹித்த சிவன் இங்கு சொல்லப்படும் பரமாத்மாவல்ல என்று இதிலிருந்து தெளிவாகிறது. பஸ்மாஸுரனை மயக்குவதற்காகப் பெண்ணுருவங்கொண்ட ஸர்வேச்வரனைக்கண்டு மயங்கி வீர்யத்தை விட்ட முக்கண்ணான் எப்படி ஊர்த்வரேதஸ் ஆகமுடியும்? முக்கட்பிரானும், நான்முகனும் ஜிதேந்திரியர்களல்லரென்பதை விளக்க மற்றும் பல விருத்தாந்தங்கள் உள. (ஊர்த்வரேதம்) 'ரேதஸஸ் ஸ்ருஷ்டி:' முதலிய வேதவாக்யங்களில் ரேதச்சப்தம் விகாரத்தைச் சொல்லுகிறபடியால் விகாரமற்றவன் என்றும் பொருள்கொள்ளலாம். உயர்ந்த வீரியத்தையுடையவன் என்றும் பொருள்கொள்ளலாம். (விருபாக்ஷம்) மாறுபட்ட ரூபங்களையுடைய கண்களை உடையவன். 'விருபாக்ஷன்' என்னும் பெயர் முக்கண்ணனுடையதன்றோ. ஆகையால் இங்கு ருத்ரனையே சொல்லுவதாக ஏன் கொள்ளலாகாது? மேலும், விருபாக்ஷனென்னும் பெயர் புண்டரீகாக்ஷனுக்குப் பொருந்தாதே என்ற கேள்விகள் இங்கு ஏற்படலாம். இந்த ஸூக்தத்தில் படிக்கப்பட்ட நாராயணன், ஹரி, அச்யுதன் அநந்தன் முதலிய நாமங்கள் சிவனுக்குச் சிறிதும் பொருந்தாதவை. இந்த மந்திரத்தில் படிக்கப்பட்ட 'புருஷம்', 'பரம் ப்ரஹ்ம', 'ஊர்த்வரேதம்' முதலிய

http://acharya.org

சப்தங்களும் நாராயணனையன்றி வேறெவரையும் குறிக்கமாட்டா. 'சக்ஷுஷீ சந்த்₃ரஸூர்யௌ' [சந்திரனும், ஸூர்யனும் கண்கள்.] என்று முண்டகோபநிஷத்திலும், ''அச்விநௌ சாபி தே கர்ணௌ சந்த்₃ரஸூர்யௌ ச சக்ஷுஷீ'' [அச்விநிதேவர்கள் உன் காதுகள்; சந்த்ரஸூர்யர்கள் உன் கண்கள்.] என்று ஸ்ரீராமாயணத்திலும், ''சந்த்₃ராதி₃த்யௌ ச சக்ஷுஷீ'' என்று மஹாபாரதத்திலும் பரம புருஷனைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறபடியால் மாறுபட்ட ரூபத்தை யுடைய சந்திரனையும், ஸூர்யனையும் கண்களாக உடைய தேவனே இங்கு 'விரூபாக்ஷம்' என்று சொல்லப்படுவதாகக் கொள்ள வேண்டும். வராஹபுராணத்தில்,

''தஸ்ய சிந்தயதோ நேத்ராத் தேஜஸ் ஸமபூ₄வந்மஹத்
த₃க்ஷிணம் வஹ்நிஸங்காஶம் வாமம் துஹிநஸந்நிப₄ம்''

[அப்படி நினைத்துக்கொண்டிருந்த (பகவானுடைய) கண்ணிலிருந்து ஒரு பெரிய தேஜஸ் உண்டாயிற்று. வலது கண் நெருப்பைப்போல் விளங்கிற்று. இடதுகண் பனியைப்போலிருந்தது.] என்று சொல்லிய படியே ஒரு கண்ணில் குளிர்ச்சியையும் ஒரு கண்ணில் உஷ்ணத்தை யும் உடையவனாதலால் விரூபாக்ஷனென்று சொல்லப்படுவதாகவும் கொள்ளலாம். (விரூபாக்ஷம்) விசேஷமான ரூபத்தையுடைய கண் கண்களையுடையவன் என்றும் பொருள்கொள்ளலாம். ''யதா₂ கப் யாஸம் புண்ட₃ரீகம் ஏவமக்ஷிணீ'' [ஸூர்யனால் மலர்ந்த தாமரை போன்ற இரு கண்கள்.] என்ற வேதவாக்யம் இங்கு அநுஸந் திக்கத்தக்கது. ஆழ்வாரும்,

''வன் காற்றறைய ஒருங்கே மறிந்து கிடந்தலர்ந்த
மென் காற் கமலத்தடம்போல் பொலிந்தன...எம்பிரான
தடங்கண்களே''

என்று இக்கண்ணழகைத் திருவிருத்தத்தில் அனுபவித்தார். பக்தர் களை அனுக்ரஹிப்பதாலும், எதிரிகளை நிரஸிப்பதாலும் விரூபமான கண்களை உடையவன் என்றும் கொள்ளலாம்.

(விச்வரூபாய...) உலகத்தையெல்லாம் தன் சரீரமாகக்கொண் டிருப்பவனுக்கு நமஸ்காரம். உலகத்தையெல்லாம் தன் சரீரமாகக் கொண்டு அவைகளின் ஸுகதுக்கங்களைத் தன்னுடையதாக அபி மானித்துக் கொண்டிருப்பவனாதலால் இவனுக்குக் கைங்கர்யம் செய் வதே உசிதமென்று காட்டப்படுகிறது. நம்முடைய கை, கால் முதலிய

http://acharya.org

அவயவங்கள் எப்படி நமக்கு சேஷமாக இருக்கின்றனவோ, அப்படியே இவனுக்கு இவ்வுலகெல்லாம் சேஷமென்று உணர்த்தப்படுகிறது. சரீரிக்கு சேஷமல்லாத சரீரமும் உண்டோ? 'ஆய' என்னும் சதுர்த்தியால் கைங்கர்யம் பிரார்த்திக்கப்படுகிறது. 'நம:' என்பதினல் அந்தக் கைங்கர்யமும் நம்முடைய ஆனந்தத்துக்காகச் செய்யப்படுவதல்ல; பகவானுடைய முகமலர்த்திக்கே செய்யப்படுகிறது என்று காட்டுகிறது.

இம்மாதிரியாக நாராயணனே பரதத்வம் என்று நிர்ணயம் செய்து, அவனுடைய ஐந்து அவஸ்தைகளையும் விவரித்து, அவனைப் பெறுவதற்கு அவனே மேலான உபாயமென்று சொல்லி, பரம புருஷார்த்தமான கைங்கர்ய ப்ரார்த்தனையுடன் இந்த ஸூக்தம் முடிகிறது. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தையும், விசிஷ்டாத்வைத வேதாந்தத்தையும் நிலைநாட்டுவது இந்த நாராயணஸூக்தமேயாகும். இங்கு அத்வைதத்திற்குச் சிறிதும் இடமில்லையென்பதும் சொல்லாமலே விளங்கும்.

நாராயணஸூக்த நிர்ணயம் முற்றிற்று.

விதிசிவாதிகளின் பிறப்பு.

"காரணந்து த்₄யேய:" [காரணவஸ்துவே தியானிக்கத்தக்கது.] என்கிற ச்ருதிவாக்யத்தின்படியே ஆதிமூலம் எவனே அவனையே தியானிக்கவேண்டும். அவனே பரப்ரஹ்மம். அவனே பரமாத்மா. ஸ்ரீபூமிநீளாதேவிகளும், நித்யமுக்தர்களும், பிரமன், சிவன் முதலிய தேவர்களும் ஜீவர்களே. பரமாத்மா இருவரிருக்கமுடியாது. சேதநாசேதநங்களடங்கிய உலகையெல்லாம் படைத்த பரம காரணன் பரவாஸுதேவனே. இவ்விஷயத்தை தைத்திரீயநாராயண ஸுபால மஹோபனிஷத்துக்களைக்கொண்டு ஸ்தாபித்தோம். புருஷஸூக்தத்தில் கோஷிக்கப்பட்ட ஸர்வகாரணனை புருஷன் நாராயணனே என்பதையும் நிர்ணயித்தோம். நாராயணஸூக்தத்திலும், நாராயணனே பரமகாரணனென்றும், பரப்ரஹ்மமென்றும், பரமாத்மாவென்றும், பரதத்வமென்றும், ஸர்வாந்தர்யாமியென்றும் உத்கோஷிக்கப்பட்டிருப்பதை உணர்த்தினேம். இனி விஷ்ணுபரத்வத்திற்கு எதிர்த்தட்டாகப் பேசப்பட்டவர்களும் அவனால் படைக்கப்பட்டவர்களே என்பதைப் பல வேதவாக்கியங்களைக்கொண்டு ஸாதிப்போம்.

நாராயணபரத்வத்திற்கு எதிராகப் பேசநின்றவர்கள் நாராயணனுடைய புத்ரனை பிரமனும், பேரனாகிய சிவனுமாவர். இவர்க

http://acharya.org

னுடைய பிறப்பு பண்டை வேதத்தில் பலவிடங்களில் பேசப்பட்டிருக்கிறது. இவைகளில் சிலவற்றை நாராயணனே ஸர்வகாரணபுருஷன் என்று நிர்ணயிக்கும்போது விவரித்திருக்கிறோம். அவை இங்கும் எடுத்துக்காட்டப்படும்.

பிரமனும் ஓர் பிறப்பே.

எல்லா ஜீவாத்மாக்களையும் சரீரத்துடன் சேர்த்துப் பிறப்பிப்பவன் பிரமன்; ஸ்ருஷ்டிகர்த்தா என்று புகழ்பெற்றவன். படைக்கப்படுபவர்களின் ஆயுள் முதலியவைகளை விதிப்பவனாகையால் அவன் விதியென்னும் பெயருடன் விளங்குகிறான். ஆனால் அப்பிரமனுக்கும் பிறப்புண்டு; ஆயுளுண்டு; அழிவுண்டு. படைக்கும் பிரமனையும் பிறப்பித்தவனே பரதத்வம் என்பது நிச்சயம்.

ப்$_3$ரஹ்மா தே$_3$வாநாம் ப்ரத$_2$மஸ் ஸம்ப$_3$பூ$_4$வ
விச்வஸ்ய கர்த்தா பு$_4$வநஸ்ய கோ$_3$ப்தா।

[எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிப்பவனும், உலகத்தைக் காப்பவனுமான பிரமன் தேவர்களுக்குள் முதலில் உண்டானான்.] என்று முண்டகோபனிஷத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. இவ்வுபனிஷத் அதர்வண வேதத்திலுள்ளது; தசோபனிஷத்துக்கள் என்று ப்ரஸித்தமான பத்து உபனிஷத்துக்களுள் ஒன்று. இதிலிருந்து பிரமனுக்கும் காரணபுருஷனா ஒருவன் உளனென்றும், அவன் முதன்முதலில் பிரமனைப் படைத்தானென்றும் ஏற்படுகிறது. இவ்வுபனிஷத்திலேயே

யதா$_3$ பச்ய: பச்யதே ருக்மவர்ணம்
கர்த்தாரமீசம் புருஷம் ப்$_3$ரஹ்மயோநிம।
ததா$_3$ வித்$_3$வாந் புண்யபாபே விதூ$_4$ய
நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி॥

[ப்ரஹ்மஜ்ஞானியானவன், பிரகாசிக்கும்படியான திவ்யமங்கள விக்ரஹத்துடன் கூடியவனும், உலகத்தை ஸ்ருஷ்டிப்பவனும், நியமிப்பவனும், பிரமனுக்குக் காரணபூதனானவனுமான புருஷனை எப்போது பார்க்கிறானோ, அப்போது அந்த ஞானி புண்யபாபங்களை விட்டு ப்ரக்ருதிஸம்பந்தமற்றவனாய் (பரமாத்மாவுடன்) மேலான ஸாம்யத்தை அடைகிறான்.] என்று கோஷிக்கப்பட்டதிலிருந்து பிரமனைப் படைத்தவன் புண்டரீகாக்ஷனான புருஷோத்தமனே என்று தெளிவாகிறது. இங்கு 'புருஷம்' என்றதால் புருஷஸூக்தாதி

http://acharya.org

களில் பிரஸித்தனான நாராயணனே பிரமனுக்குக் காரணபூதன் என்று உணர்த்துகிறது வேதம்.

> "ப4க3வாநிதி ஶப்3தோ3யம் ததா2 புருஷ இத்யபி।
> நிருபாதீ4 ச வர்த்தேதே வாஸுதே3வே ஸநாதநே॥"

['பகவான்' என்ற இந்த சப்தமும், அப்படியே 'புருஷன்' என்ற சப்தமும் ஸநாதனனான வாஸுதேவனிடமே இயற்கையாகவே இருக்கின்றன.] என்றல்லவோ சொல்லப்பட்டது. "ருக்மவர்ணம் புருஷம்" என்றதால் "புருஷம் மஹாந்தம் ஆதி3த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" [ஆதித்யனைப்போன்ற ஒளியை உடையவனும், ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவனுமான மஹாபுருஷனை.] என்று புருஷ ஸூக்தத்திலும்,

> "ய ஏஷோ அந்தராதி3த்யே ஹிரண்மய: புருஷோ த்3ருச்யதே...
> தஸ்ய யதா2 கப்யாஸம் புண்ட3ரீகமேவமக்ஷிணீ"

[ஸூர்யமண்டலத்தின் நடுவில் ஸ்வர்ணமயனான எந்தப் புருஷன் காணப்படுகிறானோ, அவனுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரையைப் போன்ற இரு கண்கள் உள.] என்று சாந்தோக்யத்திலும் சொல்லப் பட்ட புண்டரீகாக்ஷனான புருஷனே இங்கு சொல்லப்படுபவன் என்று உணர்த்தப்படுகிறது. 'ப்3ரஹ்மயோநிம்' என்பதை 'ப்ரக்ருதிக்குக் காரணபூதனை' என்றும் பொருள்கொள்வதுண்டாயினும், "ப்3ரஹ்மா தே3வாநாம்..." என்று இந்த உபநிஷத்தின் ஆரம்பத்தில் சொல்லி யிருப்பதை ஒட்டி ப்ரஹ்ம சப்தம் பிரமனைக் குறிக்கிறதென்று கொள்வதில் விரோதமில்லை.

> "யோ ப்3ரஹ்மாணம் வித3தா4தி பூர்வம்
> யோ வை வேதா3ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை।
> தம் ஹ தே3வமாத்மபு3த்3தி4ப்ரகாசம்
> முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்3யே॥"

[எவனொருவன் பிரமனை முதலில் படைக்கிறானோ, எவனொருவன் வேதங்களையும் அவனுக்கு உபதேசிக்கிறானோ, தன் விஷயமான புத்தியை ப்ரகாசிப்பிக்கும் அந்த தேவனை முமுக்ஷுவான நான் சரணமடைகிறேன்.] என்று ச்வேதாச்வதர உபநிஷத்திலும் பிரமனின் பிறப்பு பேசப்பட்டது. புருஷஸூக்தத்திலும் "தஸ்மாத்3 விராட3ஜாயத விராஜோ அதி4 பூருஷ:" [அந்தப் பரமபுருஷனிடமிருந்து

http://acharya.org

ப்ரஹ்மாண்டம் உண்டாயிற்று: அதில் பிரமன் உண்டானான்.] என்று ப்ரஹ்மஸ்ருஷ்டி சொல்லப்பட்டது.

இந்த வாக்கியங்களிலிருந்து பிரமனுக்குப் பிறப்புண்டென்று தெளிவாக விளங்கியபோதிலும் அவனைப்படைத்தவன் நாராயணனேயென்பது ஸ்பஷ்டமாகத் தெரியவில்லையே என்று சிலமந்தமதிகள் மயங்குவர். இவர்களைத் தெளிவிப்பதற்காகவே,

நாராயணாத்$_{3}$ ப்$_{3}$ரஹ்மா ஜாயதே| நாராயணாத்$_{3}$ ருத்$_{3}$ரோ ஜாயதே|

[நாராயணனிடமிருந்து பிரமன் உண்டாகிறான்; நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறான்.] என்று நாராயணோபனிஷத் நவின்றது:

அத$_{2}$ புநரேவ நாராயணஸ் ஸோऽந்யம் காமம் மநஸா த்$_{4}$யாயீத|
தஸ்ய த்$_{4}$யாநாந்தஸ்த$_{2}$ஸ்ய லலாடாத் ஸ்வேதோ$_{3}$ऽபதத்|
தா இமா ஆப:|
தத்$_{3}$தி$_{4}$ரண்யமண்ட$_{3}$மப$_{4}$வத்| தத்ர ப்$_{3}$ரஹ்மாசதுர்முகோ$_{2}$ऽஜாயத|

[அந்த நாராயணன் மறுபடியும் மனஸ்ஸினால் ஸங்கல்பித்தார், அவர் ஸங்கல்பம் பண்ணி முடித்தவுடன் நெற்றியிலிருந்து வேர்வை விழுந்தது: அதுவே இந்த ஜலம். அந்த நாராயணனிடமிருந்து பொன்மயமான அண்டம் உண்டாயிற்று. அங்கு நான்முகனான பிரமன் பிறந்தான்.] என்று மஹோபனிஷத் மொழிபிட்டது.

நைவேஹ கிஞ்சந அக்$_{3}$ர ஆஸீத்| அமூலமநாத$_{4}$ரா இமா:
ப்ரஜா: ப்ரஜாயந்தே| தி$_{3}$வ்யோ தே$_{2}$வ ஏகோ நாராயண:|

[முதலில் இங்கு ஒன்றுமில்லை; பரமபதத்திலிருக்கும் தேவனான நாராயணனிடமிருந்தே இவை உண்டாகின்றன. அவனைத் தவிர (இவைகளுக்கு) வேறு காரணமும் கிடையாது. ஆதாரமும் கிடையாது.] என்று ஸுபாலோபனிஷத்தும்,

தத$_{3}$ண்ட$_{3}$ம் ஸமப$_{4}$வத்| ... மத்$_{4}$யே புருஷோ தி$_{3}$வ்ய:|

[அண்டம் உண்டாயிற்று:... நடுவில் திவ்யபுருஷனான பிரமன் உண்டானான்.] என்று நான்முகனின் பிறப்பை நிர்ணயித்தது. இப்படிப் பலபல வேதவாக்கியங்களால் படைக்கும் பிரமனின் பிறப்பு நிர்ணயிக்கப்படுகிறது. இங்கு பிரமனை நாராயணன்

http://acharya.org

யோனிஸம்பந்தத்தினால் படைக்கவில்லை என்பதை நோக்க வேண்டும். பிரமன் யோனிஜனுக இருக்கும்பக்ஷத்தில் அவனைப் படைத்தவனுக்கு யோனிஸம்பந்தமும் இந்த்ரிய ஸத்பாவமும் ஏற்படும். பிரமனை ஸ்ருஷ்டித்தவன் கர்மத்திற்கு வசப்பட்டவனென்றும் தோஷமும் உண்டாகும். இங்கு "ஸோऽகாமயத மநஸா த்₄யாயீத" என்று சொல்லப்பட்டதினால் நாராயணன் ஸங்கல்பத்தினாலேயே ஸ்ருஷ்டி செய்பவன் என்று தெளிவாக விளங்குகிறது.

சிவனும் ஓர் ஜீவனே.

இனி, சிவனும் ஸ்ருஷ்டிக்கப்பட்டவனே என்பதை விளக்குவோம். சிவனுடைய ஸ்ருஷ்டியைப் பேசும் வேதவாக்கியங்கள் இருவகைப்பட்டவை. சில வாக்கியங்கள் நாராயணனிடமிருந்து ருத்ரன் பிறந்தான் என்று கோஷிக்கின்றன. மற்றும் சில பிரமனிடமிருந்து முக்கண்ணன் பிறந்தானென்று அறைகின்றன. இதிஹாஸ புராணங்களிலும், ஆழ்வார்களாலும் சிவன் பிரமனின் பிள்ளையாகவே பெரும்பாலும் பேசப்படுகிறான்.

"யத் தத் பத்₃மமபூ₄த் பூர்வம் தத்ர ப்₃ரஹ்மா வ்யஜாயத।
ப்₃ரஹ்மணஶ்சாபி ஸம்பூ₄தச் ஶிவ இத்யவதா₄ர்யதாம் ॥
ஶிவாத் ஸ்கந்த₃ஸ் ஸம்ப₃பூ₄வ ஏதத் ஸ்ருஷ்டிசதுஷ்டயம் ॥"

[(பகவானுடைய உந்தியிலிருந்து) யாதொரு தாமரை முன் உண்டாயிற்றோ அதில் பிரமன் பிறந்தான். பிரமனிடமிருந்தே சிவன் பிறந்தானென்று அறியத்தக்கது. சிவனிடமிருந்து ஸ்கந்தன் உண்டானன். இது (முதலிலேற்பட்ட) நாலு ஸ்ருஷ்டி.] என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டது. திருமழிசையாழ்வாரும்

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்—யான் முகமாய்
அந்தாதி மேலிட்(டு) அறிவித்தேன் ஆழ் பொருளைச்
சிந்தாமல் கொண்மின் நீர் தேர்ந்து" என்றார்.

நிற்க, பரஸ்பரவிருத்தமாகத் தோன்றும் இவ்விருவகையான வாக்கியங்களையும் எப்படி ஸமரஸப்படுத்துவது என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு இரண்டுவிதமாக ஸமாதானம் சொல்லலாம். ஒரு கல்பத்தில் நாராயணனிடமிருந்தும், ஒரு கல்பத்தில் பிரமனிட

http://acharya.org

மிருந்தும் சிவன் உண்டானதாகக் கொள்ளலாம். இதையே கல்ப பேதத்தைக்கொண்டு பரிஹரிப்பது என்பார்கள். 'நாராயணனிடத்திலிருந்து ருத்ரன் உண்டானான்' என்று வரும் வாக்கியங்களிலுள்ள நாராயணபதம் பிரமனை சரீரமாகக்கொண்ட நாராயணனைக் குறிக்கிறபடியால், 'நாராயணன் ஸ்வசரீரபூதனான நான்முகன் மூலமாக சிவனைப் படைத்தான்' என்பதாகவும் கொள்ளலாம். 'நாராயணனிடமிருந்து இந்திரன் உண்டானான்' முதலிய வாக்கியங்களில் இப்படியே பொருள் கொள்ளவேண்டியிருக்கிறதன்றோ. இனி, சிவனுடைய உத்பத்தியைச் சொல்லும் வாக்கியங்களை விவரிக்கிறோம்.

நாராயணாத்$_3$ ப்$_3$ரஹ்மா ஜாயதே | நாராயணாத்$_3$ ருத்$_3$ரோ ஜாயதே |

[நாராயணனிடமிருந்து பிரமன் உண்டானான்: நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டானான்.] என்று நாராயணோபநிஷத் கோஷித்தது.

அத$_2$ புநரேவ நாராயணஸ் ஸோऽகாமம் காமம் மநஸா த்$_4$யாயீத |
தஸ்ய த்$_4$யாநாந்தஸ்த$_2$ஸ்ய லலாடாத் த்ர்யக்ஷ: சூலபாணி:
புருஷோऽஜாயத ||

[மறுபடியும் நாராயணன் மனத்தினால் ஸங்கல்பித்தார். ஸங்கல்பித்து முடிந்ததும் நெற்றியிலிருந்து முக்கண்ணனும், சூலபாணியுமான புருஷன் உண்டானான்.] என்று மஹோபநிஷத் மஹாதேவனின் பிறப்பைப் பேசிற்று. இங்கு நாராயணனுடைய நெற்றியிலிருந்தே ருத்ரோத்பத்தி சொல்லப்பட்டிருக்கிறது. கல்பாந்தரத்தில் நாராயண புத்ரத்வமும் சிவனுக்குண்டென்று தெளிவாக விளங்குகிறது.

லலாடாத் க்ரோத$_4$ஜோ ருத்$_3$ரோऽஜாயத

[நெற்றியிலிருந்து கோபத்தினால் ருத்ரன் உண்டானான்.] என்று சங்கரனின் ஜன்மத்தை ஸுபாலோபநிஷத்தும் ஸுஸ்பஷ்டமாக அறிவித்தது. ''நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்'' என்று திருமழிசைப் பிரான் இவ்வர்த்தத்தை வெளிப்படுத்தினார்.

ப்$_3$ரஹ்ம வா இத$_3$மக்$_3$ர ஆஸீதே$_3$கமேவ | ததே$_3$கம் ஸந் நவ்யப$_4$வத் |
ச்ரேயோ ரூபமத்யஸ்ருஜத க்ஷத்ரம் யாந்யேதாநி தே$_3$வத்ரா க்ஷத்ராணி |
இந்த்$_3$ரோ வருணஸ் ஸோமோ ருத்$_3$ர: பர்ஜந்யோ யமோ ம்ருத்யுரீசாந இதி

http://acharya.org

[இவ்வுலகம் ப்ரஹ்மமாகிற ஒன்றாகவே இருந்தது. அது ஒன்றாக இருப்பதினால் பெருமையை அடையவில்லை. அந்த ப்ரஹ்மம் க்ஷத்ரியனாகிற உயர்ந்த சரீரத்தைப் படைத்தது. தேவர்களுள் க்ஷத்ரியர்களாயிருப்பவர்களான இந்திரன், வருணன், ஸோமன், ருத்ரன், பர்ஜன்யன், யமன், ம்ருத்யு, ஈசானன் என்பவர்களைப் படைத்தது.] என்று தசோபநிஷத்துக்களில் தலைசிறந்ததான சாந்தோக்ய உபனிஷத்தில் மூன்றாவது அத்தியாயத்தில் படிக்கப்பட்டிருக்கிறது.

"இந்த்3ரோ தே3வாநாம் ராஜா, வருணோ யாத3ஸாம், ஸோமோ
ப்3ராஹ்மணாநாம், ருத்3ர: பசூநாம், பர்ஜந்யோ வித்3யுதா3தீ3நாம்,
யம: பித்ரூணாம், ம்ருத்யூ ரோகா3தீ3நாம், ஈசாநோ பா4ஸாம்"

[இந்திரன், தேவர்களுக்கு அரசன்; வருணன் ஜலசரங்களுக்குத் தலைவன்; ப்ராஹ்மணர்களுக்கு ஸ்வாமி ஸோமன்; ருத்ரன் பசுக்களுக்குப் பதி; பர்ஜன்யன் மின்னல் முதலியவைகளுக்குத் தலைவன்; பித்ருக்களுக்கு ஸ்வாமி யமன்; ரோகங்களுக்கு அரசன் ம்ருத்யு; ஒளிகளுக்குத் தலைவன் ஈசானன்.] என்று சங்கரர் பாஷ்யம் செய்தார். இதிலிருந்து பசுபதியாகிய ருத்ரனுக்குப் பிறப்புண்டென்றும், தேவர்களுக்குள் க்ஷத்ரியஜாதியைச் சேர்ந்தவரென்றும் தெளிவாக விளங்குகிறது. தேவர்களுக்குள்ளும் தபோவிசேஷத்தினாலும், குணவிசேஷத்தினாலும் ப்ராஹ்மணாதிவர்ணங்கள் ஏற்படுவதாகக் கொள்ளலாம். அன்றிக்கே, ப்ராஹ்மணாதிவர்ணங்களுக்கு அபிமானிதேவதையாயிருப்பதால் ப்ராஹ்மணாதிசப்தங்களால் சொல்லப்படுவதாகவும் கொள்ளலாம். நாராயண ஸுபால மஹோபனிஷத்துக்களில் சொல்லப்பட்ட நாராயணனே இந்த ருத்ராதிதேவதைகளை ஸ்ருஷ்டித்த ப்ரஹ்மமாகச் சொல்லப்படுகிறான் என்பது தெளிவாகிறது.

ப்ரஜாபதேர் விஸ்ரஸ்தா தே3வா உத3க்ராமந்த।
ஏக ஏவ தே3வோ நாஜஹாத்।
மந்யுரேவ ஸோऽஸ்மிந்நந்தர்ஹிதோऽதிஷ்ட2த்।
ஸோऽரோதீ3த்। தஸ்ய யாந்யச்ரூணி ப்ராஸ்கந்த3ந் ஸ ஏஷ
தஶீர்ஷா ருத்3ரஸ் ஸமப4வத்॥

[ப்ரஜாபதியான பிரமனைக் கண்டு பயப்பட்டு தேவர்கள் ஓடினார்கள்; ஒரு தேவனே ஓடவில்லை; அவனே மன்யு (கோபம்); அவன் இப்பிரமனிடம் மறைந்து நின்றான். அவன் அழுதான். அவனுடைய

http://acharya.org

யாதொரு கண்ணீர் கீழே விழுந்ததோ, அதுவே இந்த நூறு தலைகளையுடைய ருத்ரனுயிற்று.]

இந்த விருத்தாந்தம் சதபதத்தில் சதருத்ரீயப்ராஹ்மணத்தில் படிக்கப்படுகிறது. (ப்ரஜாபதேர்...) இங்கு ப்ரஜாபதிசப்தம் பிரமனைக் குறிக்கிறது. தேவர்கள் ஹவிர்ப்பாகம் கொடாததினுல், அவர்களிடம் கோபமடைந்த பிரமன் அவர்களை விரட்டினுன் என்று ஏற்படுகிறது. (ஏக ஏவ தேவோ நாஜஹாத்...) ஒரு தேவன் மட்டும் ஓடவில்லை; பிரமனுடைய சரீரத்துக்குள்ளேயே மறைந்து நின்றவனை மன்யுவே(கோபமே)அவன். கோபவசப்பட்ட பிரமன் கோபத்தை விரட்ட முடியவில்லை என்று பாவம். (ஸோரோதீத்) கோபத்திற்குப் பரதந்திரனை அந்தப் பிரமன் அழுதான். "காம ஏஷ க்ரோத$_4$ ஏஷ: ரஜோகு$_3$ணஸமுத்$_3$ப$_4$வ:" [இந்தக் காமமும், இந்தக் கோபமும் ரஜோகுணத்திலுல் உண்டாவது.] என்கிறபடியே காம க்ரோதவசப்பட்ட பிரமன் தன்னுடைய இஷ்டம் நிறைவேருத தினுல் அழுதான் என்று தாத்பர்யம். கோபத்தின் உச்சநிலையை அடைந்தவர்களுக்கு அழுகை வருவது ஸஹஜமன்ளே. (ஸோரோதீத்) 'கோபத்துக்கு அபிமானி தேவதையான மன்யு பிரமனிடம் பயப்பட்டு அழுதான்' என்றும் பொருள் கொள்ளலாம். (தஸ்ய யாந்யச்ருணி...) அந்தப் பிரமனின் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர் நூறு தலைகளையுடைய ருத்ரனுக ஆயிற்று. இத்தால் "லலாடாத் க்ரோத$_4$ஜோ ருத்$_3$ரோஜாயத" [நெற்றியிலிருந்துகோபத்திஞல் ருத்ரன் உண்டானுன்.] என்ற ஸுபாலோபநிஷத்வாக்யம் விவரிக்கப்பட்டது. 'க்ரோத$_4$ஜ:' என்று கோபத்திலுல் பிறந்தவனுகையால் சிவன் கோபமூர்த்தியாய் விளங்குகின்றனன். 'ரோத$_3$யதீதி ருத்$_3$ர:' என்கிறபடியே பிறக்கும்போதே பிறரை அழச்செய்தவனுகை யாலே ருத்ரன் என்று பெயர்பெற்றுன். பிறரை அழச்செய்வதாலும் ருத்ரன் என்று பிரஸித்தியடைந்தான். இந்த வேதவாக்யத்தி லிருந்து ருத்ரனின் உத்பத்தியும், பிரமனும் காமக்ரோதங்களுக்கு வசப்பட்ட ஜீவனே என்பதும் ஸுவ்யக்தமாக விளங்குகின்றன.

> ப்ரஜாபதிர் வை ப்ரஜாகாமஸ் தபோதப்யத... ஸ ப்ரஜாபதிர்
> ஹிரண்மயம் சமஸமகரோதி$_3$ஷுமாத்ரமூர்த்$_4$வமேவ திர்யஞ்சம்
> தஸ்மின் ரேதஸ் ஸமஸிஞ்சத் தத உத$_3$திஷ்ட$_2$த் ஸஹஸ்ராக்ஷஸ்
> ஸஹஸ்ரபாத் ஸ ஏஷோஷ்டநாமா அஷ்டதா$_4$ விஹிதோ மஹாதே$_3$வ:

[ப்ரஜாபதியான பிரமன் ப்ரஜை உண்டாவதற்காகத் தவம் செய்தான். ...அந்த ப்ரஜாபதி வளைந்ததும், மேல் நோக்கினதும்,

http://acharya.org

அம்புபோன்றதுமான ஒரு ஸ்வர்ணமயமான பாத்திரத்தைச் செய்தான். அதில் (தன்னுடைய) ரேதஸ்ஸை (வீர்யத்தை) விட்டான். அதிலிருந்து ஆயிரம் கண்களை உடையவனும், ஆயிரம் கால்களை உடையவனுமான ஒருவன் உண்டானன். அவனே எட்டு பெயர்களை உடையவனும், எட்டு ஸ்தானங்களில் விதிக்கப்பட்டவனுமான இந்த மஹாதேவன்.] இது சைலாலிப்ராஹ்மணத்தில் சொல்லப்பட்ட ருத்ரோத்பத்திக்ரமம். (ப்ரஜாபதிர்...) இங்கும் ப்ரஜாபதி சப்தம் சதுர்முகனைக் குறிக்கிறது. (ஸ ப்ரஜாபதிர்...ஸமவிந்தத்) அப்பிரமன் ஸ்வர்ணமயமான ஒரு பாத்திரத்தைச் செய்து அதில் ரேதஸ்ஸை விட்டான். இதிலிருந்து இங்கு சொல்லப்படும் ப்ரஜாபதி ப்ரக்ருதிஸம்பந்தமுள்ளவன் என்று அறியப்படுகிறது. (தத உததிஷ்டத்...மஹாதேவ:) அதிலிருந்து ஆயிரம் கண்களையும், கால்களையும் உடையவனான ஒருவன் பிறந்தான். அவனே எட்டு நாமங்களையும், ஸ்தானங்களையுமுடைய மஹாதேவன். (ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்) 'ஸஹஸ்ராக்ஷ:' என்று இவன் அதிகமான ஜ்ஞானத்தை உடையவன் என்பதும், 'ஸஹஸ்ரபாத்' என்று அதிகமான சக்தியை உடையவன் என்பதும் உணர்த்தப்படுகின்றன. 'ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்' என்று புருஷஸூக்தத்தில் படிக்கப்பட்ட பதங்களை இங்கும் படித்திருப்பதனால் இங்கு சொல்லப்படுபவனும் அந்த மஹாபுருஷனாகவன்றோ இருக்க வேண்டும்? என்னில்: இங்கு 'மஹாதேவன்' என்று சிவனுடைய பெயரைப் படித்திருப்பதாலும், எட்டு நாமங்களையும், ஸ்தானங்களையும் உடையவன் என்று சொல்லப்பட்டிருப்பதாலும், அஷ்டமூர்த்தியான சிவனே இங்கு சொல்லப்படுகிறன் என்பது நன்கு விளங்குகிறது. (ஸ ஏஷ:) பிரமனின் புத்திரனாகப் பலபல வேத வாக்கியங்களில் பிரஸித்தனான சிவன். (அஷ்டநாமா) எட்டு நாமங்களை உடையவன்; (அஷ்டதா விஹித:) எட்டு ரூபங்களை உடையவன்.

"ப$_4$வம் ஶர்வமதே$_2$ஶாநம் தத$_2$ா பஶுபதிம் த்$_3$விஜ |
பீ$_4$மமுக்$_3$ரம் மஹாதே$_3$வமுவாச ஸ பிதாமஹ: ||
சக்ரே நாமாங்யதை$_2$தாநி ஸ்த$_2$ாநாந்யேஷாம் சகார ஸ |
ஸூர்யோ ஜலம் மஹீ வாயுர் வஹ்நிராகாஶமேவ ச ||
தீ$_3$க்ஷிதோப்$_3$ராஹ்மணஸ் ஸோம இத்யேதாஸ் தநவ: க்ரமாத் ||

[ப்ராஹ்மணரே! 'ருத்ரன்' என்று பெயரிடப்பட்ட அவனுக்கு, பவன், சர்வன், ஈசானன், பசுபதி, பீமன், உக்ரன், மஹாதேவன்

http://acharya.org

என்னும் பெயர்களையும் பிரமன் கொடுத்தான். இவர்களுக்கு ஸ்தானங்களையும் கொடுத்தான். 'ஸூர்யன், ஜலம், பூமி, வாயு, அக்னி, ஆகாசம், யாகம் செய்யும் ப்ராஹ்மணன், சந்திரன் என்னும் இவை முறையே (ருத்ரன் முதலியவர்களுக்கு) சரீரங்கள்.] என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணச்லோகங்களை இங்கு அநுஸந்திப்பது. (மஹாதேவ:) இது ருத்ரனுக்கு அஸாதாரணமான பெயர்களில் ஒன்று. 'மஹாதேவன்' என்றதினால் இவன் தேவர்களுக்குள் உயர்ந்தவன் என்று ஏற்படுகிறதே எனில்: 'மஹேந்த்ரன்' என்றால் வாயு, அக்னி முதலிய தேவதைகளுக்குத் தலைவன் என்றே ஏற்படும். அதுபோலவே 'மஹாதேவன்' என்பது இந்த்ராதிதேவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்றே பொருள்படும். "கள்ளி வ்ருக்ஷத்தை மஹாவ்ருக்ஷம் என்னுமாப்போலே ருத்ரனை மஹாதேவன் என்பது" என்று நம் ஆசாரியர்கள் அருளிச்செய்வர்கள்.

மஹாவ்ருக்ஷஸமாக்$_2$யேவ ப$_3$லவந்மாநப$_3$ாதி$_4$தா ।
மஹேச்வரமஹேந்த்$_3$ராதி$_3$ஸமாக்$_2$யாப்யத்ர நிஷ்ப$_3$லா ॥

[ப்ரபலமான ப்ரமாணங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் 'மஹேச்வரன், மஹேந்த்ரன்' முதலிய பெயர்களும், இதர தேவதைகளுக்குப் பரத்வத்தை ஸாதிக்கும் விஷயத்தில், 'மஹா வ்ருக்ஷம்' என்னும் பெயர்போலவே ப்ரயோஜனமற்றவை.] என்றல்லவோ சொல்லப்பட்டது 'ச்ருதி லிங்க$_3$ வாக்ய ப்ரகரண ஸ்த$_2$ாந ஸமாக்$_2$யா' என்று கடைசியில் படிக்கப்பட்ட ஸமாக்யா ப்ரமாணம் அதிதுர்பலமானதன்றே. நிற்க, இந்த கௌஷீதகி ப்ராஹ்மணத்தில் சொல்லப்பட்டபடி சிறசில கல்பங்களில் பாத்ர விசேஷத்தில் விடப்பட்ட பிரமனின் வீர்யத்தால் சிவன் பிறப்பதும் உண்டென்று தெளிவாகிறது. இதிலிருந்து ரேதஸ்ஸிலிருந்து பிறந்த மஹாதேவனும் ப்ரக்ருதிஸம்பந்தமுள்ளவனே என்றும் விளங்குகிறது.

பூ$_4$தாநாம் ச ப்ரஜாபதிஸ் ஸம்வத்ஸராய தீ$_3$க்ஷித:। பூ$_4$தாநாம் பதிர் க்$_3$ருஹபதிராஸீத்। உஷ:பத்நீ।... பூ$_4$தாநாம் பதிஸ் ஸம்வத்ஸர உஷஸி ரேதோऽஸிஞ்சத்। ஸம்வத்ஸரே குமாரோ ஜாயத। ஸோரோதீ$_3$த்। தம் ப்ரஜாபதிரப்$_3$ரவீத்। குமார கிம் ரோதி$_3$ஷி। யச்ச்$_2$ ரமாத் தபஸோதி$_4$ஜாதோஸீதி। ஸோऽப்$_3$ரவீத் அநபஹதபாப்மா வா அஹமஸ்மாஹிதநாமா। நாம மே தே$_3$ஹி பாப்மநோऽபஹத்யா இதி। தம் புந: ப்ரஜாபதிரப்$_3$ரவீத்।

ருத்$_3$ரோऽஸீதி ।...ருத்$_3$ரோ ப$_4$வச் சர்வ ஈசாந: பதிர் பீ$_3$ம உக்$_3$ர இதி ஸப்த நாமாநி ॥

[பூதங்களுக்குப் பதியான பிரமன் ஒரு வருஷத்திற்கு தீக்ஷையுடன் இருந்தான். அவன் க்ருஹஸ்தனாயிருந்தான். (அவனுடைய) பத்னி உஷஸ். ப்ரஜாபதியும் ஸம்வத்ஸரத்துக்கு அபிமானி தேவதையுமான அப்பிரமன் (விடியற்காலவேளைக்கு அபிமானிதேவதையான) உஷஸ்ஸிடம் ரேதஸ்ஸை விட்டான். ஒரு வருஷத்தில் குமாரன் பிறந்தான். அவன் அழுதான். அவனிடம் "குழந்தாய்! ஏன் அழுகிறாய்? மிகவும் ச்ரமப்பட்டுத் தவம் செய்து பிறந்தவனாயிற்றே" என்று பிரமன் கேட்டான். அக்குமாரன் 'பெயரிடப்படாத நான் பாபம் நீங்காதவனாக இருக்கிறேன். என்னுடைய பாபம் ஒழிவதற்காக நாமத்தைத் தருவாயாக" என்று சொன்னான். அவனிடம் மறுபடியும் பிரமன் "ருத்ரன் என்னும் பெயரை உடையவனாவாயாக" என்றான். ...ருத்ரன், சர்வன், ஈசாநன், பசுபதி, பீமன், உக்ரன் என்னும் ஏழு நாமங்களும் (பிரமனால் கொடுக்கப்பட்டன)]

சதபதப்ராம்ஹ்மணத்தில் காணப்படும் வாக்யங்கள் இவை: விஷ்ணுபுராணத்திலும், மார்க்கண்டேய புராணத்திலும், ஸ்காந்த புராணத்திலும் இந்த வாக்யங்களை அனுஸரித்தே ருத்ரஸ்ருஷ்டி விவரிக்கப்பட்டிருக்கிறது. (பூதாநாம் பதி: ...உஷா: பத்நீ) இதிலிருந்து பிரமனுக்கு உஷஸ் என்னும் ஒரு மனைவி இருந்தாளென்பது தெளிவாகிறது. (ஸம்வத்ஸர உஷஸி ரேதோஸிஞ்சத்) ஸம்வத்ஸரத்துக்கு (வருஷத்துக்கு) அபிமானிதேவதையாகையால் "ஸம்வத்ஸர:" என்று பிரமனும், விடியற்காலவேளைக்கு அபிமானி தேவதையாகையால் 'உஷஸ்' என்று அவன் மனைவியும் குறிப்பிடப்படுகிறார்கள் என்று விளங்குகிறது. 'ரேதோஸிஞ்சத்' [வீர்யத்தை விட்டான்.] என்றதால் பிதாவான பிரமனுடையவும், புத்ரனான ருத்ரனுடையவும் ப்ராக்ருதத்வம் தோற்றுகிறது. 'மநஸா த்யாயித' என்று மனஸ்ஸினால் ஸங்கல்பித்து ஸ்ருஷ்டி செய்யும் நாராயணனுக்கும், ஸ்த்ரீஸங்கமத்தினால் ஸ்ருஷ்டி செய்யும் பிரமனுக்குமுள்ள வாசி உணரத்தக்கது. (ஸம்வதஸ்ரே குமாரோஜாயத) ஒரு வருஷத்திற்குப் பின் குமாரன் பிறந்தான். (ஸோரோதீத்) அவன் அழுதான். இவைகளிலிருந்து ருத்ரன் கர்ப்பவாஸம் செய்து பிறந்தவனே என்பதும், துக்கத்திற்கு வசப்பட்டவன் என்பதும் வெளியாகின்றன. (தம் ப்ரஜாபதிரப்ரவீத்...) 'குழந்தாய்! ஏன் அழுகிறாய்? மிகவும் சிரமப்பட்டுத் தவம் செய்ததினால் பிறந்தவ

http://acharya.org

னாயிற்றே" என்றான். 'ச்ரமாத் தபஸ:' என்றதினால், பிரமன் ஒரு பரவஸ்துவைக் குறித்துத் தவம் செய்தான் என்று ஏற்படுகிறது. புத்திரனை ருத்ரனுக்கும், தனக்கும் ஸ்வாமியான நாராயணனே அவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

"ப்$_3$ரஹ்மாத$_3$யஸ் ஸுராஸ் ஸர்வே விஷ்ணுமாராத்$_4$ய தே புரா ।
ஸ்வம் ஸ்வம் பத$_3$மநுப்ராப்தா: கேஶவஸ்ய ப்ரஸாத$_3$த: ॥

[பிரமன் முதலிய எல்லா தேவர்களும், முன் விஷ்ணுவை ஆராதித்துத் தங்கள் தங்கள் பதவிகளைக் கேசவனுடைய அருளாலே பெற்றார்கள்.] என்று நாரஸிம்ஹபுராணத்திலும்,

"யுக$_3$கோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்$_4$ய பத்$_3$மபூ$_4$: ।
புநஸ்த்ரைலோக்யதா$_4$த்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரும: ॥"

[தாமரையில் பிறந்த நான்முகன் ஆயிரங்கோடி யுகங்கள் விஷ்ணுவை ஆராதித்து, மறுபடியும் மூவுலகங்களுக்கும் பதியாயிருக்கும் தன்மையை அடைந்தானென்று கேள்விப்படுகிறோம்.] என்று மஹாபாரதம் ஸபாபர்வத்திலும் சொல்லப்பட்டபடியே ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும் வரம் கொடுப்பவனன்றோ வாஸுதேவன். புத்ரனை அடைவதற்காக ஆயாஸஸாத்யமான தபஸ்ஸைச் செய்த பிரமன் பரமாத்மாவல்லன் என்றும் புலப்படுகிறது. 'இச்சா$_2$மாத்ரம் ப்ரபோ$_4$ஸ் ஸ்ருஷ்டி:' [ஸர்வேச்வரனுடைய ஸ்ருஷ்டி இச்சாமாத்திரத்தினால் ஏற்படுகிறது.] என்றல்லவோ சொல்லப்பட்டது.

(ஸோப்ரவீத்....அபஹத்யை இதி) "தந்தையே! பெயரில்லாதவனாயிருப்பதால் பாபம் நீங்கப்பெறாதவனாயிருக்கிறேன். என்னுடைய பாபங்கள் போவதற்காக எனக்குப் பெயரைக் கொடுப்பாயாக" என்று அக்குமாரன் பதிலளித்தான். 'பாபங்கள் நீங்கப் பெறாதவனாயிருக்கிறேன்' என்றதினால் ருத்ரன் கர்மவச்யனே என்பது கையிலங்கு நெல்லிக்கனியாக விளங்குகிறது. "ருத்ரன் நாராயணனிடமிருந்தும், பிரமனிடமிருந்தும் பிறந்தான் என்று கோஷிக்கும் வாக்யங்களெல்லாம் ருத்ரனுடைய அவதாரத்தையே சொல்லுகின்றன. விஷ்ணுவினுடைய ராமக்ருஷ்ணாதி அவதாரங்களைப்போலே இதுவும் தன்னுடைய இச்சையினாலேயே ஏற்படுகிறது." என்று சிலர் சொல்லுகின்றனர். அது சிறிதும் பொருந்தாது. ராமக்ருஷ்ணாத்யவதாரங்களை எடுக்கும் விஷ்ணுவைப்போலே

http://acharya.org

இவன் ஸ்வேச்சையினால் பிறக்கிறான் என்பதற்கு ப்ரமாணமில்லை. "அநபஹதபாப்மா வாஹம்" [நான் பாபம் நீங்கப்பெறாதவனாயிருக்கிறேன்.] என்று தானே பிறந்தவுடன் சொன்னதிலிருந்து இவனுக்குப் பூர்வஜன்மமுண்டென்றும் பூர்வஜன்மங்களில் பாபகர்மங்கள் செய்தவனிவன் என்பதும் தெளிவாக அறியப்படுகின்றன. சிவன் பரமாத்மாவல்லன் என்பதற்கு அவனுடைய வாக்கியமான இதைவிட வேறு என்ன ஸாக்ஷி வேண்டும்?

(அநபஹதபாப்மா வாஹமநாமிதநாமா...) பெயரில்லாதவனாயிருப்பதால் பாபம் நீங்கப்பெறாதவனாயிருக்கிறேன். பெயரிடுவதற்கும் பாபம் நீங்குவதற்கும் என்ன ஸம்பந்தம் என்று பலர் நினைக்கலாம். ஞானிகளுள் தலைசிறந்தவனான ருத்ரன் இங்கு 'பெயர்' என்று பரமாத்மாவான நாராயணனுடைய பெயர்களையே குறிப்பிடுகிறான். 'பரமாத்மாவின் பரமபவித்திரமான பெயர்களை எனக்கு நீ இடாததினால் என்னுடைய பாபங்கள் என்னைப் பிடிக்கின்றன. அந்தப் பாபங்கள் போவதற்காகப் பரமபுருஷனின் திருநாமங்களை எனக்கு இடுவாயாக' என்பதே இந்த ருத்ரவாக்யத்தின் திரண்ட பொருளாகும்.

"கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்மஸம்ஸாரப$_3$ந்த$_4$நாத்"

[எதை ஜபித்தால் ஜந்துவானவன் ஜன்மம், ஸம்ஸாரம் என்னும் கட்டுகளிலிருந்து விடுபடுகிறான்?] என்றும்,

"ஆர்த்தா விஷண்ணாச் ஶிதி$_2$லாச்ச பீ$_4$தா:
கோ$_4$ரேஷு ச வ்யாதி$_4$ஷு வர்த்தமாநா: |
ஸங்கீர்த்ய நாராயணஶப்$_3$த$_3$மாத்ரம்
விமுக்தது$_3$:க்க$_2$ாஸ் ஸுகி$_2$நோ ப$_4$வந்தி ||

[செல்வத்தை இழந்தவர்களும், துக்கத்தை அடைந்தவர்களும், (பலவிதமான) கஷ்டங்களினால் வருந்தியவர்களும், பயந்தவர்களும், கோரமான வியாதிகளினால் பிடிக்கப்பட்டிருப்பவர்களும் நாராயண சப்தத்தை மட்டும் ஸங்கீர்த்தனம் செய்து துக்கம் நீங்கினவர்களாய் ஸுகத்தை அடைகிறார்கள்.] என்றும் நாமங்களாயிரமுடையவனான நாராயணனின் நாமங்களுடைய வைபவம் சொல்லப்பட்டதன்றோ.

"ஸ்ரீராமராமராமேதி ரமே ராமே மநோரமே!"

http://acharya.org

[மனத்திற்குகந்தவளான பார்வதியே! 'ஸ்ரீராமராம' என்று அநுஸந்தித்து நான் ராமனிடம் ஆனந்தத்தை அடைகிறேன்.] என்கிறபடியே பகவந்நாமத்தின் பெருமைகளை அறியாமையாலே பிறக்கும்போதே பகவானுடைய பெயர்களை எனக்கு இடவேணும் என்று தந்தையைக் கேட்கிறான் ருத்ரன்.

(தம் புந: ப்ரஜாபதிரப்ரவீத் | ருத்ரோஸீதி) ப்ரஜாபதியான பிரமன் "ருத்ரன் என்ற பெயரை உடையவனாவாயாக" என்று மறுபடியும் சொன்னான். நாராயணனின் நாமங்களில் ஒன்றான 'ருத்ரன்' என்னும் பெயரை முதன்முதலில் பிள்ளைக்கு வைத்தான் படைக்கும் கடவுளான பிரமன். பிறந்தவுடன் அழுதவனானதாலும் பிறரை அழச்செய்பவனானதாலும் 'ருத்ரன்' என்று பெயர் வைத்தான் பிரமன். இவ்வொரு பெயரினால் த்ருப்தி பெறாத ருத்ரன் எனக்குப் பெயரிடவேண்டும் என்று மறுபடியும், மறுபடியும் கேட்க, பவன், சர்வன், ஈசானன், பசுபதி, பீமன், உக்ரன், மஹாதேவன் என்னும் பெயர்களையும், எட்டு ஸ்தானங்களையும், பத்னிகளையும் கொடுத்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு ருத்ரனுக்கு வைக்கப்பட்ட பெயர்களெல்லாம் நாராயணனுடைய பெயர்களே யாகும். சிவன், சம்பு முதலிய பெயர்கள் நாராயணனையே குறிக்கின்றனவென்று நாராயணஸூக்தத்தில் வேதபுருஷன் விளக்கினானன்றோ. விஷ்ணுஸஹஸ்ரநாமத்திலும் இப்பெயர்கள் பகவத்நாமங்களாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பிரமன் ருத்ரனுக்கு வைத்த பின்பே ருத்ரனைச்சொல்லும் நாமங்களாக ப்ரஸித்தியடைந்தன. வாமனபுராணத்தில்

"ந து நாராயணாதீ3நாம் நாம்நாமந்யத்ர ஸம்ப4வ: |
அந்யநாம்நாம் க3திர் விஷ்ணுரேக ஏவ ப்ரகீர்த்தித: ||
ருதே நாராயணாதீ3நி நாமாநி புருஷோத்தம: |
ப்ராதா3தந்யத்ர ப4க3வாந்..............."

[நாராயணன் முதலிய பெயர்கள் மற்ற தெய்வங்களைக் குறிக்க மாட்டா. மற்ற தெய்வங்களின் நாமங்களுக்கும் விஷ்ணு ஒருவனே சேருமிடமாகக் கீர்த்திபெற்றிருக்கிறான். நாராயணன் முதலிய பெயர்களைத்தவிர மற்ற பெயர்களைப் பிறருக்குத் தந்தருளினான்.] என்று இவ்வர்த்தம் அநுஸந்திக்கப்பட்டது.

ருத்ராதி நாமங்களும் பகவானுடைய நாமங்களேயாகில, வைஷ்ணவர்களாகிற நாம் நாராயணாதிநாமங்களைப்போலே அவை

http://acharya.org

களையும் ஆதரிக்கலாகாதோ? என்னில்: நாராயணஸூக்தாதி வேதவாக்யங்களிலும், ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமாதிகளிலும் நாம் அவற்றை அநுஸந்தித்தே வருகிறோம். ஆயினும் நாராயண ஹரிகேசவாதி நாமங்களைப்போலே அவைகளைக் கொண்டாடாமலிருப்பதற்குக் காரணம் ரஜஸ்தமோகுணமுள்ளவர்களான மற்ற தேவதைகளால் தரிக்கப்பட்டிருப்பதே. விஷ்ணு வாஸுதேவ நாராயணாதி நாமங்களிலும் நம் ஆசாரியர்கள் நாராயணநாமத்தையே ஆதரித்தார்கள். "இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம். மற்றையவை இரண்டுக்கும் அசிஷ்ட பரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு. இத்தை வேதங்களும், ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பினார்கள்" என்று ஆசார்யாக்ரேஸரரான பிள்ளைலோகாசார்யர் முமுக்ஷுப்படியில் அருளிச்செய்தாரன்றோ.

நிற்க. இப்படி அஷ்டமூர்த்திப்ராஹ்மணத்தில் சொன்ன ருத்ரோத்பத்தி விஷ்ணுபுராணத்தில் பின்வருமாறு ப்ரபஞ்சநம் செய்யப்பட்டிருக்கிறது:—

"கதி$_3$தஸ் தாமஸஸ் ஸர்க்கோ$_3$ ப்$_3$ரஹ்மணஸ் தே மஹாமுநே ।
ருத்$_3$ரஸர்க்க$_3$ம் ப்ரவக்ஷ்யாமி தந்மே நிக$_3$த$_3$த: ச்ருணு ॥
கல்பாதா$_3$வாத்மநஸ் துல்யம் ஸுதம் ப்ரத்$_4$யாயதஸ் தத: ।
ப்ராது$_3$ராஸீத் ப்ரபே$_4$ரங்கே குமாரோ நீலலோஹித: ॥
ருரோத$_3$ ஸுஸ்வரம் ஸோ$\dot{}$த$_3$ ப்ராத்$_3$ரவத் த்$_3$விஜஸத்தம ।
கிம் த்வம் ரோதி$_3$ஷி தம் ப்$_3$ரஹ்மா ருத$_3$ந்தம் ப்ரத்யுவாச ஹ ॥
நாம தே$_3$ஹீதி தம் ஸோ$\dot{}$த$_3$ ப்ரத்யுவாச ப்ரஜாபதி: ।
ருத்$_3$ரஸ்த்வம் தே$_3$வ நாம்நா$\dot{}$ஸி மா ரோதீ$_3$ர் தை$_4$ர்யமாவஹ ॥
ஏவமுக்த: புநஸ்ஸோ$\dot{}$த$_3$ ஸப்தக்ருத்வோ ருரோத$_3$ வை ।
ததோ$\dot{}$ந்யாநி த$_3$தௌ$_3$ தஸ்மை ஸப்த நாமாநி வை ப்ரபு$_4$: ॥
ஸ்தா$_2$நாநி சைஷாமஷ்டாநாம் பத்நீ: புத்ராம்ச்ச ஸ ப்ரபு$_4$: ।
ப$_4$வம் ஶர்வமதே$_2$ஶாநம் ததா$_2$ பசுபதிம் த்$_3$விஜ ॥
பீ$_4$மமுக்$_3$ரம் மஹாதே$_3$வமுவாச ஸ பிதாமஹ: ।
சக்ரே நாமாந்யதை$_2$தாநி ஸ்தா$_2$நாந்யேஷாம் சகார ஸ: ॥
ஸூர்யோ ஜலம் மஹீ வாயுர் வஹ்நிராகாஶமேவ ச ।
தீ$_3$க்ஷிதோ ப்$_3$ராஹ்மணஸ் ஸோம இத்யேதாஸ் தநவ: க்ரமாத் ॥
ஸுவர்ச்சலா ததை$_2$வோஷா விகேஶீ சாபரா ஶிவா ।

http://acharya.org

ஸ்வாஹா தி$_3$ஶஸ் ததா$_2$ தீ$_3$க்ஷா ரோஹிணீ ச யதா$_2$க்ரமம் ||
ஸூர்யாதீ$_3$நாம் த்$_3$விஜச்ரேஷ்ட$_2$ ருத்$_3$ராத்$_3$யைர்நாமபி$_4$ஸ் ஸஹ|
பத்ந்ய: ஸ்ம்ருதா மஹாப$_4$ாக$_5$ தத$_3$பத்யாநி மே ச்ருணு ||
ஏஷாம் ஸூதிப்ரஸூதிப்$_4$யாமித$_3$மாபூரிதம் ஜக$_3$த் |
சனைச்சரஸ் ததா$_2$ சுக்ரோ லோஹிதாங்கோ$_3$ மநோஜவ: ||
ஸ்கந்த$_3$ஸ் ஸர்க்கோ$_3$த$_2$ ஸந்தாநோ பு$_3$த$_4$ச்சாநுக்ரமாத் ஸுதா: ||''

[மஹாமுனிவரே! பிரமனுடைய தாமஸஸ்ருஷ்டி என்னால் சொல்லப்பட்டது. ருத்ரனுடைய உத்பத்தியைச் சொல்லுகிறேன். அதைக் கேட்பாயாக. கல்பத்தின் ஆதியில் தனக்கு ஸமானமான புத்திரன் வேண்டுமென்று தியானித்துக்கொண்டிருந்த பிரமனின் மடியில் கறுப்பும், சிவப்பும் கலந்த வர்ணத்தையுடைய ஒரு குமாரன் தோன்றினான். ப்ராஹ்மணோத்தமரே! அவன் உரக்க அழுதான்: பிறகு ஓடினான். அழுதுகொண்டிருந்த அவனை 'நீ ஏன் அழுகிறாய்?' என்று பிரமன் வினவினான். அக்குமாரன் "எனக்குப் பெயரைக் கொடுப்பாயாக" என்று பதில் சொன்னான். "குழந்தாய்! நீ ருத்ரன் என்ற பெயரை அடைவாயாக: அழாதே; தைரியம் கொள்ளுவாயாக" என்று பிரமனால் சொல்லப்பட்டும் மறுபடியும் ஏழுதடவை அழுதான். அதற்குப்பின் பிரமதேவன் மற்றும் ஏழு பெயர்களையும், அவைகளுக்குரிய எட்டு ஸ்தானங்களையும், பத்னிகளையும், புத்திரர்களையும் கொடுத்தான். பவன், சர்வன், ஈசானன், பசுபதி, பீமன், உக்ரன், மஹாதேவன் என்னும் இந்தப் பெயர்களைப் பிதாமஹன் வைத்தான். இவர்களுக்கு ஸ்தானங்களையும் கொடுத்தான். ஸூர்யன் ஜலம், பூமி, வாயு, அக்னி, ஆகாசம், யாகம் செய்யும் ப்ராஹ்மணன், ஸோமன் இவர்கள் வரிசைக்ரமாக (ருத்ரன் முதலியவர்களுக்கு) சரீரங்கள். ஸுவர்ச்சலை, உஷை, விகேசி, சிவா, ஸ்வாஹா, திசா, தீக்ஷா, ரோஹிணி என்பவர்கள் ருத்ரன் முதலிய நாமங்களுடன் கூடிய ஸூர்யன் முதலியவர்களுக்குப் பத்னிகள். அவர்களுடைய புத்திரர்களையும் என்னிடமிருந்து கேட்பாயாக. இவர்களுடைய ஸந்ததிகளாலேயே இவ்வுலகம் நிறைந்திருக்கிறது. சனைச்சரன், சுக்ரன், லோஹிதாங்கன் (செவ்வாய்), மநோஜவன், ஸ்கந்தன், ஸர்க்கன், ஸந்தானன், புதன் என்பவர்களே க்ரமமாக இவர்களுடைய புத்ரர்கள்.] என்று விஷ்ணுபுராணம் முதல் அம்சம், எட்டாவது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி எட்டு மூர்த்திகளை உடையவனாகையால் சிவன் அஷ்டமூர்த்தி எனப்படுகிறான். நிற்க, ஸ்காந்தபுராணத்தில்,

http://acharya.org

உந்மத்தவத$_2$நுந்மத்த: ப்ரபு$_4$: ப்ரப$_4$வதாமபி।
ராத்ரௌ ஶ்மஶானே பர்யடஸி தத்கிமேதந் மஹேச்வர ॥

[மஹேச்வரரே! பைத்தியம் பிடிக்காதவராயிருந்தும், ப்ரபுக்களுக்கும் ப்ரபுவாயிருந்தும் பைத்தியம் பிடித்தவன்போல் ராத்திரி வேளையில் சுடுகாட்டில் அலைகிறீர். அது எதனால்?] என்று பார்வதி ருத்ரனைக் கேட்க,

அஹம் ஶோணிதபங்காலு: கராளவத$_3$நோம்பி$_3$கே।
ரௌத்ரே முஹூர்த்தே ஸம்பூ$_4$தோ ஹரே ரோதி$_3$மி விஸ்வரம் ॥

[அம்பிகே! நான் ரத்தத்தினால் பூசப்பட்டவனாய், பயங்கரமான முகத்தை உடையவனாய் ரௌத்ரமுஹூர்த்தத்தில் ஹரியினிடமிருந்து உண்டானவனாய் உரத்த குரலில் அழுதேன்.] என்று தொடங்கி, தன்னுடைய உத்பத்தியையும், எட்டுப்பெயர்களையும், மூர்த்திகளையும் பெற்றபடியையும் சொல்லி,

"ரௌத்$_2$ரே முஹூர்த்தே ஜாதோஹம் ரௌத்$_3$ரகர்மா ததோ ஹ்யஹம்।
யத்$_3$ப$_4$வத்யுசிதம் கர்ம புருஷஸ்ய கி$_3$ரேஸ்ஸுதே ॥
தத் தேநாவச்யகர்த்தவ்யம் ம்ருது$_3$ வா யதி$_3$ வேதரத்।
ப்ரஜாபதேச்ச கஶ்ஶக்த ஆதே$_3$ஶம் கர்த்துமந்யதா$_2$ ॥"

[ரௌத்ரமான முஹூர்த்தத்தில் பிறந்தேன் நான். அதனாலேயே கொடூரமான காரியங்களை உடையவனாயிருக்கிறேன். ஹிமவானின் புத்ரியே! எந்தக் கர்மம் புருஷனுக்கு உசிதமாயிருக்கிறதோ, அது ம்ருதுவாயிருந்தாலும், கொடூரமாயிருந்தாலும் அவசியம் செய்யப் படவேண்டியதேயாகும். ப்ரஜாபதியின் ஆஜ்ஞையை மீறுவதற்கு எவனால் முடியும்?] என்று ருத்ரோத்பத்தி சொல்லப்பட்டது. இங்கு "ஹரேஸ் ஸம்பூ$_4$த:" [ஹரியினிடமிருந்து உண்டானேன்.] என்றும், "ததோ மாம் பாணிநா ஸ்ப்ருஷ்ட்வா லோகேச: ப்ராஹ கேசவ:" [பிறகு என்னைக் கையினால் தொட்டு லோகேசனான கேசவன் உரைத்தான்.] என்றும் ருத்ரனுடைய பிதா நாராயணனே என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதவாக்யங்களும் இரண்டு வகையாகவும் இருப்பதால், "நாராயணாத்$_3$ ருத்$_3$ரோ ஜாயதே" [நாராயணனிடத்திலிருந்து ருத்ரன் உண்டானான்.] இத்யாதி வாக்யங்களை இந்தப் புராணம் விவரிப்பதாகக் கொள்ளலாம். அன்றிக்கே, இங்கு

http://acharya.org

கடைசியில் ருத்ரஜநநத்தைக் குறித்து ப்ரஜாபதிசப்தமும் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதால் ப்ரஹ்மாவை சரீரமாகக்கொண்ட நாராயணனைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். பிள்ளைலோகாசார்யர் தத்வசேகரத்தில் இவ்வாக்யங்களை எடுத்து "ஹரிகேசவசப்தங்களாலே உபக்ரமித்து, ப்ரஜாபதிசப்தத்தாலே உபஸம்ஹரிக்கையாலே, இந்த ஸ்ம்ருதியில் (ச்ருதியில்) ப்ரஜாபதிசப்தம் நாராயண பர்யவஸாயியாகக்கடவது" என்று அருளிச்செய்தது இங்கு அநுஸந்திக்கத்தக்கது. இம்மாதிரியான ருத்ரஸ்ருஷ்டி மார்க்கண்டேய புராணத்திலும் சைவபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

நிற்க, ஸாமவேதத்தில் "விரூபாக்ஷாய தந்தாஞ்ஜயே ப்ரஹ்மண: புத்ராய நம:" என்று முக்கண்ணன் பிரமனின் புத்திரன் என்று கோஷிக்கப்பட்டது. அதர்வணவேதத்தில்,

"ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமபவத்।
லலாடாத்க்ரோதஜோ ருத்ரஸ்த்ர்யக்ஷ:கண்டபரஶ்வரஜீஜநத்॥"

[அந்தப் பிரமன் ஒருவனே தாமரையில் உண்டானன். (அவனுடைய) நெற்றியிலிருந்து க்ரோதத்திலுண்டானவனும், கண்டபரசு என்ற பெயரையுடையவனும் முக்கண்ணனுமான ருத்ரன் உண்டானன்.] என்று பிரமனுடையவும், ருத்ரனுடையவும் உத்பத்திகள் கோஷிக்கப்பட்டன. "புஷ்கரபர்ணே ஸமபவத்..." [தாமரையில் உண்டானன்...] என்ற இந்த வேதவாக்கியம்,

"யத் தத் பத்மமபூத் பூர்வம் தத்ர ப்ரஹ்மா வ்யஜாயத
ப்ரஹ்மணச்சாபி ஸம்பூதச் சிவ இத்யவதார்யதாம்॥"

[யாதொரு தாமரை முதலில் உண்டாயிற்றோ அதில் பிரமன் பிறந்தான். பிரமனிடமிருந்து சிவன் பிறந்தானென்று அறியப்படட்டும்.] என்று மஹாபாரதத்தில் விவரிக்கப்பட்டது.

"நம்முடை நாயகனே! நான்மறையின் பொருளே!
நாவியுள் நற்கமல நான்முகனுக்கொருகால்
தம்மனையானவனே!" என்று பெரியாழ்வாரும்,

"நாட்டைப் படையென்(று) அயன் முதலாத் தந்த நளிர் மாமலருந்தி
வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன் தன்னைக் கண்டீரே"
என்று ஆண்டாளும்,

http://acharya.org

''தாமரைமேல் அயனவனைப் படைத்தவனே'' என்று குல சேகரப்பெருமாளும்,

''போது தங்கு நான்முகன் மகன் அவன் மகன் சொலில்
மாது தங்கு கூறன் ஏறதூர்தி என்று வேதநூல்
ஓதுகின்ற(து) உண்மை அல்லதில்லை மற்றுரைக்கிலே''

[போது தங்கு நான்முகன்—தாமரை மலரிலிருக்கும் நான்முகன்; மாது தங்கு கூறன்—பார்வதியைத் தன் உடலில் பாதிபாகமாகக் கொண்டவன்; ஏறதூர்தி—ரிஷபவாஹனன்.] என்று திருமழிசைப் பிரானும்,

''அயனைப் படைத்ததோரெழில் உந்தி'' என்று
திருப்பாணாழ்வாரும்,

''அங்கமலத்தயன்'' என்றும்,

''ஒருவனை உந்திப்பூமேல ஓங்குவித்து'' என்று
திருமங்கையாழ்வாரும்,

''செய்யமறையான் நின் உந்தியான்'' என்றும்,

''நான்முகற்குப் பூமேல் பகர மறை பயந்த பண்பன்''
என்றும் பொய்கையாழ்வாரும்,

''இருந்தண் கமலத் திருமலரினுள்ளே
திருந்து திசைமுகனைத் தந்தாய்'' என்று பூதத்தாழ்வாரும்,

''ஆங்கு மலரும் குவியுமால் உந்திவாய்
ஓங்கு கமலத்தினொண்போது—ஆங்கைத்
திகிரி சுடரென்றும் வெண்சங்கம் வானில்
பகருமதியென்றும் பார்த்து'' என்று பேயாழ்வாரும்,

''யாவகை உலகமும் யாவருமில்லா
மேல் வரும் பெரும்பாழ்காலத்(து) இரும்பொருட்(கு)
எல்லாம் அரும் பெறல் தனிவித்து ஒரு தான்
ஆகித் தெய்வநான்முகக் கொழுமுளை ஈன்று
முக்கணீச னொடு தேவு பல நுதலி
மூவுலகம் விளைத்த உந்தி
மாயக்கடவுள் மாமுதலடியே''

http://acharya.org

என்று வேதமும் தமிழ்செய்த நம்மாழ்வாரும் பலவிடங்களில் இவ் வேதவாக்கியங்களை விரித்துரைத்தனர். "அஜஸ்ய நாபௌ" [எவனுடைய உந்தியிலிருந்து இவ்வுலகம் உண்டாயிற்று?] என்று ஆளவந்தாரும், "ஹிரண்யகர்ப்பஸ் ஸமவர்த்ததாக்ரே" என்ற புருஷஸூக்தச்ருதியில்,

"ததி₃தா₃ஸ பு₄வநேஷு ஜ்யேஷ்ட₂ம் யதோ ஜஜ்ஞ உக்₃ரஸ் த்வேஷ நரும்ண: ।
ஸத்₃யோ ஜஜ்ஞாநோ நிரிணாதி ஶத்ரூந் ॥" [ருக் 8-7-1]

[எவனிடமிருந்து இந்த உக்ரன் என்று பெயர் பெற்ற சிவன் பிறந்தானோ அந்தப் பிரமன் உலகில் ஜ்யேஷ்டனாயிருந்தான். (அந்த ருத்ரன்) பிறந்தவுடன் சத்ருக்களை அழித்தான்.] என்று ப்ரம்ஹருத்ரர்களுடைய ஸ்ருஷ்டி பேசப்பட்டது. இம்மாதிரி வேதங்களும், இதிஹாஸபுராணங்களும், வைதிகச்ரேஷ்டர்களான ஆழ்வார்களும், ஆசாரியர்களும் ஏககண்டமாக ப்ரம்ஹருத்ராதிகளின் ஸ்ருஷ்டியைப் பலவிடங்களில் பேசியிருக்கின்றனர். இங்கு எடுக்கப்பட்ட வேதவாக்யங்களெல்லாம் பரமப்ராமாணிகர்களான பூர்வாசார்யர்களால் எடுக்கப்பட்டவை. இவை ஸ்ருஷ்டிக்ரமத்தை எடுத்துரைப்பதற்கென்றே ஏற்பட்ட வாக்யங்கள். அர்த்தவாத வாக்யங்களன்று. நாராயணனின் உத்பத்தியைச் சொல்லும் வாக்கியம் ஒன்றுகூட வேதங்களில் காணமுடியாது. பிரமன், சிவன் முதலியவர்களுடைய உத்பத்தியைச் சொல்லும் பல வாக்கியங்களிருப்பதைக் காட்டினோம். முதலத்தியாயம் நாலாம் பாகத்தில் இவர்களுக்கு அழிவும் உண்டு என்பதை நிரூபிப்போம்.

ந்ருஸிம்ஹதாபிந்யுபநிஷத்தின் நிர்த்தாரணம்.

இவ்வுபனிஷத் அதர்வண வேதத்தைச் சேர்ந்தது. பூர்வதாபனியமென்றும், உத்தரதாபனியம் என்றும் இரண்டுபாகங்கள் கொண்டது. தைத்திரீயோபனிஷத்தைப்போல் விரிவாகவுள்ளது. இதில் ப்ரஹ்மாதிகளின் பிறப்பும், லோகஸ்ருஷ்டிக்ரமமும் சொல்லப்பட்டிருக்கிறது. முப்பத்திரண்டு அக்ஷரங்களும், பதினொரு பதங்களும் கொண்ட ந்ருஸிம்ஹ அனுஷ்டுப் மந்திரம் பிரமனுக்கு பகவானால் உபதேசிக்கப்பட்டதாகவும், அதை ஜபித்து நரஸிம்மனை தியானித்ததினாலேயே ஸ்ருஷ்டிக்கும் சக்தியைப் பிரமன் அடைந்ததாகவும் இவ்வுபனிஷத்தில் உரைக்கப்பட்டிருக்கிறது. ந்ருஸிம்ஹ மந்திரத்தை ஜபித்து, ந்ருஸிம்ஹனைக் குறித்துப் பிரமன் தபஸ் செய்ததைச்

http://acharya.org

சொல்லும் உபநிஷத் ஆகையால் ந்ருஸிம்ஹதாபினீ(பிநீ)பனிஷத் என்ற பெயருடன் விளங்குகிறது. இதில் உபதேசிக்கப்பட்டிருக்கிற ந்ருஸிம்ஹ மந்திரத்தைப் பெரியவாச்சான்பிள்ளை முதல் திருவந்தாதி 25-வது பாசுர வியாக்யானத்தில் பிரமாணமாக எடுத்துக் காட்டியருளினார். நம்பிள்ளை ஈட்டிலும் இம்மந்த்ரம் ப்ரமாணமாக எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்வுபநிஷத் ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதென்றே கொள்ளவேண்டும். அப்பைய தீக்ஷிதரின் சிவதத்வவிவேகத்திற்குக் கண்டனமாகப் பரவஸ்து வேதாந்த தேசிகரால் எழுதப்பட்ட வேதாந்த கௌஸ்துப க்ரந்தத்திலும் இவ்வுபநிஷத் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஹரிதாஸரால் செய்யப்பட்ட இருசமய விளக்கத்திலும் இவ்வுபநிஷத் ப்ரமாணமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

சென்ற மன்மத வருஷத்தில் வெங்கட க்ருஷ்ண சாஸ்திரி என்பவரால் பிரகடிக்கப்பட்ட அஷ்டோத்தரசதோபனிஷத் என்னும் புஸ்தகத்தில் இந்த உபனிஷத் காணப்படுகிறது. ஸ்மார்த்தர்களால் பிரகடிக்கப்படும் உபனிஷத் புஸ்தகங்கள், பல வாக்யங்கள் விடப்பட்டும், சேர்க்கப்பட்டும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளை அங்கங்கு விவரிப்போம். உபனிஷத்துக்களை உண்மையான பாடத்துடன் பிரசுரிப்பதில் வைஷ்ணவர்கள் மிகவும் அநாதரவு காட்டியிருக்கிறார்கள். பூர்வாசார்யர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட உபனிஷத்துகள் இவ்வளவு என்று நிர்ணயம் செய்யவில்லை. அநாதியான உபநிஷத்துக்களை நிர்ணயம் செய்து உண்மையான பாடங்களுடன் அவைகளைப் பதிப்பிக்கவேண்டியது வைஷ்ணவ வுலகத்தின் கடமையாகும். பகீரதப்ரயத்னம் போன்ற இந்தக் காரியத்தில் சிறிய ஞானத்தனான எனக்குப் பூர்ணமான யோக்யதை இல்லாதபோதிலும், யதா மதி யதாச்ருதம் இங்கு இவ்விஷயம் விசாரிக்கப்படுகிறது. வேதப்ரதிபாத்யனான வாஸுதேவனையும், வேதபுருஷனையும், வேதம் வல்லார்களான பெரியார்களையும் திருப்பாதம் பணிந்து இங்கு எழுதப்படுவதிலுள்ள குற்றங்குறைகளை க்ஷமிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

முற்கூறிய அஷ்டோத்தரசதோபனிஷத் புஸ்தகத்தில் அவ்யக்தோபனிஷத் என்னும் உபனிஷத்தும் காணப்படுகிறது. இதை ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களாவது, இதர ப்ராசீனர்களாவது ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் இதிலும், பிரமனின் உத்பத்தி, ந்ருஸிம்ஹமந்த்ரோபதேசம், அதை ஜபித்துப் பிரமன்

http://acharya.org

ஸ்ருஷ்டி சக்தியைப் பெற்றது முதலியவை பேசப்பட்டிருக்கின்றன. விசேஷாம்சங்கள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. புருஷ ஸூக்தத்திற்கு முத்கலோபநிஷத்தைப்போல் ந்ருஸிம்ஹதாபின் யுபநிஷத்தை அனுஸரித்துச் சுருக்கமாக விளங்குகிறது இந்த உபநிஷத். ஆகையால் ப்ரகரணத்திற்குத் தகுந்தபடி இவ்விரு உபநிஷத்துக்களையும் சேர்த்து விவரிக்கிறோம்.

ஹரி: ஓம் || ஆபோ வா இத$_3$மாஸ ஸலிலமேவ। ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமப$_4$வத்। தஸ்யாந்தர் மநஸி காமஸ் ஸமவர்த்தத। இத$_3$ம் ஸ்ருஜேயமிதி। *ந்ருஸிம்ஹதாபிநீ.*

[ப்ரளயகாலத்தில் இவ்வுலகம் ஜலமாகவே இருந்தது. அதில் ஒப்பற்றவரான ப்ரஜாபதி நாராயணனுடைய நாபிகமலத்திலிருந்து உண்டானர். அவருடைய மனஸ்ஸில் இதை உண்டாக்க வேண்டுமென்னும் ஆசை உண்டாயிற்று.]

ஹரி: ஓம் || புரா கிலேத$_3$ம் ந கிஞ்சநாஸீந்ந த்$_3$யௌர் நாந்தரிக்ஷம் நப்ருதி$_2$வீ।கேவலஜ்யோதீருபமநாத்$_3$யநந்தம் அநண்வஸ்தூ$_2$லரூபம அரூபம் ரூபவத$_3$விஜ்ஞேயம் ஜ்ஞாநரூபமாநந்த$_3$மயமாஸீத்। தத$_3$நந்யத் தத் த்$_3$வேதா$_4$ऽபூ$_4$த்। ஹரிதமேகம் ரக்தமபரம்। தத்ர யத் ரக்தம் தத் பும்ஸோ ரூபமபூ$_4$த்। யத் ஹரிதம் தந்மாயாயா:। தௌ ஸமாக$_3$ச்ச$_2$த:। தயோர் வீர்யமேவமாநந்த$_3$த்। தத$_3$வர்த்த$_4$த। தத$_3$ண்டமபூ$_4$த் ஹைமம்। தத் பரிணமமாநமபூ$_4$த்। தத: பாரமேஷ்ட$_2$ய் வ்யஜாயத। ஸோऽபி$_4$ஜிஜ்ஞாஸத கிம் மே குலம் கிம் மே க்ருத்யமிதி। *அவ்யக்தோபநிஷத்*

[முன் ப்ரளயகாலத்தில் இவ்வுலகம் ஒன்றுமில்லை; ஆகாசமும், அந்தரிக்ஷமும், பூமியும் அப்போது இல்லை. ஆதியந்தமற்றதும், ஜ்யோதிஸ்வரூபமானதும், அணுவாகவும், ஸ்தூலரூபத்தையுடையதாகவுமில்லாததும், (ப்ராக்ருத) ரூபமற்றதும், (அப்ராக்ருத) ரூபமுள்ளதும், (அளவிட்டு) அறியமுடியாததும், ஜ்ஞானனந்தமயமானதுமான பரமாத்மாவே இருந்தது; அது மற்றொன்றை உடைத்தாகாமலிருந்தது; அது இரண்டாக ஆயிற்று. ஒன்று சிவப்பு நிறம், மற்றொன்று பச்சைநிறம். புத்$_4$த$_4$ாத்ம ஸமஷ்டியானது சிவப்பு நிறத்தையுடையது. பச்சை நிறத்தையுடையது ப்ரக்ருதி. ப்ரக்ருதி புருஷர்களாகிய அவ்விரண்டும் சேர்ந்தன. அவைகளின் வீர்யம் இம்மாதிரி சேர்ந்து திருப்தியடைந்தது. அது வளர்ந்து ஸ்வர்ணம்

http://acharya.org

போன்ற அண்டமாக ஆயிற்று. அது விகாரத்தை உடையதாயிற்று: அதில் பரமேஷ்டியான பிரமன் உண்டானான். அவன் "நான் யாரிடமிருந்து உண்டானேன்! நான் செய்யவேண்டிய காரியம் யாது" என்று அறிய ஆசைப்பட்டான்.]

நாராயணன் நான்முகனை நாபீகமலத்தில் படைத்தான் என்று பகரும் "ஸப்ரஜாபதி..." என்னும் இவ்வாக்யம் முன்னமேயே விவரிக்கப்பட்டிருக்கிறது. இதனாலேயே பகவானுக்குப் பத்மநாபனென்றும், பிரமனுக்குப் பத்மஸம்ப4வனென்றும் பெயர்கள் ப்ரஸித்தமாக விளங்குகின்றன.

தம் ஹ வாக3த்3ருச்யமாநாऽப்4யுவாச; போ4 போ4 ப்ரஜாபதே த்வமவ்யக்தாது3த்பந்நோऽஸி| வ்யக்தம் தே க்ருத்யமிதி| கிம வ்யக்தம் யஸ்மாது3ஹமாஸிஷம்| கிம் தத்3 வ்யக்தம் யந்மே க்ருத்யமிதி| ஸாப்3ரவீத்| அவிஜ்ஞேயம் ஹி தத் ஸோம்ய தேஜ:| யத3விஜ்ஞேயம் தத3வ்யக்தம்| தச்சேத் ஜ்ஞாஸ்யஸி மாவகச்சே2தி| ஸ ஹோவாச| கைஷா த்வம் ப்3ரஹ்மவாக்3 வத3ஸி பம்ஸாऽऽத்மாநமிதி| ஸா த்வப்3ரவீத்| தபஸா மாம ஜிஜ்ஞாஸஸ்வேதி| ஸஹஸ்ரம் ஸமா ப்3ரஹ்மசர்யமத்4யுவாஸாத்4யுவாஸ ||

அதா2ऽபச்யத் ருசமாநுஷ்டுபீ4ம் பரமாம் வித்3யாம்| யஸ்யா அங்கா3ந்யந்யே மந்த்ரா:| யத்ர ப்3ரஹ்ம ப்ரதிஷ்டி2தம்| விச்வே தே3வா: ப்ரதிஷ்டி2தா:| யஸ்தாம் ந வேத3 கிமந்யைர் வேதை3: கரிஷ்யதி|

அவ்யக்தோபநிஷத்.

[அப்பிரமனைக் குறித்து ஓர் அசரீரிவாக் "ஓ! ப்ரஜாபதியே! நீ அவ்யக்தத்திலிருந்து உண்டானாய்; நீ வ்யக்தத்தைச் செய்யவேண்டும்" என்று சொல்லிற்று. "நான் எதிலிருந்து உண்டானேனோ அந்த அவ்யக்தம் யாது? நான் செய்யவேண்டியதான 'வ்யக்தம்' எனப்படுவது என்ன?" என்று பிரமன் கேட்டான். "உன்னைப் பிறப்பித்த அந்தத் தேஜஸ் அறியமுடியாதது; அறியமுடியாமலிருப்பதாலேயே அவ்யக்தமெனப்படுகிறது. அதை அறியவேண்டுமாகில் என்னை அறி" என்று அசரீரி சொல்லிற்று. "ப்ரஹ்மத்தினுடைய வாக்காகப் பேசும் நீ யார்? உன்னை எனக்குத் தெரிவிப்பாயாக" என்று பிரமன் சொன்னான். "தபஸ்ஸினால் என்னை அறிய

http://acharya.org

முற்படுவாயாக" என்று அசரீரிவாக் சொல்லிற்று. பிரமனும் ப்ரஹ்ம தத்தை அறிவதற்காக ஆயிரம் வருஷங்கள் ஏகாக்ரசித்தனாய்த் தவம் செய்தான். அதன்பிறகு ப்ரஹ்மா உயர்வற உயர்ந்த வித்யையான ந்ருஸிம்ஹாநுஷ்டுப் மந்திரத்தை ஸாக்ஷாத்கரித்தான். அந்த மந்திரத்தின் அங்கங்களே இதர மந்திரங்கள். அந்த மந்திரத்திலேயே ப்ரஹ்மம் (வேதம்) நிலைநிற்கிறது. எல்லா தேவர்களும் அதிலிருக்கிறார்கள். அந்த மந்திரத்தை அறியாதவன் மற்ற வேதங்களை அறிந்து என்ன செய்யமுடியும்?]

ஸ தபோதப்யத ! ஸ தபஸ்தப்த்வா । ஸ ஏதம் மந்த்ரராஜம் நாரஸிம்ஹ மாநுஷ்டுபமபச்யத் । தேந வை ஸர்வமஸ்ருஜத । தஸ்மாத் ஸர்வமாநுஷ்டுபமித்யாசக்ஷதே । யதிதம் கிஞ்ச । அநுஷ்டுபோ வா இமாநி பூதாநி ஜாயந்தே । அநுஷ்டுபா ஜாதாநி ஜீவந்தி । அநுஷ்டுபம் ப்ரயந்த்யபிஸம்விசந்தி ॥ *ந்ரு. தா.*

[அந்தப் பிரமன் தவம் செய்தான்; தவம் செய்து ந்ருஸிம்ஹாநுஷ்டுப் மந்த்ரமாகிய இந்த மந்த்ரராஜத்தை ஸாக்ஷாத்கரித்தனன். அதைக்கொண்டு எல்லாவற்றையும் உண்டாக்கினான். அதனால் இங்குள்ள எல்லாவஸ்துக்களும் 'ஆநுஷ்டுபம்' (அநுஷ்டுப்பினால் உண்டாக்கப்பட்டது) என்று சொல்லப்படுகின்றன. அனுஷ்டுப்பிலிருந்தே இந்த பூதங்கள் உண்டாகின்றன. அனுஷ்டுப்பினால் உண்டானவை உயிர் வாழ்கின்றன; அனுஷ்டுப் மந்திரத்தை எல்லாஜீவராசிகளும் அடைகின்றன.]

தாமேவமநூசாநாம் காயந்நாஎிஷ்ட। ஸஹஸ்ரம் ஸமா ஆத்யந்தஹிஹிதோங்காரேண பதாங்யகாயத்। ஸஹஸ்ரம் ஸமாஸ் தநைவாக்ஷர ா: । ததோ ஜ்யோதிர்மயம் ஸ்ரீயாऽऽலிங்கிதம் ஸுபர்ணரதம் ஸேஷபுஜைச்சாதிதமௌளிம் ம்ருகமுகம் நரவபுஷம் ஸஸிஸூர்யஹவ்யவாஹாத்மகநயநத்ரயமபஸ்யத் । தத: ப்ரஜாபதி: ப்ரணிபபாத நமோ நம இதி । தநைவர்ச்சாऽதததமஸ்தௌத் । உக்ரமித்யாஹ । உக்ர: கலு வா ஏஷ ம்ருகரூபத்வாத் । வீரமித்யாஹ । வீரோ வா ஏஷ வீர்யவத்த்வாத் । மஹாவிஷ்ணுமித்யாஹ । மஹதோ வாऽயம் மஹாந் ரோதஸீ வ்யாப்ய ஸ்தித: । ஜ்வலந்நிவ கல்வஸாவவஸ்தித: । ஸர்வதோமுகமித்யாஹ । ஸர்வத: கல்வயம் முகவாந் விச்வரூபத்வாத் ।

http://acharya.org

ந்ருஸிம்ஹமித்யாஹ | யதா2 யஜுர்ரேவைதத் | பீ4ஷணமித்யாஹ | பீ4ஷா வா அஸ்மாதா3தி3த்ய உதே3தி | பீ4தச்சந்த்3ர: | பீ4தோ வாயுர் வாதி பீ4தோக்3நிர் த3ஹதி பீ4த: பர்ஜந்யோ வர்ஷதி | ப4த்3ரமித்யாஹ | ப4த்3ர: க2லவயம் ச்ரியா ஜுஷ்ட: | ம்ருத்யோர் ம்ருத்யுமித்யாஹ | ம்ருத்யோர் வா அயம் ம்ருத்யுரம்ருதத்வம் ப்ரஜாநாமந்நாதா3நாம் | நமாமீத்யாஹ | யதா2 யஜுர்ரேவைதத் | அஹமித்யாஹ | யதா2 யஜுர்ரேவைதத் | —அவ்யக்தோபநிஷத்.

[அந்த அனுஷ்டுப் மந்திரத்தைப் பிரமன் பாடிக்கொண்டிருந்தனன்; ஆயிரம் வருஷங்கள் முன்னும் பின்னும் ஓங்காரத்தைக்கூட்டி அந்த மந்திரத்தின் பதங்களைப் பாடினன். அப்படியே ஒவ்வொரு அக்ஷரமாக ஆயிரம் வருஷங்கள் பாடினன். அதன்பிறகு ஜ்யோதிஸ்ஸ்வரூபமாயிருப்பவனும், ஸ்ரீதேவியினால் ஆலிங்கனம் செய்யப்பெற்றவனும், கருடனை வாஹனமாகவுடையவனும், ஆதிசேஷனுடைய படங்களால் மறைக்கப்பட்ட திருமுடியை உடையவனும், ஸிம்ஹத்தைப்போன்ற முகமுடையவனும், மனிதனைப் போன்ற தேஹத்தை உடையவனும், சந்திரன், ஸூர்யன், அக்னி என்னும் இம்மூவரையும் மூன்று கண்களாகக் கொண்டவனுமான நரஸிம்ஹனைப் பார்த்தான். அதன் பிறகு பிரமன் 'நமோ நம:' என்று சொல்லி அந்த பகவானை வணங்கினன்.

அதன் பிறகு பின்வரும் மந்திரத்தினால் அந்தப் புருஷோத்தமனைத் துதித்தான்: 'உக்ரனை' என்று சொன்னன்; இந்த பகவான் ஸிம்ஹரூபியாயிருப்பதால் உக்ரனாய் விளங்குகிறனன்றே. 'வீரனை' என்று உரைத்தான்; வீர்யத்தை உடைத்தாயிருப்பதால் இவன் வீரனல்லவா. 'மஹாவிஷ்ணுவை' என விளம்பினன்; ஆகாயத்தையும் பூமியையும் வியாபித்து நிற்குமிவன் பெரியவற்றைக் காட்டிலும் பெரியவனன்றே. 'ஜ்வலிக்குமவனை' என்று துதித்தான்; ஜ்வலிக்குமவனைப் போலன்றே இப்பெருமான் நிற்கிறன். 'ஸர்வதோமுகனை (எல்லாவிடத்திலும் முகவுள்ளவனை)' என்று கோஷித்தான்; எல்லாவற்றையும் உருவமாகவுடைய இவன் எல்லாவிடங்களிலும் முகமுள்ளவனன்றே. 'ந்ருஸிம்ஹனை' என்றன்; யஜுர்வேதம் இப்படிச் சொல்லிற்று. 'பயங்கரனை' என்று சொன்னன்; இவனிடம் பயத்தினலேயே ஸூர்யன் உதிக்கிறன்; சந்திரன் இவனிடம் பயந்து செல்கின்றன், வாயுவும் வீசுகிறன்; அக்னியும் தஹிக்கிறன்; வருணன் மழை பொழிகிறன். 'மங்கள கரமானவனை' என்றுரைத்

http://acharya.org

நான். (ஸர்வாபத்துக்களுக்கும் காரணமானவனான) ஸ்ரீதேவி யுடன் கூடிய இவன் மங்கள ரூபனானவனன்றோ. 'ம்ருத்யுவுக்கும் ம்ருத்யுவானவனை' என்று துதிக்கிறான். ம்ருத்யுவெனப்படும் ஸம்ஸாரத்தைப் போக்கடிக்கும் ம்ருத்யுவாய். (அனுபவிக்கப்படுவதால்) அன்னமெனப்படும் தன்னை அனுபவிக்கும் சேதனர்களுக்கு மோக்ஷ ஸாதகமாயிருப்பவனல்லவா இப்பெருமான். 'வணங்குகிறேன்' என்றான். யஜுர்வேதம் இப்படியே சொல்லிற்று. 'நான்' என்றான். யஜுர்வேதம் இப்படிச் சொல்லிற்று.]

उग्रं वीरं महाविष्णुं ज्वलन्तं सर्वतोमुखं।
नृसिंहं भीषणं भद्रं मृत्योर्मृत्युं नमाम्यहम् ॥

உக்₃ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுக₂ம்।
ந்ருஸிம்ஹம் பீ₄ஷணம் ப₄த்₃ரம் ம்ருத்யோர் ம்ருத்யும் நமாம்யஹம்॥

[(ஸிம்ஹரூபத்தை உடைத்தாயிருப்பதால்) உக்ரனாயும், வீரனாயும், (மேலானவனாயும், ஸர்வவ்யாபியாயுமிருப்பதால்) மஹா விஷ்ணுவாயும், ஜ்வலிக்குமவனாயும், எல்லாவிடங்களிலும் முகத்தை உடையவனாயும், ந்ருஸிம்ஹரூபியாகவும், பயங்கரனாகவும், மங்களகரனாகவும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்பவனாகவுமுள்ள உன்னை நான் நமஸ்கரிக்கிறேன்.] என்று இந்த ந்ருஸிம்ஹாநுஷ்டுப் தோன்றிய க்ரமமும் அதன் பொருளும் அவ்யக்தோபநிஷத்தில் இப்படிச் சொல்லப்பட்டது. இதற்குப் பிறகு பத்மநாபனுக்கும் பத்மஸம்பவனுக்கும் நடந்த ஸம்பாஷணையும், பிரமனால் செய்யப்பட்ட ஸ்ருஷ்டியும் சொல்லப்படுகின்றன.

அத₂ ப₄க₃வாம்ஸ்தமப்₃ரவீத்। ப்ரஜாபதே ப்ரீதோஹம் கிம் தவேப்ஸிதம் தத₃ாஸ்யேதி। ஸ ஹோவாச। ப₄க₃வந் அவ்யக்தாது₃த்பந்நோऽஸ்மி வ்யக்தம் மம க்ருத்ஸ்நமிதி புராऽராவி த்ராऽவ்யக்தம் ப₄வாநித்யஜ்ஞாயி வ்யக்தம் மே கத₂யேதி। வ்யக்தம் வை விஶ்வம் சராசராத்மகம்। யத்₃ வ்யஜ்யதே தத்₃ வ்யக்தஸ்ய வ்யக்தத்வமிதி। ஸ ஹோவாச। ந ஶக்நோமி ஜக₃த் ஸ்ரஷ்டுமுபாயம் மே கத₂யேதி। தமுவாச புருஷ:। ப்ரஜாபதே ஶ்ருணு ஸ்ருஷ்டேருபாயம் பரமம்। யம் விதி₃த்வா ஸர்வம் ஜ்ஞாஸ்யஸி ஸர்வத்ர ஶக்ஷ்யஸி ஸர்வம் கரிஷ்யஸி। மய்யக்₃நௌ ஸ்வாத்மாநம் ஹவிர் த்₄யாயேத் தயைவாநுஷ்டுபர்ச்சா। த்₄யாந

யஜ்ஞோயமேவ | ஏதத்வை மஹோபநிஷத் | தேவாநாம் குஹ்யம் | ந ஹ வா ஏதஸ்ய ஸாம்நோ நர்ச்சா ந யஜுஷார்த்தோ நு வித்யதே || ய இதம் வேத ஸர்வாந் காமாநவாப்ய ஸர்வாந் லோகாந் ஜித்வா மாமேவாப்யுபைதி || ந ச புநராவர்த்ததே ய ஏவம் வேதேதி || — *அவ்யக்தோபநிஷத்.*

[அதன் பிறகு பகவான் ந்ருஸிம்ஹன் பிரமனைக் குறித்து "ப்ரஜாபதியே! உன்னிடம் நான் ப்ரீதியடைந்தேன்; உனக்கு வேண்டுவது யாது? அதைச் சொல்" என்று வினவினன். "பகவானே! நான் அவ்யக்தத்திலிருந்து உண்டானேனென்றும், வ்யக்தம் என்னால் செய்யப்பட வேண்டியதென்றும் முன் அசரீரியிடமிருந்து கேள்விப்பட்டேன். அதில் அவ்யக்தம் நீரே என்பதை அறிந்து கொண்டேன்; வ்யக்தத்தை எனக்கு அறிவிப்பீராக' என்று பிரமன் உரைத்தான். "வ்யக்தமென்பது அசைபவையும் அசையாதவையும் நிறைந்த உலகமே. வெளிப்படுத்தப்படுவதால் வ்யக்தமெனப்படுகிறது" என்று பகவான் பணித்தனன். "உலகை உண்டுபண்ண எனக்கு சக்தியில்லை. அதற்கு உபாயத்தை உரைப்பீராக" என்று பிரமன் கேட்டான். 'ப்ரஜாபதியே! ஸ்ருஷ்டிக்கு மேலான உபாயத்தைக் கேள்; இதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிவாய்; எல்லாவற்றையும் செய்யவல்லவனுவாய்; எல்லாவற்றையும் செய்வாய். என்னை அக்னியாகவும், உன் ஆத்மாவை அதில் ஹோமம் செய்யப்படும் ஹவிஸ்ஸாகவும் இந்த அநுஷ்டுப் மந்திரத்தினுல் தியானம் செய்வாயாக. இதுவே தியானயஜ்ஞமாகும். இதுவே தேவரஹஸ்யமான மஹோபனிஷத். இதன் பொருள் ருக்யஜுஸ்ஸாமவேதங்களினுலும் அறிய முடியாதது. இதை அறிபவன் தன் இஷ்டங்களையெல்லாம் அடைந்து, எல்லா உலகங்களையும் ஜயித்து என்னையே அடைகிருன். இதை அறிந்தவன் மறுபடியும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருவதில்லை" என்று பரமபுருஷன் உபதேசித்தான்.]

ப்ரஜாபதிஸ் தம் யஜ்ஞாய வஸீயாம்ஸமாத்மாநம் மந்யமாநோ மநோயஜ்ஞேநேஷ்டே | ஸப்ரணவயா தயைவர்ச்சா ஹவிர் த்யாத்வாத்மாநம் ஆத்மந்யக்நௌ ஜுஹுயாத் | ஸர்வமஜாநத் ஸர்வத்ராகத் ஸர்வமகரோத் ய ஏவம் வித்வாநிமம் த்யாநயஜ்ஞமநுதிஷ்டேத் ஸ ஸர்வஜ்ஞோநந்தஶக்திஸ் ஸர்வகர்த்தா பவதி ஸ ஸர்வாந் லோகாந் ஜித்வா பரம் ப்ரஹ்ம பரம் ப்ராப்நோதி ||
அவ்யக்தோபநிஷத்.

http://acharya.org

[பிரமன் அந்த யஜ்ஞத்தில் தன் ஆத்மாவை இனிய ஹவிஸ்ஸாக நினைத்து ஸர்வமேதயஜ்ஞத்தைச் செய்தான். ப்ரணவத்துடன் கூடிய அந்த ருக்கினால் தன்னை ஹவிஸ்ஸாக நினைத்துப் பரமாத்மாவாகிற அக்னியில் ஹோமம் செய்தான். எல்லாவற்றையுமறிந்தான்; எல்லாவற்றிலும் சக்திபெற்றான்; எல்லாவற்றையும் செய்தான். எவன் இதை அறிந்து இந்த ஸ்ரீமானயஜ்ஞத்தை அநுஷ்டிக்கிறானோ, அவன் எல்லாவற்றையும் அறிபவனாகவும், அளவற்ற சக்தியை உடையவனாகவும் எல்லாவற்றையும் செய்பவனாகவும் ஆகிறான். அவன் எல்லா உலகத்தையும் ஜயித்து, மேலான பரப்ரஹ்மத்தை அடைகிறான்.]

அத2 ப்ரஜாபதிர் லோகாந் ஸிஸ்ருக்ஷமாணஸ் தஸ்யா ஏவ வித்3யாயா யாநி த்ரிம்ஶத்3க்ஷராணி தேப்4யஸ் த்ரீந் லோகாந்। அத2 த்3வே த்3வே அக்ஷரே தாப்4யாமுப4யதோ த3த4ார। தஸ்யா ஏவர்ச்சோ த்3வாத்ரிம்ஶத்3பி4ரேவாக்ஷரைர் தே3வாந் நிர்மமே। ஸர்வைரேவ ஸ இந்த்3ரோऽப4வத்। தஸ்மாதி3ந்த்3ரோ தே3வாநாமதி4கோऽப4வத்। ய ஏவம் வேத3 ஸமாநாநாமதி4கோ ப4வேத்। தஸ்யா ஏகாத3ஶபி4: பதை3: ஏகாத3ஶருத்3ராந் நிர்மமே। தஸ்யா ஏகாத3ஶபி4: ஏகாத3ஶாதி3த்யாந் நிர்மமே। ஸர்வைரேவ ஸ விஷ்ணுரப4வத்। தஸ்மாத் விஷ்ணுராதி3த்யாநாமதி4கோऽப4வத்3ய ஏவம் வேத3 ஸமாநாநாமதி4கோ ப4வேத்। ஸ சதுர்ப்பி4ச்சதுர்ப்பி4ரக்ஷரைரஷ்டௌ வஸூநஜநயத்।

தஸ்யா ஆத்3யைர் த்3வாத3ஶபி4ரக்ஷரைர் ப்3ராஹ்மணமஜநயத்। த3ஶபி4ர் த3ஶபி4ர் விட்க்ஷத்ரே। தஸ்மாத்3 ப்3ராஹ்மணோ முக்2யோ ப4வதி। ஏவம் தந்முக்2யோ ப4வதி ய ஏவம் வேத3। தூ3ஷ்ணீம் ஶூத்3ரமஜநயத்। தஸ்மாச்சூ2த்3ரோ நிர்வித்3யோ ப4வத்।

ந வா இத3ம் தி3வாநக்தமாஸீத3வ்யாவ்ருதம்। ஸ ப்ரஜாபதிராநுஷ்டுப4ாப்4யாம் அர்த்த4ர்ச்சாப்4யாம் அஹோராத்ராவகல்பயத்।

ததோ வ்யைச்ச2த்। வ்யேவாஸ்மா இச்ச2தி। அதோ தம ஏவாऽபஹதே। ருக்3வேத3மஸ்யா ஆத்3யாத் பாத3ாத3கல்பயத்। யஜுர் த்3விதீயாத் ஸாம த்ருதீயாத்। அத2ர்வாங்கிரஸஶ் சதுர்த2ாத்। யத3ஷ்டாக்ஷரபத3ா தேந கா3யத்ரீ। யதே3காத3ஶபத3ா தேந

த்ரிஷ்டுப் | யச்சதுஷ்பதா தேந ஜகதீ | யத் த்வாத்ரிம்ஶதக்ஷரா தேநாநுஷ்டுப் ஸ வா ஏஷ ஸர்வாணி சந்தாம்ஸி | ய இமாம் ஸர்வாணி சந்தாம்ஸி வேத | ஸர்வம் ஜகநாநுஷ்டுப ஏவோத்பந்நம் | அநுஷ்டுபி ப்ரதிஷ்டிதம் | ப்ரதிஷ்டதி யச்சைவம் வேத ||

அஸ்யாக்தோபனிஷத்.

[பிறகு, பிரமன் லோகங்களை ஸ்ருஷ்டிபண்ண விரும்பியவனாய், அந்த அநுஷ்டுப் வித்யையிலுள்ள முப்பது அக்ஷரங்களிலிருந்து மூவுலகங்களையும் படைத்தான். மற்ற இரண்டு அக்ஷரங்களாலும் அவைகளைத் தாங்கினான். அந்த ருக்கிலுள்ள முப்பத்திரண்டு அக்ஷரங்களிலிருந்து தேவர்களை உண்டாக்கினான். எல்லா அக்ஷரங்களாலும் இந்திரன் உண்டானான். ஆகையால் இந்திரன் தேவர்களுள் மேலானவனானான். எவன் இம்மாதிரி அறிகிறானோ அவன் தன்னை ஒத்தவர்களைக் காட்டிலும் பெருமையை அடைகிறான். அந்த மந்திரத்தின் பதினொரு பதங்களிலிருந்து ஏகாதச ருத்ரர்களை ஸ்ருஷ்டித்தான். அதினுடைய பதினொரு பதங்களிலிருந்து (விஷ்ணுவைத் தவிர்த்த) பதினொரு ஆதித்யர்களையும் உண்டாக்கினான். எல்லாப் பதங்களாலும் விஷ்ணுவெனனும் ஆதித்யன் உண்டானான். ஆகையால் விஷ்ணு ஆதித்யர்களுள் சிறந்தவனானான். எவன் இம்மாதிரி அறிகிறானோ அவன் தனக்கு ஸமானமானவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனாகிறான். அப்பிரமன் அம்மந்திரத்தின் நான்கு நான்கு அக்ஷரங்களிலிருந்து எட்டு வஸுக்களையும் உண்டாக்கினான்.

அம்மந்திரத்தின் முதல் பனிரண்டு அக்ஷரங்களினின்றும் ப்ராஹ்மணனை உண்டாக்கினான். அடுத்த பத்து அக்ஷரங்களால் வைச்யர்களையும், அடுத்த பத்து அக்ஷரங்களால் க்ஷத்ரியர்களையும் உண்டு பண்ணினான். ஆகையால் ப்ராஹ்மணன் முக்கியனாக ஆகிறான். இம்மாதிரி அறிபவன் அவர்களுள் முதல்வனாக ஆகிறான். சூத்ரனை மௌனமாக ஸ்ருஷ்டித்தான். ஆகையால் சூத்ரன் (ப்ரஹ்ம) வித்யையில் அதிகாரமற்றவனானான்.

அப்பொழுதும் இரவு பகல் என்னும் பிரிவில்லாமலிருந்தது. அப்பிரமன் இந்த அநுஷ்டுப் மந்த்ரத்தின் இரண்டு அர்த்தங்களிலிருந்தும் இரவையும் பகலையும் கல்பித்தான்.

பிறகு விசேஷமான ஸங்கல்பமொன்றைச் செய்தான். அதனால் அஞ்ஞானமாகிற இருள் நீங்கிற்று. இந்த மந்திரத்தின் முதல்

http://acharya.org

பாதத்திலிருந்து ருக்வேதத்தைப் படைத்தான். யஜுர் வேதத்தை இரண்டாவது பாதத்திலிருந்தும், ஸாமவேதத்தை மூன்றாவது பாதத்திலிருந்தும் அதர்வாங்கிரஸ்ஸுக்களை நான்காவது பாதத்திலிருந்தும் உண்டாக்கினான். எட்டு அக்ஷரங்களைப் பாதமாகக் கொண்டதாக காயத்ரியைப் படைத்தான். பதினொரு அக்ஷரங்களைக் கொண்டதாக த்ரிஷ்டுப் என்னும் சந்தஸ்ஸைப் படைத்தான். நான்கு அக்ஷரங்களைக் கொண்டதாக ஜகதீ என்னும் சந்தஸ்ஸை ஸ்ருஷ்டித்தான். முப்பத்திரண்டு அக்ஷரங்களையும் கொண்டதாக அநுஷ்டுப்பைப் படைத்தான். இந்த அநுஷ்டுப்பில் எல்லாச் சந்தஸ்ஸுக்களும் அடங்கியுள்ளன. இதை அறிபவன் எல்லா வேதங்களையும் அறிகிறான். எல்லா உலகங்களும் அநுஷ்டுப்பிலிருந்து உண்டாயிற்று. அநுஷ்டுப்பிலேயே நிலைநிற்கிறது. இதை அறிபவனும் நிலை நிற்கிறான்.]

அத$_2$ யதா$_2$ ப்ரஜாஸ் ஸ்ருஷ்டா ந ஜாயந்தே। ப்ரஜாபதி: கத$_2$ம் ந்விமா ப்ரஜாஸ் ஸ்ருஜேயமிதி சிந்தயந் உக்$_3$ரமிதி இமாம் ருசம் கா$_3$தும் உபக்ராமத்। தத: ப்ரத$_2$மாத் பாதா$_3$த் உக்$_3$ரரூபோ தே$_3$வ: ப்ராது$_3$ரபூ$_4$த்। ஏகச்யாம: புரதோ ரக்த: பிநாகீ ஸ்த்ரீ பும்ஸரூப:। தம் விப$_4$ஜ்ய ஸ்த்ரீஷு தஸ்ய ஸ்த்ரீரூபம் பும்ஸி ச பும்ரூபம் வ்யத$_4$ாத்। ஸ உப$_4$ாப்$_4$யாம் ஆசாப்$_4$யாம் ஸர்வமாதிஷ்ட$_2$:। தத: ப்ரஜா: ப்ரஜாயந்தே। ய ஏவம் வேத$_3$ ப்ரஜாபதே: ஸோऽபி த்ர்யம்ப$_3$க இமாம் ருசமுத்கா$_3$யந் உத்$_3$க்$_3$ரதி$_2$ தஜடாகலாப: ப்ரத்யக் ஜ்யோதிஷி ஆத்மந்யேவ ரந்தாரமிதி।

அவ்யக்தோபநிஷத்.

[அதன் பிறகு ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் விருத்தியடையவில்லை. பிரமன் எப்படி இந்தப் பிரஜைகளைப் பெருகச் செய்வது என்று சிந்தித்துக்கொண்டு, 'உக்ரம்' என்று தொடங்கும் இந்த மந்திரத்தைப் பாட ஆரம்பித்தான். அதில் முதலாவது பாதத்திலிருந்து உக்ரரூபனான தேவன் உண்டானான். பின் பக்கம் கறுத்தவனாகவும், முன்புறம் சிவந்தவனாகவும், பிநாகம் எனப்படும் வில்லை தரித்தவனாகவும் ஆண், பெண் ஆகிய இரு உருவங்களையும் கொண்டவனாகவுமுள்ள ருத்ரனே அவன். அவனுடைய ரூபத்தைப் பிரித்து ஸ்த்ரீகளிடத்தில் அவனுடைய ஸ்த்ரீரூபத்தையும், ஆண்களிடத்தில் ஆணுருவத்தையும் ஏற்படுத்தினான். அவன் இரண்டு பக்கங்களிலும் அவையெல்லாவற்றையும் தாண்டினான். அதன் பின் ப்ரஜைகள்

http://acharya.org

விருத்தியடைந்தார்கள். எவன் இந்த ருத்ரஸ்ருஷ்டியை அறிகிறானோ, அவனும், (ருத்ரனைப்போல்) (ஊனக்கண்கள் இரண்டு, ஞானக்கண் ஆகிய) முக்கண்களை உடையவனாய், மேல் தூக்கிக் கட்டப்பட்ட சடைமுடியை உடையவனாய், பிரமனால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட இந்த ருக்கைப் பாடிக்கொண்டு, ஸ்வயம் ப்ரகாசனான பரமாத்மாவினிடத்தில் ரமிப்பான்.]

க்ஷீரோத$_3$ார்ணவஶாயினம் ந்ருகேஸரிவிக்$_3$ரஹம் யோகி$_3$த்$_4$யேயம் பரம்பத$_3$ம் ஸாம ஜாநீயாத்। யோ ஜாநீதே ஸோऽம்ருதத்வஞ்ச க$_3$ச்சதி।
—ந்ரு தா

[பாற்கடலில் பள்ளிகொண்டவனும், நரசிங்கவுருவை உடையவனும், யோகிகளால் தியானிக்கத் தக்கவனும், பரமப்ராப்யமாயிருப்பவனும், ஸாமவேதப்ரதிபாத்யனுமான பரமபுருஷனை அறிய வேண்டும். (அப்படி) அறிபவன் மோக்ஷமடைகிறான்.]

இதன் பிறகு ந்ருஸிம்ஹதாபிந்யுபநிஷத்தில் பிரமன் தேவர்களுக்கு 'உக்ரம் வீரம்' என்னும் இந்த மந்திரத்தின் பொருளை விரிவாக உபதேசித்த விருத்தாந்தம் விவரிக்கப்படுகிறது.

தே$_3$வா ஹ வை ப்ரஜாபதிமப்$_3$ருவந்। அத$_2$ கஸ்மாது$_3$ச்யதே உக்$_3$ரமிதி। ஸ ஹோவாச ப்ரஜாபதி:। யஸ்மாத் ஸ்வமஹிம்நா ஸர்வாந் லோகாந் ஸர்வாந் தே$_3$வாந் ஸர்வாநாத்மந: ஸர்வாணி பூ$_4$தாநி உத்$_3$க்$_3$ருஹ்ணாதி அஜஸ்ரம் ஸ்ருஜதி விஸ்ருஜதி வாஸயதி உத்$_3$க்$_3$ருஹ்யத உத்$_3$க்$_3$ருஹ்யதே। ஸ்துஹி ஶ்ருதம் க$_3$ர்த்தஸத$_3$ம் யுவாநம் ம்ருக$_3$ம் ந பீ$_4$மமுபஹத்நுமுக்$_3$ரம் ம்ருட$_3$ா ஜரித்ரே ஸிம்ஹஸ்தவாநோ அந்யஸ்தே அஸ்மிந்நிவ ப$_3$ந்து$_4$ஸேநா: தஸ்மாது$_3$ச்யத உக்$_3$ரமிதி॥

[தேவர்கள் பிரமனிடம் "எதனால் அந்த பகவான் 'உக்ரம்' என்று சொல்லப்படுகிறான்?" என்று கேட்டனர். "அந்த பகவான் தன்னுடைய மகிமையினால் எல்லா உலகங்களையும் எல்லா தேவர்களையும், எல்லா ஆத்மாக்களையும், எல்லா பூதங்களையும் தன்னுள் இழுத்துக் கொள்கிறான்: இடைவிடாமல் ஸ்ருஷ்டிக்கிறான்; விருத்தியடையச் செய்கிறான்; தன்னுள் வஸிக்கச் செய்கிறான். தன்னையே அடையச் செய்கிறான். (ஓ தேவர்களே!) பல வேதவாக்யங்களால் கேட்கப்படுமவனும், ஹ்ருதயகுஹையில் பள்ளிகொண்டிருப்பவனும், நித்ய

http://acharya.org

மௌனவனத்தை உடையவனும், ஸிம்ஹரூபியாயிருந்தபோதிலும், (அடியார்களுக்கு) பயத்தைத் அளிக்காதவனும், (விரோதிகளை) அழிப்பதால் உக்ரனாயிருப்பவனுமான அப்பெருமானை 'ஓ! ஸிம்ஹ ரூபியான பகவானே!! (ஹிரண்யஸம்ஹாரம் முதலிய) உன்னுடைய சேஷ்டிதங்களை நான் பாடும்போது என் மனத்தில் வேறொரு விஷயமும் தோன்றாதிருக்கட்டும். உன்னுடைய பெருத்த சேனைகள் உன் திருநாமஸங்கீர்த்தனத்திற்கு விரோதியாயிருப்பவற்றை விரட்டட்டும் என்று பாடுங்கள். இப்படிப்பட்ட பெருமையை உடைத்தா யிருப்பதால் 'உக்ரம்' என்று சொல்லப்படுகிறான்" என்று பிரமன் பதிலுரைத்தான்.]

அத2 கஸ்மாது3ச்யதே வீரமிதி। யஸ்மாத் ஸ்வமஹிம்நா ஸர்வாந் லோகாந் ஸர்வாந் தே3வாந் ஸர்வாநாத்மநஸ் ஸர்வாணி பூ4தாநி விரமதி விராமயதி அஜஸ்ரம் ஸ்ருஜதி விஸ்ருஜதி வாஸயதி। யதோ வீர: கர்மண்யஸ் ஸு"த3க்ஷோ யுக்தக்3ராவா ஜாயதே தே3வகாம:। தஸ்மாது3ச்யதே வீரமிதி॥

["வீரன் என்று ஏன் சொல்லப்படுகிறான்" என்று தேவர்கள் கேட்டார்கள். "தன் மகிமையினால் எல்லா உலகங்களையும், தேவர்களையும், ஆத்மாக்களையும், பூதங்களையும் கண்டு மிகவும் ரமிக்கிறான்; (அவைகளையும்) ரமிக்கச் செய்கிறான்; இடைவிடாமல் ஸ்ருஷ்டிக்கிறான்; விருத்தியடையச் செய்கிறான்; வசிக்கச் செய்கிறான். வீரனாகவும், (விரோதிகளான அஸுரரை அழிக்கும்) காரியத்தில் மிகவும் ஸமர்த்தனாகவும், மலைபோன்ற திருவுருவை உடையவனாகவுமுள்ள எம்பெருமான், தேவர்களுடைய விருப்பத்திற்கிணங்கி இவ்வுலகில் பிறக்கிறான். ஆகையால் வீரனெனப்படுகிறான்" என்றான் பிரமன்.]

அத2 கஸ்மாது3ச்யதே மஹாவிஷ்ணுமிதி। யஸ்மாத் ஸ்வமஹிம்நா ஸர்வாந் லோகாந் ஸர்வாந் தே3வாந் ஸர்வாநாத்மந: ஸர்வாணி பூ4தாநி வ்யாப்நோதி வ்யாபயதி ஸ்நேஹோ யதா2 பலல பிண்டம் ஶாந்த மூலம் ஓதம் ப்ரோதம் அநுவ்யாப்ய வ்யதிஷக்தோ வ்யாப்யதே வ்யாபயதே। யஸ்மாந்ந ஜாத: பரோ அந்யோ அஸ்தி ய ஆவிவேஶ புவநாநி விச்வா। ப்ரஜாபதி: ப்ரஜயா ஸம்விதா3நஸ் த்ரீணி ஜ்யோதீம்ஷி ஸசதே ஷோட3ஶீ தஸ்மாது3ச்யதே மஹாவிஷ்ணுமிதி॥

http://acharya.org

[''மஹாவிஷ்ணுவென்று ஏன் சொல்லப்படுகிறான்'' என்று தேவர்கள் கேட்டார்கள். ''தன்னுடைய பெருமையினால் அப்பெருமான் எல்லா லோகங்களையும், தேவர்களையும், ஆத்மாக்களையும், பூதங்களையும் வியாபிக்கிறான்; வியாபிக்கச் செய்கிறான். மரத்தை பிண்டத்தில் எண்ணெயானது கீழும் மேலும் உள்ளும் புறமும் வியாபித்தும், வியாபிக்கச் செய்தும் விளங்குவது போல் இவனும் விளங்குகிறான். எவனிடமிருந்து பிறக்காதவன் ஒருவனும் இல்லையோ, எவனொருவன் எல்லாவுலகங்களையும் நுழைந்திருக்கின்றானோ, அந்த பகவான் தன்னுடைய ப்ரஜையான பிரமனை சரீரமாகக் கொண்டு இவற்றை வியாபித்து, (ஸூர்யன், சந்திரன், அக்னி என்னும்) மூன்று ஜ்யோதிஸ்ஸுக்களையும், (பஞ்ச பூதங்கள், பதினொரு இந்திரியங்கள் ஆகிய) பதினாறு தத்துவங்களையும் படைத்தான். ஆகையால் மஹாவிஷ்ணு வெனப்படுகிறான்'' என்று பிரமன் பதிலுரைத்தான்.]

அதூ2 கஸ்மாதுச்யதே ஜ்வலந்தமிதி । யஸ்மாத் ஸ்வமஹிம்நா ஸர்வாந் லோகாந் ஸர்வாந் தேவாந் ஸர்வாநாத்மநஸ் ஸர்வாணி பூதாநி ஸ்வதேஜஸா ஜ்வலதி ஜ்வாலயதி ஜ்வால்யதே ஜ்வாலயதே । ஸவிதா ப்ரஸவிதா தீப்தோ தீபயந் தீப்யமாந: । ஜ்வலந் ஜ்வலிதா தபந் விதபந்ஸ்தபந் । ரோசநோ ரோசமாந: சோபந: சோபமாந: கல்யாண: । தஸ்மாதுச்யதே ஜ்வலந்தமிதி ॥

[''ஏன் ஜ்வலிக்குமவனெனச் சொல்லப்படுகிறான்?'' என்று அமரர்கள் வினவினார்கள். ''அந்த ஸர்வேச்வரன் தன் மகிமையினால் எல்லா உலகங்களையும், தேவர்களையும், ஆத்மாக்களையும், பூதங்களையும் காட்டிலும் ஒளியினால் விஞ்சியிருக்கிறான். அவைகளையும் ஒளிவிடச் செய்கிறான். அவைகளால் பிரகாசப் படுத்தப்படுகிறான். எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிப்பவனாகவும், விருத்தியடையச் செய்பவனாகவும், ப்ரகாசப்படுத்தப்படுபவனாகவும், பிரகாசப்படுத்துபவனாகவும், பிரகாசிப்பவனாகவும் விளங்குகிறான். ஜ்வலிப்பவனாகவும், ஜ்வலிக்கச் செய்பவனாகவும், தபிப்பவனாகவும், (பாபங்களைப்) போக்கடிப்பவனாகவும், சத்ருக்களை அழியச் செய்பவனாகவும் இருக்கிறான். ஆநந்தத்தை அனுபவிப்பவனாகவும், ஆநந்திப்பவனாகவும், அழகடையச் செய்பவனாகவும், அழகியவனாகவும் ஸகலமங்களாகாரனாகவும் விளங்குகிறான். ஆகையால் ஜ்வலிப்பவன் எனப்படுகிறான்'' என்றான் பிரமதேவன்.]

http://acharya.org

அத2 கஸ்மாது3ச்யதே ஸர்வதோமுக2மிதி। யஸ்மாத் ஸ்வ மஹிம்நா ஸர்வாந் லோகாந் ஸர்வாந் தே3வாந் ஸர்வநாத்மநஸ் ஸர்வாணி பூ4தாநி ஸ்வயமநிந்த்3ரியோऽபி ஸர்வத: பச்யதி ஸர்வத: ச்ருணோதி ஸர்வதோ க3ச்சதி ஸர்வத ஆத3த்தே ஸர்வக3ஸ் ஸர்வக3தஸ்திஷ்ட2தி। ஏக: புரஸ்தாத் ய இத3ம் ப3பூ4வ யதோ ப3பூ4வ பு4வநஸ்ய கோ3பா: யமப்4யேதி பு4வநம் ஸாம்பராயே நமாமி தம் அஹம் ஸர்வதோமுக2ம் தஸ்மாது3ச்யதே ஸர்வதோமுக2மிதி॥

[''ஸர்வதோமுகன் என்று ஏன் அந்த பகவான் சொல்லப்படுகிறான்'' என்று தேவர்கள் கேட்டார்கள். ''இந்தப் பரமபுருஷன், தான் (ப்ராக்ருதமான) இந்த்ரியமற்றவனாயிருந்தும், தன் மகிமையினால் எல்லா உலகங்களையும், தேவர்களையும், ஜீவர்களையும், பூதங்களையும், எல்லாவிடத்திலும் பார்க்கிறான்; எல்லாவிடத்திலும் கேட்கிறான்; எல்லாவிடத்திலும் அடைகிறான்; எல்லாவிடத்திலும் ஸ்வீகரித்துக் கொள்ளுகிறான்; தன் ஸ்வரூபத்தாலும், ஜ்ஞாநசக்த்யாதிகுணங்களாலும் எங்கும் சென்று நிற்கிறான். ப்ரளயகாலத்தில் ஒருவனாயிருக்கும் எவனொருவன் இவையெல்லாமாய் விளங்கினானோ, எவனிடமிருந்து இவையெல்லாம் உண்டாயினவோ, எவன் இவ்வுலகையெல்லாம் ரக்ஷிக்கிறானோ, எவனை இவ்வுலகம் ப்ரளயகாலத்தில் அடைகின்றதோ, எல்லாவிடத்திலும் முகத்தையுடைய அந்த ஸர்வேச்வரனை நான் வணங்குகிறேன். இக்காரணங்களாலே அவன் ஸர்வதோமுகன் எனப்படுகிறான்'' என்று நான்முகன் நவின்றனன்.]

அத2 கஸ்மாது3ச்யதே ந்ருஸிம்ஹமிதி। யஸ்மாத் ஸர்வேஷாம் பூ4தாநாம் வீர்யதம: ச்ரேஷ்ட2தமச்ச ஸிம்ஹோ வீர்யதம: ச்ரேஷ்ட2தமச்ச புருஷஸ் தஸ்மாந் ந்ருஸிம்ஹ ஆஸீத் பரமேச்வர:। ஜக3த்3தி4தம் வா ஏதத்3ரூபம் யத3க்ஷரம் ப4வதி। ப்ரதத்3 விஷ்ணுஸ் தபதே வீர்யாய। ம்ருகோ3 ந பீ4ம: குசரோ கி3ரிஷ்டா2 (க3ரிஷ்ட4):। யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷ்வதி4க்ஷயந்தி பு4வநாநி விச்வா। தஸ்மாது3ச்யதே ந்ருஸிம்ஹமிதி॥

[''ஏன் ந்ருஸிம்ஹனென்று சொல்லப்படுகிறான்'' என்று தேவர்கள் கேட்டார்கள். ''எல்லா ஜந்துக்களிலும் வீர்யம் மிக்கதாயும், சிறந்ததாயுமுள்ளது ஸிம்ஹம்; புருஷன் எல்லாச் சேதனர்களிலும் வீர்யம் மிக்கவனாயும், சிறந்தவனாயும் விளங்குகிறான். ஆகையால் ஸர்வேச்

http://acharya.org

வரன் இவ்விரண்டு உருவையும் கொண்ட ந்ருஸிம்ஹனானான். அறிவற்றதான இந்த ரூபம் லோகக்ஷேமத்தின் பொருட்டு பகவானால் பரிக்ரஹிக்கப்பட்டது. ஸர்வவ்யாபியான அந்த பகவான் தன் வீர்யத்தினால் (ஹிரண்யன் முதலிய சத்ருக்களை) மிகவும் வாட்டுகிறான். ஸிம்ஹரூபியாயிருந்தபோதிலும், (தன் அடியார்களுக்கு) அழகியவனாகவும், (அஹோபிலம் முதலிய) க்ஷேத்ரங்களில் ஸஞ்சரிப்பவனாகவும் (மிகப்பெரியவனாகவும்) காட்சியளிக்கிறான். (திரிவிக்ரமாவதாரமெடுத்த காலத்தில்) அந்த பகவானுடைய மூன்று பெரிய அடிவைப்புக்களில் இவ்வுலகமெல்லாம் அடங்கிக் கிடந்தன. இக்காரணங்களால் அந்தப் புருஷோத்தமன் ந்ருஸிம்ஹன் எனப் படுகிறான்' என்று பிரமன் பதிலுரைத்தான்.]

அத2 கஸ்மாது3ச்யதே பீ4ஷணமிதி | யஸ்மாத்3 பீ4ஷணம் யஸ்ய ரூபம் த்3ருஷ்ட்வா ஸர்வே லோகாஸ் ஸர்வே தே3வாஸ் ஸர்வாணி பூ4தாநி பீ4த்யா பலாயந்தே | ஸ்வயம் யத: குதச்சந பி3பே4தி | பீ4ஷாऽஸ்மாத்3வாத: பவதே | பீ4ஷோதே3தி ஸூர்ய: | பீ4ஷாऽஸ்மாத3க்3நிச்சேந்த்3ரச்ச | ம்ருத்யுர் தா4வதி பஞ்சம இதி | தஸ்மாது3ச்யதே பீ4ஷணமிதி |

[''ஏன் பீஷணன் (பயங்கரன்) என்று சொல்லப்படுகிறான்'' என்று தேவர்கள் வினவினர்கள். ''அப்பெருமானுடைய பயங்கரமான உருவத்தைக்கண்டு எல்லா உலகங்களும், எல்லா தேவர்களும், எல்லா பூதங்களும் பயத்தினால் ஓடுகிறார்கள். அந்த ஸர்வேச்வரனே வெனில் எதனிடத்திலும் பயப்படுவதில்லை. இவனிடம் பயத்தினால் காற்று அடிக்கிறது; ஸூர்யன் உதிக்கிறான்; அக்நியும், இந்திரனும், ஐந்தாமவனான யமனும் (அவனிடத்திலுள்ள பயத்தாலேயே) தங்கள் காரியங்களைச் செய்கிறார்கள். அதனாலேயே பீஷணன் என்று எம்பிரான் சொல்லப்படுகிறான்'' என்று பிரமதேவன் பதிலுரைத்தனன்.]

அத2 கஸ்மாது3ச்யதே ப4த்3ரமிதி | யஸ்மாத் ஸ்வயம் ப4த்3ரோ பூ4த்வா ஸர்வதா3 ப4த்3ரம் த3தா3தி | ரோசநோ ரோசமாந: ஶோப4ந: ஶோப4மாந: கல்யாண: | ப4த்3ரம் கர்ணேபி4: ச்ருணுயாம தே3வா: | ப4த்3ரம் பச்யேமாக்ஷபி4ர் யஜத்ரா: | ஸ்தி2ரைரங்கை3ஸ் துஷ்டுவாம்ஸஸ் தநூபி4: | வ்யசேம (பச்யேம) தே3வஹிதம் யதா3யு: | தஸ்மாது3ச்யதே ப4த்3ரமிதி |

http://acharya.org

[“பத்ரன் என்று ஏன் சொல்லப்படுகிறான்” என்று அமரர்கள் கேட்டனர். “இந்தப் புருஷோத்தமன் தான் மங்களாகாரனாயிருப்பதோடன்றியில், எல்லாருக்கும் எப்போதும் மங்களத்தைத் தருகிறான். பிரகாசிப்பவனாகவும், பிரகாசிக்கச் செய்பவனாகவும், அழகியவனாகவும், அழகாகச் செய்பவனாகவும், மங்களஸ்வரூபனாகவும் விளங்குகிறான். பிரகாசிப்பவர்களான நாங்கள் ‘பத்ரன்’ எனப்படும் பெருமானை (வேதவாக்கியங்களின் மூலம்) காதுகளால் கேட்கக்கடவோம். அவனைப் பூஜிப்பதிலேயே ஈடுபட்ட நாங்கள் எல்லா இந்திரியங்களாலும் பத்ரனெனப்படும் அப்பெருமானை அறியக்கடவோம். (அவனைத் துதிப்பதில்) களைப்பற்றவையான அங்கங்களோடும், தேஹங்களோடும் கூடியவர்களாய், அவனை எப்போதும் துதிப்பவர்களாய், பரஞ்சோதியான அப்பரவாஸுதேவனால் விதிக்கப்பட்ட ஆயுட்காலம் முழுவதும் கழிக்கக்கடவோம். (அவனைக் காணக்கடவோம்.) இக்காரணங்களால் அவன் பத்ரனெனப்படுகிறான்” என்று நான்முகன் நவின்றனன்.]

அத2 கஸ்மாது3ச்யதே ம்ருத்யும்ருத்யுமிதி। யஸ்மாத் ஸ்வமஹிம்நா ஸ்வப4க்தாநாம் ஸ்ம்ருத ஏவ ம்ருத்யுமபம்ருத்யுஞ்சமாரயதி। ய ஆத்மதா3 ப3லதா3 யஸ்ய விச்வ உபாஸதே ப்ரஶிஷம் யஸ்ய தே3வா:। யஸ்ய சா2யாம்ருதம் யஸ்ய ம்ருத்யு: அஸ்மை தே3வாய ஹவிஷா விதே4ம। தஸ்மாது3ச்யதே ம்ருத்யும்ருத்யுமிதி॥

[“அப்பரமபுருஷன், ம்ருத்யுவுக்கும் ம்ருத்யுவென்று ஏன் சொல்லப்படுகிறான்?” என்று கேட்டார்கள். அந்த ந்ருஸிம்ஹன் தன்னுடைய பக்தர்களால் நினைக்கப்பட்டவுடன், தன்னுடைய மஹிமையினால், யமனையும், யமகிங்கரர்களையும் அணுகவொட்டாமல் செய்கிறான். அவன் (தன்னடியார்களுக்குத்) தன்னையும் கொடுத்துத் (தன்னை அநுபவிக்கத்தகுந்த) பலத்தையும் கொடுப்பவன். அவனை நல்லோர்களெல்லாரும் உபாஸிக்கிறார்கள். இந்த்ராதி தேவர்கள் அவனுடைய அருளை எதிர்பார்க்கிறார்கள். மோக்ஷஸுகமானது நிழலைப்போல் அந்த ஸர்வேச்வரனை விட்டுப்பிரியாமல் அவன் வசத்திலிருக்கிறது. யமனும் அவனுக்கு வசப்பட்டிருக்கிறான். அப்படிப்பட்ட அந்தப் புருஷோத்தமனுக்கு (நம்முடைய ஆத்மாவாகிய) ஹவிஸ்ஸை அளிப்போமாக. இக்காரணங்களால் அவன் ம்ருத்யும்ருத்யுவெனப்படுகிறான்.” என்று சதுர்முகன் உரைத்தான்.]

http://acharya.org

அத$_2$ கஸ்மாது$_3$ச்யதே நமாமீதி। யஸ்மாத் யம் ஸர்வே தே$_3$வா நமந்தி முமுக்ஷவோ ப்$_3$ரஹ்மவாதி$_3$நச்ச। ப்ரநூநம் ப்$_3$ரஹ்மணஸ்பதிர் மந்த்ரம் வத$_3$த்யுக்த்$_2$யம்| யஸ்மிந்நிந்த$_3$ரோ வருணோ மித்ரோ அர்யமா தே$_3$வா ஓகாம்ஸி சக்ரிரே। தஸ்மாது$_3$ச்யதே நமாமீதி ||

[''நமாமி (நமஸ்கரிக்கிறேன்) என்று ஏன் சொல்லப்படுகிறது'' என்று தேவதைகள் ப்ரச்நம் பண்ணினார்கள். ''அந்தப் பரம புருஷனை எல்லா தேவர்களும், முமுக்ஷுக்களும், ப்ரஹ்ம வாதிகளும் நமஸ்கரிக்கிறார்கள். வேதமோதுபவனான நானும் உக்த்யம் என்னும் மந்திரத்தை (அவனைக்குறித்துச்) சொல்லுகிறேன். அவனிடத்தில் இந்திரனும், வருணனும் மித்ரனும் அர்யமனும் மற்ற தேவர்களும் வசிக்கிறார்கள். ஆகையாலேயே அவனைக்குறித்து 'வணங்குகிறேன்' என்னும் சொல் சொல்லப்படுகிறது'' என்று நான்முகன் நவின்றான்.]

அத$_2$ கஸ்மாது$_3$ச்யதேऽஹமிதி। அஹமஸ்மி ப்ரத$_2$மஜா ருதஸ்ய। பூர்வம் தே$_3$வேப்$_4$யோ அம்ருதஸ்ய நாபி$_4$:। யோ மா த$_3$தா$_3$தி ஸ இ தே$_3$வமாவா:। அஹமந்நமந்நமத$_3$ந்தமத்$_3$மி। அஹம் விச்வம் பு$_4$வநமப்$_4$யப$_4$வாம்। ஸுவர்ணஜ்யோதீ:। ய ஏவம் வேதே$_3$தி மஹோபநிஷத் ||

[''அஹம் (நான்) என்று (ஸ்தோதாவாகிற உம்மைக்குறித்து) ஏன் சொல்லப்படுகிறது?'' என்று தேவர்கள் கேட்டனர். ''விகார மற்றவனான எம்பெருமானுக்கு. எல்லா தேவர்களுக்கும் முன்னால் பிறந்தவன் நான். மோக்ஷலோகத்திற்கும் (பரம்பரயா) ஸாதனமாயிருக்கிறேன். எவன் எனக்கு ஹவிஸ்ஸைத் தருகிறானோ, அவன் தேவனாகிறான். நான் பரமாத்மாவுக்கு போக்யபூதமான அன்னமாயிருக்கிறேன். அன்னமாகிற என்னை அனுபவிக்கும் பரமபுருஷனை அநுபவிக்கிறேன். (அதனால்) நான் எல்லா உலகத்தையும் ஜயித்து விளங்குகிறேன். எவன் இதை அறிகிறானோ அவன் ஸுவர்ணம் போல் ஒளிபெறுகிறான். இது மஹோபனிஷத்.]

இனி, ந்ருஸிம்ஹமந்திரத்தின் பிரபாவத்தை விளக்குவதும், அவ்யக்தோபனிஷத்தில் படிக்கப்பட்டிருப்பதுமான விருத்தாந்தம் விவரிக்கப்படுகிறது.

http://acharya.org

இந்த்3ரோ வை கில தே3வாநாமாநுஜாவர ஆஸீத்। தம் ப்ரஜாபதிரப்3ரவீத்। க3ச்ச2 தே3வாநாமதி4பதிர் ப4வேதி। ஸோऽக3ச்ச2த்தம் தே3வா ஊசு:। அநுஜாவரோஸி த்வமஸ்மாகம் குதஸ்தவாதி4பத்யமிதி। தம் ப்ரஜாபதிரிந்த்3ரம் த்ரிகலஶைரம்ருதபூர்ணைராநுஷ்டுபை4ரபி4மந்த்ரிதைரபி4ஷிச்ய தம் ஸுத3ர்ஶநேந த3க்ஷிணதோ ரரக்ஷ பாஞ்சஜந்யேந வாமதோ த்3வயேநைவ ஸுரக்ஷிதோப4வத்। ரௌக்மப2லகே ஸூர்யவர்ச்சஸி மந்த்ரமாநுஷ்டுப4ம் விந்யஸ்ய தத3ஸ்ய கண்டே2 ப்ரத்யமுஞ்சத்। ததஸ் ஸுது3ர்நிரீக்ஷோऽப4வத்। தஸ்மை வித்3யாமாநுஷ்டுப4ம் ப்ராத3ாத்। ததோ தே3வாஸ் தமாதி4பத்யாயாநுமேநிரே। ஸ ஸ்வராட3பூ4த்। ய ஏவம் வேத3 ஸ்வராட்3ப4வேத। ஸோऽமந்யத ப்ருதி2வீமபி கத2மபாம் ஜயேயமிதி। ஸ ப்ரஜாபதி முபதா4வத்। தஸ்மாத் ப்ரஜாபதி: கமட2ாகாரமிந்த்3ராகா3பு4ஜகே3ந்த்3ராதா4ரம் ப4த்3ராஸநம் ப்ராத3ாத்। ஸ ப்ருதி2வீமப்4யஜயத்। ததஸ்ஸ உப4யோர் லோகயோரதி4பதிரபூ4த்। ய ஏவம் வேத3। ஸ உப4யோர் லோகயோரதி4பதிர் ப4வதி। ஸ ப்ருதி2வீம் ஜயதி।

[இந்திரன் தேவர்களுள் கடைசியில் பிறந்தவனாயிருந்தான். "நீ போய் தேவர்களுக்கு அதிபதியாவாக" என்று ப்ரஜாபதி அவனிடம் சொன்னார். அவனும் அப்படியே சென்றான். "நீ எங்களுக்குப் பின் பிறந்தவனாயிருக்கிறாய். எங்களுக்குத் தலைவனாயிருக்கும் தன்மை உனக்கு எப்படிப் பொருந்தும்?" என்று தேவர்கள் இந்திரனிடம் சொன்னார்கள். அதன் பிறகு ப்ரஜாபதியானவர், அம்ருதம் நிறைந்தவையும், ந்ருஸிம்ஹ அநுஷ்டுப் மந்திரத்தினால் அபிமந்திரிக்கப்பட்டவையுமான மூன்று கலசங்களால் இந்திரனுக்கு அபிஷேகம் செய்வித்து, வலதுபக்கத்தில் ஸுதர்சநத்தினாலும், இடதுபக்கத்தில் பாஞ்சஜந்யத்தினாலும் அவனை ரக்ஷித்தார். அவனும் விஷ்ணுவினுடைய அவ்விரண்டு ஆயுதங்களாலும் நன்கு ரக்ஷிக்கப்பட்டவனானான். ஸுவர்ணமயமானதும், ஸூர்யனைப் போன்ற ஒளியுடையதுமான பலகையில், அநுஷ்டுப் மந்திரத்தை எழுதி, அதை இவனுடைய கழுத்தில் கட்டினார். அதற்குப் பின் அவன் காண அரியவனானான். அவனுக்கு அநுஷ்டுப் வித்யையை ப்ரஜாபதி உபதேசித்தார். அதன்பிறகு தேவர்கள் இந்திரனைத்

http://acharya.org

தங்களுக்கு அதிபதியாயிருக்க அனுமதித்தனர். அவனும் அவர்களுக்குத் தலைவனானான். இதை அறிபவனும், எல்லாருக்கும் தலைவனாகிறான். "நீர் சூழ்ந்த நிலவுலகையும் எப்படி ஜயிப்பது" என்று இந்திரன் ஆலோசித்தான். அதற்காக ப்ரஜாபதியை அடைந்தான். ப்ரஜாபதியானவர், இந்திரன் முதலிய திக்பாலகர்களாலும், அஷ்டதிக் கஜங்களாலும், அஷ்டமஹாநாகங்களாலும், எட்டுத் திக்குகளிலும் தாங்கப்பட்டதும், ஆமைபோன்ற உருவமுடையதுமான பத்ராஸனத்தை தேவேந்திரனுக்குக் கொடுத்தார். (அந்த ஆஸனத்தின் மஹிமையினால்) அவன் பூமியையும் ஜயித்தான். அதற்குப்பின் அவன் இரு உலகங்களுக்கும் அதிபதியானான். எவன் இம்மாதிரி அறிகிறானோ, அவன் இரு உலகங்களுக்கும் அதிபதியாகிறான். அவன் பூமிமுழுவதையும் ஜயிக்கிறான்.]

இப்படி ந்ருஸிம்ஹபூர்வதாபிந்யுபனிஷத்தில் விதிசிவாதிகளின் உத்பத்தியும், லோகஸ்ருஷ்டிக்ரமமும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ருஷ்டிகர்த்தாவான பிரமனே ஒரு ஸ்ருஜ்யன் (ஸ்ருஷ்டிக்கப்படுபவன்) என்று காண்பிக்கப்படுவதினால் அவனையும் ஸ்ருஷ்டித்தவனான அச்சுதனே ஆதிமூலகாரணமென்று தெளிவாகிறது. "காரணம் து த்யேய:" [காரணவஸ்துவே தியானிக்கத்தக்கது] என்னும் வேதவாக்கியப்படி ப்ரஹ்மயோனியான பரவாஸுதேவனே உபாஸிக்கத் தகுந்தவன். சிவனுக்கு ஸ்ருஷ்டிகர்த்ருத்வம் வேதவாக்யங்களில் எங்கும் சொல்லப்படவில்லை. ப்ரஹ்மா அவரை ஸ்ருஷ்டிக்கும்படி சொன்னபோது விபரீதஸ்ருஷ்டி செய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சிவனும் படைக்கப்பட்டவரே என்பது இவ்வுபனிஷத்திலும், மற்றும் பல பல வேதவாக்யங்களிலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரஹ்மாவும் ஸ்வயமாக ஸ்ருஷ்டி செய்ய சக்தியற்றவராய், பல்லாயிரவருஷம் பரவாஸுதேவனைக் குறித்துத் தவம்செய்து, ந்ருஸிம்ஹமந்திரத்தை அப்பரமபுருஷனிடமிருந்து உபதேசம்பெற்று, அதைக்கொண்டே லோகஸ்ருஷ்டியைச் செய்தார் என்று இங்கு படிப்பதிலிருந்து நான்முகன் ஒரு ஜீவனே என்பது கையிலங்கு நெல்லிக்கனியாய் விளங்குகிறது. அவரால் படைக்கப்பட்ட ருத்ரன் ஜீவனே என்பது கிம்புதந்யாயஸித்தம்.

ஸ்மார்த்தர்களால் அச்சிடப்பட்டிருக்கும் இவ்வுபனிஷத் பதிப்பில் இடையிலும், கடையிலும் சங்கரபாஷ்யக்கொள்கைகளை உட்கொண்ட பல பங்க்திகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இம்

http://acharya.org

மாதிரியே பல உபனிஷத்துக்களில் செய்யப்பட்டிருக்கின்றது. தற் சமயம் அச்சிடப்பட்டிருக்கும் மஹோபனிஷத்தில் வேதாந்ததேசிகர் முதலிய ஆசாரியர்களால் எடுக்கப்பட்ட மந்திரங்களில் பல காணப்படுவதில்லை. அத்வைதபரமான பல பல பங்க்திகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மஹாநாராயணோபநிஷத் விசாரம்.

இனி, அதர்வணவேதத்தைச் சேர்ந்ததாகச் சொல்லப்படும் த்ரி பாத்விபூதி மஹாநாராயண உபனிஷத் விசாரிக்கப்படுகிறது. இந்த உபனிஷத்தும் ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியர்களால் எடுக்கப்பட் டிருப்பதாகத் தெரியவில்லை. சுமார் 100 வருஷங்களுக்குள் எழுதப் பட்ட ஒரு கிரந்தத்தில் "மஹாநாராயண உபநிஷத் முதலிய அநேக உபனிஷத்துக்களின் முதலிலும், இடையிலும், கடையிலும் கற்பித்துச் சேர்த்தவைகளைக் கண்டும், மதிமயங்கி மோசம்போகாமல் ஸாவதான மாக விட்டு......" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வுபனி ஷத்தை முழுவதும் ஒப்புக்கொள்ளாவிடினும், அவிருத்தாம்சங்களை அங்கீகரிப்பதில் தோஷமில்லை. இதில் ப்ரஹ்மாவின் உத்பத்தியும், நாராயணபரத்வமும் சொல்லப்பட்டிருப்பதை விவரிப்போம்.

ஹரி: ஓம் || அத2 பரமதத்வரஹஸ்யம் ஜிஜ்ஞாஸு: பர மேஷ்டீ2 தே3வமாநேந ஸஹஸ்ரஸம்வத்ஸரம் தபஶ்சகார | ஸஹஸ்ரவர்ஷேऽதீதேऽத்யுக்3ர தீவ்ரதபஸா ப்ரஸந்நம் ப4க3 வந்தம் மஹாவிஷ்ணும் ப்3ரஹ்மா பரிப்ருச்ச2தி | ப4க3வந் பரமதத்வரஹஸ்யம் மே ப்3ரூஹீதி | பரமதத்வரஹஸ்யஸ்ய வக்தா த்வமேவ நாந்ய: கச்சித3ஸ்தி | தத்கத2மிதி | ததே3 வோச்யதே | த்வமேவ ஸர்வஜ்ஞ: | த்வமேவ ஸர்வஶக்தி: | த்வமேவ ஸர்வாதா4ர: | த்வமேவ ஸர்வஸ்வரூப: | த்வமேவ ஸர்வேச்வர: | த்வமேவ ஸர்வ ப்ரவர்த்தக: | த்வமேவ ஸத3 ஸதா3த்மக: | த்வமேவ ஸத3ஸத்3விலக்ஷண: | த்வமேவ அந்தர்ப3ஹிர்வ்யாபக: | த்வமேவ அதிஸூக்ஷ்மதர: | த்வமே வாஸி மஹதோ மஹீயாந் | த்வமேவாஸி மூலாவித்3யாவிரஹ: | த்வமேவ வித்3யாவிஹார: | த்வமேவ வித்3யாதா4ரக: | த்வமேவ வித்3யாவேத்3ய: | த்வமேவ வித்3யாஸ்வரூபக: | த்வமேவ வித்3யாதீத: | த்வமேவ ஸர்வகாரணஹேது: | த்வமேவ ஸர்வ

http://acharya.org

காரணஸமஷ்டி:। த்வமேவ அக2ண்டாநந்த3:। த்வமேவ பரி பூர்ணாநந்த3:। த்வமேவ நிரதிசயாநந்த3:। த்வமேவ துரீய துரீய:। த்வமேவ துரீயாதீத:। த்வமேவ அநந்தோபநிஷத்3 விம்ருக்3ய:। த்வமேவ அகி2ல சாஸ்த்ரைர் விம்ருக்3ய:। த்வமேவ ப்3ரஹ்மேசாந புரந்த3ர புரோக3மை: அகி2லாமரை: அகி2லாக3மைர் விம்ருக்3ய:। த்வமேவாம்ருதமயஸ் த்வமேவாம்ருதமயஸ் த்வமேவாம்ருதமய:। த்வமேவ ஸர்வம் த்வமேவ ஸர்வம் த்வமேவ ஸர்வம்। த்வமேவ மோக்ஷஸ் த்வமேவ மோக்ஷத3ஸ் த்வமேவ அகி2ல மோக்ஷஸாத4நம்। ந கிஞ்சித3ஸ்தி த்வத்3வ்யதிரிக்தம்। யத்கிஞ்சித் ப்ரலீயதே தத் ஸர்வம் பா4தி4தமிதி நிச்சிதம்। தஸ்மாத் த்வமேவ வக்தா। த்வமேவ கு3ரு:। த்வமேவ பிதா। த்வமேவ ஸர்வநியந்தா। த்வமேவ ஸர்வம்। த்வமேவ ஸதா3 த்4யேய இதி ஸுநிச்சித:।

[மேலான ஸ்தானமாகிய ஸத்யலோகத்திலிருப்பவனான பிரமன், மேலான தத்வத்தின் ரஹஸ்யத்தை அறியவிரும்பினவனாய், தேவ வர்ஷத்தில் ஆயிரம் வருஷங்கள் தவம் செய்தான். ஆயிரம் வருஷங்கள் கழிந்தவுடன், மிகவும் உக்ரமானதும், தீவ்ரமானதுமான தபஸ்ஸினால் உகந்து எழுந்தருளிய பகவான் மஹாவிஷ்ணுவிடம் "பகவானே! மேலான தத்வத்தின் ரஹஸ்யத்தை எனக்கு உரைப்பீராக. அதைச் சொல்லக்கூடியவர் நீர் ஒருவரே; வேறொருவருமில்லை" என்று நான்முகன் நவின்றான். "நீ அப்படிச் சொல்லுவதற்குக் காரணம் யாது" என்று பகவான் கேட்டார். அதற்குப் பிரமன் பின்வருமாறு பதிலுரைத்தான்:—"நீரே எல்லாமறிந்தவர்; நீரே எல்லாம் வல்லவர்; எல்லாவற்றுக்கும் ஆதாரமாயிருப்பவரும் நீரே; எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்டிருப்பவரும் நீரே; நீரே எல்லாருக்கும் ஈச்வரர்; எல்லாவற்றையும் ப்ரவர்த்திப்பிப்பவரும் நீரே; ஸத் எனப்படும் ஜீவதத்வத்திற்கும், அஸத் எனப்படும் அசேதந தத்வத்திற்கும் நீரே அந்தர்யாமி; சேதநாசேதநங்களைக்காட்டிலும் வேறுபட்டிருப்பவரும் நீரே; நீரே உள்ளும் புறமும் வியாபித்து நிற்பவர்; நீரே அதிஸூக்ஷ்மமானவர். பெரியவற்றைக்காட்டிலும் பெரியவராயிருப்பவரும் நீரே; (துன்பங்களுக்கு) மூலமான அஜ்ஞானமற்றவர் நீரே; அந்த அஜ்ஞானத்திற்கும் காரணமான கர்மஸம்பந்தத்தைப்போக்கடிப்பவரும் நீரே; அந்தக் கர்மஸம்பந்தத்திற்கும் ஹேதுவான ப்ரக்ருதிஸம்பந்தத்தையும் நீக்குபவர் நீரே; நீரே வித்யைகளைக்கொண்டு விளையாடுபவர்; எல்லா வித்யைகளையும்

http://acharya.org

குறிப்பவரும் நீரே; வித்யைகளினால் அறியப்படுபவரும் நீரே; ஜ்ஞாந ஸ்வரூபியாயிருப்பவரும் நீரே; ஸகல வித்யைகளாலும் அறியப்படாமல் கடந்து நிற்பவரும் நீரே; நீரே ஸர்வ காரணங்களுக்கும் காரணபூதர்; நீரே ஸர்வகாரணஸமூஹங்களுமாயிருப்பவர்; நீரே நித்யமான ஆநந்தத்தையுடையவர்; ஆநந்த பரிபூர்ணராய் விளங்குபவரும் நீரே; எல்லையற்ற ஆநந்தத்தை உடையவரும் நீரே; ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கு மேற்பட்டவரான விஷ்ணுவாகவும், ஸங்கர்ஷண அநிருத்த ப்ரத்யும்நர்களுக்கு மூலமூர்த்தியான பரவாஸுதேவராகவும் எழுந்தருளியிருப்பவர் நீரே. தூரியாதீதரும் நீரே. நீரே கணக்கற்ற உபநிஷத்துக்களால் தேடப்படுபவர்; நீரே எல்லா சாஸ்திரங்களாலும் தேடப்படுபவர்; நீரே பிரமன் சிவனிந்திரன் முதலிய தேவர்களெல்லாராலும், எல்லா ஆகமங்களாலும் தேடப்படுபவர்; நீரே மோக்ஷஸ்வரூபி, நீரே மோக்ஷஸ்வரூபி, நீரே மோக்ஷஸ்வரூபி; எல்லாம் நீரே, எல்லாம் நீரே, எல்லாம் நீரே; நீரே மோக்ஷப்ராப்யராயிருப்பவர்; நீரே மோக்ஷத்தைத் தருபவர்; எல்லா மோக்ஷஸாதநங்களும் நீரே; உம்மைவிட்டுத் தனித்திருப்பது ஒன்றுமில்லை; உம்மிடம் லயமடைபவையெல்லாம் நிலையற்றவையென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன; ஆகையால் (வேதவாக்கியங்கள் முதலியவற்றைச்) சொல்லுபவரும் நீரே; நீரே (அவைகளை உபதேசிக்கும்) ஆசார்யர்; நீரே தந்தை; நீரே எல்லாரையும் நியமிப்பவர்; நீரே எல்லாம்; எப்போதும் தியானிக்கத்தக்கவரென்று நன்கு நிச்சயிக்கப்பட்டிருப்பவரும் நீரே.']

"நாராயணாத் ஹிரண்யக$_3$ர்ப்பே$_4$ா ஜாயதே। நாராயணாத$_3$ண்டவிராட்ஸ்வரூபோ ஜாயதே। நாராயணாத் அகி$_2$லலோகஸ்ரஷ்ட்ருப்ரஜாபதயோ ஜாயந்தே। நாராயணாத் ஏகாத$_3$ஶருத்$_3$ராச்ச ஜாயந்தே। நாராயணாதகி$_2$லலோகாச்ச ஜாயந்தே। நாராயணாதி$_3$ந்த்$_3$ரோ ஜாயதே। நாராயணாத் ஸர்வே வஸவஸ் ஸர்வே தே$_3$வாச்ச ஜாயந்தே। நாராயணாத்$_3$ த்$_3$வாத$_3$ஶாதி$_3$த்யாஸ் ஸர்வே வஸவஸ் ஸர்வே ருஷயஸ் ஸர்வாணி பூ$_4$தாநி ஸர்வாணி ச$_2$ந்த$_3$ாம்ஸி। நாராயணாதே$_3$வ ஸமுத்பத்$_3$யந்தே। நாராயணாத் ப்ரவர்த்தந்தே। நாராயணே ப்ரலீயந்தே। அத$_2$ நித்யோக்ஷர:। பரம: ஸ்வராட்। ப்$_3$ரஹ்மா நாராயண:। சிவச்ச நாராயண:। ஶக்ரச்ச நாராயண:। தி$_3$ஶச்ச நாராயண:। காலச்ச நாராயண:। கர்மாகி$_2$லஞ்ச நாராயண। மூர்த்தாமூர்த்தே ச நாராயண:। காரணாத்

http://acharya.org

மகம் ஸர்வம் கார்யாத்மகம் ஸகலம் நாராயண:। தது$_3$ப$_4$ய விலக்ஷணோ நாராயண:। பரம்ஜ்யோதிஸ் ஸ்வயம் ப்ரகாச:। ப்$_3$ரஹ்மாநந்த$_3$மயோ நித்யோ நிர்விகாரோ நிரஞ்ஜநோ நிராக்$_2$யாத: சுத்$_3$தே$_4$ா தே$_3$வ ஏகோ நாராயண: ந த்$_3$விதீயோऽஸ்தி கச்சித்। ந ஸமநாதி$_4$க இத்யஸம்சயம் பரமார்த்த$_2$தோ ய ஏவம் வேத$_3$ ஸகலப$_3$ந்த$_4$ாம்ச்சி$_2$த்வா ம்ருத்யும் தீர்த்வா ஸ முக்தோ ப$_4$வதி ஸ முக்தோ ப$_4$வதி||"

[நாராயணனிடமிருந்து ஹிரண்யகர்ப்பனென்னும் பிரமன் பிறக்கிறான். நாராயணனிடமிருந்து அண்டவிராட் புருஷன் தோன்றுகிறான். நாராயணனிடத்திலிருந்து எல்லா உலகங்களையும் ஸ்ருஷ்டிக்கும் ப்ரஜாபதிகள் உண்டாகிறார்கள். நாராயணனிடமிருந்து பதினொரு ருத்ரர்களும் பிறக்கிறார்கள். நாராயணனிடமிருந்து எல்லா உலகங்களும் உண்டாகின்றன. நாராயணனிடத்தினின்றும் இந்திரன் உண்டாகிறான். நாராயணனிடமிருந்து எல்லா தேவர்களும் தோன்றுகிறார்கள். நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், எல்லா வஸுக்களும், எல்லா ரிஷிகளும், எல்லா பூதங்களும், எல்லாச் சந்தஸ்ஸுக்களும் உண்டாகின்றன. நாராயணனிடமிருந்தே தோன்றுகின்றன; நாராயணனால் ரக்ஷிக்கப்படுகின்றன. நாராயணனிடமே லயமடைகின்றன. நித்யனாகவும், (ஸ்வரூபத்திலும், ஸ்வபாவத்திலும்) அழிவற்றவனாகவும், மேலானவனாகவும், ஸ்வதந்திரனாகவும் விளங்குபவன் நாராயணனே; நாராயணனே பிரமனுக்கும் அந்தர்யாமி; நாராயணனே சிவனுக்கும் அந்தர்யாமி; இந்திரனுக்கு அந்தர்யாமியாயிருப்பவனும் நாராயணனே; திசைகளுக்கும் நாராயணனே அந்தர்யாமி; காலஸ்வரூபியாயிருப்பவனும் நாராயணனே; எல்லாக்கர்மங்களும் நாராயணனுக்கு வசப்பட்டுள்ளன; உருவமுள்ளவையான அசேதநங்களுக்கும், உருவமற்றவையான சேதநர்களுக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் நாராயணனே; காரணமாயிருக்கும் எல்லாப் பொருள்களுக்கும், கார்யமாயிருக்கும் எல்லா வஸ்துக்களுக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் நாராயணனே. அவ்விருவகைப் பொருள்களைக் காட்டிலும் மேலானவனாயிருப்பவனும் நாராயணனே. மேலான சோதியுருவுடன் கூடியவனும், தானாகவே ப்ரகாசிப்பவனும், பேரானந்தமே ஸ்வரூபமாயிருப்பவனும், நித்யனாயிருப்பவனும், விகாரமற்றவனாயிருப்பவனும், தோஷமற்றவனும், சொல்லவரியவனாயிருப்பவனும், சுத்தமானவனும் தேவன் நாராயணன் ஒருவனே.

http://acharya.org

வேறொருவனும் இல்லை. அவனுக்கு ஒப்பாரும், மிக்காரும் இலர் என்பதை ஸந்தேஹமில்லாமல் எவன் உண்மையாக அறிகிருனே, அவன் எல்லாக் கட்டுகளையும் அறுத்துக்கொண்டு, ஸம்ஸாரத்தை யும் கடந்து, முக்தியடைகிருன்.]

கோபாலதாபிந்யுபநிஷத் விசாரம்.

இவ்வுபனிஷத்தும், ஸ்மார்த்தர்களால் அச்சிடப்பட்ட நூற்றெட்டு உபனிஷத் புஸ்தகத்தில் காணப்படுகிறது. இதுவும் பூர்வாசார்யர்களால் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ந்ருஸிம்ஹதாபிந்யுபனிஷத்தில், பிரமன் ந்ருஸிம்ஹ மந்திரத்தைக்கொண்டு லோகஸ்ருஷ்டி செய்ததாகக் கூறியதுபோல், இவ்வுபனிஷத்திலும் கோபால மந்திரத்தைக்கொண்டு லோகஸ்ருஷ்டி செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விரண்டையும் வெவ்வேறு கல்பங்களின் ஸ்ருஷ்டிக்ரமமாகக் கொள்ளவேண்டும். இவ்வுபனிஷத்தில் ப்ரஹ்மாதிகளின் ஸ்ருஷ்டி சொல்லப்பட்டிருப்பதை இனி விவரிப்போம்.

"யோ ப்$_3$ரஹ்மாணம் வி$_3$த$_3$தா$_4$தி பூர்வம்
யோ வித்$_3$யாம் தஸ்மை கோ$_3$பயதி ஸ்ம க்ருஷ்ண:।
தம் ஹ தே$_3$வமாத்மபு$_3$த்$_3$தி$_4$ப்ரகாஶம்
முமுக்ஷுர் ஶரணம் வ்ரஜேத்॥"

[எந்த பகவான் கிருஷ்ணன் பிரமனை முன் படைத்து அவனுக்கு வித்யையை உபதேசிக்கிருனே, தன் விஷயமான புத்தியைப் பிரகாசிக்கச்செய்யும் அந்த தேவனை மோக்ஷமடைய விரும்புமவன் சரணமடையக்கடவன்.]

"பூர்வம் நாராயணோ யஸ்மிந் லோகா ஓதாஶ்ச ப்ரோதாஶ்ச தஸ்ய ஹ்ருத்பத்$_3$மாஜ்ஜாதோऽப்$_3$ஜயோநிஸ் தபஶ்சசார। தஸ்மை ஹ வரம் த$_3$தெ$_3$ள। ஸ காமப்ரஶ்நமேவ வ்வரே। தம் ஹாஸ்மை த$_3$தெ$_3$ள। ஸ ஹோவாசாப்$_3$ஜயோநி:। யோ வா அவதாராணாம் மத்$_4$யே ச்ரேஷ்டோ$_2$ऽவதார:। யேந லோகாஸ் துஷ்டா ப$_4$வந்தி, யம் ஸ்ம்ருத்வா முக்தா அஸ்மாத் ஸம்ஸாராத் ப$_4$வந்தி। கத$_2$ம் வா அஸ்ய அவதாரஸ்ய ப்$_3$ரஹ்மதா ப$_4$வதி। ஸ ஹோவாச தம் ஹ வை நாராயணோ தே$_3$வ:। ஸகாம்யா மேரோ: ஶ்ருங்கே$_3$ யதா$_2$ ஸப்தபுர்யோ ப$_4$வந்தி।

http://acharya.org

ததா2 நிஷ்காம்யா ஸகாம்ய பூ4கோ3ளசக்ரே ஸப்தபுர்யோ ப4வந்தி। தாஸாம் மத்4யே ஸாக்ஷாத் ப்3ரஹ்மகோ3பாலபுரீ ப4வதி। ஸகாம்யா நிஷ்காம்யா தே3வாநாம் ஸர்வேஷாம் பூ4தாநாம் ப4வதி। அதா2ஸ்ய ப4ஜநம ப4வதி। யதா2 ஹி வை ஸரஸி பத்3மம் திஷ்ட2தி। ததா2 பூ4ம்யாம் திஷ்ட2தி சக்ரேண ரக்ஷிதா மது2ரா। தஸ்மாத் கோ3பாலபுரீ ப4வதி।"

[எல்லா உலகங்களும் எவனிடம் ஒடுங்கியும், ஒன்றியும் நிற்கின்றனவோ அந்த நாராயணன் ஒருவனே முதலில் இருந்தான். அவனுடைய ஹ்ருதயாகாசத்திலிருந்துண்டான ஸங்கல்பத்தினால் உந்தித்தாமரையில் பிறந்த பிரமன் தவம் செய்தான். அவனை பகவான் ஏதாவதொரு வரத்தைக் கேட்கும்படி சொன்னான். "எனக்கு இஷ்டமான ஒரு கேள்விக்கு நீர் பதிலளிக்கவேண்டும்" என்ற வரத்தை நான்முகன் வரித்தான். அந்த வரத்தை இவனுக்கு அளித்தான் நாராயணன். "(உம்முடைய) அவதாரங்களுள் சிறந்தது எது? எந்த அவதாரத்தினால் உலகங்கள் ஸந்தோஷத்தை அடைகின்றன? எதை நினைத்தவுடன் இந்த ஸம்ஸாரத்தினின்றும் முக்தியடைகிறார்கள்? இந்த அவதாரம் எப்படிப் பெருமைபெற்றதாகிறது?" என்று பிரமன் வினவினான். அவனுக்கு தேவனான நாராயணன் பின்வருமாறு பதிலுரைத்தான்: "எப்படி மேருமலைக்கு மேல்பாகத்தில் இஷ்டத்தையெல்லாமளிக்கும் ஏழு நகரங்கள் விளங்குகின்றனவோ, அப்படியே, இவ்வுலகச் செல்வத்தையும், மோக்ஷத்தையுமளிக்கும் (அயோத்யை, மதுரை, மாயை, காஞ்சி, காசி, அவந்திகை, த்வாரகை என்னும்) ஏழு நகரங்கள் பூலோகில் பிரகாசிக்கின்றன. அவைகளுக்கு நடுவில் ஸாக்ஷாத் பகவானுடைய அம்சம் பெற்றதான கோபாலபுரியென்னும் மதுரை விளங்குகிறது. அது தேவர்களுக்கும், எல்லா ஜீவராசிகளுக்கும் இஹபரஸௌகங்களைத் தருகிறது. இதில் வாஸம் செய்வதே பரம புருஷனைப் பூஜிப்பதாகிறது. குளத்தில் தாமரை விளங்குவதுபோல் ஸுதர்சன சக்ரத்தினால் ரக்ஷிக்கப்பட்ட மதுரை பூமியில் பிரகாசிக்கிறது. ஆகையால் அது கோபாலபுரியென்று சொல்லப்படுகிறது..."]

கோபாலமந்திரத்தின் மஹிமையும், அதைக்கொண்டு ஸ்ருஷ்டி செய்த ப்ரகாரமும் பின்வருமாறு விவரிக்கப்பட்டுகின்றன.

"தது3ஹோவாச। ப்3ரஹ்மஸத3நம் சரதோ3 மே த்4யாத: ஸ்துத: பரமேச்வர:। பரார்த்தா4ந்தே ஸோऽபு3த்4யத யோப

http://acharya.org

தே3ஷ்டா மே புருஷ: புரஸ்தாதா3விர்ப3பூ4வ। தத: ப்ரணதோ மயா அநுகூலேந ஹ்ருதா3 மஹ்யம் அஷ்டாத3'ார்ணம் ஸ்வரூபம் ஸ்ருஷ்டயே த3த்வா அந்தர்ஹித:। புநஸ் தே ஸிஸ்ருக்ஷதோ மே ப்ராது3ரபூ4த் தேஷ்வக்ஷரேஷு விப4ஜ்ய ப4விஷ்யஜ் ஜக3த்3 ரூபம் ப்ரகாசயந்। ததி3ஹ க3ாத3ாகாலாத் ப்ருதி2வ்யாபோऽக்3நிர் பிந்தே3ாரிந்து3: தத்ஸம்பாதாத் தத3ர்க்க இதி க்லீங்காராத் அஜஸ்ரம் க்ருஷ்ணாத3ாகாசம் கே3ாவிந்தா3த்3 வாயும் உத்தராத் ஸுரபி4 வித்3யா: ப்ராது3ரகார்ஷமகார்ஷமிதி। தது3த்தராத் ஸ்த்ரீபுமாதி3 பே4த3ம் ஸகலமித3ம் ஸகலமித3மிதி॥"

[ப்ரஹ்மா பின்வருமாறு உரைத்தார்: "கர்மங்களைச் செய்துகொண்டிருந்த என்னால் பரமேச்வரரான பகவான் தியானிக்கப்பட்டார்; துதிக்கப்பட்டார். என்னுடைய ஆயுட்காலத்தில் பாதிசென்ற பின்பு அந்தப் பரமபுருஷன் என்னுடைய தியானத்தை உணர்ந்து எனக்கு உபதேசிப்பதற்காக என்முன் தோன்றினார். என்னால் வணங்கப்பட்ட அவர், அன்புபூண்ட மனத்தையுடையவராய், பதினெட்டு அக்ஷரங்களையுடைய (க்லீம் க்ருஷ்ணாய கோ3விந்தாய கோ3பீஜநவல்லபா4ய ஸ்வாஹா என்ற) தன் மந்திரத்தை ஸ்ருஷ்டியின் பொருட்டு உபதேசித்து மறைந்து சென்றார். உலகத்தை நான் ஸ்ருஷ்டி செய்ய விரும்பியபோது மறுபடியும் என் முன் தோன்றி, அந்த அக்ஷரங்களிலிருந்து ஸ்ருஷ்டி செய்யப்படவேண்டிய ஜகத்ரூபத்தைத் தனித்தனியாகப் பிரகாசப்படுத்தினார். அப்படியே நானும் ஸ்ருஷ்டி செய்தேன். 'க்லீம்' என்பதிலுள்ள க், ல், ஈ என்னும் எழுத்துக்களினின்றும் ப்ருதிவி, ஜலம், அக்நி என்னும் தத்வங்களையும், 'ம்' என்னும் பிந்துவிலிருந்து சந்திரனையும், அவ்வெழுத்துக்களெல்லாம் சேர்ந்த 'க்லீம்' என்னும் பதத்தினின்றும் ஸூர்யனையும், 'க்ருஷ்ணாய' என்னும் பதத்திலிருந்து ஆகாசத்தையும், 'கோ3விந்தாய' என்பதிலிருந்து வாயுவையும் மேலுள்ள, 'கோபீஜநவல்லபாய' என்பதிலிருந்து தேவ ஸுரபியாகிய காமதேனுவையும், பதினான்கு வித்யைகளையும் உண்டு பண்ணினேன். அதற்கு மேலுள்ள 'ஸ்வாஹா' என்னும் பதத்தினின்றும், ஸ்த்ரீ, புருஷன் என்னும் பேதங்களையுடைய இந்த மற்ற எல்லா வஸ்துக்களையும் உண்டு பண்ணினேன்.]

"ஏதஸ்யைவ யஜநே சந்த்3ரத்4வஜோ க3தமோஹமாத்மாநம் வேத3யதி। ஓங்காராதி3கம் மநுமாவர்த்தயேத் ஸங்க3ரஹித:।

http://acharya.org

அப்யாஸயத் தத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$ம் ஸதா$_3$ பச்யந்தி ஸூரய: | தி$_3$வீவ சக்ஷுராததம் | தஸ்மாதே$_3$நம் நித்யமாவர்த்தயேந் நித்யமாவர்த்தயேதி$_3$தி |''

[இந்த மந்திரத்தை ஜபம் செய்து சந்திரனைத் தலையில் கொண்ட சிவன், மோஹம் நீங்கப்பெற்றவனாய், பரமாத்மாவை அறிந்தான். ஆகையால் பலனில் பற்றற்றவனாய், கோபாலமந்திரத்தை ஓங்காரத்துடன் பல தடவை படிக்கக்கடவன். இதை ஜபித்த சிவனும் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரித்து, விஷ்ணுவினுடைய மேலான பரமபதத்தை அடைந்தான். (அப்பரம பதத்தை) எப்போதும் நித்யஸூரிகள் பார்க்கிறார்கள். அப்பரமபதம் ஆகாயத்தில் விளங்குபவனும் உலகிற்கெல்லாம் கண்ணாயிருப்பவனுமான ஸூர்யனைப்போல் பிரகாசிக்கிறது. ஆகையால் இம்மந்திரத்தை தினந்தோறும் ஜபிக்கவேண்டியது.]

''தத$_3$ாஹுரேகே | யஸ்ய ப்ரத$_2$மபத$_3$ாத்$_3$ பூ$_4$மிர் த்$_3$விதீய பத$_3$ாஜ்ஜலம் த்ருதீயபத$_3$ாத்தேஜ: சதுர்த்த$_2$ பத$_3$ாத்$_3$ வாயு: சரமபத$_3$ாத் வ்யோமேதி வைஷ்ணவம் பஞ்சவ்யாஹ்ருதிமயம் மந்த்ரம் க்ருஷ்ணாவபா$_4$ஸகம் கைவல்யஸ்ய ஸ்ருத்யை ஸததமாவர்த்தயேத் ஸததமாவர்த்தயேதி$_3$தி | தத$_3$த்ர கா$_3$தா$_2$: | யஸ்ய ப்ரத$_2$மபத$_3$ாத் பூ$_4$மிர் த்$_3$விதீயாத் ஸலிலோத்$_3$ப$_4$வ: | த்ருதீயாத் தேஜ உத்$_3$பூ$_4$தம் சதுர்த்த$_2$ாத் க$_3$ந்த$_4$வாஹந: | பஞ்சமாத$_3$ம்ப$_3$ரோத்பத்திஸ் தமேவைகம் ஸமப்$_4$யஸேத் | சந்த்$_3$ரத்$_4$வஜோऽக$_3$மத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$மவ்யயம் |

தத்தோ விஸு$_3$த்$_3$த$_4$ம் விமலம் விஸோகம்
அஸேஷலோப$_4$ாதி$_3$நிரஸ்தஸங்க$_3$ம் |
யத்தத் பத$_3$ம் பஞ்சபத$_3$ம் ததே$_3$வ
ஸ வாஸுதே$_3$வோ ந யதோऽந்யத$_3$ஸ்தி ||''

[சில முனிவர்கள் பின்வருமாறு சொல்லுகின்றனர்:— யாதொரு மந்திரத்தின் முதல் பதத்தினின்றும் பூமியும், இரண்டாவது பதத்தினின்று ஜலமும், மூன்றாவது பதத்திலிருந்து அக்னியும், நான்காவது பதத்திலிருந்து காற்றும், ஐந்தாவது பதத்தினின்றும் ஆகாசமும் உண்டாயினவோ, விஷ்ணுஸம்பந்தமானதும் ஐந்து வ்யாஹ்ருதிரூபமாயிருப்பதும், க்ருஷ்ணனைக் காண்பிப்பதுமான

http://acharya.org

அந்த மந்திரத்தை மோக்ஷமடைதல்பொருட்டு எப்போதும் ஜபிக்கவேண்டும். இவ்விஷயமாகப் பின்வரும் ச்லோகங்கள் சொல்லப்படுகின்றன: எந்த மந்திரத்தின் முதல் பதத்திலிருந்து பூமியும், இரண்டாவதிலிருந்து ஜலமும், மூன்றாவதினின்று அக்னியும், நான்காவதிலிருந்து வாயுவும், ஐந்தாவதிலிருந்து ஆகாசமும் உண்டாயினவோ அந்த ஒரு மந்திரத்தையே ஜபிக்கவேண்டும். அதை ஜபித்ததினால் சந்திரனைத் தலையில்கொண்ட சிவனும், விஷ்ணுவினுடைய மேலான பரமபதத்தை அடைந்தான். ஆகையால் மிகவும் சுத்தமானதும், தோஷமற்றதும், சோகமில்லாததும், காம க்ரோதலோபம் முதலியவைகளின் சேர்க்கையற்றதுமான யாதொரு பரமப்ராப்யம் உள்ளதோ அதுவே ஐந்துபதங்களையுடைய கோபால மந்த்ரம். அந்த மந்த்ரப்ரதிபாத்யனுயிருப்பவன், தன்னைவிட்டுப் பிரிந்து வேறென்றுமில்லாதிருக்கும்படியான மஹிமையையுடைய வாஸுதேவனே.]

"ஓம் நமோ விச்வரூபாய விச்வஸ்தி$_2$த்யந்தஹேதவே |
விச்வேச்வராய விச்வாய கோ$_3$விந்த$_3$ாய நமோ நம: ||
நமோ விஜ்ஞாநரூபாய பரமாநந்த$_3$ரூபிணே |
க்ருஷ்ணாய கோ$_3$பீநாத$_2$ாய கோ$_3$விந்த$_3$ாய நமோ நம: ||
நம: கமலநேத்ராய நம: கமலமாலிநே |
நம: கமலநாப$_4$ாய கமலாபதயே நம: ||
ப$_3$ர்ஹாபீடா$_3$பி$_4$ராமாய ராமாயாகுண்ட$_2$மேத$_4$ஸே |
ரமாமாநஸஹம்ஸாய கோ$_3$விந்த$_3$ாய நமோ நம: ||
கம்ஸவம்சவிநாசாய கேசிசாணூரகா$_4$திநே |
வ்ருஷப$_4$த்$_4$வஜவந்த்$_3$யாய பார்த்த$_2$ஸாரத$_2$யே நம: ||

[உலகையெல்லாம் உருவாகக்கொண்டவனும், உலகை ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் செய்பவனும், உலகை நியமிப்பவனும், உலகாயிருப்பவனுமான கோவிந்தனுக்கு நமஸ்காரம். ஜ்ஞாநாநந்தஸ்வரூபனும், ஆயர்சிறுமிகளுக்குத் தலைவனும், பசுக்களுக்குப் புகலிடமுமான க்ருஷ்ணனுக்கு நமஸ்காரம். கமலம்போன்ற கண்களை உடையவனும், தாமரைமாலையை தரித்தவனும், செந்தாமரையை உந்தியில் கொண்டவனுமான செந்தாமரையாள் கேள்வனுக்கு நமஸ்காரம். மயில்தோகையினால் அழகுடையவனும், உலகையெல்லாம் ரமிக்கச்செய்பவனும், குறைவற்ற ஞானத்தை உடையவனும், லக்ஷ்மீதேவியின் மநஸ்ஸாகிற மாநஸ

http://acharya.org

ஸரஸ்ஸில் விளையாடும் ஹம்ஸமாயிருப்பவனுமான கோவிந்தனுக்கு நமஸ்காரம். கம்ஸனின் வம்சத்தை அழித்தவனும், கேசியையும், சாணூரனையும் கொன்றவனும், ரிஷபக்கொடியோனை சிவனால் பூஜிக்கப்பட்டவனும், அர்ஜுனனுக்கு ஸாரதியாயிருந்தவனுமான பெருமானுக்கு நமஸ்காரம்.]

தசோபனிஷத் விசாரம்

ஈசாவாஸ்ய உபனிஷத்தின் ஈச்வரநிர்ணயம்.

இது சுக்லயஜுர்வேதத்தில் உள்ளது. "ஈசா வாஸ்யமிதம் ஸர்வம்" என்று, "ஸர்வபூதாந்தராத்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:", "யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேபி வா। அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" என்று வேதத்தில் சொல்லப்பட்ட நாராயணனுடைய ஸர்வாந்தர்யாமித்வத்தை ஆரம்பத்திலேயே இவ்வுபனிஷத் உரைத்திற்று. கடைசியிலும்

"யத்தே ரூபம் கல்யாணதமம் தத் தே
பச்யாமி யோऽஸாவஸௌ புருஷஸ் ஸோऽஹமஸ்மி"

[மங்களங்களுள் சிறந்ததான உன்னுடைய யாதொரு வடிவுண்டோ, அதை நான் பார்க்கக்கடவேன். பரமபுருஷனென்று ப்ரஸித்தனான உன்னையே அந்தர்யாமியாகக்கொண்டவனாக நான் இருக்கிறேன்] என்று பகவதஸாதாரணமான புருஷசப்தத்தையும், "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா" "புருஷம் க்ருஷ்ணபிங்களம்" எனப்படும் திவ்யமங்கள விக்ரஹத்தையும் படித்தது. ஆகையால் இவ்வுபனிஷத் பகவத்பரமென்று நிர்ணயிக்கப்பட்டதாகிறது.

கேநோபனிஷத்தின் கொள்கை.

இவ்வுபனிஷத் ஸாமவேதத்திலுள்ளது. தலவகார உபனிஷத் என்றும் ஒரு பெயருண்டு.

"கேநேஷிதம் பததி ப்ரேஷிதம் மந:
கேந ப்ராண: ப்ரதம: ப்ரைதி யுக்த:।
கேநேஷிதாம் வாசமிமாம் வதந்தி
சக்ஷு: ச்ரோத்ரம் க உ தேவோ யுநக்தி ॥"

[மனஸ்ஸானது எவனால் தூண்டப்பட்டு விஷயங்களில் செல்லுகிறது? முக்யப்ராணனானது எவனால் நியமிக்கப்பட்டு ஸஞ்சரிக்

http://acharya.org

கிறது? எவனால் தூண்டப்பட்டு மனிதர்கள் வார்த்தை சொல்லுகிறார்கள்? கண்களையும், காதுகளையும் எந்த தேவன் நியமிக்கிறான்?] என்று 'கேந' எனக் கேள்விகேட்டுக்கொண்டு ஆரம்பிப்பதால் இது கேநோபநிஷத் எனப்படுகிறது.

''யந்மநஸா ந மநுதே யேநாஹுர் மநோ மதம்।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி, நேதம் யதிதமுபாஸதே॥''

[எதை மனத்தினால் அறியமுடியாதோ, எதனுடைய நியமனத்தினால் மனம் மற்றவைகளை அறிகிறதோ, அதையே ப்ரஹ்மமென்றறி: உலகோர் விரும்பும் மற்ற விஷயங்களைக் காட்டிலும் விலக்ஷணமானது அது.] முதலான வாக்கியங்களால் இக்கேள்விகளுக்கு பதிலுரைத்தது. ''யஸ்ய மந: சரீரம் யோ மநோந்தரே ஸஞ்சரந் யம் மநோ ந வேத'' [எவனுக்கு மனஸ் சரீரமோ, எவன் மனஸ்ஸினுள் ஸஞ்சரித்துக்கொண்டு நியமிக்கிறானோ, எவனை மனஸ் அறியவில்லையோ......] என்று தொடங்கி ''ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:'' [இவனே ஸர்வ பூதாந்தராத்மாவும், தோஷமற்றவனும், பரமபதத்திலிருப்பவனும், அத்விதீயனுமான நாராயணனென்னும் தேவன்.] என்று முடித்த ஸுபாலோபநிஷத்வாக்யங்களுடன் ஒரே பொருளை உடைத்தாயிருக்கையால் இதுவும் பகவத் பரமே என்பது தெளிவாகிறது. மேலும், 'நாராயண பரம் ப்ரஹ்ம' என்று சொல்லப்பட்ட ப்ரஹ்மசப்தத்தைப் பரம்பொருள் விஷயமாகப் [illegible] இவ்வுபநிஷத் படித்ததிலிருந்தும் இது பரப்ரஹ்மமான நாராயணனையே சொல்லுகிறதென்பது தெளிவாகிறது

இவ்வுபநிஷத்தில் பின்வரும் உபாக்யானமொன்று உரைக்கப்படுகிறது. பரப்ரஹ்மமாகிற விஷ்ணு தேவர்களுக்காக அஸுரர்களை ஜயித்தார். இந்த ஜயம் தங்களுடைய ஸாமர்த்யத்தினால் ஏற்பட்டதென்று நினைத்து தேவர்கள் இறுமாந்திருந்தார்கள். ப்ரஹ்ம ஸ்வரூபியான பகவான் அவர்கள் கர்வத்தை அடக்குவதற்காக ஓர் யக்ஷரூபியாகத் தோன்றினர். அந்த யக்ஷனை அறிந்து வரும்படி அக்னியை அனுப்பினார்கள் அமரர்கள். அப்படி வந்த அக்னியை ''நீ யார்? உன்னுடைய சக்தி என்ன?'' என்று யக்ஷன் கேட்டான்; ''நான் அக்னியென்றும், ஜாதவேதஸ் என்றும் சொல்லப்படுபவன். உலகிலுள்ளதெல்லாவற்றையும் எரிக்கக்கூடிய சக்தி எனக்குள்ளது'' என்று அக்னி பதிலுரைத்தான். யக்ஷனும் ஓர் புல்லை இட்டு, ''இதை தஹிப்பாயாக'' என்றனன். தன் முழுவேகத்துடன் அதை பஸ்மமாக்க முயன்றும் அக்னியால் முடியவில்லை. அதன் பிறகு

http://acharya.org

தேவர்களிடம் திரும்பிவந்து, அக்னி தன் அபஜயத்தை அறிவித்து நின்றான். தேவர்கள் வாயுவை அனுப்பினார்கள். யக்ஷனால் கேட்கப்பட்ட வாயுவும் நான் வாயுவென்றும், உலகிலுள்ளவையெல்லாவற்றையும் அசைக்கும் சக்தி தன்னிடமுள்ளதென்றும் சொன்னான். முன்போலவே யக்ஷனும் ஓர் புல்லையிட்டு அதை அசைக்கச் சொன்னான். தன்னால் இயன்ற வரையில் அசைக்கமுயன்றும் அசைக்க முடியவில்லை. ['தேந விநா த்ருணமபி ந சலதி—அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்ற பழமொழியை அனுஸந்திப்பது.] வாயுவும் யக்ஷனை அறியமுடியாமல் திரும்பியதைக்கண்ட தேவர்கள் இந்திரனை அனுப்பினார்கள். இந்திரன் வந்துகொண்டிருந்தபோது, அவனும் அவமானமடையலாகாது என்னும் பக்ஷபாதத்தினால் இந்திராநுஜனை பகவான் மறைந்தனன். அவ்விடத்திலேயே *ஹிமவானின் புத்திரியும், மிகவும் அழகுள்ளவளுமான பார்வதி* தோன்றினாள். அவளை ''இந்த யக்ஷன் யார்'' என்று இந்திரன் வினவினான். ''**ஸா ப்ரஹ்மேதி ஹோவாச । ப்ரஹ்மணோ வா ஏதத்விஜயே மஹீயத்வமிதி । ததோ ஹைவ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ॥**'' [அந்தப் பார்வதி ''ப்ரஹ்மமே அது; ப்ரஹ்மத்தினுடைய இந்த வெற்றியில் பெருமையடையுங்கள்'' என்றுரைத்தாள். அதன் பிறகு தேவர்கள் அந்த யக்ஷன் ப்ரஹ்மமே என்று அறிந்தார்கள்.] என்கிறபடியே, ஜ்ஞாநப்ரதனான சம்புவின் பத்னியானபடியால் பார்வதீதேவி தேவர்களுக்கு ப்ரஹ்மோபதேசம் செய்தாள். ப்ரஹ்மத்தை முதலில் அறிந்த இந்திரன் தேவர்களுக்குத் தலைவனாகவும், ப்ரஹ்மத்தை அருகில் கண்டவர்களான அக்னியும், வாயுவும் மிகச்சிறந்த தேவர்களாகவும் ஆயினர் என்று உபநிஷத் உரைக்கிறது.

கடோபனிஷத்தின் கண்டோக்தி.

இந்த உபநிஷத் தசோபநிஷத்துக்களில் முக்கியமானதாகும். இது யஜுர்வேதத்திலுள்ளது. இதில் நாசிகேதஸ்ஸுக்கும் யமனுக்கும் ஸம்வாதரூபமான உபதேசங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நாசிகேதஸ் என்னும் ருஷிபுத்ரன் யமனிடம் மூன்று வரங்கள் பெற்றான். அதில் மூன்றாவது வரம் பரமாத்மவிஷயமானது. அதில் மூன்றாவது வல்லியில்,

---

* ''உமாம் ஹைமவதீம்'' என்னும் பகுதியில் உகாரத்தை ஏவகாரப் பொருளதாகவும், மாசப்தத்தை லக்ஷ்மீவாசகமாகவும் கொண்டு ஹேமபூஷணங்கள் அணிந்த லக்ஷ்மீதேவி தோன்றினாள் என்று பொருள் கொள்வதுமுண்டு. இரு பொருள்களிலும் லக்ஷ்மியும், பார்வதியும் ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறுபட்டவர்களென்று விளங்குவதால் சாக்தமதம் தள்ளப்படுகிறது.

http://acharya.org

"விஜ்ஞாநஸாரதி$_2$ர் யஸ்து மந:ப்ரக்$_3$ரவாந்நர:
ஸோத்$_4$வந: பாரமாப்நோதி தத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$ம்"

[எவனொருவன் புத்தியை ஸாரதியாகவும், மநஸ்ஸைக் கடிவாளமாகவும் கொண்டு, (இந்திரியங்களாகிய குதிரைகள் பூட்டிய சரீரமாகிய ரதத்தைச்) செலுத்துகிறானோ, அவன் ஸம்ஸார மார்க்கத்திற்கு அக்கரையிலிருக்கும், விஷ்ணுவினுடைய பரமபதத்தை அடைகிறான்.] என்று ஸம்ஸாரத்திற்கு அக்கரையிலிருக்கும் லோகம் விஷ்ணுவினுடையதே என்று ஸ்பஷ்டமாகச் சொல்லிற்று. மற்றும் பல வாக்கியங்களில் அந்த விஷ்ணுவே பரமபுருஷனென்றும், பரமாத்மாவென்றும் சொல்லப்படுபவனென்று உரைத்தி, ஆறுவதுவல்லியில்,

"ய: பூர்வம் தபஸோ ஜாதமத்$_3$ப்$_4$ய: பூர்வமஜாயத |
கு$_3$ஹாம் ப்ரவிச்ய திஷ்ட$_2$ந்தம் யோ பூ$_4$தேபி$_4$ர் வ்யபச்யத ||"

[ஜலத்தில் நின்றும் முன்னொரு காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தால் பிறந்தவனும், குகையில் நுழைந்திருப்பவனுமான ஹிரண்யகர்ப்பனை எவனொருவன் சரீரேந்திரியங்களைக் கொடுத்துக் கடாக்ஷித்தானோ அவனே பரமாத்மா.] என்று அவனே பிரமனைப் படைத்தவன் என்று உதகோஷித்தது. "அங்கு$_3$ஷ்ட$_2$மாத்ர: புருஷோ மத்$_4$ய ஆத்மநி திஷ்ட$_2$தி" [கட்டைவிரலளவுள்ளவனாய் புருஷசப்தவாச்யனான நாராயணன் ஹ்ருதயத்தில் எழுந்தருளியிருக்கிறான்.] என்றும்,

"அங்கு$_3$ஷ்ட$_2$மாத்ர: புருஷோऽந்தராத்மா |
ஸதா$_3$ ஜநாநாம் ஹ்ருத$_3$யே ஸந்நிவிஷ்ட:" —என்றும்;

"ய ஏஷ ஸுப்தேஷு ஜாக$_3$ர்த்தி
காமம் காமம் புருஷோ நிர்மிமாண: |
ததே$_3$வ சுக்ரம் தத்$_3$ ப்$_3$ரஹ்ம
ததே$_3$வாம்ருதமுச்யதே ||"

[புருஷசப்தத்தினால் சொல்லப்படும் எவனொருவன், எல்லா ஜீவர்களும் உறங்குகையில் விழித்திருந்து தன்னுடைய ஸங்கல்பத்தினால் பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கிறானோ, அப்பரமபுருஷனே, ஒளியுள்ளவனென்றும், ப்ரஹ்மமென்றும், மோக்ஷப்ராப்யனென்றும் சொல்லப்படுகிறான்.] என்றும்,

"புருஷாந்ந பரம் கிஞ்சித் ஸா காஷ்டா$_2$ ஸா பராக$_3$தி:"

http://acharya.org

[புருஷனைக்காட்டிலும் மேலானதில்லை அவனே மேலான ப்ராப்யமாகவுமாயிருக்கிறான்.] என்றும்,

"அவ்யக்தாத்து பர: புருஷோ வ்யாபகோऽலிங்க$_3$ ஏவ ச।
யத்$_3$ ஜ்ஞாத்வா முச்யதே ஜந்துரம்ருதத்வஞ்ச க$_3$ச்ச$_2$தி॥"

[ஸர்வவ்யாபியும், அடைவதற்கரியவனுமான புருஷன் இவனைக் காட்டிலும் மேலானவன். அவனை அறிந்தவன் முக்தியடைகிறான்.] என்றும், நாராயணனுக்கே அஸாதாரணமானதும், புருஷஸூக்தாதிகளில் சொல்லப்பட்டதுமான புருஷசப்தத்தைப் பலதடவை படித்ததிலிருந்தும் இவ்வுபநிஷத் நாராயணனையே சொல்லுகிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்குகிறது. "ஸா காஷ்டா ஸா பரா க$_3$தி:" என்று சொல்லி, "நாராயணம் பராயணம்" என்று நாராயணஸூக்தத்திலும், "சரணம் க$_3$திர் நாராயண:" என்று ஸுபாலோபநிஷத்திலும் சொல்லப்பட்ட நாராயணனே இவன் என்று உணர்த்துகிறது. இத்துடன் நில்லாமல், ஐந்தாவதுவல்லியில்,

"மத்$_4$யே வாமநமாஸீநம் விச்வே தே$_3$வா உபாஸதே"

[ஹ்ருதயகமலத்தின் நடுவில் எழுந்தருளியிருக்கும் வாமனனான பகவானை எல்லா தேவர்களும் உபாஸிக்கிறார்கள்] என்று பகவான் உகந்தருளிய திருநாமங்களில் ஒன்றான வாமனநாமத்தையும் படித்தது. மேலும், ஐந்தாவது வல்லியின் ஒன்பதாவது மந்திரத்திலிருந்து ஆரம்பித்துப் பன்னிரண்டாவது மந்திரம் வரையிலுள்ள ஒவ்வொரு மந்திரத்திலும் "ஏகஸ்ததா$_2$ ஸர்வபூ$_4$தாந்தராத்மா" என்று படித்ததன் மூலம் "ஏஷ ஸர்வபூ$_4$தாந்தராத்மா......ஏகோ நாராயண:" என்னும் ஸுபாலோபநிஷத்வாக்யத்தில் உத்கோஷிக்கப்படும் ஸர்வாந்தர்யாமியான நாராயணனே இங்கும் சொல்லப்படுபவன் என்று கரதலாமலகமாகக் காட்டிற்று. இப்படி முதலிலிருந்து முடிவுவரையில் பரமபுருஷனான விஷ்ணுவையே இவ்வுபநிஷத் உத்கோஷிப்பதால், இதுவும் பகவத்பரமே என்பது ஸ்பஷ்டமாகத் தேறி நின்றது.

ப்ரச்னோபனிஷத்தின் ப்ரஹ்மோபதேசம்.

இவ்வுபநிஷத் அதர்வணவேதத்திலுள்ளது. இது ப்ரச்நோத்தரரூபமாயிருப்பதால் ப்ரச்நோபநிஷத் எனப்படுகிறது. முதல் ப்ரச்நத்தில் பரப்ரஹ்மத்தை உபதேசிக்கையில்

http://acharya.org

"விச்வரூபம் ஹரிணம் ஜாதவேதஸம்
பராயணம் ஜ்யோதிரேகம் தபந்தம்"

என்று உத்கோஷிக்கப்பட்டது. இதிலுள்ள ஒவ்வொரு பதமும் நாராயணனையே குறிக்கின்றதென்பதை விவரித்துக்காட்டுவோம்.

(விச்வரூபம்) உலகங்களையெல்லாம் உருவாகக்கொண்டிருப்பவன். "விச்வரூபாய வை நம:" என்று உத்தரநாராயணத்தில் நாராயணனைக் குறித்து விச்வரூபசப்தம் ப்ரயோகிக்கப்பட்டதை உணர்த்துகிறது. "விச்வாத்மாநம்" என்றும், "யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேபி வா। அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:॥" என்றும் நாராயணன் எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பதையும், ஸகலவஸ்துக்களும் இவனுக்கு உடலாயிருப்பதையும் உத்தரநாராயணம் உரைத்ததன்றே. (ஹரிணம்) 'ஹரி' என்னும் அஸாதாரணமான திருநாமத்தை உடையவன். ணகாராந்தமாயிருப்பது சாந்தஸம். "விச்வம் நாராயணம் ஹரிம்" என்று நாராயணாநுவாகத்தில் சொல்லியதை உணர்த்துகிறது. இத்திருநாமத்திற்கு, "ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதிகளை ஸம்ஹரிப்பவன" என்றும், 'ஆச்ரிதர்களுடைய பாபத்தைப் போக்கடிப்பவன்' என்றும், 'கண்டவர்களுடைய நெஞ்சையெல்லாம் தன்னிடத்திலே ஈடுபடுத்துமவன்' என்றும் பல பொருள்களுண்டு.

"ப்ரஹ்மாணமிந்த்ரம் ருத்ரஞ்ச யமம் வருணமேவ ச।
ப்ரஸஹ்ய ஹரதே யஸ்மாத் தஸ்மாத் ஹரிரிஹோச்யதே॥"

[பிரமன், இந்திரன், ருத்திரன், யமன், வருணன் ஆகியவர்களை பலாத்காரமாக ஸம்ஹரிப்பவனாகையால் ஹரியெனப்படுகிறான்.] என்றும்,

"ஹரிர் ஹரதி பாபாநி துஷ்டசித்தைரபி ஸ்ம்ருத:।
அநிச்சயாऽபி ஸம்ஸ்ப்ருஷ்டோ தஹத்யேவ ஹி பாவக:॥

[கெட்ட மனஸ்ஸையுடையவர்களால் நினைக்கப்பட்டபோதிலும் ஹரி பாபத்தைப் போக்கடிக்கிறான். இஷ்டப்படாமல் தொடப்பட்ட போதிலும் அக்னி தஹிந்தே திருமன்றோ] என்றும் சொல்லிற்றன்றோ. (ஜாதவேதஸம்) வேதங்களுக்குப் பிறப்பிடமாயுள்ளவன். "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" [எவனொருவன் பிரமனை முன் படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசித்தனனோ...] என்ற வாக்கியத்தை நினைக்கிறது.

http://acharya.org

நாராயணனே பிரமனைப் பிறப்பித்து, அவனுக்கு வேதமோதுவித்தவன் என்பது ஸுப்ரஸித்தமன்றோ. (பராயணம்) மேலான ப்ராப்யப்ராபகங்களாயிருப்பவன். "நாராயணம் மஹாஜ்ஞேயம் விச்வாத்மாநம் பராயணம்" என்ற நாராயணஸூக்த வாக்யத்தில் சொல்லப்பட்ட நாராயணனே இங்கு சொல்லப்படுமவனென்பதில் ஸந்தேஹமுமுண்டோ? (ஜ்யோதிரேகம்) ஒப்பற்ற சோதியுருவாயிருப்பவன். "நாராயணபரோ ஜ்யோதி:" என்ற நாராயணஸூக்த ச்ருதியை அறிவிக்கிறது. (ஏகம்) ஒப்பற்றவன். "பரமம் ப்ரபு$_4$ம் நாராயணம்" என்று நாராயணனுவாகத்திலும் "தி$_3$வ்யோ தே$_3$வ ஏகோ நாராயண:" என்று ஸுபாலோபனிஷத்திலும் சொல்லப்பட்டவனென்று உணர்த்துகிறது. "ஸதே$_3$வ ஸோம்யேத$_3$ம் அக்$_3$ர ஆஸீத் | ஏகமேவாத்$_3$விதீயம்" என்றும், "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் | ந ப்$_3$ரஹ்மா நேசாந:|" என்றும் காரணவாக்யங்களில் சொன்ன முழுமுதல்வன் என்றும் உத்கோஷிக்கிறது. (தபந்தம்)

"தஸ்ய மத்$_4$யே மஹாநக்$_3$நிர் விச்வார்ச்சிர் விச்வதோமுக$_2$: |"
ஸந்தாபயதி ஸ்வம் தே$_3$ஹமாபாத$_3$தலமஸ்தகம் ||

[அந்த ஹ்ருதயமத்தியில் தேஹமெங்கும் பரவியதும், எங்கும் ஜ்வாலைகளையுடையதுமான பெரிய ஜாடராக்னி இருக்கின்றது. அது தேஹத்தில் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையிலும் சூடு படுத்துகின்றது.] என்று நாராயணஸூக்தத்திலும்,

"அஹம் வைச்வாநரோ பூ$_4$த்வா ப்ராணிநாம் தே$_3$ஹமாச்ரித: |
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்வித$_4$ம் ||"

[ப்ராணிகளின் தேஹத்தை ஆச்ரயித்திருக்கும் வைச்வாநராக்னியானவனாய், ப்ராணன், அபானம் முதலான வாயுக்களுடன் கூடிக் கொண்டு நான்குவிதமான ஆகாரங்களையும் நான் ஜரிக்கிறேன்.] என்று கீதையிலும் சொல்லப்பட்டபடியே ஜாடராக்னியை சரீரமாகக் கொண்டு தபிப்பவன். இதிலிருந்தும் இம்மந்திரம் நாராயணஸூக்த ப்ரதிபாத்யனான நாராயணனையே சொல்லுகிறதென்று தெளிவாகிறது. (தபந்தம்)

"ந தத்ர ஸூர்யோ பா$_4$தி ந சந்த்$_3$ரதாரகம்
நேமா வித்$_3$யுதோ பா$_4$ந்தி குதோऽயமக்$_3$நி: |
தமேவ பா$_4$ந்தமநுபா$_4$தி ஸர்வம்
தஸ்ய பா$_4$ஸா ஸர்வமித$_3$ம் விபா$_4$தி ||

http://acharya.org

[அப்பரமபுருஷனிடம் ஸூர்யனும், சந்திரனும், நக்ஷத்திரங்களும் மின்னலும் ஒளிவிடமாட்டா; அக்னியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஒளிவிடாநிற்கும் அவனை அனுஸரித்தே எல்லாப் பொருள்களும் ஒளிவிடுகின்றன. அவனுடைய ஒளியாலேயே இவை பிரகாசிக்கின்றன.] என்று கடோபனிஷத்தில் கோஷித்தபடியே ஸூர்யன் முதலிய பதார்த்தங்களைக் காட்டிலும் பிரகாசிப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

(தபந்தம்) "ஆதித்யவர்ணம்" என்றும், "நீலதோயத$_{3}$மத்$_{4}$யஸ்த$_{2}$ா வித்$_{3}$யுல்லேகே$_{2}$வ ப$_{4}$ாஸ்வரா" என்றும், "புருஷம் க்ருஷ்ணபிங்க$_{3}$ளம்" என்றும் புருஷஸூக்த நாராயணானுவாகங்களில் சொல்லப்பட்ட திவ்யமங்களவிக்ரஹத்துடன் பிரகாசிப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். இம்மாதிரியாக ப்ரச்நோபனிஷத்தின் ஆரம்பத்தி லிருக்கும் இம்மந்திரம் புருஷஸூக்த நாராயணாநுவாக ஸுபாலோப னிஷதாதிகளில் சொல்லப்பட்ட நாராயணனே இவ்வுபனிஷத் திற்கும் விஷயமாயிருப்பவன் என்று முடிவுகட்டித்தருகிறது. நான் காவது ப்ரச்னத்தில்,

"ஸ யத$_{2}$ா ஸோம்ய வயாம்ஸி வாஸோவ்ருக்ஷம் ஸம்ப்ரதிஷ்ட$_{2}$ந்தே
ஏவம் ஹவை தத் ஸர்வம் பர ஆத்மநி ஸம்ப்ரதிஷ்ட$_{2}$தே ||"

[குழந்தாய்! பக்ஷிகள் தாங்கள் வாழும் மரத்தை எப்படிப் பற்றி நிற்கின்றனவோ, அப்படியே எல்லாப் பொருள்களும் பரமாத்மாவி னிடம் நிலைநிற்கின்றன.] என்று 'ஆத்மா நாராயண: பர:' எனப் படும் நாராயணனே ஸர்வாச்ரயபூதனென்பதை உணர்த்தி,

"ப்ருதி$_{2}$வீ ச ப்ருதி$_{2}$வீமாத்ரா ச ஆபச்சாபோமாத்ரா ச, தேஜச்ச தேஜோமாத்ரா ச, வாயுச்ச வாயுமாத்ரா ச, ஆகாசச்- சாகாசமாத்ரா ச, சக்ஷுச்ச த்$_{3}$ரஷ்டவ்யஞ்ச, ச்ரோத்ரஞ்ச ச்ரோத வ்யஞ்ச, க்$_{4}$ராணஞ்ச க்$_{4}$ராதவ்யஞ்ச, ரஸச்ச ரஸயிதவ்யஞ்ச த்வக்ச ஸ்பர்சயிதவ்யஞ்ச, வாக் ச வக்தவ்யஞ்ச, ஹஸ்தௌ ச ஆத$_{3}$ாதவ்யஞ்ச, உபஸ்த$_{2}$ஞ்ச ஆநந்த$_{3}$யிதவ்யஞ்ச, பாயுச்ச விஸர்ஜயிதவ்யஞ்ச, பாதௌ$_{3}$ ச க$_{3}$ந்தவ்யஞ்ச, மநச்ச, மந்தவ்யஞ்ச பு$_{3}$த்$_{3}$தி$_{4}$ச்ச போ$_{3}$த்$_{3}$த$_{4}$வ்யஞ்ச அஹங்காரச்ச அஹங்கர்த்தவ்யஞ்ச, சித்தஞ்ச சேதயிதவ்யஞ்ச, தேஜச்ச வித்$_{3}$யோதயிதவ்யஞ்ச, ப்ராணச்ச வித$_{4}$ாரியதவ்யஞ்ச || ஏஷ

http://acharya.org

ஹி த்$_3$ரஷ்டா ஸ்ப்ரஷ்டா ச்ரோதா க்$_4$ராதா ரஸயிதா மந்தா போ$_3$த்$_3$தா$_4$ கர்த்தா விஜ்ஞானாத்மா புருஷ: । பரே ஆத்மநி ஸம்ப்ரதிஷ்ட$_2$தே ॥"

[ப்ருதிவியும் கந்த தன்மாத்ரையும், ஜலமும் ரஸதந்மாத்ரையும், அக்னியும் ரூபதன்மாத்ரையும், வாயுவும் ஸ்பர்சதந்மாத்ரையும், ஆகாசமும் சப்ததன்மாத்ரையும், கண்ணும் காண்பனவும், காதும் கேட்பனவும், மூக்கும் முகர்வனவும், நாக்கும் ருசிப்பனவும், தோலும் தொடுவனவும், வாயும் சொல்வனவும், கையும் கைக்கொள்பவை யும், குறியும் (அதனாலேற்படும்) போகங்களும், விஸர்ஜநேந்திரிய மும் அதனால் வெளியிடப்படுபவையும், பாதங்களும் செல்லுமிடங் களும், மனஸ்ஸும் நினைக்கப்படுமவையும், புத்தியும் அறியப்படு மவையும், அஹங்காரமும் அஹங்கரிக்கப்படுமவையும், சித்தமும் சிந்திக்கப்படுபவையும், ஒளியும் பிரகாசிக்கப்படுபவையும், ப்ராண னும் தரிக்கப்படுபவையும், (ஆகிய எல்லா அசேதன தத்துவங் களும்) காண்பவன், தொடுபவன், கேட்பவன், முகருமவன், ருசிப்பவன், நினைப்பவன், அறிபவன், செய்பவன் (எனப்படும்) ஜ்ஞானஸ்வரூபியான சேதனதத்துவமும் அழிவற்றவனான பரமாத் மாவிடம் நிலைநிற்கின்றன.] என்று படிக்கிறது. இந்த வாக்யத்தில் சொல்லப்படுமவன் நாராயணனே என்பதை

"சக்ஷுச்ச த்$_3$ரஷ்டவ்யஞ்ச நாராயண: । ச்ரோத்ரஞ்ச ச்ரோதவ்யஞ்ச நாராயண: । க்$_4$ராணஞ்ச க்$_4$ராதவ்யஞ்ச நாராயண: । ஜிஹ்வா ச ரஸயிதவ்யஞ்ச நாராயண: । த்வக்ச ஸ்பர்சயிதவ்யஞ்ச நாராயண: । மநச்ச மந்தவ்யஞ்ச நாராயண: பு$_3$த்$_3$தி$_4$ச்ச போ$_3$த்$_3$த$_1$வ்யஞ்ச நாராயண: । அஹங்காரச்ச அஹங்கர்த்தவ்யஞ்சநாராயண: । சித்தஞ்சசேதயிதவ்யஞ்சநாராயண: । வாக் ச வக்தவ்யஞ்ச நாராயண: । ஹஸ்தௌ ச தா$_3$தவ்யஞ்ச நாராயண: । பாதௌ$_3$ ச க$_3$ந்தவ்யஞ்ச நாராயண: । பாயுச்ச விஸர்ஜயிதவ்யஞ்ச நாராயண: । உபஸ்த$_2$ச்ச ஆநந்த$_2$யிதவ்யஞ்ச நாராயண: । தா$_4$தா விதா$_4$தா கர்த்தா விகர்த்தா தி$_3$வ்யோ தே$_3$வ ஏக ஏவ நாராயண: ॥"

[கண்ணும் காண்பனவும் நாராயணனே; காதும் கேட்பனவும் நாராயணனே; மூக்கும் முகர்வனவும் நாராயணனே; நாக்கும் ருசிப்பனவும் நாராயணனே; தோலும் தொடுவனவும்

http://acharya.org

நாராயணனுடையனவே; மனமும் நினைப்பனவும் நாராயணனுடையனவே; அறிவும் அறிவனவும் நாராயணனுடையனவே; அஹங்காரமும் அஹங்கரிக்கப்படுபவையும் நாராயணனுடையனவே; சித்தமும் சிந்திக்கப்படுபவையும் நாராயணனுடையனவே; கையும் கொடுக்கப்படுபவையும் நாராயணனுடையனவே; பாதங்களும் செல்லுமிடங்களும் நாராயணனுடையனவே; விஸர்ஜனேந்த்ரியமும் விஸர்ஜனம் செய்யப்படுபவையும் நாராயணனுடையனவே; குறியும் போகங்களும் நாராயணனுடையனவே; தரிப்பவனும் ஸ்ருஷ்டிப்பவனும், செய்பவனும், விகாரமடைபவனும் பரமபதநிலயனான தேவன் நாராயணன் ஒருவனே.] என்று ஸுபாலோபநிஷத் ஸ்பஷ்டமாக உரைக்கின்றது. இந்த ப்ரச்நோபநிஷத் நாராயணனையே சொல்லுகிறதென்பதற்கு இதைவிட வேறுமோர் ஆதாரம் வேண்டுமோ? இவ்வர்த்தத்தை.

"அத$_{2}$ நித்யோ நாராயண: | ப்$_{3}$ரஹ்மா நாராயண: | ஶிவச்ச நாராயண: | ஶக்ரச்ச நாராயண: | காலச்ச நாராயண: | தி$_{3}$ஶச்ச நாராயண: | விதி$_{3}$ஶச்ச நாராயண: | ஊர்த்$_{4}$வம் ச நாராயண: | அத$_{4}$ச்ச நாராயண: | அந்தர்ப$_{3}$ஹிச்ச நாராயண: | நாராயண ஏவேத$_{3}$ம் ஸர்வம் யத்$_{3}$ பூ$_{4}$தம் யச்ச ப$_{4}$வ்யம் |"

[நித்யவஸ்துகளும் நாராயணனுடையனவே; பிரமனும் நாராயணனுக்கு வசப்பட்டவனே; சிவனும் நாராயணனை அந்தர்யாமியாகக் கொண்டவனே; இந்திரனும் நாராயணாத்மகனே; காலமும் நாராயணனுடையதே; திக்குகளும் நாராயணனுடையவே; விதிக்குகளும் நாராயணனுடையனவே; மேலும் நாராயணனுடையதே; கீழும் நாராயணனுடையதே; உள்ளும் புறமுமுள்ளவையெல்லாம் நாராயணாத்மகமே; சென்றவையும், வருமவையும், இருப்பவையுமாகிய எல்லாம் நாராயணனை அந்தர்யாமியாகக் கொண்டவையே.] என்று நாராயணோபநிஷத்தும் நவின்றது.

"யச்ச கிஞ்சித் ஜக$_{3}$த்யஸ்மிந் த்$_{3}$ருச்யதே ச்ரூயதேऽபி வா |
அந்தர் ப$_{3}$ஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி$_{2}$த: ||"

[இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமான எல்லாவற்றையும் உள்ளும் புறமும் நாராயணன் வியாபித்து நிற்கிறான்.] என்று நாராயணானுவாகமும் உத்கோஷிக்கின்றது. அடுத்தபடியாக இந்த ப்ரச்நோபநிஷத்தின் பஞ்சமப்ரச்நத்தில்

http://acharya.org

"ய: புநரேதம் த்ரிமாத்ரேணைவ ஓமித்யேதேநைவ அக்ஷரேண பரம் புருஷமபி$_4$த்$_4$யாயீத। ஸ தேஜஸி ஸூர்யே ஸம்பந்ந:। யதா$_2$ பாதோ$_3$தர$_3$ஸ் த்வசா விநிர்முச்யதே। ஏவம் ஹ வை ஸ பாப்மநா விநிர்முக்த: ஸஸாமபி$_4$ருந்நீயதே ப்$_3$ரஹ்ம லோகம்। ஸ ஏதஸ்மாத் ஜீவக$_4$நாத் பராத்பரம் புரிசயம் புருஷமீக்ஷதே।"

[மூன்று மாத்திரைகளுடைய 'ஓம்' என்னும் இந்த ப்ரணவமாகிற எழுத்தினால், எவனொருவன் பரமபுருஷனை உபாஸிக்கிறானோ, அவன் தேஜோமயமான ஸூர்யனைக் கடந்து, ஸர்ப்பமானது தோலினின்றும் விடுபடுவதுபோல் பாபங்களிலிருந்து விடுபட்டு, ஸாமகானம் செய்யும் புருஷர்களால் ப்ரஹ்மத்தினுடைய லோகத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அவன் இந்த ஸம்ஸார மண்டலத்தைக்காட்டிலும் மேலான சுத்தாத்மஸ்வரூபத்தையும்விட உயர்ந்தவனும், பரநிவைகுண்டத்தில் வஸிப்பவனுமான புருஷனைக் காண்கிறான்.] என்று படித்தது. இதுவும் நாராயணனையே சொல்லுகிறதென்பதை விளக்குவோம். (ய: புநரேதம்......பரம் புருஷமபித்யாயீத) 'பரம் புருஷம்' என்றதால் பரமபுருஷனான நாராயணனே இங்கு சொல்லப்படுபவன் என்று உணர்த்துகிறது.

"த்$_3$வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரச்சாக்ஷர ஏவ ச।
க்ஷர: ஸர்வாணி பூ$_4$தாநி கூடஸ்தோ$_2$ऽக்ஷர உச்யதே॥
உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா$_3$ஹ்ருத:।
யோ லோகத்ரயமாவிச்ய பி$_3$பர்த்யவ்யய ஈச்வர:॥
யஸ்மாத் க்ஷரமதீதோऽஹம் அக்ஷராத$_3$பி சோத்தம:।
தஸ்மாத்$_3$ வேதே$_3$ ச லோகே ச ப்ரதி$_2$த: புருஷோத்தம:॥"

[க்ஷரன் என்றும், அக்ஷரன் என்றும் லோகத்தில் புருஷர்கள் இருவிதமானவர்கள். எல்லா ஸம்ஸாரிசேதனரும் க்ஷரபுருஷராவர்; கூடஸ்தனான முக்தாத்மா அக்ஷரனெனப்படுகிறான். எவனொருவன் மூவுலகங்களிலும் நுழைந்து (அவற்றை) தரிப்பவனாகவும், குறைவற்றவனாகவும், நியமிப்பவனாகவும், பரமாத்மா என்று சொல்லப்படுமவனாகவும் விளங்குகிறானோ, அந்தப் பரமபுருஷன் (முன்சொல்லப்பட்ட புருஷர்களைக்காட்டிலும்) வேறுபட்டவன். நான் ஞானத்தால் ஏற்றக்குறைவுகளுள்ள க்ஷரபுருஷனை அதிக்ரமித்திருப்பதாலும், ஞானத்தில் ஏற்றத்தாழ்வுகளற்ற முக்தபுருஷனைக்காட்டி

http://acharya.org

நாம் மேலானவனுயிருப்பதாலும், ச்ருதியிலும், ஸ்ம்ருதியிலும் புருஷோத்தமன் என்று பிரஸித்தி பெற்றிருக்கிறேன்.] என்று கீதையில் ஸர்வேச்வரன் தானே அருளிச்செய்தானன்றே. "புருஷோத்தம: க:?" [எவன் புருஷோத்தமனெனப்படுகிறான்?] என்று ஆளவந்தாரும் அருளிச்செய்தார். சிவபக்தரான காளிதாஸனும் "ஹரிர் யதைக: புருஷோத்தம: ஸ்ம்ருத:" [எப்படி ஹரி ஒருவனே புருஷோத்தமனெனப்படுகிறானே......] என்றனனன்றே. (ய: புநரேதம்...... பரம் புருஷமபித்யாயீத)

"மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால்
மூன்றெழுத்தாக்கி மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்(கு) இரக்கம் நன்குடைய
எம் புருடோத்தமன்............"

என்று பெரியாழ்வார் இம்மந்திரார்த்தத்தை அருளிச்செய்தார். "மூன்று எழுத்துக்களைக்கொண்ட (மூன்று மாத்திரைகளைக்கொண்ட) ப்ரணவத்தை, மூன்று எழுத்துக்களாலான நிருக்தமென்னும் ப்ரக்ரியையினால் அகார உகார மகாரமாகிய மூன்று எழுத்துக்களாக ஆக்கி, அம்மூன்று எழுத்துக்களையும் கொண்ட ப்ரணவத்தை அநுஸந்திப்பவர்களுக்கு அருள்செய்யும் புருஷோத்தமன்" என்ற இப்பாசுரத்தின் பொருள் இந்த ச்ருதியின் பொருளைப் பெரும்பாலும் ஒத்திருப்பதை உய்த்துணர்வது. (ஓமித்யேதேநைவ அக்ஷரேண பரம் புருஷம்) நாராயணவல்லியில்

"யத்$_3$வேத$_3$ாதெ$_3$ள ஸ்வர: ப்ரோக்தோ வேத$_3$ாந்தே ச
ப்ரதிஷ்டி$_2$த: |
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பர: ஸ மஹேச்வர: ||

[வேதத்தின் ஆதியிலும், முடிவிலும் யாதொரு ஸ்வரமானது உச்சரிக்கப்படுகிறதோ, தனக்குக் காரணமான அகாரத்தில் ஒடுங்கின அவ்வோங்காரத்திற்கு எவனொருவன் பொருளோ அவனே மஹேச்வரன்.] என்று சொல்லி, அடுத்தபடியாக "ஸஹஸ்ரசீர்ஷம் தே$_3$வம்" என்று தொடங்கி அந்த ஸர்வேச்வரன் நாராயணனே என்று நிர்ணயித்தது. அவனே இங்கு பரமபுருஷன் என்று சொல்லப்படுகிறான். அதர்வசிகையிலும்,

"ப்ரத$_2$மா ரக்தபீதா மஹத்$_3$ப்$_3$ரஹ்மதை$_3$வத்யா | த்$_3$விதீயா வித்$_3$யுமதீ க்ருஷ்ணா விஷ்ணுதை$_3$வத்யா | த்ருதீயா ஶுபா$_4$
வி—29

http://acharya.org

சுக்லா ருத்₃ரதை₃வத்யா | யாவஸாநே(அ)ஸ்ய சதுர்த்₂யர்த்₄த₄மாத்ரா வித்₃யுமதீ ஸர்வவர்ணா புருஷதை₃வத்யா ||''

[மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறத்தையுடைய (ப்ரணவத்தின்) முதல் மாத்திரை பெரியோனாகிய பிரமனை தேவதையாகக்கொண்டது; ஒளியுள்ளதும், கருநிறமானதுமான இரண்டாவது மாத்திரை விஷ்ணுவை தேவதையாகக்கொண்டது; சுபமானதும், வெளுப்பு நிறத்தையுடையதுமான மூன்றாவது மாத்திரை ருத்ரனை தேவதையாகக்கொண்டது. கடைசியிலுள்ள நான்காவது அர்த்தமாத்ரை புருஷனை தேவதையாகக்கொண்டது.] என்று பூர்ணமான ப்ரணவத்திற்கு தேவதை புருஷசப்தவாச்யன் என்று படிக்கப்பட்டது. இங்கு சொல்லப்பட்ட விஷ்ணுசப்தம் பரமபுருஷனான நாராயணனுடைய அவதாரமூர்த்தியான விஷ்ணுவைக் குறிக்கிறது. கீதையில் பகவானும்

''ஓமித்யேகாக்ஷரம் ப்₃ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந் |
ய: ப்ரயாதி த்யஜந் தே₃ஹம் ஸ யாதி பரமாம் க₃திம் ||''

[வேதங்களைத் தன்னுள் கொண்டதும் ஓரக்ஷரமாயிருப்பதுமான 'ஓம்' என்னும் எழுத்தை உச்சரித்துக்கொண்டும், (அதற்குப் பொருளான) என்னை நினைத்துக்கொண்டும் எவனொருவன் உடலை விடுகிறானோ, அவன் மேலான கதியை அடைகிறான்.] என்று சொல்லப்பட்டது. ஹரிவம்சத்தில் ருத்ரனாலும்,

''ஓமித்யேவம் ஸத₃ா விப்ரா: பட₂த₄்வம் த்₄யாத கேசவம்''

[ஓ! ப்ராஹ்மணர்களே! ஓம் என்னும் எழுத்தையே எப்போதும் படியுங்கள்; (அதற்குப் பொருளான) கேசவனை தியானியுங்கள்.] என்று உரைக்கப்பட்டது.

''ஸ்வதே₃ஹமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம் |
த்₄யாநநிர்மத₂நாப்₄யாஸாத் விஷ்ணும் பச்சேத் ஹ்ருதி₃ ஸ்தி₂தம் ||''

[தன்னுடைய தேஹத்தைக் கீழே வைக்கப்படும் அரணிக்கட்டையாகவும், ப்ரணவத்தை மேலேயுள்ள அரணிக்கட்டையாகவும் கொண்டு தியானமாகிற கடைதலைப் பலதடவை செய்தால் ஹ்ருதயத்திலுள்ள விஷ்ணுவாகிற சோதியைக் காணக்கடவன்.] என்று யோகயாஜ்ஞவல்க்யத்திலும் சொல்லப்பட்டது. ''க்லேசகர்மவிபாகாசயை: அபராம்ருஷ்ட: புருஷவிசேஷ ஈச்வர: | தஸ்ய வாசக: ப்ரணவ:''

[துக்கம், கர்மபலன், வாஸனை ஆகியவைகளால் தொடப்படாத ஒரு

http://acharya.org

புருஷன் ஈச்வரன். ஆனதுக்கு வாசகம் ப்ரணவம்.] என்று பாதஞ்ஜலயோகஸூத்ரத்திலும் (1-14, 15) சொல்லப்பட்டது. பரமபுருஷனாகிற நாராயணனே ப்ரணவவாச்யனென்பதற்கு மற்றும் பல ப்ரமாணங்களும் உள. அவற்றை விரிவிற்கஞ்சி விடுத்தோம்.

(ஸ தேஜஸி ஸூர்யே ஸம்பந்ந:) இப்படி ப்ரணவத்தினால் பரமபுருஷனை தியானிப்பவன் ஸூர்யமண்டலத்திற்குச் செல்கிறான்.

''காரார் புரவியேழ் பூண்ட தனியாழி
தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக்கீண்டு புக்கு
ஆராவமுதம் அங்கெய்தி அதினின்றும்
வாராதொழிவதொன்றுண்டே?'' —என்று

திருமங்கையாழ்வார் இவ்வர்த்தத்தை அருளிச்செய்தார். இவ்விஷயத்தில் மற்றும் பல ப்ரமாணங்களை ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்களில் காணலாம். (யதா₂ பாதோ₃தர:......விநிர்முக்த:) பாம்பானது சட்டையை உரித்துச் செல்வதுபோலே பாபத்தை இந்த ஜீவன் விட்டுச்செல்கிறான்.

''ஸர்வத₄ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ।
அஹம் த்வா ஸர்வபாபேப்₄யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:॥''

[எல்லா தர்மங்களையும் வாஸனையுடன் விட்டு என்னை ஒருவனையே சரணமடை. நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்.] என்ற நாராயணனைத்தவிர வேறு யாரால் இப்பாபவிமோசனத்தைச் செய்யமுடியும்? ''யதே₂ஷீக தூலமக்₃நௌ ப்ரோதம் ப்ரதூ₃யேத। ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூ₃யந்தே॥'' [நெருப்பிலிட்ட இஷீகப்பஞ்சு கொளுத்தப்படுவதுபோல் இவனுடைய பாபங்களெல்லாம் கொளுத்தப்படுகின்றன.] என்று வேதத்திலும், ''போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்று கோதையாலும்,

''நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம்
சும்மெனுதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே''

என்று பெரியாழ்வாராலும் இவ்விஷயம் சொல்லப்பட்டது. (ஸாமபிருந்நீயதே ப்ரஹ்மலோகம்) ''ஹா வுஹா வுஹா வு'' என்று ஸாமகானம் செய்யும் ஆதிவாஹிகர்களான நித்யஸூரிகளால் ப்ரஹ்மத்தின் உலகமாகிற ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். 'ஸாமபி₄:' என்னும் பதத்துக்கு 'ஸாமகானம் செய்யு

http://acharya.org

மைவர்கள்' என்றும், 'நல்வார்த்தைகளைச் சொல்லுமவர்கள்' என்றும் ச்ருதப்ரகாசிகாசாரியர் ஸூத்ரகார்யாதிகரணத்தில் பொருளுரைத்தார்.

"எழுமினென்று இருமருங்கு இசைத்தனர் முனிவர்கள்
வழியிது வைகுந்தற்கென்று வந்தெதிரே" —என்றும்.

"குடியடியார் இவர் கோவிந்தன் தனக்கென்று
முடியுடை வானவர் முறைமுறை எதிர்கொள்ள"—என்றும்

முக்தபுருஷர்களை எல்லாரும் நல்வார்த்தைகள் சொல்லி வரவேற்பதை விவரித்தருளினாரன்றோ ஆழ்வார். (ஏதஸ்மாத் ஜீவக$_1$நாத் பராத் பரம் புரிசயம் புருஷமீக்ஷதே) இந்த முக்தபுருஷன் ஸம்ஸாரியைக்காட்டிலும் மேலான முக்தனைக்காட்டிலும் உயர்ந்தவனும், "தே$_2$வாநாம்பூர யோத்$_4$யா" எனப்படும் ப்ரஹ்மபுரமாகிய பரமபதத்தில் பள்ளிகொள்ளுமவனுமான புருஷனைப் பார்க்கிறான். 'புரிசயம் புருஷம்' என்பதற்கு ஹ்ருதயகமலவாஸியான புருஷனை என்றும் பொருள் கொள்வர். இங்கு சொல்லப்படுமவன் நாராயணனே என்பதைத் தெளிவிப்பதற்காக மறுபடியும் புருஷஸூக்தத்தைப் படிக்கிறது பண்டைமறை.

அடுத்தபடியாக ஐந்தாவது ப்ரச்னத்திலும் பரம்பொருள் விஷயமாகப் புருஷஸூக்தத்தைப் பலதடவை படிக்கிறது ப்ரச்நோபநிஷத்.

"ஸ யதே$_2$மா நத்$_3$ய: ஸ்யந்த$_3$மாநா: ஸமுத்$_3$ராயணா: ஸமுத்$_3$ரம் ப்ராப்ய அஸ்தம் க$_3$ச்ச$_2$ந்தி பி$_4$த்$_3$யேதே தாஸாம் நாமரூபே ஸமுத்$_3$ர இத்யேவம் ப்ரோச்யதே। ஏவமேவாஸ்ய பரித்$_3$ரஷ்டு: இமா: ஷோட$_3$ச கலா: புருஷாயணா: புருஷம் ப்ராப்ய அஸ்தம் க$_3$ச்ச$_2$ந்தி பி$_4$த்$_3$யேதே தாஸாம் நாமரூபே புருஷ இத்யேவம் ப்ரோச்யதே। ஸ ஏஷோ அகலோ அம்ருதோ ப$_4$வதி। தத்$_3$ஷ ச்லோக:॥ அரா இவ ரத$_2$நாபௌ$_4$ கலா யஸ்மிந் ப்ரதிஷ்டி$_2$தா:। தம் வேத்$_3$யம் புருஷம் வேத$_3$ மா வோ ம்ருத்யு: பரிவ்யத$_2$ா இதி॥ தாந் ஹோவாச ஏதாவதே$_3$வாஹமேதத் பரம் ப்$_3$ரஹ்ம வேத$_3$ நாத: பரமஸ்தீதி॥"

[கடலைநோக்கி ப்ரவஹிக்கும்படியான நதிகள், அந்த ஸமுத்ரத்தை அடைந்தவுடன் மறைந்துவிடுகின்றன; அவைகளுடைய நாமரூபங்கள் நசித்துவிடுகின்றன; ஸமுத்ரமென்றே அவையும் சொல்லப்படுகின்றன; அம்மாதிரியே போக்தாவான இந்த ஜீவனுக்கு போகோப

http://acharya.org

காரணமாயிருப்பனவையும், புருஷனையே நாசகனாகக்கொண்டவையுமான ப்ராணன் முதலிய இந்தப் பதினாறு கலைகளும் புருஷனை அடைந்தவுடன் மறைந்துவிடுகின்றன; அவைகளின் நாமரூபங்கள் நசித்துவிடுகின்றன. புருஷன் என்றே சொல்லப்படுகின்றன; அந்தப் பரமபுருஷனொருவனே ப்ராணன் முதலிய கலையற்றவனாகவும், மரணமற்றவனாகவும் இருக்கிறான். அவனைப்பற்றிப் பின்வரும் ச்லோகம் படிக்கப்படுகிறது. 'ரதசக்கரத்தின் மத்யப்ரதேசத்தில் அரங்கள் இணைக்கப்பட்டிருப்பதுபோல், ப்ராணன் முதலிய கலைகள் எந்தப் புருஷோத்தமனிடம் நிலைநிற்கின்றனவோ, அறியத்தக்கவனான அந்தப் புருஷனை அறிந்து உங்களுக்கு ஸம்ஸாரம் தாபத்தைத் தராது.' அந்த சிஷ்யர்களைக்குறித்து ஆசாரியர் 'இந்தப் பரப்ரஹ்மத்தைப்பற்றி நான் இவ்வளவே அறிவேன்; இதற்குமேல் அறியேன்' என்று சொன்னார்.] என்று நான்குதடவைகள் புருஷஸப்தத்தைப்படித்து அவனே பரப்ரஹ்மமென்று ஓதிற்று. இக்காரணங்களால் இவ்வுபனிஷத் பரமபுருஷனும், ஹரி என்னும் திருநாமத்தை உடையவனும், ஓங்காரவாச்யனுமான நாராயணனையே ப்ரதிபாதிக்கின்றதென்பது அசைக்கமுடியாமல் தேறிநின்றது.

முண்டகோபனிஷத்தின் முடிவு.

இவ்வுபனிஷத் அதர்வணவேதத்திலுள்ளது. இதன் ஆரம்பத்திலேயே "ப்3ரஹ்மா தே3வாநாம் ப்ரத2ம: ஸம்ப3பூ4வ" [பிரமன் தேவர்களுள் முதலிலுண்டானான்] என்று ப்ரஹ்மாவின் உற்பத்தி பேசப்பட்டிருக்கிறதென்பதை முன்பே காட்டினோம். இந்த ப்ரஹ்மாவுக்கு உத்பாதகன் புருஷஸூக்தத்தினால் சொல்லப்படுபவனே என்பதையும் இவ்வுபனிஷத் பலவிடங்களில் உணர்த்தியிருக்கிறது. இதன் முதல்கண்டத்தில்,

"யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்
யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கச்சித்।
வ்ருக்ஷ இவ ஸ்தப்3தோ4 தி3வி திஷ்ட2த்யேக:
தேநேத3ம் பூர்ணம் புருஷேண ஸர்வம்॥"

[எவனைக்காட்டிலும் மேலானது வேறு ஒன்றுமில்லையோ, எவனைக்காட்டிலும் ஸூக்ஷ்மமானவனும், பெரியவனும் வேறொருவனுமில்லையோ, ஒன்றுக்கும் வணங்காத மஹாவ்ருக்ஷம்போல் பரமபதத்தில் எவனொருவன் எழுந்தருளியிருக்கிறானோ, அந்தப் புருஷனால் இது எல்லாம் நிறைந்திருக்கிறது.] என்று உத்கோஷிக்கப்பட்டது.

http://acharya.org

இதுவும் ஸர்வஸ்மாத்பரனை நாராயணனையே குறிக்கிறதென்பதை விளக்குவோம். இம்மந்திரத்தை நாராயணவல்லியானது பத்தாவது அநுவாகத்தில் படிக்கிற அடுத்த அனுவாகத்தில் இங்கு சொல்லப்படும் ஸர்வவ்யாபியான புருஷன் நாராயணனே என்று "யச்ச கிஞ்சித்......வ்யாப்ய நாராயண: ஸ்தி₁த:" முதலான வாக்கியங்களால் நிர்ணயித்தது. (யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்) "ந தத் ஸமச் சாப்$_1$யதி$_1$கச்ச த்$_4$ருச்யதே" [அவனுக்கு ஸமானமானவர்களும் மேலானவர்களும் கிடையாது.] என்றும், "பரமம் ப்ரபு$_4$ம் நாராயணம்" என்றும் வேதத்திலும், "ந த்வத்ஸமோஸ்த்யப்$_4$யதி$_4$க: குதோந்ய:" [உனக்கு ஸமானமானவர்களோ கிடையாது; (அப்படியிருக்க) உன்னைக்காட்டிலும் மேலானவனொருவன் எப்படி இருக்கமுடியும்?] என்று கீதையிலும்,

"ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் உத்$_3$த்$_4$ருத்ய பு$_4$ஜமுச்யதே |
வேத$_3$ாச்சா$_3$ஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தை$_3$வம் கேசவாத் பரம் ||"

[மூன்று தடவை ஸத்யம்செய்து கைதூக்கிநின்று சொல்லுகிறேன். வேதத்தைக்காட்டிலும் மேலான சாஸ்திரம் ஒன்றுமில்லை. கேசவனைக் காட்டிலும் மேலான தெய்வமில்லை.] என்று வேதவியாஸராலும் "ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா" என்றும், "ஒத்தாரும் மிக்கார்களும் தன்தனக்கின்றி நின்றானை" என்றும் ஆழ்வார்களாலும் இவ்வாக்கியம் விவரிக்கப்பட்டது. (யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோஸ்தி கச்சித்) எவனைக்காட்டிலும் ஸூக்ஷ்மமான வஸ்துவும், பெரிதான வஸ்துவும் கிடையாதோ.

"அணோரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மா கு$_3$ஹாயாம் நிஹிதோ஽ஸ்ய ஜந்தோ:"

[இந்த ஜந்துவின் ஹ்ருதயகுஹையில், அணுவைக்காட்டிலும் அணுவாகவும், மஹத்தைக்காட்டிலும் பெரிதாகவுமுள்ள பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான்.] என்றும்,

"அத: பரம் நாந்யத$_3$ணீயஸம் ஹி
பராத்பரம் யந் மஹதோ மஹாந்தம்"

[மிகச்சிறியதாகவும், பெரியவற்றைக்காட்டிலும் பெரிதாகவும் விளங்கும் இப்பரவஸ்துவைக்காட்டிலும் வேறொரு ஸூக்ஷ்மமான வஸ்து கிடையாது] என்றும் நாராயணவல்லியில் சொல்லப்பட்டவனே இங்கு உணர்த்தப்படுகிறவனென்று விளங்குகிறது. "கவிம்

http://acharya.org

புராணமநுசாஸிதாரம் அணோரணீயாம்ஸம்" [ஸர்வஜ்ஞனும், பழமையானவனும், உலகை நியமிப்பவனும், அணுவாகிய ஜீவனைக் காட்டிலும் ஸூக்ஷ்மமாயுள்ளவனுமான பகவானை] என்று கீதையிலும் சொல்லப்பட்டதன்றோ. (வ்ருக்ஷ இவ ஸ்தப்த:) வணங்காத வ்ருக்ஷம்போல் எவருக்கும் வணங்காதவனாய் விளங்குகிறான் இப்பரமபுருஷன். (திவி திஷ்டத்யேக:) "திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்று ஸுபாலோபநிஷத்தில் சொல்லப்பட்ட நாராயணனே இவனென்று உணர்த்துகிறது. (தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்) அந்தப் புருஷனால் இவையெல்லாம் நிறைந்திருக்கின்றன. "புருஷ ஏவேதம் ஸர்வம்" "விச்வாத்மாநம் பராயணம் நாராயணம்" "அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" என்று புருஷஸூக்தநாராயணாநுவாகாதிகளில் சொல்லப்பட்டவனே இவ்வுபநிஷத்திலும் உத்கோஷிக்கப்படுபவன் என்று உணர்த்துகிறது. (புருஷேண) பகவானுக்கே அஸாதாரணமான புருஷசப்தத்தைப் படிக்கிறது. இவைகளிலிருந்து இம்மந்திரம் பரமபுருஷனை நாராயணனையே ப்ரதிபாதிக்கிறதென்று தெளிவாகிறது. அடுத்தபடியாக இரண்டாவது கண்டத்தில்

"தப: ச்ரத்₃தே₄ யே ஹ்யுபவஸந்த்யரண்யே
சாந்தா வித்₃வாம்ஸோ பை₄க்ஷசர்யாம் சரந்த: ।
ஸூர்யத்₃வாரேண தே விரஜா: ப்ரயாந்தி
யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா ॥"

[தப:சப்தத்தினால் சொல்லப்படும் ப்ரஹ்மத்தையும், அவனிடம் பக்தியையும் எந்த வனவாஸிகளான ஸந்யாஸிகள் சாந்தர்களாயும் ஞானிகளாயுமிருந்துகொண்டு உபாஸிக்கிறார்களோ, அவர்கள் ஸூர்யமண்டலத்தின் நடுவில் சென்று மலமற்றவர்களாய், அழிவற்ற திவ்யமங்கள விக்ரஹத்தையுடைய புருஷன் வஸிக்கும் பரமபதத்தை அடைகிறார்கள்.] என்றும்,

"தஸ்மை ஸ வித்₃வாநுபஸந்நாய ஸம்யக்
ப்ரசாந்தசித்தாய சமாந்விதாய ।
யேநாக்ஷரம் புருஷம் வேத₃ ஸத்யம்
ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்₃ரஹ்மவித்₃யாம் ॥"

[மனஸ்ஸையும், வெளி இந்திரியங்களையும் நன்கு அடக்கினவனும், நன்கு அடைந்தவனுமான அந்த சிஷ்யனுக்கு, ஸ்வரூபத்திலும்

http://acharya.org

ஸ்வபாவத்திலும் அழிவற்றவனுமான புருஷனை உள்ளபடி அறிவதற்கு ஸாதனமான ப்ரஹ்மவித்யையை ஆசாரியன் சொல்லக்கடவன்.] என்றும் புருஷசப்தம் இரண்டுதடவை படிக்கப்பட்டது. அடுத்த படியாக இரண்டாவது முண்டகத்தில்,

"திவ்யோ ஹ்யமூர்த்த: புருஷ: ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜ: |
அப்ராணோ ஹ்யமநா: சுப்ரோ ஹ்யக்ஷராத் பரத: பர: ||"

[பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவனும், காணத்தகாத ஸ்வரூபத்தையுடையவனும், உள்ளும் புறமுமுள்ள எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனும், பிறப்பற்றவனும், ப்ராணன் மனஸ் முதலியவையற்றவனும், சுத்தமானவனும், ப்ரக்ருதிக்கு மேலான ஜீவதத்வத்தைக்காட்டிலும் மேலானவனும் புருஷசப்தந்தால் சொல்லப்படுபவனே.] என்று புருஷசப்தத்தை மறுபடியும் படித்து,

"ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச |
கம் வாயுர் ஜ்யோதிராப: ப்ருதிவீ விச்வஸ்ய தாரிணீ ||"

[இந்தப் பரமபுருஷனிடமிருந்தே ப்ராணனும், மனஸ்ஸும் எல்லா இந்திரியங்களும், ஆகாசமும், வாயுவும், அக்னியும், ஜலமும், எல்லாரையும் தாங்கும் பூமியும் உண்டாகின்றன.] என்று இவனே ஸர்வகாரணன் என்று உத்கோஷித்தது.

"நாராயணாத் ப்ராணோ ஜாயதே மந: ஸர்வேந்த்ரியாணி ச |
கம் வாயுர் ஜ்யோதிராப: ப்ருதிவீ விச்வஸ்ய தாரிணீ ||"

[நாராயணனிடமிருந்து ப்ராணனும், மனஸ்ஸும் எல்லா இந்திரியங்களும், ஆகாசமும், வாயுவும், அக்னியும், ஜலமும், எல்லாவற்றையும் தாங்கும் தரணியும் உண்டாகின்றன.] என்று நாராயணோபனிஷத்தில் சொல்லப்பட்டபடியால் இங்கு உரைக்கப்படுபவனும் அந்த நாராயணனே என்பது ஸர்வவேதாந்தப்ரத்யயந்யாயப்படி ஸித்திக்கிறது. மஹோபனிஷத்திலும், ஸுபாலோபனிஷத்திலும் இவ்விஷயம் கீர்த்திக்கப்பட்டிருக்கிறது. "ஊன் மாமாயை" என்று தொடங்கி,

"பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம்
இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே" என்று

ஆழ்வாரும் இந்த ச்ருதி பகவத்பரமென்பதை உணர்த்தினர். அடுத்த மந்திரத்தில்,

http://acharya.org

"அக்3நிர் மூர்த்தா4 சக்ஷுஷீ சந்த்3ரஸூர்யௌ
திஶ: ச்ரோத்ரே வாக்3விவ்ருதாச்ச வேதா3:।
வாயு: ப்ராணோ ஹ்ருத3யம் விச்வமஸ்ய
பத்3ப்4யாம் ப்ருதி2வீ ஹ்யேஷ ஸர்வபூ4தாந்தராத்மா॥"

[அக்நிசப்தத்தினால் சொல்லப்படும் தேவலோகம் இப்பரம புருஷனுக்குத் தலையாகவும், சந்திரஸூர்யர்கள் கண்களாகவும், திக்குகள் காதுகளாகவும், வேதங்கள் வார்த்தைகளாகவும், வாயுவே ப்ராணனாகவும், உலகமெல்லாம் ஹ்ருதயமாகவும், ப்ருதிவி கால்களாகவும் சொல்லப்படுகின்றன. இவனே ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாயிருப்பவன்.] என்று படிக்கப்பட்டது. இதுவும் ஸர்வாத்மாவான நாராயணனையே சொல்லுகிறதென்பதை ச்ருதி, ஸ்ம்ருதி முதலியவைகளைக்கொண்டு ஸ்தாபிக்கிறோம்.

"சந்த்3ரமா மநஸோ ஜாத: சக்ஷோ: ஸூர்யோ அஜாயத।
முகா2தி3ந்த்3ரச்சாக்3நிச்ச ப்ராணாத்3 வாயுரஜாயத॥"

[அப்பரமபுருஷனுடைய மனஸ்ஸில் நின்றும் சந்திரன் உண்டானான்; கண்ணிலிருந்து ஸூர்யன் தோன்றினான்; முகத்திலிருந்து இந்திரனும், அக்னியும் ஜனித்தார்கள்; ப்ராணனிலிருந்து வாயு பிறந்தான்.]

"நாப்4யா ஆஸீத3ந்தரிக்ஷம் சீர்ஷ்ணோ த்3யௌஸ் ஸமவர்த்தத।
பத்3ப்4யாம் பூ4மிர் தி3ச ச்ரோத்ராத் ததா2 லோகாநகல்பயந்॥"

[நாபியிலிருந்து அந்தரிக்ஷம் உண்டாயிற்று; தலையிலிருந்து தேவலோகம் தோன்றிற்று; பாதங்களினின்றும் பூமி பிறந்தது; திக்குகள் காதுகளிலிருந்து தோன்றின; இப்படியாக லோகங்களைப் படைத்தான்.] என்ற புருஷஸூக்தமந்திரங்களிலிருந்து இந்த ச்ருதி வாக்யம் பரமபுருஷனையே குறிக்கின்றதென்பது தெளிவாகிறது. மஹாபாரதத்தில் பீஷ்மபர்வத்தில் (60-வது அத்தியாயத்தில்)

"க்ஷிதி: பாதௌ3 யஸ்ய [illegible] த்3யௌர் மஹாசிர:।
மூர்த்திஸ்தேஹும் ஸூர்ய: காயா: சந்த்3ராதி3த்யௌ ச சக்ஷுஷீ॥"

என்று பிரமனாலும்,

"யஸ்யாக்3நிராஸ்யம் த்3யௌர் மூர்த்தா4 கம் நாபி4: சரணௌ க்ஷிதி:।
ஸூர்யச்சக்ஷுர் திச: ச்ரோத்ரம் தஸ்மை லோகாத்மநே நம:॥"

http://acharya.org

[எவனுக்கு அக்னியானது முகமாகவும், தேவலோகம் தலையாகவும், ஆகாசம் நாபியாகவும், பாதங்கள் பூமியாகவும், ஸூர்யன் கண்களாகவும், திசைகள் காதுகளாகவும் இருக்கின்றனவோ, உலகையெல்லாம் சரீரமாகக்கொண்ட அந்த பகவானுக்கு நமஸ்காரம்.] என்று சாந்தி பர்வத்திலும்,

"நாராயணஸ்ய சாங்கா3நி ஸர்வதை3வாநி பா4ரத |
ஶிரச்ச ஹி தி3வம் ராஜந் நாபி4: க2ம் சரணௌ மஹீ ||
அச்விநீ கர்ணயோர் தே3வௌ சக்ஷுஷீ ஶஶிபா4ஸ்கரௌ ||"

[பரதகுலத்துதித்தவனே! எல்லா தேவர்களும் நாராயணனுடைய அங்கங்களாகின்றனர்: தேவலோகம் அவனுடைய தலையாகவும், ஆகாசம் நாபியாகவும், பூமி திருவடிகளாகவும், அச்விநீ தேவர்கள் காதுகளாகவும், சந்திரஸூரியர்கள் கண்களாகவும் ஆகின்றனர்.] என்று ஸபாபர்வத்தில் அக்ரபூஜாப்ரஸ்தாவஸமயத்திலும் இந்த மந்த்ரம் பகவான் நாராயணனையே குறிக்கின்றதென்று கோஷிக்கப்பட்டது.

"நாபி4ர் நப4ஸோऽக்3நிர் முக2ம்பு3 ரேதோ
த்3யௌ: ஶீர்ஷமாஶா: ச்ருதிரங்க்4ரிருர்வீ |
சந்த்3ரோ மநோ யஸ்ய த்3ருக3ர்க்க ஆத்ம:
ஹ்யஹம் ஸமுத்3ரோ ஜட2ரம் பு4ஜேந்த்3ர: ||"

[ஆகாசமே (உன்னுடைய) நாபி: அக்னியே முகம்: ஜலமே ரேதஸ்: ஸ்வர்க்கமே தலை: திக்குகளே செவிகள்: பூமியே திருவடிகள்: சந்திரனே மனஸ்: அஹங்காரம் சிவனாகிய நானே: ஸமுத்ரமே வயிறு. இந்திரனே புஜங்கள்.] என்று பாகவதத்திலும்,

"நாபி4தோ க3க3நம் த்3யௌச்ச ஶிரஸஸ் ஸமவர்த்தத |
அக்ஷ்ணோ: ஸூர்யோऽநில: ப்ராணாத் சந்த்3ரமா மநஸஸ்தவ ||"

[உம்முடைய நாபியிலிருந்து ஆகாசமும், தலையிலிருந்து தேவலோகமும், கண்களிலிருந்து ஸூர்யனும், ப்ராணனிலிருந்து வாயுவும், மனஸ்ஸிலிருந்து சந்திரனும் உண்டாயின.] என்று விஷ்ணு புராணத்தில் துருவனும்,

"பூ4: பாதௌ3 யஸ்ய நாபி4ர்
வியத3ஸுரநிலச் சந்த்3ரஸூர்யௌ ச நேத்ரே

http://acharya.org

கர்ணௌவாயு: ப்ராணோ ஹ்ருதயம்
முகமபி தஹனோ யஸ்ய வாஸ்தேயமப்திஹி: ।
அந்த:ஸ்தம் யஸ்ய விச்வம்
ஸுரநரகககேசா போகிகந்தர்வதைத்யை:
சித்ரம் ரம்ரம்யதே தம்
த்ரிபுவனவபுஷம் விஷ்ணுமீசம் நமாமி ॥''

[எவனுக்கு பூமி திருவடிகளாகவும், ஆகாசம் நாபியாகவும் வாயுவே ப்ராணனாகவும், சந்திரஸூரியர்கள் கண்களாகவும், திசைகள் காதுகளாகவும், தேவலோகம் தலையாகவும், அக்னி முகமாகவும், கடல் வாஸ்திகாயமாகவும் ஆகின்றதோ, எவனுக்குள்ளிருக்கும் உலகம், தேவர்கள், மனிதர்கள், பக்ஷிகள், பிராணிகள், பாம்புகள், கந்தருவர்கள், அஸுரர்கள் ஆகியவர்களால் விளங்குகின்றதோ, மூவுலகையும் உடலாகக்கொண்ட விஷ்ணுவாகிய அந்த ஈசனை வணங்குகிறேன்.] என்று பாரதத்திலும் இவ்விஷயம் விவரிக்கப்பட்டது. நிற்க; இம்மந்திரத்தின் கடைசியில் (ஏஷ ஸர்வ பூதாந்தராத்மா) என்று படிக்கப்பட்டதிலிருந்தும், "ஏஷ ஸர்வ பூதாந்தராத்மா......ஏகோ நாராயண:'' என்று ஸுபாலோபனிஷத்தில் சொல்லப்பட்ட நாராயணனையே இவ்வுபனிஷத்தும் உணர்த்துகிறதென்பது தெளிவாகிறது.

''தஸ்மாதக்நிஸ் ஸமிதோ யஸ்ய ஸூர்ய:
ஸோமாத் பர்ஜந்ய ஓஷதய: ப்ருதிவ்யாம் ।
புமாந் ரேதஸ்ஸிஞ்சதி யோஷிதாயாம்
பஹ்வீ: ப்ரஜா: புருஷாத் ஸம்ப்ரஸூதா: ॥''

[அந்தப் புருஷனிடமிருந்து, ஸூர்யனை ஸமித்தாகக்கொண்ட ஸ்வர்க்கலோகமாகிற அக்னியும், ஸோமனும், (மழைக்கு அதிபதியான) பர்ஜன்யனும், பூமியிலுள்ள ஓஷதிகளும், மனைவியிடம் ரேதஸ்ஸைவிடும் மனிதனுமான (இப்படி பஞ்சாக்னிவித்யையில் சொன்ன கிரமத்தில்) பல ப்ரஜைகள் உண்டாகின்றனர்.] என்று அடுத்த மந்திரத்தில் புருஷசப்தவாச்யனே எல்லாரையும் ஸ்ருஷ்டிப்பவனென்று உணர்த்தி.

''தஸ்மாத்ருசஸ் ஸாம யஜூம்ஷி தீக்ஷா
யஜ்ஞாச்ச ஸர்வே க்ரதவோ தக்ஷிணாச்ச ।
ஸம்வத்ஸரஞ்ச யஜமாநச்ச லோகா:
ஸோமோ யத்ர பவதே யத்ர ஸூர்ய: ॥''

http://acharya.org

[அவனிடமிருந்தே ருக்யஜுஸ்ஸாமவேதங்களும், தீக்ஷைகளும், அக்னிஹோத்ரம் முதலிய யஜ்ஞங்களும், யாகங்களும், தக்ஷிணை களும், வருஷம் முதலிய காலமும், யாகம் செய்பவனும், சந்திர ஸூர்யர்களின் ஒளியால் பவித்ரமடையும் உலகங்களும் உண்டா கின்றன.] என்றும்,

"தஸ்மாச்ச தே₃வா ப₃ஹுதா₄ ஸம்ப்ரஸூதா:
ஸாத்₄யா மநுஷ்யா: பஶவோ வயாம்ஸி।
ப்ராணாபாநௌ வ்ரீஹியவௌ தபச்ச
ச்ரத்₃தா₄ ஸத்யம் ப்₃ரஹ்மசர்யம் விதி₄ச்ச ||"

[அந்தப் பரமபுருஷனிடமிருந்து தேவர்களும், ஸாத்யர்களும், மனுஷ்யர்களும், பிராணிகளும், பக்ஷிகளும், பிராணன் அபானம் முதலிய வாயுக்களும், நெல் கோதுமை முதலிய தான்யங்களும், தபஸ்ஸும், சிரத்தையும், ஸத்யமும், ப்ரஹ்மசர்யமும், நித்ய நைமித்திகாதி விதிகளும் உண்டாயின.] என்றும்,

"ஸப்தப்ராணா: ப்ரப₄வந்தி தஸ்மாத்
ஸப்தார்ச்சிஷ: ஸமித₄ஸ் ஸப்த ஹோமா: |
ஸப்த இமே லோகா யேஷு சரந்தி ப்ராணா:
கு₃ஹாஶயா நிஹிதாஸ ஸப்த ஸப்த ||"

[அவனிடமிருந்தே (முகத்திலுள்ள) ஏழு இந்திரியங்களும், ஏழு அக்னிகளும், ஸமித்துக்களும், ஏழு ஹோமங்களும், இவ்வேழு உலகங்களும் முதலிய எல்லாம் உண்டாகின்றன.] என்றும்,

"அத: ஸமுத்₃ரா கி₃ரயச்ச ஸர்வே
அஸ்மாத் ஸ்யந்த₃ந்தே ஸிந்த₄வஸ் ஸர்வரூபா: |
அதச்ச ஸர்வா ஓஷத₄யோ ரஸாச்ச
யேநைஷ பூ₄தைஸ் திஷ்ட₂தே ஹ்யந்தராத்மா ||"

[அவனிடமிருந்தே எல்லா ஸமுத்ரங்களும், மலைகளும், எல்லாவித மான உருவமுடைய கங்காதி நதிகளும், எல்லா ஓஷதிகளும், ரஸங்களும் உண்டாகின்றன. இவன் எல்லா பூதங்களாலும் சூழப் பட்டு அவற்றுக்கு அந்தர்யாமியாய் விளங்குகிறானன்றோ.] என்றும் அப்பரமபுருஷனிடமிருந்து உண்டாகும் வஸ்துக்களையும் விரித் துரைத்தது. புருஷஸூக்தாதிகளில் படிக்கப்பட்ட வாக்கியங்களை நினைப்பூட்டுபவையாக இம்மந்திரங்கள் விளங்குகையால் அவற்

http://acharya.org

ருக்கு ப்ரதிபாத்யனான நாராயணனே இங்கும் சொல்லப்படுகிறான் என்பதும் தெளிவாகிறது. "ஏஷ ஹ்யந்தராத்மா" என்றதால் "ஏஷ ஸர்வபூதாந்தராத்மா நாராயண:" என்ற ஸுபாலோபநிஷத் வாக்யத்தை ஞாபகமும் ஊட்டுகிறது. இங்கு நினைவூட்டப் பட்ட மந்திரம்,

"ஜ்யோதீம்ஷி விஷ்ணுர் புவநாநி விஷ்ணுர்
வநாநி விஷ்ணுர் கிரயோ திசச்ச।
நத்ய: ஸமுத்ராச்ச ஸ ஏவ ஸர்வம்
யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய॥"

(விப்ரச்ரேஷ்டரே! ஜ்யோதிஸ்ஸுக்களும், புவனங்களும், வனங்களும், கிரிகளும், திசைகளும், நதிகளும், கடல்களும் பகவான் விஷ்ணுவே. உள்ளதும் இல்லதுமாகிய சேதநாசேதநங்களாகிய எல்லாவற்றுக்கும் அவனே அந்தர்யாமி.) என்று விஷ்ணுபுராணத்தில் விஷ்ணுபரமாக விவரிக்கப்பட்டது. அடுத்த மந்திரம்,

"புருஷ ஏவேதம் விச்வம் கர்ம தபோ ப்ரஹ்ம பராம்ருதம்।
ஏதத் யோ வேத நிஹிதம் குஹாயாம் ஸோऽவித்யா
க்ரந்திம் விகிரதீஹ ஸோம்ய॥"

(குழந்தாய்! இந்த உலகமெல்லாம் அந்தப் புருஷனே. அவனுடைய ஜகத்ஸ்ருஷ்டி ஸங்கல்பாத்மகமான தபஸ்ஸே ஆகிறது. அவனே முக்தாத்மாவுக்கு போக்யமானவன்; எவன் ஹ்ருதய குஹையில் இருக்கும் இப்படிப்பட்ட புருஷனை அறிகிறானோ, அவன் அவித்யையாகிற முடிச்சை அவிழ்க்கிறான்.) என்று மறுபடியும் புருஷஸூக்தத்தைப் பேரன்புடன் படித்தது. "புருஷ ஏவேதம் ஸர்வம்" என்று புருஷஸூக்தத்தில் சொல்லப் பட்டவனே இவன் என்றும் உணர்த்திற்று. 'புருஷசப்தம் யாரையும் குறிக்கலாம்; ஆகையால் அது நாராயணனையே குறிக்கிறது என்று எங்ஙனே சொல்லுவது?' என்று சில மந்தமதிகள் மயங்குவார்கள். புருஷசப்தத்திற்கு முக்யார்த்தமாகிறவன் நாராயணனே என்பதை முன்னமே விவரித்திருக்கிறோம். ஆயினும், மற்றும் சில ப்ரமாணங்களையும் இங்கு காட்டுகிறோம். தைத்திரீயத்தில் ஆருண கேதுகம் என்னும் பாகத்தில்,

"ஆபோ வா இதமாஸந் ஸலிலமேவ ஸ ப்ரஜாபதிரேக:
புஷ்கரபர்ணே ஸமபவத்॥"

http://acharya.org

[இவ்வுலகம் முதலில் ஜலமயமாக இருந்தது; அதில் ப்ரஜாபதியாகிய பிரமன் ஒருவனாய் தாமரையிதழில் தோன்றினான்.] என்று தொடங்கி,

"ஸோ$_{S}$பாமந்தரத: கூர்மபூ$_4$தம் ஸர்ப்பந்தம் தமப்$_3$ரவீத் ।
மம வை த்வம் மாம்ஸாத்$_3$: ஸமபூ$_4$: । நேத்யப்$_3$ரவீத் ।
பூர்வமேவாஹமிஹாஸமிதி । தத் புருஷஸ்ய புருஷத்வம் ॥"

[அப்பிரமன் தண்ணீரின் நடுவில் கூர்மரூபியாய் நகரும்படியான நாராயணனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான். "நீ எனக்கு ஒருமாஸம் பின்னால் பிறந்திருக்கிறாய் போலும்" என்று. அதற்கு அந்தக் கூர்மபகவான் 'இல்லை; வெகுகாலமாக நான் இருக்கிறேன்' என்று பதில் சொன்னான். இப்படிப் பூர்வகாலத்திலிருந்து இருப்பவனாகையால் இப்பரமபுருஷன் புருஷனாயிருக்கும் தன்மையை அடைகிறான்.] என்று கூர்மரூபியான பகவானே புருஷசப்தத்தால் சொல்லப்படுமவன் என்று உணர்த்திற்று.

"யதி$_3$ வா பூர்வமேவாஹமிஹேதி புருஷம் விது$_3$: ।
யதி$_3$ வா ப$_3$ஹுதா$_3$நாத்$_3$வை விஷ்ணு: புருஷ உச்யதே ॥"

["நான் பூர்வகாலத்திலிருந்து இங்கே இருக்கிறேன்" என்று அவனாலேயே சொல்லப்பட்டதாகையால் அவனைப் புருஷனென்கிறார்கள். வேண்டிற்றெல்லாம் தருகையாலும் விஷ்ணு புருஷனெனப்படுகிறான்.] என்று பாத்மபுராணத்தில் இந்த வாக்கியம் உபப்ருஹ்மணம் செய்யப்பட்டது.

"இத$_3$மக்$_3$ரே ஸலிலமாஸீத் । ஸ ப்ரஜாபதி: ப்ரஜா: ஸ்ரஷ்டும் லோகாநபச்யமாநோ ப$_3$ப்$_4$ரம । ஸோ$_{S}$ந்தஸ்ஸலிலே விசரந்தம் கூர்மமபச்யத் । தமப்ருச்ச$_2$த் । கஸ்த்வமஸீதி । ஸோ$_{S}$ப்$_3$ரவீத் । புருஷோ$_{S}$ஹமிதி । தம் ப்ரஜாபதிரப்$_3$ரவீத் । க: புருஷ இதி । ஸோ$_{S}$ப்$_3$ரவீத் । யேநேத$_3$ம் ஸத்யேந ஜ்யோதிஷா காஷ்ட$_2$மிவாக்$_3$நிநா பூர்ணம் ஸ வை புருஷ இதி । தம் ப்ரஜாபதி: ப்ரணிபத்ய அப்$_3$ரவீத் । ப$_4$க$_3$வந் யேந தேந ரூபேண ஜக$_3$தி$_3$த$_3$ம் பூர்ணம் । தம் மே ப்ராது$_3$ர்பா$_4$வய ப்ரஸீதே$_3$தி । தஸ்மை ப்ராது$_3$ர்பா$_4$வயத் நாரஸிம்ஹமநாத்$_3$யந்தம் ஜ்யோதிர்மயம்"

http://acharya.org

[இவ்வுலகம் முதலில் ஜலமயமாயிருந்தது: பிரமன், பிரஜைகளை ஸ்ருஷ்டி செய்வதற்கு லோகங்களைக் காணாமல் அலைந்தான். தண்ணீரினுள் இலையொடும் கூர்மமூர்த்தியை அவன் பார்த்தான். "நீ யார்" என்று அப்பெருமானைக் கேட்டான் பிரமன்: "நான் புருஷன்" என்று அக்கூர்மபுருஷன் உரைத்தான்; "புருஷன் யார்?" என்று பிரமன் மறுபடியும் வினவினான். "கட்டையானது, உண்மையானதும், ஒளியுருவானதுமான அக்னியினுள் நிறைந்திருப்பது போல், எவனால் இவ்வுலகமெல்லாம் நிறைந்திருக்கின்றதோ அவனே புருஷன்" என்று அக்கூர்மமூர்த்தி பதிலுரைத்தனன். "பகவானே! எந்த உருவத்தினால் இவ்வுலகையெல்லாம் வியாபித்து நீ விளங்குகின்றனையோ, அவ்வுருவை எனக்கு அருள்கூர்ந்து காண்பிப்பாயாக" என்று பிரமன் அடிவணங்கிக் கேட்டான். ஆதியந்தமற்றதும், சோதிவடிவானதுமான நரஸிம்ஹவுருவை பகவான் அப்பிரமனுக்குக் காட்டியருளினான்.] என்று ந்ருஸிம்ஹதாபனீயோபனிஷத்தில் புருஷசப்தத்தால் சொல்லப்படுபவன் கூர்மந்ருஸிம்ஹரூபியான பகவானே என்று கோஷிக்கப்பட்டது. இவ்வாக்கியங்கள் பரமப்ராமாணிகரும் 500 வருஷங்களுக்கு முன்பிருந்தவருமான வேதாந்தகௌஸ்துபகாரரால் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்மார்த்தர்களால் அச்சிடப்பட்ட ந்ருஸிம்ஹதாபினியில் காணப்படவில்லை. இந்த ந்ருஸிம்ஹதாபினியில் சொல்லப்படும் ந்ருஸிம்ஹ அநுஷ்டுப் மந்திரம் நம்பிள்ளையாலும், பெரியவாச்சான் பிள்ளையாலும் எடுக்கப்பட்டிருக்கிறதென்று முன்னமே சொன்னோம். பட்டரும் இம்மந்திரத்தை ஸ்ரீஸஹஸ்ரநாமபாஷ்யத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார். வேதாந்ததேசிகரும், தத்வமுக்தாகலாபத்தில் நாயகஸரத்தில் பதினாலாவது ச்லோகத்தில்,

"த்யக்தாங்கோ மூலவேத: கடபரிபடிதா வல்லிகாஸ்தாபநீயம்
ஸௌபாலம் ப்ரஹ்மபிந்து ப்ரப்ருதிகமபி நஸ்தத்பரம் தத்பரத்வே"

[வேறு ஒருதெய்வத்தையும் ப்ரதிபாதிக்காத ஏகாயனச்ருதி, கடவல்லிகள், தாபனீயோபனிஷத், ஸுபாலோபனிஷத், ப்ரஹ்மபிந்தூபனிஷத் முதலானவை அந்த பகவானுடைய பரத்வத்தை நமக்குக் காட்டுவதில் முக்கியமானவை.] என்று அருளிச்செய்து "தாபநீயோபநிஷத்து ந்ருஸிம்ஹரூப ப்ரக்ருதத்வதாரைகவிஷயா" என்று வியாக்கியானமும் செய்தருளினர். ஆகையால் இந்த ந்ருஸிம்ஹதாபனீயோபனிஷத்தும் நம் பரமாசாரியர்களால் போற்றப்பட்ட பிரஸித்தமான உபனிஷத்தே என்பது விளங்குகிறது. சங்கரரும் இதற்கு ஓர் பாஷ்யம் செய்திருப்பதாகத் தெரிகிறது. நிற்க:

http://acharya.org

"த்4யாயித புருஷம் விஷ்ணும் நிர்கு3ணம் பஞ்சவிம்'சகம்
புரமாக்ரம்ய ஸகலம் 'சேதே யஸ்மாந் மஹாப்ரபு4:||
தஸ்மாத் புருஷ இத்யேவ ப்ரோச்யதே தத்வசிந்தகை:||"

[ஸத்வரஜஸ்தமோகுணங்களற்றவரும், இருபத்தைந்தாவது தத்வமான ஆத்மாவுக்கு அந்தர்யாமியும், புருஷனென்று சொல்லப்படுமவனுமான விஷ்ணுவை த்யானம் செய்யுங்கள்; ஸர்வேச்வரனை இவன் எல்லாப் புரங்களையும் (சரீரங்களையும்) வியாபித்து சயனித்துக்கொண்டிருக்கிறானையால் தத்வஜ்ஞர்களால் புருஷனெனப்படுகிறான்.] என்று ஸ்ரீவிஷ்ணுஸ்ம்ருதியிலும்,

"பூஸ்ஸம்ஜ்ஞே'ஸ்மின் 'சரீரே வை 'சயநாத் புருஷோ ஹரி:|
'சகாரஸ்ய ஷகாரோ'யம் வ்யத்யாஸேந ப்ரயுஜ்யதே||
யதி3 வா பூர்வமேவாஹமிஹேதி புருஷம் விது3:|
யதி3 வா ப3ஹுதா3நாத்3 வை விஷ்ணு: புருஷ உச்யதே||
பூர்ணத்வாத் புருஷோ விஷ்ணு: புராணத்வாச்ச 'சார்ங்கி3ண:|
யத்3வா புருஷ'ப்3தோ3'யம் ருட்4யா வக்தி ஜநார்த3நம்||"

['புரம்' எனப்படும் இந்த சரீரத்தில் சயனித்துக்கொண்டிருப்பதால் ஹரி புருஷனெனப்படுகிறான். சகாரத்துக்கு பதிலாக, ஷகாரம் (புருஷசப்தத்தில்) ப்ரயோகிக்கப்படுகிறது. 'நான் பூர்வத்திலிருந்து இங்கிருக்கிறேன்' என்றதால் புருஷனெனப்படுவதாகவும் கொள்ளலாம். அதிகமாக அளிப்பவனையால் ('புரு ஸநோதீதி புருஷ:' என்னும் வ்யுத்பத்தியின்படி) விஷ்ணு புருஷனெனப்படுவதாகவும் கொள்ளலாம். பூர்ணனாயிருக்கையாலும் புருஷனாகிறான் விஷ்ணு. சார்ங்கமென்னும் வில்லையுடையவனுக்குப் புராணனாயிருக்கையாலும் புருஷனென்னும் பெயர் வழங்குகிறது. இப்புருஷசப்தம் ரூடியினால் ஜநார்த்தனனைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம்] என்று பாத்மபுராணத்திலும்,

"பூ4தைர் மஹத்3பி4ர் ய இமா: புரோ விபு4:
நிர்மாய 'சேதே யத3மூஷு பூருஷ:|
ஸ்வாம்சேந விஷ்ட: புருஷாபி4தா4நம்
அவாப நாராயண ஆதி3தே3வ:||
பூ4தைர் யதா3 பஞ்சபி4ராத்மஸ்ருஷ்டை:
புரம் விராஜம் விரசய்ய தஸ்மிந்

http://acharya.org

ஸ்ருஷ்ட்வா ஸ்வபா³க்த்யேத₃மநுப்ரவிஷ்ட:
சதுர்வித₄ம் பரமாத்மாம்ப³கேந ||
அதோ விது₃ஸ் த்வாம் புருஷம்........"

[பெரிதான பஞ்சபூதங்களால் அண்டங்களாகிய இப்புரங்களை ஸ்ருஷ்டித்து, ஸர்வவ்யாபியான புருஷன், தன்னுடைய ஏக தேசத்தால் அவைகளை வியாபித்துக்கொண்டு சயனித்துக்கொண்டிருக்கிறான். (ஆகையால்) ஆதிதேவனான நாராயணன் 'புருஷன்' என்னும் பெயரை அடைந்தான். தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பஞ்சபூதங்களால் ஒளியுள்ள இவ்வண்டத்தை நிர்மாணம் செய்து, அதில் தேவமனுஷ்யதிர்யக்ஸ்தாவரரூபமான சதுர்வித சேதனர்களையும் ஸ்ருஷ்டித்து, தன்னுடைய சக்தியால் அவற்றை வியாபித்து விளங்குவதால் உன்னைப் புருஷன் என்று அறிகிறார்கள்.] என்று பாகவதத்திலும் புருஷசப்தத்தின் பல பொருள்களும், அந்தப் பெயரால் படிக்கப்படுபவன் நாராயணனே என்பதும் சொல்லப்பட்டது. "தேநேத₃ம் பூர்ணம் புருஷேண ஸர்வம்" "புரிசயம் புருஷமீக்ஷதே" என்று ச்ருதியிலும் இவ்வர்த்தங்கள் ஆதரிக்கப்பட்டன. மேலும்,

"ப₄க₃வாநிதி ஶப்₃தோ₃ऽயம் தத₂ா புருஷ இத்யபி।
நிருபாதீ₄ ச வர்த்தேதே வாஸுதே₃வே ஸநாதநே ||"

[பகவான் என்னும் சப்தமும், புருஷன் என்னும் சப்தமும் இயற்கையாகவே பழமையானவனான வாஸுதேவனிடமே விளங்குகின்றன.] என்று வாராஹபுராணத்திலும்,

"ய ஏவ வாஸுதே₃வோऽயம் புருஷ: ப்ரோச்யதே பு₃தை₄:।
ப்ரக்ருதிஸ்பர்சராஹித்யாத் ஸ்வாதந்த்ர்யாத் வைப₄வாத₃பி ||
ஸ ஏவ வாஸுதே₃வோऽயம் ஸாக்ஷாத் புருஷ உச்யதே।
ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம் ஜக₃த் ப்₃ரஹ்மபுரஸ்ஸரம் ||
ப்₃ரஹ்மாத்₃யா தே₃வதாஸ்ஸர்வா யக்ஷதும்பு₃ருமாநுஷா:।
தே ஸர்வே புருஷாம்ஶத்வாத் விச்ருதா: புருஷா இதி ||"

[எவனொருவன் வாஸுதேவனெனப்படுகிறானோ அவனே புருஷனென்றும் ஞானிகளால் சொல்லப்படுகிறான். ப்ருக்ருதிஸ்பர்சமற்றவனாயிருக்கையாலும், ஸ்வதந்திரனாயிருக்கையாலும், பெருமையையுடையவனாயிருக்கையாலும் அந்த வாஸுதேவனே ஸாக்ஷாத் புருஷ

http://acharya.org

னுகச் சொல்லப்படுகிருன். பிரமனை முன்னிட்ட எல்லா உலகினரும் ஸ்த்ரீப்ராயர்களே. பிரமன் முதலிய எல்லா தேவதைகளும், யக்ஷர்கள், தும்புருக்கள், மனுஷ்யர்கள் ஆகிய எல்லாரும் புருஷனுடைய அம்சத்தைப் பெற்றிருக்கையால் புருஷனென்று சொல்லப்படுகிருர்கள்.] என்று நாரஸிம்ஹபுராணத்திலும்

''தஸ்யைகஸ்ய மஹத்த்வம் ஹி ஸ சைக: புருஷ: ஸ்ம்ருத:|
மஹாபுருஷஶப்3தம் ஸ பி3பர்த்யேக: ஸநாதந: ||
ஸ ஹி நாராயணோ ஜ்ஞேய: ஸர்வாத்மா புருஷோ ஹி ஸ:||''

[அவன் ஒருவனுக்கே பெருமையுண்டு; அவன் ஒருவனே புருஷனெனப்படுகிருன்; ஸநாதனனுன அவன் ஒருவனே மஹா புருஷ சப்தத்தை தரிக்கிருன்; அவனே நாராயணனென்று அறியத் தக்கவன்; ஸர்வாந்தர்யாமியான் புருஷனன்றே அவன்.] என்று மஹாபாரதத்தில் ப்ரஹ்மருத்ரஸம்வாதத்திலும் வாஸுதேவனே புருஷசப்தத்துக்கு முக்கியார்த்தமாயிருக்கிருன், மற்ற ஜீவர்களும் அவனுடைய அம்சமாயிருப்பதாலேயே புருஷர்களெனப்படுகிருர்கள் என்னுமிவ்வரும்பொருள் அறிவிக்கப்பட்டது. மற்றும் ஸ்ரீராமாயண மஹாபாரதாதி சாஸ்திரங்களில் பகவானைப்பற்றிப் புருஷசப்தம் பிரயோகிக்கப்பட்டிருக்குமிடங்கள் கணக்கற்றவை. அவைகளை கிரந்தவிஸ்தரபயத்தாலே இங்கு எடுக்கின்றிலோம். இவைகளிலிருந்து இவ்வுபனிஷத்திலும், மற்றும் பல உபனிஷத்துக்களிலும் நூற்றுக்கணக்கான இடங்களில் புருஷசப்தத்தால் படிக்கப்படுபவன் புருஷோத்தமனுன பரவாஸுதேவனே என்பது வஜ்ரலேபாயிதமாயிற்று.

''த1னுர் க்3ருஹீத்வௌபநிஷத3ம் மஹாஸ்த்ரம்
ஶரம் ஹ்யுபாஸாநிஶிதம் ஸந்தி4யத|
ஆயம்ய தத் பா4க3வதேந சேதஸா
லக்ஷ்யம் தத3வாக்ஷரம் ஸோம்ய வித்3தி4 ||''

[குழந்தாய்! உபனிஷத்திலே ப்ரஸித்தமான வில்லாகிய ப்ரணவத்தை எடுத்து, உபாஸனையாலே கூர்மையாகச்செய்யப்பட்ட அம்பாகிற ஆத்மாவை அவ்வில்லில் பொருத்தவேண்டும்; அந்த பகவானிடத்திலே பற்றுதலையுடைய மனஸ்ஸாகிற கையாலே இழுக்கப்பட்ட அவ்வம்புக்கு அடையவேண்டிய லக்ஷ்யம் அந்த அக்ஷரபுருஷனே என்பதை அறிவாயாக.] என்று அடுத்த கண்டத்

http://acharya.org

தில், வாஸுதேவனுக்கே அஸாதாரணமான புருஷசப்தத்தைப் படித்ததில் திருப்தியுறாமல், அவனுக்கேயான பகவச்சப்தத்தையும் படிக்கிறது.

“ப$_4$க$_3$வாநிதி ஶப்$_3$தே$_3$ாऽயம் ததா$_2$ புருஷ இத்யபி।
நிருபாதீ$_4$ ச வர்த்தேதே வாஸுதே$_3$வே ஸநாதநே॥”

[பகவான் என்னும் சப்தமும், புருஷன் என்னும் சப்தமும், இயற்கையாகவே ஸநாதனனான வாஸுதேவனிடத்திலேயே விளங்குகின்றன.] என்று வராஹபுராணத்தில் உத்கோஷிக்கப்பட்டதன்றோ. ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும்,

“சுத்$_3$தே$_4$ மஹாவிபூ$_4$த்யாக்$_3$யே பரே ப்$_3$ரஹ்மணி சப்$_3$த்$_3$யதே।
மைத்ரேய! ப$_4$க$_3$வச்ச$_2$ப்$_3$த$_3$ஸ் ஸர்வகாரணகாரணே॥
ஸம்ப$_4$ர்த்தேதி ததா$_2$ ப$_4$ர்த்தா ப$_4$காரோऽர்த்த$_2$த்$_3$வயாந்வித:।
நேதா க$_3$மயிதா ஸ்ரஷ்டா க$_3$காரார்த்த$_2$ஸ் தத: ஸ்ம்ருத:॥
ஐச்வர்யஸ்ய ஸமக்$_3$ரஸ்ய வீர்யஸ்ய யசஸ: ச்ரிய:।
ஜ்ஞாந வைராக்$_3$யயோஶ்சைவ ஷண்ணாம் ப$_4$க$_3$ இதீரணா॥
வஸந்தி தத்ர பூ$_4$தாநி பூ$_4$தாத்மந்யகி$_2$லாத்மநி।
ஸ ச பூ$_4$தேஷ்வஶேஷேஷு வகாரார்த்த$_2$ஸ் ததோऽவ்யய:॥
ஜ்ஞாநஶக்தி ப$_3$லைச்வர்ய வீர்யதேஜாம்ஸ்யஶேஷத:।
ப$_4$க$_3$வச்ச$_2$ப்$_3$த$_3$வாச்யாநி விநா ஹேயைர் கு$_3$ணாதி$_4$பி$_4$:॥
ஏவமேஷ மஹாஶப்$_3$தே$_3$ா மைத்ரேய ப$_4$க$_3$வாநிதி।
பரமப்$_3$ரஹ்மபூ$_4$தஸ்ய வாஸுதே$_3$வஸ்ய நாந்யக:$_3$॥
தத்ர பூஜ்ய பதா$_3$ர்த்தோ$_3$க்தி பரிபா$_4$ஷாஸமந்வித:।
ஶப்$_3$தோ$_4$ऽயம் நோபசாரேண அந்யத்ர ஹ்யுபசாரத:॥”

[மைத்ரேயரே! சுத்தமானதும், 'மஹாவிபூதி' என்னும் பெயரையுடையதும், காரணபுருஷர்களுக்கெல்லாம் காரணமாயிருப்பதுமான பரப்ரஹ்மத்தினிடத்தில் பகவச்சப்தம் சொல்லப்படுகிறது. '(ப்ரக்ருதியை) கார்யதசை அடையச்செய்பவன்', 'ஸ்வாமி' என்னும் இரண்டு பொருள்களுடன் கூடியது ப$_1$காரம். அப்படியே 'ரக்ஷிப்பவன், ஸம்ஹரிப்பவன், ஸ்ருஷ்டிப்பவன்' என்பது 'க$_3$' என்னுமெழுத்தின் அர்த்தமென்று சொல்லப்படுகிறது. ஸம்பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, செல்வம், ஜ்ஞானம், வைராக்யம் என்னும் இந்த ஆறு குணங்களுக்கும் 'ப$_4$க$_3$' என்னும் பதம் வாசகமாயிருக்கிறது. பூதங்களை சரீரமாகக்கொண்டவனும், எல்லா

http://acharya.org

வற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனுமான அவனிடத்தில் பூதங்கள் வஸிக்கின்றன. அவனும் எல்லா பூதங்களிலும் வஸிக்கிறான். ஆகையால் அறிவற்றவனான பகவான் வகாரத்துக்கு அர்த்தமாகிறான். கீழானவையான முக்குணங்கள் முதலியவற்றுடன் சேராத 'ஜ்ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்' என்னும் எல்லாகுணங்களும் 'பகவான்' என்னும் சப்தத்தினால் சொல்லப் படுகின்றன. மைத்ரேயரே! இம்மாதிரியாக பகவான் என்ற இந்த மஹாசப்தம் பரப்ரஹ்மமான வாஸுதேவனுக்கே உரியது. வேறொருவரையும் குறிக்காது. பூஜிக்கத்தக்க பொருளைக்குறிப்பதாகிய இந்த சப்தம் அவன் விஷயத்தில் ஔபசாரிகமாகச் சொல்லப்படுவதில்லை. மற்றவர்கள் விஷயத்தில் ஔபசாரிகமாக (அமுக்கியமாகச்) சொல்லப்படுகிறது.] என்று பகவச்சப்தம் பரவாஸுதேவனையே குறிக்குமென்று கோஷிக்கப்பட்டது. இவ்வாக்கியங்கள் முண்டகோபனிஷத்திலுள்ள இந்த பகவச் சப்தத்தைப்பற்றியவையே என்பதைப் பின்னால் விளக்குவோம்.

''ஹிரண்மயே பரே கோஶே விரஜம் ப்$_{3}$ரஹ்ம நிஷ்களம்।
தச்சு$_{2}$ப்$_{4}$ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ் தத்$_{3}$யதா$_{3}$த்மவிதோ$_{3}$ விது$_{3}$: ॥

[ஹிரண்மயமான மேலான ஸ்தானத்தில் ரஜஸ்தமோகுணங்களற்றதும், அவயவமற்றதும், குற்றமற்றதும், சோதிகளுக்கெல்லாம் சோதியாயிருப்பதும், ஆத்மஜ்ஞானிகளால் அறியப்படுவதுமான பரப்ரஹ்மம் இருக்கிறது.] என்பது இந்தக் கண்டத்திலுள்ள மற்றோர் மந்திரம். இதில் ''ஜ்யோதிஷாம் ஜ்யோதி:'' என்று படித்திருப்பதை ''நாராயண பரோ ஜ்யோதி:'' என்று நாராயண விஷயமாகக்காட்டிற்று நாராயணஸூக்தம். ''ஹிரண்மயே பரே கோசே'' என்றதினால் ''தஸ்யாம் ஹிரண்மய: கோச:'' என்று சொல்லப்படும் பதமே இங்கும் உணர்த்தப்படுகிறதென்பது விளங்குகிறது. ''தி$_{3}$வ்யே ப்$_{3}$ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோமந்யாத்மா ப்ரதிஷ்டி$_{3}$த:'' [இந்தப் பரமாத்மா ப்ரஹ்மபுரமெனப்படும் திவ்யமான லோகத்திலிருக்கிறான்.] என்று இங்கு படிக்கப்படும் மற்றொரு மந்திரமும் ''தி$_{3}$வ்யோ தே$_{3}$வ ஏகோ நாராயண:'' என்னும் ஸுபாலோபனிஷத் வாக்யத்தை உணர்த்துகிறது.

''ப்$_{3}$ரஹ்மைவேத$_{3}$மம்ருதம் புரஸ்தாத்
ப்$_{3}$ரஹ்ம பஶ்சாத்$_{3}$ப்$_{3}$ரஹ்ம த$_{3}$க்ஷிணதஶ்சோத்தரேண।

http://acharya.org

அத$_4$ஸ்சோர்த்$_4$வம் ச ப்ரஸ்ருதம்
ப்$_3$ரஹ்மைவேத$_3$ம் விச்வமித$_3$ம் வரிஷ்ட$_2$ம்||"

[அழிவற்றதான ப்ரஹ்மமே முன்னும் பின்னும், வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும், மேலும், கீழும் பரவியுள்ளது. இந்த உலகம் முழுவதும் மேலான ப்ரஹ்மமயமாகவே இருக்கின்றது.] என்பது இந்த இரண்டாவது முண்டகத்தின் கடைசி மந்திரம். இதுவும் " தி$_3$சச்ச நாராயண: அத$_4$ச்ச நாராயண: ஊர்த்$_4$வஞ்ச நாராயண: நாராயண ஏவேத$_3$ம் ஸர்வம் " என்று நாராயணோபனிஷத்திலும் " விச்வம் நாராயணம் " "நாராயணபரம் ப்$_3$ரஹ்ம" என்று நாராயண ஸூக்தத்திலும், நாராயணபரமாக விவரிக்கப்பட்டது.

" யதா$_2$ பச்ய: பச்யதே ருக்மவர்ணம்
கர்த்தாரமீசம் புருஷம் ப்$_3$ரஹ்மயோநிம் ।
ததா$_2$ வித்$_3$வாந் புண்யபாபே விதூ$_4$ய
நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி || "

[ப்ரஹ்மஜ்ஞானியானவன், ஸுவர்ணம்போல் ஒளியுள்ளவனும், ஜகத்தை ஸ்ருஷ்டித்து நியமிப்பவனும், பிரமனுக்கும் காரணபூதனுமானவனுமான புருஷனை எப்போது பார்க்கிறானோ, அந்த ஞானி புண்யபாபங்களை உதறி, ப்ரக்ருதிஸம்பந்தமற்றவனாய், ப்ரஹ்மத்துடன் மேலான ஸாம்யத்தை அடைகிறான்.] என்றும் இங்கு சொல்லப்பட்டது. இங்கு 'ருக்மவர்ணம் புருஷம்' என்று படிக்கப்படுபவன் 'ஆதி$_3$த்யவர்ணம் புருஷம்' என்று புருஷஸூக்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டவனே என்று தெளிவாக விளங்குகிறது. 'புருஷம் ப்$_3$ரஹ்மயோநிம்' என்றதால், 'ப்$_3$ரஹ்மா தே$_3$வாநாம் ப்ரத$_2$மஸ் ஸம்ப$_3$பூ$_4$வ' என்று ஸ்ருஷ்டிக்கப்பட்டவனாகச் சொல்லப்பட்ட பிரமனுக்குக் காரணபூதன் புருஷசப்தவாச்யனே என்று பிரஸித்தப்படுத்தப்படுகிறது. 'பரமம் ஸாம்யமுபைதி' என்னுமிவ் வாக்கியம், 'மம ஸாத$_4$ர்ம்யமாக$_3$தா:' என்று கீதாசார்யனாலும் 'தம்மையே ஒக்க அருள் செய்வர்' என்று ஆழ்வாராலும் பகவத்பரமாக விவரிக்கப்பட்டது. இதற்கடுத்த மந்திரத்தில்

" ப்ராணோ ஹ்யேஷ ஸர்வபூ$_4$தைர் விபா$_4$தி
விஜாநந் வித்$_3$வாந் ப$_4$வ தேநாதிவாதீ$_3$ ।
ஆத்மக்ரீட$_3$ ஆத்மரதி: க்ரியாவாந்
ஏஷ ப்$_3$ரஹ்மவிதா$_3$ம் வரிஷ்ட$_2$: ||"

http://acharya.org

[ப்ராணசப்தத்தினும் சொல்லப்படும் இந்தப் பரமபுருஷனே எல்லா ஜீவர்களாலும் ஆச்ரயிக்கப்பட்டு விளங்குகிறான். (சிஷ்யனே!) இப்பரமபுருஷனை அறிந்த நீ அவனே எல்லா தேவதைகளைக்காட்டிலும் மேலானவன் என்று வாதம் செய்வாயாக. இப்படிப்பரமாத்மாவினிடமே விளையாடுபவனாகவும், அவனிடமே ரமிப்பவனாகவும், (அவனுக்குக் கைங்கர்யமாகிய) கர்மங்களைச் செய்பவனாகவும் எவன் இருக்கிறானோ அவன் ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுள் மேலானவன்.] என்று பரமபுருஷபரத்வநிர்ணயம் செய்யும்படி விதித்த பெருமையும் இவ்வுபநிஷத் ஒன்றுக்கே உண்டு. முந்தின மந்திரத்தில் பிரமனுக்கும் காரணபூதன் புருஷசப்தத்தால் சொல்லப்படுமவன் என்று படித்து, அவனே எல்லாச்சேதனர்களாலும் ஆச்ரயிக்கப்படுகிறான் என்பதையும் உத்கோஷித்து, 'அவனே பெரியோன்' என்று வாதம் செய்வாயாக என்று உபதேசித்து, இப்படிப் பரதத்வநிர்ணயம் செய்பவனே ப்ரஹ்மவித்துக்களுள் சிறந்தவன் என்று நிர்ணயித்திருக்கும் அழகை என்னென்று சொல்வது. இதனாலேயன்றோ பரதத்வநிர்ணயம்செய்த விஷ்ணுசித்தர் பெரிய ஆழ்வார் என்று அழைக்கப்படுகிறார். "ப4வ தேநாதிவாதீ3" என்பதை. "ப4வதே ந அதிவாதீ" என்று பிரித்துச் சிலர் சொல்லுகிறார்கள். அப்படிப் பொருள் கொள்வது முன்பின் மந்திரங்களுக்குச் சிறிதும் பொருந்தாது; 'ப4வதே' என்று ஆத்மநேபதமாயிருப்பதைச் சாந்தஸமாகக்கொள்ளவேண்டும் அருமையுமுண்டு; "யஸ்ஸத்யேந அதிவத3தி ஸ ஏவ அதிவத3தி" [எவன் ஸத்யசப்தத்தினால் சொல்லப்படும் ப்ரஹ்ம விஷயமாக அதிவாதம் செய்கின்றானோ, அவனே அதிவாதம் செய்பவனாவான்.] என்னும் ச்ருதியுடனும் சேராது. ஆகவே இங்குரைக்கப்பட்டதே சரியான பொருளாகும். மூன்றாவது முண்டகத்தின் இரண்டாவது கண்டத்தின் ஆரம்பத்தில்

"ஸ வேதை3தத் பரமம் ப்3ரஹ்ம தா4ம
யத்ர விச்வம் நிஹிதம் பா4தி சுப்4ரம் |
உபாஸதே புருஷம் யே ஹ்யகாமா:
தே ஶுக்ரமேதத3திவர்த்தந்தி தீ4ரா: ||"

[எவனிடத்தில் உலகமானது வைக்கப்பட்டுப் பிரகாசமுள்ளதாய் விளங்குகின்றதோ, ஒளிமயமானவனும், பரம்ப்ரஹ்மம் எனப்படுமவனுமான அந்த நாராயணனை அந்த ஞானியானவன் அறிகிறான். வேறொன்றிலும் பற்றற்றவர்களாய் எவர்கள் புருஷனையே

http://acharya.org

உபாஸிக்கின்றார்களோ, ஞானிகளுள் சிறந்த அவர்கள் ஜன்ம மற்றவர்களாகிறார்கள்.] என்று புருஷசப்தம் மறுபடியும் படிக்கப் பட்டது. ''பரமம் ப்$_3$ரஹ்ம'' என்று இங்கு சொல்லப்பட்டவன் நாராயணனே என்பதை ''நாராயணபரம் ப்$_3$ரஹ்ம'' என்று நாராயணானுவாகம் நிர்ணயித்தது. ''உபாஸதே புருஷம் யே ஹ்யகாமா:......'' என்னும் அடியை

''அநந்யாஶ் சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே।
தேஷாம் நித்யாபி$_4$யுக்தாநாம் யோக$_3$க்ஷேமம் வஹாம்யஹம்॥''

[வேறொன்றிலும் பற்றற்றவர்களாய் எவர்கள் என்னையே நினைத்துக் கொண்டு உபாஸிக்கிறார்களோ, என்னுடன் நித்திய யோகத்தை விரும்பும் அவர்களுடைய யோகக்ஷேமத்தை நான் வஹிக்கிறேன்.] என்று கீதாசாரியன் விவரித்தார். ''அகாமா:'' என்பதை ''அநந்யா:'' என்றும், ''புருஷம்'' என்பதை ''மாம்'' என்றும், ''உபாஸதே'' என்பதை ''பர்யுபாஸதே'' என்றும் ''யே தீ$_4$ரா:'' என்பதை ''யே ஜநா:'' என்றும் விவரித்திருக்குமழகு நோக்கத்தக்கது.

''யதா$_2$ நத்$_3$ய: ஸ்யந்த$_3$மாநா: ஸமுத்$_3$ரே
அஸ்தம் க$_3$ச்ச$_2$ந்தி நாமரூபே விஹாய।
ததா$_2$ வித்$_3$வாந் நாமரூபாத்$_3$ விமுக்த:
பராத் பரம் புருஷமுபைதி தி$_3$வ்யம்॥

[ப்ரவஹிக்கும்படியான நதிகள், (கங்கை, யமுனை முதலிய) நாமங்களையும், (வெளுப்பு, கறுப்பு முதலிய) ரூபங்களையும் விட்டு, எப்படி ஸமுத்ரத்தில் சென்று மறைகின்றனவோ, அப்படியே ப்ரஹ்ம ஜ்ஞானியானவன் நாமரூபங்களினின்றும் விடுபட்டு, மேலானவர்களைக்காட்டிலும் மேலானவனை திவ்யபுருஷனை அடைகிறான்.] என்று மறுபடியும் ஆதராதிசயத்தால் புருஷசப்தத்தைக் கடைசியாக ஒரு தடவை படிக்கிறது முண்டகோபநிஷத். இந்த மந்திரத்தின் அர்த்தத்தை

''தொக்கிலங்கு ஆறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம் நிற்கமாட்டாத மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில் நிறத்தாய்! வித்துவக்கோட்டம்மா! உன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன் காண் புண்ணியனே!''

http://acharya.org

என்று பகவான் விஷயத்தில் குலசேகராழ்வார் அருளிச்செய்தார். ''பராத் பரம் புருஷம்'' என்று இங்கு படித்ததால் ''பராத் பரம் யந் மஹதோ மஹாந்தம்'' என்று நாராயணவல்லியில் சொல்லப்பட்ட பரமபுருஷனே இங்கும் உத்கோஷிக்கப்படுபவனென்று உணர்த்தப் படுகிறது. ''புருஷம் தி$_3$வ்யம்'' என்றதால், ''தி$_3$வ்யோ தே$_3$வ ஏக ஏவ நாராயண:'' என்ற ஸுபாலச்ருதியும் அறிவிக்கப்படுகிறது. இப்படிப் புருஷசப்தத்தை இங்கு படித்தபிறகு அடுத்த மந்திரத்தில்

''ஸ யோ ஹைதத் பரமம் ப்$_3$ரஹ்ம வேத$_3$
ப்$_3$ரஹ்மைவ ப$_4$வதி நாஸ்யாऽப்$_3$ரஹ்மவித் குலே ப$_4$வதி।
தரதி சோகம் தரதி பாப்மாநம்
கு$_3$ஹாக்$_3$ரந்தி$_2$ப்$_4$யோ விமுக்தோऽம்ருதோ ப$_4$வதி॥''

[எவனொருவன் இந்தப் பரப்ரஹ்மத்தை அறிகிறானோ, அவன் ப்ரஹ்மம் போலவே ஆகிறான். அவனுடைய குலத்தில் ப்ரஹ்ம ஜ்ஞானமற்றவன் பிறக்கமாட்டான், சோகத்தையும், பாபங்களையும் அவன் தாண்டுகிறான். ப்ரக்ருதிஸம்பந்தத்தினால் ஏற்படும் ராகம், த்வேஷம் முதலியவற்றிலிருந்து விடுபட்டவனாய் முக்தியடைகிறான்.] என்று அப்புருஷனே பரப்ரஹ்மமெனப்படுவதென்றும், அவனை அறிந்தவன் அவனைப்போலவே ஆகிறானென்றும், ''ஏழாட்காலும் பழிப்பிலோம்'' என்றும் ''கேசவன் தமர் கீழ்மேல் எமர் ஏழேழு பிறப்பும்'' என்றும், ஆழ்வார்கள் அருளியதுபோலே அவனுடைய குலத்தில் ப்ரஹ்மஜ்ஞானமற்றவன் பிறக்கமாட்டானென்றும் பலச்ருதியைச் சொல்லி முடிக்கிறது பண்டைமறை. ''நாரயண பரம் ப்$_3$ரஹ்ம'' என்ற நாராயணவல்லியைப்போல் புருஷசப்தத்தைப் படித்து ''பரமம் ப்$_3$ரஹ்ம'' என்கிறது இவ்வுபனிஷத்.

வாஸுதேவனையே முக்யார்த்தமாகக்கொண்டதான புருஷசப்தத்தை ஒன்பது தடவை படித்து, அவனுக்கேயான பகவச்சப்தத்தையும் ஆதராதிசயத்தாலே அறிவித்து, ''நாராயண பரம் ப்$_3$ரஹ்ம'' எனப்படும் ப்ரப்ரஹ்மசப்தத்தையும் இரண்டு தடவை சொல்லி ''தி$_3$வி திஷ்ட$_2$த்யேக:'' ''ஜ்யோதிஷாம் ஜ்யோதி:'' ''ஏஷ ஸர்வ பூ$_4$தாந்தராத்மா'' முதலான அவனுக்கே அஸாதாரணமான அடையாளங்களையும் அநுஸந்தித்து, அப்பரமபுருஷனே மேலானவன் என்று பரதத்வநிர்ணயம் செய்யும்படி விதித்து, அவனே பிரமனையும் பிறப்பித்தவன் என்று படித்த இவ்வுபனிஷத் அவனையே அறிவிக்கிறதென்பதை ஸந்தேஹிப்பார் வைதிகரும் ஆவரோ? இவ்வளவுக்கும் மேலே,

http://acharya.org

''புராணஸம்ஹிதாகர்த்தா ப₄வாந் வத்ஸ ப₄விஷ்யதி ।
தே₃வதாபாரமார்த்₂யஞ்ச யதா₂வத் வேத்ஸ்யதே ப₄வாந் ॥

[குழந்தாய்! நீ புராண ஸம்ஹிதைகளைச் செய்பவனாக ஆவாய். பரதேவதை எது என்னும் உண்மையையும் உள்ளபடி நீ அறிவாய்.] என்று வஸிஷ்டராலும் புலஸ்த்யராலும் வரமளிக்கப் பட்டவரும், வேதவ்யாஸருக்கும் உத்பாதகரும், "ஸ ஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" என்று வேதத்தாலும் புகழப்பட்ட பெருமையையுடையவருமான பராசரமஹர்ஷியால் பகவத்பரமாக விவரிக்கப் பட்ட ஏற்றமும் இவ்வுபனிஷத்திற்கு உண்டு.

''த்₃வே வித்₃யே வேதி₃தவ்யே இதி ஹஸ்ம
யத் ப்₃ரஹ்மவிதோ₃ வத₃ந்தி பரா சைவாபரா ச ॥
தத்ராऽபரா ருக்₃வேதோ₃ யஜுர்வேத₃ஸ்
ஸாமவேதோ₃ऽத₂ர்வவேத₃:
ஶிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் ச₂ந்தோ₃
ஜ்யோதிஷமிதி ।
அத₂ பரா யயா தத₃க்ஷரமதி₄க₃ம்யதே ॥
யத்தத₃த்₃ரேச்யமக்₃ராஹ்யமகோ₃த்ரமவர்ணம்
அசக்ஷு:ச்ரோத்ரம் தத₃பாணிபாத₃ம் ।
நித்யம் விபு₄ம் ஸர்வக₃தம் ஸுஸூக்ஷ்மம்
தத₃வ்யயம் யத்₃ பூ₄தயோநிம் பரிபச்யந்தி தீ₄ரா: ॥''

[ப்ரஹ்மவித்துக்கள், அந்தப் பரப்ரஹ்மத்தை அறிவதற்கு, பரவித்யையென்றும், அபரவித்யையென்றும் இரண்டு வித்யைகளை அறியவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதில், ருக் யஜுஸ் ஸாம அதர்வண வேதங்கள் நான்கும், சிக்ஷா, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் என்னும் ஆறு அங்கங்களும் அபரவித்யையாகும். எந்த (பக்திரூபமான) வித்யையினால் அந்த அக்ஷரபுருஷன் அறியப்படுகிறானோ, அது பரவித்யையாகும். காணப்படாததும், எடுக்கப்படாததும், குலமற்றதும், வர்ணாச்ரமங்களற்றதும், கண் காது முதலியவையற்றதும், கைகால்களற்றதும், நித்யமானதும், விபுவானதும், ஸர்வவ்யாபியும், மிகவும் ஸூக்ஷ்மமாயுள்ளதும், அழிவற்றதும், பூதகாரணமுமான அப்பரப்ரஹ்மத்தை புத்திமான்கள் காண்கிறார்கள்.] என்று இவ்வுபனிஷத்தின் ஆரம்பத்தில் படித்ததை

http://acharya.org

''த்₃வேவை வித்₃யே வேதி₃தவ்யே இதி சாத₃ர்வணீ ச்ருதி:।
பரயா த்வக்ஷரப்ராப்தி: ருக்₃வேதா₃திமயா(அ)பரா ॥
யத்தத₃வ்யக்தமஜரம் அசிந்த்யமஜமவ்யயம் ।
அநிர்தே₃ச்யமரூபம் ச பாணிபாதா₃த்₃யஸம்யுதம் ॥
விபு₄ ஸர்வக₃தம் நித்யம் பூ₄தயோநிரகாரணம் ।
ச்ருதிவாக்யோதி₃தம் ஸௌக்ஷ்மம் தத்₃ விஷ்ணோ: பரமம் பத₃ம் ॥'' [வி-பு 6.5]

[அதர்வணவேதத்தைச்சேர்ந்த முண்டகச்ருதி இரண்டு வித்யைகளை அறியவேண்டுமென்கிறது; பரவித்யையினால் அக்ஷரபுருஷன் அடையப்படுகிறான்; ருக்வேதம் முதலிய வேதங்கள் அபரவித்யை. அறியப்படாதது, கிழத்தனமற்றது, நினைக்கமுடியாதது, பிறப்பற்றது, அழிவற்றது, காட்டமுடியாதது, ரூபமற்றது, கைகால் முதலியவையற்றது, விபுவாயிருப்பது, ஸர்வவ்யாபியாயுள்ளது, நித்யமானது, பூதகாரணமாயிருப்பது தனக்கொரு காரணமற்றது, ஸௌக்ஷ்மமானது என்று அந்த ச்ருதிவாக்யத்தில் சொல்லப்பட்டது விஷ்ணுவினுடைய பரமப்ராப்யமான ஸ்வரூபமேயாகும்.] என்று விஷ்ணுபரமாக விவரித்து,

ஸ வேதை₃தத் பரமம் ப்₃ரஹ்ம தா₄ம
யத்ர விச்வம் நிஹிதம் பா₄தி சுப்₄ரம் ।
உபாஸதே புருஷம் யே ஹ்யகாமா:
தே(அ)சுக்ரமேதத₃தி வர்த்தந்தி தீ₄ரா: ॥''
என்ற மந்திரத்தை

''வ்யாப்யம் வ்யாப்தம் யதஸ்ஸர்வம் பத₃வை பச்யந்தி ஸூரய:।
தத்₃ ப்₃ரஹ்ம தத் பரம் தா₄ம தத்₃த்₄யேயம் மோக்ஷகாங்க்ஷிபி₄:॥''
[வி-பு 6.5]

[வியாபிக்கப்படுவதான அசேதனமும், வியாபிக்கும் சேதனமும் எதனிடமிருந்து உண்டாகின்றனவோ, எதை ஸூரிகள் பார்க்கின்றனரோ, அதுவே 'பர ப்ரஹ்மம்;' அதுவே 'தா₄ம' (ஒளி) எனப்படுவது. அதுவே மோக்ஷார்த்திகளால் உபாஸிக்கப்படுவது.] என்று உபப்ரும்ஹணம் செய்து, ''பாக₃வதேந சேதஸா'' என்றவிடத்தில் சொன்ன பகவச்சப்தமும் அவனையே குறிக்கிறதென்பதை

http://acharya.org

"ததே3வ ப4க3வத்3வாச்யம் ஸ்வரூபம் பரமாத்மந: |
வாசகோ ப4க3வச்ச2ப்3த3ஸ் தஸ்யாத்3யஸ்யாக்ஷயாத்மந:"
[வி-பு 6-5-69]

[அந்தப் பரமாத்ம ஸ்வரூபமே பகவான் எனப்படுவது. அழிவற்றவனான அந்த ஆதிபுருஷனுக்கே வாசகமாயிருப்பது பகவச்சப்தம்.] என்று உணர்த்தி, முன் எடுக்கப்பட்ட பகவச்சப்த நிர்வசனங்களையும் அருளிச் செய்தார் பராசரமஹர்ஷி. இவையெல்லாவற்றையும் திருவுள்ளத்திற்கொண்ட கூரத்தாழ்வானும்,

"யத் தத்வமக்ஷரமத்3ருச்யமகோ3த்ரவர்ணம்
அக்3ராஹ்யமவ்யயமநீத்3ருசமத்3விதீயம் |
ஈசாநமஸ்ய ஜக3தோ யத3ணோரணீய:
தத்3 வைஷ்ணவம் பத3முதா3ரமுதா3ஹராம: ||"

[யாதொரு தத்வமானது காணமுடியாததாகவும், கோத்ரவர்ணங்களற்றதாகவும், கிரஹிக்கத்தகாததாகவும், அழிவற்றதாகவும், ஒப்பற்றதாகவும், இவ்வுலகிற்கு ஈச்வரனாகவும், அணுவைக் காட்டிலும் அணுவாகவும் உள்ளதோ, அதையே மிகப்பெரிதான விஷ்ணுவின் ஸ்வரூபமென்று நாங்கள் சொல்லுகிறோம்.] என்று ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்திலே முண்டகோபனிஷத்தை விஷ்ணுபரமாக வ்யாக்யானம் செய்தருளினர். இவைகளிலிருந்து முண்டகோபனிஷத் மஹாபுருஷனை நாராயணனையே உத்கோஷிக்கிறதென்பது சிலாலிகிதமாக ஸித்திக்கிறது.

மாண்டூக்யோபநிஷத்தின் மறைபொருள்

இதுவும் அதர்வணவேதத்திலுள்ளதோர் சிறிய உபனிஷத்து. இதை அத்வைதபரமாக விவரித்து, சங்கரருக்கும் முன்னிருந்தவரான கௌடபாதரென்பவர் சில ச்லோகங்கள் செய்திருக்கிறார். அவை உபனிஷத்தில் சேர்ந்தவையல்ல என்பதே பெரும்பாலோருடைய அபிப்ராயம். ஸ்ரீராமாநுஜர் முதலான நம் ஆசார்யர்கள் பலர்

"அநாதி3மாயயா ஸுப்தோ யதா3 ஜீவ: ப்ரபு3த்4யதே"

[அநாதிமாயையினால் தூங்கும் ஜீவன் எப்போது விழித்துக் கொள்கிறானோ......] என்னும் ப்ரமாணத்தை ச்ருதியிலுள்ளதாக எடுத்திருக்கிறார்கள். அது இந்த கௌடபாதகாரிகையிலிருப்பதைக் கொண்டு இதுவும் இவ்வுபனிஷத்தில் சேர்ந்ததெனக்கொண்டு

http://acharya.org

கூரநாராயணமுனி என்னுமோர் ப்ராசீனர் இக்காரிகையை விசிஷ்டாத்வைதபரமாக வியாக்கியானம் செய்திருக்கிறார். "அநாதி மாயயா ஸுப்த:" என்னுமிந்த ப்ரமாணத்தை இக்காரிகைகளி லிருந்துதான் நம் ஆசாரியர்கள் எடுத்திருக்கிறார்களென்பதற்கு ஆதாரம் ஒன்றுமில்லாததால், இக்காரணத்தைக்கொண்டு இதை உபநிஷத்தாக ஒப்புக்கொள்வது சரியல்ல. நிற்க; இவ்வுபநிஷத்தில் ஆரம்பத்தில்,

"ஓமித்யேதத₃க்ஷரமித₃ம் ஸர்வம் தஸ்யோபவ்யாக்₂
யாநம் பூ₄தம் ப₄வ்யம் ப₄விஷ்யதி₃தி ஸர்வ மோங்கார ஏவ।
யச்சாந்யத் த்ரிகாலாதீதம் தத₃ப்யோங்கார ஏவ ॥"

['ஓம்' என்னும் இந்த அக்ஷரமே இவையெல்லாமாகின்றது. அது வியாக்கியானம் செய்யப்படுகிறது. சென்றதும், வருவதும், இருப்பதுமான எல்லாம் ஓங்காரமே. முக்காலத்தையும் கடந்தான பரவஸ்துவும் ஓங்காரவாச்யமே.] என்று படிக்கப்பட்டது.

"ய: புநரேதேந த்ரிமாத்ரேணைவ பரம்புருஷமபி₄த்₄யாயீத"
[எவனொருவன் மூன்று மாத்திரைகளையுடைய ப்ரணவத்தால் பரம புருஷனை உபாஸிக்கிறானோ......] என்று முண்டகோபநிஷத்தில் சொல்லப்பட்ட ஓங்காரவாச்யனான புருஷனே இங்கும் உணர்த்தப்படுபவனென்று தெளிவாகிறது. இந்த முண்டகோபநிஷந் மந்த்ரத்தை விசாரிக்கையில் நாராயணனே ஓங்காரவாச்யன் என்பதற்கு எடுத்த ப்ரமாணங்களை இங்கும் அநுஸந்திப்பது. மேலும், "புருஷ ஏவேத₃ம் ஸர்வம் யத்₃ பூ₄தம் யச்ச ப₄வ்யம்" என்னும் புருஷஸூக்த மந்திரத்தையும் இம்மந்திரம் நினைப்பூட்டுவதாயிருக்கையாலும் இது புருஷோத்தம விஷயமானதே என்று விளங்குகிறது.

"ஸர்வம் ஹ்யேதத் ப்₃ரஹ்ம அயமாத்மா ப்₃ரஹ்ம
ஸோऽயமாத்மா சதுஷ்பாத் ॥"

[எல்லாம் இந்த ப்ரஹ்மமே; இந்த ஓங்காரவாச்யமான ஆத்மாவே ப்ரஹ்மம்; அந்த இந்த ஆத்மா நான்கு பாதங்களை உடையது.] என்பது அடுத்தமந்திரம். இது "புருஷ ஏவேத₃ம் ஸர்வம்" என்றும், "த்ரிபாதூ₃ர்த்₄வ உதை₃த் புருஷ: । பாதோ₃ऽஸ்யேஹாப₄வாத் புந:" என்றும் புருஷ ஸூக்தத்திலும், "புருஷ ஏவேத₃ம் விச்வம்" என்று முண்டகோபநிஷத்திலும், "விச்வம் நாராயணம்" என்று நாராயண ஸூக்தத்திலும் சொல்லப்பட்ட வாக்கியங்களுக்கு ஸ்மாரகமாயிருப்ப

http://acharya.org

நால் இதுவும் பரமபுருஷ விஷயமே என்றதாகிறது. இதற்குப் பிறகு, அகாரம், உகாரம், மகாரம், அர்த்த₄மாத்ரை இவைகளுடன் கூடிய ஓங்காரத்தை, விச்வன், தைஜஸன், ப்ராஜ்ஞன், துரீயன் என்னும் மறுபெயர்களையுடைய அநிருத்தன், ப்ரத்யும்னன், ஸங்கர்ஷணன், வாஸுதேவன் என்னும் நான்கு வியூஹங்களாகிய பாதங்களுடன்கூடிய பரவாஸுதேவனாகிய ப்ரஹ்மமாக தியானிக்கும்படி விதிக்கப்படுகிறது. இந்த நான்கு மூர்த்திகளும் ஜாக்ரத் ஸ்வப்நாதி தசைகளுக்கு நிர்வாஹகர்கள் என்றும் சொல்லப்படுகிறது. இவைகளிலிருந்து பாஞ்சராத்ரத்தில் இம்மாதிரி சொல்லப்பட்ட பரவாஸுதேவனுடைய நான்கு வியூஹங்களே இவையென்று தெளிவாகிறது. இவ்வுபனிஷத்தின் கடைசியில் "சாந்தம் சிவமத்₃வைதம் சதுர்த்த₂ம் மந்யந்தே | ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய:" [பிறப்புகளற்றவனும், மங்களகரமானவனும், ஒப்பற்றவனுமான புருஷனை நான்காவது வியூஹமூர்த்தியாகக் கருதுகின்றனர். அவனே பரமாத்மா; அவனே அறியத்தக்கவன்.] என்று சிவசப்தம் படிக்கப்பட்டிருப்பதால், இவ்வுபனிஷத் சிவபரமாகாதோ என்று சிலர் சந்தேஹிக்கக்கூடும். இவ்வுபனிஷத்திலும், ச்வேதாச்வதரத்திலும் அதர்வசிகையிலும் மிகச் சிலவிடங்களில் படிக்கப்பட்ட சிவசப்தம் நாராயணனையே குறிக்கிறதென்பதை "சாச்வதம் சிவமச்யுதம் நாராயணம்" என்று நாராயணஸூக்தம் நிர்ணயித்தது. சிவன் முதலிய நாமங்கள் ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் பகவந்நாமங்களாகப் படிக்கப்படுவதும் பிரஸித்தம். தன்னுடைய தந்தையின் பெயராகிய ருத்ரன், சிவன் முதலிய நாமங்களை, "அபஹதபாப்மா வாஹம்" [நான் பாபம் நீங்கப்பெறாதவனாயிருக்கிறேன்.] என்ற தன் பிள்ளைக்குப் பிரமன் கொடுத்தான் என்று வேதமே ஓதியிருப்பதையும் காட்டினோம். "ருதே நாராயணாதீ₃நி நாமாநி புருஷோத்தம:, ப்ராதா₃தந்யத்ர ப₄க₃வாந்" என்று, நாராயணன் முதலான நாமங்களைத்தவிர மற்ற நாமங்களை பகவானான புருஷோத்தமன் மற்றவர்களுக்குக் கொடுத்தருளினானென்பதை வாமனபுராணம் சொல்லியிருப்பதையும் தெரிவித்திருக்கிறோம். மேலும், "ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய:" என்று இம்மந்திரத்தில் படித்திருப்பது, "நாராயணம் மஹாஜ்ஞேயம்" என்றும், "ஆத்மா நாராயண: பர:" என்றும் நாராயணஸூக்தத்தில் படித்திருப்பதை உணர்த்துகிறது. உபனிஷதாரம்பத்திலும் புருஷஸூக்தாதி ப்ரத்யபி₄ஜ்ஞாபகமான மந்திரங்களைப் படித்திருப்பதையும் உணர்த்தினோம். இக்காரணங்களினால் இவ்வுபனிஷத், ஓங்காரவாச்யனும், சதுர்வ்யூஹங்களை உடையவனுமான பரவாஸுதேவனையே குறிக்

http://acharya.org

கின்றதென்று தெளிவாகிறது. மேலும், இவ்வுபனிஷத்திலுள்ள மந்திரங்கள் ந்ருஸிம்ஹ உத்தரதாபனீயத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. இதனாலும் இவ்வுபனிஷத் பகவானையே குறிக்கிறதென்று ஸித்திக்கிறது. இவ்வளவுக்கும் மேலாக பகவான் நாராயணனாலேயே சொல்லப்பட்டதென்று பாரதாதிகளில் புகழப்பட்ட பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் இவ்வுபனிஷத் பகவத்பரமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டுமிருக்கின்றது. இவ்வுபனிஷத்தில் விச்வனென்று பெயருள்ளவனும், ஜாக்ரதவஸ்தைக்கு நிர்வாஹகனுமான ஒரு புருஷன் ஓங்காரத்திற்கு முதல் பாதமான அகாரத்திற்குப் பொருள் என்றும், தைஜஸனென்னும் பெயருள்ளவனும் ஸ்வப்நாவஸ்தைக்கு நிர்வாஹகனுமான ஒரு புருஷன் உகாரத்திற்குப் பொருள் என்றும், ப்ராஜ்ஞனென்று பெயருள்ளவனும் ஸுஷுப்தி தசைக்கு நிர்வாஹகனுமான ஒரு புருஷன் மகாரத்திற்குப் பொருள் என்றும், சதுர்த்தன் அல்லது துர்யன் (நான்காமவன்) எனப்படுபவன் இவர்களுக்குக்காரண பூதனென்றும் நான்காவது அர்த்த மாத்ரையான பிந்துவுக்குப்பொருளாயிருப்பவனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயம்.

"ஓமித்யேதத் ஸமுத்பந்நம் ப்ரத2மம் ப்3ரஹ்ம தாரகம் |
பி3ந்து3னா பூ4ஷயேத் பச்சாந்நாதே3ந தத3நந்தரம் ||
த்4யாயேத் ஸந்ததிநாத3ாந்தம் தைலதா4ராமிவாததம் |
ஏதத் தத்3 வைஷ்ணவம் ரூபம் த்ர்யக்ஷரம் ப்3ரஹ்ம சாச்வதம் ||
அநிருத்3த4ஸ் த்வகாரோத்ர ப்ரத்3யும்நோ மத்4யமஸ்வர: |
ஸங்கர்ஷணோ மகாரஸ்து வாஸுதே3வஸ்து பி3ந்து3க: ||
சதுர்ணாமபி ப4ாக3ந்து நாத3ரூபம் ஸுரேச்வர |
விராமே ஸதி நாத3ஸ்ய பரஸ்ப்3ரப4வதி த்4ருவம் ||
ஜ்யோதிஸ்தத்ர பரம் ப்3ரஹ்ம லக்ஷ்மீநாராயணாஹ்வயம் |
அஸ்ய மாத்ராவித4ாநஜ்ஞை: ஸார்த்த4ாஸ் திஸ்ர
உதா3ஹ்ருதா: ||
விச்வம் ஜாக்3ரத்பதே3ாநம் ஸர்வேந்த்3ரியஸமீரகம் |
அநிருத்3த4ாத்மகம் தம் ச சிந்தியேத் ப்ரத2மாக்ஷரம் ||
தம் ஸோபகரணம் தே3வம் அகாரே ப்ரவிலாப்ய து
அகாரம் தைஜஸே தே3வே ப்ரத்3யும்நே ஸ்வப்நவர்த்மகே2 ||
அந்த:கரணவ்ருத்தீநாம் ப்ரேரகே ப்ரவிலாபயேத் ||

http://acharya.org

தம் ஸோபகரணம் தே₃வமுகாரே ப்ரவிலாபயேத் ||
உகாரம் த்வீச்வரே ப்ராஜ்ஞே ஸங்கர்ஷண இதி ச்ருதே |
ஸுஷுப்திபத₃கே₃ ஸர்வத் ப்ராணாதி₃ப்ரேரகே விபௌ₄ ||
தம் ஸோபகரணம் தே₃வம் மகாரே ப்ரவிலாபயேத் |
மகாரஞ்சைவ தே₃வேசே துர்யஸம்ஜ்ஞேऽர்த்த₄மாத்ரகே
ஜ்ஞாநாநந்த₃மயே தே₃வே வாஸுதே₃வே விலாபயேத் ||"
[லக்ஷ்மீதந்த்ரம் 24]

[வேதத்துக்கு ஸங்க்ரஹமாயும், தாரகம் எனப்படுவதாயுமுள்ள இந்த ஓங்காரம் முதலில் உண்டாயிற்று. அதற்குப் பின்னால் பிந்துவென்னும் அர்த்தமாத்ரையாலும், அதற்குப்பிறகு நாதத்தாலும் இவ்வோங்காரத்தை அலங்கரிக்கவேண்டும். நாதம் வரையிலுள்ள ஓங்காரத்தை தைலதாரையைப்போல் இடைவிடாமல் தியானிக்கவேண்டும். சாச்வதமாயுள்ளதும், வேதஸங்க்ரஹமாயிருப்பதும், மூன்று அக்ஷரங்களைக் கொண்டதுமான இது விஷ்ணுவுக்கு (நாதரூபமான) உருவமாயுள்ளது. அநிருத்தன் இதில் அகாரத்திற்குப் பொருளாவான்; உகாரம் ப்ரத்யும்நவாசகம்; மகாரம் ஸங்கர்ஷணனைச் சொல்லுவது; அர்த்தமாத்ரையாகிய பிந்து வாஸுதேவனை உணர்த்துகிறது. இந்த நான்கு பாகங்களுக்கும் நாதமே உருவம்; முடிந்தவுடன் பரம்ப்ரஹ்மமென்றும், பரஞ்சோதியென்றும் சொல்லப்படுவதும், லக்ஷ்மீ நாராயணன் என்னும் பெயரையுடையதுமான பரவஸ்து நிச்சயமாகத் தெளிவாகத் தோன்றுகிறது. சாஸ்திரவிதியை அறிந்தவர்களால் இந்த ஓங்காரத்திற்கு மூன்று மாத்திரைகள் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. விச்வம் என்னும் பெயரையுடையவனும், ஜாக்ரத் (விழித்துக்கொண்டிருக்கும்) அவஸ்தைக்கு நிர்வாஹகனும், எல்லா இந்திரியங்களையும் தூண்டிவிடுபவனுமான அநிருத்தரூபத்தையுடைய மூர்த்தியை முதலக்ஷரத்திற்குப் பொருளாகச் சிந்திக்கவேண்டும். உபகரணங்களோடு கூடிய அந்த அநிருத்ததேவனை அகாரத்தில் அடக்கி, அகாரத்தை தைஜஸன் என்னும் பெயரையுடையவனும், ஸ்வப்நதசைக்கு நிர்வாஹகனும், மநோவ்ருத்திகளைத் தூண்டுபவனுமான ப்ரத்யும்னனென்னும் தேவனிடத்தில் அடக்கவேண்டும். உபகரணங்களோடு கூடிய அந்த மூர்த்தியை (அவனுக்கு வாசகமான) உகாரத்தில் அடக்க வேண்டும். உகாரத்தை ப்ராஜ்ஞன் என்று பெயரையுடையவனும், ஸுஷுப்தி (தூங்குதல்) தசைக்கு நிர்வாஹகனும் அப்போதும் ப்ராணன் முதலியவைகளைத் தூண்டுபவனும் ஸர்வவ்யாபியுமான

http://acharya.org

ஸங்கர்ஷணனென்னும் ஈச்வரனிடம் அடக்கவேண்டும். உபகரணங்களோடு கூடிய ஸங்கர்ஷணமூர்த்தியை (அவனுக்கு வாசகமான) மகாரத்தில் அடக்கவேண்டும். மகாரத்தையும், மற்ற மூன்று மூர்த்திகளுக்கும் காரணனும், தூர்யன் (நான்காமவன்) என்று பெயரையுடையவனும், அர்த்தமாத்ரைக்குப் பொருளாயிருப்பவனும், ஜ்ஞாநாநந்தமயனும், பிரகாசியாநிற்பவனுமான வாஸுதேவனிடத்தில் அடக்கவேண்டும்.] என்று பாஞ்சராத்ரத்தில் லக்ஷ்மிதந்த்ரத்தில் வெகு விரிவாக விவரிக்கப்பட்டது. இவைகளிலிருந்தும் இச்சாந்தோக்யோபனிஷத் பரவாஸுதேவனையே பரமாத்மாவென்று உணர்த்துகிறதென்பது விளங்குகிறது.

தைத்திரீயோபனிஷத்தின் தேவதாநிர்ணயம்

இது யஜுர்வேதத்திலுள்ள முக்கியமான உபனிஷத்தென்பது மிகவும் பிரஸித்தம். இதிலுள்ள நாராயணஸூக்தம் நாராயணபரமானதே என்பதை விரிவாக விவரித்திருக்கிறோம். மற்ற பாகங்களும் அவனையே உணர்த்துகின்றனவென்பதை இங்கு விளக்குவோம். இவ்வுபனிஷத்தின் முதல் வல்லியில்

"ஸ ய ஏஷோ அந்தர்ஹ்ருதய ஆகாஶ:। தஸ்மிந்நயம் புருஷோ மநோமய:। அம்ருதோ ஹிரண்மய:। அந்தரேண தாலுகே। ய ஏஷ ஸ்தந இவாவலம்பதே। ஸேந்த்ரயோநி:। யத்ராஸௌ கேஶாந்தோ விவர்த்ததே"

[ஹ்ருதயாகாசத்தில், புருஷசப்தத்தினால் சொல்லப்படுபவனும், சித்தமான மனஸ்ஸினால் கிரஹிக்கத்தக்கவனும், ஸம்ஸாரஸம்பந்தமற்றவனும், பொன்போன்ற திவ்யமங்கள விக்ரஹத்தை உடையவனுமான இந்தப்பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான். முகவாய்க் கட்டைகளுக்கு நடுப்ரதேசத்திற்குக்கீழே (பசுமாட்டினுடைய) ஸ்தனம் போலே யாதொரு ஹ்ருதயம் தொங்குகின்றதோ, அது பரமைச்வர்யயுக்தனயிருப்பதால் இந்திரசப்தத்தால் சொல்லப்படும் பரமாத்வாவுக்கு இருப்பிடம். இவ்விடத்திலே, ப்ரஹ்மருத்ரர்களுக்கும் காரணபூதனான பகவான் விசேஷமாக விளங்குகிறான்.] என்று உத்கோஷித்தது. கடைசிவல்லியான நாராயணவல்லியிலும் இப்படி ஹ்ருதயாகாசத்தில் விளங்குபவன் நாராயணனே என்று நிர்ணயித்தது. இப்படி உபக்ரமத்தோடு உபஸம்ஹாரத்தோடு வாசியற இவ்வுபனிஷத் பகவத்பரமாயிருக்கிறதென்று தெளிவாகிறது. இம்மந்திரம் பகவத்பரமே என்பதை விளக்குவோம். (ய ஏஷோ...... ஆகாச:) இதே விஷயம்

http://acharya.org

"பத்₃மகோசப்ரதீகாசம் ஹ்ருத₃யஞ்சாப்யதோ₄முக₂ம் ।
அதோ₄நிஷ்ட்யாவிதஸ்த்யாந்து நாப்₄யாமுபரி திஷ்ட₂தி ।
ஹ்ருத₃யம் தத்₃ விஜாநீயாத்₃ விச்வஸ்யாயதநம் மஹத்।"

என்று நாராயணவல்லியில் சொல்லப்பட்டது. (புருஷ:) பகவானுக்கே அஸாதாரணமான புருஷசப்தத்தை ஆரம்பத்திலேயே படிக்கிறது. (புருஷோ மநோமய:) "ந சக்ஷுஷா க்₃ருஹ்யதே நாபி வாசா மநஸா து விசுத்₃தே ந" [கண்ணாலும் வாக்கினாலும் இவன் அறியப்படமாட்டான். சுத்தமான மனஸ்ஸினாலேயே அறியப்படுவான்.] என்று ச்ருதியிலே சொல்லப்பட்டதாகையாலே மநோமயனெனப்படுகிறான். (அம்ருத:) "ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:" என்று அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் சொல்லப்பட்டபடியே அஸம்ஸாரியாயிருப்பவன். (ஹிரண்மய:) "ய ஏஷோ அந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷோ த்₃ருச்யதே.........தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகமேவமக்ஷிணீ" [ஆதித்யனுக்கு நடுவில் யாதொரு ஹிரண்மயனான புருஷன் இருக்கிறானோ, அவனுக்கு ஸூர்யனால் மலரும் தாமரை போன்ற இரு கண்கள் உள.] என்று சாந்தோக்யத்தில் சொல்லப்பட்டவனும், புண்டரீகாக்ஷனும், ஸுவர்ணமயனானவனுமான புருஷனே இவனென்று உணர்த்தப்படுகிறது. (அந்தரேண தாலுகே ய ஏஷ: ஸ்தந இவ அவலம்பதே) நாராயணவல்லியில இவ்விஷயம்

"அதோ₄ நிஷ்ட்யா விதஸ்த்யாம் து நாப்₄யாமுபரி திஷ்ட₂தி ।
ஸந்ததம் ஸிராபி₄ஸ்து லம்ப₃த்யாகோசஸந்நிப₄ம் ।"

என்று சொல்லப்பட்டது. "அந்தரேண தாலுகே.........அவலம்ப₃தே" என்னும் வாக்கியத்திற்கு "நாக்கிற்கு நடுவில் கோஸ்தனம் போல் தொங்கும் உள்நாக்கு" என்றும் ரங்கராமாநுஜமுனி பொருளுரைத்தார். (ஸேந்த்₃ரயோநி:) 'இதி₃ பரமைச்வர்யே' என்று தாதுவாகையாலே பரமைச்வர்யத்துடன் கூடிய பரமாத்மா சொல்லப்படுகிறான். "இந்த்₃ரோ மாயாபி₄: புருரூப ஈயதே" [பரமைச்வர்யத்தையுடைய பரமபுருஷன் மாயையினால் பல உருவங்களுடன் விளங்குகிறான்.] என்று ச்ருதியிலும், "இந்திரலோகமாளும்" என்று தொண்டரடிப்பொடிகளாலும், பரமாத்மவிஷயமாக இந்த்ரசப்தம் பிரயோகிக்கப்பட்டது. (ஸேந்த்ரயோநி:) அந்த ஹ்ருதயம் பரமாத்மாவுக்கு இருப்பிடம். "விச்வஸ்யாயதநம் மஹத்" என்று நாராயணவல்லியில்

http://acharya.org

சொல்லப்பட்டது. (யத்ராஸௌ கேசாந்தோ விவர்த்ததே) அந்த ஹ்ருதயத்தில் ப்ரஹ்மருத்ரர்களுக்குக் காரணபூதனான இந்தப் பரம புருஷன் விசேஷமாக விளங்குகிறான்.

"க இதி ப்₃ரஹ்மணோ நாம ஈசோऽஹம் ஸர்வதே₃ஹிநாம் |
ஆவாம் தவாங்கே₃ ஸம்பூ₄தௌ தஸ்மாத் கேசவநாமவாந் ||"

['க:' என்று பிரமனுக்குப் பெயர்; தேஹத்தில் அபிமானமுள்ள எல்லாருக்கும் நான் ஈசன்; நாங்களிருவரும் உன்னிடமிருந்து உண்டானவர்களாகையால் நீ கேசவன் என்னும் நாமத்தை உடையவனாகிறாய்.] என்று ஹரிவம்சத்தில் ருத்ரனால் சொல்லப் பட்டபடியே 'க:' என்று பிரமனுக்கும், 'ஈசன்' என்று சிவனுக்கும் பெயர். 'அந்த' சப்தமானது எல்லையைக்குறிக்குமாகையால் ப்ரஹ்ம ருத்ரர்களுக்குக் காரணபூதனென்றதாயிற்று. 'அந்த' சப்தத்துக்கு ஸம்ஹாரகனென்றும் பொருளுண்டாகையால் ப்ரஹ்மருத்ரர்களுக்கு ஸம்ஹாரகனென்றும் பொருள்படுகிறது. 'அந்த' சப்தம் ஸ்தானத்தையும் குறிக்குமாகையால் 'ப்ரஹ்மருத்ரர்களுக்கு இருப்பிடமாயுள்ளவன்' என்றும், 'ப்ரஹ்மருத்ரர்களை இருப்பிடமாயுடையவன்' என்றும் பொருள்கொண்டால் ப்ரஹ்மருத்ரர்களுக்கு தாரகனென்றும், அந்தர்யாமியென்றும் ஏற்படுகிறது. இவ்வர்த்தங்கள்

"தஸ்யா: சிகா₂யா மத்₄யே பரமாத்மா வ்யவஸ்தி₂த: |
ஸ ப்₃ரஹ்மா ஸ சிவ: ஸேந்த்₃ர: ஸோக்ஷர பரம: ஸ்வராட் ||"

[அந்த திவ்யமங்கள விக்ரஹத்தில் பரமாத்மா விசேஷமாக எழுந்தருளியிருக்கிறான். அவனே ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கும், அழிவற்றவனும், (ப்ரஹ்மாதிகள், கைவல்யநிஷ்டன் ஆகியவர்களைக் காட்டிலும்) மேலானவனும், கர்மவசப்படாதவனுமான முக்தாத்மாவுக்கும் அந்தர்யாமி.] என்று நாராயணவல்லியிலும்,

"ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் | ந ப்₃ரஹ்மா நேசாந: ||"

[நாராயணன் ஒருவனே இருந்தான். பிரமனும், ருத்ரனும் இல்லை] என்று மஹோபநிஷத்திலும், "நாராயணாத்₃ ப்₃ரஹ்மா ஜாயதே | நாராயணாத்₃ ருத்₃ரோ ஜாயதே" [நாராயணனிடமிருந்து பிரமன் பிறக்கிறான்; நாராயணனிடமிருந்து ருத்ரன் பிறக்கிறான்.] என்றும், "ப்₃ரஹ்மா நாராயண: | சிவச்ச நாராயண:" [பிரமனும், சிவனும் நாராயணனை அந்தர்யாமியாகக் கொண்டவர்களே.] என்றும் நாராயணோபநிஷத்திலும் உத்கோஷிக்கப்பட்டதாகையால்

http://acharya.org

அவற்றை அனுஸரித்து, இங்கு நாராயணனே சொல்லப்படுபவன் என்று எளிதாக நிர்ணயிக்கலாம். இம்மாதிரியாக இவ்வுபநிஷத் ஆரம்பத்திலேயே பகவத்ஸாக்ஷாத்காரமான புருஷசப்தத்தைப் படித்து, அவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தையும் காட்டி, அவன் ப்ரஹ்ம ருத்ரர்களுக்கும் காரணபூதனென்று கோஷிக்கிறது.

தைத்திரீய உபநிஷத்தின் இரண்டாவது பாகம் ஆனந்த வல்லி என்று பெயர் பெற்றது. அதன் ஆரம்பத்திலேயே "ப்₃ரஹ்ம விதா₃ப்நோதி பரம்" [ப்ரஹ்மத்தை அறிந்தவன் மேலான பலனை அடைகிறான்.] என்று சொல்லி, அந்த ப்ரஹ்மம் யாரென்று கேள்வி பிறந்தவளவில்,

"ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்₃ரஹ்ம ।
யோ வேத₃ நிஹிதம் கு₃ஹாயாம் பரமே வ்யோமந் ।
ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ।
ப்₃ரஹ்மணா விபஶ்சிதேதி ॥"

[எப்போதுமிருப்பதால் ஸத்யமென்றும், ஜ்ஞானஸ்வரூபனாயிருப்பதால் ஜ்ஞானமென்றும், மூன்றுவிதமான அளவுமற்றிருப்பதால் அநந்தன் என்றும் சொல்லப்படும் ப்ரஹ்மத்தை, எவனொருவன் ஹ்ருதயகுஹையிலிருப்பதாக அறிகிறானோ, அவன் பரமபதத்தில் பலவிதமான ஜ்ஞானத்தையுடைய ப்ரஹ்மத்துடன் கூடிய எல்லாக் கல்யாணகுணங்களையும் அநுபவிக்கிறான்.] என்று பகவான் உகந்தருளிய திருநாமங்களில் ஒன்றான அநந்தசப்தத்தைப் படித்தது.

"நமோऽஸ்த்வநந்தாய ஸஹஸ்ரமூர்த்தயே
ஸஹஸ்ரபாதா₃க்ஷி ஶிரோருபா₃ஹவே ।
ஸஹஸ்ரநாம்நே புருஷாய ஶாஶ்வதே
ஸஹஸ்ரகோடீயுக₃தா₄ரிணே நம: ॥"

[ஆயிரக்கணக்கான உருவங்களையுடையவனும், ஆயிரக்கணக்கான கால்கள், கண்கள், தலை, தொடைகள், கைகள், ஆகியவைகளை உடையவனும், ஆயிரக்கணக்கான பெயர்களையுடையவனும், புருஷசப்தத்தினால் (வேதங்களில்) சொல்லப்படுமவனும், சாச்வதமாயிருப்பவனும், ஆயிரம் கோடியுகங்களை தரிப்பவனுமான அநந்தனுக்கு நமஸ்காரம்.] என்று பிரமனால் அநந்தசப்தார்த்தம் விவரிக்கப்பட்டது. இங்கு ஸஹஸ்ரசப்தம் 'கணக்கற்றது' என்னும் பொருளையுடையது. 'ஸஹஸ்ரமூர்த்தயே' என்றதனால் வஸ்து பரிச்

http://acharya.org

சேதமில்லாதவனென்பதும், "ஸஹஸ்ரபாத₃ாக்ஷிசிரோருபா ஹவே" என்றதனால் தேசபரிச்சேதமில்லாதவனெபதும் "சாச்வதே ஸஹஸ்ரகோடீயுக₃த₄ாரிணே" என்றதினால், காலபரிச்சேதம் இல்லாதவனென்பதும், "ஸஹஸ்ரநாம்நே" என்றதினால், அத்திருநாமங்களுக்குப் பொருளான அநந்தகுணசேஷ்டிதங்களை உடையவனென்பதும் அநந்தசப்தத்துக்கு அர்த்தங்களென்று அறிவிக்கப்படுகிறது. காலபரிச்சேதமாவது:- ஒருகாலத்தில் இருக்கிறான் என்றும், ஒருகாலத்தில் இல்லை என்றும் சொல்லும்படி காலத்தாலே அளவுபட்டிருக்கை. தேசபரிச்சேதமாவது :— ஒரு தேசத்திலிருக்கிறான், ஒருதேசத்திலில்லை என்னும்படி தேசத்தால் அளவுபட்டிருக்கை. வஸ்து பரிச்சேதமாவது:— இவன் இந்த வஸ்துவை வியாபித்திருக்கிறான், இந்த வஸ்துவை வியாபிக்கவில்லை என்று சொல்லும்படி வஸ்துவால் அளவுபட்டிருக்கை. "ஸமாப்₄யதி₄கராஹித்யநிதா₃நபூ₄த:கு₃ணைர் நிரதிசயப்ரகர்ஷ: வஸ்த்வபரிச்சே₂த₃:" [தனக்கு ஒத்தாரும் மிக்காரும் இல்லாமைக்குக் காரணமான, குணங்களால் மிகவும் மேம்பட்டிருக்கை வஸ்துபரிச்சேதமில்லாமையாகும்.] என்றும் வஸ்துபரிச்சே₂த₃ாப₄ாவத்திற்குப் பொருளுரைத்தார் ச்ருதப்ரகாசிகாசாரியர்.

"க₃ந்த₄ர்வாப்ஸரஸஸ் ஸித்₃த₄ா: கிந்நரோரக₃சாரணா: |
நாந்தம் கு₃ணாநாம் க₃ச்ச₂ந்தி தேநாநந்தோऽயமுச்யதே ||"

[கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள், ஸித்தர்கள், கிந்நரர்கள், நாகர்கள், சாரணர்கள் ஆகிய இவர்களெல்லாம் இவனுடைய குணங்களின் முடிவைக் காண்பதில்லை. ஆகையால் இவன் அநந்தனெனப்படுகிறான்.] என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும் குணங்களால் அளவற்றிருக்கை அநந்தசப்தார்த்தமாகச் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட மூன்றுவிதமான அளவுகளுமற்றவனாகையால் அநந்தனெனப்படுகிறான் அச்யுதன்.

ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம் என்னும் இவ்வைந்து குணங்களும் பகவானுடைய ஸ்வரூப நிரூபககுணங்கள் எனப்படுகின்றன. எந்த குணத்தை அறிந்தால் மட்டும் ஒருவஸ்துவை அறியமுடியுமோ அந்த குணம் அவ்வஸ்துவிற்கு ஸ்வரூபநிரூபகமான(ஸ்வரூபத்தை நிரூபித்துத்தரும்) குணம் என்று சொல்லப்படுகிறது. மற்றகுணங்கள் நிரூபிதஸ்வரூபவிசேஷணங்கள் (நிரூபிக்கப்பட்ட ஸ்வரூபத்தில் காணப்படும் குணங்கள்) என்று சொல்லப்படுகின்றன. கருப்புக்குடமொன்றை எடுத்துக்

http://acharya.org

கொள்வோம். இதில் கடத்வம் (குடமாயிருக்கும் தன்மை) ஸ்வரூபத்தை நிரூபித்துத் தருவதாயிருக்கிறது. ஆகையால் அது ஸ்வரூபநிரூபகதர்மம் எனப்படுகிறது. கறுப்பாயிருக்கும் தன்மை அம்மாதிரி இல்லை. ஆகையால் அது நிரூபிதஸ்வரூபவிசேஷணமெனப்படுகிறது. ப்ரஹ்மத்தை சாஸ்திரத்திலிருந்தே அறியவேண்டும். அந்த சாஸ்திரமும் "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்றும் "விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்ம" "அபஹதபாப்மா ....திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்றும் ஸத்யத்வம், ஜ்ஞானத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம் அமலத்வம் என்னும் ஐந்து குணங்களையிட்டே ப்ரஹ்மத்தை நிரூபிக்கிறது. ஆகையால் இவை ஸ்வரூபநிரூபகதர்மங்களாகச் சொல்லப்படுகின்றன. "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்று பிராட்டியின் ஸம்பந்தத்தையிட்டு பகவத் ஸ்வரூபத்தை நிரூபிக்கையால் ஶ்ரிய:பதித்வத்தையும் ஸ்வரூபநிரூபகுணமாக நம் ஆசாரியர்கள் அருளிச்செய்வார்கள்.

பகவானை அடைவதற்கு ஸாதனமாகச் சொல்லப்படும் பக்தியானது முப்பத்திரண்டு வித்யைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் ஒன்றைமட்டும் அநுஸந்தித்தால் மோக்ஷம் பெறலாம். என்பது வேதாந்திகளின் கொள்கை. இவை ஒவ்வொன்றிலும் அநுஸந்திக்கவேண்டிய பகவத்குணங்கள் மாறுபடும். ஆனால் எல்லா வித்யைகளிலும் ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம் என்னும் இவ்வைந்து குணங்களும் அநுஸந்திக்கப்படவேண்டும். இவ்விஷயத்தைத் "ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய" முதலான ஸூத்ரங்களில் வேதவ்யாஸபகவானும், அந்தஸூத்ரங்களின் ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீ ராமாநுஜரும் வெளியிட்டார்கள், ஆக, இப்படி ஸ்வரூபநிரூபகமான குணத்திற்கு வாசகமாயிருப்பதால் இத்திருநாமம் நாராயணாதி நாமங்களைப்போல் ஸ்வரூபத்தை நிரூபித்துத்தரும் திருநாமமாய் இருக்கிறது.

மேலும், இங்கு சொல்லப்பட்ட ஸத்யம், ஜ்ஞானம் என்னும் குணங்களைக்காட்டிலும் அநந்தசப்தத்திற்கு மற்றுமோர் பெருமையுண்டு. பொதுவாக, ஸ்வரூபநிரூபகதர்மமானது மற்றவஸ்துக்களைக் காட்டிலும், தன்னுடைய தர்மிக்கு மாறுபாட்டைப் பண்ணிக் கொடுக்கும். கடத்வமானது, கடத்திற்குப்படம் முதலிய மற்றவஸ்துக்களினின்றும் மாறுபாட்டைப் (வ்யாவ்ருத்தியைப்) பண்ணிக் கொடுக்கிறதன்றோ. 'ஸத்யம்' என்னும் பதமானது, (மாறுபடாமல்)

http://acharya.org

இருக்கும் வஸ்துவைக் குறிக்கும். இதனால் மாறுபாட்டையே (விகாரத்தையே) இயற்கையாக உடைய அசேதனதத்வமும், அத்துடன் சேர்ந்திருக்கையால் ஞானத்தில் மாறுபாட்டையடையும் ஸம்ஸாரி சேதனதத்வமும் வ்யாவர்த்திக்கப்படுகின்றன. ஆனால் விகாரமற்றவரான நித்யமுக்தர்களினின்றும் வ்யாவ்ருத்தியைப்பண்ணித் தருவதற்கு ஸத்யசப்தத்தால் இயலாது. அடுத்தபடியாக உள்ள ஜ்ஞானசப்தம் எப்போதும் குறைவுபடாத ஞானத்தை உடைய பொருளைக் காட்டுகிறது. இதனால் அசேதனதத்வமும், ஸம்ஸாரி சேதனரும், ஒருகாலத்தில் குறைந்த ஞானத்தை உடைத்தாயிருந்த முக்தசேதனர்களும் வ்யாவர்த்திக்கப்படுகிறார்கள். இந்த ஜ்ஞானபதமும் எந்தக் காலத்திலும் குறைவுபடாத ஞானத்தையுடைய நித்யஸூரிகளை வ்யாவர்த்திக்கமாட்டாது. அசேதனதத்வத்தையும், த்ரிவிதசேதனதத்வத்தையும் வ்யாவர்த்தித்துப் பரமாத்மாவை மட்டும் காட்டும் பெருமை அநந்தபதத்திற்கே உண்டு. அசேதனதத்வமானது மேலே பரமபதத்தை எல்லையாக உடையதாகையால் அதற்கு தேசத்தாலும், வஸ்துவாலும் அளவுபட்டிருக்கை உண்டு. நித்ய விபூதியும் கீழே ப்ரக்ருதிதத்வத்தை எல்லையாயுடைத்தாயிருக்கையால் அதற்கும் அவ்வளவுகள் உண்டு. நித்யமுக்தர்களுடைய தர்மபூதஜ்ஞானத்திற்கு தேசகாலபரிச்சேதங்கள் கிடையாதாகிலும், ஸகலவஸ்துக்களையும் ஸ்வரூபேண வியாபித்து தரித்து நின்று அவைகளுடன் ஓரே வேற்றுமையில் சொல்லத்தக்கதாயிருக்கையாகிறவஸ்துபரிச்சேதாபாவம் கிடையாது. ஆகையால் மூன்றுவிதமான அளவுமின்மையைக்காட்டும் அநந்தசப்தம் வேறொன்றையுமெதிர்பாராமல் பரமாத்மஸ்வரூபத்தைத் தானே நிரூபித்துத் தருகின்றது. ஆக, ஸ்வரூபநிரூபகமான நாராயணாதிநாமங்களைப்போல் இதுவும் மிகமுக்கியமான திருநாமமென்று தெளிவாகிறது.

இப்படிப்பட்ட பெருமையையுடைய இத்திருநாமம் பகவான் நாராயணனிடத்திலேயே ரூடமாயுள்ளதென்பது ஸர்வலோக ப்ரஸித்தம். ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் "விஷ்ணுர் வீரோநந்த:" என்று அநந்தநாமம் பகவானுடைய நாமங்களிலொன்றாகப் படிக்கப் பட்டது. "அதைத்தஸ்யைவாந்தோ நாஸ்தி யத் ப்ரஹ்ம" [ப்ரஹ்மமென்று யாதொன்றுள்ளதோ அதற்கு முடிவில்லை.] என்று ச்ருதியில் படித்ததை அநுஸரித்து, "நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே" [என்னுடைய விபூதிக்கு முடிவில்லை.] என்று கீதாசார்யனும் அநந்தசப்தார்த்தத்தைத் தன்னிடத்தில் அருளிச்செய்தார். "ஆதியந்த

http://acharya.org

மில்லவன்'' ''அச்சுதனை அநந்தனை'' என்று ஆழ்வார்களும் அருளிச் செய்தார்கள். ஆசமனத்திலும் பகவந்நாமங்களில் ஒன்றாக இவ்வநந்தநாமம் படிக்கப்படுவது எல்லாருமறிந்தது. இங்கு ''அநந்தம் ப்$_{3}$ரஹ்ம யோ வேத$_{3}$'' என்றிருப்பதால் ''அநந்தம்'' என்பது இரண்டாவது வேற்றுமையென்று அறியப்படுகிறது. ஆகையால் முதல்வேற்றுமையில் ''அநந்த:'' என்று புல்லிங்கமாகவே ஆகுமாகையால் பகவத்வாசியாகக் குறையில்லை

''அத்ர ரூடி$_{4}$வஶாத் தே$_{3}$வதாவிஶேஷநிர்ணய:। ந ச அநந்தபத$_{3}$ஸ்ய நாராயணவாசிந: புல்லிங்க$_{3}$த்வம் ஸ்யாதி$_{3}$தி வாச்யம்। இஷ்டாபத்தே:। தஸ்ய த்$_{3}$விதீயாந்தத்வேந புல்லிங்க$_{3}$ஸ்ய இஷ்டத்வாத்। த்$_{3}$விதீயாந்தத்வாப$_{4}$ாவே ச ''யோ வேத$_{3}$ நிஹிதம் கு$_{3}$ஹாயாம்'' இத்யத்ர தச்சப்$_{3}$த$_{3}$ாத்$_{4}$யாஹாரப்ரஸங்க$_{3}$ாத்। அநத்$_{4}$யாஹாரேண உபபத்தௌ அத்$_{4}$யாஹாரஸ்ய அந்யாய்யத்வாத்॥''

[இவ்வநந்தசப்தம் ரூடியினாலே நாராயணனையே சொல்லுகிறதென்று நிர்ணயிக்கப்படுகிறது. 'நாராயணனைச் சொல்லுவதாயிருந்தால் புல்லிங்கமாயிருக்கவேண்டும்; (இங்கு 'அநந்தம்' என்று நபும்ஸகலிங்கமாயுள்ளதே)' என்று சொல்லமுடியாது; 'அநந்தம்' என்னும் பதம் இரண்டாவது வேற்றுமையானமையாலே புல்லிங்கமாயிருக்கையே எங்களுக்கு இஷ்டமாகும்; அதை இரண்டாவது வேற்றுமையாகக் கொள்ளாவிடில் ''எவன் அறிவானோ'' என்றவிடத்தில் ''எவன் (அதை) அறிவானோ'' என்று அதை என்பதைக் கூட்டிக்கொள்ளவேண்டிவரும். அப்படிக் கூட்டிக்கொள்ளாமலே பொருள் கொள்ளத்தக்கதாயிருக்கும்போது கூட்டிக்கொண்டு பொருளுரைப்பது நியாயவிருத்தமாகும்.] என்று ரங்கராமாநுஜமுனி வியாக்கியானமிட்டருளினது இங்கு அநுஸந்திக்கத்தக்கது. இந்த அநந்த சப்தத்தை இங்கு படித்ததுடன் திருப்தியடையாமல் நாராயணவல்லியிலும் ''அநந்தமவ்யயம்'' என்று மறுபடியும் ஓதுகிறது.

''ப்$_{3}$ரஹ்மவித் ஆப்நோதி பரம்'' என்றவிடத்தில் ப்ரஹ்ம பதம் யாரைக் குறிக்கிறதென்று இதுவரையில் காட்டிற்று; 'வித்' என்று சொல்லப்பட்ட அறிகிறவனை ''யோ வேத$_{3}$ நிஹிதம் கு$_{3}$ஹாயாம்'' [ப்ரஹ்மத்தை எவனொருவன் ஹ்ருதயகுஹையிலிருப்பதாக அறிகிறானோ.] என்று விவரிக்கிறது; ''ஆப்நோதி பரம்'' என்பதை

http://acharya.org

"பரமே வ்யோமந் ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்₃ரஹ்மணா விபச்சிதேதி" [அவன் பரமபதத்தில் ப்ரஹ்மத்துடன் கூடிய எல்லாக் கல்யாணகுணங்களையும் அநுபவிக்கிறான்.] என்று விளக்கிற்று. 'அநந்தம் ப்₃ரஹ்ம' என்றதால சிவன் முதலான தேவர்களுக்குப் பரத்வம் சொல்லுபவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். 'ப்₃ரஹ்மவித்' (ப்ரஹ்மத்தை அறிபவன்) என்றும், "யோவேத." [எவன் அறிகிறானோ......] என்றும் படித்ததால் ஆத்மா ஜ்ஞாநமாத்ரமே, ஜ்ஞாதா (அறிபவன்) அல்லன் என்னுமவர்கள் தள்ளப்படுகிறார்கள். 'பரமே வ்யோமந் ஆப்நோதி' (பரமபதத்தில் அடைகிறான்) என்கையால், 'ஒருதேசவிசேஷத்திலே மோக்ஷமென்பதில்லை: இங்கேயே முக்தி' என்னும் ஜீவன் முக்திவாதம் சிதறடிக்கப்படுகிறது. "ஸோச்நுதே ஸர்மாந் காமாந்" [அவன் எல்லா குணங்களையும் அடைகிறான்.] என்கையால் 'குணமில்லை' என்னும் நிர்க்குணவாதம் நிர்மூலமாகிறது. "ஸஹ ப்₃ரஹ்மணா" [ப்ரஹ்மத்துடன் கூட] என்று உத்கோஷிக்கையாலே ப்ரஹ்மமும் ஜீவனும் ஒன்றென்னும் வாதம் உபேக்ஷிக்கப்படுகிறது. 'விபச்சிதா' என்கையாலே 'ப்ரஹ்மமும் ஜ்ஞாநமாத்ரமே, ஜ்ஞாதாவல்ல' என்னும் பக்ஷம் புறக்கணிக்கப்படுகிறது.

இந்த ஆநந்தவல்லியையும், ப்ருகுவல்லி முதலியவைகளையும், ப்ரஹ்ம ஜ்ஞானிகளான பெரியோர்களும், ஸந்யாஸிகளும் மரணமடையும்போது அவர்களுடைய சிஷ்யர்கள் படிப்பது வழக்கம். இந்த வழக்கபடி, அத்வைதஸித்தாந்தஸ்தாபகராகிய சங்கருடைய ப்ராணவியோககாலத்தில் அவருடைய சிஷ்யர்கள் இவ்வுபனிஷத் வாக்யத்தை உரக்க கோஷமிட்டுக்கொண்டிருந்தார்கள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த சங்கரர் "ஐயோ! நம் ஸித்தாந்தம் முழுவதும் இந்த ஒரு வாக்யத்தால் அழிக்கப்பட்டுவிட்டதே! 'ஸஹ ப்₃ரஹ்மணா' என்கையால் ப்ரஹ்மத்துக்கும் ஜீவனுக்கும் மோக்ஷதசையிலும் பேதமுண்டென்று ஸித்தித்துவிட்டது. 'ப்₃ரஹ்மவித்' என்றும், 'யோ வேத₃' என்றும் 'விபச்சிதா' என்றும் கோஷிக்கையாலே, 'ஜீவப்ரஹ்மஸ்வரூபங்கள் ஞானம் மட்டுமல்ல, ஜ்ஞாதாவாகவேயுள்ளன' என்று உணர்த்தப்படுகின்றது. 'பரமே வ்யோமந் ஸோச்நுதே' என்கையாலே ஒரு தேசவிசேஷத்திலேயே மோக்ஷமென்று அறிவிக்கப்படுகிறது. 'நாம் என்ன காரியம் செய்துவிட்டோம்!'" என்று கலங்கிக்கூறினாராம். இந்த விருத்தாந்தத்தை "ஈச்வரனில்லையென்று சாஸ்திரமெழுதுகிறவனும், அந்திம ஸமயத்தில் வந்தவாறே 'ஸஹச்ருதி நலியாநின்றது' என்றானிறே"

http://acharya.org

என்று நம்பிள்ளையும் பெரியவாச்சான்பிள்ளையும் திருவிருத்தம் 99-வது பாசுரவியாக்யானத்தில் அருளிச்செய்தார்கள். "ஸஹ ப்3ரஹ்மணு" என்று இங்கு படிக்கப்பட்டிருப்பதை நோக்கி ஸஹ ச்ருதி என்று இவ்வாக்கியம் சொல்லப்படுகிறது. 'ஜீவனே ப்ரஹ்மம்' என்று சொல்லுகிறபடியால் ஜீவனைக்காட்டிலும் வேருன ப்ரஹ்மம் என்னும் தத்வமில்லையென்று ஏற்படுகிறது. ஆகையால் "ஈச்வரனில்லையென்று சாஸ்த்ரமெழுதுகிறவன்" என்று சொல்லப் படுகிறது. நிற்க; இவ்வாக்கியம் விசிஷ்டாத்வைத வேதாந்தமும், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமுமே வேதத்திற்கு உகந்தவை என்று உணர்த்துகிறதென்பது இவைகளிலிருந்து தெளிவாகிறது.

இப்படி அநந்தசப்தத்தால் சொல்லப்படுபவனே ப்ரஹ்மம் என்று நிர்ணயித்து, அவனே ஸர்வகாரணன் என்று அடுத்த படியாக அறிவிக்கிறது ஆநந்தவல்லி:

"தஸ்மாத்3 வா ஏதஸ்மாதா3த்மந ஆகாஶஸ் ஸம்பூ4த:। ஆகாஶாத்3வாயு:। வாயோரக்3நி:। அக்3நேராப:। அத்3ப்4ய: ப்ருதி2வீ।"

[அப்படிப்பட்ட இந்தப்பரமாத்மாவினிடமிருந்து ஆகாசம் உண்டாயிற்று; ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று; வாயுவிலிருந்து அக்னி உண்டாயிற்று; அக்னியிலிருந்து ஜலம் உண்டாயிற்று; ஜலத்தினின்றும் பூமிஉண்டாயிற்று.] என்ற இம்மந்திரம் "ஆகாசாத்3 வாயு:। வாயோரக்3நி:। அக்3நேராப:। அத்3ப்4ய: ப்ருதி2வீ।" என்று தொடங்கி "ஸஹஸ்ரசீர்ஷா புருஷஸ் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்" என்று ஓதின ஸுபாலோபனிஷத்து மந்திரங்களுக்கு ஸ்மாரகமாயிருக்கையால் 'ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:' முதலிய மந்திரங்களால் புருஷஸூக்தத்தில் ஸர்வகாரணனுகச் சொல்லப்பட்டவனே இங்கும் உத்கோஷிக்கப் படுபவனென்று தெளிவாகிறது. இப்படி ஸர்வகாரணனுன அநந்தனே ஆநந்தமயனுக விளங்குகிருன்; பிறருக்கும் ஆநந்தத்தை அளிக்கிருன் என்று அடுத்துவரும் அநுவாகங்களில் அறிவிக்கிறது ஆநந்தவல்லி. அதற்குப்பின்

"யதா3 ஹ்யேவைஷ ஏதஸ்மிந் அத்3ருஸ்யே அநாத்ம்யே அநிருக்தே அநிலயநே அப4யம் ப்ரதிஷ்ட2ாம் விந்த3தே। அத2 ஸோऽப4யங்க3தோ ப4வதி। யதா3 ஹ்யேவைஷ ஏதஸ்மிந்

http://acharya.org

உத3ரமந்தரம் குருதே அத2 தஸ்ய ப4யம் ப4வதி। தத்த்வேவ ப4யம் விது3ஷோ மந்வாநஸ்ய।''

[கண் முதலியவற்றால் காணத்தகாததும், ப்ராக்ருதசரீரமற்றதும் (தேவன் மனுஷ்யன் முதலிய பதங்களால்) சொல்லத்தகாததும், தனக்கொரு ஆதாரமற்றதுமான பரவஸ்துவினிடத்தில், பயமின்மைக்காக பக்தி நிலையை அடைந்தானாகில், அதற்குப் பின் அவன் (ஸம்ஸாரமாகிய) பயமற்றவனாக ஆகிறான். ஸ்ம்ருதி ரூபமான இந்த பக்தியில் சிறிது இடைவெளியையும் விடுவானாகில் அவனுக்கு பயமுண்டாகிறது. ப்ரஹ்மவித்தும், ப்ரஹ்மத்தை மனனம் செய்பவனுமான அவனுக்கு அந்த இடைவெளியே பயமாகிறது.] என்று கோஷிக்கப்பட்டது. இந்த வாக்யம்

''யந்முஹூர்த்தம் க்ஷணம் வாऽபி வாஸுதே3வோ ந
சிந்த்யதே।
ஸா ஹாநிஸ்தந்மஹச்சி2த்3ரம் ஸா ப்4ராந்திஸ் ஸா
ச விக்ரியா ॥''

[எந்த முகூர்த்தத்திலாவது க்ஷணத்திலாவது வாஸுதேவன் சிந்திக்கப்படவில்லையோ, அதுவே ஹானி; அதுவே பெரிய துக்கம்; அதுவே பெரிய மயக்கம்; அதுவே பெரிய விகாரம்.]

''வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர் வ்யவஸ்தி2தி:।
ந ஸௌரிசிந்தாவிமுக2ஜநஸம்வாஸவைஸம்॥''

[அக்னிஜ்வாலையினால் சூழப்பட்ட கூட்டிலே இருப்பதுகூட மேலானது. பகவானைப்பற்றிய நினைவில்லாத ஜனங்களுக்கு நடுவிலிருக்கும் மஹாதுக்கம் மிகத்தாழ்வானது.]

''ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்4யாநவர்ஜிதே।
த3ஸ்யுபி4ர்முஷிதேநேவ யுக்தமாக்ரந்தி3தும் ப்4ருஸம்॥''

[ஒரு முஹூர்த்தநேரமாகிலும், பகவானுடைய தியானமில்லாமல் சென்றதாகில், திருடர்களால் திருடப்பட்டவனைப்போல் உரக்க அழுவது தகும்.]

''அதஸீபுஷ்பஸங்காஸம் பீதவாஸஸமச்யுதம்।
யே நமஸ்யந்தி கோ3விந்தம் ந தேஷாம் வித்3யதே
ப4யம்॥''

http://acharya.org

[காயாம்பூமலர் போன்றவனும், பீதாம்பரத்தை அணிந்தவனும், அடியவர்களை நழுவ விடாதவனுமான கோவிந்தனை எவர்கள் நமஸ்கரிக்கிறார்களோ அவர்களுக்கு பயமில்லை.]

"சிந்த்யமாந: ஸமஸ்தாநாம் க்லேசாநாம் ஹாநிதே₃ா ஹரி ய: ।
ஸமுத்ஸ்ருஜ்யாகிலம் சிந்த்யம் ஸோऽச்யுத : கிம்
ந சிந்த்யதே ॥"

[நினைத்தவுடன் எல்லா துக்கங்களையும் எவனொருவன் போக்கடிக்கிறானோ, அந்த அச்சுதனை மற்ற நினைவுகளையெல்லாம் விட்டு ஏன் சிந்திக்கவில்லை?]

"ப₄யம் ப₄யாநாமபஹாரிணி ஸ்தி₂தே
மநஸ்யநந்தே மம குத்ர திஷ்ட₂தி ।
யஸ்மிந் ஸ்ம்ருதே ஜந்மஜராந்தகாதி₃
ப₄யாநி ஸர்வாண்யபயாந்தி தாத ॥"

[தந்தையே! பயங்களையெல்லாம் போக்கடிக்கும்படியான அநந்தன் என் மனத்திலிருக்கும்போது எனக்கு பயம் எப்படி உண்டாகும்? அந்த பகவானை நினைத்தால் பிறப்பு, கிழத்தனம், மரணம் முதலிய எல்லா பயங்களும் ஓடிவிடுகின்றனவன்றோ.]

"ஸம்ஸார ஸர்ப்ப ஸந்த₃ஷ்ட நஷ்ட சேஷ்டைக
பே₄ஷஜம் ।
க்ருஷ்ணேதி வைஷ்ணவம் மந்த்ரம் ச்ருத்வா
முக்தோ ப₄வேந்நர: ॥"

[ஸம்ஸாரமாகிய பாம்பினால் கடிக்கப்பெற்றுச் செயலற்றுக் கிடக்கும் சேதனனுக்கு, ஒரே மருந்தாயிருக்கும் 'க்ருஷ்ண' என்னும் மந்திரத்தைக்கேட்டவுடன் மனிதன் முக்தனாகிறான்.]

"ஸர்வதா₃ ஸர்வகார்யேஷு நாஸ்தி தேஷாமமங்க₃ளம் ।
யேஷாம் ஹ்ருதி₃ஸ்தோ₂ தே₃வோऽஸௌ மங்க₃ளாய-
தநம் ஹரி: ॥"

[எவர்களுடைய ஹ்ருதயத்தில், பிரகாசிப்பவனும், மங்களங்களுக்கு இருப்பிடமானவனுமான இந்த பகவான் ஹரி இருக்கிறானோ, அவர்களுக்கு எப்போதும் எந்தக்காரியத்திலும் அசுபம் கிடையாது.]

http://acharya.org

"நித்யம் ஸஞ்சிந்தயந்நேஷ யோகயுக்தோ
ஜநார்த்தநம் |
ஸாऽஸ்ய ரக்ஷா பரா மந்யே கோ ஹிநஸ்த்யச்
யுதாஶ்ரயம் ||"

[பக்தியோகத்துடன் கூடிய இம்மனிதன் ஜநார்த்தனனை தினந்தோறும் சிந்திக்கக்கடவன். இதுவே இவனுக்கு மேலான ரக்ஷையென்று நான் நினைக்கிறேன். அச்சுதனை ஆச்ரயித்தவனை எவன்தான் துன்புறுத்துவான்?]

"ஜநார்தநம் பூதபதிம் ஜகத்குரும்
ஸ்மரந் மநுஷ்ய: ஸததம் மஹாமுநே |
து:க்காந்யஶேஷாண்யபஹந்தி ஸாதவோ
யே ஶேஷகார்யாணி ச யாந்யபீப்ஸதி ||"

[மஹர்ஷே! பூதங்களுக்கெல்லாம் ஸ்வாமியும், ஜகத்குருவுமான ஜநார்த்தனனை எப்போதும் நினைக்கும் மனிதன் எல்லா துக்கங்களையும் போக்கடிக்கிறான்; தான் விரும்பும் மற்ற காரியங்களிலும் ஸித்திபெறுகிறான்.]

"ஏவமேகாக்ரசித்தஸ் ஸந் ஸம்ஸ்மரந் மதுஸூதநம் |
ஜந்மம்ருத்யுஜராக்ராஹம் ஸம்ஸாராப்திம் தரிஷ்யதி ||"

[இம்மாதிரியாக ஒரே நினைவுடன் கூடியவனாய் மதுஸூதனனை எவன் சிந்திக்கிறானோ, அவன், பிறப்பு, இறப்பு, கிழத்தனம் என்னும் முதலைகளையுடைய ஸம்ஸாரக்கடலைத் தாண்டுகிறான்.]

"ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: |
இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணஸ் ஸதா ||"

[எல்லா சாஸ்திரங்களையும் பார்த்து, மறுபடியும் மறுபடியும் விசாரித்ததில், "நாராயணன் எப்போதும் தியானிக்கத்தக்கவன்" என்னும் இது ஒன்றே நன்றாகத் தேறிநின்றது.]

"ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்"

[இந்த தர்மத்தின் சிறிதுபாகமும் மஹாபயத்தில் நின்றும் அவனைக் காப்பாற்றும்.] "ந மே பக்த: ப்ரணச்யதி" [என்னுடைய பக்தன் நாசமடையமாட்டான்.] "யம் ப்ரணம்ய ந ஸீததி" [எவனை வணங்கினவன் வருந்தமாட்டானே.] "ந வாஸுதேவம் ப்ரணிபத்ய

http://acharya.org

ஸீத$_{3}$தி" [வாஸுதேவனை வணங்கினபின் வருந்தமாட்டான்.] "ஜநார்த$_{3}$நம் ப்ரணிபதிதோ ந ஸீத$_{3}$தி" [ஜநார்த்தனனை வணங்கினவன் வருந்தமாட்டான்.] என்று ஸகலஸ்ம்ருதிஇதிஹாஸ புராணங்களிலும் பல்லாயிரக்கணக்கான விடங்களில் பகவத்பரமாக விவரிக்கப்பட்டது. அடுத்தபடியாக இவனிடம் பயத்தினாலேயே வாயு, ஸூர்யன், அக்னி, இந்திரன், யமன் முதலியவர்கள் தங்கள் தங்கள் காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்னும் பொருளுள்ள

"பீ$_{4}$ஷாऽஸ்மாத்$_{3}$ வாத: பவதே। பீ$_{4}$ஷோதே$_{3}$தி ஸூர்ய:।
பீ$_{4}$ஷாऽஸ்மாத$_{3}$க்$_{3}$நிஶ்சேந்த்$_{3}$ரஶ்ச। ம்ருத்யுர்தா$_{4}$வதி பஞ்சம:॥"

என்னும் ச்லோகத்தைப் படித்து, "சுடர்ஞான இன்பமேயோ" என்று ஆழ்வார் ஆழங்காற்பட்ட இவனுடைய ஆநந்தகுணத்தை அளவிட ஆரம்பிக்கிறது.

"ஸைஷாऽநந்த$_{3}$ஸ்ய மீமாம்ஸா ப$_{4}$வதி। யுவா ஸ்யாத் ஸாது$_{4}$யுவாத்$_{4}$யாயக:। ஆஶிஷ்டோ$_{2}$ த்$_{3}$ரடி$_{4}$ஷ்டோ$_{2}$ ப$_{3}$லிஷ்ட$_{2}$:। தஸ்யேயம் ப்ருதி$_{2}$வீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத்। ஸ ஏகோ மாநுஷ ஆநந்த$_{3}$:। ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய। தே யே ஶதம் மாநுஷா ஆநந்தா$_{3}$:। ஸ ஏகோ மநுஷ்யக$_{3}$ந்த$_{4}$ர்வா-ணாம் ஆநந்த$_{3}$:। ச்ரோத்ரியஸ்ய சாகாமஹூதஸ்ய। தே யே ஶதம் மநுஷ்யக$_{3}$ந்த$_{4}$ர்வாணாமாநந்தா$_{3}$:। ஸ ஏகோ தே$_{3}$வக$_{3}$ந்-த$_{4}$ர்வாணாமாநந்த$_{3}$:।"

[அப்படிப்பட்ட இந்த ப்ரஹ்மாநந்தத்தினுடைய விசாரம் செய்யப்படுகிறது. யௌவனமுள்ளவனாகவும், (தன்னைப்போல்) நல்ல யௌவனமுடையவர்களுக்கு அத்யயனம் செய்விப்பவனாகவும், சக்தியுள்ளவனாகவும், வீர்யமுள்ளவனாகவும், பலமுள்ளவனாகவும் (ஒரு மனிதன்) இருக்கட்டும்; ஸர்வைச்வர்யமும் நிரம்பிய பூமி முழுவதும் அவனுக்கு வசப்பட்டதாக இருக்கட்டும்; இது ஒரு மனுஷ்யனுடைய ஆனந்தம். ப்ரஹ்மநிஷ்டனும், ஸம்ஸாரத்தில் ஆசையற்றவனுமான முக்தனுக்கும் (இந்த ஆநந்தம்) உண்டு. அப்படிப்பட்ட நூறு மனுஷ்ய ஆநந்தங்கள் ஒரு மனுஷ்ய கந்தர்வனுடைய ஆனந்தமாகிறது. இந்த ஆநந்தமும், ப்ரஹ்மநிஷ்டனும் ஆசையற்றவனுமான முக்தனுக்கு உண்டு. இந்த மனுஷ்ய கந்தர்வர்களின் ஆனந்தத்தைப்போல் நூறு மடங்கு ஆனந்தம் தேவர்கந்தவன் ஒருவனுக்கு உண்டு.] என்று தொடங்கி, இப்படி

http://acharya.org

மேல் மேல் நூறு மடங்கு ஆனந்தத்தையுடைய பித்ருக்கள், ஆஜானஜ தேவர்கள், கர்மதேவர்கள், தேவர்கள், இந்திரன், ப்ருஹஸ்பதி, ப்ரஜாபதி (ப்ரஹ்மா) எனப்படும் புருஷர்களைப் படித்து, "தே யே சதம் ப்ராஜாபதேராநந்தா:। ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:।" [ப்ரஜாபதியைப்போல் நூறு மடங்கு ஆனந்தம் ஒரு ப்ரஹ்மானந்தமாகும்.] என்று முடித்து,

"யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்। ந பிபேதி குதஶ்சநேதி॥"

[எந்த ப்ரஹ்மத்திடமிருந்து அதை அடைய முடியாமல், மனஸ்ஸுடன் கூடிய வாக்குகள் திரும்புகின்றனவோ, அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை அறிபவன் எதனிடமும் பயப்படமாட்டான்.] என்று படித்தது.

பிரமனுடைய ஆனந்தத்தைப்போல் நூறுமடங்கு ப்ரஹ்மத்தினுடைய ஆனந்தமாகும் என்று படித்து, "திரும்பிவருகின்றன" என்று நிகழ்காலத்தில் படித்ததால், மறுபடியும் பிரமனின் ஆனந்தத்தை மனுஷ்யானந்தஸ்தானத்தில்வைத்து மேலும் மேலும் சென்று, மறுபடியும் ப்ரஹ்மாவின் ஆநந்தத்தை மனுஷ்யானந்தஸ்தானத்தில் வைத்து இப்படியே கல்பகோடிகாலங்களாகச் செய்து பார்த்தும் ப்ரஹ்மத்தினுடைய ஆனந்தத்தை அளவுகாணவொண்ணாமல் கைவாங்கிநிற்கின்றன வேதங்கள் என்று நம் ஆசாரியர்கள் நிர்வஹித்துப் போருவர்கள்.

"உபர்யுபர்யப்ஜபுவோऽபி பூருஷாந்
ப்ரகல்ப்ய தே யே ஶதமித்யநுக்ரமாத்।
கிரஸ் த்வதேகைககுணாவதீப்ஸயா
ஸதா ஸ்திதா நோத்யமதோऽதிஶேரதே॥"

[ப்ரஹ்மாக்களுக்கு மேலும் மேலும் "தே யே சதம்" என்று அடிக்கடி படிப்பதன் மூலம் ப்ரஹ்மாக்களைக் கற்பித்து, உன்னுடைய ஒவ்வொரு குணத்தினுடையவும் எல்லையைக் காண்கையிலே இச்சையாலே, எப்போதும் இருக்கிறவையான வேதவாக்கியங்களானவை ஆரம்பதசையைக் கடந்து மேல் செல்லவில்லை.] என்று ஆளவந்தார் அருளிச்செய்தார். இந்த ச்ருதியில் ஆநந்தகுணம் ஒன்றைமட்டும் முக்கியமாகச்சொன்னபோதிலும், ஆரம்பத்தில், "யுவா ஸ்யாத்...... ஆசிஷ்டோ, த்ரடிஷ்டோ, பலிஷ்ட:" என்று சொன்னதினால்

http://acharya.org

யௌவனம், ஜ்ஞானம், சக்தி, வீர்யம், பலம், ஐச்வர்யம் முதலான குணங்களும் இம்மாதிரியே அளவிடவொண்ணாதவை என்று வேதத்தின் கருத்து என்பதை "ஏகைககு₃ணவதீ₄ப்ஸயா" என்று வெளியிடுகிறார்.

"த்ரய்யுத்₃பதா தவ யுவத்வமுகை₂ர் கு₃ணௌகை₄:
ஆநந்த₃மேதி₄தமியாநிதி ஸந்நியந்தும் ।
தே யே ஶதம் த்₃விதி பரம்பரயா ப்ரவ்ருத்தா
நைவைஷ வாங்மநஸகோ₃சர இத்யுதா₃ஹ ॥"

[யௌவனம் முதலிய குணகணங்களால் விருத்தியடைந்த உன்னுடைய ஆனந்தத்தை 'இவ்வளவு' என்று அளவிடுவதற்கு ஆரம்பித்து, 'தே யே சதம்' என்று படிப்படியாகப் படித்த வேதம் (அதற்குப்பின்) 'இவன் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவன்' என்று உரக்கக் கூவிற்று.] என்று கூரத்தாழ்வானும்,

"மர்த்யோத்த₂ாயம் விரிஞ்சாவதி₄கமுபரி
ஶோத்ப்ரேக்ஷ்ய மீமாம்ஸமாநா
ரங்கே₃ந்த்₃ராநந்த₃வல்லீ தவ கு₃ணநிவஹம்
யௌவநாநந்த₃பூர்வம் ।
ந ஸ்வார்த்த₂ம் ஸ்ப்ரஷ்டுமீஷ்டே ஸ்க₂லதி பதி₂ பரம்
மூகலாயம் நிலில்யே
ஹந்தைவம் த்வத்₃கு₃ணாநாம் அவதி₄க₃ணநயோ:
கா கதா₂ சித்தவாசோ: ॥"

[ஸ்ரீரங்கநாதரே! ஆநந்தவல்லியானது மனிதன் முதலாக பிரமன் வரையில் மேன்மேலும் (ஆநந்தங்களைக்) கற்பனை செய்து கொண்டு போய், உம்முடைய யௌவனம், ஆநந்தம் முதலிய குணக் கூட்டங்களை விசாரித்தபோது, தன்னுடைய லக்ஷ்யத்தைத் தொடுவதற்கும் முடியாமல் கைவாங்கிற்று; வழியிலேயே தடுமாறி நிற்கின்றது; ஊமைபோல் வாய்மூடி நின்றது. அந்தோ! இப்படியிருக்க உம்முடைய குணங்களை எல்லைகாண்பதிலும், எண்ணுவதிலும் மனமொழிகள் ஈடுபடுவதும் முடியுமோ?] என்று பட்டரும் இவ்விஷயத்தை வெளியிட்டனர். நிற்க; "ஆநந்த₃ம் ப்₃ரஹ்மணோ வித்₃வாந்" என்கையால், ப்ரஹ்மம் ஆநந்தத்திற்கு ஆதாரமாயிருக்கிறதென்பதும், ப்ரஹ்மத்தை அறிபவன் ப்ரஹ்மத்தைக்காட்

http://acharya.org

டிலும் வேறுபட்டவனென்பதும் விளங்குகையால் அத்வைதிகளுடைய வாதங்களுக்கு இங்கு சிறிதும் இடமில்லை என்றும் ஸித்திக்கிறது.

இப்படி அநந்தசப்தவாச்யனென்றும், ஆநந்தமயனென்றும் படித்தபிறகும் இவனை மேலும் தெளிவாக அறிவிக்கவேண்டும் என்ற எண்ணங்கொண்ட இந்த ஆநந்தவல்லி

"ஸ யஶ்சாயம் புருஷே। யஶ்சாஸாவாதி₃த்யே। ஸ ஏக:।"
[எவனொருவன் ஆதித்யனுக்கு நடுவிலுள்ளவனோ, எவனொருவன் இந்த ஜீவாத்மாவினிடம் இருக்கிறானோ அவன் ஒருவனே.] என்று உத்கோஷித்தது. "யச்சாஸௌ ஆதி₃த்யே" என்று இங்கு அநுவாதம் செய்யப்படும் ப்ரஸித்தபுருஷன்,

"ய ஏஷோ அந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷோ த்₃ருச்யதே। ஹிரண்யச்மச்ருர் ஹிரண்யகேச: ஆப்ரணகா₂த் ஸர்வ ஏவ ஸுவர்ண:। தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ। தஸ்ய உதி₃தி நாம॥"
[ஸூர்யனுக்கு நடுவில் ஸுவர்ணம்போன்று அழகிய புருஷன் ஒருவன் காணப்படுகிறான்; ஸுவர்ணம் போன்ற மீசையையும், கேசங்களையும், நகம் முதலிய எல்லா அவயவங்களையும், உடையவன் இந்தப் புருஷன். அவனுக்கு ஸூர்யகிரணங்களால் மலர்ந்த தாமரை போல் இரு கண்கள் உள. அவனுக்கு 'உத்' (உத்க்ருஷ்டன்) என்று பெயர்.] என்று சாந்தோக்யத்தில் சொல்லப்பட்டவனும், ஸூர்யமத்₄யவர்த்தியுமான, புண்டரீகாக்ஷனே என்றும் உணர்த்தப்படுகிறது. "ஆநந்த₃ம் ப்₃ரஹ்மணோ வித்₃வாந் ந பி₃பே₄தி குதச்சந" [ப்ரஹ்மத்தினுடைய ஆநந்தத்தை அறிந்தவன் எதனிடமும் பயப்படமாட்டான்.] என்று உத்கோஷித்தபிறகு,

"ஏதம் ஹ வாவ ந தபதி। கிமஹம் ஸாது₄
நாகரவம்। கிமஹம் பாபமகரவமிதி।"
[இந்தப் பரமாத்மஜ்ஞானியை "நான் என்ன நல்ல காரியங்களைச் செய்யாமலிருந்து விட்டேன்? என்ன பாபத்தைப் பண்ணி விட்டேன்? என்னும் எண்ணம் வருத்தாது.] என்று அறைகிறது ஆனந்தவல்லி.

"அஹம் த்வா ஸர்வபாபேப்₄யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:"
[நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன். வருந்தாதே.]

http://acharya.org

"யந்நாமகீர்த்தநம் ப$_4$க்த்யா விலாயநமநுத்தமம் |
மைத்ரேயாசேஷபாபாநாம் த$_4$ாதூநாமிவ பாவக: ||"

[மைத்ரேயரே! எவருடைய நாமத்தை அன்புடன் கீர்த்தனம் செய்வது, தாதுக்களை நசிப்பிக்கும் நெருப்புபோல் எல்லாப் பாபங்களையும் போக்கடிப்பதாயிருக்கின்றதோ.........]

"அவசேநாபி யந்நாம்நி கீர்த்திதே ஸர்வபாதகை: |
புமாந் விமுச்யதே ஸத்$_3$ய: ஸிம்ஹத்ரஸ்தைர் ம்ருகை$_3$ரிவ ||"

[யத்ருச்சையாகவாகிலும் எவனுடைய நாமம் கீர்த்திக்கப்பட்ட போதிலும் ஸிம்ஹத்தினிடம் நடுங்கிய மிருகங்கள் ஓடுவதுபோல் விரைவில் விலகும் எல்லாப் பாபங்களினின்றும் மனிதன் விடுபடுகிறுனே......]

"கங்க$_3$ாஸ்நாநஸஹஸ்ரேஷு புஷ்கரஸ்நாநகோடிஷு |
யத் பாபம் விலயம் யாதி ஸ்ம்ருதே நச்யதி தத் ஹரௌ ||"

[ஆயிரம் கங்காஸ்நானங்களாலும் கோடிக்கணக்கான புஷ்கரதீர்த்த ஸ்நானத்தினாலும் எந்தப் பாபம் நசிக்கின்றதோ, அது ஒரு தடவை ஹரியை நினைப்பதாலேயே போகிறது.]

"ஆயாஸ: ஸ்மரணே கோஸ்ய ஸ்ம்ருதோ யச்ச$_2$தி சோப$_4$நம் |
பாபக்ஷயச்ச ப$_4$வதி ஸ்மரதாம் தமஹர்நிசம் ||"

[இவனை நினைப்பதில் என்ன சிரமம் இருக்கிறது? (ஒரு தடவை) நினைக்கப்பட்ட போதிலும் இவன் நன்மையைத்தருகிறுன்; அவனை இராப்பகலாகச் சிந்திப்பவர்களுக்குப் பாபங்களும் பறந்தோடிப் போகின்றன.]

"ஹ்ருதி$_3$ யதி$_3$ ப$_4$க$_3$வாநநாதி$_3$ராஸ்தே
ஹரிரஸிசங்க$_3$கதா$_3$த$_4$ரோऽவ்யயாத்மா |
தத$_3$க$_4$மக$_4$விக$_4$ாதகர்த்ருபி$_4$ந்நம்
ப$_4$வதி கத$_2$ம் ஸதி சாந்த$_4$காரமர்க்கே ||"

[அநாதியானவனும், வாள், சங்கு, சக்கரம், கதை முதலியவற்றை தரிப்பவனும், அழியாத தேஹத்தையுடையவனுமான ஹரியானவன் மனத்தில் இருந்தானுகில், பாவத்தைப் போக்கடிக்கும் அவனுல் அந்தச் சேதனனுடைய பாபம் பிளக்கப்படுகிறது. ஸூர்யனிருக்கும் போது இருள் இருக்கமுடியுமோ?]

http://acharya.org

'' ஹரிமமரவரார்ச்சிதாங்க்4ரிபத்3மம்
ப்ரணமதி ய: பரமார்த்த2தோ மநுஷ்ய: |
தமபக3தஸமஸ்தபாபப3ந்த4ம்
வ்ரஜ பரிஹ்ருத்ய யதா2க்3நிமாஜ்யஸிக்தம் || ''

[(தூதனே!) தேவச்ரேஷ்டர்களாலே பூஜிக்கப்பட்ட திருவடித் தாமரைகளையுடையவனான ஹரியை எந்த மனிதன் உண்மையாக வணங்குகிறானோ, எல்லாப் பாபங்களும் நீங்கப்பெற்ற அம்மனிதனை ஹோமாக்னியைக்கண்டு விலகிச்செல்வதுபோல் விலகிச்செல்வாயாக.]

''யதா2க்3நிருத்3த4தஶிக2: கக்ஷம் த3ஹதி ஸாநில: |
ததா2 சித்தஸ்தி2தோ விஷ்ணுர் யோகி3நாம் ஸர்வகில்பி3ஷம் ||''

[வாயுவுடன் கூடியதும், கொழுந்துவிட்டெரிவதுமான நெருப்பு எப்படிக் கட்டைகளை தஹிக்கிறதோ, அப்படியே ஹ்ருதயத்திலிருக்கும் விஷ்ணுவும் யோகிகளுடைய எல்லாப் பாபங்களையும் போக்கடிக்கிறான்.]

''அதிபாதகயுக்தோऽபி த்4யாயந்நிமிஷமச்யுதம் |
பூ4யஸ் தபஸ்வீ ப4வதி *பங்க்திபாவநபாவந: ||''

[மஹாபாபங்களைச் செய்தவனாயினும், அச்யுதனை ஒரு நிமிஷம் தியானம் செய்வானாயின், மஹாதபஸ்ஸைச் செய்தவனாகவும், *பங்க்திபாவனர்களையும் பரிசுத்தப்படுத்துபவனாகவும் ஆகிறான்.]

''ஹரிர் ஹரதி பாபாநி து3ஷ்டசித்தைரபி ஸ்ம்ருத: |
அநிச்ச2யாऽபி ஸம்ஸ்ப்ருஷ்டோ த3ஹத்யேவ ஹி பாவக: ||''

[கெட்ட மனஸ்ஸையுடையவர்களால் நினைக்கப்பட்டபோதிலும், பகவான் ஹரி பாபங்களைப் போக்கடிக்கிறான்! விருப்பமில்லாமல் தொடப்பட்டபோதிலும், நெருப்பானது தஹித்தே தீருகின்றதன்றோ.]

''ஜ்ஞாநதோऽஜ்ஞாநதோ வாऽபி வாஸுதே3வஸ்ய கீர்த்தநாத் |
தத் ஸர்வம் விலயம் யாதி தோயஸ்த2ம் லவணம் யதா2 ||''

[தெரிந்தோ, தெரியாமலோ, வாஸுதேவனை ஸங்கீர்த்தனம் செய்வதன்மூலம், மனிதனுடைய பாபமெல்லாம் தண்ணீரிலுள்ள உப்புபோல் கரைந்து விடுகிறது.]

---

* தம்முடன் உட்கார்ந்திருக்கும் **பங்க்தி** (வரிசை) முழுவதையும் பரிசுத்தப்படுத்துமவர் பங்க்திபாவனர் எனப்படுவர்.

http://acharya.org

"யஸ்மிந் ந்யஸ்தமதிர் ந யாதி நரகம் ஸ்வர்க்கோ$_3$பி யச்சிந்தநே
விக்$_4$நோ யத்ர நிவேசிதாத்மமநஸோ ப்$_3$ராஹ்மோऽபி
லோகோऽல்பக: |
முக்திம் சேதஸி ய: ஸ்தி$_2$தோऽமலதி$_4$யாம் பும்ஸாம்
த$_3$தா$_3$த்யவ்யய:
கிம் சித்ரம் தத$_3$க$_4$ம் ப்ரயாதி விலயம் தத்ராச்யுதே கீர்த்திதே ||"

[எவனிடத்தில் வைக்கப்பட்ட மனஸ்ஸை உடையவன் நரகத்துக்குச் செல்வதில்லையோ, ஸ்வர்க்கமும் எவனை நினைப்பதற்கு இடையூறுகிறதோ, எவனிடத்தில் தன் மனஸ்ஸை வைத்தவனுக்கு ப்ரஹ்ம லோகமும் மிகச்சிறிதாகத் தோன்றுகிறதோ, அழிவற்றவனான எவனொருவன், மனிதர்களின் மனத்தில் இருந்துகொண்டு, தோஷமற்ற புத்தியை உடையவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்கிறானோ, அப்படிப்பட்ட அச்யுதன் கீர்த்திக்கப்பட்டவுடன் பாபம் மறைந்து விடுகிறது என்பதில் என்ன ஆச்சரியம்?]

"சமாயாலம் ஜலம் வஹ்நேஸ் தமஸோ பா$_4$ஸ்கரோத$_3$ய: |
சாந்தி: கலேரகௌ$_4$க$_4$ஸ்ய நாமஸங்கீர்த்தநம் ஹரே: ||"

[நெருப்பை அணைப்பதற்கு நீரும், இருட்டைப் போக்கடிக்க ஸூர்யோதயமும் போதுமானவை; (அம்மாதிரியே) கலிகாலத்திலுள்ள பாபக்கூட்டங்களையெல்லாம் போக்கடிப்பதற்கு ஹரியினுடைய நாமஸங்கீர்த்தனம் போதுமானது.]

"ஸ்துத்வா விஷ்ணும் வாஸுதே$_3$வம் விபாபோ ஜாயதே நர: |
விஷ்ணோ: ஸம்பூஜநாந் நித்யம் ஸர்வபாபம் விநச்யதி ||"

[வாஸுதேவனை விஷ்ணுவைத் துதித்து, மனிதன் பாபமற்றவனாகிறான். விஷ்ணுவை தினந்தோறும் பூஜிப்பதால் எல்லாப் பாபங்களும் நசிக்கின்றன.]

"கலிகல்மஷமத்யுக்$_3$ரம் நரகார்த்திப்ரத$_3$ம் நருணாம் |
ப்ரயாதி விலயம் ஸத்$_3$ய: ஸக்ருத் யஸ்யாநுஸம்ஸ்ம்ருதே: ||"

[மிகக் கொடூரமானதும், மனிதர்களுக்கு நரகதுக்கத்தைக் கொடுப்பதுமான கலிபாபங்கள் எவனை நினைத்தமாத்திரத்தில் மறைந்து விடுகின்றனவோ......]

http://acharya.org

''ஸக்ருத் ஸ்ம்ருதோऽபி கோ$_3$விந்தோ$_3$ ந்ருணாம் ஜந்மஶதை: க்ருதம் |

பாபராஶிம் த$_3$ஹத்யாஶு தூலராஶிமிவாநல: ||

[ஒருதடவை நினைக்கப்பட்டபோதிலும், நூற்றுக்கணக்கான ஜன்மங்களில் மனிதர்களால் செய்யப்பட்ட பாபஸமூஹத்தை, அக்னி பஞ்சுக்குவியலை எரிப்பதுபோல் வெகு சீக்கிரம் தஹிக்கிறான் கோவிந்தன்.]

''கலாவத்ராபி தோ$_3$ஷாட்$_4$யே விஷயாஸக்தமாநஸ: |
க்ருத்வாऽபி ஸகலம் பாபம் கோ$_3$விந்த$_3$ம் ஸம்ஸ்மரந் ஶுசி: ||''

[தோஷம் நிறைந்த இக்கலியுகத்திலும், விஷயங்களில் ஈடுபட்ட மனத்தையுடைய மனிதனுயிருந்தபோதிலும், எல்லாப் பாபங்களையும் செய்தபோதிலும் கோவிந்தனை நினைத்தானாகில் சுத்தனாகிறான்.]

''லோகத்ரயாதி$_4$பதிமப்ரதிமப்ரபா$_4$வம்
ஈஷத் ப்ரணம்ய ஶிரஸா ப்ரபு$_4$விஷ்ணுமீஶம் |
ஜந்மாந்தரப்ரளயகல்பஸஹஸ்ரஜாதம்
ஆஶு ப்ரணாஶமுபயாதி நரஸ்ய பாபம் ||''

[மூவுலகிற்கும் முதல்வனுயிருப்பவனும், ஒப்பற்ற பெருமையையுடையவனும், உலகிற்கெல்லாம் ஸ்வாமியாயும், நியமிப்பவனுயுமிருப்பவனுமான பகவானைத் தலையாலே சிறிது வணங்கினாலும், பலபல ஜன்மங்களிலும், பல்லாயிரக்கணக்கான கல்பங்களிலும் மனிதனுல்செய்யப்பட்ட பாபங்களெல்லாம் உடனே நசிக்கின்றன.] என்று பல்லாயிரக்கணக்கான ப்ரமாணங்களில் பகவானையும், அவனுடைய திருக்குணங்களையும் அறிவதாலும், ஸங்கீர்த்தனம் செய்வதாலும் ஸர்வ பாபங்களும் நசித்துப்போகின்றன என்று சொல்லப்பட்டதன்றோ.

''யதோ வா இமாநி பூ$_4$தாநி ஜாயந்தே | யேந ஜாதாநி ஜீவந்தி
யத் ப்ரயந்த்யபி$_4$ஸம்விஶந்தி | தத்$_3$ விஜிஜ்ஞாஸஸ்வ |
தத்$_3$ ப்$_3$ரஹ்மேதி |''

[எதனிடத்தில் நின்றும் இந்த ஜீவராசிகள் உண்டாகின்றனவோ, உண்டானவை எதனுல் உயிர்வாழ்கின்றனவோ, எதை மோக்ஷத்திலும் ப்ரளயகாலத்திலும் அடைகின்றனவோ, அதை அறிவாயாக, அதுவே ப்ரஹ்மம்.] என்று இத்தைத்திரீய உபனிஷத்தில் ப்ருகு வல்லியில் ஜகத்காரணமாக யாதொன்று வேதாந்தங்களில் ப்ரஸித்த

http://acharya.org

மாயிருக்கின்றதோ, அதுவே ப்ரஹ்மமென்று கோஷிக்கப்பட்டது. இங்கு "யதோ வை" என்று படித்ததால் இவ்வாக்கியம் மற்றுமொரு வேதாந்த வாக்கியத்திற்கு அநுவாதமாயிருக்கின்றதென்பது தெளிவாகிறது. "நாராயணாத்தேவ ஸமுத்பத்யந்தே। நாராயணாத் ப்ரவர்த்தந்தே। நாராயணே ப்ரலீயந்தே।" [நாராயணனிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன; நாராயணனாலேயே வாழ்கின்றன; நாராயணனிடமே ஒடுங்குகின்றன.] என்ற நாராயணோபனிஷத் வாக்யமே இதற்குப் *புரோவாதமென்பதும் தெளிவாக விளங்குகிறது.

இப்படி சீக்ஷாவல்லியில் பகவதஸாதாரணமான புருஷசப்தத்தைப் படித்து, அவனே ப்ரஹ்மருத்ரர்களுக்கும் காரணபூதனென்று கோஷித்து, ஆநந்தவல்லியில் அவன் அநந்தசப்த வாச்யனென்று அறிவித்து, ப்ருகுவல்லியில் அவனே ஸகல ஜகத்துக்களுக்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைப்பண்ணும் ப்ரஹ்மம் என்று படித்தபிறகு, அடுத்தபடியாயுள்ள நாராயணவல்லியில் புருஷோத்தமனைத்தவிர வேறொருவரையும் எவ்விடத்திலும் எக்காலத்திலும் குறிக்கமாட்டாத நாராயணசப்தத்தை ஒருகால் சொன்னாற்போலே ஒன்பதின்கால் சொல்லி, அவனுக்கேயான புருஷசப்தத்தையும் பலதடவை படித்து, பரத்வம், வியூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்னும் அவனுடைய ஐந்து அவஸ்த்தைகளையும் அறிவித்து, அவனுக்கே அடையாளமான க்ஷீராப்திசாயித்வத்தையும் பல தடவை அநுஸந்தித்து, அவனுடைந்த திருநாமங்களாகிய அச்யுதன், அநந்தன், ஹரி, விஷ்ணு முதலான திருநாமங்களையும் அறிவித்து, அவனே பரப்ரஹ்மம், பரதத்வம், பரஞ்ஜோதி, பரமாத்மா, சிவன், சம்பு முதலிய சப்தங்களால் பல வேதவாக்யங்களில் படிக்கப்படுபவன் என்று உரைத்து, அவனே தஹரவித்யை முதலான ஸகலவித்யைகளிலும் உபாஸிக்கப்படுபவன் என்று உணர்த்தி, அவனை அடைவதற்குள்ள ஸாதனங்களில் தலைசிறந்தது அவனைச்சரணடைவதே என்று நிர்ணயித்து, இப்படி ஒரு சேதனன் அறியவேண்டிய ஸகல விஷயங்களையும் அறிவித்து முடிக்கிறது அருமறை.

---

* ஒரு வாக்யத்தின்பொருளை மற்றொரு வாக்கியம் திருப்பிப் படித்தால், முந்தியது புரோவாதமென்றும், பிந்தியது அநுவாதமென்றும் சொல்லப்படும். 'வை' முதலான பிரஸித்தியைக் குறிக்கும் பதங்கள் ஒருவாக்கியம் அநுவாதமென்பதைக் காண்பிக்கும்.

http://acharya.org

ஸ்மார்த்தர்கள், நாராயணவல்லியென்னும் இந்த பாகத்தை தைத்திரீயோபநிஷத்துடன் சேர்க்காமல், தனியாக நாராயண உபநிஷத் என்று படிக்கிறார்கள். தைத்திரீய ப்ருகுவல்லிக்கு அடுத்த படியாக இது எல்லாராலும் ஓதப்படுகிறது. சங்கராசாரியரோடு, நம் ஆசாரியர்களோடு வாசியற எல்லாரும் இந்த நாராயணவல்லியிலுள்ள வாக்கியங்களை ப்ரமாணமாக எடுத்துள்ளார்கள். ஸந்த்யா வந்தனத்தின்போது ப்ராஹ்மணர்கள் எல்லாரும் அநுஸந்திக்கும் மந்திரங்களில் பல இந்த நாராயணவல்லியிலேயே காணப் படுகின்றன. மேலும், ஊர்த்வபுண்ட்ரதாரணம், ஸ்நாநம் முதலான கர்மங்களில் அநுஸந்திக்கவேண்டிய மந்திரங்களும் இதில் படிக்கப் படுகின்றன.

"அம்ப4ஸ்யபாரே பு4வநஸ்ய மத்4யே
நாகஸ்ய ப்ருஷ்டே2 மஹதோ மஹீயாந்।
ஶுக்ரேண ஜ்யோதீம்ஷி ஸமநுப்ரவிஷ்ட:
ப்ரஜாபதிஶ் சரதி கர்ப்பே4 அந்த:॥"

[கரைகாணவொண்ணாத ஸமுத்ரத்திலும், உலகத்திற்கு நடுவிலும், துக்கமற்ற வைகுண்டலோகத்தின் மேலும், பெரியவற்றைக் காட்டிலும் பெரியவரான ப்ரஜாபதி, தன்னுடைய தேஜஸ்ஸினால் ஸூர்யன் முதலிய சோதிகளை வியாபித்துக்கொண்டு, ஹ்ருதய குஹையில் வஸிக்கிறார்.] என்பது இந்த நாராயணவல்லியின் முதல் மந்திரம். இதில் பகவானுடைய பஞ்ச அவஸ்தைகளும் அறிவிக்கப்படுகின்றன. 'அம்ப4ஸ்யபாரே' என்று க்ஷீராப்தியை (அல்லது ப்ரளய மஹார்ணவத்தை) அறிவிக்கையால் வியூஹம் உணர்த்தப்படுகிறது. 'பு4வநஸ்ய மத்4யே' என்பதற்கு ஸூர்யமண்டலத்திலுள்ளவன் என்றும், இவ்வுலகில் ராமகிருஷ்ணாதிரூபியாகவும், அர்ச்சாரூபியாகவும் அவதரிக்கும் மூர்த்திகளைக் குறிப்பதாகவும் பொருள் கொள்ளலாம். 'நாகஸ்ய ப்ருஷ்டே2' என்று துக்கம் கலசாத ஸ்ரீவைகுண்டத்திலுள்ள பரமபதநாதனைக் குறிக்கிறது. 'கம்' என்றால் ஸுகத்தைச்சொல்லும்; 'அகம்' என்றால் துக்கத்தைச் சொல்லும்; 'நாகம்' என்றால் துக்கம் சிறிதுமற்ற இடமாகிய பரம பதத்தைச் சொல்லும். 'ப்ரஜாபதிச்சரதி கர்ப்பே4 அந்த:' என்று அந்தர்யாமியாய் எழுந்தருளியிருக்கும் இருப்பு அறிவிக்கப்படுகிறது. ஆக இப்படி அச்சுதனுடைய ஐந்து நிலைகளும் ஆரம்பத்திலேயே அறிவிக்கப்படுகின்றன. நாராயணஸூக்தத்திலும் இவ்வைந்து அவஸ்தைகளும் உணர்த்தப்படுவதை முன்னமே காட்டினோம்.

http://acharya.org

கடைசியிலும் ''ஸ வா ஏஷ புருஷ: பஞ்சதா₄'' [அந்த இந்தப் புருஷன் ஐந்து நிலைகளையுடையவன்] என்று இவ்விஷயம் சொல்லப்பட்டது. இப்படி ஆரம்பத்திலும், நடுவிலும், முடிவிலும் பஞ்சாவஸ்தைகளை யுடைய பரவாஸுதேவனையே இவ்வுபநிஷத் உத்கோஷிக்கிற தென்று விளங்குகிறது. 'அம்ப₄ஸ்யபாரே' என்று இங்கு படித்ததை

''யேநாவ்ருதம் க₂ம் ச தி₃வம் மஹீம் ச
யேநாதி₃த்யஸ் தபதி தேஜஸா ப்₄ராஜஸா ச।
யமந்தஸ் ஸமுத்₃ரே கவயோऽவயந்தி
யத₃க்ஷரே பரமே ப்ரஜா:॥''

[எந்த பகவானால், ஆகாசமும், தேவலோகமும், பூலோகமும் சூழப்பட்டுள்ளனவோ, எவனுடைய ஒளியினால், தேஜஸ்ஸினாலும், ஒளியினாலும் ஸூர்யன் பிரகாசிக்கிறானோ, ''எவனை ஞானிகள் ஸமுத்ரத்தின் நடுவிலுள்ளவனாக அறிகிறார்களோ, எவனொருவன் அழிவற்ற பரமபதத்திலுள்ளானோ அவனே ப்ரஹ்மம்.] என்று மூன்றுவது மந்திரத்திலும், ''ஸமுத்₃ரேந்தம்'' என்று நாராயணாநுவாகத்திலும் ஆதராதிசயத்தாலே அடிக்கடி அறிவிக்கிறது. இவ்வர்த்தம்

''ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ:।
தா யத₃ஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத:''

[ஜலம் நாரமெனப்படுகிறது; அது நரனாகிய பகவானிடமிருந்து உண்டானதன்றோ. அந்த ஜலம் பூர்வ காலத்தில் இவனுக்கு இருப்பிடமாகையால் இவன் நாராயணனெனப்படுகிறான்.] என்று மனுஸ்ம்ருதி, விஷ்ணுபுராணம் முதலியவற்றிலும்

''ஸ்ருஷ்ட்வா நாரம் தோயமந்த:ஸ்தி₂தோऽஹம்
யேந ஸ்யாந்மே நாம நாராயணேதி॥''

[நாரமாகிய ஜலத்தை ஸ்ருஷ்டித்து அதனுள் இருக்கையால் எனக்கு நாராயணனென்னும் பெயருண்டாயிற்று.] என்று வராஹபுராணத்திலும்,

''ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:''

[இந்த ஸ்ரீமந்நாராயணன் பாற்கடலில் பள்ளிகொள்பவன்] முதலானவிடங்களில் ரிஷிகளாலும், ''நாகமேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே!'' முதலியவிடங்களில் ஆழ்வார்களாலும் அநுஸந்

http://acharya.org

திக்கப்பட்டதன்றோ. ஸர்வஜ்ஞானியாகிய வேதபுருஷன், மனு முதலிய மஹான்களையும் ஆழ்வார்களையும் நினைந்தே "யமந்த: ஸமுத்$_{3}$ரே கவயோவயந்தி" என்கிறான் போலும். "சுக்ரேண ஜ்யோதிம்ஷி ஸமநுப்ரவிஷ்ட:" என்றும் "யேநாதி$_{3}$த்யஸ் தபதி தேஜஸா ப்$_{1}$ராஜஸா ச" என்றும் இங்கு சொல்லப்பட்டது

"யத$_{3}$ாதி$_{3}$த்யக$_{3}$தம் தேஜோ ஜக$_{3}$த் ப$_{4}$ாஸயதேऽகி$_{2}$லம் |
யச்சந்த்ரமஸி யச்சாக்$_{3}$னௌ தத்தேஜோ வித்$_{3}$தி$_{4}$ மாமகம் ||"

[எல்லா உலகையும் ஒளிவிடச்செய்யும் ஸூர்யனுடைய ஒளியும், சந்திரனுடைய ஒளியும், அக்னியினுடைய ஒளியும் என்னுடையதே என்று அறிவாயாக.] என்று கீதையில் பகவத்பரமாக விவரிக்கப்பட்டது. "ப்ரஜாபதிச் சரதி" என்று ப்ரஜாபதிசப்தம் படிக்கப்பட்டிருப்பதால் இந்த மந்திரம் பிரமனைக்குறிக்காதோ என்று சிலர் ஸந்தேஹிக்கக்கூடும். பின்வரும் காரணங்களால், அப்படி ஸந்தேஹிப்பது சரியல்லவென்று விளங்கும். பிரமனுக்கு ஹ்ருதயத்தினுள் வசிக்கும் தன்மை சாஸ்திரங்களில் காணப்படுவதில்லை. மேலும், புருஷஸூக்தம் உத்தரானுவாகத்தில் 'ப்ரஜாபதிச் சரதி க$_{3}$ர்ப்பே$_{4}$ அந்த:' என்று படித்து, மேலே "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்று அவனே லக்ஷ்மீநாதன் என்று நிர்ணயிக்கப்பட்டது. ப்ரஜாபதிசப்தம் பரமபுருஷனைக் குறிக்கும் சாஸ்திரங்களில் பலவிடங்களில் படிக்கப்படுவதைக் காட்டுவோம்.

"ஆபோ வா இத$_{3}$மக்$_{3}$ரே ஸலிலமாஸீத் | தஸ்மிந் ப்ரஜாபதிர் வாயுர் பூ$_{4}$த்வா அசரத் | ஸ இமாமபச்யத் | தாம் வராஹோ பூ$_{4}$த்வா அஹரத் ||"

[இவ்வுலகம் முதலில் ஜலமயமாயிருந்தது. அதில் ப்ரஜாபதியானவர் வாயுரூபங்கொண்டு ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார். அவர் (ஜலத்தில் முழுகியிருந்த) இந்த பூமியைப் பார்த்தார். இந்த பூமியை வராஹரூபியாய் எடுத்தார்.] என்று வேதத்தில் வராஹரூபியான பகவான் விஷயமாக ப்ரஜாபதிசப்தம் பிரயோகிக்கப்பட்டது. வாஜபேயயாகத்திற்கு விதிக்கப்பட்ட ப்ராஜாபத்ய பசுவை வர்ணிக்கும்போது, "ச்யாமா ஏகரூபா ப$_{4}$வந்தி" [கருநிறமுள்ளவையாயும், ஒரேமாதிரி உருவத்தை உடையவையாகவும் ஆகின்றன.] என்று விதித்துவிட்டு, "ஏவமிவ ஹி ப்ரஜாபதி:" [ப்ரஜாபதியும் இப்படியே (கருநிறமுள்ளவராக) இருக்கிறாரன்றோ.] என்று படித்தது. இதிலிருந்து க்ருஷ்ணவர்ணனான பகவானே இங்கும் ப்ரஜாபதியென்று ஓதப்படுகிறானென்பது விளங்குகிறது.

http://acharya.org

"புத்ரௌ ப்ரஜாபதிம் தே₃வம் ப₄க்த்யாராத₄யதம் பரம்।
நாராயணம் ஸ வோ தா₃தா வ்ருத்தேர் நூநம் ப₄விஷ்யதி ॥"

[புத்திரர்களே! மேலானவனும், ப்ரஜாபதி என்று சொல்லப்படுமவனுமான நாராயணனை பக்தியுடன் பூஜியுங்கள்; உங்களுக்கு வேண்டியதை அவன் தருவான்.] என்றும்

"ஏவம் ஸ்துதஸ் ததஸ் தாப்₄யாமச்விப்₄யாம் ஸ ப்ரஜாபதி:"

[அந்த ப்ரஜாபதியானவர் அந்த அச்விநீதேவர்களால் துதிக்கப் பட்டவராய்......] என்றும் வாராஹபுராணத்திலும்,

"யத்தத் ஸத்யஞ்ச பரமம் அஹமேக: ப்ரஜாபதி:"

[யாதொன்று ஸத்யமாயும் மேலானதாயுமிருக்கிறதோ, அது ப்ரஜாபதியாகிய என்னுடைய அம்சத்தைப் பெற்றது.] என்று மாத்ஸ்ய புராணத்திலும்,

"பரம் பராணாமபி காரணம் ஹரிம்
மஹீத₄ரம் லோககு₃ரும் ப்ரஜாபதிம்"

[மேலானவற்றைக்காட்டிலும் மேலானவனும், காரணபுருஷனும், பூமியை தரிப்பவனும், லோகஸ்வாமியும் ப்ரஜாபதியுமான ஹரியை.........] என்று நரஸிம்ஹபுராணத்திலும்,

"தோயாந்தஸ்ஸ்தா₂ம் மஹீம் ஜ்ஞாத்வா ஜக₃த்யேகார்ணவீக்ருதே।
அநுமாநாத் தது₃த்₃தா₄ரம் கர்த்துகாம: ப்ரஜாபதி: ॥" [1-4-7]

[உலகம் ஒரே சமுத்ரமயமாயிருந்தபோது பூமி ஜலத்தின் அடியில் இருப்பதை ஊகித்து அறிந்து ப்ராஜாபதியான பகவான் அதை எடுப்பதற்தாக (வராஹரூபத்தை) மேற்கொண்டார்.] என்று விஷ்ணுபுராணத்திலும்,

"வராஹரூபஸ் ஸ பதி: ப்ரஜாபதிர்
மமாऽஸ்து மாங்க₃ள்யவிவ்ருத்₃த₄யே ஹரி:"

[வராஹரூபியாயும், லோகஸ்வாமியாயும், ப்ரஜாபதி எனப்படுமவனுமுள்ள ஹரி எனக்கு மங்களங்களை வளர்க்கட்டும்.] என்று விஷ்ணுதர்மத்திலும்,

http://acharya.org

“ பூர்வே ப்ரஜாவிஸர்க்கே₃ த்வாமாஹுரேகம் ப்ரஜாபதிம் ”
[முதலில் ஸ்ருஷ்டி செய்தகாலத்தில் உன்னையே ப்ரஜாபதி யென்கின்றனர்.] என்றும்,

“ ராஜாதி₄ராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்₃ரஹ்மமயோ மஹாந்।
ஈச்வரம் தம் விஜாநீமஸ் ஸ பிதா ஸ ப்ரஜாபதி: ॥ ”

[எல்லாருக்கும் ராஜாதிராஜராய் விளங்குபவரும், ஸர்வவ்யாபியும், ப்ரஹ்மஸ்வரூபியும், பெரியோனுமான அந்த ஸர்வேச்வரனை அறிகிறோம். அவரே (எல்லாருக்கும்) தந்தை; அவரே ப்ரஜாபதி.] என்றும்,

“ சு₂சிம் சு₂சிஷத₃ம் ஹம்ஸம் தத்பரம் பரமேஷ்டி₂நம்।
யுக்த்வா ஸர்வாத்மநாத்மாநம் தம் ப்ரபத்₃யே ப்ரஜாபதிம் ॥ ”

[சுத்தமானவனும், சுத்தமான பரமபதத்தில் வஸிப்பவனும், பிரகாசிப்பவனும், மேலானவனும், மேலான ஸ்தானத்திலுள்ளவனுமான பரமாத்மாவை அடைந்து, ப்ரஜாபதியான அவனை சரணமடைகிறேன்.] என்றும்,

“ அதிவாய்விந்த்₃ரகர்மாணம் அதிஸூர்யாக்₃நிதேஜஸம்।
அதிபு₃த்₃தீ₄ந்த்₃ரியாத்மாநம் தம் ப்ரபத்₃யே ப்ரஜாபதிம் ॥ ”

[வாயு, இந்திரன், இவர்களுடைய செயலைக்காட்டிலும் மேலான செயலை உடையவனும், ஸூர்யன், அக்னி, இவர்களுடைய ஒளியையும் விஞ்சிய ஒளியையுடையவனும், புத்தி, இந்திரியங்கள், ஜீவன் இவர்களுக்கு எட்டாமலிருப்பவனுமான ப்ரஜாபதியை சரணமடைகிறேன்.] என்றும் மஹாபாரதத்திலும், பரமபுருஷனைப்பற்றி ப்ரஜாபதிசப்தம் படிக்கப்பட்டது இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

“ அத: பரம் நாந்யத₃ணீயஸம் ஹி
பராத் பரம் யந் மஹதோ மஹாந்தம்।
யதே₃கமவ்யக்தமநந்தரூபம்
விச்வம் புராணம் தமஸ: பரஸ்தாத் ॥ ”

[இந்தப் பரமாத்மாவைக்காட்டிலும் ஸூக்ஷ்மமானது கிடையாது; அதுவே மேலானவர்களைக்காட்டிலும் மேலானதாகவும், பெரியவற்றைக்காட்டிலும் பெரியதாகவும் விளங்குகிறது. அது ஒன்றே

http://acharya.org

அறியமுடியாததாகவும், அநந்தமான ரூபங்களை உடையதாகவும், உலகிற்கெல்லாம் ஆத்மாவாகவும், பழமையானதாகவும், ப்ரக்ருதி மண்டலத்துக்கு அப்பாற்பட்டதாகவும் விளங்குகிறது.] என்ற ஆறாவது மந்திரத்தில், ஆநந்தவல்லியில் சொல்லப்பட்ட அநந்த சப்தத்தின் அர்த்தம் 'அநந்தரூபம்' என்று அறிவிக்கப்படுகிறது. 'தமஸ: பரஸ்தாத்' என்று இங்கு படித்ததால், "ஆதி$_3$த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்று புருஷஸூக்தத்திலும், "தமஸ: பரமோ தா$_4$தா சங்க$_2$சக்ரக$_3$தா$_3$த$_4$ர:" என்று ஸ்ரீராமாயணத்திலும் சொல்லப்பட்டவனே இவன் என்று தெளிவாகிறது. எட்டாவது மந்திரத்தில்

"ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்$_3$யுத: புருஷாத$_3$தி$_4$ ।
கலாமுஹூர்த்தா: காஷ்டா$_2$ச்ச அஹோராத்ராச்ச ஸர்வஶ: ॥
அர்த்த$_4$மாஸா மாஸா ருதவஸ் ஸம்வத்ஸரச்ச கல்பதாம் ॥"

[மின்னல் போன்ற வர்ணத்தையுடைய புருஷனிடமிருந்து எல்லா நிமிஷங்கள், கலை, முஹூர்த்தம், காஷ்டைகள், இராப்பகல்கள், பக்ஷங்கள், மாஸங்கள், ருதுக்கள், வருஷங்கள் ஆகிய எல்லாம் ஸ்ருஷ்டிக்கப்பட்டன.] என்று புருஷசப்தவாச்யனை பகவானே காலதத்துவத்தை ஸ்ருஷ்டித்தவன் என்று உத்கோஷித்தது. "வித்$_3$யுத: புருஷாத்" என்பது நாராயணஸூக்தத்தில் "நீலதோயத$_3$–மத்$_4$யஸ்தா$_2$ வித்$_3$யுல்லேகே$_2$வ பா$_4$ஸ்வரா" என்று நாராயணவிஷயமாக விவரிக்கப்பட்டது. அடுத்தபடியாக "அத்$_3$ப்$_4$யஸ் ஸம்பூ$_4$தோ ஹிரண்யக$_3$ர்ப்ப$_4$ இத்யஷ்டௌ" என்றுபடித்து, "அத்$_3$ப்$_4$யஸ் ஸம்பூ$_4$த:" என்று ஆரம்பிக்கும் புருஷஸூக்தத்தின் உத்தராநுவாகத்தையும், "ஹிரண்யக$_3$ர்ப்ப$_4$ஸ் ஸமவர்த்ததாக்$_3$ரே" என்று தொடங்கும் வேத மந்திரங்களையும் இங்கு அநுஸந்திக்கவேண்டும் என்று அறிவிக்கிறது. இதிலிருந்து உத்தராநுவாகத்தில் "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்று லக்ஷ்மீநாதனாக கோஷிக்கப்பட்டவனே இந்த நாராயணவல்லியிலும் ப்ரதிபாதிக்கப்படுமவன் என்று உணர்த்தப்படுகிறது. "ஹிரண்யக$_3$ர்ப்ப$_4$ஸ் ஸமவர்த்ததாக்$_3$ரே" [ஹிரண்யகர்ப்பனே முதலில் இருந்தான்.] என்னும் மந்திரத்தில் படிக்கப்படும் ஹிரண்யகர்ப்பசப்தம் பிரமனைக்குறிக்குமென்று சிலர் சந்தேஹிக்கக்கூடும். புருஷஸூக்தம் உத்தராநுவாகத்துடன் சேர்த்துப் படிக்கும்படி விதித்திருப்பதால் இந்த சங்கைக்குச் சிறிதும் இடமில்லை. லக்ஷ்மீபதித்வம் நாராயணனுக்கே அஸாதாரணமானதொன்றன்றோ. மேலும், பகவானைக்குறித்தும் சாஸ்த்ரங்களில்

http://acharya.org

ஹிரண்யகர்ப்பசப்தம் படிக்கப்படுவதுண்டு. "ஹிரண்ய க3ர்ப்பே4ா பூ4கர்ப்ப4:" என்று ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்திலும்,

"ஹிரண்யக3ர்ப்ப4மம்ருதம் பூ4க3ர்ப்ப4ம் பரத: பரம் ।
ப்ரபே4ா: ப்ரபு4மநாத்3யந்தம் ப்ரபத்3யே தம் ரவிப்ரப4ம் ॥"

[ஹிரண்யகர்ப்பனும், மோக்ஷஸ்வரூபியும், பூமியை தரிப்பவனும், மேலானதைக்காட்டிலும் மேலானவனும், ஈச்வரர்களுக்கும் ஈச்வரனாயிருப்பவனும், ஆதியந்தமற்றவனும், ஸூர்யனைப்போன்ற ஒளியுள்ளவனுமான அந்தபகவானை சரணமடைகிறேன்.] என்று விஷ்ணுதர்மத்திலும் "ஹிரண்யக3ர்ப்ப4 ஹிரண்யநாப4 நாராயண" என்று ஹரிவம்சத்தில் மஹாபுருஷஸ்தவத்திலும்,

"ஸ ஜாமத3க்3ந்யோ பு4வநஸ்ய கோ3ப்தா
ஹிரண்யக3ர்ப்பே4ாऽஸுரஹா ப்ரபாது"

[உலகத்தைக் காப்பாற்றுமவரும், ஹிரண்யகர்ப்பர் எனப்படுபவரும், அஸுரர்களை அழிப்பவரும், ஜமதக்னியின் புதல்வருமான பரசுராமர் காப்பாற்றட்டும்.] என்றும்,

"சதுஷ்ப்ரகாரம் ஸ்வசரீரமாத்3யம்
ஹைரண்யக3ர்ப்ப4ம் பரிபாலயித்வா ।
நாமாதி3ரூபைர் ப3ஹுரூபபே4தம்
சகார..................."

[ஹிரண்யகர்ப்பனை தன்னுடைய ஆதியஞ்சோதியுருவை நான்கு விதமாகச் செய்துகொண்டு, நாமரூபபேதங்களால் பல உருவ பேதங்களைச்செய்தான்.] என்றும் வராஹபுராணத்திலும், "ஹிரண்ய க3ர்ப்ப4ம் த்வாமாஹு:" [ஹிரண்யகர்ப்பனென்று உன்னை அழைக்கிறார்கள்.] என்றும்,

"ஹிரண்யக3ர்ப்பே4ா த்3யுதிமாந் ய ஏஷ ச2ந்த3ஸி ஸ்துத: ।
யோகை3ஸ் ஸம்பூஜ்யதே நித்யம் ஸ ஏவாஹம் விபு4: ஸ்ம்ருத: ॥"

[மிகவும் ஒளியுள்ளவனாகவும், ஹிரண்யகர்ப்பனென்று வேதத்தில் படிக்கப்பட்டவனாகவும், யோகங்களில் தினந்தோறும் பூஜிக்கப்படுபவனாகவும், ஸர்வவ்யாபியாகவும் நானே விளங்குகிறேன்.] என்றும் மஹாபாரதத்தில் ராஜதர்மமோக்ஷதர்மங்களிலும்,

"வாஸுதே3வ: பரம் ப்3ரஹ்ம தந்மூர்த்தி: புருஷ: பர: ।
ஹிரண்யக3ர்ப்பே4ா ப4க3வாந் ஏஷ ச2ந்த3ஸி பட்2யதே ॥"

http://acharya.org

[வாஸுதேவனே பரப்ரஹ்மம்; அவனே பரமபுருஷனெனப்படு கிறான். இந்த பகவானே ஹிரண்யகர்ப்பன் என்று வேதங்களில் ஓதப்படுகிறான்.] என்று ஸூர்யஸித்தாந்தமென்னும் ஜ்யோதிஷ சாஸ்த்ரக்ரந்தத்திலும் ஹிரண்யகர்ப்பசப்தமும், இந்த ச்ருதி வாக்யமும் பகவத்பரமாக விவரிக்கப்பட்டன.

தைத்திரீய ஸம்ஹிதை நாலாவது காண்டம் முதல் ப்ரச்நத்தில் "ஹிரண்யகர்ப்பஸ் ஸமவர்த்ததாக்ரே" என்று தொடங்கும் எட்டு ரிக்குகளும் படிக்கப்பட்டிருக்கின்றன. அவை பகவத்பரமே என்பதை நிரூபிக்கும் உபப்ரும்ஹணங்களையும் யுக்திகளையும் இனி விவரிப் போம்.

"ஹிரண்யகர்ப்பஸ் ஸமவர்த்ததாக்ரே
பூதஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத் ।
ஸ தாதார ப்ருதிவீம் த்யாமுதேமாம்
கஸ்மை தேவாய ஹவிஷா விதேம ॥"

[அநாதிகாலமாக இருப்பவனும், பூதங்களுக்கெல்லாம் ஒரே பதி யாயுள்ளவனும், (ஜீவாத்மஸமூஹத்தைத் தன்னுட் கொண்டிருக்கை யால்) ஹிரண்யகர்ப்பன் என்னும் திருநாமத்தையுடையவனுமான பகவான் ஒருவனே முதலில் இருந்தான். அவன் பூமியையும், தேவலோகத்தையும் தரித்து நின்றான். அறியவொண்ணாத அந்த தேவனுக்கு ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கிறோம்.] என்பது அம்மந்திரங் களில் முதலாவது.

"ஹிரண்யகர்ப்ப: ஏக: ஸமவர்த்ததாக்ரே" என்னும் தொடர்.

"ஏகோ ஹவை நாராயண ஆஸீத்"

"திவ்யோ தேவ ஏகோ நாராயண:"

முதலான வாக்யங்களுடன் ஒரே பொருளை உடையதாகையால் பகவத்பரம் என்பது தெளிவாகிறது. இங்குள்ள ஹிரண்ய கர்ப்ப சப்தம் பகவானைக் குறிப்பது என்பதை இதிஹாஸபுராணவாக்யங் களைக்கொண்டு முன்னமே நிரூபித்தோம். "பூதஸ்ய ஜாத:" என்பது எல்லா பூதங்களுக்கும் முன்பிருந்தவன் என்னும் பொருளை யுடையது. "பூர்வோ யோ தேவேப்யோ ஜாத:" என்றும் புருஷஸூக்த வாக்யத்திற்போலவே இங்கும் பொருள் கொள்ளவேண்டும். அன்றிக்கே, பரவாஸுதேவனிடமிருந்து பிறந்தவனான விஷ்ணு மூர்த்தியைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அப்போது பிறப்பு

http://acharya.org

அவதாரரூபமானது. "அஜாயமானோ ப$_4$ஹுதா$_4$ விஜாயதே" என்றும், 'பிறப்பில் பல் பிறவிப்பெருமான்" என்றும் சொல்லப்பட்டதன்றோ. "பூ$_4$தஸ்ய பதிரேக:" என்னும் தொடர் "பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம்" என்று நாராயணபரமாக நாராயணஸூக்தத்தில் விவரிக்கப்பட்டது. "ஸ தா$_3$தா$_4$ர ப்ருதி$_2$வீம் த்$_3$யாமுதேமாம்" என்னும் வாக்யம்,

"வ்யஸ்கப்$_4$நாத்$_3$ ரோத$_3$ஸீ விஷ்ணுரேதே
தா$_3$தா$_4$ர ப்ருதி$_2$வீமபி$_4$தோ மயூகை$_2$:"

[பகவான் விஷ்ணுவானவர், இந்த பூமியையும், ஆகாசத்தையும் வியாபித்துத் தன் சக்தியாலே அவற்றைச் சுற்றிலும் தரித்து நின்றார்] என்னும் வேதவாக்யத்தாலே விஷ்ணுபரமாக விளக்கப்பட்டது.

நிற்க; "'கஸ்மை தே$_3$வாய ஹவிஷா விதே$_4$ம' என்று இந்த எட்டு மந்திரங்களிலும் படிக்கப்படுகிறது; இதிலிருந்து 'க:' என்னும் பெயருடைய பிரமனே இங்கு சொல்லப்படுவதாக ஆகாதோ? "கோஹ வை நாம ப்ரஜாபதிர் விது$_3$ரேநம் நாம்நா கோ ஹி ப்ரஜாபதி:" ['க:' என்று சொல்லப்படுபவன் ப்ரஜாபதியான பிரமனே] என்று சுருதியிலும், 'க இதி ப்$_3$ரஹ்மணோ நாம' என்று ஹரிவம்சத்திலும், 'கோ ப்$_3$ரஹ்மாத்மாநிலார்க்கேஷு' ['க:' என்னும் சப்தம், ப்ரஹ்மா, ஆத்மா, வாயு, ஸூர்யன் ஆகிய இவைகளைச் சொல்லுவது.] என்று நிகண்டுவிலும் சதுர்முக$_2$வாசகமாகவன்றோ கசப்தம் படிக்கப்பட்டது" என்னும் பூர்வபக்ஷம் இங்கு எழுக்கூடும். 'க:' என்னும்பதம் பிரமனையே ப்ரஸித்தமாகக் குறிப்பது என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் அப்பொருளில் இங்கு பிரயோகிக்கப்பட்டிருந்தால் 'ராமாய' என்பது போல் 'காய தேவாய' என்று படிக்கப்பட்டிருக்கவேண்டும். 'கஸ்மை [எவனுக்கு] என்று ஸர்வநாமசப்தமாகப் படித்திருக்கக் கூடாது. "ஸம்ஜ்ஞோபஸர்ஜநீபூ$_4$தாஸ்து ந ஸர்வாத$_3$ய:" என்று வார்த்திகத்திலும் ஸம்ஜ்ஞாசப்தங்களுக்கு ஸர்வநாமப்ரயோகம் கிடையாது என்று சொல்லப்பட்டது. ஆகையால், இங்கு 'க:' என்னும் பதம் ப்ரஹ்மாவைக் குறிப்பதல்ல என்று ஏற்பட்டது. இதன் உண்மைப்பொருள் யாது? எனில்: 'க:' என்னும் சப்தம் 'எவன்' என்னும் அர்த்தத்தையுடையது. எல்லாராலும் 'எவன்?' 'எவன்?' என்று தேடும்படியாயிருப்பவனே இங்கு 'க:' என்று படிக்கப்படுகிறான். "க இத்$_3$தா$_4$ வேத$_3$ யத்ர ஸ:" [அப்பரமாத்மா எப்பெருமைகளுடன் இருக்கின்றான் என்பதை எவன் அறிவான்.] என்றல்லவோ கடோபநிஷத் விஷ்ணுவின் வைபவத்தை விளக்கிற்று. 'ஸோ அங்க$_3$ வேத$_3$

http://acharya.org

யதி$_2$ வா ந வேத$_3$" என்றும், "தனக்கும் தன் தன்மை அறிவரியான்" என்றும் சொல்லும்படியாயன்றோ இவன் பெருமை இருப்பது. ஆக, 'க:' என்று அறியவொண்ணாத ஸ்வரூபஸ்வபாவாதிகளை உடைய ஒருவன் சொல்லப்படுகிறான் என்றதாயிற்று. இப்படிப்பட்ட பெருமையை உடையவன் பகவான் விஷ்ணுவே என்பதை

"த்வம் ஹ்ரி லோககத$_3$திர் தே$_3$வ ந த்வாம் கேசந ஜாநதே"

[தேவனே! நீயே உலகிற்கெல்லாம் கதியாயிருப்பவன். உன்னை ஒருவரும் அறியமாட்டார்கள்.]

"ந ஸ ஶக்யஸ் த்வயா த்$_3$ரஷ்டும் மயாऽந்யைர் வாபி ஸத்தம ।
ஸர்வேஷாம் ஸாக்ஷிபூ$_4$தோऽஸௌ ந க்$_3$ராஹ்ய: கேநசித் க்வசித்"

[குழந்தாய்! அந்த நாராயணன் (ருத்ரனாகிய) உன்னாலும், (பிரமனாகிய) என்னாலும், மற்று எவராலும் அறியவொண்ணாதவர். எல்லாருக்கும் ஸாக்ஷியாயிருப்பவர். எவராலும், எக்காலத்திலும் அறியவொண்ணாதவர் அவரே.]

"ச்ரூயதாம் பரமம் தை$_3$வம் து$_3$ர்விஜ்ஞேயம் மமாபி ச ।
சிந்தயந்தோ ஹி யந்நித்யம் ப$_3$ரஹ்மேஶாநாத$_3$ய: ப்ரபு$_4$ம் ॥
நிஶ்சயம் நாதி$_4$க$_3$ச்ச$_2$ந்தி தமஸ்மி ஶரணம் க$_3$த: ॥"

[எனக்கும் அறியவொண்ணாத மேலான தெய்வத்தைக் கேளுங்கள். எந்ததெய்வத்தை எப்போதும் தியானித்தும் அதைப்பற்றின உறுதியான ஞானத்தை ப்ரஹ்மருத்ராதிகளும் அடையமாட்டாதவர்களாய் விளங்குகிறார்களோ, அப்பரவஸ்துவை நான் சரணமடைந்திருக்கிறேன்.]

"யந்நாயம் ப$_4$க$_3$வாந் ப்$_3$ரஹ்மா ஜாநாதி பரமம் பத$_3$ம் ।
தந்நதா: ஸ்ம ஜக$_3$த்த$_4$ாம தவ ஸர்வக$_3$தாச்யுத ॥"

[வி-பு 1-9-51]

[அச்யுதனே! ஸர்வவ்யாபியே! மேலான ப்ராப்யமான எதை பகவானான பிரமனும் அறியானோ, உலகிற்கெல்லாம் இருப்பிடமான அந்த உன்னுடைய ஸ்வரூபத்தை வணங்குகிறோம்.]

"ப்ரஹ்மேந்த்$_3$ரருத்$_3$ர மருத$_2$ச்வி தி$_3$வாகராத்$_3$யா:
ஜ்ஞாதும் ந யம் பரமகு$_3$ஹ்யதமம் ஸ்மர்த்த$_2$ா:"

http://acharya.org

[ப்ரஹ்மா, இந்திரன், ருத்ரன், மருத்துக்கள், அக்னி, தேவதைகள், ஸூர்யன் முதலிய யாவரும் பிரபஞ்சம் அறியவொண்ணாதவனை எவனை அறியவல்லரல்லரோ.........]

"ந யஸ்ய ருத்3ரோ ந ச பத்3மயோநி:
நேந்த்3ரோ ந ஸூர்யேந்து3 மரீசிமுக்2யா: ।
ஜாநந்தி தைத்3யாதி4பதே ஸ்வரூபம்
ஸ வாஸுதேவ3: கலயாऽவதீர்ண:"

[எவனுடைய ஸ்வரூபத்தை ருத்ரனும், நான்முகனும், இந்திரனும், ஸூர்யன், சந்திரன், மரீசி முதலானவர்களும் அறியமாட்டார்களோ, அந்த வாஸுதேவன் அம்சத்தினால் அவதரித்துள்ளான்.] என்று ராமாயண மஹாபாரத விஷ்ணுபுராண விஷ்ணு தர்மாதி ஸச்சாஸ்த்ரங்களிலுள்ள பல பல ப்ரமாணங்கள் அறுதியிட்டன.

"கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணன்
அடிக்கமலந்தன்னை அயன்" என்றும்
"ஆதியான காலநின்னை யாவர்காண வல்லரே" என்றும்

ஆழ்வார்கள் அருளிச்செய்ததும் அறியத்தக்கது. ஆக, 'க:' என்னும் சப்தத்தினால் இங்கு சொல்லப்படுமவன் அறியவொண்ணாத ஸ்வரூப ரூபகுணவிபூதிகளையுடைய அநந்தனே என்று நிரூபிக்கப்பட்டதாயிற்று. மேலும், பாத்மபுராணத்தில்

"கஸ்மை தே3வாய ப4வதே விதே4ம ஹவிஷா வயம்"

[அறியவொண்ணாதவனாகையால், 'க:' எனப்படும் தேவனாகிய உனக்கு நாங்கள் ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கிறோம்] என்று இவ்வாக்யம் பகவத்பரமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டது. பட்டபாஸ்கரர் முதலானோரும் 'கஸ்மை தே3வாய' என்பதற்கு 'ஸர்வப்ரதா4நாய அவிஜ்ஞாதபாரமார்த்2யாய" [எல்லாருக்கும் தலைவனும், தன்னைப்பற்றின உண்மையை எவரும் அறியவொண்ணாதபடியிருப்பவனுமான பகவானுக்கு.] என்று யௌகிகமாகவே பொருள்கொண்டனர்.

"ய ஆத்மதா3 ப3லதா3 யஸ்ய விஶ்வ
உபாஸதே ப்ரஶிஷம் யஸ்ய தே3வா: ।
யஸ்ய சா2யாம்ருதம் யஸ்ய ம்ருத்யு:
கஸ்மை தே3வாய ஹவிஷா விதே4ம ॥"

http://acharya.org

[எவனொருவன் தன் பக்தர்களுக்குத் தன்னையும் கொடுத்துத் தன்னை அனுபவிக்கத்தருந்த பலத்தையும் அளிக்கிருனே, எவனுடைய அருளை அனைவரும் விரும்புகிறார்களோ, தேவர்களும் எவனுக்கு தாஸபூதர்களோ, எவனுடைய நிழலில் ஒதுங்குகையே மோக்ஷ ஸாதகமாகிறதோ, யமனும் (ஸம்ஸாரமும்) எவனுக்கு வசப்பட்டவனே, அறியவொண்ணாத பெருமையையுடைய அந்த தேவனுக்கு ஹவிஸ்ஸை அளிக்கிறோம்.] என்பது இந்த எட்டு ரிக்குகளுக்குள் மற்றொரு மந்திரம். இம்மந்திரத்தை ந்ருஸிம்ஹதாபநீயோபனிஷத் ந்ருஸிம்ஹவிஷயமாகப் படித்ததிலிருந்து இது பகவத்ப்ரதிபாதகமே என்பது ஸ்பஷ்டமாகிறது.

"யஸ்ய தேவா: ப்ரசிஷம் உபாஸதே" என்று கூட்டி, "எவனுடைய அருளை தேவதைகள் உபாஸிக்கிறார்களோ" என்றும் பொருள் கொள்ளலாம்; "யஸ்ய சாயாம்ருதம் யஸ்ய ம்ருத்யு: (சாயா)" என்றும் கூட்டி "எவனுக்கு மோக்ஷமும், ஸம்ஸாரமும் நிழல்போல் (வசப்பட்டு) இருக்கின்றனவோ" என்றும் பொருள் கொள்ளலாம். 'அம்ருதம்' என்று ஜீவனையும், 'ம்ருத்யு:' என்று ப்ரக்ருதியையும் சொல்லுவதாகக்கொண்டு, "எவனுக்குச் சேதநாசேதநங்கள் நிழல்போல் (பிரியாதனவாய்) விளங்குகின்றனவோ" என்றும் பொருள் கொள்ளலாம். இப்பொருள்கள், இந்த ச்ருதிவாக்யத்தை உபப்ரும்ஹணம் செய்த பாத்மபுராணத்தில் ஆதரிக்கப்பட்டவை.

"ய ஆத்மதா பலதா:" என்னும் இவ்வாக்யத்தின் அர்த்தத்தை, "தேட்டரும் திறல் தேனினை" என்று குலசேகரரும்

"வைப்பாம் மருந்தாம் அடியரை வல்வினைத்
துப்பாம் புலனைந்தும் துஞ்சக்கொடானவன்"

என்று நம்மாழ்வாரும், நாராயணனிடம் அநுஸந்தித்தனர். இப்படித் தன்னையே தமர்க்கு நல்கும் திறத்திலே ஈடுபட்டு "வசீவதாந்ய:" என்று ஆளவந்தார் அருளிச்செய்தார். "யஸ்ய சாயாம்ருதம்" என்னும் வாக்யமானது

"வாஸுதேவதருச்சாயா நாதிசீதா ந கர்மதா|
நரகாங்காரசமநீ ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே||"

http://acharya.org

[வாஸுதேவனுகிற மரநிழல், அதிகக்குளிர்ந்ததாகவும், உஷ்ணமற்றதாகவும், நரகமாகிற வெயிலைப் போக்குவதாகவும் உள்ளது. அதை ஏன் ஆச்ரயிக்கவில்லை?] என்று புராணங்களில் வாஸுதேவ விஷயமாக விவரிக்கப்பட்டது. "யஸ்ய ம்ருத்யு:" என்பதும் "ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்" [எவனுக்கு எமன் ஊறுகாயோ] என்று கடோபனிஷத்திலும்,

"ஸ்வபுருஷமபி4வீக்ஷ்ய பாச1ஹஸ்தம்
வத3தி யம: கில தஸ்ய கர்ணமூலே ।
பரிஹர மது4ஸூத3நப்ரபந்நாந்
ப்ரபு4ரஹமந்யந்ருணும் ந வைஷ்ணவாநாம் ।.......
ஹரிகு3ருவச1கோ3஽ஸ்மி ந ஸ்வதந்த்ர:
ப்ரப4வதி ஸம்யமநே மமாபி விஷ்ணு: ॥"

[யமனும் தன் தூதுவரைக் கூவிச் செவியில் சொல்லுகிறுன்:—மதுஸூதனனைச் சரணமடைந்தவர்களை அணுகாதே; நான் மற்றவர்களுக்கே ப்ரபு; வைஷ்ணவர்களுக்கல்ல;......நான் ஹரிக்கு வசப்பட்டவன்; ஸ்வதந்த்ரனல்லன்; என்னையும் நியமிக்கவல்லவன் விஷ்ணுவே] என்று விஷ்ணுபுராணத்திலும் விஷ்ணுபரமென்று விளக்கப்பட்டது. "யஸ்யேமா: ப்ரதி3சோ யஸ்ய பா3ஹூ" [எவனுக்கு இந்த திசைகள் கைகளாகின்றனவோ] என்று இங்கு படித்ததை "தி3சஸ்தே பா3ஹவஸ் ஸர்வா:" [எல்லா திக்குகளும் உன் கைகளாகின்றன] என்று மஹாபாரதத்தில் ஆரண்யபர்வத்திலுள்ள வாக்யமும் "திக் பா3ஹுஸ் த்ரிதி3வம் சிர:" என்னும் பீஷ்மவாக்யமும் பகவான் விஷயமாக அநுஸந்தித்தன.

யேந த்3யௌருக்3ரா ப்ருதி2வீ ச த்3ருடே4
யேந ஸுவ: ஸ்தபிதம் யேந நாக: ।
யோ அந்தரிக்ஷே ரஜஸோ விமாந: ।
கஸ்மை தே3வாய ஹவிஷா விதே4ம ॥

[உக்ரமான ஆகாசமும், திடமான பூமியும், ஸவர்க்கலோகமும், ப்ரஹ்மலோகமும் எவனுல் அளக்கப்பட்டதோ, எவன் ஆகாயவெளியிலுள்ள சிறு ப்ரதேசங்களையும் விடாமல் அளந்தருளினுனே, அறியவொண்ணுதவனுன அவன் பொருட்டு ஹவிஸ்ஸைக் கொடுப்போமாக] என்று இந்த அஷ்டர்ச்சத்திலுள்ள ஒரு ரிக் திரிவிக்கிரம விருத்தாந்தத்தையும் அநுஸந்தித்தது. விஷ்ணுஸூக்தத்திலுள்ள

http://acharya.org

"விஷ்ணோர் நுகம் வீர்யாணி ப்ரவோசம்
ய: பார்த்தி$_2$வாநி விமமே ரஜாம்ஸி"

[யாதொரு விஷ்ணுவானவர் பூமியிலுள்ள ரஜஸ்ஸுக்களை (புழுதிகளை) யெல்லாம் அளந்தருளினரோ, அவருடைய வீர்யங்களைச் சொல்லுகிறேன்.] என்னும் மந்திரம் இம்மந்திரத்தை விஷ்ணு பரமாக விவரித்தது. இவ்வெட்டு ரிக்குகளில் கடைசி ரிக்கிலுள்ள "யோ தே$_3$வேஷ்வதி$_4$தே$_3$வ ஏக ஆஸீத்" என்னும் வாக்யத்தை, "ஸஹஸ்ரஸ்தூ$_2$ணே விததே த்$_3$ருட$_4$ உக்$_2$ரே யத்ர தே$_3$வாநாம் அதி$_4$தே$_3$வ ஆஸ்தே" [ஆயிரக்கணக்கான கால்களை உடையதும், மிகப் பரந்ததும், திடமானதும், உக்ரமானதுமான திருமாமணிமண்டபத்தில் தேவாதிதேவன் எழுந்தருளியிருக்கிறான்.] என்னும் தலவகாரச்ருதி பரமபுருஷபரமாக விளக்கிற்று. "ஜாதே$_3$ாஸி தே$_3$வதே$_3$வேச" என்றும், "ஸோஹம் தே தே$_3$வதே$_3$வேச" என்றும் புராணங்களும், "தேவாதிதேவனை" என்றும் "மனிசர்க்குத்தேவர் போலத்தேவர்க்கும் தேவாவோ" என்றும், "அமரர் தலைவர் தலைவா" என்றும் ஆழ்வார்களும் இதை பகவத்பரமாக உபப்ரும்ஹணம் செய்தனர்.

இவ்வளவுக்கும் மேலே, பாத்மபுராணத்தில் கிரியஜ்ஞத்திற்குப் பிறகு படிக்கப்பட்ட இந்த்ரஸ்தவத்தில் இந்த எட்டு ரிக்குகளும் பகவத்பரமானவை என்பது தெளிவாகப் பின்வருமாறு விளக்கப்பட்டது.

"அக்$_3$ரே ஹிரண்யக$_3$ர்ப்ப$_4$ஸ்த்வம் பூ$_4$தஸ்ய ஸமவர்த்தத।
த்வமேவைக: பதிரஸி புருஷஸ்த்வம் ஹிரண்மய: ||
ப்ருதி$_2$வீம் த்$_3$யாமிமாம் தே$_3$வ த்வமேவ த்$_4$ருதவாந் ப்ரபே$_4$ா।
ஆத்மத$_3$ா ப$_3$லத$_3$ா யஸ்ய விச்வஸ்ய ஜக$_3$தீ$_3$ச்வர: ||
உபாஸ்யஸே த்வம் த்ரித$_3$சை: ப்ரசிஷம் ஜக$_3$தாம் பதே।
அம்ருதஞ்சைவ ம்ருத்யுச்ச தவ சா$_3$யே ஸநாதநே ||
கஸ்மை தே$_3$வாய ப$_4$வதே விதே$_4$ம ஹவிஷா வயம் ||"

[ஜகந்நாதனான ஸ்வாமியே! நீ ஹிரண்யகர்ப்பன் என்னும் பெயருள்ளவனாய், எல்லா பூதங்களுக்கும் முன்னால் விளங்கினாய்; நீ ஒருவனே ஜகத்பதியாயிருக்கிறாய். நீயே ஹிரண்மயனான புருஷன். இந்த பூமியையும், தேவலோகத்தையும் நீயே தரித்து நின்றாய். (தன்னடியார்க்குத்) தன்னையும், (தன்னை அநுபவிக்

http://acharya.org

கத்தருந்த) பலத்தையும் அளித்தாய், உலகத்திற்கெல்லாம் ஈச்வரனுமிராநின்றாய்! தேவர்களால் உன் அருளை அடையும் பொருட்டு உபாஸிக்கப்படுகிறாய். மோக்ஷமும், ஸம்ஸாரமும் உன்னுடைய பழைமையான இரண்டு நிழல்கள். அளவற்ற பெருமையையுடைய தேவனான உன் பொருட்டு நாங்கள், ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கிறோம்.] என்பவை பாத்ம புராணத்திலுள்ள ச்லோகங்கள். நாம் இங்கு எடுத்த முக்கியமான அஷ்டர்ச்ச வாக்யங்களை இந்த ச்லோகங்கள் மிகத்தெளிவாக விளக்குவதை உற்று நோக்குவது. இத்தோடன்றியில், விஷ்ணுஸ்ம்ருதியிலும் பகவானை அர்ச்சனம் செய்யும் ப்ரகரணத்தில்

"ஹிரண்யக₃ர்ப்ப₄ இத்யஷ்டாபி₄ர் ஹவிர் நிவேத₃யேத்"

[ஹிரண்யகர்ப்ப: என்று தொடங்கும் எட்டு ரிக்குகளினால் ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கக்கடவன்.] என்று சொல்லப்பட்டிருக்கையால் இம்மந்திரங்கள் விஷ்ணுபரமானவையே என்பது ஸுஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

இவ்வளவு ப்ரமாணங்கள் இருக்கச்செய்தேயும், 'ஹிரண்யகர்ப்ப:' என்னும் பதம் ப்ரஹ்மாவையே குறிக்கும் என்று பிறர் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களுடைய இஷ்டம் ஸித்தியாது; ஏனெனில்; இந்த அஷ்டர்ச்சத்திற்கு முன் படிக்கச்சொல்லி விதித்திருக்கும் 'அத்₃ப்₄ய: ஸம்பூ₄த:' என்று தொடங்கும் புருஷஸூக்த உத்தராநுவாகத்தில், "புருஷஸ்ய விச்வமாஜாநமக்₃ரே" என்றும், "வேதா₃ஹமேதம் புருஷம் மஹாந்தம்" என்றும், அதற்கும் முன்னால் "வித்₃யுத:புருஷாத₃தி₄" என்றும் மூன்று இடங்களில் பகவத₃ஸாதா₄ரணமான புருஷசப்தம் படிக்கப்பட்டிருக்கிறதாகையாலும், முதலில் பல இடங்களில் படிக்கப்பட்டிருக்கும் புருஷசப்தத்தைக்காட்டிலும் பின்னால் படிக்கப்படும் இந்த ஹிரண்யகர்ப்பசப்தம் அதிதுர்ப்பலமாகையாலும் புருஷசப்தத்திற்கு அனுகுணமாகவே இந்த சப்தத்திற்குப் பொருள்கொள்ளவேண்டும். மேலும், "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்றும், "யமந்தஸ் ஸமுத்₃ரே கவயோவயந்தி" என்றும் பகவானுக்கே உரித்தானவையான லக்ஷ்மீபதித்வம், ஸமுத்₃ரசாயித்வம் முதலான லிங்கங்களைச் (அடையாளங்களைச்) சொல்லுகையாலும், பின்னால் நாராயணனே பரப்ரஹ்மம், பரமாத்மா என்று கோஷிக்கையாலும் 'ஹிரண்யகர்ப்ப:' என்று தொடங்கும் மந்திரங்களும் நாராயணபரமே என்பது நன்கு விளங்குகிறது.

http://acharya.org

'ஹிரண்யக$_{3}$ர்ப்ப$_{4}$:' என்று தொடங்கும் ரிக்குகளுக்கு முன்னுல் படிக்கும்படி விதிக்கப்பட்டிருக்கும் புருஷஸூக்தம் உத்தராநுவாகம் பகவத் பரமானது என்பதை முன்பே விவரித்தோம். மற்றும் சில உபப்ரும்ஹண வாக்யங்களையும் இங்கு காட்டுகிறோம். உத்தராநுவாகத்தில் 'நக்ஷத்ராணி ரூபம்' என்னும் வாக்யத்தை, மார்க்கண்டேயபுராணமானது,

"நவத$_{4}$ாऽவஸ்தி$_{2}$தாந்யஸ்ய நக்ஷத்ராணி ஸமந்தத:"

[(இந்தக் கூர்மரூபியான) பகவானுக்கருகில் நக்ஷத்திரங்கள் ஒன்பது விதமாகச் சூழ்ந்து நிற்கின்றன.] என்று தொடங்கிக் கூர்மபகவான் விஷயமாக விவரித்தது. "தத் புருஷஸ்ய விச்வமாஜாநமக்$_{3}$ரே, வேத$_{3}$ாஹமேதம் புருஷம் மஹாந்தம், ப்ரஜாபதிச்சரதி க$_{3}$ர்ப்பே$_{3}$ அந்த:, ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்னும் உத்தராநுவாக வாக்யங்கள், ஸ்ரீவிஷ்ணுஸ்ம்ருதியில் "ப்ராஜாபதே! மஹாப்ரஜாபதே! லக்ஷ்மீபதே! புருஷ! மஹாபுருஷ!" என்னும் பூதேவிவசனங்களால் பரமபுருஷபரமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டன. மஹாபாரதம் மோக்ஷதர்மத்திலும்,

"ததஸ் தே விபு$_{3}$த$_{4}$ாஸ் ஸர்வே ப்$_{3}$ரஹ்மா தே ச மஹர்ஷய:|
வேத$_{3}$த்$_{3}$ருஷ்டேந விதி$_{4}$நா வைஷ்ணவம் க்ரதுமாரப$_{4}$ந்||"

[பிறகு, அந்த தேவர்கள் எல்லாரும், ப்ரஹ்மாவும், மஹர்ஷிகளும், வேதத்தில் காணப்படும் விதிப்படி விஷ்ணு ஸம்பந்தமான யாகத்தை ஆரம்பித்தனர்.] என்று தொடங்கி,

"ப்ராபுராதி$_{3}$த்யவர்ணம் தம் புருஷம் தமஸ: பரம்"

[தமஸ்ஸுக்கு மேற்பட்டவனும், ஆதித்யவர்ணனுமான அப்புருஷனை அவர்கள் அடைந்தனர்.] என்று முடிவாகும் வாக்யங்கள் உத்தராநுவாகத்தில் "புருஷம் மஹாந்தம் ஆதி$_{3}$த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" எனப்படுமவன் விஷ்ணுவே என்பதை உணர்த்தின. ஹரிவம்சத்தில் வாமநப்ராது$_{3}$ர்ப$_{4}$ாவஸமயத்தில் படிக்கப்படும் மஹாபுருஷஸ்தவத்தில் "உபநிஷத்ஸு படி$_{2}$தைர் நாமபி$_{4}$ஸ் துஷ்டாவ" [உபனிஷத்துக்களில் படிக்கப்படும் நாமங்களால் துதித்தான்.] என்று தொடங்கி, "ஆதி$_{3}$த்யவர்ண! மஹாபுருஷ!" என்னும் நாமங்களை எடுத்திருப்பதிலிருந்தும், இது உறுதியாகின்றது. "அத: பரம் நாந்யத$_{3}$ணீயஸம்" என்றும், "அணோரணீயாந்" என்றும், "புருஷம் மஹாந்தம் ஆதி$_{3}$த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்

http://acharya.org

றும் இங்கு நாராயணவல்லியில் படிக்கப்பட்ட வாக்யங்களை கீதாசார்யனும்,

> "பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்த்தாநுசிந்தயந் ||
> கவிம் புராணமநுசாஸிதாரம்
> அணோரணீயாம்ஸமநுஸ்மரேத் ய: |
> ஸர்வஸ்ய தாதாரமசிந்த்யரூபம்
> ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் ||"

[பார்த்தனே! மேலான திவ்யபுருஷனான என்னை தியானித்துக் கொண்டு என்னை அடைகிறான். ஸர்வஜ்ஞனாகவும், பழமையானவனாகவும், உலகை நியமிப்பவனாகவும், அணுவாகிற ஜீவனைக்காட்டிலும் அணுவாயிருப்பவனாகவும், எல்லாவற்றையும் தரிப்பவனாகவும், நினைக்கவரிதான உருவத்தையுடையவனாகவும், ஆதித்யவர்ணனாகவும் தமஸ்ஸுக்கு மேற்பட்டவனாகவும் விளங்கும் என்னை எவன் நினைப்பானோ......] என்று தன் விஷயமாக விவரித்தருளினார். "அஜாயமானோ பஹுதா விஜாயதே" என்னும் வாக்யமும் "அஜோபி ஸந்— ஸம்பவாமி" முதலான கீதாவாக்யங்களாலும் மற்றுமுள்ள ச்ருதிதிஹாஸ புராணவாக்யங்களாலும் மஹாபுருஷபரமாக வியாக்கியானம் செய்யப்பட்டிருப்பதை முன்பே காட்டினோம்.

"யஸ்மிந்நிதம் ஸஞ்ச விசைதி ஸர்வம், ததேவ பூதம் தது பவ்யமா இதம். யேநாவ்ருதம் கஞ்ச திவம் மஹீஞ்ச" என்னும் நாராயணவல்லி வாக்யங்கள், மஹாபாரதத்தில்

> "யஸ்மிந் ஸர்வம் யதஸ் ஸர்வம் யஸ்ஸர்வஸ் ஸர்வதச்ச ய: |
> ஸ ஏவ பூதம் பவ்யஞ்ச பவச்ச புருஷர்ஷப ||
> திவம் தே சிரஸா வ்யாப்தம் பத்ப்யாம் பூமிர் வஸுந்தரா ||"

[எவனிடம் எல்லாம் ஒடுங்குகின்றனவோ, எவனிடமிருந்து இவை வெளிவருகின்றனவோ, எவன் எல்லாமாகின்றானோ, எல்லாவற்றிலின்றும் எவன் பிரகாசிக்கிறானோ, அவனே முன்னிருந்த வஸ்துக்களாகவும், இனிவரப்போகும் பொருள்களாகவும், இப்போதிருக்கும் பதார்த்தங்களாவுமாகிறான்......... ஆகாயம் உன்னுடைய திருமுடியால் வியாபிக்கப்பட்டது. திருவடிகளால் பூமி வியாபிக்கப்பட்டது] என்று நாராயணபரமென்று நிலைநாட்டப்பட்டன. "யோநாதித்யஸ் தபதி தேஜஸா ப்ராஜஸா ச" என்னும் வாக்கியம்,

http://acharya.org

"அக்₃நிஸோமார்க்கதாராணும் ப்₃ரஹ்மருத்₃ரேந்த்₃ரயோகி₃நாம்।
யஸ்தேஜயதி தேஜாம்ஸி ஸ மே விஷ்ணு: ப்ரஸீத₃து ॥
ஜ்வலநார்க்கேந்து₃தாராணும் ஜ்யோதிஷாம் தி₃வ்யமூர்த்திநாம்।
யஸ்தேஜயதி தேஜாம்ஸி தஸ்மை தேஜாத்மநே நம: ।
தாபநீ பாவிநீ சைவ சோஷணீ ச ப்ரகாசிநீ ।
நைவ ராஜந் ரவே: சக்தி: சக்திர் நாராயணஸ்ய ஸா ॥"

[அக்னி, சந்திரன், ஸூர்யன், நக்ஷத்திரங்கள், ப்ரஹ்மா, ருத்திரன், இந்திரன், யோகிகள் ஆகிய எல்லோருடைய தேஜஸ்ஸுக்களையும் எவன் ஒருவன் உண்டுபண்ணுகிறானோ, அந்த விஷ்ணு எனக்கு அருள்வானாக. அக்நி, ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள், தேவர்கள் ஆகிய இவர்களுக்குத் தேஜஸ்ஸைக் கொடுக்கும் தேஜோரூபியான அவனுக்கு நமஸ்காரம். அரசனே! தபித்தல், பரிசுத்தப்படுத்தல், உலர்த்தல், பிரகாசிக்கச்செய்தல் முதலானவை (உண்மையில்) ஸூர்யனுடைய சக்திகளல்ல; நாராயணனுடைய சக்திகளே அவை.] என்றும்,

"ஸூர்யஸ்ய தபதோ லோகாந் அக்₃நேஸ் ஸோமஸ்ய
சாப்யயா: ।
அம்சவோ யே ப்ரகாசந்தே மம தே கேசஸம்ஜ்ஞிதா: ॥
ஸர்வஜ்ஞா: கேசவம் தஸ்மாத் மாமாஹுர் த்₃விஜஸத்தமா: ॥
ஸூர்யாசந்த்₃ரமஸோ: சச்வத₃ம்சுபி₄: கேசஸம்ஜ்ஞிதை: ।
போ₃த₄நாத் ஸ்வாபநாச்சைவ ஜக₃தோ ஹர்ஷணம் ப₄வேத் ॥
அக்₃நீஷோமக₃தைரேவம் கர்மபி₄: பாண்டு₃நந்த₃ந ।
ஹ்ருஷீகேசோஹமீசாநோ வரதோ₃ லோகபா₄வந: ॥"

[உலகங்களைத் தபிக்கும்படியான ஸூர்யனுடையவும் அக்நியினுடையவும், சந்திரனுடையவும் பிரகாசிக்கும்படியான கிரணங்கள் என்னுடைய கேசங்கள் எனப்படுகின்றன. ஆகையால் ஸர்வஜ்ஞர்கள் என்னைக் கேசவன் என்கிறார்கள் 'கேசங்கள்' எனப்படும் ஸூர்யசந்த்ர கிரணங்களால் என்றும் விழிக்கச் செய்வதாலும், தூங்கச்செய்வதாலும் ஜகத்துக்கு ஹர்ஷம் (ஆநந்தம்) உண்டாகிறது. பாண்டவ! அக்நி, ஸோமன் முதலானவர்களால் செய்யப்படும் இக்காரியங்களால், ஈச்வரனும், வரதனும், லோகஸ்ரஷ்டாவானவனுமான நான் ஹ்ருஷீகேசனெனப்படுகிறேன்.] என்றும், "யதா₃தி₃த்யக₃தம் தேஜ:.........தத் தேஜோ வித்₃தி₄மாமகம்"

[ஆதித்யனிடமுள்ள தேஜஸ்ஸை என்னுடையதென்று அறி] என்றும், "ப்ரபா₄ஸ்மி சசி ஸூர்யயோ: [ஸூர்ய சந்திரர்களுடைய ஒளியும், என்னுடையவையே.] என்றும் கேசவ விஷயமென்று காட்டப்பட்டது.

" அத: பரம் நாந்யத₃ணீயஸம் ஹி
பராத்பரம் யந் மஹதோ மஹாந்தம் ।
யதே₃கமவ்யக்தமநந்தரூபம்
விஶ்வம் புராணம் தமஸ: பரஸ்தாத் ॥"

[இதைக்காட்டிலும் அணுவானது வேறொன்றில்லை; மேலானவர்களைக்காட்டிலும் மேலானதாகவும், மஹத்தைக்காட்டிலும் மஹானாகவும், ஒப்பற்றதாகவும், அவ்யக்தமாகவும், அளவற்ற உருவங்களை உடையதாகவும், தமஸ்ஸுக்கு மேற்பட்டதாகவுமுள்ளது.] என்னும் மந்திரத்தை,

"மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித₃ஸ்தி த₄நஞ்ஜய"
[அர்ஜுநா! என்னைக்காட்டிலும் மேலானதொன்றில்லை.]
என்றும்,

" ந பரம் புண்ட₃ரீகாக்ஷாத் வித்₃யதே புருஷர்ஷப₄ ।
பரம் ஹி பரமாத் தஸ்மாத் விச்வரூபாந்ந வித்₃யதே ॥"

[புருஷச்ரேஷ்ட! புண்டரீகாக்ஷனைத் தவிர பரவஸ்து வேறொன்றில்லை;........விச்வசரீரனும், மேலானவனுமான இவனைக்காட்டிலும் மேலானதில்லை.] என்றும்,

"வ்யக்தமேஷ மஹாயோகீ₃ பரமாத்மா ஸநாதந: ।
அநாதி₃மத்₄யநித₄நோ மஹத: பரமோ மஹாந் ॥
தமஸ: பரமோ தா₄தா ஶங்க₂சக்ரக₃தா₃த₄ர: ॥"

[இந்த ராமபிரான், மஹாயோகியும், பழைமையானவனும், ஆதிமத்யாந்தமற்றவனும், மஹத்தைக்காட்டிலும் மேலான மஹானாயுள்ளவனுமான பரமாத்மாவே. தமஸ்ஸுக்கு மேற்பட்டவனும், ஸர்வதாரகனும், சங்கசக்ரகதாதரனும் இவனே.] என்றும்,

"மஹதஸ் தமஸ: பாரே புருஷம் ஹ்யதிதேஜஸம் ।
யம் ஜ்ஞாத்வா ம்ருத்யுமத்யேதி தஸ்மை
ஜ்ஞேயாத்மநே நம: ॥"

http://acharya.org

[மஹானுக்கும், தமஸ்ஸுக்கும் அக்கரையிலுள்ளவனும், மிகவதிக மான தேஜஸ்ஸை உடையவனுமான எவனை அறிந்தால் ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறானோ, அப்படிப்பட்ட ஜ்ஞேயாத்மாவான (அறியப்படும் ஆத்மாவான) அவனுக்கு நமஸ்காரம்] என்றும் மஹாபாரத ஸ்ரீ ராமாயண வாக்யங்கள் வாஸுதேவ பரமாக விவரித்தன.

"ததே₃வர்த்தம் தது₃ ஸத்யமாஹுஸ் ததே₃வ ப்₃ரஹ்ம பரமம் கவீநாம்"

[அதையே ருதம் என்றும், ஸத்யம் என்றும் சொல்லுகிறார்கள். அதுவே ஞானிகளால் சொல்லப்படும் பரப்ரஹ்மம்.] என்னும் நாராயணவல்லி வாக்யத்தை

"ப₄க₃வாந் வாஸுதே₃வஶ்ச கீர்த்யதேऽத்ர ஸநாதந: |
ஸ ஹி ஸத்யம் ருதம் சைவ பவித்ரம் புண்யமேவ ச ||
சாச்வதம் ப்₃ரஹ்ம பரமம் த்₄ருவம் ஜ்யோதிஸ் ஸநாதநம்||"

[பகவான் வாஸுதேவனே ஸநாதனனென்று இங்கு சொல்லப்படுகிறான். அவனே ஸத்யமாகவும், ருதமாகவும், பவித்ரமாகவும், புண்ணியமாகவும், சாச்வதமாகவும், பரப்ரஹ்மமாகவும், நிலையான சோதியாகவும், பழமையானவனாகவும் இருப்பவன்.] என்னும் வசநம் பத்மநாபன் விஷயத்தில் படித்தது. "ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்₃யுத: புருஷாத₃தி₄" என்னும் வாக்கியத்தை

"தஸ்ய ஸம்ஸ்மயத: ஶௌரேர் வித்₃யுத்₃ரூபாந் மஹாத்மந: |
யுக₃பச்ச விநிஷ்பேது: ஸாக்ஷாத் ஸர்வாஸ்து தே₃வதா: ||
ஏதத் புருஷஸம்ஜ்ஞம் வை புராணம் ரூபமுத்தமம் ||"

[புன்சிரிப்புடன் கூடியவனும், மின்னல்போன்ற உருவையுடையவனும், மஹாத்மாவுமான பகவானிடமிருந்து எல்லா தேவதைகளும் ஒரே சமயத்தில் தோன்றினர். இதுவே 'புருஷன்' என்னும் பெயரையுடையதும், பழமையானதும், மேலானதுமான உருவம்.] என்றும்,

"ந ஸந்த்₃ருஶே திஷ்ட₂தி ரூபமஸ்ய
ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் |
ஹ்ருதா₃ மநீஷா மநஸாऽபி₄க்லுப்தோ
ய ஏநம் விது₃ரம்ருதாஸ் தே ப₄வந்தி || "

என்னும் மந்திரத்தை,

http://acharya.org

"ந ஸந்த்₃ருசே₂ திஷ்ட₂தி ரூபமஸ்ய
ந சக்ஷுஷா பச்₂யதி கச்₂சனைநம் ।
த்₄ருத்யா ச ப₄க்த்யா ச ஸமாஹிதாத்மா
ஜ்ஞாநஸ்வரூபம் பரிபச்₂யதீஹ ॥"

[இவனுடைய உருவம் ஊனக்கண்களால் காணும்படி நில்லாது. ஒருவனும், இவனைக் கண்ணால் காணமாட்டான். த்₄ருதியாலும், பக்தியினாலும் நிறைந்த மனத்தையுடையவனாய் ஞானஸ்வரூபனான பகவானை இங்கேயே காண்கிறான்.] என்றும் மஹாபாரதம் மாதவபரமாக கோஷித்தது. "ந ஸந்த்₃ருசே" என்று தொடங்கும் இந்த மஹாபாரத ச்லோகத்தை ச்ருதப்ரகாசிகாசாரியரும் ஸர்வத்ர ப்ரஸித்த்யதிகரணத்தில் எடுத்தருளினார். ஆக, இவ்வுபப்ருஹ்மண வாக்யங்களால், "அத்₃ப்₄யஸ் ஸம்பூ₄தோ ஹிரண்யகர்ப்ப, இத்யஷ்டௌ" என்னும் வாக்யத்திற்கு முன்புள்ள மந்திரங்கள் மஹாபுருஷனையே காட்டுபவை என்று நிரூபிக்கப்பட்டதாயிற்று. இதற்குப் பிறகு படிக்கப்படும் மந்திரங்களும் பகவத்பரமானவையே என்பதை இனி உரைத்துவோம்.

"விச்வதச்சக்ஷுருத விச்வதோமுகோ₂
விச்வதோ ஹஸ்த உத விச்வதஸ்பாத் ।
....
த்₃யாவாப்ருதி₂வீ ஜநயந் தே₃வ ஏக: ॥"

[இவன் எங்கும் கண்களையும், முகங்களையும், கைகளையும், கால்களையும் உடையவன்.........பூமியையும் ஆகாயத்தையும் படைத்த ஒரே தேவன் இவனே.] என்பது அடுத்தபடியாக இங்கு கோஷிக்கப்படும் மந்திரங்களில் ஒன்று. இது புருஷஸூக்தத்தின் ஆதியில்

"ஸஹஸ்ரசீ₂ர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்"

என்றும், ஸுபாலோபனிஷத்தில் "தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:" என்றும் உத்கோஷிக்கப்பட்ட புருஷோத்தமனான நாராயணனையே குறிக்கிறது என்பது தெளிவாக விளங்குகிறது.

"விச்வமூர்த்த₄ா விச்வபு₄ஜ: விச்வபாத₃ாக்ஷிநாஸிக: ।
ஏகச்சரதி பூ₄தேஷு ஸ்வைரசாரீ யதா₂ஸுக₂ம் ॥"

[எங்கும் தலைகளையும், கைகளையும், கால், கண், மூக்குகளையும் உடைய அந்த பகவான் ஒருவனே இஷ்டப்படி எல்லா பூதங்

http://acharya.org

பக்ஷிரூம் ஸஞ்சரிக்கிறான்.] என்று மஹாபாரதமும் இம்மந்திரத்தை, நாராயண விஷயமென்று விளக்கிக்காட்டிற்று. "யத்ர விச்வம் ப₄வத்யேகநீட₃ம்" [எந்த பகவானுகிற ஒரே கூட்டில் அடைக்கப்பட்ட பக்ஷி போல் உலக முழுவதும் விளங்குகிறதோ.........] என்று அடுத்தபடியாகப்படிக்கப்பட்ட வாக்யம்

"யமாஹுர் ஜகத: கோசம் யஸ்மிம்ச்ச நிஹிதா:ப்ரஜா: |
யஸ்மிந் லோகா: ஸ்பு₂ரந்த்யேதே ஜாலே சகுநயோ யதா₂||"

[எவனை உலகத்திற்கு இருப்பிடமாகச் சுருதிகள் சொல்லுகின்றனவோ, எவனிடம் எல்லா ஜீவர்களும் வைக்கப்பட்டு விளங்குகின்றனரோ, கூட்டில் அடைக்கப்பட்ட பக்ஷிகள் போல், எல்லாவுலகங்களும் எவனிடம் காணப்படுகின்றனவோ.........] என்று மஹாபாரதத்தில் மஹாபுருஷவிஷயமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டது.

"ஸத₃ஸஸ்பதிமத்₃பு₄தம் ப்ரியமிந்த்₃ரஸ்ய காம்யம் |
ஸநிம் மேதா₄மயாஸிஷம் ||"

[நித்யஸூரிகளின் சபைக்குத்தலைவனும், இந்த்ரசப்தத்தினுல் உபலக்ஷிக்கப்படும் ஞானிக்கு மிகவும் பிரியனுயிருப்பவனும், இஷ்டஸாதனமாயிருப்பவனும், பஜனம் செய்யத்தகுந்தவனுமான அந்த பகவானை மேதாசப்தத்தினுல் சொல்லப்படும் பக்தியைப் பெறும் பொருட்டு சரணமடைகிறேன்.] எனனும் மந்திரமானது,

"அஹமக்₃நிர் ஹவ்யவஹ: ஸதஸஸ்பதிரத்₃பு₄த:"

[ஹவ்யங்களைக் கொண்டு செல்லும் அக்னியும் நானே; நித்யஸூரி ஸதஸ்ஸுக்குப் பதியாயும், அத்புதனுயுமுள்ளவன் நானே.] என்று ஹரிவம்சத்தில் பௌஷ்கரப்ராதுர்ப்பாவஸமயத்திலும்,

"ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்த₂மஹம்"

[நான் ஞானிக்கு மிகவும் பிரியன்.] என்றும்,

"தமேவ சாத்₃யம் புருஷம் ப்ரபத்₃யேத்"

[அந்த ஆதிபுருஷனையே சரணமடையக்கடவன்] என்றும்,

"தமேவ சரணம் க₃ச்ச₂ ஸர்வபா₄வேந பா₄ரத"

[அர்ஜுனு! அந்தப் பரமபுருஷனையே ஸர்வவிதத்திலும் சரணமடைவாயாக.] என்றும் கீதையிலும் பகவானுலேயே ஸ்வவிஷயமாக விளக்கப்பட்டது.

http://acharya.org

"மா நோ ஹிம்ஸீர் ஜாதவேதோ3 கா3மச்வம் புருஷம் ஜக3த் ।
அபி3ப்4ரதக்3ந ஆக3ஹி ஸ்ரியா மா பரிபாதய ॥"

[ஜாதவேதஸ்ஸே! அக்னியே! (உன்னை ஆராதிக்க உபகரணமான) எங்களுடைய பசுக்கள், குதிரைகள், புருஷர்கள், உடைமைகள் ஆகியவைகளை ஹிம்ஸிக்காதீர். (ஹிம்ஸிக்கும் ரூபத்தை) தரிக்காமல் இங்கு வருவீராக; எனக்கு ஸ்ரீதேவியின் கடாக்ஷத்தை அளிப்பீராக.] என்றும் மந்திரம் அடுத்தபடியாகப் படிக்கப்பட்டது. இது "லக்ஷ்மீம் ஜாதவேதோ3 ம ஆவஹ" [ஜாதவேதஸ்ஸே! லக்ஷ்மி கடாக்ஷத்தை எனக்களிப்பீராக.] என்றும்,

"தாம் ம ஆவஹ ஜாதவேதோ3 லக்ஷ்மீமநபகா3மிநீம் ।
யஸ்யாம் ஹிரண்யம் விந்தே3யம் கா3மச்வம் புருஷாநஹம் ॥"

[ஜாதவேதஸ்ஸே! அழிவற்ற அந்த லக்ஷ்மியை எனக்கு அளிப்பீராக. அவளுடைய அருளாலே நான் பசு குதிரை புருஷர்கள் முதலானவற்றை அடைவேன்.] என்றும் ஸ்ரீஸூக்தத்தில் படிக்கப்பட்ட ஜாதவேதாவான ஸ்ரிய:பதியையே குறிக்கிறதென்பது தெளிவாகிறது. 'ஜாதவேத3:' என்னும் சப்தம் அக்னியையே ப்ரஸித்தமாகக் குறிப்பதாயினும், ஸ்ரீஸூக்தமந்திரங்களை அடியொற்றிப் படித்திருப்பதனால் இங்கு பகவானையே குறிக்கின்றது. "ஜாதா: வேதா3: யஸ்மாத் ஸ:" [எவனிடமிருந்து வேதங்கள் உண்டாயினவோ அவன்.] என்றும் "ஜாதாநி வேத்தீதி ஜாத வேதா3:" [(தன்னிடமிருந்து) உண்டானவற்றைத் தானே அறிகிறுனகையால் ஜாதவேதஸ்.] என்றும் மற்றும் பலவிதமாகவும் ஜாதவேதச்சப்தத்திற்குப் பரமாத்மபரமாகப் பொருள் கொள்ளலாம். "யோ ப்3ரஹ்மாணம் வித3தா4தி பூர்வம் யோ வை வேதா3ம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" [எவனொருவன் பிரமனை முதலில் படைத்து வேதங்களை அவனுக்கு அருளினனோ..........] "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" முதலான வேதவாக்யங்கள் இவ்வர்த்தங்கள் வாஸுதேவனையே குறிப்பவை என்று காட்டின. "ஜாதவேத3ஸே ஸுநவாம ஸோமம்" என்று பரமாத்ம ஸூக்தத்திலும் பரமாத்ம விஷயமாகப் படிக்கப்பட்டது இந்த சப்தம்.

அடுத்தபடியாக, "புருஷஸ்ய வித்3மஹே ஸஹஸ்ராக்ஷஸ்ய மஹா தே3வஸ்ய தீ4மஹி । தந்நோ ருத்3ர: ப்ரசோத3யாத் ॥" [புருஷனை உபாஸிக்கிறோம். (அதற்காக) ஸஹஸ்ராக்ஷனுகிற (ஸர்வஜ்ஞனுகிய) மஹாதேவனை தியானிக்கிறோம்; அந்த உபாஸனத்தை ருத்ரன்

http://acharya.org

விருத்திசெய்யட்டும்.] என்று தொடங்கி, ருத்ரன், தந்தி (விநாயகன்), கருடன், துர்க்கை ஆகிய தேவதைகளின் காயத்ரிகளைப் படித்து "நாராயணாய வித்மஹே! வாஸுதேவாய தீமஹி! தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்!!" என்னும் விஷ்ணு காயத்ரியுடன் தலைக்கட்டிற்று. இங்கு ஒவ்வொரு மந்திரத்திலும் 'தத்புருஷாய' என்று புருஷசப்தத்தைப்படித்து, விஷ்ணுகாயத்ரியில் "நாராயணாய" என்று படித்ததால் இங்கு உபாஸிக்கப்படும் புருஷன் நாராயணனே என்பதும், அவ்வுபாஸனம் வ்ருத்தியடையும் பொருட்டு மற்ற தேவதைகள் தியானிக்கப்படுகிறார்கள் என்றும் தோற்றுகிறது. அன்றிக்கே, ஸகல சேதனருக்கும் தாய் போன்றதான வேதம், அந்தந்த தேவதைகளுடைய பக்தர்கள் அநுஸந்திப்பதற்காக அவர்களுடைய காயத்ரியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். அவர்களுடைய காயத்ரீ மந்திரங்களை இங்கு படித்திருப்பதைமட்டும் கொண்டு இவ்வுபனிஷத் அவர்களைச் சொல்லுவதென்றாவது, அவர்களுக்குப் பரத்துவம் ஸித்தித்துவிடும் என்றாவது சொல்லமுடியாதென்பது திண்ணம். கடைசியில் படிக்கப்பட்ட விஷ்ணுகாயத்ரியிலுள்ள நாராயண வாஸுதேவ விஷ்ணு சப்தங்கள் அஷ்டாக்ஷரி, த்வாதசாக்ஷரி, ஷடக்ஷரி என்னும் மந்திரங்களை உணர்த்திநிற்கின்றன என்று நம் ஆசாரியர்கள் உபதேசிப்பார்கள். இந்த விஷ்ணுகாயத்ரியே ஸகலவேதஸாரமென்றும், இதில் முதலில் உணர்த்தப்பெற்ற திருவஷ்டாக்ஷரி அதிலும் ஸாரமானதென்றும் அருளிச்செய்வார்கள். "பொருளில்லாத கடலோசையில் பக்ஷிகள் சொல் மேலாய், அதில் நாட்டு வழக்குச்சொல் மேலாய், அதில் தொண்டரைப்பாடும் சொல் மேலாய், அதில் இஷ்டதேவதைகளை ஏத்துமது மேலாய், அதில் வேதார்த்தம் சொல்லுமது மேலாய், அதில் வேதம் மேலாய், அதில் வேதாந்தம் மேலாய், அதில் நாராயணாநுவாகம்மேலாய், அதில் பகவந்மந்த்ரங்கள் மேலாய், அதில் மற்றையிரண்டும் கடலோசையோபாதியாம்படி மேலாயிருக்கும் வளங்கொள் பேரின்பமான பெரிய திருமந்த்ரம்" என்று ஆசார்யஹ்ருதயகாரர் அருளிச்செயல் ரஹஸ்யத்திலே அருளிச்செய்வர்.

அடுத்தபடியாக, பகவானுடைய ப்ரதாநமஹிஷிகளும், "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்று உத்தராநுவாகத்தில் உத்கோஷிக்கப்பட்டவர்களுமான ஸ்ரீபூமிதேவிகள் விஷயமான மந்திரங்களைப் படிக்கிறது பண்டைமறை. அதில் பொறுமை மிகுந்தவளான பூமிதேவியை முந்துற முன்னம் ஸ்துதிக்க ஆரம்பித்து

http://acharya.org

பகவானுடைய த்ரிவிக்ரமாவதாரத்தையும், வராஹாவதாரத்தையும் அநுபவிக்கிறது:

அச்வக்ராந்தே ரதக்ராந்தே விஷ்ணுக்ராந்தே வஸுந்தரா!
ஶிரஸா தாரிதா தேவி ரக்ஷஸ்வ மாம் பதே பதே ||

[குதிரைகளாலும், ரதங்களாலும், விஷ்ணுவினாலும் அளக்கப்பட்ட பூதேவியே! என்னுடைய தலையால் தரிக்கப்பட்ட நீ என்னை அடிக்கடி ரக்ஷிப்பாயாக.]

(அச்வக்ராந்தே........விஷ்ணுக்ராந்தே) பகுத்தறிவற்ற குதிரைகளோடு, அசேதனங்களான ரதங்களோடு, ஜகந்நாதனான விஷ்ணுவோடு வாசியறத் தன் தேஹத்தை அளக்கும்படி தன்னை ஆக்கி வைத்திருப்பவளே! "அச்வக்ராந்தே ரதக்ராந்தே" என்றதால் இவளுடைய பொறுமையின் பெருமை பேசப்படுகிறது. "விஷ்ணுக்ராந்தே" என்று இவள் எம்பெருமானுக்கு வல்லபையாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது. "அச்வக்ராந்தே ரதக்ராந்தே" என்று இவளுடைய ஸௌலப்யம் சொல்லப்படுகிறது. "விஷ்ணுக்ராந்தே" என்று இவளுடைய பரத்வம் ப்ரகடனம் செய்யப்படுகிறது. எம்பெருமானுடைய உத்க்ருஷ்டத்வமும் உணர்த்தப்படுகிறது. இங்கு, அச்வத்தையும், ரதத்தையும் சொன்னது ஸகலசேதனர்க்கும் உபலக்ஷணம். மாதாவானவள் ஒருபுறம் குழந்தையையும், மற்றொரு பக்கம் பதியையும் அணைத்துக்கொண்டு கிடப்பதுபோல், ஸகல ஜீவராசிகளும், ஸர்வேச்வரனும் தன் மேல் ஸஞ்சரிக்கும்படி இருப்பவளன்றோ இவள். இத்தால் இவளுடைய புருஷகாரபூர்வம் சொல்லிற்றாயிற்று. இரண்டு தலையையும் சேரவிடுகையன்றோ புருஷகாரக்ருத்யம். இது இவளாலேயே ஆகக்கூடியதென்று அறிவிக்கப்படுகிறது. (விஷ்ணுக்ராந்தே) உலகினுள்ளோர் தலையிலே தன் திருவடியை வைத்தவன் உத்க்ருஷ்டனோ? அல்லது, அவன் திருவடியாலே துகையுண்டவர்கள் உத்க்ருஷ்டரோ? இவ்விஷயத்தை அவன் திருவடியைத்தாங்கிய தேவியாகிய நீரே உரைக்கவேண்டும் என்கிறபடி. (வஸுந்தரா) தன்னுள்ளிருக்கும் பாலினாலே பாலனைப் போஷிக்கும் மாதாவைப்போலே, தனதான்யங்களைத் தன்னுள் தரித்து எங்களைப் போஷிப்பவளன்றோ நீ. (சிரஸா தாரிதா தேவி) எம்பெருமானுடைய திருவடிஸ்பர்சத்தாலே 'வாமனன் மண்' என்னும் கீர்த்தியையுடைய நீ என் தலையாலே தரிக்கப்பட்டாய். (ரக்ஷஸ்வ மாம் பதே பதே) இப்படி என் தலையாலே தரிக்கப்பட்ட நீ என்னுடைய புத்தியானது பாபவழியில் செல்லாதபடியும்,

http://acharya.org

நான் தவறிச் சென்றாலும், எம்பெருமானுக்கு ஆகாதும் சீற்றம் விளையாதபடியும் செய்து என்னை எப்போதும் காப்பாற்றவேண்டும். த்ரிவிக்ரமாவதாரத்தில் உன்னைத் திருவடிகளால் நடவிக்கொடுத்த அளவேயோ? (உத்த்ருதாஸி வராஹேண) வராஹாவதாரத்திலும் உனக்கு ஓர் ஆபத்துவந்தபோது உனக்குக் கைகொடுத்தவன் அவனேயன்றோ. (வராஹேண) உனக்காக அவன் மாகடலில் நீர்வாரா மானமிலாப்பன்றியாயன்றோ பிறந்தது. "பன்றியாம் தேசு" என்றும், "கோலவராகமொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்!" என்றும் இவ்வவதாரமேயன்றோ எம்பெருமானுக்குத் தேஜஸ்ஸைக்கொடுத்தது. (வாரஹேண க்ருஷ்ணேந) ஆச்ரிதை யான பூதேவியின் காரியத்தைச்செய்து முடித்ததாக நினைத்திருக்கை யன்றிக்கே, தன் காரியத்தைச் செய்து முடித்தானாக நினைத்து ஆநந்தித்தவனை. (க்ருஷ்ணேந) ஆநந்தஸ்வரூபியாயிருந்தவனை.

"க்ருஷிர்பூ$_4$வாசக: ஶப்$_3$த$_3$: ணச்ச நிர்வ்ருதிவாசக:।
விஷ்ணுஸ் தத்$_3$ப$_4$ாவயோக$_3$ாச்ச க்ருஷ்ண இத்யபி$_4$தீ$_4$யதே॥"

['க்ருஷி' என்பது பூமியைச் சொல்லுவது; "ண:" என்பது ஆநந்தத்தைக் குறிப்பது. விஷ்ணுவானவர், ஆநந்த பூமியாயிருப்பதாலும், பூமிக்கு ஆநந்தத்தை அளிப்பவராயிருந்தபடியாலும் க்ருஷ்ணன் எனப்படுகிறார்] என்ற நிர்வசனம் இவ்விடத்தில் அநுஸந்திக்கத்தக்கது. பிறர்காரியத்தைத் தன் காரியமாக நினைத்துச் செய்து ஆநந்திக்கை என்னும் மஹாகுணம் மஹாபுருஷனுக்கேயுள்ளதொன்று என்பதை

"க்ருதக்ருத்யஸ் ததா$_3$ ராமோ விஜ்வர: ப்ரமுமோத$_3$ ஹ"

[(லங்கையில் விபீஷணனுக்கு அபிஷேகம் செய்தபிறகு) ஸ்ரீராமபிரான், தன் காரியத்தைச் செய்து முடித்தவராய், கலக்கமற்றவராய், ஆநந்தித்தார்.] என்று வால்மீகிமஹர்ஷி வெளியிட்டருளினார். (க்ருஷ்ணேந) எம்பெருமான் ச்வேதவராஹரூபியாகவே இருந்து பூமியை ஜலத்திலிருந்து எடுத்தார் என்று சொல்லப்படுவதால், இங்கு 'கருநிறத்தையுடைய' என்னும் பொருள் பொருந்தாது. ஆகவே மு ற் கூ றி ய வா றே பொருள்கொள்ளவேண்டும். (ஶதபாஹுநா) நூற்றுக்கணக்கான கைகளையுடைய பெருமானாலே. பிராட்டியைப் பெற்ற ப்ரீத்யதிசயத்தாலே, அவளை அணைத்துக்கொள்ளும் கைகள் ஒன்று பத்து நூறாயிரமாகப் பெருகினபடி. "தடம்பெரும் தோளாரத் தழுவும் பாரென்னும் ம ட ந் தை யை மால் செய்கின்ற மால் ஆர்

http://acharya.org

காண்பாரே" என்றான்றே வேதம் தமிழ் செய்த மாறன். "ப்ரஹர்ஷயந்தம் மஹிஷீம் மஹாபுஜம்" என்று ஆளவந்தாரும் பிராட்டியை அணைக்கும்போது பகவான் மஹாபுஜனுவான் என்று அருளினாரன்றே. "சதபாஹூந" என்பதற்கு "பெரிய ப்ரயத்னத்தைச் செய்து" என்றும் பாஷ்யமுரைப்பர். இங்கு பிராட்டியிடமுள்ள பேரன்பாலே பகவான் செய்த இரண்டு செயல்களைச் சொன்னது

"இடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்ப்புக்கு
இடந்திடும் தன்னுள் கரக்கும் உமிழும்
தடம்பெரும் தோளாரத்தழுவும்" என்றும்.

"படைத்திடந்து உண்டுமிழ்ந்(து) அளந்து
தேர்ந்துலகளிக்கும் முதற்பெரும் கடவுள்" என்றும்.

ஆழ்வாரால் அருளிச்செய்யப்பட்ட எல்லாச் செயல்களுக்கும் உபலக்ஷணம்.

"கஸ்யோத3ரே ஹரவிரிஞ்சிமுக2: ப்ரபஞ்ச:
கோ ரக்ஷதீமமஜநிஷ்ட ச கஸ்ய நாபே4: |
க்ராந்த்வா நிகீ3ர்ய புநருத்3கி3ரதி த்வத3ந்ய:
க: கேந வைஷ பரவாநிதி ஶக்யஶங்க: ||"

[பிரமன் சிவன் முதலிய எல்லாருமடங்கிய உலகம் எவன் திருநாபியிலிருந்து உண்டாயிற்று? உன்னைத்தவிர வேறு எவன் இதை அளந்து, (வியாபித்து), உண்டு, உமிழ்கிறன்? இதை வேறு எவனுடைய உடைமையென்று ஸந்தேஹிக்கவும் கூடும்?] என்று ஆளவந்தார் அருளியபடியே இச்செயல்கள் பரமபுருஷனே பரவஸ்துவென்பதைத் தெளிவாக தெரிப்பவையாகையால் இவற்றை அருமறை அத்யாதரத்துடன் அறிவிக்கிறது. இந்த மந்திரம் ஊர்த்வபுண்ட்ரதாரணத்தின்போது உச்சரிக்கப்படவேண்டியது. "சிரஸா தா4ரிதா தே3வி" என்றதால் ச்வேதவராஹரால் அளக்கப்பட்ட ச்வேதம்ருத்திகையைத் தலையிலே தரிக்கவேண்டும் என்பதே வேதவிதி என்று விளங்குகிறது.

பூ4மிர் தே4நுர் த4ரணீ லோகதா4ரிணீ |
ம்ருத்திகே ஹந மே பாபம் யந்மயா து3ஷ்க்ருதம் க்ருதம் |
த்வயா ஹதேந பாபேந ஜீவேம ஶரத3ச்ஶதம் |
ம்ருதிகே தே3ஹி மே புஷ்டிம் த்வயி ஸர்வம் ப்ரதிஷ்டி2தம் ||

http://acharya.org

[எப்பொருள்கட்கும் இருப்பிடமாய், எல்லாக்காமங்களையும் அளிக்கும் காமதேநுவாய், அசைவற்றிருக்கையால் தரணியென்னப்படுமவளாய், லோகத்தையெல்லாம் தரிப்பவளாயிருக்கும் பூதேவியே! என்னால் செய்யப்பட்ட கெட்ட செயல்களாலுண்டான பாபத்தைப் போக்கடிப்பாயாக. உன்னால் பாபங்கள் நீங்கப்பெற்று பல்லாண்டுகள் ஜீவிக்கக்கடவேன். பூமியே! எனக்குப் புஷ்டியை அளிப்பாயாக. உன்னிடத்திலே எல்லாவஸ்துக்களும் நிலைநிற்கின்றனவன்றோ.] என்பது அடுத்த மந்திரம். (பூமி:) "பூ₄மிர் பூ₄ம்நா" என்கிறபடியே பெருமையையுடையதாகையால் பூமியெனப்படுபவள். இங்கு பெருமையாவது, எம்பெருமானுக்கு வல்லபையாய், சேதனனுக்குப் புருஷகார பூ₄தையாயிருக்கை. "ப₄வந்தி அஸ்யாம் (ஸர்வே பதா₃ர்த்தா₂:)" [இவளிடமே எல்லாப் பொருள்களும் இருக்கின்றன] என்றும் பூமிசப்தத்துக்குப் பொருள் கொள்ளலாம். (தே₄நு:) காமதேனுவைப்போல, இச்சேதனனுக்கு இவ்வுலக இன்பங்களையும், மறுவுலக மேன்மைகளையும் அளிக்கவல்லளாயிருக்கை. (த₄ரணீ) அசைவற்று நிற்கையால் தரணியெனப்படுபவள். தன் குழந்தைகளான இந்த ஜீவர்கள் தனக்கு என்ன தீங்கு செய்தாலும், அவர்கள் மேல் வெறுப்பில்லாமல், வாத்ஸல்யத்துடன் அவர்களைத் தாங்கி நிற்பவளன்றோ இவள். (லோகதா₄ரிணீ) உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வாசி பாராமல் உலகம் முழுவதையும் தாங்கி நிற்பவள். (ம்ருத்திகே ஹந மே பாபம் யந் மயா துஷ்க்ருதம் க்ருதம்) பூதேவியே! என்னுடைய பாபத்தை நீ போக்கடிப்பாயாக; என்னால் செய்யப்பட்ட துஷ்டகர்மங்களைத் துடைத்தருளுவாயாக. இவனுடைய பாபமாவது, எம்பெருமானுக்கு இவன் மேலுள்ள கோபம். அதை இவள் போக்கடிக்கையாவது:-

> **"பிதேவ த்வத்ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே**
> **ஹிதஸ்ரோதோவ்ருத்த்யா ப₄வதி ச கதா₃சித் கலுஷதீ₄: ।**
> **கிமேதந்நிர்தோ₃ஷ: க இஹ ஜக₃தீதி த்வமுசிதை:**
> **உபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத₃ஸி ந: ॥**

[தாயே! உம்முடைய வல்லபன், என்னை நல்வழிப்படுத்த எண்ணங்கொண்டு, பாபம் நிறைந்து கிடைக்கும் என் விஷயத்தில், தந்தையைப்போலே சில சமயம் தண்டனைசெய்ய எண்ணுகிறார். "இதுவென்? இவ்வுலகில் தோஷம் செய்யாதவன் எவனிருக்

http://acharya.org

கிருன்?'' என்று இம்மாதிரியான நல்வார்த்தை சொல்லுகையாகிற உசிதமான உபாயங்களால் அவனைப் பாபத்தை மறக்கச்செய்து எங்களை அவனடியாராக்குகிறீர். இதனாலேயே தேவரீர் எங்களுக்கு மாதாவாயிற்றீர்.] என்று பட்டர் அருளிச்செய்தபடியே தன்னுடைய வடிவழகாலே ஈச்வரனை ஈடுபடுத்தி இவன் செய்த பாபகர்மத்தை மறக்கச் செய்கை. (ஹந்து மே பாபம்) ''வேரி மாருத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்'' என்று நம்மாழ்வார் பெரியபிராட்டியார் விஷயத்தில் அருளிச்செய்தாப்போலே பண்டை மறை இங்கு பூமிப்பிராட்டி விஷயத்தில் பாபநிவர்த்தகத்வத்தைப் படிக்கிறது.

(த்வயா ஹதேந பாபேந ஜீவாமி சரத:சதம்) உன்னால் பாபம் நீங்கப்பெற்றவனாய், பரமபுருஷனுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டு பல்லாண்டுகள் (பரமபதத்தில்) வாழக்கடவேன். பாபநிவர்த்தனமாகிற பலத்தை அளிப்பவன் பரமாத்மாவேயாயினும், செய்விப்பாரையும் செய்பவர்களாகச் சொல்லும் கணக்கிலே இங்கு பேசுகிறது பண்டைமறை. 'சதம் சரத:' [நூறு வருஷங்கள்] என்று சொன்னது அநந்தமான வருஷங்கள் என்று பொருள்படும். 'ஸஹஸ்ரசீர்ஷா:' என்றாப்போலே. ''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு'' என்றார் பெரியாழ்வாரும். ''ஜீவாமி சரத: சதம்'' என்பதற்கு பதிலாக ''கச்சாமி பரமாம் கதிம்'' என்றும் சிலர் படிக்கிறார்கள். ப்ரஹ்மருத்ராதிகளுடைய உலகம், கைவல்ய மோக்ஷம் ஆகிய இவற்றைக்காட்டிலும் உயர்ந்ததான கதியாகிற பரமபதத்தை அடையக்கடவேன் என்று பொருள். அன்றிக்கே, ''ஸா காஷ்டா ஸா பரா கதி:'' என்றும், ''முக்தாநாம் பரமா கதி:'' என்றும் ச்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட பரமபுருஷனை அடைகிறேன் என்றும் பொருள் கொள்ளலாம். (ம்ருத்திகே தேஹி மே புஷ்டிம்) பூதேவியே எனக்குப் புஷ்டியை அளிப்பாயாக. ''ய ஆத்மதா பலதா:'' என்று தன்னையும் அளித்துத் தன்னை அநுபவிக்கத்தகுந்த பலத்தையும் கொடுக்கும் அவனைப்போலே, அவனை அளிப்பதோடன்றியில் அவனை தரித்து நின்று அநுபவிக்கத் தக்க பலத்தையும் அருளுவாயாக. (த்வயி ஸர்வம் ப்ரதிஷ்டிதம்) உன்னிடத்திலேயே எல்லாம் நிலைநிற்கின்றனவன்றோ. சேதனர்களான எங்களுக்கு ஆதாரமாயிருக்கிறாய். பரமசேதனனான அவனை உன் அழகாலே வசப்படுத்திக்கொண்டிருக்கிறாய். ஆகையாலே உன்னிடமே எல்லாம் நிலைநிற்கின்றது என்னக்குறையில்லையன்றோ. ஆகையாலே நீயே புருஷகார பூதையாயிருந்து எங்களுக்கு இஷ்ட ப்ராப்தியையும், அநிஷ்ட நிவ்ருத்தியையும் அளித்தருளவேண்டும்.

http://acharya.org

இப்படி பூதேவியைப் பிரார்த்தித்த பிறகு அவளுக்கும் தலைவியாய், புருஷோத்தமனுக்கு ப்ரதானமஹிஷியாயிருக்கும் ஸ்ரீதேவியைத் துதிக்கிறது அடுத்த மந்திரம்.

க3ந்த4த்3வாராம் து3ராத4ர்ஷாம் நித்யபுஷ்டாம் கரீஷிணீம் ।
ஈச்வரீம் ஸர்வபூ4தாநாம் தாமிஹோபஹ்வயே ஸ்ரியம் ॥

[புண்யகர்மத்தினாலேற்படும் கீர்த்தியாகிற கந்தத்தை அடைவிப்பவளும், ப்ரதிகூலர்களால் அடையவொண்ணாதவளும், எப்போதும் ஸம்ருத்தியுடையவளும், ம்ருத்தில் ஸாந்நித்யத்தை அடைந்திருப்பவளுமான ஸ்ரீதேவியாகிய உன்னை அருகில் வரும்படி அழைக்கிறேன்]

இம்மந்திரம் ஸ்ரீஸூக்தத்திலும் படிக்கப்படுகிறது. ஊர்த்வபுண்ட்ரதாரணத்தின்போது இதுவும் அநுஸந்திக்கப்படவேண்டியது. (கந்தத்வாராம்) "யதா2 வ்ருக்ஷஸ்ய ஸம்புஷ்பிதஸ்ய தூ3ராத்3 க3ந்தோ4 வாதி ஏவம் புண்யஸ்ய கர்மணோ தூ3ராத்3 க3ந்தோ4 வாதி" [எப்படிப் பூத்துநிற்கும் மரத்தினுடைய வாஸனை வெகுதூரம் வரையில் வீசுமோ, அப்படியே புண்ணியகர்மத்தினுடைய கந்தமாகிற கீர்த்தியும் வெகுதூரம் வரையில் வீசும்.] எனப்படும் கீர்த்திகந்தத்திற்கு உபாயமாயிருப்பவள். அன்றிக்கே இம்மந்திரமும் பூதேவியையே குறிக்கின்றதென்று கொண்டு "கந்தமென்னும் குணத்தால் அறியப்படுமவள்" என்றும் பொருள்கொள்ளலாம். (து3ராத4ர்ஷாம்) "பிறர்களுக்கரிய வித்தகன்" எனப்பட்ட எம்பெருமானைப்போலே ப்ரதிகூலர்களால் அடையவும், அறியவும் ஒண்ணாதவளாயிருக்கை. (நித்யபுஷ்டாம்) எப்போதும் ரூபகுணவிபூதிகளில் ஸம்ருத்தியுடையவள். (கரீஷிணீம்) ம்ருத்திலே எழுந்தருளியிருப்பவள். (ஈச்வரீம் ஸர்வபூ4தாநாம்) நித்யர், முக்தர், பத்தர் என்னும் த்ரிவிதசேதனர்க்கும், இவர்களுக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனுக்கும் ஈச்வரியாயிருப்பவள். ஸர்வேச்வரனுக்கு இவள் ஸ்வாமினியாயிருக்கையாவதென்? என்னில்: தன் வடிவழகாலே அவனை ஈடுபடுத்தி, தன் வசப்படுத்திவைத்திருக்கையாலே அவனுக்கும் ஈச்வரியென்னக்குறையில்லை. இது பெரியவாச்சான்பிள்ளையின் திருக்குமாரரான (அழகியமணவாளப்பெருமாள்) நாயனாராச்சான்பிள்ளை சதுஃச்லோகீவியாக்கியானத்தில் நிர்வஹித்தருளியிருக்கும் ப்ரகாரம். "அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்கு நம் பிரான்" என்றாரன்றே ஆழ்வாரும். (தாம்ஸ்ரியம்) அப்படிப்பட்ட பெருமையையுடைய ஸ்ரீதேவியை. (இஹ உபஹ்வயே) இங்கு வரும்படி

http://acharya.org

அழைக்கிறேன். (ஸ்ரீயம்) எங்களுடைய கூக்குரலைச் செவியேற்கை யாலும், அதை எம்பெருமானைக்கேட்பிக்கையாலும், எங்களால் ஆச்ரயிக்கப்படுகையாலும், எம்பெருமானை ஆச்ரயித்திருக்கை யாலும், எங்களுடைய தோஷத்தைப் போக்கடிக்கையாலும், எங்க ளுடைய குணங்களை விஸ்தரிப்பிக்கையாலும் ஸ்ரீதேவி எனப்படும் பெரியபிராட்டியாரைப்புருஷகாரபூதையாக ஆச்ரயிக்கைக்காக அழைக்கிறேன்.

> ச்ருணோதி நிகி$_2$லாந் தோ$_3$ஷாந் ஸ்ரீணாதி ச கு$_3$ணைர்ஜக$_3$த் ।
> ஸ்ரீயதே சாகி$_2$லைர் நித்யம் ச்ரயதே ச பரம் பத$_3$ம் ||
> ஸ்ரயந்தீம் ஸ்ரீயமாணாஞ்ச ச்ருணதீம் ச்ருண்வதீமபி ।"

என்று ஸ்ரீசப்தத்தின் பொருள்கள் பாஞ்சராத்ரசாஸ்திரத்தில் படிக் கப்பட்டனவன்றோ. இம்மந்திரத்தில் விசாரிக்கவேண்டிய விஷயங் கள் மற்றும் பல உள. அவற்றை ஸ்ரீஸூக்தத்தை விவரிக்கும் போது விளக்குவோம்.

> "ருதஞ்ச ஸத்யஞ்சாபீ$_4$த்$_3$த$_4$ாத் தபஸோऽத்$_4$யஜாயத ।
> ததோ ராத்ரிரஜாயத ததஸ் ஸமுத்$_3$ரோ அர்ணவ: ।
> ஸமுத்$_3$ராத$_3$ர்ணவாத$_3$தி$_4$ ஸம்வத்ஸரோ அஜாயத ||"

[(ஸ்ருஷ்டிகாலத்தில்) உண்டான ஸங்கல்பத்தினால் ப்ரக்ருதியும் ஜீவனும் தோன்றினர். பிறகு, (அஜ்ஞானத்தை உண்டாக்குவதால்) ராத்ரியெனப்படும் மஹதாதி$_3$வர்க்கங்கள் உண்டாயின. அதன் பிறகு அண்டமும், ஸமுத்ரமும் உண்டாயின. அவற்றிலிருந்து ஸம்வத்ஸரன் உண்டானான்.]

நாராயணவல்லியின் முதலனுவாகத்தின் முப்பத்தேழாவது மந்திரமான இதில் பிரமனின் பிறப்பு பேசப்படுகிறது. "நன்மைப் புனல்பண்ணி நான்முகனைப் பண்ணி" முதலான ஆழ்வார் ஸ்ரீஸூக்தி கள் இந்த வேதவாக்கியத்தை விவரிப்பவை. "ஸம்வத்ஸரோ வை ப்ரஜாபதி:" என்றும், "ப்ரஜாபதிஸ் ஸம்வத்ஸரோ மஹாங் க:" என்றும் ஸம்வத்ஸரசப்தவாச்யன், ககாரத்தினால் சொல்லப்படும் ப்ரஜாபதி யாகிய பிரமனே என்று பிரமாணங்கள் பேசுகின்றன. இத்தாலும், "ஹிரண்யக$_3$ர்ப்ப$_4$ம் பச்யத ஜாயமாநம்" என்னும் பத்தாவது அநுவாக மந்திரத்தாலும், "ஸ ப்$_3$ரஹ்மா ஸ சிவ:" என்னும் பதினோராவது அநுவாகமந்திரத்தாலும், ப்ரஹ்மாவைப் பிறப்பித்து அந்தர்யாமியா யிருக்கும் அச்சுதனையே இந்த நாராயணவல்லி பரம்பொருளாகப் பேசுகிறதென்பது தெளிவாகிறது.

http://acharya.org

இனி, நாராயணவல்லியின் பத்தாவது அநுவாகமும் பரமபுருஷனையே பரமாத்மாவென்கிறதென்பதை விளக்குவோம். இப்பத்தாவது அநுவாகத்தில் ஹ்ருதயத்தின் மத்தியிலுள்ள தஹராகாசம் எனப்படும் ப்ரதேசத்தில் பரமாத்மாவை உபாஸிக்கவேண்டும் என்று விதிக்கும் தஹரவித்யை உபதேசிக்கப்படுகிறது.

“ஸஹஸ்ர சீர்ஷம் தேவம்” என்று தொடங்குவதும், நாராயண ஸூக்தம் என்று ப்ரஸித்திபெற்றதும், எல்லாப் பரவித்யைகளிலும் உபாஸிக்கப்படுபவன் நாராயணனே என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியாக விளக்குவதுமான பதிமூன்றாவது அநுவாகம் நாராயணபரம் என்பதை நாம் விரிவாக விவரித்திருக்கிறோம். அந்த அநுவாகத்தில் “பத்மகோசப்ரதீகாசம்” என்று தொடங்கி, “ஸ ப்ரஹ்மா ஸ சிவ: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம: ஸ்வராட்” என்பது வரையில், முன் அநுவாகத்தில் உபதேசிக்கப்பட்ட தஹரவித்யையிலும் உபாஸிக்கப்படுமவன் ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களை விபூதியாகவுடைய நாராயணனே என்று அறிவித்தது அருமறை. ஆகையால் இப்பத்தாவது அநுவாகமும் அநந்தனையே அறிவிக்கிறது என்பதற்கு நாம் வேறொரு ப்ரமாணம் தேடவேண்டா. ஆயினும், இவ்வநுவாகத்தில் “ஈசம்” என்றும், “விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:” என்றும், “ய: பரஸ்ஸ மஹேச்வர:” என்றும் ஈசருத்ரமஹேச்வர சப்தங்களைப் படித்திருப்பதைக்கொண்டு இது சிவபரமென்று ஸ்தாபிக்க சைவர்கள் பெருமுயற்சி செய்திருக்கிறார்கள். அவர்களுடைய யத்னம் வீணானதே என்பதை இனி விளக்குவோம்.

“அணோரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மா குஹாயாம் நிஹிதோऽஸ்ய ஜந்தோ: |
தமக்ரதும் பச்யதி வீதசோகோ
தாது: ப்ரஸாதாந் மஹிமாநமீசம் ||”

[அணுவைக்காட்டிலும் அணுவாய், மஹத்தைக்காட்டிலும் மஹானாயுள்ள பரமாத்மா இந்த ஜந்துவினுடைய ஹ்ருதயகுஹையில் எழுந்தருளியிருக்கிறான். கர்மபந்தமற்றவனும், மஹிமை பொருந்தியவனும், ஸர்வநியந்தாவுமான பரமாத்மாவை, ஸர்வஸ்ரஷ்டாவான அவனுடைய அருளாலேயே சோகம் நீங்கப்பெற்றுக் காண்கிறான்.] என்னும் முதல் மந்திரத்தில் **ஈசசப்தம்** படித்திருப்பதனால் இது சிவபரம் என்பர் சிவப்பட்டார். ‘ஈசம்’ என்பது ஈசசப்தத்தின் இரண்டாவது வேற்றுமையா, அல்லது ‘ஈட்’ சப்தத்தின் இரண்டாவது வேற்றுமையா என்பதை நிர்ணயிக்க

http://acharya.org

முடியாததாகையாலும், ஈசசப்தமாகவே கொண்டாலும், முதலில் படிக்கப்பட்ட 'நா,நா' என்னும் சப்தம் இதைக்காட்டிலும் பலமுடையதாகையாலும், அந்த நாதருசப்தம் ரூடியினால் பிரமனையாவது, “த்4யாதா—நாராயண:” என்னும் சுருதியினால் நாராயணனையாவது, குறிக்குமேயொழிய சிவனைக் குறிக்காததாகையாலும், அவர்களுடைய இஷ்டம் ஸித்திக்காது. மேலும் “அணோரணீயாம்ஸமநுஸ்மரேத்3 ய:” என்று கீதையில் இம்மந்திரத்தின் ஒரு பகுதி பகவத்பரமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டிருக்கிறதாகையால் இது புருஷோத்தமனையே ப்ரதிபாதிக்கிறதென்பது தெளிவாகிறது. மேலும், “ஆத்மா கு3ஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்தோ:” என்னும் பகுதி “ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்3ரஹ்ம யோ வேத3 நிஹிதம் கு3ஹாயாம்” “அங்கு3ஷ்ட2மாத்ர: புருஷ: மத்4ய ஆத்மநி திஷ்ட2தி” “தஸ்யா: சிகா2யா மத்4யே பரமாத்மா வ்யவஸ்தி2த:, ஸ ப்3ரஹ்மா ஸசிவஸ் ஸேந்த்3ர:......” என்னும் வேதவாக்யங்களுடன் ஏகார்த்தமாய் (ஒரே பொருளையுடையதாய்) இருக்கையால், அநந்தபுருஷசப்தங்களால் சொல்லப்படுமவனும், ப்ரஹ்மருத்ரேந்திரர்களுக்கு அந்தர்யாமியான அச்சுதனையே அறிவிக்கிறதென்று விளங்குகிறது. ஆக, இக்காரணங்களால் இம்மந்திரம் நாராயணபரமே என்று நிர்ணயிக்கப்பட்டதாயிற்று. மேலும், ஆறாவது மந்திரத்தில் “ஹம்ஸ: சுசிஷத்” என்று பகவானுடைய நாமங்களில் ஒன்றான ஹம்ஸசப்தமும் இங்கு படிக்கப்பட்டது.

“யோ தே3வாநாம் ப்ரத2மம் புரஸ்தாத்
விச்வாதி4கோ ருத்3ரோ மஹர்ஷி: ।
ஹிரண்யக3ர்ப்ப4ம் பச்யத ஜாயமாநம்
ஸ நோ தே3வ: சு2ப4யா ஸ்ம்ருத்யா ஸம்யுநக்து ॥”

[யாவனொரு ஸர்வஜ்ஞனும், ஸர்வாதிகனுமான ருத்ரன், தேவர்களுக்கு முன்புண்டானவனான ஹிரண்யகர்ப்பன் உண்டாகும்போது கடாக்ஷிக்கிறானோ அந்த தேவன் நமக்கு நல்ல நினைவை உண்டாக்கட்டும்.] என்று பத்தொன்பதாவது மந்திரத்தில் படித்திருப்பதினால் ருத்ரனே ஸர்வாதிகனென்றும், பிரமனை ஸ்ருஷ்டித்தவனென்றும் ஸாதிப்பதற்கு ஆசைகொள்வர் சிலர். இம்மாதிரியான ஸந்தேஹத்திற்கு இடம் கொடுக்கக்கூடாதென்றே சுருதியானது “விச்வாதி4கோ ருத்3ர:” என்று இங்கு சொல்லப்படுமவன் ப்ரஹ்மபுத்ரனான ருத்ரனன்று, ஸர்வகாரணனும், பிரமனுக்கும் பிதாவுமான பரவாஸுதேவனே என்று உணர்த்துகிறது. இங்கு “யோ தே3வாநாம்......” என்று படித்திருப்பதிலிருந்து இது மந்

http://acharya.org

றொரு ப்ரஸித்த வாக்யத்துக்கு அநுவாதம் என்பது தோன்று
கிறது. அந்த ப்ரஸித்த வாக்யமும் "நாராயணாத்$_3$ ப்$_1$ரஹ்மா ஜாயதே"
என்னும் நாராயணோபநிஷத்வாக்யத்தைத் தவிர வேறில்லை.
ஆகவே, இப்புரோவாதவாக்யத்தையொட்டி "யோ தேவாநாம்"
என்னும் இம்மந்திரத்திற்குப்பொருள் கொள்ளும்போது "ஸம்
ஸாருஜம் த்$_3$ராவயதி" [ஸம்ஸாரமாகிய வியாதியைப்போக்கடிக்
கிறான்.] என்னும் பொருளுக்குப் பொருந்தியவனான பத்ம
நாபனையே குறிக்கிறது இது என்று தேறிநிற்கும். இதற்குப்
புரோவாதமாக ஹிரண்யகர்ப்ப ஜனகத்வத்தை சிவனுக்குச் சொல்
லும் வாக்கியங்கள் வேதத்திலில்லை. "ருத்$_3$ரோ ப$_3$ஹுசிரா:" என்று
ஸஹஸ்ரநாமத்திலும் ருத்ரநாமம் நாராயணனுடைய நாமங்களி
லொன்றாகப் படிக்கப்பட்டது. உண்மையில் ருத்ரசிவாதிநாமங்
கள் ஆதிகாலத்தில் பகவானையே குறிப்பனவாக இருந்தன
வென்றும், நாமம் வேண்டுமென்று கேட்ட சிவனுக்குப் பிரமனால்
அளிக்கப்பட்டனவென்றும் வேதத்திலும், புராணங்களிலும் பேசப்
பட்டிருப்பதைப் பலவிடங்களிலும் காட்டியிருக்கிறோம். இப்படிப்
பொருள் கொள்ளாவிடில் "நாராயணாத்$_3$ ப்$_1$ரஹ்மா ஜாயதே। நாரா
யணாத்$_3$ ருத்$_3$ரோஜாயதே" "ப்$_1$ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்ட$_2$ாய"
"லலாடாத் க்ரோத$_4$ஜோ ருத்$_3$ர:" "த்ர்யக்ஷ: சூலபாணி: புருஷோஜாயத"
"ப்ரஜாபதிஸ் ஸம்வத்ஸர உஷஸி ரேதோஸிஞ்சத்। ஸம்வத்ஸரே
குமாரோஜாயத।.........ருத்$_3$ரோஸீதி" என்று பிரமனுக்குப் புத்திரனாக
ருத்திரனையும், நாராயணனிடமிருந்து உண்டானவனாகப் பிரமனையும்
சொன்ன பற்பல வேதவாக்யங்கள் பொய்யாகும். இவ்வாக்கியங்களை
யெல்லாம் நாம் முன்பே எடுத்து விளக்கியிருக்கிறோம். ஆகை
யால் ஸகலவேதவாக்யங்களுக்கும் சேரப் பொருள்கொள்ளும்
போது இங்கு ப்ரஹ்மாவுக்கும் உத்பாதகனாகச் சொல்லப்படும்
ருத்ரன் பரமபுருஷனே என்பது எளிதில் விளங்கும். ஆயினும்
மந்தமதிகள் இந்த ருத்ரசப்தத்தையே நினைத்து மயங்கக்கூடும்
என்றறிந்தே அருமறை, அடுத்தமந்திரத்தில்

"யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்$_3$
யஸ்மாந் நாணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கச்சித்।
வ்ருக்ஷ இவ ஸ்தப்$_3$தோ$_4$ த$_3$வி திஷ்ட$_2$த்யேகஸ்
தேநேத$_3$ம் பூர்ணம் புருஷேண ஸர்வம்॥"

[எவனைக்காட்டிலும் வேறொரு உத்க்ருஷ்டவஸ்து கிடையாதோ,
எவனைக்காட்டிலும் ஸூக்ஷ்மமாயும், பெரிதாயுமிருப்பவன் வேறில்

http://acharya.org

லேயோ, அவ்வொப்பற்ற பகவான் மஹாவ்ருக்ஷத்தைப்போல் அசைவற்றவனாய்ப் பரமபதத்தில் நிற்கிறான். அந்தப் புருஷனாலேயே இவையெல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளது.] என்று பரமபுருஷனுக்கே அஸாதாரணமான புருஷசப்தத்தைப் படித்தது. புருஷசப்தத்தைக் காட்டிலும் ருத்ரசப்தம் முதலில் படிக்கப்பட்ட காரணத்தால் அதிக பலமுள்ளதாயிற்றே எனில்: இதற்கும் முன்னால் "த$_4$ாதா: ப்ரஸாத$_3$ாத்" என்றும், "ப்ரஜாபதி: ப்ரஜயா ஸம்விதா$_3$ன:" என்றும் படிக்கப்பட்ட ப்ரஹ்மவாசகமான தா$_4$த்ருப்ரஜாபதிசப்தங்களே மிகுந்த பலமுள்ளவையாயையால் இவ்வனுவாகம் பிரமன் விஷய மானது என்று சொல்லவேண்டிவரும். 'த$_4$ாதா' 'ப்ரஜாபதி' என்னும் இரண்டு நாமங்களே ப்ரஹ்மாவைக் குறிப்பனவாக இங்கு உள்ளன; 'ஈசம்' 'ருத்$_3$ர:' 'மஹேச்வர:' என்று சிவனைக் குறிக்கும் மூன்று நாமங்கள் உள்ளனவாகையால் இது சிவபரமே எனில்: முதலனுவாகத்தில் "வித்$_3$யுத:புருஷாத$_3$தி$_4$" "புருஷாய வித்$_3$மஹே" "தத் புருஷஸ்ய விச்வமாஜாநமக்$_3$ரே" "வேதா$_3$ஹமேதம் புருஷம்" என்றும், இங்கும் "தேநேத$_3$ம் பூர்ணம் புருஷேண" என்றும், அடுத்த அநுவாகத்தில், "விச்வம் நாராயணம்.........நாராயணம் ஹரிம்...... விச்வமேவேத$_3$ம் புருஷ:.........அச்யுதம் நாராயணம்.........நாராயணபரம் ப்$_3$ரஹ்ம தத்த்வம் நாராயண: பர:। நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:। ......வ்யாப்ய நாராயண: ஸ்தி$_2$த:॥ அகந்தம்......"என்றும், பனிரண்டாம் அனுவாகத்தில் "புருஷம் க்ருஷ்ணபிங்க$_3$ளம்" என்றும், பதின்மூன்றில் "ய ஏஷோந்தராதி$_3$த்யே ஹிரண்மய: புருஷ:" என்றும், முப்பத்தாறுவது அநுவாகத்தில் "அங்கு$_3$ஷ்டமாத்ர: புருஷ:" என்றும் ஐம்பதாவது அநுவாகத்தில் "ஸ வா ஏஷ புருஷ: பஞ்சத$_4$ா" என்றும், இப்படி முதலிலும் நடுவிலும் முடிவிலும் இருபத்தைந்து இடங்களுக்குமேல் புருஷோத்தமனுடைய நாமங்களைப் படித்திருக்கையால் இந்த நாராயணவல்லி நாராயணபரமே என்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கப்பட்டதாகிறது. மேலும், "தி$_3$வி திஷ்ட$_2$த்யேக:" என்றது "தி$_3$வ்யோ தே$_3$வ ஏகோ நாராயண:" என்ற ஸுபாலோபனிஷத்வாக்யத்தையும், "தேநேத$_3$ம் பூர்ணம் புருஷேண ஸர்வம்" என்றது "புருஷ ஏவேத$_3$ம் ஸர்வம்" என்ற புருஷஸூக்தவாக்யத்தையும் நினைவூட்டுகையாலும் இம்மந்திரம் மஹாபுருஷபரமே என்று விளங்குகிறது. இம்மந்திரம் முழுவதும் முண்டகோபனிஷத்தில் படிக்கப்பட்டிருக்கையாலும், முண்டகோபனிஷத் ப்ரதிபாத்யன் பரமபுருஷனே என்று நாம் நிர்ணயித்திருக்கையாலும் இதுவும் அவனையே குறிப்பதாகிறது.

"யஸ்மாத் பரதரம் நாஸ்தி புருஷாத் பரமேஷ்டி$_2$ந: |
ந ஜ்யாயோऽஸ்தி ந சாணீயஸ் ஸ து நாராயணோ ஹரி:||
யேநேத$_3$மகி$_2$லம் பூர்ணம் புருஷேண மஹௌஜஸா |
ஸ து நாராயணோ தே$_3$வ இதீயம் வைதி$_3$கீ ஶ்ருதி: ||"

[மேலான ஸ்தானத்திலிருக்கும் எந்தப்புருஷனைக்காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லையோ, எவனைக்காட்டிலும் பெரியதும், ஸூக்ஷ்மமானதும் வேறில்லையோ அவனே ஹரியெனப்படும் நாராயணன். மஹாபலத்தையுடைய எந்தப்புருஷனால் இவையெல்லாம் வியாபிக்கப்பட்டு விளங்குகிறதோ அவனே நாராயணனெனப் படும் தேவன் என்று வேதத்திலே ஓதப்படுகிறது.] என்ற பார்க்கவ புராண வசனமும் இந்த மந்திரம் பகவான் நாராயணனையே ப்ரதி பாதிப்பது என்பதை நிர்ணயித்துத்தருகிறது.

யத்$_3$வேதா$_3$தௌ$_3$ ஸ்வர: ப்ரோக்தோ வேதா$_3$ந்தே ச ப்ரதிஷ்டி$_2$த:|
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பரஸ் ஸ மஹேச்வர: ||

[யாதொரு ஸ்வரம், வேதத்தின் ஆதியில் ஓதப்படுகிறதோ, வேதத் தின் முடிவிலும் நிலைநிற்கிறதோ, தன் காரணமாகிய அகாரத்தில் ஒடுங்கின அந்த ஓங்காரத்திற்கு அர்த்தமாயிருப்பவனே மஹேச்வரன்.]

இது இப்பததாம் அநுவாகத்தின் கடைசி மந்திரம். இதில் மஹேச்வரசப்தம் படிக்கப்பட்டிருப்பதைக்கண்டு ருத்ரபரமென்று வாதிப்பர் சைவர். இதற்கடுத்த மந்திரத்தில் 'ஸஹஸ்ரசீர்ஷம்' என்று தொடங்கி நாராயணனே ஸர்வவித்யோபாஸ்யன் என்று நிர்ணயித் திருக்கையால் அவ்வாதம் விவேகிகள் கோஷ்டியில் விலை செல் லாது. இம்மந்திரத்தின் பொருளை ஆராய்ந்தாலும் அப்படிப் பொருள் கொள்வதற்கில்லை. (யத்வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித:) யாதொரு ஸ்வரம் வேதத்தின் ஆதி யிலும் அந்தத்திலும் ஓதப்படுகிறதோ.

"ப்$_3$ரஹ்மண: ப்ரணவம குர்யாதா$_3$தா$_3$வந்தே ச ஸர்வதா$_3$ |
ஸ்ரவத்யநோங்க்ருதம் பூர்வம் பரஸ்தாச்ச விஶீர்யதே||"

[வேதத்திற்கு ஆதியிலும், அந்தத்திலும் எப்போதும் ப்ரணவத்தை உச்சரிக்கவேண்டும். முதலில் ஓங்காரத்தை உச்சரிக்காவிடில் வேதம் நழுவி விடும்; பின்னால் ஓங்காரத்தைச் சொல்லாவிடில்

http://acharya.org

வேதம் சிதறி விடும்.] என்று மநுஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட ஓங்காரமே இங்கு சொல்லப்படும் ஸ்வரமென்பது தெளிவாகிறது.

(யத்வேதாதௌஸ்வர:...வேதாந்தே ச ப்ரதிஷ்டித:) வேதம் ஓர் மஹாநிதி. அது வைக்கப்பட்டிருக்கும் பெட்டிபோன்றது முன்னும் பின்னும் உச்சரிக்கப்படும் ஓங்காரம். முதலிலுள்ள ஓங்காரமில்லாவிடில் கீழ்பாகம் மூடப்படாத பெட்டியிலுள்ள தனம் போல் வேததனம் நழுவிவிடும். கடைசியில் ஓங்காரத்தை உச்சரிக்காவிடில் மேலே மூடப்பெறாத பெட்டியிலுள்ள பணம் போல் வேதமும் சிதறிவிடும். (தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய) தனக்குக் காரணமான அகாரத்தில் ஒடுங்கிய அவ்வோங்காரத்திற்கு; "அகாரோ வை ஸர்வா வாக்" [அகாரமே எல்லா வாக்குகளும்] என்று அகாரம் ஸர்வாக்ஷரங்களுக்கும் காரணமாகச் சொல்லப்பட்டதன்றோ. "அகர முதல எழுத்தெல்லாம்" என்று வள்ளுவரும் சொன்னார். (ய: பர:) எவன் ஓங்காரத்திற்குக் காரணமான அகாரத்திற்கு அர்த்தமாயிருக்கிறானோ.

"அகாரேணோச்யதே விஷ்ணுஸ் ஸர்வலோகேச்வரோ ஹரி:"

[அகாரத்தினால் ஸர்வலோகேச்வரனும் ஹரியெனப்படுமவனுமான விஷ்ணு சொல்லப்படுகிறார்.] "அகாரோ விஷ்ணு வாசக:" [அகாரம் விஷ்ணுவைச் சொல்லும்] என்று ச்ருதிஸ்ம்ருதிகளிலும், "அக்ஷராணாமகாரோஸ்மி" [அக்ஷரங்களுக்குள் நான் அகாரமாகிறேன்.] என்று கீதையிலும் அகாரவாச்யன் அச்யுதனே என்று சொல்லப்பட்டது இங்கு அநுஸந்திக்கத்தக்கது. (ஸ மஹேச்வர:) அந்த அகார வாச்யனே உண்மையான மஹேச்வரன். உலகத்தில் கள்ளி வ்ருக்ஷத்தை மஹாவ்ருக்ஷம் என்றாப்போலே மஹேச்வரன் என்று ப்ரஸித்திபெற்ற ருத்ராதிகள் உண்மையில் மஹேச்வரரல்லர் என்று உணர்த்துகிறபடி. (ஸ மஹேச்வர:)

"ஹுங்காரேண மஹாதே$_3$வ: ஸ்தம்பி$_4$தோऽத$_2$ த்ரிலோசந:"

[விஷ்ணுவின் ஹுங்காரத்தினாலே, முக்கண்ணனான மஹாதேவன் ஸ்தம்பித்துப்போனான்.] எனப்படுமவன் உண்மை மஹேச்வரனாக முடியுமோ?

"விஷ்ணுராத்மா ப$_4$க$_3$வத: ப$_4$வஸ்யாமிததேஜஸ: ।
தஸ்மாத்$_3$ த$_4$நுர்ஜ்யாஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே மஹேச்வர: ॥"

[அதிகமான தேஜஸ்ஸையுடைய சிவனுக்கு விஷ்ணுவானவர் அந்தர்யாமி. அதனாலேயே அந்த மஹேச்வரர் வில்லையும் நாணையும்

http://acharya.org

நொடமுடித்தது.] என்று அவனுடைய மஹேச்வரத்வம் பஷ்மீ
களுக்குப் பரிஹாஸாஸ்பதமாயிருக்கும். (ஸ மஹேச்வர:) இவனுடைய
மஹேச்வரத்வம் ஸ்வாபாவிகமானது.

"மஹாதே3வ: ஸர்வமேதே4 மஹாத்மா ஹுத்வாத்மாநம்
தே3வதே3வோ ப3பூ4வ"

[மஹாதேவன் ஸர்வமேதயாகத்தில் தன்னை ஹோமம்செய்து தேவ
தேவனானர்.] என்கிறபடியே அவனுடைய மஹாதேவத்வம் ஔபாதிக
மாயிருக்கும்.

இம்மந்திரத்திற்கு மநுஸ்ம்ருதியை ஓட்டி இப்பொருள் அமைந்திருக்க, அப்பய்யதீக்ஷிதர் இதன் பொருளை மாற்றுவதற்கு அரும் பாடுபடுகிறர் தம் சிவதத்துவ விவேகத்தில். வேதத்தின் ஆதியில் படிக்கப்படுவது அகாரம்தான் என்றும், இகாரம் தான் என்றும் சொல்லிமயக்குகிறர். இங்கு "வேதா3தௌ3" என்றும் "வேதா3ந்தே" என்றும் சொன்னதை "ஆதாவந்தே" என்று பகவான் மநு ஸ்பஷ்டமாக விவரித்திருக்கும்போது அப்பொருள்களை ப்ராமாணிகர்கள் செவியில் ஏற்கவும் மாட்டார்கள். இப்படி பகவான் மநு உணர்த்தியதோடன்றியில்

"யோ வேதா3தௌ3 ஸ்வர: ப்ரோக்தோ வேதா3ந்தே ச
ப்ரதிஷ்டி2த: ।
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பரஸ் ஸ மஹேச்வர: ॥
யோ ऽஸாவகாரவாச்யோ வை விஷ்ணுர் நாராயணோ ஹரி: ।
ஸ ஏவ புருஷோ நித்ய: பரமாத்மா மஹேச்வர: ॥
தஸ்யாம் பூ4தமைச்வர்யம் யஸ்மிந் கஸ்மிந் ஹி வர்த்ததே ।
தஸ்மிந்நீச்வர ப்3த3ாதி3 ப்ரோச்யதே முநிபி4ஸ் தத3ா ॥
நிருபாதீ4ச்வரத்வந்து வாஸுதே3வே ப்ரதிஷ்டி2தம் ।
ஆத்மேச்வர இதி ப்ரோக்தோ வேத3வாதை3ஸ் ஸநாதநை: ॥
தஸ்மாந்மஹேச்வரத்வந்து வாஸுதே3வே ப்ரதிஷ்டி2தம் ॥"

[வேதத்தின் ஆதியில் எந்த ஸ்வரம் சொல்லப்படுகிறதோ, வேதத்தின் முடிவிலும் எது நிலைநிற்கிறதோ, தனக்குக் காரணமான அகாரத்தில் ஒடுங்கின அவ்வோங்காரத்திற்கு எவன் பொருளாகிறனே அவனே மஹேச்வரன். அப்படிப்பட்டவன் அகாரவாச்யனும், விஷ்ணுவென்றும் ஹரியென்றும் ப்ரஸித்தனுமான நாரா

http://acharya.org

யனாயேனயாவன். அவனே புருஷனென்றும், நித்யனென்றும், பரமாத்மாவென்றும் மஹேச்வரனென்றும் ஓதப்படுபவன். அவனுடைய அப்ரமான ஐச்வர்யம் எவனிடத்திலாவது இருந்தாகில் அவனிடத்திலும் முனிவர்களால் (ஔபாதிகமாக) ஈச்வரன் முதலான சப்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. நிருபாதிகமான ஈச்வரத்தன்மையோவெனில் வாஸுதேவனிடத்திலேயோ நிலைநிற்கிறது. பழைமையான வேதங்களிலும் இவன் ஆத்மேச்வரனென்று சொல்லப்பட்டானன்றோ. ஆகையால் மஹேச்வரத்வம் வாஸுதேவனிடத்திலேயே நிலைநிற்கிறது.] என்று பாத்மபுராணம் மிகத்தெளிவாக இம்மந்திரம் மஹாபுருஷபரமே என்பதை விளங்கவைத்தது. ஆக, இவ்வளவால் நாராயணவல்லியின் பத்தாவதுஅநுவாகம் பத்மநாபனையே சொல்லுவதென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

"ஸஹஸ்ரசீர்ஷம்" என்று தொடங்கும் அடுத்த அநுவாகமும், "ருதம் ஸத்யம்" என்னும் பன்னிரண்டாவது அநுவாகமும் நாராயணபரமே என்பதை நாராயணஸூக்த வ்யாக்யானத்தில் விளக்கியிருக்கிறோம். அடுத்ததான பதின்மூன்றாவது அநுவாகத்தின் முடிவில் "ய ஏஷோ அந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷ:" என்று படிக்கப்பட்டிருக்கிறது. இது சாந்தோக்யத்தில்

"ய ஏஷோ அந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷோ த்₃ருஶ்யதே....
தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகமேவமக்ஷிணீ"

[ஸூர்யமண்டலத்தின் நடுவில் ஸுவர்ணம் போன்று அழகான திருமேனியையுடைய யாதொரு புருஷன் காணப்படுகிறானோ அவனுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரை போன்று இரு கண்கள் உள.] என்று படிக்கப்பட்ட புண்டரீகாக்ஷனை புருஷனையே குறிக்கிறதென்பது ஸ்பஷ்டம். இந்த ச்ருதிவாக்யம் பகவத்பரமே என்பதைச் சாந்தோக்யோபநிஷத்விசாரத்தின்போது விரிவாக விளக்குவோம். அடுத்ததான பதினான்காவது அநுவாகத்திலும், "ய ஏஷ புருஷ ஏஷ பூ₄தாநாமதி₄பதி:" [இந்தப் புருஷனே ஸர்வபூதங்களுக்கும் அதிபதியாவான்.] என்று நாராயணனுடைய திருநாமமான புருஷ சப்தத்தைப் படித்து அவனே ஸர்வேச்வரன் என்று நிர்ணயித்தது. பதினைந்தாவது அநுவாகத்தில் "புருஷோ வை ருத்₃ர:" என்று புருஷ சப்தவாச்யனான பகவானே இங்கு ருத்ரனெனப்படுபவன் என்பதை வேதமே விளக்குகிறது. ஆகையால் "விச்வாதி₄கோ ருத்₃ரோ

http://acharya.org

மஹர்ஷி:" என்றும், "ஸர்வோ வை ருத்$_{3}$ர:" என்றும் இங்கு படிக்கப்படும் ருத்ரன், ஆதித்யமண்டலவர்த்தியான புண்டரீகாக்ஷனென்கிற புருஷனே என்று வேதந்தாலேயே வியாக்கியானம் செய்யப்பட்டதாயிற்று. பதினெட்டாவது அநுவாகத்தில்,

"நமோ ஹிரண்ய பா$_{3}$ஹவே ஹிரண்யபதயே
அம்பி$_{3}$காபதய உமாபதயே நமோ நம:"

என்று படிக்கப்படும் மந்திரமும், ந்ருஸிம்ஹதாபநீய உபனிஷத்தில்

"ருதம் ஸத்யம் பரம் ப்$_{3}$ரஹ்ம ந்ருகேஸரிவிக்$_{3}$ரஹம்
க்ருஷ்ணபிங்க$_{3}$ளம் ஊர்த்$_{4}$வரேதம் விரூபாக்ஷம்
ஶங்கரம் நீலலோஹிதம் உமாபதி: பஶுபதி:
பிநாகீ ஹ்யமிதத்$_{3}$யுதி: ஈஶாநஸ் ஸர்வவித்$_{3}$யாநாம்
ஈச்வரஸ் ஸர்வபூ$_{4}$தாநாம் ப்$_{3}$ரஹ்மாதி$_{4}$பதிர்
ப்$_{3}$ரஹ்மணோதி$_{4}$பதி:"

என்று ந்ருஸிம்ஹவிஷயமாகப் படித்திருப்பதை அநுஸரித்திருக்கையால் பகவத்பரமேயாகும். அன்றிக்கே, சிவபரமேயானாலும் சிவாந்தர்யாமியான ந்ருஸிம்ஹனைக் குறிப்பதாகும். எப்படிக் கொண்டாலும் சிவனுக்கு இம்மந்திரத்திலிருந்து பரத்துவம் ஸித்திக்காது. முப்பத்தாறுவது அநுவாகத்தில்

"அங்கு$_{3}$ஷ்ட$_{2}$மாத்ர: புருஷோऽங்கு$_{3}$ஷ்ட$_{2}$ஞ்ச ஸமாச்ரித:।
ஈஶஸ்ஸர்வஸ்ய ஜக$_{3}$த: ப்ரபு$_{4}$: ப்ரீணாதி விச்வபு$_{4}$க் ॥"

[கட்டைவிரல் பருமனுள்ளவனாய், ஹ்ருதயத்தில் எழுந்தருளியிருப்பவனாய், எல்லா ஜகத்துக்கும் ஈச்வரனாய், ஸ்வாமியாய், எல்லாவற்றையும் புஜிப்பவனான பகவான் ப்ரீதியடையட்டும்.] என்னும் மந்திரம் படிக்கப்படுகிறது. இதிலும் முதன்முதலில் புருஷசப்தம் படிக்கப்பட்டிருக்கையால் இது பகவத்பரமேயாகும்: ஈசசப்தமும் சிவபரமன்று என்பதை விளக்குவதற்காகவே "ஸர்வஸ்ய ஜகத: ஈச:" என்கிறது வேதம். மேலும் 'விச்வபு$_{4}$க்' என்று இங்கு படிக்கப்பட்டிருக்கும் நாமமும் விஷ்ணுவின் திருநாமங்களிலொன்றாக ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலே சொல்லப்படுகிறது. ஆகையாலே இம்மந்திரம் மாதவனையே உணர்த்துவதாகும்.

"ஸத்$_{3}$யோஜாதம் ப்ரபத்$_{3}$யாமி ஸத்$_{3}$யோஜாதாய வை நம:
ப$_{4}$வே ப$_{4}$வே நாதிப$_{4}$வே ப$_{4}$ஜஸ்வ மாம் ப$_{4}$வோத்$_{3}$ப$_{4}$வாய நம:

http://acharya.org

வாமதே3வாய நமோ ஜ்யேஷ்டா2ய நமோ ருத்3ராய நம:
காலாய நம: கலவிகரணாய நமோ ப3லவிகரணாய நமோ
ப3லப்ரமத2நாய நமஸ் ஸர்வபூ4ததமநாய மநோந்மநாய நம:"

[ஸத்யோஜாதனை அடைகிறேன்; ஸத்யோஜாதனுக்கு நமஸ்காரம். யோனிகள் தோறும் பிறவாமலிருக்கும்படி என்னை அநுக்ரஹிப்பாயாக. ஸம்ஸாரகாரணனான உனக்கு நமஸ்காரம். வாமதேவனுக்கு நமஸ்காரம்; ஜ்யேஷ்டனுக்கு நமஸ்காரம்; ருத்ரனுக்கு நமஸ்காரம்; காலனுக்கு நமஸ்காரம்; காலவிகாரஹேதுவானவனுக்கு நமஸ்காரம்; பலத்தை விகாரமடையச் செய்பவனுக்கு நமஸ்காரம்; பலத்தைப் போக்கடிப்பவனுக்கு நமஸ்காரம்; எல்லா பூதங்களையும் அடக்குபவனுக்கு நமஸ்காரம்; மநஸ்ஸை விகாரமடையச் செய்பவனுக்கு நமஸ்காரம்;] என்று முப்பத்தொன்பது முதல் நாற்பத்தொன்றாவது அநுவாகம் வரையிலும்,

"அகோ4ரேப்4யோऽத2 கோ4ரேப்4யோ கோ4ரகோ4ரதரேப்4யஸ்
ஸர்வதச்சர்வஸர்வேப்4யோ நமஸ்தே அஸ்து ருத்3ரரூபேப்4ய:"

[அழகானவையும், கோரமானவையும், கோரதரமானவையுமாக எங்குமுள்ள ருத்ரரூபங்களுக்கு நமஸ்காரம்.] என்று நாற்பத்திரண்டாவது அநுவாகத்திலும் படிக்கப்படும் மந்திரங்கள் சிவபரமானவையா என்னும் ஸந்தேஹம் எழக்கூடும்.

"ஸத்3யோஜாதப்ரவ்ருத்திஸ்த்வமீஶிஷே க்ஷேத்ரரக்ஷக!
வாமதே3வ: ப்ரதிஷ்டா2யா வாஸநாம் தநுமாஶ்ரித ||"

[க்ஷேத்ரரக்ஷகனே! உடனே உண்டாகும் ப்ரவ்ருத்தியையுடையவனாய் நீ நியமிக்கிறாய். நீ வாமதேவனாகவுமாகிறாய்.] என்று ஸ்காந்தபுராணம் நிர்வாணகண்டத்தில் இப்பதங்களால் சில ராமவிஷயமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டிருக்கையால் இவை பகவத்பரமேயாகும். "ப4வோத்3ப4வாய" என்பதற்கு பவனாகிய சிவனையும் பிறப்பித்தவனுக்கு என்றும் பொருள்கொள்ளலாம். "நாராயணாத்3 ருத்3ரோ ஜாயதே" என்ற வேதவாக்யத்துடன் பொருந்தியிருக்கும். ருத்ர நாமங்கள் நிறைந்திருப்பதனால் இம்மந்திரங்கள் ருத்ர விஷயமே என்று கொண்டாலும் நமக்கொரு ஹானியுமில்லை. பரமாத்மாவுக்கான அஸாதாரணமான அடையாளங்களொன்றும் இம்மந்திரங்களில் காணப்படவில்லை. இதைக்காட்டிலும் மிகுந்த பெருமைகளைச்சொல்லும் "ந கிரிந்த்3ர த்வது3த்தர:

http://acharya.org

ந ஜ்யாயோ அஸ்தி வ்ருத்ரஹந்" [விருத்திரனைக் கொன்ற இந்திரனே! உன்னைக்காட்டிலும் மேலானவனில்லை பெரியவனில்லை.] முதலான வாக்யங்கள் இந்த்ராதிதேவதைகளைக் குறித்தே வேதத்தில் சொல்லப்படும்போது ருத்ர விஷயத்தில் இது சொன்னது ஒரு பெருமை யாகாது. "நாராயண பரம் ப்ரஹ்ம" முதலிய வாக்யங்களில் சொன்ன பெருமைகளுக்கெதிரில் இவ்வாக்கியங்கள் கணநேரமும் நிற்கமாட்டா. இங்கு "நம: நம:" என்று நமச்சப்தத்தை அதிகமாகப்படித்திருப்பதால் ருத்ரனுக்குப் பரத்வம் ஸித்திக்கிறது என்று சிலர் வாதிக்கிறார்கள். இந்த வாதம் பரிஹஸிக்கத்தக்கது. "ஸக்ருத் தே அக்நே நம:.........அபரிமிதக்ருத்வஸ்தே நம:" என்று ஓர் மந்திரத்தில் அக்னிக்குக்கணக்கற்ற நமஸ்காரங்கள் செய்வதாகச் சொல்லியிருப்பதால் அக்னியே பரம்பொருள் என்று சொல்ல வேண்டிவரும். உண்மையில் சிவன், அக்னி முதலானவர்களைக் குறித்து அதிகமான நமஸ்காரம் செய்யப்படுவதற்குக் காரணம் அவர்கள் கொடூரமான காரியத்தைச் செய்துவிடுவார்கள் என்னும் பயமேயாகும். ருத்ரவிஷயமான பலமந்திரங்கள்

"மா நோ வதீ4: பிதரம் மோத மாதரம்
ப்ரியா மாநஸ் தநுவோ ருத்3ர ரீரிஷ:"

[ருத்ரனே! எம்முடைய தந்தையையும், தாயையும், அன்பர்களையும், தேஹங்களையும் ஹிம்ஸிக்காதே; கோபங்கொள்ளாதே.] என்றாப் போலே பயந்தவன் வார்த்தையாகவே இருக்கும். "ருத்3ரோ வை க்ரூர:" [ருத்ரன் க்ரூரனன்றோ.] என்றன்றோ வேதம் விளம்பிற்று. ஸர்வேச்வரனாகிய நாராயணனுடையவெளியில் ஓர் அஞ்ஜலிக்கும் நீர்ப்பண்டமாய் உருகுமவனாகையாலே அவனைக்குறித்த மந்திரங்களில் நமச்சப்தம் ஒரு தடவைக்கு மேலிராது. "நமோ ருசாய ப்ராஹ்மயே" "விச்வரூபாய வை நம:" முதலானவிடங்களில் இவ்விஷயத்தைக் காணலாம். "பூ4யிஷ்டா2ம் தே நம உக்திம்" [உனக்கு மிகப்பெரிதான 'நம:' என்னும் சொல்லை] என்று இவன் ஒரு நமச்சப்தத்தையும் பொறுக்காதவனையன்றோ இருப்பது. ஆகையால், நமச்சப்தம் அதிகமாகப் படிக்கப்பட்டிருப்பது ருத்ரனுக்கு தாழ்வைத் தருமேயொழிய ஏற்றத்தை அளிக்காது என்று விளங்குகிறது.

"ஈசாநஸ் ஸர்வவித்3யாநாம் ஈச்வரஸ் ஸர்வபூ4தாநாம்
ப்3ரஹ்மாதி4பதிர் ப்3ரஹ்மணோऽதி4பதிர் ப்3ரஹ்மா சிவோ
மே அஸ்து ஸதா3சிவோம்"

http://acharya.org

[எல்லா வித்யைகளுக்கும் ஈசனாய், ஸர்வபூதங்களுக்கும் ஈச்வரனாய், வேதத்திற்கு அதிபதியாய், ப்ரஹ்மாவுக்கு அதிபதியாய், ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய், சிவனுக்கு அந்தர்யாமியாய், ஓங்கார வாச்யனானவன் எனக்கு எப்போதும் மங்களத்தைத் தரக்கடவன்.]

இந்த நாற்பத்து நாலாவது அநுவாகமந்திரம் ந்ருஸிம்ஹதாபநீய உபனிஷத்தில் ந்ருஸிம்ஹவிஷயமாகப் படிக்கப்பட்டிருக்கிறதாகையால் இது பகவத்பரமேயாகும். "ஈசாநன்" 'ஈச்வரன்' என்னும் சிவநாமங்கள் இரண்டு படிக்கப்பட்டிருக்கின்றனவேயெனில்: இந் நாமங்கள் தனித்துப் படித்திருந்தால் சிவனைக்குறிப்பனவாகும். அப்படியில்லாமல் ''ஈசாநஸ் ஸர்வவித்$_3$யாநாம்'' [எல்லா வித்யைகளுக்கும் ஈசானன்] என்றும், ''ஈச்வரஸ் ஸர்வபூ$_4$தாநாம்'' [ஸர்வபூதங்களுக்கும் ஈச்வரன்.] என்றும் பிரயோகித்திருக்கையால் இவை ரூடியினால் சிவனைக்குறிக்கமாட்டா.

''ஈச்வரஸ் ஸர்வபூ$_4$தாநாம் ஹ்ருத்$_3$தே$_3$ஸேர்ஜுந திஷ்ட$_2$தி''

[அர்ஜுநா! எல்லா பூதங்களுக்கும் ஈச்வரனை பரமாத்மா ஹ்ருதயப்ரதேசத்தில் இருக்கிறான்.] என்று கீதையிலும் இவ்வேதவாக்யம் புருஷோத்தமவிஷயமே என்று காட்டப்பட்டது. ''ப்ரஹ்மாதி$_4$பதி:'' என்றதால் ப்ரஹ்மாவைக் காட்டிலும் உத்க்ருஷ்டனே இங்கு சொல்லப்படுமவன் என்று உணர்த்தப்படுகிறது. (ப்ரஹ்மா சிவ:) என்றதால் ''ஸ ப்$_4$ரஹ்மா ஸ சிவ:'' என்று பிரமனுக்கும் சிவனுக்கும் அந்தர்யாமியாக நாராயணஸூக்தத்தில் சொல்லப்படுமவனே இவன் என்று உணர்த்தப்படுகிறது. (ஸதா சிவ: மே அஸ்து) எப்போதும் எனக்கு மங்களகரனாக ஆகட்டும். அன்றிக்கே (ஸதா சிவ: மே சிவ: அஸ்து) என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். அப்போது 'ஸதா சிவ:' என்று ''சாச்வதம் சிவமச்யுதம்'' [எப்போதும் சிவனாயிருக்கும் அச்சுதனை.] என்னும் அச்சுதனை உணர்த்துகிறது. (ஓம்) என்பதினால் இவனே ஓங்காரவாச்யன் என்றும் உணர்த்துகிறது. ஓங்காரவாச்யன் பகவானே என்பதை நாம் முன்பே நிர்ணயித்திருக்கிறோம். ஆக, இந்த மந்திரம் பரமபுருஷபரமே என்று விளங்குகிறது அடுத்தபடியாக நாற்பத்தெட்டாவது அநுவாகத்தில்

''உத்திஷ்ட$_2$ புருஷ(ா) ஹரீ லோஹிதபிங்க$_3$ளாக்ஷி தே$_3$ஹி தே$_3$ஹி''

[புருஷனே! ஹரியே! செந்தாமரைபோன்று சிவந்த கண்களை உடையவனே! எழுந்திருப்பாயாக; எங்களுக்கு உன் விஷயமான

http://acharya.org

ஜ்ஞாநாக்யாநிகளை அளிப்பாயாக.] என்று வேதம் வேதநாயகனுக்குத் திருப்பள்ளியெழுச்சிபாடுகிறது. (உத்திஷ்ட) எங்களை ரக்ஷிக்க எழுந்திராய். "உத்திஷ்ட$_2$ நரசார்தூல" [நரச்ரேஷ்டனே! எழுந்திராய்] என்று விச்வாமித்ரமஹர்ஷியும், "எம்பெருமான்பள்ளி யெழுந்தருளாயே" என்று தொண்டரடிப்பொடியாழ்வாரும், "தோற்ற மாய் நின்ற சுடரே துயிலெழாய்" என்று ஆண்டாளும் இந்த ச்ருதி வாக்யத்தை அநுஸரித்தே திருப்பள்ளியெழுச்சி பாடினார்கள். இவ் வாக்கியத்தில் 'புருஷ' 'ஹரி' என்று இரண்டு பகவந் நாமங்களைப் படித்ததிலும் திருப்தியுறாத வேதம், "ஸோஹரி: பிங்களாக்ஷ:" என்று செந்தாமரைக்கண்ணனாகிற அஸாதாரணமான அடையாளத்தைவிட்டுப் பேசியிருக்குமழகு நம் நெஞ்சை உருக்குகிறது. எம்பெருமானுடைய திருநாமங்களை அநுஸந்திக்கதாலுண்டான ஆநந்தம் தலை மண்டையிட்டுச் செல்லுகையாலே "புருஷ" என்றும் "ஹரி" என்றும் நீட்டிச்சொல்லுகிறது நான்மறை.

அடுத்தபடியாக, நாற்பத்தொன்பது. ஐம்பதாவது அநுவாகங்களில் இப்பரமபுருஷனின் பாதாரவிந்தங்களை அடைவதற்குச் சிறந்த ஸாதனமான ப்ரபத்தியின் பெருமையை அருளிச்செய்து கடைசியில் சரண்யனான பகவானைச் சொல்லவேண்டிய இடத்தில்

"ய ஏஷ ஆதி$_3$த்யே புருஷஸ் ஸ பரமேஷ்டீ$_2$ ப்$_3$ரஹ்மாத்மா"

[ஸூர்யமண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் இந்தப் புருஷனே பரம பதத்திலும் எழுந்தருளியிருக்கிறான்; ப்ரஹ்மமென்றும், ஆத்மா வென்றும் சொல்லப்படுகிறான்.] என்றும்,

"விஜ்ஞாநாத$_3$ாநந்தே$_3$ா ப்$_3$ரஹ்ம யோநிஸ் ஸ வா ஏஷ
புருஷ: பஞ்சத$_4$ா பஞ்சாத்மா யேந ஸர்வமித$_3$ம் ப்ரோதம்
ப்ருதி$_2$வீ சாந்தரிக்ஷஞ்ச த்$_3$யௌஸ்$_3$ச தி$_3$ஶஸ்$_2$ச அவாந்தர
தி$_3$ஶஸ்$_2$ச ஸ வை ஸர்வமித$_3$ம் ஜக$_3$த் ஸ ச பூ$_4$தம் ஸ ப$_4$வ்யம்"

[பக்திரூபமான ஞானத்தினால், ஆநந்தமயனும், ஜகத்காரணனு மான ப்ரஹ்மம் அடையப்படுகிறது. அந்த இந்தப்புருஷன் (பரம, வியூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்னும்) ஐந்து விதமா யிருப்பவன்; ஐந்து மூர்த்திகளை உடையவன்; அவனாலேயே பூமி, அந்தரிக்ஷம், தேவலோகம், திக்குகள், விதிக்குகள் ஆகிய எல்லாம்

*ஸ$_2$, என்னும் எழுத்து 'ஶ' என்னும் எழுத்துக்கு பதிலாக உப யோகிக்கப்படுகிறது.

http://acharya.org

வியாபிக்கப்பட்டுள்ளன. இவ்வுலகெல்லாம் அவனே; அவனே இருந்தவையும், இருக்கப்போமவையுமானவன்.] என்றும் பகவத்ஸர்வாத்மகமான புருஷஸூக்தத்தைப் படித்து முடித்தது. மேலும், இவ்வாக்கியங்கள், "திசஸ்ச நாராயண: | விதிசஸ்ச நாராயண:" "புருஷ ஏவேதம் ஸர்வம் யத்பூதம் யச்ச பவ்யம்" என்னும் வேதவாக்யங்களை உணர்த்துவையாலும் நாராயணபரமே என்று விளங்குகிறது. இங்கு "பஞ்சதா" என்று பரவ்யூஹாதிபஞ்சாவஸ்தைகளையும் சொன்னது இருந்தவிடத்திலிருந்தே இவனை ஆச்ரயிக்கலாம் என்று உணர்த்துவதற்காக. "அம்பஸ்யபாரே" என்று ஆரம்பத்திலும், நடுவில் நாராயணானுவாகத்திலும், முடிவில் இங்கும் ஐந்து அவஸ்தைகளையும் அறிவிப்பதன் மூலம் ப்ராப்யமான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைக் கரதலாமலகமாகக் காட்டித் தருகிறது இவ்வுபனிஷத்.

இந்தத் தைத்திரீய உபனிஷத்தின் சிக்ஷாவல்லியில், "புருஷோ மனோமய:" [(சுத்தமான) மனத்தினால் அறியத்தக்க புருஷன்.] என்றும், "கேஸாந்த:" [ககாரவாச்யனான பிரமனுக்கும், ஈசனுக்கும் காரணபூதன்.] என்றும் புருஷசப்தவாச்யனே ப்ரஹ்மருத்ரகாரணன் என்றது. ஆநந்தவல்லியில் "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்று அநந்தனே மோக்ஷப்ராப்யமான ப்ரஹ்மம் என்பதை அறிவித்தது. ப்ருகுவல்லியில் ஸகலஜகத்தையும் உண்டாக்கி ரக்ஷித்து, அழிப்பவனே ப்ரஹ்மம் என்று உபதேசித்து, "ஸ யஸ்சாயம் புருஷே | யஸ்சாஸாவாதித்யே ஸ ஏக:" என்று அந்த ப்ரஹ்மம் ஆதித்யமண்டலத்திலுள்ள நாராயணனே என்பதை உணர்த்திற்று. நாராயணவல்லியிலோவெனில் "அம்பஸ்யபாரே" என்றும், "யமந்தஸ் ஸமுத்ரே கவயோவயந்தி" என்றும் ஸமுத்ரசாயித்வமாகிற அடையாளத்தையும் "வித்யுத: புருஷாததி" முதலான பலவிடங்களில் பகவானுக்கேயான புருஷசப்தத்தையும் "ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ" என்று லக்ஷ்மீபதித்வமாகிற லிங்கத்தையும் (அடையாளத்தையும்) "விஷ்ணுக்ராந்தே" என்று திரிவிக்கிரமாவதாரமெடுத்து உலகையெல்லாமளந்த மேன்மையையும், "ஹிரண்யகர்ப்பம் பஸ்யத ஜாயமாநம்" என்று பிரமனைப் பிறப்பித்த பெருமையையும், "திவி திஷ்டத்யேகஸ் தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்" என்று பரமபதத்தில் எழுந்தருளியிருப்பதையும், ஸர்வவ்யாபித்வத்தையும், நாராயணன், ஹரி, அச்யுதன், அநந்தன் முதலான பகவந்நாமங்களையும், "ஸ ப்ரஹ்மா ஸ சிவ:" என்று ப்ரஹ்மருத்ரர்களுக்கு அந்தர்யாமியாயிருப்பதையும்

http://acharya.org

"அந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:" என்றும், "புருஷ ஹரி வேஷஹரிதலிங்கஸாக்ஷி" என்றும் ஆதித்யமண்டலத்தில் புண்டரீகாக்ஷனாக எழுந்தருளியிருக்கும் இருப்பையும், "ஏஷ புருஷ: பஞ்சதா" என்று பஞ்சாவஸ்தையுடன் கூடிய புருஷனுயிருக்கும் பெருமையையும் மற்றும் பரமபுருஷபரமான பல பல வாக்யங்களையும், அடையாளங்களையும் முதலிலும் நடுவிலும் முடிவிலும் பற்பலவிடங்களில் படித்திருக்கிறது. இவையெல்லாவற்றுக்கும் மேலாக, நாராயணனே பரப்ரஹ்மமென்றும், பரதத்வமென்றும், பரஞ்சோதியென்றும் பன்னிப்பன்னியுரைத்திருக்கிறது. அப்படிப்பட்ட இத்தைத்திரீயோபனிஷத் புருஷோத்தமனை ஸ்ரீமந்நாராயணனையே சொல்லுகிறது என்னுமர்த்தத்தை நாம் உரைக்கவும் வேண்டுமோ? இவையெல்லாவற்றையும் கண்டுவைத்தும், வைஷ்ணவர்களென்றும் வித்வான்களென்றும் சொல்லிக்கொண்டு, விஷ்ணுபரத்வத்திற்கு விரோதமாகப் பேசிவருமவர்கள் இவ்வுலகில் மலிந்திருப்பதைக் காணுந்தோறும் "ஏ பாவம் பரமே" "ஓ ஓ உலகினதியல்வே" என்னும் நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளே நினைவுக்கு வருகின்றன.

இத்தைத்திரீயோபனிஷத் யஜுர்வேதத்தில் ஸாரமானது. அதிலும் ஸாரமானது அதில் கடைசிபாகமான நாராயணவல்லி. இந்நாராயணவல்லியை விவரிப்பதாலேயே நம்மாழ்வாருடைய திருவாசிரியம் என்னும் பிரபந்தம் யஜுர்வேதஸாரம் என்னும் பிரஸித்தியைப் பெற்றிருக்கிறது. இந்த நாராயணவல்லியின் ஆதியில் "அம்ப₄ஸ்யபாரே" என்றும் "யமந்தஸ் ஸமுத்₃ரே கவயோவயந்தி" என்றும் நடுவில் "ஸமுத்₃ரேந்தம்" என்றும் பலவாறல் சொன்னதைத் திருவுள்ளத்தில் கொண்டு இவரும் திருவாசிரியத்தொடக்கத்தில் "செக்கர்மா முகிலுடுத்து......கடலோன் கைமிசைக் கண்வளர்வது போல்......எறி கடல் நடுவுள் அறிதுயில் அமர்ந்து" என்று அருளிச்செய்தார். "விஷ்ணுக்ராந்தே" என்றதை "மாமுதலடிப்போதொன்று கவிழ்த் தலர்த்தி மண்முழுதுமகப்படுத்து" என்றும், "மூவுலகளந்த சேவடியோயே" என்றும் விவரித்தார். "ஹிரண்யக₃ர்ப்ப₄ம பச்யத ஜாயமாநம்" என்றதை "தெய்வ நான்முகக்கொழுமுளை ஈன்று" என்றும், "ஸ ப்₃ரஹ்மா ஸ சிவஸ் ஸேந்த்₃ர:" என்றதை "தெய்வம் மூவரில் முதல்வனாகி" என்றும் விளக்கினார். "நாராயணபரம் ப்₃ரஹ்ம" என்று தொடங்கிப்படித்ததை உட்கொண்டு "ஓ! ஓ! உலகினதியல்வே......முதற்பெருங்கடவுள் நிற்ப........" என்று ஓலமிட்டார். கடைசியில் "புருஷ ஹரி" என்று ஸர்வஸம்ஹர்த்ருத்வத்தை

http://acharya.org

உணர்த்தும் ஹரிநாமத்தைப் படித்ததை உள்ளி "நளிர் மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்........ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதும் அகப்படக்கரந்து" என்று கடைசிப்பாட்டில் அருளிச்செய்தார். ஆக, இவற்றிலிருந்து இவ்வுபனிஷத் பகவத்பரமே என்பதைப் பராங்குசரே நிர்ணயித்திருக்கிறாரென்று விளங்குகிறது.

ஐதரேயோபனிஷத்தின் ப்ரஹ்மநிர்த்தாரணம்

இது ருக்வேதத்திலுள்ள உபநிஷத். இதன் ஆரம்பத்திலேயே

"ஆத்மா வா இத$_3$மேக ஏவாக்$_3$ர ஆஸீத் நாந்யத் கிஞ்சந"

[ஆத்மாவாகிற இது ஒன்றே முதலில் இருந்தது; வேறொன்றுமில்லை.] என்னும் மந்திரம் படிக்கப்படுகிறது. "ஏகோ ஹவை நாராயண ஆஸீத் | ந ப்$_3$ரஹ்மா நேசாந:" [நாராயணன் ஒருவனே முதலில் இருந்தான்; பிரமனுமில்லை; சிவனுமில்லை.] என்னும் மஹோபநிஷத் வாக்யமானது இங்கு சொல்லப்படும் ஆத்மா நாராயணனே என்று நிர்ணயித்திருக்கிறது. மேலும், "ஆத்மா நாராயண: பர:" என்னும் நாராயணவல்லியிலும் ஆத்மசப்தத்தினால் சொல்லப்படுபவன் நாராயணனே என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆகையால் இவ்வாக்யம் பகவத்பரமே என்பதில் ஐயமில்லை.

"தமப்$_4$யதபத் | தஸ்யாபி$_4$தப்தஸ்ய முக$_2$ம்நிரபி$_4$த்$_3$யத யதா$_3$ண்டம் | முகா$_2$த்$_3$ வாக்$_3$ வாசோக்$_3$நி: | நாஸிகே நிரபி$_4$த்$_3$யேதாம் | நாஸிகாப்$_4$யாம் ப்ராண: ப்ராணாத்$_3$ வாயு: | அக்ஷிணீ நிரபி$_4$த்$_3$யேதாம் | அக்ஷிப்$_4$யாம் சக்ஷு: சக்ஷுஷ ஆதி$_3$த்ய: | கர்ணௌ நிரபி$_4$த்$_3$யேதாம் | கர்ணாப்$_4$யாம் ஶ்ரோத்ரம் ஶ்ரோத்ராத்$_3$தி$_3$ஶ: | த்வங் நிரபி$_4$த்$_3$யத | த்வசோ லோமானி லோமப்$_4$ய ஓஷதி$_4$வநஸ்பதய: | ஹ்ருத$_3$யம் நிரபி$_4$த்$_3$யத | ஹ்ருத$_3$யாந் மநோ மநஸஶ்$_2$சந்த்$_3$ரமா: | நாபி$_4$ர் நிரபி$_4$த்$_3$யத | நாப்$_4$யா அபாநோऽபாநாந் ம்ருத்யு: | ஶிஸ்$_3$நம் நிரபி$_4$த்$_3$யத ஶிஸ்$_3$நாத்$_3$ ரேதோ ரேதஸ ஆப: ||"

[அந்தப் பிரமனைக் குறித்துப் பரமபுருஷன் ஸங்கல்பித்தான்; அந்த ப்ரஹ்மாவினுடைய முகம் முட்டைவெடிப்பதுபோல்வெடித்தது (திறந்துகொண்டது). அந்த முகத்திலிருந்து வாகிந்திரியமும், வாகிந்திரியத்திலிருந்து அக்னியும் உண்டாயின. இரண்டு நாசித்வாரங்களும் திறந்துகொண்டன. அவற்றிலிருந்து ப்ராணனும், ப்ராணனிலிருந்து வாயுவும் உண்டாயின. கண்கள் திறந்து

http://acharya.org

கொண்டன. கண்களிலிருந்து சக்ஷுரிந்த்ரியமும், அதிலிருந்து ஆதித்யனும் உண்டாயின. காதுகள் திறந்துகொண்டன. அவற்றிலிருந்து ச்ரோத்ரேந்த்ரியமும் அதிலிருந்து திக்குகளும் உண்டாயின. தோல் வெடித்தது. தோலிலிருந்து ரோமங்களும், அவற்றிலிருந்து செடி, மரம் முதலியவையும் உண்டாயின. ஹ்ருதயம் திறந்துகொண்டது; ஹ்ருதயத்திலிருந்து மநஸ்ஸும், மநஸ்ஸிலிருந்து சந்திரனும் உண்டாயின. நாபி திறந்துகொண்டது. நாபியிலிருந்து அபானஸ்தானமாகிய ஆஸநமும் அதிலிருந்து ம்ருத்யுவும் உண்டாயின. சிச்நம் திறந்துகொண்டது. அதிலிருந்து ரேதஸ்ஸுடன் கூடிய சிச்நேந்திரியமும், அதிலிருந்து ஜலமும் உண்டாயின.] என்னும் இவ்வுபனிஷத்தின் முதல் கண்டத்தில் நாலாவது மந்திரம்

''சந்த்$_3$ரமா மநஸோ ஜாத:, சக்ஷோஸ் ஸூர்யோ அஜாயத|
முக$_2$ாதி$_3$ந்த்$_3$ரஸ்$_2$சாக்$_3$நிஸ்$_2$ச ப்ராணாத்$_3$ வாயுரஜாயத ||''

[சந்திரன் மனத்திலிருந்து உண்டானான்; கண்ணிலிருந்து ஸூர்யன் உண்டானான்; முகத்திலிருந்து இந்திரனும் அக்னியும், ப்ராணனிலிருந்து வாயுவும் ஜனித்தார்கள்.] ''தி$_3$ஸ$_2$:ஸ்$_2$ரோத்ராத்'' என்னும் புருஷஸூக்த மந்திரங்களுக்கு விவரணமாயிருப்பதால் இவ்வுபனிஷத்தும் பரமபுருஷவிஷயமே என்பது தெளிவாகிறது. ''பூ$_4$: பாதௌ யஸ்ய நாபி$_4$:'' என்றும், ''நாபி$_4$ர்நபே$_4$ாக்$_3$நி: முக$_2$மம்பு$_3$ ரேதோ...... ரோமாணி யஸ்யௌஷத$_4$ய:'' என்றும் பல பல புராண வசனங்களில் இம்மந்திரங்கள் பகவத்பரமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டிருப்பதையும் முன்னமே காட்டியிருக்கிறோம். இப்படிப் புருஷஸூக்தமஹோபனிஷதாதிகளில் சொன்ன அர்த்தத்தை அநுவதித்ததுடன் நில்லாமல் முதல் அத்தியாயக் கடைசியில்

''ஸ ஏதமேவ புருஷம் ப்$_3$ரஹ்ம ததமமபஸ்$_2$யத் இத$_3$மதர்ஸமிதி''

[அந்த ஜீவன் புருஷசப்தவாச்யனும், ஸர்வவ்யாபியாயிருக்கும் இந்த ப்ரஹ்மத்தையே கண்டான். ''இதை நான் காணப்பெற்றேன்'' என்று கூறினான்.] என்று புருஷசப்தவாச்யனே ப்ரஹ்மமென்று நிர்தாரணம் செய்தது. அடுத்தபடியாக

''தஸ்மாதி$_3$த$_3$ந்த்$_3$ரோ நாம இத$_3$ந்த்$_3$ரோ ஹ வை நாம தமித$_3$ந்த்$_3$ரம் ஸந்தம் இந்த்$_3$ரமித்யாசக்ஷதே பரோக்ஷேண பரோக்ஷப்ரியா இவ ஹி தே$_3$வா: பரோக்ஷப்ரியா இவ ஹி தே$_3$வா:''

http://acharya.org

[ஆகையால் "இதம் அதர்ஸம்" (இதைக்கண்டேன்) என்று பரம புருஷனைக் கண்ட ஜீவனுக்கு 'இதந்த்ரன்' என்று பெயருண்டாயிற்று: தேவர்கள் பரமாத்மஜ்ஞானியாகிய இந்த இதந்த்ரனையே மறைவாக 'இந்த்ரன்' என்று கூப்பிடுகிறார்கள். மறைவாகச் சொல்லுவதில் விருப்பமுள்ளவர்களன்றோ தேவர்கள்.] என்று இப்பரம புருஷனை ஸாக்ஷாத்கரித்ததனாலேயே தேவேந்திரனுக்கு இந்த்ரனென்னும் பெயர் வந்தது என்னும் ஸௌக்ஷ்மார்த்தத்தையும் உணர்த்திற்று. இத்தால் இந்த்ராதிதேவதைகள் ஜீவர்களே என்றும், புருஷசப்தவாச்யனே ப்ரஹ்மமென்றும் இவ்வுபனிஷத்தில் உணர்த்தப்பட்டதாயிற்று. ப்ரஹ்மருத்ராதிகளுக்குப் பரத்துவம் சொல்லும் வாக்கியங்களும், அவர்களுடைய நாமங்களும் கூட இவ்வுபனிஷத்தில் ஓரிடத்திலும் கிடையாது. ஆகையால் இவ்வுபனிஷத் பகவத்பரமே என்பது அசைக்கமுடியாமல் தேறிநிற்கிறது.

சாந்தோக்யோபனிஷத்தில் ஸர்வோத்க்ருஷ்ட நிர்ணயம்

இவ்வுபனிஷத்து ஸாமவேதத்திலுள்ளது. "வேதாநாம் ஸாமவேதோஸ்மி" என்று கண்ணனாலும், "சாமவேதகீதனாய சக்கரபாணியல்லேயே" என்று திருமழிசைப்பிரானாலும், "சாமியப்பன்" என்று திருமங்கையாழ்வாராலும் இவ்வேதம் பகவானுக்கு மிகவும் உகந்தது என்பதும் அவனையே ப்ரதிபாதிப்பது என்பதும் உத்கோஷிக்கப்பட்டது. அந்த ஸாமவேதத்திலுள்ளும், உபனிஷத்பாகமான இச்சாந்தோக்யம் மிகவுயர்ந்தது. ஸர்வோத்க்ருஷ்டனான புண்டரீகாக்ஷனைப்பற்றிப் பேசுவது. அதனாலேயே திருமங்கையாழ்வாரும் "சந்தோகன் பௌழியன் ஐந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி" என்று தைத்திரீயம் முதலான மற்ற வேதபாகங்களுக்கும் ஸாமவேதத்திலுள்ள மற்றபாகங்களுக்கும் முன்னால் இதை எடுத்தருளினார். இச்சாந்தோக்யோபனிஷத்தையே திருவாய்மொழியாகத் தமிழ்ப்படுத்தினார் வேதம் தமிழ்செய்தமாறன் என்று நம் ஆசார்யர்கள் நிர்வஹித்துப்போருவர்கள். "ஓமித்யேதத³க்ஷரமுத்³கீ³தமுபாஸீத" ["ஓம்" என்றும் தொடங்கும் இந்த உத்கீதத்தை உபாஸிக்கக்கடவன்.] என்று ஆரம்பிக்கிறது சாந்தோக்யோபனிஷத். நம்மாழ்வாரும் தம் திருவாய்மொழியைத் தொடங்கும்போது 'ஓம்' என்று ஸம்ஹிதாகாரமாகச்சொன்னால் இது சிலர்க்கே அதிகாரமாகக்கூடுமென்று பார்த்து "உயர்வற" "மயர்வற" "அயர்வறும்" என்று அகார உகார மகாரங்களாகப் பிரித்து ஓங்காரத்தை அருளிச்செய்தார். அகாரத்தை முதலிலிட்டுச் சொல்லாமல் உகாரத்தை

http://acharya.org

முதலிற் சொன்னதற்குக் கருத்தென்னென்னில்: "ஸாம்ந உத்₃கீ₃தே₂ா ரஸ:" [ஸாமவேதத்திற்கு ரஸம்போன்றது உத்கீதம்] என்று சொல்லப் பட்ட உத்கீதமே தம்மால் விவரிக்கப்படுகிறது என்பதைக் காட்டுவதற்காக "உ" என்று ஆரம்பித்து "பிறந்தார் உயர்ந்தே" என்று தகாரத்தில் முடித்தார் என்று வேதாசார்யபட்டர் உபதேசம். முதற் பாட்டின் நான்காவது அடியிலும் "துயரறு" என்று தகாரத்தை எடுத்ததும் உத்கீதத்தை உணர்த்துவதற்காகவே என்று பெரியோர் பணிப்பர். உத்கீதமாவது உத்க்ருஷ்டனுயிருக்கையால் 'உத்' என்னும் திருநாமத்தையுடைய எம்பெருமானைப்பற்றிய கீதம். இவ்வுபனிஷத்திலும் "தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகமேவமக்ஷிணீ தஸ்ய உதி₃தி நாம" [அவனுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள. அவனுக்கு 'உத்' என்று திருநாமம்] என்று புண்டரீகாக்ஷனே 'உத்' என்னும் திருநாமத்தையுடையவன் என்று உத்கோஷிக்கப்பட்டது. இப்படிப் புண்டரீகாக்ஷனைப்பேசும் உபநிஷத்தை திருவாய்மொழியிலே தமிழ்ப்படுத்துகையாலே ஆழ்வாரும் ஒவ்வொரு பத்திலும் பலகால் இச்செந்தாமரைத்தடங்கண்களிலே ஆழங்காற்பட்டுப்பாசுரமிடுவர். இவ்வுபனிஷத்திலே அர்ச்சிராதிகதியைச் சொன்னுப்போலே ஆழ்வாரும் அர்ச்சிராதிகதியைத் தம் திருவாய்மொழியின் கடைசியிலே அருளிச்செய்தார். "அந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷோ த்₃ருச்யதே..........தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகமேவமக்ஷிணீ" என்றதை ஆழ்வாரும் "அஞ்சுடரவெய்யோன் அணிநெடும தேர் தோன்றுதால், செஞ்சுடர்த்தாமரைக்கண் செல்வனும் வாராளுல்" என்று அருளிச்செய்வர். "ஹிரண்மய: புருஷ:" என்ற திருமேனியிலும் "செம்பொனேதிகழும் திருமூர்த்தியை" முதலான பலவிடங்களில் ஈடுபடாநிற்பர். இப்படி இச்சாந்தோக்யத்திற்கும் திருவாய்மொழிக்கும் பலஸாம்யங்களுண்டு. இவ்விடத்தில் "இயற்பா மூன்றும் வேதத்ரயம்போலே; பண்ணார்பாடல் பண்புரை இசைகொள் வேதம்போலே; ருக்கு ஸாமத்தாலே ஸரஸமாய் ஸ்தோபத்தாலே பரம்புமாப்போலே சொல்லார் தொடையல் இசைகூட்ட அமர்சுவையாயிரமாயிற்று. சந்தோகனென்று ஸாமாந்யமாக்காமல் முதலிலேபிரித்து யாழ்பயில் காநஸ்வரூபியைப் பாலையாகி என்று விசேஷிக்கையாலே வேதகீதசாமி நான் என்ற ஸாமம் தோற்ற உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறுடி, சரமகதி முடிவாகத் தொண்டர்க்கமுதென்ன தேவாந்தமாக்கி மஹாகோஷநல் வேதவொலிபோலே மஹாத்யயனமென்னப் பாடுகையாலே இத்தைச் சாந்தோக்யஸமம் என்பர்கள்.........அருக்கன்மேவின ஸதாத்யேய

தேஜஸ்ஸின் ஸாமரஸ்யோத்பாதநாமம் உள்ளதுமையான ஆத்மாந்தங்களாலே ஓராயிரமாகவற்றிலே ஒன்றை ஆயிரமுகத்தினால் அருளின நீர்த்தம்போலே நீர்த்தங்களாயிரமுகமாக விஸ்தரிக்கிறுர் என்று வேதகுருபதேசம்'' என்று ஆசார்யஹ்ருதயகாரரான அழகியமணவாளப் பெருமாள் நாயனுர் அருளிய ஆழ்ந்த ஸ்ரீஸூக்திகளும், மணவாளமாமுனிகளின் மநோஹரம்யமான வியாக்யான வாக்கியங்களும் ஸேவிக்கத்தக்கவை.

''ய ஏஷோऽந்தராதி3த்யே ஹிரண்மய: புருஷோ த்3ருஶ்2யதே ஹிரண்யஶ்2மஶ்2ருர் ஹிரண்யகேஶ ஆப்ரணகா2த் ஸர்வ ஏவ ஸுவர்ண:। தஸ்ய யதா2 கப்யாஸம் புண்டரீ3க— மேவமக்ஷிணீ। தஸ்ய உதி3தி நாம। ஸ ஏஷ ஸர்வேப்4ய: பாப்மப்4ய உதி3த:। உதே3தி ஹ வை ஸர்வேப்4ய: பாப்மப்4யோ ய ஏவம் வேத3 தஸ்ய ருக் ச ஸாம ச கே3ஷ்ணௌ ॥''

[ஸூர்யனுக்கு நடுவில், பொன்போன்ற மீசையையும், ஸுவர்ணம் போன்ற திருக்கேசங்களையும் உடையவனும், நகம் வரையில் எல்லாமே பொன்மயமாயிருப்பவனுன எந்த ஹிரண்மயனுன புருஷன் காணப்படுகிறுனே அவனுக்கு ஸூர்யனுல் மலர்ந்த தாமரை போன்ற இருகண்கள் உள. அவனுக்கு 'உத்' என்று திருநாமம். அவன் எல்லாப் பாபங்களுக்கும் மேலே இருப்பவனன்றே. எவன் இம்மாதிரி அறிகிறுனே அவன் எல்லாப் பாபங்களினின்றும் வெளிக் கிளம்புகிறுன். அந்தப் பரமபுருஷனை ருக்வேதமும் ஸாமவேதமும் துதிப்பவை.] இவை சாந்தோக்ய உபனிஷத்தின் முதல் ப்ரபாடகத்தில் ஆருவது கண்டத்திலுள்ள மந்திரங்கள். இவை பகவத் பரமே என்பதை நிரூபிப்போம். (ய ஏஷ:) ஸூர்யமண்டலாந்தர்வர்த்தியான இப்புருஷன் பற்பல வேதவாக்யங்களில் ப்ரஸித்தமானவன் என்று உணர்த்துகிறது. (அந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:) ஸூர்யமண்டலத்தின் நடுவிலுள்ள ஸுவர்ணமயனுன புருஷன். புருஷசப்தத்தைப் படித்ததால் இவன் புருஷஸூக்தாதிகளில் பிரஸித்தனுன நாராயணனே என்று உணர்த்துகிறது. எம்பெருமான் நீலமேகச்யாமளவர்ணன் என்று படித்திருக்க, இங்கு ஸுவர்ணமயன் என்று படிப்பானேன்? என்னில்: இங்கு ஸுவர்ணத்தைச் சொன்னது தேஜஸ்ஸிலும், அழகிலும் தங்கம் போல் விளங்குபவன என்று அறிவிப்பதற்காகவே. நிறத்தில் தங்கம் போன்றவன் என்பதற்காகவன்று. ''ஆதி3த்யவர்ணம்'' என்று புருஷ

http://acharya.org

ஸூக்தத்தில் படித்ததன்றோ. அன்றிக்கே, "ஹிரண்ய வர்ணும்" எனப்பட்ட பிராட்டியோடும், "மஹாரஜதம் வாஸ:" எனப்படும் பீதாம்பரத்தோடும், "பல பலவே ஆபரணம்" எனப்படும் ஸுவர்ணத்திலும் ஒளிவிஞ்சிய ஆபரணங்களோடும் எம்பெருமான் விளங்குகையாலே, அவனுடைய நீலவர்ணமும் ஹிரண்யவர்ணமாகிறது என்றும் நிர்வஹிக்கலாம். ஸ்ரீராமாயணத்திலும், "கச்சித் ந தத் ஹேமஸமாநவர்ணம் தஸ்யாநநம்" என்று ராமபிரானுடைய திருமுகமண்டலம் தங்கத்தைப் போன்ற நிறமுடையது என்று வர்ணிக்கப்பட்டதன்றோ. "ருக்மவர்ணம் புருஷம் ப்3ரஹ்மயோநிம்" [பிரமனுக்குக் காரணபூதனாய், தங்கம் போன்ற நிறத்தையுடையவனை புருஷனை] என்று முண்டகோபனிஷத்திலும், "ருக்மாப4ம் புருஷம்" [தங்கத்தைப் போன்ற ஒளியையுடைய புருஷன்] என்று மநுஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்டது. இங்கு "ஹிரண்மய: புருஷ: ஹிரண்யச்மச்ரு: ஹிரண்ய கேச:" என்று தேஹத்தையுடையவனாகச் சொல்லப்படுகையால் இவன் ஜீவனே என்று பூர்வபக்ஷம் எழ, "அந்தஸ் தத்3த4ர்மோபதே3சாத்" ["அந்தராதித்யே" என்று ஆதித்யனுக்கு நடுவிலிருப்பவனாகச் சொல்லப்படும் புருஷன் பரமாத்மாவே; அவனுடைய அஸாதாரணகுணங்களான அபஹதபாப்மத்வம் முதலானவை உபதேசிக்கப்பட்டிருக்கையால்] என்று பகவான் பாதராயணர் (வியாஸர்) ப்ரஹ்மஸூத்ரத்தில் பரதத்வ நிர்ணயம் செய்தார். "பே4த3வ்யபதே3சாச்சாந்ய:" [ஆதித்யனைக் காட்டிலும் பேதத்தை ச்ருதி சொல்லுவதினாலும் இவன் வேறானவனே.] என்று ஆதித்யாதி ஜீவர்களைக் காட்டிலும் வேறுபட்டவனே இப்புருஷன் என்றும் விளக்கினார். இந்த ஸூத்ரங்களுக்கு ஸ்ரீபாஷ்யமும் ச்ருதப்ரகாசிகையும் இவ்விடத்தில் அநுஸந்திக்கத் தக்கவை. நிற்க; இப்படி ஆதித்ய மண்டலத்தின் நடுவில் எழுந்தருளியிருப்பவன் பரமபுருஷனே என்பதை விவரிக்கும் ஸ்ம்ருதிகளைக் காட்டுவோம் இனி.

"ஈஸ்2வரம் புருஷாக்2யம் து ஸத்யத4ர்மாணமச்யுதம் ।
ப4ர்க்க3ாக்2யம் விஷ்ணுஸம்ஜ்ஞம் து த்4யாத்வாऽம்ருதமுபாஸ்2நுதே ॥
ஹ்ருத்3வ்யோம்நி தபதி ஹ்யேஷ பா3ஹ்யே ஸூர்யஸ்ய சாந்தரே।
அக்3நாவதூ4மகேऽப்யேஷ ஜ்யோதிஸ்2 சித்ரதரோ ஹ்யயம் ॥

http://acharya.org

ஸவிதுஸ் தத்₃ வரேண்யந்து ஸத்யத₄ர்மாணமீஸ்₂வரம் |
ஹிரண்யவர்ணம் புருஷம் வ்யோம தத்₃ விஷ்ணுஸம்ஜ்ஞிதம் ||
ஸூர்யமத்₄யே ஸ்தி₂தஸ் ஸோமஸ் தஸ்ய மத்₄யே
ஹுதாஸந : |
தேஜோமத்₄யே ஸ்தி₂தம் ஸத்வம் ஸத்வமத்₄யே
ஸ்தி₂தோऽச்யுத : ||"

[ஈச்வரனும், புருஷனென்று பெயர் உடையவனும், (சரணாகத் ரக்ஷணமாகிற) ஸத்யமான தர்மத்தையுடையவனும், ஆச்ரிதர்களை நழுவவிடாத அச்சுதனும், பர்க்கம் (ஒளி) எனப்படுமவனும், விஷ்ணு வென்னும் திருநாமத்தையுடையவனுமான புருஷனை தியானித்து மோக்ஷத்தை அடைகிறான். (ஜீவனுக்குள்ளிருக்கும்) ஹ்ருதயாகாசத்திலும் வெளியிலுள்ள ஸூர்யமண்டலத்தின் நடுவிலும், புகையற்ற அக்னியிலும் இந்த ஒளியானது மிகவிசித்திரமாகப் பிரகாசிக்கிறது. அதுவே ஸூர்யனுக்குள்ளிருக்கும் விரும்பத்தக்க வஸ்து. அதுவே ஸத்யமான தர்மத்தையுடைய நியந்தா. அதுவே ஹிரண்ய வர்ணனான புருஷன்; விஷ்ணுவென்னும் பெயரையுடைய அதுவே ஆகாசம். ஸூர்யமத்தியில் ஸோமன் இருக்கிறான்; அவனுக்கு நடுவில் அக்னி இருக்கிறான். அக்னிக்கு நடுவில் சுத்த ஸத்வமிருக்கிறது. சுத்தஸத்வத்தின் நடுவில் அச்யுதனிருக்கிறான்.] என்று யோகயாஜ்ஞவல்க்யரால் சொல்லப்பட்டது.

"ரவிமத்₄யே ஸ்தி₂தஸ் ஸோமஸ் தஸ்ய மத்₄யே ஹுதாஸந: |
தேஜோமத்₄யே ஸ்தி₂தம் ஸத்வம் ஸத்வமத்₄யே ஸ்தி₂தோச்யுத: ||
ஏஷ வை புருஷோ விஷ்ணுர் வ்யக்தாவ்யக்தஸ் ஸநாதந: ||"

[ஸூர்யன் நடுவில் ஸோமனிருக்கிறான்; அவனுக்கு நடுவில் அக்னியிருக்கிறான். அக்னியின் நடுவில் சுத்தஸத்வமயமான திருமேனியுள்ளது; அத்திருமேனியினுள் அச்சுதன் எழுந்தருளியிருக்கிறான். இவனே ஸ்தூலஸூக்ஷ்ம ப்ரபஞ்சமாயும், பழமையானவனாகவும், புருஷன் என்னும் பெயரையுடையவனாகவுமுள்ள விஷ்ணு.] என்று யமஸ்ம்ருதியிலும், சங்கஸ்ம்ருதியிலும் உணர்த்தப்படுகிறது.

"யோऽஸௌ விஷ்ணவாக்₂ய ஆதி₃த்யே புருஷோऽந்தர்
ஹ்ருதி₃ ஸ்தி₂த : |
ஸோऽஹம் நாராயணோ தே₃வ: புருஷோ லோகபா₄வந: ||"

http://acharya.org

[ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருப்பவனாய், ஆதித்யனுக்கு நடுவிலுள்ளவனாய், விஷ்ணுவென்னும் திருநாமத்தை உடையவனான யாதொரு புருஷனிருக்கிறானோ, அவன் தேவனாய், புருஷனாய், லோகஸ்ரஷ்டாவாயிருக்கும் நாராயணனான நானே.] என்று தத்தாத்ரேய ஸ்ம்ருதியிலும் உரைக்கப்பட்டது.

''வித்$_{3}$யாஸஹாயவந்தம் மாமாதி$_{3}$த்யஸ்த$_{2}$ம் ஸநாதநம் |
கபிலம் ப்ராஹுராசார்யாஸ் ஸாங்க்$_{2}$யா நிஸ்$_{2}$சிதநிஸ்$_{2}$சயா: ||''

[திருடமான அத்யவஸாயத்தையுடைய ஸாங்க்யாசார்யர்கள், பழைமையானவனான என்னை, ஸூர்யமண்டலத்தின் நடுவில், வித்யையுடன் கூடின கபிலனாகச் சொல்லுகிறார்கள்.] என்று மஹாபாரதம் மோக்ஷதர்மத்திலும் சொல்லப்பட்டது. ஆக்நேயநாரஸிம்ஹபுராணங்களில்

''த்$_{4}$யேயஸ் ஸதா$_{3}$ ஸவித்ருமண்ட$_{3}$லமத்$_{4}$யவர்த்தீ
நாராயணஸ் ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: |
கேயூரவாந் மகரகுண்ட$_{3}$லவாந் கிரீடீ
ஹாரீ ஹிரண்மயவபுர் த்$_{4}$ருதஶங்க$_{2}$சக்ர: ||''

[ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருப்பவனாய், கமலாஸனத்தில் எழுந்தருளியிருப்பவனாய், தோள்வளை, மகரகுண்டலம், கிரீடம், ஹாரம் ஆகியவற்றை உடையவனாய், ஸுவர்ணமயமான திருமேனியை உடையவனாய், சங்கசக்கரங்களை தரித்திருப்பவனான நாராயணன் எப்போதும் தியானிக்கத்தக்கவன்.] என்று படிக்கப்படும் வசனம் பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் ப்ரஸித்தமானது.

''அத$_{2}$ யதே$_{3}$தத$_{3}$ாதி$_{3}$த்யஸ்ய ஶுக்லம் ப$_{4}$ாஸ் ஸைவ ருக்
அத$_{2}$ யந்நீலம் பர: க்ருஷ்ணம் தத் ஸாம''

[இந்த ஆதித்யனுடைய வெள்ளைவர்ணமானது ருக்வேதமாகவும் கறுப்பு வர்ணம் ஸாமவேதமாகவும் விளங்குகிறது.] என்று முன் மந்திரத்திலும், ''ய ஏஷோ அந்தராதித்யே........'' என்று தொடங்கும் இந்த மந்திரத்திலும் படித்த விஷயங்களை

''ஸைஷா ஶக்தி: பரா விஷ்ணோ: ருக்$_{3}$யஜுஸ்ஸாமஸம்ஜ்ஞிதா |
ஸைஷா த்ரயீ தபத்யம்ஹோ ஜக$_{3}$தஶ்ச ஹிநஸ்தி யா ||
ஏஷ விஷ்ணு: ஸ்தி$_{2}$த: ஸ்தி$_{2}$த்யாம் ஜக$_{3}$த: பாலநோத்$_{3}$யத: |

http://acharya.org

ருக்3யஜுஸ்ஸாமபூ4தோऽந்தஸ் ஸவிதுர் த்3விஜ திஷ்ட2தி ||
மாஸி மாஸி ரவிர் யோ யஸ் தத்ர தத்ர ஹி ஸா பரா |
த்ரயீமயீ விஷ்ணுஶக்திரவஸ்தா2நம் கரோதி வை ||
விஷ்ணுஶக்திரவஸ்தா2நம் ஸதா3திஷ்ட்3யே கரோதி வை |
ஏவம் ஸா ஸாத்விகீ ஶக்திர் வைஷ்ணவ்யேஷா த்ரயீமயீ ||
ஆத்மஸப்தக3ணஸ்த2ம் தம் பா4ஸ்வந்தமதி4திஷ்ட2தி |
தயா சாதி4ஷ்டி2தஸ் ஸோऽயம் ஜாஜ்வலீதி ஸ்வரஸ்3மிபி4: ||
தமஸ்ஸமஸ்தம ஜக3தாம் நாஶம் நயதி சாகி2லம் |
ஏவம் ஸா வைஷ்ணவீ ஶக்திர் நைவாபைதி ததோ த்3விஜ |
மாஸாநுமாஸம் பா4ஸ்வந்தம் அத்4யாஸ்தே தத்ரஸம்ஸ்தி2தா ||"

[ருக், யஜுஸ், ஸாமம் என்னும் இந்த த்ரயீ (மூன்று வேதங்கள்) விஷ்ணுவினுடைய மேலான சக்தியாகும். இது பிரகாசியாநின்று கொண்டு, உலகிலுள்ள பாபங்களைப் போக்கடிக்கிறது. இவ்வுலகின் ரக்ஷணத்திலே நிலைநிற்பவனாய், அதிலேயே முயற்சியையுடையவனாய், ருக்யஜுஸ்ஸாம ரூபியாயிருக்கும் இந்த விஷ்ணு ஸூர்யனுக்குள் நிற்கிறான். மாதந்தோறும் தோன்றும் ஸூர்யர்களுக்குள் த்ரயீமயமான அந்த மேலான விஷ்ணுசக்தியானது நிலைநிற்கிறது. த்ரயீமயமான இந்த விஷ்ணுசக்தியானது சுத்தஸத்வரூபமானது. தன்னுடைய சரீரமான ஏழுவஸ்துக்களுள் ஒன்றான ஸூர்யனை வியாபித்து நிற்கிறது. அந்த விஷ்ணுசக்தியினால் வியாபிக்கப்பட்ட இந்த ஸூர்யன் தன் கிரணங்களாலே ஜ்வலிக்கிறான். உலகிலுள்ள இருள் முழுவதையும் நாசமடையச் செய்கிறான். இம்மாதிரியாக, இந்த விஷ்ணுசக்தியானது ஒருபோதும் நாசமடைவதில்லை. மாதந்தோறும், ஸூர்யமண்டலத்திலிருந்துகொண்டு, அவனை வியாபித்து நிற்கிறது.] என்று பராசரபகவான் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (2—11) விஷ்ணுபரமாக விரிவாக விளக்கியருளினார். ஆகையால் ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருப்பவன் பகவான் நாராயணனே என்பதே ச்ருதிஸ்ம்ருதிகளின் ஒருமிடறான முடிவு என்று நிர்ணயிக்கப்பட்டது.

(தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ) அவனுக்குக் கப்யாஸமான தாமரைபோன்ற இரண்டு கண்கள் உள. "அக்ஷிணீ" என்று இரண்டு கண்களைச் சொன்னதால் முக்கண்ணனான சிவனல்லன் இவன் என்று அதிஸ்பஷ்டமாக அறிவிக்கிறது அருமறை. "கப்யாஸம்" என்னும் பதத்திற்கு ஸ்ரீபாஷ்யகாரர் மூன்று விதமாகப் பொருள் விளக்கியுள்ளார்: "கம் பிப3தீதி கபி:" [ககாரவாச்யமான

http://acharya.org

ஜலத்தைக்குடிக்கையால் ஸூர்யன் கபியெனப்படுகிறான்.] என்கிற படியே கபிசப்தம் ஸூர்யனைச் சொல்லுகிறது. "கபிநா அஸ்யதே இதி கப்யாஸம்" [ஸூர்யனால் மலர்த்தப்படுகிறதாகையால் கப்யாஸ சப்தம் தாமரைக்கு உரிச்சொல்லாகிறது.] என்று கப்யாஸசப்தார்த்தம். அன்றிக்கே, கபிசப்தம், ஜலத்தைக்குடிக்கும் தாமரைத்தண்டைச் சொல்லுவதாய், அதிலேயிருக்கும் தாமரை என்று கப்யாஸ சப்தத்துக்குப் பொருளாகவுமாம். "கபிர் நாளம் தஸ்மிந் ஆஸ்தே இதி கப்யாஸம்" கபிசப்தவாச்யம் தாமரைத்தண்டு. அதிலிருப்பது கப்யாஸம்.] என்று வ்யுத்பத்தி. அன்றிக்கே, "கே ஜலே அப்யாஸ்தே இதி கப்யாஸம்" [ஜலத்தில் இருப்பது கப்யாஸமான தாமரை.] என்றும் பொருள் கொள்ளலாம். இம்மூன்று பொருள்களையும் "கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸம்ம்ருஷ்டநாள ரவிகரவிகஸித புண்டரீக தளாமலாயதேக்ஷண" [ஆழ்ந்த நீரிலே உண்டானதாய், பருத்த தண்டையுடையதாய், ஸூர்யகிரணங்களாலே மலர்த்தப்பட்டதான தாமரையிதழைப்போலே நிர்மலமாகவும் நீண்டுமிருக்கும் திருக்கண்களை உடையவனே!] என்று ஸ்ரீபாஷ்யகாரர் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அருளிச்செய்தார். "குரங்கினுடைய ஆஸனவாயைப் போல் சிவந்திருக்கும் தாமரையை ஒத்திருந்துள்ள கண்கள்" என்று சங்கராதிகளால் ஆதரிக்கப்பட்ட அர்த்தம், வாக்யகாரரால் அநாதரிக்கப்பட்டிருக்கையாலும், அதிநிஹீனமான இந்த உபமானத்தை ஸர்வேச்வரனுடைய கண்களை வர்ணிக்கும்போது சொல்லுவது உசிதமல்லவாகையாலும் பாஷ்யகாராதிகள் அநாதரித்தார்கள். நிஹீநோபமை தாமரைக்குத்தானே எனில்; பகவானுடைய திருக்கண்களுக்கு உபமானமான தாமரைக்கு மர்க்கடப்ருஷ்டமாகிற உபமையைச்சொன்னால், அது பகவானுடைய திருக்கண்களுக்குச் சொன்னதாகவே முடியும். தோஷமற்ற பல பொருள்களிருக்கும்போது தோஷமுள்ள இப்பொருளை ஆதரிப்பது அஸஹ்யமேயாகும். இதனாலேயே ஸரஸ்வதீ தேவியும் இப்பொருளையும் அதை ஆதரித்தவர்களையும் திரஸ்கரித்து, எம்பெருமானார் அருளிய அர்த்தங்களை மிகவுகந்து அவருக்கு ஸ்ரீபாஷ்யகாரர் என்னும் பட்டத்தையும் கொடுத்தாள். நிற்க; புண்டரீகம் ஸிதாம்போஜம்" [வெள்ளைத்தாமரை புண்டரீகமெனப்படுகிறது.] என்று அமரகோசத்தில் படிக்கப்படுகிறது; அப்படியிருக்க, வெள்ளைத்தாமரையைக் குறிக்கும் புண்டரீகபதம், எப்படிச் செந்தாமரைக்கண்ணனுடைய கண்களுக்கு உபமானமாகலாம் என்னும் கேள்வி இங்கு எழக்கூடும். இதற்குப் பலவிதமாக ஸமாதானம் சொல்லலாம்.

http://acharya.org

பகவானுடைய திருக்கண்களில், வெளுப்பு, கறுப்பு, சிவப்பு என்னும் மூன்று நிறமும் கலந்திருக்கும். "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்கள்" என்று திருப்பாணாழ்வார் அருளியதைக் காணலாம். ஆச்ரிதவ்யாமோஹத்தை அதிகமாக உடையவனாகையாலே, அவர்களைக் கண்டவுடன் அவன் கண்களிலே சிவப்பு விஞ்சியிருக்கும். அதனாலேயே அடியார்கள் அவனைச் செந்தாமரைக்கண்ணனென்றே சொல்லுவது. ஆகையால் வெண்தாமரையைக் கண்களுக்கு உபமானமாகச் சொல்லக்குறையில்லை. அன்றிக்கே, யானைக்குட்டியைச் சொல்லும் 'கலப$_4$ம்' என்னும் சொல் வ்ருத்$_3$த$_4$ஜத்தைக் குறித்தும் ப்ரயோகிக்கப் படுவதுபோல், "புண்ட$_3$ரீகம்" என்னும் பதம் கமல ஸாமாந்யத்தைக் குறித்துப் பிரயோகிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். அன்றிக்கே, புண்டரீகத்தை இங்கு உபமானமாகச் சொன்னது, பரப்பிலும், நிர்மலத்தன்மையிலும் தாமரையை ஒத்திருக்கையைக் காட்டுவதற்காகவேயொழிய, நிறத்தில் ஒத்திருக்கையைக் காட்டுவதற்காகவன்று என்றும் கொள்ளலாம். பாஷ்யகாரரும் இந்த அபிப்ராயத்தைக் கொண்டே "புண்டரீகதளாமலாயதேக்ஷண" [புண்டரீகதளத்தைப் போல் நீண்டும், நிர்மலமாகவுமிருக்கும் கண்களை உடையவனே!] என்று அருளிச்செய்தாரென்று தோன்றுகிறது. புண்டரீகபதம் செந்தாமரையையும் குறிக்கும் என்று உபநிஷத்பாஷ்யகாரர் சாஸ்த்ர ரீதியில் நிரூபிப்பர். "புண்டரிகமலர்தன்மேல்" என்றும், "கொப்பூழ்ச்செந்தாமரைமேல்" என்றும் ஆழ்வார்களும் நாபீ கமலத்தைச் சொல்லும்போது புண்டரீகஸப்தத்தையும், 'செந்தாமரை' என்னும் பதத்தையும் பிரயோகித்திருப்பது இதை வலியுறுத்தும். ஆக, இக்காரணங்களால், செந்தாமரைக் கண்ணனைப் புண்டரீகாக்ஷன் என்று சொல்லக் குறையில்லை என்றதாயிற்று. ச்ருதி ஸ்ம்ருதிகளிலும் பல்லாயிரக்கணக்கான விடங்களில் நாராயணனைக்குறித்தே புண்டரீகாக்ஷசப்தம் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது. அவற்றில் சிலவற்றைக் காட்டுவோம். ருக்வேதகிலமான ஜிதந்தேயில் "ஜிதந்தே புண்ட$_3$ரீகாக்ஷ" என்று சொல்லப்பட்டது. இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தில் "புண்ட$_3$ரீக விசாலாக்ஷ:" என்றும், "ராம: கமலபத்ராக்ஷ:" என்றும் "ராமோ ராஜீவலோசந:" என்றும் பலகால் பேசப்பட்டது. மஹாபாரதத்தில் த்ரௌபதியும் "கோ$_3$விந்த$_3$ புண்ட$_3$ரீகாக்ஷ" என்றே கூக்குரலிட்டாள். மற்றுமுள்ள புராணங்களிலும் "மஹாவராஹ: ஸ்பு$_2$டபத்$_3$மலோசந:" "க்ருஷ்ண: கமல லோசந:" "மத்ஸ்ய: கமல லோசந:" என்று உத்கோஷிக்கப்பட்டது.

http://acharya.org

வீனுருக்கொண்டுவந்தபோதும் தாமரைக்கண்ணை இவையும்மறைக்க வொண்ணுதபடியிறே இருப்பது. ஸர்வாங்கங்களும் மறையக் கவசமிட்டாலும் கண்ணைமறைக்க முடியாதன்றே. இப்படிப்பட்ட கமலலோசனத்வம் ப்ரஹ்மருத்ராதிகளுக்கு எங்குமே சொல்லப்படுவதில்லை. ஆகையால் இங்கு புண்டரீகாக்ஷனைப் படிக்கப்படுபவன் நாராயணனே என்பது சிலாலிகிதமாக ஸித்திக்கிறது.

(தஸ்ய உதிதி நாம) அந்தப் பரமபுருஷனுக்கு "உத்" என்று பெயர். இவனை "உத்" என்பதற்குக் காரணமென்னென்னில்: (ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:) இவன் பாபங்கள் அனைத்துக்கும் மேலே நிற்பவன்; அதாவது: பாபங்களால் தொடப்படாதவன்; ஹேயப்ரத்யநீகன் என்றபடி. (உதேதி ஹ வை ஸர்வேப்ய: பாப்மப்யோ ய ஏவம் வேத) எவன் இதை அறிகிறானோ அவன் எல்லாப் பாபங்களுக்கும் மேலே செல்லுகிறான். (தஸ்ய உதிதி நாம......பாப்மப்ய உதித:) "பாப்ம" ஸப்தம் பாபாஸ்ரயமாயிருக்கும் ஜீவர்களைச் சொல்லுவதாய், அவர்களைக் காட்டிலும் உத்க்ருஷ்டனாயிருக்கையால் "உத்" என்ற திருநாமம் உண்டாயிற்று என்றும் கொள்ளலாம். அப்போது "ஸ உத்தம: புருஷ:" என்று ச்ருதியிலும், "உத்தம: புருஷஸ்த்வந்ய:" "தஸ்மாத் லோகே ச வேதே₃ ச ப்ரதி₂த: புருஷோத்தம:" [ஆகையால் ச்ருதிஸ்ம்ருதிகளில் நான் புருஷோத்தமனென்று ப்ரஸித்தமானவன்.] என்று கீதையிலும் சொன்ன உத்தம நாமத்தையே இங்கு "உத்" என்கிறதாகத் தேறும். இத்தால் திருநாமத்தைக் கொண்டும் இவனுடைய உத்க்ருஷ்டத்வம் உணர்த்தப்பட்டது. "ஹிரண்மய: புருஷ:" என்றும், "புண்ட₃ரீக மேவமக்ஷிணீ" என்றும் திருமேனியின் பெருமை பேசப்பட்டது. "உதி₃தி நாம" என்று திருநாமத்தின் சீர்மை சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் இவனுடைய அபஹதபாப்மத்வம், ஸர்வோத்க்ருஷ்டத்வம் முதலானவைகளைச் சொல்லும் "அபஹதபாப்மா......... தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:" முதலான ச்ருதிவாக்யங்களும், "ந தை₃வம் கேஸ₂வாத் பரம்" "ந பரம் புண்ட₃ரீகாக்ஷாத்" "தத₃க₄மக₄விக₄ாத கர்த்ருபி₄ந்நம்" முதலான ஸ்ம்ருதிவாக்யங்களும் அநுஸந்திக்கத்தக்கன.

(உதேதி ஹ வை ஸர்வேப்ய பாப்மப்யோ ய ஏவம் வேத) இவனுடைய திருமேனி வைபவத்தையும் திருநாமவைபவத்தையும் இப்படி அறிந்தவன் பாபங்களைவிட்டு உயரச் செல்கிறான்.

"யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாப₄யாத்
விமோக்ஷமாப்நோதி ந ஸம்ஸ₂யம் நர:"

http://acharya.org

[எவனுடைய நாமத்தை ஸங்கீர்த்தனம் செய்வதாலேயே மனிதன் மஹா பயத்திலிருந்து ஸந்தேஹமில்லாமல் விடுதலையடைகிறானோ...]

"யந்நாம கீர்த்தநம் பூ$_4$க்த்யா விலாயநமநுத்தமம்
மைத்ரேயாசே^{ஷ}பாபாநாம் த$_4$ாதூநாமிவ பாவக:"

[மைத்ரேயரே! எவனுடைய திருநாமத்தை பக்தியுடன் கீர்த்தனம் செய்வதானது, தாதுக்களை எரிக்கும் நெருப்பைப்போல், எல்லாப் பாபங்களையும் அழியச்செய்கிறதோ......] முதலான நூற்றுக்கணக்கான ஸ்ம்ருதிவாக்யங்கள் இந்த ச்ருதிவாக்யத்தை பகவத்பரமாக விவரித்தன.

(தஸ்ய ருக் ச ஸாம ச கேஷ்ணௌ) ருக்வேதமும், ஸாமவேதமும் அவனைத் துதிப்பவை. இங்கு ருக் ஸாம வேதங்களைச் சொன்னது எல்லா வேதங்களுக்கும் உபலக்ஷணம். அக்னி, இந்திரன் முதலிய தேவதைகளைத் துதிக்கும் வேதவாக்யங்களும், அவர்களுக்கு அந்தர்யாமியாயிருக்கும் புண்டரீகாக்ஷனையே உண்மையில் துதிக்கின்றன என்று இத்தால் உணர்த்தப்படுகிறது. "வேத$_3$ வேத்$_3$யே பரேபும்ஸி" "நாராயணபரா வேதா$_3$:" "ஸர்வே வேதா$_3$: க்ருஷ்ண:" என்று இதிஹாஸபுராணங்களிலும்,

"மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே" என்றும்,
"சாமவேத கீதனாய சக்கரபாணியல்லையே" என்றும்
"சந்தோகா! பௌழியா! தைத்திரியா!
சாமவேதியனே! நெடுமாலே!" என்றும்

ஆழ்வார்களாலும் இவ்வேதவாக்யம் விஷ்ணுபரமாக விவரிக்கப்பட்டது. இப்படி ஆதித்யாந்தர்வர்த்தியான புருஷன் புண்டரீகாக்ஷனே என்பதை நிர்ணயித்துவிட்டு, இவனே ப்ராணிகளின் கண்ணினுள் இருப்பவன் என்று அடுத்தபடியாக அறிவிக்கிறது அருமறை.

"அத$_2$ ய ஏஷோऽந்தரக்ஷிணி புருஷோ த்$_3$ருஸ்$_3$யதே
ஸைவ ருக் தத் ஸாம தது$_3$க்த$_2$ம் தத்$_3$யஜு^{ஸ}ஸ் தத்$_3$ ப்$_3$ரஹ்ம
தஸ்யைதஸ்ய தத்$_3$வ ரூபம் யத$_3$முஷ்ய ரூபம் யாவமுஷ்ய
கே$_3$ஷ்ணௌ தௌ கே$_3$ஷ்ணௌ யந்நாம தந்நாம...
தத்$_3$ய இமே வீணாயாம் கா$_3$யந்தி ஏதம் தே கா$_3$யந்தி"

http://acharya.org

[கண்ணினுள் யாவனொரு புருஷன் (யோகிகளால்) காணப்படுகிறானோ, அவனே ருக்யஜுஸ்ஸாமஸ்வரூபியாயிருப்பவன். உக்தம் முதலிய ஆயுதங்களாயிருப்பவனுமவனே. அவனே ப்ரஹ்மம். ஆதித்யாந்தர்வர்த்தியான புருஷனுக்கு எது ரூபமோ அதுவே இவனுக்கும் ரூபம். எவை அவனுக்கு கீதங்களோ அவையே இவனுக்கும் கீதங்கள். எது அவனுக்கு நாமமோ அதுவே இவனுக்கும் நாமம். யாவர் சிலர் வீணையுடன் பாடுகிறார்களோ அவர்களெல்லாம் இவனையே பாடுகின்றார்கள்.]

(அத ய ஏஷோ அந்தரக்ஷிணி புருஷோ த்ருச்யதே) கண்ணின் நடுவில் யாவனொரு புருஷன் காணப்படுகிறானோ. இங்கும் புருஷசப்தத்தைப்படிப்பதன் மூலம் புருஷோத்தமனான நாராயணனே இவன் என்று உணர்த்தப்படுகிறது. இப்புருஷன் ஜீவனல்லன், கண்ணுக்கு அதிஷ்டாதாவான தேவதையுமல்லன், ஸர்வஸ்வாமியான பரமபுருஷனே இவன் என்னும் அரும்பொருள்களை ப்ரஹ்மஸூத்ரத்தில் பாதராயணரும், ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீராமானுஜரும் விளக்கியருளினார்கள். இந்த ச்ருதிவாக்யங்களை விசாரிக்கும் அந்தராதிகரணத்திலே "பே$_{4}$த$_{3}$வ்யபதே$_{3}$ஸாச் சாந்ய:" [ஜீவனுக்கும் இவனுக்கும் பேதத்தை வேதமே சொல்லுவதால் இவன் ஜீவனைக் காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவே] என்று ஜீவப்ரஹ்மபேதத்தை வேதவியாஸ பகவான் அதிஸ்பஷ்டமாக அறிவித்தருளினார். இவற்றிலிருந்து இங்கு உத்கோஷிக்கப்படுமவன் ப்ரஹ்மருத்ராதி ஜீவர்களைக்காட்டிலும் உத்க்ருஷ்டனாய், புருஷசப்தத்தால் பண்டை மறைகளிலே பலகால் படிக்கப்படுமவனான பரவாஸுதேவனே என்பது விளங்கா நிற்கிறது.

(ஸைவ ருக்......தத் ப்ரஹ்ம) அவனே ருக்யஜுஸ்ஸாமஸ்வரூபியாயிருக்கும் ப்ரஹ்மம், அவனே ஸகல பதார்த்தங்களுக்கும் அந்தர்யாமியாயிருப்பதன் மூலம் அவை எல்லாமாயும் இருப்பவன். "புருஷ ஏவேத$_{3}$ம் ஸர்வம்" "விச்வம் நாராயணம்" "ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸி ஸர்வ:" [எல்லாவற்றையும் வியாபிக்கையால் எல்லாமுமாகிறாய்] என்னும் ச்ருதிஸ்ம்ருதிவாக்யங்கள் இதை விஷ்ணுபரமாக விவரித்தன. அக்ஷ்யந்தர்வர்த்திபுருஷன், ஆதித்யாந்தர்வர்த்தியைக் காட்டிலும் வேறுபட்டவனோ என்னும் ஸந்தேஹம் எழ "அவனே இவன்" என்று உணர்த்துகிறது அடுத்தபடியாக: (தஸ்யைதஸ்ய ததேவ ரூபம் யதமுஷ்ய ரூபம், யாவமுஷ்ய

http://acharya.org

கேஷ்ணௌ தௌ கேஷ்ணௌ யந்நாம தந்நாம) என்று ஆதித்யாந்தர்வர்த்தியானவனுக்கு ரூபமேதோ அதுவே இவனுக்கும் ரூபம்; அவனுக்கு கீதங்களான ருக்ஸாமங்கள் இவனுக்கும் கீதங்கள்; அவனுடைய நாமமே இவனுக்கும் நாமம். அவனே இவன் என்றபடி. இப்படிபரமாத்மாவுக்கு ரூபம் நாமம் முதலியவற்றை விதிக்கும் இந்த வாக்யம் ரூபமில்லை, நாமமில்லை என்னும் அத்வைதிகளின் மதத்தை அழியச்செய்கிறது.

(தஸ்ய இமே வீணாயாம் காயந்தி ஏதம் தே காயந்தி) வீணையைக் கைக்கொண்டு மற்றதேவர்களையும் மனுஷ்யர்களையும் பாடுமவர்களும் உண்மையில் இவனையே பாடுகிறார்கள். அவர்களுடைய புகழ்வார்த்தைகள் அந்தந்த தேவமனுஷ்யர்களுக்குப் பொருந்தாதவையாலும், அவர்களுக்கு அந்தர்யாமியான இவனுக்கே பொருந்தியிருக்கையாலும் உண்மையில் அவர்கள் இவனையே பாடுகிறார்கள்.

"நும் இன்கவிகொண்டு நும் நும் இட்டா தெய்வமேத்தினல்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே"

என்று வேதம் தமிழ் செய்தமாறன் இவ்வேதவாக்யத்தைத் தமிழ்ப்படுத்தினர்.

"யேऽப்யந்யதே₃வதாப₄க்தா: யஜந்தே ச்ரத்₃த₄யாந்விதா: ।
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி₄பூர்வகம் ॥"

[எவர்கள் மற்ற தேவதைகளுக்கு பக்தர்களாயிருந்து கொண்டு சிரத்தையுடன் அவர்களை ஆராதிக்கிறார்களோ, அவர்கள்என்னையே வழியல்லாவழியில் ஆராதிக்கிறார்கள்.] என்றும்,

"ஆகாசாத் பதிதம் தோயம் யதா₂ க₃ச்ச₂தி ஸாக₃ரம் ।
ஸர்வதே₃வநமஸ்கார: கேசவம் ப்ரதி க₃ச்ச₂தி ॥"

[ஆகாசத்திலிருந்து விழும் ஜலம் கடலை அடைவது போல் ஸகல தேவர்களைக் குறித்த நமஸ்காரமும் கேசவனையே அடைகிறது.] என்றும் கீதாதிகளில் இவ்வாக்யம் பகவத்பரமாக உபப்ருஹ்மணம் செய்யப்பட்டது. இத்தால் இவனுடைய ஸர்வவ்யாபகத்வம் சொல்லப்பட்டதாகிறது. முதல் ப்ரபாடகம் ஒன்பதாவது கண்டத்தில் இவனே ஸர்வகாரணன் என்று பின் வருமாறு நிர்ணயிக்கப்படுகிறது.

http://acharya.org

"அஸ்ய லோகஸ்ய கா க3திரிதி। ஆகாச இதி ஹோவாச।
ஸர்வாணி ஹ வா இமாநி பூ4தாந்யாகாசாதே3வ
ஸமுத்பத்3யந்தே। ஆகாசம் ப்ரத்யஸ்தம் யந்தி।
ஆகாசோ ஹ்யேவைப்4யோ ஜ்யாயாந் ஆகாச: பராயணம்॥"

[இந்த லோகத்திற்கு எது காரணம் (என்று சிலர் கேட்க,) ஆகாசமே (லோககாரணம்) என்று (ப்ரவாஹணர்) சொன்னார். இந்த எல்லா பூதங்களும் ஆகாசத்திலிருந்தே உண்டாகின்றன. ஆகாசத்திலேயே மறைகின்றன. ஆகாசமே இப்பொருள்களைக் காட்டிலும் மேலானது. ஆகாசமே மேலான கதி] என்னும் இம்மந்திரத்திலுள்ள ஆகாசசப்தம் ப்ரஸித்தாகாசபரமன்று பரமாத்மபரமே என்று "ஆகாசஸ்தல்லிங்கா3த்" என்னும் ஸூத்திரத்தில் வியாஸர் விளக்கியருளினார். "ஆ ஸமந்தாத் காசதே" [எங்கும் பிரகாசிக்கிறான். "ஆ காசயதி" [எங்கும் பிரகாசிக்கச்செய்கிறான்] என்னும் வ்யுத்பத்திகளால் ஆகாசபதம் ப்ரஹ்மபரமாகிறது. "ஆகாசோ ஹ வை நாமரூபயோர் நிர்வஹிதா" [ஆகாசமே நாமரூபங்களைச் செய்கிறது] முதலான இடங்களில் பரமாத்மாவைக் குறித்துப் பிரயோகிக்கப்பட்டுமிருக்கிறது. "நாராயணாத் ப்ராஜாயந்தே" "நாராயணே ப்ரலீயந்தே" என்னும் வேதவாக்கியங்களோடு சேர்த்துப் பார்க்கும்போது, இங்கு சொல்லப்படும் ஆகாசசப்தவாச்யன் நாராயணனே என்பது தெளிவாகத் தெரியவருகிறது. "ஆகாச: பராயணம்" என்னும் வாக்கியம், "நாராயணம் மஹாஜ்ஞேயம்......... பராயணம்" என்னும் நாராயணவல்லி வாக்கியத்தை நினைவுறுத்துவதனால் நாராயணபரமாகிறது. இப்படி ஸர்வவேதாந்த ப்ரத்யய ந்யாயத்தை அனுஸரித்து நாராயணபரமென்று நிர்ணயிக்கத்தக்கதாயிருப்பினும், ஆகாசசப்தத்தைப் பிரயோகித்திருப்பதைக் கண்டு மந்தமதிகள் மயங்காதிற்பர்கள். ஆகாசசப்தம் பரமாத்மாவைக் குறிக்கிறது என்று கொண்டாலும், அது அச்சுதனைக் குறிக்கிறதென்பதற்கு ஆதாரமென்னவென்று ஆசங்கை கொள்ளுவர்கள். இவர்களைத் தெளிவிப்பதற்காகவே

"ஸ ஏஷ பரோவரீயாந் உத்3கீ3த2ஸ் ஸ ஏஷோ அநந்த:॥

[இந்த ஆகாசமே மேலானவற்றைக் காட்டிலும் மேலான உத்கீதம். அப்படிப்பட்ட இவ்வாகாசமே அனந்தன்.] என்று பகவானுடைய திருநாமங்களில் ஒன்றான அநந்தநாமத்தை ஆதரத்துடன் படிந்தது பண்டைமறை. இதிலிருந்து ஸர்வகாரணமாகச் சொல்லப்பட்ட ஆகாசம் அநந்தனே என்று அறுதியிடப்பட்டது.

http://acharya.org

முதல் ப்ரபாடகம் பதினோராவது கண்டத்தில்,

''கதமா ஸா தே₃வதேதி। ப்ராண இதி ஹோவாச। ஸர்வாணி ஹவா இமானி பூ₄தானி ப்ராணமேவாபி₄ஸம்விஶந்தி। ப்ராணமப்₄யுஜ்ஜிஹதே।''

[''அந்த தேவதை யார்'' என்று கேட்கப் (பின்வருமாறு) பதில் சொன்னார்:— ''ப்ராணனே அது. இந்த எல்லா பூதங்களும் ப்ராணனிடமே லயிக்கின்றன. ப்ராணனிடமிருந்தே வெளிக் கிளம்புகின்றன.] என்று ஜகத்காரணமாகப் படிக்கப்பட்ட ப்ராணனும் பரமாத்மாவே என்று பாதராயணர் ''அத ஏவ ப்ராண:'' என்னும் ப்ரஹ்மஸூத்ரத்தில் ப்ரகடனம் செய்தார். மேற்சொன்ன நியாயங்களாலே இதுவும் புண்டரீகாக்ஷனையே குறிக்கிறது என்பதை நிர்ணயிக்கலாம். ''ப்ராணயதி'' [எல்லோரையும் உஜ்ஜீவிக்கச் செய்கிறது.] என்னும் வ்யுத்பத்தியால் ப்ராணசப்தம் பகவத்பரமாகிறது ''க: ப்ராண்யாத் யதே₃ஷ ஆகாஶ₂ ஆநந்தோ₃ ந ஸ்யாத்'' [இந்த ஆநந்தஸ்வரூபியில்லாவிடில் எவன் தான் உஜ்ஜீவிக்க முடியும்?] என்னும் தைத்திரீய வாக்யம் ப்ராணபதமும் ஆகாச சப்தமும் ஆனந்தமயமான அனந்தனையே குறிக்கின்றன என்று அறுதியிட்டதன்றோ.

மூன்றாவது ப்ரபாடகத்தில் பனிரண்டாவது கண்டத்தில், காயத்ரிக்கும் ப்ரஹ்மத்திற்குமுள்ள ஒற்றுமையை அநுஸந்திப்பதாகிற காயத்ரீவித்யை விஸ்தரிக்கப்படுகிறது. நான்கு பாதங்களை உடைத்தாயிருக்கை ஆறு விதமாயிருக்கை என்னும் இரண்டு குணங்கள் காயத்ரியிலும் ப்ரஹ்மத்தினிடமும் உண்டென்று இங்கு நிரூபிக்கப்படுகிறது. அதில் ப்ரஹ்மத்திற்கு நான்கு பாதங்களுண்டு என்பதற்கு ஸம்வாதமாக,

''தாவாநஸ்ய மஹிமா। ததோ ஜ்யாயாம்ஶ்ச புருஷ:।
பாதோ₃ऽஸ்ய ஸர்வா பூ₄தாநி। த்ரிபாத₃ஸ்யாம்ருதம் தி₃வி॥''

[அவனுடைய மஹிமை அப்படிப்பட்டது. அப்புருஷன் அதைக் காட்டிலும் மேற்பட்டவன். எல்லா பூதங்களும் இவனுக்கு ஒரு பாதம். இவனுடைய அழிவற்ற மூன்று பாதங்கள் பரமபதத்திலுள்ளன.] என்று புருஷஸூக்தமந்திரத்தை சில மாறுதல்களுடன் படித்தது. இதிலிருந்து புருஷஸூக்தப்ரதிபாத்யனே இங்குபடிக்கப்படும் ப்ரஹ்மம் என்று உணர்த்தப்பட்டதாகிறது. புருஷஸூக்தப்ரதிபாத்யனும்

http://acharya.org

புருஷசப்தவாச்யனுமாயிருப்பவன் வாஸுதேவனே என்பதை நாம் முன்பே விரிவாக விளக்கியிருக்கிறோம். ஆகையால் இவ்வுபனிஷத்தும் பரமபுருஷபரமே என்று விளங்குகிறது. "இங்குள்ள எல்லா பூதங்களும் இவனுடைய ஒரு பாதம்; பரமபதத்தில் இவனுடைய மூன்று பாதங்கள் விளங்குகின்றன." என்ற மந்திரப்பகுதியின் பொருளைச் சிறிது விளக்குவோம். எல்லையற்றதான இந்த லீலா விபூதி புருஷோத்தமனுக்கு ஒரு பாதம். எல்லையற்றதான நித்ய விபூதி மூன்று பாதம். அதாவது லீலாவிபூதியைக்காட்டிலும் நித்ய விபூதி மும்மடங்கு பெரிது என்றபடி. எல்லையற்ற வஸ்துக்களுள் தாரதம்யம் உண்டோ எனில்: கணிதசாஸ்திர விற்பன்னர்கள் எல்லையற்ற வஸ்துக்களுள் தாரதம்யம் உண்டென்றே ஒப்புக் கொண்டுள்ளார்கள். அநந்தமான காலத்தில் உள்ள வருஷங்களின் எண்ணிக்கையும் எல்லையற்றது. நாள்களின் எண்ணிக்கையும் கணக்கற்றதே. ஆயினும் நாள்களின் எண்ணிக்கை வருஷங்களின் எண்ணிக்கையை விடப் பெரியது என்பதை எளிதில் உணரலாம். அம்மாதிரியே அளவற்றதான நித்யவிபூதி அளவற்ற லீலா விபூதியைவிட மும்மடங்கு பெரிதென்றுகொள்ளத் தட்டில்லை. இங்கு மும்மடங்கென்றது பல மடங்கு என்னும் பொருளில் என்றும் சில ஆசார்யர்கள் கூறுவார்கள். "பாதோ஽ஸ்ய ஸர்வா பூ$_4$தாநி" என்றதால் இவ்வுலகிலுள்ள பத்தசேதனர்கள் பகவானுடைய ஒரு பாதமெனப் படுகிறார்கள்; பரமபதத்திலோவெனில் கௌஸ்துபம் முதலிய பூஷணங்களாயிருந்து, ஜீவஸமஷ்டி முதலான தத்துவங்களுக்கு அபிமானிகளாயிருப்பார் சில நித்யர்களுண்டு; அவர்கள் அநந்தனுக்கு ஒருபாதம்; பகவதநுபவத்தில் மட்டும் ஈடுபட்டுள்ள மற்ற நித்யர்கள் ஒரு பாதம்: முக்தாத்மாக்கள் ஒரு பாதம். பரமபதத்திலுள்ள போக்யங்கள், போக உபகரணங்கள் போக ஸ்தானங்கள் என்னும் மூன்று விதமான அசேதனவஸ்துக்களும் மூன்று பாதங்களாகச் சொல்லப்படுவதாகவும் சிலர் நிர்வஹிப்பர்கள்.

"அத$_2$ யத$_3$த: பரோ தி$_3$வோ ஜ்யோதிர் தீ$_3$ப்யதே விச்வத: ப்ருஷ்டே$_2$ஷு ஸர்வத: ப்ருஷ்டே$_2$ஷு அநுத்தமேஷூத்தமேஷு லோகேஷு இத$_3$ம் வாவ தத்$_3$ யதி$_3$த$_3$மந்த: புருஷே ஜ்யோதி:"

[வ்யஷ்டி ஸமஷ்டி தத்துவங்களுக்கு மேம்பட்டதாய் தனக்கு மேற்பட்டதில்லாததான உயர்ந்த லோகங்களிலுள்ள பரமபதத்தில் யாதொரு சோதி விளங்குகின்றதோ, அதுவே இந்த ஜீவனுக்குள் விளங்கும் சோதியான ஜாடராக்கினி.] என்று பதின்மூன்றாவது

http://acharya.org

கண்டத்திலுள்ள மந்த்ரமும் பகவத்பரமேயென்பதை விளக்குவோம். "பரோதிவ:" என்றதால் மூன்றாம் கண்டத்தில் "த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்று படிக்கப்பட்ட புருஷனே இவன் என்று உணர்த்தப்படுகிறது. "ஜ்யோதி:" என்று இங்கு படித்திருக்கும் பதத்தை, "நாராயணபரோ ஜ்யோதி:" என்று நாராயண வல்லி நாராயண பரமாக விளக்கிற்று. "இதம் வாவ தத் யதித மந்த:புருஷே ஜ்யோதி:" [பரமபதத்திலுள்ள இச்சோதியே ஜீவனுக்குள்ளிருக்கும் சோதி] என்னும் வாக்கியமானது

"அஹம் வைஶ்வாநரோ பூ$_4$த்வா ப்ராணிநாம் தே$_3$ஹமாஶ்ரித:"

[நான் வைச்வானரனென்னும் ஜாடராக்னியாய் ப்ராணிகளின் தேஹத்திலுள் இருக்கிறேன்] என்று கீதையில் கேசவபரமாக விவரிக்கப்பட்டது. நாராயணவல்லியிலும் "தஸ்ய மத்$_4$யே மஹாநக்$_3$நி:" என்று தொடங்கி இந்த அக்னிக்கு அந்தர்யாமியாயிருப்பவன் கார்முகில் வண்ணனாய், ப்ரஹ்ம ருத்ரேந்திரர்களுக்கும் அந்தர்யாமியாயிருக்கும் நாராயணனே என்று நிலைநாட்டப்பட்டது. ஆக இவ்வாக்கியமும் பகவத்பரமென்று விளங்குகிறது.

"ஸர்வம் க$_2$ல்விதம்$_3$ ப்$_3$ரஹ்ம தஜ்ஜலாநிதி ஶா$_2$ந்த உபாஸீத"

['அந்த ப்ரஹ்மத்திடமிருந்தே உண்டானதாலும், அதனிடமே லயிப்பதாலும், அதனாலேயே ஜீவிப்பதாலும், இவ்வுலகெல்லாம் ப்ரஹ்மமேயன்றோ' என்று அனுஸந்தித்துக்கொண்டு சாந்தனாய் உபாஸிக்கக்கடவன்.] என்று மூன்றாவது ப்ரபாடகம் பதினான்காவது கண்டத்தில் படிக்கப்படுகிறது. (ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம) இது எல்லாம் ப்ரஹ்மமேயன்றோ. "புருஷ ஏவேதம் ஸர்வம்" [இது எல்லாம் புருஷனே] என்று புருஷ ஸூக்தத்திலும், "விஶ்வமேவேதம் புருஷ:" "விஶ்வம் நாராயணம்" என்று நாராயண ஸூக்தத்திலும் சொல்லப்படும் புருஷசப்தவாச்யனான நாராயணனே இங்கு ப்ரஹ்மசப்தத்தால் சொல்லப்படுகிறான் என்பது ஸர்வ வேதாந்த ப்ரத்யயந்யாயத்தால் ஸித்திக்கிறது. "ஸர்வஜ்ஞனான பரமபுருஷனுக்கும், அஜ்ஞரான ஜீவர்களையும், அசேதனப் பொருள்களையும் கொண்ட இந்த உலகத்திற்கும் ஒருமை (ஐக்யம்) சொல்லுவது எப்படிப் பொருந்தும்" என்னும் ஸந்தேஹம் எழ, அதை நிவர்த்திக்கிறது அடுத்தபடியாக: (தஜ்ஜலாந்) "தஜ்ஜத்வாத், தல்லத்வாத், தத$_3$நத்வாத்" [அந்த ப்ரஹ்மத்திடமிருந்து (இவ்வுலகம்) பிறக்கையாலும், அதனிடமே லயிக்கையாலும், அதனாலேயே ஜீவிக்கை

http://acharya.org

லானும் இது அந்த ப்ரஹ்மமே] என்று பொருள். இதிலிருந்து ப்ரஹ்மத்திற்கும் சிதசித்துக்களுக்கும் ஸ்வரூபைக்யம் கிடையாது, கார்ய காரண பாவமே உண்டு என்பது தெளிவாகிறது. இத்தால் ஜீவப்ரஹ்மங்களுக்கு அபேதம் சொல்லும் அத்வைதிகளும், ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் அபேதம் சொல்லும் பேதாபேதவாதிகளும் தள்ளப்படுகிறார்கள். ஸூக்ஷ்ம ஸ்தூல ஜகச்சரீரகனான பகவானே காரணமாகவும், கார்யமாகவுமாகிறானாகையாலேயே மற்ற வஸ்துக்களுடன் அவன் ஒரே வேற்றுமையில் படிக்கப்படுகிறான் என்று வேதமே விளக்கித்தருகிறது இந்த வாக்யத்தில்.

"ஸ்தி$_2$த்யுத்பத்தி ப்ரவ்ருத்தி க்$_3$ரஸந-
நியமந வ்யாபநைராத்மநஸ்தே
ஶேஷோஶேஷ: ப்ரபஞ்சோ வபுரிதி
ப$_4$வதஸ் தஸ்ய சாபே$_4$த$_3$வாத$_3$:।
ஸர்வம் க$_2$ல்வைதத$_3$ாத்ம்யம்
ஸகலமித$_3$மஹம் தத்த்வமஸ்யேவமாத்$_3$யா:
வ்யாக்$_2$யாதா ரங்கது$_3$ர்$_4$ய ப்ரவண!
விஜயிபி$_4$ர் வைதி$_3$கைஸ் ஸார்வபௌ$_4$மை:॥"

[ரங்கநாதனே! (இவ்வுலகை) ரக்ஷித்தல், உண்டாக்கல், ப்ரவர்த்திப்பித்தல், (தன்னுள்ளே) இழுத்துக்கொள்ளல், நியமித்தல், வியாபித்தல் ஆகிய இச்செயல்களாலே, (இதற்கு) ஆத்மாவாயிருக்கும் உனக்கு சேஷமாயுள்ள எல்லா உலகும் உனக்கு சரீரமாயிருக்கின்றதாகையால் உன்னையும் உலகையும் ஒன்றாகவே சொல்லுகின்றன வேதங்கள். "ஸர்வம் க$_2$ல்விதம் ப்$_3$ரஹ்ம" "ஐததா$_3$த்ம்யமித$_3$ம் ஸர்வம்" "ஸகலமித$_3$ மஹம்" "தத் த்வமஸி" முதலான வாக்யங்கள், ஜயத்தையல்லதறியாத வைதிகோத்தமர்களால் இம்மாதிரியே வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளன.] என்று பட்டரும் வேதம் ஜகத்தையும் ப்ரஹ்மத்தையும் ஒரே வேற்றுமையில் படிக்கும் "ஸர்வம் கல்விதம்" முதலான வாக்யங்களின் தாத்பர்யத்தைத் தெளிவாகத் தெரிவித்தருளினார்.

"தஜ்ஜலாந்" என்று இங்கு படிக்கப்பட்ட வாக்யம் "நாராயணாத் ஸமுத்பத்யந்தே! நாராயணாத் ப்ரவர்த்தந்தே! நாராயணே ப்ரலீயந்தே||" [நாராயணனிடமிருந்தே இவையெல்லாம் உண்டாகின்றன. நாராயணனாலேயே வாழ்கின்றன. நாராயணனிடமே

http://acharya.org

ஸபிக்கின்றன] என்று நாராயணோபநிஷத்தில் நாராயணபரமாக விவரிக்கப்பட்டது. (ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாந்) "விஸ்₂வமேவேத₃ம் புருஷஸ் தத்₃ விஸ்₂வமுபஜீவதி" [இவ்வுலகெல்லாம் புருஷனே; அவனாலேயே இவ்வுலகம் ஜீவிக்கிறதன்றோ] என்னும் நாராயணஸூக்த வாக்யமும் இது பரமபுருஷபரமே என்று விளக்குகிறது. (இதி ஸாந்த உபாஸீத) இவ்வுலகெல்லாம் ப்ரஹ்மாத்மகமாகையால் மித்திரன் என்றும், சத்துரு என்றும் ஒருவருமில்லை என்று அறிந்து, ராகத்வேஷாதிகளற்றவனாய் உபாஸிக்கக்கடவன் என்று பாவம். இந்த வேதவாக்யத்தின் அர்த்தத்தை,

"ஸர்வபூ₄தாத்மகே தாத! ஜக₃ந்நாதே₂ ஜக₃ந்மயே।
பரமாத்மநி கோ₃விந்தே₃ மித்ராமித்ரகதா₂ குத:॥"

[அப்பா! ஜகந்மயனாய், ஜகந்நாதனாய், ஸர்வபூதாத்மாவாய், பரமாத்மாவாயுமுள்ள கோவிந்தனிருக்கையில், மித்திரனென்றும், சத்துரு என்றும் பேசுவது எதற்கு?] என்று ப்ரஹ்லாதாழ்வான் அச்யுதன் விஷயமாக அநுஸந்தித்தருளினான்.

"ஸகலமித₃மஹம் ச வாஸுதே₃வ:
பரமபுமாந் பரமேஸ்₂வரஸ் ஸ ஏக:।" [வி, பு. (3-7)]

[இவ்வுலகெல்லாமும், (அதிலடங்கிய) நானும் வாஸுதேவனே, பரம புருஷனாய், பரமேச்வரனாயிருப்பவன் அவன் ஒருவனே.] முதலான ஸ்ம்ருதி வசனங்களும் இவ் வேதவாக்யத்தை விஷ்ணுபரமாக விவரித்தன.

"மநோமய: ப்ராணஶரீரோ பா₄ரூபஸ் ஸத்யஸங்கல்ப
ஆகாஶாத்மா ஸர்வகர்மா ஸர்வகாமஸ் ஸர்வக₃ந்த₄ஸ்
ஸர்வரஸஸ் ஸர்வமித₃மப்₄யாத்தோ அவாக்யநாத₃ர:"

[(விசுத்தமான) மனத்தினால் கிரஹிக்கத்தக்கவன்; ப்ராணனை சரீரமாகக் கொண்டவன்; ஒளிமயமானவன்; வீண்போகாத ஸங்கல்பத்தையுடையவன்; ஆகாசத்திற்கும் ஆத்மாவாயிருப்பவன்; ஸர்வ கர்மங்களாலும் ஆராதிக்கப்படுபவன்; எல்லா கந்தங்களையும் ரஸங்களையும் தன்னுட்கொண்டிருப்பவன்; மேற்சொல்லப்பட்ட ஸகல கல்யாண குணங்களையும் (இயற்கையாகவே) கொண்டிருப்பவன்; வேண்டுதல் வேண்டாமையில்லாதவன்; (ஆகையாலே) ஒருவரைக் குறித்தும் வார்த்தை சொல்லாமலிருப்பவன்.] என்னும்

http://acharya.org

அடுத்த மந்திரம் பரமபுருஷனுடைய பரத்வானுகுணமான பல பல குணங்களையும் படித்தது. ஸகலச்ருதிஸ்ம்ருதி புராணங்களிலும், இக்குணங்கள் கேசவபரமாகப் பலவிடங்களில் விவரிக்கப் பட்டுள்ளன.

> "ஏஷ ம ஆத்மாऽந்தர் ஹ்ருதயேऽணீயாந் வ்ரீஹேர்வா
> யவாத்$_3$ வா ஸ்யாமகாத்$_3$வா ஸ்யாமகதண்டு$_3$லாத்$_3$ வா
> ஏஷ ம ஆத்மாऽந்தர் ஹ்ருத$_3$யே ஜ்யாயாந் ப்ருதி$_2$வ்யா
> ஜ்யாயாநந்தரிக்ஷாத் ஜ்யாயாந் தி$_3$வோ ஜ்யாயாநேப்$_4$யோ
> லோகேப்$_4$ய: ||"

[என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளிருக்கும் இந்தப் பரமாத்மா நெல்லைக்காட்டிலும், யவத்தை(கோதுமையை)க்காட்டிலும், ச்யாமகத்தைக் காட்டிலும், ச்யாமகதண்டுலத்தைக்காட்டிலும் சிறியவனயிருக்கிறான்; என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளிருக்கும் இந்தப்பரமாத்மா பூமியைக்காட்டிலும், அந்தரிக்ஷத்தைக்காட்டிலும், தேவலோகத்தைக்காட்டிலும், இவ்வுலகங்கள் எல்லாவற்றைக்காட்டிலும் பெரியவனயிருப்பவன்.] என்னும் அடுத்தமந்திரமும், "அணோரணீயாந் மஹதோ மஹீயாநாத்மா கு$_3$ஹாயம் நிஹிதோஸ்ய ஜந்தோ:" "அத: பரம் நாந்யத$_3$ணீயஸம் ஹி பராத் பரம் யந் மஹதோ மஹாந்தம்" என்னும் நாராயணவல்லி வாக்யங்களாலும் "அணோரணீயாம்ஸமநுஸ்மரேத்$_3$ய:" முதலான ஸ்ம்ருதி வசனங்களாலும் நாராயணபரமாக விவரிக்கப்பட்டது. ஸர்வத்ரப்ரஸித்யதிகரணத்திலே பகவான பாதராயணரும் இங்கு சொல்லப்படுமவன் ஜீவனைக்காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவே என்று நிர்ணயித்தார். அவ்வதிகரணத்திலுள்ள "ஸ்ம்ருதேஸ்$_2$ச" என்னும் ஸூத்ரத்தில்,

> "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி$_3$ ஸந்நிவிஷ்ட:
> மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச"

[எல்லாருடைய ஹ்ருதயத்திலும் நானே இருக்கிறேன். என்னிடமிருந்தே நினைவும், அறிவும் மறதியுமுண்டாகின்றன.] என்னும் கீதாவசனத்தை ப்ரமாணமாக எடுப்பதன் மூலம், இங்கு "ஏஷ ம ஆத்மா அந்தர்ஹ்ருத$_3$யே" என்று படிக்கப்படுமவன் கீதாசார்யனை கண்ணனே என்று காட்டியருளினர். இப்படி ச்ருத்யந்தரங்களிலிருந்தும், உபக்ரும்ஹணங்களாலும் இவ் வாக்யங்கள்

http://acharya.org

க்ருஷ்ணபரமே என்று நிர்ணயிக்கத்தக்கதாயிருப்பினும், கண்ணனே பரன் என்று கண்டோக்தியாகச் சொல்லப்படவில்லையே என நினைந்து மலங்குவர் சிலர். அவர்களைத் தெளிவிப்பதற்காகவே பதினேழாவது கண்டத்தில் தேவகீ புத்ரனை க்ருஷ்ணனே வித்யைகளில் உபாஸிக்கப்படுமவன் என்பதை அதி ஸ்பஷ்டமாக அறிவிக்கிறது அருமறை.

பதினாறாவது, பதினேழாவது கண்டங்களில் புருஷனை யஜ்ஞ ரூபமாகப் பார்ப்பதாகிற புருஷவித்யையை விரிவாகப் படித்து, இப்புருஷவித்யை க்ருஷ்ணனே ஸாக்ஷாத்தானது, க்ருஷ்ணனுக்கு ப்ரீதியை விளைவிப்பது என்பதை அறிவிப்பதற்காக,

"தத்₃தைத₄த் கோ₄ர ஆங்கிரஸ: க்ருஷ்ணாய தே₃வகீ புத்ராயோக்த்வா உவாச அபிபாஸ ஏவ ஸ ப₃பூ₄வ।
ஸோऽந்தவேலாயாமேதத் த்ரயம் ப்ரதிபத்₃யேத அக்ஷிதமஸி அச்யுதமஸி ப்ராணஸம்ஶிதமஸீதி"

[அப்படிப்பட்ட இந்தப் புருஷவித்யையை, அங்கிரோகோத்ரத்தினரான கோரரர் என்னும் ரிஷி, "தேவகீபுத்ரனான க்ருஷ்ணனுக்கு (ஸமர்ப்பிக்கப்பட்டது)" என்று சொல்லிக்கொண்டு அநுஸந்தித்தார். (கடைசிகாலத்திலும்) அவர் தாகம் முதலிய ப்ராக்ருத குணங்கள் நீங்கப்பெற்று முக்தரானார். மரண காலத்தில் (ப்ரஹ்மத்தைக் குறிப்பவையான) மூன்று மந்திரங்களையும் ஜபிக்கவேண்டும். "அழிவற்றவனாயிருக்கிறாய்; அடியார்களை நழுவவிடாதவனாயிருக்கிறாய்; ஜகத்தை ஜீவிக்கச்செய்யும் ஸூக்ஷ்மதத்வமாயிருக்கிறாய்" என்பவை (அம்மந்திரங்கள்).] என்னும் ஐதிஹ்யத்தை ஆதரத்துடன் படிக்கிறது பண்டைமறை. "உக்த்வா உவாச" என்று இரண்டு தடவை படிக்கப்படுவதால், "க்ருஷ்ணாய தேவகீ புத்ராய இதி உக்த்வா, ஏதத் புருஷயஜ்ஞம் உவாச" என்று இதி சப்தத்தைச் சேர்த்துக்கொண்டு பொருள் கொள்வதே சிறந்தது. "க்ருஷ்ணாய" என்றுமட்டும் சொன்னால் அவருடைய சிஷ்யர்களில் ஒருவராயிருக்கக்கூடுமென்று பலர் மயங்கக்கூடுமென்று பார்த்து "க்ருஷ்ணாய தே₃வகீ புத்ராய" [தேவகீ புத்ரனை கிருஷ்ணனுக்கு] என்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயித்துத் தருகிறது நான்மறை. மறையாகையாலே இச்சப்தத்தை மறைத்துச் சொன்னபோதிலும் வேதமாகையாலே "க்ருஷ்ணாய தே₃வகீ புத்ராய" என்று வெளிப்படையாகச் சொல்லுகிறது. "மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே"

http://acharya.org

என்றான்றோ ஆழ்வார். ஆஸைபரப்ரக்ருதிகள் மயங்குவதற்காக மறைத்துச் சொல்லுவதும், ஸத்வப்ரக்ருதிகள் தெளிவதற்காகத் தெரியச் சொல்லுவதும் வேதத்தின் இயல்பன்றோ. (க்ருஷ்ணாய) உபயவிபூதி நாதனாயிருப்பவனுக்கு.

"க்ருஷிர் பூ$_4$வாசக: ஸ$_2$ப்$_3$தே$_3$ா ணைஸ்$_4$ச நிர்வ்ருதிவாசக:|
விஷ்ணுஸ் தத்$_3$ப$_4$ாவ யோகா$_3$ச்ச க்ருஷ்ண இத்யபி$_4$தீ$_4$யதே||"

["க்ருஷ்" என்னும் பதம், பூமி முதலான இந்த லீலா விபூதியைச் சொல்லும்; "ண" என்னும் பதம் ஆநந்தபூமியான நித்ய விபூதியைச் சொல்லும். விஷ்ணுவானவர் இவ்விரண்டையும் உடையவராகையால் க்ருஷ்ணன் என்று சொல்லப்படுகிறார்.] என்று க்ருஷ்ணசப்தத்தின் பொருள் விளக்கப்பட்டது. பூமியிலுள்ளோர்க்கு ஆநந்தத்தை அளிப்பவன்; ஆநந்தபூமியாயிருப்பவன் என்றும் க்ருஷ்ணசப்தத்திற்குப் பொருள் கொள்ளலாம். கறுப்பு நிறத்தையுடையவன் என்னும் பொருளும் ப்ரஸித்தம். (தேவகீ புத்ராய) இப்படி உபயவிபூதி நாயகனாய், ஆநந்தமயனாய், "ஏஷ ஹ்யேவாநந்த$_3$யாதி" என்கிறபடியே பிறர்க்கு ஆநந்தத்தை அளிப்பவனை இப்பரமபுருஷன் இவ்வுலகில் தேவகி என்னும் ஒரு பெண் பிள்ளைக்குப் புத்திரனாய் அவதரித்தானன்றோ என்று ஆச்சரியப்படுகிறது அருமறை. "ப்ரஹ்மண்யோ தே$_3$வகீபுத்ர:" என்று மற்றொரு வேதவாக்யமும் படித்ததன்றோ.

"பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ
நாவேதத்$_3$விந் மநுதே தம் ப்$_3$ருஹந்தம்"

[ஸர்வலோக பிதாவானவன் தன் புத்திரர்களில் ஒருவனைப்பிதாவாகக்கொண்டு ஸர்வயோனிகளிலும் பிறக்கிறான். வேதமறியாதவன் அவனே பரமனென்பதை அறியமாட்டான்.] என்றும்.

"யுவா ஸுவாஸா: பரிவீத ஆகா$_3$த்
ஸ உ ச்ரேயாந் ப$_4$வதி ஜாயமாந:"

[யுவாவாய், அழகிய பீதாம்பரத்தையுடையவனாய், (நித்ய ஸூரிகளால்) சூழப்பட்டவனாய் பரமபுருஷன் இங்கு வந்தான். அவன் பிறக்கப் பிறக்கவே மேன்மையடைகிறான்.] என்றும்.

"அஜாயமாநோ ப$_3$ஹுதா$_4$ விஜாயதே|
தஸ்ய தீ$_4$ரா: பரிஜாநந்தி யோநிம்|"

http://acharya.org

[பிறப்பற்றவனுயிருந்தும் பலபடியாகப் பிறக்கிறுன் பரமபுருஷன்: புத்திமான்களிற் சிறந்தவர்களே அவனுடைய அவதார ரஹஸ்யத்தை அறிகிறுர்கள்.] என்றும் வேதங்களும்,

''ஜந்ம கர்ம ச மே திவ்யம்''

[திவ்யமான என்னுடைய பிறப்பும் சேஷ்டிதங்களும்] என்று தேவகீ புத்ரனை க்ருஷ்ணனும்,

''நிலைவரம்பில பல பிறப்பாய் ஒளிவருமுழுநலம்'' முதலான விடங்களில் ஆழ்வார்களும் ஆழங்காற்படும்படி விருப்பனவையன்றோ அவனுடைய அவதாரங்கள். (க்ருஷ்யண தேவகீ புத்ராய) 'தேவகீ புத்ரனை க்ருஷ்ணனுக்கு சேஷபூதமானது நான் அநுஷ்டிக்கும் வித்யை' என்றுவது, 'க்ருஷ்ணனுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது' என்றுவது பொருள் கொள்ளலாம். இவ்வர்த்தத்தை தேவகீ புத்ரனை க்ருஷ்ணனே

''யத் கரோஷி யதஶ்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் |
யத் தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்வ மதர்ப்பணம் ||''

[குந்தி புத்ரனே ! நீ செய்யும் லௌகிக கர்மங்களையும், நீ உண்ணும் பொருள்களையும், நீ செய்யும் ஹோமம், தானம், தபஸ் முதலான வைதிக கர்மங்களையும் எனக்கே அர்ப்பணம் செய்வாயாக.] என்று கீதையில் காட்டியருளினுன்.

''ப்ராயஶ்சித்தாந்யஶேஷாணி தப: கர்மாத்மகாநி வை |
யாநி தேஷாமஶேஷாணாம் க்ருஷ்ணாநுஸ்மரணம் பரம் ||''

[தபஸ், கர்மம் என்றிப்படிப் பலவகைப்பட்டிருக்கும் ப்ராயச்சித்தங்களுள் க்ருஷ்ணனை நினைப்பதே மேலான ப்ராயச்சித்தம்.] என்று தொடங்கிப் புராணரத்னமான விஷ்ணுபுராணத்தில் [2–6] பராசரபகவான் இவ்வாக்கியத்தின் பொருளைப் பேசியருளினர்.

(அபிபாஸ ஏவ ஸ பபூவ)இப்படிப் புருஷவித்யையை க்ருஷ்ணஶேஷமாக அநுஸந்தித்ததினுல் அவர் முக்தரானுர். இங்கு 'அபிபாஸ:' [தாகமற்றவர்] என்றது

''அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ
விஜிகத்ஸோऽபிபாஸஸ் ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:''

http://acharya.org

[பாபம் நீங்கப்பெற்றவன்: கிழத்தனமற்றவன்; மரணமற்றவன்; சோகமில்லாதவன்; சாப்பிடுவதில் விருப்பமற்றவன்; தாகமற்றவன்; வீணாகாதகாமத்தையும் ஸங்கல்பத்தையுமுடையவன்.] என்று படிக்கப் படும் எட்டு குணங்களுக்கும் உபலக்ஷணம். "ஸோந்த வேளாயாம் ஏதத் த்ரயம் ப்ரதிபத்யேத" [உபாஸகன் மரண ஸமயத்தில் (பரமாத்ம விஷயமான) இம் மூன்று மந்திரங்களையும் ஜபிக்க வேண்டும்.] என்று தொடங்கிப் படிக்கப்படும் மந்திரங்களில் "அச்யுதமஸி" [அச்யுதனாகிறாய்] என்பதும் ஒன்று. இது பகவந் நாமங்களில் ஒன்று என்பது ஸுப்ரஸித்தம். "ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்" என்று நாராயண வல்லியிலும் படிக்கப்படுகிறது. இதனா லும் இங்கு படிக்கப்படுமவன் நாராயணனே என்பது தெளிவாகிறது. அடுத்த மந்திரத்திலும், "உத்வயம் தமஸஸ் பரி ஜ்யோதி:" என்றும், "அகந்ம ஜ்யோதிருத்தமம்" என்றும் படிக்கப்படும் வாக்யங்கள் "நாராயணபரோ ஜ்யோதி:" எனப்பட்ட நாராயணனுக்கே பொருந்தி யுள்ளன என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்படி முதல் ப்ரபாடகத்தில் புண்டரீகாக்ஷனை புருஷனே ப்ரஹ்மமென்று நிர்ணயித்து, மூன்றாவது ப்ரபாடகத்தில் அவன் தேவகீ புத்ரனான க்ருஷ்ணனே என்று கோஷித்தது. நான்கா வது ப்ரபாடகத்தில் மூன்றாவது கண்டத்தில் இவன் பிரமன் முத லிய தேவர்களைக்காட்டிலும் பெரியவன் என்றும், இவனை உபா ஸிப்பவர்களே கௌரவிக்கத் தகுந்தவர்கள் என்றும், ப்ரஹ்மாதி களை உபாஸிப்பவர்கள் கௌரவிக்கத் தக்கவர்களல்லர் என்றும் அறிவிப்பதற்காக ஒரு இதிஹாஸம் ஆரம்பிக்கப்படுகிறது:

"அத ஹ ஶௌநகஞ்ச காபேயம் அபிப்ரதாரிணஞ்ச
காக்ஷஸேநிம் பரிவிஷ்யமாணௌ ப்ரஹ்மசாரீ பிபிக்ஷே
தஸ்மா உ ஹ ந ததுः||"

[கபிகோத்ரத்திலுதித்த சௌநகரும், கக்ஷஸேனன் என்னுமரச னுடைய பிள்ளையான அபிப்ரதாரியும் போஜனம் செய்ய உட் கார்ந்திருக்கும்போது ஒரு ப்ரஹ்மசாரி பிக்ஷை கேட்டான். அவ னுக்கு அவர்கள் பிக்ஷை அளிக்கவில்லை.]

அபிப்ரதாரி என்பவன் சித்ரரத வம்சத்தைச் சேர்ந்தவனான ஓரரசன். அவனுக்கு யாகம் செய்விப்பவர் சௌநகர் என்னும் கபிகோத்ரரான ப்ராஹ்மணர். இருவரும் ப்ரஹ்மஜ்ஞானிகள். ஆதித்ய மண்டலாந்தர்வர்த்தியான புண்டரீகாக்ஷனே பரப்ரஹ்ம

http://acharya.org

மென்று அறிந்து அவனை உபாஸிப்பவர்கள். அவர்கள் உட்கார்ந்திருக்கும்போது ஒரு ப்ரஹ்மசாரி அங்கு பிக்ஷைக்கு வந்தான். அந்த ப்ரஹ்மசாரி ஸம்வர்க்க வித்யையை அநுஷ்டிப்பவனாகத் தன்னை அபிமானித்திருந்தான். ஆனால், அவன் ஸம்வர்க்க வித்யையை சரியாக அறியாதவன்; ஸம்வர்க்க வித்யையில் உபாஸிக்கப்படுபவன் புண்டரீகாக்ஷனே என்பதை உணராதவன்; ககார வாச்யனை ப்ரஹ்மாவே ஸம்வர்க்க வித்யையில் உபாஸிக்கப்படுபவன் என்று ப்ரமித்திருந்தவன்;

"யேऽப்யந்யதே3வதாப4க்தா யஜந்தே ச்ரத்3த4யாந்விதா: |
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி4பூர்வகம் ||"

[எவர்கள் மற்ற தேவதைகளுக்கு பக்தர்களாய், சிரத்தையுடன் அவர்களைப் பூஜிக்கிறார்களோ அவர்களும் என்னையே வழி தவறிப் பூஜிக்கிறார்கள்.] என்று கீதையில் கண்ணனால் சொல்லப்பட்ட கோஷ்டியைச்சேர்ந்தவன். இவனைக்கண்டவுடன், இவனுக்கு உண்மையை உணர்த்தி உய்விக்கவேண்டுமென்றும், பரமாத்மாவல்லாதவர்களை உபாஸிப்பவர்கள் கௌரவிக்கத்தக்கவர்களல்லர் என்னும் சாஸ்திரார்த்தத்தை அறிவிக்கவேண்டுமென்றும் எண்ணங்கொண்டு இவனுக்கு பிக்ஷையளிக்காமலேயே இருந்தனர் அவ்விருவரும். இதைக்கண்ட அந்த ப்ரஹ்மசாரி ராஜஸதேவதையை உபாஸிப்பவனாகையாலே கோபங்கொண்டு பின்வருமாறு சில வார்த்தைகள் சொல்லுகிறான்.

"காம ஏஷ க்ரோத4 ஏஷ ரஜோகு3ணஸமுத்3ப4வ:"

[காமம், க்ரோதம் எனப்படும் இது ரஜோகுணத்தாலுண்டாவது.] என்று கீதையில் சொல்லப்பட்டதன்றோ. ப்ரஹ்மா ரஜோகுணப்ரசுரமானவன் என்பது மைத்ராயணீய உபநிஷத் முதலிய வேதபாகங்களிலும், இதிஹாஸ புராணங்களிலும் அதிப்ரஸித்தமானது.

"ஸ ஹோவாச | மஹாத்மநஸ்4சதுரோ தே3வ ஏக:
கஸ் ஸ ஜகா3ர பு4வநஸ்ய கோ3பா: | தம் காபேய
நாபி4பஸ்1யந்தி மர்த்யா அபி4ப்ரதாரிந் ப3ஹுதா4 வஸந்தம்
யஸ்மை வா ஏதத3ந்நம் தஸ்மா ஏதந்ந த3த்தமிதி ||"

[அந்த ப்ரஹ்மசாரி சொன்னான்: — " மஹாப்ரபாவத்தையுடைய (அக்நி, ஆதித்யன், சந்த்ரன், ஜலம் என்னும்) நான்கு தேவர்

http://acharya.org

களையும், ஒப்பற்ற தேவனுய், உலகைக் காப்பவனுய், ககாரவாச்யனுன அப்பிரமனே ஸம்ஹரிக்கிறுன். காபேயரே! அபிப்ரதாரியே! பல படியாக விளங்கும் அப்பிரமதேவனை (உங்களைப்போன்ற) ஸாமாந்ய மனுஷ்யர்கள் காணமாட்டார்கள். எவனுக்கு இவ்வுல கெல்லாம் அன்னமோ, அவனுக்கு இவ்வன்னத்தை அளிக்க மறுத்துவிட்டீர்கள்.]

(தேவ ஏக:) ஒப்பற்ற தேவன். "திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்கிறபடியே உண்மையில் ஒப்பற்ற தேவனிருக்க, அவனுடைய பிள்ளையை ஒப்பற்றதேவனுக இவன் பிரமித்திருக்கிற படி. (புவநஸ்ய கோபா:) உலகை ரக்ஷிப்பவன்.

"ந ஹி பாலநஸாமர்த்$_{2}$யம் ருதே ஸர்வேஸ்$_{1}$வரம் ஹரிம் |
ஸ்தி$_{2}$தௌ ஸ்தி$_{2}$தம் மஹாப$_{4}$ாக$_{3}$ ப$_{4}$வத்யந்யஸ்ய கஸ்யசித் ||"

[ரக்ஷணத்திலே நிலை நிற்கும் ஸர்வேச்வரனை ஹரியைத்தவிர வேறெருவனிடத்தில் ரக்ஷணஸாமர்த்யம் கிடையாதன்றே.] என்கிற படியே அநேககோடி ப்ரஹ்மாண்டங்களைத் தன் சக்தியில் ஒரு திவலையாலே ரக்ஷித்துப்போருமவன் ஹரியே என்று பராசராதி பரமாத்மஜ்ஞானிகள் அறுதியிட்டிருக்கிற அவனுடைய அருளாலே ஒரு ப்ரஹ்மாண்டத்தைப் படைத்து நோக்கிப்போருமவனை ஸர்வ ரக்ஷகனுக ப்ரமிக்கிறுன் ப்ரஹ்மசாரி. (மஹாத்மநஸ்$_{1}$ சதுர: ஜகார) மஹாப்ரபாவத்தையுடைய நான்கு தேவர்களையும் அவனே ஸம்ஹரித்தான்.

"யஸ்ய ப்$_{3}$ரஹ்ம ச க்ஷத்ரம் உபே$_{4}$ ப$_{4}$வத ஓத$_{3}$ந:
ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்"

[எவனுக்கு ப்ராஹ்மண க்ஷத்ரியாதி வர்ணங்கள் உணவாகவும், யமன் ஊறுகாயாகவும் ஆகிறுனே...] என்று அவனுக்குச் சொல்லப் பட்ட ஸர்வஸம்ஹர்த்ருத்வத்தை இவன் மேலே ஏறிடுகிறுன். "புவநஸ்ய கோபா:" என்று ரக்ஷணத்தையும், "ஸ ஜகார" என்று அழித்தலையும் சொன்னது படைத்தலுக்கும் உபலக்ஷணம்: ப்ரஹ்மா ஸ்ருஷ்டிகர்த்தா என்று லோகத்தில் ப்ரஸித்தியுள்ளதா கையால் அதைச் சொல்லவேண்டியதில்லை என்று விடுத்தனன் போலும். இப்படிப்பட்ட பெருமைகளையுடையவன் யாரெனில்: (க:) 'க' என்னும் எழுத்தால் சொல்லப்படும் ப்ரஜாபதியான ப்ரஹ்மாவேஎன்கிறுன். "ப்ரஜாபதிஸ் ஸம்வத்ஸரோ மஹாந் க:"

http://acharya.org

" க இதி ப்ரஹ்மணோ நாம " முதலான ப்ரமாணங்களில் ககாரத்தி னல் சொல்லப்படுமவன் ப்ரஹ்மாவே என்னுமர்த்தம் அறிவிக்கப் பெற்றதன்றோ.

(காபேய) 'சௌநக' என்னுமல் 'காபேய' என்றது 'கபிவ்ருத் தியை உடையவனே!' என்னும் பொருளைக்கொண்டு நிந்திப்ப தற்காக. உன் பெயருக்குப் பொருந்தியதாகவே இருக்கிறது உன் செய்கை. பிறர் உணவை அபஹரித்து உண்பதையே தொழி லாகக் கொண்ட குரங்கு என்றுவது பிறர்க்கு உணவளிந்தா லன்றோ காபேயனை நீ பிறர்க்கு உணவளிப்பாய் என்று நிந்திக் கிறான். (அபிப்ரதாரிந்) அபிப்ரதாரி என்னும் பெயர் கொண்ட அரசனே! உன்பெயருக்குத்தக்கவாறு ப்ரதாரகனாகவே (வஞ்சக னாகவே) விளங்குகிறாய் என்று பாவம். (பஹுதா வஸந்தம் தம் மர்த்யா நாபிபச்யந்தி) பலபடியாக விளங்கும் அவனை மரணத் தையே இயற்கையாகக் கொண்ட உங்களைப் போன்றவர்கள் காணமாட்டார்கள். (பஹுதா வஸந்தம்) " அஜாயமானோ பஹுதா விஜாயதே" "ஸ விஜாயமாநஸ் ஸ ஜநிஷ்யமாண: ப்ரத்யங்முகாஸ் திஷ் டதி விச்வதோமுக:" என்று புருஷஸூக்த நாராயணவல்யாதி களில் பரமபுருஷனுக்குச் சொன்ன தர்மங்களை பிரமனுக்குச் சொல் லுகிறான். (மர்த்யா:) மரணதர்மாக்கள். பிறந்தும் இறந்தும் போரு வதையே இயற்கையாகக் கொண்ட உங்களைப் போன்றவர்கள்.

(யஸ்மை வா ஏதந்நம் தஸ்மா ஏதந்ந தத்தமிதி) எவனுக்கு இவ்வுலகெல்லாம் அன்னமாகிறதோ அவனுக்கு நீங்கள் அன்னமிட மறுத்துவிட்டீர்கள்; எனக்கு அன்னமிடாதது, என்னால் உபாஸிக்கப் படும் அவனுக்கு அன்னமிடாததாகவே முடியும் என்று தாத்பர்யம். "யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம்" முதலான விடங்களில் பரமபுருஷனுக்குச் சொன்ன ஸர்வஸம்ஹார்த்ருத்வத்தை இவன் தலையில் ஏறிடுகிறான். (யஸ்மை வா ஏதந்நம்) இந்த அன்னமானது எவனுடைய பொருளோ அவனுக்கு அதை அளிக்க மறுக்கிறீர்கள் என்றும் பொருள்கொள்ளலாம். "தத் புருஷஸ்ய விஸ்வம்" "பதிம் விஸ்வஸ்ய நாராயணம்" என்று நாராயணனிடத்திலே கிடக்கும் ஸ்வாமித்வத்தை நான்முகனிடத்திலுள்ளதாக நினைக்கிறான்.

இப்படி ப்ரஹ்மசாரியானவன் நிந்தை தோன்றச் சில வார்த் தைகளைச் சொன்னவுடன், சௌநகர், பரமாத்மஜ்ஞானியாகை யாலே அனிடத்தில் கோபம் சிறிதுமற்றவராய், தாங்கள் அவ

http://acharya.org

னுக்கு நேரே பிக்ஷை போடாததற்குக் காரணம் அவன் பரமபுருஷனை அறியாமல், ப்ரஹ்மாவை உபாஸிப்பதே என்று அறிவித்து அவனுக்குத் தங்களுடைய பரிசாரகர்களையிட்டு பிக்ஷை போடும்படி செய்கிறார்.

"தத்$_3$ ஹ ஶௌநக: காபேய: ப்ரதிமந்வாந: ப்ரத்யேயாய। ஆத்மா தே$_3$வாநாம் ஜநிதா ப்ரஜாநாம், ஹிரண்ய த$_3$ம்ஷ்ட்ரோ ப$_3$ப$_4$ஸோऽநஸூரி:। மஹாந்தமஸ்ய மஹிமாநமாஹுரநத்$_3$யமாநோ யத$_3$நந்நமத்தி॥ இதி வை வயம் ப்ரஹ்மசாரிந் நேத$_3$முபாஸ்மஹே, த$_3$த்தாऽஸ்மை பி$_4$க்ஷாமிதி॥"

[அப்படி அந்த ப்ரஹ்மசாரியால் சொல்லப்பட்ட வார்த்தைகளை மனத்தில் ஆலோசித்துக்கொண்டே சௌநகர் அவனுக்கருகில் சென்றார். "தேவர்கள் அனைவர்க்கும் ஆத்மாவாய், ப்ரஜைகள் எல்லாரையும் உண்டாக்கினவனாய், பொன்மயமான பற்களை உடையவனாய், ஆச்ரிதவிரோதிகளை ஸம்ஹரிப்பவனாய், ஸர்வஜ்ஞனாயுள்ள புண்டரீகாக்ஷ புருஷனே பரமாத்மா. அவனுடைய மஹிமை மிகப் பெரிதானது என்று சொல்லுகிறார்கள். ஒருவராலும் உண்ணப்படாமலே அவன் அன்னத்தைக்காட்டிலும் வேறுபட்ட விஷயங்களைச்சாப்பிடுகிறான். ஓ ப்ரஹ்மசாரியே! நாங்கள் உன்னால் உபாஸிக்கப்படும் ப்ரஹ்மாவை உபாஸிப்பதில்லை. பரமபுருஷனையே உபாஸிக்கிறோம். (பரிசாரகர்களே!) (இந்த ப்ரஹ்மசாரிக்கு) பிக்ஷையிடுங்கள்" என்றார்]

(ஆத்மா தேவாநாம்) உன்னால் உபாஸிக்கப்படும் ப்ரஜாபதியையுள்ளிட்ட எல்லா தேவர்கட்கும் ஆத்மாவாயிருப்பவன் இவன். "அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி" [எனக்கு சரீரபூதனான இந்த ஜீவனைக்கொண்டு அநுப்ரவேசித்து நாமரூபங்களைச் செய்யக்கடவேன்.] என்றும், "விச்வாத்மாநம் நாராயணம்" என்றும். "ஏஷ ஆத்மா அபஹதபாப்மா தி$_3$வ்யோ தே$_3$வ ஏகோ நாராயண:" என்றும் ஸர்வாத்மாவாயிருப்பவன் இவனேயன்றோ. இத்தால் "பு$_4$வநஸ்ய கோ$_3$பா:" என்று பிரமனுக்குச் சொல்லப்பட்ட ரக்ஷகத்வம் ஸர்வாத்மாவான இவனுக்கே பொருந்தும் என்று உணர்த்தப்படுகிறது. (ஜநிதா

http://acharya.org

ப்ரஜாபதயாம்) ப்ரஹ்மாவையுள்ளிட்ட ஸகல ப்ரஜைகளையும் ஸ்ருஷ்டித்தவன் இவனே. ''நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே'' ''யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்'' என்று வேதங்கள் உத்கோஷிக்கின்றனவன்றோ. இதனால் ப்ரஹ்மாவினிடமுள்ளதாகப் பாமரர் பிரமிக்கும் ஸ்ரஷ்ட்ருத்வமும் இவனிடமேயுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

இவன் யாரெனில்: (ஹிரண்யதம்ஷ்ட்ர:) பொன்போன்ற பற்களையுடையவன். ''அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே। ஹிரண்யஶ்மஶ்ருர் ஹிரண்யகேஶ ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண'' [ஆதித்யனுக்கு நடுவிலிருக்கும் பொன்மயனான புருஷனுக்கு, நகம் முதல் தலைமயிர் வரையில் எல்லாமே பொன்மயமாயிருப்பவை.] என்று முதல் ப்ரபாடகத்தில் படிக்கப்பட்ட புண்டரீகாக்ஷ புருஷனே இங்கு சொல்லப்படும் பரமாத்மா என்பது தெளிவாக விளங்குகிறது. ''ஹிரண்ய விதாரக தம்ஷ்ட்ராயுக்த இதி வா'' [ஹிரண்யனைக் கிழிக்குமடியான பற்களையுடையவன் என்றும் பொருள்கொள்ளலாம்.] என்றும் ரங்கராமாநுஜமுனி பொருளுரைப்பர். அப்போது ந்ருஸிம்ஹ ரூபியான பகவானைச் சொல்லுகிறார் என்று ஏற்படுகிறது. ''பயாபஹ:'' [பக்ஷணசீலன்] என்னும் பதமும் இப்பொருளுக்குப் பொருந்தியிருக்கும். ஹிரண்யனை நகத்தால் கிழித்ததாகவன்றோ புராண ப்ரஸித்தியுள்ளது என்னில், ப்ரஹ்லாதாழ்வானிடத்தில் அவன் செய்த அபசாரங்களால் கடுங்கோபங்கொண்ட ந்ருஸிம்ஹன், நகத்தால் கிழித்துக்கொன்று, அப்போதும் சீற்றமடங்காமல் பற்களால் கடித்து அவன் உதிரத்தை உறிஞ்சி மற்றும் பல காரியங்களும் செய்தான் என்றும் ப்ரஸித்தியுள்ளதாகையால், 'ஹிரண்யவிதாரகதம்ஷ்ட்ர:' என்று பொருள்கொள்ளக் குறையில்லை. எப்படியும், ஹிரண்மயனான புண்டரீகாக்ஷனான புருஷனைக் குறிக்கிறது இப்பதம் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. (பக்ஷண:) பக்ஷணசீலன்: ஆஸுரப்ரக்ருதிகளை அழிப்பவன். இத்தால், ''கஸ் ஸஜ்ஜகர்த்ர'' என்றும், ''யஸ்மை வா ஏதத்ஸந்தம்'' என்றும் பிரமனுக்குச்சொல்லப்பட்ட ஸம்ஹர்த்ருத்வம் இவனிடமே உள்ளதென்று உணர்த்தப்படுகிறது. ஆக, ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்பவன் இவனே என்றதாயிற்று. இப்படி ஸ்ருஷ்ட்யாதிகளைச் செய்வதற்கு அவச்யாபேக்ஷிதமான ஸர்வஜ்ஞத்வத்தை அடுத்தபடியாக அநுஸந்திக்கிறது. (அநஸூரி:) 'ஸூரி' என்றால் ஜ்ஞாநி. 'அஸூரி' என்றால் அஜ்ஞாநி. அநஸூரி என்றால் ஸர்வஜ்ஞன்.

http://acharya.org

(ஸநாதநஸ்ய மஹிமாநமாஹ :) இவனுடைய பெருமையைப் பெரிதென்று வேதாந்தங்கள் உரைக்கின்றன. ''புருஷம் மஹாந்தம்'' ''ஏதாவாநஸ்ய மஹிமா அதோ ஜ்யாயாம்ஸ்ச பூருஷ:'' [இவனுடைய மஹிமை இவ்வளவுதானே; இதைக்காட்டிலும் மேற்பட்டவனன்றோ புருஷன்] என்னும் புருஷஸூக்த வாக்கியங்களை நினைக்கிறது. ''ஸ்வே மஹிம்நி ப்ரதிஷ்டித: அதவா ந மஹிம்நி'' [இவன் தன மஹிமையிலே நிலைநிற்பவன்; அன்றிக்கே, ஒரு மஹிமையையும் ஆச்ரயியாதவன்.] ''க இத்தா வேத யத்ர ஸ:'' [அவன் எப்படிப் பட்டவன் என்பதை யாரறிவார்.] ''ஸோ அங்க வேத யதி வா ந வேத'' [தன் பெருமையை அவனே அறிவானோ அறியானோ] என்னும் வேதாந்த வாக்யங்களையும் நினைப்பது.

(அநத்யமாந:) அவன் ஒருவராலும் அன்னமிடப்படுவதில்லை. உனக்கு அன்னமிடாதது நீ உபாஸிக்கும் அவனுக்கு அன்ன மிடாததாகவே ஆகும் என்று சொன்னாய். பரமாத்மாவாயிருப்ப வனுக்கு ஒருவன் அன்னமிட வேண்டாகாண் என்கிறார். உன்னால் உபாஸிக்கப்படுபவன் ''தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி'' [பரமாத்ம ஜீவர்களான இரு பறவைகளில், ஜீவனாகிற ஒரு பறவை, கர்மபலமாகிற ஒரு இனிய கனியை உண்கிறது.] என்னும் ஜீவ கோஷ்டியில் சேர்ந்தவன். எங்ஙனால் உபாஸிக்கப்படுபவனோ வெனில் ''அநஸ்நந் அந்ய: அபிசாகஸீதி'' [அக்கனியை உண்ணாத பரமாத்மாவாகிற மற்றொரு பறவை பிரகாசித்துக்கொண்டு எழுந் தருளியிருக்கிறது.] எனப்பட்டவன் என்று பாவம். அவன் உண்ணும் பொருள் ஒன்றுமில்லையோ எனில்; (யதநந்நமத்தி) அசேதனப் பொருளான அன்னத்தைக்காட்டிலும் வேறுபட்டதான சேதனப் பொருள்களையே அவன் உண்பான். அதாவது சேதனர்களைத் தனக்காக்கி அநுபவிப்பதே அவனுக்கு ப்ரீதிகரம்; அசேதனமான உணவை அநுபவிப்பது அவனுக்குக்கிடையாது என்றபடி. உன் ஆத்மாவை அவனிடம் ஸமர்ப்பிக்கப்பாராய் என்று உபதேசிக்கிறார் கள். ''அஹமந்நம்'' என்று அருமறையிலும் ஆத்மவஸ்துவே அனந் தனுக்கு அன்னமாகிறது என்னுமர்த்தம் அறிவிக்கப்பட்டதன்றோ. (அநத்யமாநோ யதநந்நமத்தி) தான் ஒருவராலும் நாசம் செய் யப்படாதவனாய், வாகாதி இந்திரியங்களை நாசம் செய்பவன் என்றும் பொருளுரைப்பர்.

(இதி வை வயம் ப்ரஹ்மசாரிந் நேதமுபாஸ்மஹே) ஆகையால் நாங்கள் இப்பரமாத்மாவாகிற ஸம்வர்க்கனையே உபாஸிக்கிறோம்.

http://acharya.org

உன்றால் சொல்லப்பட்ட ப்ரஜாபதியையல்ல. (தத்தாஸ்மை பிக்ஷா மிதி) நீ பரமாத்மஜ்ஞானி யல்லவாகையால் நேரே பிக்ஷையிடத் தக்கவனல்லனென்றே வாளாவிருந்தோம். உனக்கு பிக்ஷையை மறுக்க எண்ணமில்லை. பரிசாரகர்களே! இவனுக்கு பிக்ஷையிடுங்கள் என்கிறார்கள். ஆக இத்தால் சுகாரவாச்யனான ப்ரஹ்மா பரமாத்மா வல்லனென்றும், புண்டரீகாக்ஷனே பரமாத்மாவென்றும் நிர்ணயிக்கப்பட்டதாயிற்று. பரமாத்மாவைத்தவிர மற்ற தெய்வங்களை உபாஸிப்பவர்கள் கௌரவிக்கத்தக்கவர்களல்லர் என்னும் ஸௌஹ்ரமார்த்தமும் உபதேசிக்கப்பட்டதாயிற்று. இவ்வர்த்தத்தை பட்டர் சரித்திரத்தில் நடந்ததான பின்வரும் ஐதிஹ்யத்திலிருந்தும் அறியலாம். இவ்வைதிஹ்யம் குருபரம்பரா ப்ரபாவாதிகளில் காணப்படுகிறது.

பட்டர் திருவோலக்கத்துக்குப் பலகாலும் சாஸ்திரியாயிருப்பானொரு ப்ராஹ்மணன் சென்று வருவான். அவனைக்கண்டால் பட்டரும், 'வந்தயோ போனுயோ' என்று ஸாமாந்யேத வ்யவஹரித்து முதலிகளைக்கொண்டு பிக்ஷையிடுவித்து அனுப்புவர். ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பலகாலும் பட்டரை ஸேவிக்க எழுந்தருளுவர். அவரைக் கண்டால் பட்டர் மிகவும் ஆதரித்து தாம் நேராக பஹுமானம் செய்து அனுப்புவர். இதைப் பலகாலும் கண்டிருந்தவர் ஒருவர், பட்டரை வந்து ஸேவித்து, "ஸ்வாமிந்! தேவரீர் திருவோலக்கத்திற்கு வருகிற சாஸ்திரி ப்ரஸித்தனாயிருக்கிறவன்; அவன் வந்தால் ஸாமான்யமாக வ்யவஹரித்தருளுகிறதும், ஒரு ஸாது வைஷ்ணவர் வந்தாரென்றால் அவரை மிகவும் ஆதரித்தருளுகிறதுமென்? எனக்கு அருளிச்செய்யவேணும்" என்று கேட்க, "அவர்களிருவரும் எப்போதும் போலே நாளையும் வருவார்கள்; அப்போது நீரும் எப்போதும்போலே பார்த்திரும்; உமக்கு விளங்கும்" என்று பட்டர் பதில் சொன்னார். மறுநாள் அந்த ப்ராஹ்மணன் வந்தவுடன், எப்போதும்போலே பட்டர் அவனை வினவியருளி, "நீர் ஆரைத்தான் பரதத்வமென்று நினைத்திருக்கிறது" என்ன, சாஸ்திரியும் 'சில ப்ரமாணங்கள் ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்றும், சில ப்ரமாணங்கள் ப்ரஹ்மாவே பரதத்வமென்றும், சில ப்ரமாணங்கள் ருத்ரனே பரதத்வமென்றும் சொல்லுகையாலே நம்மாலே நிச்சயிக்கப்போமோ" என்று பதில் சொல்ல, "நீர் போய் வாரும்" என்று அவனை அனுப்பினார். அவன் சென்றவுடன் ஸ்ரீ வைஷ்ணவர் எழுந்தருளி ஸேவிக்க, அவரை ஆதரித்து "தேவரீர் ஆரைத்தான் பரதத்வமென்று நினைத்திருக்கின்றது" என்ன, "ஸ்வாமி, தேவரீர், 'ஸ்ரிய:பதி நாராயணனே பர

http://acharya.org

தத்வம்' என்று அருளிச் செய்யுமே: அதொழிய அடியேன் வேறொன்று அறியேன்'' என்ன, '' நீர் உமக்குத் தஞ்சமாக நினைத் திருப்பதேது'' என்ன. '' எம்பெருமானார் திருவடிகளே உபாயோ பேயம் என்று ப்ரஸாதித்தருளுமே: அத்தையே தஞ்சமாக நினைத் திருப்பன்'' என்ன. திருவுள்ளமுகந்து ''அபசாரத்தை க்ஷமித் தருளித் திருமாளிகைக்கெழுந்தருளும்'' என்று அவரை விடை கொண்டு, பார்த்திருந்தவரைப் பார்த்து ''கண்டீரே இருவர்க்கு முண்டான தாரதம்யம்? ஆகையாலே இவரை வணங்கவோ? அவனை வணங்கவோ? இப்படியன்றோ ஸ்வரூப ஸ்திதி இருந்தது'' என்று அருளிச்செய்தார், இங்கு பட்டருடைய ஆசாரம் மேலே எடுக்கப்பட்ட வேத இதிஹாஸத்தை மூலமாகக் கொண்டதென்பது தெளிவு. நான்காவது ப்ரபாடகம், பதினைந்தாவது கண்டத்தில்

''ய ஏஷோऽக்ஷிணி புருஷோ த்$_3$ருஶ்யதே ஏஷ ஆத்மேதி ஹோவாச, ஏததம்ருதம் ஏதத$_3$ப$_4$யம் ஏதத்$_3$ ப்$_3$ரஹ்மேதி.... ஏதம் ஸம்யத்$_3$வாம இத்யாசக்ஷதே ஏதம் ஹி ஸர்வாணி வாமாந்யபி$_4$ஸம்யந்தி ஸர்வாணி வாமாந்யபி$_4$ஸம்யந்தி ய ஏவம் வேத$_3$ ||
ஏஷ உ ஏவ வாமநீரேஷ ஹி ஸர்வாணி வாமாநி நயதி ஸர்வாணி வாமாநி நயதி ய ஏவம் வேத ||''

[(யோகிகளால்) கண்ணிலே யாவனொரு புருஷன் பார்க்கப் படுகிறானோ, இவனே ஆத்மா என்றும், இவனே அம்ருதமென்றும், இவனே ப்ரஹ்மமென்றும் சொன்னார். இவனை ஸம்யத்வாமன் என்றும் சொல்லுகிறார்கள். விரும்பத்தக்க குணங்களெல்லாம் இவனை அடைந்திருக்கின்றனவன்றோ. எவன் இதை அறிகிறானோ அவனையும் விரும்பத்தக்க குணங்கள் வந்தடைகின்றன. இவனே யன்றோ வாமனி எனப்படுகிறான்; இவனேயன்றோ எல்லா வாமங் களையும் (அழகிய குணங்களையும்) (அடியார்களுக்கு) வரவழைக் கிறான். இதை அறிந்தவனும் எல்லா வாமங்களையும் (தன்னைச் சேர்ந்தவர்களுக்கும்) அளிப்பவன் ஆகிறான்.] என்று படிக்கப் பட்டது. புருஷசப்தம், வாமந சப்தத்தின் வேதவடிவமாகிற வாமநிசப்தம் ஆகிய இவ்விரண்டும் பரமபுருஷனுடைய திருநாமங் களாகையால் இந்த வாக்கியமும் பகவத்பரமே என்று விளங்குகிறது. ''அந்தர உபபத்தே:'' என்று தொடங்கும் அந்தராதிகரணத்தில் வேதவ்யாஸரும் இங்கு சொல்லப்படுமவன் பரமபுருஷனே என்று

http://acharya.org

அறிவித்தார். "யஸ்₁சக்ஷுஷி திஷ்டந்" என்னும் ஸுபாலோபநிஷத் வாக்யமும் கண்களிலுள்ள நிற்பவன் நாராயணனே என்று நிர்ணயித்தது. இவ்வுபநிஷத்திலேயே இவன் புண்டரீகாக்ஷ புருஷனே என்று முன் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இவற்றால் இவ்வாக்கியங்கள் பகவத்பரங்களே என்பது தெளிவாகிறது.

"யோ ஹ வா ஆயதநம் வேத₃ ஆயதநம் ஹ ஸ்வாநாம்
ப₄வதி மநோ ஹ வா ஆயதநம்"

[எவனொருவன் (பரமாத்மாவின்) இருப்பிடத்தை அறிகிறானோ அவன் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு இருப்பிடமாகிறான்; மனமன்றோ (பரமபுருஷனுக்கு) இருப்பிடம்] என்று ஐந்தாவது கண்டத்தின் ஆரம்பத்தில் படிக்கப்பட்டிருக்கும் வாக்யமும், "ஹ்ருத₃யம் தத்₃ விஜாநீயாத்₃ விஸ்₁வஸ்யாயதநம் மஹத" [அந்த ஹ்ருதயத்தையே விச்வசப்தத்தினால் சொல்லப்படும் விஷ்ணுவின் பெரிய கோயிலாக அறியக்கடவன்.] என்னும் நாராயணவல்லி வாக்யத்தில் நாராயணனின் நிவாஸமாகப் படிக்கப்பட்ட நெஞ்சையே 'ஆயதநம்' என்கிறதென்பது தெளிவாகிறது. இவ்வுபநிஷத்தின் நாலாவது ப்ரபாடகம் எட்டாவது கண்டத்தில் ப்ரஹ்மத்தை 'ஆயதநவாந்' என்று நிர்தேசித்திருப்பதும் நாராயணனையே குறிப்பதற்காக என்பதை உணரலாம். அங்கேயே இவனை 'அநந்தவாந்' என்று அநந்த சப்தத்திற்கு விவரணமாயிருக்கும் பதத்தால் குறித்ததும் இதை வலியுறுத்தும். இவைகளாலும் இவ்வுபநிஷத் அநந்த பரமே என்பதை அறியலாம்.

ஐந்தாவது ப்ரபாடகம் பதினோராவது கண்டத்திலிருந்து தொடங்கி, இருபத்துநாலாவது கண்டம் முடிய வைச்வாநரவித்யை உபதேசிக்கப்படுகிறது. இங்கு படிக்கப்படும் வைச்வாநரன் பரமாத்மாவே என்பதை வைச்வாநராதிகரணத்தில் வேதவ்யாஸர் விளக்கியருளினார். "புருஷமபி சைநமதீ₄யதே" [புருஷனென்றும் இந்த வைச்வானரனை மற்றொரு வேத வாக்யம் சொல்லுகிறது.] என்னும் ஸூத்திரப் பகுதியினால், "ஸ ஏஷோக்₃நிர் வைஸ்₁வாநரோ யத் புருஷ:" [எவனொருவன் புருஷசப்தத்தால் பிரஸித்தனாயுள்ளானோ அவனே இந்த வைச்வானராக்னியாவான்.] என்னும் அக்நி ரஹஸ்ய வைச்வானர வித்யையிலுள்ள வாக்கியத்தைக் காட்டுவதன் மூலம் புருஷசப்தவாச்யனான வாஸுதேவனே இப்பரமாத்மா என்பதையும் விளக்கியருளினார். "விஸ்₁வேஷாம் நராணும் நேதா—வைஸ்₁வாநர:" [எல்லா நரர்களையும் (நற்கதிக்கு) அழைத்துச்செல்லுகிறானுகையால்,

http://acharya.org

வைச்வாநரன் என்று சொல்லப்படுகிறான்.] என்னும் வ்யுத்பத்தியால் வைச்வாநரசப்தத்தைப் பரமாத்மபரமாகக் கொள்ளலாம். அன்றிக்கே, வைச்வாநரசப்தத்தால் சொல்லப்படும் ஜாடராக்னிக்கு ஆத்மாவாயிருப்பதால் வைச்வாநரன் என்றழைக்கப்படுகிறான் என்றும் கொள்ளலாம். இப்படிக் கொள்ளும்போது,

"அஹம் வைஸ்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாஸ்ரித:।
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம் ॥"

[நான் வைச்வாநர சரீரனாய் ப்ராணிகளின் தேஹத்தை அடைந்திருப்பவனாய், ப்ராணன், அபானம் முதலிய வாயுக்களுடன் கூடியவனாய் நான்கு விதமான அன்னத்தையும் பக்வம் செய்கிறேன்.] என்னும் கீதா வாக்யத்தை அநுஸரித்து இது க்ருஷ்ணபரமாகிறது. மேலும், பல உபப்ருஹ்மணங்களாலும் இந்த ப்ரகரணம் பரமபுருஷபரமாகிறது. இதை விளக்குமுன் இந்த ப்ரகரணத்தின் ஸாராம்சத்தைச் சொல்லவேண்டியது அவசியமாகிறது.

ப்ராசீநசாலர், ஸத்யயஜ்ஞர், இந்த்ரத்யும்னர், ஜனர், புடிலர் என்னும் ஐந்து மஹர்ஷிகள் கூடி "நமக்கு ஆத்மாவாயிருப்பவன் யார்? ப்ரஹ்மமென்பது எது?" என்று விசாரித்து, அறியாமல், வைச்வானராத்மாவை உபாஸிக்கும் உத்தாலகரையடைய, அவரும் இவ்வாத்மாவைப் பூர்ணமாக அறியாதவராகையாலே, எல்லோரும் சேர்ந்து வைச்வாநரோபாஸகனான கேகயதேசத்தரசனை அடைந்தனர். அவனும், இவர்கள் ஒவ்வொருவரையும் "நீங்கள் யாரை ஆத்மாவாக நினைத்திருக்கிறீர்கள்" என்று க்ரமமாகக் கேட்டான். "தேவலோகத்தை வைச்வானரனாக நினைத்திருக்கிறேன்" என்று ப்ராசீநசாலரும், "ஸூர்யனையே வைச்வாநரனாக நினைத்திருக்கிறேன்" என்று ஸத்ய யஜ்ஞரும், "வாயுவையே வைச்வானரனாக நினைத்திருக்கிறேன்" என்று இந்த்ரத்யும்னரும், "ஆகாசத்தையே வைச்வானரனாக உபாஸிக்கிறேன்" என்று ஜநரும், "ஜலத்தையே வைச்வானரனாக எண்ணியிருக்கிறேன்" என்று புடிலரும், "பூமியையே வைச்வானரனாக தியானிக்கிறேன்" என்று உத்தாலகரும் பதில் அளித்தனர். இதைக் கேட்டு அநந்தனே வைச்வானரனென்று அறிந்தவனான அவ்வரசன் "நீங்கள் சொன்னவையொன்றும் வைச்வாநரனன்று. பரமாத்மாவான வைச்வானரனுக்கு உங்களால் சொல்லப்பட்ட ஒவ்வொன்றும் அவயவமாயிருப்பவை: தேவலோகமே அவனுடைய தலை; ஸூர்யனே அவனுடைய கண்; வாயுவே அவனுடைய ப்ராணன்; ஆகாசமே அவனுடைய

http://acharya.org

இடை; ஜலமே அவனுடைய மூத்திரஸ்தானம்; பூமியே அவனுடைய பாதம்'' என்று உபதேசித்தான். இவ்வுபதேசம் ஸர்வபூதாந்தராத்மாவான நாராயணனுக்கே பொருந்தியுள்ளது என்பது

''அக்₃நிர் மூர்த்₃தா₄ சக்ஷுஷீ சந்த்₃ரஸூர்யௌ
திஃ₃ஶ: ஶ்₂ரோத்ரே வாக்₃விவ்ருதாஶ்ச வேதா₃:।
வாயு: ப்ராணோ ஹ்ருத₃யம் விஶ்₃வமஸ்ய
பத்₃ப்₄யாம் ப்ருதி₂வீ ஹ்யேஷ ஸர்வபூ₄தாந்தராத்மா ॥''

[அக்னி சப்தத்தினால் சொல்லப்படும் தேவலோகம் இப்பரம புருஷனுக்குத் தலையாகவும், சந்திரஸூர்யர்கள் கண்களாகவும், திக்குகள் காதுகளாகவும், வேதங்கள் வார்த்தைகளாகவும், வாயுவே ப்ராணனாகவும், உலகமெல்லாம் ஹ்ருதயமாகவும், ப்ருதிவி கால்களாகவும் சொல்லப்படுகின்றன. இவனே ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாயிருப்பவன்.] என்ற முண்டகோபநிஷத் வாக்யத்திலிருந்தும்,

''சந்த்₃ரமா மநஸோ ஜாத: சக்ஷோஸ் ஸூர்யோ அஜாயத।
முகா₂தி₃ந்த்₃ரஶ்₂சாக்₃நிஶ்₂ச ப்ராணாத்₃ வாயுரஜாயத ॥''

[அப்பரமபுருஷனுடைய மனஸ்ஸில் நின்றும் சந்திரன் உண்டானான்; கண்ணிலிருந்து ஸூர்யன் தோன்றினான்; முகத்திலிருந்து இந்திரனும், அக்னியும், ஜனித்தார்கள்; ப்ராணனிலிருந்து வாயு பிறந்தான்.]

''நாப்₄யா ஆஸீத₃ந்தரிக்ஷம் ஶீர்ஷ்ணோ த்₃யௌஸ் ஸமவர்த்தத।
பத்₃ப்₄யாம்பூ₄மிர் தி₃ஶஸ்₂ ஶ்₃ரோத்ராத் ததா₂ லோகாநகல்பயந்॥''

[நாபியிலிருந்து அந்தரிக்ஷம் உண்டாயிற்று; தலையிலிருந்து தேவலோகம் தோன்றிற்று; பாதங்களிலின்றும் பூமி பிறந்தது; திக்குகள் காதுகளிலிருந்து தோன்றின; இம்மாதிரியாக லோகங்களைப் படைத்தான்.] என்ற புருஷஸூக்த மந்திரங்களிலிருந்தும்,

''க்ஷிதி: பாதௌ₃ த்₃யௌ₄ வா தே₃வ
த்₃ருக்₃பா₂ஹு த்₃யௌர் மஹாஶிர:।
மூர்த்திஸ்தேஹம் ஸூரா: காயா:
சந்த்₃ராதி₃த்யௌ ச சக்ஷுஷீ ॥''

என்ற மஹாபாரத பீஷ்மபர்வ வசனத்தாலும்,

http://acharya.org

"யஸ்யாக்3நிராஸ்யம் த்3யௌர் மூர்த்தா4
க2ம் நாபி4: சரணௌ க்ஷிதி: |
ஸூர்ய ஶ்சக்ஷுர்: தி3ஶ: ச்ரோத்ரம்
தஸ்மை லோகாத்மநே நம: ||

[எவனுக்கு அக்னியானது முகமாகவும், தேவலோகம் தலையாகவும், ஆகாசம் நாபியாகவும், பாதங்கள் பூமியாகவும், ஸூர்யன் கண்ணாகவும், திசைகள் காதாகவும் இருக்கின்றனவோ, உலகையெல்லாம் சரீரமாகக்கொண்ட அந்த பகவானுக்கு நமஸ்காரம்.] என்ற சாந்தி பர்வச்லோகத்தாலும்,

"நாராயணஸ்ய சாங்கா3நி ஸர்வதை3வாநி பா4ரத |
ஶிரஶ்ச ஹி தி3வம் ராஜந் நாபி4: க2ம் சரணௌ மஹீ ||
அஶ்2விநீ கர்ணயோர் தே3வௌ சக்ஷுஷீ ஶஶிபா4ஸ்கரௌ ||"

[பரதகுலத்திலுதித்தவனே! எல்லா தேவர்களும் நாராயணனுடைய அங்கங்களாகின்றனர்; தேவலோகம் அவனுடைய தலையாகவும், ஆகாசம் நாபியாகவும், பூமி திருவடிகளாகவும், அச்விநீ தேவர்கள் காதுகளாகவும், சந்திரஸூர்யர்கள் கண்களாகவும் ஆகின்றனர்.] என்று ஸபாபர்வத்தில் அக்ரபூஜாப்ரஸ்தாவஸமயத்தில் உரைக்கப்பட்ட வசனங்களாலும்,

"நாபி4ர் நபோ4ऽக்3நிர் முக2மம்பு3 ரேதோ
த்3யௌ: ஶீர்ஷமாஶா: ஸ்3ருதிரங்க்4ரிருர்வீ |
சந்த்3ரோ மநோ யஸ்ய த்3ருக3ர்க்க ஆத்மா
ஹ்யஹம் ஸமுத்3ரோ ஜட2ரம் பு4ஜேந்த்3ர: ||"

[ஆகாசமே (உன்னுடைய) நாபி; அக்னியே முகம்; ஜலமேரேதஸ்; ஸ்வர்க்கமே தலை; திக்குகளே செவிகள்; பூமியே திருவடிகள்; சந்திரனே மனஸ்; அஹங்காரம் சிவனாகிய நானே; ஸமுத்ரமே வயிறு; இந்திரனே புஜங்கள்;] என்று பாகவதத்திலும்,

"மநஸஸ் தவ தே3வேஶ சந்த்3ரமாஸ் ஸமபத்3யத |
அக்ஷ்ணோஸ் ஸூர்யஸ் ஸமுத்பந்ந: ஸர்வப்ராணிவிலோசந: ||
முகா2தி3ந்த்3ராஸ் ததா2க்3நிஸ்2ச ப்ராணாத்3 வாயுரஜாயத |
நாபே4ர் வ்யோம ஸமுத்பந்நம் தவ தே3வ ஜநார்த3ந ||

http://acharya.org

த்₃யௌராஸீத் து மஹாகோ₄ரா ஶிரஸஸ் தவ கோ₃பதே ।
பத₃ப்₄யாம் பூ₄மிஸ் ஸமுத்பந்நா தி₃ஶ: ஸ்₃ரோத்ராத் ஜக₃த்பதே ॥
ஏவம் ஸ்ருஷ்ட்வா ஜக₃த் ஸர்வம் வ்யாப்ய ஸர்வமவஸ்தி₂த: ।''

[தேவேசனே! உன் மனத்திலிருந்து சந்திரன் உண்டானான்; எல்லாச் சேதனர்க்கும் கண்ணாயிருக்கும் ஸூர்யன் கண்ணி லிருந்து தோன்றினான்; முகத்திலிருந்து இந்திரனும் அக்னியும், ப்ராணனிடமிருந்து வாயுவும் உண்டாயினர். ஜநார்த்தனனே! உன் நாபியிலிருந்து ஆகாசம் உண்டாயிற்று. கோபதியே! மஹாகோர மான ப்ரகாசத்தையுடைய தேவலோகம் உன்னுடைய தலையிலிருந்து தோன்றிற்று. ஜகத்பதியே! உன் திருவடிகளிலிருந்து பூமியும் காதுகளிலிருந்து திக்குகளும் உண்டாயின. இப்படி எல்லா உலகை யும் ஸ்ருஷ்டித்து அவற்றை வியாபித்து விளங்குகிறாய் நீ.] என்று ஹரிவம்சத்தின் கைலாஸயாத்ராப்ரகரணத்திலும் படிக்கப்பட்ட சிவவசனங்களாலும்,

''நாபி₄தோ க₃க₃நம் த்₃யௌஶ்ச ஶிரஸஸ் ஸமவர்த்தத ।
அக்ஷ்ணோ: ஸூர்யோऽநில: ப்ராணாத் சந்த்₃ரமா மநஸஸ்தவ ॥''

[உம்முடைய நாபியிலிருந்து ஆகாசமும், தலையிலிருந்து தேவ லோகமும், கண்களிலிருந்து ஸூர்யனும், ப்ராணனிலிருந்து வாயு வும், மனஸ்ஸிலிருந்து சந்திரனும் உண்டாயின.] என்று விஷ்ணு புராணத்தில் துருவனாலும்,

''பூ₄: பாதௌ₃ யஸ்ய நாபி₄ர்
வியத₃ஸுரநிலஶ் சந்த்₃ரஸூர்யௌ ச நேத்ரே ।
கர்ணாவாஶா: ஶிரோ த்₃யௌர்
முக₂மபி த₃ஹநோ யஸ்ய வாஸ்தேயமப்₃தி₄: ॥
அந்த:ஸ்த₂ம் யஸ்ய விஶ்வம்
ஸுரநரக₂க₃கோ₃பே₄கி₃க₃ந்த₄ர்வதை₃த்யை: ।
சித்ரம் ரம்ரம்யதே தம்
த்ரிபு₄வநவபுஷம் விஷ்ணுமீஶம் நமாமி ॥''

[எவனுக்கு பூமி திருவடிகளாகவும், ஆகாசம் நாபியாகவும், வாயுவே ப்ராணனாகவும், சந்திரஸூர்யர்கள் கண்களாகவும், திசைகள் காதுகளாகவும், தேவலோகம் தலையாகவும், அக்னி முக மாகவும், கடல் வஸ்திகாயமாகவும் ஆகின்றனவோ, எவனுக்குள்

http://acharya.org

ளிருக்கும் உலகம், தேவர்கள், மனிதர்கள், பக்ஷிகள், பிராணிகள், பாம்புகள், கந்தருவர்கள், அஸுரர்கள் ஆகியவைகளால் விளங்குகின்றதோ, மூவுலகையும் உடலாகக்கொண்ட விஷ்ணுவாகிய அந்த ஈசனை வணங்குகிறேன்.] என்று ஸஹஸ்ரநாமாத்யாயத்திலும் படிக்கப்படும் வசனங்களாலும்,

"த்₃யாம் மூர்த்த₄ாநம் யஸ்ய விப்ரா வத₃ந்தி
கம்₂ வை நாபி₄ம் சந்த்₃ரஸூர்யௌ ச நேத்ரே।
தி₃ஶ: ஸ்₂ரோத்ரே வித்₃தி₄ பாதௌ₃ க்ஷிதிம் ச
ஸோऽசிந்த்யாத்மா ஸர்வபூ₄தப்ரணேதா ||"

என்று ஸ்ரீ பாஷ்யத்திலெடுக்கப்பட்டதொரு புராண வசனத்தாலும் விளங்குகிறது.

ஆறுவது ப்ரபாடகம், இரண்டாவது கண்டத்தில் படிக்கப்படும் "ஸதே₃வ ஸோம்யேத₃மக்₃ர ஆஸீத்" என்னும் வாக்யமும், "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஸா₂ந:" என்ற மஹோபநிஷத் வாக்யத்தாலே நாராயணைகப்ரதிபாதகம் என்று நிர்ணயிக்கப்பட்டது.

"யந்மூலகாரணமபு₃த்₃யத ஸ்ருஷ்டிவாக்யைர்
ப்₃ரஹ்மேதி வா ஸதி₃தி வாத்மகி₃ராத₂ வா தத்।
நாராயணஸ் த்வதி மஹோபநிஷத்₃ ப்₃ரவீதி
ஸௌபா₃லிகீப்ரப்₄ருதயோऽப்யநுஜக்₃முரேநாம் ||"

[ஸ்ருஷ்டிவாக்யங்களிலே யாதொரு வஸ்துவானது 'ப்ரஹ்மம்' 'ஸத்' 'ஆத்மா' என்னும் சொற்களாலே மூலகாரணமாகப் படிக்கப்படுகிறதோ, அவ்வஸ்து நாராயணனே என்று மஹோபநிஷத்து சொல்லுகிறது. ஸுபாலோபநிஷத்து முதலானவையும் இதைப் பின் செல்லுகின்றன.] என்று ஆசார்யவர்யரான கூரத்தாழ்வாலும் இவ்வர்த்தத்தை அருளிச்செய்தார்.

"ஏஷ து வா அதிவத₃தி யஸ் ஸத்யேந அதிவத₃தி
ஸோऽஹம் ப₄க₃வஸ் ஸத்யேந அதிவதா₃நீதி ஸத்யம்
த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யமிதி ஸத்யம் ப₄க₃வோ
விஜிஜ்ஞாஸ இதி ||"

[எவனொருவன் ஸத்யசப்தவாச்யமான ப்ரஹ்மவிஷயத்தில் அதிவாதம் செய்கிருனே, அவனே அதிவாதிகளில் சிறந்தவன். **சிஷ்யன்:** — பகவானே! நான் ஸத்யசப்தவாச்யனை அநந்தன்

http://acharya.org

விஷயத்திலேயே அதிவாதம் செய்கிறேன். ஆசிரியன்:—அப்போது நீ ஸத்யத்தை உபாஸிக்கவேண்டும். சிஷ்யன்:—நான் ஸத்யத்தை உபாஸிக்கிறேன்.] என்று ஏழாவது ப்ரபாடகம் பதினாறுவது கண்டத்தில் ஸத்யசப்தவாச்யனை ப்ரஹ்மவிஷயத்தில் அதிவாதம் செய்யவேண்டும் என்று விதித்தது. இங்கு ஸத்யசப்தந்தினால் குறிக்கப்பட்ட ப்ரஹ்மம் அநந்தனே என்பதை ''ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம'' என்னும் தைத்திரியவாக்யம் விவரித்துத் தருகிறது. ஆக, அநந்தவிஷயமாக அதிவாதம்செய்யவேண்டும் என்றதாயிற்று. அதிவாதமாவது — பரத்வநிர்ணயம். ''விஜாநந் வித்₃வாந் ப₄வதேநாதிவாதீ₃'' என்று முண்டகோபனிஷத்திலும் இம்மாதிரி விதிக்கப்பட்டதை நினைப்பது. விஷ்ணுசித்தவிஜயத்திற்கு இவையிரண்டும் விதிவாக்யமாயிருக்கிறபடி. இப்படி அதிவாதம் செய்யவேண்டுமென்று விதித்ததோடல்லாமல், 'அதிவாதம் செய்கிறான்' என்று பிறர் பரிஹஸித்தாலும், ''ஆம்; நான் அதிவாதம் செய்கிறேன்; அதில் என்ன தவறு?'' என்று பதில் சொல்லவேண்டுமென்றும், அதிவாதம் செய்வதை மறைக்கக்கூடாதென்றும் தெளிவாகக் தெரிவிக்கிறது ''தஞ்சேத்₃ ப்₃ரூயுரதிவாத்₃யஸீதி அதிவாத்₃யஸ்மீதி ப்₃ரூயாத் ந அபஹ்நுவீத'' [அந்த அதிவாதியை, ''நீ அதிவாதியாயிருக்கிறாய்'' என்று சொன்னார்களாகில், ''ஆம்; நான் அதிவாதி தான்'' என்று சொல்லக்கடவன். அதை மறைக்கக் கூடாது.] என்னும் வாக்யத்தாலே. ''ஓ ஓ உலகினதியல்வே'' என்ற நம்மாழ்வாரைப்போலே, வேதபுருஷன் உலகியல்வை உள்ளபடி உரைத்திருக்கும் அழகை என்னென்று சொல்வது! மஹான்களும் மயங்கி, நாராயணபரத்வத்தை நினைக்கவும் நடுங்கி, சொல்லவும் தயங்கி, பிரஸங்கிக்கவும் பயப்படுவதோடல்லாமல், இந்தளத்திலே தாமரை பூத்தாப்போலே யாராவது ஒருவர் பரதத்வநிர்ணயம் செய்யமுற்பட்டால், அவரைப் பரிஹஸிப்பதும், இடையூறு விளைவிப்பதும் கண்ணைப் பிடுங்குவதும் செய்யும்படியன்றோ உலகியல்பு இருக்கிறது. எவர் எவ்விதம் பேசினாலும், ஏசினாலும் அதிவாதித்₃வத்தை வெட்கப்பட்டு மறைத்துக்கொள்ளக்கூடாது என்று வேதபுருஷன் வெளியிடுகிறான் இங்கு.

''பேயரே எனக்கியாவரும் யானுமோர்
பேயனே எவர்க்கும் இது பேசியென்?
ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன்
பேயனா யொழிந்தே னெம்பிரானுக்கே''

http://acharya.org

என்று குலசேகரரும், ''பித்தரென்றே பிறர் கூற...உலோகர் சிரிக்க நின்றுடி'' என்று நம்மாழ்வாரும் இந்த மநோபாவத்தை வெளியிட்டனர். மிளகாழ்வான் வார்த்தையையும் அநுஸந்திப்பது. விஷ்ணுசித்தவிஜயத்தின் ஆரம்பத்தில் எழுதிய விஷயங்களையும் படிப்பது. ''தஞ்சேத் ப்ருயு:' என்னும் வாக்கியம் ப்ராணசப்த நிர்திஷ்ட ஜீவ விஷயமான அதிவாதியைக்குறித்துப் படிக்கப்பட்ட போதிலும், அடுத்தபடியாகவுள்ள ஸத்யசப்தவாச்ய ப்ரஹ்ம விஷயமான அதிவாதிக்கும் அந்வயிக்கலாம்.

''ஏஷ ஆத்மாऽபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்
விசோகோ விஜிகத்ஸோऽபிபாஸஸ் ஸத்யகாமஸ்
ஸத்யஸங்கல்ப :॥''

[இந்தப் பரமாத்மா, பாபமற்றவன்; கிழத்தனமில்லாதவன்: மரணமற்றவன்; சோகரஹிதன்; பசி, தாஹமற்றவன்; நித்யமான (போக்யபோகோபகரண போகஸ்தான ரூபமான) காமங்களை உடையவன்; வீணாகாத ஸங்கல்பத்தை உடையவன்.] என்று எட்டாவது ப்ரபாடகத்தில் ஆதியில் படிக்கப்பட்ட வாக்யத்தை, ''ஏஷ ஸர்வ பூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:'' [இவனே ஸர்வபூதாந்தராத்மாவாய், பாபம் நீங்கப்பெற்றவனாய், அத்விதீயனான நாராயணனென்னும் தேவன்,] என்னும் ஸுபாலோபநிஷத் வாக்யம் நாராயணபரமென்று நிர்ணயித்தது. இவ்வாக்யம், ''அபஹதபாப்மா.........அபிபாஸ:'' என்று ஹேய குணங்களைத் தள்ளி, ''ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:'' என்று கல்யாணகுணங்களை விதிப்பதன் மூலம் ஸகுண நிர்க்குணச்ருதிகளின் தாத்பர்யத்தை அறிவிக்கையாலே நிர்க்குணப்ரஹ்மவாதத்தையும் நிர்மூலமாக்குகிறது.

''ய ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்
சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதி
ரூபஸம்பத்ய...தஸ்ய ஹ வா ஏதஸ்ய
ப்ரஹ்மணோ நாம ஸத்யமிதி''

[இந்த ஜீவன் இந்த சரீரத்தினின்றும் கிளம்பி, பரஞ்சோதியை அடைகிறான். அந்தப் பரஞ்சோதியின் பெயர் ஸத்யமென்பது.] என்று எட்டாவது ப்ரபாடகம், மூன்றாவது கண்டத்தில் படிக்கப்படும் ''பரஞ்ஜ்யோதி:'' என்னும் சப்தம், ''நாராயண பரோஜ்யோதி:''

http://acharya.org

என்னும் நாராயணைஸூக்த வாக்யத்தாலும், ஸத்யகாம்ம், "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்$_3$ரஹ்ம" என்னும் தைத்திரீய வாக்யத்தாலும் நாரா யணபரமாக விவரிக்கப்பட்டன. பனிரண்டாவது கண்டத்தில் "ஏஷ ஸம்ப்ரஸாதே$_3$ா...உபஸம்பத்$_3$ய" என்னும் பரஞ்ஜ்யோதிச் சப்த கடிக வாக்யத்தை மறுபடியும் படித்து, அதிலும் திருப்தியுறுமல் "ஸ உத்தம: புருஷ:" என்று பகவானுக்கே அஸாதாரணமான புருஷோத்தம சப்தத்தையும் பிரித்துப் படிக்கிறது பண்டை மறை.

"த்$_3$வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஸ்$_2$சாக்ஷர ஏவ ச |
க்ஷரஸ்ஸர்வாணி பூ$_4$தாநி கூடஸ்தே$_2$ா(அ)க்ஷர உச்யதே ||
உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா$_3$ஹ்ருத: |
யோ லோகத்ரயமாவிஸ்$_2$ய பி$_3$ப$_4$ர்த்யவ்யய ஈச்வர: ||
யஸ்மாத் க்ஷரமதீதோ(அ)ஹம் அக்ஷராத$_3$பி சோத்தம: |
அதோ(அ)ஸ்மி லோகே வேதே$_3$ ச ப்ரதி$_2$த: புருஷோத்தம: ||"

[உலகில் க்ஷரன் என்றும், அக்ஷரன் என்றும் இரண்டு புருஷர்கள் பிரஸித்தி பெற்றவர்கள்; ஸர்வபூதங்களாகிற பத்தஜீவன் க்ஷரன்; கூடஸ்தனான முக்தன் அக்ஷரன். பரமாத்மாவென்று சுருதிகளில் சொல்லப்படும் உத்தம புருஷனோவெனில் இவ்விருவரைக்காட்டிலும் வேறானவன். அழிவற்றவனும், ஈச்வரனுமுள்ள அவன் (அசித், க்ஷரபுருஷன், அக்ஷரபுருஷன் ஆகிய) லோகத்ரயத்தையும் வியாபித்து தரிக்கிறன். க்ஷரபுருஷனைக்காட்டிலும் அதிவிலக்ஷணனு யிருக்கையாலும், அக்ஷரபுருஷனைக்காட்டிலும் உத்தமனுயிருக்கை யாலும், ச்ருதிஸ்ம்ருதிகளில் நான் புருஷோத்தமன் என்று பிரஸித்தி பெற்றிருக்கிறேன்.] என்று பகவத்கீதையில் பகவானுலேயே இவ் வாக்யம் தன்னையே சொல்லுவதென்று காட்டப்பட்டது. "உத்தம: புருஷ." என்றும், "வேதே$_3$ ச ப்ரதி$_2$த: புருஷோத்தம:" என்றும் சொன்னதிலிருந்து இவ்வேதவாக்யத்தையே நினைக்கிறன் பகவான் என்பது அதிஸ்பஷ்டம்.

கடைசியாக, "ஸ்$_2$யாமாச்ச$_2$ப$_3$ளம் ப்ரபத்$_3$யே ஸ$_2$ப$_3$ளாத் ஸ்$_2$யாமம் ப்ர பத்$_3$யே" [ச்யாமவிக்ரஹ விசிஷ்டனுன பரமாத்மாவை உபாஸித்து விட்டு, சித் அசித்துகளோடு கலந்த பரமாத்மாவை உபாஸிக் கிறேன்; சிதசித்விசிஷ்டனை உபாஸித்துவிட்டு, ச்யாமவிக்ரஹ விசிஷ்டனை உபாஸிக்கிறேன்.] என்று மூன்று விதமான உபாஸ னங்களைச் சொல்லும்போது, பரமாத்மாவை ச்யாமவர்ணனுகச் சொல்லியிருப்பதிலிருந்தும், "நீலதோயத$_3$ மத்$_4$யஸ்தா$_2$" முதலான

http://acharya.org

ச்ருதிகளிலும், "மேகச்யாமம்" முதலான ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்பட்டவனே இவ்வுபநிஷத்தில் ப்ரதிபாதிக்கப்படுபவன் என்று விளங்குகிறது. "புண்டரீகமேவமக்ஷிணீ" என்று செந்தாமரைக் கண்ணனுடைய திருக்கண்ணழகை ஆரம்பத்தில் அநுஸந்தித்து விட்டு, இங்கு, 'ச்யாமம்' என்று நீலமேகச்யாமளவர்ணனுடைய திருமேனியழகை அநுபவிக்கிறது. "அஸ்வ இவ ரோமாணி" என்னும் அடுத்தமந்திரத்தாலே, இப்படி பகவானை உபாஸிப்பவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான் என்னுமர்த்தமும் அறிவிக்கப் படுகிறது. கடைசியில்

"ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோக-மபிஸம்பத்யதே, ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே"

[ப்ரஹ்மஜ்ஞானியானவன், ஆயுள்வரையில் இம்மாதிரியிருந்து கொண்டு, ப்ரஹ்மலோகத்தை அடைகிறான். (அங்கிருந்து) திரும்பி வருவதில்லை;] என்று ப்ரஹ்மஜ்ஞானிக்குப் பலமான ப்ரஹ்ம லோக ப்ராப்தியையும், அது புநராவ்ருத்தியற்றது என்பதையும் படித்து முடிக்கிறது இவ்வுபநிஷத். இவ்வர்த்தத்தையே

"வாயினால் நமோ நாரணாவென்று
மத்தகத்திடைக் கைகளைக்கூப்பி
போயினால் பின்னை இத்திசைக்
கென்றும் பிணைகொடுக்கிலும்
போகவொட்டாரே"

என்று பெரியாழ்வாரும் அருளிச்செய்தார்.

ஆரம்பத்திலே, "கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்று புண்டரீகாக்ஷனை ஆதித்யாந்தர்வர்த்தியான ப்ரஹ்மமென்று நிர்ணயித்து, "தாவாநஸ்ய மஹிமா! ததோ ஜ்யாயாம்ஸ்ச புருஷ:" என்று புருஷஸூக்த மந்திரச்சாயையில் படிப்பதன்மூலம் புருஷோத்தமனே இவன் என்பதை உணர்த்தி, "தேவகீபுத்ராய க்ருஷ்ணாய" என்று இவனே தேவகீபுத்ரனான க்ருஷ்ணனாய்த் திருவவதரித்தவன் என்று அறிவித்து, "அச்யுதமஸி" என்று அச்யுதநாமத்தையும் இவன் விஷயமாகப் படித்து, தேவதாந்தரோபாஸகர்கள் கௌரவ்யரல்லர் என்னும் அர்த்தத்தையும் இதிஹாஸமூலமாக வெளியிட்டு, இவனே யோகிகளால் கண்ணில் தியானிக்கப்படும் புருஷன் என்று நிர்ணயம்

http://acharya.org

செய்து, ஸர்வலோகசரீரகனை வைச்வாநராத்மாவும் இவனே என்று நிர்த்தாரணம்செய்து, இவன் விஷயத்தில் அதிவாதம் செய்ய வேண்டுமென்று விதித்து, பரஞ்சோதியெனப்படும் நாராயணனே இவனென்று காட்டி, உத்தமபுருஷன் இவனேயென்று உரைத்து, ச்யாமவர்ணனை இவனையே உபாஸிக்கவேண்டுமென விதித்து இப்படி உபாஸிப்பவர்களுக்குத் திரும்பி வருதலற்ற ப்ரஹ்மலோக ப்ராப்தியுண்டென்று உத்கோஷிக்கும் இச் சாந்தோக்ய உபநிஷத் நாராயணனையே ஸர்வோத்க்ருஷ்டனாகச் சொல்லுகிறது என்பதில் என்ன ஸந்தேஹம் இருக்கமுடியும்?

ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் ப்ரஹ்மநிர்ணயம்

இவ்வுபநிஷத் சுக்ல யஜுர் வேதம் காண்வசாகையைச் சேர்ந்தது. தசோபநிஷத்துக்களுள் மிகப் பெரிய உபநிஷத் இதுவேயாகும். மிகப் பெரியதாயிருக்கையாலும், ஆரண்யத்திலே ரிஷிகளால் ப்ரவர்த்திப்பிக்கப்பட்டதாகையாலும் ப்ருஹதாரண்யகம் என்னும் பெயர் பெற்றிருக்கிறது. இதில் நாராயண பரத்வ நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறபடியைக் காண்போம்.

''நைவேஹ கிஞ்சநாக்$_{3}$ர ஆஸீத்
ம்ருத்யுநைவேத$_{3}$ம் ஆவ்ருதமாஸீத்''

[ஆதிகாலத்தில் இங்கு ஒன்றும் இல்லை; 'ம்ருத்யு' எனப்படும் ஸூக்ஷ்மப்ரக்ருதி சரீரகனை பரமாத்மாவாலேயே இதெல்லாம் வியாபிக்கப்பட்டிருந்தது] என்று இவ்வுபநிஷத்தின் ஆரம்பத்தில் இரண்டாவது ப்ராஹ்மணத்தில் படிக்கப்படும் வாக்யம், ''ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்$_{3}$ரஹ்மா நேசா$_{2}$ந:'' என்று மஹோபநிஷத்திலும், ''நைவேஹ கிஞ்சநாக்$_{3}$ர ஆஸீத், தி$_{3}$வ்யோ தே$_{3}$வ ஏகோ நாராயண:'' ''யஸ்ய ம்ருத்யு: சரீரம் ஏஷ ஸர்வபூ$_{4}$தாந்தராத்மா நாராயண:'' என்று ஸுபாலோபநிஷத்திலும் படிக்கப்படும் வாக்யங்களுக்கு ஸ்மாரகமாயிருந்துகொண்டு நாராயணபரமாகிறது. ஆயினும் இங்கு ஸ்பஷ்டமாக நாராயணநாமத்தைப் படிக்காத குறை தீர, நான்காவது ப்ராஹ்மணத்தில் ''ஆத்மைவேத$_{3}$மக்$_{3}$ர ஆஸீத் புருஷவித$_{4}$:'' [புருஷாகாரனை ஆத்மாவாகவே இது ஆதியில் இருந்தது.] என்று பரமபுருஷனுடைய திருநாமமான புருஷ சப்தத்தை உணர்த்தும் 'புருஷவித' சப்தத்தைப் படிக்கிறது. இங்கு படிக்கப்படும் ஆத்மா நாராயணனே என்பதை ''ஆத்மா நாராயண: பர:'' ''ஏகோ ஹவை நாராயண ஆஸீத்'' என்னும் வாக்யங்களும்

http://acharya.org

விவரிக்கின. "ஸ யோ ஹைதமக்₃நிம் வைச்₂வாநரம் புருஷவித₄ம் புருஷேऽந்த:ப்ரதிஷ்டி₂தம் வேத₃" [எவனொருவன் ஜீவனுக்குள் நிற்பவனாய், புருஷாகாரனான வைச்வாநராக்னியை அறிகிறானோ...] என்று பகவத்பரமான வைச்வாநரவித்யையிலும் புருஷவிதத்வம் படிக்கப்பட்டதை நினைப்பது.

"ஸோऽஹமஸ்மீத்யக்₃ரே வ்யாஹரத் ததோऽஹந்நாமாऽப₄வத்"

[அந்தப் பரமபுருஷன் 'அஹம்' என்னும் பெயருள்ள ப்ரஹ்மாவாகக் கடவேன் என்று முதலில் ஸங்கல்பித்தான். அதன்பிறகு 'அஹம்' என்னும் பெயரையுடையவனாக ஆனான்.] என்று அடுத்த படியாகப் படிக்கப்படும் வாக்யமும்,

"தஸ்மாத் பத்₃மாத்ஸமப₄வத் ப்₃ரஹ்மா தே₃வமயோ நிதி₄:।
அஹங்கார இதி க்₂யாதஸ் ஸர்வபூ₄தாத்மபூ₄தக்ருத் ॥"

[அஹம் சப்தவாச்யன் என்று ப்ரஸித்தனும், ஸர்வபூத ஸ்ரஷ்டாவாய், நிதிபோன்றவனும், தேவமயனான ப்ரஹ்மா அந்தப் பத்மத்திலிருந்து தோன்றினான்.] என்று மஹாபாரத மோக்ஷதர்மத்தில் ப்ருகு பரத்வாஜஸம்வாதத்தில் படிக்கப்படும் வசனத்தினால் பகவத்பரமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டது. ஆக, இத்தால் பகவத்பரமான புருஷவிதசப்தத்தைப் படித்து, அவன் ப்ரஹ்மாவைப் பிறப்பித்தான் என்றதாயிற்று. இந்த ப்ரக்ரியை "அத₂ புருஷோ ஹ வை நாராயண: அகாமயத...நாராயணாத்₃ ப்₃ரஹ்மா ஜாயதே" [புருஷசப்த வாச்யனான நாராயணன் ஸங்கல்பித்தான். நாராயணனிடத்திலிருந்து ப்ரஹ்மா உண்டாகிறான்.] என்று நாராயணோபநிஷத்திலும், "அத₂ புநரேவ நாராயண:" என்று தொடங்கி, "தத்ர ப்₃ரஹ்மா சதுர்முகோ ஜாயத" [அவ்வண்டத்தில் சதுர்முகரான ப்ரஹ்மா உண்டானார்] என்று மஹோபநிஷத்திலும், "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:" என்று தொடங்கி "விராஜோ அதி₄பூருஷ:" [அண்டத்தில் ப்ரஹ்மா உண்டானான்] என்று புருஷஸூக்தத்திலும் காட்டப்பட்ட ப்ரக்ரியைகளை ஒத்திருப்பது உணரத்தக்கது. அடுத்தபடியாக, "புருஷசப்தம் பகவந்நாமமாக சாஸ்திரங்களில் படிக்கப்படுகிறது; இங்கோவெனில் புருஷவிதசப்தமன்றோ சொல்லப்பட்டிருக்கிறது; ஆகையால் இது எப்படி பகவத்பரமாகும்?" என்று சிலர் கலங்கக்கூடும் என்று பார்த்துப் புருஷசப்தத்தையும் படித்து, அதன் பொருளையும் விவரிக்கிறது

http://acharya.org

''ஸ யத் பூர்வோऽஸ்மாத் ஸர்வஸ்மாத்
ஸர்வாந் பாப்மந ஔஷத் தஸ்மாத் புருஷ:''

[புருஷவிசப்தத்தால் சொல்லப்பட்டவர், இவையெல்லாவற்றைக் காட்டிலும் பூர்வத்தில் இருந்தவராகையாலும், எல்லாப் பாபங்களையும் எரிக்கையாலும் (உஷ-தாஹே என்று தாது) 'புருஷன்' எனப்படுகிறார்.] என்னும் மந்திரத்தாலே, இவ்வாக்யமானது.

''ஆபோ வா இதமாஸந் ஸலிலமேவ।
ஸ ப்ரஜாபதிகரேக: புஷ்கரபர்ணே ஸமபவத்।...
ஸோऽபாமந்தரத: கூர்மபூதம் ஸர்ப்பந்தம் தமப்ரவீத்।
மம வை த்வம் மாஸோ ந: ஸமபூ:। நேத்யப்ரவீத்।
பூர்வமேவாஹமிஹாஸமிதி। தத் புருஷஸ்ய புருஷத்வம்॥''

[இவ்வுலகம் முதலில் ஜலமயமாகவே இருந்தது. அதில் ப்ரஜாபதியாகிய பிரமன் ஒருவனாய்த் தாமரையிதழிலே தோன்றினன்... அப்பிரமன் தண்ணீரின் நடுவில் கூர்மரூபியாய் நகரும்படியான நாராயணனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னன்: ''நீ எனக்கு ஒரு மாதம் பின்னல் பிறந்திருக்கிறாய்போலும்'' என்று. ''இல்லை; வெகு காலமாக நான் இங்கிருக்கிறேன்.'' என்று பதிலுரைத்தான் கூர்மபகவான். இப்படிப் பூர்வகாலத்திலிருந்து இருப்பவனாகையால் இப்பரமபுருஷன் புருஷனாயிருக்கும் தன்மையை அடைகிறான்.] என்னும் ஆருணகேதுகச்ருதி வாக்யத்தாலும்,

''யதி வா பூர்வமேவாஹமிஹேதி புருஷம் விது:''

['நான் பூர்வத்திலிருந்து இங்கிருக்கிறேன்' என்றதால் புருஷனென்று சொல்லுகிறார்கள்.] என்னும் பாத்மபுராணவசனத்தாலும் வாஸுதேவபரமாக விவரிக்கப்பட்டது. புருஷசப்தத்துக்கு மற்றுமுள்ள பொருள்களை முண்டகோபனிஷத் விசாரத்தின்போது காட்டியிருக்கிறோம்.

மேலே கண்டவாறு ப்ரஹ்மஸ்ருஷ்டியை விவரித்து விட்டு, அடுத்தபடியாக ருத்ராதி ப்ரஜாஸ்ருஷ்டியை விளக்குகிறது:

''ஸோऽபிபேத் தஸ்மாதேகாகீ பிபேதி। ஸஹாயமீக்ஷாஞ்சக்ரே। யந்மதந்யந் நாஸ்தி கஸ்மாந்நு பிபேமீதி। தத ஏவாஸ்ய பயம் வீயாய। கஸ்மாத்யபேஷ்யத் த்விதீயாத்வை பயம் பவதி॥''

http://acharya.org

[அந்த ப்ரஹ்மா (தனிமையாலே) பயமடைந்தான்; அதனாலேயே (இப்போதும்) தனிமையிலிருக்கும் மனிதன் பயப்படுகிறான். அப்பிரமன் பின்வருமாறு ஆலோசித்தனன்:- "என்னைக்காட்டிலும் வேறுபட்டதான வஸ்து ஒன்றுமில்லாமலிருக்கும்போது நான் ஏன் பயப்படுகிறேன்?" என்று. இப்படி ஆலோசித்ததனால் அவனுடைய பயம் நீங்கிற்று. தன்னைக்காட்டிலும் வேறுபட்டதொன்று இருந்தாலன்றோ பயமுண்டாகும்; (அதில்லையாகில்) எதற்காக பயப்பட வேண்டும்?]

இவ்வாக்யத்தில் பயமடைந்தவனாகச் சொல்லப்பட்ட பிரமன் கர்மவச்யனே என்று தெளிவாகிறது. "தஸ்ய ப்₃ராஹ்மா பி₃பீ₄தே" [ப்ரஹ்மா ம்ருத்யுவைக் கண்டு பயந்தான்.] என்னும் ஸுபாலோபனிஷத் வாக்யத்தையும் அநுஸந்திப்பது.

"ஸ வை நைவ ரேமே। தஸ்மாதே₃காகீ ந ரமதே।
ஸ த்₃விதீயமைச்ச₂த்। ஸ ஹ ஏதாவானாஸ யதா₂
ஸ்த்ரீபுமாம்ஸௌ
ஸம்பரிஷ்வக்தௌ। ஸ இமமேவாத்மானம் த்₃வேதா₄(அ)பாதயத்।
தத: பதிஸ்₂ச பத்நீ சாப₄வதாம்। தஸ்மாதி₃த₃மர்த்த₄ப்₃ருக₃ளமிவ
ஸ்வ இதி ஹ ஸ்மாஹ யாஜ்ஞவல்க்ய:।
தஸ்மாதே₃காம்ஸ: ஸ்த்ரியா பூர்யத ஏவ।
தாம் ஸமப₄வத் ததோ மநுஷ்யா அஜாயந்த॥

[(தனியனாயிருந்த) அப்பிரமன் ஆநந்திக்கவில்லை. அதனாலேயே (இக்காலத்திலுள்ள) தனியனான மனிதனும் ஆநந்தமடைவதில்லை. அவன் இரண்டாவது ஆத்மாவை விரும்பினான். அவன் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டிருக்கும் நர நாரீ ரூபத்தையுடையவனாக ஆனான். அவன் இவ்வுருவை இரண்டாகப் பிரித்தெறிந்தான். அந்தப் பதனத்திலேயே பதியும், பத்னியும் உண்டானார்கள். அதனாலேயே இந்த சரீரமானது (விவாஹத்திற்கு முன்) அரையுடம்பாகவே உள்ளதென்று யாஜ்ஞவல்க்யர் சொன்னார். ஆகையால், (விவாஹத்தின்போது) (சரீரத்தில்) ஒரு பாகம் பத்னியாலே பூர்ணமாக்கப்படுகிறது. ப்ரஹ்மா ஸ்த்ரீபாகமான சதரூபையுடன் சேர்ந்தார். அதிலிருந்து மனுஷ்யர்கள் உண்டானார்கள்.]

http://acharya.org

மேலே எடுக்கப்பட்ட வாக்யங்களில் ப்ரஹ்மாவினால் உண்டாக்கப்பட்டவனாய், பதிசப்தவாச்யனாகச் சொல்லப்பட்ட ஜீவன் பசுபதியான சிவனே என்பதை.

''ப்3ரஹ்மணோऽபூ4ந் மஹாந் க்ரோத4ஸ் த்ரைலோக்யத3ஹந க்ஷம: ।
ப்4ருகுடீகுடிலாத் தஸ்ய லலாடாத் க்ரோத4தீ3பிதாத் ॥
ஸமுத்பந்நஸ் தத3ா ருத்3ரோ மத்4யாஹ்நார்க்கஸமப்ரப4: ।
அர்த்த4நாரீநரவபு: ப்ரசண்டோ3ऽதிசரீரவாந் ॥
விப4ஜாத்மாநமித்யுக்த்வா தம் ப்3ரஹ்மாந்தர்த4தே4 தத: ।
ததோ2க்தோऽஸௌ த்3விதா4 ஸ்த்ரீத்வம் புருஷத்வம் ததா2கரோத் ॥
பி3பே4த3 புருஷத்வஞ்ச த3சதா4 சைகதா4 புந: ।
ஸௌம்யாஸௌம்யைஸ் ததா2 சாந்தாசாந்தை: ஸ்த்ரீத்வம் ச ஸ ப்ரபு4: ॥
பி3பே4த3 ப3ஹுதா4 தே3வ: ஸ்வரூபைரஸிதைஸ் ஸிதை: ।
ததோ ப்3ரஹ்மாத்மஸம்பூ4தம் பூர்வம் ஸ்வாயம்பு4வம் ப்ரபு4: ॥
ஆத்மாநமேவ க்ருதவாந் ப்ரஜாபால்யே மநும் த்3விஜ ॥
சதரூபாஞ்ச தாம் நாரீம் தபோநிர்த்தூ4தகல்மஷாம் ॥
ஸ்வாயம்பு4வோ மநுர்தே3வ: பத்நீத்வே ஜக்3ருஹே ப்ரபு4: ॥''

[(முதலில் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஸநகாதிகள் ஸ்ருஷ்டிசெய்வதில் ஈடுபடாதவளவில்) பிரமனுக்கு மூன்றுலோகத்தையும் எரிக்கத்தக்ககோபமுண்டாயிற்று. அப்போது கோபத்தாலே கொழுந்துவிட்டெரியும் அப்பிரமனுடைய நெற்றியிலிருந்து, மத்யாஹ்ந வெயில்போன்ற ஒளியுடையவனாய், பாதி ஆணும் பாதி பெண்ணுமாய் விளங்குபவனாய், மிகப்பெரிய சரீரத்தையுடையவனாய், மிகுந்த கோபத்தையுடையவனான ருத்ரன் தோன்றினன். 'உன்னைப் பிரித்துக்கொள்' என்று அந்த ருத்ரனிடம் சொல்லிவிட்டு ப்ரஹ்மா அங்கிருந்து மறைந்துவிட்டார். அப்படிச் சொல்லப்பட்ட ருத்ரன் (தன்உருவத்தை)ஸ்திரீயாகவும், புருஷனாகவும் இரண்டாகப் பிரித்தான். புருஷரூபத்தை அழகியதாகவும், அழகற்றதாயும், சாந்தமாயும் சாந்தியற்றதாயுமுள்ள பதினொரு உருவகமாகப் (ஏகாதசருத்ரர்களாகப்) பிரித்தான். ஸ்த்ரீரூபத்தையும், வெளுப்பாகவும் கருப்பாகவும் பலபடியாகப் பிரித்தான். அதன் பிறகு ப்ரஹ்மாவானவர் தன்னிட

http://acharya.org

யிருந்து முன் உண்டானவரான ஸ்வாயம்புவ மனுவை ப்ரஜைகளை ரக்ஷிக்கும் பொருட்டு நியமித்தார். தபஸ்ஸினாலேயே தோஷம் நீங்கப்பெற்ற அந்த சதரூபையென்னும் பெண்ணை ஸ்வாயம்புவ மனுவானவர் பத்னியாக ஏற்றுக்கொண்டார்.] என்று விஷ்ணு புராணத்திலே [1-7] பராசரபட்டரான் வெளியிட்டருளினர்.

"கஸ்ய ரூபமபூ$_4$த்$_3$ த்$_3$வேத$_4$ா யத்காயமபி$_4$சக்ஷதே।
தாப்$_4$யாம் ரூபவிப$_4$ாகா$_3$ப்$_4$யாம் மிது$_2$நம் ஸமபத்$_3$யத ||"

[ககாரவாச்யனை ப்ரஹ்மாவின் உருவம் இரண்டாயிற்று. இதையே காயம் என்கிறார்கள். அந்த உருவங்களிலிருந்து மிதுநங்கள் உண்டாயின.] என்று ஸ்ரீபாகவதத்திலும் இந்த ச்ருத்யர்த்தம் சொல்லப்பட்டது.

"ஸோஹேயமீக்ஷாஞ்சக்ரே। கத$_2$ந்நு மாத்மந ஏவ ஜநயித்வா ஸம்ப$_4$வதி ஹந்த திரோऽஸாநீதி। ஸா கெ$_3$ளரப$_4$வத் ருஷப$_4$ இதரஸ் தாம் ஸமேவாப$_4$வத் ததோ கா$_3$வோऽஜாயந்த ||
ப$_3$ட$_3$பே$_2$தராப$_4$வத$_3$ச்வவருஷ இதரோ கர்த்த$_3$பீ$_4$தரா கர்த்த$_3$ப$_4$ இதரஸ் தாம் ஸமேவாப$_4$வத்தத ஏகஸ$_2$ப$_2$மாயத || அஜேதராऽப$_4$வத் ப$_3$ஸ்த இதரோऽவிரிதரா மேஷ இதரஸ் தாம் தாம் ஸமேவாப$_4$வத் ததோऽஜாவயோஜாயந்த। ஏவமேவ யதி$_3$த$_3$ம் கிஞ்ச மிது$_2$நமாபிபீலிகாப்$_4$யஸ் தத்ஸர்வமஸ்ருஜத||"

[சதரூபையென்னும் அந்த ஸ்த்ரீயானவள் பின்வருமாறு எண்ணலானாள்: "என்னைத் தன்னிடமிருந்தே பிறப்பித்து எப்படிப் புணரலாம்? (ஆகையால்) நான் மறைந்துவிடுகிறேன்" என்று. அவள் பசுவானாள்; ப்ரஜாபதியானவர் காளைமாடாகி அப்பசுவுடன் சேர்ந்தார்; அதிலிருந்து பசுக்கள் உண்டாயின அவள் பெண் குதிரையானாள்; அவர் ஆண் குதிரையானார்; அவள் கழுதையானாள்; அவர் கழுதையானார்; அவளைப் புணர்ந்தார். அதிலிருந்து ஒற்றைக் குளம்பையுடைய குதிரைகளும் கழுதைகளும் உண்டாயின. அவள் பெண் வெள்ளாடானாள்; அவர் ஆண் வெள்ளாடானார்; அவள் பெண் செம்மறியாடானாள். அவர் ஆண் செம்மறியாடாக உருவமெடுத்துக் கொண்டார். அந்தந்த உருவத்துடன் கூடிய அவளை அவர் புணர்ந்தார். அதிலிருந்து ஆடுகள் உண்டாயின. இம்மாதிரியாக எறும்பு வரையிலுள்ள மிதுனங்கள் எல்லாவற்றை

http://acharya.org

யும் அவர் ஸ்ருஷ்டித்தார்.] என்று ஜீவராசிகளின் ஸ்ருஷ்டிக்ரமமும் சொல்லப்பட்டது. ஆக, இவ்வளவால் ருத்ரனும் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஓர் ஜீவனே என்று உரைக்கப்பட்டது. ஆயினும் ருத்ர சப்தத்தை ப்ரயோகம் பண்ணி அவன் ஸ்ருஜ்யன் என்று சொல்லாவிடில் மந்தமதிகள் மயங்குவார்கள் என்று கருதி, அடுத்த சில மந்திரங்களுக்குப் பிறகு ருத்ரனையும் ஸ்ருஜ்யர்களுடன் சேர்த்துப் படிக்கிறது பண்டைமறை:

"ப்$_3$ரஹ்ம வா இத$_3$மக்$_3$ர ஆஸீதே$_3$கமேவ।
ததே$_3$கம் ஸந் ந வ்யப$_4$வத்। ஸ்ரேயோரூபமத்யஸ்ருஜத க்ஷத்ரம் யாந்யேதாநி தே$_3$வத்ரா க்ஷத்ராணி।
இந்த்$_3$ரோ வருணஸ் ஸோமோ ருத்$_3$ர:
பர்ஜந்யோ யமோ ம்ருத்யுரீசாந இதி॥"

[இவ்வுலகம் ப்ரஹ்மமாகிற ஒன்றாகவே இருந்தது. அது ஒன்றாயிருப்பதனால் பெருமையை அடையவில்லை. அந்த ப்ரஹ்மம் க்ஷத்ரியனாகிற உயர்ந்த சரீரத்தைப் படைத்தது. தேவர்களுள் க்ஷத்ரியர்களாயிருப்பவர்களான இந்திரன், வருணன் ஸோமன், ருத்ரன், பர்ஜன்யன், யமன், ம்ருத்யு ஈசானன் என்பவர்களைப் படைத்தது.] என்னும் மந்திரத்தில் ருத்ரனையும் ஸ்ருஷ்டிக்கப்பட்டவனாகவும் தேவ க்ஷத்ரிய ஜாதியைச்சேர்ந்தவனாகவும் குறித்திருப்பதை அநுஸந்திப்பது.

"இந்த்$_3$ரோ தே$_3$வாநாம் ராஜா, வருணோ யாத$_3$ஸாம்,
ஸோமோ ப்$_3$ராஹ்மணாநாம், ருத்$_3$ர: பசூநாம்,
பர்ஜந்யோ வித்$_3$யுதா$_3$தீ$_3$நாம், யம: பித்ருணாம், ம்ருத்யூ
ரோகா$_3$தீ$_3$நாம் ஈசாநோ பா$_4$ஸாம்"

[இந்திரன் தேவர்களுக்கு அரசன்; வருணன் ஜலசரங்களுக்குத் தலைவன்: ப்ராஹ்மணர்களுக்கு ஸ்வாமி ஸோமன்: ருத்ரன் பசுக்களுக்குப்பதி: பர்ஜன்யன் மின்னல் முதலியவைகளுக்குப் பதி; பித்ருக்களுக்குப் பதியாயிருப்பவன் யமன்; ரோகங்களுக்கு அரசன் ம்ருத்யு; ஒளிகளுக்குத் தலைவன் ஈசானன்,] என்று சங்கரரும், இங்கு ருத்ரசப்தத்தால் சொல்லப்படுமவன் பசுபதியான சிவனே என்று தம்முடைய ப்ருஹதாரண்யகோபநிஷத் பாஷ்யத்திலே வெளியிட்டார். நிற்க: இங்கு சொல்லப்படும் ருத்ரபதம் ஏகாதச ருத்ரர்களைச் சொல்லுவதாகையால், சிவனைக் குறிக்காது என்று

http://acharya.org

சிலர் வாதாடக்கூடும் என்று நினைத்து, வைச்யஜாதியைச் சேர்ந்தவர்களான ஏகாதசருத்ரர்களையும் படைத்ததை அருகிலேயே பின்வருமாறு படிக்கிறது:

"ஸ நைவ வ்யபவத் ஸ விசமஸ்ருஜத। யாந்யேதாநி தேவஜாதாநி கணச ஆக்யாயந்தே வஸவோ ருத்ரா ஆதித்யா விச்வேதேவா மருத இதி"

[அந்த ப்ரஹ்மம் அப்போதும் பெருமையை அடையவில்லை; அது வைச்யர்களை ஸ்ருஷ்டித்தது. வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள், விச்வேதேவர்கள், மருத்துக்கள் என்று கணமாகக் குறிக்கப்படும் வைச்யஜாதீயர்களான தேவர்களையும் படைத்தது.] என்று. இதிலிருந்து, ஏகாதசருத்ரர்களைக் காட்டிலும் வேறுபட்டவனாய், அவர்களுக்கு அதிபதியான ருத்ரனே முதலில் ஸ்ருஜ்யனாகச் சொல்லப்பட்டவன் என்று தெளிவாக விளங்குகிறது. இம்மாதிரியாக சிவனும் ஓர் சீவனே என்பதை சிலாலிகிதமாக்கிவைத்தது இவ்வுபனிஷத். அடுத்ததான நான்காவது ப்ராஹ்மணத்தில்

"புருஷோ வா அக்ஷிதிஸ் ஸ ஹீதமந்நம் புந:புநர் ஜநயதே...ஸ ஹீதமந்நம் தியா தியா ஜநயதே கர்மபி:"

[புருஷசப்தவாச்யனான பரமாத்மாவே அழிவற்றவன்; அவனன்றோ (இந்த ப்ராணிகளுக்கு வேண்டிய) அன்னத்தை மறுபடியும் மறுபடியும் உண்டுபண்ணுகிறான்; அவனன்றோ இந்த அன்னத்தைக் கர்மங்களைத் துணைகொண்டு ஸங்கல்பித்து ஸங்கல்பித்து ஸ்ருஷ்டிக்கிறான்.] என்று புருஷசப்தவாச்யனை ஸர்வலோக ரக்ஷகனான பரமாத்மா என்று படிப்பதன் மூலம் நாராயணபரத்வ நிர்ணயம் செய்தது. இவ்வாக்யம் "புருஷ ஏவேதம் ஸர்வம் யத்பூதம் யச்ச பவ்யம்...யதந்நேநாதிரோஹதி" [எந்த ஜகத்தானது முன் கல்பத்திலிருந்ததோ எந்த ஜகத்தானது பின்வரும் கல்பங்களில் உண்டாகப்போகின்றதோ, எது இந்தக் கல்பத்திலிருக்கின்றதோ, எந்த உலகமானது அன்னத்தினால் மறையாமலிருக்கின்றதோ, இந்த எல்லா உலகமும் புருஷனாகிற நாராயணனே.] என்று புருஷஸூக்தத்திலும், "விச்வமேவேதம் புருஷஸ் தத் விச்வமுபஜீவதி" [இவ்வுலகம் புருஷனே அவனாலேயே இவ்வுலகம் (அன்னத்தைப்பெற்று) வாழ்கிறது.] என்று நாராயணஸூக்தத்திலும் சொல்லப்பட்ட வாக்யங்களை நினைவுறுத்துவதன் மூலமும் நாராயணபரமாகிறது.

http://acharya.org

நான்காவது அத்தியாயம் மூன்றாவது ப்ராஹ்மணத்தில் ஆதியில் "ய ஏஷ ஏதஸ்மிந் மண்டலே புருஷ:" [இந்த ஸூர்யமண்டலத்தில் யாவனொரு புருஷன் எழுந்தருளியிருக்கிறானே.] என்றும் "யோயம் தக்ஷிணேக்ஷந் புருஷ:" [வலது கண்ணில் யாவனொரு புருஷன் இருக்கின்றானோ......] என்றும் நாராயணனுடைய நாமமான புருஷசப்தத்தை இரண்டுதடவை படித்து, அடுத்தபடியாக அவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தையும், மறுபடி புருஷபதத்தையும் படித்துப் பரதத்வத்தை நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயித்துத் தருகிறது நான்மறை:

"தஸ்ய ஹைதஸ்ய புருஷஸ்ய ரூபம் யதா மாஹாரஜநம் வாஸோ யதா பாண்டுவாவிகம் யதேந்த்ரகோபோ யதாக்ந்யர்ச்சிர் யதா புண்டரீகம் யதா ஸக்ருத்வித்யுத்தம் ஸக்ருத் வித்யுத் தேவ ஹ வா அஸ்ய ஸ்ரீர் பவதி ய ஏவம் வேத! அதாத ஆதேஸோ நேதி நேதி நஹ்யேதஸ்மாதிதி நேத்யந்யத் பரமஸ்தி! அத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யமிதி । ப்ராணா வை ஸத்யம் தேஷா மேஷ ஸத்யம் ॥"

[அப்படிப்பட்ட இந்தப் புருஷனுடைய உருவமானது, பீதாம்பரம் போலேயும், வெள்ளைக்கம்பளம் போலேயும், இந்திரகோபம் என்னும் புழுவைப் போலேயும், அக்நியின் ஒளியைப் போலேயும், தாமரையிலையைப் போலேயும், ஒன்றாக மின்னும் மின்னலைப்போலேயும் நிறமுள்ளது. இதை எவன் அறிகிறானோ, அவனுடைய செல்வமானது ஒன்றாக மின்னும் மின்னல்போல் பிரகாசிக்கும். இப்பரம புருஷனைப்பற்றிப் பின்வருமாறு உபதேசம் செய்யப்படுகிறது:— "இவன் இப்படிப்பட்டவனல்லன்; இப்படிப்பட்டவனல்லன்; (இப்படி அளவற்றவனானா) இவனைக் காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லை. இவனுடைய பெயர் 'ஸத்யத்தைக் காட்டிலும் ஸத்யமானவன்' என்பது. ஜீவர்கள் (ஸ்வரூபவிகாரம் அற்றவர்களாகையாலே) ஸத்யமானவர்கள்; இவன் (ஸ்வபாவவிகாரமும் அற்றவனாகையாலே) ஸத்யத்தைக்காட்டிலும் ஸத்யமானவன்'] என்னும் வாக்யத்திலே பரமாத்மாவைப் புருஷசப்தத்தால் சொல்லியிருப்பதிலிருந்தும், பற்பல ச்ருதிஸ்ம்ருதிவாக்யங்களில் ப்ரஸித்தமான அவனுடைய திருமேனியை வர்ணித்திருப்பதிலிருந்தும் இது நாராயணபரமே என்று விளங்குகிறது. "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" [தமச் சப்தத்தால் சொல்லப்படும் ப்ரக்ருதிக்கு அப்பால்

http://acharya.org

ஸூர்யனைப்போன்ற நிறமுடையவனாய் விளங்கும் புருஷனை.] "வித்3யுத: புருஷாத்" [மின்னல் போன்ற உருவையுடைய புருஷனிடமிருந்து.] "நீலதோயத3 மத்4யஸ்தா2 வித்3யுல்லேகே2வ பா4ஸ்வரா" [நீலமேகமுண்ட மின்னல் போலே ஒளி விடுவது அத்திருமேனி] "புருஷம் க்ருஷ்ணபிங்க3ளம்" [கறுப்பும் மஞ்சளும் கலந்த உருவுடைய புருஷனை] "அந்தராதி3த்யே ஹிரண்மய: புருஷோ த்3ருச்யதே தஸ்ய யதா2 கப்யாஸம் புண்ட3ரீகமேவமக்ஷிணீ" [ஸூர்யனுக்கு நடுவில் ஸுவர்ணமயனான யாவனொருவன் புருஷன் காணப்படுகிறானோ, அவனுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள] என்று வேதங்களிலும், "ஹேமஸமாநவர்ணம்" "சந்த்3ர பா4ஸ்கரவர்ச்சஸம்" "பீத கௌசேய வாஸம்" [பீதாம்பரத்தை அணிந்திருப்பவனை]

"ப்3ரஹ்மா கமலகர்ப்பா4பே4ா ருத்3ர: காலாக்3நிஸந்நிப4: |
புருஷ: புண்ட3ரீகாபே4ா ரூபம் தத் பரமாத்மந: ||"

[பிரமன் கமலகர்ப்பத்தைப்போன்ற ஒளியுள்ளவன்; ருத்ரன் காலாக்னியைப்போல் நிறமுள்ளவன்; புருஷனாகிய வாஸுதேவனோவெனில் தாமரையிலை போல் நிறமுள்ளவன். அதுவே பரமாத்மாவின நிறம்.] முதலான இதிஹாஸபுராண வாக்யங்களிலும் "பீதகவாடைப் பிரானார்" "பீதகவாடையுடையான்" "அக்கமலத்திலை போலும் திருமேனி" "நீலமுண்ட மின்னன்ன மேனி" "பொன்னிவர்மேனி" என்று ஆழ்வார்களாலும் இந்த ச்ருதிவாக்யம் நாராயணபரமென்று நிர்ணயிக்கப்பட்டது. "படிச்சோதியாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொன் கடிச்சோதி கலந்ததுவோ" என்றுப்போல பீதாம்பரத்தின் ஒளியினாலேயே திருமேனி மஞ்சள் நிறத்தை அடைகிறபடியால் "மாஹாரஜநம் வாஸ:" என்று பீதாம்பரத்தைத் திருமேனிக்கு உபமானமாகச்சொல்லுகிறது. "மஹாரஜநம் வாஸ:" என்றும் பாடம் உண்டு. "யதா2 பாண்ட்3வாவிகம் யதே2ந்த்3ரகோ3பே யதா2க்3ந்யர்ச்சி: யதா2 புண்ட3ரீகம்" என்று பலநிறமுள்ள பல பல வஸ்துக்களை உபமானமாகச் சொல்லுகையாலே இவனுடைய திருமேனிக்கு ஒருபொருளும் முழு உவமையாகாது என்று காண்பிக்கிறது. "யதா2 புண்ட3ரீகம்" "புருஷ: புண்ட3ரீகாப4:" என்னுமிடங்களிலே புண்டரீகபதம் தாமரையிலையைக் குறிக்கிறது என்பதை "அக்கமலத்திலைபோலும்" என்று ஆழ்வாரும், ஆசாரியர்களும் அறிவித்தார்கள். அன்றிக்கே

வி—48

http://acharya.org

"செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாய் செங்கமலம் செந்தாமரையடிகள்" "கமலத்தடம்போல் பொலிந்தன" என்கிற திவ்யாவயவங்களின் ஒளியானது திருமேனியையும் செந்தாமரைநிறமாக்குகிறது என்றும் கொள்ளலாம். "ஸக்ருத்1 வித்3யுத்தேவ ஹ வா அஸ்ய ஸ்ரீர் ப4வதி" [ஒன்றாக மின்னும் மின்னல் போல் இதையறிபவனுடைய திரு விளங்குகிறது.] என்று ஸ்ரீசப்தத்தைப் படித்ததிலிருந்து "யதா2 ஸக்ருத்3வித்3யுத்தம்" என்னுமிடத்திலும் ஸ்ரீசப்தவாச்யையாய் வித்யுத்வர்ணையான பிராட்டியின் ஸம்பந்தத்தாலேயே இவனுடைய திருநிறம் மின்னல் நிறமாகிறது என்று உணர்த்தப்படுகிறது. இத்தால் திருவுக்கும் திருவாகிய இவனே ஸர்வாதிகனேயொழியத் திருவில்லாத்தேவர் ஸர்வாதிகரல்லரென்று உணர்த்தப்படுகிறது. 'குணமில்லை ரூபமில்லை' என்னும் மாயாவாதி மதத்தை மடியச்செய்கிறது இம் மறை வாக்கியம். ஆதேசசப்தம் உபதேசம் செய்யப்படும் பரமாத்மாவைச் சொல்லுகிறதென்றும் பொருள் கொள்வர். "நாமதே4யம் ஸத்யஸ்ய ஸத்யம்" என்றதால் "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்3ரஹ்ம" என்றவிடத்தில் சொன்ன அநந்தனே இவன் என்று அறிவிக்கப்படுகிறது.

"அஸ்ய மஹதோ பூ4தஸ்ய நிஶ்வஸிதம் ஏதத்3 யத்3 ருக்3வேதோ யஜுர்வேத3ஸ் ஸாமவேதோ3ऽத2ர்வாங்கி3ரஸ இதிஹாஸ: புராணம் வித்3யா உபநிஷத3: ஶ்லோகா3ஸ் ஸூத்ராணி அநுவ்யாக்2யாநாநி வ்யாக்2யாநாநி அஸ்யைவைதாநி ஸர்வாணி நிஶ்வஸிதாநி"

[ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம், இதிஹாஸம், புராணம், கலைகள், உபநிஷத்துக்கள், ச்லோகங்கள், ஸூத்ரங்கள், பாஷ்யவ்யாக்யானங்கள், பாஷ்யங்கள் ஆகிய எல்லாம் இந்த மஹாபூதத்தினுடைய மூச்சுக்காற்றுகள். (அதனிடமிருந்து அநாயாஸமாக வெளிவந்தவை.)] என்று நான்காவது அத்தியாயம் நான்காவது ப்ராஹ்மணத்தில் படிக்கப்பட்டது. இதில் சொல்லப்பட்ட 'மஹத் பூத' சப்தம் விஷ்ணுவையே குறிக்கும் என்பதை,

"ஏகோ விஷ்ணுர் மஹத்3பூ4தம் ப்ருத2க்3பூ4தாந்யநேகஶ: |
த்ரீந் லோகாந் வ்யாப்ய பூ4தாத்மா பு4ங்க்தே விச்வபு4க3வ்யய: ||"

[விஷ்ணு ஒருவரே மஹத்பூதம் என்று சொல்லப்படுபவர். பூதாத்மாவாய் எல்லாவற்றையும் உண்பவராய், அழிவற்றவரான அவரே

http://acharya.org

ஜ்வலங்களையும் வியாபித்து மற்ற பூதங்களை விழுங்குகிறார்.] என்று மஹாபாரதத்திலே வியாஸர் விளக்கிறார். வேதங்களெல்லாம் மஹத்பூதத்தினுடைய மூச்சுக் காற்று என்று சொன்னதிலிருந்து.

" யோ ப்3ரஹ்மாணம் வித3த4ாதி பூர்வம்
யோ வை வேதா3ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை "

[எவனொருவன் பிரமனை முன் படைத்து அவனுக்கு வேதங்களை முன் உபதேசித்தாரோ .....] என்று வேதங்களிலும், இதிஹாஸ புராணங்களில் பலவிடங்களிலும், ப்ரஹ்மாவுக்கும் உத்பாதகனுகப் பிரஸித்தனை நாராயணனே இங்கு சொல்லப்படும் மஹத்பூதம் என்று தெளிவாகிறது. இதிஹாஸபுராணுதிகள் இவனுடைய மூச்சுக் காற்று என்று சொன்னதிலிருந்து அவற்றை இயற்றினவர்களும் இவனுடைய அம்சபூதர்கள் என்று தெளிவாகிறது.

" க்ருஷ்ணத்3வைபாயநம் வ்யாஸம் வித்3தி4 நாராயணம் பரம் ।
கோ ஹ்யந்யோ பு4வி மைத்ரேய மஹாபா4ரதக்ருத்3 ப4வேத் ॥ "

[மைத்ரேயரே ! க்ருஷ்ணத்வைபாயனரான வியாஸரைப் பரமாத்மாவான நாராயணனென்றே அறிவீராக. வேறு எவன் இவ்வுலகில் மஹாபாரதத்தை இயற்றமுடியும் ?] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொன்னதிலிருந்து, இதிஹாஸங்களையும் மூச்சுக் காற்றாக உடையதாக இங்கு உரைக்கப்பட்ட மஹத்பூதம் நாராயணனே என்று தெளிவாகிறது. இந்த ச்ருதிவாக்யத்தை ஆதாரமாகக் கொண்டே, த்ராவிடவேத த்ரஷ்டாக்களான ஆழ்வார்களை அபிநவ தசாவதாரமென்றும், ப்ரஹ்மஸூத்ரபாஷ்யகாரரான எம்பெருமானார், த்ராவிடவேத பாஷ்யகாரரான க்ருஷ்ணஸூரி முதலான மஹாசாரியர்களை பகவதம்சபூதர்கள் என்றும் நாம் கொண்டாடுகிறோம். நிற்க: இப்படி மஹத்பூத சப்தத்தினல் மஹாபுருஷ நிர்ணயம் செய்ததுடன் திருப்தியடையாமல், அடுத்தபடியாக " இத3ம் மஹத்3பூ4தமநந்தமபாரம் " [இந்த மஹத்பூதமானது ஸ்வரூபத்தாலும், குணத்தாலும் அளவற்றது.] என்று பகவதஸாதாரணமான அநந்தசப்தத்தை மஹத்பூத விஷயத்தில் படித்தது. மஹத்பூதசப்தத்துக்குத் தக்கவாறு அநந்தசப்தமும் இங்கு நாம்ஸைகலிங்கமாய் விளங்குகிறது. ஆகையால் இது பகவத்பரமேயாகும். அடுத்தபடியாக, நான்காவது அத்தியாயத்தில்

http://acharya.org

"இயம் ப்ருதி2வீ ஸர்வேஷாம் பூ4தாநாம் மது4. அஸ்யை ப்ருதி2வ்யை ஸர்வாணி பூ4தாநி மது4. யஸ்2சாயமஸ்யாம் ப்ருதி2வ்யாம் தேஜோமயோऽம்ருதமய: புருஷோ யஸ்2சாயமத்4யாத்மம் ஶாரீரஸ் தேஜோமயோऽம்ருதமய: புருஷோऽயமேவ ஸ யோऽயமாத்மேத3மம்ருதமிதம் ப்3ரஹ்மேதம் ஸர்வம்"

[இந்த பூமியானது எல்லா பூதங்கட்கும் இனியது: இந்த பூமிக்கு எல்லா பூதங்களும் இனியவை; இந்த பூமியினுள் தேஜோமயனாய், அம்ருதமயனாய், யாவனொரு புருஷன் விளங்குகிறானோ, தேஜோமயனாய் அம்ருதமயனான யாவனொரு புருஷன் சரீராந்தர்யாமியாய் ஆத்மாவினுள் விளங்குகிறானோ அவனே ஆத்மாவென்றும், அம்ருதமென்றும் ப்ரஹ்மமென்றும், ஸர்வமென்றும் வேதாந்தங்களிலே சொல்லப்படுபவன்.] என்று தொடங்கி, "யஸ்2சாயமப்ஸு தேஜோமயோம்ருதமய: புருஷ:, யஸ்2சாயம் அத்4யாத்மம் ரைதஸஸ் தேஜோமயோம்ருதமய: புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்மிந்நக்3னௌ தேஜோமயோம்ருதமய: புருஷ:, யஸ்2சாயமத்4யாத்மம் வாங்மயஸ் தேஜோமய: அம்ருதமய: புருஷ:" என்றும், "யஸ்2சாயம் அஸ்மிந் வாயௌ...புருஷ:, யஸ்2சாயம்...ப்ராண:...புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்மிந் ஆகாசே புருஷ:, யஸ்2சாயம் ஹ்ருத்4யாகாச: புருஷ:" என்றும், "யஸ்1சாயமஸ்மிந் ஆதி3த்யே...புருஷ:, யஸ்2சாயம் சாக்ஷுஷ: புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்மிந் சந்த்3ரே...புருஷ:, யஸ்2சாயம் மாநஸ: புருஷ:" என்றும், "யஸ்2சாயமாஸு தி3க்ஷு புருஷ:, யஸ்2சாயம் ஸ்2ரௌத: புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்யாம் வித்3யுதி புருஷ:, யஸ்2சாயம் தைஜஸ: புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்மிந் ஸ்தநயித்நௌ புருஷ: யஸ்2ச சாப்3த3: புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்மிந் த4ர்மே புருஷ:, யஸ்2சாயம் தா4ர்ம: புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்மிந் ஸத்யே புருஷ:, யஸ்2சாயம் ஸாத்ய: புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்மிந் மாநுஷே புருஷ:, யஸ்2சாயம் மாநுஷ: புருஷ:" என்றும், "யஸ்2சாயமஸ்மிந் ஆத்மநிபுருஷ: யஸ்2சாயமாத்மா புருஷ:" என்றும், பலகால் புருஷசப்தத்தைப் படிப்பதன்மூலம்பரமபுருஷனான பரவாஸுதேவனே இங்கு சொல்லப்படும் பரமாத்மா என்று நிர்ணயித்துத்தருகிறது நான்மறை.

மேலும், இங்கு ப்ருதிவி முதலான பஞ்சபூதங்கள், சந்த்ர ஸூர்யர்கள், திக்குகள், மின்னல், இடி, தர்மம், ஸத்யம், ஆத்மா முதலானவற்றுக்கு அந்தர்யாமியாயிருப்பவன் இந்தப் புருஷன் என்று கூறுகையால், இவ்வாக்யங்கள் ஸுபாலோபநிஷத்திலுள்ள அந்தர்யாமி ப்ராஹ்மணவாக்யங்களுக்கு ஸ்மாரகமாயிருந்து

கொண்டு நாராயணபரமாகின்றன. இவ்வுபநிஷத்திலேயே மேலே வரும் அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யங்களை விவரிக்கும்போது இதை விளக்குவோம். "தேஜோமய: புருஷ:" என்றதாலும், "வித்$_3$யுத: புருஷாத்" "ஆதி$_3$த்யவர்ணம் புருஷம்" "வித்$_3$யுல்லேகே$_2$வ பா$_4$ஸ்வரா" "தஸ்ய ஹைதஸ்ய புருஷஸ்ய ரூபம் யதா$_2$ மாஹாரஜநம் வாஸ:..." முதலான விடங்களில் சொல்லப்பட்ட நாராயணனே இங்கும் சொல்லப்படுகிறான் என்று தெளிவாகிறது. "அம்ருதமய: புருஷ:" என்றதால், "உதாம்ருதத்வஸ்யேசாந:" என்று புருஷஸூக்தத்தில் மோக்ஷபலப்ரதனைச் சொல்லப்பட்டவனே இவனென்று விளங்குகிறது. இப்படி பரமபுருஷனே ஸர்வாந்தர்யாமி என்று சொல்லி,

"ஸ வா அயமாத்மா ஸர்வேஷாம் பூ$_4$தாநாமதி$_4$பதிஸ் ஸர்வேஷாம் பூ$_4$தாநாம் ராஜா। தத்$_3$ யதா$_2$ ரத$_2$நாபௌ$_4$ ரத$_2$நே-மௌ ச அராஸ் ஸர்வே ஸமர்ப்பிதா ஏவமேவாஸ்மிந் ஆத்மநி ஸர்வே ப்ராணாஸ் ஸர்வே லோகாஸ் ஸர்வே தே$_3$வாஸ் ஸர்வாணி பூ$_4$தாநி ஸர்வ ஏத ஆத்மாநஸ் ஸமர்ப்பிதா:॥"

[இப்படிப்பட்ட அந்தப் பரமாத்மா எல்லா பூதங்களுக்கும் அதிபதி: எல்லா பூதங்களுக்கும் ராஜா. எப்படி ரதசக்கரத்தின் நாபியிலும், நேமி (வெளி வளையம்) யிலும் அரங்கள் கோர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே இந்தப் பரமாத்வினிடமும் எல்லா ப்ராணன்களும், எல்லா லோகங்களும், எல்லா தேவர்களும், எல்லா பூதங்களும், எல்லா ஆத்மாக்களும் கோர்க்கப்பட்டிருக்கின்றன.] என்று இவனுடைய பெருமை உத்கோஷிக்கப்பட்டது. "ஸர்வேஷாம் பூ$_4$தாநாம் அதி$_4$பதிஸ் ஸர்வேஷாம் பூ$_4$தாநாம் ராஜா" என்னும் வாக்யம்,

"ராஜாதி$_4$ராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்$_3$ரஹ்மமயோ மஹாந்।"
ஈஸ்$_1$வரம் தம் விஜாநீமஸ் ஸ பிதா ஸ ப்ரஜாபதி:॥"

[ப்ரஹ்மஸ்வரூபியாய்ப் பெரியவராயுள்ள விஷ்ணுவே எல்லாருக்கும் ராஜாதிராஜராய் விளங்குபவர். அவரே (அனைவர்க்கும்) தந்தை. அவரே ப்ரஜாபதி. அவரே ஈச்வரரென்று அறிகிறோம்.] என்று பாரதம் மோக்ஷதர்மத்திலே விஷ்ணுபரமாக விவரிக்கப்பட்டது. "பதிம் விஸ்$_1$வஸ்ய" "விஸ்$_1$வாத்மாநம் நாராயணம்" "அந்தர் பஹிஸ்$_2$ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தி$_2$த:" முதலான பல வேதவாக்கியங்களிலிருந்தும் இவ்வாக்யங்கள் நாராயணபரமென்று விளங்குகிறது.

http://acharya.org

அடுத்த சில மந்திரங்களுக்குப் பிறகு இவ்வுபநிஷத்தில் முதலிலும், நடுவிலும், முடிவிலும் பலகால் படிக்கப்படுவதும், வாஸுதேவனுடைய தனிப் பெயராயிருப்பதுமான புருஷசப்தத்தின் பொருளை விவரிக்கிறது.

"புரஸ்₂சக்ரே த்₃விபத₃: புரஸ்₂சக்ரே சதுஷ்பத₃: । புரஸ் ஸ பக்ஷீ பூ₄த்வா புர: புருஷ ஆவிஸ₃த்₃தி। ஸ வா அயம் புருஷஸ் ஸர்வாஸு பூர்ஷு புரிஸயோ நாநேந கிஞ்சந அநாவ்ருதம் நாநேந கிஞ்சந அஸம்வ்ருதம்"

[அந்தப் பரமாத்மாவானவன் இரண்டு காலையுடைய தேவமநுஷ்யாதி சரீரங்களாகிற புரங்களையும், நாலு கால்களையுடைய பச்வாதி சரீரங்களாகிற புரங்களையும் ஸ்ருஷ்டித்தான், ஆதிகாலத்திலே அப்பரமபுருஷன் கர்மங்களாகிற சிறகுகளையுடைய ஜீவனாகிற பக்ஷியாகி (மேலே சொன்ன) புரங்களினுள் நுழைந்தான். இவன் எல்லாப்புரங்களிலும் அந்தர்யாமியாய் விளங்குவதால் புருஷன் எனப்படுகிறான். இப்புருஷனால் உள்ளேயும் வெளியிலேயும் வியாபிக்கப்படாத வஸ்து ஒன்றுமில்லை.] என்று இப்படிப் புருஷசப்தத்தின் பொருளை விவரித்து இவனால் உள்ளும் புறமும் வியாபிக்கப்படாத வஸ்து ஒன்றுமில்லை என்று உத்கோஷிக்கிறது உபநிஷத். "அந்தர் ப₃ஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:" [அவை யெல்லாவற்றையும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்.] என்று அந்வய முகத்தால் சொன்ன அர்த்தத்தையே, இவ்வாக்கியம் வ்யதிரேக முகத்தாலே விளக்குகிறதாகையாலே இதுவும் நாராயணபரமே என்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கப்பட்டதாகிறது. அணுவாயிருக்கும் பதார்த்தங்களில் அந்தர்வ்யாப்தியும், விபுவாயிருக்கும் பதார்த்தங்களில் பஹிர்வ்யாப்தியும் இவனுக்கு உண்டாகமாட்டாது என்று சிலர் ஸந்தேஹிக்கக்கூடும் என்று கருதியே, "அநேந அநாவ்ருதம் கிஞ்சந நாஸ்தி, அநேந அஸம்வ்ருதம் கிஞ்சந நாஸ்தி" [இவனால் (வெளியில்) சூழப்படாதது ஒன்றும் இல்லை; இவனால் (உள்ளே) வியாபிக்கப்படாதது ஒன்றும் இல்லை.] என்று அதிஸ்பஷ்டமாக அறிவிக்கிறது அருமறை. அக₄டிதக₄டநா ஸமர்த்தனான இவனுக்கு ஆகாததும் ஒன்றுண்டோ? இங்கு வியாக்யானம் செய்த ரங்கராமாநுஜமுநிவரும் "அந்தர் ப₃ஹிஸ்₂ச அநேந பரமாத்மநா அவ்யாப்தம் கிஞ்சந—கிமபி வஸ்து நாஸ்தீத்யர்த்த₂:" [உள்ளும் புறமும் இப்பரமாத்மாவினால் வியாபிக்கப்படாத வஸ்து ஒன்றும் இல்லை என்று

http://acharya.org

பொருள்] என்று மிகத்தெளிவாக உரைத்தார். நிருக்த: எல்லாப் புரங்களிலும் உறைவதாலேயே இவன் புருஷனாகிறான் என்று இவ் வாக்கியத்தில் சொல்லப்படும் புருஷன் ஹரியே என்பதை.

"புரஸம்ஜ்ஞே ஶரீரேऽஸ்மிந் ஶயநாத் புருஷோ ஹரி: |
ஶகாரஸ்ய ஷகாரோऽயம் வ்யத்யயேந ப்ரயுஜ்யதே ||"

['புரம்' எனப்படும் இந்த சரீரத்தில் சயனித்திருப்பதால் புருஷன் எனப்படுகிறான் ஹரி. (வேதமாகையாலே) சகாரத்திற்கு பதிலாக ஷகாரம் பிரயோகிக்கப்படுகிறது.] என்னும் பாத்ம புராண வசனம் நிர்ணயித்தது. இப்படிப் புருஷசப்தத்தைப் படித்ததிலும் திருப்தி யுறாமல், அடுத்த மந்திரத்தில் பகவானுடைய அஸாதாரண நாம மான ஹரி நாமத்தையும் படித்துப் பரதத்வ நிர்ணயம் செய்கிறது பண்டைமறை. முன் மந்திரத்தில் ஜீவன் மூலமாக ஸர்வ வஸ்துக் களையும் வியாபித்திருப்பது புருஷசப்தார்த்தமென்று சொல்லப் பட்டது. பின் வரும் மந்திரத்தில் அநந்தமான திவ்யமங்கள விக்ரஹத்தாலும், ஸ்வரூபத்தினாலும் வியாபித்திருப்பதாகிற புருஷ சப்தார்த்தம் விவரிக்கப்படுகிறது:—

"ரூபம் ரூபம் ப்ரதிரூபோ ப$_4$பூ$_4$வ தத$_3$ஸ்ய ரூபம் ப்ரதி சக்ஷணாய | இந்த்$_3$ரோ மாயாபி$_4$: புருரூப ஈயதே யுக்தா ஹ்யஸ்ய ஹரய: ஶதா த$_3$ஶேதி | அயம் வை ஹரய:, அயம் வை த$_3$ஶ ச ஶதாநி ஸஹஸ்ராணி ப$_3$ஹூநி ச |

[அந்தப் பரமாத்மாவானவன் ஒவ்வொரு வஸ்துவிலும் பூர்ணனாய் (பரிஸமாப்ய) வியாபித்திருக்கிறான். வ்யவஹரிக்கப்படும் இப் பொருள்களெல்லாம் இவனுக்கு சரீரமாயுள்ளன. பரமைச்வர்யத்தை உடைத்தாயிருக்கையால் இந்த்ரசப்தவாச்யனான அப்பரமாத்மா தன்னுடைய ஸங்கல்பங்களால் பல உருவையுடையவனாகிறான். (இப்படிப் பல அந்தர்யாமி விக்ரஹங்களை உடையவனாகிறானாகை யால்) இவ்வுலகிலுள்ள வஸ்துக்களில் ஆயிரக்கணக்கான ஹரிகள் எழுந்தருளியிருக்கிறார்கள். ஹரியான இவன் ஒருவனாயினும் கணக் கற்ற ஹரிகளாக ஆகிறான்.] என்னும் இம்மந்திரத்தில் ஹரி நாமத்தை இரண்டுதடவை படித்துப் பரதத்வநிர்ணயம்செய்கிறது பண்டை மறை. (இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே) "இதி$_3$ பரமைச்வர்யே" என்று தாதுவாகையாலே பரமபுருஷன் இந்த்ர சப்தத்தினால் சொல்லப்படுகிறான். "மாயா வயுநம் ஜ்ஞாநம்" [மாயை,

http://acharya.org

வயுனம் என்னும் சப்தங்கள் ஞானத்தைச் சொல்லுபவை.] என்று நிகண்டுகளிலே சொல்லப்பட்டிருக்கிறபடியால் மாயா சப்தம் ஸங்கல்பரூபமான ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது. பரமேச்வரனை பகவான் தன் இச்சையினாலே பல உருக்கொண்டு விளங்குகிறான் என்று பொருள். இவ்வாக்யத்தைப் பராசர பகவான் "இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:" என்று விஷ்ணுபுராணத்தில் விஷ்ணுபரமாக விளக்கியருளினார். பகவான் கணக்கற்ற திவ்யமங்கள விக்ரஹங்களுடன் விளங்குகிறானாகையால் 'ஹரய:' [ஹரிகள்] என்று பஹுவசனமாகப் படிக்கப்படுகிறது. "ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ" என்றதினால் இவன் ப்ரதிவஸ்து பூர்ணனாயிருக்கிறான் என்று உணர்த்தப்படுகிறது. "அயம் வை ஹரய:... அநந்தாநி ச" என்றவிடத்திலுள்ள சகாரத்தினால் இவன் ஒவ்வொரு தேஹத்திலும் திவ்யமங்கள விக்ரஹத்தைக்கொண்டு வியாபித்திருப்பதைப்போல் ஒவ்வொரு வஸ்துவிலும் தன்னுடைய ஸ்வரூபம் முழுவதையும் அடக்கிக்கொண்டு எழுந்தருளியிருக்கிறான்; அதனாலும் 'ஹரய:' என்ற பஹுவசந நிர்த்தேசம் பொருந்தும் என்றுஉணர்த்தப்படுகிறது. இவ்வர்த்தத்தையே வேதம் தமிழ்செய்த மாறனும் "பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன் பரந்த அண்டமிதென" [பரப்பையுடையதாய், குளிர்ந்ததான கடலினுள் ஒவ்வொரு நீர்த்திவலையிலும் பரப்பையுடைத்தான அண்டத்திலிருப்பதுபோல் பூர்ணனாய் வியாபித்திருப்பவன்.] என்று அருளிச்செய்தார். 'கோத்வம்' [பசுவாயிருக்கும் தன்மை] என்னும் ஜாதியானது ஒன்றாயிருந்தபோதிலும் இவ்வுலகிலுள்ள பசுக்கள் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறது. ஒவ்வொரு பசுவினிடத்திலும் பூர்ணமாய் வியாபித்திருக்கிறது. கோத்வஜாதியின் ஒவ்வொரு பகுதி ஒவ்வொரு பசுவிடம் உள்ளது என்று ஒருவரும் சொல்லுவதில்லை. அம்மாதிரியே நிரவயவமான பகவத் ஸ்வரூபமும் ஒவ்வொரு அணுவிலும் பூர்ணமாய் வியாபித்திருக்கிறது என்பது வேதாந்திகளின் கொள்கை. விபுவான ஸ்வரூபம் அணுவான பொருளில் எப்படி பூர்ணமாய் வியாபித்திருக்கமுடியும்? எனில்; அகடிதகடநாசக்தியாலே அப்படி வியாபித்திருக்கிறான் என்று ஆசாரியர்கள் அருளிச்செய்வர்கள். 'பரந்த தண் பரவை' என்னும் பாட்டிலே 'இவையுண்ட கரனே' என்னும் பகுதியினாலே ஆழ்வாரும் இதை உணர்த்தினார். இப்படி ச்ருதியினாலும், ஆழ்வாராலும், ஆசாரியர்களாலும் ஆதரிக்கப்பட்டது இவ்வர்த்தம் என்பதைத் திருவுள்ளத்திற்கொண்டே பரமப்ராமாணிகரான ரங்கராமாநுஜ

http://acharya.org

றுளிலும், இந்த வாக்யத்தின் பாஷ்யத்திலே "ஏவம் ப்ரத்யேகம் ஸ்வரூபேணாபி பர்யாப்த்யா ஸர்வசரீரத்வம் உபபத்யதே இதி சசப்தார்த்த: । விசித்ரசக்தே: பரமாத்மந: கா அநுபபத்திரிதி பாவ: ॥" [இம்மாதிரியாக ஒவ்வொரு வஸ்துவிலும் ஸ்வரூபத்தினாலும் பரிஸமாப்ய ஸர்வசரீரத்வம் (பரமாத்மாவுக்குப்) பொருந்தும் என்று சசப்தத்தின் பொருள். விசித்ரசக்தியான பரமாத்மா இப்படி வியாபித்திருக்கிறானென்றால் அதில் என்ன அநுபபத்தியுள்ளது? என்று பாவம்] என்று அழகாக அருளிச்செய்தார்.

நிற்க, விபுவான பரமாத்மா தன்னுடைய ஸ்வரூபத்தின் ஒவ்வொரு பகுதியினால், ஒவ்வொரு வஸ்துவை வியாபித்திருக்கிறான் என்று கொண்டால் ஒருவிதமான க்லேசமில்லாமலும், பகவானுடைய அகடிதகடநாசக்தியைக்கொண்டு நிர்வஹிக்கவேண்டிய அருமையில்லாமலுமிருக்கும்போது ஒவ்வொருவஸ்துவிலும் ஸ்வரூபம் பரிஸமாப்ய வியாபித்திருப்பதாகக் கொள்ளக் காரணமென்ன? என்னும் கேள்வி எழக்கூடுமாகையால் அதற்கு பதிலளிக்கிறது (ததேதத் ப்ரஹ்ம அபூர்வம் அநபரம் அநந்தரம் அபாஹ்யம்) என்று. இந்த ப்ரஹ்மமானது விசித்ரமானது; தன்னைப்போல் வேறொரு வஸ்து வற்றது: உள், வெளி என்னும் ப்ரதேசங்களற்றது என்று பொருள். உட்ப்ரதேசம், வெளிப்ரதேசம் முதலான அவயவயங்களற்றதாகையாலே (நிரவயவமாகையாலே) இந்த பகவத்ஸ்வரூபம் ஒவ்வொரு பொருளிலும் பரிஸமாப்ய வியாபித்து விளங்குகிறது என்றே கொள்ள வேண்டும். இல்லாவிடில் ப்ரஹ்மஸ்வரூபம் ஸாவயவம் (அவயவங்களையுடையது) என்னும் தோஷம் வரும். விசித்ரமானதும், லோக விலக்ஷணமானதுமான ப்ரஹ்மம் ஒவ்வொரு அணுவிலும் பரிஸமாப்ய வியாபித்திருக்கிறதென்றால் அதில் அநுபபத்தியொன்றுமில்லையென்று பாவம். (அயமாத்மா ப்ரஹ்ம) இந்த ப்ரஹ்மமானது இம்மாதிரியாக ஸர்வ வஸ்துக்களுக்கும் ஆத்மாவாயிருக்கிறது. (ஸர்வாநுபூ:) இது ஸர்வஜ்ஞமாகவும் விளங்குகிறது. "அபூர்வம் அநபரம்" என்று காலபரிச்சேதமும், "அநந்தரம் அபாஹ்யம்" என்று தேச பரிச்சேதமும், "அயமாத்மா" என்று வஸ்து பரிச்சேதமும் அற்றது இந்த ப்ரஹ்மம் என்று சொல்லுவதாகவும் கொள்வர். ஆக, இவ்வளவால் ஜீவாத்மாவைக் கொண்டும், திவ்யமங்கள விக்ரஹத்தைக்கொண்டும் வியாபித்திருப்பதாலும், ஸ்வரூபத்தினாலும் ப்ரதிவஸ்து பரிஸமாப்ய வியா

http://acharya.org

பிந்திருப்பதனாலும் புருஷார்த்தஸாத்யமுனை நாராயணனே பரப்ரஹ்ம மென்று நிர்ணயிக்கப்பட்டது.

மேலே விவரித்தபடி ப்ரதிவஸ்து நிர்ணயமிருக்கையால் புருஷார்த்தஸாத்யமுனை நாராயணனே ப்ரஹ்மமென்று நிர்ணயித்தபிறகு, அந்தர்யாமி ப்ரஹ்மமென்று ப்ரஸித்தமானதான ஐந்தாவது அத்யாயம் ஸுபாலோபநிஷத்தில் இவன் ஒவ்வொரு வஸ்துவிலும் அந்தர்யாமியாயிருப்பதை விரிவாக வர்ணிக்கிறது :--

"ய: ப்ருதி₂வ்யாம திஷ்ட₂ந் ப்ருதி₂வ்யா அந்தரோ யம் ப்ருதி₂வீ ந வேத₃ யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம் ய: ப்ருதி₂வீமந்தரோ யமயதி ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:"

[எவனொருவன் பூமியில் நின்றுகொண்டு, பூமியினுள்ளிருக்கிறானோ எவனை பூமி அறியவில்லையோ, எவனுக்கு பூமியானது சரீரமோ, எவன் பூமியை உள் நுழைந்து நியமிக்கிறானோ, அந்த அந்தர்யாமியே உன்னுடைய அம்ருதமயமான ஆத்மா.] என்று தொடங்கி "யோப்ஸு திஷ்ட₂ந்.........அம்ருத:" "யோக்₃நௌ திஷ்ட₂ந்...அம்ருத:" "யோந்தரிக்ஷே திஷ்ட₂ந்...அம்ருத:" "யோ வாயௌ திஷ்ட₂ந்...அம்ருத:" "யோ தி₃வி திஷ்ட₂ந்...அம்ருத:" "ய ஆதி₃த்யே திஷ்ட₂ந்:...அம்ருத:" "யோ தி₃க்ஷு திஷ்ட₂ந்...அம்ருத:" "யச்சந்த்₃ர தாரகே திஷ்ட₂ந்...அம்ருத:" "ய ஆகாசே திஷ்ட₂ந்...அம்ருத:" "யஸ் தமஸி திஷ்ட₂ந்...அம்ருத:" "யஸ் தேஜஸி திஷ்ட₂ந்...அம்ருத:" "யஸ் ஸர்வேஷு பூ₄தேஷு திஷ்ட₂ந்...அம்ருத:" "யோ வாசி திஷ்ட₂ந்...அம்ருத:" "யச் சக்ஷுஷி திஷ்ட₂ந்...அம்ருத:" "ய: ச்ரோத்ரே திஷ்ட₂ந்...அம்ருத:" "யோ மநஸி திஷ்ட₂ந்...அம்ருத:" "யஸ் த்வசி திஷ்ட₂ந்...அம்ருத:" "யோ விஜ்ஞாநே திஷ்ட₂ந்...அம்ருத:" "யோ ரேதஸி திஷ்ட₂ந்... அம்ருத:" என்று பஞ்சபூதங்கள், இந்திரியங்கள் முதலான பல வஸ்துக்களை எடுத்து அவை ஒவ்வொன்றிலும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கிறான் பரமாத்மா என்று உத்கோஷிக்கும் இவ்வாக்கியங்கள் நாராயணபரமே என்பதை "யஸ்ய ப்ருதி₂வீ சரீரம் ய: ப்ருதி₂வீமந்தரே ஸஞ்சரந் யம் ப்ருதி₂வீ ந வேத₃, யஸ்யாப: சரீரம்...யஸ்ய தேஜ: சரீரம்... யஸ்ய வாயு: சரீரம்...யஸ்ய ஆகாச: சரீரம்...யஸ்ய மந: சரீரம்...யஸ்ய பு₃த்₃தி₄: சரீரம்...யஸ்ய அஹங்கார: சரீரம்...யஸ்ய சித்தம் சரீரம்...யஸ்ய அவ்யக்தம் சரீரம்...யஸ்ய அக்ஷரம் சரீரம்...யஸ்ய ம்ருத்யு: சரீரம்...யம் ம்ருத்யுர்: ந வேத₃ ஏஷ ஸர்வபூ₄தாந்தராத்மா அபஹதபாப்மா தி₃வ்யோ தேவ₃ ஏகோ நாராயண:" என்னும் ஸுபாலோபநிஷத் வாக்யங்கள்

http://acharya.org

நிர்ணயித்தன. இங்கு ஒவ்வொரு வஸ்துவையும் எடுத்து, அவை ஒவ்வொன்றிலும் பரமாத்மா அந்தர்யாமியாயிருக்கிறான் என்று சொல்வானேன்? என்னில்: ஒவ்வொன்றிலும் பூர்ணமாய் வியாபித்திருக்கிறான் என்று அறிவிக்கைக்காகச் சொல்லுகிறது. ''யோ விஜ்ஞாநே திஷ்டந்'' என்றதிறல் ''வேத்யாம் அக்நிஸ் திஷ்டதி'' [யாக மேடையில் அக்னி இருக்கிறது] என்றாப்போலே பகவான் ஜீவாத்மாவின் வெளியில் வியாபித்திருப்பதையும், 'விஜ்ஞாநாதந்தர:' என்றதினால் ''திலே தைலம் திஷ்டதி'' [எள்ளினுள் எண்ணெய் இருக்கிறது.] என்றாப்போலே ஜீவாத்மாவின் உள்ளேயும் வியாபித்திருப்பதையும் தெரிவிக்கிறது என்று ச்ருதப்ரகாசிகாசாரியர் அருளிச்செய்வர். நிற்க;

இப்படி ஸுபாலோபநிஷத்தைக்கொண்டு இவன் நாராயணனே என்று நிர்ணயிக்கத்தக்கதாயிருப்பினும், இங்கு நாராயணனுடைய நாமத்தைப் படிக்காத குறையுண்டு. இக்குறைதீர ஒன்பதாவது ப்ராஹ்மணத்தில், ''ப்ருதிவ்யேவ யஸ்யாயதநம் அக்நிர்லோகோ மநோ ஜ்யோதிர் யோ வைதம் புருஷம் வித்யாத் ஸர்வஸ்யாத்மந: பராயணம் ஸ வை வேதிதா ஸ்யாத் யாஜ்ஞவல்க்ய வேத வா அஹம் தம் புருஷம் ஸர்வஸ்யாத்மந: பராயணம் யமாத்த ய ஏவாயம் சாரீர: புருஷ:'' [யாஜ்ஞவல்க்யரே! எவனுக்கு பூமியே இருப்பிடமோ, அக்னியானது கண்ணோ, மநஸ்ஸானது ஸங்கல்பாதி ஜ்ஞாநமயமானதோ, எல்லா ஆத்மாக்களுக்கும் பராயணமான அந்தப் புருஷனை எவனொருவன் அறிகிறானோ அவனே அறிவாளனாவான். யாஜ்ஞவல்க்யர்:—எல்லா ஆத்மாக்களுக்கும் பராயணமாக நீர் எந்தப் புருஷனைச் சொன்னீரோ, எந்தப் புருஷன் ஸகல ஜகத்தையும் சரீரமாகக்கொண்டவனோ அவனை நான் அறிவேன்] என்று தொடங்கி. ''காம ஏவ யஸ்யாயதநம்'' ''ரூபாண்யேவ யஸ்யாயதநம்'' ''ஆகாச ஏவ யஸ்யாயதநம்'' ''தம ஏவ யஸ்யாயதநம்'' ''ரூபாண்யேவ யஸ்யாயதநம்'' ''ஆப ஏவ யஸ்யாயதநம்'' ''ரேத ஏவ யஸ்யாயதநம்'' என்று ஒவ்வொரு பர்யாயத்திலும் மூன்று தடவை பகவத ஸாதாரணமான புருஷசப்தத்தைப் படித்துப் பரதத்வநிர்ணயம் செய்கிறது பண்டை மறை. மேலும், ஒவ்வொரு வாக்யத்திலும் பராயணசப்தத்தை இரண்டுதடவை படிப்பதிலிருந்தும் ''நாராயண: பராயணம்'' என்று நாராயணவல்லியில் சொல்லப்பட்டவனே இவன் என்று நிர்ணயித்துத்தருகிறது. இத்துடன் நில்லாமல் சில மந்திரங்களுக்குப் பிறகு ''தம் த்வௌபநிஷதம் புருஷம் ப்ருச்சாமி''

http://acharya.org

[உபநிஷத்துக்களிலே ப்ரதிபாதிக்கப்படும் அந்தப் புருஷனை வினவுகிறேன்.] என்று உபநிஷத்வேத்யன் புருஷசப்தவாச்யனே என்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கிறது.

"இந்தோ$_4$ ஹ வை நாமைஷ யோऽயம் த$_3$க்ஷிணேऽக்ஷந் புருஷஸ் தம் வா ஏதமிந்த$_4$ம் ஸந்தமிந்த்$_3$ர இத்யாசக்ஷதே பரோக்ஷேணைவ பரோக்ஷப்ரியா இவ ஹி தே$_3$வா: ப்ரத்யக்ஷத்$_3$விஷ:॥ அதை$_2$தத்$_3$ வாமேऽக்ஷிணி புருஷரூபமேஷாऽஸ்ய பத்நீ விராட் தயோரேஷ ஸம்ஸ்தாவோ ய ஏஷோ அந்தர் ஹ்ருத$_3$ய ஆகாஶ:। அதை$_2$தயோரேதத$_3$ந்நம் ய ஏஷோऽந்தர் ஹ்ருத$_3$யே லோஹிதபிண்ட$_3$:। அதை$_2$நயோரேதத் ப்ராவரணம் யதே$_3$தத் அந்தர் ஹ்ருத$_3$யே ஜாலகமிவ। அதை$_2$நயோரேஷா ஸ்ருதிஸ் ஸஞ்சரணீ யைஷா ஹ்ருத$_3$யாத் ஊர்த்$_4$வா நாட$_3$ உச்சரதி"

[(பிரகாசிக்கிறபடியால்) 'இந்தன்' என்னும் பெயரையுடையவனும் வலதுகண்ணில் யாவனொரு புருஷன் இருக்கிறானோ அவனை தேவர்கள் மறைவாக இந்த்ரன் என்று சொல்லுகிறார்கள்; தேவர்கள் மறைவாகச் சொல்லுவதில் பிரியமுள்ளவர்களாகவும், வெளிப்படையாகச் சொல்லுவதில் வெறுப்புள்ளவர்களாகவும் இருப்பவர்களன்றோ. 'விராட்' என்னும் பெயரையுடையவளாய், மநுஷ்ய ரூபத்தையுடையவளான, இவனுடைய பத்னி இடதுகண்ணில் எழுந்தருளியிருக்கிறாள். இந்த தம்பதிகள் இருவர்க்கும் ஹ்ருதய ப்ரதேசம் பள்ளியறையாயிருக்கிறது. ஹ்ருதயத்தினுள்ளிருக்கும் சிவந்த மாம்ஸபிண்டம் இவர்களுக்கு போக்யமான விளையாடுமிடமாயிருக்கிறது. ஹ்ருதயத்தில் நூல்போல் விளங்கும் நாடி விசேஷங்கள் இவர்களுக்குப் பட்டு வஸ்த்ரமாகிறது. ஹ்ருதயத்திலிருந்து மேல்நோக்கிச் செல்லும் ஸூக்ஷ்மநாடியானது இவர்களுக்கு (சேதனனைப் பரமபதத்திற்கு இட்டுச்செல்லுவதற்குத்) தடையற்ற வழியாயிருக்கிறது] என்று ஆறாவது அத்தியாயம் இரண்டாவது ப்ராஹ்மணத்தில் புருஷசப்த வாச்யன் வலதுகண்ணில் எழுந்தருளியிருப்பதாகவும், அவனுடைய பத்னி இடதுகண்ணிலிருப்பதாகவும், அவர்களுக்கு ஹ்ருதயம் பள்ளியறையாயிருப்பதாகவும் சொல்லுவதன் மூலம் பரதத்வநிர்ணயம் பண்ணுகிறது பண்டை மறை. "இந்த$_4$:" [பிரகாசிப்பவன்] என்று பெய

http://acharya.org

நுடையவனாய், ஹ்ருதயத்தை இருப்பிடமாகக் கொண்டவனாகச் சொல்லப்படும் இந்தப் புருஷன் நாராயணனே என்பதை,

"நீலதோயத₃ மத்₄யஸ்த₂ா வித்₃யுல்லேகே₂வ ப₄ாஸ்வரா....
ஸ ப்₃ரஹ்மா ஸ சிவஸ் ஸேந்த்₃ரஸ் ஸோऽக்ஷர: பரம:
ஸ்வராட் ||"

[நீலமேகமுண்ட மின்னலைப்போலே ஒளிவிடா நிற்பது அவனுடைய திருமேனி. அவனே பிரமனையும், சிவனையும், இந்த்ரனையும், முக்தாத்மாவையும் விபூதியாகக்கொண்ட நாராயணன்.] என்னும் நாராயணவல்லி வாக்யம் நிர்ணயித்தது. "ஸேந்த்ர:" என்று விபூதியாகச் சொல்லப்பட்ட தேவராஜனான இந்த்ரனுக்கும் தலைவனான நாராயணனே இங்கு இந்த்ரசப்தவாச்யனாகிறான் என்று தெளிவாகிறது. இவனை ப்ரஸித்த இந்த்ரனாக நினைத்துவிடக்கூடாது என்பதற்காகவே "தேவர்கள் இவனை 'இந்த்ரன்' என்று மறைத்துச் சொல்லுகிறார்கள்" என்று சொல்லப்பட்டது. "இந்த்₃ரோ மாயாபி₄: புருரூப ஈயதே" முதலானவிடங்களில் வேதமே இப்பரமாத்மாவை இந்த்ரனென்று சொல்லியிருப்பதையும் காண்பது. 'இதந்த்₃ரன்' என்னும் பெயருடைய தேவராஜனை, மறைவாக 'இந்த்₃ரன்' என்று சொல்லுகிறார்கள் தேவர்கள் என்று வேறொரு ச்ருதி வாக்யத்தில் சொல்லியிருப்பதைக் காட்டியிருக்கிறோம். இப்படி மறைவாகச் சொல்லுவதற்குக் காரணம் ஆஸுரப்ரக்ருதிகளை மோஹிப்பிக்கை. மறையாய வேதமும், 'இந்த₄ன்' என்றும், 'இந்த்₃ரன்' என்றும் ஆஸுர ப்ரக்ருதிகள் மயங்கி அழிவதற்காக மறைத்துச் சொல்லி, தைவப்ரக்ருதிகள் தெரிந்து உய்வதற்காகப் புருஷசப்தத்தையும் படிக்கிறது. அப்படியே இப்புருஷனுடைய பத்னியானவள் 'விராட்' என்னும் பெயரையுடையவள் என்று மறைத்துச் சொல்லுகிறது. ஆனால், தைவப்ரக்ருதிகள் தெளிந்துய்யவேண்டும் என்று தைத்திரீயகத்தில், "விராட₃ஸி ப்₃ருஹதீ ஸ்ரீரஸி இந்த்₃ரபத்நீ த₄ர்மபத்நீ" என்று இங்கு விராட்சப்தத்தினால் சொல்லப்படும் இந்த்₃ரபத்னியானவள் ஸ்ரீதேவியே என்று தெரியச் சொல்லுகிறது. இவ்வளவால் ஸ்ரீமந்நாராயணனே சேதனர்களின் கண்களிலும் ஹ்ருதயத்திலும் எழுந்தருளியிருப்பவன் என்று விளங்கவைக்கிறது வேதம். "அரவிந்தப்பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து" "கருமாணிக்கம் என் கண்ணுளதாகுமே" "கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான்" "கண்ணுள் நின்றகலான்" "என் மனத்துப் புகுந்தான்" "நெஞ்சமே நீள்நகராக

http://acharya.org

இருந்த" "மாதவன் நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சகமே" என்று ஆழ்வார்களும் இவ்வைலக்ஷண்யத்தை விளக்கியருளினர்கள். பகவான் பிராட்டியுடன் கூடியவனாகவே நெஞ்சிலும் கண்ணிலும் விளங்குகிறான் என்பதை விளக்கும் ச்லோகங்கள் பாகவதாதி புராணங்களில் பல உள. அவற்றைப் பின்னால் காட்டுவோம். ஆக, இவ்வாக்யத்தில் ஸ்ரீமந் நாராயணனே ப்ரதிபாத்யன் என்று நிர்ணயிக்கப்பட்டது.

" யதை3ததநுபஶ்யத்யாத்மாநம் தே3வமஞ்ஜஸா |
ஈஶாநம் பூ4தப4வ்யஸ்ய ந ததோ விஜுகு3ப்ஸதே ||"

[முன்னிருந்தவையும், இனிவருமவையுமான ஸர்வ வஸ்துக்களுக்கும் ஈசானனுயிருப்பவனும், பிரகாசியா நிற்பவனுமான பரமாத்மாவை எப்போது நன்ருகப் பார்க்கிருனே அப்போது ஒரு பொருளைக்கண்டும் வெறுப்படையமாட்டான்.] என்றும்,

" ய ஏஷோ அந்தர்ஹ்ருத3ய ஆகாஶஸ் தஸ்மிந் சேதே
ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாநஸ் ஸர்வஸ்யாதி4பதி:...
ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ பூ4தபதி: ஏஷ பூ4தபால: "

[ஹ்ருதயத்திலுள்ளிருக்கும் ஆகாசமாகிற இவனிடத்தில், எல்லாரையும் வசப்படுத்துபவனும், எல்லாருக்கும் ஈசானனும், எல்லாருக்கும் அதிபதியுமான பரமாத்மா எழுந்தருளியிருக்கிருன். இவனே ஸர்வேச்வரன்: இவனே பூதங்களுக்கு அதிபதி: இவனே பூதங்களைப் பரிபாலிப்பவன்.] என்றும், ஆருவது அத்தியாயம் நான்காவது ப்ராஹ்மணத்தில் ஈசானன், ஈச்வரன், பூதபதி, பூதபாலன் முதலான சப்தங்களைப் படித்திருப்பதனுல் இவ்வுபநிஷத் சிவபரமே என்று சிலர் சொல்லுகிருர்கள். அது தவறு: இங்கு சொல்லப்படுபவன் சிவன் என்று நினைத்துக் கலங்கக்கூடும் என்று அறிந்தே மாதாபித்ருஸஹஸ்ரங்களைக்காட்டிலும் அன்புமிக்கதான அருமறை " பூ4தப4வ்யஸ்ய ஈசாநம் " "ஸர்வஸ்ய ஈசாந:" " ஸர்வ ஈச்வர: " என்னும் பதங்களை இட்டிருக்கிறது. (பூதபவ்யஸ்ய ஈசாநம்) இங்கு சொல்லப்படுபவன் ஈசானன் என்று பிரஸித்தனை சிவனன்று. அவனுக்கும், பூதபவ்யங்கள் அனைத்துக்கும் ஈச்வரனை நாராயணனே இவன் என்கிறது. (ஸர்வஸ்ய ஈசாந:) சிலர்க்கு மட்டும் நியந்தாவான அவனன்று. எல்லாருக்கும் நியந்தாவான பரமபுருஷனே இங்கு சொல்லப்படுபவன். (ஸர்வேச்வர:) ஈச்வரன் என்று லோகப்ரஸித்தனை அவனல்லன் இங்கு சொல்லப்படுபவன்:

http://acharya.org

இவன் ஸர்வேச்வரன் என்கிறது. பூதபதியென்றும், பூதபால: என்றும் சொன்னதிலிருந்து இவன் பூதபதியான சிவன் என்று தோன்றுகிறதே எனில், ஸர்வேச்வரன் முதலான சப்தங்களுக்கு அநுகுணமாகப் பொருள்கொள்ளும்போது, இங்குள்ள பூதசப்தங்கள் ஸர்வபூதங்களையும் குறிக்குமேயொழிய சிவனுடைய பாரிஷதர்களான பூதகணங்களைக் குறிக்காது. அதனாலேயே கீதாசார்யனும் "ஈச்வர: ஸர்வபூ₄தாநாம் ஹ்ருத்₃தே₃ஸே₂ர்ஜுந திஷ்ட₂தி" [ஸர்வபூதங்களுக்கும் ஈச்வரன் ஹ்ருதயப்ரதேசத்தில் நிற்கிறான்] என்று இவ்வாக்யத்தை விவரித்தருளினான். ஆகையால் இவ்வாக்கியங்கள் சிவபரமாகமாட்டா. ஈசானன், ஈச்வரன் முதலான சப்தங்கள் சிவனிடத்திலே ரூடியை உடையவையேயொழிய "ஸர்வஸ்ய ஈசாந: ஸர்வேச்வர:" முதலான பதங்கள் சிவனிடத்தில் ரூடியுடையவையல்ல. மேலும் இவ்வுபநிஷத்தின் ஆரம்பத்திலேயே ருத்ரன் ஸ்ருஷ்டிக்கப்பட்டவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவனை ஸ்ருஷ்டித்த பரமாத்மா புருஷசப்தவாச்யன் என்றும் காட்டியிருக்கிறது. புருஷன், ஹரி முதலான பகவந்நாமங்களையும் பலகால் படித்து, அவனுக்கே அஸாதாரணமான அடையாளங்களையும் அறிவித்திருக்கிறது. ஆகையால் இங்கு சொல்லப்படுபவன் நாராயணனே. இதை மேலும் தெளிவாக்கவேண்டும் என்றே "ஈசாநம் பூ₄தப₄வ்யஸ்ய" என்னும் மந்திரத்திற்கு அடுத்த மந்திரத்தில், 'தம் தே₃வா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:' என்று படிக்கிறது. "நாராயண பரோ ஜ்யோதி:" என்று சொல்லப்பட்டவனே இவன் என்றபடி. ஆறுவது அத்தியாயம் ஐந்தாவது ப்ராஹ்மணத்தில் "அஸ்ய மஹதோ பூ₄தஸ்ய நிஸ்₂வஸிதம்" என்னும் வாக்யத்தை மறுபடியும் படிக்கிறது. இவ்வாக்யம் ஸுபாலோபநிஷத்திலும் படிக்கப்பட்டதாகையால் அங்கு ப்ரதிபாதிக்கப்படும் நாராயணனே இவ்வுபநிஷத்திலும் ப்ரதிபாதிக்கப்படுகிறான் என்று தெளிவாகிறது.

அடுத்தபடியாக, ஏழாவது அத்தியாயம் ஐந்தாவது ப்ராஹ்மணத்தில், "ய ஏஷ ஏதஸ்மிந் மண்ட₃லே புருஷோ யச்சாயம் த₃க்ஷிணே(அ)க்ஷந் புருஷ:" [எந்தப்புருஷன் ஸூர்யமண்டலத்தில் எழுந்தருளியிருக்கிறானோ......எந்தப் புருஷன் வலது கண்ணில் எழுந்தருளியிருக்கிறானோ...] என்றும் "ய ஏஷ ஏதஸ்மிந் மண்ட₃லே புருஷஸ் தஸ்ய பூ₄ரிதி சிர:" என்றும், "யோ(அ)யம் த₃க்ஷிணே(அ)க்ஷந் புருஷஸ் தஸ்ய பூ₄ரிதி சிர:" என்றும், "மநோமயோ(அ)யம் புருஷ:" [(சுத்தமான) மனத்தினால் அறியப்படுபவன் இந்தப் புருஷன்.]

http://acharya.org

என்றும் புருஷசப்தத்தைப் பலகால் படிப்பதன் மூலம் பரதத்வ நிர்ணயம் செய்கிறது. இவனே ஸௌரமண்டலத்திலுள்ள புருஷன் என்று சொல்லுவதன் மூலம் "அந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:...தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்று ஸௌரமண்டலத்திலே எழுந்தருளியிருப்பவனுகச் சாந்தோக்யத்திலே சொல்லப்பட்ட புண்டரீகாக்ஷ புருஷனே இவன் என்று அறிவிக்கப்படுகிறது. இப்படி பரதத்வத்தை நிர்ணயித்துவிட்டு "ஏஷ ஸர்வஸ்யேசாநஸ் ஸர்வஸ்யாதிபதிஸ் ஸர்வமிதம் ப்ரஸாஸ்தி யதிதம் கிஞ்ச" [இவனே எல்லாருக்கும் ஈசானனுகவும், எல்லாருக்கும் அதிபதியாகவும் இருந்துகொண்டு இவை எல்லாவற்றையும் நியமிக்கிறான்.] என்று இவனே ஸர்வேச்வரனுகச் சொல்லப்பட்டவன் என்றுரைப்பதன் மூலம் ஸர்வேசாநாதிசப்தங்கள் சிவபரமன்று என்று வேதமே விளங்கவைக்கிறது. கடைசியாக, ஏழாவது அத்தியாயத்தின் முடிவில் "யத் தே ரூபம் கல்யாணதமம் தத் தே பச்யாமி யோஸாவஸௌ புருஷஸ் ஸோஹமஸ்மி" [(பரம புருஷனே!) உன்னுடைய கல்யாணதமமான ரூபத்தைப் பார்க்கக்கடவேன். ச்ருதிப்ரஸித்தனுன புருஷனை அந்தர்யாமியாக உடையவனன்றே நான்] என்று புருஷசப்தத்தைப் படிக்கிறது. இப்படி அடியிலும், முடிவிலும், நடுவிலும் பலவிடங்களில் புருஷசப்தவாச்யனே பரமாத்மா என்று சொல்லுவதன்மூலம் நாராயண பரத்வநிர்ணயம் செய்கிறது இவ்வுபனிஷத். அடுத்தபடியாக "ஓம் க்ரதோ ஸ்மர க்ருதம்" [க்ரதுசப்தவாச்யனுன பகவானே! நான் செய்ததை நினைப்பாயாக;] என்று க்ரதுசப்தத்தை இவன் விஷயமாகப் படித்தது. "அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ:" என்று பகவான் தானே தன்னை க்ரதுசப்தவாச்யனுகச் சொல்லியிருப்பதால் இதுவும் பகவத்பரமேயாகும். "ஸ்மர" [நீ என்னை நினைப்பாயாக.] என்று இங்கு பலகால் படிக்கப்பட்டதை "அஹம் ஸ்மராமி மத்பக்தம்" [நான் என் பக்தனை நினைக்கிறேன்] என்று பகவான் வராஹசரமச்லோகத்திலே விவரித்தான். இம்மந்திரங்கள் ஈசாவாஸ்ய உபனிஷத்திலும் படிக்கப்பட்டன.

ஆக, ஆரம்பத்தில், புருஷவிதனென்றும் புருஷனென்றும் ப்ரஸித்தனுன இவனே ப்ரஹ்மாவையும் ருத்ரனையும் படைத்தான் என்று நிர்ணயித்து, இவனுக்கே அஸாதாரணமான புருஷன், ஹரி, அநந்தன் முதலான சப்தங்களைப் பலகால் படித்து, புருஷசப்தவாச்யனுன இவனுடைய திருமேனியையும் விவரித்து, பிராட்டி

http://acharya.org

யுடன் கூடியவனுய் இவன் கண்களிலும் நெஞ்சிலும் எழுந்தருளி யிருக்கிறான் என்று நிர்ணயித்து, இவனையே உணர்த்தும் அஸாதாரணமான அடையாளங்கள் பலவற்றையும் அறிவிக்கும் இவ்வுபனிஷத் நாராயணனையே ஸர்வகாரணன் என்று சொல்லுகிற தென்பதில் ஸந்தேஹம் சிறிதுமில்லை. இவைகளிலிருந்து நாராயணனே தசோபனிஷத்துக்களிலும் ப்ரதிபாத்யன் என்று நிர்ணயிக்கப்பட்டதாகிறது. ஆகையால் தசோபனிஷத்துக்களிலும் படிக்கப்படும் காரணவாக்கியங்களில் ஸர்வகாரணனுகச் சொல்லப் பட்டவன் இவனே என்றதாகிறது.

பைங்கி ரஹஸ்ய ச்ருதியில் ப்ரஹ்ம நிர்ணயம்

**"ஏகோ ஹ வை நாராயண ஆஸீந் ந ப்$_{3}$ரஹ்மா ந சஂங்கர: ।
ஸ முநிர் பூ$_{4}$த்வா ஸமசிந்தயத் । தத ஏதே வ்யஜாயந்த ।
விச்வே ஹிரண்யகூ$_{3}$ர்ப்பே$_{4}$ாऽக்$_{3}$நிர் வருணவிஷ்ணுருத்$_{3}$
ரேந்த்$_{3}$ரா: ॥"**

[நாராயணன் ஒருவனே ஆதிகாலத்தில் இருந்தான். பிரமனும், சங்கரனும் இல்லை. அந்த நாராயணன் முனியாகிச் சிந்திக்கலுற்ருன், அதன் பிறகு ஹிரண்யகர்ப்பன, அக்னி, யமன், வருணன், விஷ்ணு, ருத்ரன், இந்த்ரன் ஆகிய அனைவரும் உண்டானுர்கள்.] என்று பைங்கிரஹஸ்ய ச்ருதியில் சொல்லப்பட்டது. இவ்வாக்யங்கள் ப்ராசீனரான வேதாந்த கௌஸ்துபகாரரால் எடுக்கப்பட்டவை. இவ்வாகயங்கள் மஹோபனிஷத் வாக்யங்களை அடியொற்றியுள்ளன. நாராயணன் ஒருவனே ஆதியில் இருந்தான் என்று சொல்லுவதுடன் திருப்தியடையாமல், 'பிரமனுமில்லை சிவனுமில்லை' என்று கூறிக் காரணபுருஷனை நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயித்துத் தருகிறது. ஹிரண்யகர்ப்ப ருத்ராதிகளுக்குக் காரணபூதன் இவனே என்று மிகத்தெளிவாகக் காட்டுகிறது. "வருணவிஷ்ணுருத்ரேந்த்ரா:" என்று விஷ்ணுவையும் பிறந்தவனுகச் சொல்லியிருக்கிறதே எனில்: வருண ருத்ரேந்த்ரர்களுடன் கூடப்படிக்கப்படும் இந்தவிஷ்ணுசப்தம் ஸூர்யனைக்குறிப்பதாகக் கொள்ளலாம். விஷ்ணுசப்தத்தை ஸூர்யனைக் குறித்தும் வேதத்தில் பலவிடங்களில் பிரயோகித்திருக்கிறதாதாகையால். அன்றிக்கே பகவான் விஷ்ணுவையே சொல்லுவதாகக் கொண்டாலும் இது அவதாரரூபமான பிறப்பைச் சொல்லுகிறது. 'அஜாயமானோ ப$_{3}$ஹுதா$_{4}$ விஜாயதே' [பிறப்பற்ற

http://acharya.org

வனுயிருந்தபோதிலும் பலபடியாகப் பிறக்கிறான் பரமபுருஷன்.] என்று ஆழங்காற்பட்டதன்றோ அருமறை. ஸ்ருஷ்டிஸம்ஹ்ருதி களுக்காக ப்ரஹ்மருத்ரர்களைப்படைத்து ரக்ஷணதர்மம் வேறொரு வரிடத்திலே நிலைநில்லாதாகையாலே தானே விஷ்ணுவாக அவ தரித்து நிற்கும் நிலையைச் சொல்லுகிறது.

''ஸ்ருஷ்டிஸ்தி2த்யந்தகரணீம் ப்3ரஹ்மவிஷ்ணு ஶிவாத்மிகாம் ।
ஸ ஸம்ஜ்ஞாம யாதி ப4க3வாந் ஏக ஏவ ஜநார்த்த3ந: ॥''

[ஜநார்த்தனனென்கிற பகவான் ஒருவனே, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம் ஹாரம் என்னும் மூன்றையும் செய்யும் ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் என்னும் மூன்று பெயர்களை உடையவனாகிறான்] என்று விஷ்ணு புராணத்தில் இவ்வர்த்தம் அறிவிக்கப்பட்டது.

'' ஸர்வே தே3வாஸ் ஸபிதரோ ப்3ரஹ்மாத்3யாஶ்சாண்ட3
மத்4யகா3: ।
விஷ்ணோஸ் ஸகாஶாது3த்பந்நா இதீயம் வைதி3கீ ச்ருதி: ॥
இந்த்3ரோ ஜக3த்பதிர் விஷ்ணுர் யமோ ருத்3ர: ஶஶீ தத்2ா ।
பிதரஶ்சேதி ஸம்பூ4தா: ப்ராது4ர்ந்யேந ஜக3த்பதே: ॥ ''

[அண்டத்தினுள்ளேயுள்ள எல்லா தேவர்களும், பித்ருக்களும், நாரா யணனிடமிருந்து உண்டானார்கள் என்று வேதவாக்யங்கள் சொல்லு கின்றன. இந்த்ரன், ஜகத்பதியான விஷ்ணு, யமன், ருத்ரன், சந்திரன், பித்ருக்கள் ஆகிய அனைவரும் ஜகத்பதியான நாராயண னிடமிருந்தே உண்டானார்கள்.] என்று வராஹபுராணம் பதி னேழாவது அத்தியாயத்திலும்,

'' யஸ்ய ப்ரஸாதா3த3ஹமச்யுதஸ்ய
பூ4த: ப்ரஜாஸர்க்க3 கரோऽந்தகாரீ ।
க்ரோதா4ச்ச ருத்3ர: ஸ்தி2திஹேதுபூ4தோ
மத்4யே ச யஸ்மாத் புருஷ: பரஸ்மாத் ॥ ''

[எந்த அச்யுதனுடைய அருளாலே ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும் பிரமனாகிற நானும், ஸம்ஹரிக்கும் ருத்ரனும் உண்டானோமோ, எந்தப்புருஷன் எங்களுக்கு நடுவில், ரக்ஷிக்கும் புருஷனாய் அவதரித் திருக்கிறானோ...] என்று விஷ்ணுபுராணத்திலும் இவ்வாக்யம் நாராயணபரமாக உபப்ரும்ஹணம் செய்யப்பட்டது.

http://acharya.org

" மத்₄யே விரிஞ்சகி₃ரிஸ²ம் ப்ரத₂மாவதாரஸ்
தத்ஸாம்யத: ஸ்துதிகரூயிதும் தவ சேத் ஸ்வரூபம் "

[பிரமனுக்கும், சிவனுக்கும் நடுவே முதலவதாரம் எடுத்திருப்பது அவர்களுடன் ஒன்றாயிருக்கையை உணர்த்தி உன்னுடைய பரஸ்வரூபத்தை மறைப்பதற்காகில்...] என்று பட்டர் அருளிச்செய்தபடியே ஆஸுரப்ரக்ருதிகளை மோஹிப்பிப்பதற்காக பகவான் ரகுவம்சத்திலும் யதுவம்சத்திலும் மனிதனாய் அவதரித்தாப்போலே ப்ரஹ்மருத்ரர்களுக்கு நடுவே விஷ்ணுவாயவதரித்திருப்பதைச் சொல்லியிருக்கிறதாகையாலே இங்கு "நாராயணனிடமிருந்து விஷ்ணு பிறந்தார்" என்று சொன்னதில் தோஷமில்லை. ஆக, இவ்வுபனிஷத்திலிருந்தும் நாராயணனே ஸர்வகாரணன் என்பது கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டப்பட்டது.

மந்த்ரிகோபநிஷத்தின் முடிவு

இவ்வுபனிஷத் நம் ஆசாரியர்களால் ஆதரிக்கப்பட்டது. ஸ்ரீபாஷ்யத்திலே பகவத் ராமாநுஜரும், ஸ்தோத்ரவ்யாக்யானத்திலே பெரியவாச்சான்பிள்ளையும். இவ்வுபநிஷத்திலுள்ள "விகார ஜநநீ மஜ்ஞாம் அஷ்டரூபாமஜாம் த்₄ருவாம்" [(பதினொரு இந்திரியங்கள் ஐந்து பூதங்கள் ஆகிய) பதினாறு விகாரத்திற்கும் காரணமாயிருப்பதும், (ப்ரக்ருதி மஹான் அஹங்காரம் பஞ்சதந்மாத்திரைகள் என்னும்) எட்டு ப்ரக்ருதிகளாயிருப்பதும் அசேதனமானதும், உத்பத்தி விநாசங்களற்றதுமான மூலப்ரக்ருதியை...] "தெ₄நுரூபாம் யந்தவதீ ஸா ஜநித்ரீ பூ₄தபா₄விநீ" [ஆதியந்தமற்றதும் ஸமஷ்டி வ்யஷ்டி ஸ்ருஷ்டிகளுக்குக் காரணமாயிருப்பதுமான பசுவைப் போன்ற மூலப்ரக்ருதி] என்னும் வாக்யங்களை ச்ருதிப்ரமாணமாக எடுத்திருக்கிறார்கள். ரங்கராமாநுஜ முநிவரும் இவ்வுபநிஷத்திற்கு பாஷ்யம் செய்திருக்கிறார். இவ்வுபநிஷத்தில் பகவத்காரணத்வம் பேசப்பட்டிருக்கிறபடியைப் பார்ப்போம். இவ்வுபநிஷத்தின் ஆரம்பத்திலேயே,

" அஷ்டபாத₃ம் ஶுசிம் ஹம்ஸம் த்ரிஸூத்ரமணுமவ்யயம் "

[எட்டு (ப்ரக்ருதிகளாகிற) கால்களையுடையவனும், பரிசுத்தனும் (ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களாகிற) முத்தொழில்களையுடையவனும், அறியவொண்ணாதவனும், அறிவற்றவனும், ஹம்ஸசப்தத்தால் சொல்லப்படுபவனுமான பரமாத்மாவைப் பார்க்கிறான்.] என்று பகவானுடைய திருநாமங்களில் ஒன்றான ஹம்ஸநாமத்தைப்

http://acharya.org

படித்தது. ஹம்ஸநாமம் பகவந்நாமமாகுமோ? என்னில்: "மரீசிர் தமநோ ஹம்ஸ:" என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் விஷ்ணு நாமங்களில் ஒன்றாகப் படிக்கப்படுகையாலும், 'ஹம்ஸோ விஹங்க பேதே ஸ்யாத் அர்க்கே விஷ்ணௌ" "ஹம்ஸோர்க்கே விபேதே விஷ்ணௌ" என்று விச்வப்ரகாசம், வைஜயந்தி, சப்தரத்நாகரம் முதலான அபிதாநகோசங்களில் ஹம்ஸசப்தத்துக்கு விஷ்ணுவும் அர்த்தமாகப் படிக்கப்படுகையாலும் இது விஷ்ணுநாமமாகிறது. அன்னமாய் அன்றங்கு அருமறை பயந்தவனுகையாலும், ஹம்ஸத்தைப்போலே ஆச்சர்யத்தை விளைவிப்பவனும், பிரகாசிப்பவனும், ஸாராஸார விவேகஜ்ஞனுமிருக்கிறனுகையாலும் பகவான் ஹம்ஸமெனப்படுகிறன். அடுத்தபடியாக,

"த்4யாநக்ரியாப்4யாம் ப4க3வாந்
பு4ங்க்தேऽஸௌ ப்ரஸப4ம் விபு4:"

[ஸர்வவ்யாபியான இந்த பகவான், ஸங்கல்பஸ்ருஷ்ட்யாதிகளாலே, (ப்ரக்ருதியாகிற பகவை) அநுபவிக்கிறன்.] என்று நாராயணனையே முக்யார்த்தமாகக் கொண்ட பகவச்சப்தத்தைப் படிப்பதன்மூலம் பரதத்வ நிர்ணயம் செய்கிறது.

"ப4க3வாநிதி ஶப்3தோ3ऽயம் ததா2 புருஷ இத்யபி।
நிருபாதீ4 ச வர்த்தேதே வாஸுதே3வே ஸநாதநே ||"

[பகவான் என்னும் சப்தமும், புருஷசப்தமும் இயற்கையாகவே ஸநாதனனான வாஸுதேவனிடமே விளங்குகின்றன.] என்று வராஹபுராணத்திலும்,

"ஏவமேஷ மஹாஶப்3தோ3 மைத்ரேய ப4க3வாநிதி।
பரமப்3ரஹ்ம பூ4தஸ்ய வாஸுதே3வஸ்ய நாந்யக3: ||"
தத்ர பூஜ்யபதா3ர்த்தோ2க்தி பரிபா4ஷாஸமந்வித:।
ஶப்3தோ3ऽயம நோபசாரேண அந்யத்ர ஹ்யுபசாரத: ||"

[மைத்ரேயரே! இம்மாதிரியாக பகவான் என்ற இந்த மஹாசப்தம் பரப்ரஹ்மமான வாஸுதேவனுக்கே உரியது; வேறொருவரையும் சொல்லாது. பூஜிக்கத்தக்க பொருளைச் சொல்லும் இந்த சப்தம் அவன் விஷயத்தில் அமுக்கியமாகப் பிரயோகிக்கப்படுவதில்லை. மற்றவர்கள் விஷயத்தில் உபசாரத்திற்காகவே சொல்லப்படுகிறது.] என்று விஷ்ணுபுராணத்திலும் உத்கோஷிக்கப்பட்டதன்றோ. சில மந்திரங்களுக்குப் பிறகு,

http://acharya.org

"உத்3ாளீநம் த்4ருவம் ஹம்ஸம் ஸ்நாதகாத்4வர்யவோ ஜகு3:"
[உதாஸீனனும், அசையாதவனும், ஹம்ஸப்தவாச்யனுன இவனை ஸ்நாதகாத்4வர்யுக்கள் பாடுகிறார்கள்] என்று மறுபடியும் ஹம்ஸசப்தத்தைப்படிக்கிறது. இரண்டாவது கண்டத்தின் ஆதியில்

"தம் ஷட்3விம்சமித்யேகே ஸப்தவிம்சமதா2பரே |
புருஷம் நிர்க்கு3ணம் ஸாங்க்2யம் அத2ர்வசிரஸோ விது3: ||"
[சிலர் அவனை இருபத்தாறுவது தத்துவமாகக் கணக்கிடுகிறார்கள். மற்றும் சிலர் (காலதத்வத்தைத் தனியாகக் கொண்டு) அவனை இருபத்தேழாவது தத்வமாக எண்ணுகின்றனர். அதர்வசிரஸ்ஸுகள் அவனை ஸத்வரஜஸ்தமோகுணமற்ற புருஷனுக அறிவிக்கின்றன.] என்று பகவதஸாதாரணமான புருஷசப்தத்தையும் படித்துப் பரதத்வ நிர்ணயம் செய்து,

"ப்3ரஹ்மாத்3யம் ஸ்த2ாவராந்தஞ்ச பச்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ: |
தமேகமேவ பச்யந்தி பரிசுத்3த4ம் விபு4ம் த்3விஜா: ||
யஸ்மிந் ஸர்வமித3ம் ப்ரோதம் ப்ரஹ்3ம ஸ்த2ாவரஜங்க3மம் |
தஸ்மிந்நேவ லயம் யாதி ஸ்ரவந்த்யஸ் ஸாக3ரே யதா2 ||
யஸ்மிந் ப4ாவா: ப்ரலீயந்தே லீநாச்சாவ்யக்ததாம யயு: |
பச்யந்தி வ்யக்ததாம் பூ4யோ ஜாயந்தே பு3த்3பு3தா3 இவ ||"
[பிரமனிலிருந்து, சாவரங்கள் வரையிலுள்ள பூதங்களில் ஞானிகள் அவன் ஒருவனையே பார்க்கிறார்கள். த்விஜர்கள் அவனையே பரிசுத்தனாகவும், விபுவாகவும் அறிகிறார்கள். ஸ்தாவர ஜங்கமமான இந்த ஜீவஸமூஹம் எல்லாம் எவனிடத்திலே கோர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அவனிடத்திலேயே ஸமுத்ரத்தில் விழும் நதிகளைப்போல் லயமடைகின்றன. எவனிடத்தில் எல்லாப் பொருள்களும், லயமடைகின்றனவோ, லயித்தபின் அவ்யக்த நிலையை அடைகின்றனவோ, மறுபடியும் வ்யக்த நிலையை அடைந்து நீர்க்குமிழிகள்போல் உண்டாகின்றனவோ அவனை ஞானிகள் அறிகிறார்கள்.] என்று இவனே ப்ரஹ்மா முதலாகப் புல் ஈருகவுள்ள ஸகல ஜந்துக்களுக்கும் காரணபூதன் என்று காட்டி,

"ஏவம் ஸ ப4க3வாந் தே3வ: பச்யத்யஸ்ய புந: புந:"
[தேவனான அந்த பகவான் இம்மாதிரியாக மறுபடியும் மறுபடியும் (உத்பத்தி விநாசங்களை) ஸங்கல்பிக்கிறான்.] என்று அவன் பகவச்சப்தவாச்யனே என்று மறுபடியும் விளங்கவைக்கிறது. இவற்

http://acharya.org

றிலிருந்து இவ்வுபநிஷத்திலும் நாராயணனே ஸர்வகாரணனாகச் சொல்லப்படுகிறான் என்று விளங்குகிறது.

பூர்வோக்த ஸங்க்ரஹம்.

ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே இதுவரையில் ஸ்ரீவிஷ்ணுசித்தவிஜயத்திலே ஸாதித்திருப்பவைகளை ஸங்க்ரஹிப்போம். முதன் முதலில் நாராயணோபநிஷத், மஹோபநிஷத், ஸுபாலோபநிஷத் என்னும் மூன்று உபநிஷத்துக்களைக்கொண்டு நாராயணனே ப்ரஹ்மருத்ராதி ஸகல லோக காரணபூதன் என்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயம் செய்யப்பட்டது. அடுத்தபடியாக புருஷஸூக்தத்தை விவரிப்பதன்மூலம் அதில் சொல்லப்பட்ட காரணபுருஷன் நாராயணனே என்று நிர்த்தாரணம் செய்யப்பட்டது. அடுத்தபடியாக நாராயணாநுவாகத்தை வ்யாக்யானம் செய்வதன்மூலம் அவனே பரப்ரஹ்மாதி ஸப்தவாச்யனான ஸர்வகாரணன் என்று காட்டப்பட்டது. அடுத்தபடியாக, விசிதிவாதிகளின் பிறப்பைச் சொல்லும் வேதவாக்கியங்களை ஒருங்குசேர்த்துக் காட்டுவதன்மூலம் நாராயணனே ப்ரஹ்மருத்ர காரணன் என்று அதிஸ்பஷ்டமாக அறிவிக்கப்பட்டது. அடுத்தபடியாக ந்ருஸிம்ஹதாபநீயோபநிஷத்திலுள்ள காரணவாக்யங்களைக் கொண்டு நாராயண காரணத்வ நிர்ணயம் செய்யப்பட்டது. அடுத்தபடியாக அப்ரஸித்தங்களான மஹாநாராயணோபநிஷத் கோபாலதாபிந்யுபநிஷத்துக்களிலும் இவனே காரணபுருஷனாகச் சொல்லப்பட்டிருக்கிறான் என்று காட்டப்பட்டது. அடுத்தபடியாக ஸுப்ரஸித்தங்களான தசோபநிஷத்துக்களிலும் ப்ரதிபாதிக்கப்படுபவன் பரமபுருஷனே என்று விளக்குவதன்மூலம் அவ்வுபநிஷத்துக்களில் ஸர்வகாரணனாகச் சொல்லப்பட்டவன் இவனே என்று நிர்ணயிக்கப்பட்டது. கடைசியாக பைங்கிரஹஸ்ய மந்த்ரிகோபநிஷத்துக்களில் காரணபுருஷனாகச் சொல்லப்படுபவனும் நாராயணனே என்று நிர்த்தாரணம் செய்யப்பட்டது. ஆக, இவ்வளவால் பற்பல உபநிஷத்துக்களிலும், வேதவாக்யங்களிலும் ஸர்வகாரணனாகச் சொல்லப்பட்டவன் நாராயணனே என்று அறிவிக்கப்பட்டது. இனி, அடுத்தபடியாக சிவனுக்குக் காரணத்வத்தைச் சொல்லுவதாகத் தோன்றும் ச்வேதாச்வதரம், அதர்வசிகை, அதர்வசிரஸ் என்னும் மூன்று உபநிஷத்துக்களும் பகவத்பரங்களே என்று நிர்ணயித்து, ஸுபாலோபநிஷத், மைத்ராயணீயம், கௌஷீதகீ, ப்ரஹ்மபிந்து முதலான உபநிஷத்துக்களைக் கொண்டு நாராயணனுடைய ஸர்வரக்ஷகத்வ ஸர்வாந்தர்யாமித்வ

http://acharya.org

ஸர்வகாரணத்வாதிகள் நிரூபிக்கப்படும். அதற்குப்பின் பூர்வ பாகத்திலுள்ள பகவத்ப்ரபாவ ப்ரகாசகமான வாக்யங்களைக் கொண்டு பரதத்வநிர்ணயம் செய்து கடைசியாக இதிஹாஸ புராணங்களைக்கொண்டு பரதத்வநிர்ணயம் செய்து முடிக்கப்படும்.

சிவ காரணத்வ சங்கா நிராஸம்

மேலே எடுத்துக்காட்டப்பட்ட நூற்றுக்கணக்கான வேதவாக்யங்கள் நாராயணனையே ஸர்வகாரணனாகச் சொல்லியிருக்க, ச்வேதாச்வதரம், அதர்வசிகா, அதர்வசிரஸ் என்னும் மூன்று உபனிஷத்துக்களிலுள்ள சில வாக்யங்களில் சிவ சம்பு ருத்ராதி சப்தங்கள் படிக்கப்பட்டிருப்பதைக் கொண்டு சிவபரத்வத்தை ஸ்தாபிக்க முயலுகிறார்கள் சிலர். அந்த முயற்சி வீணானதே என்பதை இனி நிரூபிப்போம்.

இவ்வுபநிஷத்துக்களை விசாரிக்கச் செல்வதற்கு முன் பின்வரும் விஷயங்களை நெஞ்சில் நன்றாகப் பதியவைத்துக் கொள்ள வேண்டும்:— (1) உபனிஷத்துக்களில் சொல்லப்படும் பரப்ரஹ்மம் ஒன்றே. ஈச்வரர்கள் பலர் இருக்கமுடியாது. ஆகையால் நாராயணன், சிவன் ஆகிய இருவரும் பரப்ரஹ்மம் என்று சொல்ல முடியாது. இருவரும் ஒருவரே என்று கொள்ளலாமே எனில்: ஒருவனை ஸ்ரஷ்டாவாகவும், ஒருவனை ஸ்ருஷ்டிக்கப்படுபவனாகவும், ஒருவனை அபஹதபாப்மாவாகவும், மற்றொருவனை அநபஹத பாப்மாவாகவும், ஒருவனைக் கர்மவச்யனாகவும், மற்றொருவனை அகர்மவச்யனாகவும், பற்பல வேதவாக்யங்கள் சொல்லுகையால் இருவரும் ஒன்றாக முடியாது. ஆகையால் நாராயணன், விஷ்ணு ஹரி, அநந்தன், புருஷன், மஹாபுருஷன், உத்தமபுருஷன், சிவன் சம்பு, ருத்ரன், ஈசன், ஈச்வரன் முதலான பதங்களால் உபநிஷத்துக்களிலும் உரைக்கப்படுபவன் ஒருவனேயாகவேண்டும். (2) இனி, இப்பதங்களால் சொல்லப்படுபவன் நாராயணனா ருத்ரனா என்னும் கேள்வி எழுகிறது. நாராயணன் என்று கொள்ளில் சிவருத்ராதி பதங்கள் யௌகிகமாக நாராயணனைச் சொல்லுகின்றன என்று சொல்லவேணும். ருத்ரன் என்று கொள்ளில், நாராயணாதி நாமங்கள் யௌகிகமாக சிவனைச் சொல்லுகின்றன என்று சொல்லவேணும். இதில் எப்படிக்கொள்வது ப்ரமாணயுக்திகளுக்கு ஒத்தது என்னும் கேள்வியே கடைசியில் விஞ்சி நிற்கிறது. (3) நாராயணாதி சப்தங்கள் விஷ்ணுவினிடத்தில் ரூடியை

http://acharya.org

உடையவை என்பதும், சிவாதி சப்தங்கள் சிவலிங்கத்தில் ரூடியை உடையவை என்பதும் நிர்விவாதம். இவ்விரு வகுப்புகளில் ஒன்றில் ரூடியைத்தள்ளி யௌகிகமாகப் பொருள் கொண்டே தீர வேண்டும். அதில் நாராயணசப்தத்தில் ரூடியைத்தள்ளி "நாரங்களுக்கு அயனமாயுள்ளவன்" என்னும் யௌகிகப் பொருளைக் கொண்டு சிவபரமாகப் பார்த்தால், நாராயண சப்தத்திலுள்ள 'ணத்வம்' பாதிக்கிறது. "பூர்வபதாத் ஸம்ஜ்ஞாயா மக:" என்னும் பாணினி ஸூத்ரப்படி "நாராயந:" [நாரங்களுக்கு அயனமாயுள்ளவன்] என்னும் பொருளையுடைய பதம், அப்பெயரால் ஸுப்ரஸித்தனை விஷ்ணுவைக்குறிக்கும்போது "நாராயண:" என்று மாறும். அப்பதம் வேறு எவரையாவது குறிக்கவேண்டுமாகில். "நாராயந:" என்றே கிடக்கும். "நாராயண:" என்றிருந்தால் விஷ்ணுவைத்தவிர வேறு எவரையும் குறிக்காது. "நாராயந:" என்றிருந்தால் அப்பொருளுக்குப் பொருந்திய எவரையும் குறிக்கலாம். வேதத்தில் காரணபுருஷனைச் சொல்லும் பற்பல வாக்யங்களிலும் "நாராயண:" என்று பிரயோகம் காண்கிறதேயொழிய "நாராயந:" என்று ஓரிடத்திலுமில்லை. ஆகையால் நாராயண நாமத்தை சிவபரமாக்குவதென்பது முடியாத காரியம். சிவபரத்வத்தை ஸாதிக்க அரும் பாடு பட்ட அப்பய்ய தீக்ஷிதரும் 'ணத்வம்' பாதிக்கிறது என்று கைவாங்கினர் என்பது பிரஸித்தம். ஆகையால் சிவாதி சப்தங்களை நாராயணபரமாகக் கொள்ளவேண்டுமேயொழிய நாராயண சப்தத்தை சிவபரமாகக் கொள்ளமுடியாது என்றதாயிற்று. ஆகையால் உபநிஷத்துக்களெல்லாம் நாராயணனையே ஸர்வகாரணனாக உரைக்கின்றன என்று கொள்வதே சரியானது.

மேலும், நாராயணன், விஷ்ணு, ஹரி, அநந்தன், புருஷன் முதலான சப்தங்கள் உபனிஷத்துக்களில் நூற்றுக்கணக்கான விடங்களில் உத்கோஷிக்கப்பட்டிருக்கின்றன. சிவாதிசப்தங்கள் பத்தெட்டு இடங்களிலேயே படிக்கப்படுகின்றன. நாராயணாதி நாமங்கள் பெரும்பாலும்காரண வாக்யங்களிலே காணப்படுகின்றன. சிவாதி சப்தங்கள் ஒன்றிரண்டு இடங்களிலேயே காரண வஸ்துவைக் குறித்துப் பிரயோகிக்கப்படுகின்றன. இதைக்கொண்டு சிவ காரணத்வத்தை ஸாதிக்கப்பார்த்தால் காரண வாக்யங்களில் படிக்கப்படும் ஆகாச ப்ராணஜ்யோதிராதிசப்தங்களைக்கொண்டு ஆகாசாதி காரணத்வம் சொல்லவேண்டிவரும். அவை அசேதனமாகையாலே காரணமாகமாட்டாவெனில், ருத்ரனும் ஸ்ருஷ்டிக்கப்

http://acharya.org

பட்டவைகளும், பாபம் நீங்கப்பெறுதலையும் வேதவாக்யங்களில் சொல்லப்பட்டவையையாலே காரணபுருஷனைக் காட்டான். ஆகையால், ஸத், ப்ரஹ்ம, ஆத்மா, அக்ஷரம், ஆகாசம், ஜ்யோதி, ப்ராணன் முதலான சப்தங்களைப் போலே சிவருத்ராதி சப்தங்களும் நாராயணபரமாவதாகவே கொள்ளவேண்டும். இல்லாவிடில் வேதம் முழுவதும் பரஸ்பர விருத்தமாய் த்யாஜ்யமாகும். இதனாலேயே நாராயணஸூக்தத்தில் அக்ஷர பரப்ரஹ்ம பரமாத்ம பரஞ்ஜ்யோதி: பரதத்வ ஶம்பு சிவாதிசப்தங்கள் நாராயணபரமே என்று நிர்ணயிக்கப்பட்டது. மேலும், சிவருத்ராதி பதங்கள் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும், இதிஹாஸபுராணாதிகளிலும் பலவிடங்களிலும் நாராயணபரமாகப் படிக்கப்படுகின்றன. நாராயண நாமம் சிவனைக் குறித்து அப்படிப் படிக்கப்படுவதில்லை. ப்ரஹ்மாவால் பகவானுடைய பெயர்களான சிவருத்ராதி நாமங்கள் ருத்ரனுக்கு வைக்கப்பட்டன என்று சதபதப்ராஹ்மணத்தில் தெளிவாகச் சொல்லியிருப்பதைக் காட்டினோம்.

"ந து நாராயணாதீ$_3$நாம் நாம்நாமந்யத்ர ஸம்ப$_4$வ:।
அந்யநாம்நாம் க$_3$திர் விஷ்ணுரேக ஏவ ப்ரகீர்த்தித:॥
ருதே நாராயணாதீ$_3$நி நாமாநி புருஷோத்தம:।
ப்ராதா$_3$த$_3$ந்யத்ர ப$_4$க$_3$வாந்................"

[நாராயணன் முதலிய பெயர்கள் மற்ற தெய்வங்களைக் குறிக்க மாட்டா. மற்ற தெய்வங்களின் பெயருக்கும் விஷ்ணு ஒருவனே சேருமிடமாகக் கீர்த்திபெற்றிருக்கிறான். நாராயணன் முதலிய பெயர்களைத் தவிர மற்ற பெயர்களை பகவான் பிறருக்குக் கொடுத்தருளினான்.] என்று வாமன புராணத்திலும் சொல்லப்பட்டது. ஆகையால், அபௌருஷேயமான வேதம் ருத்ராதி நாமங்களால் பகவானைச் சொல்லுவதில் ஆச்சர்யமொன்றுமில்லை. தத்வவித்துக்கள் இதைக்கண்டு ஒருபோதும் கலங்கமாட்டார்கள். இனி, இவ்வுபநிஷத்துக்களை விசாரிப்போம்.

ச்வேதாச்வதர உபநிஷத் விசாரம்.

இவ்வுபநிஷத்தில் சிவபரத்வம் சொல்லியிருப்பதாகச் சிலர் வாதாடுகின்றனர். அவர்களுடைய வாதங்களையும், அவற்றுக்கு ஸமாதானங்களையும் பூர்வபக்ஷஸித்தாந்த ரூபங்களாகக் காட்டுவோம்.

http://acharya.org

பூர்வபக்ஷம். (1)

"கிம் காரணம் ப்₃ரஹ்ம குத: ஸ்ம ஜாதா:
ஜீவாம கேந க்வ ச ஸம்ப்ரதிஷ்டா₂: ।
அதி₄ஷ்டி₂தா: கேந ஸுகே₂தரேஷு
வர்த்தாமஹே ப்₃ரஹ்மவிதோ₃ வ்யவஸ்தா₂ம் ॥"

[ப்ரஹ்மவித்துக்களே! காரணமான ப்ரஹ்மம் எது? நாம் எதிலிருந்து உண்டானோம்? எதனால் வாழ்கிறோம்? எதிலே லயமடைகிறோம்? எதனால் தரிக்கப்பட்டு ஸம்ஸார துக்கத்தில் நிலைநிற்கிறோம்?] என்று இவ்வுபநிஷத்தில் முதலிலேயே ப்ரஹ்மவித்துக்கள் ஒன்றுகூடி காரணமான ப்ரஹ்மம் எந்த தேவதை? என்று தங்களுக்குள்ளேயே கேள்வி கேட்டுக்கொண்டதாகக் காண்கிறபடியால் இவ்வுபநிஷத் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதிகளில் எந்ததேவதை பரப்ரஹ்மம் என்று நிர்ணயிப்பதற்காகவே தோன்றியதென்று தெளிவாகிறது. இப்படி விசாரித்த அந்த ரிஷிகள் "தே த்₄யாநயோகா₃நுக₃தா அபச்யந்" [அவர்கள் தியானயோக நிலையை அடைந்தவர்களாய்ப் பார்த்தார்கள்] என்கிறபடியே பரதெய்வத்தைக் கண்டதாகவும் சொல்லப்பட்டது. சில மந்திரங்களுக்குப்பின்,

"ஸம்யுக்தமேதத் க்ஷரமக்ஷரஞ்ச
வ்யக்தாவ்யக்தம் ப₄ரதே விச்வமீச: ।
அநீசச்சாத்மா ப₃த்₄யதே போ₄க்த்ருபா₄வாத்
ஜ்ஞாத்வா தே₃வம் முச்யதே ஸர்வபாசை: ॥"

[க்ஷராக்ஷரங்கள் என்றும், வ்யக்தாவ்யக்தங்கள் என்றும் சொல்லப்படும் ப்ரக்ருதி புருஷர்கள் ஒன்றுடனொன்று பிணைந்துள்ளன; எல்லாவற்றையும் ஈசன் தரிக்கிறான். அநீசனான ஜீவாத்மா (அசித்தை) புஜிப்பவனாயிருக்கையால் கட்டுண்டுகிடக்கிறான். தேவனை அறிந்தானாகில் ஸர்வபாசங்களிலிருந்தும் விடுபடுகிறான்.] என்று ஈசசப்தத்தைப் படிப்பதன்மூலம் இவ்வுபனிஷத்தில் ப்ரதிபாதிக்கப்படும் பரம்பொருள் சிவனே என்று தெளிவாக்குகிறது. இத்துடன் நில்லாமல் அடுத்த மந்திரத்திற்குப் பின்,

"க்ஷரம் ப்ரத₄ாநமம்ருதாக்ஷரம் ஹர:
க்ஷராத்மாநாவீசதே தே₃வ ஏக:"

http://acharya.org

[க்ஷரபதத்திலும் சொல்லப்பட்டது ப்ரக்ருதி; அம்ருதமே அக்ஷரம்; க்ஷரத்தையும், ஆத்மாவையும் ஹரனுகிற தேவன் ஒருவனே நியமிக்கிறான்.] என்று படிப்பதன்மூலம் ஈசஹரசப்தவாச்யனை சிவனே இங்கு ப்ரதிபாதிக்கப்படுபவன் என்று விளக்குகிறது வேதம்.

ஸித்தாந்தம் (1)

இதற்கு பதில் சொல்லுகிறோம். " கிம் காரணம் ப்ரஹ்ம " என்னும் முதல் மந்திரத்திலிருந்து ப்ரஹ்மமானது எந்த தேவதா ரூபமானது என்று விசாரிப்பதற்காகத் தோன்றியது இவ்வுபநிஷத் என்று சொன்னது தவறு. இரண்டாவது மந்திரத்தில்,

" காலஸ் ஸ்வபாவோ நியதிர் யத்ருச்சா
பூதாநி யோநி: புருஷ இதி சிந்த்யம் ।
ஸம்யோக ஏஷாம் ந த்வாத்மபாவாத்
ஆத்மாப்யநீஶஸ் ஸுகது:க்கஹேதோ: ॥ "

[ஜகத் காரணமான ப்ரஹ்மம் காலமோ ? ஸ்வபாவமோ ? நியதியோ ? யத்ருச்சையோ ? பூதங்களோ ? புருஷனோ ? எனில்; இவையாகமாட்டா. (புருஷனைத்தவிர்த்த) இவையெல்லாம் சேர்ந்தாலும், சேதனத்தன்மையில்லாமையால் காரணமாகமாட்டா. ஜீவனுவெனில் ஸுகதுக்கங்களை அநுபவிக்கிறவனையால் நியந்தாவல்லன்.] என்று காலம் முதலியவற்றையும் ஜகத்காரணமோ என்று எடுத்துக் கழிக்கிறார்களாகையால், காலஸ்வபாவப்ரக்ருதி புருஷாதிகள் காரணமா ? அல்லது இவைகளைக் காட்டிலும் விலக்ஷணனும், ஸர்வஜ்ஞனும், ஸர்வசக்தியான ஒரு பரமசேதனன் ஜகத்காரணனு என்று நிர்ணயிப்பதற்காகத் தோன்றியதேயொழிய ஜகத்காரணம் எந்த தேவதை என்று நிர்ணயிப்பதற்காகத் தோன்றியது இவ்வுபநிஷத் என்று சொல்ல வழியில்லை. ஜகத்காரணம் எந்த தேவதை என்று ஆராயுமவர்களாயிருந்தால் இரண்டாவது மந்திரத்தில் "ஜகத்காரணம் ப்ரஹ்மாவா? விஷ்ணுவா? ருத்ரனு? ஸூர்யனு?" என்று ப்ரச்னம் ஏற்பட்டிருக்குமேயொழிய "காலமா? ஸ்வபாவமா?" என்னும் கேள்விக்கு இடமேயில்லை. காலாதிகளைக்காட்டிலும் விலக்ஷணன் என்று நிர்ணயிப்பதுடன் அவன் இன்ன தேவதை என்றும் நிர்ணயிக்கக் குறையென்ன ? இங்குள்ள ஈசஹராதி சப்தங்களிலிருந்து அப்படியே நிர்ணயிப்பதாகத் தோன்றுகிறதே எனில்: அன்று; தேவதா விசேஷத்தையும் நிர்ணயிக்கத் தோன்றியது என்று கொண்டாலும்

http://acharya.org

இங்கு சொல்லப்படும் தேவனை ருத்ரனாகக் கொள்ளமுடியாது. "வ்யக்தாவ்யக்தம் ப$_4$ரதே விச்வம் ஈஶ: அநீஶஶ்சாத்மா ப$_3$த்$_4$யதே" [ஈஶன் வ்யக்தாவ்யக்தங்களை தரிக்கிறான்; அநீசனான ஆத்மா கட்டுண்டு கிடக்கிறான்] என்று அநீஶனுக்கு ப்ரதிகோடியாக ஈஶபதத்தைப் பிரயோகித்திருப்பதாகத் தெளிவாகிறபடியால் இங்கு ரூடி விவக்ஷிதமன்று; ஆகையால் இதைக்கொண்டு இங்கு சிவன் ப்ரதிபாத்யன் என்று சொல்லவொண்ணாது. மேலும், "ஆத்மா நாராயண: பர:" "அந்தர் ப$_3$ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" முதலான வேதவாக்யங்களுடன் ஏகார்த்தமாயிருப்பதால் இவ்வாக்யம் நாராயணபரமே என்று ஸித்திக்கிறது. மேலும், இப்படி ஸந்தேஹப்படும்படி விடக்கூடாதென்றே இதற்கடுத்த மந்திரத்தில்,

"ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ
அஜா ஹ்யேகா போ$_4$க்த்ருபோ$_4$கா$_3$ர்த்த$_2$ யுக்தா ।
அநந்தஶ்சாத்மா விஶ்வரூபோ ஹ்யகர்த்தா
த்ரயம் யதா$_3$ விந்த$_3$தே ப்$_3$ரஹ்மமேதத் ॥"

[ஈஶனும், அநீஶனும் (முறையே) ஸர்வஜ்ஞனாகவும், அஜ்ஞனாகவும் உள்ளனர். பிறப்பற்றதான ப்ரக்ருதி போக்தாவான ஜீவனின் போகத்திற்காக ஏற்பட்டிருக்கிறது. விச்வரூபனாய் அநந்தனான பரமாத்மாவோவெனில் கர்த்ருத்வமற்றவனானமையாலே கர்மபலபோக்தாவல்லன். இம்மூன்றையும் அறிந்தானாகில் ஜீவன் முக்தனாகிறான்.] என்று நாராயண நாமங்களான அநந்தஶப்தத்தையும், விஶ்வரூபஶப்தத்தையும் படிக்கிறது பண்டைமறை. "அநந்தமவ்யயம்" என்றும், "புருஷம் க்ருஷ்ண பிங்க$_3$ளம்... விச்வரூபாய வை நம:" என்றும் ஸர்வவேதாந்த நிகமனபூதமான நாராயண ஸூக்தத்திலும் அநந்தவிஶ்வரூப நாமங்கள் நாராயண பரங்களென்று காட்டப்பட்டதன்றோ. "அநந்தோ நாக$_3$ராட்$_3$ விஷ்ணு" "அநந்த: ஶேஷ விஷ்ண்வோ: ஸ்யாத்" "சக்ரீ கைடபு$_4$ஜித் ஸரோஜநயநோநந்தோ முகுந்தோ$_3$ ஹரி:" என்று வைஜயந்தீ விச்வப்ரகாஶ ஶப்தரத்நாகராதிகளில் அநந்தஶப்தமும், "பத்$_3$ம நாபோ$_4$ விச்வரூப:" "விஷ்வக்ஸேநோ விஶ்வரூபோ முராரி:" "விஶ்வரூபஶ் சதுர்ப்பு$_4$ஜ:" என்று வைஜயந்தீ அபிதானரத்னமாலா ஶப்தரத்நாகராதிகளில் விச்வரூபசப்தமும் விஷ்ணுநாமமாகப் படிக்கப்பட்டன. ஆகையால் இவ்வுபநிஷத்தின் உபக்ரமத்தில் (ஆரம்பத்தில்) பகவத்பரத்வம் ப்ரதிபாதிக்கப்பட்டது. ஆகையால், "உபக்ரமத்திற்கு அநுகுணமாகவே பின்வருமவற்றைப் பொருள்

http://acharya.org

கொள்ளவேண்டும்'' என்னும் ந்யாயத்தினால் பின்னால் வரும் ருத்ர சிவாதிபதங்களையும் அநந்யபரமாகவே கொள்ளவேண்டுமென்று ஸித்திக்கிறது. இதற்கடுத்ததான "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:'' என்னும் பதத்தில் ஹர பதத்தைப் பிரயோகித்திருக்கிறபடியால் இவ்வுபநிஷத் சிவபரத என்றதும் தவறு. இங்கு ஹரபதம் ''(ப்ரதாநம் ஆத்மநோ போக்யத்வேந) ஹரதீதி ஹர:'' [(ப்ரக்ருதியைத் தனக்கு போக்யமாக) ஹரிக்கிறனாகையால் ஹரன்.] என்னும் வ்யுத்பத்தியால் ஜீவனைக்குறிக்கிறது என்று கொள்வதே உசிதமானது. ஏனெனில்; ''ஸம்யுக்தமேதத் க்ஷரமக்ஷரஞ்ச வ்யக்தாவ்யக்தம் பரமே விச்வமீச:'' [வ்யக்தாவ்யக்தங்களாய், க்ஷராக்ஷரங்களாகிய அனைத்தையும் ஈசன் தரித்து நிற்கிறான்.] என்னும் முன் மந்திரத்திலுள்ள க்ஷராக்ஷரபதங்களை விவரிப்பதற்காகத் தோன்றியது இவ்வாக்கியம். ''க்ஷரம் ப்ரதாநம்'' என்னும் பாகத்தாலே க்ஷரபதத்தினால் சொல்லப்படுவது அசேதனமான ப்ரக்ருதியென்று காட்டப்பட்டது. ''அம்ருதாக்ஷரம் ஹர:'' என்னும் பாகத்தினால் ''அழிவற்றதான அக்ஷரம் ஹரசப்தவாச்யனான ஜீவாத்மா'' என்று காட்டப்படுகிறது. ஆகையால் இங்கு ஹரசப்தம் சிவபரமன்று.

நநு: ''அம்ருதாக்ஷரம்'' என்னுமிடத்திலுள்ள அம்ருதபதமே அக்ஷரபதத்தை விவரிக்கிறதென்று கொண்டால் ஹரபதத்தில் சிவனுக்குள்ள ரூடியை விடாமல் நிர்வஹிக்கலாமே; அப்படியிருக்க ஹரபதத்தினால் வேறெங்கும் சொல்லப்படாத ஜீவனை இங்கு அப்பதத்தினால் குறிப்பதாகக் கொள்ளலாமோ? எனில்: அக்ஷரபதத்தினால் சொல்லப்பட்டதை அம்ருதபதத்தினால் விவரிக்கிறது என்று கொள்வதில் பல தோஷங்களுண்டு; அம்ருதாக்ஷரம் என்னும் பதமானது ஸமஸ்தபதமாகையால் அதில் ஒன்றை உத்தேச்யமாகவும் ஒன்றை விதேயமாகவும் கொள்ளவொண்ணாது. பூர்வமீமாம்ஸையிலும் த்ர்யங்கதாதிகரணத்தில் இவ்விஷயம் விவரிக்கப்பட்டுள்ளது. ''அம்ருதாக்ஷரம்'' என்னும் சப்தமானது ''நாராயண பரம் ப்ரஹ்ம'' என்றவிடத்திற்போலே ஸமஸ்தபதமன்று; விபக்தி லோபம் வந்துள்ளது என்று கொள்ளலாமே எனில்: ''நாராயண பரம் ப்ரஹ்ம'' என்றவிடத்தில் அடுத்தபடி ''தத்வம் நாராயண: பர:'' என்று பிரித்துப் படிக்கப்பட்டிருக்கிறதாகையால் அதை அநுஸரித்து விபக்திலோபம் வந்திருக்கிறதென்று கொள்ளுகிறோம். இங்கு அப்படியில்லை. ஆகையால் இது தோஷமேயாகும். மேலும், அக்ஷரசப்தம் அம்ருதபதத்தால் விவரிக்கப்படுகிறதென்று கொண்

http://acharya.org

டால் "க்ஷரம் ப்ரதா$_4$நம்" என்றவிடத்தில் போலே "அக்ஷரம் அம்ருதம்" என்று உத்தேச்யபதமான அக்ஷர பதத்திற்குப் பிறகு அம்ருதபதம் படிக்கப்பட்டிருக்கவேண்டும். இங்கோவெனில்; அம்ருதாக்ஷரம் என்று படிக்கப்பட்டிருக்கிறது. "க்ஷரம் த்வவித்$_3$யா ஹ்யம்ருதம் து வித்$_3$யா" [ச்வே (5-1)] என்னும் வாக்யத்திலும் உத்தேச்ய விதேயங்கள் பூர்வாபரஸ்தானங்களிலேயே படிக்கப் பட்டிருப்பதை நோக்குவது. மேலும், ஹரபதத்தை "தே$_3$வ ஏக:" என்னும் பதத்துடன் கூட்டினால் தூராந்வயம் என்னும் தோஷம் ப்ரஸங்கிக்கும். மேலும், ஒரு பாதத்திலுள்ள ஒரு பதம் அப் பாதத்திலுள்ள மற்ற பதங்களுடன் கூடி அர்த்தஸ்வாரஸ்யத்தை ஏற்படக்கூடியதாயிருக்கும்போது, அப்பதத்தை மற்றொரு பாதத்தி லுள்ள பதங்களுடன் கூட்டுவது சரியானதன்று. ஆக இப்படி மூன்று தோஷங்கள் ஏற்படுவதால் ஹரபதத்திலுள்ள ரூடியைத் தள்ளி, அதை ஜீவாத்மபரமாகக் கொள்ளுகிறோம். இவற்றையெல் லாம் திருவுள்ளத்திற்கொண்டே "அம்ருதாக்ஷரம் ஹர: இதி போ$_4$க்தா நிர்திச்யதே। ப்ரதா$_4$நமாத்மநோ போ$_4$க்$_3$யத்வேந ஹரதீதி ஹர:" ["அம்ருதாக்ஷரம் ஹர:" என்று போக்தாவான ஜீவன் சொல்லப் படுகிறான். ப்ரக்ருதியைத் தனக்கு போக்யமாக ஹரிக்கிறானாகை யால் (ஜீவன்) ஹரனாகிறான்.] என்று கீதாபாஷ்யத்திலே பகவான் பாஷ்யகாரர் விவரித்தருளினார். ஆகையால் இந்த ஹரபதத்தைக் கொண்டு சிவபரத்வம் ஸாதிக்கமுடியாது. இதற்கு முன் மந்த்ரத்தி லுள்ள அநந்தபதத்திலிருந்து இவ்வுபநிஷத் நாராயணபரமே என்று நிர்ணயிக்கப்பட்டது. இம்மந்த்ரத்திலேயே "க்ஷராத்மாநா வீசதே தே$_3$வ ஏக:" [க்ஷராத்மாக்களை தேவன் ஒருவன் நியமிக் கிறான்.] என்று படித்திருப்பதிலிருந்து "தி$_3$வ்யோ தே$_3$வ ஏகோ நாராயண:" [பரமபதத்திலிருக்கும் நாராயணனாகிற தேவன் ஒருவனே.] என்று ஸுபாலோபநிஷத்தில் ஒப்பற்ற தேவனாகப் படிக்கப்படும் நாராயணனே இங்கும் ப்ரதிபாதிக்கப்படுபவன் என்று தெளிவாகிறது. ஆகையால் இம்மந்த்ரத்தில் சிவபரத்வ சங்கைக்குச் சிறிதும் இடமில்லை

பூர்வபக்ஷம் (2)

"யதா$_3$ தமஸ் தந்ந தி$_3$வா ந ராத்ரிர்
ந ஸந் ந சாஸச் சி$_2$வ ஏவ கேவல:।
தத$_3$க்ஷரம் தத் ஸவிதுர் வரேண்யம்
ப்ரஜ்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ॥"

http://acharya.org

[எப்பொழுது தமஸ் மட்டும் இருந்ததோ, பகல், இரவு, ஸத், அஸத் ஆகிய ஒன்றும் இல்லையோ, சிவன் மட்டும் இருந்தாரோ, அந்தப் பரவஸ்துவே அழிவற்றது; அதுவே ஸூர்யனுக்குள்ளிருக்கும் விரும்பத்தக்க வஸ்து. பழமையானதான அறிவும் அதனிடமிருந்தே வெளிப்பட்டது.] என்று இவ்வுபனிஷத்தின் நான்காவது அத்தியாயத்தில் படிக்கப்படும் வாக்கியத்திலிருந்து சிவனே ஸர்வ காரணனாகச் சொல்லப்படுகிறான் என்று தெளிவாகிறது. "ஸதே$_3$வ ஸோம்யேத$_3$மக்$_3$ர ஆஸீத்" என்றும் "ப்$_3$ரஹ்ம வா இத$_3$மக்$_3$ர ஆஸீத்" "ஆத்மா வா இத$_3$மேக ஏவாக்$_3$ர ஆஸீத்" என்றும்,

"தமோ வா இத$_3$மேகமாஸ। நாஸதா$_3$ஸீந்நோ ஸதா$_3$ஸீத் தத$_3$ாநீம் தம ஆஸீத்। ப்ரஜாபதிர் வா இத$_3$மேக ஆஸீத்। நாஹராஸீத் ந ராத்ரிராஸீத்। ஸோऽஸ்மிந் அந்தே$_4$ தமஸி ப்ராஸர்ப்பத்॥"

[முதலில் தமஸ் ஒன்றே இருந்தது. அப்போது ஸத்துமில்லை அஸத்துமில்லை. தமஸ்ஸை சரீரமாகக் கொண்ட ப்ரஜாபதி ஒருவரே இருந்தார். பகலுமில்லை; இரவுமில்லை. அவர் இந்த அந்த$_4$தமஸ்ஸில் அசைந்துகொண்டிருந்தார்.] என்றும் பற்பல ச்ருதிவாக்யங்களில் படிக்கப்படும் பரவஸ்து சிவனே என்று இந்த உபநிஷத்வாக்யம் நிர்ணயித்துத்தருகிறது. மேலும், "தத$_3$க்ஷரம்" என்றதால் முண்டகாதி உபநிஷத்துக்களில் அக்ஷரமென்றும், "தத் ஸவிதுர் வரேண்யம்" என்றதால் சாந்தோக்யச்ருதிகளிலும், காயத்ரியிலும் ஸூர்யமத்$_4$யாந்தர்வர்த்தியென்றும், "ப்ரஜ்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ" என்றதால் "ததை$_3$க்ஷத ப$_3$ஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி" முதலான வாக்யங்களில் ஜகத்ஸ்ருஷ்டி ஸங்கல்பாச்ரயமாகவும் சொல்லப்பட்ட பரவஸ்து சிவனே என்று இந்த வாக்யத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகையால் இவ்வுபனிஷத் சிவபரமேயாகும்.

ஸித்தாந்தம் (2)

"யதா$_3$ தம:...சிவ ஏவ கேவல:" என்ற வாக்கியத்தில் ருத்ரனே ஸர்வகாரணனாகச் சொல்லப்படுகிறான் என்று சொல்லுவது தவறு: "யதா$_3$ தம:..." [எப்பொழுது தமஸ்மட்டும் இருந்ததோ] என்று இவ்வாக்கியம் தொடங்குவதால் இது மற்றொரு ப்ரஸித்த வாக்யத்திற்கு அநுவாதம் என்று தெளிவாகிறது. அந்தப் புரோவாத வாக்யம் எது என்னும் கேள்வி பிறந்தவளவில், "ப்ருதி$_2$வ்யப்ஸு ப்ரலீயதே...அவ்யக்த மக்ஷரே லீயதே அக்ஷரம் தமஸி லீயதே தம: பரே தே$_3$வ ஏகீப$_4$வதி பரஸ்தாந் ந ஸந்நாஸந் ந ஸத$_3$ஸத்" [பூமி

http://acharya.org

யானது ஜலத்தில் லயிக்கிறது... அவ்யக்தம் அக்ஷரத்தில் லயிக்கிறது. அக்ஷரம் தமஸ்ஸில் லயிக்கிறது. தமஸ் பரமாத்மாவிடம் ஒன்றுகிறது. அந்தத் தமஸ்ஸுக்கு மேலே ஸத்துமில்லை; அஸத்துமில்லை; ஸதஸத்துக்களுமில்லை.] என்றும் ஸுபாலோபநிஷத் வாக்யமே புரோவாதம் என்னத்தகுந்தது என்று விளங்கும். அவ்வுபநிஷத்திலேயே மேலே "நைவேஹ கிஞ்சந அக்ர ஆஸீத்। திவ்யோ தேவ ஏகோ நாராயண:" [முதலில் இங்கு ஒன்றுமில்லை. பரமபதநிலயனான நாராயணனென்கிற தேவன் ஒருவனே இருந்தான்.] என்று நாராயணனையே ஸகல ஜகத்காரணனாகச் சொல்லுகையாலும், "யஸ்ய அவ்யக்தம் ஶரீரம் யஸ்ய அக்ஷரம் ஶரீரம் யஸ்ய ம்ருத்யு: ஶரீரம்...ஏஷ ஸர்வ பூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" [எவனுக்கு அவ்யக்தம் சரீரமோ, எவனுக்கு அக்ஷரம் சரீரமோ, எவனுக்கு ம்ருத்யு எனப்படும் தமஸ் சரீரமோ, அவன் ஸர்வபூதங்கட்கும் அந்தராத்மாவாய், பாபமற்றவனாய், பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நாராயணனென்கிற தேவன் ஒருவனே.] என்று தமஸ்ஸை அதிஷ்டித்திருப்பவன் நாராயணனே என்று சொல்லுகையாலும் இங்கு சொல்லப்படும் சிவனும் நாராயணனே என்று தெளிவாகிறது.

"தமோ வா இதமேகமாஸ। நாஸதாஸீந் நோ ஸதாஸீத்।
ததாநீம் தம ஆஸீத்। ப்ரஜாபதிர் வா இதமேக ஆஸீத்।
நாஹராஸீத் ந ராத்ரிராஸீத்"

[முதலில் தமஸ் ஒன்றே இருந்தது. அப்போது ஸத்துமில்லை, அஸத்துமில்லை. தமஸ்ஸை சரீரமாகக்கொண்ட ப்ரஜாபதி ஒருவரே இருந்தார். இரவுமில்லை, பகலுமில்லை] என்ற வாக்யத்தைப் புரோவாதமாகக்கொண்டு, அந்த வாக்யத்தில் சொல்லப்படும் ப்ரஜாபதியே இங்கு சிவனென்று நிர்ணயிக்கப்படுவதாகக் கொள்ளலாமே எனில்: ப்ரஜாபதி ஶப்தத்துடன் கூடிய இவ்வாக்கியத்தைப்போலே, நாராயண ஶப்தத்துடன்கூடிய அந்த வாக்யமும் புரோவாதமாயிருக்கையால், ப்ரஜாபதி ஶப்தத்தைக்காட்டிலும் ப்ரபலமான நாராயணஶப்தத்தைக்கொண்டே அர்த்த நிர்ணயம் செய்யவேண்டும். ப்ரஜாபதிஶப்தத்தைப் பரமபுருஷன் விஷயத்திலே ச்ருதிஸ்ம்ருதிகள் பலவிடங்களில் படித்திருப்பதை முன்பே காட்டியிருக்கிறோம். சிவன் விஷயமாக அப்படி ப்ரயோகங்கள் அதிகமாகக் கிடையாது. மேலும், ப்ரஜாபதிஶப்தம் ப்ரஹ்மாவிடத்திலேயே ரூடியுடையதாகையாலே அதைப்புரோவாதமாகக்கொண்டாலும், "யதா தம:"

http://acharya.org

என்னும் இந்த வாக்யம் சதுர்முகபரம் என்று சொல்லவேண்டி வரும். ஆகையால் சிவபரத்வம் ஸித்திக்க வழியில்லை. "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:" "நாராயண பரம ப்ரஹ்ம" முதலான பல வேதவாக்யங்களோடும் விரோதிக்கும். ஆகையால் ஸுபாலோபநிஷத் வாக்யங்களுக்கு அநுகுணமாக "சிவ ஏவ கேவல:" என்று இங்கு சொல்லப்படுபவன் நாராயணனே என்று கொள்வதே சிறந்தது. "சாச்வதம் சிவம் அச்யுதம்" என்று நாராயணாநுவாகத்திலும், "ஸர்வ: சர்வ: சிவ: ஸ்தா$_4$ணு:" என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும் சிவநாமம் நாராயணபரம் என்று நிர்ணயிக்கப்பட்டதையும் அநுஸந்திப்பது. மேலும், "தத்க்ஷரம்" என்று அக்ஷரசப்தத்தால் சொல்லப்பட்டவனும் நாராயணனே என்பதை "அக்ஷரம் பரமம் ப்ரபு$_4$ம் நாராயணம்" என்று நாராயணாநுவாகம் நிர்ணயித்தது. அக்ஷரசப்தத்தைப் படிக்கும் முண்டகாதி உபநிஷத்துக்களும் நாராயணபரமே என்பதை முன்பே நிர்ணயித்திருக்கிறோம். சாந்தோக்யாதி ச்ருதிகளில் ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருப்பவனாக கோஷிக்கப்படுபவனும் புண்டரீகாக்ஷனான நாராயணனே என்பதை நிர்ணயித்திருக்கிறோமாகையால், "தத் ஸவிதுர் வரேண்யம்" என்று இங்கு கோஷிக்கப்படுபவனும் அவனே. காயத்ரீ விசாரத்தில் இதை மேலும் விவரிப்போம். மேலும், இந்த ச்ருதிவாக்யத்தை "ஆஸீதி$_3$த$_3$ம் தமோபூ$_4$தம்" [இது எல்லாம் தமஸ்ஸாகவே இருந்தது.] என்று தொடங்கி, "தேந நாராயண: ஸ்ம்ருத:" என்பதுவரையிலுள்ள வாக்யங்களாலே பகவான் மநு நாராயணபரமாக விவரித்தார்.

"நாஹோ ந ராத்ரிர் ந நபோ$_4$ ந பூ$_4$மிர்
நாஸீத் தமோ ஜ்யோதிரபூ$_4$ச்ச நாந்யத் ।
ச்ரோத்ராதி$_3$ பு$_3$த்$_3$த்$_4$யாऽநுபலப்$_4$யமேகம்
ப்ராதா$_4$நிகம் ப்$_3$ரஹ்ம புமாம்ஸ்ததா$_3$ஸீத் ॥
விஷ்ணோ: ஸ்வரூபாத் பரதோதி$_3$தே த்$_3$வே
ரூபே ப்ரதா$_4$நம் புருஷச்ச விப்ர"

[அப்போது பகலுமில்லை; இரவுமில்லை; ஆகாயமுமில்லை; பூமியுமில்லை; தமஸ்ஸுமில்லை; வேறொரு சோதியுமில்லை. காதுகள் முதலான இந்திரியங்களால் அறியப்படாததாய், ஒப்பற்றதான ப்ரதானமும், ஜீவஸமூஹமும் இருந்தன. ப்ராஹ்மணரே! விஷ்ணுவின் மேலான சரீரத்திலிருந்து ப்ரதானம், புருஷன் என்னும் இரண்டு

http://acharya.org

”குணங்கள் ” ண்டாயின.] என்று விஷ்ணு புராணத்தில் பராசர பகவானும் இவ்வாக்யத்தை விஷ்ணுபரமாக விவரித்தருளினார். இவையெல்லாவற்றையும் திருவுள்ளத்திற்கொண்டே ஸ்ரீவேதாந்த தேசிகரும்,

“விஷ்ணோரப்யஸ்த்யபி₄க்₂யா சிவ இதி
சுப₄தாரூடி₄ரத்ரானுபாதி₃:
தஸ்மாத்₃த்₄யேய: ஶ்ருதோऽஸௌ
ஶிவ இதி ஶிவ ஏவேதி வாக்யம் த்வநூக்தி: |
உக்தம் நாராயணாதி₄ஷ்டி₂தமிதி ச
தமோऽநேகபா₃தோ₄ऽந்யதா₂ ஸ்யாத்
ப்₃ரஹ்மேஶாதே₃ர் மஹத்யாமுபநிஷதி₃
லயாத்₃யுக்தமேவம் து நாத்ர ||”

[விஷ்ணுவுக்கும் சிவனென்று நாமமுண்டு. ஸர்வமங்களனாயிருக்கையால் உண்டான ரூடியும் இவனிடமே இயற்கையாயுள்ளது. ஆகையாலேயே இவன் த்யானிக்கத்தக்கவனாக சுருதிகளில் சொல்லப்படுகிறான். “சிவ ஏவ கேவல:” என்னும் வாக்யமோவெனில், (வேறொரு வாக்யத்திற்கு) அநுவாதமாயுள்ளது. தமஸ்ஸோவெனில் (பூர்வவாதமான ஸுபாலோபனிஷத்தில்) நாராயணனால் அதிஷ்டிக்கப்பட்டதென்று உரைக்கப்பட்டுள்ளது. இல்லாவிடில் பல பாதகங்கள் ஏற்படும். மஹோபனிஷத்திலோவெனில் (‘நப்₃ரஹ்மா நேஶாந:’ என்று) பிரமன், சிவன் முதலானோர்க்கு லயாதிகள் சொல்லப்பட்டது. “யதா₃ தம:” என்னும் வாக்யத்தில் நாராயணனுக்கு லயம் சொல்லப்படவில்லை.] என்று தத்வமுக்தாகலாபத்தில் அழகாக அருளிச்செய்தார். ஆக, இவ்வளவால் இங்கு “ஶிவ ஏவ கேவல:” என்று ஜகத்காரணனாகச் சொல்லப்பட்டவன் நாராயணனே என்று நிர்ணயிக்கப்பட்டதாயிற்று.

பூர்வபக்ஷம் (3)

இந்த ச்வேதாச்வதரோபநிஷத்தில் பலவிடங்களிலும் ருத்ர நாமங்கள் படிக்கப்படுகையாலே இது சிவபரமே என்னக்குறையில்லை. “ஏகோ ஹி ருத்₃ரோ ந த்₃விதீயாய தஸ்து₂:” [ருத்ரன் ஒருவனே; இரண்டாவதானைக்கு ஒருவருமில்லை.] “யோ தே₃வாநாம் ப்ரப₄வஶ்சோத்₃ப₄வஶ்ச விஶ்வாதி₄கோ ருத்₃ரோ மஹர்ஷி: | ஹிரண்யக₃ர்ப₄ம் ஜநயாமாஸ பூர்வம் ஸ நோ பு₃த்₃த்₄யா ஶுப₄யா ஸம்யு

நக்து!!" [எவனொருவன் தேவர்களுக்குக் காரணனாகவும், வர்த்தகனாகவும் இருக்கிறானோ, விச்வாதிகனாய், மஹர்ஷி (ஸர்வஜ்ஞன்) ஆன எந்த ருத்ரன் முதலில் ஹிரண்யகர்ப்பனைப் பிறப்பித்தானோ அவன் எங்களுக்கு நல்லறிவைக் கொடுப்பானாக.] "யா தே ருத்ர சிவா தநூரகோ₄ரா பாபகாசிநீ" [ருத்ரனே! அழகானதாய், பாபத்தைப்போக்கடிப்பதான உன்னுடைய யாதொரு ரூபமுண்டோ...!] "ஈசம் தம் ஜ்ஞாத்வா அம்ருதா ப₄வந்தி" [அந்த ஈசனை அறிந்து முக்தராகிறார்கள்.] "தஸ்மாத் ஸர்வக₃த: சிவ:" [ஆகையால் சிவன் ஸர்வக₃தன்.] "ஸர்வஸ்ய ப்ரபு₄மீசாநம்" [எல்லாவற்றுக்கும் ப்ரபுவான ஈசானனை.] "தா₄து: ப்ரஸாதா₃ந் மஹிமாநமீசம்... பச்யதி" [பரமாத்மாவினுடைய அருளால், மஹிமைபெற்றிருக்கும் ஈசனைப் பார்க்கிறான்.] "ஜுஷ்டம் யதா பச்யத்யந்யமீசம்" [(தன்னைக் காட்டிலும்) வேறானவனாய், (தன்னிடம்) அன்புள்ளவனான ஈசனை எப்போது பார்க்கிறானோ......] "மாயாம் து ப்ரக்ருதிம் வித்₃யாந் மாயிநம் து மஹேச்வரம்" [மாயையே ப்ரக்ருதியென்றும், மாயையுடையவன் மஹேச்வரனென்றும் அறியக்கடவன்.] "ஜ்ஞாத்வா சிவம் சாந்திமத்யந்தமேதி" [சிவனை அறிந்து மேலான சாந்தியை அடைகிறான்.] "சிவம் ஸர்வபூ₄தேஷு கூ₃ட₄ம்" [எல்லா பூதங்களிலும் மறைந்திருக்கும் சிவனை.] "சிவ ஏவ கேவல:" [சிவன் ஒருவனே இருந்தான்.] "ருத்₃ர யத் தே த₃க்ஷிணம் முக₂ம் தேந மாம் பாஹி நித்யம்" [ருத்ரனே! உன்னுடைய தக்ஷிண முகத்தாலே என்னை எப்போதும் காப்பாற்றுவாயாக.] "மா நோ ருத்₃ர மாமிதோவதீ₄:" [ருத்ரனே! எங்களை நீ ஹிம்ஸிக்காதே] "பூ₄ய: ஸ்ருஷ்ட்வா பதயஸ் ததே₂சா: ஸர்வாதி₄பத்யம் குருதே மஹாத்மா" [மஹாத்மாவன ஈசன் மறுபடியும் பதிகளை ஸ்ருஷ்டித்து எல்லாருக்கும் அதிபதியாயிருக்கிறான்.] "ப₄வாபா₄வகரம் சிவம்" [ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைச் செய்யும் சிவனை.] "தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்" [ஈச்வரர்களுக்கும் மேலான மஹேச்வரனை அவனை.] என்று இவ்வுபநிஷத்தில், சிவன், ஈசன், ஈச்வரன், மஹேச்வரன், ருத்ரன் முதலான சிவநாமங்களைப் பலதடவைகள் படிப்பதிலிருந்து இவ்வுபநிஷத் சிவபரமே என்று நிஸ்ஸந்தேகமாக ஸித்திக்கிறது. விஷ்ணு நாமங்கள் சிற்சில இங்கு படிக்கப்பட்டிருந்தபோதிலும் "பூ₄யஸாம் ஸ்யாத் ப₃லீயஸ்த்வம்" [எது அதிகமாகப் படிக்கப்பட்டிருக்கிறதோ அதுவே பலமுடையது.] என்னும் நியாயத்தைக்கொண்டு பார்த்தால் சிவநாமங்களே ப்ரபு₃லங்களாகையால், இவ்வுபநிஷத் சிவபரமேயாகும்.

http://acharya.org

ஸித்தாந்தம் (3)

ருத்ராதி நாமங்கள் விஷ்ணு நாமங்களைக்காட்டிலும் அதிகமாகப் படிக்கப்பட்டிருக்கையால் இது சிவபரம் என்று சொல்லுவது தவறு. அப்படிக்கொண்டால் சில உபநிஷத்துக்களில் ஆகாசாதி நாமங்களே அதிகமாகப் படிக்கப்பட்டிருக்கையால் ஆகாசாதி பரத்வம் சொல்லவேண்டிவரும். மேலும், இங்கு பகவானுடைய பல பல நாமங்களும் அவனுக்கே அஸாதாரணமான அடையாளங்களும் பலகால் படிக்கப்பட்டுள்ளன. "அநந்தச் சாத்மா விச்வரூபோ ஹ்யகர்த்தா" [விச்வரூபனும், அநந்தனுன பரமாத்மா கர்த்ருத்வமற்றவன்.] "ஹிரண்யகர்ப்பம் ஜநயாமாஸ பூர்வம்" "ஹிரண்யகர்ப்பம் பச்யதி ஜாயமாநம்" "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" [எவனொருவன் பிரமனை முன் படைத்து, அவனுக்கு வேதங்களை உபதேசிக்கிருனோ...] "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" [தமஸ்ஸுக்கு மேலே எழுந்தருளியிருப்பவனும், ஆதித்யவர்ணனை இந்த மஹாபுருஷனை நான் அறிவேன்.] "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித் யஸ்மாந் நாணீயோ ந ஜ்யாயோஸ்தி கச்சித்! வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேகஸ் தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்!!" [எவனைக்காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லையோ, எவனைக்காட்டிலும் சிறிதாயிருப்பவனும், பெரியதாயிருப்பவனும் வேறு ஒருவனுமில்லையோ விருக்ஷம்போல் வணங்காதவனாய், பரமபதத்திலிருக்கும் அந்தப்புருஷனாலே இவையெல்லாம் வியாபிக்கப்பட்டு விளங்குகின்றன.] "ஸர்வ வ்யாபீ ஸ பகவாந்" [ஸர்வவ்யாபியாயிருக்கும் அந்த பகவான்] "மஹாந் ப்ரபுர்வை புருஷஸ் ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக:" [ப்ரபுவாயிருக்கும் இந்த மஹாபுருஷன் ஸத்வகுணத்திற்கு ப்ரவர்த்தகன்.] "அங்குஷ்டமாத்ர: புருஷ:" [கட்டைவிரல் அளவுள்ள புருஷன்] "ஸஹஸ்ரசீர்ஷா புருஷஸ் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்! ஸ பூமிம் விச்வதோ வ்ருத்வா அத்யதிஷ்டத் தசாங்குலம்!! புருஷ ஏவேதம் ஸர்வம் யத் பூதம் யச்ச பவ்யம்! உதாம்ருதத்வஸ்யேசாநோ யதந்நேநாதிரோஹதி" [புருஷஸூக்த மந்திரங்கள்] "தமாஹுரக்ர்யம் புருஷம் மஹாந்தம்" [ஆதியான அவனை மஹாபுருஷனென்று (வேதங்கள்) சொல்லுகின்றன.] "ருஷிம் ப்ரஸூதம் கபிலம் யஸ்தமக்ரே ஜ்ஞாநைர் பிபர்த்தி" [எவனொருவன் ஆதிகாலத்தில் கபிலரிஷியானவர் பிறக்கும்போது தன் ஞானத்தாலே அவரை தரித்துநின்றனோ...] "ஏவம் ஸ தேவோ பகவாந் வரேண்ய:" [இம்மாதிரியாக அந்த

http://acharya.org

தேவனுகிற பகவான் ஸ்ரீக்ருஷ்ணன்.] "ஸ விச்வரூப:" [அவனே விச்வரூபன்] "அநாத்யநந்தம் கலிலஸ்ய மத்யே" [அநாதியாயும், அநந்தனுயும் இருப்பவனுய் ஜலத்தின் நடுவில் எழுந்தருளியிருப்பவனை...] "தம் விச்வரூபம் பவபூதமீட்யம்" [துதிக்கத்தக்கவனுய் ஸம்ஸார ஹேதுவான அந்த விச்வரூபனை] "ஏகோ ஹம்ஸோ புவநஸ்ய மத்யே ஸ ஏவாக்நிஸ் ஸலிலே ஸந்நிவிஷ்ட:" [உலகின் நடுவிலே விளங்கும் ஒப்பற்ற ஹம்ஸம் அவனே; அவனே அக்நி; அவனே ஜலத்தில் எழுந்தருளியிருப்பவன்.] என்று பற்பலவிடங்களில், அநந்தன், விச்வரூபன், புருஷன், பகவான், ஹம்ஸம் முதலான விஷ்ணு நாமங்களைப் படிப்பதோடன்றியில், புருஷஸூக்த மந்திரங்கள், ஜலசாயித்வம், கபில த்வாரகத்வம், ஸத்வப்ரவர்த்தகத்வம், சதுர்முகஸ்ரஷ்ட்ருத்வம் முதலான பகவானுக்கே பொருந்திய அடையாளங்களையும் (லிங்கங்களையும்) அறிவிக்கையால் இவ்வுபநிஷத் பகவத்பரமே என்பது தெளிவாகிறது.

அநந்தன், விச்வருபன், புருஷன், பகவான், ஹம்ஸம் முதலான நாமங்கள் பகவந்நாமங்களே என்பதை ச்ருதிஸ்ம்ருதிகளிலிருந்தும், அபிதாநகோசங்களிலிருந்தும் நிரூபித்திருக்கிறேம். புருஷஸூக்தம் பகவத்பரமே என்பதையும் பல ப்ரமாணங்களைக் காட்டி நிலைநாட்டியிருக்கிறேம். ஜகத்ப்ரவர்த்தித்வமாகிற லிங்கம் நாராயணனையே காட்டும் என்பதை நாராயணவல்லியிலிருந்தும், பற்பல ஸ்ம்ருதி வாக்யங்களிலிருந்தும் நிர்ணயித்திருக்கிறேம். "நாராயணுத் ப்ரஹ்மா ஜாயதே" முதலான பல வேதவாக்யங்களையும், ஸ்ம்ருதீதிஹாஸ புராண வாக்யங்களையும் காட்டி, சதுர்முகஜநகன் நாராயணனே என்பதையும் நிஸ்ஸந்தேஹமாக நிச்சயித்திருக்கிறேம். கபில மஹர்ஷி பகவதம்சம்பெற்றவர் என்பது பாகவதாதி புராண ப்ரஸித்தம். ஸத்வப்ரவர்த்தகத்வமாகிற அடையாளமும் அவனையே குறிக்கும் என்று மேலே ஸ்தாபிக்கப்போகிறேம். ஆகையால் இவ்வுபநிஷத் நாராயணபரமே என்பதில் ஸந்தேஹம் சிறிதுமில்லை. "பூயஸாம் ஸ்யாத் ஸதர்மகத்வம்" [அதிகமாகப் படிக்கப்பட்டதே அதிக பலமுடையது.] என்னும் நியாயத்தைக்கொண்டு இவ்வுபநிஷத் சிவபரம் என்று ஸாதிப்பதும் முடியாது. இவ்வுபநிஷத்தில் ருத்ரநாமத்துடன் கூடிய பற்பல வாக்யங்களும், அநுவாதரூபமாயிருக்கையால், புரோவாத வாக்யங்களை அநுஸரித்து அவை நாராயணபரமே என்று நிர்ணயித்தாகவேண்டும். "யதா தம:... சிவ ஏவ கேவல:" என்னும் வாக்யம் ஸுபாலோபநிஷத் வாக்யத்திற்கு அநுவாதமாகையால் நாராயணபரமே என்று

http://acharya.org

முன்னமே நிர்ணயித்திருக்கிறோம்." யோ தே₃வாநாம் ப்ரப₄வஶ்சோத்₃ப₄வஶ்ச விஶ்வாதி₄கோ ருத்₃ரோ மஹர்ஷி: I ஹிரண்யக₃ர்ப₄ம் ஜநயாமாஸ பூர்வம்" [எவனொருவன் தேவர்களுக்குக் காரணனாகவும் வர்த்தகனாகவும் இருக்கிறானோ, விச்வாதிகனாய், ஸர்வஜ்ஞனான அந்த ருத்ரன் முதலில் ஹிரண்யகர்ப்பனைப் பிறப்பித்தானோ...] என்னும் வாக்யமும் அநுவாதரூபமாயிருக்கையால், "நாராயணாத்₃ ப்₃ரஹ்மா ஜாயதே" என்னும் ப்ரோவாத வாக்யத்தை அநுஸரித்து அதை நாராயணபரமாகக் கொள்ளவேண்டும். நாராயணவல்லியில் இந்த வாக்யம் படிக்கப்பட்டதாகையாலும் இது நாராயணபரமே என்று ஸித்திக்கிறது. "ஏகோ ஹ ருத்₃ர:" என்னும் வாக்யத்திலும், 'ஹ' என்னும் ப்ரஸித்தியைக்காட்டும் பதமிருக்கையால், "திவ்யோ தே₃வ ஏகோ நாராயண:" முதலான வாக்யங்களிற்சொன்ன நாராயணனே இவன் என்று தெளிவாகிறது. "யா தே ருத்₃ர சிவா தநு:" [ருத்ரனே அழகியதான உன்னுடைய யாதொரு திருமேனி உண்டோ......] என்னும் வாக்யமும் அநுவாதரூபமாயிருக்கையால். "ஆதி₃த்ய வர்ணம்" "வித்₃யுத: புருஷாத்" "நீலதோயத₃மத்₄யஸ்தா₂ வித்₃யுல்லேகே₂வ பா₄ஸ்வரா" "புருஷஸ்ய ரூபம் யதா₂ மாஹாரஜநம் வாஸ:..." "ஹிரண்மய: புருஷ:" முதலான பற்பல வேதவாக்யங்களில் சொல்லப்படும் பரமபுருஷனுடைய திருமேனியையே உரைக்கிறதென்பது தெளிவு. மஹேச்வரசப்தம் அகாரவாச்யனான நாராயணனைச் சொல்லுவதென்று நாராயணவல்லி நிர்ணயித்தது. "ஸர்வவ்யாபீ ஸ ப₄க₃வாந் தஸ்மாத் ஸர்வக₃த: சிவ:" [ஸர்வவ்யாபியாயிருந்த போதிலும் அவன் ஷட்குணங்கள் நிறைந்த பகவானுமிருப்பவன். அதனாலேயே ஸர்வகதனுமிருந்தபோதிலும் (வியாபிக்கப்படும் வஸ்துக்களிலுள்ள தோஷம் ஒட்டாமல்) மங்களமாயிருக்கிறான்.] என்னும் வாக்யத்திலும், முதலில் பகவச்சப்தம் படிக்கப்படுகையாலும், ஸர்வவ்யாபித்வத்தை இரண்டுதடவை படித்திருப்பதால் சிவசப்தத்தை யௌகிகமாகப் பொருள்கொள்வதே சிறந்ததாகையாலும், சிவசப்தம் ருத்ரபரமன்று. ஆக, இப்படி ருத்ரநாமங்களிற் பல நாராயணபரமாகிறபடியால் "பூ₄யஸாம் ஸ்யாத்₃ ப₃லீயஸ்த்வம்" என்னும் நியாயத்திற்கு இங்கு இடமில்லை.

மேலும், ஸர்வவேதாந்தப்ரத்யய ந்யாயத்தாலே, எல்லா உபநிஷத்துக்களிலும் சொல்லப்படும் பரவஸ்து ஒன்றேயாயிருக்க வேண்டுமாகையால், அப்படி எல்லா உபநிஷத்துக்களிலும் படிக்கப்படும் நாமங்களைப் பார்க்கும்போது பகவந்நாமங்கள் ருத்ரநாமங்களைக்காட்டிலும் பலமடங்கு அதிகமாயுள்ளன. ஆகையால்,

http://acharya.org

"பூயஸாம் ஸ்யாத் பலீயஸ்த்வம்" [அநேகமாகப் படிக்கப்படுவது அதிகபலமுள்ளது.] என்னும் நியாயப்படி பார்த்தாலும் பகவத் பரத்வமே தேறிநிற்கும். மேலும் "பந்தாநஸ் ஸந்து தே சிவா:" [உன்னுடைய வழி மங்களமான வழியாகட்டும்] "யா தே ருத்ர சிவா தநூ:" [ருத்ரனே! உன்னுடைய யாதொரு மங்களமான திருமேனியுண்டோ] என்று அநேக வேதங்களில் பற்பலவிடங்களில் சிவசப்தம் மங்களம் என்னும் பொருளிலே பிரயோகிக்கப் படுகிறது. "சந்தேந த்ரிஷு சிவார்க்கோஷ்ட்ர்யாம்" என்று சிவ சப்தமும். "இப்ய ஆட்யோ தநீ ஸ்வாமீ த்வீச்வர: பதிரீசிதா" "ஈசேச்வரௌ ப்ரபௌ ருத்ரே" என்று சிவ, ஈச, ஈச்வரசப் தங்களும் அபிதாநகோசங்களில் பல பொருள் உடையனவாகப் படிக்கப்படுகின்றன. அப்படியே மஹேச்வரசப்தங்களும், "ய: பரஸ் ஸ மஹேச்வர:" "அம்ருதத்வஸ்யேசாந:" "ஈசேயோராநா ஜக்த:" "யோ மாமஜமநாதிஞ்ச வேத்தி லோகமஹேச்வரம்" என்று பக வானிடத்திலும் பிராட்டியினிடத்திலும் ச்ருதிஸ்ம்ருதிகளில் பிரயோ கிக்கப்படுகின்றன. "ஹரா ருத்ராக்நி கர்த்தபா:" [ருத்ரன், அக்னி, கழுதை ஆகிற மூவரும் ஹரசப்தவாச்யர்.] என்று வைஜ யந்தியில் ஹரசப்தமும் பலபொருளுடையதாகப் பேசப்பட்டது. ருத்ரசப்தமும் அக்னியினிடத்திலும். "ப்ராணா வா ருத்ரா:" என்று இந்திரியங்களிடமும் வேதங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியாக நாராயணசப்தம் வேறுபொருள்களிடத்தில் பிர யோகிக்கப்படுவதை, வேதங்களிலோ, ச்ருதிஸ்ம்ருதிகளிலோ, அபிதாநகோசங்களிலோ கண்டதில்லை. இதை யௌகிகமாகக் கொண்டு தேவதாந்தரங்களிடத்தில் பிரயோகிக்கப்பார்த்தாலும் 'நாராயந:' என்றே பிரயோகிக்கவேண்டும். வேதவாக்யங்களிலோ 'நாராயண:' என்றே பிரயோகம் காண்கிறது. ஆகையால் பல பொருள்களையுடைய சிவருத்ராதிநாமங்களை நாராயணபரமாகக் கொள்ளவேண்டுமேயொழிய, பகவான் ஒருவனையே சொல்லும் நாராயணநாமத்தை சிவபரமாகக் கொள்ள வழியேயில்லை. இது நாராயண நாமத்திற்குள்ள சப்தப்ராபல்யம்.

நாராயணநாமத்திற்கு சிவாதிநாமங்களுக்கில்லாத அர்த்தப்ரா பல்யமும் உண்டு. சிவருத்ராதிசப்தவாச்யனான தேவன், நாரா யணனிடமிருந்து பிறந்தான் என்றும், அவனாலேயே வாழ்கிறான் என்றும், அவனிடமே லயிக்கிறான் என்றும், கர்மவச்யன் என்றும், பாபம் நீங்கப்பெறாதவன் என்றும், க்ரூரமானவன் என்றும், மற்ற வர்களிடமிருந்து வரம் பெற்றவன் என்றும் வேதங்களிலேயே

http://acharya.org

பலபலவிடங்களில் உத்கோஷிக்கப்படுகிறது. நாராயணசப்த வாச்யனான பகவானுக்கேயெனில், இவ்விதத் தாழ்ச்சிகள் ஓரிடத்திலும் உரைக்கப்படாததோடன்றியில், ஸர்வஸ்ரஷ்ட்ருத்வம், ஸர்வரக்ஷகத்வம், ஸர்வஸம்ஹாரகத்வம், ஸர்வாந்தர்யாமித்வம் முதலான பற்பல பெருமைகள் பேசப்படுகின்றன. இது நாராயணநாமத்திற்குள்ள அர்த்த$_2$ப்ராபல்யம். ஆகையால் எல்லா வேதவாக்யங்களும் நாராயணனையே பரவஸ்துவாகப்பேசுகின்றன என்று கொள்வதே நல்வழியாகும்.

பூர்வபக்ஷம் (4)

"யஸ்மாத் பரம் நாபரஸ்மஸ்தி கிஞ்சித்
யஸ்மாந் நாணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கஸ்சித் ।
வ்ருக்ஷ இவ ஸ்தப்$_3$தோ$_4$ திவி திஷ்ட$_3$த்யேகஸ்
தேநேத$_2$ம் பூர்ணம் புருஷேண ஸர்வம் ॥"

[எவனைக்காட்டிலும் மேலானவன் வேறொருவனுமில்லையோ, எவனைக்காட்டிலும் சிறியவனுயிருப்பவனும், பெரியவனுயிருப்பவனும் வேறொருவனுமில்லையோ, பரமபதத்தில் எவனொருவன் வ்ருக்ஷம் போல் வணங்காதவனுயிருக்கிருனே அந்தப் புருஷனாலே இவையெல்லாம் பூர்ணமாயுள்ளன.] என்று புருஷசப்தவாச்யனான நாராயணனைச் சொல்லிவிட்டு,

"ததோ யது$_3$த்தரதரம் தத$_3$ரூபமநாமயம் ।
ய ஏதத்$_3$ விது$_3$ரம்ருதாஸ தே ப$_4$வந்தி
அதே$_2$தரே து$_3$:க்க$_2$மேவாபியந்தி ॥
ஸர்வாநநஶிரோக்$_3$ரீவ: ஸர்வபூ$_4$தகு$_3$ஹாஶய: ।
ஸர்வவ்யாபீ ஸ ப$_4$க$_3$வாந் தஸ்மாத் ஸர்வக$_3$த: ஶிவ: ॥"

[அதற்குமேல் உள்ளது யாதொன்றுண்டோ. அது ரூபமற்றது, வியாதியற்றது. அதை அறிபவர்கள் மோக்ஷமடைகிறர்கள். மற்றவர்கள் துக்கத்தை அடைகிறார்கள். ஸர்வபூதங்களின் அவயவங்களையும் தன் அவயவமாக உடையவனும், ஸர்வபூதங்களின் ஹ்ருதயகுஹையை இருப்பிடமாக உடையவனும் ஸர்வவ்யாபியாய் இருப்பவனும் அந்த பகவான். ஆகையால் சிவன் ஸர்வகதன்] என்று அந்த நாராயணனுக்கு மேலேயும் ஒன்று இருக்கிறதென்றும் அவனே சிவன் என்றும் இவ்வுபநிஷத்தில் சொல்லப்படுவதால் இவ்வுபநிஷத் சிவபரமேயாகும்.

http://acharya.org

ஸித்தாந்தம் (4)

"தேநேத3ம் பூர்ணம் புருஷேண ஸர்வம்" [அந்தப் புருஷனாலே இவையெல்லாம் பூர்ணமாயிருக்கிறது] என்று சொல்லிவிட்டு, "ததோ யது3த்தரதரம்" [அதைக்காட்டிலும் மேலானது யாதொன்று உண்டோ] என்று சொன்னதிலிருந்து நாராயணனைக்காட்டிலும் மேற்பட்ட ஒரு தத்துவமுண்டு என்று ஏற்படாது. முன் மந்திரத்தின் ஆரம்பத்திலேயே "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்3 யஸ்மாந் நாணீயோ ந ஜ்யாயோஸ்தி கஸ்சித்" [எவனைக்காட்டிலும் மேலானவன் ஒருவனுமில்லையோ, எவனைக்காட்டிலும் சிறியவனும், பெரியவனும் வேறு இல்லையோ] என்று வேதமே இந்தப் புருஷனைக் காட்டிலும் மேலானவன் ஒருவனுமில்லை என்று சொல்லியிருக்கும் போது அந்த வேதமே இவனைக்காட்டிலும் மேலான தத்துவம் ஒன்று உண்டென்று அடுத்த மந்திரத்தில் உரைக்கிறது என்று சொல்லுவது சிறிதும் பொருந்தாது. உபக்ரமந்யாய விருத்தமுமாகும்.

"வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதி3த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் |
தமேவ விதி3த்வா அதிம்ருத்யுமேதி
நாந்ய: பந்தா2 வித்3யதேऽயநாய ||"

[தமஸ்ஸுக்கு அப்பாற்பட்டவனாய், ஆதித்யவர்ணனான இந்த மஹாபுருஷனை நான் அறிகிறேன். அவனை அறிந்தாலேயே ஸம்ஸாரத்தைத்தாண்டுகிறான். மோக்ஷமடைய வேறு மார்க்கமில்லை.] என்னும் புருஷஸூக்த மந்திரத்தைப் படிப்பதன்மூலம் இவ்வுபநிஷத்தில் சொல்லப்படுபவன் மோக்ஷபலப்ரதனாய் மஹாபுருஷனான நாராயணனே என்றும், அவனை அறிவதைத்தவிர வேறு மோக்ஷஸாதனம் இல்லை என்றும் உபதேசித்து, அடுத்த மந்திரத்தில் "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி.....தேநேத3ம் பூர்ணம் புருஷேண ஸர்வம்" என்று அந்தப்பரமபுருஷன் ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவன் என்றும் ஸர்வவ்யாபியாயிருப்பவன் என்றும் உத்கோஷிக்கிறது உபநிஷத். அப்படியிருக்க, அடுத்த மந்திரத்தில் இவனைக்காட்டிலும் மேலானவன் ஒருவன் உளனென்றும், அவனையறிவதே மோக்ஷஹேதுவென்றும், அவனே ஸர்வவ்யாபியென்றும் வேதம் சொல்லுமோ? "ததோ யது3த்தரதரம்" என்னும் வாக்யத்திற்கு வேறு எப்படிப் பொருள் கொள்வது?

http://acharya.org

ஸமாதி சொன்னதை: "ததஃ—இப்படி ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனாயும், ஸர்வஸ்வாமியாயும், மோக்ஷப்ரதனாயும் இருக்கையாலே யத்—யாதொரு தத்துவமானது, உத்தரதரம்—மிகவும் மேலானதாயிருக்கிறதோ, தத்—அந்தப்பரவஸ்து, அரூபம் அநாமயம்—(ப்ராக்ருதமான) ரூபம் வியாதி முதலானவையற்றது; ய ஏதத் விதுரம்ருதாஸ் தே பவந்தி—எவர்கள் இப்பரதத்வத்தை அறிகிறார்களோ அவர்கள் முக்தியடைகிறார்கள்." என்று பொருள்கொள்ளுகிறோம். இப்படிப் பொருள்கொண்டால் முன்னும் பின்னுமுள்ள எல்லா வாக்கியங்களுக்கும் விரோதம் வாராது. இப்படியல்லாமல், மற்றொரு விதமாகவும் சில ஆசாரியர்கள் இந்த ச்ருதிவாக்யத்தை நிர்வஹிக்கிறார்கள். "தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்" [அந்தப் புருஷனாலேயே இவையெல்லாம் நிறைந்திருக்கிறது.] என்னும் மந்திரத்தின் கடைசியில் "ஸர்வம்" என்னும் சப்தத்தால் சொல்லப்படும் ஜகத்தை மனத்திற்கொண்டு, "ததோ யதுத்தரதரம்" [(முன் சொல்லப்பட்ட) ஜகத்தைக்காட்டிலும் யாதொரு தத்துவம் மேலானதோ] என்று அந்த ஜகத்தைக்காட்டிலும் உத்க்ருஷ்டமான பரவஸ்துவின் ஸ்வரூபம் விவரிக்கப்படுகிறது என்று பொருள் கொள்கிறார்கள். இப்படி முன்பின் விரோதமில்லாமல் இரண்டு விதமாகப் பொருள்கொள்ளத்தக்கதாயிருக்கும்போது, "ததோ யதுத்தரதரம்" என்னும் வாக்யம், முன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாகச் சொல்லப்பட்ட புருஷனைக் காட்டிலும் மேலான தத்துவத்தை உரைக்கிறது என்னும் வார்த்தையை வைதிகர்கள் செவியேற்கமாட்டார்கள். இவற்றையெல்லாம் திருவுள்ளத்திற்கொண்டே,

"யஃ ப்ரோக்தஸ் ஸர்வகர்த்தா
பரமஹிலதநோர் நாபரம் கிஞ்சிதஸ்தீ-
த்யஸ்யைவ ஸ்யாதநூக்த்யோத்தரதரகதநம்
ந த்விதோऽந்யஸ்ய பாதாத்"

['ஸர்வஸ்ரஷ்டாவாய், ஸர்வசரீரியான புருஷனைக் காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லை' என்று எவனொருவன் சொல்லப்பட்டானோ அவனையே அநுவாதம்செய்து 'மேலானவன்' என்று சொல்லப்படுகிறது. அவனைக்காட்டிலும் மேலான வேறொருவனைச் சொல்லுகிறதென்றுரைப்பது சரியல்ல. முன்னுக்குப்பின் முரணாகிறபடியால்.] என்று வேதாந்ததேசிகர் தத்வமுக்தாகலாபத்திலே அருளிச்செய்தார். "'ததோ யதுத்தரதரம்' என்று கொண்டு சொல்லுகிறவிடத்தில்

http://acharya.org

செய்வதென்? என்னில்: கீழே ஸர்வேச்வரனைப் புருஷனாய்த்தவாச்ய னாகச் சொல்லி, இனி 'ஸ ந்ததரம்' என்னும்போது புருஷோத்தமன் என்றதாமத்தனை; அதுக்கு அடிபென்? என்னில், 'யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்' என்று ஓதிவைத்து, 'அதுக்குமேலே ஒன்றுண்டு காண்' என்னும்போது அதிறுறையச் சொல்லுமத்தனை; முதலிலே ஓதாதவன் வார்த்தையாமத்தனை" என்று ஆசார்யச்ரேஷ்டரான நம்பிள்ளையும் ஒன்றும்தேவு ப்ரபந்தத்திலே அருளிச்செய்தார். பகவான் பாஷ்யகாரரும் வேதார்த்த ஸங்க்ரஹத்திலே இவற்றை யெல்லாம் அருளிச்செய்தார். ஸ்ரீ விஷ்ணுசித்த சிஷ்யராய் அம்மாள் என்று ஸுப்ரஸித்தரான வரதாசார்யரும்,

"ப்ரஸ்துத்யாம்ருதஹேதுமாதி₃புருஷம்
நயக்க்ருத்ய மார்க்கா₃ந்தரம்
தஸ்யைதத்₃க₄டநாய நிஷ்ப்ரதிப₄டாமுத்₃கு₄ஷ்ய
ஸார்வேஶ்வரீம் |
உக்திஸ் தத்ர ததோ யது₃த்தரதரம்
தந்முக்திதா₃யீதி யா
தச்ச்₂வேதாஶ்வதராக₃மே நிக₃மநம்
ப்ரோக்தஸ்ய ஹேதூக்திமத் ||"

[ஆதிபுருஷனை மோக்ஷஹேதுவாகச் சொல்லி, வேறு மோக்ஷ மார்க்கம் இல்லையென்றுமறிந்து, இதைப் பொருந்தவைப்பதற் காக, அவனே நிகரற்ற ஸர்வேச்வரன் என்று உத்கோஷித்து, அதற்குப்பிறகு "ததோ யதுத்தரதரம்" என்று படித்து அதுவே மோக்ஷத்தைத் தருவது என்று யாதொரு வாக்யம் ச்வேதாச்வத ரோபநிஷத்தில் சொல்லி முடிக்கப்பட்டிருக்கிறதோ, அது முன் சொன்னதைக் காரணமாகக் கொண்டது; (அவதி) (எல்லை) யாகக் கொண்டதன்று.] என்று தத்வஸாரத்தில் அருளிச்செய்தார்.

"ஸர்வாநநஶிரோக்₃ரீவஸ் ஸர்வபூ₄தகு₃ஹாஶய: |
ஸர்வவ்யாபீ ஸ ப₄க₃வாந் தஸ்மாத் ஸர்வக₃த: ஶிவ: ||"

[எல்லா அவயவங்களையும் தன்னுடையவையாக உடையவனும், ஸர்வபூதங்களுடைய ஹ்ருதயகுஹையையும் இருப்பிடமாக உடைய வனும், ஸர்வவ்யாபியாயுள்ளவன் அந்த பகவான். (இப்படி ஷட்குண பூர்ணனாயிருக்கையால்) ஸர்வவ்யாபியாயிருந்தபோதிலும் அவன் பரிசுத்தனாயிருக்கிறான்.] என்னும் அடுத்த மந்திரமும் சிவபரமாக

http://acharya.org

முடியாது. "ஸர்வாநந மிரோக்ரீவ:" என்னும் பதத்தால், "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:" என்று புருஷஸூக்தத்தில் சொல்லப் பட்டவனே இவன் என்று உணர்த்தப்படுகிறது. "ஸர்வபூத குஹாசய:" என்னும் பதத்தால், "அங்குஷ்டமாத்ர: புருஷ:" "அநந்தம் ப்ரஹ்ம யோ வேத நிஹிதம் குஹாயாம்" முதலான வேத வாக்யங்களில் சொல்லப்பட்ட பரமபுருஷனே இவனென்று அறி விக்கப்படுகிறது. "ஸர்வவ்யாபீ" என்றதால் "அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" என்று சொல்லப்பட்ட நாராயணனே இவன் என்று உணர்த்தப்படுகிறது. இத்துடன் நில்லாமல், "பகவாநிதி சப்தோயம்" முதலான ப்ரமாணங்களிலே வாஸுதேவபரமாக ப்ரஸித்தமான பகவச்சப்தத்தைப் படிப்பதன் மூலமும் இவன் நாராயணனே என்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ண யித்துத்தருகிறது. அடுத்தபடியாக "தஸ்மாத் ஸர்வகத: சிவ:" என்னும் பகுதியாலே, "இப்படி அகிலஹேயப்ரத்யநீக கல்யாணை கதானனான பகவானாயிருக்கையால் ஸர்வவ்யாபியாயிருந்தபோதிலும் சிவனாய் (பரிசுத்தனாய்) இருக்கிறான்." என்று சொல்லுவதன் மூலம் இங்கு சிவசப்தம் யௌகிகமாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளதே யொழிய ரூட்யர்த்தத்தில் பிரயோகிக்கப்படவில்லையென்று தெளி வாகக் காட்டுகிறது. இப்படிக் கொள்ளாவிடில் "தஸ்மாத்" (ஆகை யால்) என்னும் பதம் அர்த்தமற்றதாகும். "ஸர்வவ்யாபீ" "ஸர்வ கத:" என்று இரண்டுதடவை படித்ததும் புநருக்திதோஷதுஷ்ட மாகும். முதலில் படிக்கப்பட்ட பகவச்சப்தமும், ஸர்வாநந சிரோக்ரீவத்வாதிகளும் பொருந்தாமற்போய்விடும். ஆகையால் இவ்வாக்யத்தில் புருஷனைக்காட்டிலும் மேலான சிவனைச் சொல்லு கிறது என்று சொன்னது சிறிதும் பொருந்தாது. உண்மையில், இங்கு சிவசப்தத்தை யௌகிகமாகப் பிரயோகிப்பதன்மூலம் இவ் வுபனிஷத்தில் பலவிடங்களிலும் படிக்கப்படும் சிவசப்தங்களும் இயற்கையாகவே சுத்திகுணத்தையுடைய பகவானையே குறிப்பவை என்று காட்டப்படுகிறது. இவ்வளவுக்கும் மேலே,

"மஹாந் ப்ரபுர் வை புருஷஸ் ஸத்த்வஸ்யைஷ ப்ரவர்த்தக:"

[ப்ரபுவான மஹாபுருஷனன்றோ இவன். இவன் ஸத்வகுணத்திற்கு ப்ரவர்த்தகன்.] என்று பகவானுக்கே பொருந்தியதான மஹாபுருஷ சப்தத்தையும் ஸத்வப்ரவர்த்தகத்வமாகிற அடையாளத்தையும் அடுத்த மந்திரத்தில் அறிவிப்பதன்மூலம் பரதத்வநிர்ணயம் செய் கிறது பண்டைமறை. புருஷஸூக்தாதிகளில் மஹாபுருஷனாகச் சொல்லப்படுபவன் இவனே என்பதைக் காட்டியிருக்கிறோம். "மஹா

http://acharya.org

புருஷ மப்₃ஜம் ஸ பி₃பர்த்யேகஸ் ஸநாதந:'' [மஹாபுருஷபத்தத்தை பகவான் ஒருவனே தரிக்கிறான்.] என்று ஸ்ம்ருதிகளிலும் படிக்கப் பட்டது. ''மஹான்'' ''புருஷ:'' என்று தொடர்பற்ற பதங்களாகவும் கொள்ளலாம். புருஷபப்தம் பகவத்பரமே என்பதையும் பலகால் நிரூபித்திருக்கிறோம். ஸத்வ ப்ரவர்த்தகன் இவனே என்பதும், ''யோ ஹ க₂லு வா அஸ்ய ஸாத்விகோம்ஶ: ஸோஸௌ ப்₃ரஹ்ம சாரிணோ யோயம் விஷ்ணு:'' [ப்ரஹ்மசாரிகளே! எவனொருவன் இந்தப் பரமாத்மாவின் ஸாத்விகமான அம்சமோ, அவனே விஷ்ணு வென்று ப்ரஸித்தனானவன்.] என்று மைத்ராயணீய உபநிஷத்தில் உரைக்கப்பட்டது. இதிஹாஸபுராணாதிகளிலும் பல்லாயிரக் கணக் கானவிடங்களில்உத்கோஷிக்கப்பட்டது. மைத்ராயணீயவிசாரத்தில் இதை விவரிப்போம். ஆகையால் இவ்வாக்யங்கள் விஷ்ணுபரமே என்று தெளிவாகிறது. இவற்றையெல்லாம் நினைத்தே அம்மாளும்,

''யச்ச்₂வேதாஸ்வதராக₃மே ப₄க₃வதி ஸ்பஷ்டப்ரயோகா₃ந்தரம்
தஸ்மிந் நிர்த்தி₃ஶதி த்₄ருவம் ஶிவபத₃ம் ப்ரக்ராந்த முக்திப்ரதே₃|
ஸர்வவ்யாபிநி ஸர்வதோமுக₂ஶிரோ க்₃ரீவே ஸ ஏவ ப்ரபு₄ஸ்
ஸத்த்வஸ்யைஷ மஹாந் ப்ரவர்த்தக இதிவ்யக்த:புந: பூருஷ:||''

[ச்வேதாச்வதர உபநிஷத்தில், மோக்ஷப்ரதன் என்று தொடங்கப் பட்டவனாய், ஸர்வவ்யாபியாய், எங்கும் முகம் தலை முதலிய அவ யவங்களை உடையவனை பகவான் விஷயமாக சிவன் என்று படிக்கப்பட்ட நாமமானது, ('சாச்வதம் சிவம்' என்றவிடத்தில்) பகவானிடத்திலேயே தெளிவாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. அவனே ப்ரபுவென்றும், அவனே ஸத்வப்ரவர்த்தகனென்றும் மறுபடி படிப்பதிலிருந்தும் அவன் புருஷனே என்று தெளிவாகிறது.] என்று தத்வஸாரத்தில் அருளிச்செய்தார். இவைகளிலிருந்து, ''ததோ யது₃த்தரதரம்'' என்றவிடத்திற் சொல்லப்படுபவன் பகவானே என்று தெளிவாகிறது. இங்கு சொல்லப்படுபவன் பகவான் நாராயணனே என்பது,

''யஸ்மாத் பரதரம் நாஸ்தி புருஷாத் பரமேஷ்டி₂ந:|
ந ஜ்யாயோஸ்தி ந சாணீய: ஸ து நாராயணோ ஹரி:||
யேநேத₃மகி₂லம் பூர்ணம் புருஷேண மஹௌஜஸா|
ஸ து நாராயணோ தே₃வ இதீயம் வைதி₃கீ ச்ருதி:||''

http://acharya.org

[மேலான ஸ்தானத்தில் ஸர்வஜ்ஞர் பரமபதத்தை அடைந்து ஸூரிகளைக்காட்டிலும் மேலானதும், பெரியதும், சிறந்தும் இல்லையோ, அவனே நாராயணனென்பதில் ஸம்சயமில்லாதவர். மஹாமேருவின் ஸம்பத்தியால் சந்திர புருஷர்களும் இவையெல்லாம் புத்ரர்கள் விளங்குகிறதோ அவனே நாராயணனாகிற தேவன் என்று வேதாந்தங்கள் விளக்குகின்றன.] என்று பாக்கவ ஸ்ம்ருதியிலும் தெளிவாக விவரிக்கப்பட்டது.

இந்த ச்வேதாச்வதர உபநிஷத்தானது ஸர்வத்ர நாராயணனையே பரதத்துவமாகக் காட்டித்தருகிறது என்பது இரண்டு முக்கியமான ஹேதுக்களாலிருந்து விளங்கும். முதலாவது:— இவ்வுபநிஷத்தில் "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:" முதலான புருஷஸூக்த மந்திரங்களில் பலவும் படிக்கப்படுகின்றன. இப்புருஷஸூக்தம் பகவத்பரமே என்பதைப் பல ப்ரமாணங்களைக் காட்டி விரிவாக நிர்ணயித்திருக்கிறோம். "நாராயணனே ஸர்வகாரணனாய், ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தியாய், ஸர்வவித்யைகளிலும் உபாஸிக்கப்படுமவனாய், மோக்ஷப்ரதனாயிருப்பவன்" என்னும் பொருளையுடைய அம்மந்திரங்களைப்படிக்கும் இவ்வுபநிஷத்தும் பகவானையே பரம்பொருளாகச் சொல்லுகிறது என்பதில் ஸந்தேஹமும் சிறிதுமிருக்கமுடியாது. ருத்ர மந்திரங்களில் சிலவும் இவ்வுபநிஷத்தில் படிக்கப்படுகின்றனவானாலும், அவை பரமாத்மாவுக்கேயான அடையாளங்களைச் சொல்லுவனவல்லவாகையால் அவைகளைக்கொண்டு இவ்வுபநிஷத்து சிவனைப்பரம்பொருளாகச் சொல்லுகிறது என்னவொண்ணாது.

இரண்டாவது காரணம்:- "ஹிரண்யகர்ப்பம் ஜநயாமாஸ பூர்வம்" [எவனொருவன் ஹிரண்யகர்ப்பனை முதலில் படைத்தானோ...] "ஹிரண்யகர்ப்பம் பச்யதி ஜாயமாநம்" [பிறக்கும்போது பிரமனை எவனொருவன் கடாக்ஷிக்கிறானோ.] "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" [எவனொருவன் பிரமனை முன் படைக்கிறானோ...] என்று பிரமனைப்படைத்தவனாகப் பிரஸித்தனாயிருப்பவனே பரமாத்மா என்று இவ்வுபநிஷத்தில் பலகால் கோஷிக்கப்படுகிறது. மஹோபநிஷத், நாராயணோபனிஷத், பஹ்வ்ருச ஸூதபதப்ராஹ்மணங்கள் முதலான பல வேதபாகங்களில் ஹிரண்யகர்ப்பனால் படைக்கப்பட்டவனாகச் சொல்லப்படும் ருத்ரன் ஹிரண்யகர்ப்பனைப் படைத்தவனாக இருக்க முடியாது. அவ்வேதவாக்கியங்களிலேயே ஹிரண்யகர்ப்பனான பிரமனைப் படைத்தவனாகச் சொல்லப்படும் நாராயணனே இங்கும் ப்ரஹ்மாவுக்குப் பிதாவாக கோஷிக்கப்படுகிறான் என்று கொள்

http://acharya.org

விரோதம் நேர்வதாகும். "ஒரு கல்பத்தில் ப்ரஹ்மா சிவனைப் படைக்கிறான்; மற்றொரு கல்பத்தில் சிவன் ப்ரஹ்மனைப் படைக்கிறான்" என்று சொல்லவேண்டும்; அப்போதும் இருவரும் பரம்பொருளல்லர் என்றே தேறிநிற்கும். நாராயணனுக்கு அப்படி ஒருவரிடமிருந்தும் ஸ்ருஷ்டி சொல்லப்படவில்லையாகையால் அவனே இவர்களெல்லாரையும் படைத்தவன் என்பதும் தேறிநிற்கும். மேலும், இந்திரன் முதலானோரைப் பரம்பொருளாகச் சொல்லுவதுபோன்ற சில வாக்கியங்களும் உள்ளனவாகையால் "ஒரு கல்பத்தில் இந்திரன் பரம்பொருள்; ஒரு கல்பத்தில் சந்திரன் பரம்பொருள்; ஒரு கல்பத்தில் ஸூர்யன் பரம்பொருள்" என்றும் சொல்லவேண்டிவரும். ஆகாசாதிகளும் ஒவ்வொரு கல்பத்தில் பரம்பொருள் என்றும் உரைக்கவேண்டிவரும். ஆக இப்படிப் பரஸ்பரம் விருத்தமாய் வேதம் முழுவதும் உன்மத்தப்ரலபிதம் [பைத்தியக்காரனின் பிதற்றல்] என்று சொல்லவேண்டிவரும். இப்பெரிய தோஷத்தைத் தவிர்ப்பதற்காகவே வியாஸர் முதலான மஹான்கள் உபநிஷத்துக்களில், ஸத், ப்ரஹ்மம், ஆத்மா, அக்ஷரம், ஆகாசம், ப்ராணன், ஜ்யோதி, இந்திரன், சிவன், ருத்ரன், புருஷன், நாராயணன், அநந்தன் முதலான சப்தங்களால் படிக்கப்படும் பரம்பொருள் நாராயணனான ஒருவனே என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இக்காரணங்களால் இவ்வுபநிஷத் வைஷ்ணவம் என்று ஸித்திக்கிறது. இவ்வளவுக்கும் மேலே உபப்ருஹ்மணங்களான இதிஹாஸபுராணங்களிலும் இவ்வுபநிஷத் விஷ்ணுபரமாக விவரிக்கப்பட்டுள்ளது.

"காரணம் புருஷோ யேஷாம் ப்ரதாநம் சாபி காரணம் |
ஸ்வபாவஸ்சாபி கர்மாணி தைவம் யேஷாஞ்ச காரணம் ||
பஞ்சகாரணஸங்க்யாதோ நிஷ்டா ஸர்வத்ர வை ஹரி: ||
தத்த்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபி: ஸர்வதோமுகை: |
தத்த்வமேகோ மஹாயோகீ ஹரிர் நாராயண: ப்ரபு: ||"

[எவைகளுக்குப் புருஷனும், ப்ரக்ருதியும், ஸ்வபாவமும், கர்மங்களும், தைவமும் காரணமாகின்றனவோ, இவ்வைந்து காரணங்களை உடைய அவைகளுக்கெல்லாம் ஹரியே பரமகாரணமாகிறான். எல்லாவிதமான காரணங்களாலும் பரதத்துவத்தை அறியவிரும்புமவர்களுக்கு, மஹாயோகியாய், ஹரியென்னும் பெயரையுடையவனும், ஸர்வஸ்வாமியான நாராயணன் ஒருவனே பரதத்துவமாவான்.] என்னும் மோக்ஷதர்மவசனங்களை 'கால: ஸ்வபாவோ''

http://acharya.org

என்று தொடங்கும் ச்வேதாச்வதர உபநிஷத் மந்திரத்தை விவரிக்கின்றனவென்பது ஸ்பஷ்டம்.

"ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா" [ஸர்வவ்யாபியாகவும், ஸர்வபூதங்களுக்கும் அந்தர்யாமியாகவுமிருப்பவன்] "ஸர்வவ்யாபீ ஸ பகவாந்" முதலான மந்திரங்களை ஸுபாலோபநிஷத் அந்தர்யாமி ப்ராஹ்மணம் முதலானவையும்

"மயா ததமித3ம் ஸர்வம் ஜக3த3வ்யக்தமூர்த்திநா"

[அவ்யக்தசரீரனான என்னால் இவையெல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளன] என்றும் "ஸர்வம் ஸமாப்நோஷி" [எல்லாவற்றையும் வியாபித்திருக்கிறாய்] என்றும் கீதையும் மற்றுமுள்ள பற்பல இதிஹாஸ புராணவாக்கியங்களும் விவரித்தன. "அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத்" [மாயனானவன் இவ்வுலகை ஸ்ருஷ்டிக்கிறான்.] "மாயாந்து ப்ரக்ருதிம் வித்3யாந் மாயிநம் து மஹேஶ்வரம்" [மாயையை ப்ரக்ருதியென்றும் மாயனை மஹேசுவரனென்றும் அறிவாயாக.] முதலான வாக்கியங்களை

"ஸர்வபூ4தாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்|
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ3 விஸ்ருஜாம்யஹம் ||
ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்4ய விஸ்ருஜாமி புந:புந: |
பூ4தக்3ராமிமம் க்ருத்ஸ்நம் அவஶம் ப்ரக்ருதேர் வஶாத்||
மயாத்4யக்ஷேண ப்ரக்ருதிஸ் ஸூயதே ஸசராசரம் ||"

[அர்ஜுனா! எல்லா பூதங்களும் கல்பம் முடிவில் என்னுடையதான ப்ரக்ருதியை அடைகின்றன. (அடுத்த) கல்பத்தின் ஆதியில் அவற்றை நான் மறுபடியும் ஸ்ருஷ்டிக்கிறேன். என்னுடைய ப்ரக்ருதியைப் பற்றிக்கொண்டு, ப்ரக்ருதிக்குக் கட்டுப்பட்டிருக்கும் இந்த பூதஸமூஹங்களெல்லாவற்றையும் மறுபடியும் மறுபடியும் ஸ்ருஷ்டிக்கிறேன்; என்னைத் தலைவனாகக்கொண்டு ப்ரக்ருதியானது சராசரங்களடங்கிய உலகையெல்லாம் ஸ்ருஷ்டிசெய்கிறது.]

"அவஜாநந்தி மாம் மூட4ா மாநுஷீம் தநுமாஶ்ரிதம்
பரம் பா4வமஜாநந்தோ மம பூ4தமஹேஶ்வரம் ||"

[பூதமஹேச்வரனாயிருக்கும் என் மேலான தன்மையை அறியாதவர்களாய், மனுஷ்யதேஹத்தை அடைந்திருக்கும் என்னை மூடர்கள் அவமதிக்கிறார்கள்.] என்னும் கீதாவாக்கியங்கள் விவரித்தன.

http://acharya.org

" ந தத்ஸமச்சாப்₁யதி₁கச்ச த்₃ருச்யதே " [அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவரும் காணப்படுவதில்லை] என்னும் மந்திரப் பகுதியை " ந த்வத்ஸமோஸ்த்யப்₁யதி₄க: குதோந்ய: " [உனக்கு ஒத்தவரே இல்லை; மேலானவர் எப்படி இருக்கமுடியும்?] என்று கீதையில் அர்ஜுனன் க்ருஷ்ணபரமாக விவரித்தான். "ஸ வேத்தி வேத்₃யம் ந ச தஸ்யாஸ்தி வேத்தா " [அறியவேண்டியவற்றை அவன் அறிகிறான். அவனை அறிபவன் ஒருவனுமில்லை.] என்னும் மந்த்ரபாகத்தை

" வேத₃ாஹம் ஸமதீதாநி வர்த்நமாநாநி சார்ஜுந |
ப₄விஷ்யாணி ச பூ₄தாநி மாம் து வேத₃ ந கஶ்சந || "

[நான் சென்றவையும், இருப்பவையும், வருமவையுமான எல்லா பூதங்களையும் அறிகிறேன்; என்னை ஒருவனும் அறிவதில்லை.] என்று கீதையில் கண்ணன்தானே விவரித்தருளினான். இப்படியே ச்ருதிஸ்ம்ருதிகளில் பற்பலவிடங்களில் இந்த ச்வேதாச்வதர மந்திரங்கள் நாராயணபரமாக விவரிக்கப்பட்டிருப்பதைக் கண்டுகொள்வது. ஆக, இவ்வளவால் இவ்வுபநிஷத் பகவத்பரமென்று நிர்ணயிக்கப்பட்டது. இனி, அடுத்தபடியாக சிவகாரணத்வசங்கையை விளைக்கும் மற்றொருபனிஷத்தாகிற 'அதர்வசிரஸ்' என்னும் உபனிஷத்தை விசாரிப்போம்.

அதர்வசிரோவிசாரம்

பூர்வபக்ஷம் (1)

தே₃வா ஹ வை ஸ்வர்க்க₃ம் லோகமக₃மந் | தே தே₃வா ருத்₃ரமப்ருச்ச₂ந் கோ ப₄வாநிதி| ஸோऽப்₃ரவீத் | அஹமேக: ப்ரத₂மமாஸம் வர்த்நாமி ச ப₄விஷ்யாமி ச நாந்ய: கஶ்சிந் மத்தோ வ்யதிரிக்த இதி ஸோऽந்தராத₃ந்தரம் ப்ராவிஶத் தி₃ஶஶ்சாந்தரம் ப்ராவிஶத்| ஸோऽஹம் நித்யாநித்யோऽஹம் ப்₃ரஹ்மாऽஹம் ப்ராஞ்ச: ப்ரத்யஞ்சோஹம் த₃க்ஷிணஞ்சோத₃ஞ் சோஹம் அத₄ஶ்சோர்த்₄வம் ச தி₃ஶஶ்ச விதி₃ஶஶ்சாஹம் புமாநபுமாம்ஸ்த்ரியஶ்சாஹம் கா₃யத்ர்யஹம் ஸாவித்ர்யஹம் ஸரஸ்வத்யஹம் த்ரிஷ்டுப் ஜகத்யநுஷ்டுப் சாஹம் ச₂ந்தோ₃ ஹம் கா₃ர்ஹபத்யோऽஹம் த₃க்ஷிணாக்₃நிராஹவநீயோऽஹம்

http://acharya.org

ஸத்யோஹம் கௌ3ரஹம் கௌ3ர்யஹம் ஜ்யேஷ்டோ2ऽஹம் ச்ரேஷ்டோ2ऽஹம் வரிஷ்டோ2ऽஹம் ஆபோऽஹம் தேஜோऽஹம் ருக்3யஜுஸ்ஸாமாத2ர்வாங்கி3ரஸோऽஹம அக்ஷரமஹம் க்ஷரமஹம் கோ3ப்யோऽஹம் கு3ஹ்யோऽஹம் அரண்யோஹம் புஷ்கரமஹம் பவித்ரமஹமக்3ரஞ்ச மத்4யஞ்ச பா3ஹ்யஞ்ச புரஸ்தாத் த3சஸு திக்ஷவஸ்தி2தமநவஸ்தி2தம் சஜ்யோதிரித்யஹமேகஸ் ஸர்வே ச மாமேவ மாம் யோ வேத3 ஸர்வாந் தே3வாந் வேத3। கா3ம் கோ3பி4ர் ப்3ராஹ்மணாந் ப்3ராஹ்மணைந ஹவிர்ஹவிஷா ஆயுராயுஷா ஸத்யம் ஸத்யேந த4ர்மம் த4ர்மேண தர்ப்பயாமி ஸ்வேந தேஜஸா। ததோ தே3வா ருத்3ரம் நாபச்யந்॥

[தேவர்கள் ஸ்வர்க்கலோகத்திற்குச் சென்றனர். அவர்கள் "தாங்கள் யார்" என்று ருத்ரனைக் கேட்டனர். அவர் (பின்வருமாறு) பதிலுரைத்தார்:—"நான் ஒருவனே முதலில் இருந்தேன். இப்போதும் இருக்கிறேன்; இனியும் இருப்பேன். என்னைக்காட்டிலும் வேறொருவன் ஒருவனுமில்லை" என்று. அவர் ஸூக்ஷ்மத்தைக் காட்டிலும் ஸூக்ஷ்மத்தில் ப்ரவேசித்தார். திக்குகளினுள்ளிருக்கும் வஸ்துவில் ப்ரவேசித்தார். "அப்படிப்பட்ட நான நித்யாநித்ய வஸ்துக்களாயிருக்கிறேன். நானே ப்ரஹ்மமாகிறேன். நானே கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, கீழ், மேல் என்னும் திக்குகளாகவும் (தென்கிழக்கு முதலிய) விதிக்குகளாகவும் ஆகிறேன். ஆணும் அலியும், பெண்ணுமாகிறேன். காயத்ரீ ஸாவித்ரீ ஸரஸ்வதிகளாகிறேன். த்ரிஷ்டுப் முதலான சந்தஸ்ஸுமாகிறேன். வேதமாகிறேன். கார்ஹபத்யம் முதலான மூன்று அக்னிகளாகிறேன். ஸத்யமாகிறேன். பசுவாகிறேன். கௌரியாகிறேன். மூத்தவனாகிறேன். சிறந்தவனாகிறேன். மதிக்கத்தக்கவனாகிறேன். ஜலம், தீ முதலான பூதங்களாகிறேன். ருக்யஜுஸ்ஸாமாதர்வ வேதங்களாகிறேன். அழிவற்றதும் அழிவுள்ளதுமாகிறேன். மந்த்ரமாகிறேன். ரஹஸ்யமாகிறேன். காடாகிறேன்; மலராகிறேன்; பரிசுத்தனாகிறேன். ஆதியும், நடுவும் (அந்தமும், உள்ளும்) புறமும், முன்னும் (பின்னும்) பத்து திக்குகளிலும் உள்ளதும் இல்லதும், சோதியுமாகிறேன். நான் ஒருவனே எல்லாமாகிறேன். இப்படி என்னை எவன் அறிகிறானோ, அவன் எல்லா தேவர்களையும் அறிகிறான். பசுக்களைப் பசுக்களாலும், ப்ராஹ்மணர்களை ப்ராஹ்மணர்களாலும், ஹவிஸ்ஸுக்களை ஹவிஸ்

http://acharya.org

ஸங்கடனாதலும், ஆயுஸை ஆயுஸாலும், ஸத்யத்தை ஸத்யத்தாலும், தர்மத்தை தர்மத்தாலும் என்னுடைய தேஜஸ்ஸால் விருத்தியடையச்செய்கிறேன்" அதன்பிறகு தேவர்கள் ருத்ரனைக் காணவில்லை.] என்று இவ்வதர்வசிர உபநிஷத்தில் ருத்ரன் தானே ஸர்வகாரணன் என்றும் ஸர்வாந்தர்யாமியென்றும் உரைத்ததாகக் கூறப்பட்டிருப்பதால் இந்த ருத்ரனே பரம்பொருளாகச் சொல்லப்படுகிறார் என்பது தெளிவு. ருத்ரனை முன்பே அறிந்த தேவர்கள் அவருடைய ப்ரபாவம் எப்படிப்பட்டது என்பதை அறிவதற்காக "நீர் யார்" என்று கேட்க, "நானே ஸர்வகாரணன் ஸர்வாந்தர்யாமி" என்று பதிலுரைத்திருப்பதிலிருந்து ருத்ரபரத்வம் கையிலங்கு நெல்லிக் கனியாக ஸித்திக்கிறது. ஆகையால் இவ்வுபநிஷத்திலிருந்து ருத்ரனே பரம்பொருள் என்று ஸித்தித்தவளவில், மற்றவிடங்களில் நாராயணன், ப்ரஹ்மா முதலானோரைப் பரம்பொருளாகச் சொல்லும் வாக்கியங்களை ருத்ரபரமாகப் பொருள்கொள்ளவேண்டுமென்று விளங்குகிறது. ஆகையால் ஸகல வேதாந்தங்களிலும் ருத்ரனே காரணபுருஷனாக கோஷிக்கப்படுகிறான் என்று ஸித்தித்தது. "இதி ஸோந்தராதந்தரம் ப்ராவிஶத் திஶஶ்சாந்தரம் ப்ராவிஶத்" [என்று அவர் ஸூக்ஷ்மத்தைக்காட்டிலும், ஸூக்ஷ்மத்தைப் பிரவேசித்தார்; திக்குகளினுள்ளிருப்பதை ப்ரவேசித்தார்] என்னும் வாக்கியம் நடுவில் அந்வயிக்காததலால் ருத்ரவாக்யம் முழுவதும் முடிந்த பிறகு அதைச்சேர்த்துக்கொள்ளவேண்டும். "இதி" என்னும் பதம் ருத்ரவாக்யம் முடிந்துவிட்டதைக் காட்டுகிறது. அது ருத்ர வாக்யத்தின் நடுவிலிருக்கத்தகாது. அதனாலேயே "இதி ஸோந்தராத்" என்னும் வாக்கியத்தை இருக்குமிடத்தைவிட்டெடுத்துக் கடைசியில் சேர்த்துக்கொள்கிறோம்.

ஸித்தாந்தம் (1)

இது வேதாந்ததாத்பர்யத்தையும் வாக்யாந்வயக்ரமங்களையும் அறியாதார் வார்த்தையாகும். "இதிஸோந்தராத்" என்று தொடங்கும் வாக்யத்தை இருக்குமிடத்தைவிட்டு எடுத்துப் பொருள்கொள்வதென்பது அந்யாய்யங்களில் தலையானதாகும். அப்படிப் பொருள் கொள்வதை எங்குமே கண்டதில்லை. இருக்குமிடத்திலேயே வைத்து அவ்வாக்கியத்திற்குப் பலவிதமாகப் பொருள்கொள்ள முடியும். இதி சப்தம் ருத்ரவாக்யத்தின் முடிவைக் காட்டுகிறதாகையால் அதைக் கடைசியில் கொண்டுபோய்க் கூட்டுகிறோம் என்று சொன்னதும் தவறு. 'இதி' என்னும் சப்தத்திற்கு (வாக்யத்தின்) முடிவு

http://acharya.org

மட்டும் பொருளல்ல. "இதிர் ஹேதுப்ரகரணப்ரகாராதி, ஸமாப்திஷு" என்று நிகண்டுவில் படித்தபடியே இதிசப்தத்திற்கு ஹேது ப்ரகாரம் முடிவு என்று மூன்று பொருள்கள் உள்ளன. இம்மூன்று பொருள்களையும் கொண்டாலும் "இதிஸோந்தராத்" என்னும் வாக்கியத்தை இருக்குமிடத்திலேயே வைத்து அந்வயிக்கலாம் என்பதை இனிக்காட்டுகிறோம்.

'இதி' என்னும் சப்தம் ஹேதுவைக் குறிக்கும். "த்வம் ஸர்வஜ்ஞ இதி த்வாம் வ்ருணே" [நீ ஸர்வஜ்ஞன் என்னும் காரணத்தால் உன்னை வரிக்கின்றேன்.] என்னும் வாக்கியத்தில் இதிசப்தம் காரணப்பொருளில் பிரயோகிக்கப்படுகிறது. இங்கும் அப்பொருளைக்கொண்டு இரண்டுவிதமாக நிர்வஹிக்கிறோம்:— (1) "மத்தோ வ்யதிரிக்த:— என்னைக்காட்டிலும் வேருனவன், நாந்ய: கஶ்சித் இதி ஒருவனும் இல்லையென்னும் காரணத்தினுல், அஹமேக: ப்ரதம மாஸம்— நான் ஒருவனே முதலில் இருந்தேன், வர்த்தாமி ச பவிஷ்யாமி ச— இப்போதுமிருக்கிறேன்; இனியும் இருப்பேன்" என்று முதல்வாக்கியத்திற்குப் பொருள். இதற்குமேல் "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஶாந:' 'நாராயணாத் ருத்ரோ ஜாயதே' 'நாராயண:பரம் ப்ரஹ்ம' முதலான பற்பல வேதவாக்யங்களில் நாராயணனே ஒருவனே ஆதிகாலத்தில் இருந்தானென்றும், அவனே ருத்ரனுகிற உம்மையும் படைத்தானென்றும், அவனே பரம்ப்ரஹ்மமென்றும் சொல்லப்பட்டிருக்க, நீர் 'நானே முதலிலிருந்தேன்' என்று சொல்லக் காரணமென்ன?" என்று தேவர்கள் ஸந்தேஹிக்க, அந்த ஸம்ஶயத்தை ருத்ரன் போக்குகிருர் "ஸோந்தராத்" என்னும் அடுத்த வாக்கியத்தாலே. "ஸ:—வேதவாக்கியங்களிலே பரமாத்மாவாகப் பிரஸித்தனுன அந்த நாராயணன், அந்தராத்— (வெளியிலுள்ள அந்நமயாதி கோசங்களைக்காட்டிலும்) உள்ளிருப்பதான ப்ராணமயாதிகளைக் காட்டிலும், அந்தரம்—ஸூக்ஷ்மமான விஜ்ஞானமயன் என்னும் ஜீவாத்மாவை; அதாவது சிவனுகிற என்னுடைய ஆத்மாவை ப்ராவிஶத்-வ்யாபித்திருக்கிருன்; திஶஶ்ச அந்தரம்....ஸகல திக்குகளிலுமுள்ள எல்லாப் பொருள்களையும் வியாபித்திருக்கிருன். அதனுலேயே பரமாத்மாவுக்கே அஸாதாரணமான ஸர்வகாரணத்வாதிகளை என்னிடம் சொன்னேன்" என்று அந்த வாக்கியத்தின் பொருள். பரமாத்மாவே என்னிடமும் எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருக்கிருனுகையால், "ஸகலஜகத்காரணனுன பரமாத்மா நானே" என்றும், "எல்லாப் பொருள்களும் நானே" என்றும்

http://acharya.org

சொல்லலாம் என்று தாத்பர்யம். "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" [நீ எல்லாவற்றையும் வியாபித்திருக்கிறாயாகையால் எல்லாருமாகிறாய்.] "அவஸ்தி₂தேரிதி காஸக்ருத்ஸ்ந:" [பரமாத்மா ஜீவனிடத்தில் நிற்கிறானாகையால் (அவனே இவனென்னலாம்) என்று காசக்ருத்ஸ்னர் உரைத்தார்] "தத்ஸத₂த்வாத₂நுபஶ்யந்தி ஹ்யேக ஏவேதி ஸாத₄வ:" [ஜீவனுக்குள்ளே பரமன் நிறைந்து நிற்கிறானாகையாலே ஸாதுக்கள் இருவரையும் ஒருவனாகவே காண்கிறார்கள்.] என்னும் ப்ரமாணங்களை அநுஸந்திப்பது. இது முதல் நிர்வாஹம். இரண்டாவது நிர்வாஹம்:—"ஸோந்தராத₃ந்தரம்...ப்ராவிஶதி₃தி—அந்தப் பரமாத்மா ஸூக்ஷ்மமான ஜீவாத்மாவினுள்ளும் எல்லாப் பொருள்களினுள்ளும் வியாபித்திருக்கிறான் என்னும் காரணத்தினால், அஹமேக: ப்ரத₂மமாஸம் வர்த்தாமி ச ப₄விஷ்யாமி ச. நான் ஒருவனே முதலிலிருந்தேன்; இப்போதுமிருக்கிறேன்; இனியுமிருப்பேன்" என்றும் பொருள்கொள்ளலாம். இங்கும் இதிஶப்தம் ஹேது என்னும் பொருளையுடையது.

"இதி ஸோந்தராத்" என்றவிடத்திலுள்ள இதிஶப்தத்தை ப்ரகாரப் பொருளில் கொண்டும் பொருள்கொள்ளலாம், இதி—இம்மாதிரியாக என்றபடி. "அஹமேக:...வ்யதிரிக்த:— நான் ஒருவனே முதலில் இருந்தேன், இப்போதுமிருக்கிறேன், இனியுமிருப்பேன், என்னைக்காட்டிலும் வேறான ஒருவனுமில்லை, இதி—என்றிம்மாதிரியாக (நான் சொல்லும்படி), ஸ:—அந்தப் பரமாத்மாவானவர், அந்தராத₃ந்தரம்— ஸூக்ஷ்மத்தைக்காட்டிலும் ஸூக்ஷ்மனான ஜீவாத்மாவை, ப்ராவிஶத்—வியாபித்திருக்கிறார். தி₃ஶஶ்ச அந்தரம்—திக்குகளிலுள்ள பொருள்களிலும், ப்ராவிஶத்—வியாபித்திருக்கிறார்" என்று பொருள். அன்றிக்கே "பரமாத்மாவானவர் ஜீவாத்மாவினுள்ளே வியாபித்திருக்கிறார் என்னுமிவ்வழியாலே நானே முதலிலிருந்தேன்...என்னைக்காட்டிலும் வேறொருவருமில்லை" என்றும் பொருள்கொள்ளலாம். இவ்விரண்டும் ப்ரகாரார்த்தம்.

இதிஶப்தத்தை வாக்கியத்தின் முடிவாகக்கொண்டும் பின்வருமாறு பொருள்கொள்ளலாம்:—"அஹமேக:...வ்யதிரிக்த:" என்னும் பகுதிக்கு முன்போலவே பொருள். இதிஶப்தம் அந்த வாக்யத்தின் முடிவைக் காட்டுகிறது. இதற்கு மேலுள்ள "ஸோந்தராத₃ந்தரம் ப்ராவிஶத் தி₃ஶஶ்சாந்தரம் ப்ராவிஶத்" என்னும் வாக்கியம் வேதபுருஷனின் வாக்கியமாகும். "நீர் யார்" என்று தேவர்களால் வினவப்பட்ட ருத்ரன் "நானே முக்காலங்களிலுமிருந்த காரணபுருஷன்"

http://acharya.org

என்று பதில் சொன்னவுடன், 'ஸர்வகாரணனான நாராயணனுக்கே பொருந்திய இந்த குணத்தை ருத்ரன் தனனிடமுள்ளதாகச் சொல்லுவது எப்படி ஒட்டும்' என்று ஸந்தேஹமெழுக்கூடுமாகையால் அந்த ஸம்சயத்தைப் பரிஹரிக்கிறது வேதபுருஷன் ''ஸோந்தராத்'' என்று தொடங்கும் வாக்யத்தாலே. ''ஸ:-அந்த ருத்ரன், அந்தராத் அந்தரம்- (தேஹேந்த்ரியங்களைக்காட்டிலும்) ஸூக்ஷ்மனான பரமாத்மாவை, ப்ராவிஶத்–புத்தியாலே அடைந்தான்'' என்று பொருள். தன்னிடம் அந்தர்யாமியாய் நிறைந்திருக்கும் நாராயணனை அநுஸந்தித்து பா$_4$வநாப்ரகர்ஷத்தாலே (நினைவின் முதிர்ச்சியாலே) தன்னை அவனாகவே நினைத்துப் பேசினான்; அதனாலே ருத்ரவாக்யத்தில் எவ்வித அநுபபத்தியுமில்லை என்று பாவம். ''ஸோஹம் நித்யா நித்ய:'' என்பதிலிருந்து மறுபடியும் ருத்ரவாக்யம் தொடங்குகிறது. 'ஸோப்$_3$ரவீத்—அந்த ருத்ரன் மறுபடியும் பின்வருமாறு உரைத்தார்'' என்னும் பதங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இப்பொருளை ''அதர்வ ஶிரஸ்ஸிலே ருத்ரன் தன் வைபவத்தைப் பரக்கநின்று பேசினான்; தனக்கு அடங்காத ஐச்வர்யமாயிருந்தது; இவன் இப்படிப் பேசுகைக்கு அடியென் என்று ச்ருதிதானே சங்கித்து 'ஸோந்தராத$_3$ந்தரம் ப்ராவிஶத்' என்று பரமாத்மப்ரவேஶத்தாலே சொன்னான் என்றதிறே. அந்த பா$_4$வம் வந்தால் அப்படியே சொல்லலாயிருக்கும்'' என்று ஆசார்யச்ரேஷ்டரான நம்பிள்ளை ஈட்டிலே (5–6) அருளிச்செய்தார்.

நிற்க; இப்படிப் பரமாத்மாவை அநுபவித்து, அந்த பா$_4$வநா ப்ரகர்ஷத்தாலேயும், அவன் தனக்கு அந்தர்யாமியாயிருக்கிறான் என்னும் ஞானத்தாலும் தன்னையே பரமபுருஷனாகப் பேசினார் வேறு எவரேனும் உண்டோ என்னில்: பலரும் உண்டு. ஹிரண்யனாலே கடலிலே இடப்பட்ட ப்ரஹ்லாதாழ்வான் அநந்தனையே தியானித்துக்கொண்டிருந்து அந்நினைவின் முதிர்ச்சியாலே

''மத்தஸ் ஸர்வஹமஹம் ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே।
அஹமேவாவ்யயோऽநந்த: பரமாத்மாத்மஸம்ஶ்ரய:॥
ஸர்வக$_3$த்வாத$_3$நந்தஸ்ய ஸ ஏவாஹமவஸ்தி$_2$த:॥''

[என்னிடமிருந்தே எல்லாமுண்டாகின்றன; நான் எல்லாமுமாகிறேன். பழமையானவனான என்னிடமே எல்லாம் பொருந்தியிருக்கின்றன. நானே அழிவற்றவனாய், தனக்குத்தானே ஈசனான அநந்தனென்னும் பரமாத்மாவாகிறேன். அநந்தன் எங்கும்

http://acharya.org

நிறைந்திருப்பதனுலே அவனே நானும் நிற்கிறேன்.] என்று தன்னையே பரமாத்மாவாகச் சொல்லிக்கொண்டான் என்னும் விஷயம் விஷ்ணு புராணத்திலே விவரிக்கப்பட்டது. திருவாய்ப்பாடியில் பெண்களும் பாவநாப்ரகர்ஷத்தாலே க்ருஷ்ணனுடைய சேஷ்டிதங்களை அநுகரித்தார்கள் என்னும் விஷயமும் விஷ்ணுபுராணாதிகளிலே ப்ரஸித்தம்.

"கோ3ப்யஶ்ச ப்3ருந்த3ஶ: க்ருஷ்ணசேஷ்டா
ஸ்வாயத்தமூர்த்தய: ।
அந்யதே3ஶம் க3தே க்ருஷ்ணே சேருர் ப்3ருந்தா3வநாந்தரம் ॥
க்ருஷ்ணே நிப3த்34ஹ்ருத3யா இத3மூசு: பரஸ்பரம் ॥
க்ருஷ்ணோऽஹமேஷ லலிதம் வ்ரஜாம்யாலோக்யதாம் க3தி: ।
அந்யா ப்3ரவீதி க்ருஷ்ணஸ்ய மம கீ3திர் நிஶம்யதாம் ॥
து3ஷ்ட காலிய திஷ்ட2ாத்ர க்ருஷ்ணோऽஹமிதி சாபரா ।
பா3ஹுமாஸ்போ2ட்ய க்ருஷ்ணஸ்ய லீலாஸர்வஸ்வமாத3தே3 ॥
அந்யா ப்3ரவீதி ஹே கோ3பா நிஶ்ஶங்கை: ஸ்தீ2யதாமிஹ ।
அலம் வ்ருஷ்டிப4யேநாத்ர த்4ருதோ கோ3வர்த்த4நோ மயா ॥
தே4நுகோऽயம் மயா க்ஷிப்தோ விசரந்து யதே2ச்ச2யா ।
கா3வோ ப்3ரவீதி சைவாந்யா க்ருஷ்ணலீலாநுகாரிணீ ॥"

[கோபிகளும் கூட்டமாகக் கூடிக் கண்ணனுடைய சேஷ்டைகளை அனுகரிக்கும் சரித்தையுடையவர்களாய், கண்ணன் வேறு தேசத்திற்குப் போயிருக்கும்போது ப்ருந்தாவனத்தினுள் ஸஞ்சரித்தார்கள். க்ருஷ்ணனிடம் ஈடுபட்ட நெஞ்சையுடையவர்களாய், ஒருவருக்கொருவர் பின்வருமாறு உரைத்தனர். "நானே க்ருஷ்ணன்; என்னுடைய அழகிய நடையைக் காணுங்கள்" என்று ஒருத்தி சொன்னுள். "க்ருஷ்ணனுகிற என்னுடைய பாட்டைக் கேளுங்கள்" என்று மற்றொருத்தி உரைத்தாள். மற்றொருத்தியோவெனில் "துஷ்டனே! காளிய! இங்கேயே நில்" என்று சொல்லிக்கொண்டு, கையைத் தட்டிக்கொண்டு கண்ணனுடைய (காளியமர்த்தன) விளையாட்டையெல்லாம் செய்துகாட்டினுள். 'ஆயர்களே! ஸந்தேஹிக்காமல் இங்கேயே நில்லுங்கள்; மழையைப்பற்றி பயப்படவேண்டாம். கோவர்த்தனத்தை நான் குடையாக எடுத்துவிட்டேன்" என்று மற்றொருத்தி உரைத்தாள். வேறொருத்தியோவெனில் "நான் தேனுகனைக் கொன்று விட்டேன்; (பயமில்லாமல்) எங்கும் செல்லுங்கள்" என்று கண்ணனுடைய (தேனுகமர்த்தன) லீலையை

http://acharya.org

அநுகரித்தவளாய் பக்கங்களை நோக்கிச் சொல்லுகிறாள்.] என்று விஷ்ணுபுராணம் விளம்பிற்றன்றோ.

"கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்
கடல ஞாலமாவேனும் யானே என்னும்
கடல் ஞாலம் கொண்டேனும் யானே என்னும்
கடல் ஞாலம் கீண்டேனும் யானே என்னும்
கடல் ஞாலமுண்டேனும் யானேயென்னும்" என்னும்

"காண்கின்ற நிலமெல்லாம் யானேயென்னும்
காண்கின்ற விசும்பெல்லாம் யானேயென்னும்
காண்கின்ற வெந்தீயெல்லாம் யானேயென்னும்
காண்கின்ற இக்காற்றெல்லாம் யானேயென்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானேயென்னும்" என்றும்

பாவநாப்ரகர்ஷத்தாலே பராங்குசராகிற நம்மாழ்வார் பேசின பேச்சுக்கள் ப்ரஸித்தமன்றோ. "தத்தைதத் பச்யந் ருஷிர் வாமதேவ: ப்ரதிபேதே அஹம் மநுரபவம் ஸூர்யச்ச" [பரமாத்மாவினுடைய ஸர்வாத்மபாவத்தை அறிந்த வாமதேவ ரிஷியானவர், நானே மனுவாகவும் ஸூர்யனாகவும் ஆகிறேன் என்று உரைத்தார்.] என்கிறபடியே வேதத்திலும் வாமதேவர் என்னும் ரிஷியானவர் பரமாத்மாவின் ஸர்வாத்மபாவத்தைத் தன்னிடமுள்ளதாகப் பேசினார் என்பது ப்ரஸித்தம். "மனுவுக்கும் ஸூர்யனுக்கும் அந்தர்யாமியாயுள்ளவனே எனக்கும் அந்தர்யாமியாயிருக்கிறானையால் நானே மனுவாகவும் ஸூர்யனாகவுமாகிறேன்" என்று தாத்பர்யம். இவ்வர்த்தத்தையே ஸூத்ரகாரரும் "சாஸ்த்ரத்ருஷ்ட்யா தூபதேசோ வாமதேவவத்" [வாமதேவரைப்போல் சாஸ்த்ரத்ருஷ்டியினாலே (இங்கு) உபதேசம் செய்யப்படுகிறது.] என்றார், இங்கு வாமதேவசப்தத்தை இட்ட வியாஸருக்கு வாமதேவசப்தவாச்யனாய், அதர்வசிரஸ்ஸிலே "அஹமேக: ப்ரதமமாஸம்" என்றவனை சிவனும் விவக்ஷிதன் என்று ரஸிகர்கள் உரைப்பார்கள். நிற்க; இந்திரனும் "மாமுபாஸ்ஸ்வ" [என்னை அந்தர்யாமியாகக் கொண்ட பரமாத்மாவை உபாஸிப்பாயாக.] என்று இப்படி உபதேசித்தான். இவ்வாக்கியங்களைப்போன்றதே அதர்வசிரஸ்ஸிலேயுள்ள இந்த ருத்ரவாக்யமும் என்பது "ஸோந்தராத்" என்னும் வாக்கியத்தாலேயே தெளிவாகிறது. ப்ரஹ்லாதனுக்கும்,

http://acharya.org

கோபிடருக்கும், நம்மாழ்வாருக்கும், வாமதேவரிஷிக்கும், இந்திரனுக்கும் ஸர்வகாரணத்வமும் பரமாத்மத்வமும் உண்டாகில், சிவனுக்கும் இந்த வாக்கியத்திலிருந்து பரமாத்மத்வமும் காரணத்வமும் ஏற்படலாம். ஆகையால் இங்குள்ள ருத்ரவாக்யத்திலிருந்து ருத்ரனுக்குக் காரணத்வத்தை ஸாதிக்க நினைப்பது பகற்கனவேயாகும். மேலே விவரித்தபடியே "இதி ஸோந்தராத்" என்று தொடங்கும் வாக்கியத்தை இருக்குமிடத்திலேயே வைத்துப் பலபடியாகப் பொருள் கொள்ளத்தக்கதாயிருக்கும்போது, அவ்வாக்கியத்தைப் பற்பல வாக்கியங்களுக்குப் பின்னால் கொண்டு போய்ச் சேர்த்துப் பொருள்கொள்ளவேண்டுமென்று கூறுவதை வாக்யாந்வயக்ரமத்தை அறிந்தவர்கள் செவியேற்கவும் மாட்டார்கள். ஆகையால் அதர்வசிரஸ்ஸிலுள்ள ருத்ரவாக்யத்திலிருந்து ருத்ரனுக்குப் பரத்வம் ஸாதிக்கவொண்ணாது என்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

பூர்வபக்ஷம் (2)

"தே தே$_{3}$வா ருத்$_{3}$ரம் த்$_{4}$யாயந்தி। ததோ தே$_{3}$வா ஊர்த்$_{4}$வபா$_{3}$ஹவ: ஸ்துவந்தி। ஓம்॥ யோ ஹ வை ருத்$_{3}$ரஸ் ஸ ப$_{4}$க$_{3}$வாந் பூ$_{4}$ர்பு$_{4}$வஸ் ஸுவர் யஶ்ச ப்$_{3}$ரஹ்மா தஸ்மை வை நமோ நம:। யஶ்ச விஷ்ணு: யஶ்ச மஹேஶ்வர:. யா சோமா, யஶ்ச விநாயக:. யஶ்ச ஸ்கந்த$_{3}$: யஶ்சேந்த்$_{3}$ர:. யஶ்சாக்$_{3}$நி:.... யஶ்ச ஸர்வம் யஶ்ச ஸத்யம்"

[(ருத்ரனைக்காணாத) அந்த தேவர்கள் ருத்ரனை தியானித்தனர். பிறகு கையை உயரத்தூக்கியவர்களாய் அவர்கள் ருத்ரனைத் துதித்தார்கள். எவனொருவன் ருத்ரசப்தத்தால் சொல்லப்படுகிறானோ அவன் பகவானே. எவனொருவன் பூர்புவஸ்ஸுவர்லோகங்களாகவும் ப்ரஹ்மாவாகவுமிருக்கிறானோ அவனுக்கு நமஸ்காரம்; எவனொருவன் விஷ்ணுவாகவும், மஹேச்வரனாகவும், உமையாகவும், விநாயகனாகவும், ஸ்கந்தனாகவும், இந்திரனாகவும், அக்னியாகவும்... எல்லாமாகவும், ஸத்யமாகவும் இருக்கிறானோ (அவனுக்கு நமஸ்காரம்)] என்று இவ்வதர்வசிரஸ்ஸில் இரண்டாவது கண்டத்தில் தேவர்களும் இந்த ருத்ரனே ஸர்வாந்தர்யாமி என்று துதித்ததாகக் காண்கிறது. ஆகையால் இதிலிருந்து ருத்ரனே பரமாத்மாவென்று விளங்குகின்றது. "யஶ்ச விஷ்ணு:" என்று விஷ்ணுவையும் ருத்ரனுடைய விபூதிகோடியில் படித்திருப்பதால் விஷ்ணுவுக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் இவனே என்று தெளிவாகிறது.

http://acharya.org

ஸித்தாந்தம் (2)

இதுவும் தவறு. முதல் கண்டத்தில் பரமாத்மா தனக்கு அந்தர்யாமியாக இருப்பதாலேயே தன்னையே பரமாத்மாவாக அநுஸந்திப்பதாக ருத்ரன் தானே சொல்லுகையால், அந்த உபதேசத்தைக் கேட்ட தேவர்களும் அவனை அப்படியே துதிக்கிறார்கள். ஆகையால் இந்த ஸ்தோத்ரம் ருத்ரனுக்கும் அந்தர்யாமியான பரமபுருஷனையே சொல்லும். மேலும், "யோ வை ருத்$_3$ர:" என்று ருத்ரசப்தவாச்யனை அநுவதித்து "ஸ ப$_4$க$_3$வாந்" என்று அவனே பகவான் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. பகவச்சப்தத்திற்கு முக்யார்த்தமாயிருப்பவன வாஸுதேவனே என்பதை

"ப$_4$க$_3$வாநிதி ஶப்$_2$தே$_3$ாऽயம் ததா$_2$ புருஷ இத்யபி।
நிருபாதீ$_4$ ச வர்த்தேதே வாஸுதே$_3$வே ஸநாதநே ||"

[பகவான் என்னும் சப்தமும் புருஷனென்னும் சப்தமும் இயற்கையாகவே ஸநாதனனான வாஸுதேவனிடமே உள்ளன.] என்றும்,

"தத்ர பூஜ்யபதா$_3$ர்த்தோ$_3$க்தி பரிபா$_4$ஷா ஸமந்வித ।
ஶப்$_3$தோ$_3$ऽயம் நோபசாரேண அந்யத்ர ஹ்யுபசாரத: ||"

[பூஜிக்கத்தகுந்தவன் என்னும் பொருளையும் வழக்கையும் உடைய இந்த பகவச்சப்தம் வாஸுதேவனிடமே இயற்கையாகப் பிரயோகிக்கப்படுகிறது. மற்றவிடங்களில் ஔபசாரிகமாகவே பிரயோகிக்கப்படுகிறது.] என்று பராசராதி ப்ரஹ்மரிஷிகள் நிர்ணயித்தனர். "யச்ச விஷ்ணு:" என்றதால் விஷ்ணுவும் ருத்ரனுடைய விபூதிகோடியில் சேர்ந்தவனாகிறான் என்றதும் தவறு; அடுத்தபடியாக "யச்ச மஹேச்வர:" என்று மஹேச்வர சப்தத்தால் பிரஸித்தனான ருத்ரனும் விபூதிகோடியில் படிக்கப்பட்டிருக்கையால். உண்மையில் "யோ ஹ வை ருத்$_3$ர:" என்றவிடத்தில் படிக்கப்படும் ருத்ரன் பூர்வகண்டத்திற்படியே ருத்ராந்தர்யாமியான பரமாத்மாவான நாராயணனேயாகையால் அவனுடைய விபூதியாக ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரர்கள் மூவரும் உரைக்கப்படுகிறார்கள். நாராயணனுக்கு விஷ்ணு விபூதியாவனோ? எனில்: ப்ரஹ்மருத்ரர்களுடன் படிக்கப்படும் விஷ்ணுபகவான் நாராயணனுடைய முதல் அவதாரமாகையால் அவனுடைய அவதாரரூபமான விபூதியென்னக் குறையில்லை. கீதையில் கண்ணனும் "ராம: ஶஸ்த்ரப்$_4$ருதாமஹம்" [வில்வீரர்களுக்குள் நானே ராமன்.] என்று தன்னுடைய பூர்வாவதாரமான

http://acharya.org

ராமனைத் தன் விபூதியாகப் படித்தானன்றோ. விபூத்யத்யாயத்திலும் இவ்வேதவாக்கியம் தன்னையே காட்டுகிறதென்பதை கீதாசார்யனான கண்ணனும் விவரித்தான். ஸூத்ரகாரரான வியாஸரும்

"விஷ்ணுராத்மா ப$_{4}$க$_{3}$வதோ ப$_{4}$வஸ்யாமிததேஜஸ: |
தஸ்மாத்$_{3}$ த$_{4}$நுர்ஜ்யாஸம்ஸர்க்க$_{3}$ம் ஸ விஷேஹே
மஹேஶ்வர: ||"

[அதிகமான தேஜஸ்ஸையுடைய பகவான் ருத்ரனுக்கு விஷ்ணு ஆத்மாவாயிருக்கிறார். அதனாலேயே மஹேச்வரனான அந்த ருத்ரன் அந்த வில்லையும் நாணையும் தொடமுடிந்தது.] என்று த்ரிபுரஸம்ஹாரஸமயத்திலும்,

"தவாந்தராத்மா மம ச யே சாந்யே தே$_{3}$ஹிஸம்ஜ்ஞிதா: |
ஸர்வேஷாம் ஸாக்ஷிபூ$_{4}$தோऽஸௌ ந க்$_{3}$ராஹ்ய:
கேநசித் க்வசித் ||"

[(குழந்தாய் ருத்ரனே!) உனக்கும் எனக்கும் தேஹத்துடன்கூடிய மற்றெல்லாருக்கும் அந்தராத்மாவாயிருப்பவர் நாராயணனே, எல்லாருக்கும் ஸாக்ஷிபூதராயும், ஒருவராலும் ஒருபோதும் அறியப்படாதவராயுமிருப்பவர் அவரே] என்று ப்ரஹ்மருத்ர ஸம்வாதத்திலும்

"ஏதௌ த்$_{3}$வௌ விபு$_{3}$த$_{4}$ஶ்ரேஷ்டௌ$_{2}$ ப்ரஸாத$_{3}$க்ரோத$_{4}$-
ஜௌ ஸ்ம்ருதௌ |
ததா$_{2}$த$_{3}$ர்ஶிதபந்தா$_{2}$நௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ ||"

[இவ்விரண்டு தேவச்ரேஷ்டர்களும், பகவானுடைய அருளாலும், கோபத்தாலும் பிறந்தவர்கள். அவனாலே காட்டப்பட்ட வழியையுடையவர்களாய் ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைச் செய்கிறார்கள்] என்று மற்றோரிடத்திலும், மஹாபாரதத்திலே சிவனுக்கும் அந்தர்யாமி நாராயணனே என்று நிலைநாட்டியிருக்கிறார். அதற்கு விரோதமாக இங்கு பொருள்கொள்வது ஒருகாலும் பொருந்தாது. "ஸ ப்$_{3}$ரஹ்மா ஸ ஶிவஸ் ஸேந்த்$_{3}$ர:" என்று நாராயணாவல்லியிலும், "ப்$_{3}$ரஹ்மா நாராயண: | ஶிவஶ்ச நாராயண: | ஶக்ரஶ்ச நாராயண:" [ப்ரஹ்மருத்ரேந்திரர்களுக்கும் அந்தர்யாமி நாராயணனே] என்று ஸுபாலோபநிஷத்திலும் படிக்கப்பட்ட மந்திரங்களுடன் ஒரே பொருளையுடையதாயிருக்கையால் இக்கண்டவாக்யங்களும் நாராயணபரமே என்பது தெளிவு.

http://acharya.org

நிற்க; சில அவைதிகர்கள் "நாராயணன் உபாதாநகாரணமாகவும், ருத்ரன் நிமித்தகாரணமாகவும் ஆகிறார்களாகையால் இருவரும் காரணபுருஷர்கள் என்னலாம். இருவருக்கும் காரணத்வத்தைச்சொல்லும் வேதவாக்யங்களுக்கும் விரோதமின்றியிலே யொழியும்" என்கிறார்கள். இவ்வார்த்தை வேதவித்துக்களின் கோஷ்டியிலே விலைசெல்லாது. "ஸதே3வ ஸோம்யேத3மக்3ர ஆஸீத் ஏகமேவாத்3விதீயம்" [இவ்வுலகிற்கு நிமித்த உபாதாந ஸஹகாரி காரணங்கள் மூன்றும் ப்ரஹ்மமே] "ப்3ரஹ்ம வநம் ப்3ரஹ்ம ஸ வ்ருக்ஷ ஆஸீத்......ப்3ரஹ்மாத்4யதிஷ்ட2த்3 பு4வநாநி தா4ரயந்" முதலான ச்ருதிவாக்யங்களிலும், "ஜந்மாத்3யஸ்ய யத:" "ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞாத்3ருஷ்டாந்தாநுபரோதா4த்" முதலான ப்ரஹ்மஸூத்ர வாக்யங்களிலும் நிமித்தோபாதாநகாரணங்கள் இரண்டுமாகும் ப்ரஹ்மம் ஒன்றே என்று உத்கோஷிக்கப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு விரோதமாக ருத்ரன் நிமித்தகாரணமென்றும், நாராயணன் உபாதானகாரணமென்றும் சொல்லுவது பரிஹஸிக்கத்தக்கதாகும். "நாராயணாத்3 ருத்3ரோ ஜாயதே" முதலான வேதவாக்யங்களில் நாராயணனிடமிருந்தும், ப்ரஹ்மாவிடமிருந்தும் ருத்ரன் பிறந்தான் என்று சொல்லும் வாக்கியங்களும் அர்த்தமற்றவையாகும். ஆகையால் இவ்வதர்வசிரோ வாக்கியங்களுக்கு நம்மால் விவரிக்கப்பட்டதே பொருத்தமான பொருளாகும்.

பூர்வபக்ஷம் (3)

"ஹ்ருதி3ஸ்தா2 தே3வதாஸ் ஸர்வா ஹ்ருதி3 ப்ராணா: ப்ரதிஷ்டி2தா: |
ஹ்ருதி3 த்வமஸி யோ நித்யம் திஸ்ரோ மாத்ரா: புரஸ்து ஸ:||
தஸ்யோத்தரத: ஶிரோ த3க்ஷிணத: பாதௌ3 யது3த்தரத: ஸ ஓங்கார:
ய ஓங்காரஸ் ஸ ப்ரணவோ ய: ப்ரணவஸ் ஸ ஸர்வ-
வ்யாபீ யஸ் ஸர்வவ்யாபீ ஸோऽநந்தோ யோऽநந்தஸ்
தத்தாரம் யத் தாரம் தத் ஸூக்ஷ்மம் யத்ஸூக்ஷ்மம் தச்சு2க்லம் யச்சு2க்லம்
தத்3 வைத்3யுதம் யத்3 வைத்3யுதம் தத் பரம் ப்3ரஹ்மேதி
ஸ ஏகோ ருத்3ரஸ் ஸ ஈஶாநஸ் ஸ ப4க3வாந் ஸ
மஹேஶ்வரஸ் ஸ மஹாதே3வ: ||"

http://acharya.org

[(ஜீவனின்) ஹ்ருதயத்தில் எல்லா தேவதைகளும் இருக்கின்றார்கள்; ஹ்ருதயத்தில் ப்ராணன்களும் நிலைநிற்கின்றன. நித்யமாய், மூன்று மாத்திரையுடையதாயுள்ள (ஓங்காரமாகிற) நீயும் இருக்கிறாய்; (உனக்கு) முன்னால் அந்தப் பரமாத்மா இருக்கிறான். அந்தப் பரமாத்மாவுக்கு இடதுபக்கத்தில் (வேதத்தின்) தலையும், வலது பக்கத்தில் கால்களும் உள்ளன. இடதுபக்கத்திலுள்ள தலை ஓங்காரமாகும்; அதுவே ப்ரணவம், ஸர்வவ்யாபீ, அநந்தன், தாரம், ஸூக்ஷ்மம், சுக்லம், வைத்யுதம், பரப்ரஹ்மமென்று சொல்லப்படும்; அதுவே ருத்ரன்; அதுவே ஈசானன்; அதுவே பகவான்; அதுவே மஹேச்வரன்; அதுவே மஹாதேவன்] என்று இவ்வதர்வசிரஸ்ஸின் நான்காவது கண்டத்தில் ப்ரணவத்திற்குப் பொருளாய், ஸர்வ வ்யாபியாய், அநந்தனயிருப்பவன் ருத்ர ஈசாந மஹேச்வர மஹாதேவபதவாச்யனை சிவனே என்று சொல்லப்பட்டதாகையால் இவ்வுபநிஷத்து சிவபரமே என்பது ஸ்புடமாகிறது. அடுத்ததான ஐந்தாவது கண்டத்தில்,

"அத$_2$ கஸ்மாது$_3$ச்யதே ஏகோ ருத்$_3$ர:?| ஏக ஏவ ருத்$_3$ரோ ந த்$_3$விதீயாய தஸ்து$_2$ர்ய இமாந் லோகாநீசத ஈசநீபி$_4$:| ப்ரத்யஞ்ஜநாஸ்திஷ்ட$_2$தி ஸஞ்சுகோசாந்தகாலே ஸம்ஸ்ருஜ்ய விச்வா பு$_4$வநாநி கோ$_3$ப்தா தஸ்மாது$_3$ச்யத ஏகோ ருத்$_3$ர:" அத$_2$ கஸ்மாது$_3$ச்யத ஈசாந:?| யஸ்ஸர்வாந் லோகாநீசத ஈசநீபி$_4$ர் ஜநநீபி$_4$: பரமசக்திபி$_4$:| அபி த்வா சூர நூநமா—து$_3$க்$_3$த$_4$ா இவ தே$_4$நவ: ஈசாநமஸ்ய ஜக$_3$தஸ் ஸுவர்த்$_3$ருசமீசாநமிந்த்$_3$ர தஸ்து$_2$ஷஸ் தஸ்மாது$_3$ச்யத ஈசாந:| அத$_2$ கஸ்மாது$_3$ச்யதே ப$_4$க$_3$வாந்?| யஸ் ஸர்வாந் ப$_4$ாவாநீக்ஷதி ஆத்மஜ்ஞாநம் நிரீக்ஷயதி யோக$_3$ம் க$_3$மயதி ஸ ஏவ தஸ்மாது$_3$ச்யதே ப$_4$க$_3$வாந்| அத$_2$ கஸ்மாது$_3$ச்யதே மஹேச்வர:?| யஸ் ஸர்வாந் லோகாந் ஸம்ப$_4$க்ஷஸ் ஸம்ப$_4$க்ஷயதி அஜஸ்ரம் ஸ்ருஜதி விஸ்ருஜதி வாஸயதி தஸ்மாது$_3$ச்யதே மஹேச்வர:| அத$_2$ கஸ்மாது$_3$ச்யதே மஹாதே$_3$வ:?| யஸ் ஸர்வாந் ப$_4$ாவாந் பரித்யஜ்ய ஆத்மஜ்ஞாநயோகைச்வர்யே மஹதி மஹீயதே தஸ்மாது$_3$ச்யதே மஹாதே$_3$வ:|"

['ருத்ரன் ஒருவனே' என்று ஏன் சொல்லப்படுகிறது? ருத்ரன் ஒருவனே இருந்தான்; இரண்டாவதற்கு வேறொருவருமில்லை; தன்

http://acharya.org

சக்தியாலே அவன் இவ்வுலகை ஆள்கிறான். ப்ராணிகளை ப்ரளய காலத்தில் ஸம்ஹரித்து (மறுபடியும்) ஸ்ருஷ்டித்து எல்லா உலகங்களையும் ரக்ஷிக்கிறான். அதனால் 'ருத்ரன் ஒருவனே' என்று சொல்லப்படுகிறது. 'ஈசாநன்' என்று ஏன் சொல்லப்படுகிறது? லோக ஸ்ருஷ்டியையும் நியமனத்தையும் செய்யும் மேலான சக்திகளால் அவன் உலகத்தை நியமிக்கிறான். சூரனே! பரமைச்வர்யயுக்தனே! இவ்வுலகிற்கு ஈசனும், ஸர்வஜ்ஞனும் நியந்தாவுமான உன்னை நோக்கி நிற்கிறோம். அதனால் 'ஈசானன்' என்று சொல்லப்படுகிறது. 'பகவாந்' என்று ஏன் சொல்லப்படுகிறது? எல்லாப் பொருள்களையும் அவன் காண்கிறான். தன் விஷயமான அறிவைக் காண்பிக்கிறான். தன்னுடன் சேர்ப்பிக்கிறான். அதனால் அதுவே 'பகவான்' என்று சொல்லப்படுகிறது. 'மஹேச்வரன்' என்று ஏன் சொல்லப்படுகிறது? அவன் எல்லா உலகங்களையும் பக்ஷணம் செய்கிறான். இடைவிடாமல் ஸ்ருஷ்டிக்கிறான், வளிக்கிறான். அதனால் மஹேச்வரன் என்று சொல்லப்படுகிறது. 'மஹாதேவன்' என்று ஏன் சொல்லப்படுகிறது? எல்லாப் பொருள்களையும் கவரியாமல் மேலான ஆத்மாநுபவமாகிற செல்வத்தில் ஆழ்ந்துகிடக்கிறான். அதனால் 'மஹாதேவன்' என்று சொல்லப்படுகிறது! என்று ருத்ரன், ஈசானன் முதலான பெயர்களின் பொருளையும் விவரிப்பதன்மூலம் ருத்ரனே ஸர்வகாரணன் என்று தெளிவுபடுத்துகிறது. ஆகையால் ருத்ரபரத்வமே இவ்வுபநிஷத்திலிருந்து தேறிநிற்கும் பொருள்.

ஸித்தாந்தம் (3)

இதுவும் தவறு. பரமாத்மாவின் இடதுபக்கத்தில் வேதசிரஸ்ஸான ஓங்காரம் இருப்பதாகச் சொல்லி அடுத்தபடியாக ப்ரணவம், ஸர்வவ்யாபி, அநந்தன், தாரம், ஸூக்ஷ்மம், சுக்லம், வைத்யுதம் பரப்ரஹ்மம், ருத்ரன், ஈசானன், பகவான், ஈச்வரன், மஹாதேவன் என்னும் பெயர்களை அந்த ஓங்காரத்தைக் குறித்துப் படிக்கிறது. ஐந்தாவது கண்டத்திலும் அந்த நாமங்களின் பொருளை விவரிப்பதன் மூலம் ப்ரணவத்தின் பெருமையைப் பேசுகிறது. "ருத்ராதி நாமங்களின் பெருமையைச் சொல்லும்போது ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளையும் உரைத்திருக்கிறதாகையால் இது ப்ரணவத்தின் பெருமையை மட்டும் உரைப்பதாகச் சொல்லுவது பொருந்தாது; ஆகையால் இவை ருத்ரபரமேயாகும்" என்று பூர்வபக்ஷிகள் வாதிக்கக்கூடும். அது சரியன்று. "அத₂ கஸ்மாது₃ச்யத ஓங்கார:?

http://acharya.org

யஸ்மாது3ச்சார்யமாண ஏவ ஸர்வம் ஶரீரமூர்த்4வமுந்நாமயதி தஸ்மாது3ச்யத ஓங்கார:'' [அது ஏன் ஓங்காரமென்று சொல்லப்படுகிறது? உச்சரிக்கும்போதே சரீரம் முழுவதையும் மேலே கிளப்புகிறதாகையாலே ஓங்காரம் என்று சொல்லப்படுகிறது.] என்று தொடங்கி, ஓங்காரம், ப்ரணவம், ஸர்வவ்யாபி, அநந்தன், தாரம், ஸூக்ஷ்மம் சுக்லம், வைத்யுதம், பரப்ரஹ்மம் என்னும் ஒவ்வொரு நாமத்தையும் விவரிக்கும்போது "உச்சார்யமாண ஏவ" என்னும் பதத்தைப் பிரயோகிப்பதன் மூலம் இங்கு சொல்லப்படுவது ப்ரணவத்தின் நாமமும் பெருமைகளுமே என்று விளக்குகிறது வேதம். இதிலிருந்து அடுத்தபடியாகப் படிக்கப்படும் ருத்ரன், ஈஶானன் முதலான நாமங்களும், அவற்றின் பொருளும் ப்ரணவத்தைக் குறித்தே சொல்லப்படுகின்றன என்பது தெளிவு. ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகள் ஓங்காரத்திற்குப் பொருந்துமோ என்னில்:

''ஓங்காரஶ்சாத2ஶப்3த3ஶ்ச த்3வாவேதௌ ப்3ரஹ்மண: புரா।
கண்ட2ம் பி4த்வா ப்ரநிர்யாதௌ தஸ்மாந் மாங்க3ளிகாவுபௌ4॥''

[ஓங்காரமும், 'அத2' ஶப்தமும் ஆதிகாலத்தில் ப்ரஹ்மத்தின் கழுத்திலிருந்து வெளிப்பட்டன. அதனால் அவையிரண்டும் மங்களகரமானவை] என்கிறபடியே ஓங்காரத்தை உச்சரித்துக்கொண்டே ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைச் செய்கிறபடியால் அவ்வோங்காரத்திற்கும் ஜகத்காரணத்வாதிகள் படிக்கப்படுகின்றன. அன்றிக்கே ஓங்கார வாச்யமான ப்ரஹ்மத்துக்குள்ள ஜகத்காரணத்வம் முதலியவை ஓங்காரத்திலே உபசரிக்கப்படுவதாகவும் கொள்ளலாம். ஓங்கார வாச்யன் நாராயணனே என்பதை முன்பே நிர்ணயித்திருக்கிறோம். ஆக இங்குள்ள ருத்ராதிநாமங்களும், அவற்றின் நிர்வசனங்களும் ப்ரணவத்தின் பெருமையைப் பேசுகின்றனவாகையால் அது கொண்டு ருத்ர பரத்வம் ஸாதிக்கவொண்ணாது. அநந்தன் பகவான் என்னும் பகவந்நாமங்களையும் ஓங்காரத்தைக் குறித்துப் பிரயோகித்திருப்பதையும் நோக்கவேணும். இங்கு மேலுள்ள உபாஸனத்திற்கு அங்கமாக ஓங்காரம் படிக்கப்படுகிறதாகையால், அதன் பெருமையை விவரிப்பதும் பொருத்தமுள்ளதாகும்.

பூர்வபக்ஷம் (4)

"வ்ரதமேதத் பாஶுபதம்। அக்3நிரிதி ப4ஸ்ம। வாயுரிதி ப4ஸ்ம। ஜலமிதி ப4ஸ்ம। ஸ்த2லமிதி ப4ஸ்ம। வ்யோமேதி ப4ஸ்ம।

http://acharya.org

ஸர்வம் ஹ வா இத$_{3}$ம் ப$_{4}$ஸ்ம। மந இத்யேதானி சக்ஷூம்ஷி ப$_{4}$ஸ்மானி। அக்$_{3}$நிரித்யாதி$_{3}$னா ப$_{4}$ஸ்மானி க்$_{3}$ருஹீத்வாऽங்கா$_{3}$னி ஸம்ஸ்ப்ருசேத்। தஸ்மாத்$_{3}$ வ்ரதமேதத் பாசுபதம் பசுபாச விமோக்ஷாய ॥"

[பசுபதிஸம்பந்தமான வ்ரதம் இது: பஸ்மமே அக்னி: பஸ்மமே வாயு: பஸ்மமே ஜலம்: பஸ்மமே பூமி: பஸ்மமே ஆகாசம்: இது எல்லாம் பஸ்மமே. மநம் முதலிய எல்லா இந்திரியங்களும் பஸ்மமே. 'அக்நியும் பஸ்மமே' முதலான வாக்கியங்களை உச்சரித்துக் கொண்டு பஸ்மத்தை எடுத்துக்கொண்டு அங்கங்களைத் தொட வேண்டியது. ஆகையால் இந்தப் பசுபதி விரதமானது பசு பாச மாகிற ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவதற்காக ஏற்பட்டது.] என்று இவ்வுபநிஷத்தின் ஆறாவது கண்டத்தில் பசுபதியாகிற ருத்ரனை உபாஸிக்கவேண்டுமென்றும், பஸ்மத்தை தரிக்கவேண்டுமென்றும், ருத்ரனை உபாஸிப்பது மோக்ஷத்தைத் தருமென்றும் கோஷிக்கப்பட்டுள்ளது. ஆகையால் ருத்ரனே மோக்ஷமளிக்கும் பரமாத்மா என்பதே இவ்வுபநிஷத்தின் கருத்து என்னத் தட்டில்லை.

ஸித்தாந்தம் (4)

இங்கு ருத்ரனைக்குறித்து உபாஸனமும் அதற்கு அங்கமாக பஸ்மதாரணமும் விதிககப்படுவது உண்மையே. ஆனால் முதல் கண்டத்தில் உபதேசித்ததை அநுஸரித்து இங்கு விதிக்கப்படும் உபாஸனம் ருத்ரனுக்கு அந்தர்யாமியான பரமாத்மாவையே விஷயமாகக்கொண்டது என்று கொள்வதே சிறந்தது. மதுவித்யையில் தேவர்களைக் குறித்து உபாஸனம் செய்யவேண்டுமென்று விதிக்கப்படுகிறது. அவ்விடத்தில் தேவர்கள் விஷயமான உபாஸனத்தினால் மோக்ஷமடைய முடியாதாகையால் அந்த தேவர்களுக்கு அந்தர்யாமியான ப்ரமாத்மாவே உபாஸிக்கப்படுவதாகக் கொள்ளுகிறோம். ப்ரதர்த்தன வித்யையில் இந்திரன் "என்னை உபாஸிப்பாயாக. அதுவே உனக்கு மிகவும் சிறந்தது" என்று உபதேசிக்கிறான். கர்மவச்யனான இந்திரன் இப்படி உபதேசிப்பது எப்படி என்று சங்கித்து "பரமாத்மா தனக்கு அந்தர்யாமியாயிருப்பதாலே அப்படி உபதேசிக்கிறான். (என்னை உபாஸிப்பாயாக) என்றது எனக்கு அந்தர்யாமியான பரமாத்மாவை உபாஸிப்பாயாக என்றபடி" என்று இந்த்ரப்ராணாதிகரணத்திலே பகவான் பாதராயணர் பேசியருளினர். "இந்திரனும், தேவர்களும் ஸ்ருஷ்டிக்கப்பட்ட

http://acharya.org

வர்கள், கர்மவச்யர்கள், ஜீவர்கள் என்னும் காரணங்களால் அங்கு அப்படிக் கொள்ளுகிறோம். இங்கேவெளில், ருத்ரனுக்குக காரணத்வாதிகள் சொல்லப்படுகின்றனவாகையால் ருத்ரனே உபாஸ்யனுக உரைக்கப்படுவதாகக் கொள்ளலாமே எனில், தேவேந்த்ராதிகளைப்போல் ருத்ரனும் ஸ்ருஷ்டிக்கப்பட்டவனே என்பதும், கர்மவச்யனே என்பதும், பாபம் நீங்கப்பெறுதவன் என்பதும் பற்பல வேதவாக்யங்களில் பேசப்பட்டிருப்பதைக் காட்டியிருக்கிறோம். இங்கு சொல்லப்பட்டிருக்கும் காரணத்வாதிகளும் பரமாத்மா அந்தர்யாமியாயிருப்பதாலேயே என்று நிர்ணயித்திருக்கிறோம். ஆகையால் மதுப்ரதர்த்தநவித்யைகளிற்போல் இங்கும் ருத்ரனை சரீரமாகக்கொண்ட பரமாத்மாவே உபாஸிக்கப்படுகிறான் என்றே கொள்ளவேண்டும். இல்லையேல், "உதாம்ருதத்வஸ்யேசாந:" [மோக்ஷத்திற்கு ப்ரபு பரமபுருஷனே.] "நாந்ய: பந்தா வித்யதேயநாய" [பரமபுருஷனை உபாஸிப்பதைத் தவிர மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை] என்று முறையிடும் மறை வாக்யங்களெல்லாம் பொருளற்றதாகும். ஆகையால் இவ்வழியாலும் இங்கு ருத்ரபரத்வம் ஸித்திக்க வழியில்லை.

நிற்க: இவ்வுபாஸனத்தில் பஸ்மதாரணம் அங்கமாக விதிக்கப்பட்டிருப்பதால் அது எல்லா வித்யைகளிலுமே தரிக்கப்படவேண்டியதொன்று என்று சிலர் வாதிக்கிறார்கள். அது சரியன்று. இங்கு ருத்ரனுக்கு அந்தர்யாமியான பரமாத்மாவை உபாஸிப்பதால் ருத்ரனால் தரிக்கப்படும் பஸ்மத்தை தரிக்கும்படி விதித்தது. இதனால் மற்ற வித்யைகளிலும் இதை தரிக்கவேண்டுமென்றோ, ஸத்துக்கள் இதை ஆதரிக்கவேண்டுமென்றோ ஏற்பட்டுவிடாது. "ஸௌத்ராமணீ" என்னும் ஒரு யாக விசேஷத்தில் ஸுராபானம் செய்யவேண்டுமென்று "ஸுராக்ரஹாந் க்ருஹ்ணாதி" என்னும் வாக்கியத்தினால் விதிக்கப்பட்டது. இதுகொண்டு எல்லா யாகங்களிலும் ஸுராபானம் செய்யவேண்டுமென்றோ, ஸத்துக்கள் அனைவரும் கள்ளைக் குடிக்கவேண்டுமென்றோ எவராவது உரைப்பார்களா? ஸுராபானத்தைப் பஞ்சமஹாபாதகங்களில் ஒன்றாகவன்றோ ஸத்துக்கள் கருதுகின்றார்கள். அம்மாதிரியே பஸ்மதாரணமும் இந்த வித்யைக்கு அங்கமாயிருந்தபோதிலும் நல்லோர்களால் ஆதரிக்கப்படமாட்டாது. ஸ்ம்ருதி புராணாதிகளில் பற்பல வசனங்களும் பஸ்மதாரணத்தை நிஷேதித்தன.

"ஊர்த்$_4$வபுண்ட்$_3$ரம் ம்ருத்$_3$ா கார்யம் யதீநாஞ்ச விஶேஷத: ।
ப$_4$ஸ்மசந்த$_3$நக$_3$ந்த$_4$ாதீ$_3$ந் வர்ஜயேத்$_3$ யாவதா$_3$யுஷம் ॥"

[எல்லாருக்கும், விசேஷமாக ஸந்யாஸிகளுக்கும் ஊர்த்வபுண்ட்ரமானது மண்ணாலேயே தரிக்கத்தக்கது. பஸ்மம், சந்தநம் வாஸனை திரவியங்கள் முதலியவற்றை விலக்கவேண்டியது.] என்று வ்ருத்த வஸிஷ்ட ஸ்ம்ருதியிலும்,

"த்ரிபுண்ட்$_3$ரத$_4$ாரிணோ நித்யம் ப$_4$ஸ்மோத்$_3$தூ$_4$ளநதத்பரா: ।
ப$_4$விஷ்யத$_3$ த்ரயீப$_3$ாஹ்யா மித்$_2$யாஜ்ஞாநப்ரலாபிந: ॥"

[பஸ்மத்தைப் பூசிக்கொண்டும், த்ரிபுண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டும், பொய் அறிவைப் பிதற்றிக்கொண்டும் வேதபாஹ்யர்களாக ஆகக்கடவீர்கள்]

"ருஷீணாம் மாயயா ஸர்வமிதி ஸஞ்சிந்த்ய தத்ர வை ।
ஶஶாப தாந் ஜடாப$_4$ஸ்மமித்$_2$யாவ்ரதத$_4$ராம்ஸ் தத$_3$ா ॥"

[ரிஷிகளுடைய மாயையினாலேயே இக்காரியம் செய்யப்பட்டதென்றறிந்த கௌதமர் அவர்களை ஜடையையும், பஸ்மத்தையும், பொய்விரதத்தையும் தரிப்பவர்களாகும்படி சபித்தார்.] என்று ஆதித்ய வராஹ புராணங்களில் சொல்லப்பட்ட கௌதமசாபத்தாலும்,

"குலீநோ ப்$_3$ராஹ்மணோ வித்$_3$வாந் ப$_4$ஸ்மத$_4$ாரீ ப$_4$வேத்$_3$ யதி$_3$ ।
வர்ஜயேத் தாத்$_3$ருஶம் தே$_3$வி மத்$_3$யோச்சி$_2$ஷ்டக$_4$டம் யதா$_2$ ॥"

[தேவியே! நற்குலத்திற்பிறந்து ப்ராஹ்மணனாய் வித்வானுயிருக்கும் ஒருவன் பஸ்மத்தைத் தரித்தானுகில், அவனைக் கள்குடத்தைப் போல் விலக்கவேண்டும்.] என்று வராஹபுராணத்திலும்,

"ம்ருதை$_3$வ வைஷ்ணவ: குர்யாத் அலாபே$_4$ சந்த$_3$நேந வா ।
ந ப$_4$ஸ்மநா கதா$_3$சிச்ச ஊர்த்வ$_4$வபுண்ட்$_3$ரம் ஸமாசரேத் ॥"

[(வெள்ளை) மண்ணாலேயாவது, அது கிடைக்காவிடில் சந்தனத்தாலேயாவது வைஷ்ணவன் ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்கவேண்டும். பஸ்மத்தினுல் ஒருபோதும் ஊர்த்வபுண்ட்ரம் தரிக்கலாகாது.] என்று குண்டினப்ரோக்தமான க்ருஷ்ணமந்த்ரகல்பத்திலும்,

"தீ$_3$பாக்$_3$நிர் தீ$_3$பதைலஞ்ச பஸ்$_4$ம சாஸ்தி$_2$ ரஜஸ்வலாம் ।
ஏதாநி ப்$_3$ராஹ்மண: ஸ்ப்ருஷ்ட்வா ஸவாஸா ஜலமாவிஶேத் ॥"

http://acharya.org

[தீபாக்னி, தீபதைலம், பஸ்மம், எலும்பு, தூரஸ்த்ரீ ஆகிய இவை களைத் தொட்டாலுகில் ப்ராஹ்மணன் வஸ்த்ரத்துடன்கூடக் குளிக்க வேண்டும்.] என்று ஸங்கஸ்ம்ருதியிலும், "ந ப$_{4}$ஸ்மகேஶதுஷ கபாலாமேத்$_{4}$யாங்யதி$_{4}$திஷ்டேத்$_{3}$" என்று கௌதம ஸூத்ரத்திலும், "ப$_{4}$ஸ்மதுஷாதி$_{4}$ஷ்ட$_{2}$ாநம் பத$_{3}$ா பாத$_{3}$ஸ்ய ப்ரக்ஷாளநமதி$_{4}$ஷ்டாநஞ்ச வர்ஜயேத்" என்று ஆபஸ்தம்பஸூத்ரத்திலும் பஸ்மதாரண ஸ்பர்சாதிகள் நிஷேதிக்கப்பட்டனவன்றோ. ஆகையால் இங்கு விதிக்கப்படும் பஸ்மதாரணம் இவ்வுபாஸனத்திற்கு அங்கமே யொழிய ஸார்வத்ரிகம் [எங்கும் அநுஷ்டிக்கப்படவேண்டியது] அன்று என்றதாயிற்று. ஆகையால் இவ்வுபநிஷத்தில் சிவபரத்வ ஸங்கைக்கே இடமில்லை. இவ்வளவுக்குமேல் இதை விஷ்ணுபர மாக விவரிக்கும் உபப்ருஹ்மணங்களும் உண்டு.

"அத$_{2}$ர்வஶிரஸா சைவ நித்யமாத$_{2}$ர்வணா த்$_{3}$விஜா: |
ஸ்துவந்தி ஸததம் யே மாம் தேऽபி ப$_{4}$ாக$_{3}$வதா: ஸ்ம்ருதா: ||"

[எந்த ஆதர்வணத்விஜர்கள் தினந்தோறும் இடைவிடாமல் என்னை அதர்வசிரஸ்ஸால் துதிக்கிறார்களோ, அவர்களும் பாகவதர்களென்றே எண்ணத்தகுந்தவர்கள்.] என்று மஹாபாரதம் ஆச்வமேதிக பர்வத்தில் பகவானாலேயே இவ்வதர்வசிர உபனிஷத்து முழுவதும் தன்னையே சொல்லுவதென்று உணர்த்தப் பட்டது. ஓங்காரத்தைச் சொல்லும் நாமங்கள் தத்வாச்ரயனை ப்ரஹ்மத்தையும் சொல்லுகின்றன என்று கொண்டாலும் அந்த நாமங்களிலும் பல விஷ்ணுபரமாக இதிஹாஸ புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. "ருத்ரோ ப$_{4}$ஹுஶிரா ப$_{3}$ப்$_{4}$ரு:" "ஈஶாந: ப்ராணத$_{3}$: ப்ராண:" "ஆதி$_{3}$தே$_{3}$வோ மஹாதே$_{3}$வ:" "வீரோநந்தோ த$_{4}$நஞ்ஜய:" என்று ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் ருத்ர, ஈஶான, மஹாதேவ, அநந்தஶப்தங்களும், ஹரிவம்சத்தில் கைலாஸயாத்ரா ப்ரகரணத்திலுள்ள ருத்ரவாக்யங்களில்

"ஈஶஸ்த்வம் ஸர்வபூ$_{4}$தாநாம் ஈஶ்வரோऽபி ததோ ஹரே |
ப்$_{3}$ருஹத்த்வாத்$_{3}$ ப்$_{3}$ரும்ஹணத்வாச்ச தஸ்மாத்$_{3}$ ப்$_{3}$ரஹ்மேதி ஶப்$_{3}$தி$_{3}$த: ||

[ஹரியே! எல்லா பூதங்களுக்கும் நீயே ஈசன்; அதனாலேயே (அவர்களுக்கு) ஈச்வரனுமிருக்கிறாய். பெரிதாயிருப்பதாலும், (பிறரைப்) பெரிதாகச் செய்வதாலும் ப்ரஹ்மம் என்றும் சொல்லப் படுகிறாய்.] என்று ஈஶ, ஈஶ்வர, ப்ரஹ்மஶப்தங்களும் க்ருஷ்ணபர

http://acharya.org

மென்று காட்டப்பட்டன. ஆக, இக்காரணங்களால் இவ்வதர்வ சிரஸ் ருத்ரபரமன்று, பகவத்பரமே என்று நிலைநிறுத்தப்பட்டது.

அதர்வசிகா விசாரம்

பூர்வபக்ஷம்

அதர்வசிகோபனிஷத்தில் சிவனே ஸர்வகாரணனாகவும், உபாஸ்யனாகவும் உத்கோஷிக்கப்படுகிறான் என்பது ஸ்பஷ்டம். இவ்வுபனிஷத்தின் ஆரம்பத்தில் பிப்பலாதர், அங்கிரஸ், ஸநத்குமாரர் என்னும் மூவரும் அதர்வர் என்னும் ரிஷியையடைந்து "கிம் தத் த்$_4$யாநம் கோ வா த்$_4$யாதா கஸ்ச த்$_4$யேய:" [எந்த மந்திரத்தால் தியானம் செய்யவேண்டும்? தியானிப்பவனை எந்த தேவதா ரூபமாக தியானிக்கவேண்டும்? தியானிக்கப்படுபவன் எந்த தேவதை?] என்று கேள்வி கேட்டதாகவும், அவர் "ஓமித்யேதத் அக்ஷரம்...த்$_4$யாநம் த்$_4$யாயிதவ்யம்" ['ஓம்' என்னும் அக்ஷரமாகிற மந்திரத்தாலேயே தியானிக்கவேண்டும்] என்று தொடங்கி தியானிக்கப்படும் மந்திரமாகிற ஓங்காரத்தின் பெருமையைப் பேசிற்று முதல் கண்டத்தில். இரண்டாது கண்டத்தில்,

'ஸர்வகரணாநி மநஸி ஸம்ப்ரதிஷ்டா$_2$ப்ய த்$_4$யாநம் விஷ்ணு:। ப்ராணம் மநஸி ஸஹ கரணைஸ் ஸம்ப்ரதிஷ்டா$_2$ப்ய த்$_4$யாதா ருத்$_3$ர: மநஸி ப்ரவிலாபிதைரிந்த்$_3$ரியைஸ் ஸஹ ப்ராணமபி ஜீவமபி ॥ ப்ராணம் மநஸி ஸஹ கரணைர் நாத$_3$ாந்தே பரமாத்மநி ஸம்ப்ரதிஷ்டா$_2$ப்ய த்$_4$யாயீதேஶாநம் ப்ரத்$_4$யாயிதவ்யம் । ஸர்வமிதம் ப்$_3$ரஹ்மவிஷ்ணு ருத்$_3$ரேந்த்$_3$ராஸ் தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்$_3$ரியாணி ஸஹ பூ$_4$தை: ॥ ந காரணம் காரணாநாம் த்$_4$யாதா த்$_4$ாதா ப்$_3$ரஹ்மா காரண பூ$_4$தோऽபி த்$_4$யாதா ருத்$_3$ர இதி ॥ காரணம் து த்$_4$யேய: ஸர்வைஸ்வர்யஸம்பநஸ் ஸர்வேஶ்வர: ஶம்பு$_4$ராகாஶமத்$_4$யே த்$_4$யேய:॥ ...ஶிவ ஏகோ த்$_4$யேய: ஶங்கரஸ் ஸர்வமந்யத் பரித்யஜ்ய॥... ஏதாமதீ$_4$த்ய த்$_3$விஜோ க$_3$ர்ப்ப$_4$வாஸாத்$_3$ விமுச்யத இதி ॥

[எல்லா இந்திரியங்களையும் மனஸ்ஸில் நிலைநிறுத்தி விஷ்ணுரூபமான த்யானத்தைச் செய்யவேண்டும். ப்ராணனை மநஸ்ஸில் மற்ற இந்திரியங்களுடன் நிலைநிறுத்தி, (அப்படி) நிலைநிறுத்தப்பட்ட ப்ராணேந்திரியங்களையும் தன்னுடைய ஆத்மாவையும் ருத்ரனாக

http://acharya.org

தியானிக்கவேண்டும். ப்ராணன், மநஸ், இந்திரியங்கள் (ஜீவன்) ஆகியவைகளை ஓங்காரநாதத்தின் கடைசி மாத்திரைக்குப் பொருளான பரமாத்மாவிடத்தில் நிலைநிறுத்தி, தியானிக்கத் தகுந்தவனை ஈசானனை தியானிக்கவேண்டும். இந்திரியங்களும், பஞ்சபூதங்களும் ப்ரஹ்ம விஷ்ணுருத்ரேந்திரர்களும் ஆகிய இவையெல்லாம் பிறப்பையுடையவையாகின்றன. தாதாவாகிற ப்ரஹ்மாவும், த்யாதாவாகிற ருத்ரனும் காரணபூதராயிருந்தபோதிலும் ஜகத்காரண காரணர்களாக ஆவதில்லை. (அந்த ஜகத்காரண) காரணனே தியானிக்கத்தக்கவன். ஸர்வைச்வர்யத்துடன் கூடியவனும், ஸர்வேச்வரனுமான சம்பு ஹ்ருதயாகாசமத்தியில் தியானிக்கத்தக்கவன்...... மற்ற எல்லாவற்றையும் விட்டு சிவனை சங்கரன் ஒருவனே தியானிக்கத்தகுந்தவன். இந்த அதர்வசிகையை அத்யயனம் செய்யும் இருபிறப்பாளன் கர்ப்பவாஸத்திலிருந்து விடுபட்டு (ஸர்வபாபங்களிலிருந்தும்) விடுபடுகிறான்.] என்று இரண்டாவது கண்டத்தில் தியானம் விஷ்ணுரூபமானது, தியானிப்பவன் ருத்ரரூபியானவன் என்று தியானத்தையும், த்யாதாவையும் நிர்ணயித்து, தியானிக்கப்படும் தேவதை யார் என்னும் ப்ரச்னத்திற்கு பதிலாக 'ஈசானனை தியானிக்கவேண்டும்' என்று விதித்தது. ஈசான ஶப்தத்தினாலே பிரஸித்தனாயிருப்பவன் பரமசிவனே என்பது நிர்விவாதம். 'தியானிப்பவன் ருத்ரன்' என்று முதலில் சொல்லப்பட்டவனும், 'ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ரா:...... ஸம்ப்ரஸூயந்தே' என்று அடுத்தபடியாகப் பிறப்பை உடையவனாகச் சொல்லப்படும் ருத்ரன் வேறு; தியானிக்கப்படுபவனாக ஈசான ஶம்பு ஶிவ ஶங்கராதி ஶப்தங்களால் சொல்லப்படும் பரமசிவன் வேறு. ருத்ரனுக்குப் பிறப்பைச்சொல்லும் பற்பல வேதவாக்யங்களெல்லாம் இந்தத் தாழ்ந்த ருத்ரனைப்பற்றியவை; ப்ரஹ்மவிஷ்ணுருத்ரருக்குக் காரணபூதனாக இங்கு படிக்கப்படும் பரமசிவனைப்பற்றியவையல்ல. இந்தப் பரமசிவனே துரீய(நான்காவதான) ப்ரஹ்மம் என்றும் சொல்லப்படுகிறான். இவனே ப்ரஹ்மம், இவனிடமிருந்து பிறப்பதே ப்ரஹ்ம விஷ்ணுருத்ரேந்த்ராதிகளான உலகம் முழுவதும்.

நிற்க; இப்படி 'ஈசானனே தியானிக்கத்தக்கவன்' என்று விதித்த பிறகு, 'ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்திரர்களும் காரணபூதர்களாகவும், உபாஸிக்கத்தகுந்தவர்களாகவும் சிற்சில வேதவாக்யங்களில் உரைக்கப்படுகிறார்களே' என்னும் ஸந்தேஹம் எழ, அதற்கு பதிலளிக்கின்றன மேலுள்ள வாக்கியங்கள்:— அசேதனங்களான பூதேந்திரியங்களோடு வாசியற ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்திரர்களும்

http://acharya.org

பிறக்கிறார்கள்; ஆகையால் அவர்கள் ஜகத்தின் ஒவ்வொரு பகுதிக்குக் காரணபூதர்களாயிருந்தபோதிலும் ஸர்வகாரணர்களாகார்கள்; ஸர்வகாரணனே தியானிக்கத்தகுந்தவன்; அவன் யாரெனில், ஸர்வைச்வர்யஸம்பந்நனாய், ஸர்வேச்வரனான சம்புவே யாவான். அவனே ஹ்ருதயாகாசமத்தியில் தியானிக்கத்தகுந்தவன், மற்ற எல்லா தேவதைகளையும், ப்ரயோஜனங்களையும் விட்டு சிவசங்கராதிபதவாச்யனான அவனை ஒருவனையே தியானிக்கவேண்டும் என்று இப்படி விரிவாகவும் தெளிவாகவும் பதிலளிப்பதன் மூலம் பரமசிவனே பரமகாரணன் என்றும் முமுக்ஷுக்களால் உபாஸிக்கப்படுபவன் என்றும் தெளிவாக்குகிறது இவ்வுபநிஷத்து. ஆகையால் அதற்கு அனுகூலமாகவே மற்ற வேதவாக்கியங்களைப் பொருள்கொள்ளவேண்டும். "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:" முதலான வாக்கியங்களில் நாராயணனாகிற விஷ்ணு ப்ரஹ்மாவுக்கும், (தாழ்ந்த) ருத்ரனுக்கும் காரணனென்று சொல்லப்படுகிறான்; இவ்வுபநிஷத்தில் அந்த விஷ்ணுவுக்கும் பரமசிவன் காரணன் என்று சொல்லப்படுகிறான் என்று கொள்ளலாம். இப்படிக் கொள்வது எல்லா வாக்கியங்களுக்கும் பொருந்தியிருக்கும். "ந காரணம்..." என்னும் வாக்கியத்தில் ப்ரஹ்மாவையும், ருத்ரனையும் சொன்னது விஷ்ணுவுக்கும் உபலக்ஷணம். "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ரா:" என்று விஷ்ணுவையும் உத்பத்தியுள்ளவனாகவே படித்ததன்றோ. "ந காரணம்" என்று தொடங்கும் வாக்கியத்தைப் பலர் "ந காரணம் காரணாநாம் தாதா த்யாதா" என்று இவ்வளவே படிக்கிறார்கள். அப்படிப் பாடமானபோது ஸர்வகாரணனாய், தாரகனாய், ஆதிஸங்கல்பகர்த்தாவாயுள்ள பரமாத்மா (ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்திரர்களைப் போல்) பிறப்பதில்லை" என்று பொருள். ஆக, இவ்வுபநிஷத்தில் விஷ்ணுவுக்குப் பிறப்பைச் சொல்லியிருப்பதாலும், ஈசாந சம்பு சிவசங்கராதிபதவாச்யனே விஷ்ணுவுக்கும் காரணபூதன் என்றும், முமுக்ஷுக்களால் உபாஸிக்கப்படுபவன் என்றும் உத்கோஷிக்கப்படுவதாலும் சிவனே ஸர்வகாரணன் என்று தேறிநிற்கிறது.

ஸித்தாந்தம்

இது வேதாந்த வாக்கியங்களின் பரஸ்பர பலாபலங்களை அறியாதார் பேச்சாகும். இவ்வுபநிஷத்தில் ப்ரஹ்மவிஷ்ணுருத்ரர்களுக்கு மேற்பட்டவனாக ஒருவன் சொல்லப்படுகிறான் என்பது உண்மை. ஆனால் அவன் யார் என்பதை நிர்ணயிப்பதிலேயே

http://acharya.org

விவாதம். முதல் கண்டத்தில் அவ்விஷயம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஓங்காரத்துக்கு நான்கு மாத்திரைகளுள்ளன என்பதும் அவற்றின் தேவதைகள் யாவர் என்பதும் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன.

"ப்ரத₂மா ரக்தபீதா மஹத்₃ ப்₃ரஹ்மதை₃வத்யா |
த்₃விதீயா வித்₃யுமதீ க்ருஷ்ணா விஷ்ணுதை₃வத்யா
வித்₃யுமதீதி ஸ்ம்ருதா |
த்ருதீயா ஶுபா₄ ஶுக்லா ருத்₃ரதை₃வத்யா |
யாऽவஸாநேऽஸ்ய சதுர்த்₂யர்த்த₄மாத்ரா வித்₃யுமதீ ஸர்வ-
வர்ணா புருஷதை₃வத்யா ||"

[(ஓங்காரத்தின்) முதலாவது அர்த்தமாத்ரையாகிற அகாரம் சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறத்தையுடையது; பெருமையை குணமாகக் கொண்ட ப்ரஹ்மாவை தேவதையாகக்கொண்டது. இரண்டாவது அர்த்தமாத்ரையாகிற உகாரம் மிகுந்த ஒளியையுடையதாய், கறுப்பு நிறத்தையுடையதாய் விஷ்ணுவை தேவதையாகக்கொண்டதாக எண்ணப்படுகிறது. மூன்றாவதான மகாரம் சுபமானதாய், வெளுத்ததாய், ருத்ரனை தேவதையாகக்கொண்டதாய் விளங்குவது. முடிவிலுள்ள நான்காவது அர்த்தமாத்ரையானது மிகுந்த ஒளியுடையதாய் எல்லா வர்ணங்களையுமுடையதாய், புருஷனை தேவதையாகக் கொண்டதாய் விளங்குவது.] என்று ஓங்காரத்தின் நான்காவது அர்த்தமாத்ரைக்கு தேவதை புருஷசப்தவாச்யன் என்று ஓதிற்று; நான்காவது அர்த்தமாத்ரை பரமாத்மாவைச் சொல்லுவதென்பது பல சுருதிவாக்யங்களிலும், இந்த உபனிஷத்திலேயே இரண்டாவது கண்டத்தில் "நாதா₃ந்தே பரமாத்மநி" [ப்ரணவநாதத்தின் கடைசிமாத்திரைக்குப் பொருளான பரமாத்மாவினிடத்தில்] என்னும் பதங்களிலும் பிரஸித்தம். புருஷசப்தவாச்யன் வாஸுதேவனே என்பதைப் பற்பல ச்ருதிஸ்ம்ருதிதிஹாஸ புராண வாக்கியங்களைக்கொண்டு நிர்ணயித்திருக்கிறோம். ஆகையால் இங்குப்ரஹ்ம விஷ்ணுருத்ரர்களுக்குக் காரணமாகப் படிக்கப்படுபவன் புருஷசப்தவாச்யனை நாராயணனே என்று முதல் கண்டத்திலிருந்தே விளங்குகிறது. இப்படி உபக்ரமத்தில்(ஆரம்பத்தில்)பரமபுருஷனே பரம்பொருள் என்று ஸித்தித்தவளவில், இரண்டாவது கண்டத்திலுள்ள ஶம்புஶிவாதி ஶப்தங்கள் இவனையே குறிக்கின்றனவென்பது தெளிவு. இங்கு விஷ்ணுவுக்கும் காரணனாகப் புருஷசப்தவாச்யனைப்

http://acharya.org

படித்திருப்பது எப்படியென்னில்: "மத்யே விரிஞ்ச கிரீசம் ப்ரத₂மாவதார:" என்கிறபடியே விஷ்ணுமூர்த்தியானது நாராயணனுடைய முதல் அவதாரமானதால், அவ்விஷ்ணுவிற்கும் காரணமாகப் பரமபுருஷனைச் சொல்லலாம். இனி இரண்டாவது கண்டத்திலிருந்தும் சிவபரத்துவம் ஸித்திக்கவழியில்லை என்பதைக் காட்டுவோம்.

இரண்டாவது கண்டத்தில், முதலில் த்யானம் விஷ்ணுரூபமானது என்று சொல்லப்பட்டது. இதிலிருந்து விஷ்ணுஸ்வரூப த்யானமே இங்கு செய்யப்படுகிறது என்பது தெளிவு. அடுத்தபடியாக தியானிப்பவன் ருத்ரரூபி என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து தியானிப்பவன் தன்னை ருத்ரனாக தியானிக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. அடுத்தபடியாக "ப்ராணம் மநஸி ஸஹ கரணைர் நாதா₃ந்தே பரமாத்மனி ஸம்ப்ரதிஷ்டா₂ப்ய த்₄யாயீதேசாநம் ப்ரத்₄யாயிதவ்யம்" [ப்ராணேந்த்ரியங்களை ஓங்காரத்தின் கடைசி மாத்திரைக்குப் பொருளான பரமாத்மாவிடத்தில் நிலைநிறுத்தி, தியானிக்கத்தகுந்தவனான ஈசானனை தியானிக்கக்கடவன்.] என்னும் வாக்கியத்தில் தியானிக்கப்படுபவன் யார் என்று விவரிக்கிறது. இதில் முதலில் ஓங்காரத்தின் கடைசி மாத்திரைக்குப் பொருளானவனே பரமாத்மா என்று சொல்லுவதன் மூலம் முதல் கண்டத்தில் புருஷஸப்தவாச்யனாகச் சொல்லப்பட்ட வாஸுதேவனே பரமாத்மா என்று காட்டுகிறது. இதற்கு அனுகுணமாகவே அடுத்து வரும் ஈசானசப்தத்துக்குப் பொருள்கொள்ளவேண்டும். ஆகையால் இங்கு தியானிக்கத்தக்கவனாக உரைக்கப்படுபவன் நாராயணனே என்பது தெளிவு. "ஈசாந: ப்ராணத₃: ப்ராண:" முதலானவிடங்களில் பகவானும் ஈசானசப்தத்தால் குறிக்கப்பட்டிருக்கிறான் என்பதை மறைக்கமுடியாது.

இப்படிப் புருஷஸப்தவாச்யனும், ஸர்வேச்வரனுமான பரமாத்மாவையே உபாஸிக்கவேண்டும் என்று சொன்னளவில், இரண்டு கேள்விகள் எழுகின்றன. ப்ரஹ்மருத்ராதிகளை ஏன் உபாஸிக்கக் கூடாது? என்பது ஒரு கேள்வி. பரமாத்மாவே உபாஸிக்கத் தகுந்தவனாகில், அதிநிஹீனரான நாம் அவனை உபாஸிக்கலாம்படி எளியனாயிருப்பானேன்? அல்லது உபாஸிக்க அரிதாம்படி நமக்கு எட்டாதவனாயிருப்பானேன்? என்பது இரண்டாவது கேள்வி. இவ்விரண்டு கேள்விகளுக்கும் ஒரே வாக்கியத்தில் பதில் சொல்லுகிறது "ஸர்வமிதம் ப்₃ரஹ்மவிஷ்ணுருத்₃ரேந்த்₃ராஸ் தே ஸர்வே

http://acharya.org

ஸம்ப்ரஸூயந்தே...'' என்னும் அடுத்த வாக்கியத்தில், ''அசேதனமான பூதேந்த்ரியாதிகளோடு வாசியற ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ரர்கள் பிறக்கிறார்கள்'' என்று இவ்வாக்கியத்தின் பொருள். இதில் மேலே எழுந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் தெரிவிக்கப்பட்டதாகிறது. ப்ரஹ்மருத்ரேந்திரர்கள் பிறப்பை உடையவர்களாகையாலே உபாஸிக்கத்தகுந்தவர்களல்லர் என்பது முதற் கேள்விக்கு பதில். ''பரமாத்மாவான நாராயணன் ஸர்வஸ்மாத் பரனாயிருந்தபோதிலும், இந்த ஸம்ஸாரி சேதனரைத் திருத்துவதற்காகவும், அவர்கள் தன் விஷயத்தில் அத்வேஷாதிகளை உடையரானபோது அவர்களுக்கு எளியனாவதற்காகவும் விஷ்ணுவாகப் பிறக்கிறான். புருஷோத்தமன் தன்னால் பிறப்பிக்கப்பட்ட ப்ரஹ்மருத்ரர்களோடும், அசேதனமான பூதேந்த்ரியாதிகளோடும் ஒரு நீராகப் பிறக்கிறான். என்ன நீர்மை! என்ன நீர்மை!'' என்பது இரண்டாவது கேள்விக்கு பதில். மறைபொருளாகவே, சிலர் மயங்குவதற்காக இவ்விரண்டு பதில்களையும் ஒரே வாக்கியத்தில் சுருங்கச் சொல்லியிருக்கிறது. இதையறியாதார் ப்ரஹ்மருத்ரர்களோடு விஷ்ணுவுக்கும் பிறப்பைச் சொல்லிவிட்டது வேதம் என்று ஆநந்தக் கூத்தாடுகிறார்கள். தாங்கள் கொண்டாடும் சிவனுக்குப் பற்பல வேதவாக்கியங்களில் தெளிவாகப் பிறப்பும், தாழ்வும் சொல்லப்பட்டிருப்பதையும், ராமக்ருஷ்ணாதிகளுக்கு இதிஹாஸபுராணாதிகளில் எவ்வளவோ இடங்களில் பிறப்பு சொல்லப்பட்டிருப்பதையும் மறந்து விடுகிறார்கள். ராமக்ருஷ்ணாதிகளுக்கு எம்மாதிரியான பிறப்பு உள்ளதோ அம்மாதிரியான பிறப்பே விஷ்ணுவுக்கும் இவ்வாக்கியத்திலிருந்து ஏற்படும் என்பதை விரிவாக நிரூபிப்போம் இனி.

'' ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ரர்கள் பிறக்கிறார்கள் '' என்று இங்கு வாக்கியமிருக்கும்போது, ப்ரஹ்மருத்ரேந்திரர்கள் தாழ்வான பிறப்பையுடையவர்களாகையாலே உபாஸிக்கத்தக்கவர்களல்லர் என்றும், பரமாத்மா விஷ்ணுவாகிற அவதாரரூபமான பிறப்பையடைந்து ஸௌலப்யனாயிருக்கிறானாகையாலே உபாஸிக்கத் தகுந்தவன் என்றும் இப்படிப் பிரித்துப் பொருள் கொள்வது நியாய விருத்தமல்லவா என்னும் ஸந்தேஹம் எழக்கூடும். இது நியாயமான ஸந்தேஹமே. ப்ரபலமான ப்ரமாணங்களிருப்பதாலேயே இப்படிப் பொருள் கொள்ளுகிறோம் என்பதைக் காட்டுவோம். ''பரமாத்மாவான ஸர்வேச்வரனையே த்யானிக்கவேண்டும்'' என்று

http://acharya.org

சொல்லிற்று முதல் வாக்கியம். இது விதிவாக்கியம். இதில் சொல்லப்படும் அர்த்தம் பொருத்தமுள்ளதே என்பதை விவரிப்பதற்காகத் தோன்றியது "ஸர்வமிதம்...ஸம்ப்ரஸாதயந்தே" என்னும் வாக்கியம். இது அர்த்தவாதவாக்கியம். மற்ற வேதவாக்கியங்களில் மிகப் ப்ரஸித்தமான சில அர்த்தங்களைக் காட்டுவதன் மூலம் முதலிற்சொன்ன விதிவாக்கியம் பொருத்தமுள்ளதே என்பதை நிரூபிப்பதற்காகத் தோன்றியது இந்த வாக்கியம்; தானாகச் சில அர்த்தங்களை விதிப்பதற்காகத் தோன்றியதன்று இது. ஆகையால் "ஸர்வமிதம்..." என்னும் இவ்வாக்கியத்தை மற்ற வேதவாக்கியங்களுக்கு அனுகுணமாகவே பொருள்கொள்ளவேண்டும். அப்படிப் பார்க்கும்போது ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்திரர்களுக்கு வேத வாக்கியங்களில் எம்மாதிரியான பிறப்பு சொல்லப்பட்டிருக்கிறது என்று ஆராய நேர்கின்றது. "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே நாராயணாத் ருத்ரோ ஜாயதே நாராயணாதிந்த்ரோ ஜாயதே" முதலான வாக்கியங்களில் நாராயணனிடமிருந்து ப்ரஹ்மருத்ரேந்திரர்களுக்குப் பிறப்பும் "அநபஹத பாப்மா வாஹம்" முதலான மற்றும் பல வாக்கியங்களில் பாபம் நீங்கப்பெறாமை முதலிய தாழ்ச்சிகளும் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதிலிருந்து இவர்கள் உபாஸிக்கத்தகுந்தவர்களல்லர் என்பதை ஸ்தாபிப்பதற்காகவே "ஸர்வமிதம்" என்னும் இவ்வாக்கியத்தில் அவர்களுடைய பிறப்பு படிக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம்.

விஷ்ணுவுக்கோவெனில் இம்மாதிரியான பிறப்பும் தாழ்ச்சிகளும் ஒரு வேதவாக்கியத்திலும் சொல்லப்படவில்லை என்பதையும், ஸர்வகாரணத்வம் முதலான பல பெருமைகள் அவனுக்குப் படிக்கப்படுகின்றன என்பதையும் காண்கிறோம். எவ்வகையிலாவது பகவானுக்குப் பிறப்பு சொல்லப்பட்டிருக்கிறதா என்று ஆராயும்போது ஒருவிதமான பிறப்பு அவனுக்கும் உண்டு என்று வேதங்கள் விளம்புவதைக் காண்கிறோம். பரமபுருஷனையே ப்ரதிபாதிப்பதான புருஷஸூக்தம் "அஜாயமானோ பஹுதா விஜாயதே தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்" [பிறப்பற்றவனாயிருந்தும் பலபடியாகப் பிறக்கிறான் பரமபுருஷன். மிகச் சிறந்த புத்திமான்களே அவனுடைய பிறப்பின் ரஹஸ்யத்தை அறிகிறார்கள்.] என்றும்,

"த்ரிபாதூர்த்வ உதைத் புருஷ: பாதோஸ்யேஹாபவாத் புந:।
ததோ விஷ்வங் வ்யக்ராமத் ஸாஶநாநஶநே அபி॥"

http://acharya.org

[பரமபுருஷன் மூன்று வியூஹத்தை உடையவனாய்க்கொண்டு ஸங்கல்பித்தான். அவனுடைய ஒரு வியூஹமான அநிருத்தன் மறுபடியும் இவ்வுலகில் (விஷ்ணுவாகப்) பிறந்தான். அதன் பிறகு ஸகலஜீவராசிகளுக்குக் காவலும் உலகையெல்லாம் (அவதாரம் செய்வதன் மூலம்) வியாபித்தான்.] என்றும் அவதாரரூபமான பிறப்பே அவனுக்கு உண்டு என்று சொல்லியிருப்பதைக் காண்கிறோம். ஆகையால் இங்கு விஷ்ணுவுக்குச் சொல்லப்பட்டிருக்கும் பிறப்பு அவதாரரூபமானதே என்பதையும், அவனுடைய ஸௌலப்யமாகிற ஏற்றத்தை உணர்த்துவதற்காகவே அது இங்கு உரைக்கப்படுகிறது என்பதையும் அறிகிறோம்.

பரமாத்மாவுக்குத் தன்னிச்சையாலே எடுக்கும் பிறப்பு உண்டென்றும், கர்மஸம்பந்தத்தினால் வரும் ப்ராக்ருதமான பிறப்பு இல்லையென்றும் பற்பல ச்ருதிஸ்ம்ருதிஇதிஹாஸ புராணங்கள் உரைக்கின்றன.

"யுவா ஸுவாஸா: பரிவீத ஆகா$_3$த்
ஸ உ ஶ்ரேயாந் ப$_4$வதி ஜாயமாந:"

[யுவாவாய், அழகிய வஸ்திரத்தை உடையவனாய், ஸூரிகளால் சூழப்பெற்றவனாய்ப் பரமபுருஷன் வந்தான். அவன் பிறக்கப் பிறக்கவே பெரியோனாகிறான்] என்றும்,

"பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ
நாவேத$_3$விந் மநுதே தம் ப்$_3$ருஹந்தம்"

[ஸர்வலோகபிதாவானவன் தன் பிள்ளையொருவனைப் பிதாவாகக் கொண்டு பல பிறவிகள் பிறக்கிறான். வேதமறியாதவன் அவனைப் பெரியோனென்று அறியமாட்டான்.] என்றும் வேதங்களாலும்,

"ப$_3$ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந |
அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூ$_4$தாநாமீஶ்வரோऽபி ஸந் |
ப்ரக்ருதிம் ஸ்வாமதி$_4$ஷ்டா$_2$ய ஸம்ப$_4$வாம்யாத்மமாயயா ||
பரித்ராணாய ஸாதூ$_4$நாம் விநாஶாய ச து$_3$ஷ்க்ருதாம் |
த$_4$ர்மஸம்ஸ்தா$_2$பநார்த்தா$_2$ய ஸம்ப$_4$வாமி யுகே$_3$ யுகே$_3$ ||
ஜந்ம கர்ம ச மே தி$_3$வ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: ||
த்யக்த்வா தே$_3$ஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந ||"

http://acharya.org

[அர்ஜுநனே! (ப்ராக்ருதனை) உனக்குப்போல் (அப்ராக்ருதனை) எனக்கும் பல ஜந்மங்கள் கடந்துவிட்டன. பிறப்பற்றவனுகவும், அழிவற்றவனுகவும், பூதங்களுக்கு ஈச்வரனுகவுமிருந்த போதிலும் என்னுடைய ஸ்வபாவத்தைக் கைக்கொண்டு, என் ஸங்கல்பத்தாலே நான் பிறக்கிறேன். ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும் வைதிகதர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் யுகந்தோறும் பிறக்கிறேன். என்னுடைய அப்ராக்ருதமான பிறப்பையும் சேஷ்டிதங்களையும் எவன் இப்படி உண்மையாக அறிகிருனே, அவன் தேஹத்தை விட்டு மறுஜந்மம் அடையான்; என்னை அடைகிருன்.] என்று கீதையில் கண்ணனுலும்.

''ந பூ₄தஸங்க₄ஸம்ஸ்தா₂நோ தே₃ஹோऽஸ்ய பரமாத்மந:''

[இந்தப் பரமாத்மாவினுடைய திருமேனி பஞ்சபூதங்களுடைய சேர்க்கையால் உண்டானதன்று.] என்றும்,

''ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்திர் மாம்ஸமேதோ₃ऽஸ்தி₂ஸம்ப₄வா''

[அவனுக்கு மாம்ஸம், மஜ்ஜை, எலும்பு இவைகளால் உண்டான ப்ரக்ருதிஸம்பந்தமுள்ள உடம்பு கிடையாது.] என்றும்,

''இச்சா₂க்₃ருஹீதாபி₄மதோருதே₃ஹ:''

[தன்னிச்சையினுல் எடுக்கப்பட்ட பல இஷ்டதேஹங்களை உடையவன்.] என்றும்,

''ஶரீரக்₃ரஹணம் வ்யாபிந் த₄ர்மத்ராணய கேவலம்''

[ஸர்வவ்யாபியே! நீ சரீரமெடுப்பது தர்மஸம்ரக்ஷணத்திற்காகவே.] என்றும் பராசராதி ரிஷிகளாலும் இவ்விஷயம் கீர்த்திக்கப்பட்டது. ஸ்ரீராமாயண பாரத பாகவதாதி ஸாத்விக சாஸ்த்ரங்களெல்லாம் பகவானுடைய பிறப்பின் பெருமையைப் பேசுவதற்காகவே ஏற்பட்டவை. இவ்வவதாரங்களுக்கெல்லாம் மூலமாய், ரக்ஷண தர்மத்தை நடத்துவதாய், ப்ரஹ்மருத்ரர்களுக்கு நடுவே படிக்கப்படுவதாயுள்ள ப்ரதமாவதாரமே விஷ்ணுரூபியாய் விளங்குவது என்பதை ''**விஷ்ணுத்வமுபஜக்₃மிவாந்**'' [விஷ்ணுவாயிருக்கும் தன்மையை அடைந்தான்.] என்பது முதலான பல ப்ரமாணங்கள் பேசியிருக்கின்றன. ஆகையால் ''ஸர்வமிதம்'' என்னும் வாக்கியத்தில் விஷ்ணுவுக்குச் சொல்லப்படும் பிறப்பு அவதாரரூபமானதே என்பது தெளிவு.

http://acharya.org

ஆக, இதுவரையில் "ஸர்வமிதம்" என்னும் வாக்கியம், "த்யாயீதேசாநம்" என்னும் விதிவாக்யத்தை விவரிக்கும் அர்த்தவாத வாக்கியமாயிருக்கையால் ச்ருத்யந்தரங்களைக்கொண்டே இதற்குப் பொருள்கொள்ளவேண்டுமென்றும், அப்படிப் பொருள்கொள்ளும்போது, "ப்ரஹ்மருத்ரேந்த்ரர்கள் கர்மஸம்பந்தத்தால் வரும் பிறப்பை உடையவர்களாகையால் உபாஸிக்கத்தகுந்தவரல்லர்; பரமாத்மாவானவன் விஷ்ணுரூபியாய் அவர்களோடு ஒருநிரைக அவதரித்து ஸுலபனாயிருக்கிறானையால் அவனே உபாஸிக்கத் தகுந்தவன்" என்னும் பொருளே இவ்வாக்கியத்திலிருந்து ஏற்படும் என்றும் நிரூபிக்கப்பட்டதாயிற்று. அடுத்தபடியாக மற்றும் ஒரு ஹேதுவாலும் இங்கு விஷ்ணுவுக்குச் சொல்லப்படும் பிறப்பு தாழ்ந்ததன்று என்பதை நிரூபிப்போம்.

ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்திரர்களுக்குப் பிறப்பைச் சொல்லும் "ஸர்வமிதம்" என்னும் இவ்வாக்கியத்திற்கு அடுத்த வாக்கியம் "**ந காரணம் காரணாநாம் த்₄யாதா தா₄தா ப்₃ரஹ்மா காரணபூ₄தோபி த்₄யாதா ருத்₃ர இதி**" [தியானிப்பவனாகச் சொல்லப்பட்ட ருத்ரனும், 'தா₄தா' என்னும் பெயரையுடைய ப்ரஹ்மாவும் காரணபூதராயிருந்தபோதிலும் காரணகாரணர்களாவதில்லை] என்று உரைக்கிறது. சிலர் இவ்வாக்கியத்தை "ந காரணம் காரணாநாம் தா₄தா த்₄யாதா" என்னும் இவ்வளவே ஓதுகிறார்கள். அப்போதும் 'தா₄தா' என்னும் சப்தம் ப்ரஹ்மாவிடத்திலேயே ரூடியையுடையதாகையாலே பிரமனைச்சொல்லும்; 'த்₄யாதா' என்னும் பதம் 'த்₄யாதா ருத்₃ர:' என்று இவ்வுபநிஷத்திலேயே ருத்ரனைச் சொல்லுவதாக விவரிக்கப்பட்டிருக்கையால் ருத்ரனைச் சொல்லும். ஆகையால் "ப்ரஹ்மாவும் ருத்ரனும் காரணகாரணர்களல்லர்" என்றே இவ்வாக்கியத்திற்குப் பொருள் ஏற்படும். இங்கு விஷ்ணுவைச் சொல்லாமலிருப்பதை நோக்கவேண்டும். இதிலிருந்தும் முந்திய வாக்கியத்தில் விஷ்ணுவுக்குப் பிறப்பைச் சொன்னது தாழ்ச்சிக்காகவன்று என்பதை உணரலாம். இங்கு இந்திரனையும் சொல்லவில்லையே எனில்; இந்திரன் ஜீவனென்பது ஸுப்ரஸித்தமாகையாலும் நிர்விவாதமாகையாலும் அவனைச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று விட்டிருக்கக்கூடும். ஆனால் விஷ்ணுவின் விஷயம் அப்படியன்று. ஆகையால் விஷ்ணுவின் பிறப்பு அவதாரரூபமானது என்னும் காரணத்தாலேயே விட்டிருக்கவேண்டும். "**தா₄தா-தாரகனாய், த்₄யாதா-ஆதியில் ஸங்கல்பிப்பவனாய், காரணம் காரணாநாம்-ஸர்வகாரணனாயுள்ள பரமாத்மா, ந (ஸம்ப்ரஸூயதே)**

http://acharya.org

பிறப்பதில்லை." என்று இவ்வாக்கியத்திற்குப் பொருள் கொள்ளலாமே எனில்: இப்படிப் பொருள் கொள்வதில் பல தோஷங்களுண்டு. 'தா₄தா' என்னும் பதத்துக்கு ப்ரஹ்மாவின் முன்ன ப்ரஸித்தியை விடவேண்டியிருப்பது ஒரு தோஷம். 'த்₄யாத₄ருத்₃ர:' என்று இவ்வுபநிஷத்திலேயேயுள்ள விவரணத்திற்கு விரோதமாகப் பொருள்கொள்வது இரண்டாவது தோஷம். முன் வாக்கியத்திலுள்ள "ஸம்ப்ரஸூயந்தே" என்னும் பதத்தை 'ஸம்ப்ரஸூயதே' என்று ஒருமையாக்கிச் சேர்த்துப் பொருள் கொள்ளவேண்டியிருப்பது மூன்றாவது தோஷம். ஆகையால் நம்மால் விவரிக்கப்பட்ட பொருளே பொருந்தியது. ஆகையால் இவ்வாக்கியத்திலிருந்து விஷ்ணுவுக்குக் கர்மஸம்பந்தத்தினாலுண்டாகும் தாழ்ந்த பிறப்பு ஏற்படாது.

"கஸ்ய த்₄யேய:" [தியானிக்கப்படும் தேவதை யார்.] என்னும் கேள்விக்கு பதிலாக "த்₄யாயீதேஶாநம்" [ஈசானனை தியானியுங்கள்] என்று உரைத்திருக்கிறபடியால் ஈசானசப்தவாச்யனான சிவனே இங்கு தியானிக்கப்படுபவனான காரணனாகிறான் என்று சிலர் சொல்லுவதும் தவறு. முதற் கண்டத்திற்கு அனுகுணமாகப் பொருள்கொள்ளும்போது இங்கு படிக்கப்படும் ஈசானன் புருஷசப்தவாச்யனான வாஸுதேவனேயாகவேண்டும் என்பதை நிரூபித்திருக்கிறோம். மேலும், "கஸ்ய த்₄யேய:" என்னும் ப்ரஶ்னத்திற்கு "த்₄யாயீதேஶாநம்" [ஈசானனை தியானியுங்கள்] என்னும் வாக்கியம் பதிலன்று. "ஸர்வமித₃ம்" என்னும் வாக்யத்திற்கு அடுத்ததான "காரணம் து த்₄யேய: [காரணவஸ்துவே தியானிக்கத்தகுந்தது] என்னும் வாக்கியமே ப்ரச்னத்திற்குப் பொருந்தியிருக்கிறதாகையால் பதிலாயிருக்கத்தகுந்தது. ஆக, 'தியானிக்கப்படுபவன் யார்?' என்ற கேள்விக்கு 'காரணவஸ்துவே தியானிக்கத்தகுந்தது' என்று பதில் சொல்லப்பட்டதாயிற்று. முந்திய வாக்கியத்தில் 'ந காரணம் காரணாநாம் தா₄தா த்₄யாதா₄' [ப்ரஹ்மாவும் ருத்ரனும் காரணகாரணர்களன்று.] என்று சொல்லி, அடுத்த வாக்கியத்தில் 'காரணந்து த்₄யேய:' [காரணவஸ்துவே தியானிக்கத்தகுந்தது] என்று விதித்ததிலிருந்து முன் வாக்கியத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மருத்ரர்களுக்குக் காரணனாயிருப்பவனே இங்கு தியானிக்கத்தக்கவனாக விதிக்கப்படுகிறான் என்பது ஸ்பஷ்டம். 'காரணம் து' என்னும் 'து' ஶப்தத்திலிருந்து பற்பல வேதவாக்யங்களில் ப்ரஹ்மருத்ரகாரணனாக ப்ரஸித்தனாயிருப்பவனே இங்கு காரணஶப்தத்தால் அநுவதிக்கப்படுகிறான் என்று விளங்குகிறது. 'நாராயணாத்₃ ப்₃ரஹ்மா ஜாயதே|

http://acharya.org

நாராயணாத்$_4$ ருத்$_3$ரோ ஜாயதே" "நாராயணம் காரண புருஷம காரணம்" [காரணபுருஷனாய், தனக்கொரு காரணமற்றவனாயிருக்கும் நாராயணனை] என்று ப்ரஹ்மருத்ராதி ஸர்வகாரணனாகக் கோஷிக்கப்படும் நாராயணனே இங்கு அநுவதிக்கப்படும் காரணவஸ்து என்று ஸம்சயமறத் தெளிவாய் விளங்குகிறது. ஆக, இப்படி உபக்ரமத்திலுள்ள புருஷஸப்தத்தையும் நடுவில் ப்ரஹ்மருத்ரர்கள் காரணகாரணர்களல்லர் என்று சொல்லியிருப்பதையும், புரோவாதவாக்கியங்களையும் பார்க்கும்போது, அடுத்தபடியுள்ள ஸம்பு சிவாதிஸப்தங்களை நாராயணபரமாகவே பொருள் கொள்ள வேண்டும் என்று தெளிவாகும்.

இங்கு சில ஆக்ஷேபங்கள் செய்யப்படுகின்றன: "காரணம் து த்$_4$யேய:" என்னும் வாக்கியத்தில் 'த்$_4$யேய:' என்று புல்லிங்கமாகப் (ஆண்பாலாகப்) படித்திருக்கிறது. 'காரணம்' என்னும் பதமோ நபும்ஸகலிங்கமாகும். அப்படியிருக்க 'த்$_4$யேய:' என்று புல்லிங்கமாகப் படிப்பானேன்? என்று ஆராயும்போது முன் வாக்கியத்தில் 'த்₄யாயீதேஸாநம்' என்று த்யானிக்கப்படுபவனைச் சொல்லும் ஈசானஸப்தம் புல்லிங்கமானமையாலே இங்கும் 'த்$_4$யேய:' என்று புல்லிங்கமாகவே படித்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஆகையால் இங்கும் த்யானிக்கத்தக்கவனாகச் சொல்லப்படும் காரணன் ஈசானனே என்றதாயிற்று.

இவ்வாக்ஷேபம் சரியன்று: 'நாதாந்தே பரமாத்மநி' என்றவிடத்திலுள்ள பரமாத்மஸப்தத்திலேயே இங்கு புல்லிங்கமாயிருப்பதாகக் கொள்ளலாமாகையால் ஈசானஸப்தத்தின் அபேக்ஷையில்லை. மேலும், "ஆத்மா நாராயண: பர:" என்று நாராயணனே பரமாத்மஸப்தவாச்யன் என்று வேதங்களே நிர்ணயித்திருப்பதால் இங்கு சொல்லப்படும் காரணன் நாராயணனே என்று விளங்கும். நாதாந்தமான நான்காவது அர்த்தமாத்ரைக்குப் பொருளாயிருக்கும் பரமாத்மா புருஷஸப்தவாச்யனே என்று முதல் கண்டமும் நிர்ணயித்தது. ஆகையால் ஈசானபதம் பரமபுருஷனையே குறிக்கும். இக்காரணங்களால், இங்கு காரணமாகச் சொல்லப்படுபவன் சிவனென்று சொல்ல வழியில்லை.

இனி, மற்றொரு ஆக்ஷேபம்:— " 'காரணம் து த்$_4$யேய:' என்றவிடத்தில் காரணபுருஷன் ஒருவன் சொல்லப்படுகிறான் என்பது தெளிவு. இவன் யாருக்குக் காரணன் என்று ஆலோசிக்கும்போது முந்திய வாக்கியத்தில் "ப்$_3$ரஹ்மவிஷ்ணுருத்$_3$ரேந்த்$_3$ராஸ் தே

http://acharya.org

ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே" என்று பிறப்புள்ளவர்களாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்திரர்களுக்கும் காரணனு என்று கொள்வதே சிறந்ததென்று விளங்குகிறது. அந்தப்படியாக ஸம்பு சிவாதிபதங்களைப் படித்திருப்பதால் நால்வருக்கும் காரணபூதனை பரமசிவனே இங்கு ஸர்வகாரணனுடைச் சொல்லப்படுகிறான் என்பது தெளிவு. ஆகையால் இங்கு வேறொரு தேவனுக்குப் பரத்துவம் சொல்லுவதாக உரைப்பது சிறிதும் பொருந்தாது" என்று.

இவ்வாக்ஷேபமும் நில்லாது: "காரணம் து" என்னும் வாக்கியத்தில் ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ர காரணனே சொல்லப்படுவதாகக் கொண்டாலும், அவன் நாராயணனே என்றே தேறி நிற்கும். "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்...தத ஏதே வ்யஜாயந்த விச்வே ஹிரண்யகர்ப்போ அக்நிர் வருணவிஷ்ணுருத்ரேந்த்ரா:" [நாராயணன் ஆதிகாலத்தில் இருந்தான்... அவனிடமிருந்து ஹிரண்ய கர்ப்பன், அக்னி, யமன், வருணன், விஷ்ணு, ருத்ரன், இந்திரன் ஆகிய அனைவரும் உண்டானார்கள்.] என்று பைங்கிரஹஸ்யச்ருதியிலும், "நாராயணாத் ப்ராணோ ஜாயதே மநஸ் ஸர்வேந்த்ரியாணி ச...நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே...நாராயணாத் ருத்ரோ ஜாயதே" என்று நாராயணோபநிஷத்திலும் ப்ரஹ்ம விஷ்ணுருத்ரேந்திரர்களுக்கும் பூதேந்திரியங்களுக்கும் காரணன் நாராயணனே என்று சொல்லப்பட்டிருக்கையால் அவனே இங்கும் காரணனாகச் சொல்லப்படுகிறான் என்பது தெளிவு.

இங்கு ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்திரர்களுக்குக் காரணனாக, சம்பு சிவாதி சப்தங்களைப் படித்திருப்பதால் இம்மூவருக்கும் மேற்பட்ட பரமசிவன் என்று ஒருவனைக் கல்பிப்பதும் யுக்தியுக்தமன்று. பைங்கிரஹஸ்யத்திலும், ஸுபாலோபநிஷத்திலும் ப்ரஹ்மவிஷ்ணுருத்ரர்களுக்குக் காரணனாகவும் அந்தர்யாமியாகவும் நாராயணனைச் சொல்லியிருக்கையால் அவனே இவன் என்று கொள்வது எளிதாயிருக்க மற்றொருவனைக் கல்பிப்பது சரியன்று. அப்படிக் கல்பிக்கப் பார்த்தால், பைங்கிரஹஸ்ய ச்ருதியிலிருந்து பரமநாராயணன் என்று ஒருவனைக் கல்பிக்கவேண்டிவரும். ஆகையால், பரமசிவன் பரமநாராயணன் ஆகிய இருவர் ஸர்வகாரணர் என்று உரைக்க வேண்டிவரும். பரமாத்மா இருவர் இருக்கமுடியாது என்பது எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆகையால் இவ்வுபநிஷத்தில் படிக்கப்படும் சம்பு சிவாதிபதங்களையாவது நாராயணபரமாகப் பொருள் கொள்ளவேண்டும். மஹோபநிஷத், ஸுபால

http://acharya.org

லோபநிஷத், நாராயணோபநிஷத், மைங்கிரஹஸ்யம் முதலியவற்றி லுள்ள நாராயணாதிசப்தங்களையாவது சிவபரமாகக் கொள்ள வேண்டும். ஆனால், நாராயணசப்தத்தை சிவபரமாகக் கொள்ளுவ தற்கு ஸாத்யமே பாதிக்கிறதென்பதை முன்பே காட்டியிருக்கிறோம். ஆகையால் இங்குள்ள சிவாதிசப்தங்களையே நாராயணபரமாகக் கொள்ளவேண்டுமென்று தெளிவாகிறது.

உண்மையில், பரமசிவன் என்று ருத்ரனைக் காட்டிலும் வேறு பட்டவனாக ஒருவனிருப்பதாகச் சொல்லுவது பிள்ளைப் பேச்சே யாகும். அதற்கு வேதத்தில் ஒரு ப்ரமாணமும் கிடையாது. ருத்ர னுக்கும் காரணனாய், சம்புசிவாதிசப்தவாச்யனாயிருப்பவன் ஒருவ னுண்டு. ஆனால், அவன் நாராயணனையொழிய வேறொருவனு மில்லை. நம்முடைய மதத்தில் விஷ்ணுவுக்கும் காரணன் நாரா யணன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இருவரும் வேறு பட்டவர்கள் என்று நாம் சொல்லுவதில்லை. நாராயணனுடைய அவதாரமாயிருப்பவனே விஷ்ணு என்று உரைக்கிறோம். ஆகை யால் "தத் விஷ்ணோ: பரமம் பதம்" என்றும், "நாராயணபரம் ப்ரஹ்ம" என்றும் நாராயணநாமத்தாலும் விஷ்ணுநாமத்தாலும் குறிக்கப்படுபவன பரமாத்மாவே என்பதை நாம் மறுப்பதில்லை. விஷ்ணுவுக்கு எந்த வேதவாக்கியத்திலும் பாபம் நீங்கப்பெறுமை முதலான தாழ்ச்சிகள் சொல்லப்படவில்லையாகையால் இப்படிக் கொள்வது மிகவும் பொருந்தமுள்ளதாகிறது. சைவர்களோவெனில் ருத்ரனுக்கு ப்ரஹ்மாவிடமிருந்து பிறப்பு, பாவம் நீங்கப்பெறுமை, குரூரத்தன்மை முதலான பல தாழ்ச்சிகள் வேதத்தில் படிக்கப் பட்டிருக்கிறபடியால் ருத்ரன் ஜீவனே என்பதை மறுக்க முடியாத வர்களாகிறார்கள். இதற்காக இந்த சிவன் தாழ்ந்த சிவன், காரணனாகச் சொல்லப்படும் சிவன் பரமசிவன் என்று ஒரு கல்பனை செய்கிறார்கள். 'ந ப்ரஹ்மா நேஸாந:' என்றவிடத்தில் சொல்லப் படும் ஈஸானன் தாழ்ந்த சிவனும். 'த்யாயீதேஸாநம்' என்றவிடத் தில் சொல்லப்படும் ஈஸானன் பரமசிவனும். இப்படி உரைப்பது மிகவும் பரிஹஸிக்கத்தக்கதாகவே உள்ளது. இப்படிக் கல்பிப்ப தாகில் சிற்சில வேதவாக்கியங்களில் ப்ரஹ்மா, இந்திரன், முதலா னார்க்கும் பரத்வம் சொல்லுவதுபோல் தோன்றுவதால் பரம ப்ரஹ்மா என்றும், பரம இந்திரன் என்றும், பரம ஆகாசம் என்றும் கல்பித்துக்கொண்டே போகலாம்.

http://acharya.org

இவ்வுபனிஷத்திலேயே 'ந காரணம் காரணாநாம் தாதா த்யாதா' என்றும் வாக்கியத்தில் ஸர்வகாரணனாய், தாத்ருத்யாத்ருபப்தவாச்யனாயுள்ளவன் பிறப்பற்றவன் என்று சொல்லப்படுவதாகக் கூறுகிறார்கள் இவர்கள். தாத்ருசப்தத்தால் பிரஸித்தனாயிருப்பவன் ப்ரஹ்மாவே என்பது நிர்விவாதம். "சுபாநேனா ஹாதாதாரௌ" என்று சுபாதசப்தமும், "ஸம்பூர் ப்ரஹ்மத்ரிலோசநௌ" "ஸம்பூர் தாத்ருஹராரர்ஹந்ஸு" "ஸம்பூர்ப்ரஹ்மார்ஹதோ ஹர:" "விஸ்வாத்மா ப்ராணத: ஸம்பூர் த்ருஹிணச்சதுராநந:" "ஸம்பு: ஸ்வயம்பூர் த்ருஹிண:" என்று சம்புசப்தமும் (முறையே) வைஜயந்தி, அமரகோசம், வைஜயந்தி, விச்வப்ரகாசம், சப்தரத்நாகரம், அபிதாநரத்நமாலை என்னும் நிகண்டுகளில் சதுர்முகபரமாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் தாத்ருசப்தவாச்யனை பரமப்ரஹ்மாவே இங்கு அவரப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்திரர்களுக்குக் காரணனாகிறான் என்று ஒருவர் சொன்னால் இவர்கள் என்ன பதில் உரைக்கமுடியும்? இதற்கு முன்னுள்ள சுபானசப்த ப்ரஸித்தியை அனுஸரித்து இந்த தாத்ருசப்தத்தைப் பரமசிவபரமாக்குகிறோம் என்பார்களேயாகில், அதற்கும் முன்னுள்ள புருஷசப்த ப்ரஸித்தியை அனுஸரித்து இவ்வுபனிஷத்து முழுவதும் பரவாஸுதேவபரம் என்று கொள்ளுவதே பொருந்தியது என்று நாம் சொல்லுகிறோம். ஆகையால், ஆகாசம், ப்ராணன் இந்த்ரன், ப்ரஜாபதி, சிவன், சம்பு, ருத்ரன், புருஷன், விஷ்ணு, ஹரி, அநந்தன், நாராயணன் என்னும் பெயர்களால் வேதத்தில் குறிக்கப்படும் காரணவஸ்து நாராயணன் ஒருவனே என்றும் சிவருத்ரப்ரஹ்மாதி சப்தத்தினால் குறிக்கப்படுபவர்களாய், நாராயணனிடமிருந்து பிறப்பவர்களாகவும், கர்மவச்யர்களாகவும் கோஷிக்கப்படுமவர்களான ப்ரஹ்மருத்ரர்கள் காரணபுருஷரல்லர் என்றும் கொள்வதே நல்வழியாகும்.

கடைசியாக ஓர் ஆக்ஷேபம் செய்யப்படுகிறது:— "இவ்வுபநிஷத்தில் ஈசானன், சம்பு, சிவன், சங்கரன் முதலான பல சிவ நாமங்கள் படிக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் புருஷசப்தம் ஒன்றே பகவந் நாமமாகும். நடுவிலுள்ள தாத்ருசப்தம் ஒன்றே ப்ரஹ்மாவுக்கு அஸாதாரணமான பெயராகும். ஆகையால் 'பூயஸாம் ஸ்யாத் பலீயஸ்த்வம்" என்னும் நியாயத்தைக்கொண்டு பார்க்கும் போது இவ்வுபநிஷத்து சிவபரமென்றே கொள்ளவேண்டும்" என்று.

http://acharya.org

இதுவும் சரியன்று. உபக்ரமத்திலுள்ளது ஒரு நாமமாகிலும் அதுவே பலமுள்ளது என்பது உபக்ரமந்யாயஸித்தம். மேலும், சதுர்த்யர்த்தமாத்ரைக்குப் புருஷனை தேவதையாகச் சொன்னதோடன்றியில், "ஸர்வவர்ணு" என்று அந்த தேவதை ஸர்வவர்ணங்களையுமுடையது என்றும் உரைத்தது. கீதையில் விச்வரூப தர்சனத்தின் போது "நாநாவர்ணாக்ருதீநி" என்று பரமபுருஷனை நாநாவர்ணங்களையுடையவனாகச் சொல்லியிருப்பதிலிருந்து இதுவும் பரமபுருஷனுடைய அடையாளமென்று தெரிகிறது. ஆகையால் ஆரம்பத்திலுள்ள புருஷச்ருதியையும் ஸர்வவர்ணத்வலிங்கத்தையும் ச்ருத்யந்தரங்களையும் அனுஸரித்து முடிவிலுள்ள ஸம்புஸிவாதி ஸப்தங்களை விஷ்ணுபரமாகக் கொள்ளுவதே பொருந்தியது.

மேலும், ஈஸாந ஸம்புஸிவாதி ஸப்தங்கள் சிவனுக்கே அஸாதாரணமானவை என்றும் சொல்லமுடியாது. அவை பிரமனுக்கு முண்டு என்பதை மேலே விவரித்தோம். "ஈஸாந: ப்ராணத: ப்ராண:"

"ப்ராபுராதித்யவர்ணம் தம் புருஷம் தமஸ: பரம் |
ப்ருஹந்தம் ஸர்வகம் தேவமீஸாநம் வரதம் ப்ரபும் ||

[ஆதித்யவர்ணனாய். தமஸ்ஸுக்கு மேற்பட்டவனாய், பெரியோனாய், ஸர்வவ்யாபியாய், வரதனாய், ஸ்வாமியாய், ஈஸாநனான அந்தப் பரம புருஷனை அடைந்தனர்.]

"தாநி த்வாமாஹுரீஸாநம் பூதாநி த்ரிஜகத்பதே"

[மூவுலகிற்கும் பதியாயிருப்பவனே! அந்த பூதங்கள் உன்னை ஈஸானன் என்கின்றன.] என்று ஈஸானஸப்தம் விஷ்ணு நாமமாகவும் படிக்கப்படுகிறது. "ஸம்புவோஜஹரீஸாந:" "ஸம்புர் தாத்ருஹரீ-ஸேஷு" என்று அபிதானகோஸங்களிலும், "ஸ்வயம்பூ: ஸம்புராதித்ய:" என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும்.

"ததாந்யத் ரூபமாஸ்தாய ஸம்புர் நாராயணோऽவ்யய:"

[அழிவற்றவனாய், சம்புவென்றும் நாராயணனென்றும் சொல்லப் படுகிற பகவான் வேறொரு ரூபத்தை எடுத்துக்கொண்டான்.]

"இதி நாராயண: ஸம்புர் பகவாந் ஜகத: பதி: |
ஸந்திஸ்ய விபுதாந் ஸர்வாநஜாயத யதோ: குலாத் ||"

[ஜகத்பதியாய், சம்பு என்றும் நாராயணனென்றும் பெயர்கொண்ட வனான பகவான் எல்லாதேவர்களையும் நியமித்துவிட்டு யதுகுலத்

http://acharya.org

தில் பிறந்தான்] என்று உபப்ருஹ்மணங்களிலும், இவையெல்லாவற்றுக்கும் அடியாக "விச்வாக்ஷம் விச்வசம்புவம்" என்று ஸகலவேதநிகமனபூதமான நாராயணாநுவாகத்திலும் சம்புசப்தம் விஷ்ணு நாமமாகவும் படிக்கப்படுகின்றது. "சாச்வதம் சிவமச்யுதம்" என்று நாராயணாநுவாகத்திலும், "ஸர்வ: சர்வ: சிவ: ஸ்தாணு:" என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும்,

"ஏஷ வை புருஷோ விஷ்ணு: ப்ரதா₄நம் நிஷ்களம் சிவ:"

[புருஷனும், ப்ரதானனும், சிவசப்தவாச்யனுமுள்ள விஷ்ணு இவரே.]

"பா₃ஹூ த்₃வௌ ஸ்தா₂பயாமாஸ க்ருஷ்ண:
ஸாக்ஷாத் ஸ்வயம் சிவ:"

[தானே சிவனுயிருக்கும் பகவான் க்ருஷ்ணன் (வாணனுடைய) இரண்டு கைகளைமட்டும் (வெட்டாமல்) நிறுத்தினான்.] "விஷ்ணும் பீதாம்பரம் சிவம்" [பீதாம்பரனும், சிவனுமான விஷ்ணுவை] என்று ஹரிவம்சம் முதலான உபப்ருஹ்மணங்களிலும், சிவநாமம் பகவந்நாமமாகப் படிக்கப்படுகிறது. "ஏஷ ஸர்வேச்வர:" என்று மாண்டூக்யோபனிஷத்திலும், "ஓங்காரம் ஸர்வேச்வரம் த்₃வாத₃சாந்தம்" என்று தாபநீயோபனிஷத்திலும், "ஸர்வேச்வரோ வ்யஷ்டிஸமஷ்டிரூப:" "ஸர்வேச்வரஸ் ஸர்வத்₃ருக் ஸர்வவேத்தா" "அஜஸ் ஸர்வேச்வரஸ் ஸித்₃த₄:" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணாதிகளிலும் ஸர்வேச்வர சப்தம் பரமபுருஷநாமமாகப் படிக்கப்பட்டது. ஆகையால், இங்கு 'பூ₄யஸாம் ஸ்யாத்₃ ப₃லீயஸ்த்வம்' [அதிகமாகப் படிக்கப்பட்டது அதிக பலமுள்ளது] என்னும் நியாயத்திற்கு இடமில்லை. உபஸம்ஹாரத்திலுள்ள சம்புசிவாதிசப்தங்கள் யாரைச் சொல்லுகிறதென்பது ஸந்திக்தமானதையால், ஆதியிலுள்ள பகவந்நாமலிங்கங்களைக் கொண்டும், மற்ற வேதவாக்கியங்களைக் கொண்டும் இது பகவத்பரமென்று கொள்வதே சிறந்தது. இதிஹாஸபுராணங்களைக் கொண்டு, ருத்ரபரமான லோகப்ரஸித்தமாக சிவாதிநாமங்களை விஷ்ணுபரமாக்குவது நியாயமோவென்னில்:

"இதிஹாஸபுராணாப்₄யாம் வேத₃ம் ஸமுபப்₃ருஹ்மயேத் ।
பி₃பே₄த்யல்பஶ்ருதாத்₃ வேதோ₃ மாமயம் ப்ரதரிஷ்யதி ॥"

[இதிஹாஸபுராணங்களைக்கொண்டு வேதத்தை உபப்ருஹ்மணம் செய்யவேண்டும். 'இவன் என்னைக் கலக்கிவிடுவான்' என்று

http://acharya.org

(இதிஹாஸாதி ச்ரவணம் செய்யாத) அல்பச்ருதனைக் கண்டு வேதம் பயப்படுகிறது.] என்றும்,

"வேதோபப்₃ரும்ஹணார்த்தா₂ய தாவக்₃ராஹயத ப்ரபு₄:"
[வேதோபப்₃ரும்ஹணத்தின் பொருட்டுக் குசலவர்களை வால்மீகி ஏற்றுக்கொண்டார்.] என்றும் சொல்லியபடியே வேதத்தை விவரிப்பதற்கென்றே ஏற்பட்ட இதிஹாஸபுராணங்களைக்கொண்டே வேதார்த்தநிர்ணயம் செய்யவேண்டுமேயொழிய லோகப்ரஸித்தியை மட்டும் கொண்டு நிர்ணயிக்கலாகாது. அப்படி நியமங்கொண்டால் லோகப்ரஸித்தியைக்கொண்டு ப்ரஸித்த ஆகாசப்ராணன்களுக்கும் பரத்துவம் சொல்ல வேண்டிவரும். அப்படியாகில் விஷ்ணுநாமங்களும் சிவன் விஷயமாகப் புராணங்களில் படிக்கப்பட்டிருக்கையால், எல்லாவற்றையும் சிவபரமாகக் கொள்ளக்கூடாதோ எனில்,

"அந்யநாம்நாம் க₃திர் விஷ்ணுரேக ஏவ ப்ரகீர்த்தித: |
ருதே நாராயணாதீ₃நி நாமாநி புருஷோத்தம: ||
ப்ராதா₃தந்யத்ர ப₄க₃வாந்......"

[மற்ற தெய்வங்களின் நாமத்திற்கும் விஷ்ணு ஒருவனே கதியாகக் கீர்த்திக்கப்படுகிறான். நாராயணாதிகளான சில அஸாதாரணமான பெயர்களைத் தவிர்த்து மற்ற பெயர்களை பகவாந் புருஷோத்தமன் மற்றவர்களுக்குக் கொடுத்தான்.] என்கிறபடியே மற்ற தெய்வங்களின் பெயர்களும் உண்மையில் பகவானுடைய பெயரேயென்றும், நாராயணன் முதலிய சில பெயர்கள் அவனுக்கே அஸாதாரணமானவையென்றும் சாஸ்திரங்கள் சொல்லியிருக்கையால் விஷ்ணு நாமங்களால் இதர தெய்வங்களைக் குறிப்பது ஔபசாரிகமாகவென்று கொள்ளுகிறோம். வேதாந்தங்களில் மிக அதிகமாக ஓதப்படும் நாராயண நாமத்தை சிவபரமாக்குவதற்கு வியாகரண சாஸ்திரம் இடங்கொடாதென்பதையும் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம்.

"ஶம்பு₄ராகாஶமத்₄யே த்₄யேய:" என்று ஹ்ருதயாகாஶமத்தியில் தியானிக்கத்தக்கவன் சம்பு என்று இங்கு உரைக்கப்படுகிறது. "ஸ யஶ் சாயம் புருஷே யஶ்சாஸாவாதி₃த்யே" என்னும் வாக்கியத்தில் ஆதித்யமண்டலத்திலுள்ள புண்டரீகாக்ஷனே ஹ்ருதயகுஹையில் எழுந்தருளியிருக்கிறான் என்கையாலும், "அங்கு₃ஷ்ட₂மாத்ர: புருஷ:" முதலான வாக்கியங்களில் ஹ்ருதயாகாசத்திலுள்ளவன் புருஷஶப்த வாச்யனே என்று படிக்கையாலும் "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்₃ரஹ்ம யோ வேத₃ நிஹிதம் கு₃ஹாயாம்" என்று ஹ்ருதய குஹையில்

http://acharya.org

தியானிக்கத்தக்கவன் அநந்தனே என்று விக்கையாலும், "பத்ம கோசப்ரதீகாசம் ஹ்ருத$_1$யம்" என்று தொடங்கி "ஸ ப்ரஹ்மா ஸ ஶிவஸ்ஸேந்த்$_3$ர:..." என்பதுவரையில் நாராயணவல்லியில் ப்ரஹ்ம ருத்ரேந்த்ராந்தர்யாமியான நாராயணனே ஹ்ருதயாகாசத்தில் தியானிக்கத்தக்கவன் என்று உரைக்கையாலும் இங்கு ஹ்ருதயாகாசத்தியில் த்யேயனாகச் சொல்லப்படும் சம்பு நாராயணனே என்று அறிகிறோம். ஆகையால் இங்குள்ள சம்புசிவசங்கரசப்தங்களை நாராயணபரமாகக் கொள்வதே ஸகலவேதங்களுக்கும் பொருந்தியிருக்கும் என்றதாயிற்று.

அன்றிக்கே சம்பு சிவாதிசப்தங்கள் ப்ரஸித்தருத்ரனைச் சொல்லுவதாகவே கொண்டாலும், அதர்வஶிரஸ்ஸிற் போல் இவ்வுபநிஷத்திலும் ருத்ராந்தர்யாமியான பரமாத்மாவை உபாஸிக்க வேண்டுமென்று விதிப்பதாகவே கொள்ள வேண்டும்; இல்லாவிடில், உபக்ரமத்தில் படித்த பலவந் நாமலிங்கங்களுக்கும், மற்ற ச்ருதி வாக்கியங்களுக்கும் விரோதம் வருமாகையால். இனி, உபப்ரும் ஹணங்களிலும் இவ்வுபநிஷத் பகவத்பரமாக விவரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவோம். ஹரிவம்சத்திலே வைதிகன் பிள்ளைகளைத் தன்னுடைச் சோதியிலிருந்து அழைத்துவரும் ப்ரகரணத்தில்,

"மந்மயம் வித்$_3$தி$_4$ கௌந்தேய க்ஷயம் ஸ்ருஷ்டிஞ்ச ரக்ஷணம் ।
இத$_3$மப்யபரம் பூ$_4$ய: ஶ்ருணு கு$_3$ஹ்யம் ஸநாதநம் ॥
ஸர்வேஷ்வபி ச வேதே$_3$ஷு புராணேஷு ச க்ருத்ஸ்நஶ: ।
யத$_3$க்$_3$ரமுதி$_3$தம் பார்த்த$_2$ ஸர்வைர் முநிவரைஸ் ஸதா$_3$ ॥
வர்ணத்ரயஸமாயுக்தம் ருக்$_3$யஜுஸ்ஸாமலக்ஷிதம் ।
ப்ரணவாக்$_2$யம் மஹாபா$_3$ஹோ வித்$_3$தி$_4$ மாம் ஜக$_3$தீபதிம் ॥
இத$_2$ம் ஜபந் மஹாபா$_3$ஹோ மாம் நமஸ்குரு யத்நத: ।
ததோ மாம் வேத்ஸ்யஸே ஸம்யக் ஸத்யமேதச் சூ$_2$பா$_2$மி தே ॥
அந்யத் ஸர்வம் மஹாபா$_3$ஹோ விஹாயைதத்பரோ பூ$_4$வ ।
இத்த$_2$மேவ பரம் ஶ்ரேயோ நாத்ர கார்யா விசாரணா ॥"

[அர்ஜுநா! ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்கள் என்னாலேயே செய்யப்படுகின்றனவென்று அறிவாயாக. மற்றொரு பழைமையான ரஹஸ்யத்தைக் கேள். எல்லா வேதங்களிலும் புராணங்கள் அனைத்திலும் எல்லா முனிவர்களாலும் ஆதியாகச் சொல்லப்பட்டதாய், மூன்று

http://acharya.org

வர்ணங்களை யுடையதாய் ருக்யஜுஸ்ஸாமங்களாகச் சொல்லப் படுவதாய், ப்ரணவமென்னும் பெயரையுடையதாக கோஷிக்கப் படும் அக்ஷரம் ஜகத்பதியான நானே என்று அறிவாயாக. இதை ஜபித்துக்கொண்டு, முயற்சிசெய்து என்னை வணங்குவாயாக. அப்போது என்னை நன்கு அறிவாய். இதை உண்மையென்று ஆணையிடுகிறேன். மற்ற எல்லாவற்றையும் விட்டு இதிலேயே ஈடு படுவாயாக. இதுவே மேலான மேன்மை. இதில் விசாரிப்பதற் கொன்றுமில்லை.] என்று அர்ஜுனனைக் குறித்து பகவான் க்ருஷ்ணன் அருளிச்செய்த வசனங்களால் இவ்வுபநிஷத்தின் ஆதியில் "ஸர்வ வர்ஞு புரஷைதை$_{1}$வத்யா" இத்யாதியால் சொல்லப்பட்ட ஓங்கார வைபவமும், "காராணந்து த்$_{1}$யேய:" "ஶிவ ஏகோ த்$_{1}$யேயஸ் ஸர்வ மந்யத் பரித்யஜ்ய" முதலிய வாக்கியங்களால் சொல்லப்பட்ட அர்த்தங் களும் பகவத்பரமாக விவரிக்கப்பட்டன. ஹரிவம்சத்திலேயே கைலாஸயாத்ரா ப்ரகரணத்தில்

"இத்யுக்த்வா தே$_{3}$வதே$_{3}$வேஶம் முநீநாஹ புந: ஶிவ: |
ஏவம் ஜாநீத ஹே விப்ரா யே விப்ரா த்$_{3}$ரஷ்டுமாக$_{3}$தா: ||
ஏததே$_{3}$வ பரம் விப்ரா த்$_{4}$யேயம் பரமமாநஸை: |
ஏதத்$_{3}$வ: பரமம் ஜ்ஞேயமேதத்$_{3}$ வ: பரமம் தப: ||
ஏதத்$_{3}$வோ ஜந்மந: க்ருத்யம் ஏதத்$_{3}$ வஸ் தபஸ: ப$_{2}$லம் |
ஏவமேவ விஜாநீத நாத்ர கார்யா விசாரணா ||
ஹரிரேகஸ் ஸதா$_{3}$ த்$_{4}$யேயோ ப$_{4}$வத்$_{3}$பி$_{4}$ஸ்
ஸத்வஸம்ஸ்தி$_{2}$தை: |
நாந்யோ ஜக$_{3}$தி தே$_{3}$வோऽஸ்தி விஷ்ணோர் நாராயணாத் பர: ||
ஓமித்யேவம் ஸதா$_{3}$ விப்ரா: பட$_{2}$த்$_{4}$வம் த்$_{4}$யாத கேஶவம் |
ததோ வ: ஶ்ரேயஸ: ப்ராப்திர் ப$_{4}$விஷ்யதி ந ஸம்ஶய: ||
ஏவம் த்$_{4}$யாதோ ஹரிஸ் ஸாக்ஷாத் ப்ரஸந்நோ வோ
ப$_{4}$விஷ்யதி |
ப$_{4}$வநாஶமயம் தே$_{3}$வ: கரிஷ்யதி ந ஸம்ஶய: ||
ஸதா$_{3}$ த்$_{4}$யாத ஹரிம் விப்ரா யதீ$_{3}$ச்ச$_{2}$ ப்ராப்துமச்யுதம் |
ஏஷ ஸம்ஸாரவிப$_{4}$வம் வ்யபோஹதி ஜக$_{3}$த்கு$_{3}$ரு: ||"

[இம்மாதிரியாக தேவதேவேசனை க்ருஷ்ணனிடம் சொல்லிவிட்டு சிவன் முனிவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்:—"இங்கு வந்திருக் கும் விப்ரர்களே! இப்படியே நீங்களுமறியுங்கள். மேலான

http://acharya.org

நெஞ்சுடைய உங்களால் இதுவே தியானிக்கத்தக்கது. இதுவே நீங்களறியவேண்டியவற்றுள் சிறந்தது. இதுவே உங்களுக்கு மேலான தபஸ். இதுவே நீங்கள் பிறவியெடுத்த பயன். உங்கள் தவத்தின் பலனும் இதுவேயாகும். இப்படியே அறியுங்கள். இதில் விசாரிக்கவேண்டியதொன்றுமில்லை. ஸத்வத்தில் நிலை நிற்கும் உங்களால் ஹரி ஒருவனே தியானிக்கத்தக்கவன். நாராயணனை விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தேவன் எவ்வுலகிலு மில்லை. விப்ரர்காள்! ஓம் என்றே எப்போதும் படியுங்கள்; கேசவனை தியானியுங்கள். அப்படிச் செய்தால் உங்களுக்கு நன்மைகளெல்லாம் உண்டாகும். அதில் ஸந்தேஹமில்லை. இம்மாதிரி தியானிக்கப்பட்ட பகவான் உங்களிடம் ப்ரீதியுடையவனுவான். ஸம்ஸார நாசத்தையும் அந்த தேவன் செய்தருளுவான்; அதில் ஸந்தேஹமில்லை. விப்ரர்களே! அச்யுதனை அடையவேண்டுமாகில் எப்போதும் ஹரியை தியானியுங்கள். ஜகத்பதியான அவர் ஸம்ஸாரத் துன்பத்தைப் போக்கடிப்பார்.] என்று பேசநின்ற சிவனாலேயே "காரணம் து த்$_4$யேய:' முதலான வாக்கியங்கள் விஷ்ணுபரமாக விவரிக்கப்பட்டன.

'ஆலோட்$_3$ய ஸர்வசாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: |
இத$_3$மேகம் ஸுநிஷ்பந்நம் த்$_4$யேயோ நாராயணஸ் ஸதா$_3$ ||'

[எல்லா சாஸ்திரங்களையும் ஆராய்ந்து மறுபடியும் மறுபடியும் விசாரித்தவளவில், 'நாராயணன் எப்போதும் தியானிக்கத்தக்கவன் என்னுமிவ்வர்த்தமே நன்கு தேறிநிற்கும்.] என்று ஆநுசாஸனிக பர்வத்திலும்,

" ஓமித்யேகாக்ஷரம் ப்$_3$ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந் |
ஆத்$_3$யம் புருஷமீசாநம் புருஹூதம் புருஷ்டுதம் || "

[ஆதியாய், புருஷனென்றும் ஈசானனென்றும் படிக்கப்படுமவனாய், யாகங்களாலும், துதிகளாலும் மிகவும் ஆராதிக்கப் படுபவனான என்னை நினைத்துக்கொண்டு 'ஓம்' என்னும் ஒற்றையெழுத்தை உச்சரித்துக்கொண்டு...] என்று ஸ்தவராஜ கீதாதிகளிலும்,

"ஓமித்யேகாக்ஷரம் ப்$_3$ரஹ்ம யத் தத் ஸத$_3$ஸத: பரம் |
அநாதிமத்$_4$யபர்யந்தம கூடஸ்த$_2$மசலம் த்$_4$ருவம் ||
யோகே$_3$ச்வரம் பத்$_3$மநாப$_4$ம் விஷ்ணும் ஜிஷ்ணும் ஜக$_3$த்பதிம்||'

http://acharya.org

[ப்ரஹ்மமாய், ஸதஸத்துக்களுக்கு மேற்பட்டதாய், ஆதிமத்யாந்த ரஹிதமாய் மூலமாய், அசையாததாய், நிலைநிற்பதாய், யோகேச்வரனாய், ஜகத்பதியாய், விஷ்ணுவாய், ஜயசாலியாய், ஓங்காரவாச்யனை பத்மநாபனை...] என்று ஸநத்குமாரருத்ர ஸம்வாதத்திலும்,

"ஓமித்யேதத் த்$_4$யாயமாநோ ந க$_3$ச்சே$_2$த்
து$_3$ர்க்க$_3$ம் பந்த$_2$ாநம் பாபகர்மாபி விப்ர:।
மாம் ஜாநாதி ப்$_3$ரஹ்மஶீர்ஷம் வரிஷ்ட$_2$ம்
விஶ்வேஶ்வரம் ப்$_3$ரஹ்மயோநிம் ஹ்ரயயோநிம்॥"

[ஓம் என்னும் அக்ஷரத்தை த்யானிக்கும் ப்ராஹ்மணன் பாபியாயினும் நரகவழி செல்லான். வேதாந்தவிழுப்பொருளாய், சிறந்தவனாய், ப்ரஹ்மாவுக்கும் காரணனாய், தனக்கு ஒரு காரணமற்றவனாய், விச்வேச்வரனாயுள்ள என்னை அறிகிறான்.] என்று மந்த்$_3$ரராஜவ்யாஸ ஸம்வாதத்திலுமாக ஸ்ரீமஹாபாரதத்தில் இவ்வுபனிஷத் வாக்கியங்கள் பலவும் விஷ்ணுபரமாக விவரிக்கப்பட்டன.

"கர்த்தா ப$_4$வாந் காரணமப்யஶேஷகார்யஞ்ச
நிஷ்காரணகர்த்ருரூப:।
ப்$_3$ரஹ்மா ப$_4$வாந் ஸர்க்க$_3$க்ருத$_3$ாதி$_3$காலே
விஶ்வ ஸ்வரூபோऽஸி தத$_3$ாதி$_3$ஸ்ருஷ்டௌ॥
விஷ்ணு: ஸ்தி$_3$தௌ பாலநப$_3$த்$_3$த$_4$கக்ஷ்ய:
ருத்$_3$ரோ ப$_4$வாந் ஹரந்ஸி ரணே ப்ரஜாநாம்।
ஏபி$_4$ஸ் த்ரிபி$_4$ர் நாத$_3$ விபூ$_4$திபே$_4$தை$_3$ர்
யச்சிந்த்யதே காரணமாத்மநோபி।
வேத$_3$ாந்தவேதே$_3$ாதி$_3$தமஸ்தி விஷ்ணோ:
பத$_3$ம் த்$_4$ருவம் தத் பரமம் த்வமேவ॥"

[ஜகத்கர்த்தாவான தேவரீரே (இவ்வுலகிற்கு) நிமித்தோபாதாந காரணமாகவும், கார்யவஸ்துக்கள் எல்லாமாகவுமாகிறீர். கர்த்ருரூபரான உமக்கு ஒரு காரணமில்லை. ஆதிகாலத்தில் ப்ரஹ்மாவாயிருந்து ஸ்ருஷ்டியைச் செய்கிறீர். அவ்வாதிஸ்ருஷ்டியிலேயே, விச்வஸ்வரூபராய் ரக்ஷணத்திலேயே நிலைநிற்பவரான விஷ்ணுவாகிறீர். ஸம்ஹாரகாலத்தில் ருத்ரரூபியாய் நின்று ப்ரஜைகளை ஸம்ஹரிக்கிறீர். நாதனே! இம்மூன்று விபூதிபேதங்களோடுகூடித் தனக்கும் காரணமாக யாதொரு வஸ்து வேதவேதாந்தங்களில் கோஷிக்கப்படுகிறதோ, மேலானதாய், நிலையானதான அந்த

http://acharya.org

விஷ்ணுஸ்வரூபம் நீரே.] என்று விஷ்ணுதர்மத்தில் க்ருஷ்ணனைக் குறித்த அர்ஜுனவசனங்களாலும்,

''யஸ்ய ப்ரஸாத$_3$ாத$_3$ஹமச்யுதஸ்ய
பூ$_4$த: ப்ரஜாஸர்க்க$_3$கரோऽந்தகாரீ ।
க்ரோத$_4$ாச்ச ருத்$_3$ர: ஸ்தி$_2$திஹேதுபூ$_4$தோ
மத்$_4$யே ச யஸ்மாத் புருஷ: பரஸ்மாத் ॥
ஸ ஸர்வபூ$_4$தப்ரப$_4$வோ த$_4$ரித்ர்யாம்
ஸ்வாம்ஶேந விஷ்ணுர் ந்ருபதேऽவதீர்ண: ।''

[அச்யுதனை எவனுடைய ப்ரஸாதத்தினால் பிரமனை நான் ஸ்ருஷ்டி செய்பவனாகவும், கோபத்தினால் ருத்ரன் ஸம்ஹரிப்பவனாயும், (எங்களுக்கு) நடுவில் பரமபுருஷன் ரக்ஷிப்பவனாகவும் ஆனோமோ, அவன் எல்லா பூதங்களுக்கும் காரணன். உலகில் தன்னுடைய அம்சத்தினால் விஷ்ணுவாக அவதரிக்கிறான்.] என்று விஷ்ணுபுராணத்தில் சதுர்முகவசநங்களாலும் ''ப்ரஹ்மவிஷ்ணுருத்$_3$ரேந்த்$_3$ராஸ் தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே ந காரணம் காரணாநாம்'' முதலான வாக்கியங்கள் வாஸுதேவபரமாக விவரிக்கப்பட்டன. இக்காரணங்களால் இவ்வுபனிஷத்து புருஷோத்தமபரமே என்று விளங்குகிறது.

அதர்வசிகாவிசாரம் முற்றிற்று.

वन्देऽहं श्रीनिवासार्यं विष्णुहृद्वंशभूषणम् ।
सुदर्शनभृतं विष्णोः सुदर्शनमिवापरम् ॥
आरब्धं श्रीनिवासार्यैर्विष्णुहृद्विजयाख्यकम् ॥
अद्भुतं ग्रन्थरत्नं तदच्युतप्राप्तिविघ्नितम् ॥
श्रीकृष्णस्वामिदासेन श्रीनिवासार्यसूनुना ।
श्रीविष्णुचित्तविजयशेषः संपूर्यते मया ॥

வந்தே$_3$ऽஹம் ஸ்ரீநிவாஸார்யம் விஷ்ணுஹ்ருத்$_3$வம்ஶபூ$_4$ஷணம் ।
ஸுத$_3$ர்ஶநப்$_4$ருதம் விஷ்ணோ: ஸுத$_3$ர்ஶநமிவாபரம் ॥
ஆரப்$_3$த$_4$ம் ஸ்ரீநிவாஸார்யைர் விஷ்ணுஹ்ருத்$_3$விஜயாக்$_2$யகம் ।
அத்$_3$பு$_4$தம் க்$_3$ரந்த$_2$ரத்நம் தத$_3$ச்யுதப்ராப்தி விக்$_4$நிதம் ॥
ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமிதா$_3$ஸேந ஸ்ரீநிவாஸார்யஸூநுநா ।
ஸ்ரீவிஷ்ணுசித்தவிஜயஶேஷ: ஸம்பூர்யதே மயா ॥

[விஷ்ணுசித்த வம்சத்திற்கு ஓர் பூஷணமாயிருந்தவரும், (ஸ்ரீவைஷ்ணவ) ஸுதர்சனத்தை தரித்து நின்றவரும், விஷ்ணுவின்

http://acharya.org

பற்றுமொரு ஸுதர்சனம் போன்றவருமான ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை நான் வணங்குகிறேன். (அந்த) ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ஆரம்பிக்கப்பட்ட விஷ்ணுசித்த விஜயம் என்னும்பெயரை யுடைய அற்புதமான க்ரந்தரத்னம் அவர் (அடியவரை நழுவவிடாத) அச்யுதனை அடைந்தமையால் தடைபட்டது. (அந்த) ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் புத்திரனான ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி தாஸனாகிற அடியேனால் ஸ்ரீ விஷ்ணுசித்தவிஜயத்தில் எஞ்சிய பகுதி பூர்த்தி செய்யப்படுகிறது.]

ஆக இவ்வளவால் நாராயணனே ஸர்வகாரணபூதன் என்று பற்பல வேதவாக்கியங்களைக்கொண்டு நிர்ணயித்து, சிவனுக்குக் காரணத்வத்தை உரைப்பதாகத் தோன்றும் மூன்று உபநிஷத்துக்களையும் விசாரித்து, அவற்றிலும் நாராயணபரத்வமே தேறிநிற்கும் பொருள் என்று முடிவுகட்டப்பெற்றது. விஷ்ணுசித்தவிஜயத்தின் தொடக்கத்திலிருந்து இதுவரையில் சொன்ன அர்த்தங்களையெல்லாம் ஸ்ரீவிஷ்ணுசித்தருடைய ப்ரியசிஷ்யரான நடாதூர் அம்மாள் தத்வஸாரமென்னும் திவ்யக்ரந்தத்திலே ஒரு ச்லோகத்திலே ஸங்க்ரஹமாகவும், அழகாகவும் விளக்கியிருக்கிறார். ஒரு ப்ரஹ்மஜ்ஞானிக்கும் மற்றொரு ப்ரஹ்மஜிஜ்ஞாஸு (ப்ரஹ்மத்தை அறிய விரும்புமவன்) வுக்கும் ஸம்வாதமாக அமைந்திருக்கும் அந்த ச்லோகத்தை அநுபவித்துவிட்டு மேலே செல்வோம்.

कस्त्वं तत्त्वविदस्मि वस्तु परमं किं तर्हि विष्णुः कथं
तत्त्वेदं परतैत्तिरीयकमुखत्रय्यन्तसन्दर्शनात् ।
अन्यास्तर्हि गिरः कथं गुणवशादत्राह रुद्रः कथं
तद्दृष्ट्या कथमुद्भवत्यवतरत्यन्यत्कथं नीयताम् ॥

கஸ்த்வம் தத்த்வவித$_3$ஸ்மி வஸ்து பரமம் கிம் தர்ஹி விஷ்ணு: கத$_2$ம்
தத்த்வேத$_3$ம்பர தைத்திரீயக முக$_2$த்ரய்யந்த ஸந்த$_3$ர்ஶநாத் ।
அந்யாஸ் தர்ஹி கி$_3$ர: கத$_2$ம் கு$_3$ணவஶாத$_3$த்ராஹ ருத்$_3$ர: கத$_2$ம்
தத$_3$த்$_3$ருஷ்ட்யா கத$_2$முத்$_3$ப$_4$வத்யவதரத்யந்யத் கத$_2$ம் நீயதாம் ॥

ப்ரஹ்மஜ்ஞாநி ஜிஜ்ஞாஸு ஸம்வாதம்

ஜிஜ்ஞாஸு:—கஸ்த்வம்?–நீர் யார்?

ஞானி:—தத்வவித$_3$ஸ்மி–சித், அசித், ஈச்வரன் என்னும் மூன்று தத்துவங்களையும் தெளிவாக அறிந்தவன் யான்.

ஜிஜ்ஞாஸு:—வஸ்து பரமம் கிம் தர்ஹி?–அப்படியாகில் பரதத்துவமாய்—மேலான உண்மையாய்—இருப்பது எது?

http://acharya.org

ஞானி:—விஷ்ணு:—விஷ்ணுவே பரதத்துவமாவான்.

ஜிஜ்ஞாஸு:—கதம்?—விஷ்ணுவே பரதத்துவம் என்று நீர் சொல்லுவது எப்படிப் பொருந்தும்?

ஞானி:—தத்வேதும்பர தைத்திரீயகமுக த்ரய்யந்த ஸந்தர்ப்பநாத்—பரதத்துவத்தை நிர்ணயிப்பதற்காகவே வந்த தைத்திரீயக நாராயணாநுவாகம், நாராயணோபநிஷத், மஹோபநிஷத், புருஷஸூக்தம், விதிசிவாதிகளுக்குப் பிறப்பைச்சொல்லும் பற்பல வேதவாக்கியங்கள், ந்ருஸிம்ஹதாபிந்யுபநிஷத், தசோபநிஷத்துக்கள் முதலான பற்பல வேதாந்த பாகங்களிலேயுள்ளவையான, "நாராயண பரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: ப:। நாராயணபரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:॥ யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேऽபி வா। அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:॥" "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே। நாராயணாத் ருத்ரோ ஜாயதே" "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:...தத்ர ப்ரஹ்மா சதுர்முகோऽஜாயத...லலாடாத் த்ர்யக்ஷ: சூலபாணி: புருஷோऽஜாயத" "லலாடாத் க்ரோதஜோ ருத்ரோ ஜாயதே" "தாதா விதாதா கர்த்தா விகர்த்தா திவ்யோ தேவ ஏக ஏவ நாராயண: ...உத்பவஸ் ஸம்பவோ திவ்யோ தேவ ஏகோ நாராயண:, மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" "ஸஹஸ்ர சீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்" "புருஷ ஏவேதம் ஸர்வம் உதாம்ருதத்வஸ்யேசாந:" "தஸ்மாத் விராடஜாயத" "புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம்" "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" "விச்வம் நாராயணம்...பரமம் ப்ரபும் விச்வத: பரமம் நித்யம் விச்வம் நாராயணம் ஹரிம்। பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் சாச்வதம் சிவமச்யுதம் நாராயணம் மஹாஜ்ஞேயம் விச்வாத்மாநம் பராயணம்" "ஸ ப்ரஹ்மா ஸ சிவஸ் ஸேந்த்ர:" "பரம் ப்ரஹ்ம புருஷம்" "ப்ரஹ்மா தேவாநாம் ப்ரதமஸ் ஸம்பபூவ" "புருஷம் ப்ரஹ்ம யோநிம்" "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" "தேவக்ஷத்ராணி இந்த்ரோ வருணஸ் ஸோமோ ருத்ர: பர்ஜந்யோ யமோ ம்ருத்யுரீசாந இதி" "சதசீர்ஷா ருத்ரஸ்ஸமபவத்" 'ப்ரஜாபதிர் வை ப்ரஜாகாமஸ் தபோதப்யத। ஸமஸ்மகரோத்...தஸ்மிந்ரேதஸ் ஸமஸிஞ்சத்। தத உததிஷ்டத் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்। ஸ ஏஷோஷ்டநாமா அஷ்டதா விஹிதோ மஹாதேவ:" "பூதாநாம் ச ப்ரஜாபதிஸ் ஸம்வத்ஸராய தீக்ஷித: உஷ: பத்நீ। பூதாநாம் பதிஸ் ஸம்வத்ஸர உஷஸி ரேதோஸிஞ்சத்। ஸம்வத்ஸரே குமாரோஜாயத। ஸோரோதீத்। தம் ப்ரஜாபதிரப்ரவீத்। குமார கிம் ரோதிஷி। யச் ச்ரமாத் தபஸோதி ஜாதோஸீதி। ஸோப்ரவீத்। அநபஹதபாப்மா வா அஹம் அநாஹிதநாமா। நாம மே தேஹி பாப்மநோ அபஹத்யை।

http://acharya.org

ரும் புந: ப்ராஜாபதிரப்₄ரவீத்। ருத்₃ரோஸீதி॥" "யதோ ஜஜ்ஞே உக்₃ரஸ்த்வேஷ ந்ரும்ண:" "ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமப₄வத்" "தத்₃ விஷ்ணோ: பரமம் பத₃ம்" "புருஷாந்ந பரம் கிஞ்சித்" "விச்வரூபம் ஹரிணம் ஜாதவேத₃ஸம் பராயணம் ஜ்யோதிரேகம் தபந்தம்" "பராத்பரம் புரிசயம் புருஷமீக்ஷதே" "தி₃வி திஷ்ட₂த்யேகஸ் தேநேத₃ம் பூர்ணம் புருஷேண" "புருஷோ ஹ்யவ்யயாத்மா" "ப₃ஹ்வீ: ப்ரஜா: புருஷாத் ஸம்ப்ரஸூதா:" "புருஷோ மநோமய:... கோரந்தோ விவர்த்ததே" "அநந்தம் ப்₃ரஹ்ம" "விஷ்ணுக்ராந்தே வஸுந்த₄ரா" "உத்₃த்₄ருதாஸி வராஹேண க்ருஷ்ணேந" "ஹிரண்யக₃ர்ப்ப₄ம் பச்யத ஜாயமாநம்" "உத்திஷ்ட₂ புருஷ ஹரீ லோஹிதபிங்க₃ளாக்ஷி" "அம்ப₄ஸ்யபாரே" "யமந்தஸ் ஸமுத்₃ரே கவயோ வயந்தி" "ய ஏஷோந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷோ த்₃ருச்யதே...தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகமேவமக்ஷிணீ" "க்ருஷ்ணாய தே₃வகீபுத்ராய" "ய ஏஷோக்ஷிணி புருஷோ த்₃ருச்யதே...ஏஷ உ ஏவ வாமநீ" "ஆத்மைவேத₃மக்₃ர ஆஸீத் புருஷவித₄:" ஸ யத் பூர்வோஸ்மாத் ஸர்வஸ்மாத் ஸர்வாந் பாப்மந ஔஷத் தஸ்மாத் புருஷ:" "புருஷோ வை அக்ஷிதி:" "தஸ்ய ஹைவா ஏதஸ்ய புருஷஸ்ய ரூபம யதா₂ மாஹாரஜநம் வாஸ:" "அயம் வை ஹரய:" "வாமேக்ஷிணி புருஷரூபம் ஏஷாஸ்ய பத்நீ விராட்" "விராட₃ஸி ப்₃ருஹதீ ஸ்ரீரஸி இந்த்₃ராபத்நீ த₄ர்மபத்நீ" "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் தத ஏதே வ்யஜாயந்த। விச்வே ஹிரண்யக₃ர்ப்போ₄க்₃நிர் வருணவிஷ்ணுருத₃ரேந்த்₃ரா:" "அஷ்டபாத₃ம் சுசிம் ஹம்ஸம் த்ரிஸூத்ரமணுமவ்யயம்" "த்₄யாநக்ரியாப்₄யாம் ப₄க₃வாந் பு₄ங்க்தே" "புருஷம் நிர்க்கு₃ணம் ஸாங்க்₂யம்"* முதலான நூற்றுக்கணக்கான வேதாந்த வாக்கியங்களிலே நாராயணன் ஒருவனே பிரமன் உருத்திரன் முதலிய அனைவர்க்கும் காரணமாயிருப்பவன் என்று காணப்படுவதால்தான் விஷ்ணுவே பரதத்துவம் என்று நான் கூறினேன்.

ஜிஜ்ஞாஸு:— அந்யாஸ் தர்ஹி கிம் கத₂ம்—"ஸர்வோ வை ருத்₃ர:" [எல்லாம் உருத்திரனே] என்றாற்போலே சிவனுக்குப் பெருமையைச் சொல்லும் மற்ற வாக்கியங்கள் என்னவைது?

ஞானி:—கு₃ணவாத்—வ்யாபகத்வம் முதலிய பரமாத்ம குணத்தில் ஒரு சிறு பகுதி ருத்ராதிகளிடத்திலும் காணப்படுவதால் அவ்வாக்கியங்கள் பொருளுடையவையாகின்றன. "தத்ர பூஜ்யபதா₃ர்த்தோக்தி பரிபா₄ஷாஸமந்வித: ஶப்₃தோ₃யம் நோபசாரேண அந்யத்ர ஹ்யுபசாரத:" [பூஜ்யபதார்த்தத்தைச் சொல்லும் வழக்குடன் கூடிய இந்த பகவச்சப்தம் அந்த பகவத் விஷயத்திலேயே ஔபசாரிக

* இப்பிரமாணங்களுக்கு முன்பே பொருள் விளக்கப்பட்டுள்ளது.

http://acharya.org

மல்லாமலிருக்கிறது. மற்றவிடங்களில் உபசாரமாகவே பிரயோகிக்கப்படுகிறது.] என்றுப்போலே வ்யாபகத்வாதி நுணலேலயோகத்தாலே "ஆபோ வா இதம் ஸர்வம்" [இவையெல்லாம் ஜலமே] என்றதுபோன்ற பிரயோகங்களும் வேதத்தில் காண்பதுபோலே "ஸர்வோ வை ருத்ர:" முதலிய பிரயோகங்களையும் நிர்வஹித்து விடலாம்.

ஜிஜ்ஞாஸு:—அஹம் ருத்ர: கதம்—நானே ஆதிகாலத்திலிருந்த அருமறைப் பொருள் என்று ருத்ரன் உரைத்தது எப்படி ஒட்டும்? அதர்வசிரஸ் என்னும் உபனிஷத்திலே "தேவா ஹ வை ஸ்வர்க்கம் லோகமகமந் தே தேவா ருத்ரமப்ருச்சந் கோ பவாநிதி ஸோப்ரவீத் அஹமேக: ப்ரதமமாஸம் வர்த்தாமி ச பவிஷ்யாமி ச நாந்ய: கஶ்சிந்மத்தோ வ்யதிரிக்த இதி ஸோந்தராதந்தரம் ப்ராவிஶத் திஶஶ்சாந்தரம் ப்ராவிஶத் ஸோஹம் நித்யாநித்ய:..." [தேவர்கள் ஸ்வர்க்கலோகத்திற்குச் சென்றனர். அவர்கள் "தாங்கள் யார்" என்று ருத்ரனைக் கேட்டனர். அவர் பின்வருமாறு பதிலுரைத்தார்:— "நான் ஒருவனே முதலில் இருந்தேன். இப்போதும் இருக்கிறேன். இனியும் இருப்பேன். என்னைக்காட்டிலும் வேறானவன் ஒருவனுமில்லை." என்று அவர் ஸூக்ஷ்மத்தைக்காட்டிலும் ஸூக்ஷ்மத்தில் பிரவேசித்தார். திக்குகளினுள்ளிருக்கும் வஸ்துவில் பிரவேசித்தார். "அப்படிப்பட்ட நான் நித்யாநித்யவஸ்துக்களாயிருக்கிறேன்"] என்று தொடங்கி சிவன் தானே ஸர்வகாரணன் என்றும் ஸர்வாந்தர்யாமியென்றும் உரைத்தது விஷ்ணுவே பரதத்துவம் என்றுரைக்கும் உம்முடைய பக்ஷத்திலே எப்படி ஒட்டும்?

ஞானி:— தத்த்ருஷ்ட்யா— தனக்கு அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவை நினைத்து சிவன் அப்படிப் பேசியிருக்கிறராகையாலே விரோதமில்லை. பரமாத்மவிஷயமான பாவநாப்ரகர்ஷத்தாலே (நினைவின் முதிர்ச்சியாலே) அப்படிப் பேசுவதாகவும் கொள்ளலாம். இப்படிப் பேசினர் பலர் உளர். "தத்தைதத் பஶ்யந் ரிஷிர் வாமதேவ: ப்ரதிபேதே அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச" [பரமாத்மாவின் ஸர்வாத்மபாவத்தை அறிந்த வாமதேவ ரிஷியானவர், நானே மனுவாகவும் ஸூர்யனாகவும் ஆகிறேன் என்றுரைத்தார்.] என்கிறபடியே வேதத்திலும் வாமதேவர் என்னும் ரிஷியானவர் பரமாத்மாவின் ஸர்வாத்மபாவத்தைத் தன்னிடமுள்ளதாகப் பேசினர் என்பது ப்ரஸித்தம். இதையே "ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா தூபதேஶோ வாமதேவவத்" [வாமதேவரைப்போலே ஶாஸ்த்ரத்ருஷ்டியினாலே இங்கு உபதேசம் செய்யப்படுகிறது.] என்று ஸூத்ரகாரரும் ஸித்தாந்தம் செய்தார். இந்திரனும் "மாமுபாஸ்ஸ்வ" [என்னை—

http://acharya.org

(அதாவது,—என்னை சரீரமாகக்கொண்ட பரமாத்மாவை,— உபாஸிப்பாயாக] என்றான். "மத்தஸ் ஸர்வமஹம் ஸர்வம்" [என்னிடமிருந்து எல்லாமுண்டாகிறது. நானே உலகெல்லாம்.] என்னும் ப்ரஹ்லாதன். திருவாய்ப்பாடியில் பெண்களும் பகவந்த ப்ரகர்ஷத்தாலே தங்களை க்ருஷ்ணனாக அநுகரித்தார்கள். "கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னும்" என்றார் ஆழ்வார். ப்ரஹ்லாதனுக்கும், கோபிகளுக்கும், நம்மாழ்வாருக்கும், வாமதேவரிஷிக்கும், இந்திரனுக்கும் மேலே கண்ட வாக்கியங்களிலிருந்து பரமாத்மத்வமும் ஸர்வகாரணத்வமும் உண்டாகில், சிவனுக்கும் இந்த வாக்கியத்திலிருந்து பரமாத்மத்வமும் காரணத்வமும் ஏற்படலாம். "ஸோந்தராதந்தரம் ப்ராவிசத்" என்னும் வாக்கியத்தினால் வேதமே, இங்கு ருத்ரனின் பேச்சு பரமாத்மத்ருஷ்டியினாலே ஏற்பட்டது என்பதை விளக்குகிறது. ஆகையாலே அதர்வசிரஸ்ஸிலுள்ள ருத்ரவாக்யத்தாலும் ருத்ரபரத்வம் ஸித்திக்க வழியில்லை.

ஜிஜ்ஞாஸு:— கதமுத்பத்தி? விஷ்ணுவுக்குப் பிறப்பைச் சொல்லும் வாக்கியம் விஷ்ணுபரத்வத்துடன் எப்படி ஒட்டும்? அதர்வசிகை என்னும் உபநிஷத்திலே "த்யாயீதேசானம் ப்ரத்யாயிதவ்யம்! ஸர்வமிதம் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரேந்த்ராஸ் தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹ பூதை:! ந காரணம் காரணாநாம் தாதா த்யாதா" [தியானிக்கத்தகுந்தவனான ஈசானனை தியானிக்க வேண்டும். இந்திரியங்களும் பஞ்சபூதங்களும் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரேந்திரர்களும் ஆகிய இவையெல்லாம் பிறப்புடையவையாகின்றன. தாதாவாகிற பிரமனும், த்யாதா எனப்பட்ட ருத்ரனும் காரணபூதராயிருந்தபோதிலும் காரணகாரணரல்லர்.] என்று விஷ்ணுவுக்கு ப்ரஹ்மருத்ரேந்த்ர பூதேந்த்ரியங்களோடு கூடப் பிறப்பைச் சொல்லியிருப்பது எப்படிப் பொருந்தும்?

ஞானி:—அவதாரதி—விஷ்ணுவுக்குச் சொல்லப்படும் பிறப்பு அவதாரரூபமாயிருக்கையால் பொருந்தும். ஈசான பரமாத்மபத வாச்யனான பரமபுருஷனை தியானிக்கவேண்டும் என்னும் விதிவாக்கியத்தில் சொல்லப்பட்ட அர்த்தம் பொருத்தமுள்ளதே என்பதை இதர வேத வாக்கியங்களில் ஸுப்ரஸித்தமான சில அர்த்தங்களைச் சொல்லி நிரூபிப்பதற்காகத் தோன்றியது "ஸர்வமிதம் ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ் தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே" என்னும் அர்த்தவாதவாக்கியம். ஆகையாலே இவ்வேதவாக்கியத்தை மற்ற வேதவாக்கியங்களைத் துணைகொண்டே பொருள்கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே நாராயணாத் ருத்ரோ ஜாயதே" முதலான வாக்கியங்களில் ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நாராயணனிடமிருந்து பிறவியும்

http://acharya.org

தாழ்ச்சியும், ''அஜாயமாநோ பஹுதா விஜாயதே' [பிறப்பற்றவனு யிருந்தும் பலபடியாகப் பிறக்கிறான் பரமபுருஷன்] முதலான வாக்கியங்களிலே புருஷோத்தமனுக்கு அவதாரரூபமான பிறப்பே உண்டென்பதும் சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆகையால் இங்கு உரைக்கப்படும் பிறப்பும் அவதாரரூபமானதேயாக வேண்டும். ஆகையால், ''ப்ரஹ்மருத்ராதிகள் தாழ்வான பிறப்பை உடையவர்களாகையாலே உபாஸிக்கத்தக்கவர்களல்லர்; பரமாத்மா விஷ்ணுவாகிற அவதாரரூபமான பிறப்பையடைந்து ஸ்வாமி யிருக்கிறானாகையாலே உபாஸிக்கத்தகுந்தவனாகிறான்'' என்பதே இவ்வாக்கியத்தின் திரண்ட பொருளாகும். ''ந காரணம் காரணா-நாம் தாதா த்யாதா'' என்னும் அடுத்த வாக்கியத்தில் ப்ரஹ்மருத்ரர்கள் இருவரை மட்டும் எடுத்துக் காரணகாரணர்களல்லா என்று சொல்லியிருப்பதும் இவ்வர்த்தத்தையே வலியுறுத்துகின்றது.

ஜிஜ்ஞாஸு:—அங்யத் கதும்:—சிவருத்ராதி சப்தங்களால் சொல்லப்படுபவனே பரமாத்மாவென்றும், காரணபுருஷனென்றும் வேதத்திலே பலவிடங்களில் ஓதியிருப்பதை எப்படி நிர்வஹிப்பது? ''சிவ ஏகோ த்யேய: சங்கரஸ் ஸர்வமந்யத் பரித்யஜ்ய'' ''ஸர்வைச்வர்ய ஸம்பந்ந: ஸர்வேச்வர: சம்புராகாசமத்யே த்யேய:'' ''ஏகோ ஹி ருத்ரோ ந த்விதீயாய தஸ்து:'' ''விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி: ஹிரண்யகர்ப்பம் ஜநயாமாஸ'' ''தஸ்மாத் ஸர்வகத: சிவ:'' ''மாயிநம் து மஹேச்வரம்'' ''ஜ்ஞாத்வா சிவம் சாந்திமத்யந்தமேதி'' ''சிவம் ஸர்வபூதேஷு கூடம்'' ''சிவ ஏவ கேவல:'' ''ஈசஸ் ஸர்வாதிபத்யம் குருதே'' ''பாவாபாவகரம் சிவம்'' முதலான வாக்கியங்களில் பரமாத்மாவுக்கேயுள்ள தர்மங்கள் சிவனிடமுள்ளதாகச் சொல்லியிருப்பது எப்படிப் பொருந்தும்?

ஞானி:—நீயதாம்—பரமாத்மாக்கள் இருவர் இருக்கமுடியாதாகையாலும், வேதத்திலும் படிக்கப்படும் நாராயணாதி நாமங்கள் சிவாதி நாமங்களைக்காட்டிலும் அர்த்தத்திலும் சப்தத்திலும் ப்ரபலமானவையாகையாலும் இந்த சிவாதிசப்தங்கள் நாராயணனைச் சொல்லுவதாகவே கொள்ளவேண்டும். சிற்சிலவிடங்களில் சிவாதிகளைக் குறிப்பதாகவே ஏற்பட்டாலும், அவர்களுக்கு அந்தர்யாமியான நாராயணபர்யந்தம் பொருள்கொண்டால்தான் ஸர்வவேத வாக்கியங்களுக்கும் பொருந்தியிருக்கும். ஆகையால் ஒரு விரோதமுமில்லை.

விஷ்ணுசித்த விஜயத்தில் வேதவேதாந்த நிர்ணயம் என்னும் முதலத்தியாயத்தில் 'நாராயணனே ஸர்வ காரணபுருஷன்' என்னும் இரண்டாம் பாதம் முற்றிற்று.

http://acharya.org